JL
V2119Q:19(3IM)m,
N39
N41
69401

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜூன் ௴ 21 ௳ [நெ. 49.

பிரஸங்கம் XLIX.

## கடல் ஆதிக்கமும், விமானப்படையும்.

ஆகாய விமான வலிமை எவ்வளவு தூரம் கடல் வலிமைக்கு பயனளிக்கிறது? இந்தக் கேள்விக்கு விடைகொடுக்க இன்று எத்தனிக்கிறேன்.

யுத்தத்தில் ஆகாய விமானம் இரண்டு தொழில்கள் செய்கின்றன. சமாசாரங்களை வேவு பார்த்து சேகரிக்கின்றது; வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லுகிறது. நான் முந்தி யுத்தக் கடல் படையைப்பற்றிப் பேசியபோது க்ரூயிஸரைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன்.

யுத்தம் நடக்கையில் ஒரு க்ரூயிஸர் முன் சென்று வேவு பார்க்கும், சங்கதிகள் அறிந்துகொள்ளும், சத்துருக்களின் க்ரூயிஸர்கள் சங்கதிகளை தெரிந்துகொள்ளாத வண்ணம் தடை செய்யும்.

சென்ற யுத்தத்தில் ஜட்லண்டு கடல் சண்டையில் நான் "சதாம்டன்" என்ற சிறு க்ரூயிஸரிலிருந்தேன். அந்த "சதாம்டன்" க்ரூயிஸரின் "பாலம்" என்று சொல்லப்படும் கப்பல் பாகத்திலிருந்து பார்த்ததில்—ஜெர்மானியர்களின் பெரும் யுத்தக் கப்பல்கள், தங்கள் சிறு க்ரூயிஸர்களின் ஒத்தாசைக்கு வந்ததைப் பார்த்தோம்.

69401



## ஜுட்லண்டு சண்டையில்!

ஜெர்மன் கப்பற்படை, நாங்கள் அவைகளைக் கவனித்து வந்ததைப் பார்த்து விட்டது. எங்களுடைய பீரங்கிகளின் வீச்சுக்கு அப்பால் அந்தப்படை நின்று கொண்டு, தங்கள் பெரும் பீரங்கிகளால் எங்களைத் தவிடுபொடியாக்கும்படியாய் [illegible] குண்டு வீசியது. இருப்பினும், அந்த ஜெர்மன் கடற்படை என்ன செய்கிறது என்று அடிக்கடி நாங்கள் எங்கள் கடற்படைக்குத் தகவல் கொடுத்துக்கொண்டேயிருந்தோம்.

அந்தக்காலம் க்ரூயிஸர்கள் தான் கடற்படையின் நிஜமான கண்கள். மேலே விவரித்தது தான் அதற்குரித்தான தொழில். இப்பொழுதோவெனில் கடல் தளபதி, தன் விமான ஏற்று யுத்தக் கப்பலில் வைத்திருக்கும் விமானங்களின் உதவியால், க்ரூயிஸர் பார்க்கக்கூடிய அளவுக்கு மேலாக வேவுபார்த்துத் தெரிந்துகொள்ளக்கூடும். கடல் தளபதியின் பார்வையானது விசாலப்படுத்தப் பட்டுவிட்டது. ஐக்கிய நாட்டுக் கடற்படையும், நம்முடைய கடற்படையும் விமான ஏற்று யுத்தக் கப்பல்கள் பேரில்தான் பூரா நம்பிக்கையும் வைத்திருக்கின்றது. ஏனெனில், இரண்டு தேசக் கப்பல்களும் சிறு கடற்படையாகயிருந்து கொண்டு சமீபத்தில்மட்டில் சுற்றுபவையல்ல. அவைகள் மஹா சமுத்திர சஞ்சாரிகள். கடற்கரையில் கட்டப்பட்ட விமான நிலயங்களிடமிருந்து வெகு தூரத்தில் கடற்படை வேலை செய்யும்படியிருக்கின்றது.

ஆகாய விமானம் வந்ததின்பயனாக சமுத்திர மார்க்கம் பொருள்கள் வருகையில் குறைவு ஏற்படுகிறது. நான் இப்படிச் சொல்லுவதை விளங்கும்படிக்கு சில உதாரணங்கள் இந்த யுத்தத்திலிருந்தே கொடுக்கிறேன்.

JZ V21194:19(3) M1N39 N41

இதாலிய கடற்படைக்கு கடல் தளபதி கன்னிங்ஹாம் நல்ல அடி கொடுத்தாரே. அப்படியிருந்தும், ஜெர்மானியர்கள் நாம் லிபியாவில் ஜயித்ததையெல்லாம் இழக்கும்படி அத்தனை யுத்தத் துருப்புகளை ஸிஸிலி மார்க்கம் த்ரிபோலி என்ற வட ஆபிரிக்கா துறைமுகத்திற்கு அனுப்பிவிட்டார்களே, இது எப்படி நடந்தது என்று நீங்கள் நியாயமான ஒரு கேள்வி கேட்கலாம்.

எப்படி லிபியாவுக்குள் ஜெர்மானியர்கள் நுழைந்தார்கள்:

ஸிஸிலியிலுள்ள விமான நிலயங்களிலிருந்து வேவு பார்க்கும் இதாலிய ஜெர்மன் விமானங்கள், மால்டா தீவுக்கு அருகிலுள்ள மால்டா சானலின் மேல் வேவு பார்க்கின்றன. எப்பொழுது நமது மத்தியதரைக்கடல் படை தங்கள் வழிக்கு விலக்காய்ப்போய்விட்டது என்ற தகவல் கொடுத்துவிடுகின்றன.

அதிவேகமாய்ச் சஞ்சரிக்கும் இக்காலத்தியப் பெரும் யுத்தக் கப்பல்கள் வெகு காலம் சமுத்திரத்திலேயே நிற்காது. தங்களுக்கு வேண்டிய எண்ணெய் வகையரா போட்டுக்கொள்ள தங்கள் அடித்தளங்களுக்குச் சேரவேணும். மால்டா சானலிலிருந்து நம்முடைய மத்யதரைக்கடல் தளமான அலெக்ஸான்டிரியா 850 மைல் தூரம். ஸிஸிலிக்கும், த்ரிபோலிக்கும் 300 மைல் தூரம்.



24 மணிப் பிரயாணம். இந்த தூரத்தில் பாதி பாகம் இரவில் விரோதிக் கப்பல்கள் கடக்கக்கூடும்.

சரிதான் ஐயா, மால்டா தீவு இருக்கிறதே. அதிலிருந்து நாம் கவனிக்கக் கூடாதோ? என்று கேட்கலாம். மால்டா தீவில் ஒரு அசந்தர்ப்பம். துறைமுகம் வெகுசிறிது. ஸிஸிலியிலிருந்து 12 நிமிஷங்களுக்குள் வந்து செங்குத்தாய் இறங்கி குண்டுபோடும் விமானங்களிற்கு எதிரிடையாய் நமது பளுவான கப்பல்களை அதில் நிறுத்துவது சாத்தியமல்ல.

நமது நாசகாரிகளையும், இன்னும் அவைகள் மாதிரியாயுள்ள சிறு யுத்தக் கப்பல்களையும் கொண்டு மால்டாவிலிருந்து வேலை செய்யக்கூடும் என்பது வாஸ்தவம். சமீபத்தில்கூட நமது படையைச்சேர்ந்த 4 நாசகாரிகள் இதாலிய துணைக் கப்பற்படையை நிர்மூலமாக்கியது. ஆனால் இதாலியர்களிடம் இன்னும் கனத்த கப்பல்களும் க்ரூயிஸர்களுமிருக்கின்றன. ஆதலால், பொதுவாக, நாம் அவர்களுக்கு எதிராய் உபயோகிக்கும் லேசான யுத்தக் கப்பல்களுக்கு உதவியாய் பெரிய யுத்தக் கப்பல்கள் அனுப்பப்படவேண்டும்.

## நீர்மூழ்கிகளின் வேலை.

நமக்கு அபாயமுள்ள எதிரியின் போக்குவரத்தைத்தடங்கல் செய்ய நாம் ஒன்றும் செய்ய முடியாதா? என்று நீங்கள் கேட்கலாம்—சாத்தியமில்லை என்று சொல்வதற்கில்லை. நாம் அதைத் தடுக்கலாம்; துணையன்னியில் செல்லக்கூடிய நீர்மூழ்கிகளை நாம் உபயோகப்படுத்தலாம். இதிலும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. எதிரியின் துணைக் கப்பல்களாலும், நீர்மூழ்கிகளைக் கண்டுபிடிக்க வென்று சேர்ந்து சுற்றிப் பார்க்கும் ஆகாய விமானங்களாலும், இந்த நீர்மூழ்கிகளுக்கு உபத்ரவம் ஏற்படலாம், தடங்கல் படலாம்.

மார்ச்சு மாதத்தில் வந்த சமாசாரங்களை நுட்பமாய் கவனித்து வந்திருக்கும் நபர்கள், வட ஆபிரிக்காவுக்கு ஏராளமான சாமானுடன் செல்லும் எதிரியின் கப்பல்கள் பல நமது நீர்மூழ்கிகளால் அமிழ்த்தப்பட்டதென்ற விபரத்தைத் தப்பாமல் நமது கடற்படை ஆபீஸ் கொடுத்து வந்ததைக் கேட்டிருப்பார்கள். இதிலிருந்து வட ஆபிரிக்காவில் ஏதோ சங்கதி நடக்கப்போகிறது என்று தெரிந்திருக்கலாம்.

கடற்படைக்கு உபபலமாய் விமானங்கள் உபயோகிக்கப் படலாம் என்பதற்கு லிபியாவிலிருந்து வேலை செய்துவந்த நமது ஆகாய விமானங்கள் கடல் தளபதி கன்னிங்ஹாமுக்கு இதாலிய கடற்படையின் கதியைத் தெரிவித்தது ஒரு உதாரணம். இதன் பலன் நாம் மடாபானில் அடைந்த கடல்வெற்றி.

ஆனால் ஆகாச விமானம் கேவலம் சத்துருவின் கடற்படையிருந்தயிடத்தைச் சுட்டிக் காட்டியது மட்டுமல்ல. இதாலியக் கப்பல்களை அவைகள் தாக்கி அவைகள் செல்லும் வேகத்தை குறைத்து விட்டது. இப்படி வேகம் குறைக்கப் பட்டதால்தான், தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் இதாலிய கடல் தளங்களுக்கு சேருவதற்குள் அவைகளை நமது கப்பல்கள் தாக்கும்படி இயன்றது.

வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் ஆகாய விமானங்களின் வேலையைப்பற்றி மறுபடியும் விவரிக்கிறேன். அட்லாண்டிக் மஹா சமுத்திரப் போரில் நமக்கு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம்; ஜெர்மனியின் 4 எஞ்ஜின் வைத்த காண்டார் (Fokker Wolfe) விமானங்களும், ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களும் சேர்ந்து ஒத்துழைப்பதுதான்.

மேலே சொல்லப்பட்ட காண்டார் விமானங்கள், நமது வியாபாரக் கப்பல்களுக்குத் துணையாயிட்டுச் செல்லும், எதிர்ப்புக் கூட்டக் கப்பல்களை வேவுபார்த்து குறிப்பாய் எந்த லக்குகளில் போகின்றன என்று நீர்மூழ்கிகளுக்குத் தெரிவித்து விடுகின்றன. எதிரியின் நீர்மூழ்கிகளைக் கண்டுபிடிக்க நாம் சன்டர்லண்டு படகு விமானங்களை உபயோகிக்கிறோம். பிறகு நமது R.A.F. பிரெஞ்சுக்கரையிலுள்ள ஜெர்மன் கடல் தளங்களை தாக்குகின்றன. சில கால்வாய் கப்பல் கட்டும் தளங்களையும், காண்டார் விமானம் தங்கும் நிலயங்களையும் தாக்குகின்றன. இப்படிச் செய்யும் இதன் வேலையானது, கடற்படையின் வேலைக்கு ஒத்தாசையாகவும், அனுசரித்தே செய்யும் வேலை.

## வெடிகுண்டு வீச்சும் டார்பிடோ தாக்குதலும்:—

ஆகாய விமானத்தால் கடல் யுத்தத்திற்கு வேவு பார்த்து உதவுவதுதான் மிகவும் முக்கியமான அலுவல், என்று என் அபிப்பிராயம். கடல் யுத்தத்தைப் பாதிக்கும்படி விமான யுத்தத்தின் மற்றொரு அம்சம் யாதெனில் வெடிகுண்டு வீச்சும், விமானத்தில் டார்பிடோ (என்ற யுத்தக் கருவியை) ஏற்றிச் செல்லுதல்.

ஒரு கடல் தளத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்று கொண்டிருக்கும் கப்பல்களின் பேரில் ஆகாய விமானங்கள் செங்குத்தாய் இறங்கி வெடிகுண்டு வீசினால், அந்தக் கப்பல்களுக்கு மிகவும் அபாயம். ஆனால் வெட்டவெளி சமுத்திரப் பிரதேசங்களில் வேகமாச்செல்லும் கப்பல்களுக்கு இம்மாதிரி தாக்குதல் வெகு அபாயமல்ல. ஏனெனில் அந்தக் கப்பல்கள் தாக்குதலிலிருந்து தங்கள் வேகத்தால் தப்பித்துக் கொள்ளமுடியும். ஒடித்து வளைந்து செல்லும்போது இடம் மாறிக்கொள்ள முடியும்.

இருப்பினும், செங்குத்தாய் பாய்ந்து வெடிகுண்டுபோடும் விமானங்களுக்கு வசதிகொடுக்கும் விமான நிலயங்களுக்குச் சமீபத்தில் நம்முடைய பெரும் யுத்தக் கப்பல்கள் போவதும் யுத்த முயற்சி செய்வதும் அவ்வளவு சாவதானமல்ல.

செங்குத்தாய் பாயும் வெடிகுண்டு விமானங்களும் ஒரு வரையருக்கப்பட்ட வட்டாரத்திற்குள்தான் வேலைசெய்யமுடியும்; தவிரவும், அவைகளில் மிகவும் தேர்ச்சியுறப் பழக்கப்பட்ட ஆட்களால்தான் அவைகள் செலுத்தக்கூடியது. வெகு உயரத்திலிருந்து வெடிகளை வீசுவது என்பது இலக்குகளில் குறி தப்பி வீணாகிவிடும். கப்பல் தளங்களில் நிற்கும் யுத்தக் கப்பல்களில் தனிப்பட்ட ஒரு கப்பல்மேல் வெகு உயரப்பறந்து செல்லும் வெடிகுண்டு விமானங்கள் யாதொன்றும் செயவதற்கு முடியாமலிருப்பதையும் அடிக்கடி பார்க்கிறோம்.



நவீனத்தில் கட்டப்பட்ட யுத்தக் கப்பல்களில் கவசம் வெகு பலமாயிருப்பதால் நல்ல உயரத்திலிருந்து போடும் வெடிகுண்டுகள்தான் கப்பல்களை பழுதுபடுத்தும். உயரத்திலிருந்து போடாவிடில் கவசத்தைக்கூட பொத்துக்கொண்டு நுழையமுடியாது. ஜெர்மானியர்கள் நம்முடைய தளங்களில் நிற்கும் கப்பல்கள் மேல் வீசிய ஆகாய விமான குண்டுகள் கப்பல்களை ஒன்றும் செய்யமுடியவில்லை. நமது கப்பல் படை அத்தனை பலமுள்ளது.

ஆகாய விமானங்கள் தாழப்பறந்து வியாபாரக் கப்பல்களைத் தாக்கக்கூடும். அல்லது டார்பிடோ வெடிகுண்டால் அவைகளை அமிழ்த்திவிடக்கூடும். ஏனெனில் அந்த வியாபாரக் கப்பல்களில் எதிர்த்துப்போரிடக்கூடிய ஆயுதமிருக்காது. நம்முடைய கரையோரப் பாதுகாப்பு விமானங்கள், எதிரியின் நார்வேக் கரையிலிருந்து டச்சுக் கரைவரை போகும் வியாபாரக் கப்பல்களைத் தாக்கி நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. அவ்வாறே நமது அட்லாண்டிக் சமுத்திர வியாபாரக் கப்பல் போக்குவரத்து ஜெர்மானியர் விமானங்களால் தடைபடுகின்றது.

ஆனால் நாம் தற்காப்பு சாதனங்கள் செய்துகொள்ளுவதால் ஆகாய விமானத் தாக்குதலின் உபத்திரவத்தைக் குறைத்துக்கொள்ளமுடிகிறது. தவிரவும் ஆகாய விமானம் தன்னம் தனியாய் தாக்குவது சிரமம். ஏனெனில் அதில் கொஞ்சம் லேசான குண்டுகள்தான் ஏற்றிச்செல்லமுடியும். யுத்தக் கப்பலில் இருந்து பீரங்கிப் பிரயோகம் செய்வதுபோல் அத்தனை குறிப்பாய் வெடிகுண்டு வீச்சு செய்யமுடியாது. ஆதலால் ஆகாய விமானங்கள் சக்தியும் இதுவரை கொஞ்சம் குறைவுபட்டுள்ளதென்று சொல்லவேண்டும்.

தவிரவும், கப்பல்களைக் காட்டிலும் ஆகாய விமானங்களுக்கு காற்று, புயல் முதலியதுகளால் வெகுவாய் உபத்திரவங்கள் ஜாஸ்தி.

கடைசியாக, இந்த யுத்தத்தில் விமானத்தால் ஒரு பிரயோஜனம் வெளிக்கு வந்திருப்பதைச் சொல்லுகிறேன். கப்பல் வழிகளை அடக்கி ஆளும் சக்தி தனக்குக் கிட்டவேணுமென்றும் விமானங்கள் பிரயத்தனப்படுகின்றன. இப்படிப் பிரயத்தனப்படுவதால், மேல்பரப்பில் செல்லும் கப்பல்களுக்கு உதவியாகவோ, பாதகமாகவோ வேலைசெய்கின்றது. நீர்மூழ்க்க் கப்பல்கள் தனக்கு எதிர்த்துவரும் யுத்தக் கப்பல்களிடமிருந்து தப்பிப்போவதற்கு ஜலத்திற்குள் மறைந்து கொள்ளுகின்றன.

இந்த யுத்தத்திலோவெனில், கடல் ஆதிக்கத்தை நிஷ்பிரயோஜனமாக்க புது வழி ஒன்று நமக்கு எதிர்ப்படுகிறது. இது ஆகாய மார்க்கமாய் சாமான்களும், துருப்புகளும் ஏற்றிச்செல்வது ஸிஸிலியிலிருந்து வட ஆபிரிக்காவுக்கு இம்மாதிரி ஸப்ளைகளும், துருப்புகளும் சென்றுதானிருக்கவேண்டும்.

ஹிட்லர் பிரிடிஷ் தீவுகளை படையெடுப்பானானால், இம்மாதிரி கடல் ஆதிக்கத்தை நிஷ்பிரயோஜனம் செய்து ஆகாய மார்க்கமாய் துருப்புகளைக் கொண்டுவர எத்தனப்படுவான் என்றும், குடை பலூன்கள் வழியாகத் துருப்புகளை இங்கிலாந்தில் இறக்கலாமென்றும், எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தத் துருப்புகளுக்கு நம்மவர் நல்ல சூடுகொடுத்து, யுத்தம் முடியும்வரை அவர்களை நம்மிடமேயிருக்கும்படி செய்யக்கூடும்.

அமெரிக்க ஐக்கியநாடு, கிரீன்லண்டு பிரதேசத்தில் அக்கறை காட்டுகிறதைப் பற்றி சந்தோஷம். ஏனெனில் அந்தப் பிரதேசத்துக்குத்தான் ஜெர்மானியர் விமானமூலம் சேனைகளை அனுப்பக்கூடும். இக்காரணத்தை முன்னிட்டுத் தான் நாம் முன்கூட்டியே ஐஸ்லாந்தை ஆக்கிரமித்தோம்.

இந்த இடங்களை ஜெர்மானியர்கள் இலக்குகளாய் வைத்திருப்பதற்குக் காரணம் யாதெனில், நமக்கு ஜீவாதாரமான அட்லாண்டிக் போக்குவரத்து வழியின் பக்கத்திலிருந்து ஹிம்சை செய்யவேண்டுமென்ற நோக்கம்தான்.

வட அட்லாண்டிக் பிரதேசத்தில் வெகுதூரம் வரை நாங்கள் ரோந்து பார்ப்போம் என்று ஜனநாயகத் தலைவர் ரூஸ்வெல்ட் முடிவுசெய்ததைக்கேட்டு தான் வெகு சந்தோஷப்படுவதாயும், தனக்கு பளு மிகவும் குறைந்திருப்பதாய் ஆஸ்வாஸிப்பதாய் ஏப்ரல் 27உயில் நமது பிரதம மந்திரி சர்ச்சில் பேசியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இப்படி அவர் செய்தமுடிவு நமது அட்லாண்டிக் போருக்கு முக்கியமான அனுகூலம். ஏனெனில் ரோந்துசுற்றும் அமெரிக்கக் கப்பல்களின் முக்கிய அலுவல்கள் யாதெனில், எதிரியின் யுத்தக் கப்பல் எந்த இடங்களில் நிற்கின்றன வென்று பார்க்கும். அந்த கப்பல் படையைச்சேர்ந்த விமானங்களும் பார்க்கும். உடனே அவைகளைப்பற்றிய வரலாற்றைத் தெரியப்படுத்தும்.

சமுத்திரத்தில் பிரயாணம்செய்தவருக்குத்தான், சமுத்திர வெளியின் விசாலமும், ஒருவருக்கும் தாக்கலா மோக்கலா இல்லாமல் தன்னந் தனியாய்ச் செல்லும்படி நேரிடுவதும், எதிரியின் நாசகாரிக் கப்பல்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்படும் சிரமமும் புலப்படும்.

அமெரிக்க ரோந்து கப்பல்களாலும், ரோந்து விமானங்களாலும் கண்டு பிடித்து சொல்லப்படும் சமாசாரங்கள் நமக்கும் கேட்கும். இப்படிக் கிடைத்தால் நாம் உடனே நமது விமானங்களைக்கூட்டி எதிர்ப்புக் கப்பல்களை அபாயத்தினின்று தப்பி வேறு வழியாகத் திருப்பிவிட்டு, நமது கப்பல்களை ஓடித்தாக்கி ஒளிந்து கொள்ளும் எதிரியின் கப்பல்களை நாம் வேட்டையாடும்படி நமது யுத்தக் கப்பல்களை அந்த இடங்களுக்கு அனுப்பமுடியும்.

வேவுபார்க்கும் வேலையில், விமானங்களும், கப்பல்களும், ஒத்துழைக்க முடியும் என்பதற்கு இது ஒரு உதாரணம். தவிரவும் ஸ்வதேசாபிமானமுள்ள இரண்டு தேசங்கள் தங்களை துராகிருதமாய்த் தாக்குதலிலிருந்து விடுவித்துக் கொள்ளச்செய்யும் ஒத்துழைப்பில் இதுவும் ஒரு மாதிரியான ஏற்பாடு.



# வார யுத்தச் செய்திகள்.

(5—6—41-லிருந்து 12—6—41-வரை).

## இந்த வாரச்செய்திகளில் முக்கியமானவை.

1. ஸிரியா படையெடுப்பின் முன்னேற்றம்.
2. லிபியா (Libya)வில் நடக்கும் சண்டையின் அதிகரிப்பு.
3. ராஜதந்திர வேலைகள்.

## ஸிரியா படையெடுப்பு.

நேசதேசத் துருப்புகள் ஸிரியாவில் மிகவும் சுறுசுறுப்புடன் முன் சென்று கொண்டிருக்கின்றன. ஸிடானும் நடுப்பிரதேசத்திலிருக்கும் கிஸ்வேயும் வசமாய்விட்டன. துருப்புகள் பேரூட்டுக்குச் சமீபமாக போய்விட்டன. டமாஸ்கஸ் (Damascus)விழுவது இப்பொழுதோ அப்பொழுதோ என்று இருக்கிறது. நேசதேசத் துருப்புகள் மூன்று பிரிவுகளாக போய்க்கொண்டிருக்கின்றன. வலது பக்கப்பிரிவு சுயேச்சை பிரெஞ்சுத் துருப்புகளை முன் செல்லுபவைகளாக வைத்துக் கொண்டு டமாஸ்கஸைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. ஸாம்ராஜ்யத் துருப்புகள் கடற்கரை ஓரமாக சென்றுகொண்டிருக்கின்றன. நடுவில் நேசதேசத் துருப்புகள் மிர்ஜ் அயூனை பிடித்துவிட்டு டமாஸ்கஸுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள். மூவருக்கும் பிரிட்டிஷ் சண்டைக்கார ஆகாயக் கப்பல்கள் காப்பாளர்களாக இருந்து விரோதித் துருப்புகளின் போக்குவரத்து இருப்பிடம் முதலியவைகளைக் கண்டுபிடித்துச் சொல்லி மிகவும் பிரயோஜனமான காரியங்களைச் செய்து வருகின்றன.

விஷி.—துருப்புகள் மிர்ஜ் அயூனைச் சுற்றியுள்ள ஊர்களை நடுநடுவில் படையெடுத்துக்கொண்டு நடுவில் வரும் நேசதேசத் துருப்புகளை மும்மரமாக எதிர்த்து வருகின்றன. டமாஸ்கஸுக்கு சமீபத்தில் வந்தஉடன் ஜெனரல் வில்ஸன், உடனே சரணமடைந்து அனாவசியமாக உயிர் சேதத்தை செய்யாமல் இருக்க ஜெனரல் டெண்ட்ஸ் என்னும் பிரெஞ்சு ஹைகமிஷனருக்கு சொல்லி அனுப்பினார். டமாஸ்கஸ் என்னும் நகரத்தை குண்டுகளிலிருந்தும் காக்கவேண்டுமென்று எண்ணினார். ஜெனரல் டெண்ட்ஸோ இதற்கு சம்மதிக்கவில்லை. ஆகையால் டமாஸ்கஸ் முற்றுகை ஆரம்பித்து நடந்துவருகிறது. தெற்கே இருந்தும் தென் கிழக்கே இருந்தும் மிகவும் மும்மரமாக நடவடிக்கைகள் இடைவிடாது நடந்து வருகிறது. நகரம் சீக்கிரத்திலேயே விழுந்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

பார்வைக்கு நேசதேசத் துருப்புகள் மெதுவாக முன்னேறுவது போல் இருந்தாலும் அது அவர்கள் துர்பலமாக இருப்பதால் இல்லை. சில ராஜீய எண்ணங்களை உத்தேசித்தே அம்மாதிரி செய்யவேண்டியிருக்கிறது. அதாவது சுயேச்சைப்பிரெஞ்சுத் துருப்புகள் தலைமை வகிக்கும் காட்ருவைப்பற்றி எல்லோருக்கும் நல்ல எண்ணம் உண்டுபண்ணவேண்டும் என்றும் விஷி பிரதிநிதிகளுக்குப் பதிலாக அவர் வரவேண்டுமென்றும் எண்ணம்.

படையெடுப்பு வெகு நாள் நடக்காது என்று எதிர் பார்க்கப்படுகிறது. அலெப்போவைப் பிடித்த உடன் படையெடுப்பின் முடிவு ஆரம்பித்துவிட்டது என்று சொல்லலாம். விஷயம் தெரிந்த ஒருவர் இந்தச் சண்டை ஒரு வாரத்திற்கு மேல் நடக்காது என்று சொல்லுகிறார். ஜெர்மனி ஸிரியாவை உபயோகமற்றது என்று கைவிட்டுவிட்டது என்றும், விஷி ஸர்க்கார் தன்னையே தான் காப்பாற்றிக் கொள்ளும்படி விட்டுவிட்டது என்றும் நன்றாகத் தெரிகிறது. விஷி உத்தியோகஸ்தர்களும் லக்ஷியம் செய்யவில்லை. சுமார் 500 உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் சரணமடைந்து விட்டார்கள். விஷி துருப்புகள் முடிந்த மட்டில் சண்டை போட்டாலும் நம்மிடத்தில் அகப்பட்டுக்கொள்வதில் வருத்தம் அடைவதாகத் தெரியவில்லை. அவர்களுடைய மனப்போக்கு இம்மாதிரி போலும்; பிரிடிஷாரோடு சண்டை போடுவதில் துக்கம், ஆனால் தோற்றுப் போவதில் சந்தோஷம்.

## லிபியாவில் சண்டை.

முன்னமேயே ஜெர்மானியர்கள் லிபியாவிற்குள் ஒரு பெரிய படையெடுப்பு ஆரம்பிப்பார்கள் என்ற அடையாளங்கள் இருந்தன. ஜெனரல் ராமல் கிழக்கு நோக்கிச் செல்லுவதற்கு முக்கியமாக வேண்டியது டொப்ருக்கைப் பிடிப்பது தான். டொப்ருக்கின் விமானப்படையெடுப்பின் மும்மரமும், அலெக்ஸாண்டிரியாவின்பேரில் விமானப் படையெடுப்பும் இதை நன்றாக எடுத்துக்காண்பிக்கின்றன. மெடிடரேனியன் கடற்படை ஸிரியாவிலும், கிரீட்டிலும் நடக்கிற படையெடுப்பை முக்கியமாக கவனித்துவருவதால், இதை ஜெர்மானியர்கள் பிரயோஜனப்படுத்திக்கொண்டு லிபியாவிற்கு ஏராளமான துருப்புகளையும், தளவாடங்களையும் சேர்த்திருக்கிறார்கள்.

ஜெனரல் வேவல் முன் யோசனையாக ஒரு காரியம் செய்தார். ஜெர்மானியர்களை முந்திவிடுவதாக ஆரம்பித்து அதுமாதிரி செய்துவிட்டார். ஸிரியாவில் படையெடுப்பு நடந்துகொண்டிருந்தது அவரைத் தடுக்கவில்லை. ஸிரியாவில் சண்டை நடக்கும் காலத்திலேயே, இங்கு புதிதாக ஒரு படையெடுப்பை ஆரம்பித்து நடத்தலாம் என்று அவர் எண்ணியதே மிகவும் கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. இதனால் நேசதேச துருப்புகள் இன்னும் முந்திக்கொள்ளும் என்றும், தங்களிடத்தில் நம்பிக்கை இருக்கிறது என்றும் நன்றாகத் தெரிகிறது.

பாலைவனச் சண்டை மிகவும் குரூரமாக இருக்கிறது. இருதரப்பார்களும் டாங்குகளையும், ஆயுத மோட்டார்களையும், ஏராளமாக சண்டையில் உபயோகப்படுத்தினதும் அல்லாமல் விமானங்களாலும் காப்பாற்றப்பட்டன. பிரிடிஷாரின் எதிர்ப்பு ஜெர்மானியர்களை இதர இடங்களிலிருந்து ரிஸர்வ் துருப்பு வகையராக்களைத் தூக்கிக்கொண்டு காப்பாற்றுவதற்கு ஓடி வரும்படி அவ்வளவு பலமாக இருந்தது. இந்தச் சண்டையில் இந்தியத் துருப்புகள் மிகவும் நல்ல வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஸோலத்திற்கு சமீபத்தில் ஜெர்மானியர்களை ஒரு இந்திய குதிரைப்படை சூழ்ந்து அமுக்கிவிட்டது. மொத்தத்தில் முடிவு நமக்கு சாதகமாகவே இருக்கிறது. எதிரிகளின் ஆயுத சம்பந்தமான விஷயங்களைப்பற்றி நமக்கு அதிக விவரங்கள் கிடைத்திருக்கின்றன. ஜெர்மானிய சிப்பாய்களும்,



டாங்கு (Tank)களும், இதர தளவாடங்களும் நம் வசமாயிருக்கின்றன. ஹால்பாயா கணவாய்க்கு மேற்கே விமானங்கள் அநேக குண்டுவீசும் படையெடுப்புகளைச் செய்துவந்தன. பெங்காஸி, பார்டியா, டெர்னாவில் விமானங்கள் இறங்குமிடம் முதலியவைகளுக்கு ஏராளமான சேதம்.

**அபிஸீனியா.**—அபிஸீனிய தேசத் துருப்புகள் ஜிம்மாவை நோக்கிச் செல்லும் படையெடுப்பில் மிகவும் நன்றாக உபயோகப்பட்டு வருகின்றன. எஞ்சி மிஞ்சி இருக்கும் இதாலியத் துருப்புகளை காலநிலையை லக்ஷியம் செய்யாமல் நமது துருப்புகள் விரட்டிக்கொண்டு வருகின்றன. ஜெனரல் பிராலோர்மோ 2,000 இதாலிய சிப்பாய் சகிதம் சரணம் புகுந்துவிட்டார். ஏரிகள் சண்டைக்குப் பிறகு மிஞ்சியிருந்த துருப்புகள் மலைப்பிரதேசத்தில் ஒளிந்துகொண்டன. ஆனால் தேசபக்தப் படைகள் விரட்டின விரட்டில் உணவுப் பொருள்கள் போதாமல் சரணமடையவேண்டியதாக ஆயிற்று.

**எரிட்ரியா.**—எரிட்ரியா தேசத்து துறைமுகமான அஸ்ஸாபைப் பிடித்த பிறகு நமது துருப்புகள் மக்காராவில் இருக்கும் விமானத்துறையைப் பிடித்திருக்கிறார்கள்.

## ராஜதந்திர வேலைகள்.

**துருக்கி—ஜெர்மன் ஒப்பந்தம்.**—துருக்கிபோய் ஜெர்மனியுடன் சிநேகபாவ ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டது. இதனால் நமக்கு சந்தோஷம் என்று சொல்லமுடியாவிட்டாலும் கவலைப்பட ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஒப்பந்தம் திடீரென்று வந்துவிடவில்லை. ஏனெனில் துருக்கி க்வர்ன்மெண்டார் அப்போதைக்கப்போது நடந்ததைப்பற்றி லண்டனுக்குச் சொல்லிவந்திருக்கிறார்கள். துருக்கி ஓர் இக்கட்டில் அகப்பட்டுக்கொண்டிருந்தது. ஸரஜோகுலுவை வேலையிலிருந்து விரட்டிவிட எத்தனித்த வான் பேபனுடைய ஆசை வார்த்தைகளை மீறுவதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தது. துருக்கியின் எண்ணம் சண்டையில் அகப்பட்டுக்கொள்ளக்கூடாது என்பதுதான். ஆனால், இதுவரை ஜெர்மானியர்களைத் தட்டிக்கழித்துவிட்டு நேசதேசத்தார் ஸிரியாவிலும், இராக்கிலும் பலமாக மூடி ஊனிக்கொண்டிருக்கும் சமயத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டதே என்றதுதான் அனுதாபத்திற்கு இடம் இருக்கிறது. இதுவரை துருக்கி தன் சொல்லிலிருந்து கொஞ்சம்கூட மீறவில்லை. துருக்கியின் இதர ஒப்பந்தங்களுக்கு விரோதமில்லாமலே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இது சமாதானமடையமுடியாது. அதனுடைய பொறுப்புகள் எவ்வளவுமட்டில் ஏற்பட்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியாது. ஜெர்மனியோடு சிநேகம்செய்து அதோடு ஒத்துமைப்பட்டதின் பிற்பாடு பின்வாங்குவது அசாத்தியமான காரியமாகவிருக்கும்.

மற்ற வழிகளிலும் இந்த உடன்படிக்கையானது சமய உசிதமானதில்லை. ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் பலமான நெருக்கடிகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஜெர்மனி தேசத்தின் கிழக்கு எல்லையில் சந்தேகாஸ்பதமான துருப்புகளின் போக்குவரத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. உடன்படிக்கைகள் எப்படி ஏற்பட்டு

இருந்தாலும் சரி, ஹிட்லருக்கு ருஷ்யாவிடத்தில் அந்தரங்கமான வைரம் இருக்கிறது. ரிப்பன்டிராபினுடைய சாணக்கியங்களெல்லாம் மாலடோவ் என்பவரை அச்சுநாட்டு வலைக்குள் இழுக்கமுடியவில்லை. ஆர். ஏ. எப். விமானங்கள், வெடிகுண்டுகள் போட்டு பலமாகத் தாக்கிய சமயமும், மலடோவ் பெர்லினுக்கு வெகு ஆடம்பரமாக வந்து எதிர்கொண்டு அழைக்கப்பட்ட சமயமும் ஒத்துக்கொண்டது. ஆயினும் அவர் வந்தும் பார்த்துவிட்டு போனாரே ஒழிய ஹிட்லர் வலைக்குள் அகப்படவில்லை. இருவர்களும் அந்நியோன்யமாய் இருப்பதுபோல் பாவனை செய்தார்களே ஒழிய அச்சுக்காரர்களை லக நழுவவிட்ட விஷயத்தில் ஹிட்லர் மாலடோவை மன்னிக்கவில்லை. யூக்ரேன் மாகாணத்தை தன் சுவாதீனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் வெகுகாலமாகவே ஜெர்மனிக்கு உண்டு. ஜெர்மனிக்கு எண்ணெயும், கோதுமையும், மிகவும் அவசியமான வஸ்துக்கள். ஆகையால் ஹிட்லருக்கு பொருளாதார சம்பந்தமாயும், ராணுவ சம்பந்தமாயும், ருஷ்யாவில் விசேஷ அக்கரை உண்டு. பிரிடிஷார்களுடன் வெகுகாலம் சண்டை செய்ய நேரலாம் என்ற நோக்கத்துடனே தானே ருஷ்யாவுடன் தீவிரமாக நடவடிக்கைகள் நடத்தவேண்டுமென்று ஹிட்லர் நினைத்திருக்கலாம்.

கிழக்கு எல்லையில் 120 பிரிவுகளடங்கிய ஜெர்மானியத் துருப்புகளை சேர்த்து வைத்திருப்பதிலிருந்தே ஜெர்மனிக்கு கெட்ட எண்ணம் ஏற்பட்டிருக்கிறதென்று நன்றாகத் தெரியும். தங்களுக்கும் ஜெர்மனிக்கும் எவ்விதமான மனஸ்தாபங்களும் ஏற்படவில்லையெனவே, ருஷ்யா சொல்லிக்கொண்டு வருகிறது. ஆனால் பெர்லின் இதைப்பற்றி மௌனமாய் இருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! கிழண்டை எல்லையில் 15 இடங்களில் ஜெர்மனி ருஷ்யாவை தாக்கியிருப்பதாக வதந்தி உலாவுகிறது. நாஸிகளிடமிருந்து ருஷ்யாவுக்கு அடியிலேகண்ட நிபந்தனைகளடங்கிய ஒரு முடிவு கட்டின நிருபம் அனுப்பப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

(1) ருமேனியாவுக்கு, பஸரேபியாவை விட்டுக்கொடுக்க வேண்டியது.

(2) யூக்ரேனில் விளையும் கோதுமையின் பெரும்பாகத்தை ஜெர்மனிக்கு தங்கு தடையன்னியில் கொடுக்கவேண்டியது.

(3) ருஷியாவிலே உற்பத்தியாகும் வேலை செய்யப்படாத சாமான்களையும் ஜெர்மனிக்கு கொடுக்கவேண்டியது.

(4) ருஷ்யாவிலே ஏற்றுமதிகள், இறக்குமதிகள் என்ன, கைத்தொழில்கள் என்ன, இவைகளை நடத்தும் விஷயத்தில், தொழிலில் கைதேர்ந்த ஜெர்மானியர்களை நிராக்ஷேபனையாய் வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டியது.

இந்த 2 தேசங்களுக்கும் சண்டை நேரிடுவது அசம்பாவிதமில்லை. ருஷ்யாவும், ஜெர்மனியும் ஒன்றை யொன்று லக்ஷியம் செய்யாமல், குறைகூறுவதில் இருந்து இம்மாதிரியான சண்டை நேருவது மிகவும் சகஜம். இம்மாதிரி ஜனங்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொள்வதால் உலகத்தில் நாணயமாயிருப்பவர்கள் அவரவர்களுக்குள்ளதை அடைவார்கள்.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—6—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | கப்பல் தீக்கிரையாகியது. |
| | **ரோட்ஸ் (Rhodes) தீவு.** | | |
| | துறைமுகம்.—ரோட்ஸ் (Rhodes) ... | ...... | ...... |
| | விமான நிலயம்.—கலாடோ (Calato) ... | ...... | பெருந்தீக்கள் சூழ்ந்தன. |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—கடாவியா (Katavia). | ...... | பல இடங்களில் தீக்களும், வெடிச் சத்தமும் கிளம்பின. |
| 9—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | **ஸிரியா (Syria).** | | |
| | ஸிரியா (Syria) விலிருக்கும் தரைப் படைகளுக்கு ஒத்தாசை. | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—ஸுனுமீன் (Sunamein). | ...... | சேதமாயிற்று. |
| | பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுக்குக் காவல்.—ஸிரியா (Syria) வின் கடற்கரை. | ...... | 5 விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ஒரு கப்பலின்மேல் குண்டு வீழ்ந்தது. |
| | விமான நிலயம்.—பெனினு (Benina). | ...... | ...... |
| | விமானங்கள், இறங்குமிடங்கள்.—டெர்னு (Derna), காம்பூத் (Gambut). | ...... | ...... |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—எல் கஸாலா (El Gazala). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| | விரோதி மோட்டார் வண்டிகள்.—பாபி (Babe) க்கும், டெர்னு (Derna) வுக்கும் மத்தியில். | நஷ்டமில்லை. | 30 பெரிய எண்ணெய் மோட்டார்கள் நாசமாயின. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**10—6—41.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விமானச் சண்டைகள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் ஐரோப்பா (Europe). | நஷ்டமில்லை. | 1 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. |
| இரவில்:—ஷார்ன் ஹார்ஸ்டு (Scharnhorst) நீஸ்நோ (Gneisenau) என்னும் யுத்தக் கப்பல்கள், பிரின்ஸ் யூஜன் (Prinz Eugen) என்னும் க்ருயிஸர்—ப்ரேஸ்ட் (Brest). | ...... | பெருத்த நஷ்டம் விளைந்தது. |
| விமான நிலயங்கள்.-மான்டெல் (Mandel), ஸ்டவாங்கர் (Stavanger). | ...... | ...... |
| சாமான் கப்பல்.—நார்வே (Norway)க் கடற்கரை. | நஷ்டமில்லை. | ...... |

### ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| ஒத்தாசை.—ஸிரியா (Syria)வில் முன்னேறும் நேசதேசப் படைகள். | ...... | ...... |
| விமான நிலயம்.—பால்மைரா (Palmyra) துறைமுகம்.—பீரட் (Beirut). | ...... | சேதமாயிற்று. |
| தரையிலிருக்கும் விமானங்கள்.—அலெப்போ (Aleppo). | நஷ்டமில்லை. | பல சேதமாயின. |

### ரோட்ஸ் (Rhodes) தீவு.

| | | |
|---|---|---|
| விமான நிலயங்கள்.—ரோட்ஸ் (Rhodes) | நஷ்டமில்லை. | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| மோட்டார் வண்டிகள் தைனியங்கள்.—எல் கஸாலா (El Gazala), காம்பூத் (Gambut). | ...... | ...... |
| கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | ...... | ...... |
| தரையிலிருக்கும் விமானங்கள்.—பெர்கா (Berka). | நஷ்டமில்லை. | பல விமானங்கள் பலத்த சேதமடைந்தன. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**11—6—41.** (புதன்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—சிறிய துறைமுகம்—ஸீப்ரக்கே (Zeebrugge). | ...... | 1 விமானம். சுட்டுத் தள்ளப்பட்டது. |
| கப்பல் துறைகள்.-எமுய்டன் (Ymuiden). ஒரு சிறிய கப்பல்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | நஷ்டமில்லை. | கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. |
| இரவில்.—கப்பல் துறைகள்.—எமுய்டன் (Ymuiden), டங்கர்க் (Dunkirk). | ...... | ...... |
| கடல் விமான நிலயம்.—நார்டர்னி (Norderney). | ...... | ...... |
| படையெடுப்புத் துறைமுகம்.—கலே (Calais). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |

### ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| கப்பல்கள் துறைமுகம்.—பீரட் (Beirut). | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம் கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | 2 கப்பல்கள் தீக்கிரையாகியின. |
| விமான நிலயம்.—எல் கஸாலா (El Gazala). | 1 விமானம். | பல இடங்களில் தீ மூண்டது. |

### ரோட்ஸ் (Rhodes) தீவு.

| | | |
|---|---|---|
| விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்.—கலாடோ (Calato). | ...... | பெட்ரோல் கிடங்கில் தீப்பிடித்தது. பல விமானங்கள் சேதம். |

**12—6—41.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—கப்பல்கள், படையெடுப்புத் துறைமுகங்கள்.—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. 1 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. |
| இரவில்.—தொழிற்சாலைகள், கட்டடங்கள்.—ரூர் (Ruhr). | 6 விமானங்கள். | ...... |
| கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest), ஆண்ட்வர்ப் (Antwerp). | ...... | ...... |
| ராட்டர்டாம் (Rotterdam). | 1 விமானம். | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**12—6—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

### ஸிரியா (Syria).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| மோட்டார் வண்டிகள், பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—ஸிரியா (Syria). | ...... | ...... |
| ஒத்தாசை.—ஸிரியா (Syria) விலிருக்கும் நேச நாட்டுத் துருப்புகள். | நஷ்டமில்லை. | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | கப்பலின் மேல் குண்டு வீழ்ந்தது. |
| விமானங்கள் இறங்குமிடங்கள்.—மார்டுபா (Martuba), கஸாலா (Gazala), ட்ரிபோலி (Tripoli). | ... | எங்கும் தீப்பிடித்தது. கட்டடங்கள். இடிந்தன. |
| விரோதி மோட்டார் வண்டிகள்.—பார்ஸி (Barce)க்கும், எல் குப்பா (El Gubba) விற்கும் நடுவிலுள்ள ரஸ்தாவில். | ...... | பல வண்டிகள் நாசமாயின; பல உபயோகப்படுத்த முடியாமல் போய் விட்டன. |
| இதாலிய சைனியங்கள் இருக்குமிடங்கள், மோட்டார் வண்டிகள்.—மத்திய அபிஸீனியா (Abyssinia). | 2 விமானங்கள். | துப்பாக்கியால் சுடப் பட்டனர். |

### ரோட்ஸ் (Rhodes) தீவு.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விமான நிலையம்.—கலாடோ (Calato). | நஷ்டமில்லை. | தீப்பிடித்தது. |

**13—6—41.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இரவில்.—துறைமுகம், அங்கு தங்கியிருக்கும் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | ...... | கப்பலின் மேல்தட்டுகள் நாசமாயின. பலத்த சேதம். |
| தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr). | ... | ...... |
| தொழிற்சாலைகள் நிரம்பிய ஜில்லா.—ஷ்வர்ட் (Schwerte). | 1 விமானம். | கனத்த சேதம். |
| விரோதிக் கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 2 விமானங்கள். | ...... |
| விமான நிலையங்கள்.—பிரிட்டனி (Britanny). | ... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**13—6—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| நாசகாரிகள் புடைசூழ விரோதி சாமான் கப்பல்கள்.—மத்தியதரைக் (Mediterranean) கடலின் நடுவில். | .. | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. 1 விமானம். |

### ஸிரியா (Syria).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பிரிடிஷ் யுத்தக் கப்பல்களை பாதுகார்த்தல்.—ஸிடானு (Sidon)க் கருகில். | நஷ்டமில்லை. | 3 விமானங்கள் பல சேதமாயின. |
| ஒத்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ...... | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பகலில்.—விமான நிலையம், தரையிலிருக்கும் விமானங்கள்—கஸாலா (Gazala). | ...... | பல விமானங்கள் நாசமாயின. |
| மோட்டார் வண்டிகள் கவசமணிந்த மோட்டார்கள்.—காபுஸ்ஸோ (Capuzzo), கஸாலா (Gazala). | ...... | 19 மோட்டார் வண்டிகளும், 3 கவசம் அணிந்த வண்டிகளும் நாசமாயின. |
| விமானச் சண்டை.—ஸோபாபி (Sofafi). | ...... | 1 விமானம். |
| தரையிலிருக்கும் ஒரு வெடிகுண்டேறியும் விமானம்.—பார்-எஸ்-ஸெரிர் (Bar-es-Serir). | ...... | சேதமாயிற்று |
| இரவில்.—துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | ...... | தீப்பிடித்தது. |
| விமானங்கள் இறங்குமிடங்கள்.—பெனினு (Benina), டெர்னு (Derna), கஸாலா (Gazala). | ...... | ...... |

### ரோட்ஸ் (Rhodes) தீவு.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| தரையிலிருக்கும் விமானங்கள்.—கலாடோ (Calato). | ...... | பல விமானங்கள் சேதமாகியது. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**14—6—41.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—படையெடுப்புகள்.—இங்கிலிஷ் (English) கால்வாய்; வட பிரான்ஸ் (France). | ... | ...... |
| விமான நிலயங்கள், விமானநிலயக் கட்டடங்கள்.—ஸெண்ட் ஓமார் (St Omer). | ... | கட்டடங்கள் சேதமாயின 3 விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன. |
| விமான நிலயம்.—செர்பார்க் (Cherbourg). | ... | ... . |
| பாதுகாக்கும் படகு.—இங்கிலீஷ் கால்வாய்ப் பிரதேசத்தில். | ... 1 விமானம். | ...... |
| இரவில்.—தொழிற்சாலைகள்.—கொலோன் (Cologne) பிரதேசம். | நஷ்டமில்லை. | தீப்பிடித்தன. |

ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| விரோதி விமானங்கள்—ரயாக் (Rayak) குக்கருகில். | ...... | பல சேதமாயின. |
| சைனியங்கள் மோட்டார் வண்டிகள்—மிர்கில்லி (Mirgille) பிரதேசம். | ...... | ...... |
| ஒரு விரோதிக் கப்பல்—பீரட் (Beirut) டுக்கருகில். | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம்—பெங்காஸி (Benghazi) ... | ...... | பல இடங்களில் தீயும், வெடிகளும் கிளம்பின. |
| விரோதி சைனியங்கள் தங்குமிடம்—பார்டியா (Bardia). | ...... | ...... |
| விமானம் இறங்குமிடம்—டெர்னு (Derna) | ...... | ஒரு பெருந் தீ சூழ்ந்தது. |

**15—6—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதி சாமான் கப்பல் (1000 டன்கள் நிறையுள்ளது)—போர்கூமு (Borkum) க்குத் தெற்கே உள்ள முகத்துவாரத்தில். | ... .. | மூழ்கடிக்கப்பட்டது. |
| ஒரு விரோதி துணைக்காவல் கப்பற்படை—ஹேக் (Hague) குக்கு அருகே. | ...... | 1 கப்பல் தீக்கிரையாயிற்று. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**15—6—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| ஒரு ஜெர்மன் படகு, ஒரு சாமான் கப்பல்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | படகு மூழ்கடிக்கப் பட்டது. சாமான் கப்பல் சேதமாயிற்று. |
| இரவில்.—தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr), கொலோன் (Cologne), ஹானோவர் (Hanover) பிரதேசங்கள். | ...... | ...... |
| கப்பல் துறைகள்—டன்கர்க் (Dunkirk)... | ...... | ...... |
| விமான நிலயங்கள்—பிரான்ஸ் (France). | ...... | ...... |

ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்—அலெப்போ (Aleppo). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. பல விமானங்கள் சேதமாயின. |
| விமானச் சண்டை.—கிஸ்வே (Kisweh) பிரதேசம். | ...... | 2 விமானங்கள். நாசமாயின. |
| கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—கிஸ்வே (Kisweh) பிரதேசம். | ...... | 2 வெடிகுண்டெறியும் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. |
| பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுக்குக் காவல்.—ஸிரியா (Syria)வின் கடற்கரை. | 6 விமானங்கள். | பல விமானங்கள் நாசமாயின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| பலவிமானச் சண்டைகள்.—ஸிரெனிகா (Cyrenaica). ... | ...... | 4 விமானங்கள். |
| விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள், கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—எல் கஸாலா (El Gazala) காபுஸ்ஸோ (Capuzzo), பார்ஸி (Barce). | ...... | பல வண்டிகள் நாசமாயின. |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—பார்டியா (Bardia) | ...... | பல வண்டிகள் சேதமாயின. |
| விமானங்கள் இறங்குமிடங்கள், தரையிலிருக்கும் விமானங்கள்.—டெர்னு (Derna), மார்டூபா (Martuba), எல் கஸாலா (El Gazala). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. பல விமானங்கள் நாசமாயின. |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—6—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தென் வேல்ஸ் (Wales) தென் கிழக்கு இங்கிலாந்தி (England)னருகே கடற்கரையில் ஒரு இடம். | ...... | சொற்பச் சேதம். சிலர் மாண்டனர். |
| | **பாலஸ்தீனம் (Palestine).** | | |
| | ஹைபா (Haifa) ... | ... 1 விமானம். | பொதுஜனங்கள் பல நாசமாயின, பலருக்குக் காயம். |
| **11—6—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—அங்குமிங்கும் பல இடங்கள்—இங்கிலாந் (England)தின் வடகிழக்கு, கிழக்கு, தெற்குப் பாகங்கள். மேற்கு மிட்லண்ட்ஸ் (Midlands) ... | ...... 1 விமானம். | சேதமும் காயம் பட்டவர்களும் அதிகம். ...... |
| | **பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).** | | |
| | டொப்ருக் (Tobruk) ... ... | ...... | சேதமில்லை. |
| **12—6—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—பகலில் விமான நடவடிக்கையே இல்லை. இரவில்.—கிழக்கு இங்கிலாந்து (England), கிழக்கு ஆங்கிலியா (Anglia)-வில் ஒரு பட்டணம். | ...... ...... 1 விமானம். | ...... சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | **பாலஸ்தீனம் (Palestine).** | | |
| | டேல் அவிவ் (Del Aviv) ... ... | ...... | ...... |
| | ஹைபா (Haifa) ... ... | ... | சிலர் கொல்லப் பட்டனர். |
| | **பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).** | | |
| | டொப்ருக் (Tobruk). | ... 1 விமானம். | சேதமே இல்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸைப்ரஸ் (Cyprus) ... | ...... | சேதமே இல்லை. |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **13—6—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தெற்கு, தென் கிழக்கு, கிழக்கு இங்கிலாந்து (England). | 7 விமானங்கள். | மிகச் சொற்பச் சேதம். |
| | **ஜிப்ரால்டர் (Gibraltar).** | | |
| | ஜிப்ரால்டர் (Gibraltar) | ... 4 விமானங்கள் போர்ச்சுகலில் விழுந்து ஒடிந்தன. | சேதமேயில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸைப்ரஸ் (Cyprus) ... | ...... | சேதமேயில்லை. |
| **14—6—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—பல இடங்கள்—மேற்கு இங்கிலாந்து (England). | 1 விமானம். | காயம் பட்டவர்களும், சேதமும் சொற்பம். |
| | **ஸிரியா (Syria).** | | |
| | சுழல் விமானங்கள் குண்டு போடுதல்.—ஸிரியா (Syria) விலிருக்கும் பிரிடிஷ் படைகள். | பல சேதமாயின. | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) | ...15 விமானங்கள் பல சேதமாயின. | ...... |
| **15—6—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு பட்டணம்—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | ...... |
| | இரவில்.—சில இடங்கள்—தெற்கு இங்கிலாந்து. | 1 விமானம். | மிகச் சொற்ப சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta)விலிருக்கும் நிகோஸியா (Nicosia). | ...... | சேதமேயில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 16—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| இரவில்.— | அங்குமிங்கும் சில இடங்கள்— இங்கிலாந்து (England), வேல்ஸ் (Wales). | 3 விமானங்கள். | சொற்பச் சேதம். |
| | **ஸிரியா (Syria).** | | |
| | மர்ஜ் அயோயம் (Merj Ayoum) | ... | ...... ...... |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

கிரீட்.—சென்ற வாரத்தில் வாரயுத்தச் செய்திகளைப்பற்றி எழுதிய அறிவாளியான ஆசிரியர் கிரீட்டில் நமக்கு ஏற்பட்ட தோல்வியைப்பற்றி எவ்வாறு மதிக்க வேண்டுமென்றும் புத்திசாலித்தனமாய் கூறியுள்ளார். அவரறிந்த மட்டில் வெரசு போட்டால் நமக்கு லாபங்கள் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன வென்றே சொல்லலாமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். இதைப்பற்றி இன்னும் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். கிரீட் சம்பவத்தை மத்தியக் கிழக்குப் பிராந்தியத்தில் நடக்கும் யுத்த நடவடிக்கையைக் கொண்டும், இந்த யுத்தத்தின் போக்கைக் கொண்டும் மதித்துப் பார்க்கவேண்டும். ஜெர்மானியர்கள் ஸூயஸ் துறைமுகத்தை அடைய முயலுகிறார்களென்பதும் அவர்கள் அதை அடையாமல் தடுப்பதற்கு வேண்டிய அளவு நேசநாடுகள் முயற்சி செய்கிறார்களென்பதும் வெளிப்படையான விஷயங்கள். எதிரிக்கு உள்நாட்டு வழியாக ஏராளமான சாமான்கள் கிடைக்கின்றன. நமக்கு ஏராளமான சேமிப்புகளிருக்கின்றன. அவைகளை நாம் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டால் எதிரியைக் காட்டிலும் நம்மிடம் அதிக முஸ்தீப்புகள் இருக்கக்கூடும். அவைகளில் சிலவைகள் இப்பொழுது உபயோகப்படுத்தக்கூடுமானாலும், சிலவைகள் வந்துசேர அநேக மாதங்களாகும். ஆகையால் தீர்மானமாக ஜயிக்கக்கூடிய போர் முனையில் நம்முடைய முஸ்தீபுகளைக்கொண்டு வந்து சேமிக்கும் வரையில் வெளிப்படையான இடங்களில் காலதாமதம் செய்வதுதான் நம்முடைய முக்கியமான யுத்த தந்திரம். இந்த தாமதத்தினால்தான் ஸிரேனகா, கிரீஸ், இப்பொழுது கிரீட் எல்லாம் போய்விட்டன. இந்த நஷ்டங்களைப் பற்றி நாம் துக்கிக்கவேண்டியிருந்தாலும், 1939-ம் வருஷத்திலேயே ஸூயஸைக் கைப்பற்றிவிடவேண்டுமென்று அச்சு நாடுகள் பகிரங்கமாக எண்ணினார்களென்றும், அந்த அவர்கள்



இது வரையில் அடையமுடியவில்லையென்றும் ஜனங்கள் மறந்து விட்டார்கள் போலும். இதற்குள்ளாக நாம் அபிஸீனியா பூராவையும் ஜயித்து இதாலியர்களிடமிருந்து செங்கடல் கரைபூராவும் கைப்பற்றிவிட்டோம். இராக்கிலுள்ள வழிகளை ரக்ஷித்துவிலைய அப்புறப்படுத்தியதிலிருந்து நமக்கு உபயோகப்படும்படியாகச் செய்துவிட்டோம். மடாபான் என்னுமிடத்தில் சண்டைபோடக்கூடிய இதாலியக் கடற்படையை நாம் நாசமாக்கிவிட்டோம். விஷியையும் ஜெர்மானியர்களையும் ஸிரியாவில் கால் நாட்டாதபடி செய்துவிடுவோமென்று தோன்றுகிறது. இதே சமயத்தில் எல்லா பாகங்களிலும் நம்முடைய வலு அதிகரித்துவருகிறது.

### விரிவான சின்னம்.

மேலும், மத்தியக்கிழக்கில் நடந்த யுத்தமானது பிரிடனைக்குறித்து வேனிற் காலத்தில் ஹிட்லர் உத்தேசித்திருக்கும் எதிர்ப்பில் ஒரு பாகமாகத்தான் கருதப்படவேண்டும். அட்லாண்டிக் மஹாசமுத்திரத்தில் யுத்தம் மற்றொரு பெரும்பகுதி. பிஸ்மார்க் கப்பல் மூழ்கிவிட்டது. ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்னௌ, பிரின்ஸ் யூஜன் என்னும் கப்பல்கள் பிரெஸ்ட் துறைமுகத்தில் காயமுற்று அடைபட்டுக்கிடக்கின்றன. ஜெர்மனியின் சிறிய சண்டைக் கப்பல்களிலொன்று அடிபட்டு நொண்டியாய் காயங்களைத் தடவிக்கொண்டு பால்டிக் சமுத்திரத்துக்குள் போய்விட்டது. இன்னும் சில மாதங்கள் வரையில் வெளிக்கிளம்ப முடியாது. டஸன்கள் (இதைக் கவனியுங்கள்—ஹிட்லரிடம் அநேக டஸன்கள் இல்லை). கணக்கான நீர்மூழ்கிகள் பிரிடிஷ் கடற்படையாலும் பிரிடிஷ் விமானப்படையாலும் நாசமாக்கப்பட்டுவிட்டன. அமெரிக்காவின் உதவியானது அளவிலும் அனுப்புவதின் வேகத்திலும் ஏராளமாக அதிகரித்து வருகிறது. பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சுதந்திரத்தை நிலைநாட்ட எண்ணம் கொண்டிருக்கிறாரென்பதும், வெளிப்படையாக இல்லாதபோதிலும் பிரஸிடெண்டுக்கு உரித்தான அதிகாரங்களை அவர் அமுல் நடத்த ஆரம்பித்து விட்டாரென்பதும், கடலில் ரோந்து செய்வது என்ற ஏற்பாடும், இவை எல்லாம் ஜெர்மானியர்களுக்கு தினம்தோறும் அருவருப்பைக் கொடுப்பதோடு பீதியையும் உண்டுபண்ணுகிறது. ஜெர்மானியர்கள் இந்த வேனிற் காலத்திற்குள்ளும், இலையுதிர்காலத்திற்குள்ளும் இரண்டு போர் முனைகளிலும் ஒரு முடிவை அடையவேண்டும். இல்லையேல் உலகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் தங்கள் ஆதிக்கத்தை இழக்கவேண்டிவரும்.

* வுல்டன் பிரபு சமீப காலத்தில் அபிப்பிராயப்பட்டபடி நம்முடைய உணவுப் பொருள்கள் சப்ளையைக்கூட அவர்கள் விசேஷமாக நஷ்டம் செய்யவில்லை. படையெடுப்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பத்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் தேகவலுவுள்ளவர்களாகவும் மனோதைரியத்துடன் நம்பிக்கையுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள்).

## பிரிடனில் வாழ்க்கையைப்பற்றி மற்றொரு விருத்தாந்தம்.

யுத்தகாலத்தில் நமது தாய்நாடு எப்படியிருக்கிறதென்பதைப்பற்றிய முதல் தரமான அபிப்பிராயங்களை இந்தப்பகுதியில் அநேகதடவை பிரசுரித்திருக்கிறோம்.

எனக்கு வந்த தபாலில் கடைசியாகவந்த ஒரு சுருக்கத்தை இங்கு வெளியிடுகிறோம். "சொல்லவேண்டியவைகள் அநேகமிருக்கின்றன. எங்கே ஆரம்பிப்பதென்று புரியவில்லை—ஆகிலும் சில கணக்குகளைமட்டும் சொல்லுகிறேன். நகரத்தில் இருக்கும் எங்களுக்கு 450 விமான எதிர்ப்பு அல்லது விமான எச்சரிக்கை ஏற்பட்டிருக்கிறது. அவைகளில் அநேகத்தால் ஒரு சம்பவமும் ஏற்படவில்லை என்று சொல்லுகிறேன். 450-வது எதிர்ப்பு இரண்டு நாட்களுக்குமுன் ஏற்பட்டது. யுத்தம் ஆரம்பித்தது முதல் 1940-ம் வருஷம் முடிய 374 தடவை சங்கங்கள் விமான எதிர்ப்பை அறிவித்திருக்கின்றன. இவைகளில் 370 தடவைகள் வருஷக் கடைசியில் நான்கு மாதங்களில் ஏற்பட்டவை. ஆகையால் இன்று வரையில் கணக்கிட்டால் 1941-ம் வருஷத்தில் அதிகக் கெடுதல் ஏற்படவில்லை என்றே சொல்லலாம். பகலில் ஏற்படும் எதிர்ப்புகளைப்பற்றி நாங்கள் அதிகக் கவலைப்படுவதில்லை. (எங்களுக்கு ஒளிகளுமில்லை). சென்ற மாரிகாலத்தில் 10, 12 14 மணிநேரம்கொண்ட இரவு எதிர்ப்புகளைப்பற்றித் தெரியவேண்டுமானால் அவைகளை அனுபவித்தால்தான் தெரியும். தெரிந்துகொள்வது என்பது சரியான பதப்பிரயோகமில்லை. 'பி' என்னும் அக்ஷரத்திலாரம்பிக்கும் ஒரு வார்த்தை சமயோஜிதமாயிருக்கும். இங்குயிருக்கும் அநேகரைப்போல், நாங்கள் படுத்துக்கொள்ள கீழ்தளத்துக்கு வந்துவிட்டோம். மாடிகளை ஸ்நானத்திற்கும் மற்றவைகளுக்கும் உபயோகப்படுத்துகிறோம். ஆகிலும் எங்கள் மாளிகை உயர்வானது. கீழ்த்தளத்திலும் நாங்கள் இரண்டு ஸ்நானகட்டங்களும் சில்லரை உபயோகத்துக்கு வேண்டிய அறைகளும் வைத்திருக்கிறோம். அவைகள் ரொம்பவும் சௌகரியமாயிருக்கின்றன. இவ்விடத்தில் ஏராளமான வெடிகுண்டுகள் போடப்பட்டன. K-க்கு அழகான தொந்தியிருந்தது சென்ற வருஷம் வெடிகுண்டுகள் விழும்பொழுது தரையில் குப்புறப்படுத்துக்கொண்டதன் மூலம் அது கரைந்துவிட்டது.

எல்லா பக்கங்களிலும் 100 கஜத்துக்கு அப்பால்தான் வெடிகுண்டுகள் விழுந்தன. இதுவும் சமீபம்தான். பிரதேசம் பூராவும் ஆயிரக்கணக்கான எரிவெடிகள் போடப்பட்டன. நெருப்பு அணைக்கும் சேவையானது, தனிப்பட்டும், ஸர்க்கார் ஏற்பாட்டிலும், மிகவும் நன்றாய் அமைக்கப்பட்டிருப்பதால் எரிவெடிகுண்டைப்பற்றி நாங்கள் பயப்படுகிறதில்லை. எல்லா இடங்களிலும், மணல் குவியலும், சுருக்குப்பாறைகளும், கிளறு கோல்களும், ஏணிகளும் இன்னும் அநேக சாமான்களும் வைத்திருக்கிறோம். ஒவ்வொருவரும் நெருப்பு உண்டாகும் ஸ்தலங்களைக் கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். என்னுடைய சிறிய பாகமும் திங்கட்கிழமைகளில் ஒருவாரம் சாயங்காலம் முதல் காலை 2-மணி வரையிலும், மற்றவாரங்களில் காலை 2-மணிமுதல் பொழுது விடியும்வரையிலும் உண்டு. இரண்டாவது காலம் கஷ்டமாகத்தானிருக்கிறது. விசேஷமாக பொறுக்கமுடியாதபடி சில இரவுகளில் குளிர் அதிகமாயிருந்தது இங்கிலாந்தில் மாரிகாலம் வரவர கஷ்டமாக மாறிவருகிறது. இதைநாம் உணருகிறோம். இனிமேல் இங்கு அக்காலத்திலிருப்பாக உத்தேசமில்லை.

"இப்பொழுது வாழ்நாட்கள் அவ்வளவு ருசிகரமாயில்லை. லண்டன் நகரத்தைப் பல மாதங்களாகப் பார்க்கவேயில்லை. ஒரு பக்கம் ஸ்டேட்டனும்; மற்றொரு



பக்கம் எப்ஸமும் எங்களுடைய எல்லைச் சரகங்கள். அதுவரையில்தான் நாங்கள் செல்லக்கூடும். அநேகம் நாடகசாலைகள் திறக்கப்பட்டிருப்பினும் நாங்கள் ஒன்றுக்கும் செல்லுகிறதில்லை. ஒவ்வொரு சமயம் நல்ல படங்கள் காண்பிக்கப்பட்டால், சினிமா பார்க்கச் செல்லுவோம். இரண்டு வருஷங்களுக்கு முன்பு 1938-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில்தான் நாங்கள் காலிகட், கொச்சின், கோயம்புத்தூர், உதகமண்டலம் முதலிய இடங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பினோம். வழியில் அழகான சைட் (Said) துறைமுகத்தில் சிநேகிதர்களோடு ஒரு மாதம் வசித்தோம். ஊருக்கு வந்தவுடன் புதிய மாரிஸ் (10) கார் வாங்கினோம். பெட்ரோல் அளவிடப்பட்டுவிட்டதால் நாங்கள் 5,300 மைல் பிரயாணம்தான் செய்திருக்கிறோம். இந்தச்சமயம் அதிகப் பெட்ரோல் செலவன்னியில் செல்லக்கூடிய 1939-ம் ஒஸ்த்திய கார்கள் தேவையாயிருக்கின்றன. நாங்கள் லாபகரமாக எங்கள் மோட்டாரை விற்றுவிடலாம். சமீபத்தில் நூதன வரிகள் போடுவதாக நாங்கள் அறிந்தால் மோட்டாரை விற்கவேண்டித்தான்வரும். மோட்டார் இல்லாமல் நான் என்ன செய்வதென்று புரியவில்லை. என்னுடைய கால்களில் வலுக்குறைந்துவிட்டது. நானும் அதிக தூரம் கால் நடையாய் உலாவுகிறதில்லை. மற்றபடி நன்றாய்த் தானிருக்கிறேன். K-இப்பொழுது வீட்டு வேலைகளெல்லாம் கவனிக்கிறாள். எங்களிடம் வேலைக்காரியில்லை. கிடைப்பது அரிது. வாலிபப் பெண்களெல்லாம் யுத்த சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகிலும் சில நாட்களில் அரை வேலைக்கு, அதாவது காலை 9 முதல் மாலை 1 மணி வரையில் சில வேலைக்காரிகள் அமர்த்தப்படுகிறார்கள். சமையல் செய்வது K-க்குப் பிடிக்கவில்லை. உணவுப்பொருள்களை பங்கிட்டுக்கொடுக்கும் சங்கடங்களிருந்தும் சாப்பாடு சரிவர நடந்துவருகிறது. இதைப்பற்றி ஒருவரும் கவலைப்படுகிறதில்லை. இவைகளை நாம் அனுபவிக்கவேண்டிய தொந்தரவுகள் என்று நினைக்கிறோம்.

"இதை எழுதும்பொழுது வருமானவரி பவுனில் 10 ஷில்லிங்காக விதிக்கப்பட்டிருக்கிறதென்றும் எல்லாவிதமான கொடைகளிலும் வெட்டு ஏற்படக்கூடும் என்றும் கேள்விப்படுகிறேன். இதை எழுதும்பொழுது பால்கனில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. இந்தக்கடிதம் உன்னிடம் வரும்பொழுது நிலை எப்படி மாறுமோ தெரியவில்லை. இந்தச் சமயம் ஜெர்மனியின் பலமா அடித்துவிடவேண்டித்தான்வரும் என்று நினைக்கிறேன்.

"நேற்றிரவு மறுபடியும் எதிரிகள் விமானங்களால் தாக்க ஆரம்பித்தார்கள். இந்தப் பிராந்தியத்தில் வெடி குண்டுகள் விழவில்லை. தூரத்தில் பீரங்கிகளின் சப்தம் கேட்டது. விமானங்கள் மட்டும் ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தன. நான் நெருப்புத் தளங்களைக் கண்டுபிடிக்கும் வேலையில் அமர்ந்திருந்ததால் நான் வெளியே நின்று சுற்றிலும் பார்த்தேன். நான் தூங்கச் சென்றேன். ஆகிலும் நடு இரவுக்குப் பிறகு சங்கமானது த்வனிக்க ஆரம்பித்து என்னைக் கிளப்பிவிட்டது. விமானங்கள் போய்விட்டனவென்று காலை 4மணிக்குச் சொல்லப்பட்டது. அதிக இருட்டுள்ள குளிர் மிகுந்த இரவு—வஸந்தகாலம்போல் அவ்வளவு சௌகரியமாயில்லை. வாழ்நாட்களின் தொந்தரவில் இருளுண்டாக்கும் வேலையும் ஒன்று. நேற்றிரவு வரையில் 583 தடவை இதைச் செய்திருக்கிறேன். இது

கால்மணி நேரம் பிடிக்கிறது. வீடு பூராவும் சென்று வெளிச்சம் புகுந்துவரக் கூடாத துணியால் மூடப்பட்ட திரைகளை எல்லாம் தொங்கவிட்டேன். ஆகிலும், வெளிச்சம் கொஞ்சம் தெரியவருகிறது. வர்ணமுள்ள துணிகளைக் கொண்டும், குண்டு ஊசிகள், சித்திரவேலைக்கு லாயக்கான ஊசிகள் இவை போன்ற அநேகம் சாதனங்களைக்கொண்டும், அவைகளை மூடி வழக்கில் அகப்பட்டுக்கொள்ளாமல் செய்துவருகிறோம். ஒன்று அல்லது இரண்டு தட்வை கொஞ்சம் வெளிச்சம் தெரிந்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு அகப்பட்டுக் கொண்டோம். இப்பொழுது பழைய பத்திரிகைகளால் விளக்குகளையெல்லாம் மூடிவிட்டோம். மிட்டாய் வகைகளும், ஜாமும் மற்றவைகளும் பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதத்திற்கும் மொத்தமாக எல்லா வகைகளும் சேர்ந்து மூன்றுபேருக்கு $1\frac{1}{2}$ பவுண்டுதான் கொடுக்கப்படுகிறது. எங்களிடமுள்ள 2 பவுண்டு மிட்டாயை கொஞ்சநாளுக்குமுன்தான் சாப்பிட ஆரம்பித்தோம். காலை போஜனத்தில் அதிகமாக அதை உட்கொள்ளுவதற்காக ஒருவரை ஒருவர் திட்டுகிறோம். எங்கள் தோட்டத்தில் விளைந்த ராஸ்ப்பெர்ரி என்னும் காயிலிருந்து எடுத்த ரஸத்தைமட்டும் அதிகமாகச் சாப்பிடுகிறோம். நாங்கள் சர்க்கரை போன்ற ஒரு சாமானை சர்க்கரைக்குப் பதிலாக பழரஸக்குழம்பு செய்ய உபயோகிக்கிறோம். உணவு இலாகாவிலிருந்து இந்த வருஷத்தில் உபயோகப்படுத்த சர்க்கரை அகப்படாது.

"குழந்தைகளின் மனோதைரியம் மெச்சத்தக்கது. இளமைப்பருவமுள்ள ஜான் வெடிகுண்டுகளைப்பற்றி கவலைப்படுகிறதில்லை. அவன் போல் வயதுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் அதேமாதிரிதான். இது நல்ல காரியம். என்னுடைய (94) வயது வாய்ந்த தகப்பனார் பிரிஸ்டலில் வசித்துவருகிறார். அங்கே என்னுடைய சகோதரியும் இரண்டு சகோதரர்களுமிருக்கிறார்கள். ஏராளமாக வெடிகுண்டுகள் போடப்பட்ட நகரங்களில் பிரிஸ்டல் ஒன்று. அங்கே அவர்களுக்கு அடிக்கடி கஷ்டமானநிலை ஏற்பட்டது. என்னுடைய சகோதரி முதலில் ரொம்பவும் பயந்து, வயத்துப்பெறட்டல் ஏற்பட்டு கஷ்டப்பட்டாள். இப்பொழுது தைரியமாய் வெளியே போகிறாள். கிழவனுக்குக் காது மந்தம். ஒன்றும் காதில் விழுவதில்லை. சென்ற 18 மாதங்களாக நான் அவர்களைப் பார்க்கவில்லை.

"நூதன வரியின் நோக்கம் என்னவென்பது பற்றி ஒரு உதாரணம் சொல்லுகிறேன். ஒருவனுக்கு ஒரு வருஷத்தில் செலவுசெய்ய 5,000 பவுன்கள் தேவையானால் அவனுக்கு 66,000 பவுன்கள் மீதமிருக்கவேண்டும்.* இது நம்பக் கூடாததாகயிருக்கிறது. ஆனால் இதுதான் சரியான நிலைமை. ஆகையால் சென்ற திங்கள் வரையில் பணக்காரர்களென்று சொல்லிக்கொண்டவர்களெல்லாம் இப்பொழுது அகப்பட்டுக்கொண்டுவிட்டார்கள். வரிகள் கொடுப்பதற்கு தங்கள் ஐசுவரியங்களை உபயோகப்படுத்தவேண்டியதுதான். இந்த ஏப்ரல் மீ காலநிலை ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. சென்ற சில நாட்களாக குளிர்ச்சியான வடகிழக்குக் காற்று அடிக்கிறது. ஆகிலும் தோட்டத்திற்குள் சென்று வேலை செய்யாவிட்டாலும் அங்குமிங்கும், சுற்றிப்பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த



வருஷம் அதிகச்செலவை உத்தேசித்து தித்திப்பு பட்டாணி பயிரிடுவதை நிறுத்தி விட்டோம். நான் ஒரு சிறிய தேர்ச்சிபெற்றவளாக ஆகிவிட்டேன். 18 இஞ்ச நீளமுள்ள தட்டைகளுள்ள சில அழகுவாய்ந்த செடிகளைச் சென்ற வருஷம் உற்பத்திசெய்தேன். எனக்கு ஒரு பரிசு வந்திருக்கக்கூடுமென்று சொன்னார்கள். நான் பரிசுக்கு ஆசைப்படவில்லை. ஏதாவது கொஞ்சம் வேலைசெய்தால் போதுமென்று நான் நினைக்கிறேன்".

* (கராச்சியிலும் பம்பாயிலும் வெடி குண்டுகள் விழ ஆரம்பித்தால் இந்தியாவிலுள்ள அரசர்களும் பணக்காரர்களும் மட்டும்தான் தங்கள் வருமானத்தில் 13-ல் 12 பாகம் அரசாங்கத்தாரின் உபயோகத்துக்குக் கொடுத்து உதவுவார்களாவென்றும் மற்றவர்கள் சும்மாயிருப்பார்களாவென்றும் கேட்கிறேன்.—ப).

## ஜெர்மனிக்கு இதுதான் தருணம். இல்லாவிடில் ஒருபொழுதுமில்லை.

யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் தனிப்பட்டிருக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொள்வதினின்றும் அமெரிக்கா தப்பித்ததிற்குக் காரணம் சென்ற இலையுதிர் காலத்தில் பிரிடன் தனக்கு ஏற்பட்ட விபத்திலிருந்து தப்பியதுதான். ஹிட்லர் திட்டிக்கொண்டேயிருக்கிறான். ஐக்கிய நாடுகள் ஐரோப்பிய வியவகாரங்களில் தலையிடுவதில்லையென்று தீர்மானித்திருந்தால், ஹிட்லர் அமெரிக்காவுக்கு வெளிப்படையாக நல்லெண்ணமுள்ளவனாக வாக்குறுதி செய்து அதன் மூலம் அமெரிக்கர்கள் தங்கள் பாதுகாப்புக்காக வேகமாக முஸ்தீபுகள் தயாரிப்பதை காலஹரணம் செய்துவிடுவதோடு, ஐரோப்பா பூராவையும் யுத்தத்துக்காக ஒரு பெரிய உலைகளமாகச் செய்தும், தென் அமெரிக்கா பூராவிலும் நாஸி தத்வம் பரவும்படியாகச் செய்தும் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தை ஜெர்மனியின் ஒரு ஏரியாகவும் மாற்றியிருந்திருப்பான். இப்பொழுது பிரிடனுடைய ஜீவ நாடியாகிய அட்லாண்டிக் சமுத்திரத்தில் வீணான பிரயத்தனங்கள் செய்யும்படி அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. அல்லது பிரிடிஷ் கால்வாயைப் பிடித்து சாம்ராஜ்ஜியத்தை ஒழிக்க வேண்டியிருக்கிறது. இவ்விரு வகை யத்தனங்களும் கடல் சுதந்திரத்தைக் கைப்பிடித்திருக்கும் அமெரிக்காவின் கொள்கைகளுக்கு முரணாகயிருக்கின்றன. சுருக்கமாக ஹிட்லரின் யோசனைகள் குறிதவறிவிட்டன. அமெரிக்காவானது மறுபடியும் அவனுக்கு எதிரியாகக் கிளம்பிவிட்டது. இதுவரையில் வியாபகமில்லாத அநேக இடங்களில் தன் கைவரிசையைக் காண்பிக்க ஹிட்லர் ஆரம்பித்துவிட்டான்.

டென்மார்க் சமீபத்திலும், கிரீன்லாந்து சமீபத்திலும் நடந்த யுத்தத்தைக் கவனியுங்கள். முதலில் ஐஸ்லாந்தைத் தாக்குவதன்மூலம், கடைசியில் கிரீன்லாந்தை ஆக்கிரமிப்பது என்ற ஜெர்மனியின் முயற்சியானது வீணாகப்போய்விட்டதென்றும் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட பீதியும் போய்விட்டதென்றும் அமெரிக்கர்கள் நிராட்சேபணையாக வெளியிடுகிறார்கள். ஸிரியாவிலும் பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்தின் பூர்ணமானது நிலைநாட்டப்படுமென்று விஷி அரசாங்கமானது எண்ணம் கொண்டதை ஜெர்மனியின் புரட்சியானது பொய்யாக்கிவிட்டது. ஆகையால்

ரூஸ்வெல்டின் கோபத்தை மறைத்துக்காட்ட ரயிடர் (Raeder) என்பவர், அமெரிக்காவின் துணைக்கப்பல் அனுப்பும் ஏற்பாடும், கடலில் ரோந்து போவதும் யுத்த முறையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளென்றும் இதற்குத் தகுந்தபடி ஜெர்மன் கடற்படை பதிலளிக்குமென்றும் பகிரங்கமாக வெருட்டுகிறார்.

ஹிட்லருடைய ஏற்பாட்டின் அடித்தளங்கள் அகன்றுவிட்டன. அமெரிக்கா வெகு நாள் வரையில் பேசாமலிருந்ததிலிருந்தும் அமெரிக்காவில் தொழிலாளிகளின் கலவரத்திலிருந்தும் தன்னுடைய ஏற்பாடுகளை வேகமாகச் செய்து முடித்து விடலாமென்று ஹிட்லர் திட்டம் போட்டிருந்தான். சந்தர்ப்பம் மாறியதிலிருந்து திட்டம் பிரயோஜன மற்றதாக மாறிவிட்டது. இதற்குக் காரணம் இதுவரையில் பிரிட்டனை ஜெர்மனி ஜயிக்க முடியாததுதான். அமெரிக்காவானது இப்பொழுது "பரிமாணமில்லாத தேசியப் பொதுக் கிளர்ச்சி" இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறது. அதாவது ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்து விட்டது. சென்ற யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுவிட்டது போல், தனக்கு எதிராக அமெரிக்கா யுத்தத்தில் இறங்கு முன்னமே, இந்த யுத்தத்தில் பூரணமான வெற்றிபெற ஜெர்மனிக்கு முடியவில்லை. அமெரிக்கா பூராவாகத் தயாராக இல்லையென்பது வாஸ்தவம். ஆகையால் இந்த வேனிற் காலத்தில் ஹிட்லருடைய முழு பலத்தையும் அவன் பிரயோகம் செய்து பார்க்கவேண்டும். ஆனாலும் சென்ற வருஷத்தைவிட இந்த வருஷத்தில் ஹிட்லருக்கு நிச்சயமாக வெற்றிக்கு சந்தர்ப்பங்கள் குறைவுதான்.

## கடலின் சுதந்திரம் என்பதைப்பற்றி ஐக்கிய நாடுகளின் அபிப்பிராயம்.

மேற்கு அர்த்த கோளத்தின் க்ஷேமத்துக்குக் குறைவு வரக்கூடிய எந்தச் செய்கையும் கடலில் சுதந்திரம் என்னும் கொள்கைக்கு முரணானவை என்று ஸ்பஷ்டமாய் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சொல்லிவிட்டார். இதே மாதிரிதான் கடலாதிக்கத்துக்கு ஆபத்து ஏற்பட்டாலும் என்றும் பொருள்படுகிறது. இவை இரண்டுக்கும் மூன்று பக்கங்களிலிருந்து ஆபத்து உண்டாயிருக்கிறது.

(a) கிரீன்லாந்திலும், ஐஸ்லாந்திலும் ஜெர்மானியர்கள் நிலயங்கள் ஏற்படுத்தியினால் ந்யூபௌண்டுலாந்துக்கும், நோவாஸ் கோஷியாவுக்கும், ஐக்கிய நாடுகளின் கிழக்கேயுள்ள கடற்கரைக்கும் ஆபத்து ஏற்படக்கூடும்.

(b) இதுவரையில், ஒரு சம்பவமும் ஏற்படாத போதிலும், ஸ்பெயின், போர்ச்சுகல் இவ்விரண்டு தேசங்களையும் ஜெர்மனி வெகுகாலமாக பயமுறுத்தி வருகிறது. ரூஸ்வெல்டின் அபிப்பிராயப்படி ஹிட்லருடைய யோசனையும் அதை நடத்துவதற்கு அவன் வைத்திருக்கும் பலமும் அஸோர்ஸ் தீவுகளுக்கும் கேப் வெர்டி தீவுகளுக்கும் பீதியை உண்டுபண்ணுவதற்காகத்தான். இந்தத் தீவுகள் ப்ரெஸிலிலிருந்து பொதுவாக மேற்கு அர்த்தகோளத்திலிருந்தும் 7-மணி நேரத்தில் விமான மார்க்கமாய் செல்லக்கூடியவர்கள். காஸப்ளாங்காவும் டாக்காரும் ஜெர்மானியர் வசமாகிவிட்டால் அங்கிருந்தும் கெடுதல் நேரிடக்கூடுமென்றும் அமெரிக்காவிலுள்ள அரசாங்கவர்க்கத்தார் வெளியிடுகிறார்கள்.



(c) இந்த வடக்கு, தெற்கு பிராந்தியங்களுக்கு மத்தியில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஏராளமான போக்குவரவு மார்க்கங்களிருக்கின்றன. அமெரிக்காவின் க்ஷேமத்தையும் கிரீன்லாந்து, கேப்வெர்டி தீவுகளின் பாதுகாப்பையும் கருதுவது போய் இந்த மார்க்கங்கள் வழியாக பிரிட்டனுக்கு அனுப்பப்படும் அமெரிக்க ஸப்ளைகளை பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவதாகவும் பிரஸிடெண்டு சொல்லியிருக்கிறார்.

அமெரிக்காவின் இம்மாதிரியான பாத்தியங்களிலிருந்து ஜெர்மனிக்குக் கோபமுண்டாகிவிட்டது. நாஸி தத்வத்தைப்பற்றி பேச்சு அதிகமாக இருக்கும் பொழுது அமெரிக்கர்கள் மட்டுமில்லாமல் மற்ற எல்லோரும் இவை மிதமான பாத்தியங்களென்று அறிகிறார்கள். "நாம் வரும் காலத்தில் செய்யக்கூடிய பங்கர்ஸ் ஹில் யுத்தமானது, போஸ்டன் என்னுமிடத்திலிருந்து அநேக ஆயிரம் மைல்களுக்கப்பால் நடக்கக்கூடியது" என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் அழகாய்ச் சொன்னது வீணுகப் பீத்திக்கொண்டதல்ல. உபயோகமற்ற ஜோஸ்யமுமல்ல.

## புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான ஆயுதம்.

ஹிட்லராவது, மற்ற எவருமாவது இது வரையில் நாசம் உண்டு பண்ணக்கூடிய ரகசிய ஆயுதத்தை உண்டுபண்ணவில்லை. ஆகிலும் அதிகமாகவும் பிரயோஜனமுள்ளதாகவும் உபயோகப்பட்டு வரும் ஒரு புதிய ஆயுதமொன்றிருக்கிறது. இது தான் விமானத்தில் கொண்டுபோகப்படும் கப்பல்களை உடைக்கும் யந்திரம், (Torpedo) அல்லது மேலே சொல்லிய யந்திரங்களைக் கொண்டுபோகும் விமானம். பிரிடிஷ் கடற்கரையிலுள்ள விமானப்படை பிஸ்மார்க் என்னும் கப்பலைக்கண்டு பிடித்து துரத்தியடித்தது. கிரீன்லாந்து கடற்கரைக்கு சமீபத்திலுள்ள விக்டோரியா என்னும் கப்பலின் நோக்குக்குள் அகப்பட்டுக்கொண்டது. விக்டோரியாவிலிருந்த விமானங்கள் பிஸ்மார்க்கைத் தாக்கி டார்பிடோவைப் போட்டு அதை நொண்டியாக்கிவிட்டன. கடைசியாக, அடிக்கடி மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஆர்க் ராயல் என்னும் கப்பலிலுள்ள விமானப்படை பிரெஞ்சுக் கடற்கரையில் உள்ள ஒளிவுத் துறைமுகத்திலிருந்து 400 மைல்களுக்கு அப்பால் பின்னும் பிஸ்மார்க்குக்குச் சேதம் விளைவித்தது. நமது கடற்படையின் நாசகாரிகள் பிஸ்மார்க்கை மூழ்கடித்துவிட்டன.

அது முதல் ஒவ்வொரு நாளும் அநேக சமுத்திரங்களிலும் துறைமுகங்களிலுமுள்ள எதிரிக் கப்பல்களை நமது விமானங்கள் டார்பிடோ மூலம் விசேஷ லாபத்துடன் தாக்கி வருகிறார்களென்று அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆகிலும் இது மிகவும் கடினமான ஆயுதம். உயர்வாக விமானத்தை ஓட்டினால்தான் அதன் பிரயோஜனம் ஏற்படும். பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலுள்ள மிஸ்டர் பெர்ராடெ என்பவர், ஐம்பது முதல் நூறு அடிக்குள்ளாகத்தான் விமானி பறக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்தால்தான் லக்ஷியத்தை நன்றாய் அறியதோடு, டார்பிடோவை அதிக உயரத்திலிருந்து கீழே தள்ளி, அது ஜலத்தில் பலமாய் மோதி அதன் நுட்பமான யந்திரங்கள் சீர்கெட்டு, விடாமலும் செய்ய

சாதகமாயிருக்குமென்றும் சமீபத்திலிருந்து போட்டால்தான் டார்பிடோ பிரயோஜனமுள்ளதாக ஆகுமென்றும், ஒரு சமயம் விளக்கிக்காட்டினார்.

இம்மாதிரியான நான்கு டார்பிடோவுடன், அநேகக் கப்பல்களோடுவரும் கப்பல் கூட்டங்களின் பாய்மரத்துக்கு மேலும், ஒவ்வொரு வகைக் கப்பலிலிருக்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகளிலிருந்து விமானத்தைக் குறித்து போடப்படும் குண்டுகள் மத்தியிலும், கப்பல்களின் பின் பக்கங்களில் அமைதியாக வட்டமிட்டுக்கொண்டும், இரண்டு கப்பல்களுக்கு மத்தியில் தண்ணீர் மட்டம் வரைபாய்ந்து, கெடுதல் விளைவிக்கக்கூடிய டார்பிடோவைப் போட்டுவிட்டு அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பி ஓடும்படியாகவும், விமானங்கள் பறந்து செல்வதை மனதில் ஆலோசித்துப்பாருங்கள்!!.

## இந்திய நண்பர்களுக்கு பார்லிமெண்டு மெம்பரான மிஸ் எலியனூர் ராத்போன் எழுதிய பகிரங்கமான கடிதம்.

நண்பர்களே,

இந் நாட்டிலுள்ள அநேகர் சில வருஷங்களுக்கு முன் சுய ஆக்ஷி அடையப் போராடி வரும் இந்திய மக்களுக்கு எங்களாலியன்ற அளவு ஒத்தாசை செய்தோம். இப்பொழுது அரசாங்க நிர்வாகத்தில் ஏற்பட்ட கஷ்டமான நிலைமையையும் அதிலிருந்து உண்டாகும் பலன்களையும் பற்றிக் கவலைப்படுகிறோம். இந்தச் சங்கடத்துக்கு நமது அரசாங்கத்தார் எவ்வளவு ஜவாப்தாரி என்றும் இதை நிவர்த்திக்க அவர்கள் என்ன செய்யக்கூடுமென்றும் நிர்த்தாரணம் செய்ய என்னுடைய பிரிட்டிஷ் நேயர்கள் முயலுகிறார்கள். அவர்கள் அம்மாதிரி செய்வது நியாயம்தான். ஏனென்றால் இந்த விஷயத்தில் பொறுப்பு நம்மிடமிருக்கிறது. இதில் ஒரு அபாயமிருக்கிறது. அரசாங்கத்துடன் ஒத்துழைக்காத இந்தியர்கள், குற்றத்தைப் பூராவும் பிரிட்டிஷ் அதிகாரிகள் பேரில் போடுவதில் தங்களோடு, தேச முன்னேற்றத்தில் நோக்கமுள்ள பிரிட்டிஷ் மக்களும் சேர்ந்துவிட்டார்களென்று தப்பான அபிப்பிராயம் கொள்ளக்கூடும்.

ஆகையால் எதிர் மறையான மார்க்கத்தை அவலம்பித்து, நான் அறிந்தமட்டில் ஒத்துழைக்காதவர்களுக்கு எதிர் முகமான கக்ஷியைப் பேசுவதுடன், கக்ஷியின் மற்றொரு அம்சத்தைப்பற்றிச் சொல்லாமலுமிருக்கப்போகிறேன். இந்த சங்கடத்தை நிவர்த்திக்கக்கூடிய அநேக உபாயங்களைப்பற்றியும் சர்ச்சை செய்வதாகவும் அபிப்பிராயமில்லை. என்னைவிட லாயக்குள்ளவர்கள் இதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவைப்பற்றித் தெரிந்தவர்களில் நான் தேர்ச்சி பெற்றவளென்று சொல்லவில்லை. இந்திய விஷயங்களைப் பேசுவதற்கு எனக்கு



உள்ள பாத்தியங்களாவன. நான் ஒரு ராஜீயக் கக்ஷியிலும் சேராத, கியாதி பெறாத, பார்லிமெண்டு சபையின் ஒரு மெம்பர். ஜன சமூகத்தில் சீர் திருத்தங்களும் பிரிட்டிஷ் ஸ்திரீகள் அடைந்திருப்பது போல ராஜீய முறையிலும் சமமான அந்தஸ்தும் அடையவேண்டுமென்று முயலும் இந்திய ஸ்திரீகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் சர்வகலாசாலைத் தொகுதியின் மெம்பராக 1929-ம் வருஷம் ஓட்டுக்கு நின்றேன்.

இந்த நோக்கத்துடன் 1931-ம் வருஷம் இந்தியாவுக்குச் சென்று அங்கிருக்கும் இயக்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசினேன். 1935-ம் வருஷம் சட்டமாக்கப்பட்டபடி இந்தியாவில் சீர் திருத்தங்கள் ஏற்படுத்த பார்லிமெண்டு சபையில் விவாதம் நடக்கும் பொழுது ஸ்திரீகள் சார்பாக அவர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்தேன். பிறகு இந்தியாவில் குழந்தைகள் விவாகத்தைப்பற்றி புஸ்தகம் எழுதினேன். இந்தப் புஸ்தகம், விஷயங்கள் பூர்ணமாயுள்ளதென்றும், சரியான அபிப்பிராயத்தை வெளியிடுகிறதென்றும், தாடஸ்த்யமாக எழுதப்பட்டிருக்கிறதென்றும் மதிக்கப்பட்டது.

நான் மனசார ஒரு கக்ஷிக்காகச் சொல்லும் கண்டனம் இவைதான். அரசாங்கத்துடன் ஒத்துழைப்பில்லாத இயக்கத்தின் தலைவர்கள் நாஸி, பாஸிஸ்டு சண்டைக்காரர்களைக் கண்டனம் செய்து பேசியிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் தொந்தரவுகளையும் கொடுமைகளையும்பற்றி நடுக்கம் கொள்ளுவதாகவும் இவைகளுக்கு உள்ளாகியிருக்கும் ஜனங்களிடம் பச்சாத்தாபமும் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இன்னும் யுத்தத்தைத் தடுக்கவேண்டுமென்ற கொள்கையுடன் பிரிடிஷார் மஞ்சூரியாவிலும், அபிஸீனியாவிலும், ஸ்பெயினிலும், ஜெகோஸ்லோவாகியாவிலும் இன்னும் மற்ற இடங்களிலும் யுத்தத்துக்கு முன் அக்கிரமச் சண்டைக்காரர்களுக்கு பிரிடிஷ் அரசாங்கம் இணங்கி அநேக சாதகங்களைக் கொடுத்ததைப்பற்றியும் அவர்கள் கண்டனம் செய்திருக்கிறார்கள். நாம் எதிரிகளுடன் யுத்தம் செய்து கொண்டிருக்கும்பொழுது, அப்பேர்ப்பட்ட தலைவர்களும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் யுத்த முயற்சிகள் செய்யாதவண்ணம் தடுப்பதற்கு முயற்சிகளில் கலந்துகொள்ளாததுமட்டுமல்லாமல் சட்ட மறுப்பினால் அரசாங்க நிர்வாகத்துக்கே முட்டுக்கட்டை போடுவதுமூலம் தங்களால் இயன்ற அளவு செய்து வருகிறார்கள். ஆகையால் அவர்கள் நடுநிலை வகிப்பவர்களாகயில்லை. எதிரிகளின் பக்கத்தில் யுத்தம் செய்யாத நேச தேசமாக நடந்து வருகிறார்கள். இதன்மூலம் எதிரிகளின் ஜயத்துக்கு அதிக சந்தர்ப்பங்கள் அளிப்பதோடு தோற்றுப்போன தேசங்களின் அவஸ்தைகளை நீடிக்கும்படியாகவும் செய்து வருகிறார்கள். வெறுத்துக்கொண்டும் ஆனால் தேசத்தின் அக்கரைக்காக ஹிட்லருக்கு உதவி செய்யும் இவர்களின் ஸ்திதி விஷி அரசாங்கத்திலுள்ளவர்கள்போலும், ஆனால் விஷி அரசாங்கத்துக்கு ஹிட்லர் வசமுள்ள அநேக லக்ஷக் கணக்கான கைதிகளில்லாமலும் இருப்பதாகக் கருதப்படலாம்.

இதற்குப்பதில், அவ்விதமான அபிப்பிராயமில்லை; இந்தியாவின் சம்மதமின்றியில் யுத்தத்தில் கலந்துகொள்வதை எதிர்க்கத்தான் உத்தேசிக்கிறோம்.

என்று சொல்லலாம். அப்படியானால் ஒத்துழையாதவர்களை நாங்கள் கேட்கிறோம். இந்தியர்களைக் கலந்திருந்தால், நீங்கள் முடிவுக்கு வரக்கூடுமானால், உங்கள் பதில் எவ்வாறு இருந்திருக்கக்கூடும். நீங்கள் சரியென்று ஒப்புக்கொள்வதாகயிருந்தால், இந்தியர்களைக் கலந்துகொள்ளவில்லையென்ற பிழையானது விபத்துக் காலத்தின் கடுமையால் ஏற்பட்டதென்று நீங்கள் ஏன் கருதக்கூடாது. இந்தத் தவறுதலை அவலம்பித்து உங்கள் மனப்பான்மையை மாற்றி எங்களுக்கு வலுவான நண்பர்களாகயிருப்பதைவிட்டு எதிரிகளுக்கு உதவி செய்கிறவர்களாக மாறிவிட்டீர்கள். உங்கள் விடை "இல்லை" யென்றிருந்தால், சமாதான ஏற்பாட்டை ஒருபுறம் நிறுத்தி எங்களுக்குத் தடங்கல் செய்யும் யுத்தத்துக்கு உதவாமலிருப்பதும் எவ்வாறு ஒவ்வும். நீங்கள் இந்தியாவுக்கு முதலில் சுதந்திரமும் சுயேச்சையும் கொடுப்பதென்ற ஷரத்துக்குட்பட்டு சம்மதம் என்று சொல்லியிருந்தீர்களானால், உங்களுடைய தேசத்தின் முன்னேற்றத்திற்காக மற்ற எல்லா தேசங்களுடைய நன்மைகளையும் தியாகம் செய்கிறீர்களென்று எங்கள்பேரில் நீங்கள் கொண்டு வரும் குற்றத்துக்கு நீங்களும் உள்ளாகமாட்டீர்களா. மற்ற தேசங்களுக்காக, பிரிட்டனுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்திலிருந்து உங்களுக்கு ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லும் லாபத்தையும், பிரிட்டனிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கவேண்டியதை தற்சமயம் திருப்திசெய்துகொள்ளுவதையும், தள்ளிக்கொடுக்க நீங்கள் மறுக்கவில்லையா?

ஒத்துழையாதவர்கள் பழிக்குப்பழி வாங்கும் அபிப்பிராயமும் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட சங்கடத்தை உபயோகப்படுத்திக்கொள்ள ஆசையுமில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த இரண்டு எண்ணங்களுமில்லையென்று அவர்களை விட்டுவிடமுடியுமா? உதாரணமாக அவர்களின் திறமைவாய்ந்த தலைவரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர் சமீபத்தில் எழுதிய பிரசுரங்களில், "நாம் மறக்கமுடியாததும், தள்ளிவிடக்கூடாததுமான ஏற்கனவே உள்ளதும், நூதனமுமான காரியங்களும், அவமதிப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறதென்று ஏன் எழுதுகிறார்? யுத்தத்தில் இந்தியா உதவி செய்யவேண்டும் என்ற பிரச்னை கிளம்பியபொழுது, 1919-ம் வருஷம் அம்ரிட்ஸாரில் நடந்த கொலைகள், பஞ்சாபில் ராணுவச் சட்ட அமுல் இவைபோன்ற பழைய புராணங்களைக் கிளப்பி, சென்ற யுத்தத்தில் இந்தியா உதவி செய்ததற்குப் பலன்கள் இவைதான் என்று அவர் ஏன் சுட்டிக்காட்டுகிறார்? அம்ரிட்ஸாரில் நடந்த கொடுமையைப்பற்றி தேச முன்னேற்றத்தில் நோக்கமுள்ள ஆங்கிலேயர்கள் வெட்கமடைகிறார்கள். ஆகிலும் அவர்களில் சிலர் அது சரியென்று ஆமோதனம் செய்கிறார்கள். இந்தக் கொலைக்கு உத்தரவு கொடுத்த தளகர்த்தர், பார்லிமெண்டின் தூதகோஷ்டியால் அவமதிக்கப்பட்டு, அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார். சென்ற யுத்தத்துக்குப் பின் இவைகள்மட்டும்தான் நடந்ததா? இந்தியாவின் சுய ஆக்ஷிக்காக ஏற்பாடும் கடைசியாக 1935-ல் சட்டம் ஏற்படுத்தியதும், டொமினியன்கள்போல அந்தஸ்து கொடுக்க வாக்குறுதியும், சமீபகாலத்தில் இந்தியாவின் வருங்கால அரசாங்க நிர்வாக முறை இந்தியர்களாலேதான் நிர்த்தாரணம் செய்யப்படும்படி உரிமை



கொடுக்கப்படுமென்றும் (இவையெல்லாம் பூர்ணமான வேண்டுகோள்களுக்குக் குறைவாகயிருந்தாலும்) சொல்லுவதெல்லாம் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லையா?

சமாதான ஏற்பாடுகள் செய்துவந்த வருஷங்களிலெல்லாம் சும்மாவிருந்துவிட்டு, இங்கிலாந்துக்குக் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கும்பொழுது, உள்நாட்டு சட்ட மறுப்பை மறுபடியும் ஆரம்பித்திருப்பது அக்கிரமமான லாபம் சம்பாதிப்பதைத் தவிர வேறு என்ன. சட்டமறுப்பானது, எங்களுக்கு மிகவும் அபாயமான நிலை உண்டாயிருக்கும்பொழுது, திரு. சர்ச்சில் சொல்லிய பிரகாரம், பிரான்ஸின் விழுக்காட்டிற்குப் பிறகு ரத்தப் பெருக்கு, பரிச்ரமம், கண்ணீர் ததும்பல், விடாமுயற்சி இவைகளை நாம் தனிமையில் எதிர் பார்க்கவேண்டிய சமயம் ஏற்பட்டபொழுது ஆரம்பிக்கப்பட்டது. இது பெருந்தன்மையான காரியமா? பண்டித நேருவே, இங்கிலாந்து சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் நேசிக்கிறேன் என்று சொன்னவர்களுடைய வாக்குறுதியைப்பற்றி நாங்கள் என்ன நினைப்பது? நீங்கள் நேசித்த இங்கிலாந்துக்கு, உங்களுடைய செய்கைகளாலும் செல்வாக்கினாலும் எவ்விதமான முடிவை ஏற்பாடு செய்து வருகிறீர்கள்.

ஒன்று நிச்சயம். நீங்களும் உங்களைப் பின்பற்றும் முகான்மையான மனிதர்களும் ஸ்திரீகளும் இங்கிலாந்தை நேசிப்பதற்கோ, அல்லது இங்கிலாந்துக்கு நன்றியறிவு உள்ளவர்களாகயிருப்பதற்கோ சில காரணங்களாவது உண்டு. நீங்கள் ஆங்கிலேயர்களுடைய சிந்தனைகளை நன்றாய் கற்றிருக்கிறீர்கள். மேல் நாட்டாரிடமிருந்து விசேஷமாக அநேகம் கற்றிருக்கிறீர்கள். விசேஷமாக பிரிடிஷ் உபாத்தியாயர்களுக்கும், சாஸ்திர நிபுணர்களுக்கும், ஜன சங்கத்தைப் பற்றிய சாஸ்திரக்காரர்களுக்கும் பிரிடிஷ் ராஜ தந்திரிகளுக்கும், ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள். இங்கிலாந்தில தான் ஜனநாயக ஆக்ஷி ஸ்தாபனங்களும் சுதந்திரமும் முதலில் பரீக்ஷை செய்யப்பட்டு பரிஷ்காரமாக முடிவடைந்தன. இவையெல்லாம் நம் இருதேசத்திற்கும் அந்தரங்கமான சிநேகபாவத்தை உண்டுபண்ணியிருக்குமென்று எதிர் பார்க்கலாம். உங்கள் நாட்டிற்கு ஏற்பட்ட தொந்தரவுகளை நினைத்து உங்களுக்கிருக்கும் அடங்காத எண்ணத்தை இவைகள் கொஞ்சமேனும் மாற்ற இயலவில்லையே.

இந்தியாவை முதலில் கவனிக்கவேண்டுமென்று செய்வதற்காக இந்தியர்களை நான் குறைகூறவில்லை. ஆகிலும் யுத்த ஏற்பாட்டிற்கு எதிர்த்தல் என்ற முறையினால் அவர்கள் இந்தியாவிற்கு என்ன சாதகமளிக்கிறார்களென்று கேட்கிறேன். அவர்களின் எதிர்ப்பிலிருந்து எங்களுக்கு எதிராக நிலைமாறி ஜெர்மனிக்கும், இதாலிக்கும், ஜப்பானுக்கும் வெற்றி கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மேற்கு முனையில் இதாலி நுழைந்ததுபோல் கிழக்குப்பக்கத்தில் வெற்றியினின்றும் ஏற்படக்கூடிய லாபங்களைப் பகிர்ந்துகொள்ள ஜப்பானும் சமயத்தில் தலை காட்டக்கூடும். இதிலிருந்து இந்தியாவிற்கு சுயேச்சையும் சுதந்திரமும் கிடைத்துவிடுமா? 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில், எங்களைத்தவிர மற்றெல்லோரும் எங்களுக்கு அபஜயம் கிட்டிவிட்டதென்று எண்ணியபொழுது

பண்டித நேரு சொன்னதாவது "நாங்கள் நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளவும் அபாயங்களை எதிர்பார்க்கவும் தயாராகவிருக்கிறோம். பிரிடிஷ்சேனை, கடற்படை இவைகளின் பாதுகாப்பு எங்களுக்குத் தேவையில்லை. எங்கள் காரியங்களை நாங்களே கவனித்துக்கொள்ளுவோம்" என்று. இது ஆலோசனையில்லாமல் சொன்ன ஒரு பீத்தல். இந்த நாளில் ஒரு தேசமானது தன்னுடைய பாது காப்பைப் பார்த்துக் கொள்ளவேண்டுமானால், அதற்கு தீர்க்கமான தயாரிப்பு, வேண்டும். வெற்றியுள்ள சண்டைக்காரர்கள் தங்கள் எதிரிகளுக்கு அவகாசம் கொடுக்கிறதில்லை. அவர்கள் இந்தியாவில் அம்ரிட்ஸாரைவிட கோரமான காரியங்களை நடத்தக்கூடும்.

உங்களுடைய உதவி யன்னியில் நாங்கள் ஜயமடைவோம். வேறுவிதமான அபிப்பிராயமுள்ள இந்தியர்களின் உதவி எங்களுக்குக்கிடைத்திருக்கிறது. நீங்களும் எங்களுடன் சேர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். இப்பொழுது சிறை வாஸம் செய்யும் ஆண்களிலும் பெண்களிலும் முன்னோர்களில் அரசர்களுக்கும், வடக்கேயுள்ள வீரம் பொருந்திய ஜாதியாரும் அறியாத நோக்கங்களும் அபிப்ரா யங்களும் அடைவதற்கு எங்களுடன் ஒத்துழைத்திருக்கிறார்கள். எங்களுக்குச் சிரமமான நிலை வந்திருக்கும்பொழுது நீங்கள் எங்களைக் கைவிட்டு விட்டீர்களென் பதில் நாங்கள் துக்கிக்கிறோம். நாங்கள் மிகவும் அபாயகரமான நிலைமையிலிருந்து வருகிறோம். ஒரு இரவு முடிந்து பொழுது விடிந்தவுடன் மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் சின்னாபின்னமாக்கப்பட்டும், நசுக்கப்பட்டு இறந்தும், ஏதாவது ஒரு நகரத்திலோ, கிராமத்திலோ ஏற்பட்ட கட்டட நஷ்டத்தில் உயிருடன் புதைபட்டும் இருக்கிற பரிதாபமான கதைகள் சொல்லப்படுகின்றன. தரையிலும், சமுத்திரத்திலும், ஆகாயத்திலும் இடைவிடாது சண்டைசெய்யும், வீரம் பொருந் திய முதன்மையான வாலிபர்களெல்லாம் ஒவ்வொரு நாளில் அநேகர் மாண்டுபோகி றார்கள். உங்களுக்கு தயை உண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணத்துடன் இவை களைச் சொல்லவில்லை. யுத்தத்தின் நிலைமையும் அதை நீங்கள் கெடுதியடையும் படி செய்வதும் தான் உங்களுக்கு எதிராகயிருக்கும் கேஸின் அம்சங்கள். எங்களுடைய மனப்பான்மையானது பரிதாபப்படுகிறதாகயில்லை. ஊக்கமாக பொறுத்துக் கொள்ளுவது என்பதுதான். சமீபத்தில் நடந்த இடைத் தேருத லில் ஓட்டுகளில் 100-க்கு 94 பாகம் யுத்தத்தில் ஈடுபட்ட நபர்களுக்கும் பாக்கி சமாதான முறையிலிருக்கும் ஒருவருக்கும் கொடுக்கப்பட்டன. வாஸ்தவ மான முகாந்திரங்களைக்கொண்டு யுத்த சேவையிலிருந்து விலக்கப்படவேண்டு மென்றும் சொல்லுபவர்களின் கணக்கு 100-க்கு 1-ல் மூன்றில் (2) பாகமாக யிருந்தது மூன்றில் ஒன்றாகக் குறைந்து விட்டது. பொது ஜனங்களில் ராஜீய விஷயங்களில் சிறிது அறிவுள்ளவர்களும் ஜயமடையாவிட்டால் நமக்கு உலகத் தில் பாதிக்கும் அடிமைத்தனம் தான் ஏற்படும் என்று நன்றாய் அறிகிறார்கள்.

அந்நிய நாட்டு வியவகாரங்களில் அறிவுள்ள நாம், நம்மைச்சுற்றியிருக்கும் அபாயங்களையும், கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல், இதுவரை யிருந்ததை விட சந்தோஷ முள்ளவர்களாகவேயிருந்து வருகிறோம். சமாதானப் படுத்து



வது என்ற கொள்கையை, தீர்க்காலோசனை யில்லாததென்றும், சுயநலத்தைக் கருதுவதென்றும், நியாய மற்றதென்றும் வெறுத்து வந்தோம். இந்த ஏற்பாடு நம்மைப் படுகுழியில் தள்ளிவிடப் போகிறதென்று நாம் எதிர் பார்த்தோம். இதுவரை, அபிஸீனியா, ஸ்பெயின், ஸெகோஸ்லோவாகியா முதலிய நாடுகளை பாதித்த பொழுது நாம் பலமாக எதிர்த்தோம். எங்கள் நாட்டின் செய்கை களுக்காக நாங்கள் வெட்கமடைந்தோம். இப்பொழுது நாங்கள் தலைகுனிய வில்லை. தீவிரமாய் கர்வமுள்ளவர்களாக யிருக்கிறோம். பிராயச்சித்தம் செய்து கொள்ளுதல் எனும் கொள்கையானது உண்மையானால் பிரிடன் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்து விட்டது. ஆகிலும் பழைய பிழைகள் ஏற்படக்கூடுமோ என்று குறைகூறிக்கொண்டும் கவனத் துடனுமிருந்து வருகிறோம். வெற்றி கிடைத்த பொழுது இந்த அபாயம் வலுவாக உண்டாகக்கூடும். அந்த சமயத்தில் எங்களுக்கு உதவி தேவையாயிருக்கும். அப்பொழுது ஜீவித்திருக்கும் யாவரும் எதிர்த் தாக்கல், வகுப்புப் பிரச்னைகள், மதவித்யாசங்கள் இவைகளின் குணங்கள் ஒங்க ஆரம்பிக்கும் பொழுது உதவி செய்யத் தயாராகவிருக்கிறோம். இவை இந்தியாவில் ஏற்படக்கூடும். ஒத்துழையாமை இயக்கத்தின் பயனாக இது கண்டிப்பாய் நடக்கக்கூடும். ஜயமடைந்த நேச நாடுகள், தங்களுக்கு இடைஞ் சல் செய்தும் வெற்றிக்கு உதவி செய்யாதவுமான, ஜனங்களுடைய அபிப் பிராயத்தை ஏற்றுக்கொள்ள ஒருபொழுதும் இணங்க மாட்டார்கள். யுத்தம் வேறு விதமாக முடிவுபெற்றால், எதிராளிகளிடமிருந்து நன்றியறிவு பாபத்தில் விசேஷமான பிரயோஜனங்களை எதிர் பார்க்க முடியாது. இது சம்பந்தமாக ஸ்டாலின் சிபார்சு செய்தாலும் சுதந்தரமும் சுயேச்சையும் அவனுடைய அகராதி யில் உள்ள ருசிகரமான பதங்களல்ல. இப்பவும் அகாலமாகி விடவில்லை. ஒத்துழையாதவர்களை நடத்திவரும் முறைகளைப்பற்றி உங்களில் அநேகர் சந்தோஷப்படமாட்டார்களென்று எங்களுக்கு நன்றாய்த்தெரியும்.

இந்தியாவைத் தன்னந்தனியாய் விட்டுவிடுவது என்ற கொள்கையில் உங்க ளுக்குத் திருப்தியிராது. நீங்கள் அபிப்பிராயப்படுகிறபடி அது நடைபெற்று வருகிறதென்றும் நீங்கள் சொல்லமுடியாது. நாங்கள் பரிசீலனை செய்வதுபோல நீங்களும் உங்கள் அந்தரங்கத்தைப் பரிசோதித்து இந்த நிர்வாக நெருக்கடியைத் தீர்க்க நீங்களும், உங்கள் தலைவர்களும் இயன்றளவு முயற்சி செய்திருக்கிறீர் களாவென்று பார்க்கவேண்டும். நீங்கள் நினைக்கிறபடி ஆங்கிலேயர்களும், இந்தி யர்களும் தங்கள் அலுவல் இன்னதென்று அறிந்து பூர்த்திசெய்யக்கூடிய ஒரு நோக்கத்தைத் தேடாமல் மற்ற ஜனங்களுடைய நிலைமையையும் மதித்து, அடுத்தபடியாக மூலாதாரமான யோசனை எது என்றும், அதை எவ்விதமடைய லாமென்றும் ஆலோசிப்பதில் உண்மையான அபிப்பிராயத்துடன் முயற்சிகள் செய்துவருகிறீர்களா? நீங்களும் விசேஷ லாபங்கள் கொடுப்பதற்கும் சமாதான முறைகளை ஏற்பாடு செய்வதற்கும் தயாராகவிருக்கிறீர்களா? இணங்கவேண்டி யது என்றால், அந்த வேலையை தாத்காலிகமாக நீங்கள்தான் செய்யவேண்டுமே யல்லாது பிரிடிஷார் செய்யவேண்டியதில்லையென்று அறிகிறீர்களா? ஏனென்றால்

பூராவான பளுவையும் ஏற்றுக்கொண்டிருக்கும் பிரிட்டனுடைய லக்ஷியமானது உலக க்ஷேமத்துக்காகத்தான். பிரிடன் தோற்றுவிட்டால் இந்தியாவிற்கு சுதந்திரமும் சுயேச்சையும் கிடைக்காது. இம்மாதிரியான ஆபத்தில் பழையதும், நூதனமுமான மனவருத்தங்களையும், சுய நியாயங்களையும், அவமதிப்பையும் மறந்து எங்களோடும், மற்ற இந்தியர்களோடும் நம்முடைய பொதுவான சத்துருவுடன் யுத்தம்செய்ய ஒன்று சேர்ந்தும், பிறகு இந்தியாவின் எதிர்கால க்ஷேமத்தையும் நீங்கள் உதவிசெய்து காப்பாற்றி உலகத்தின் க்ஷேமத்தையும் வழிப்படுத்த ஜனங்களின் பிரதிநிதிகளாகிய உங்களுடைய வலுவான பாத்தியங்களை வற்புறுத்தக் கூடாதா என்று சொல்லுகிறேன்.

உங்கள் உண்மையான,

E. ராத்போன்.

---

## ஆகாயப்போரில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள்.

## ராத்திரி ஆகாயப்படையெடுப்புகளில் பிரிடிஷ் விமானங்களின் யுக்திகள்.

## உசித உதாரணங்கள்.

## 'இரவு' பிரிடிஷின் நண்பன்.

விங் கம்மாண்டர் எல். வி. ப்ரேசர் எழுதுவது :—

முதன் முதலில் பெர்லின் நகரத்தில் பிரிடிஷ் விமானங்களால் குண்டுகள் போடப்பட்டது முதல், கால நிலையை விர எதுவும் இந்நோக்கத்திலிருந்து இப்படைகளை தடைப்படுத்தவில்லை. இருந்தும் 'கோயரிங்' ஆகாய எதிர்ப்பிலிருந்து தற்காப்பு திட்டங்கள் காப்பாற்றும் என்று ஜெர்மனியருக்கு அறிவுறுத்தியிருக்கிறார்..

பிரிடிஷ் விமானங்கள் எதிரியின் அரண்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் நஷ்டம்போல், பிரிடிஷாருக்கும் உண்டு பண்ண பல முயற்சிகளையும் பகலில் கூட செய்யமுடியாமல் ஜெர்மன் ஆகாய எதிர்ப்பு வீணுகிவருகிறது. முடிவாக இரவில்தான் பிரிடிஷ் நகரங்களை எதிர்க்கலாம் என்று படித்துக் கொண்டிருக்கிறது. அப்படிக்கிருந்தும் பிரிடிஷ் விமானங்கள் போல் குறி தவறுமல் குண்டுபோட இயலாமல், கூட்டமாக வந்து தப்பித் தவறி ஒரு குண்டாவது ராணுவ ஸ்தலத்தில் விழட்டும் என்று, ஏராளமாகக் குண்டுகளை வீழ்த்துகிறார்கள்.

### ஜெர்மன் அறிக்கையை பரிசீலனை செய்தால்.

ஜெர்மன் பத்திரிகையாளர்களுக்கு சூசனை குறைவே. ஏப்ரல்மீ 17உ பிரிடிஷ் ஆகாய எதிர்ப்பைப் பற்றிய அறிக்கை "பெர்லின் நகரத்தின் வெளிப்புற தற்காப்புகளை, பலமான எதிரி விமானப்படை, கடந்தும் நகரத்தில் உள்புறம் உள்ள தற்காப்பைத் துளைத்து ஒரு சில விமானங்கள் ஒவ்வொன்றுகளாகவே உள்புகுந்தன. புஸ்தகாலயத்தைச் சேர்த்து நான்கு



ஸர்க்கார் கட்டடங்களும், பக்கு வீடுகளும் நாசமாயின. காயம்பட்டவர்களின் எண்ணிக்கை ஸ்வல்பம்" என்று கூறுகிறது.

இவ்வறிக்கையிலிருந்து கூட்டமாகத்தான் விமான எதிர்ப்பு நடைபெறக் கூடுமென்ற ஜெர்மன் எண்ணம் வெளியாகிறது. ஏதோ கூட்டம் கூட்டமாக வந்த பிரிடிஷ் விமானங்களை சிதர அடித்துவிட்டதாக, அபூதமாகக் கூறப்படும் இவ்வறிக்கைகள் பெர்லின் நகரத்தாருக்கு பெரும் ஆயாசத்தை விளைவிப்பதாகும். மேலும், பிரிடிஷ் விமானங்கள் நூற்றுக்கணக்காய் எதிர்க்கும்போது கூட இரவிலும் கூட்டமாக போவது கிடையாது என்பதில் "ஒன்றொன்றாக" என்ற பதத்துக்கு அர்த்தமே கிடையாது.

### ஒவ்வொரு எதிர்ப்பும் ஆழ்ந்த யோசனையின் பேரிலேயே நடக்கிறது.

ஜெர்மன் தற்காப்புத் திட்டங்கள் இரவில் எதிர்க்கும் விமானத்தைத் தடை செய்ய முடியாதென்றாலும், பிரிடிஷ் விமானப்படையினர் அம்முஸ்தீப்புகளை அலக்ஷியம் செய்யவில்லை. பெரும் கோட்டைகளை எதிர்க்க தரைப்படையினர் எவ்வளவு முன் கூடிய யோசனைகளும், ஏற்பாடுகளும் செய்கிறார்களோ, அதேமாதிரி பலத்த தற்காப்பு முஸ்தீப்புகள் உள்ள 'வில்ஹெல்ம்ஷேவன்,' 'கில்', 'ப்ரெமன்', 'கோலோன்', 'ஹாம்பர்க்,' 'பெர்லின்,' இந்நகரங்களை எதிர்க்கத் தக்க முன் எச்சரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அபாயமில்லாத பாதையைக்கண்டுகொள்ள வேண்டும். பீரங்கிகளிலிருந்து தப்ப தக்க இராக்காலங்களை நிர்ணயிக்க வேண்டும். ஒளிவிளக்குகளால் கண்டு பிடிக்கப்படாமலிருக்க எவ்வித யுக்திகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்படவேண்டும். பலமாய்த் தற்காப்புகள் உள்ளதான நகரங்களுக்குள் பிரவேசிக்க நேர் பாதையைக் காட்டும் அடையாளங்களை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு யுக்திகளை அனுஷ்டிக்கவேண்டும். ஒவ்வொரு விமான ஓட்டியினுடையவும் அனுபவத்தையும் கேட்டு, சாஸ்திர ஆராய்ச்சி முறையில் தக்க எச்சரிக்கைகள் திட்டம் செய்யப்படுகின்றன.

### யந்திரங்களும் நன்றாயமைந்திருக்க வேண்டும்.

தற்காப்புகளைக் கடந்து செல்ல விமான ஓட்டிகளின் சாதுர்யமும் தைரியமும் மட்டில் போதாது. யந்திரமும் பலமாகவும் பழுதுபடாததாகவும் இருக்கவேண்டும். 'வில்ஹெல்ம்ஷேவன்' பேரில் படையெடுத்துத் திரும்பிய விமானம் ஒன்று எதிரிகளின் தற்காப்புகளால் பலமாகத் தாக்கப்பட்டது. விமானத்துக்கு மேலே ஒரு குண்டு வெடித்தது. விமானத்துக்கு ஸ்வல்ப சேதமேற்பட்டது. ஒரு எஞ்ஜின் பற்றிக்கொண்டது: தீ அணைக்கப்பட்டதில் அந்த விமானம் பழுதுபடாத மற்ற எஞ்ஜினால் ஓட்டப்பட்டவேண்டியதாயிற்று. அது அடிக்கடி கொதிப்படைந்தது. இருந்தும் விமான ஓட்டி சாதுர்யமாக விமானத்தை ஓட்டி வந்து விட்டார்.

'கில்' பேரில் ஏற்பட்ட எதிர்ப்பில் ஒரு விமானத்தில் 40 இடங்களுக்கு மேலேயே துளைக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு துளையும் கை நுழையக் கூடிய அளவாக இருந்தும் விமானம் தன் காரியத்தை முடித்தே பத்திரமாகத்

திரும்பியது. இவ்விதமான பலமான விமானங்களைக்கொண்டும், அவைகளிலும் எந்த தற்காப்பு முஸ்தீபுகளையும் லக்ஷியம் செய்யாமல் விமான ஓட்டிகள் கடந்து செல்லுகிறார்கள்.

வேறு ஒருவர் நடந்துகொண்டது, 'கீல்' பேரில் ஏற்பட்ட எதிர்ப்பில் கலந்து கொண்ட ஒரு விமான ஓட்டி கூறுவது தன் விமானத்தை எதிரியின் ஒளிவிளக்கு கண்டுபிடித்த க்ஷணத்திலேயே பீரங்கிகள் சுட்டன. அவன் பறந்த உயரத்திலிருந்து ராணுவ முஸ்தீபுகளைக் கண்டுகொள்ளக்கூடவில்லை. கீழே இறங்க தீர்மானித்தான்.

விமானம் கீழே இறங்கும்போது 15 ஒளிவிளக்குகள் ஒருங்கே விமானத்தின் பேரில் பிரகாசித்தன. விமானம் 8,000 அடியில் பறந்தது. பீரங்கிகள் குண்டுகளைக் கக்கின. விமானத்தை இன்னும் கீழே இறக்கினான். 1,000 அடி உயரத்தில் வந்தது. முஸ்தீபுகள் புலனாகின. குண்டுகளைப் பொழிய தன் நண்பர்களுக்கு உத்தரவிட்டான். இன்னும் கீழே இறங்கினான். 100 அடிக்குள் வந்தான். விமானத்தை கண்டுபிடிக்கக் காட்டப்பட்ட ஒளிவிளக்குகள் தெய்வச்செயலால் மரங்கள் இருப்பதைத் தெரிவித்தன. விமானம் மரங்களைத் தொட்டுச் சென்றது.

பயங்கரமாய் 10 நிமிஷ நேரம் பீரங்கிகளிலிருந்து தப்ப கீழே பறக்க வேண்டியிருந்தது. சுற்றுப் பக்கமெல்லாம் நெருப்புக் கக்கிக்கொண்டு இருந்தது. முன்னும் பின்னும் பல முறை விமானத்தை நடத்தியும் கடைசியாக தனி இடமிருந்ததில் அதன் வழியாக கடல் நோக்கி விமானத்தை நடத்திச்சென்றான். தான் குறித்த இடத்தில் குண்டை வீழ்த்துவதில் அவனை எதுவும் தடைசெய்யவில்லை.

### குண்டு வீழ்த்தும் விமானம் ஒன்றும் சண்டை விமானங்கள் நான்கும்.

மார்ச்சுமீ 10-ம் டை ஜெர்மனியில் ஒரு பிரிடிஷ் குண்டுவீழ்த்தும் விமானத்தை நான்கு சண்டை விமானங்கள் எதிர்த்தன. எதிரி விமானங்களில் ஒன்று சுடப்பட்டது. வேறொன்று செங்குத்தாக விழுந்து தரையில் மோதி நாசமடைந்தது.

சில தினங்களுக்கு முன் 'கொலோன்' பேரில் நடந்த விமானச் சண்டையில் பல எதிரி விமானங்கள் புறங்காட்டி ஓடிவிட்டன. நம் விமானம் ஒன்றிலிருந்தவர்கள், எதிரிகளின் ஒளிவிளக்குப் பிரகாசத்தில் இருந்த எதிரி விமானம் எரிந்து கொண்டே விழுந்ததைக் கண்டார்கள். நம் விமானங்கள், சுவர் போல் இடைவிடாமல் பிரகாசிக்கும் எதிரியின் ஒளிவிளக்குப் பிரகாசத்தைக் கடந்தே, எதிரியின் நகரங்களில் பிரவேசிக்க வேண்டியிருக்கிறது. இது தங்கள் சண்டை விமானங்களுக்கு வழி காட்டுவதற்கே. ஒளியைக் கண்டதும் நம் விமானப் படையினர் உஷார் படுத்திக்கொள்கின்றனர். 'இராக்காலம்' நமக்கு ஒத்தாசை என்பதை கோயரிங் மறந்திருக்கிறார். 3-வது ரீச் கூட இரவை பகலாக்க முடியாது.



## குற்றம் விஷி கவர்ன்மெண்டாருடையதே.

ஸிரியாவில பிரெஞ்சுக்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களுடன் சண்டை போடுகிறார்களென்றால், அதற்குக் காரணம் (நாஸிகள் சூழ்ச்சிகள் ஒரு புறமிருக்க) விஷி கவர்ன்மெண்டாரே; அங்கே பிரிடிஷாரும் பிரெஞ்சுக்காரரும் சண்டை போடுகிறார்களென்றால், அதற்கும் அதுவே காரணம்.

செயலற்ற தேசத்துரோகிகளடங்கிய இந்த விஷி வர்க்கத்தாருடன் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் வெகு பொறுமையாயிருந்திருக்கிறார்கள். முதலில் லவாலும், பின்னால் டார்லானும், வயது முதிர்ந்து அதிகாரம் தளர்ந்துபோன தளகர்த்தர் பெடேனுக்குச் சொல்லிவந்த யோசனை எவ்வளவு ஆபத்கரமானதென்று Mr. ரூஸ்வெல்டின் கவர்ன்மெண்ட் பலமுறை எச்சரித்திருக்கிறார்கள்.

தளகர்த்தர் டிகால் அவ்வளவு பொறுமை காட்டவில்லை. விஷி வர்க்கத்தார் கடைசியாக இழிவடைந்த பிரான்ஸ் தேசத்தை எதிரிகள் வலையில் சிக்கவிட்டு விடுவார்களென்று வாரம் தவறாமல் சொல்லிவந்திருக்கிறார். அவர் சொல்லி வந்தது உண்மையாயிற்று; சுயேச்சையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு விரோதமாக விஷி வர்க்கத்தார் ஹிட்லர் கட்சியில் சேர்ந்த பிராயமாகவே ஆகிவிட்டது.

விஷி வர்க்கத்தாரின் துரோக நடவடிக்கைகளில் ஸிரியாவைக் காட்டிக்கொடுத்தது கடைசியானது. ஆக்கிரமணை பிரான்ஸிலுள்ள விமான நிலயங்கள், கப்பற்படை நிலயங்கள் இவைகளை ஜெர்மானியர் உபயோகப்படுத்தி வருவதை விட, பிரெஞ்சுக் கப்பல்களில் சமான்கள் ஜெர்மானியர் உபயோகத்திற்காக அனுக்கிரமண பிரெஞ்சுத் துறைமுகங்களுக்குத் திருட்டுத்தனமாகப் போகின்றன; பிரெஞ்சு-ஜெர்மானிய சமாதானத்திற்குப் பின் 2,50,000, டன் உள்ள நேசதேசத்தாரின் கப்பல்கள் விஷி துறைமுகங்களில் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்றன; அட்லாண்டிக் யுத்தத்தில் டாகார் துறைமுகத்தை விடுதியாக ஜெர்மன் விமானிகள் உபயோகிக்கிறார்கள் என்று நடுநிலைமையார்கள் தெரிந்து சொல்லுகிறார்கள். பிரிடிஷாருக்கு விரோதமாக உபயோகிக்குமாறு பிரெஞ்சு ஆபிரிக்காவிலுள்ள 800 பிரெஞ்சு விமானங்களை ஹிட்லரிடம் கொடுத்ததாக நம்பும்படியிருக்கிறது.

இப்போது சுயேச்சையுள்ள பிரெஞ்சுக்காரர்கள் விஷியை எதிர்த்துவிட்டார்கள். பிரான்ஸ் வசம் விடப்பட்டதும், டார்லானாலும் மற்றொரு துரோகியான டெண்ட்ஸாலும் ஜெர்மானியரிடம் விடப்பட்டதுமான ஸிரியா, லெபானன், என்ற நாட்டில் சுயேச்சையின் சார்பாக பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத் துருப்புகளுடன் சகபாடிகளாக சுயேச்சை பிரெஞ்சுத் துருப்புகள் போர் புரிகின்றன. காட்டிக்கொடுத்தது பூர்த்தியாகவில்லை; ஆயினும் சமீபத்தில் சில வாரங்களாக, விமானிகள், யந்திர வேலைக்காரர்கள், தரைத் துருப்புகள் ஸிரியா, லெபானனுக்கு வந்து கொண்டிருந்தன. அதற்குமுன் ரஷீத் அலி பிரிடிஷாருக்கு விரோதமாக உபயோகிக்குமாறு தளவாடங்களும் சாமான்களும் ஸிரியாவிலிருந்து இராக்குக்கு அனுப்பப்பட்டன.

இந்தியாவிலுள்ள நாம் சம்பந்தப்பட்ட வரை சுயேச்சைப் பிரெஞ்சுக்காரர் விஷி வர்க்கத்தாருக்கு விரோதமாகக் கிளம்பியதைக்காட்டிலும் ஸிரியாவில் நடக்கும் நடவடிக்கைகள் முக்கியமானவை. ஏனென்றால் இந்தியாவிற்கு ஹிட்லரின் படைகள் வரக்கூடிய ஒரு வழியை சுயேச்சைப் பிரெஞ்சுக்காரர்கள் அடைக்கிறார்கள்.

ரஷீத் ஆலியின் புரட்சியும் பலித்து, ஜெர்மானியரும் ஸிரியாவை ஆக்கிரமித்திருந்தார்களானால், ஒரே தாவில் ஜெர்மானியர் இந்தியாவிற்கு பாதி தூரம் வந்தது போலாகும். ஆகையால் ஸிரியாவும் இராக்கும் இந்தியாவின் வெளி மதில் சுவர்களாகும். இராக்கானது பிரிட்டனுக்கு உடன்படிக்கைப்படி கட்டுப்பட்டிருந்து, ஸிரியாவும் விரோதி நிலயமாகாதவரை இந்தியாவின் காபந்துக்குக் குறைவு வராது.

ஹிட்லரின் அடிமை ரஷீத் ஆலி இந்தியப் பாதுகாப்புக்கு விரோதமாக ஜெர்மானியரை இராக்குக்குள் விட்டவுடனே, தாமதமன்னியில் பிரிடிஷ் துருப்புகளும் இந்தியத் துருப்புகளும் வேண்டிய காரியங்களைச் செய்தன. ஸிரியாவையும் ஜெர்மானியர் வசமாக்கவேண்டிய நடவடிக்கைகள் நடந்ததென தெரியவந்தமேல், பிரிடிஷ், இந்திய, சுயேச்சைப் பிரெஞ்சுத் துருப்புகள் அதை பாதுகாக்க துரிதமாக வேலை செய்கிறார்கள். ஆகையால் சுயேச்சைப் பிரெஞ்சுக்காரர் புரியும் போரானது, பிரிடனுக்காகப் புரியும் போர் மட்டுமல்ல, இந்தியாவுக்காகப் புரியும் போர், என்று விளங்கும்.

---

## விஷி (Vichy) அரசாங்கத்திற்கும், அமெரிக்க அரசாங்கத்திற்குமிடையே உள்ள மனஸ்தாபங்கள் அதிகரிக்குமா?

## விஷி (Vichy)யின் அமெரிக்க ஸ்தானிகரான அட்மிரல் லீஹி (Admiral Leahy)யிடம் மார்ஷல் பிடேன் (Petain) என்ன கூறினார்?

## ஹெஸ் (Hess) ஊரைவிட்டு ஓடியதால் நாஜிகளுடைய திட்டம் மாறுமா?

லண்டன் (London) டைம்ஸி (Times)ன் வாஷிங்டன் (Washington) நிருபர் சொன்னதாவது:—

நேற்றிரவு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் (Roosevelt) காங்கிரஸ் (Congress) சபைக்கு ஒரு முக்கியமான செய்தி அனுப்பப் போகிறாரென்று ஒரே பேச்சாயிருந்தது. ஆனால் தலைவர் ரூஸ்வெல்டே தான் அம்மாதிரி ஒரு செய்தியையும் அனுப்பப்போவதில்லையென்று பத்திரிகைகள் மகாநாட்டில் கூறிவிட்டார். இவ்வதந்திகளெல்லாம் அமெரிக்க, விஷி (Vichy) ராஜீய உறவுகளைப்பற்றியது தான். கொஞ்சநாளாக, பிரெஞ்சுக்காரர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு



தங்களுக்கும், பெர்லினு (Berlin)க்கும் உள்ள உறவுகளை ரகசியமாக மூடிவைத்திருந்தாலும் அமெரிக்க அரசாங்கத்துக்கு அவைகள் கொஞ்சம், கொஞ்சமாக தெரியவந்தன. ஆகையால் அமெரிக்காவிற்கும், விஷி (Vichy)க்கும் ராஜீய உறவுகள் கூட ரத்தாகிவிடும் என்று சில வதந்திகள் உலாவின.

பிரெஞ்சுத் துறை முகங்களான டூலோன் (Toulon) என்ன, மார்ஸேல்ஸ் (Marseilles) என்ன இவைகளையும், ஸிரியா (Syria), ஆபிரிக்கா (Africa) இவைகளிலுள்ள கடற்படை, விமானப்படை நிலயங்களையும் ஜெர்மானியர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமாம். அதற்குப்பதிலாக ஜெர்மனி (Germany) 15 லக்ஷம் பிரெஞ்சு சைனியங்களை விடுதலை செய்யுமாம். அத்துடன் ஆக்கிரமிக்கப்படாத பிரான்ஸுக்கு பாரிஸை (Paris)யே தலை நகரமாகவும் வைத்துக்கொள்ளலாம். பிரிட்டனுக்கு விரோதமாக சண்டை செய்தால் அட்மிரல் டார்லா (Darlan)னுக்கு "ஐரோப்பாவின் கடற் தலைவர்" என்ற பெயரும் வழங்குவார்களாம். ரியாம் (Riom) நகரத்தில் பல மாஜி மந்திரிகளின் பேரில் தேசத்தை யுத்தத்தில் சேர்த்ததற்காக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதை சீக்கிரமாய் நடத்தும் படிக்கும், யுத்தம் ஆரம்பித்தபொழுது அமெரிக்கா அதில் என்ன பங்கெடுத்துக் கொண்டது, என்பதை அதில் விளக்கவேண்டுமென்றும் ஜெர்மனி கேட்டிருக்கிறது. சென்ற சில வாரங்களாக டூலோனி (Toulon)லும், மார்ஸேல்ஸி (Marseilles)லும் உள்ள பாஸிஸ்ட் (Fascist) கக்ஷிக்கு விரோதமாயுள்ள அந்நிய நாட்டார்களைப் பிடித்து ஜெயிலு (Concentration Camps)க்கோ, ஆபிரிக்கா (Africa)வில் ஸஹாரா (Sahara) பாலைவனத்தின் குறுக்கே போகும் ரயிலில் வேலை செய்யும்படிக்கோ அனுப்பப்படுகிறார்கள்.

இதாலியைவிட பிரான்ஸுடன் சிநேகமாய் இருப்பதைத்தான் ஜெர்மனி (Germany) விரும்புகிறது என்று விஷி (Vichy) அதிகாரிகளிடம் அடிக்கடி சொல்லப்படுகிறது. அதற்கு அத்தாக்ஷியாக பிரெஞ்சுப் பிரதேசத்தில் சிலவற்றை இதுவரையில் கேட்டுக்கொண்டிருந்த இதாலி, இனிமேல் அவைகளைக் கேட்காதாம். இதாலியினுடைய பலம் குன்றி மத்தியதரைக்கடலில் அது ஒரு பலம் வாய்ந்த தேசம் என்னும் மதிப்பை இழந்து, எட்ரியாடிக் (Adriatic) கடலில் மட்டும் தான் ஆதிக்கம் செலுத்துவதை நினைத்து திருப்தி அடைந்துகொண்டும், இனி ஜெர்மனிதான் கதி என நினைக்கும் ஸ்திதியில் இதாலி (Italy) வரும் வரையில் ஹிட்லர் காத்திருந்தார் போலும். ஏனெனில் இனி இதாலி ஜெர்மனியின் இஷ்டத்திற்கு மாறாக நடக்கமுடியாது. துருக்கி (Turkey)க்குக் கூட டோடிகானீஸ் (Dodecanese) தீவை கொடுப்பதாக ஜெர்மானியர் வாக்களித்திருப்பதாகச் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

பிரான்ஸி (France)ன் கண்ணியத்தையும், கௌரவத்தையும் காப்பாற்ற விஷி (Vichy) அதிகாரிகள் எந்த தேசத்துடனும் போர் தொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்—ஆனால் ஜெர்மானியர்களுடன் மட்டும் அப்படிச்செய்யத் தயாராயில்லை. சமீபத்தில் தலைவர் ரூஸ்வெல்ட் விடுத்த பிரகடனத்தை அமெரிக்க ஸ்தானிகரான அட்மிரல் லீஹி (Admiral Leahy) மார்ஷல் பிடேனி—(Marshal

Pelain)டம் சமர்ப்பித்தபொழுது, அவர் மிகவும் கோபமாக பின்வருமாறு பதிலளித்தாராம், "மூவாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் ரூஸ்வெல்ட் (Roosevelt) எங்களுக்காக என்ன செய்திருக்கிறார். ஜெர்மன் சைனியம் பூராவும் பிரான்ஸில் வியாபித்திருக்கிறதே. எங்களிடம் ஆயிரம் போலீஸ்காரர்கள் தானிருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு மெஷின் துப்பாக்கிகூட இல்லையே, தலைவர் ரூஸ்வெல்ட் எங்கள் தேசத்துக்கு என்ன ஒத்தாசை செய்யமுடியும். பெல்ஜியம் தேசத்து அரசரான லியோபால்டு (Leopold) இருக்கும் ஸ்திதியில்தான் நான் இருக்கிறேன். லியோபால்டு (Leopold) அரசரையும் ஜெர்மனியை எதிர்த்து நிற்கும்படி ஏன் ரூஸ்வெல்ட் சொல்லவில்லை? ஜெர்மனியிடம் சிக்கிக் கொண்டிருக்கும் 15 லக்ஷம் பிரெஞ்சு வாலிபர்களை விடுதலை செய்ய முயற்சிக்கும் காரியந்தான் என்னுடைய முதல் வேலை. நாங்கள் ஒரு நாளும் சம்பந்தப்பட்டு பிரிட்டனுடன் சண்டைசெய்ய மாட்டோம்." ஆனால் நாங்களாகவே சம்மதப்பட்டு (Voluntarily) என்னும் பதத்தினுடைய முழு அர்த்தத்தைச் சொல்ல மறந்து விட்டார்.

அவர் மேலும் லீஹியிடம் கூறியதாவது "பிரிட்டிஷார்கள் மிகவும் தைரிய சாலிகள்; மனிதர்களால் முடியாது என்று நினைக்கப்பட்ட பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் இவைகளால் ஒன்றும் பயன்படாது. மத்தியதரைக் கடலி (Mediterranean)ல் பிரிட்டனுடைய பலம் போதாது. உங்கள் தேசம் பிரிட்டனுக்கு வேண்டிய அளவு செய்யமுடியுமா, செய்யத்தான் செய்யுமா. அப்படிச் செய்யுமென்று நான் நினைக்கவில்லை. நாங்கள் (பிரெஞ்சுக்காரர்கள்) எப்பொழுதும் எங்கள் கண்டத் (Continent)திலுள்ள விஷயங்களைத்தான் கவனிப்போம். ஜெர்மானியர்கள்தான் எப்பொழுதும் எங்கள் கண்டத்தின் எஜமானர்கள், நெபோலியன் (Napoleon) தோற்றத்திலிருந்து ஜயம் வெகுநாள் நிலைத்திராது என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் அவ்வப்பொழுது இருக்கும் நிலைமைக்கு உகந்தவாறு நடந்துகொண்டு பிரான்ஸு (France)க்குக் கூடியவரையில் கஷ்டமில்லாமல் செய்துகொள்வோம்."

ஜெர்மனியிலிருந்து சமீபத்தில் திரும்பிவந்த அமெரிக்க அதிகாரி ஒருவர், ஜெர்மனியில் எங்கு பார்த்தாலும் எப்பொழுது யுத்தம் முடியும் என்கிற ஒரே கேள்விதான் கேட்கப்படுகிறது என்று கூறினார். ஜெர்மானியர்களுக்கு வெற்றிகளில் இப்பொழுது பெரிய அருவருப்பு வந்துவிட்டது. கிரிஸ்துமஸ் டயத்தில் கொடுக்கப்படுகிற 100 கிராம்கள் (Grammes) காப்பிக் கொட்டையும், பீன்ஸு (Beans)ந்தான் அவர்களுக்குப் பெரிய வெகுமதி. ஜெர்மனியை பஞ்சத்தால் தோற்கடிக்க முடியுமென்று அவர் நம்புகிறார். அமெரிக்கா (America)வின் ஒத்தாசையால் பிரிட்டனுக்கு பிரயோஜனம் இல்லை என்று ஜெர்மானியர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அமெரிக்கா (America) யுத்தத்தில் சேர்ந்தால் ஜெர்மானியர்களுடைய மனதில் பெரிய கிளர்ச்சி ஏற்படும். ஏனென்றால் ஜெர்மானியர்கள் பயப்படுவதெல்லாம் யுத்தம் நீடிக்கக்கூடாதென்பதுதான். அமெரிக்கா யுத்தத்தில் சேர்ந்தால் யுத்தம் வெகுகாலம் நீடிக்கும்.

ஸ்பெயின் (Spain) தேசத்தின் வழியே ஜெர்மன் சைனியங்கள் செல்வதை ஸ்பெயின் தேசத்தார்கள் ஒரு நாளும் அனுமதிக்கமாட்டார்கள். அரசாங்க,



ராணுவ உத்தியோகங்களில் சமீபத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் இதை நிரூபிக்கின்றன. ஸ்பெயின் தேசத்தின் அமைப்பு கவசமணிந்த மோட்டார் படைகளுக்கும் டாங்கிகளுக்கும்கூட சிரமமாயிருக்கும்.

இதை நிரூபிக்கும்படியாக ஜெர்மனியில் பல வதந்திகளைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். ருடால்ப் ஹெஸ் (Rudolph Hess) இப்பொழுது இங்கிலாந்து (England)க்கு ஓடிவிட்டாரல்லவா. அவர் ஒரு சமயம் ஜெர்மனியின் ரகசிய திட்டங்களை பிரிட்டனுக்கு வெளியிட்டிருக்கக்கூடும். ஆகையால் போட்ட திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டியிருக்குமாம்.

---

## ஜெர்மனியின் ஒரு எல்லையிலிருந்து மற்ற எல்லை வரையில் கவனித்த வாகன் பாலின் அபிப்பிராயங்கள்.

## பெரும்பான்மையோர் ஹிட்லரிடம் உள்ள பிரமையைப் போக்கடித்துவிட்டார்கள்.

## ஜெர்மானியர்கள் விமானத்தாக்குதலை எதிர்பார்க்கிறார்கள்.

(ஜெர்மனி பூராவும் சுற்றிப்பார்த்து ஐக்கிய நாடுகளுக்குத் திரும்பிவந்த வாகன்பால் மே 21-ம்தேதியுள்ள நியூயார்க் போஸ்டு பத்திரிகையில் எழுதுகிறார்.)

ஜெர்மனியில் ஜனங்களுக்கு உண்டாகியிருக்கும் உணர்ச்சிகளை நான் விசாரித்துத் தெரிந்துகொண்டமட்டில், உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயங்களுக்கும் பிரசாரத்துக்கும் மாறுபாடாக, ஜனங்களின் பெரும் பகுதியார் ஹிட்லர், அவருடைய பரிவாரங்கள், இவர்களிடம் இருந்த பிரமையை விட்டுவிட்டார்கள். ரகசியப் போலீஸாலும், நாஸிகளின் அடக்குமுறையாலும் பலவந்தத்தினாலும் உண்டுபண்ணப்பட்ட யுத்த லாபங்கள் ஒருபுறமிருக்க, ஹிட்லருடைய ஆதிக்கத்தில் இதுவரையில் இருந்திராதபடி அபிப்பிராயம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. யுத்த காலத்தில் ஸ்பெயினிலும் சைனாவிலும் இருந்த பயத்தைக் காட்டிலும், குண்டுகள் வீசி நாசம் செய்யப்பட்ட தேசங்களைவிட ஜெர்மனியில் வெடிகுண்டு விமானங்களின் தாக்குதலினின்றும் அதிக பயம் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மன் ஸ்திரீகள் தங்கள் குடும்பத்துக்கு அளிக்கப்பட்ட சாப்பாட்டு டிக்கெட்டைக்கொண்டு பட்டினி கிடக்கும் நிலையைத் தாண்ட முடியவில்லை.

ஆஸ்பத்திரிகளிலும யந்திர வைத்திய சாலைகளிலும் தேகத்துக்கு வலுவளிக்கக்கூடிய உணவுப்பொருள்களின் குறைவினின்றும் ஏற்பட்ட வியாதிகளுக்கு சிகிச்சை செய்வதற்காக அநேகர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் டாக்டர்களுடனும் பல வைத்தியர்களுடனும் பேசினேன். அவர்களுடைய நோயாளிகள், அவர்களுடைய பற்கள் விழுந்துகொண்டிருக்கின்றனவென்றும், உணவு ஜீர்ணமாகும்பொழுது வலி ஏற்படுகிறதென்றும், பலஹீனமேற்பட்டிருக்கிறதென்றும் புகலுகிறார்கள். அதிக செழிப்பில்லாத மாகாணங்களில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களின் குறைவான குணத்தைப்பற்றி நாடெங்கும் பரவி

யிருக்கும் முனைகளை அடக்குவதற்காக யத்தனம் செய்து, ஜெர்மானியர்கள் இதற்காக ஒரு விசேஷமான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான ஒரு கடைவீதியில் "இந்தக் கஷ்டம் எப்பொழுது நிவர்த்தியாகுமென்று" சொன்ன ஒரு ஸ்திரியைக் கைதுசெய்து விட்டார்கள். ஜனங்களின் மனோதைரியம் மிகவும் குறைந்துவிட்டது. 1914-1915-ம் வருஷத்தில் இருந்ததைவிட தைரியம் கீழ்நோக்கிவிட்டது. ஹிட்லருடைய சமாதான ஏற்பாடுகளுக்கு ஜனங்களின் ஆதரவு ஏற்பட்டிருந்தது. அவைகள் முறிந்தவுடன் அந்த ஆதரவு ஹிட்லருக்குப் போய்விட்டது.

இதாலியில் முஸோலினியைப்பற்றி நான் கேள்விப்பட்டதுபோல் ஹிட்லரை வெறுப்புடன் அவதூறாகப் பேசாதவர்களே ஜெர்மனியிலில்லை. சினிமாக் கொட்டகைகளில் நாஜி தலைவர்களைப்பற்றி காண்பிக்கக்கூடிய படங்கள் காண்பிக்கப்பட்டபொழுது கரகோஷமே செய்கிறதில்லை. ஆனாலும் தலைமை வகிக்கும் தலைவர்கள் அங்கு ஆஜராகயிருக்கும்பொழுது மட்டும் கரகோஷங்கள் ஏற்படும். யுத்தத்தில் உத்ஸாகமோ, அல்லது கக்ஷிக்காரர்களின் உத்ஸாகமோ, பெரிய கூட்டங்களிலும், இங்குமங்குமுள்ள ஒரு உத்தியோகஸ்தர் சம்பந்தப்பட்ட மட்டிலும்தான் காணப்படுகிறது.

வெற்றி ஏற்படுமென்று அவர்கள் நினைத்தாலும் ஜெர்மானியர்கள் அதிகமாக சந்தோஷப்படவில்லை. இங்கிலாந்து தோற்றுவிட்டாலும் சாம்ராஜ்யத்தின் நாடுகள் சண்டை செய்யுமென்றும், கணக்கிடமுடியாத காலம்வரையில் பூர்ணமான அமைதி ஏற்படாதென்றும் அவர்கள் கருதுகிறார்கள். ரஜாவிலிருக்கும் சிப்பாய்கள் ஜயிக்கப்பட்ட நாடுகளில் உள்நாட்டு எதிர்ப்பு மிகவும் வலுவாகயிருக்கிறதென்று அறிவிக்கிறார்கள். அதிருப்தியானது, சிற்பிகளிடத்திலும், சிறிய வியாபாரிகளிடமும், படிப்பாளர்களிடமும், குடியானவர்களிடமும், அதிகமாகக் குடிகொண்டிருக்கிறதென்றும், விசேஷமாக தொழிலாளிகளிடம், அதாவது ஒரு காலத்தில் வர்த்தக சங்கத்தில் சேர்ந்தவர்களும் நாஜிப் பிரசாரத்துக்கு இடங்கொடுக்காதவர்களுமான வயதுவாய்ந்தவர்களிடமும் ஜாஸ்தியாகவுமிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

யுத்தம் நீடித்துக்கொண்டேவருவதால்தான் யுத்தத்தை இந்தக் கக்ஷிக்காரர்கள் மேன் மேலும் எதிர்த்துப் பேசுகிறார்கள். தொழிலாளிகள் கலக்கமடைந்திருக்கிறார்கள். ஏனென்றால்: அநேக தொழிற்சாலைகளில் பரதேசத்து தொழிலாளிகளுக்கு 100-க்கு 35-வீதம் அதிகச் சம்பளம் கொடுப்பதோடு தங்கள் நாடுகளுக்கு ரஜா நாட்களுக்குச் செல்ல இனாமும் கொடுத்துவருகிறார்கள். சம்பளம் அதிகரிக்கப்படாமல் ஒருவாரத்தில் ஏழுநாள்களிலும் 12 அல்லது 14-மணி நேரம் வேலைசெய்ய வேணுமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. ஓய்வுநேரம் கிடையாது. அவர்களுக்கு உரிய சாமான்கள் கொடுக்கப்படுகிறதில்லை. தொழிற்சாலைகளில் உத்ஸாகம் உண்டுபண்ணக்கூடிய விளையாட்டுகளெல்லாம் குறைக்கப்பட்டுவிட்டன. இவையெல்லாம் போர்முனையிலிருக்கும் சிப்பாய்களுக்கு அளிக்கப்பட்டுவிட்டன. உணவுப்பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடு இவர்களை அதிகமாக பாதிக்கிறது.



விமான எதிர்ப்பை ஜெர்மானியர்கள் அதிக பயத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். காயம்படாத போனாலும் பெர்லினிலுள்ள அநேகர்கள் அதிர்ச்சி ஏற்பட்டதற்காக சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள். ஹாம்பர்க், காப்ளன்ஸ், இன்னும் அநேக வெடிகுண்டுகள் போடப்பட்ட நகரங்களில் இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் ஆயிரக்கணக்காக யிருக்கிறார்கள். கக்ஷித் தலைவர்களின் மனைவியாரும் குழந்தைகளும் ஐச்வரியமுள்ள ஒவ்வொரு குடும்பமும் அபாய பிராந்தியங்களிலிருந்து வெளியேறிவிட்டார்கள். பிரிடனில் ஏற்பட்ட ஏராளமான வெடிகுண்டு வீச்சு ஜெர்மனியில் ஏற்பட்டால் உள்நாட்டு மனப்பான்மை நிச்சயமாய் நிலைகுலைந்து விடுமென்று பாக்கியிருப்பவர்கள் சொல்லுகிறார்கள். மற்ற எந்த சந்தர்ப்பத்திலும் திடமாக நிலைநாட்டக்கூடிய ரகசியப் போலீஸின் கட்டாயம் இந்தச் சமயத்தில் பிரயோஜனப்படாது. ஜெர்மன் ஜனங்களின் தைரியக் குறைவும் பீதியும், ஜெர்மானியர்களுக்கு இயற்கையான செட்டிலிருந்து மாறுதல் அடைந்திருப்பதைப் பார்த்தால் நன்றாய் வெளியாகிறது. விசேஷமான ஒரு வியாக்யானம் என்னவென்றால் "நாம் நாளைக்கு ஜீவித்திருக்க மாட்டோமென்று ஏற்படும்பொழுது ஏன் சேமித்து வைக்கவேண்டும்?" மாரிகாலத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு வீச்சுகளின் பயன்கள் இவைதான்.

---

## கிழக்கு மத்திய பாகத்தில் ஆகாய மார்க்க ஏற்றுமதி பரீக்ஷித்தல்.

## இராக்கிலும் ஸிரியாவிலும் விசேஷம்.

## பிரிடனின் பாராசூட் படைப்பயிற்சியின் காலதாமதம்.

## இந்தத் தவறுதலை சீர்திருத்தவேண்டும்.

(லிவர்பூல் போஸ்ட் விமானப் போர் நிருபரால்.)

கிழக்கு மத்தியதரைக்கடலின் நிலைமையில் முன்னிருந்ததைவிட போக்குவரத்து சம்பந்தம் முக்கியமாகக் கருதப்படுகிறது. அதிலும் ஆகாயப்போக்குவரத்து இன்னும் முக்கியம். சுருக்கமாகச் சொல்லுமிடத்து மேலே சொன்ன பிரதேசத்தில் யார் குறைந்தகால அளவில் அதிகமான படைகளையும் யுத்த தளவாடங்களையும் கொண்டுபோக முடியுமோ அவர்களுக்கே அங்கு முதல்தரமான சகாயம் ஏற்படும்.

ஜெர்மானியர்கள் விஷி கவர்ன்மெண்டின் உத்தரவின் பேரில் ஸிரியாவில் ரயாக், பால்மைரா, டமாஸ்கஸ் இவ்விடங்களிலுள்ள விமானப்படை அடிப்படைகளை உபயோகிக்க நேர்ந்ததில், அவர்களுக்கு ஆகாயப்போக்குவரத்துக்கு வேண்டிய ஆகாய விமானப்படைகளை அதிகமாகவும் தயாராகவும் வைத்திருக்காமலிருந்தாலும், அவைகளை உபயோகப்படுத்துவதற்குத் தகுந்த ஆகாய மாலுமிகளையும்,

கொண்டுசெல்வதற்கு சாமான்களையும் தயாராக வைத்திராமலிருந்தால் அது பிரயோஜனமற்றதாகும். பிரிட்டனும் இராக் போரிலும் ஆகாய போக்குவரத்தைக் கையாடி வந்தது. ஹவிட் ஸெர்ஸையும் (Howitzers) ஹபனெயாவுக்கு எடுத்துச் சென்றது. விபத்தான இடங்களிலிருந்து ஸ்திரீகளையும், குழந்தைகளையும் அப்புறப்படுத்துவதிலும் ஆகாயப் போக்குவரத்துப் படைகளை பிரிட்டன் உபயோகித்து இருக்கிறது.

எதிரிகளின் போக்குவரத்துக்களைக் கண்டுபிடித்து ரிபோர்ட் செய்வதென்பது தரையில் செய்வதைவிட கடலில் செய்வது அவ்வளவு முற்றுப் பெற்றதாக இருக்காது. மேலும் ஜெர்மன் மிஷின்கள் தங்கள் போக்குவரத்தின் சில பாகங்களை இருட்டிலே வைத்துக் கொள்வதால் அவைகள் தங்கள் எதிரி கைவசப்படாது தப்பித்து பிரயாணத்தைச் செய்யக்கூடியதாக இருக்கிறது.

இதனால் என்ன ஆகிறதென்றால், ஜெர்மானியர் யுத்த தளவாடங்களை இராக்கில் கொண்டுபோய் சேர்க்காமலிருக்கக் கவனித்துவரும் R. A. F. படைகள் ஜெர்மானியர் வசம் இருக்கும் ஆகாய விமானப்படை அடிப்படைகளைத் தாக்குவதில் அதிகமாக ஈடுபடவேண்டும். இந்த நோக்கத்துடன் பிரிட்டிஷார்கள் ரோட்ஸ் அடிப்படைகளையும், பிரெஞ்சுக்காரரால் ஜெர்மானியர் வசம் விடப்பட்டிருக்கும் ஸிரியாவின் அடிப்படைகளையும் தாக்கியிருக்கிறார்கள். இராக் ஆகாய விமான சாலைகளையும் தாக்கியிருக்கிறார்கள். இந்த யுத்தத்தின் அனுபவத்திலிருந்து ஆகாய விமான சாலைகளை ஆகாயத்திலிருந்து யுத்தம் செய்வதின் மூலம் அழிக்க முடியாது என்று தெரிகிறது. ஆகாய விமான சாலைகள் கடுமையான பீரங்கி குண்டுகளை சமாளிப்பதுடன் அதன் பிரயோஜனம் குன்றாது.

ஆகையால் ஜெர்மானியர் ஆகாய மூலம் சாமான்களைக் கொண்டுபோவதை ஆகாயப்படை யுத்த மூலம் தடை செய்யமுடியாது. ஆனால் அப்படி கொண்டுபோகும் சாமான்களின் அளவைக் குறைக்க முடியும். மற்றபடி நாம் எவ்வளவுக்கு எவ்வளவு இராக்கிலுள்ள நம் ஆகாய விமானப்படை அடிப்படைகளுக்கு நம் ஆகாய விமானப்படைகளைக் கொண்டுபோய் சேர்க்கிறோமோ அவ்வளவு நமக்கு நன்மையாகும்.

தற்சமயம் விமானப்படைகளின் உபயோகத்தை முடிந்தவரை அதிகப்படுத்த வேண்டியது அவசியம். அது சீக்கிரமாக செய்யப்படவேண்டும். நம்முடைய கப்பல்கள் பர்ஷியன் கல்ப் மூலம் பாஸ்ராவுக்கு ஏராளமான சாமான்களைக் கொண்டு போகக்கூடுமானாலும் அது மெதுவாகத்தான் கொண்டுபோகப்படும். இந்தப் பிரயத்தனங்களில் முதலில் தயாரிப்பு செய்துகொண்டு பிறகு படைகளை ஆகாய மார்க்கம் எடுத்துச்செல்லவேண்டும்.

லிபியாவில் நிலைமை சற்று மாறுதலாக இருக்கிறது. அங்கு எதிரி பெரும்பாலும் ஆகாய மார்க்க மூலமே படைகளைக்கொண்டு வரவேண்டும். ஆனால் நாம் நம் படைகளை கப்பல் மூலம் பெரும்பாலாகக்கொண்டு செல்லலாம். சில காலமாக நாம் லிபியாவுக்கு கடல்மார்க்கமாக படைகளைக்கொண்டு செல்லுகிறோம். ஆகையால் இராக்கிலிருப்பது போல் அங்கு எதிரியின் போட்டி இல்லை.



படைகள் ஏற்றிச்செல்லும் ஜங்கர்ஸ் 52-ல் அநேகம் லிபியாவில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து ஜெர்மானியர் ஆகாய மார்க்கத்தையும் உபயோகிக்கிறார்கள் என்று தெரிகிறது. இதனுடைய பலத்தையும் நாம் குறைச்சலாக மதிக்கக்கூடாது. ஆகாய யுத்தத்தை நாம் சரிவர நடத்திவந்திருக்கிறோம். ஆனால் நம் எண்ணிக்கைகள் அநேகமாகக் குறைவாக இருந்துவந்திருக்கிறது. ஆனாலும் இந்த எண்ணிக்கை வித்தியாசம் நிரவியும் வரப்படுகிறது. எதிரிகள் ஆகாயப் போக்குவரத்து சாதனங்களை உபயோகித்துக்கொள்வதுபோல் நாம் பூராவும் உபயோகித்துக் கொள்ளவில்லை. இப்பொழுது நம்மிடம் பாரசூட் துருப்புகள் இருக்கின்றன. அவைகள் மிகுந்த காலதாமதமாக செய்யப்பட்டவை. யுத்தத்திற்கு முந்தின வருஷங்களில் இந்தபாரசூட்டுகளின் பிரயோஜனத்தை சோல்ஜர்கள் தெரிந்து கொள்ளாமலிருந்ததைத் தவிர இந்த காலதாமதத்திற்கு வேறு காரணமொன்றுமில்லை.

ராணுவ காரியங்களில் ஆகாயப் போக்குவரத்தை அதிகப்படுத்துவதில் நாம் துரிதமாக இல்லை. ஒவ்வொரு யுத்தத்திலும் சாமான்கள் கொண்டுபோகும் ஒவ்வொரு வகையிலும் எதிரி ஆகாய விமானப்படையை தீவிரமாக உபயோகித்து வந்திருக்கிறான். இனியும் அவைகளை இக்காரியத்திற்கு மேலும் மேலும் உபயோகித்து வருவான். கடல் ஆதிபத்தியம் அவசியம் என்பது ஒரு கிளிப் பேச்சாகிவிட்டது. கடல் ஆதிபத்தியம் இல்லாத எந்த தேசமும் ஒரு பெரிய யுத்தத்தில் ஜயிக்கமுடியாது என்று நீண்டகாலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பேச்சு சரியல்ல. உண்மையான சங்கதி என்னவென்றால் கடல் மார்க்கமாக போக்குவரத்து சகாயமும் ஆதிபத்தியமுமில்லாத எந்த நாடும் ஒரு பெரிய யுத்தத்தில் ஜயிக்கமுடியாது என்பதே. இதை ஆகாய விமானங்களாலும், கப்பல்களாலும் செய்யக்கூடும். நம்முடைய யுத்த தந்திரங்களை பாதிக்கக்கூடிய யோசனைகளில் இதை நாம் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இன்னும் ஆகாய விமானங்கள் சிறிய பாரங்களையே தூக்கிச் செல்ல சக்தியுள்ளவையாயிருக்கின்றன. ஆனால் அவை துரிதமாக தூக்கிச் செல்கின்றன. சக்தியையும் விருத்தி செய்துகொண்டு வருகின்றன. இராக் யுத்தம் மற்ற யுத்த சாமர்த்தியங்களை பரிசோதிப்பது போல் ஆகாயப் போக்குவரத்தையும் பரீக்ஷிக்கக்கூடியதாக இருக்கும்.

---

## எதிர்கால அமைதியைப்பற்றி பிரஸிடெண்ட் பெனேஷ். நூதனமான பாதுகாப்பு ஏற்பாடு இருந்தால் ஆரம்பத்திலேயே கெடுதலை அழித்து விடலாம்.

1941-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியன்று லிவர்பூல் சர்வகலாசாலையில் படிப்பாளர்களின் சங்கத்தின் அழைப்புக் கிணங்கி சொற்பொழிவு நிகழ்த்திய பொழுது ஸெக்கோஸ்லோவாகியாவின் பிரஸிடெண்டான பெனேஷ் என்பவர் ஐரோப்பாவில் வருங்காலத்தில் சமாதானமிருக்கவேண்டுமானால் நவீன முறையில் ஒரு பாதுகாப்பு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன்னார். யந்தரங்களால்

நடத்தப்படும் யுத்த முறையும் விமானப் போருமுள்ள இன்னாளில் பிரான்ஸாவது, பிரிடனாவது மத்திய ஐரோப்பாவிலிருந்து தனிப்பட்டதாகயிருந்து ஜெர்மன் ஆதிக்கத்துக்காவது அல்லது மற்ற பெரிய வல்லரசர்களின் சச்சரவுக்கு ஐரோப்பாவை உள்படுத்தவாவது விட்டுவிட முடியாது.

மேலும் இருபது ௵த்திய ஐரோப்பிய ராஜீய முறையானது 1914-ம் ௵த்திய யுத்தத்தில் ராஜீய சம்பந்தமாயும், மதசம்பந்தமாயும் ஏற்பட்ட கிளர்ச்சியின் தொடர்ச்சியென்றும், 1939-ம் ௵த்திய யுத்தமானது ஐரோப்பாவினுடையவும் உலகத்தினுடையவும் மகத்தான மாறுதல்களின் மற்றொரு ஏற்பாடென்றும் அவர் சொன்னார். 1914-ம் ௵ யுத்தத்தில் ஆரம்பித்த கிளர்ச்சியும், யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பாவிலுள்ள ராஜீய முறைகள் ஜனநாயகம், பாஸிஸம், பொது உடமை—இவைகளுக்குள் சச்சரவும், அதன் தொடர்ச்சியாக அதே கொள்கைகள் கொண்டவர்களுக்குள் நடக்கும் இந்த யுத்தமும், நாளாக நாளாக தற்கால ஐரோப்பா பூராவையும், ராஜீய வழியில் மட்டுமல்லாமல், விசேஷமாக, பொருளாதார நிலைமையிலும், ஜனசமூகத்திலும் மாறுதல்கள் செய்யக்கூடிய யுத்தமாக முடியும்.

ராஜீய நிலைமையிலும், பொதுஜன நடத்தையிலும், பொருளாதாரத்திலும், நாமிருந்து வரும் காலமானது ரொம்பவும் நிலை தடுமாறியதாக யிருக்கிறது, இருக்கவும் கூடும். இந்த யுத்தத்தின் முடிவிலும் அதற்குப் பின் பல வருஷங்களிலும் ஐரோப்பா கண்டத்தில் ராஜீய, தேசிய, பொருளாதார நிலைகளில், பிரெஞ்சு ரெவல்யூஷனுக்குப் பிறகு ஐரோப்பா கண்டத்தில் இருந்ததுபோல் அதேமாதிரியான மாறுதல்கள் ஏற்படக்கூடும்.

இந்த யுத்தத்தில், சென்ற யுத்தத்தைவிட அதிகமாக மாறுதல்களும், கொடுமையும், அதிக்கிரமமும், குரூரமும், அநாகரிகமும் ஏற்பட்டிருக்கிறது. எல்லா தேசங்களுடைய ராஜீய நிலைமையில் நாஸி வர்க்கத்தார், யுத்தத்துக்குமுன் ஜெர்மனியிலிருந்த அரசாங்க முறையைக் கையாளுவதும் அதைக் கூடியமட்டில் மிகையாகவே செய்வதுமல்லாமல், எக்காலத்திலும் எந்த ஸமஸ்தான உத்தியோக முறையிலுமில்லாத வரையில் ஒரு ஏற்பாட்டை உண்டுபண்ணிவிட்டார்கள், அதாவது, உண்மை, சாஸ்திரம், யதேச்சைக் கல்வி, நோக்கங்கள், சமத்வம் ஆகிய குணங்களையே அழித்தலென்பது. இம்மாதிரி பொய், பித்தலாட்டம், குற்றம், துரோகம் என்னும் குணங்கள்தான் ராஜீயக் கொள்கைக்கும் ஸமஸ்தானத்துக்கும் உரித்தான நியாயமான அரசாங்க ஏற்பாடு என்று சொல்லும் கோரமான அபிப்பிராயமானது சரித்திரத்தில் இதுவரையில் இருந்திருக்கவில்லை. பலாத்காரம், அதிகாரம், பீதி, ராணுவப்படை, ஈட்டி, துப்பாக்கி இவைகள்தான் நாஸிக் கொள்கைக்கும பழக்க வழக்கங்களுக்கும் அடிப்படையானவைகள். இவைகள்தான் நாஸி உலகத்தின் புத்திசாலித்தனத்துக்கும், ஒழுங்குக்கும் முக்கியமானவைகள். நாஸிக் கொள்கையால் தற்காலத்திய மனிதனுடைய நல்லொழுக்கங்களெல்லாம் நாசமாக்கப்பட்டுவிட்டன. நாம் யுத்தம் செய்வதற்குக் காரணமும் இவைகள்தான்.



யுத்தத்தில் ஆழ்ந்த மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் இந்த யுத்தத்தின் சாராம்சத்தை அறிய முடியாதென்று நான் கவலைப்படுகிறேன். நாஸி, பாஸிஸ்ட் கொள்கைகளையும், பழக்கங்களையும், ஆசைகளையும் ஒழிக்கவேண்டியது அவசியமென்று அவர்கள் அறியமாட்டார்கள். இந்த நாஸி உலகத்தோடும் அதற்கு ஜெர்மனியில் ஆதரவு அளிப்பவர்களோடும் ஒப்பந்தமாவது அல்லது ஜீவிப்பதும் முடியாத காரியமென்றும், இந்த ஒரு அமைப்புக்கும் அதனுடைய ராணுவ பலத்துக்கும் பக்ஷபாதமில்லாத நிச்சயமான ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டியது அவசியமென்றும் அவர்கள் அறியமாட்டார்கள். மரியாதையான விவாதமும் ஒப்புக்கொள்ளக்கூடிய சமாதானப் பேச்சும், உடன்படிக்கையும் நாஸிகளோடு ஒருபொழுதும் சாத்தியப்படவில்லை. ஒருபொழுதும் சாத்தியமாகவும் ஆகாது. ஒவ்வொரு ஸமஸ்தானமும் ஒவ்வொரு தேசமும் அதன் நிர்வாகத்திற்கு ஜவாப்தாரி. ஹிட்லர் கொள்கை, நாஸி தத்வம் இவைகளை ஒழிக்கத்தான் யுத்தம் செய்கிறோமென்று சொல்லுவது ராஜீய முறையிலும், ஒழுங்கு முறையிலும் முற்றிலும் தவறு. இந்த யுத்தத்தின் கொடுமைகளுக்கும் போலந்து, நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் இவைகளில் ஏற்பட்ட சேதத்திற்கும் பீதிக்கும், தொந்தரவுக்கும், ஸெகோஸ்லோவாகியாவின் தேசமக்களின் பொருளாதாரம், கல்வி இவைகளின் அழிவிற்கும், நாஸி தத்வமும் அதன் பிரசாரகர்கள் மட்டுமல்ல, ஜெர்மனி என்ற ஸமஸ்தானம் பூராவும்தான் ஜவாப்தாரிகள். சென்ற நூறு வருஷங்களில் ஜெர்மனியில் பிஸ்மார்க், மால்ட்கி, வில்கெல்ம் II என்ற சக்ரவர்த்தி, லுடன்டார்ப், ஹிட்லர், கோயரிங், ஹிம்லர் போன்ற அநேகர் இருந்திருக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவில் லிங்கன் போலும் பிரான்ஸில் காம்பெட்டா போலும், இங்கிலாந்தில் கிளாட்ஸ்டன் போலும் ஒருவரும் அங்கிருந்ததில்லை. ஆகையால் ஜெர்மனிதான் இந்த யுத்தத்துக்கு முக்கியமான காரணம்.

இவைகளினின்றும் நாம் பழிக்குப் பழியாக ஒரு சமாதானத்தை ஏற்படுத்தி ஜெர்மனியை அடியோடு அழித்துவிட வேண்டுமென்பது ஏற்படவில்லை. ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள ராஜீயக் கல்வியின்மையினால் ஒவ்வொரு பத்து அல்லது இருபது வருஷங்கள்தோறும் யுத்தம் ஏற்படாமலிருக்கும்படி நாம் என்னசெய்ய வேண்டுமென்று நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதுதான் அர்த்தம். முதல் முதலாக ஜெர்மனிக்கு யுத்தத்தில் அபஜயம் வரவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். பிறகு ஆஸ்திரியா, ஸெகோஸ்லோவாகியா, போலந்து, நார்வே, மற்ற ஆக்கிரமிப்பு நாடுகள் எல்லாவற்றின் சுதந்திரத்தையும் நிலைநாட்டி அந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களையும் ஈடு செய்யப்போகிறோம். இதை விட, யுத்தத்திற்குப் பிறகு, ஜெர்மனியிலுள்ள நல்ல அம்சங்களை ஆதரித்து ஜெர்மனி பூராவும் சக்தியடைந்த பிறகு ஜெர்மனியின் உள்நாட்டு வாழ்க்கையைத் திருத்தி அமைத்து, புதிதான, ஜனநாயக, சுயேச்சையுள்ள ஜெர்மனியாக, கற்பித்து அதை ஐரோப்பாவின் நாகரிகம் வாய்ந்த நாடுகளில் ஒன்றாக நிற்கும் ஸ்தானத்தை அடைய உதவி செய்யப்போகிறோம். இது சாத்தியப்படுமோ, இல்லையோ, ஜெர்மன் ஸமஸ்தானமும் ஜெர்மன் தேசமக்களும்

யுத்தத்துக்குப் பிறகு புதிய ஏற்பாட்டை உண்டு பண்ண சக்தியுள்ளவர்களாக ஆனாலும் ஆகாவிட்டாலும் சரி, இந்தப் பிரச்னை கிளம்பக் கூடுமென்று நான் நினைக்கிறேன். இந்த முக்கியமான பிரச்னைக்கு விடை எவ்விதமிருப்பினும் மறுபடியும் ஒரு புதிய ஐரோப்பிய ஐக்கியத்தை ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம்.

ஐரோப்பாவின் சுதந்திரம் ஒன்று பட்டது. மத்திய ஐரோப்பாவில் அடிமைத்தனமும் கொடுமையும் அதிகரித்தால் முதலில் பிரான்ஸும் பிறகு பிரிடனும் அடிமைத்தனத்தின் பளுவினால் விழுந்துவிடும். 1930-ம் வருஷம் முதல் 1933 முடிய ஐரோப்பிய ராஜீய முறையில் முக்கியமான இந்தக் கொள்கைகள் மறந்து போய்விட்டன. ஒவ்வொரு அம்சத்திலும் வார்ஸெயில்ஸ் சமாதான ஏற்பாடு நியாய மற்றது என்ற வியாஜத்தின் பேரில் நாஸி தத்வமென்ற ஒரு ராஜீயக் கொள்கை கிளம்பிற்று. அதன்படி மத்ய, கிழக்கு ஐரோப்பா கண்டம் ஜெர்மானியருக்குக் கிடைக்கவேண்டுமென்பது அபிப்பிராயம். ஐரோப்பாவின் சரித்திரத்தில் இம்மாதிரியான கொள்கை ஏற்பட்டபொழுது தவறுமல் ஐரோப்பாவில் யுத்தம் நடைபெற்றிருக்கிறது. இந்த யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பாவில் ஒரு புதிய பாதுகாப்பு திட்டம் ஏற்படுத்தி கெடுதல்களை ஆரம்பத்திலேயே ஒழிக்கவும், அதாவது ஒரு புதிய ஹிட்லரோ அல்லது முஸோலினியோ மறுபடியும் கிளம்பாத வண்ணம் ஏற்பாடு செய்ய அவசிய மேற்பட்டுவிடும். இந்தப் புதிய ஐரோப்பியப் பாதுகாப்பு அமைப்பின் அம்சங்களாவன.

(1) ஐரோப்பாவில் ஆக்கிரமணம் செய்யப்பட்ட சிறிய தேசங்களை எல்லாம் விடுதலை செய்தல்.

(2) ஐரோப்பாவில் பல பாகங்களில் புதிதான சமஷ்டி நிலயங்கள் உண்டாக்குதல்.

(3) சென்ற சில வருஷங்களில் சர்வதேச சங்கம் வேலை செய்ததைவிட யுத்தத்திற்குப் பிறகு ஏற்படக்கூடிய நிலைமைக்குரித்ததாகப் புதிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடு செய்து, அதன் மூலம், ஆயுதங்களின் பரிமாணத்தைக் கூடிய வரையில் குறைக்க முயலுகிறது.

(4) ஜனநாயக நாடுகளுக்குள் பொருளாதார முறையில் சச்சரவுகள் ஏற்படாதபடி புதிதான பொருளாதார ஒத்துழைப்பு திட்டம் ஏற்படுத்தி, அதிகாரம் வாய்ந்த யதேச்சாதிகாரிகள் உள்ள தேசங்கள் உண்டாகாதபடி தடுப்பது.



# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### "கடல் யுத்தம்".

கடல் யுத்தத்தில் கப்பல் நஷ்டங்களை எடுத்துச் சொல்வது ஜெர்மனியின் முக்கியமான பிரசங்கங்களில் ஒன்று. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முக்கியமாக பிரிடன் கடலில் கப்பல்கள் போக்குவரத்தால் ஜீவிக்கும் ஒருதேசம். சமுத்திரங்களில் கப்பல் போக்குவரத்து வழிகளெல்லாம் தான் அதனுடைய ஜீவநாடி. இந்த யுத்தத்தில் இங்லோந்தின் ஜயம் அதைத்தான் பொருத்திருக்கிறது. இரண்டாவது, யுத்தம் ஆரம்பித்த டயத்தில் ஜெர்மனிக்கும், இதாலிக்குமாகச் சேர்ந்து நிறை கணக்கில் பிரிடனுக்கு இருந்த வியாபாரக் கப்பல்களில் மூன்றில் ஒரு பங்குதானிருந்தது. ஆகையால் கடலில் பிரிடனுக்கு ஏற்படும் கப்பல் நஷ்டத்தைவிட அச்சு நாடுகளுக்கு குறைச்சலாய்த்தானிருக்கும்.

ஆகையால் பிரிடனுக்கு ஏற்படும் கப்பல் நஷ்டக் கணக்கைப்பற்றி வாரா வாரம் ஜெர்மனியிலிருந்து ஹா ஹா, பிரபு (Lord Haw Haw) கேட்போர் மனதில் பயம் வரும்படி ஒரு விமர்சனம் செய்வார்.

அம்மாதிரி அவர் செய்த பிரசங்கங்களில் ஜூன் மாதம் 8-ம் தேதி செய்தது ஒன்று. அவர் கூறினதாவது:—"யுத்தம் ஆரம்பித்தபொழுது பிரிடனு (Britain)க்கு இருந்த கப்பல் நிறையில் இப்பொழுது 110 லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்களை பிரிடன் இழந்துவிட்டது. இதைத் தவிர எத்தனையோ கப்பல்கள் சேதமாயிருக்கின்றன. இப்பொழுது முழுகடிக்கப்படும் கணக்குப்படி முழுகடிக்கப்பட்டுக்கொண்டே யிருந்தால் ஒரு வருஷத்திற்கு பிரிடனுக்கு 90 லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்களுக்குமேல் நஷ்டமாகிக்கொண்டே வரும். பிரிடிஷ், அமெரிக்கா இரண்டு நாடுகளுடைய கப்பல் கட்டும் துறைகளுமாகச் சேர்ந்து, இப்பொழுது இருக்கும் ஸ்திதியில் $22\frac{1}{2}$ லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்களுக்குமேல் ஒரு வருஷத்தில் கட்டமுடியாது.

### ஜெர்மனியின் துராசை.

பொய்யும் புளுகுமாகச் சொல்லி ஹா ஹா பிரபு (Lord Haw Haw), ஜனங்களின் மனதில் பயத்தை உண்டுபண்ணப் பார்க்கிறார். யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து 1941-ம் வருஷம் ஏப்ரல் 30-ம்தேதியோடு முடிவாகிற 20 மாதங்களுக்கு, பிரிடிஷ், நேசதேச, நடுநிலைமை நாடுகளின் கப்பல் நஷ்டக் கணக்கை பிரிடிஷ் கடற்படை இலாகா வெளியிட்டிருக்கிறது.

| | கப்பல்கள். | நிறை (டன்கள்). |
|---|---|---|
| பிரிடன் | 923 | 38,96,242 |
| நேச தேசங்கள், நடுநிலைமை நாடுகள் | 585 | 22,31,431 |
| ஆக மொத்தம் ... | | 61,27,673 |

இதைத்தான் ஹா ஹா பிரபு (Lord Haw Haw) பொய்யாக 110 லக்ஷம் டன்கள் என்று கயறு திரிக்கிறார்.

ஏப்ரல் மாதத்தில் 1,144, 995 டன்கள் நிறையுள்ள கப்பல்களை மூழ்கடித்து விட்டதாக ஜெர்மானியர் ஜம்பம் அடித்துக்கொண்டார்கள். ஆனால் உண்மையில்

| | | நிறை (டன்கள்). |
|---|---|---|
| பிரிடிஷ் கப்பல்கள் ... | ... | 2,93,000 |
| நேசதேசக் கப்பல்கள் | ... | 1,89,473 |
| நடு நிலைமை நாட்டுக் கப்பல்கள் | ... | 5,562 |
| ஆக மொத்தம் | ... | 4,88,035 |

டன்கள் நிறையுள்ள கப்பல்களே மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி மாதக் கணக்கில் போனால்கூட ஒரு வருஷத்தில் மூழ்கடிக்கப்படும் பிரிடிஷ், நேசதேச நடுநிலைமை நாட்டுக் கப்பல்களின் நிறை 60 லக்ஷம் டன்களுக்குமேல் போகாது. ஹா ஹா பிரபு ஒரு வருஷத்தில் 90 லக்ஷம் டன்கள் மூழ்கடிக்கிறோம் என்று பிதற்றுகிறார்.

## கப்பல் கட்டும் திட்டம்.

ஹா ஹா பிரபு (Lord Haw Haw) சொன்னதில் கொஞ்சம் நிஜமுமிருக்கிறது. அவர் சொன்னபடி, இப்பொழுது இருக்கும் ஸ்திதியில் ஒரு வருஷத்திற்கு 22½ லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்களுக்குமேல் பிரிடனாவது, அமெரிக்காவாவது கட்டமுடியாதுதான்.

## இந்து மஹா சமுத்திரம் (Indian Ocean.)

பெர்லின் ரேடியோ ஜூன் மாதம் 2-ம் தேதி ஒலிபரப்பியதாவது "செங்கடலி (Red sea)லிருந்த இதாலிய நீர்மூழ்கிக் கப்பல்களெல்லாம் இதாலிக்குப் பத்திரமாக திரும்பிவந்துசேர்ந்தன. அவைகள் ஆபிரிக்கா (Africa)வைச் சுற்றிக்கொண்டு வந்த 80 நாட்களில் ஒரு நாளாவது ஒரு பிரிடிஷ் யுத்தக் கப்பலாவது தென்படவேயில்லையாம்" என்று இதாலியக் கடற்படையை புகழ்ந்து பேசிற்று. மறுபடியும் பெர்லின் ரேடியோ "பிரிடன் தனக்கிருக்கும் கடற்படை பலம் முழுவதையும் மத்தியதரைக்கடலி (Mediterranean)லும், மேற்கு அட்லான்டிக் (Atlantic) சமுத்திரத்திலுமாக வைத்திருக்கிறது போலும்" என்றும் இந்து மஹா சமுத்திரத்தி (Indian Ocean)ல் பிரிடிஷ் கடற்படையே இல்லை என்பது போலும் கூறிற்று.

இம்மாதிரி இதாலிய நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒரு ஒளிந்துகொண்டு ஊருக்குத் திரும்பிவந்து கொண்டிருந்த 80 நாட்களில் பிரிடிஷ் கடற்படையால் இந்து மஹா சமுத்திரத்தில், இதாலிய க்ரூயிஸரான "முதல் ராம்ப், (Ramb I), ஒரு பெரிய



ஜெர்மன் யுத்தக் கப்பல், இரண்டு ஜெர்மன் சாமான் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் கப்பல்கள்தான் இந்து மஹா சமுத்திரத்தில் உலாவுகின்றன. அச்சு நாட்டுக் கப்பல்கள் அப்பக்கமே வருவதில்லை.

## பிரிடிஷ் கடற்படையின் நஷ்டக் கணக்கு.

ஜூன் மாதம் 5-ம் தேதி பெர்லின் (Berlin) ரேடியோவில் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது. "மே மாதத்தில் ஜெர்மனியும், இதாலியுமாகச் சேர்ந்து 1 பிரிடிஷ் யுத்தக் கப்பல், 12 க்ரூயிஸர் கப்பல்கள், 12 நாச காரிகள், 6 நீர் மூழ்கிக் கப்பல்கள் இவைகளை மூழ்கடித்திருக்கின்றன. "உண்மையில் பிரிடிஷாரின் நஷ்டம் (மே மாதத்தில்)—ஹூட் (Hood) என்னும் யுத்தக்கப்பல்; யார்க் (York), க்ளாஸெஸ்டர், (Gloucester), பிஜி (Fiji) என்னும் மூன்று க்ரூயிஸர்கள் (Cruisers); க்ரேஹௌண்ட் (Greyhound), கெல்லி (Kelly), காஷ்மீர் (Kashmir), மஷோனா (Mashona), என்னும் 4 நாசகாரிகள்; அஸ்க் (Usk) என்னும் கடல் மூழ்கிக் கப்பல்.

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### ஜூன் மாதம் 2-ம் தேதி பெர்லினிலிருந்து இந்துஸ்தானி பர்ஷியன் பாஷைகளிலும் ஒலிபரப்பு.

கிரீட் (Crete) டில் பிரிடிஷாருக்கு எவ்வளவோ விதமான சௌகரியங்களிருந்தபோதிலும் ஜெர்மனி தான் ஜயித்தது என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகை கூறியதாக பெர்லின் ரேடியோ அறிவித்தது. கிரீட் (Crete)டில் பிரிடிஷாருக்கு ஒரு விதமான சௌகரியமும் கிடையாது. பல கஷ்டங்கள்தானிருந்தன. பிரிடிஷாருக்கு விமான நிலயங்கள் எகிப்தி (Egypt)ல் கிரீட் (Crete) டிலிருந்து 360 மைல்களுக்கப்பாலிருக்கின்றன. ஜெர்மானியருக்கோ வெகு சமீபத்தில் 70 மைல்கள் தூரத்தில் விமான நிலயங்கள் இருக்கின்றன. ஜெர்மானியர்களுக்கு இம்மாதிரி சௌகரியங்கள் இருந்தபோதிலும் அவர்கள் இரண்டு நாட்களுக்குள் முடிந்துபோகும் என்று சொல்லிக்கொண்டிருந்த சண்டை நீடித்து 12 நாட்கள் நடந்தன.

## மனஉறுதி வலுக்கிறது.

நியூ யார்க் டெய்லி நியூஸ் (New York Daily News) என்னும் அமெரிக்கப் பத்திரிகை அமெரிக்கர்களில் 100-க்கு 95 பேர்கள் பிரிடனுக்கு ஒத்தாசை செய்வதை எதிர்க்கிறார்கள் என்று ஜூன் மாதம் 8-ம் தேதி பெர்லினிலிருந்து

இந்துஸ்தானியில் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவில் எடுக்கப்படும் காலப் (Gallup) வோட்டுகளோ நாஜிகள் சொல்லும் இந்தக் கதைக்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றன. 1940-ம் வருஷம் மே மாதத்தில் எடுத்த வோட்டுகளின்படி, வோட்டுக் கொடுத்தவர்களில் 100-க்கு 36 பேர்கள்தான் 'சண்டை வந்தாலும் வரட்டும். பிரிட்டனுக்கு ஒத்தாசை செய்துதான் ஆகவேண்டும்' என்று சொன்னார்கள். 100-க்கு 64 பேர்கள் எப்படிப்பட்டாவது அமெரிக்கா யுத்தத்தில் சேராதபடி செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதே வருஷம் ஆகஸ்டு மாதத்தில் 'சண்டை வந்தாலும் வரட்டும், பிரிட்டனுக்கு ஒத்தாசை செய்யத்தான்வேண்டும்' என்ற கக்ஷிக்கு 100-க்கு 47 வோட்டுகள் வந்தன. அதே வருஷம் டிஸம்பர் மாதத்தில் மேலேசொன்ன கக்ஷிக்கு 100-க்கு 60 வோட்டுகள் வந்தன. சமீபத்தில் எடுக்கப்பட்ட வோட்டுகளின்படி 100-க்கு 62 பேர்கள் "பிரிட்டனுக்கு ஒத்தாசை செய்துதான் ஆகவேண்டும். அதனால் யுத்தம் வந்தாலும் வரட்டும்" என்று கூறியிருக்கிறார்கள். 100-க்கு 26 பேர்கள் தான் என்னவானாலும் சரி, அமெரிக்கா யுத்தத்தில் சேரவேகூடாது என்று கூறியிருக்கிறார்கள். இம்மாதிரி வோட்டுகள் மிகவும் ஜாக்கிரதையாகவும், கணக்கு பிசகாமலும் எடுக்கப்படுகிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் (Roosevelt) இவைகளை மிகவும் ஜாக்கிரதையாக கவனித்துவருகிறார்.

## ஜெர்மனி சுதந்திரத்துக்காக சண்டை போடுகிறதாம்.

ஒவ்வொரு ஜெர்மன் ஸோல்ஜரும் தன் தேசத்தின் சுதந்திரத்துக்காகத்தான் போர்புரிகிறான் என்று ஜெர்மன் ரேடியோ மூலம் இந்துஸ்தானி, பார்ஸியன் இவ்விரண்டு பாஷைகளிலும் ஒலிபரப்பப்பட்டது. இது வெறும் ஸ்வயஸ் தோத்திரம், வெறும் பொய். அவர்கள் சொல்லும் 'சுதந்திரம்' எம்மாதிரி சுதந்திரம் என்று பின் வரும் சமாசாரங்களால் தெரியவரும். ஜோஹான் வொய்ல்ட் (Johann Wild) என்னும் ஜெர்மன் ஆரியன் ஒருவன் வெளிநாடுகளிலிருந்து வரும் செய்திகளைக் கேட்டு, தான் கேட்டதை பலருக்குத் தெரியப்படுத்துகிறானென்று குற்றம் சாட்டப்பட்டான். அதற்காக அவனை 1941-ம் வருஷம் மே மாதம் 18-ம் தேதி நியூரம்பர்க் (Nuremberg)கில் கொலை செய்தார்கள். இம்மாதிரி சுதந்திரத்தின் மற்றொரு உதாரணம்:—1940-ம் வருஷம் ஸெப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் கண்ணில்லாதவர்கள், வயதானவர்கள், குணமாக்க முடியாத வியாதியஸ்தர்கள் இவர்களாக 85,000 பேர்களை கொலை செய்தார்கள். தைரியஸ்தர்களான, 300 கதோலிக் பாதிரிமார்கள் இதைக் கண்டித்தார்கள். அதற்காக அவர்கள் ஜெயிலில் (Concentration Camp)ல் தள்ளப்பட்டார்கள்.

## மற்றோர் புளுகு.

பாக்தாத் (Bagdad)இல் வஸிக்கும் ஜனங்களை பிரிட்டிஷார்கள் பட்டினிக்கு உட்படுத்துகிறார்கள் என்று ஜூன் மாதம் 3-ம் தேதி பெர்லினிலிருந்து டாக்டர் கோயபெல்ஸ் (Dr. Goebbels) இந்துஸ்தானியிலும், அரபிக் பாஷையிலும்



அறிவித்தார். நாஜிகளுடைய புளுகுகளுக்குள் இது முதல்தரமானது. ஏனென்றால் இராக் (Iraq)கின் ராஜீய வியவகாரங்களில் பிரிட்டிஷாருக்கு சம்பந்தமே கிடையாது. உள்நாட்டின் நீதிக்கும், பாதுகாப்புக்கும், அமைதிக்கும் பிரிட்டிஷார் ஜவாப்தாரியல்ல. ராஷீத் அலி ஊரைவிட்டு ஓடி, நியாயமான ரீஜெண்டு ஊருக்கு திரும்பி வந்தவுடன் இராக் (Iraq) பழைய நிலைமைக்கு வந்துவிட்டது. ஆங்கிலோ-இராக் ஒப்பந்தப்படி இராக் (Iraq)கின் வழியாக பிரிட்டிஷ் சைனியங்களைக்கொண்டுபோக பிரிட்டிஷாருக்கு உரிமையுண்டு. ஆனால் ஊரை ஆண்டு, அமைதியை நிலவச்செய்வது, ரீஜெண்டின் பொறுப்பு.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் XLIX.

1941—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூன் | ...21, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 22, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| | 23, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... ,, | 6.30 |
| | 21, செவ்வாய்க்கிழமை. | திருமயம் | ... ,, | 6.00 |
| | | கோனாபட்டு | ... ,, | 6.30 |
| | 25, புதன்கிழமை ... | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... ,, | 6.30 |
| | 26, வியாழக்கிழமை. | ராஜகிரி | ... ,, | 6.00 |
| | | விராலிமலை | ... ,, | 6.30 |
| | 27, வெள்ளிக்கிழமை... | (பொன்னமராவதி) புதுப்பட்டி | ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் L.

| | | | | |
|---|---|---|---|---|
| | 28, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... ,, | 6.30 |
| | 29, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் | ... ,, | 6.30 |
| | 30, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... ,, | 6.00 |
| | | கிழக்குறிச்சி | ... ,, | 6.30 |
| ஜூலை | ... 1, செவ்வாய்க்கிழமை. | குழிபிறை | ... ,, | 6.00 |
| | | சுந்தரம் | ... ,, | 6.30 |
| | 2, புதன்கிழமை ... | கோட்டைக்காடு | ... ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... ,, | 6.30 |
| | 3, வியாழக்கிழமை ... | ராயவரம் | ... ,, | 6.00 |
| | | ராமச்சந்திரபுரம் | ... ,, | 6.30 |
| | 4, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் | ... ,, | 6.00 |
| | | எம்பல் | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—22-6-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஜூன்மீ 28உ [ந. 50.

பிரஸங்கம் L.

## அமெரிக்காவை அச்சு நாடுகள் வளைத்துக் கொள்ள முயற்சிப்பது.

[ஏப்ரல் மீ 24உ அமெரிக்கா தேசத்து சமாசாரப் பத்திரிகைகள் வெளியிடுவோரின் சங்கத்தில் ஐக்கிய நாடுகளின் கப்பற்படை காரியதரிசி கர்னல் நாக்ஸ் செய்த பிரசங்கம். இந்தப் பிரசங்கம் நாடெங்கும் ஒலிபரப்பப் பட்டது].

உங்கள் தொழிலில் ஆயுள் நபராக இருக்கும் நான் உங்கள் முன்னால் பேச வந்திருப்பதில் எனக்கு ஒரு பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்துடன் தற்காலம் எனக்கு ஒரு உத்தியோகப் பொறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்தால் நாசம் செய்யப்படும் இவ்வுலகத்தின் பாதுகாப்புப்படையின் முன்னணியை சீக்கிரமாய் அபிவிருத்தி செய்து சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டியதுதான் என் உத்தியோகப் பொறுப்பு என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டால் எனக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பு அதிகமாகிறது. யுத்த மேகங்களோ நம் நாட்டின் அடிவானத்திலும் குமுறுகின்றன.

தொழில்முறையில் என் நண்பர்களான நீங்கள் என்னிடமிருந்து ஒளிவு மறைவு இல்லாத அப்பட்டமான பிரசங்கத்தை எதிர்பார்க்க உங்களுக்கு பாத்தியம் உண்டு. கப்பற்படையின் காரியதரிசி என்ற ஹோதாவில், இதுவரை உலகத்திலேயே எவரும் பார்த்திராத ஒரு மகத்தான கப்பற்படையை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் என்னிடத்தில், நீங்கள் களங்கமற்ற உண்மையை எதிர்பார்க்கலாம. நான் ஒரு சமாசாரப் பத்திரிகைக்காரனாகவும், ஒரு உத்தியோகஸ்தனாகவுமிருப்பதால் கப்பற்படைக்கும் சமாசாரப் பத்திரிகைகளுக்கும் ஒரு

புரையற்ற நேசப்பான்மையை உண்டுபண்ணுவதிலும் அப்பேர்ப்பட்ட நேசப்பான்மையை நிலை நிறுத்துவதிலும் எனக்கு அக்கறையுண்டு. வேறு தொழில் செய்யாத சமாசாரப்பத்திரிகைக்காரன் என்பதாலும், தன் தொழிலில் கௌரவம் பாராட்டுபவன் என்பதாலும் நான் எப்பொழுதும், அதிலும் முக்கியமாய் சமாதான காலங்களில், கட்டாயமான ஸென்ஸாரைப் பூரணமாய் ஆக்ஷேபிக்கிறேன். யுத்த காலங்களில் நிச்சயமாய் வெளியிட முடியாத சிற்சில ராணுவ சமாசாரங்கள் இருக்கத்தான் இருக்கும். ராஜவிசுவாசமும் தேசபக்தியுமுடைய எந்தப் பத்திரிகைக்காரனும் எந்நிலைமையிலும் அப்பேர்ப்பட்ட சமாசாரத்தை வெளியிடமாட்டான். யுத்தகாலத்தில்கூட, இந்த ஒரு கட்டுப்பாடிருக்கட்டும், ஒருவித ஸென்ஸாரும் இருக்கக்கூடாதென்பதுதான் என் அபிப்பிராயம். நாம் விரும்பும் பலனை யுத்த இலாகாவும் கப்பற்படை இலாகாவும் சமாசாரப் பத்திரிகைகளும் தங்களுக்குள் ஒத்துழைப்பதால் அடைந்து விடலாமென்பது எனது நம்பிக்கை. இந்த மாதிரியான ஒரு அந்யோந்ய பாவத்தை ஏற்படுத்தத்தான் நான் முயன்றுவருகிறேன். நான் கப்பற்படையின் காரியதரிசியாய் வேலைபார்த்துவரும்வரையில் அதே மாதிரி முயற்சிகள் செய்துவருவேன். ஜனநாயக ஆட்சியில், தேசத்துக்கு பெரும் சங்கடம் நேரும் காலத்தில் இவ்விதமான ஒத்துமை அத்தியாவசியம். கட்டாய முறைகளைக் கையாண்டால் முதலாளிகள் தொழிலாளிகள் சம்பந்தங்களிலோ, அல்லது பொது விஷயங்களிலோ ஒற்றுமை ஏற்படுத்த முடியாது. ஒருவரை ஒருவர் நன்றாய் தெரிந்து கொள்வதாலும் பரஸ்பரம் ஒத்துழைப்பதாலும்தான் ஒத்துமை ஏற்படும்.

நாட்டின் பாதுகாப்பின் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கும் சமாசாரங்களை வெளியிடக்கூடிய அநேக விதமான சாதனங்களுக்கும் இருக்கவேண்டிய நேசப்பான்மை மிகவும் முக்கியமான விஷயம்தான். இருந்தாலும் இன்றிரவு அதைவிட முக்கியமான விஷயத்தில் உங்கள் மனதைச் செலுத்தும்படி செய்யப்போகிறேன். என்னுடன் இந்த உலகத்தின் தற்கால ஸ்திதியை கவனிக்கும்படி உங்களையும் கேட்கப்போகிறேன். நாம் உலக ஸ்திதியை கவனிப்பது பிரயோஜனப்படவேண்டுமேயானால் அது முற்றிலும் உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்கவேண்டும். அழிவையடையும்படி மனம் ஒடிந்து உட்காருவதற்கோ, அல்லது முன்பின் யோசிக்காமல் குருட்டுத்தனமான தைரியம் அடைவதற்கோ அது காரணமாய் இருக்கக்கூடாது. நாம் அபிமானம் வைக்கும் எல்லாப்பொருள்களுக்கும் பெரிய ஆபத்து வரும்போலிருந்தால் நமக்கு எப்பொழுதும் நல்லதுதான் வரும் என்று நினைத்துக்கொண்டிருப்பதற்கோ அல்லது பயந்தாங்கொள்ளித்தனமாய் நாம் துலைந்து விட்டோம் என்று நினைத்துக்கொண்டு சும்மா இருப்பதற்கோ முடியாது.

கப்பற்படையின் காரியதரிசி என்ற ஹோதாவில் உலகின் எல்லா பாகங்களில் இருந்தும் மற்றவர்களுக்கெல்லாம் கிடைக்காத அநேக அந்தரங்கமான சமாசாரங்கள் எனக்குக் கிட்டுகின்றன. ஆனால் இந்த அதிகமானதும் அந்தரங்கமானதுமான சமாசாரங்களால் உலகத்தின் தற்கால ஸ்திதி உங்களுடையவும் என்னுடையவும் பத்திரிகைகளில் சொல்லியிருப்பதைக்காட்டிலும் ஒன்றும் மாறிவிடவில்லை



இப்பொழுது நாம் காண்பதென்ன? நம்முடன் ஒரு பொழுதும் ஒத்துவராத நம் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறான கொள்கைகள், ஸ்தாபனங்கள், முறைகள் இவைகளையுடைய ராணுவ வல்லரசுகள் அமெரிக்காவை கொஞ்சம் கொஞ்சமாய் சூழ்ந்துகொண்டு வருகின்றன. இந்த வல்லரசுகள் நம்முடைய விரோதிகள் என்று அடிக்கடி பகிரங்கமாய் சொல்லிக்கொண்டிருக்கின்றன; இந்தச் சத்துருக்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்; இந்த ஒப்பந்தமும் நம்மை உத்தேசித்து நமக்கு விரோதமாய்த்தான் என்பதையும் வெளியிட்டுச்சொல்ல அவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை.

நமக்கு விரோதமாய் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் பயனாய் நம்மள் பேரில் ஏன் இன்னும் யுத்தம் துடங்கவில்லை என்றால் நம்முடன் இப்பொழுது யுத்தம் செய்வது அந்த வல்லரசுகளின் இப்போதைய காரியத்துக்குப் பொருந்தவில்லை. அச்சு நாடுகளின் அபிப்பிராயத்தில் நம்முடன் யுத்தம் ஆரம்பிப்பது சரி என்று எப்பொழுது தோன்றுகிறதோ அப்பொழுது யுத்தமும் ஆரம்பிக்கப்படும்; நாமும் கதியற்று அவர்கள் காலில் விழுந்து சரணாகதி செய்வதைவிட வேறு ஒன்றும் செய்து இதை மாற்றுவதற்கில்லை.

அநேக மாதங்களாக ஐக்கிய நாடுகளுக்கு பிரிட்டனைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் சம்பந்தம் முற்றிலும் நின்றுவிட்டது. இந்தக் கப்பல்கள் போவதற்கு ஏற்பட்ட ஒரே வழி முழுவதும் பெரிய நீர்மூழ்கிப்படை ஏவிவிடப்பட்டிருக்கிறது. அந்தப்படையில் எவ்வளவு நீர்மூழ்கிக்கப்பல்கள் இருக்கின்றனவென்று ஒருவருக்கும் தெரியவில்லை. அந்த நீர்மூழ்கிக்கப்பல்களோ, சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாய், சென்ற யுத்தத்திலிருந்ததைக் காட்டிலும் ரொம்பவும் பயனுள்ளவையாயிருக்கின்றன. இந்த நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு சமுத்திரத்தில் அமுங்கிச் செல்லும் சக்தி அபாரமாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளின் செய்கைக்குட்பட்ட பிரதேசமோ அட்லாண்டிக்கில் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் பிரித்துக் கொடுக்கும் எல்லையிலிருந்து வெகுதூரம் மேற்கேயே வந்துவிட்டது.

பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள சாதகமான தளங்களைக் கைப்பற்றியதில் அவர்களுக்கு கடல் பரப்பில் செல்லக்கூடிய ஒரு பெரிய "ரெய்டர்" படை சேர்ந்துவிட்டது. அந்த ரெய்டர்களுக்கோ அசாத்திய வேகம்; சிலவைகளுக்கு பீரங்கி சக்தி அதிகம். அதனால் அவைகள் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியில் உள்ள வியாபாரச் சாதனங்களை த்வம்சம் செய்கின்றன. கடைசியாக, முற்றுகையிடப்பட்ட இங்கிலாந்துக்குச் செல்லும் கடல் பாதைகளில் உள்ள ஆபத்துக்களை அதிகப்படுத்துவதற்காக வடக்கு நார்வேயிலும், மேற்கு பிரான்ஸிலும் உள்ள தளங்களிலிருந்து முரட்டு பாம்பர்க்கூட்டங்கள் பறந்து வந்து வட்டாரமிடுகின்றன. கொஞ்சம் கொஞ்சமாய் இழக்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை பர்த்திசெய்ய முடியாதபடி, அவ்வளவு வேகமாய் ஏறிக்கொண்டு வருகிறது. சமாதான காலத்தில் நம்முடைய கப்பல் வியாபாரத்துக்கு ரஸ்தாவாயிருந்த, மத்தியதரைக்கடல் சத்துருவால் ஜயிக்கப்பட்ட ஐரோப்பாவுக்குத் தெற்கே இருக்கிறது. இன்றோ அந்த மத்தியதரைக் கடல் செல்லத்தகாத

பாதையாகிவிட்டது. அந்த மத்தியதரைக்கடலின் பேரில் போர் புரியும் சைனியங்களுக்கு ஸப்ளைகள் எடுத்துச்செல்லும் கப்பல்களும், மேற்படி கடலின் ஆதிக்கத்துக்காக சண்டையிடும் இதாலிய, பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுமே சஞ்சரிக்கின்றன. அந்தக் கடலோரத்திலுள்ள நாடுகளுடன் நாம் செய்த கண்டிராக்ட்டுகளெல்லாம் தொலைந்து விட்டன. இரண்டு சைனியங்களும் மும்முரமாய் சண்டையிடும் பெரிய ஆபிரிக்கா கண்டத்திலோ நம்முடைய வியாபாரக் கப்பல்களுக்கு ஒரு துறைமுகமும் கிடைக்கவில்லை. தெற்கு அட்லாண்டிக்கில் பாதிக்கு மேல் பிரவேசித்திருக்கிறதும், மேற்கு உலகத்தின் தென்பாதிக்கு விரோதமாய் யுத்த நடவடிக்கைகள் நடத்துவதற்கு தகுந்த தளமாகக் கூடியதுமான அதன் மேற்குக்கரைக்கு நம்முடைய வியாபாரக் கப்பல்கள் செல்ல முடியவில்லை. நன்னம்பிக்கை முனையைச்சுற்றி நாம் கிழக்கே போக யத்தனித்தாலும் சரி, மெகல்லான் ஜலசந்தி வழியாய் மேற்கே போக யத்தனித்தாலும் சரி சத்துருக்களின் ரெயிடர்கள் நிறைந்த கடலையே காண்கிறோம். எப்படியோ சுற்றியடித்து மேற்கேயோ, கிழக்கேயோ நம்முடைய பயணத்தின் இறுதியை வந்து அடைந்தோமானால், இறக்கமற்ற ராஜ்ய ஆக்கிரமிப்பு என்ற தங்கள் கொள்கைகளில் நாம் தலையிடாமல் இருக்கும்படி நம்மை தடைசெய்ய வேண்டியதற்காகவே ஒப்பந்தம் செய்துகொண்டு இருப்பதாய் பகிரங்கமாய் பறைசாற்றுகிற அச்சு நாட்டின் ஒரு கூட்டாளியைச் சந்திக்கிறோம்.

அச்சு வல்லரசுகளால் அமெரிக்காவை வளைத்துக் கொள்வதற்காகத் தயார் செய்யப்பட்டிருக்கும் விலங்கில் சமீபத்தில் ஒரு கரண் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது தான் சமீபத்தில் வெளியிடப்பட்ட ருஷ்ய-ஜப்பானிய ஒப்பந்தம். ருஷ்யாவுக்கு ஜப்பானிடமிருந்து எதிர்ப்பு பயம் கிடையாது. தெற்குச் சீனாவை ஆயுத பலத்தால் நசுக்குவதற்காக அது செய்து வரும் பிரயத்தனங்களே ஜப்பானுக்கு கைகொள்ளாவேலையாக இருந்துவருகிறது; மேலும் ஜப்பானின் ஆசைகள் வடக்கே நாடவில்லை; தெற்கே தான் நாடுகின்றன. தான் தெற்கே தன் வேலைகளைத் தீவிரமாக கவனித்துக்கொண்டிருக்கும்பொழுது வடக்கே தனக்கு எதிர்ப்பு ஏற்படாமலிருக்கவேண்டுமென்பது ஜப்பானுக்கு அத்யாவசியமாகிவிட்டது. தன்னுடைய மஞ்சுகோ எல்லையில் ஏற்படும் சாவதானத்தைப் பற்றி ஜப்பானுக்கு எவ்வளவு உறுதி ஏற்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியாது; அந்த உறுதி எப்படி இருந்தபோதிலும், அந்த ஒப்பந்தத்தின் பயனாய் பிரிடனுக்கும் நமக்கும் யுத்த தளவாடங்கள் சம்பந்தமாய் முக்கிய ஸ்தானமாய் இருக்கும் பிரதேசங்களில் ஜப்பானின் விரோதம் வியாபிக்கலாம் என்பதற்கு லக்ஷ்யங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததால் ஜப்பானின் யுத்தக் கட்சியின் கை வலுக்குமென்பது நிச்சயம்.

ஹிட்லர் ருஷ்யாவை எதிர்த்தால் ஹிட்லருக்கு தான் உதவி செய்வதில்லை என்று ஜப்பான் செய்த வாக்குறுதியானது பிரயோஜனமற்ற வீண் வார்த்தை. ஐரோப்பாவில் தான் ருஷ்யாவுக்கு உதவி செய்ய முடியாது; இது போன்ற காரியத்துக்கு ஹிட்லருக்கு ஜப்பானின் உதவியும் தேவையில்லை. ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த பேரத்தின் முடிவு இது தான்:—(1) நம்மைச் சுற்றி



இருக்கும் விலங்கு இறுகுகிறது. (2) இந்தப் பேரத்துக்கு முன் ருஷ்யா எவ்வளவு தூரம் ஹிட்லரின் எதிர்ப்புக்கு விஷயமாகக் கூடியதாயிருந்ததோ, அதேபோல் இப்பொழுதும் ஹிட்லரால் எதிர்க்கக்கூடியதாய்த்தானிருக்கிறது. (3) தூரக் கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பானுக்கு ருஷ்யாவிடமிருந்து எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் செய்துவிட்டது. யுத்தப் பரிபாஷையில் சொன்னால், இந்த ருஷ்ய-ஜப்பானிய ஒப்பந்தமானது கிழக்கு ஆசியாவில் தன்னுடைய ஆதிக்கத்தைப் பரவச்செய்வதில் ஈடுபட்டிருக்கும் ஜப்பானுக்கு சாவதானமளித்து, யூக்ரேனைப் பிடிப்பதற்காக ருஷ்யாமேல் நாஸிகள் பாய்ந்தால் ருஷ்யாவை முன்னிருந்த நிலையிலேயே விட்டுவிட்டது.

இவ்விதமாய், நம்மைச் சுற்றி உள்ள உலகின் ஸ்திதியை நாம் கவனித்துப் பார்த்தால், லிபியா வழியாகவும் எகிப்து ஸூயஸ் வழியாகவும், யூகோஸ்லாவியா வழியாகவும் கடல் மூலமாகவும், ஆபிரிக்காவின் மேலக்கரையிலிருந்து தென் அமெரிக்காவரையிலும், பஸிபிக் மஹா சமுத்திர மூலமாய் டச்சு இந்தியத் தீவுகள் வரையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக, விசாலமான வட அட்லாண்டிக் மூலம் பிரான்ஸிலும் நார்வேயிலுமுள்ள ஜெர்மானிய தளங்களிலிருந்து க்ரீன்லண்ட் வரையிலும், நம்மள் கஷ்டம் அதிகரித்துவருகிறது. ஜெர்மன் யுத்த தந்திரம்-ஜாக்கிரதையாய் ஆலோசிக்கப்பட்டு திறமையுடன் நிறைவேற்றப்பட்ட உலக யுத்த தந்திரம்—நாளுக்கு நாள் வியக்தமாகிக்கொண்டுவருகிறது. உலகத்தில் எங்கும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதுதான் ஜெர்மானியர்களின் பேரவா என்பது தெரியாமலிருக்க முடியாது.

நாஸிப்பொறியின் பற்கள் நெருங்குகின்றன. நம்மைத் துண்டுபடுத்தி கடைசியாக தோற்கடிக்கவேண்டுமென்ற தங்கள் சூழ்ச்சியை அச்சு வல்லரசுகள் நிறைவேற்றிக்கொண்டிருக்கையில் எவ்வளவு காலம்தான் நாம் ஒன்றும் புரியாமல் மயங்கி கையைக்கட்டிக்கொண்டிருப்பது? ஜெர்மனி இதற்குமுன் தனக்கு பலியான நாடுகளுக்கு செய்துவந்ததற்கும், இப்பொழுது அவர்கள் நமக்குச் செய்வதற்கும் என்ன வித்தியாசம்? முதலில் நமக்கு விரோதமாய் எவ்வித திட்டமுமில்லை என்று பாசாங்குசெய்து மிருதுவாக உறுதிகூறுவது. போலந்து அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொண்டபோது இதேதான் போலந்துக்குச் சொன்னார்கள். பிறகு பிரான்ஸில் அவர்கள் செய்ததுபோல் நம்முடைய பலக் குறைவுகளையும், உள்நாட்டுக் கலகங்களையும், நமக்கு பிரதிகூலமான ஸ்தானங்களையும் கண்டறிந்து வெளிப்படுத்தக்கூடிய சாமர்த்தியமுள்ள பரிபூர்ணமான வேவு கோஷ்டியை அமைப்பது. பிறகு நார்வேயில் செய்ததுபோல் ஐந்தாவது படையை ஏற்படுத்துவது? இந்த ஐந்தாம்படை இன்னும் அதிகமாய் அனுப்பப்படவில்லை. ஆனாலும் அவர்கள் இருக்கிறார்கள் என்பது நமக்கு புலனாவதற்குப் போதுமான அளவு அவர்கள் வேலைசெய்து வருகிறார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது அவர்கள் யூகோஸ்லாவியாவில் செய்தமாதிரியே கொஞ்சம் கொஞ்சமாய் வளைத்துக்கொண்டு தாங்களிருந்து யுத்தம் செய்வதற்கு தங்களுக்கு அனுகூலமாயுள்ள ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொள்வது. ஏன்? நம்முடைய மனப்பான்மையிலும் நாம் அச்சு நாடுகளுக்கு பலியான நாடுகளையே அனுசரிக்கிறோம்.

உலகத்தின் மற்ற எல்லா பாகமும் தவிக்கும் காலத்தில் நாம் மட்டில் தப்பிவிடலாமென்று நினைக்கிறோம். ஒன்றுபட்ட தேசபக்தியில் நமது எண்ணங்கள் ஈடுபட்டிருக்கவேண்டியதிருக்க நாம் கேவலமான வகுப்புவாதங்களை தலைவிரித்தாடவிடுகிறோம். அச்சு வல்லரசுகள் நம்மை எதிர்க்க உத்தேசித்திருக்கிறார்களென்றோ அல்லது அவர்கள் எதிர்த்தால் அவர்கள் ஜயமடைவார்கள் என்பதையோ நாம் நம்புகிறோமில்லை. தென் அமெரிக்காவை எதிரிகளின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றவேண்டியது நமது நாட்டுப் பாதுகாப்பின் முதலாவதான வேலையாயிருந்தும் தென் அமெரிக்காவில் தற்காலமிருக்கும் உண்மை ஸ்திதியை நாம் கவனிக்கிறோமில்லை.

நம்மை எதிர்ப்பதற்கு ஒரு தகுந்த தளமாய் ஆகிவிடக்கூடியதாய் நமக்குத் தெற்கேயுள்ள அந்தப் பெரிய நாட்டிலே எதிரியின் படையெடுப்பை எதிர்ப்பதற்கு ராணுவ பலமோ கப்பற்படை பலமோ கிடையாது. நம்முடைய முட்டாள்தனமான அலக்ஷிய புத்தியால் இப்பொழுதிருக்கும் பொருளாதார நிலையில் சுயநலப் போராட்டங்கள் ஐரோப்பாவிலிருந்து கிளம்புகின்றனவேயன்றி வட அமெரிக்காவிலிருந்தல்ல என்பதை நாம் கவனிக்கிறோமில்லை. அப்பிராந்தியத்தில் அநேக தேசங்களில் நம்மைத் தலைகுப்புறக் கவிழ்த்துவிடும் நாஸிகளுக்கு அனுகூலமாயுள்ள அம்சங்களின் முக்கியத்தையும், தன்மையையும் நாம் எவ்வளவு கவனிக்கவேண்டுமோ அவ்வளவு நாம் கவனிக்கவில்லை. நம்மை அடியோடு அழித்துவிடக்கூடிய இந்த அம்சங்கள் அச்சு நாடுகளுக்கு அனுகுணமாயிருக்கும்படியான கலகக் களேபரங்களை சீக்கிரத்தில் உண்டுபண்ணிவிடும். நம்முடைய எல்லைக்குள் அச்சு வல்லரசுகள் காலடி வைத்துவிட்டார்களேயானால் அதனால் நம்முடைய சாவதானத்துக்கு எவ்வளவு தூரம் பங்கம் ஏற்படக்கூடுமென்பதையும் நம்மில் பெரும்பாலோர் கவனிக்கவில்லை. அமெரிக்க ஆக்ஷியின்கீழ் முக்கியமான போக்குவரத்து வழியான பனமாக் கால்வாயின் சாவதானம் எவ்வளவு பாதிக்கப்படுமென்று நாம் எண்ணவில்லை. ஏற்கனவே பிரான்ஸை ஜயித்த ஜெர்மானியர்கள் பிரெஞ்சுக் காலனியைச்சேர்ந்த டாகாரில் ஊன்றிக்கொண்டுவிட்டால் அமெரிக்காவுக்கு எவ்வளவு மகத்தான ஆபத்து ஏற்படுமென்பதை நம்மளில் சிலரே அறிவார்; அதிலும் சிலரே அதை ஒப்புக்கொள்வார்கள். அங்கிருந்து கொண்டு ஜயம்பெறும் ஜெர்மானியர்கள் தங்களுடைய கப்பல்களாலும், நீர்மூழ்கிகளாலும், வெகுதூரம் சுடக்கூடிய பாம்பர்களாலும், நம்மை தென் அமெரிக்காவிலிருந்து போக்குவரத்து சாதனங்களில்லாமல் பிரித்து, மன்ரோத் தீர்மானத்தை ஒரு குப்பைக் கடிதமாகச் செய்துவிடுவார்கள்.

கடைசியாக நம்மைச் சூழ்ந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் விலங்கின் கடைசிக் காணும் சேர்க்கப்பட்டு, அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் நடக்கும் யுத்தமும் இழக்கப்பட்டு, இங்கிலாந்தின் கப்பற்படையும் மூழ்கடிக்கப்பட்டோ பிடிக்கப்பட்டோ இங்கிலாந்தும் தோற்கடிக்கப்பட்டால் நமக்கு எவ்விதமான பலன் கிடைக்குமென்பதை நம்மளில் அநேகர் குருட்டுத்தனமாய் கவனிக்கிறார்களில்லை.



நம்மை வளைத்துக்கொள்வதற்காக செய்யப்படும் எந்த சூழ்ச்சிக்கு நாம் பலியாகிக்கொண்டிருக்கிறோமோ அந்த சூழ்ச்சியின் உண்மையான ஸ்வரூபம் இதுதான். ஆனால் இங்கு சொல்லப்பட்டது ஒரு அரைவாசி தான். நமக்கு ஏற்பட்டு இருக்கும் நாள்தோறும் விருத்தியாகிக்கொண்டிருக்கும், இந்தப் பெரிய ஆபத்தை—சத்துருக்களால் நாம் சூழப்படுவதை—போக்கடிப்பதற்காக நாம் எவ்விதமான காபந்துகள் செய்யவேண்டுமென்று நாம் தீர்மானிப்பதற்கு முன்பாக இதை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்:—சத்துருக்கள் நம்மை நன்றாய் சூழ்ந்துகொண்டு தனிப்படுத்திவிட்டார்களென்றும், இங்கிலாந்து விழுந்துவிட்டதென்றும் இவ்வாறெல்லாம் நடந்துவிட்டதென்று நினைத்துக்கொள்ளுங்கள்—அப்பொழுது நமக்கு இரண்டே கதி தான்—ஒன்று சரணடையவேண்டும், மற்றொன்று சண்டை செய்யவேண்டும். நாம் சரணடைய மாட்டோம், சண்டைதான் செய்வோம். அமெரிக்காவையும் அமெரிக்கர்களையும் தெரிந்துகொண்ட எவனும் இது விஷயத்தில் சந்தேகப்படமாட்டான். இதன் பயனாய் நாம் சண்டையிடாமல், பிரிடன் ஜயிக்கவேண்டிய ஏற்பாடுகள் நாம் செய்யாதவரை நாம் சண்டையிட்டுத்தான் ஆகவேண்டும். இது விஷயமாய் நாம் ஏற்கனவே வெகுதூரம் முன் வந்துவிட்டோம். இப்பொழுது இங்கிலாந்து இடும் போர் நம்முடைய போர் என்று நாம் வெளியிட்டுச் சொல்லி இருக்கிறோம். அதேபோல் இங்கிலாந்தின் சத்துருக்கள் நமது சத்துருக்கள் என்றும் உறுதி கூறிவிட்டோம். அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்பையும், சமாதான உடன்படிக்கைகளை அவர்கள் மீறுவதையும், சர்வதேசங்களுக்குள் பரஸ்பரம் ஏற்பட்டிருக்கும் நன்னம்பிக்கையை முறட்டுத்தனமாயும் கொலைகாரத்தனமாகவும் அவர்கள் அலக்ஷியம் செய்வதையும் நாம் கண்டித்திருக்கிறோம். மனிதர்களின் சுயேச்சைக்கும், நியாயத்துக்கும் நன்னம்பிக்கைக்கும் ஜயம் ஏற்படும்வரை நாம் யுத்தத்தில் ஸ்திரமாய் நிற்போம் என்று நாம் உறுதியாய் கூறியிருக்கிறோம். நாம் அவ்வாறு கூறியிருப்பதை அநேக ஜனங்கள் ஆமோதித்துமிருக்கிறார்கள்.

நம்முடைய உற்பத்தி சாதனங்களை அச்சுடன் சண்டையிடுபவர்களுக்கு உபயோகப்படும்படி செய்திருக்கிறோம். நம்முடைய சொந்தப் பாதுகாப்புக்குப் போதுமானதாயில்லாதிருந்தாலும்கூட நம் ராணுவ சாதனங்களில் பெரும்பாலானதை நாம் அவர்களுக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறோம். ஒத்திக் கடன் மசோதாவைச் சட்டமாய்ச் செய்திருக்கிறோம். நம்முடைய காங்கிரஸின் ஏகோபித்த அபிப்பிராயத்தால் அந்த மசோதாவுக்கு பலம் ஏற்படுத்தவேண்டி 7 கோடி டாலர்கள் செலவழித்திருக்கிறோம். நம்முடைய கப்பல் கட்டும் இடங்களையும் தளங்களையும் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களையும் வியாபாரக் கப்பல்களையும் சீர் செய்வதற்காக திறந்து விட்டுவிட்டோம். க்ரீன்லாந்தின் பாதுகாப்பை ஏத்துக்கொண்டிருக்கிறோம். அந்தந்த இடங்களில் யுத்தம் செய்யும் சைனியங்களுக்குப் பொருள்கள் கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பை பிரிடனுக்குக் குறைக்க வேண்டி யுத்தம் முடிந்த பிராந்தியங்களில் அமெரிக்கக் கொடிக் கப்பல்கள் போகக்கூடாதென்றிருந்த கட்டுப்பாடுகளை விலக்கி விட்டோம்.

நாம் ரொம்பவும் செய்திருக்கிறோம், அதுவும் ஏராளமான பொது ஜனங்களின் அபிப்பிராயத்தின்பேரிலும் பக்க பலத்தின் பேரிலும் தான் செய்யப்பட்டு இருக்கிறது. சமீபத்தில் பொது ஜன அபிப்பிராயத்தைச் சோதித்துப் பார்த்ததில் அமெரிக்கர்களில் நூற்றுக்கு எழுபது வரை யுத்தம் வருவதாயிருந்தாலும்கூட, பிரிட்டனுக்கு உதவி புரிய வேண்டுமென்ற அபிப்பிராயமுள்ளவர்களாகவே இருக்கிறார்களென்று தெரிய வருகிறது. இவ்வளவு தூரம் சென்ற பிறகு நாம் பின் வாங்கமுடியாது. நாம் முன் வைத்த காலை பின் வைப்பதற்கில்லை. நாம் இந்த உலகப்போராட்டத்தில் ஈடுபட்டு விட்டோம்.

ஆக்கிரமிக்கும் நாடுகளை ஜயிக்கவிடக்கூடாதென்று நாம் பகிரங்கப்படுத்தி இருக்கிறோம். இதைத் தடைசெய்ய வேண்டுமென்பதில் நாம் மீற முடியாதபடி நம்மை ஈடுபடுத்திக்கொண்டுவிட்டோம். உலகத்தை தங்கள் மிருக பலத்தால் ஆளக்கூடியவர்களை முறியடிப்பதற்காக நம்மிடமுள்ள சகல சாதனங்களையும் அர்ப்பணம் செய்துவிட்டோம். பிரிடிஷ் சாம்ராஜ்யம், கடைசியாக ஜயிக்கப்பட்ட நாடுகளான தாழ்ந்த நாடுகள், ஸ்காண்டிநேவியா, பிரான்ஸ், பால்கன் நாடுகள், இவைகளின் கதியைப்போலவே நம்முடைய கதியும் ஆபத்திலிருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு தூரம் சென்ற பிறகு நாம் மேலும் செல்லவேண்டியதுதான். நம்மால் அனுப்பப்படும் யுத்த தளவாடங்களையும் உணவுப்பொருள்களையும் இங்கிலாந்து போய் சேரும்படி ஹிட்லர் விடமுடியாது. அவ்வாறு அவன் விட்டுவிட்டால் அவன் தோற்கடிக்கப்படுவான். நம்முடைய பொருள்களை அட்லான்டிக்கில் மூழ்கடிக்கும்படி நாம் விடமுடியாது, அவைகள் மூழ்கடிக்கப்பட்டால் நமக்குத் தோல்விதான். பிரிட்டனுக்கு ஒத்தாசை செய்வதாய் நாம் கொடுத்த வாக்குறுதியை நாம் நிலைநிறுத்த வேண்டும். நாம் அந்த வேலையை முடித்தே தீரவேண்டும். இதெல்லாம் நம்முடைய சாவதானத்துக்காகவும் பிற்காலத்தில் நம்முடைய காபந்துக்காகவும் அவசியமானவை. இது தான் நம்முடைய போர். சர்வாதிகாரி நாடுகளின் ஜயத்தின் கேடு விளைவிக்கும் தன்மையை அமெரிக்கர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; இப்பொழுது நாம் அடைந்திருக்கும் ஸ்திதி வரையில் நம்முடைய முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியையும் அபார மெஜாரிட்டியார் ஆமோதித்தும் இருக்கிறார்கள்.

கடைசியாய் கொடுமை ஒழிந்து நன்மையே ஜயிக்கும் என்ற நம்முடைய நம்பிக்கையையும், மனிதர்களின் சுயேச்சையில் நமக்கிருக்கும் அபிமானத்தையும், மனிதர்களுக்குள் தாரதம்மியமில்லாமல் சரி சமமான நியாயத்துக்காக சென்ற ஒன்றரை நூற்றாண்டுகளாக நாம் பாடுபட்டுவந்திருக்கிறோம் என்பதையும் நாம் பறை சாற்றிவிட்டு, நமக்கு ரொம்ப முக்கியமாயுள்ள ஜயத்துக்காக பிறரை தங்கள் ஸர்வ சொத்தையும் தத்தம் செய்யும்படி கேழ்க்கும் அக்கிரமமான, மிகவும் எளப்பமான ஸ்திதியை நாம் அடையக்கூடாது. நம்முடைய ஆண்மைத்தனத்தையும், சுயமரியாதையையும் காப்பாற்றிக்கொள்ள நாமும் யுத்த பாரத்தில் ஒரு பாகத்தையேனும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

# அனுபந்தம்.

## சமீபகால பரபரப்பு.

## ருஷ்யர்களுடைய ஆக்ஷேபனை.

சென்ற சில வாரங்களாக நாம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் யுத்தம் ஏற்படலாமா என்ற யுக்தா யுக்தத்தைப் பற்றி எழுதியும் உபந்யாசித்தும் இருக்கிறோம். ஜெர்மனி பிரிட்டனுடன் போர் புரிவது முடியாத காரியமானால் ஜெர்மனி துரிதமாக தெற்கு ருஷ்யா மூலம் காகஸஸ் (Caucasus) இரான் (Iran) இவைகளைத் தாக்குவது ஹிட்லருடைய மாறிய யோசனையாயிருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது நடந்து விட்டது. ஜெர்மனியுடன் சிநேக பாவத்திலிருந்த ருஷ்யா திடீரென யுத்தத்துக்கு இழுக்கப்பட்டு யுத்தத்தின் கொடுமையை அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

இது சம்பந்தமாக ஒரு சமாசாரம் நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது ஹிட்லர் தான் ருஷ்யாவை சீக்கிரம் நிச்சயமாக ஜயித்து விடலாமென்று நினைப்பதே. அவ்விதம் நினையாவிட்டால் அவர் ருஷ்யா போன்ற ஒரு பெரும் பலம் பொருந்திய தேசத்துடன் இச்சமயத்தில் போர் ஆரம்பித்திருக்க மாட்டார். மற்றவை எல்லாம் நாம் யோசிக்க முடியாதவை.

ஸ்டாலின் என்பவர் யு. எஸ். எஸ். ஆர். சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றி மிகவும் சாமர்த்தியமாகவும் நீண்டகாலமாகவும் கண்டித்து பேசியிருக்கிறார். அதிலிருந்து யுத்தத்தின் உத்தேசங்கள், திசைகள், காலநிர்ணயங்கள் இதுபோன்றவைகள், மதிப்பிடுவதைத் தவிர்த்து, யுத்தத்தின் முக்கியமான செயல்களைப்பற்றி சொல்வது கஷ்டமாகும். ஆனால் யுத்த சமாசாரங்கள் பூராவாகத் தெரியாதவர்களுக்கு மேல் சொன்ன விஷயத்தின் சில அம்சங்களை எடுத்துக்காட்டினால் அவை எவ்வளவு ஸங்கோசம், அநிச்சயமானதாகவும் இருந்தாலும், அவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆகையால் நாம் அவைகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்து சுருக்கக் கூறுவோம். அதாவது (1) அநேகமாய் நடக்கக்கூடியதாய் தோன்றுவது. (2) நடக்கலாம் அல்லது நடக்காமலிருக்கலாம் என்பது.

### வெகுவாய் சம்பவிக்கக்கூடியவை.

1. ஹிட்லர் கிழக்கிலும் இந்தியா மீதும் படையெடுக்க எண்ணம் கொண்டிருக்கிறார். இதுபோல் நினைப்பதற்குக் காரணம் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை ஒழிக்கவேண்டுமென்றும் அவருடைய முக்கியமான விரோதியான பிரிட்டனுக்கு சாமான்கள் போகாவண்ணம் தடைசெய்யவேண்டுமென்றும் கனவு காண்பதே ஆகும்.

2. ருஷ்யா ஒரு பெரிய தேசம். அதன் யூக்ரேனிலிருந்து விளாடிவோஸ்டக் (Ukrainc to Vladivostok) வரையிலும் அல்லது ஆர்ச்சங்கலிலிருந்து பாகு (Archangel to Baku) வரைக்கும் உள்ள பிரதேசங்களில்

அளவு கடந்த சைனியங்களும், பொருள்களும் இருக்கின்றன. அவனுடைய குகை வாயிலிருந்து ஒரு காடியை ஒருவன் காதில் பிடித்துக் கொண்டால். காடி இழுக்கும் இடங்களுக்கெல்லாம் அவன் அதை போகவிடுதல் என்பது முடியாத காரியம்.

3. சென்ற காலத்தில் இங்கிலாந்துக்கும் ருஷ்யாவுக்கும் ராஜ்ஜிய பரிபாலன மனோரத சிருஷ்டி ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருந்ததில்லை. ஆனால் ஹிட்லரும் ஸ்டாலினும் யுத்தத்துக்கு சற்று முன்பு சிக்குண்டபொழுது இருந்த நிலைமையைவிட தற்சமயம் நிலைமை சிலாக்கியமானதாகத் தெரிகிறது.

4. இப்பொழுது நடக்கிற ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் பாசாங்கானதல்ல. அது நிஜநிஜமானதாகும்.

5. அதாவது தாத்காலியமாக ஆகிலும் ஜெர்மானியர்கள் யந்திரப் படையையும், ஆகாய விமானப்படையையும், அதிகமாக சிதரடிக்க நேரிடும்.

6. மிஸ்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் பிரிடிஷாரும் அமெரிக்கரும் ஹிட்லருக்கு விரோதியாக இருக்கும் யார் ஒருவருக்கும் உதவி செய்வார்கள்.

## "சாத்தியமானவைகள்".

1. ருஷ்யர்களுக்கு சேனைகளும் ஆகாயப்படையும் மிகவும் விரிவாக இருக்கின்றன. சென்ற வருஷங்களுக்கு முன் இருந்த கவனிப்பைவிட இப்பொழுது அவர்கள் கப்பற்படையை அதிகமாகக் கவனித்துவருகிறார்கள். முக்கியமாக நீர்மூழ்கிக் கப்பல்கள் விஷயத்தில் கருத்தை அதிகமாகச் செலுத்துகிறார்கள்.

2. ருஷ்யர்களுடைய விவசாய ஏற்பாடும் தொழில் விருத்தி ஏற்பாடும் அவர்களை சிரேஷ்டமாகச் செய்திருக்கும். நிச்சயமாக அவர்கள் சேனைகளுக்கு திருப்திகரமாக உணவு வசதிகளும் சம்பளமும் கொடுக்கப்பட்டுவருகின்றன. மேலும் ஒரு சாதாரண ருஷ்ய யுத்த வீரனுக்கு யுத்தத்துக்கு வேண்டியதையும் தகுந்த தளகர்த்தனையும் கொடுத்தால் நன்றாய் போர்புரிவான். அவர்களுடைய யுத்த மேலதிகாரிகள் பின்லண்டு யுத்தத்தின் நெருக்கடியிலிருந்து சென்ற இரண்டு வருஷமாக நவீன யுத்த யுக்திகளைக் கற்றுக்கொண்டிருப்பார்கள்.

3. படைகளைச் சிற்பிப்பதிலும், புது தினுசான ஆகாய விமானங்கள் செய்வதிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆகாய விமானங்களின் எண்ணிக்கையையும், புது தினுசு விமானங்களுக்கும் பழய தினுசு விமானங்களுக்கும் உள்ள எண்ணிக்கை பாகவிதத்தையும் யூகிக்க ஒருவருக்கும் முடியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதைவிட பயனளிக்கும் விதமாய்ச் சொல்லக்கூடியதாய் யாது அதிகமாக இருக்கிறது? ஜப்பான், துருக்கி இவைகளின் நிலைமையும் சந்தேகிக்கூடியதாகவும் பிரச்னை செய்யவேண்டியதாகவும் இருக்கிறது. அதுபோலவே ஜெர்மனியின் சாதாரண ஜனங்களின் எதிர் தாக்கல் இருக்கிறது. ஆனால் ஒரு வினா கேட்கவேண்டி இருக்கிறது. இந்தியாவின் ஒரு பகுதி ஜனங்கள்



எவ்வளவு காலம் நம் யுத்தப் பிரயத்தனங்களுக்கு இடையூறு செய்து சதாகாலமும் பொய்யாணையிடும் இரக்கமற்ற நம் விரோதிக்கும் வசீகரிக்கப்பட்டு, அதிகாரப் பித்துப்பிடித்த, கொரேத்துக்கு ரூபமான நம் எதிரியுடன் பலமற்ற துப்பாக்கிகளுடனும், இயந்திர தொட்டிகளுடனும் யுத்த களத்துக்கு குடும்பங்களை நாசம் செய்யும் சாட்டையுடன் பின்பற்றிச் செல்லும் சகாக்களுக்கும் உதவியாயிருப்பார்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## (19—6—41-லிருந்து 25—6—41-வரை).

எதிர் பாரா்தது—ஒரு வேளை, எதிர் பார்க்கப்பட்டது தானோ—நடந்து விட்டது. ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை வந்து விட்டது. மாஸ்கோவில் ருஷ்ய கவர்ன்மெண்டாரிடம் ஜெர்மன் ஸ்தானிகர் போர் என்று கிரமப்படி சொல்லுவதற்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே, ஜூன் மாதம் 22-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 4-மணிக்கு, பால்டிக் முதல் கருங்கடல் வரை 1,500 மைல் நெட்டிற்கு ருஷ்யா பேரில் படையெடுப்பு முறையில் தாக்கினார்கள்.

இது அத்தியாச்சரியமாகக் காணப்பட்டது. ஆனால் ஒரு க்ஷணம் யோசித்தால் அதுதான் சம்பாவிதம் என்று மனதில்படும். 22 மாதங்களுக்கு முன் இரு தேசத்தாரும் ஒப்பந்தம் செய்துகொண்டதுதான் அத்தியாச்சரியமானது. எண்ணெயும் ஜலமும் கலந்தாலும் கலக்கலாம்; நாஸி ஜெர்மனியும் அபேதவாத ருஷ்யாவும் ஒத்து நடப்பதென்பது அசம்பாவிதமானது. ஒப்பந்தமோ ஏற்பட்டது; இதன் பின் என்ன நடக்கப்போகிறதென்று எல்லோரும் காத்திருந்தார்கள்.

இது சமயோசிதத்திற்கேற்ற ஒப்பந்தம். ஹிட்லர் ஜனநாயக ஆட்சியுள்ள நாடுகளைத் தாக்குவதில் குறியாயிருந்தான்; அச்சமயம் கிழ் எல்லைப்புறத்தில் வம்பு கூடாது என்பது அவன் கருத்து. ருஷ்யாவிற்கோ, சண்டையில் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதில் கவனம். ஆகையால், ஏதோ ஒரு வித உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதில் உபய திறப்பாரும் கையெழுத்துச் செய்யும் சமயம் உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டிருந்திருப்பார்கள்.

இந்த உடன்படிக்கை ஏற்பட்டதும் அது உடைந்ததும் அர்த்த புஷ்டியுடையவை. ஹிட்லரின் மோசக்கருத்து ஸ்பஷ்டமாக வெளியாகிவிட்டது. உலகத்தையே ஆளவேணுமென்பது அவன் நோக்கம்; அந்த எண்ணம் நிறைவேறுவதில் ருஷ்யா குறுக்கே நின்றால், அதை ஒழிக்கவேணும். தங்களுக்கு இடைஞ்சல் இல்லாதவரை ருஷ்யர்கள் ஒதுங்கியிருக்கத் தயார். ஆனால் பான்த்லை த

யிழந்து சமாதானமாகவிருப்பதில் அவர்களுக்கு இஷ்டமில்லை. அரசியல் காரியங்களில் ருஷ்யர்கள் காரிய வாதிகள். உடன்படிக்கையெல்லாம் ஒரு அளவிற்கு நல்லதுதான்; ஆனால் இழுத்த இழுவைக்கெல்லாம் வரவேண்டுமென்றால் அதற்கு ருஷ்யர்கள் தயாரில்லை. இந்தத் தத்துவத்தை M. லிட்விநாவ் அடிக்கடி வற்புறுத்துவதுண்டு.

ஆகையால், ஹிட்லர் உடன்படிக்கையை ஆதாரமாகக்கொண்டு அசாத்தியமான கோரிக்கைகள் போடவே, ருஷ்யா ஏமாறவில்லை. வந்துவிட்டது கோபம் ஹிட்லருக்கு; விரட்டியடிக்க வேணும் என்று தீர்மானித்தார். பிரெஞ்சுக்காரர் சொல்லுவதுண்டு "இந்தப் பிராணியைப் எதிர்த்தால் அது தன்னை காப்பாற்றிக் கொள்ள பார்க்கிறது; இது துஷ்ட பிராணி." ஹிட்லர் நடவடிக்கை இப்படியிருக்கிறது.

சர்வாதிகாரிகளுக்கு ஹாஸ்ய உணர்ச்சி கிடையாதென்பார்கள். அரசியல் காரியங்களில் சமீபத்தில் தலைகீழ்ப் பாடமாக நடந்திருக்கும் காரியங்களைக் கவனிக்க இது சரியென்றே நினைக்கவேணும். முன்காலத்தில் ஹிட்லர் அபேதவாத முறையைக் கையாடும் ருஷ்யரை முழுமனதுடன் வெறுத்தான். 1939-ம் வரு ஆகஸ்டு, செப்டம்பர் மாத உடன்படிக்கைகள் காலத்தில் வேறு ராகத்தில் பாடத் தொடங்கினான்; இப்போது அபேதவாத முறையென்ற ஆபத்திலின்றும், இவ்வுலகை தப்புவிப்பதே தன் நோக்கம் என்பதை பறையடிக்கிறான். ஆனால் ஒருவரும் அதை நம்பவில்லை. ஹிட்லர் சாப்பாட்டில் வெகு கணக்கானவன் என்று சொல்லுகிறார்கள். தான் ஒரு சமயம் சொன்னவார்த்தைகளையே மற்றொரு சமயம் கடித்து விழுங்குகிறவனாயிருப்பதால் இதில் ஆச்சரியமில்லை.

இச்சமயம் ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்பட்டது ரொம்ப நல்லது. இரண்டு பக்கங்களில் சண்டை போடுவதால் ஜெர்மானியருக்கு சக்தியும், கவனமும் கலைபடும். சீக்கிரம் வெற்றியடையலாமென்று ஜெர்மானியார் எண்ணுகிறார்களாம். இவ்வெண்ணம் சரியானதாகவிருக்கலாம்; சரியில்லாமலிருக்கலாம். எந்நிலைமையிலும் ருஷ்யாவுடன் சண்டைமுடிந்து உதைபட்டு சேர்குலைந்து திரும்பும்போது பிரிடிஷாருடன் சண்டைபோட செயலிராது. மேலும், பிரிடிஷார் ராணுவ சீர்திருத்தம் பரிபூர்ணமாகச் செய்ய இன்னும் கொஞ்சம் சாவகாசம் கிடைக்கிறது. அதற்குள் அமெரிக்காவிடமிருந்து பிரவாகமாக சாமான்கள் வர ஆரம்பித்துவிடும். தரை, கடல், ஆகாயம் இவைகளில் பிரிடிஷார் பலம் ஏராளமாக அதிகரித்துவிடும்.

ருஷ்யரும் சாதாரணமானவர்களில்லை. பெரும் சைனியமுண்டு. அளவற்ற இயற்கை சாதனங்களுண்டு. வெகு பலமான விமான இலாகா காளைடையில் தயாரித்துவிட்டார்கள். போக்குவரத்து சாதனங்கள் முன்னே மட்டாயிருந்தன. இப்பால் அதிகமாகிவிட்டன. ருஷ்யப்படையானது அபாரமானபடை. ஆயுத பலமும், ஜனமும், எதிர்ப்பில் வலுவும்கொண்டது. ருஷ்ய ஜனப்பெருக்கும்



இயற்கை சாதனங்களுமோ எதிரியை நடுக்கமெடுக்கும்படி செய்யப் போதுமானவை. வெடிகுண்டுபோடும் உயர்தரமான விமானங்கள் ஏராளமாகவிருக்கின்றனவாம். இந்தப்போரில் ஜெர்மன சப்பை ஒழிந்துபோகும் என்று பலர் சொல்லுவது ஒத்துக்கொள்ளக்கூடியதாகவிருக்கிறது.

ருஷ்யாவும் தனிமையில் சண்டையிடப்போவதில்லை. மணிமத எத்தனத்தில் முடிந்தவரை ருஷ்யாவுக்குச் சகாயம் செய்யப்போவதாக பிரிடிஷ் பிரதம மந்திரி சொன்னார். இதை ஒத்து ஜெர்மன் பேரிலும் ஜெர்மன் ஆக்கிரமண பிரான்ஸ் பேரிலும் துறைமுகங்கள் பேரிலும் பிரிடிஷ் விமானப்படை வெடிகுண்டு போட்டு தகர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பால் ஜெர்மனியின் இடுப்பு ஒடிந்து போகும்.

இதுமட்டுமல்ல. பிரிடிஷ் ராணுவ கோஷ்டிகளும் பொருளாதார கோஷ்டிகளும் ருஷ்யாவுக்குச் சென்று ஒத்து வேலைசெய்ய ஏற்பாடாகிறது. Mr. ருஸ்வெல்டும் தாராளமாக உதவி செய்வதாக வாக்களித்துவிட்டார். இதுவரை துருக்கி ருஷ்யாவிற்கு விரோதமாக ஒன்றும் செய்யவில்லை; பழைய உடன்படிக்கையை துருக்கி மீறும் என்று நினைக்க இடமில்லை.

பெர்லின் நகரத்தார் மனோபாவத்தை ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபர் விளக்கியிருக்கிறார். அவர்கள் பிரமித்துப்போயிருக்கிறார்களாம். "தூக்கி வைக்கப் பட்டிருக்கிறோமா, கீழே தள்ளப்பட்டிருக்கிறோமா, என்று புரியவில்லை. ஆட்டம் என்ன, பந்து யார் கையில் இருக்கிறதென்று புரியவில்லை" என்று எண்ணுகிறார்களாம்.

சண்டை விவரங்கள் சொற்பமாகத்தான் கிடைக்கின்றன. ஆனால் ஜெர்மானியருக்கு ருஷ்யர் பின் வாங்கவில்லை என்று நன்றாய்த் தெரிகிறது. ஜெர்மானியர் கீழ் எல்லைப்புறம் நெடுகிலும் தாக்குகிறார்கள். ஆனால் அவர்கள் பால்டிக் நாடுகள் வழியே லட்வியா, லிதுவேனியாவுக்குப்போய், ருஷ்யர்களை பால்டிக் துறைமுகங்களிற்குப்போகவொட்டாமல் தடுக்க வேண்டிய எண்ணம் உள்ளவர்களாயிருக்கிறார்கள். ருமேனியத் துருப்புகள் ஜெர்மன் துருப்புகளுடன் சேர்ந்து வட புக்கொவினா, பெஸரேபியாவிலிருந்து படையெடுத்து வலுவாய் எதிர்க்கப்பட்டார்கள். ஜெர்மானியர் ப்ரெஸ்ட்-லிடோவிஸ்க்கை பிடித்துக்கொண்டார்கள். மற்ற இடங்களில் துறத்தப்பட்டார்கள். ருஷ்யர்கள் தென் போலந்தில் எதிர்த்துச் செல்லுகிறார்கள். ஜெம்மிலை (Przemysl) பிடித்துக் கொண்டார்கள். எதிரியை திணர அடிக்கிறார்கள். ஜெர்மன் விமானங்கள் ஏராளமாக விழுத்தாட்டப்பட்டன. ஏராளமான ஜெர்மன் "டாங்குகள்" உடைக்கப்பட்டன. ப்ருத் நதிக்கு கிழ்கரை ருஷ்யர் வசம் இருக்கிறது. பின்லண்டில் ஜெர்மன் விமான நிலயங்கள் பேரில் குண்டுகள் போட்டுத் தாக்குகிறார்கள்.

## பிரிடிஷ் விமான தாக்கல்கள்.

ஜூன் 22-ல், ஜெர்மனியை இரவும் பகலும் இடைவிடாது தாக்குவோம் என்று Mr. சர்ச்சில் சொன்னார். இதை அனுசரித்து பிரிடிஷ் விமானிகள்

ஜெர்மனியில் ராணுவ நிலயங்களை த்வம்சம் செய்து வந்திருக்கிறார்கள். ஒரு வியாக்யானி சொன்ன பிரகாரம் பிரிடன் சண்டையானது ஜெர்மன் சண்டையாக சீக்கிரம் மாறிவிடும்.

## ஸிரியாவில் சண்டை.

ஸிரியாவில் சண்டை நடந்து வருகிறது. டமாஸ்கஸ் பிடித்தாய்விட்டது. பால்மைரா பிடித்தாய்விட்டது. மெர்ஜ் ஆயூமை நமது துருப்புகள் பிடித்துக் கொண்டார்கள். விஷி துருப்புகள் பறந்தோடுகின்றன. பேருட்டிற்கு நெருங்கி விட்டோம். விமான தாக்சல் பலமாகச் செய்கிறோம். பிரான்ஸிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகர் ஹெர் ஆட்டோ ஆபெட்ஸ், விஷி கவர்ன்மெண்டார் வேண்டுகோள் படி, ஸிரியாவில் விஷி துருப்புகள் நிலைமை கேவலமாய்விட்டதென்று தெரிவிக்க பெர்லின் போயிருக்கிறார். இதை விட என்னவேணும், ஸிரியாவில் எதிரி நிலைமையைக் காட்ட.

## அபிஸீனியா.

ஜிம்மா பிடிபட்டது. ஒரு இதாலிய தளகர்த்தர் உள்பட 8,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். இந்தியத் துருப்புகள் நாட்டு துருப்புகளுடன் எதிரியை சூழ்ந்து வருகின்றன. அபிஸீனியா பூராவும் அநேகமாக வசமாக, ஹெயிலி ஸெலாஸி கையில் சேர்ப்பிக்கப்பட்டு வருகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 16—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—படையெடுப்பு—டோவர் (Dover), ஜலசந்தி இங்கிலீஷ் கால்வாய் (English Channel), பிரெஞ்சுக் கடற்கரை (French Coast). | ... | ...... |
| | ரயில்வே ஸ்டேஷன், பெரிய சாமான் கிட்டங்கி.—புலாயின் (Boulogne). | 6 விமானங்கள். | ...... |
| | விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | 2 விமானிகள் பத்திரம். | 11 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான, நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 16—6—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி. | | |
| | மாலையில்.—விரோதிக் கப்பல்கள் இங்கிலீஷ் (English) காவாய். | 10 விமானங்கள். | 13 விமானங்கள். |
| | இரவில்.—யுத்த தொழிற் சாலைகள் கொலோன் (Cologne) டஸ்ஸல் டார்ப் (Dussel Dorf), டூயிஸ்பர்ச் (Duisberg). | ... | பலத்த சேதம். பல இடங்களில் தீப் பிடித்தது. |
| | கப்பல் துறைகள்.—புலாயின் (Boulogne). | ... | ...... |
| | துறைமுகம், கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk.) | நஷ்டமில்லை. | ...... |
| | ஸிரியா (Syria). | | |
| | விமானங்கள் இறங்குமிடங்கள், விமானக் கட்டடங்கள். ரயாக் (Rayak). | ... | பெரிய வெடிச்சத்தங்கள் கிளம்பின. |
| | விரோதி மோட்டார் வண்டிகள்.—குனீத்திரா (Kuneitirah). | 9 விமானங்கள். | 1 விமானம், பல சேதமாயின. |
| | விமானச் சண்டைகள்.—ஸிரியா (Syria). | ... | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | ஒத்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ... | ...... |
| | விமானச் சண்டை—ஸிரினைகா (Cyrenaica) பல இடங்களில். | ... | 2 விமானங்கள்; பல சேதமாயின. |
| | துறைமுகப் பிரதேசம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமானங்கள் இறங்குமிடங்கள்—டெர்ணு (Derna), எல் கஸாலா (El Gazala). | 6 விமானங்கள். | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—ஸிரினைகா (Cyrenaica). | ...... | தீப்பிடித்தன. |
| 17—6—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—படையெடுப்பு—இங்கிலீஷ் கால்வாய், (English Channel), வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | விரோதிக் கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | தொழிற்சாலை.—பெதுன் (Bethune). | ...... | தீப்பிடித்தது. |
| | விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | 10 விமானங்கள். | 16 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**17—6—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| இரவில்.—தொழிற்சாலைகள்.—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf). | ...... | வெடிகளும், தீயும் கிளம்பின. |
| கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam), ஆஸ்டெண்ட் (Ostend), புலாயின் (Boulogne), செர்பார்க் (Cherbourg). | ...... | சேதமாயின. |
| விரோதிக் கப்பல்கள்.—வடகடல் (North Sea). | 1 விமானம். | ...... |

ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| ஒந்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி மோட்டார்கள்.—எல்கஸாலா (El Gazala)ப் பிரதேசம் | ...... | ...... |
| விரோதி மோட்டார் வண்டிகள், கவச மணிந்த மோட்டார்படை.—ஸிடி ஓமர் (Sidi Omar)ப் பிரதேசம். | ...... ...... | பலத்த சேதம். 20 வண்டிகள் நாசமாயின. |

**18—6—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்

| | | |
|---|---|---|
| பகலில்.—கப்பல் துறைகள், சிறிய துறைமுகங்கள், எண்ணெய்த் தொட்டிகள் லாஹார் (Le Havre). | ...... | ...... |
| விரோதிக் கப்பல் (நாசகாரிகள் புடைசூழ).—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | ...... |
| மாலையில்.—படையெடுப்பு—டோவர் (Dover) ஜலசந்தி, வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| இரவில்.—துறைமுகங்கள், கடற்படை தளங்கள்—வட மேற்கு ஜெர்மனி (Germany), ப்ரமன் (Bremen) உள்பட. | ...... | சேதமாயின. |
| கடற்படை தளங்கள், மூன்று ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | ...... | தகர்க்கப்பட்டன. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**18—6—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| விஷி (Vichy) துருப்புகள்.—டமாஸ்கஸ் (Damascus). | ...... | ...... |
| கப்பல்கள்.—பீரட் (Beirut) துறைமுகம். | ...... | ...... |
| விமானச் சண்டை.—ஸுவீடா (Soucida). | ...... | 2 விமானங்கள். |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| பாது காத்தல்.—மேற்குப் பாலைவனம்... | ...... | ...... |
| விமானமிறங்குமிடங்கள்.—டெர்ணு (Derna), எல்கஸாலா (El Gazala). | ...... | 1 விமானம். |
| கப்பல்கள், துறைமுக கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | பல இடங்களில் தீப் பிடித்தது. |

**19—6—41.** (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| இரவில்.—தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf). | ...... | 2 இடங்கள். |

ஸிரியா (Syria).

| | | |
|---|---|---|
| ஒந்தாசை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு. | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி மோட்டார் வண்டிகள்.—மேற்குப் பாலைவனம். | ...... | ...... |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | ...... |

**20—6—41.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதிக் கப்பல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | நஷ்டமில்லை. | மூழ்கடிக்கப் பட்டது. |
| காவல் காக்கும் ஒரு சிறிய யுத்தக் கப்பல்.—டென்ஹெல்டர் (Denhelder). | ...... | ...... |
| இரவில்.—கடற்படை தளங்கள், கப்பற் கட்டுமிடங்கள்.—கீல் (Kiel). | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne). | 1 விமானம். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—6—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிரியா (Syria).** | | |
| | கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ் (Damascus), பீரட் (Beirut) ரஸ்தா. | ...... | பல வண்டிகள் சேதமாயின. |
| | மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ் (Damascus)ப் பிரதேசம். | ...... | ...... |
| | கப்பல்கள்.—பீரட் (Beirut) துறைமுகம். | ...... | ஒரு கடல் மூழ்கி கப்பல் தாக்கப்பட்டது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயம், தரையிலிருந்தும் விமானங்கள்.—மிஸுராடா (Misurata). | ...... | 3 விமானங்கள் நாசம். பல விமானங்கள் சேதமாயின. |
| | ஒந்தாரை.—பிரிடிஷ் தரைப்படைகளுக்கு | நஷ்டமில்லை. | ...... |
| **21—6—41.** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுப்பு—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்.—ஸெயிண்ட் ஓமர் (St-Omer), புலாயின் (Boulogne). | 4 விமானங்கள். | 28 விமானங்கள். |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne). | 1 விமானம். | ...... |
| | படையெடுப்பு.—வட பிரான்ஸி(France)லிருக்கும் விமான நிலயங்கள். | ...... | பலத்த சேதம். |
| **22—6—41:** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுப்புகள்—வட பிரான்ஸி (France)ன் கடற்கரைகள், இங்கிலீஷ் (English) கால்வாய். | ...... | ...... |
| | சாமான் கிட்டங்கி.—ஹேஸிப்ருக் (Hazebrouck). | ...... | 27 விமானங்கள். இன்னும் பல விமானங்கள் சேதம். |
| | விமானத் தளங்கள்.—வட பிரான்ஸ் (France). | 1 விமானம். | |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—6—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிரியா (Syria).** | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—பீரட் (Beirut). | ...... | ஒரு நாசகாரி மேல் குண்டு வீழ்ந்தது. ஒரு கப்பல் தீக்கிரையாகியது. பலத்த நஷ்டம். |
| | விஷி (Vichy) மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ்(Damascus), பீரட்(Beirut) ரஸ்தா. | ...... | பல வண்டிகள் நாசமாயின. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | நாசகாரிகள் புடைசூழ விரோதி வியாபாரக் கப்பல்கள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania)வின் கடற்கரைக்குச் சமீபத்தில். | ...... | 1 பெரிய கப்பல் சேதமாயிற்று. இன்னும் பல சிறிய கப்பல்கள் சேதமாயின. |
| | **கிழக்கு ஜெர்மனி (Germany).** | | |
| | ருஷ்ய விமானங்களால் பல இடங்கள்.—கிழக்கு பிரஷ்ஷியா (Prussia). | ...... | ...... |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **17—6—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரை. | ...... | ...... |
| | **ஆபிரிக்கா (Africa).** | | |
| | பல விமான யுத்தங்கள்.—ஸிரினேகா (Cyrenaica). | 2 விமானங்கள். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 18—6—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). ஒரு இடம்.—கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... 1 விமானம். | சேதம் சொற்பம். சிலருக்குத்தான் காயம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | ஒருவன் கொலைப் பட்டான். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 1 விமானம்; 2 விமானங்கள் சேதமாயின. | சேதமேயில்லே. |
| 19—6—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில் அங்குமிங்குமாக பல இடங்கள்.— இங்கிலாந்து (England). | 1 விமானம். | மிகச்சொற்பச் சேதம். |
| 20—6—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—அங்குமிங்குமாக ஓர் சில இடங்கள்.—இங்கிலாந்து (England). ஓர் இடம்.—ஸ்காத்லாந்து (Scotland). | ...... | ஒருவருக்கும் காயம் இல்லே. சேதம் சொற்பம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | சொத்துக்கு சிறிது சேதம். |
| 21—6—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | ஒரு பட்டணம்.—தென் இங்கிலாந்து (England). | ...... } 4 விமானங்கள். | சிலருக்குக் காயம். |
| | சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து, ஸ்காத்லாந்து (Scotland). | | சொற்பச் சேதம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 22—6—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London)-(விமான அபாய எச்சரிக்கை மாத்திரம்தான்). | ...... | ...... |
| | பிரதேசம்.—இங்கிலாந்தி (England)ல் தென்கிழக்குக் கடற்கரை. | ...... | ...... |
| | ஒரு கடற்கரைப் பட்டணம்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ...... | வீடுகளுக்குச் சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ... 7 விமானங்கள். | 1 விமானம்; அந்த விமானியும் பத்திரமாயிருக்கிறார். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | விமான நிலயங்கள்.—மேற்கு ருஷ்யா (Russia). | 76 விமானங்கள். | ...... |
| 23—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England), கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சொற்பச் சேதம். சிலருக்குக் காயம். |
| | பிரிடிஷ் துணைகாவல் கப்பல்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சேதமேயில்லே. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria) ... | ...... | சிலர் கொல்லப் பட்டனர். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | சைனியங்கள், விமானங்கள், ஜனங்கள் வசிக்குமிடங்கள், ராணுவ முக்கியமான இடங்கள்.—ருஷ்யா (Russia). | 52 விமானங்கள். | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## மஞ்சள் நிற அபாயம்.

சமீபத்தில் கொஞ்ச காலமாக ஜப்பான் சம்பந்தமான செய்திகள் கொஞ்சம் விசித்திரமாகவிருக்கின்றன. பணம் மாற்றல் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் அவர்களுடன் செய்துகொண்டோம். போரென்றில்லாத வரை வியாபார வசதிக்காக அது அவசியம். வேறு தகவல்களையே காணோமேயென்று தான் சொல்லுகிறேன். Mr. ரூஸ்வெல்ட் கூட, சீனர்களை பெருமைப்படுத்திப் பேசியபோதிலும் ஜப்பானைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை Mr. மத்ஸுவோகாவும் சாதாரணமாக விடும் கயிறுகளைத் தவிர அந்தப் பிரசங்கத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதன் பேரில், அச்சுதேச அரசியல் வாதிகள் ஜப்பான் அயல் நாட்டு மந்திரியை பேட்டி கண்டார்கள் .........அவ்வளவு தான், வேறொன்றையும் காணோம்...... அதன் பேரில் அமெரிக்கா போரில் புகுந்தால் ஜெர்மனிக்கு ஜப்பான் சகாயம் செய்யுமென்று பெர்லின் ரேடியோ வெளியிட்டது. ......................ஆனால் பிரிடனுக்கும் இந்தியாவிற்கும் விடுத்த 'செய்திகளில் அதைப்பற்றி ஒரு பேச்சுமில்லை! கப்பல் சீட்டு முறையை தழுவ மாட்டோம் என்றார்கள் ஜப்பானியர்! ஆனால் அது பேச்சளவிற்குத்தான்! நடப்பில் அனுமதிச்சீட்டு வாங்கி வருகிறார்கள்! போதாகதற்கு, எண்ணெய் ஸப்ளை செய்யவேணுமாய் பிரிடனை கேட்கிறார்கள்!

எல்லாம் விசித்திரந்தான். இதற்குக் காரணம், இதாலியைப் போல் ஜப்பானும் போன வருஷம் பிரிடன் தலை தூக்காதென்று நினைத்து ஜெர்மனிக்கு கும்பிடு போட்டார்கள். தங்கள் நினைப்பு தவறு என்று அவர்களுக்கு புலப்பட்டுவிட்டது. அதனால் ஜயமடைந்து ஜெர்மனிக்கு 'லோடா' வாகவிருக்கத் தயாராகவிருந்தபோதிலும் தாங்கள் வெற்றிக்காக போர் புரியத்தயாராகவில்லை.

## ஜெர்மானியரும் வட ஆபிரிக்காவும்.

சமீபத்தில் இங்கிலீஷ் பத்திரிகை ஒன்றுக்கு வந்த செய்தியை இதில் பிரசுரம் செய்தோம். விவரங்களோடு சொல்லப்பட்ட போதிலும் வட ஆபிரிக்காவில் ஜெர்மானியர் ஆக்கிரமிப்பதைப்பற்றி செய்திகளை முழுவதும் நம்பவேண்டாமென்று எச்சரிக்கையான செய்தி. நாம் பிரசுரித்தது நடப்பை அனுசரித்ததென்று ஸர்க்காரரே ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

சென்ற ஸெப்டம்பர் மாதத்தில், டாகார் வரை ஜெர்மனியின் எண்ணம் எட்டியிருந்ததென்று டாகார் சம்பவத்திலிருந்து தெரியவந்தது. டிகால் வந்தபோது நேர்ந்த எதிர்ப்பானது ஜெர்மானியர் கிளப்பிவிட்டதென்பது தெரியும். அது முதற்கொண்டு விஷி கவர்ன்மெண்டார் செயலற்றுப் போகப்போக ஜெர்மன் கைவரிசை வழக்கம்போல் இறங்கி வருகிறது.



ஓரான ஆக்கிரமணத்திற்குக் காரணம் நமக்குத் தெரியும். அவர்களுக்கு வேண்டியது :—

(a) பிரிடனையும் அமெரிக்காவையும் தாக்க, அட்லாண்டிக் யுத்தத்தில் உபயோகிக்க நிலயங்கள் தயாரிக்கவேணும்;

(b) விஷி வர்க்கத்தாரை நெருக்கவும், தளகர்த்தர் வேகாண்டின் செல்வாக்கைக் குறைக்கவும்;

(c) மத்தியரேகை ஆபிரிக்காவில் தளகர்த்தர் டிகாலுக்கு நேரும் வெற்றியை நிறுத்தவேண்டியது;

(d) பிரெஞ்சு ஜனங்களுக்கு என்று பேர் பண்ணி, உண்மையில் ஜெர்மானியருக்காக கைப்பற்றப்பட்ட சாமான்கள் எப்போதும் போல் வந்து கொண்டிருக்கும்படி செய்யவேண்டியது.

அச்சு கமிஷன்கள் துவக்கியபோது ஆரம்பித்தது இந்த வித்தை. இந்தக் கமிஷன்கள் ஆரம்பித்த சமயம் பெரும்பாலும் இதாலிய கமிஷன்கள். ஆனால் இப்போது, பைஸர்டா, ஆல்ஜியர்ஸ், ஓரான், கொனிட்ரா, கஸாப்ளாங்கா இவைகளில் இருக்கின்றன. ராபாட், அகாடிர், ஸாபி, மாராகெஷ்ஷில் ஜெர்மன் துருப்புகள் இருக்கின்றன.

சமாசாரம் தெரியும்வரை நாம் கவலைப்பட வேண்டியதில்லை; ஆயினும் இந்த நடவடிக்கைகளைப் பார்க்க, நமது பழைய நண்பர்களிடம் நமக்கிருந்த மதிப்பும் அன்பும் அதிகரிக்க இடமில்லை!

## இரண்டாம் ரகம்தான்.

நான் சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் சொன்னபடி, பிரிடனைப் படையெடுக்க வேணுமென்ற ஆசை ஹிட்லருக்கு நிறைவேறாத வரை, அவன் செய்யக்கூடியதாக 4 காரியங்கள் உண்டு. ஸ்பெயின் வழியாகபோய் ஆல்ஜியர்ஸ், மொராக்கோ வழி டாகார் போக பார்க்கலாம். இந்த மார்க்கம் போவதில் கொஞ்சம் தடையேற்படலாம். பாக்கி 3 காரியங்களாவன :—

1. கிரீட், ஸைப்ரஸ் வழியாகவோ, ஒருவேளை துருக்கி வழியாகவோ, சென்று ஸிரியாவை கைப்பற்றுவது.

2. அதே சமயம் லிபியா மூலம் எகிப்தை தாக்குவது.

3. காகேஸியமலையிலும், இரானிலும், இராக்கிலுமுள்ள எண்ணெய்க் குளங்களைப் பிடிக்க ஒரு முண்டு முண்டுவது. ருஷ்யா பேரில் படையெடுத்து தென் ருஷ்யா, யூக்ரேனின் பக்கமுள்ள செழிப்பான நிலங்களை அபகரிப்பது.

இவைகளெல்லாமே, அல்லது ஏதேனும் சில நடைபெறக்கூடுமென்று கொஞ்ச காலமாக எதிர் பார்க்கப்பட்டது. இராக்கும், ஸிரியாவும் ஹிட்லர் வசமாகவில்லை. ஸ்பெயின் பேரிலும் படையெடுப்பில்லை. துருக்கியுடன் (ருஷ்யாவுடனும் இருக்குமோ?)உடன் படிக்கைகள்; இவை போரில் கிடைத்த வெற்றிகளல்ல; எகிப்தில் தளகர்த்தர் வேவல் பேரில் வெற்றியடைய முடியாதபடி சூடு—சீதோஷ்ண ஸ்திதியிலும் சரி, அவர் எதிர்ப்பின் மும்மரமும் சரி.

மேலும், ஹிட்லரும் ஆங்கிலேயரும் ஒரு விஷயத்தில் மட்டில் ஒரே மனதாய் இருக்கிறார்கள். அதாவது, ஹிட்லர் பிரிடன் பேரில் படையெடுக்க முயல வேண்டுமென்பதில்!

சுருங்கச் சொல்லில், இதுதான் விஷயம். ஜயமும் சமாதானமும் கைக்கெட்டுமென்ற வருஷமும் கடந்து, மறு வருஷத்தில் பாதியாகி விட்டது; ஹிட்லருக்கு மிச்சம், ஜனங்களுக்கு ஜாஸ்தி வேலை, சுருங்கின வயிறுகள், ஜன நெருக்கடியான ஆஸ்பத்திரிகள், அமெரிக்காவின் எதிர்ப்பு வேலை, காலதாமதத்தால் கெடும்பு. இவைகள்தான் ஹிட்லரின் ஜனங்களுக்கு எதிர் காலத்தில் சேரும் சம்பவங்கள் என்ற பயம் அதிகரிக்கிறது.

குறிப்பு.—மேலே கண்ட முடிவிற்கு யோசனையின் பேரில் வந்த பிறகு, ஜெர்மானியர் ருஷ்யா பேரில் படையெடுத்து விட்டார்கள் என்ற செய்தி வருகிறது! ஹிட்லரால் பத்திராதிபர்களுக்கு அலக்கழிவு ஜாஸ்திதான். ஆயினும் நாம் எதிர்பார்த்த விஷயங்களில் ஒன்றேனும் நடந்து விட்டது! நமது குருவிகளில் ஒன்று ஜயித்துவிட்டது!

## குருட்டு அடி.

ஆகாயத்திலிருந்து விழும் வெடி குண்டுகளால் தாக்கப்படும் பட்டணங்களின் சங்கியை ஜாஸ்தியாகி வருகிறது. நார்விக்கிலிருந்து பாஸ்ரா வரைக்கும், டப்ளினிலிருந்து அலெக்ஸாண்டிரியா வரைக்கும் இந்த விபத்து அநுபவமுண்டு; இந்த விபத்தான அநுபவம் எச்சமயம் ஸைப்ரஸிலிருந்து கராச்சி வரையும் ஹைபாயிலிருந்து மதராஸ் வரையும் வருமோ? இப்போது அலெக்ஸாண்டிரியா பேரில் குண்டுகள் போடுகிறார்கள். இதில் பிரயோஜனமில்லை, சில ஜனங்களும் ஹோட்டல்களும் விடுதிகளும் தாக்கப்படுவதை விர ஒரு பலனும் கிடையாது. பிரிடிஷ் கப்பற்படையின் ஒரு பகுதி அங்கேயிருக்கிறதென்பது உண்மை; அதை இன்னமும் எதிர்ப்பார்கள்; அலெக்ஸாண்டிரியா விமானங்களைச் சுடும் பீரங்கிகளாலும் கப்பற் பீரங்கிகளாலும், பகலிலும் இரவிலும் வேலை செய்யும் விமானங்களாலும் பாதுகாக்கப்பட்ட போதிலும், வேறு துறைமுகங்கள் நமக்கு இருக்கின்றன.

ஹைபா (Haifa) நல்ல துறைமுகம்; அங்கே எண்ணெய் உண்டு. ரிபேர் செய்ய வசதியுமுண்டு. நேற்று டமாஸ்கஸை பிடித்தோம்; பேரூட், ட்ரிபோலி, லடாகியா போன்ற துறைமுகங்கள் நமது வசம் வந்துவிடும்; நமது ஸிரியா படைகளைப் பாதுகாக்க மால்டா தீவு தலைதூக்கி நிற்கிறது.

## ஸிரியா.

டமாஸ்கஸ் என்று சொன்னவுடன் பொது மனிதர்களுக்கு டமாஸ்கஸ் எந்த தேசத்திற்கு ராஜதானி என்று தெரியுமோவென்று நான் சந்தேகிக்கிறேன். நாம் ஒவ்வொரு ஊருக்கு அலையும் போது நாம் அந்தந்த இடத்தை நமது விரோதி பிடிக்காவிட்டால் நமக்கு அந்த இடத்தில் யாதொரு அபிலாஷையுமில்லை என்பதை தெளிவாக விளக்கி வருகிறோம். இதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால்



கீழே வரும் புள்ளிக் கணக்கைப் பாருங்கள். அந்த தேசத்தின் ஜனத்தொகை 32½ லக்ஷமானது 8 பிரிவுகளாகவும் ஒவ்வொரு பிரிவுக்கும் சரித்திர மத சம்பந்தமான கொள்கைகள் வெவ்வேறாகவும் முன் நோக்கங்கள் வெவ்வேறாகவும் அமைந்திருக்கிறது. அவைகளாவன:—

(1) ஸன்னி முகமதியர்கள்—இவர்கள் தான் அதிகம்—20 லக்ஷம்.

(2) ட்ரூஸ்கள்—இவர்கள் கி. பி. 1050-ம் வருஷம் ஒரு காலீப்பால் ஸ்தாபிக்கப்பட்ட முகமதிய மதத்தைச்சேர்ந்தவர்கள். ஜபல்ட்ரூஸ் என்னும் காட்டுப்பிரதேசத்தில் வசிப்பவர்கள்—1,30,000.

(3) லெபனனுக்கு வடக்கே மலைப்பிரதேசத்தில் இருக்கும் மாரோனைட் என்று சொல்லப்படும் கிறிஸ்துவர்கள் 10,00,000.

(4) லடாகியா துறைமுக சமீபத்தில் வசிக்கும் மற்றொரு முகமது பிரிவினர் 2¾ லக்ஷம்.

(5) துருக்கியிலிருந்து சென்ற சண்டைக்குப்பிறகு தப்பியோடி வந்த ஆர்மீனியர்கள் 1½ லக்ஷம்.

(6) அராபி ஜாதியரைச் சேர்ந்த கிரேக்க கிறிஸ்துவர்கள் 2,80,000.

(7) ஷீயா முகமதியர்கள் 1,65,000.

(8) இராக் தேசத்திலிருந்து வரும் சால்தியர்கள் அசிரியர்கள் உள்பட மற்ற கிறிஸ்துவர்கள் 2 லக்ஷம்.

இந்த தேசத்தின் அரசாங்கமும் ஒரு வகைப்பட்டதல்ல. 2 சுதந்திர நாடுகள் அதாவது லெபனன்—பாலஸ்தீனுக்கு வடக்கு பாதி பாகம். பேரூட் இதன் ராஜதானி. எண்ணெய் துறைமுகமான ட்ரிப்போலியும் விமான துறையான ரயாக்கும் இதில் தான் இருக்கிறது.

(2) ஸிரியா—இது டமாஸ்கஸிலிருந்து ஆளப்படுகிறது. ஆனால் இதற்குள்ளிருக்கும் ஜபல்ட்ரூஸ், லடாகிய ஜசியா, என்ற 3 நாடுகளுக்கும் அதற்குள் சுதந்திரம் இல்லை.

விரோதியால் ஒருவரும் இந்த தேசங்களை பிடிக்கும் வரை இந்த ஜனங்களை, தங்களுடைய சுயேச்சையைப்பற்றியும் சுதந்திரத்தைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கும்படி தாராளமாக விட்டுவிடலாம்.

பிரெஞ்சு அரசாங்கத்தார் தங்கள் மாண்டேட்டில் குளறி வைத்திருப்பதைப் பாருங்கள்.

கி. பி. 1919-ல் ஸிரியாவும் மெஸபடோமியாவைப் போல் ஒரு ஏ. கிளாஸ் மாண்டேட் ஆயிற்று. 1921-ல் நீர்வளம் பொருந்திய ஸிலீஷியாவை துருக்கிக்கு கொடுக்கவேண்டியதாயிற்று. 1926-ல் ஒரு பெரிய கலகத்தை ஏற்படுத்தி டமாஸ்கஸின் பேரில் ஒரு குண்டு வீசி அதை நாசம் செய்துவிட்டார்கள். 1939-ல் அலெக்ஸாண்டிரெட்டா என்னும் முக்கியமான துறைமுகத்தையும் துருக்கிக்குக் கொடுத்துவிட்டார்கள். இப்பொழுது சர்வதேச சங்கத்தினின்றும் விலகிக்கொண்டும் விட்டார்கள். இதனால் இந்த தேசத்தில் அநுவளவும் பாத்தியமில்லை. என்ன அநுதாபமான கதை.

துருக்கியுடன் ஒப்பந்தம்.—ஒப்பந்தங்கள் சிநேகிதர்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒரு கட்டுப்பாடு என்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்திருக்கும் எந்த தேசம் ஹிட்லரைத் தன் சிநேகிதனாகக்கருதுகிறதென்று நினைக்கிறீர்கள். நிச்சயமாக துருக்கியுமில்லை; ருஷ்யாவுமில்லை; அல்லது நாஜி தேசத்தின் பலத்தைக்கண்டு நடுநடுங்கிக்கொண்டிருக்கும் இவைகளைப்போல மற்ற தேசங்களுமில்லை. ஒப்பந்தங்கள் நெருக்கடி சமயத்தில் கொஞ்சம் மூச்சு விடுவதற்கு நேரம் கிடைப்பதற்காகவும், நெருக்கடி தீர்ந்தவுடன் கிழித்தெறிவதற்காகவுமே. சிநேகபாவ ஒப்பந்தமாயிருந்தாலும் சரி, வியாபார ஒப்பந்தமாயிருந்தாலும் சரி, நமக்கு இதில் ஒரு கெடுதலுமில்லை. ஆனாலும் இம்மாதிரி ஏமாறுகிறவர்கள் தைரியமாக நின்று நேசதேசத்துடன் சேர்ந்தால் நல்லது என்று நமக்குத் தோன்றுகிறது.

குறிப்பு.—இது எழுதி ஒரு மணி நேரத்திற்குள் ருஷ்யாமீது ஜெர்மனி படையெடுத்த விவரம் கிடைத்துவிட்டது. நிச்சயமாக 10 அநேகமாக 15 வருஷங்களுக்கு ஸார்ஜிதமாக செய்யப்பட்ட ஹிட்லர் ஸ்டாலின் ஒப்பந்தம் 1939 ஜூலை முதல் 22 மாதங்கள்தான் ஓடியிருக்கிறது. துருக்கியும் அநேகமாக குழப்பட்டுப்போயும், சண்டைக்குத் தயாரில்லாமலும் இருந்ததால் வேறு என்ன செய்திருக்கக்கூடும் என்பதைச் சொல்லுவது சிரமந்தான். இப்பொழுதோ ருஷ்யாவையும், துருக்கி அச்சுடன் சேரப்போகிறதென்று (இது ஒரு நாளும் இல்லை), முடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஸ்டாலின் பேசாமல் கோதுமை, எண்ணெய் வகையரா சாமான்களை ஜெர்மனியிடம் கொடுத்துவிடவேண்டியது. இல்லாவிட்டால், ஜெர்மனி துருக்கி மூலம் பாகு எண்ணெய் கிணறுகளுக்குப் போய்விடும்.

இதாலி தேசத்துப் பத்திரிகைகள்தான் முதன் முதலில் கிளப்பிவிட்டு ஜெர்மனியிடத்திலிருந்து வசவும் வாங்கிக்கொண்டது. ஆனால் இவைகள் ஜெர்மனியால்தான் உண்டாக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஸ்டாலினும் தன்னை சர்வாதிகாரியாகச் செய்த ஜனங்களுடைய மனதிற்கு எவ்வளவு மாறாக நடக்கமுடியும் என்பதுதான் முக்கிய பிரச்னை.

இந்நிலைமையில் மாஸ்கோ, அங்காரா, விஷி, மாட்டிரிட் முதலிய ஊர்களில் பயமுறுத்தல், லஞ்சம் கொடுத்தல் முதலிய பழைய ஆபாசக் கதைகள். ஆனால், எல்லா இடத்திலும் நடந்துவரும் "பேச்சுகளில்" பெரிய சண்டை ஆரம்பிப்பதற்குமுன் நமக்கு முக்கியமாக தெரியவேண்டியதென்னவென்றால், மிஸ்டர் சர்ச்சிலிடமிருந்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுக்குக் கொண்டுபோன கடிதத்தில் கண்டிருக்கும் விஷயங்கள்தான். இதுமட்டும் நமக்கு நன்றாகத் தெரியும். ஹிட்லரையும் நாஜி கொள்கைகளைப்பற்றியும் மிஸ்டர் ரூஸ்வெல்டின் அபிப்பிராயம் கடிதம் பூரா விவரங்கள் அடங்கியது, மிகவும் ரகஸியமானது. செங்கடலிலாவது, பிரெஞ்சு வட ஆபிரிக்காவிலாவது, அமெரிக்காவை எதிர்க்காமல் இஷ்டப்படி கொள்ளையடிக்கமுடியாது என்பதுதான்.



## புதுக்கோட்டையிலுள்ளவர்கள் மறுபடியும் முன்வருகிறார்கள்.

நமது மன்னர் அவர்கள் ஸமக்ஷத்தில் குதூகலத்துடன், இந்த வாரத்தில் டவுன் ஹாலில் அதிர்ஷ்டச் சீட்டு குலுக்கப்பட்ட வைபவத்துடன் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் அதிர்ஷ்டச் சீட்டு முடிவுடைந்ததற்கு, நம்முடைய சகோதரர்களான புதுக்கோட்டை யுத்தநிதி கமிட்டியார்களுக்கு நம்முடைய மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவிக்கிறோம். அவர்கள் எவ்வகையிலும் வாஸ்தவமாக வேலை செய்யக்கூடிய ஒரு கமிட்டியார்கள். நமது ஸமஸ்தானத்துக்கு அடுத்துள்ள நாடுகளில் அநேக பெரிய அதிர்ஷ்டச் சீட்டுகள் நடைபெற்று வரும்பொழுது, மூன்று மாதங்களுக்கு அதிகமான அவகாசத்தில் 1,12,000 ரூபாய்கள் பெறுமானமுள்ள ஒரு ரூபாய் டிக்கெட்டுகள் விற்பனையாகியிருக்கிறதென்பது கமிட்டியாரின் ஏற்பாட்டின் திறமையையும், பொறுமையையும் புதுக்கோட்டையிலுள்ளவர்கள், விசேஷமாக நகரத்தார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தூரம் தங்கள் பொறுப்பை அறிந்திருக்கிறார்களென்பதையும் விளக்கிக்காட்டுகிறது. இப்பொழுது இந்தக் கமிட்டியார்கள் கொடுத்த 60,000 ரூபாய்களும் சேர்த்து ஸமஸ்தானத்திலிருந்து யுத்தத்துக்கு ஏறக்குறைய 3 லக்ஷம் ரூபாய்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் இது முடிவடையப்போவதில்லை. ஏனென்றால், நமது மன்னர் தேச மக்களுக்கு இந்த நல்ல வேலையைப் பின்னும் நடத்தும்படிக்கும், நாம் இத்துடன் நிறுத்திவிடக்கூடாதென்றும், நாம் நிறுத்தவும் மாட்டோமென்றும் விடுத்த விசேஷக் கட்டளையை எல்லோரும் அங்கீகாரம் செய்து இருக்கிறார்கள்.

நமது யுத்த அறிக்கை நிலயத்திலுள்ளவர்களும், நமது யுத்தக் கமிட்டியார்கள் அவர்கள் சேமிக்கப்போகும் 1-லக்ஷ ரூபாயில் 100-ல் 10-பங்கு உள்ள தொகையை நமக்குக் கொடுத்துவிடுவதாகத் தீர்மானம் செய்தபொழுது சந்தோஷமடைந்தோம். இப்பொழுது அவர்கள் 10,000 ரூபாய்களை நமக்கு நன்கொடை அளித்துவிட்டார்கள் என்பதில் அதிக சந்தோஷமடைகிறோம். நம்முடைய சிநேகிதர்கள் நமக்கு அளித்த நன்கொடையை நாமெல்லோரும் விரும்பும் ஒரு அருந்தொழிலில் சரியான முறையில் உபயோகப்படும்படி செய்ய நம்மால் இயன்ற அளவு பிரயத்தனம் செய்வோம். உலகத்திலுள்ள மனித வர்க்கத்துக்கே அபாயம் விளைவிக்கக்கூடிய இந்த பயங்கரமான அபாயத்தை உடன் காலத்திலேயே ஒழித்துவிடுவதுதான் நம்முடைய பிரயத்தனம்.

## விமான எதிர்ப்பும் போஜன சாலைகளின் நிலையும்.

## மின்னல் எதிர்ப்பினால் ஏற்பட்ட சொந்த அனுபவங்கள்.

இந்தப் பத்திரிகைக்கு ஏற்கனவே சமாசாரங்கள் அனுப்பியிருக்கும் ஒரு நெருப்பு அணைக்கும் முகாமிலுள்ள மோட்டியானவன், லண்டனிலிருந்து எழுதிய கடிதத்தின் சில முக்கியமான பாகங்கள்.

லண்டனில் பின்னும் (2) மின்னல் எதிர்ப்புகள் ஏற்பட்டன. ஒன்று பாரிஸ் ஹோட்டலிலிருந்த ஒரு பாண்டுதலைவர், பொது மானேஜர், பொல்லன், பாண்டிலுள்ள அநேகர், இவர்களுக்கும் மற்ற அநேக இடங்களிலும் உயிர்ச்சேதங்களை விளைவித்ததுமல்லாமல், ஸ்டான்ஹோப் நந்தவனத்தையும் பாதித்தது. 5 வெடி குண்டுகள் போடப்பட்டன. எங்கள் வீட்டுக்குப் பின்பக்கத்திலுள்ள கிளார்வில் தோட்டத்தில் முதல் குண்டு விழுந்தது. இரண்டாவது ஸ்டான்ஹோப் தோட்டங்களிலுள்ள 39, 40-ம் நம்பர் வீடுகளின் பேரில் விழுந்து பின் சுவருகள் முழுவதும் இடிந்துபோயின. மற்றும் இரண்டு கிளாஸ்டர் ரஸ்தாவின் இரு ஓரங்களிலும், ஐந்தாவது ஆஷ்பர்ன் ஸ்தலத்திலும் விழுந்தன. 43-ம் நம்பர் வீடு அதிருஷ்டவசமாய் தப்பியது. குண்டுகள் கட்டடத்திற்கு ரொம்பவும் சமீபத்தில் விழுந்தபோதிலும், சாப்பாட்டு அறை, ஓய்வு அறை, ஸ்நான அறை, கக்கூஸ் இவைகளைத் தவிர மற்ற ஜன்னல்கள் மட்டும் நொறுங்கிப்போயின. ஸ்நான அறையின் கூரையிலுள்ள ஓடுகள் சிதறிப்போயின. மேல்கட்டிடம் மிகவும் சேதமாகிவிட்டதால் அங்குள்ள மின்சார விளக்குகளை நாங்கள் உபயோகிக்கமுடியவில்லை. பெரிய வெடிப்பு ஒன்று ஏற்பட்டுவிட்டது. நான் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் என் தலையில் கட்டிடம் விழுந்து விடுமோ என்று பயப்படுகிறேன்.

பத்து நாட்களாக, ஆடை தரிக்கிறதும், அவிழ்க்கிறதுமாக யிருந்து என்னுடைய அறையில் ஜன்னல்களில் ஒரு சதுர அங்குலமுள்ள கண்ணாடிகூட இல்லாமல் படுத்துத்தூங்கினேன். குளிர் மிகவும் அதிகமாகயிருந்தது. வடகிழக்கேயிருந்து புயல் காற்று மணிக்கு 90-மைல் வேகத்துடன் அடித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயம் மழையோ அல்லது பனிமாரியோ பெய்யாதிருந்தது பெரிய அனுகூலம். என் தாயாரிடம் வெடிகுண்டுகள் எவ்வளவு சமீபத்திலிருக்கின்றன என்று நான் சொல்லவில்லை. நேற்றயதினம் அந்த இடத்தின்வழியாகச் சென்றபொழுது, அவள் அவைகளை உற்று கவனிக்காத வண்ணம் அவளுடன் சம்பாஷணை செய்து வந்தேன்.

வெடிகுண்டுகள் விழுந்தபொழுது நான் அவ்விடம் இல்லாமலிருந்தேனே யென்று சந்தோஷப்படுகிறேன். இரவு எட்டு மணியிருக்கும். அவர்கள் ஓய்வு அறையில் இருந்தார்கள். கதவுகளும் ஜன்னல் கதவுகளும் திடீரென்று திறந்தன. புகைப்போக்கிவழியாக வந்த கரும்புகை அறைமுழுவதும் பரவியது. மிஸ்ஸ் ஆபீஸ்



அறையிலிருந்தார்கள். அவர்கள் அறையின் ஜன்னல்கள் உடைந்தபொழுது அவர்கள் மேஜைகளுக்குக்கீழ் பதுங்கிக்கொண்டார்கள்.

நான் நெருப்பு அணைக்கும் ஜாகாவிலிருந்தேன். என்னுடைய சிநேகிதியும் நானும் ஒரு நாட்டியத்திற்குச்செல்ல அனுமதி பெற்றிருந்தோம். சண்டை ஆரம்பித்ததற்குப்பிறகு, வேலைபார்க்கும் பொழுது விசேஷமான ராஜாவுக்கு நாங்கள் கேட்டது இப்பொழுதுதான். நாட்டியம் சமீபத்தில் நடப்பதால் நாங்கள் உடுப்புகளைப் போட்டுக்கொண்டே செல்லக்கூடுமென்றும், ஏதாவது விபத்து நேரிட்டால் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்துவிடக்கூடுமென்ற காரணத்தினால் தான் எங்களுக்கு உத்தரவு அளிக்கப்பட்டது. அதிருஷ்டவசமாக, அதுதான் லண்டன் பேரில் முதலில் ஏற்பட்ட மின்னல் எதிர்ப்பு. நாங்கள் எங்கள் கூட்டாளிகளைத்தனியாய் விட்டுவிட்டு அதிவேகமாய் ஓடிவந்து காலை 3 மணிவரையில் கடுமையாக வேலை செய்தோம்.

43-வது நம்பர் வீட்டின் நிலைமை சொல்லமுடியாதது. எங்குபார்த்தாலும் கண்ணாடித்தூள்களும் சுண்ணாம்புப்பூச்சுகளும் இடிந்து கிடக்கின்றன. வெகு நாட்கள் வரையில் ஒவ்வொரு இடத்திலும் கண்ணாடித்தூள்கள் இருப்பதைக் கண்டேன்.

மேலே சொன்ன விமான எதிர்ப்புக்குப்பிறகு, லண்டன் பேரில் மற்றொரு மின்னல் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் இதற்கு சமீபத்தில் இல்லை. ஆகிலும் எங்களுடைய எல்லா கருவிகளும் ஆள்களும் தீப்பிடித்த இடங்களில் அநேககாலம் வேலைசெய்ய வேண்டியதாயிற்று. ஆகிலும் நாங்கள் அநேக நாட்டியங்களில் ஈடுபட்டோம். நாட்டியம் ஆரம்பித்தவுடன் காலத்திலேயே நிறுத்திவிடவேண்டிய அபாயத்துக்குள்பட்டுத்தான் அவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இம்மாதிரி சம்பவம் ஒருபொழுதும் நடைபெறவில்லை. ஆகையால் நாங்கள் அதிருஷ்டசாலிகள் என்றே நினைக்கிறோம். இவ்விடத்தில் இரண்டு நாட்டியங்கள் நடந்தன. நேற்றிரவு நான் வேலைசெய்த ஒரு முகாமில் நடந்த ஒரு நல்ல ஆட்டத்திற்குப் போனேன். நான் அங்கே வசித்தபொழுது ஒரு குடிசையில் வசித்து வந்தேன். இப்பொழுது அவர்கள் அழகான மாளிகைகளில் வசிக்கிறார்கள். அங்கே ரொம்பவும் நல்ல கூட்டம் சேர்ந்திருந்தது. இங்கிருந்து நாங்களிருவரும், சட்டப்படி கண்டிப்பாய் தடைபட்டிருந்தாலும் நெருப்பு அணைக்கும் வண்டியிலேயேதான் அங்கு சென்றோம். எங்குபார்த்தாலும் வெளிச்ச மறைப்பு ஏற்பட்டிருந்ததால் எங்களுக்கு ஒன்றும் பார்க்கமுடியவில்லை. பிரயாணம் ரொம்பவும் ஆச்சரியமானது. அதன் ஜனங்களுடன் நாங்களும் சென்றதால் நெருக்கடியுமிருந்தது. நான் எஞ்சினை ஓட்டும்படி நேர்ந்தது. யுத்தம் முடிவடைவதற்குள் இந்த வேலையும் பார்க்கும்படி நேரிடும். தீப்பிடித்த இடத்திற்கல்ல. வண்டிக்கு எண்ணெய் ஊற்றுவதற்கும் அல்லது இதர விஷயங்களுக்குமட்டும் தான். இப்படி நேர்ந்தால் உங்களுக்கு அறிவிக்கிறேன். மோட்டார் ஓட்டுகிறவர்களில் ஒருவர் என்னுடைய முக்கியமான சிநேகிதர். நினைத்தமாத்திரத்தில் அவனை வேறு ஒரு முகாமுக்கு மாற்றிவிட்டால் நான் மறுபடியும் வேலைசெய்ய வேண்டித்தான் வரும்.

மற்றொரு கஷ்டமான நிலைமை என்னவென்றால், எங்கள் வீட்டிற்குச் சமீபத்தில் விமான எதிர்ப்புக்குப்பிறகு ஏற்படும் சத்தம்தான். முதலாவதாக, வெகு நாட்கள் வரையில் ரஸ்தாக்களிலும் நடைபாதைகளிலும் கிடக்கும் கண்ணாடித்தூள்களையும் கட்டடத்தூள்களையும் மண்வெட்டிகளைக்கொண்டு அள்ளி குப்பை வண்டிகளில் எறியும் சப்தம் அதிகமாயிருக்கும். காதைப்பிளக்கக்கூடிய இதைப்போன்ற சப்தத்தை இதுவரையில் கேட்டிருக்க மாட்டீர்கள். 43-ம் நம்பர் வீட்டிலுள்ள ஜன்னல்களில் உடன்கால உதவிக்காக ஏற்படுத்தப்பட்ட வேலைகளில் ஒன்று கியது அடியிலுள்ள கண்ணாடிச்சட்டத்தில் ஒரு கோதுமை வர்ணமுள்ள பலகையும் அதற்குமேலாக வெள்ளையான சாமானினால் ஒரு பலகையும் போடப்பட்டிருக்கிறது. இது வழியாக சிறிது வெளிச்சம் உள்ளேவருகிறது. இவைகள் வழியாக ஒருவரும் வெளியே பார்க்கமுடியாது. இவைவழியாக குளிர்ந்த காற்றுகள் வருகின்றன. ஆனால் நல்ல காற்று வருகிறதில்லை.

---

# ‘பெரிய’ ஜெர்மனிக்கு அடுத்தாற் போல்.

---

ஜேம்ஸ் லான்ட்ஸ்டேல் ஹாட்ஸனுடைய படிப்பு.

ஹாட்ஸன் ஒரு ஆங்கில நூலாசிரியர், பத்திரிகை நிருபர். சிலதினங்களுக்குமுன் ‘டோவர்’ சென்றிருந்தார். எதிரியின் பிரதேசத்துக்கு மற்ற பிரிடிஷ் நகரங்களைவிட, சமீபத்திலுள்ளதும், பிரெஞ்சுக் கடற்கரையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஜெர்மன் பீரங்கிகளின் எதிர்பிக்குட்பட்டதுமான ‘டோவர்’ நகரம், மிகவும் ப்ராசீனமானது.

இதன் முகப்பிலிருந்து ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருப்பதால் ‘பெரிய ரிச்’ என்றுசொல்ல லைக்குள்ளதான ‘கலே’யும்’ புலாயி’னும் நாம் பார்க்க முடியும்.

பீரங்கிப்படை உத்தியோகஸ்தருக்குள்ள தூரதிருஷ்டி கண்ணாடியைக்கொண்டு ‘கலே’யின் மணிக்கூண்டு கடியாரத்தில் மணி பார்க்கமுடியும். நான் அங்கு சென்றதினம் பிரெஞ்சுக் கடற்கரைப் பிராந்தியம் தெளிவாக தெரிந்தது. 20-மைல் தூரமாகயில்லாமல், 4, 5-மைல் தூரத்திலேயே இருப்பதாகத் தெரிந்தது. மத்தியிலுள்ள கடலும் தெளிவாக இருந்தது. யுத்தம் நடப்பதாகவே தெரியக்கூடவில்லை. கடலில் சில பிரிடிஷ் கப்பல்கள் மெதுவாக அனாயாசமாகச் சென்றுகொண்டிருந்தன. மேலே தற்காப்பு பலூன்கள் பிரகாசித்தன. காற்று திசைமாறின போதெல்லாம் நங்கூரம் பாய்ச்சின பெரியகப்பல்கள் போல் மெதுவாக திரும்பிக்கொடுத்தன. எங்கும் நிசப்தமாகவே இருந்தது. இவ்விதம் பலமணி நேரம் நிசப்தம் உலாவியது. ஒரு வருஷத்துக்குமுன் ‘மாஜிநாட்’ அரண் எதிர்ப்புக்குமுன், இவ்விதந்தான் இருந்தது. வாரம்பூராவும் இவ்விதமே பல மணி நேரம் நிசப்தமாயும் முக்கியமாய் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஒவ்



வொரு சமயம் வேறு சில தினங்களிலும் சரியாக பகல் $2\frac{1}{2}$ மணிக்கு வெடிகுண்டு ஓசைகளுடனும் துலங்குகிறது. திடீரென்று எச்சரிப்பின்றி, குண்டு செங்குத்தாகவே 85டிகிரி கோணத்தில் விழுந்து வெடிக்கும். உடனே பீரங்கி யுத்தம் நடப்பதாக போலீஸால் ஜனங்களுக்கு தாக்கல் கொடுக்கப்படுகிறது. ஒரு குண்டு விழுந்தபிறகு மறு குண்டு வர 7 நிமிஷம் பிடிக்கிறது. சில சமயம் சில குண்டுகளே வருகின்றன. ஒரு குண்டு விழுந்ததும் 1, 2 என்று 90 வரை எண்ணினால் 90 என்று எண்ணினவுடன் அது வெடிக்கும்.

மற்றபிரிடிஷ் பிரஜைகளைப்போல் நூற்றுக்கணக்கான வெடிகுண்டு எதிர்ப்புகளைப் பார்த்திருக்கிறேன். அது சமயம் குண்டு வருமுன் விமான சப்தமோ, எதிர்ப்பைப்பற்றி எச்சரிப்பு ஊதலோ கேட்கும். ஆனால் டோவரில் இது கிடையாது. குண்டுவந்த பிறகுதான் தகவலே தெரியும். இதனால் ஜனங்களுக்கு பெரிதும் நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கலாம். ஆனால் ஆயிரக்கணக்கான பேர்கள் அங்கு வசிக்கின்றனர். ஸ்திரீகள் குழந்தைகளை தள்ளுவண்டிகளில் தெருவில் தள்ளிச் செல்லுகிறார்கள். யுவாக்கள் கடைகளில் எப்போதும்போல் சாமான்கள் வாங்குகிறார்கள். பஸ்கள் எப்போதும் போல் ஓடுகின்றன, ரயில் வண்டிகளும் டயம்படி செல்லுகின்றன. சங்கீத கூடங்கள் வழக்கப்படி நடக்கின்றன, மாதாகோவில்களில் தினப்படி பிரார்த்தனைகள் நடக்கின்றன. இது ஆபூர்வமாகத்தான் தோன்றும். இது ஏன்? எதிரிகள் நம் தேசத்தில் புக நினைத்தால் ‘டோவர்’ தான் மார்க்கம். ‘டோவரைச் சுற்றி பீரங்கி குண்டு வீழ்த்துவதனால் அங்கே படையை இறக்கக்கூடும், இதை உத்தேசித்தே மற்ற பிராந்தியங்களைப்போல் இது சின்னாபின்னமாக்கப்பட வில்லை. லிவர்பூல் லண்டன் இவை மாதிரி இங்கு சேதம் இல்லை. ஒரு பிரபலஸ்தர் என்னிடம் சொன்னார், “மற்ற நகரத்தோடு ஒப்பிட்டால் டோவரில் எல்லாம் பத்திரமாகவே இருக்கிறது”. போலீஸ் உத்தியோகஸ்தரின் மனைவி அவரிடம் சொன்னதாவது “நான் சென்றிருந்த இடங்களில் இதுபோல் சேதமில்லாத இடத்தைக் காட்டுங்கள் அங்கு போகிறேன்” அவரால் குறிக்க முடியவில்லை. ஜனங்களின் தைரியத்தை தவிர இவ்விதம் அவர்கள் இங்கே வசிப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஜனங்கள் அபாய சமயத்தில் தங்க நல்ல வசதிகள் இருக்கிறது. அவ்வித இடங்கள் பலப மலைகளில் குடையப்பட்டவை. சிலவைகள் 60 அடி ஆழத்திலும் சிலது 150 அடி ஆழத்திலும் மலைகளில் குடையப்பட்டிருக்கின்றன. இவ்வளவு கனமான பலப பாறையை உடைப்பது கஷ்டம். இவைகளில் டோவரிலுள்ள சகலரும் தங்கக்கூடும் எனினும் இன்னும் பல சுரங்கங்கள் தோண்டப்படுகின்றன. இவைகளில் எலெக்ட்ரிக் வசதிகள் இருக்கின்றன. ஒன்று $1\frac{1}{2}$ மைல் நீளம் உள்ளது. இவைகள் எல்லாம் புதியவை அல்ல. நெபோலியன் காலத்துப் பிரெஞ்சு யுத்த கைதிகள் தோண்டியது பல.

நான் கோட்டையில் ராணுவத்தின் விருந்தாளியாக தங்கியிருந்தேன். நெல்ஸன் காலத்து பீரங்கிகள் கோட்டை வாசலில் வைக்கப்பட்டிருக்கின்றன. பழைய காலத்து கத்தி கேடயங்களும் கவசங்களும் சுவர்களில் தொங்கவிடப்

பட்டிருக்கின்றன. 30, 40 அடி நீளமான பழைய மேஜையில் உட்கார்ந்து சாப்பிட்டோம். ஆனால் நவீன வாழ்வை காட்டும் சின்னங்களும் தென்பட்டன. "தங்கள் உணவுடன் வருவதால் இருந்தாலொழிய மற்ற உத்தியோகஸ்தர்கள் சாப்பிடக்கூடாது" என்று ஒரு நோட்டீஸ் ஒட்டியிருந்தது. நான் காலை போஜனத்துக்குச்சென்று கொண்டிருக்கையில் குண்டுகளின் சப்தம் தற்கால நிகழ்ச்சிகளை வற்புறுத்தியது. நம்முடைய தற்காப்பு பலூன்களில் 3-வது பற்றிக்கொண்டிருப்பதை வெளியில் வந்தவுடன் பார்த்தேன். மற்ற இரண்டு பலூன்கள் இருந்த இடத்தில் ஒரே புகை ஆகாயமளாவி இருந்தது. திடீரென்று தோன்றிய எதிரி விமானம் இவைகளை சுட்டுவிட்டு ஓடிவிட்டது. பார்ப்பதற்கு பல வர்ணமாக இருந்தது. இது சகஜமான நடப்பேயாம். ஒவ்வோர் சமயம் இவ்வித நடவடிக்கைகளில் எதிரிகளுக்கு ஏராள சேதம் உண்டு. ஒருதபா 11 விமானங்கள் நாசம் செய்யப்பட்டன. புது பலூன்களை திரும்ப பறக்கவிடுவது 1 மணி நேரம் தான்பிடிக்கும். ஆனால் இதில் தொந்தரவு ஜாஸ்தி. கம்பி முறுக்கும்போது கஷ்டம் அதிகம். மேலும் அவைகள் ஸ்திரப்பட்டதல்ல. சில அறுத்துக் கொண்டு பறந்துவிடும். ஒரு சமயம் 2 பலூன்கள்தான் பறக்கவிட்ட இடத்தில் 3-வது ஒன்று வந்து சேர்ந்து கொண்டது. அதன் கம்பி நழுவினது தான் காரணம். ஒரு சமயம் ஒரு பலூன் கடல் பக்கம் பறந்துவிட்டது. இது கவனக் குறைவால் ஏற்பட்டதென்று காவலாளிகள் பேரில் விசாரணை நடந்தது. விசாரணை நடக்கும்போதே அந்த பலூன் திரும்ப தன் இடத்துக்கே வந்துவிட்டது. எல்லாருக்கும் வியப்பை உண்டாக்கிவிட்டது.

பலூன்களின் அபூர்வ நடவடிக்கைகளைத் தோற்கடிக்கின்றது குண்டுகளின் வேடிக்கைகள். ஒரு சமயம் ஒரு வெடிகுண்டு ஒரு ஸ்திரீயின் பாதரக்ஷைகளை மட்டும் அறுத்துக்கொண்டு போய் விட்டது. அவளுக்குக் காயம் கூடக்கிடையாது. ஒரு சமயம் ஒரு குண்டு ஒரு மனிதனின் கால்சராயை மட்டும் கொளுத்தி விட்டது. அவனுக்கு வேறு தீங்கு ஏற்படவில்லை. சிரிப்பும் அழுகையும் கலந்து ஏற்படுகிறது. நமது பீரங்கிகளும் எதிர்க்குத்தக்க பதில் அளிக்கின்றன. சிரமமின்றி 1 டன் கனமுள்ள பெரிய குண்டுகளை, நாம் கல் எறிவது போல அவ்வளவு சுலபமாக 'கலே'யில் குறி தவறாமல் விழும்படி எறிகின்றன. இவைகளுக்கு பீரங்கிப்படையினர் விசித்திர பேர்கள் இட்டிருக்கிறார்கள். 'இலற-விளக்கு-ப்வன்' 'சமாதானக் காரன்' 'வின்னி' என்று பலவிதபெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹிட்லரின் கோஷ்டியினருக்கு தக்க மரியாதை காட்டும் இன்னும் பல சாதனங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை குறிக்க இடமில்லை.

ஆனால் விமானங்களிலிருந்து சமுத்திரத்தில் குதித்துவிடும் விமானிகளை இழுத்து வருபவர்களைப் பற்றிக் கூறக் கூடும். காலைமுதல் மாலைவரையில் இவர்கள் படகுகளுடன் தயாராய் இருக்கின்றனர். விமானி நீரில் விழுகிறான். அங்கு படகை செலுத்திப் போய் இவர்களை படகில் ஏற்றிவருகிறார்கள். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த அதே ஒருவிமானியை 3 தடவை கடலிலிருந்து காப்பாற்றியிருக்கிறார்



கள். வேறு ஒரு விமானியை இரண்டு தடவை காப்பாற்றியும் சில தினங்களுக்கு முன் அவன் இறந்தே விழுந்திருந்தான்.

கூடிய சீக்கிரத்தில் இவர்களுக்கு வேலை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மறுபடியும் ஆகாயத்தில் சுழல் சுழலாக நெருப்பு எறிவதின் மூலம் விமானப் போர் நடப்பது தெரியவரும். இப்போது நமது விமானிகள் தாங்கள் அணிந்து கொள்ளும் தற்காப்பு கச்சையில் காற்றுஅடித்த ரப்பர் படகு போன்றது உபயோகிக்கின்றனர். அதனால் ஜலத்திலிருந்து இவைகளில் அவர்கள் ஏறிக்கொள்ள முடியும்.

இதர யுத்த அரங்க பிராந்தியங்களைப் போலவே 'டோவரும்' பல வகையாய் இருக்கிறது. யுத்தப் படம் எழுதும் ஒரு நண்பர் 'எல்லாம் சாந்தமாயிருப்பதில் எனக்கு ஒரு யுத்த காட்சியும் கிடைக்கவில்லை" என்றார். ஆனால் அடுத்த நிமிஷம் ரணகளம் ஆகியது. இதிலிருந்து 1, 2 மணி நேரத்தில் சாந்தமாயிற்று. சங்கீத கூட்டத்துக்கு போகமுடிந்தது. அங்கே விக்டோரியா காலத்து பயனோ, கார்னட், பிடில் சேர்ந்த பாண்டும், ஸ்திரீ வேஷம் தரித்த புருஷனின் பாட்டும் நடந்தது. அதைக் கேட்டு காக்கி உடுப்பு அணிந்த நமது யுவர்கள் முன் காலத்தவர்கள் போலவே கை கொட்டி ஆனந்தமடைகின்றனர்.

டோவரினுடைய இயற்கையான நிரந்தரமான விஷயம் ஒன்று ஏதோ இருந்தே வருகிறது. சென்ற யுத்தத்தில் டோவரைச் சேர்ந்த ரோந்துப் பட்டாளம் பெயர் பெற்றிருந்தது. தற்போது 'டங்கர்க்கிலும் இந்தப்படை கீர்த்தி அடைந்திருக்கிறது. இந்த துறைமுகத்துக்கு தினந்தினம் பல விதமான 300 கப்பல்கள் வந்து போயின. சென்ற யுத்த காலத்திலும் டங்கர்க் சமயமும் எந்த ஜனங்கள் இங்கு வசித்தார்களோ அவர்களே இப்போதும் இருக்கின்றனர். ஒரு நாள் ஒரு வியாபாரி என்னிடம் "எது வந்தாலும் நான் இதை விட்டுப்போகேன்" என்றான். எப்போது அடுத்த குண்டு விழும் என்று அவனும் மற்றவர் எவரும் அறிய முடியாது என்றாலும் அவன் அங்கே விட்டுப் போகவில்லை. எல்லோரும் இவ்வித ஹிருதயம் உள்ளவர் என்று சொல்லவில்லை. ஆனால் ஜனங்களில் பெரும் பாகம் இப்படிப் பட்டவர்களே. எதிரிகளுக்கு இடம் கொடுக்காதவர்கள். ஹிட்லர் இங்கு வருவானாகில் அவனுக்கு தக்க பதில் இங்கே கிடைக்கும்.

---

## மனிதர்களைத் தீனிப்பன்றிகளாக மாற்றுதல்.

## நாளதுவரை ஸர்ஸியின் மந்திரக்கோல் செய்யும் வேலை.

பிரிடனைப்பற்றி மிகவும் அவதூறாகவும், இழிவாகவும் கடல் தளபதி டார்லான் சொல்லிக்கொண்டுவருகிறார். ஒரு வருஷத்திற்கு முந்தி நம்முடன் நேசபாவத்துடனிருந்தவன், ஜெர்மனியுடன் ஒத்துழைப்பதே பிரான்ஸுக்கு மிகவும் மேன்மை என்று சொல்லி ருஜுப்பிக்க எத்தனிக்கிறான். ஜெர்மனி

ஜயித்தால், வாஸ்தவமாய் தங்களுக்கு நன்மைதான் என்று டார்லான் நம்புகிறுன் என்பதே சந்தேகம். மற்ற எந்த பிரெஞ்சுக்காரர்தான் இதை நம்புவான். "டைம்ஸ்" பத்திரிகையைச் சேர்ந்த காலின்கூட் என்பவர் இந்தச் சங்கதியைப் பற்றி விவரிக்கிறுர்.

## பிரெஞ்சு அபஜயம்.

பிரான்ஸ்பேரில் அன்புவைத்த யாவருக்கும் இது சோதனைகாலம். அப்படி அன்புவைத்தவர்கள் பிரெஞ்சுக்காரர்கள் மட்டுமல்ல. பிரான்ஸ் சரணுகதியடைந்து விட்டதே என்று திகைத்தார்கள். பிரெஞ்சு ஏகசக்ராதிபத்தியம் குலைந்ததே என்று பிரமித்தார்கள். ஆனல், ஜெர்மானியர்களால் அடிபட்ட பிரெஞ்சுக்காரர் கூடிய சீக்கிரத்தில் அபஜயத்தால் ஏற்பட்ட பிரமிப்பு நீங்கிவிடுமென்று நம்பினுர்கள். ஜெர்மானியரின் ஆதிக்கத்தை விலக்கிக்கொள்ள கஸ்பா பிரான்ஸ் ஏரபாடு செய்துகொள்ளும் என்று நினைப்பதே முட்டாள்தனம். கைத்துப்பாக்கி பிரயோக காலங்களில் பிரான்ஸில் கலகங்கள்செய்து ஜயிக்க ஹேதுவிருந்தது. தற்காலம் யந்தர பீரங்கிகளின் வலிமை மிகுந்ததாகயிருக்கிறது. ஆதலால் முடியாது. ஆனல், பிரெஞ்சு குடியேற்ற நாடுகளில் ஜெர்மானியர் ஆதிக்கம் ஏற்படவில்லை, அவர்களும், அவைகளில் திடீரென்று வேகமாய்ப் பாய்ந்து ஆக்கிரமிக்க சந்தர்ப்பம் இல்லை. ஆதலால் அந்த நாடுகள் ஜெர்மானிய விரோதிகளுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள், அவர்களுடன் ஒத்துழைக்க மறுப்பார்கள் ஒருக்கால் பிரிடிஷாருடன் பகிரங்கமாய் ஒத்துழைக்க முன்வராவிட்டாலும், தங்கள்பேரில் எதிரிதொடுக்கும் வேலைகளில் தடைகள் ஏற்படும்படி செய்வார்கள். இப்படி எல்லாம் நாம் யாவரும் நம்பியிருந்தோம். நமமுடன் குடியேற்ற நாடுகள் ஒத்துழைப்பார்கள் என்று நம்பியதற்கு முழுமாருக, விரோதி ஜெர்மனியர்களுடன் ஒத்துழைப்பு காலக்கிரமத்தில் ஜாஸ்தியானதைக் கண்கூடாகப் பார்க்கிறேம்.

## கொடுமையால் மந்திரக்கோல்.

இம்மாதிரி ஜெர்மனியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதென்ற நோக்கம் பிரெஞ்சு அதிகார வர்க்கத்தினர்களிடம்தான் காணப்படுகிறதென்ற சங்கதியை உங்கள் மனதிலிருந்து அகலும்படி விட்டுவிடாதீர்கள். பிரெஞ்சுக்காரர்கள் தங்களுக்கு அசௌகரியாக ஏற்பட்ட சரணுகதியானது சிலரால் வேணுமென்றே கொண்டுவரப்பட்டதென்று தெரிந்துகொண்டால், அடங்காக் கோபமடைவார்கள் என்பதற்கு போதுமான ஹேஷ்யங்களிருக்கின்றன. அந்தச் சங்கதி மட்டில் அவர்களைத் தெரிந்துகொள்ளாவண்ணம் செய்யப்படுகின்றது

ஜெர்மானியர்கள், பிரெஞ்சுக்காரர்களுக்கு காட்டும் சலுகைகளைப்பற்றி பிரமாதமாக எடுத்துரைக்கப்படுகிறது; புதிது புதிதாக பிரெஞ்சுக்காரர்கள் மேல் ஜெர்மானியர்கள் சுமத்தும் சரணுகதி விஷயங்கள் மறைக்கப்படுகின்றன. பிரெஞ்சு பாமர ஜனங்களுக்கோ ஜெர்மனியுடன் ஒத்துழைப்பது என்பதே பிடிக்காது. இதற்கு மாற்றுக்கொடுப்பதுபோல், பிரெஞ்சு அதிகார வர்க்கத்தினர் பிரிடிஷாரைப்பற்றி பொய்ப் பிரசாரங்களை வெளியிடுகிறுர்கள். இப்படி



அதிகார வர்க்கத்தினருக்குக்கூட ஏற்பட்ட மனப்பான்மை ஆச்சரியமாயிருக்கிறது. அந்த மனப்பான்மையைப்பற்றி சிலதுகளைத் துலக்குகிறேன். முன் நடந்த சங்கதிகளை எடுத்துக்காட்டவேணும். அப்படிக் காட்டினுல்தான் இந்த ஆச்சரிய சம்பவங்களின் மூல காரணங்கள் புலப்படும்.

## கொஞ்சம் சரித்திரம்.

புத்தி நுட்பமானவும், தைரியம் படைத்தவுமான தேசத்தவர்கள் திடீரென்று, மழுங்கிய மூளையுடையவர்களாய் மாறிவிடுவார்களா? அல்லது கோழையாகி விடுவார்களா? ஒரு சங்கதி உங்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்: சமீப வருஷங்களில் பிரான்ஸ் தேசத்தில் ஜனநாயக தத்துவம் நன்ருய் பிரகாசிக்காத வண்ணம் சில விஷயங்கள் நடந்திருக்கின்றன. தொடர்ச்சியாக பிரெஞ்சுக்காரர்களுக்கு பல பலஹீனமானவும், அடிக்கடி மறைந்துமாறும் நிர்வாகங்களை அனுபவிக்கும் விதி ஏற்பட்டது. அவ்வாறே அவர்களின் ராஜீய வாதிகளும், ராஜீய வாதங்களும், ரஸத்தப்பான போக்குள்ள வகையாக அமைந்தன. ராஜீயவாதிகள் சங்கியை அபரிமிதம்; கக்ஷிப்பிரதிகக்ஷி.

பிரான்ஸில் வழங்கிவந்த ஜனநாயக ஆட்சியின் கோளாருகள்தான் அவைகள். எல்லா ஜனநாயக ஆட்சிக்கும் இம்மாதிரி கோளாருகள் முக்கியமானதாக ஏற்படக் கூடியதல்ல. ஆனல் இந்தக்கோளாருகள் ஏற்பட்டகாலத்தில் நல்ல யோக்யஸ்தர்களுக்குக்கூட ஜனநாயகம் என்றதின்பேரில் ஒருவித மனச்சலிப்பு ஏற்பட்டது. ஏன் சில வழவழத்த நாக்குப்படைத்த ராஜீய வாதிகள் ஜனநாயக ஆட்சியை அறவே போக்கவேண்டுமென்றும் பிறகு க்ஷேமம் ஏற்படுமென்றும் பேசத் துடங்கினுர்கள். இந்தக் காரணத்தால்தான் விஷி ஸர்க்கார் மனிதர்களுக்கு, நாஸிக் கொள்கைக்கோ, பாஸிஸ்டு கொள்கைக்கோ எதிர்நோக்கம் ஏற்படவில்லை. ஏன்! நாஸிக் கொள்கைகளை சிலாகித்தார்கள். அந்த நாஸி திட்டம்தான் கிரமமான திட்டம் என்று அபிப்பிராயப்பட்டார்கள். பொது உடைமைக் கொள்கை பரவாவண்ணம் நாஸிகளின் திட்டம் எதிர்த்துக் கோட்டைபோல் நிற்கிறது என்று ஹிட்லர் அடிக்கடி வருஷக்கணக்காய் சொல்லிவந்த பொய்ப் பிரசாரத்தை உண்மை என்று ஏமாறி நம்புகிறுர்கள். மொத்தமாய்ப் பார்க்கப் போனல், நாஸி ஜெர்மானியர்களிடம்கூட விஷி அதிகாரவர்க்கத்தினருக்குப் பயமில்லை, தங்கள் தேசத்திலுள்ள இடதுகைப் பொதுஉடமை கக்ஷியினர்களின் பேரில் அத்தனை பயம்.

## ஆங்கிலேயர்கள்பேரில் வைரசிந்தனை.

இந்தப் பிரெஞ்சு தேசத்திய நாஸிக் கொள்கைக்காரர்கள்தான், பிரான்ஸிலுள்ள பிரிடிஷ் விரோதிகளில் முக்கியஸ்தர்கள். ஆனல் அவர்கள் மாதிரி பிரெஞ்சுக்காரர்கள் முழுமையுமல்ல. ஆங்கிலேயர்களின் பேரில் அவர்களுக்கு அவநம்பிக்கை. இத்துடன் பிரெஞ்சு தேசத்தை பிரிடிஷார், சென்ற யுத்தத்திற்குப் பிறகு, இந்த யுத்தம் ஆரம்பிக்கும் வரையில், வேணுமென்றே க்ஷீணிக்கும்படி செய்துவிட்டார்கள் என்று ஒரு சாரர் செய்யும் பிரசாரம் சேர்ந்தது. பிரிடன்தான் ஜெர்மானியர்கள் மறுபடி யுத்த சன்னத்தமாகும்படி செய்துவிட்டது என்றும்,

இந்த யுத்தத்தில் தங்களுக்குப் போதுமான உதவி பிரிட்டிஷார் அளிக்கவில்லையென்றும் அவர்கள் செய்த பிரசாரமும் வேலைசெய்ய ஆரம்பித்தது. தவிரவும் பிரெஞ்சுக் கடற்படையை நாம் யுத்தத்திற்கு லாயக்கில்லாமல் செய்துவிட்டதிலிருந்து சில பிரெஞ்சுக்காரர்களுக்கு நம்பேரில் மனஸ்தாபம்; பின் இப்பொழுது ஆங்கிலேயர்கள் ஜயித்தால்தான் என்ன? முந்தி செய்தமாதிரிதான், ஒரு கோழைகாட்டும் சமாதானம். பிறகு, ஜெர்மனியை யுத்த சன்னத்தமாக 2 வருஷத்திற்குள் செய்யும்படி அனுமதிப்பது. இவைகள்தான் ஏற்படப் போகிறது என்று சிலர் நினைக்கிறார்கள்.

இன்னும் சில பிரெஞ்சுக்காரர்கள் "ஜெர்மனியும், இங்கிலாந்தும் போடட்டும் கடும்போர். மடியட்டும் இருவர்களும்; நமக்கு நிர்பயம்; யுத்தத்திற்குப் பிறகு நமது கை வலுத்துவிடும், ஸ்வேச்சாதிக் கொடியை நாட்டிவிடலாம். இருதேசங்களும் பலஹீனப்பட்டுவிடும்" என்று நினைக்கிறார்கள். 1918-ம் ௵ முதல் இம்மாதிரி எத்தனையோ ஆசை நினைவுகள் பிரெஞ்சுக்காரர்கள் நினைக்கிறார்கள். அவைகளில் இந்த நினைவும் மிகவும் மோசமானது.

## ஆசை நிறைவு.

ஆனால் ஜெர்மானியர்களுடன் ஒத்துழைப்பதென்று சம்மதிக்கும் பிரெஞ்சு பேர்வழிகள், நிச்சயமாய் ஜெர்மனிதான் ஜயிக்கும் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தீர்மானத்தினால் மார்ஷல் பிடேன்கூட கடற் தளபதி டார்லான் சொல்லும் யோசனைக்கு இணங்கும்படி ஆகிவிட்டது. மார்ஷல் பிடேனிடம் அமெரிக்கா செய்துகொண்ட முறையீடுகளுக்கு அவர் அடியில்கண்ட விதம் பதிலளித்ததாகச் சொல்லப்படுகிறது. "பிரிட்டிஷார்கள் பகீரதப் பிரயத்தனங்கள் விமரிசையாகத்தான் செய்கிறார்கள். ஆனால் அவைகள் யாவும் முட்டாள்தனம்" அவர் நடவடிக்கைகளுக்கு சமாதானம் கொட்டைப் பாக்குக்குள் அடங்கியதுபோல் இந்த அவருடைய பதிலில் அடங்கியிருக்கிறது. பிரிட்டிஷாருக்கு பிடேன் சொல்லுவதாவது "நீங்கள் போடும் யுத்தம் வியக்கும்படி பிரமாதமாகத்தானிருக்கிறது. நான் உங்களை பாராட்டுகிறேன். ஆனால் நீங்கள் தோல்விதான் அடைவீர்கள். ஆதலால்தான், நீங்கள், நான் செய்தபடி சமாதானம் கோராமலிருந்தால் நீங்கள் முட்டாள்கள்தான்."

இவர் சொல்லும் இந்த ஆலோசனை பிரிட்டிஷாரின் உறுதியான குணம்சங்களை கவனிக்காமல் சொல்லப்பட்டதேயாகும். மற்றவர்கள் தோல்வியடைந்தார்கள், ஆதலால் நாமும் தோல்வியடைவோம் என்று வாதிக்கும் கக்ஷியில் சாரமில்லை. நாம் தோல்வியடைவது நிச்சயம் என்று மார்ஷல் பிடேன் நினைப்பதால்தான், ஜெர்மானியர் கேட்கும் கோரிக்கைகளெல்லாவற்றையும் விட்டுக்கொடுக்கிறார். பிரான்ஸ் உதவி செய்யும் பக்ஷத்தில், ஜயிக்கும் ஜெர்மனி அதற்கு வெகுமதியளிக்குமாம். பிரான்ஸ் ஜெர்மனிக்கு இடராய் நடந்தால், நம்முடைய கதிதான் அதற்கும்; அடிமையாக நடத்தப்படுவது நிச்சயம். எதன்மத்தியில், உதவி செய்தால் பிரான்ஸுக்கு என்ன கிடைக்கும்? முதலில் ஜெர்மனியில் கைதிகளாகயிருக்கும் 15லக்ஷம் பிரெஞ்சுக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் விடுதலை



யடைவார்கள். ஜெர்மனி கையிலிருக்கும் பயத்தைக்காட்டி அதிரடியாய் பிடுங்கிக்கொள்ளும் அநேக தந்திரங்களில் இந்த விஷயத்தில் கையாளப்படும் முறையானது பிரெஞ்சுக்காரர்களிடம் நல்ல பிரயோஜனம் தரும்படி சக்தி வாய்ந்ததாக யிருக்கிறது. இதை நாம் குறைவுபடுத்த முடியாது. இந்த 15 லக்ஷம் பேர்களும், அனாக்கிரமிப்பு பிரெஞ்சுதேசத்திலுள்ளவர்களுக்கு பந்துக்கள், அண்ணன், தம்பி, புருஷன், மகன் இவர்கள் ஹிட்லர் கையில் சிக்கியிருப்பதை ஒரு பயங்கரமான ஆயுதமாய் பிரயோகிக்கிறான்.

இரண்டாவதாக, பிரெஞ்சு தொழிற்சாலைகளில் கொஞ்சம் வேலைகிடைக்கும்படி பிடேன் செய்திருக்கிறார். இது ஒரு நல்ல பிரதிப்பிரயோஜனம்தான். ஆனால் தொழிற்சாலையில் செய்யப்படும் வேலை பிரான்ஸுக்கு பயனளிப்பதில்லை. ஜெர்மனிக்குத்தான் சாதகமாகயிருக்கின்றது. பிரெஞ்சு டவுன்களிலும், நகரங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் மிகுதிதான். வேலை கிடைக்காவிடில் எப்படி பிழைத்திருப்பது? கிடைத்தவரையில் சாதகம் என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. கடைசியாக, ஆக்கிரமிப்பு பிரெஞ்சுப் பிரதேசத்திற்கும் அனாக்கிரமிப்புப் பிரதேசத்திற்கும் போக்குவரத்து சாதனங்கள் சுலபமாக அமையும் என்று நினைக்கக்கூடும். இதுவும் மிகவும் முக்கியமான பிரயோஜனம்தான். ஏனெனில் எனக்குக்கூட ஒரு சமாசாரம் தெரியும். சாகும் தருவாயிலுள்ள தன் புருஷனை பெண்ஜாதி பார்க்கமுடியவில்லை. மார்ஷல் பிடேன் பாரிஸ் நகரத்தை தன் தலைநகரமாக மாற்றிக்கொள்ளும்படி சாதகம் ஏற்பட்டுவிடாது. இருப்பினும் ஏதோ கொஞ்சம் சாதகம் ஏற்படலாம்.

## இவைகளின் விலை.

இந்த சாதகங்களுக்கு பிடேன் விலைகொடுக்கிறான்? தெரியுமா? முன் தன்னுடன் நேசமாயிருந்த தேசங்களுக்கு எதிரிடையாகத்தான் ஒன்றும் செய்கிறதில்லை என்று கௌரவமாக சமீபத்தில் பிடேன் சொல்லிக்கொண்டார். சமீப காலத்து ஜெனரல் வேகாண்டு, பிரெஞ்சு ஏகசக்ராதிபத்திய தேசங்களை எவர் படையெடுத்தாலும் நாம் பாதுகாப்போம் என்று பிரகடனப்படுத்தினார். இப்பொழுதோவெனில், இவைகளுக்கு மாறாக டார்லான் ஜெர்மானியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். தங்களை யுத்தத்திற்குப் போகவேணுமென்று ஜெர்மானியர் கோரவில்லை என்று டார்லான் சொல்லுகிறார். ஆனால், அவர்களின் உபயோகத்திற்கு யுத்ததளவாடங்கள் செய்யும்படி ஆக்ஞாபித்திருக்கிறார்கள். ஸிரியாவிலுள்ள பிரெஞ்சு விமான நிலயங்களை ஜெர்மானியர்களின் உபயோகத்திற்கு விடும்படி அனுமதி பெற்றிருக்கிறார்கள். இராக் தேசத்திற்கு நாஸிகளின் உபயோகத்திற்கு பிரெஞ்சு யுத்ததளவாடங்களை அனுப்பும்படி செய்துவிட்டார்கள். அனாக்கிரமிப்பு பிரெஞ்சு தேசத்துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த பொருள்களின் வெகு பாகங்களை ஜெர்மானியர்கள் எடுத்துக்கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன. பிரெஞ்சு வட ஆபிரிக்காவிற்குக் கூட்டம் கூட்டமாய் ஜெர்மானியர்கள் போகும்படி அனுமதிக்கும்படி செய்துவிட்டார்கள்.

ஜெர்மன் உதவிப் படைகளை, ட்யூனிஸ் வழியாக லிபியாவுக்கு அனுப்பும்படிக்கு இடம் கொடுக்கவும், ஸ்பெயினுக்கு வடக்கேயுள்ள பிரெனீஸ் மலைத்தொடர்வரை தாங்கள் ஜெர்மன் துருப்புகளை அனுப்ப இயலும்படி ஆக்கிரமிப்புப் பிரதேசத்தை விஸ்தரிக்கும்படியும் பிரான்ஸைக் கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இது ஜிப்ரால்டர் கோட்டையைத் தாக்குவதற்காகச் செய்த ஏற்பாடு. முதலில் டார்லான், இங்கிலாந்து யுத்தத்திற்குத் தயார் செய்துகொள்ளாமலிருந்து விட்டது என்று புகார் செய்தார். இப்பொழுது இங்கிலாந்துதான் யுத்தத்தைக் கிளப்பிவிட்டது என்றும், ஜெர்மானியர்களுக்கு வெகு தாராள சிந்தையுண்டென்றும், பிரிட்டிஷாருக்கு தயாதாக்ஷிண்யமில்லையென்றும் டார்லான் சொல்லுகிறான்.

## எதிர் மந்திரம்.

இப்படிச் சொல்லுவதெல்லாம் இன்னும் ஏதாவது ஜெர்மானியர்கள் விட்டுக் கொடுக்கமாட்டார்களா என்றுமிருக்கலாம். ஒருக்கால் மார்ஷல் பிடென் ரகஸ்யமாய்த் தன்னால் ஒன்றும் சாத்தியப்படவில்லையே என்று சொல்லிக்கொண்டிருக்கலாம்.'' ஆனால், அட்மிரல் டார்லான் இப்படிச் சொல்லிக்கொள்ளுகிறானில்லை. இப்படி ஜெர்மனிக்கு, பிரெஞ்சுக்காரர் உதவிசெய்வதைத் தடுப்பதற்கு வேண்டிய காரியாம்சைகள் செய்யாமல் இங்கிலீஷ்காரர்கள் சும்மாயிருக்கமுடியாது. பிரெஞ்சு ஜெர்மன் ஒத்துழைப்பைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்தால், அந்த பிரிட்டிஷ் ஸர்க்கார் ஒரு நாள்கூட நிலைநிற்க அர்கமில்லை. ஏனெனில், இந்த ஒத்துழைப்பால் கேந்திரஸ்தானங்களிலுள்ள நமது சைனியங்கள் நிச்சயமாய்ப் பலியாகிவிடும். ஆதலால்தான் நாம், எதிரி எந்தயிடமிருந்தாலும் அந்த இடத்தில் நாம் தாக்குவோம் என்று சொல்லிவருகிறோம். "நாம் பிரெஞ்சுப் பிரதேசத்திலிருக்கிறோம்; நாம் பிரெஞ்சுக்கரையோர எல்லைக் கடலிலிருக்கிறோம். எங்களை யாவரும் தாக்கமுடியாது" என்று நமது சத்ருக்கள் சொல்லிக்கொள்ள நாம் விடமுடியாது. ஜெர்மானியர்களை ஜயிப்பது என்பதே வெகு பிரயாசை. அதிலும் அவர்கள் தாக்குதலிலிருந்து விலக்கு ஸ்தலம் என்று சொல்லி விட்டுக் கொடுக்கமுடியாது. இந்த யுத்தம் ஒரு பந்தாட்டமல்ல. விஷி ஸர்க்கார் மனுஷ்யாள் யாவரும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கோளாறாய்ச் சொல்லுவார்கள். நம்முடைய மனப்பான்மையை மாறுபாடாய்க் காட்டுவார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கவேணும். கடல் தளபதி டார்லான், இம்மாதிரி வேலை துவக்கிவிட்டான். சென்ற சனியன்று டார்லான் பேசியபோது "ஒருக்கால் இங்கிலாந்து ஜயித்தாலும்கூட, பிரான்ஸானது இரண்டாம் ரகத்தைச் சேர்ந்த ஒரு குடியேற்ற அந்தஸ்துள்ள நாடுபோல்தானிருக்கும்" என்றான். இதிலிருந்து அவன் அபிப்பிராயம், பிரான்ஸுக்கு ஏற்படும் அந்தஸ்து, பிரிட்டிஷ் குடியேற்ற நாடல்ல. ஜெர்மன் குடியேற்ற நாடுதான் என்றும், அவ்வாறிருப்பதுதான் பிரெஞ்சு இஷ்டம் என்று ஏற்படுகிறது. இது நிச்சயம் சம்பவிக்கப்போவதில்லை. பிரிட்டிஷ்காரர்கள் ஜயிக்கும் பக்ஷத்தில், பிரான்ஸ் ஏற்கனவேயிருந்துவந்த சுயேச்சையான அந்தஸ்தை மீண்டும் பெறும் என்றும், அதன் தேசங்களை மீண்டுமடையும் என்பதில் ஐயமில்லை. ஜெர்மனி ஜயிக்கும் பக்ஷத்தில், இம்மாதிரி பிரான்ஸ்



முந்திய அந்தஸ்தை அடையாது. நாம் அச்சுதேசக் கப்பல்களை பிரெஞ்சுக் கடல்களில் வெடிகுண்டு போட்டுத் தாக்கினாலும், ஜெர்மானியர்களுக்கென்று பிரஞ்சு கப்பல்களில் ஏற்றிச்செல்லப்படும் பொருள்கள் போகாவண்ணம், அந்தக் கப்பல்களை நாம் தடுத்தாலும், இவைகள் கடல்கொள்ளை என்று டார்லான் சொல்லுகிறான். பிரான்ஸ் சரணாகதியடைந்த பிறகு, நேசதேசத்தைச் சேர்ந்த 200 ஆயிரம் டன்கள் நிறையுள்ள கப்பல்கள் பிரெஞ்சுத் துறைமுகங்களில் டார்லான் கட்டாயமாய் வெளியே போகாவண்ணம் நிறுத்திவைத்துக்கொண்டிருக்கிறானே. இந்த வேலையை என்னவென்று சொல்லலாம். இது வீடு புகுந்து திருடுவதல்லவோ? நிச்சயமாய் பிரெஞ்சுக் கப்பல்கள் ஜெர்மானியர்களுக்காக உபயோகப்படுத்தப்படுமாயின், அவைகள் பிரெஞ்சுக்காரர்களுடையதாகமாட்டா; அவைகள் நடுநிலைமை வகித்த தேசத்தைச் சேர்ந்ததென்றும் பாவிக்கப்படமாட்டா. பிரெஞ்சு கப்பல்கள், அனுக்கிரமிப்பு பிரெஞ்சுதேச ஜனங்களுக்கும், அவர்களின் தேவைக்கும் வேண்டிய பொருள்களை ஏற்றிச் செல்லுகிறதென்று முகாந்திரமிருந்தாலும் ஏன், நம்பிக்கையிருந்தாலும்கூட, பிரிட்டிஷ்காரர்கள் பிரெஞ்சு வியாபாரத்திற்கு தடங்கல் செய்யாமல, தங்கள் முற்றுகையை அடக்கி நடத்திவந்திருக்கிறார்கள். ஆனால் இன்று கடல் தளபதி டார்லானும், அவனைச் சேர்ந்தவர்களும் ஜெர்மனியை ஜயிக்கும் குருவி என்று எண்ணி அவர்கள் சார்பாய் வேலை செய்கிறார்கள் என்று நாம் தயக்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் ஜயிப்பது அரிது என்பதை எவ்வளவு சீக்கிரமாய் யாவரும் அறியும்படி செய்கிறோமோ அவ்வளவு சீக்கிரமாய் நாம் ஜயிக்கவேணுமென்ற நோக்கத்துடன் பாடுபட்டு உழைக்கிறார்களோ அந்தப் பிரெஞ்சுக்காரர்கள் சொல்வதைக்கேட்க பலர் முன்வருவார்கள். நாம் ஜயிக்கவேணுமென்று விரும்பும் பிரெஞ்சுக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது நன்றாய்த் தெரிகிறது. ஏனெனில் டார்லான் பேச்சிலே ஒரு நடுக்கத்துடன் கலந்த பீதி த்வனிக்கிறது. தான் ஜெர்மனியுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையை எவ்வளவு தூரம் பிரெஞ்சு ஜனங்கள் வரவேற்கிறார்களென்ற கவலைகளாய் பீதியடைகிறான். ஜனங்களுக்கு ஜூன்௴ போர்டோ சரணாகதி பிடிக்கவில்லை. இன்றைய விஷி ஸர்க்கார் சரணாகதியடைவதை பிரெஞ்சுக்காரர்கள் வெறுக்கிறார்கள்.

---

## ஸமீபத்தில் கிடைத்த தகவல்.

(இ-ஜூன்௴ 12உயன்று மான்சஸ்டர் கார்டியனின் ராஜதந்திர நிருபர் எழுதியது.)

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள சம்பந்தங்களில் நெருக்கடியான நிலைமை வந்துவிட்டதென்பதற்குச் சின்னங்களிருக்கின்றன. ருஷ்யாவிடமிருந்து, நடுநிலைமை வகித்து சாமான்கள் கொடுப்பதுமட்டுமல்லாமல் இன்னும் அநேகம் அடையவேண்டுமென்று ஜெர்மனி நினைக்கின்றது. 1939-ல் ஏற்பட்ட அனுக்கிரமண ஒப்பந்தம் ஜெர்மனிக்கு உபயோகமுள்ளதாகத்தானிருந்தது. பிறகு

இருவருக்கும் சிநேகம்தான் என்று இருதரப்பாரும் வாக்குறுதி செய்திருக்கிறார்கள். ஆகிலும் ருஷ்யா எவ்விதம் உதவி செய்யக்கூடுமோ அந்த அளவிற்கு ருஷ்யாவிடமிருந்து பொருளாதார உதவி ஜெர்மனிக்குக் கிடைக்கவில்லை.

ருஷ்யாவிடமுள்ள எண்ணெய், தானியம் விறகு, மரமுமுள்ளவைகளும் ஜெர்மனிக்குத் தேவையாயிருக்கும். புத்திசாலிகளான சிலர் ஜெர்மனியானது ருஷ்யாவுடன் ராணுவ உடன்படிக்கை ஏற்படுத்த முயலுகிறதென்று சந்தேகிப்பதற்கு அநேக முகாந்திரங்களும் ரிப்போர்டுகளும் கிடைத்திருக்கின்றன. ஜப்பானிலிருந்து கிடைத்த ஆதாரத்திலிருந்து அப்படிப்பட்ட ஒப்பந்தம் முடிந்துவிட்டதென்று வெளியாகிறது. இதைப் பிறகு மறுக்கிறார்கள். ருஷ்யாவுக்குக் கிடைத்திருக்கும் சாமான்கள் அதற்கு அவசியமானவை. முற்றுகையின் காரணமாக அளவிடப்பட்டிருக்கும் ரப்பர், ஈயம், செம்பு இவைபோன்ற பொருள்களை ஜெர்மனிக்காக வெளிநாடுகளில் ருஷ்யா வாங்கியனுப்பியது ஜெர்மனிக்கு உபயோகமுள்ளதாயிருந்தது.

நெருங்கிய பொருளாதார சம்பந்தங்களுள்ள வகையிலும் ஜெர்மனியின் சங்கடங்களைத் தீர்க்கக்கூடிய வகையிலும் ஏற்படக்கூடிய ருஷ்யாவின் பூராவான ஒத்துழைப்பு ஜெர்மனிக்கு இன்னும் கிட்டவில்லை. ராஜீய சங்கடங்களால் இதற்குக் காரணங்கள் வெளியிடப்படவில்லை. அவர்களுக்குத் தேவையான பொருளாதாரங்களையும் உணவுப் பொருள்களையும் அடைவதற்கு ஜெர்மானியர்களை ருஷ்யாவுக்குள் நுழைய அனுமதிக்கவேண்டும். இந்த விஷயம் ருஷ்யாவுக்குத் தெரிந்ததுதான். தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரித்துவிட்டதால் ஜெர்மனிக்குத் தேவையான எல்லா சாமான்களையும் தயாரிக்கவேண்டியிருக்கிறது. அவைகளை ஏற்றிச்செல்ல அவர்களிடம் போதுமான ரயில்வண்டித் தொடர்கள் இல்லை என்று ருஷ்யாவிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இதற்குத் தேவையான நபர்களை ருஷ்யாவுக்குள் வரும்படி அவர்கள் அனுமதித்தால் இந்தப் பிரச்னைகளெல்லாவற்றையும் ஜெர்மானிய யந்திர நிபுணர்கள் தீர்த்துவிடுவார்களென்று ஜெர்மனி பதிலளிக்கிறது. ருஷ்யாவின் பொருளாதாரங்களை ஸ்வப்பிரயோஜனம் செய்துகொள்ள ஜெர்மனி சொல்லும் வியவகாரங்களும் அவைகளுக்கு பதிலும் உபயோகமற்றவை. ராஜீய சம்பந்தமான நெருக்கடிகளும் ஜெர்மனியின் தேவைகளும் நோக்கங்களும்தான் முக்கியமானவை. ஜெர்மனியின் சைனியங்களை அணிவகுத்திருப்பதிலிருந்து ருஷ்யாவைப் பொருளாதார வழியிலோ அல்லது ராணுவ முறையிலோ அல்லது இருவகையிலுமோ தாக்குவது என்ற அபிப்பிராயத்துடன் ஜெர்மனி ஏற்பாடு செய்துவருகிறதென்று புலப்படுகிறது. கருங்கடலில் அநேக இடங்களில் ஜெர்மானியத் துருப்புகளின் சேமிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கிரீஸ் தேசத்தை இதாலியர்கள் ஆக்கிரமணம் செய்யும்படி செய்துவிட்டு, லிபியாவில் நடக்கும் யுத்தத்துக்குத் தேவையில்லாத வீரம் பொருந்திய பெரிய சேனையை அங்கிருந்து வெளிப்படுத்திவிடுகிறதென்று ஜெர்மனி செய்திருக்கும் தீர்மானமானது இந்தச் சேமிப்புகளை பலப்படுத்துகிறது.

ஐரோப்பா கண்டம் பூராவும் ஜயித்து விட்டு, அங்கே சமீப காலத்தில் யாதொரு சண்டையும் போட அவகாசமில்லாதிருக்கும்பொழுது, ஜெர்மனி



யானது தன்னுடைய ராணுவ பலத்தின் பூரா வலுவையும் ருஷ்யாவின்பேரில் பிரயோகிப்பதற்கு அனுகூலமாயிருக்கிறது.

ஐரோப்பா கண்டத்திலுள்ள சில அறிவாளிகளின் அபிப்பிராயம் யாதெனில் "ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்குமுள்ள சம்பந்தங்கள் நெருக்கடியான நிலைமையை அடைந்திருப்பதற்கு, ஐரோப்பாவில் அநேக இடங்களில் விளைவுக் குறைவு ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுவதுதான் காரணம்". மற்றொரு மாரி காலத்துக்குமுன் யுத்தம் முடிவடையாதென்று ஹிட்லருக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. ஆகையால் எவ்வகையிலும் ஜெர்மனிக்கு உணவுப் பொருள்களை சம்பாதித்து விடவேண்டுமென்று ஹிட்லர் ஆசைப்படுகிறான். ஜெர்மனியின் அபிப்பிராயப்படி ருஷ்யாவானது ஐரோப்பாவின் களஞ்சியம். ஆகையால் தன் ஐச்வர்யங்களை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும்படி ருஷ்யாவைச் செய்துவிடவேண்டியதுதான் என்று நினைக்கிறார்கள்.

ஜெர்மனியின் தற்கால நோக்கம் எப்படி இருப்பினும், இப்பொழுது ஜெர்மனி செய்துவரும் ராணுவ வெருட்டலிலிருந்து ருஷ்யாவுக்கு அபாயம் நேரிடுமென்பது சந்தேகமில்லை. யூக்ரேனில் ஜெர்மனி பிரவேசிக்க வசதி இருக்கும்பொழுது, ருஷ்யாவுடன் ராணுவ ஒப்பந்தமோ அல்லது பொருளாதார ஒப்பந்தமோ, ஜெர்மனி வெற்றிகரமாகச் செய்து விடுமென்பதிலும் சந்தேகப்பட வேண்டியதில்லை. பொருளாதார முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், பிரிடனுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் நீடித்த யுத்தத்தை நடத்துவதற்குத் தனக்கு சக்தியேற்பட்டுவிட்டதென்று சொல்ல ஜெர்மனிக்கு இயல்பு உண்டாகும். ஜெர்மனியின் அபிப்பிராயப்படி, அநேக வருஷங்கள் யுத்தம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டாலொழிய ஜனநாயக வல்லரசர்கள் யுத்தத்தை முடிவு செய்ய சமாதானம் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ராணுவ ஒப்பந்தம் ஏற்பட்டால், ருஷ்யாவின் அபிப்பிராயப்படி சிலபக்கப் பிராந்தியங்களில் சண்டைபோடுவதைத் தவிர ஜெர்மானியர் பக்கத்தில் நின்று சண்டை செய்யாது என்றுதான் புலப்படுகிறது. ருஷ்யா செய்யக்கூடியது யாதெனில் மத்திய கிழக்குக்கு ஜெர்மன் துருப்புகள் செல்ல அனுமதிப்பதுதான்.

# பிரிடன், அச்சுநாடுகள் இவைகளின் கடற்படை பலம்.

## ஒரு பரிசோதனை.

மேமீ 28-ம் தேதியன்று டெயிலி டெலிகிராப் பத்திரிகையின் கடற்படை நிருபர் எழுதியது.

சமீபத்தில் நஷ்டமானவைகளையும் கணக்கிடாமல், பிரிடிஷ் கடற்படையில் 14 சண்டைக் கப்பல்களும் இரண்டு சண்டைக் க்ரூயிஸர்களுமிருக்கின்றன. அதாவது புதிதாய் கட்டப்பட்ட 5,000 டன் எடைமானமுள்ள சண்டைக் கப்பல்கள் கிங் ஜார்ஜ் V, பிரின்ஸ் ஆப் வேல்ஸ், இவைத் தவிர ட்யூக் ஆப் யார்க் என்பது சமீபகாலத்தில் முடிந்திருக்கவேண்டும். 30,000 டன்களுக்குக் குறைவான எடைமானமுள்ள நெல்ஸனும், ராட்னியும், 30,600 முதல் 31,100 டன்கள் எடைமானமுள்ள க்வீன் எலிஸபத் வகுப்பைச் சேர்ந்த 5 கப்பல்கள் இவைகளில் நான்கைத் திருத்தி அமைத்து நவீன முறையில் கட்டியிருக்கிறார்கள். 29,150 டன்கள் எடைமானமுள்ள ராயல் ஸாவரின் என்னும் வகுப்பைச் சேர்ந்த 4 கப்பல்கள், 32,000 எடைமானமுள்ள ரினோன், ரிபல்ஸ் என்னும் பெயருள்ள இரண்டு சண்டைக் க்ரூயிஸர்கள்.

இரண்டு சிறிய சண்டைக் கப்பல்களைத் தவிர எதிரிபக்கத்தில் ஜெர்மனிக்கு 3, இதாலிக்கு 5, சண்டைக் கப்பல்களுந்தான் பாக்கியிருக்கின்றன. இரண்டு சிறிய சண்டைக் கப்பல்களும் கவசம் பூண்ட க்ரூயிஸர்களைகிலும் பெரிய சண்டைக் கப்பலுடன் யுத்தம் செய்ய சக்தியற்றவை. ஜெர்மன் கப்பல்களாவன: பிஸ்மார்க்குடன் ஜோடியாய் சொல்லப்பட்ட 35,000 டன் எடைமானமுள்ள டிர்பிட்ஸ் ஒன்று. 26,000 டன்கள் எடைமானமுள்ள நீஸ்நௌ, ஷார்ன்ஹார்ஸ்ட் என்ற கப்பல்கள் ப்ரெஸ்டில் அடைபட்டுக்கிடக்கின்றன.

இதாலியின் கப்பல்கள் 35,000 டன்கள் எடைமானமுள்ள லிட்டோரியோவும் விட்டாரியோவெனடோவும். இவைகளில் ஒன்று சென்ற நவம்பர் மாதத்தில் டாரண்டோவில் கடற்படையிலிருக்கும் விமானங்களால் டார்பிடோ செய்யப்பட்டது. மற்றொன்று மடபான் யுத்தத்தில் அநேகம் டார்பிடோக்களால் அடிக்கப்பட்டது. துறைமுகத்துக்கு அடைவதற்கு முன்னால் விட்டாரியோவெனடோ மூழ்கிவிட்டதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதாலிக்கு ஏற்கனவேயிருந்த மூன்று சண்டைக் கப்பல்களை நூதன வழியில் திருத்தியமைத்திருக்கிறார்கள். அதாவது ஆண்ட்ரியா டோரியா, காலியோஸீஸரே, கேயோ டீலியோ (23,622 டன்கள் எடைமானமுள்ளவை). இவைகளில் ஒன்று டாரண்டோ துறைமுகத்தில் நாசமாகிவிட்டது.

## விமானங்கள் கொண்டுபோகும் கப்பல்கள்.

விமானங்கள் கொண்டுபோகும் கப்பல்கள் எதிரியிடம் இல்லையென்றே சொல்லலாம். இவ்வகையில் பிரிடனிடம் 8 கப்பல்கள் உள, ஜெர்மனி ஒன்று



கட்டிமுடித்திருக்கிறது. 19,250 டன்கள் எடைமானமுள்ள கிராப் ஸெப்பிளின். இதைப்போன்ற மற்றொன்று இன்னும் கட்டிமுடிந்ததாகத் தெரியவில்லை. இதாலி ஒன்றுமே கட்டவில்லை.

## க்ரூயிஸர்கள்.

க்ரூயிஸர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட இப்பொழுது பிரிடன் அதிக வலுவடைந்திருக்கிறது. 8" பீரங்கிகளுள்ள 15 க்ரூயிஸர்களும், 6" பீரங்கிகளுள்ள 43 க்ரூயிஸர்களும் பிரிடனிடமிருக்கின்றன. பின்னும் விமான எதிர்ப்பு வேலைக்காக முக்கியமாக வைக்கப்பட்ட ஆகாயத்தில் உயர அடிக்கக்கூடிய பீரங்கிகளுள்ள கவசங்களோடு கூடிய கப்பல்களுமிருக்கின்றன.

இந்த சங்கியைக்குப் பதிலாக ஜெர்மானியர்களிடம் அதிகமான கப்பல்கள் இல்லை. அவர்களிடம் 8" பீரங்கிகளுள்ள 4 க்ரூயிஸர்கள்தானிருக்கின்றன. அதாவது அட்மிரல் ஹிப்பர், ஸெய்ட்லிட்ஸ், பிரின்ஸ் யூஜென், மற்றொன்று (இதன் பெயர் ஆதியில் லூயெட்ஸௌ என்று, இப்பொழுது மாறிவிட்டது). 6" பீரங்கிகளுள்ள (வாஸ்தவத்தில் 5·93" தான் உள்ளவை) 4 க்ரூயிஸர்களுண்டு. அதாவது நூரென்பர்க், லீப்ஸிக், கோல்ன், எம்டன் இவைகளில் ஒன்றாவது நாசமாயிருக்கக்கூடும்.

இதாலியிடம் 8" பீரங்கிகளுள்ள 4 க்ரூயிஸர்களிருக்கின்றன. இவைகளில் இரண்டு டாரண்டோ எதிர்ப்பில் டார்பிடோவினால் கெடுதியடைந்துவிட்டன. 6" பீரங்கிகளுள்ள 9 அல்லது 10 க்ரூயிஸர்கள், மடபானில் ஒன்று மூழ்கியிருக்கலாம். சென்ற யுத்தத்துக்கு முன்னிருந்தே இருந்து வரும் சண்டைக்கு லாயக்கில்லாத இரண்டு பழைய க்ரூயிஸர்களுமிருக்கின்றன.

## நாசகாரிகள்.

பிரிடனிடம் 247 நாசகாரிகளிருக்கின்றன. இவைகளில் யுத்த ஆரம்பத்திற்குப் பிறகு உத்தரவின் பேரில் கட்டப்பட்டு உபயோகத்திலிருந்து வருபவைகளும் சேர்ந்ததுதான். ஜெர்மனியிடம் 24 இருக்கலாம், 600 முதல் 800 டன்கள் எடைமானமுள்ள டார்பிடோ உள்ள 40 படகுகளுமிருக்கக்கூடும். இதாலியிடம் 40 நாசகாரிகளும் டார்பிடோ படகுகளில் 50-ம் இருக்கின்றன. இவைகளில் அநேகம் வெகு நாளானவை. ஆகையால் வேலைக்கு லாயக்கில்லாதவை.

## ருமேனியாவில் உணவுப் பொருள்களின் குறைவு.
## ஹங்கேரியின் செலவில் இதாலி லாபமடைகிறது.
## விமானத்தாக்குதலிலின்றும் தப்பித்துக்கொள்ள நாஜிகள் போலந்தில் தங்குகிறார்கள்.

*ஆக்கிரமிப்பு நாடுகளின் நிலைமையைப்பற்றி ஒரு விபரத்தில் மேமீ 25-ந் தேதியன்று ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் விசேஷ நிருபர் எழுதியது.*

ருமேனியாவில் உணவுப்பொருள்களின் குறைவு அதிகமாயிருக்கிறது. அடிக்கடி ருமேனியாவின் அதிகாரவர்க்கத்தார், இந்த இல்லாமைக்கு ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு சேனை இங்கிருப்பது காரணமில்லையென்று வீணாகச் சொல்லி வருகிறார்கள். ஜெர்மானியர்கள் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை எடுத்துக்கொள்வதில் தயங்கவே இல்லை.

ஐரோப்பாவில் ஏராளமாக கோதுமை தானியம் விளையக்கூடிய ஒரு நாட்டிலேயே ரொட்டிகூட பங்கிட்டுக்கொடுக்கப்படுகிறது. சாப்பாடு சம்பந்தமாகக் கலகங்கள் பரவுகின்றன. அகாரணமாக அந்த தேசத்திலுள்ள பெரிய மாவு மில்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் நிர்வாகக்குறைவினின்றும் நிலைமை கெடுதலடைந்து வருகிறது.

அன்டோனெஸ்கு செய்துவரும் 'எல்லோரையும் ருமேனியர்களாக ஆக்குதல்' என்ற ஏற்பாட்டுக்கு அநேக இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன.

வியாபார முதல்களில் 100க்கு 90 விதம் பாத்தியமுள்ள யூதர்களிடமிருந்து சொத்துக்களையெல்லாம் வாங்கி அதற்குப் பணம் 20 அல்லது 30 வருஷக் கெடுவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுப்பதாகவும், சொத்துக்களை ருமேனியர்களுக்கு விற்றும் விற்பனைத்தொகையை அவர்களும் 20 முதல் 80 வருஷத்திற்குள் கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

உண்மையில் அநேகம் தொழில்கள் ஜெர்மானியர் வசமாகிவிட்டன. ஆகையால் அதிருப்தி பரவிக் கொண்டிருக்கிறது. "ஒரு பரதேசஸ்தனுக்குப் பதிலாக மற்றொருவன் வரப்போகிறான்" என்று சொல்லுகிறவர்களெல்லாம் கடுமையான சிக்ஷைக்கு உள்ளாக்கப் படுவார்களென்று அன்டோனெஸ்கு பகிரங்கப்படுத்தும்படியாக ஆகிவிட்டது.

### பல்கேரியா.

ஸலோனிகாவிலுள்ள பல்கேரியாவைச் சேர்ந்த ராணுவ அதிகோஷ்டியார் ஜெர்மன் துருப்புகளிடமிருந்து நகரத்தைக் கைப்பற்றிக் கொள்ளத் தயாராகயிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் துறைமுகத்தையும் விமான நிலயத்தையும் பாதுகாத்து வருவார்கள். பல்கேரியாவின் துருப்புகளிடம் நகரத்தை ஒப்படைத்துவிட ஜெர்மானியர்கள் தயாராகயிருக்கிறார்கள். இதற்குக் காரணம், பல்கேரியாவுடன் ஸலோனிகாவைச் சேர்த்து விடுவது என்று சொன்னவாக்குறுதியை ஜெர்மனி நிறைவேற்றவேண்டுமென்று ஜெர்மனி சார்பாகயிருக்கும் பல்கேரியர்கள் அடிக்கடி வற்புறுத்துகிறார்கள்.



துருக்கிபக்கமிருக்கும் எல்லைச் சரகத்தை மூடிவிட்டார்கள். ஏனென்றால், பல்கேரியா ஆக்கிரமித்துவிடுமோ என்று பயந்த ஒவ்வொருவரும் மேற்கு திரேஸிலிருந்து துருக்கிக்கு அடைக்கலம் புகுறுகிறார்கள்.

### ஹங்கேரி.

புடாபெஸ்டில் குரோஷியாவைப்பற்றிய ஏற்பாட்டைப்பற்றி அதிருப்தியானது பகிரங்கமாக வெளியிடப் படுகிறது. ஹங்கேரியில் பார்டாஸி தலைமை வகிக்கும் உத்தியோகஸ்தர்களின் கக்ஷியான "ஜீவன இயக்க"த்தின் அங்கத்தினர்களும் கூட ஹங்கேரியின் மந்திரி சபை சரியானபடி நடக்கவில்லையென்று வெளிப்படையாய்த் தெரிவிக்கிறார்கள்.

குரோஷியாவை ஹங்கேரிக்குக் கொடுத்துவிடுவதாகப் பேசப்பட்டது. குரோஷியாவின் சிங்காசனத்தில் இதாலி அரசரின் மருமகனை ஸ்தாபித்து ஸ்லாவ் தேசத்தை இதாலிய சாம்ராஜ்யத்தின் எல்லைச் சரக காபந்தாகச் செய்திருப்பது ஹங்கேரிக்கு மூஞ்சியில் அடித்தமாதிரி இருக்கிறது.

புடாபெஸ்டில் அதிருப்தி மிகவும் அதிகமாகயிருப்பதனால்தான், ஸ்பாலெடோ பிரபுக்கு குரோஷியாவின் கிரீடத்தைக் கொடுத்த சமயத்தில் நடந்த சடங்குகளுக்கெல்லாம் ரோமிலிருக்கும் ஹங்கேரிய தூதர் போகவில்லை. ஏற்பாட்டின் தாத்பரியம் என்னவென்று புடாபெஸ்டிலுள்ளவர்கள் நன்றாய் அறிகிறார்கள். பிரெஞ்சு ராஜ்யத்தில் கொஞ்சமேனும் இதாலிக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை விட்டுவிடும்படி இதாலிக்கு ஹிட்லர் அறிவித்து விட்டான். ஹிட்லர் இதை டார்லானுக்கு வாக்குத்தத்தம் செய்துவிட்டான். ஆகையால் சிறிய அச்சு நாடுகளுக்கு வாக்களித்திருந்த தேசங்களையெல்லாம் முஸோலினி எடுத்துக்கொண்டு விட்டான். ஹங்கேரிக்கு நஷ்டமும் முஸோலினிக்கு லாபமும் கிடைத்து விட்டது.

### யூகோஸ்லாவியா.

மூன்று நாட்கள் இடைவிடாது வெடிகுண்டுகள் போட்டு நாசமடைந்த பெல்கிரேட்டின் கட்டடங்களின் தூள்களை மும்முரமாக வெளிப்படுத்துகிறார்கள். மேமீ 1 தேதிக்குமுன் 10,000 சங்கியையுள்ள மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகளின் பிரேதங்கள் தேடியெடுக்கப்பட்டிருக்கின்றன. இடிந்த தூள்களை அப்புறப்படுத்துவது தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இன்னும் 5,000 பிரேதங்கள் எடுபடக்கூடுமென்று அதிகாரிகள் மதிக்கிறார்கள். காயம் பட்டவர்களுள்பட 60,000 பேருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று தோன்றுகிறது.

சிகிச்சை வசதிகள் போதுமான அளவு கிடையாது. அநேகம் தடவை காயம் பட்டவர்களை ஸாக்ரப்புக்குக் கொண்டுபோகவேண்டியதாயிற்று.

யூகோஸ்லாவியாவின் எதிர்ப்பு பிரயோஜன மற்றதாகப்போய்விட்டதற்கு துருப்புகளைச் சரியானபடி அணிவகுக்காததுதான் காரணமென்றும் அதற்கு

ஸெட்கோவிச் அலாத்தனத்தாரின் மெம்பர்கள் தான் காரணம் என்றும் தீவிரமான உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பெல்கிரேட்டில் பகிரங்கமாக இந்த உணர்ச்சியை வெளிக்காட்டவேயில்லை. அவர்களில் அநேகர் ஸாக்ரப் பிரதேசத்தில் வசித்துவருகிறார்கள். இங்கு குயிஸ்லிங் அரசாங்கமானது அவர்களைக் காப்பாற்றி வருகிறது.

## போலந்து.

போமரேனியாவிலும், போஸேனியாவிலும் வெளியாகும் ஜெர்மன் பத்திரிகைகளில், ஜெர்மனியிலிருந்து அநேக சுற்றுப் பிரயாணிகள் ஜெர்மனியோடு சேர்க்கப்பட்ட போலிஷ் மாகாணங்களில் நீண்டகாலமாகத் தங்கிவருகிறார்களென்று வெளியிடுகிறார்கள். இம்மாதிரியான நிலைமையை நாம் பொறுத்துக் கொள்ளமுடியாதென்று பேபர்களில் அறிவிக்கிறார்கள். இந்த இடங்களிலுள்ள போஜன சாலைகளில் சாப்பிடுபவர்களுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படுமென்றும் நினைக்கிறார்கள்.

பிரிடிஷ் விமானப்படையின் குண்டு வீச்சிலிருந்து தப்பிக்க, ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸான்லாந்துப் பிரதேசத்தையும் ஜெர்மானியத் துறைமுகங்களையும் விட்டு ஓடிவிட்டார்கள்.

## ஹாலந்து.

தங்கள் அரசிடம் விசுவாசமுள்ளவர்களே ஹாலந்திலிருக்கும் நாஸிகளை அருவருப்புடன் மதிக்கிறார்களென்பதற்கு ஒவ்வொருநாளும் டச்சு நாஸிகளிடமிருந்தே புதிதாக சாக்ஷியம் கிடைக்கிறது. நாஸிகளின் பத்திரிகையான நாஷனல் டாக்பளாட்டில் ராட்டர்டாமில் நாஸிகளுக்கு எதிரிடையாக புரளிகள் வெளிப்படையாக அதிகரித்துவருகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. தெருக்கள் வழியாக நாஸிகள் சேர்ந்து சுற்றும்பொழுது வீட்டுக்கூரைகளிலிருந்து வெடிகள் போடப்பட்டன. ஓடுகள் மழைபோல எறியப்பட்டன. சமீபத்தில் நடந்த கலவரத்தில் 15 போலீஸ்காரர்கள் காயமடைந்தனர்.

ஜனங்களுக்கு ஒலிபரப்பியதில் கியாதிபெற்ற டச்சு நாஸி பிரமுகர் வருத்தத்துடன் பின் வருமாறுபேசினார்.

நாஸிகளுடைய ஸ்தாபனம் என்பதனால் "மாரிகால உபகார நிதி"க்கு ஒன்றும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லும் ஒரு டச்சுக்காரன் நாஸிகள் வீட்டுக்கு முன்னால் தேசிய கீதங்களைப்பாடும் தெருப் பாடகனுக்கு சந்தோஷமாக ஒரு கில்டர் கொடுக்கிறான்".

---

## கிரீட்.

கிரீட் யுத்தத்தின் லாப நஷ்டங்களைப்பற்றி எழுதும்பொழுது, டாக்டர் கோயபல்ஸ் சொல்லுகிறபடி நமது நிலை அவ்வளவு பயங்கரமாக இல்லையென்று முதலில் மூர்த்தியே சொல்லியிருக்கிறோம்.



சேதங்களைப்பற்றி சில முக்கியமான கணக்குகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. வியாக்கியானமன்னியில் அவைகளை இங்கு பிரசுரிக்கிறோம்.

பிரிடனுடைய முகான்மையான சைனியத்தில் கொல்லப்பட்டவர்களும், காயம்பட்டவர்களும், காணமல்போனவர்களும் சேர்ந்து ஒரு வகுப்பு (division)க்குக் குறைச்சலாகவே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நடுநிலை வகிப்பவர்களின் அபிப்பிராயப்படி ஜெர்மனிக்கு கிட்டத்தட்ட 86,000 நபர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கும். சண்டையில் ஈடுபட்ட கவசம் பூண்ட டிவிஷன்களில் 36,000 நபர்களும், காலாட்படையில் 17,000 நபர்களும், மலைகளில் சண்டை செய்த டிவிஷன்களில் 23,000 நபர்களும், ஹிட்லருடைய சொந்த சேனையிலிருந்து (அதாவது அடால்ப் ஹிட்லர் டிவிஷன்) 10,000 நபர்களும் நஷ்டமடைந்துவிட்டார்கள். அதாவது, ஜெர்மனியின் நஷ்டங்கள் பிரிடிஷாருக்கு ஏற்பட்டதைவிட ஆறு மடங்குக்குக் குறையாமல் ஏற்பட்டிருக்கும். குறைந்த பக்ஷம் 200 ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களும், சண்டை விமானங்களும், துருப்புகள் ஏற்றிச்செல்லும் விமானங்களும் யூகோஸ்லாவிய, கிரேக்க, பிரிடிஷ் விமானங்களாலும் விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும் நாசமாக்கப்பட்டன. ஆதென்ஸ் பேரில் நடந்த ஒரே விமானப்போரில் பிரிடிஷ் விமானப்படை 22 ஜெர்மன் விமானங்களை சுட்டுத்தள்ளிவிட்டது. யூகோஸ்லாவியாவில் யுத்தம் ஆரம்பித்தபொழுது ஜெர்மனிக்கு சொந்தமான 700 டாங்கிகளில் 200 நாசமடைந்துவிட்டன.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### முஸோலினி (Mussolini) வேறு விதமாகச் சொல்லுகிறார்.

இதாலி (Italy) யுத்தத்தில் இறங்கி ஒரு வருஷம் பூர்த்தியான தினத்தன்று பேசிய பேச்சை பெர்லின் ரேடியோ ஜூன் மாதம் 12-ம் தேதியன்று ஒலிபரப்பியது.. அதில் அவர் இதாலிக்கும், கிரீஸு (Greece)க்கும் அல்பேனியா (Albania)வில் நடந்த சண்டையைப்பற்றி விவரமாக எடுத்துரைத்தார். "அக்டோபர் மாதத்திலிருந்து மே மாதத்தின் கடைசிவரை இதாலிக்கு 14,502 ஸோல்ஜர்கள்நஷ்டம்." ஆனால் அவர் அவருடைய யுத்த இலாகா கொடுத்திருந்த

கணக்கை ஒப்பவில்லை போலும். யுத்த இலாகா வெளியிடும் மாதாந்திர அறிக்கைகளிலிருந்து பின் வரும் கணக்கு வெளியாகியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| உயிர் துறந்தவர்கள் | ... | ... | 13,157. |
| காயம்பட்டவர்கள் | ... | ... | 38,064. |
| கணக்கில் வராதவர்கள் | ... | ... | 25,513. |

"நாம் கிரீஸை வஞ்சம் தீர்த்துக்கொண்டோம்" என்று முஸோலினி (Mussolini) உறுமினார். ஆனால் அன்றையதினமே இதாலிய யுத்த இலாகா மே மாத அறிக்கை அந்த மாதத்தில் இதாலிக்கு ஏற்பட்ட "நிச்சந்தேகமான" நஷ்டத்தை வெளியிடுகிறது.

## கிரீஸ்—அல்பேனிய எல்லையிலும்; அல்பேனியா—யூகோஸ்லாவியா எல்லையிலும்.

| | | | |
|---|---|---|---|
| உயிர் துறந்தவர்கள் | ... | ... | 1,430. |
| காயம்பட்டவர்கள் | ... | ... | 4,123. |
| காணாமல் போனவர்கள் | ... | ... | 223. |

## இதாலியா—யூகோஸ்லாவிய எல்லை.

| | | | |
|---|---|---|---|
| உயிர் துறந்தவர்கள் | ... | ... | 14. |
| காயம்பட்டவர்கள் | ... | ... | 24. |

இந்தக் கணக்கெல்லாம் மே மாதத்தில் ஏற்பட்டவை. ஏப்ரல் 18-ம் தேதி யூகோஸ்லாவியா (Yugoslaiva) சைனியம் சரணாகதி அடைந்து விட்டது. ஏப்ரல் 23-ம் தேதியே அல்பேனிய எல்லையிலிருந்த கிரேக்க சைனியமும் சண்டையை நிறுத்திவிட்டது. அநேகமாக ஏப்ரல் 30-ம் தேதிபோது கிரீஸ் (Greece) தேசத்திலேயே சண்டை நின்றுவிட்டது.

ஆகையால் மே மாதத்தில் இதாலிக்கு இவ்வளவு நஷ்டமென்றால் அங்கு பல இடங்களில் இன்னும் சின்னச் சண்டைகள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. முஸோலினி (Mussolini) கிரேக்கர்கள் மேல் பழி தீர்த்துக் கொண்டதாக அறிவித்தாலும் யூகோஸ்லாவியாவும், கிரேக்கர்களும் இன்னும் அப்படி நினைத்துக்கொண்டிருக்கவில்லை. அங்கே ஹிட்லர் இதாலிய சைனியங்களை காவல் காக்க வைத்திருக்கிறார். முஸோலினியுடைய 80 லக்ஷம் சைனியங்கள் அதற்குத்தான் லாயக்கு என்று ஹிட்லர் (Hitler) நினைத்துக்கொண்டிருக்கிறார் போலும். கிரேக்கர்களும், யூகோஸ்லாவியர்களும் தங்களுடைய பழியை அவர்களிடையே தீர்த்துக்கொள்கிறார்கள் போலும்.

## பெர்லினும், (Berlin) டோக்கியோ (Tokyo)வும்.

பிரசாரத் துறையில் அச்சு நாடுகளின் மூன்று கூட்டாளிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்பது கோயபெல்ஸ் (Goebbels)ன் தீவிரமான எண்ணம். ஆனால்



அப்படி இருப்பதில்லை. உதாரணமாக ஜூன் மாதம் 10-ம் தேதியன்று பெர்லின் ரேடியோ எண்ணிக்கையில் அதிகமாயிருக்கும் பிரிடிஷ் துருப்புகளை விஷி (Vichy) சைனியங்கள் தைரியமாக எதிர்த்துப்போராடுகின்றன என்று கூறிற்று.

ஆனால் அதற்கு முதல் நாள் தான் டோக்கியோவிலிருந்து பின் வரும் செய்தி வெளியாயிற்று. "பிரிடிஷ் துருப்புகளும், டிகால் (De Gaulle) துருப்புகளுமாகச் சேர்ந்து 20,000 பேர்கள் தான் இருக்கிறார்கள். பிரெஞ்சு சைனியத்திலோ 40,000 அல்லது 50,000 துருப்புகள் இருக்கின்றனர். அதில் பலர் ராணுவ உத்தியோகஸ்தர்கள். ஆகையால் பிரிடிஷ் சைனியத்தைக்காட்டிலும், பிரெஞ்சு சைனியம் அதிக பலம் வாய்ந்தது.

## ஆபிரிக்காவில் ஜெர்மன் முன்னேற்றத்தின் வேகம்.

ஜூன் மாதம் 12-ம் தேதி ஜெர்மன் ரேடியோ ஆபிரிக்காவில் தான் பெற்ற வெற்றியைப்பற்றி ஜம்பமடித்துக் கொண்டது. "பலங்கொண்ட பிரிடிஷ் சைனியத்தை எதிர்த்து ஜெர்மன் ஆபிரிக்கப்படை இரண்டே மாதத்தில், 1,100 மைல்களுக்கு மேல் முன்னேறியிருக்கிறது."

1,100 மைல்கள் என்று ஜெர்மன் ரேடியோ சொன்னது ட்ரிபோலி (Tripoli)யிலிருந்து எகிப்திய எல்லை வரையில். ஆனால் பிரிடிஷ் சைனியமோ எல் அகிலா (El Agheila) விற்கு மேற்கே இல்லவேயில்லை. ஆகையால் அவர்கள் சொன்ன 1,100 மைல்களில் பாதி தூரம், எதிர்ப்பு இல்லாமல் முன்னேறி விட்டனர். மற்றொரு பாதியில் [அதாவது ஸோலம் (Sollum)லிருந்து எல் அகிலா (El Agheila) வரை] ஒரே ஒரு பிரிடிஷ் கவசமணிந்த படையும், ஒரு காலாட்படையும் தானிருந்தது. ஏனென்றால் எகிப்திலிருந்த சைனியத்தில் 4 படையை கிரீஸு (Greece)க்கு அனுப்பியாகி விட்டது.

இத்துடன் பிரிடிஷ் படைத்தலைவர் வேவல் (Wavell) செய்திருக்கும் காரியத்தைக் கவனிப்போம். இரண்டு மாதத்தில் 800 மைல்கள் பிரிடிஷ் சைனியங்கள் முன்னேறியதுமில்லாமல் எட்டு இதாலிய பட்டாளங்களையும் கைதியாக்கியிருக்கிறார்கள்.

## பிரிடிஷ் மனோபாவம்.

பிரெஞ்சு சைனியங்களை முன்னே வைத்துக்கொண்டு ஸிரியாவில் பிரிடிஷ் சைனியங்கள் முன்னேறுவதிலிருந்து பிரிடிஷாருடைய குணம் தெரிந்து விட்டது என்று ரோம் (Rome) ரேடியோ ஜூன் மாதம் 8-ம் தேதி கூறிற்று. "பிரெஞ்சுக்காரர்களையே ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும்படியாகச் செய்து விட்டார்கள்" என்று பிரிடிஷார் மீது குறைகூறிற்று.

ஜெனரல் காட்ரு (Catroux)வின் பிரெஞ்சு சைனியங்கள் முன்னேறும் இடங்களைத் தவிர, பல இடங்களில் பிரிடிஷ் சைனியங்களும் பிரெஞ்சு சைனியங்களின் ஒத்தாசையில்லாமல் முன்னேறுகின்றன. ஜெனரல் டீ காலி (De Gaulle)ன் சைனியங்களை எதிர்க்கும் ஸிரியா பிரெஞ்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் அல்ல.

தேசத்துரோகிகள், அவர்கள் தங்கள் தேசமாகிய பிரான்ஸை (France) காட்டிக்கொடுத்ததுமல்லாமல், ஸிரியா (Syria)விற்குள் ஜெர்மன் சைனியங்களுக்கு இடங்கொடுத்து, தங்கள் நேச நாடான பிரிடனையும் காட்டிக்கொடுத்து விட்டார்கள்.

ஸிரியா (Syria)வை ஜயிப்பதற்காக பிரிடிஷ் சைனியங்கள் ஸிரியாவைத் தாக்கவில்லை. பிரிடிஷாரும் சுதந்திர பிரெஞ்சுப் படைகளும் நிஜமான பிரான் (France)ஸை அதனுடைய விரோதிகளாகிய ஜெர்மானியரிடமிருந்தும் உள்நாட்டிலேயே இருந்து அவரைக் காட்டிக்கொடுக்கும் தேசத்துரோகிகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்காகவே ஸிரியாவின் பேரில் படையெடுத்திருக்கிறார்கள்.

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### அலெக்ஸான்டிரியா (Alexandria) வின் பேரில் காட்டு மிருண்டித்தனமான விமானப்படையெடுப்பு.

மிகவும் வெற்றிகரமாக அலெக்ஸான்டிரியா (Alexandria)வை விமானங்களால் தாக்கினதாகவும், குறி தவறாமல் பிரிடிஷாரின் யுத்த தளவாடங்கள், கடற்படை தளங்கள் பேரில் தாக்கினதாகவும் பெர்லின் (Berlin) ரேடியோ ஜூன் மாதம் 9-ம் தேதி இந்துஸ்தானி, பர்ஷியன், அராபிக் பாஷைகளிலெல்லாம் ஒலிபரப்பிற்று. வாஸ்தவமாகவே இது கடுமையான தாக்குதலாயிருந்தாலும், ஒரு பிரிடிஷ் யுத்தக் கப்பல் பேரிலாவது, ராணுவ முக்கியமுள்ள இடத்திலாவது குண்டுகள் விழவேயில்லை. முக்கியமாக பொதுஜனங்களே இதனால் கஷ்டப்பட்டவர்கள். ஐரோப்பியர்கள், அராபியர்கள் வசிக்கும் வீதிகளுக்குப் பெருத்த சேதம், பல நூற்றுக்கணக்கான பொதுஜனங்களுக்குக் காயம். பலர் மாண்டனர்.

### துணைக்காவல் படைக்கு பெரிய பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள்.

பிரிடனுக்கு கடலில் கடற்படைக்கு நஷ்டம் அதிகமாகையால் துணைக் காவலுக்கு பெரிய யுத்தக் கப்பல்களை பிரிடன் அனுப்ப வேண்டியதாயிருக்கிறது என்று ஜூன் மாதம் 13-ம் தேதி பெர்லின் ரேடியோ இந்துஸ்தானி, பர்ஷியன் பாஷைகளில் ஒலிபரப்பிற்று. இம்மாதிரி பெரிய யுத்தக் கப்பல்களை பிரிடன் துணைக்காவலுக்கு அனுப்புகிறது அதனுடைய பலத்தைக் காண்பிக்கிறதே ஒழிய, அதனுடைய பலஹீனத்தை அல்ல. ஜெர்மனிக்கு கடற்படை இல்லாததால் இங்கிலாந்து தைரியமாக பெரிய யுத்தக் கப்பல்களை வேறு வேலைகளுக்கு அனுப்ப முடியும். யுத்தத்தின்போது ஜெர்மனிக்கு இருந்த 7 பெரிய யுத்தக் கப்பல்களில் டர்பிட்ஸ் (Tirpitz) என்ற ஒரு பெரிய யுத்தக் கப்பல்தான் பாக்கியிருக்கிறது. ஒரு பாக்கட் (Pocket) யுத்தக் கப்பலும் ஜெர்மனிக்கு இருக்கிறது.



### பாலஸ்தீனமும், ஜெர்மனியின் நோக்கமும்.

பிரிடன் அராபியர்களை மிகவும் அதிகமாக துன்பப்படுத்துகிறது என்று யாரோ ஒரு அல்லாமா பாஸி (Allama Fanzi) என்கிற அராபிக்காரன் சொன்னதாக ஜூன் மாதம் 10-ம் தேதி இந்துஸ்தானியிலும், அராபிக் பாஷையிலும் பெர்லின் ரேடியோ கூறிற்று. ஜெர்மானியர் எவ்வளவு தூரம் மறுத்துக் கூறினாலும் ஜெர்மானியரின் நோக்கமும், மனோபாவமும் அராபியர்களுக்குத் தெரியாமலில்லை. நாஸிகளின் மனோபாவத்தை பாலஸ்தீன (Palestine) பத்திரிகையான "பாலஸ்தீன்" (Palestine) பின் வருமாறு எடுத்துக் காட்டுகிறது. "ரஷீத் ஆலி (Rashid Ali) யவரை விட்டு ஓடியதிலிருந்து ஜெர்மனி ஆபத்திலிருக்கும் நண்பனுக்கு ஒத்தாசை செய்யவில்லை என்று வெட்டவெளிச்சமாகி விட்டது. ஜெர்மனியின் ஒரே நோக்கம் பல தேசங்களில் உள் நாட்டுக் கலகங்களைக் கிளப்பி விட்டு அத்தேசங்களுடைய சுதந்திரத்தை அபகரித்து" தரித்திரம், பஞ்சம், ஒற்றுமையில்லாமையாகிய இவைகளை அடிப்படையாகக்கொண்ட ஜெர்மனியின் "புதுக்கொள்கையில்" (New order) சேரும்படி செய்வதுதான்."

### உண்மையில் நடக்காத ஜெயில் கலகங்கள்.

ஜூன் மாதம் 11-ம் தேதி நாஸி ரேடியோ இந்துஸ்தானியில் பின்வருமாறு அறிவித்தது. "இந்தியாவில் பல இடங்களில் ஜெயில்களில் போலீஸாருக்கும், கைதிகளுக்கும் கலகங்கள் ஏற்பட்டதாக இந்தியாவின் பல இடங்களிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதற்காக பிரிடிஷ் சைனியத்தின் உதவியைக் கொண்டு போலீஸார் பல கைதிகளை சுட்டுக்கொன்றனர். பலரைக் காயப் படுத்தினர்."

இந்தியாவிலிருக்கும் நமக்கு இன்னும் விவரமாக விஷயங்களைச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். எந்த இடத்தில் எப்பொழுது இம்மாதிரி நடந்தது என்று நாஸி ரேடியோ அறிவிக்க முடியுமா. (ஜூன் 15-ம் தேதி வரையில் இக் கேள்விக்கு நாஸி ரேடியோ பதிலளிக்கவேயில்லை).

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் L.

1941—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | மணி. |
| ஜூன் | ...28, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 29, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் | ... | ,, | 6.30 |
| | 30, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| ஜூலை | 1, செவ்வாய்க்கிழமை. | குழிபிறை | ... | ,, | 6.00 |
| | | கந்தரம் | ... | ,, | 6.30 |
| | 2 புதன்கிழமை ... | கோட்டைக்காடு | ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| | 3. வியாழக்கிழமை ... | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | | ராயவரம் | ... | ,, | 6.30 |
| | 4. வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் LI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | ,, | 6.30 |
| 6, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... | ,, | 6.00 |
| | விஜூர் | ... | ,, | 6.30 |
| 7, திங்கட்கிழமை ... | செம்பட்டிவிடுதி | ... | ,, | 6.00 |
| | மழையூர் | ... | ,, | 6.30 |
| 8, செவ்வாய்க்கிழமை. | காரையூர் | ... | ,, | 6.00 |
| | இடையாத்தூர் | ... | ,, | 6.30 |
| 9, புதன்கிழமை ... | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| 10, வியாழக்கிழமை. | கார்த்தாமலை | ... | ,, | 6.00 |
| | உப்பிலியக்குடி | ... | ,, | 6.30 |
| 11, வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் | ... | ,, | 6.00 |
| | வேகுபட்டி | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—28-6-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஜூலை 5உ [ந. 51.

பிரஸங்கம் LI.

## கடலாதிக்கமும் அதனாலாவதும்.

ஐரோப்பா என்ன, இதர பிரதேசங்கள் என்ன இவைகளின் ரத்தகளமான யுத்த பூமிகளில் தற்பொழுது நடந்தேறும் கோரமான, ஆனால் கவர்ச்சியுள்ள, உலக நாடகத்தில் எதிர்காலத்தைப்பற்றி மனதில் குதுகுதுக்கும் ஒரு பிரச்னை இதுதான்—நில ஆதிக்கம், நீர் ஆதிக்கம், வான் ஆதிக்கம் இம்மூன்றில் எது மற்ற இரண்டையும் வெல்லப்போகின்றது, என்பது. சரித்திரமும் இதுவரை கிடைத்திருக்கும் அனுபவமும் உண்மை வழிகாட்டிகளாயின் ஒரே ஒரு பதில்தான் சந்தேகம் அற இருக்கக்கூடும்—அது கடல் ஆதிக்கம்தான்.

கடல் ஆதிக்கம் என்றால் என்ன? ஒரு விரோதியையோ அல்லது ஒரு கூட்டத்தினரையோ குறிப்பிட்டகாலத்தில் அல்லது பலதடவைகளில் கடல் யுத்தத்தில் ஜயிக்கக்கூடிய சக்தியை அது குறிக்கின்றது. இதுதான் அதனுடைய முக்கியார்த்தம். ஆனால் நெப்போலியன் காலம்முதல் ஒருதேசம் கடல் போக்குவரத்துகளை தடைபடாமலும் சௌகரியமாகவும் காபந்து செய்துகொள்ளக்கூடிய சக்தியை அது குறிக்கின்றது. போக்குவரத்து என்பது படைகளை ஏற்றி இறக்குவதாய் இருக்கலாம், அல்லது உணவுப்பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதியாய் இருக்கலாம். இது தன்னைப்பொறுத்தமட்டில். இதற்கு எதிரிடையாக சத்துருவைப் பொறுத்தமட்டில் அதன் போக்குவரத்து சாதனங்களை அடைத்து, அதற்கு ஏற்றுமதி இறக்குமதி இல்லாமல் குறுக்கிட்டு, பொருளாதார முற்றுகை மூலம் அதன் மென்னியைப் பிடிப்பதும் முக்கியமாகிவிட்டது.

## சரித்திர படிப்பினை.

ஆதிகாலம் முதல் கடலோரத்திலுள்ள நாடுகள், அதிலும் இங்கிலாந்து, ஜப்பானைப்போல் தனி தீவுகளாகில், பூகண்டத்துடன் பிணைக்கப்பட்ட நாடுகளைக் காட்டிலும் சிலாக்கியமான நிலைமையில் இருந்துவருகின்றன. சரித்திரத்தில் முதலில் கவனிக்கப்படுவதும் உலகத்தில் எதிர்காலத்தை பாதித்ததும் 480 கி. மு.வில் நடந்த ஸாலமிஸ் கடல் யுத்தம். ஸெர்க்ஸஸ் தன் கடற்படை முழுவதும் கிரேக்கர்களால் நாசமடிக்கப்பட்டதை அந்த யுத்தத்தில் தன் கண்ணாலேயே கண்டான். தரையில் அவன் படை பலம் பன்மடங்கு அதிகமாய் இருந்தும், உணவுப் பொருள்கள் தனக்கு கிட்டேறாது என்று பயந்து அவன் பின்வாங்கி ஓடிவிட்டான். இதனால் மேல்நாட்டு நாகரீகமும், கலாசாரங்களும், நிலைநின்றன; "இவைகள் கிரீஸ் உலகிற்கு அளித்த பிச்சை." அடுத்த முக்கியமான யுத்தம் ரோமுக்கும் கார்த்தேஜிக்கும். முதல் ப்யூனிக் யுத்தத்தில் நடந்த ஸிஸிலியன் யுத்தம் 241-கி. மு. ரோமுக்கு அதற்குமுன் கடற்படை கிடையாது. மத்தியதரைக்கடலின் ஆதிக்கம் தனக்கு கிட்டாவிடில் எதிர்காலத்தில் தனக்கு க்ஷேமமான வாழ்வில்லை என்பதை அது உணர்ந்தது. உடனே ஒரு கடற்படை சிருஷ்டித்து கடைசியில் அது இறுதி ஒன்றை நிர்ணயிக்கும் யுத்தத்தையும் ஜயித்தது. இதனால் ரோம அரசாங்க முறைகள், ரோம் சட்ட முறைகள் இவைகள் உலகில் பரவின. இவைகள்தான் நவீன அரசாங்கங்களின் அஸ்திவாரம். 31 கி. மு. வில் ஆக்டியம் கடல் யுத்தம் உலகில் முதல் சக்ரவர்த்தி யார் என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்தது. மார்க் அந்தோனியை விலக்கி அகஸ்டஸ் ஸீஸருக்கு முடி அளித்தது. டேன் கடற்கொள்ளைக்காரர்களை ஓட்ட ஆல்ப்ரெட் நிறுவிய கப்பல்கள்தான் பின் ஆங்கிலக் கடற்படையின் ஆரம்பம். 1300 முதல் 1453 (கான்ஸ்டாண்டிநோபிளை துருக்கர்கள் பிடித்தவரை) இதாலிய ரிபப்ளிக்குகளுக்கு கடலாதிக்கம் இருந்ததால் செழித்தோங்கின. 15-வது நூற்றாண்டின் இறுதி 16-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல ஐரோப்பிய நாடுகள்—ஸ்பெயின், பிரான்ஸ், ஹாலந்து, போர்ச்சுகல் தங்கள் கப்பல்களில் வியாபாரத்துக்காக கடல்களைக் கடக்க ஆரம்பித்தார்கள். இவற்றுள் ஸ்பெயின்தான் மிக்க பலிஷ்டமானது; அதற்கு அமெரிக்காவில் ஒரு சாம்ராஜ்யம் இருந்தது. 1588-ல் ஸர் பிரான்ஸிஸ் டிரேக் ஸ்பானிஷ் ஆர்மடாவை முறியடித்து ஸ்பெயின் பலத்தையும் முறியடித்தான். அதுமுதல் அது இரண்டாந்தர நாடாகி பின்னணியில் நிற்கவேண்டியதாயிற்று. 17-வது நூற்றாண்டில் தொலைநாட்டு வியாபாரத்துக்காக ஐரோப்பிய நாடுகள் போட்டி போட்டு பூசலிட்டன. இந்தியாவுக்கு 'நன்னம்பிக்கைமுனை' வழியாக முதன் முதலில் மார்க்கம் கண்டுபிடித்தது போர்ச்சுகல்; ஹாலந்து அடுத்துவந்தது. கடைசியில் வந்தது பிரான்ஸூம் இங்கிலாந்தும். காலடைவில் இங்கிலாந்தின் கடல்பலம் இதர நாடுகளை இப்பிரதேசங்களிலிருந்து ஓட்டி நிலைநிறுத்திய சாம்ராஜ்யத்தை அதற்கே அளித்தது. 1588-முதல் நெபோலியன் காலவரை அதன் கடலாதிக்கத்தை ஒருவரும் உண்மையில் ஆக்ஷேபிக்கத் துணியவில்லை. நெபோலியன் முனைந்தான். நெல்ஸன் பெற்ற பெரும் டிரபால்கர் வெற்றி (அக்டோபர் 1805) இங்கிலாந்தை அவன் படையெடுக்கச் செய்த முயற்சிகளை



கனவாக்கின. இங்கிலாந்தை ஐரோப்பா நாடுகளிலிருந்து முற்றுகையிட நெபோலியன் முயன்றான். நடுநிலைமை நாடுகள் மீது அவனுக்கு ஆதிக்கம் இல்லாததால் அது செல்லவில்லை. இதற்கு மாறாக இங்கிலாந்து பிரான்ஸை முற்றுகையிட முதன்முதலில் முயன்றது. அது பலித்தது. நவீன ஜெர்மனியை ஸ்தாபித்த பிஸ்மார்க்கின் கொள்கை—இங்கிலாந்துடன் நட்பு, தன் தேசம் ஐரோப்பா கண்டத்தில் முதன்மை—என்பது. பின்வந்த கெய்ஸர் வில்ஹெல்ம் இந்த புத்திமதிகளை உதறியெறிந்துவிட்டு ஒரு கடற்படையைக் கட்டினான். 1916-ம் வருடம் மே மீ நடந்த ஜட்லண்டு யுத்தத்தில் ஜெர்மன் கடற்படைக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. அதுமுதல் அது கீல் வாய்க்காலுள் ஒளிந்து வெளியில் தலைகாட்டவில்லை. வெர்ஸேல்ஸ் ஒப்பந்தமூலம் ஜெர்மனி கடற்படை வைத்துக்கொள்ளக்கூடாதென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

## இந்த யுத்தம்.

கடைசி மஹா யுத்தத்தால் இங்கிலாந்தும் உலகமும் அநேக விஷயங்களை கற்றுக்கொண்டன. தரைச் சண்டையில் வெற்றியைக் குறை கூறுமலே, ஜெர்மானியர்களை இறுதியில் சரணடையச் செய்தது இங்கிலாந்து கடற்படை இட்ட சுருக்கு என்றே சொல்லலாம். 1917, 1918-ல் ஜெர்மன நீர்மூழ்கிகளால் இங்கிலாந்தின் வியாபாரக் கப்பல்களுக்கு மிக்க சேதம் விளைந்தது. துணை முறைகளும் நீர்மூழ்கி வேட்டையும் சீக்கிரம் அபாயத்தை விலக்கின. இந்த யுத்தத்தில் ஜெர்மனியின் நோக்கங்கள் அலாதி. ஒண்டியாக ஆங்கிலக் கடற்படையை எதிர்க்கிறதென்ற நினைவை அது அறவே விட்டது. பெருங் கப்பல்கள் கட்டுவதை அது நிறுத்தியது. இதற்குப் போதுமான பொருள் அதனிடமில்லை. தன் மாலுமிகளுக்கு பெரும் யுத்தத்தில் இறங்கி ஜயிக்கப் போதுமான பயிற்சியுமில்லை. இதற்கு மாறாக 'பையுத்தக்கப்பல்களை'—சிறு யுத்தக்கப்பல்களை அது கட்டிற்று. எதிரே காவல்கார்க்கும் ஆங்கில கப்பல்களுக்குக் கண்ணில் படாமல் தப்பியடித்து பெரும் சமுத்திரங்களில் வியாபாரக் கப்பல்களைப்பிடித்து மூழ்கடித்து அதிலிருக்கும் எண்ணெய், கரி, உணவுப் பொருள்களைக்கொண்டு சிலந்திப் பூச்சியைப்போல் பிழைப்பதென்பது அவைகளைக் கட்டியதின் நோக்கம். ரோம்—பெர்லின்—டோகியோ அச்சுக்கூட்டிலிருந்து பெரும் விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டன. நேரடியான சண்டைகள் நேராவிட்டாலும் மூன்று வல்லரசுகளும் ஒன்று சேருவது, இதனால் அபாரமான பிரிடிஷ் கடற்படையின் பலம் ஒரே இடத்தில் அமுக்காமல் மூன்று முனைகளில்—அட்லாண்டிக், மத்தியதரைக்கடல், பஸிபிக்—இவைகளில் பிரிபட்டு சிதறும் என்று எதிர் பார்க்கப்பட்டது. இரகசியமாக ஜெர்மனி 'யூ போட்டுகள்' என்ற நீர்மூழ்கிகளை கட்டிவந்தது. காந்தக் கண்ணியை அது கண்டு பிடித்திருந்தது. இவைகள் என்ன, பாய்ச்சல் பாம்பர் விமானங்கள் என்ன இவைகளின் ஒத்தாசையால் கடலில் ஓடும் எல்லாக் கப்பல்களையும்—எதிரியுடையதாயினும் சரி, நடுநிலைமை தேசங்களுடையதாயினும் சரி—மூழ்கடித்து, போக்கு வரத்துகளை அறுத்து, கிரேட் பிரிடனில் யாதொருவித வாழ்க்கைக்கும் வசதியன்னியில் செய்து அதை சரணடையச் செய்கிறதென்பது அதன் நோக்கம். தன் கணக்கில்லா 'கொசுப்படகுகள்'

மூலமும் ஆகாய விமானங்கள் மூலமும் 20 மைல் அகலம் மட்டில் உள்ள இங்கிலீஷ் வாய்க்காலை காக்கும் ஆங்கில கடற்படையை தனக்கு நேரும் சேதத்தைப் பொருட்படுத்தாமல் தாக்கி, இங்கிலாந்து பூமியில் ஒரு படையெடுக்கும் சைனியத்தை எவ்விதத்திலும் இறக்கிவிடுகிறதென்பதும் ஹிட்லரின் யோசனை. மிக்க பலம் வாய்ந்த பிரான்ஸ் ஒரு பக்ஷத்தில் முறிந்து அதன் கடற்படையின் உதவி இழந்ததை இங்கிலாந்து எதிர்பார்க்கவில்லையாயினும் மேலே சொன்னவைகளை அது எதிர்பார்த்துத்தான் இருந்தது. சென்ற யுத்தத்தில் எந்த இடத்தில் இருபோர் கக்ஷிகளும் விட்டதோ அங்கிருந்து இந்த யுத்தத்தைத் துவக்கின. துணை முறைகள் சென்ற யுத்தத்தில் கடைசியில் தான் பரீக்ஷிக்கப்பட்டன. அம்முறைகளும், காவிலர்ட் முறைகளும் ஆரம்பத்திலேயே இப்பொழுது துவக்கப்பட்டன. சென்ற யுத்தத்தின் ஆரம்பத்தில் நடுநிலைமை நாடுகளில் மிக்க தொல்லையுண்டுபண்ணியது ஐக்கிய அமெரிக்கா தான். 1918-ல் யுத்தத்தில் இறங்கிய பின் முற்றுகை முறைகளை இங்கிலாந்து கடுமையாக்கவில்லையென்று புகார் செய்தது அதுவே! இப்பொழுது யுத்த ஆரம்பத்தில் ருஷ்யா பேருக்கு மட்டில் ஒரு ஆக்ஷேபனை செய்தது. ஸ்பெயின் கொஞ்சம் சகல் செய்கிறது; அதுவும் தானாக அன்னியில் ஜெர்மனியின் தூண்டுதலின் பேரில் என்று கருதப்படுகிறது. துணை முறையையும், காவிலர்ட் முறையையும் நடுநிலைமை நாடுகள் ஆக்ஷேபிக்காததுடன் ஒருவாய் ஏற்றுக்கொள்வதிலிருந்து முற்றுகை முறைகள் திருப்திகரமாக அனுஷ்டிக்கப்படுகின்றன என்பதுடன் இங்கிலாந்தின் கக்ஷி தர்மமானதென்பதையும் நன்கு வெளிக்காட்டுகின்றன. நீர்மூழ்கி "விஷத்துக்கு" விஞ்ஞான "மாத்து" களாகிய சப்தவேதி முறைகள் மிகவும் முன்னேற்றமடைந்து ஒரு நீர்மூழ்கியின் வரவும் அறியப்படாமல் போகவில்லை. அத்துடன் கப்பல்கள் கட்டுவதில் டார்பிடோ வெடி காபந்து முறைகள் நீர்மூழ்கி அபாயத்தை குறைத்துவிட்டது. ஆகாய விமானங்களும் நாசகாரிகளும் நீர்மூழ்கிகளை வேட்டையாடி வேட்டையாடி அவைகளை கிட்டத்தட்ட அழித்துவிட்டன. யுத்த தந்திர காரணங்களுக்காக அட்மிரால் டியார் அழிந்த ஜெர்மன் "யூ" படகுகளின் கணக்கை பிரசுரிக்கவில்லை. ஆயினும் "யூ" படகு அபாயம் கிட்டத்தட்ட நீங்கிவிட்டதென்றே உறுதியாகக் கூறலாம். காந்தக் கண்ணிகள் தான் ஹிட்லர் ஜம்பமாய் சொல்லிக்கொண்ட ரகசிய ஆயுதம். (Secret weapon) ஒரு வாரத்துக்கு அது பெரும் பூதமாய் வழங்கி பிறகு அதற்கும் மாத்துக் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரகிருத யுத்தத்துக்குமுன் விமான அபாயத்தைப்பற்றி ஒரு பெரும் வாதம் நடந்தது. பிரபுக்கள் சபையிலிருந்து ஒரு பிரபு கூறினார். "ஒரு பெரும் யுத்தக் கப்பலின் செலவுக்குப்பதிலாக நாம் பயனுள்ள ஆயிரம் விமானங்களைக் கட்டலாம். இனி இம்மாதிரி கப்பல்கள் கட்டுவது பணச்செலவே ஒழிய வேறல்ல." இதைக் கேட்டபின் யுத்தக் கப்பல்களை விமானங்கள் தாக்கினால் அவைகளை நிலை நிற்கச் செய்யமுடியுமா, முடியாதா என்ற விஷயத்தை எல்லோரும் கவனிக்கவேண்டியதாயிற்று. இதைக் கவனிக்க கடற்படை, ஆகாயப்படை மெம்பர்கள் அடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அவர்களின் முடிவு பின்வருமாறு:—"ஆகாயத்தில்



இருந்து பாம்கள் போட்டால், அழியமுடியாத கப்பல்கள் கட்டுவது சிரம சாத்தியம். சௌகரியமான சந்தர்ப்பங்களில் ஆகாயத்திலிருந்து பெரிய பலமான ஆகாயப்படை நன்றாகத் தாக்கினால், கனத்த கவசம்பூண்ட பெருங்கப்பல் கூட அழிக்கப்படலாம் அல்லது ரொம்ப முடமாக்கப்படலாம். இவ்வாறு சந்தர்ப்பங்கள் அளிக்கக்கூடிய பிரயோகங்கள் அளிக்கப்படுமா அல்லது தாக்கும் படைக்கு எவ்வளவு வெற்றி அளிக்கப்படும் என்ற விஷயங்கள் ஊஹியங்களாக இருக்குமேயல்லாது குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. கப்பல் எவ்வாறு நிர்மிக்கப்பட்டாலும், எவ்வித சந்தர்ப்பங்களிலும், எவ்வித தாக்குதலிலிருந்தும் காபந்தாக இருக்குமென்பது அட்மிரால் டியாரால் ஒப்புக்கொள்ளமுடியாத விஷயம். ஆனால், எதிர்காலத்தில் கட்டப்படும் பெருங்கப்பல்கள் உள் பக்கத்திலும், மேல் தட்டு, பக்கவாட்டுகளிலும் கவசம் வேயப்படும் நூதன முறைகளால் ஆகாயத்திலிருந்து பெரும் நாசமடையாமல் நிர்மிக்கப்படலாம் என்பது அவர்களின் அபிப்பிராயம். முன்பு இதர அபாயங்களுக்கேற்க அப்போதைக்கப்போது காபந்துகளும் ஆலோசிக்கப்பட்டதுபோல ஆகாயத் தாக்குதலுக்கு மேற்க ஏன் நூதன காபந்துகள் அனுஷ்டிக்கப்படக் கூடாதென்பதற்குப் போதுமான காரணங்கள் இல்லையென்பது அட்மிரால்டியாரின் அபிப்பிராயம்." இதனால் அந்த விவாதம் ஒரு முடிவையடைந்தது. கிரேட் பிரிடன், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா இவைகளில் பெருங்கப்பல்களும் முன்னிலும் வேகமாகக் கட்டப்பட்டன. யுத்தக் கப்பல்களில் விமானத் தாக்குதல், காபந்து முறைகள் பலப்படுத்தப்பட்டன. எப்படி பெருங்கப்பல்கள் என்றால், சண்டைபோடும் பெருங்கப்பல்கள் மட்டில் அல்லாமல், அதை நாற்புறத்திலும் காபந்து செய்யும் கப்பல்களையும் குறிக்கின்றதோ அதேமாதிரி தற்பொழுது அக்கப்பல்களிலிருக்கும் விமானக் காபந்து முறைகளுடன் சமீபத்திலிருக்கும் விமானக்கொத்தளங்களிலிருக்கும் எதிரியின் விமானப்படையுடன் போரிடும் விமானப்படையையும் குறித்து நிற்கிறது. மேற்படி கமிட்டியார் கூறியபடி, தற்போதைய பிரச்னை பெருங்கப்பலுக்கும் ஆகாயப்படைக்கும் இடையே மட்டிலும் அல்ல; அது விமான ஒத்தாசையுடன் கூடிய பெருங்கப்பலுக்கும், வெற்று விமானப்படைக்கும் இடையேதான். 1939ல் பிரான்ஸ் விழுந்தவுடன், இங்கிலாந்தை ஜெர்மனி ஆகாயப்படை மூலம் பிடித்துக் கொள்ளச்செய்த முயற்சிகள், இங்கிலாந்தின் இம்மாதிரியான ஆகாய ஒத்தாசை பெற்ற கடலாதிக்கத்தால் தோற்கடிக்கப்பட்டதென்ற அனுபவமும், இந்த முடிவை உறுதி செய்கிறது. ஹிட்லரின் ராக்ஷஸப் படைகளுக்கும், இங்கிலாந்துக் கரைக்கும் இடையே மௌனமாகப் பல்லைக் கடித்துக்கொண்டு நின்ற இங்கிலாந்தின் வட அட்லாண்டிக் கடற்படை ஹிட்லர் அனுப்பிய அலைமேல் அலைபோல் வந்த விமானப்படைத் தாக்குதல்களை முறியடித்துத் திருப்பின. லண்டனில் ஊர்வலத்துடன் பிரவேசித்து, தோற்ற நாடுகளின் தலையில் நிபந்தனைகளைக் கட்டி உலகத்திற்கு "புதிய திட்டம்" வகுக்க இடப்பட்டிருந்த 15—8—39 தேதியும் எல்லையன்னியில் ஒதுங்கிக்கொண்டுவருகிறது. இதற்கு ஒரு உதாரணமும் கிடைத்தது. குறிகளில் பெருங்குறி விமானந்தாங்கிக் கப்பல்கள்தான். ஸிஸிலி ஜலசந்தியில் "இல்லஸ்டிரியஸ்" என்ற விமானந்தாங்கியை ஜெர்மன்

பாய்ச்சல் விமானங்கள் எட்டுமணிகள் ஓயாமல் தாக்கின. அப்படியிருந்தும் அதை மூழ்கடிக்கமுடியவில்லை. கிரீட் யுத்தத்தில் இங்கிலாந்துக் கப்பல் சிலதுக்கு சேதம் ஏற்பட்டது. ஏனெனில், கிட்டின தளங்களிலிருந்து அதற்குப்போதிய ஆகாயவிமான ஒத்தாசையில்லை.

ஜெர்மன் ரெய்டர்கள் சம்பந்தமாக யுத்தாரம்பத்தில் கடைமுகத்தில் நின்ற வாக்கில் ஒன்று அழிக்கப்பட்டது. "க்ராப்ஸ்பீ", "பிஸ்மார்க்கு" இவைகளின் வேட்டை ஒரு பெரும் கடல் யுத்தக்காப்பியம். இந்த குட்டுக்குப்பின் ஜெர்மன் ரெய்டர்கள் இனி வெளிக்கிளம்புவது சந்தேகம்.

விமானங்கள் தாக்கும் முறைகளின் முன்னேற்றமென்ன, கல்லிகள் என்ன, நீர்மூழ்கிகள் என்ன, இவைகளுக்கு எதிரிடையாக கடற்படை ஆதிக்ய நாட்கள் மலையேறிவிட்டது என்று ஜெர்மானியர்கள் தீவிர பிரசாரம் செய்துவந்தார்கள். அது உண்மையாயின் கிரேட் பிரிடன் இரண்டு வருஷங்களுக்குமுன் சரணடைந்திருக்கவேண்டும். ஆனால் சுதந்திரத்தின் கோட்டையாகிய அதன் மதில்களிலிருந்து சுதந்திரக் கொடி தலை நிமிர்ந்து பறக்கிறது. ஜட்லந்து யுத்தம் நடந்தது ஓர் எதிர்பாராத சம்பவம். இந்த யுத்தத்தில் யாதொரு பெரும் கடல் யுத்தத்தையும் எதிர்பார்ப்பது அரிது. பின்னணியில் நிற்கும் இங்கிலாந்து கடற்படை மூலபலத்தின் அபார சக்தி இதர நாடுகளை நேருக்குநேர் நின்று யுத்தம் செய்வது அசாத்யம் என்று மனது கலங்கும்படி செய்துவிட்டது. இனி "ட்ரபால்கர்" நாள்கள் மீளா? மெடபான் யுத்தம் மத்தியதரைக் கடலில் இங்கிலாந்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திவிட்டது. இதற்கு எதிரிடையாகத்தான் ஜெர்மானியர்கள் எகிப்தையும், ஸூயஸையும், இருபுறங்களிலிருந்தும் இடுக்கிக் கௌவல் போன்ற தாக்குதல்மூலம் பிடித்துக்கொண்டு மத்தியதரைக் கடலிலுள்ள அட்மிரல் கன்னிங்ஹாமின் கடற்படையை அதிலேயே அடைத்துவிடுகிறது அல்லது அதை விட்டு ஓட்டிவிடுகிறதென்ற திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். பிரான்ஸ் தன் பக்கத்திலிருந்து விலகினது இங்கிலாந்துக்கு ஒரு வகை நஷ்டமாகிவிட்டது. ஆயினும் பிரெஞ்சுக் கடற்படைக்கு அளித்திருந்த கடமைகளையும் இங்கிலாந்து கடற்படையே தன் தோள்களின்மீது ஏற்றிக்கொண்டு பிடிவாதமாகவும் உத்ஸாகமாகவும் நிறைவேற்றி வருகிறது. தூரக் கிழக்கிலும் சிங்கப்பூர் தளத்தில் ஒரு பெரிய இங்கிலாந்து கடற்படையின் ஸான்னித்தியம் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்த ஜப்பானியர்களின் ஆத்திரத்தை அடக்கிவிட்டது. வெறிநாய்போல் நீரிலும், நிலத்திலும், வானிலும், ஜெர்மானியர்கள் நடந்து வருகிறார்கள். இங்கிலாந்தோவெனில் சரியான மனப்பான்மையுடைய மத்தியஸ்த நாடுகளின் அனுதாபத்தையும், தார்மிக ஆதரவையும் பெற்றுவருகிறது. அனுதாபம், ஆதரவு என்பதுமட்டில் என்ன? உலகத்தின் தார்மிக உணர்ச்சிக்கே நர் அளவுகோல் போன்ற ஐக்கிய அமெரிக்காவின் மனப்பூர்வமான உதவியையும் பெற்றுவருகிறது. 1—7—41ல் கர்னல் நாக்ஸ் பின்வருமாறு பேசியிருக்கிறார். "இங்கிலீஷ் வாய்க்கால் அலைகளை எட்டி இங்கிலாந்துமீது பயனற்ற ஆகாய யுத்தத்தை எப்பொழுது ஜெர்மனி செய்ததோ, அப்பொழுதே முதன் முதலில் ஹிட்லரிடம் தோல்வி படைத்தது............பிழைத்து, போரிட்டு, ஜயிக்க பிரிடனுக்கு மேன் மேலும்



உணவுப் பொருள்கள், எண்ணெய், பீரங்கிகள் விமானங்கள் தேவை. ஹிட்லரின் எண்ணெய் செய்யும் மெஷின்களையும், யுத்த தளவாடங்களையும், பாம்கள் மூலம் அழித்து, ஜெர்மானியரின் உறுதியைக் குலைப்பதின்மூலம் ஹிட்லரை மடக்க நாம் பிரிடனுக்கு உதவிசெய்ய முடியும். உலகத்திற்கு ஹிட்லர் இழைத்து வரும் இரக்கமற்ற கொடூர முறைகளை இதன்மூலம் ஜெர்மானியரே உணரும்படி செய்யலாம். கப்பல்கள் முழுகாமல் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு அட்லாண்டிக்கை தாண்டினால்தான் இது முடியும். என் சேனாதிபதியின் (ப்ரெஸிடெண்டு ரூஸ்வெல்ட்) வீரச் சொற்களால் தவிர முடிப்பதற்கு வேறு நற்சொற்களுமுண்டோ? "மண்டியிட்டுப் பிழைப்பதைக் காட்டிலும் எதிர்த்து நின்று சாவேன்" என்றார் அவர். "அட்லாண்டிக்கிலிருந்து ஜெர்மன் அபாயத்தை விலக்க நமது கடற்படையை உபயோகிக்கும் காலம் வந்துவிட்டது."

பிரிடிஷ் கடற்படை முற்றுகை பயனுடையது என்று காட்டுவதற்கு ருஷ்யாவை ஜெர்மனி சமீபத்தில் தாக்கியிருப்பதே போதுமான அத்தாக்ஷி. ஜெர்மானியர்கள் தங்களும் இங்கிலாந்தை முற்றுகை போட்டிருப்பதாய்ச் சொல்லி வருகிறார்கள். அதுவும் அமெரிக்கா ஒத்தாசையினால் விலகி வருகிறது. கிரீக் பார்த்தினான் கோவிலில் இலியத் மஹாகாவ்ய கட்டங்களைக் காட்டக்கூடிய அநேக சிற்பங்கள் இருக்கின்றன. நெப்ட்யூன் பூசாரியான லயக்கூன் என்பவனும் அவனுடைய இரு மகன்களும் ஒரு கடல் பாம்பினால் சுருக்கிடப்பட்டுக் கொல்லப் பட்டதுபோல் ஒரு சிற்பம் காட்டுகிறது. இந்த சிற்பத்தைக் குறித்து லெஸ்ஸிங் என்ற ஜெர்மன் ஆசிரியர் லயக்கூன் என்ற தலைப்பின்கீழ் ஒரு பிரசித்தமான கலை விமர்சன நூலை இயற்றியிருக்கிறார். இச் சிலை ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளும் பிரிடிஷ் கடற்படை முற்றுகையில் அகப்பட்டுக்கொண்டு திணறுவதை எடுத்துக் காட்டுகிறதென்று சொல்வது பொருத்தமாகும். இந்தத் தடவை ஆங்கில வெற்றி நவீன ஹூணர்களிடமிருந்து உலகிற்காக நாகரீகத்தையே காப்பாற்றியதாகும்.

---

அனுபந்தம்.

---

## பொறுக்கக்கூடாத பிடி.

## ஹிட்லர் கடல் அதிகாரத்திற்குப் பாடுபடுதல்.

மைக்கேல் புட் (Michael Foote) என்பவரால் எழுதப்பட்டது.

1912-ம் வருஷத்து வசந்தருது காலத்தில் ஓர் தினம் அப்பொழுது First Lord of Admiralty ஆக இருந்த மிஸ்டர் விண்ஸ்டன் சர்ச்சில் போர்ட்லாண்டுக்கு அப்பால் ஒரு சிறு உல்லாசக்கப்பலில் நின்றுகொண்டிருந்தார். அவரைச்சுற்றிலும் பிரிடிஷ் கப்பற்படையின் பெரியகப்பல்கள் நின்றுகொண்டிருந்தன. இந்தச் சம்பவம் சென்ற ஐரோப்பிய மஹா யுத்தத்திற்கு 2-வருஷத்துக்கு முன்பு.

அதற்கப்பால் 10-வருஷகாலம் வரை மிஸ்டர் சர்ச்சில் மஹா யுத்தத்தில் யுத்தத்தின் கடுமையான காலங்களில் அவைகளில் மிகவும் ஈடுபட்டவராய் இருக்க நேர்ந்தது. அந்த யுத்தம் முடிந்து உலகத்தில் மறுபடியும் சமாதானம் ஏற்பட்ட பிறகு யுத்தத்தைப்பற்றியும் அதில் தன்னுடைய கடமைகளைப்பற்றியும் "The World Crisis" என்னும் புஸ்தகத்தில் மிஸ்டர் சர்ச்சில் எழுதினார். அதை நான் பலதடவைகள் படித்திருக்கிறேன்: எனினும் அவற்றில் மிஸ்டர் சர்ச்சில் தான் போர்ட்லாண்டு துறைமுகத்துக்கு அப்பால் சிறகப்பலிலிருந்ததைப்பற்றி எழுதியதைப்போல் மற்ற எதுவுமில்லை. அவர் தன்னைச்சுற்றியிருந்த கப்பல்களைப்பார்த்து பின் வருமாறு எழுதினார்.

"இந்தக்கப்பல்களை கவனியுங்கள். பெரியதாயிருக்கின்றன. எனினும் கடலின் மீது எவ்வளவு சிறிதாகத் தெரிகிறது, எவ்வளவு சுலபமாகவும் கடல் மீது மறையும் தன்மையுடையதாயிருக்கின்றன. அவைகள் நமக்கு உதவியாக இருக்குமென்று நாம் நம்பினால், அவைகள் 20 அல்லது 30 ஆக இருந்தாலும் நமக்கு போதுமானதாக இருக்கின்றன. ஆனால் அவைகளின் தண்ணீர் போகும் குழாய்களைத் திறந்துவிடுங்கள். உடனே அவைகள் கடலில் மூழ்கிவிடும். உடனே அரை மணிநேரத்திற்குள் உலகத்தின் கதியும் மாறுதலடையும். நம்முடைய பிரிடிஷ் சாம்ராஜ்யம் ஒரு கனவுபோல் தெரிவிடும். அதன் ஒவ்வொரு சிறபாகமும் நெருக்கடியான நிலைமையை அடையும். சாம்ராஜ்யத்தின் பிரதான அதிகார வர்க்கத்தின் ஒத்துமை குறைவுபடும். பெரும் இராஜதானிகளும், ராஜ்யங்களும் கட்டுக்கு மீறி அன்னியர்கள் ஆதிக்கத்துக்கு உள்ளாகும். ஐரோப்பா ஒரே கடுக்கத்தில் இரும்புபிடி போன்ற ட்யூடானிக் (Teutonic) ஆதிக்கத்துக்கு உட்பட்டு அதனுடைய முறையைத் தழுவநேரிடும். கடைசியாக அட்லாண்டிக்குக்கு அப்பாலுள்ள அமெரிக்கா மட்டுமே, ஆயுதமற்றதாக சித்தமாயில்லாததாக, பயிற்சியற்றதாக மனித வர்க்கத்தின் சுயேச்சையையும் சட்டதிட்டத்தையும் தனிமையில் நிலை நாட்டவேண்டியதாக நேரிடும். ஏ அட்மிரல்களே, காப்டன்களே, அவைகளைக் காருங்கள், சரியாகவும் உண்மையாகவும் காருங்கள்."

மேலே சொல்லப்பட்ட விஷயம் பிரிடிஷ் கடல் சாம்ராஜ்யத்திற்கு யாதொரு பயமுறுத்தலும் ஏற்படும் என்று யாராலும் நினைக்கப்படாத 1912-ம் வருஷத்தில் மிஸ்டர் சர்ச்சிலால் சொல்லப்பட்டது. ஆனாலோ சொற்பதினங்களுக்கு முன்பு மேலே சொல்லப்பட்ட கடல் ஆதிக்க பயமுறுத்தல் சமீபத்திலிருப்பதாக எல்லோரும் அறியும்படி நேரிட்டது. மேலே சொன்ன விஷயத்தை சென்றதினங்களில் நான் பலமுறை நினைத்திருக்கிறேன். ஜெர்மானிய பிஸ்மார்க் என்ற கப்பல் சக்கிரவர்த்தியின் கப்பலான ஹூட் (Hood) 15 மைல் தூரத்திலிருந்து சுட்டுக் கடலுக்குள் அமுக்கின பொழுது நான் மிஸ்டர் சர்ச்சில் சொன்ன வார்த்தைகளை நினைத்து திடுக்கிட்டேன். மறுபடியும் கிரீட் யுத்தத்தில் நீர்மூழ்கிவெடிகுண்டுக் கப்பல்கள் பிரிடிஷ் கப்பல்களுடன் போர்புரிதல் கேட்டும் அவ்வாசகத்தை நினைத்தேன். மறுபடி ஹூட்டின் பழியை வாங்கப்பட்டு பிஸ்மார்க் தண்ணீரில் அமுக்கப்பட்டது கேட்டு பெருமையடைந்தேன். கடைசியாக பிரஸிடென்ட் ரூஸ்வெல்ட் வானொலி மூலம் அமெரிக்கா சமுத்திர



உபயோக சுயேச்சையை நிலை நிறுத்த தீர்மானித்து இருப்பதாக தெரிவித்த பொழுதும் அந்த வசனத்தை நினைத்தேன். ஏனென்றால் ஹிட்லர் சமுத்திர ஆதிக்கத்தை தன்வசப்படுத்தினாலொழிய உலகத்தை ஜயிக்க முடியாது. ஹிட்லர் என்ன, ரூஸ்வெல்ட் என்ன, இந்தத் தீவின் ஜனங்கள் என்ன எல்லோரும் சமுத்திர யுத்தத்திற்கே தயாரிப்பு செய்கிறார்கள். உலக யுத்தங்களுக்கெல்லாம் புதிதுசான யுத்த ஆயுதங்கள் விருத்தியானாலும் கடல் ஆட்சியே பிரதானம். நாம் யுத்த ஆட்சியைப்பற்றி மேலும் தெரிந்து கொள்வதில் அதை என்ன செய்வதின் மூலம் நம் வசம் வைத்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் மிகவும் ஜாக்கிரதையாகவும் ஆவலாகவும் இருக்க முடியாது.

சென்ற யுத்தத்தில் ஜெர்மனி கடற்படையில் நம்முடையதைவிட தாழ்ந்ததாகவே இருந்தது. எனினும் அது பெரிய கப்பல்கள் சம்பந்தப்பட்டவரை யுத்த ஆரம்பத்திலிருந்ததைப் போல் அவ்வளவு இளப்பமாக இல்லை. அக்காலத்தில் ஜெர்மனி தன் பெரும் கப்பல்களை துறைமுகத்தில் வைத்துக்கொண்டு நம் பெரிய கப்பல்கள் வந்தால் யுத்தம் செய்ய நினைத்திருந்தது. இவ்விதமான ஜெர்மானிய கடல் போர் சூழ்ச்சியின் எதிர்ப்பு, ஜட்லண்டில் (Jutland)ல் தோல்வியுற்றது. ஜெர்மனியின் இந்த தந்திரம் புத்திசாலித்தனமானதல்ல. ஏனென்றால் அதற்கு பதிலாக அந்தக்கப்பல்களை அட்லாண்டிக், மற்றும் பெரிய சமுத்திரங்களுக்கும் அனுப்பி நம் வியாபாரக் கப்பல்களைத் தாக்கி இருந்தால் அவர்களுக்கு நன்மையாயிருந்திருக்கும். அதன்படி அவர்கள் கப்பல்களில் சில அமிழ்ந்திருக்கும் என்றாலும் துறைமுகத்திலிருந்து செய்ததைவிட அதிக நஷ்டம் நமக்கு உண்டு பண்ணியிருக்கக்கூடும். இந்த யுத்தத்திற்கு முன்பு ஜெர்மன் அட்மிரல் ரேடர் (Admiral Raeder Commander-in-Chief of the German Navy) என்பவர் மேற் சொன்ன யுக்தியை மாற்ற உத்தேசித்தார். அவரிடம் சொல்ப பெரும் கப்பல்கள் இருந்தன என்றாலும் துறைமுகத்திலிருப்பதை விட சமுத்திரத்தில் சென்று கொள்ளையடிப்பதே சரியான முறை என்று தெரிந்து கொண்டார். இது தான் அவர் நம்முடைய கடல் ஆதிக்யத்தைத் தாக்க நினைத்த முதல் ஏற்பாடு. அவருக்கு தன் ஏற்பாட்டை நிறைவேற்ற உதவியாக 26,000 டன் உள்ள இரண்டு சண்டைக் கப்பல்களும் (The Gneisnau and the Scharnhorst) 10,000 டன் உள்ள 3 சிறிய சண்டைக் கப்பல்களும், வேகமுள்ள நன்றாய் யுத்தத்திற்கு தயாரான ராக்ஷஸி போன்ற நவீன முறையில் தயாரிக்கப்பட்ட 2 கப்பல்களும் (The Bismarck and the Tirpitz) இருந்தன. இவைகளில் உத்தேசமாக 5 ஆகிலும் கடல் கொள்ளைக்கு அனுப்பப்பட்டிருக்கலாம். அவைகளில் Graf Spee என்ற சிறிய கப்பல் Montevideo-க்கு அப்பால் நம் கப்பலால் தோற்கடிக்கப்பட்டது. இதனால் மற்ற 2 கப்பல்களும் உஷாராக இருந்தது. என்றாலும் ஒன்று மிகவும் தாக்கப்பட்டது. Gneisnau-ம் Scharnhorst-ம் மிகவும் தாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டு ஒரு பிரெஞ்சு துறைமுகத்தில் கிடக்கின்றன. அவைகள் ரொம்ப கேவல ஸ்திதியிலிருப்பதால், ஒரு ஜெர்மானிய வானொலியாரால் ஒப்புக்கொண்டிருக்கிற பிரகாரம், அவை பிஸ்மார்க்குடைய உதவிக்குப்

போகமுடியவில்லை. அதனால் பிஸ்மார்க்குக்கு என்ன நேரிட்டது என்று உங்களுக்கு தெரியும். பிஸ்மார்க் ஒருவாரம்தான் துரிதமாக உழைக்கமுடிந்தது. அது ஜெர்மானிய துறைமுகத்திலிருந்து புறப்பட்டது முதல் நம்கப்பல்களால் உளவு பார்க்கப்பட்டுவந்து அது மூழ்கும் வரை அந்த உளவு இருந்துவந்தது. ஒரு கப்பலை சமுத்திரத்தில் உளவுபார்ப்பது மிகவும் கஷ்டமாகும். என்றாலும் பிரிடிஷ் கப்பற்படைக்கு அது சாத்தியமாக இருந்தது. ஏனென்றால் அதனுடைய கெட்டிக்காரத்தனமே காரணம். பல இடங்களிலிருந்து கப்பல்களும் ஆகாயக் கப்பல்களும் சிறு கப்பல்கூட்டங்களும் உளவில் ஈடுபட்டிருந்தன. கடைசியாக ஜெர்மானிய கப்பற்படைக்கு அணிகலமாக இருந்த பிஸ்மார்க் அழிக்கப்பட்டது. இது அதன் சகாவான டர்பிட்ஸை (Tirpitz)க்கு ஒரு புத்திமதியாயிருக்கலாம். இதனால் அட்மிரல் ரேடர் பிரிடிஷ் சமுத்திர ஆதிக்கத்தை ஒழிக்க நினைத்த யுக்தி தவறிற்று என்று தெரியவருகிறது.

அட்மிரல் ரேடர் மற்றும் ஒரு ஏற்பாடு செய்தார். அதில் அதிகமான ஐயம் ஏற்பட்டது. அதாவது முன் ஜெர்மானியர்கள் செய்துவந்த உபாயம்போல் வியாபாரக் கப்பல்களை 'யூ' படகுகள் சுரங்கக் கன்னிகள்மூலம் அழிப்பதாகும், இப்பொழுது அந்த உபாயத்திற்கு தூரத்துக்கு செல்லும் வெடிகுண்டுகளும் உதவியாக இருக்கின்றன. ஜெர்மானியர் இவ்வுபாயத்தால் பிரிடிஷூம் அமெரிக்காவும் தங்கள் நஷ்டத்தை ஈடு செய்வதைப்போல் 2 பங்கு அதிகதுரிதமாக கப்பல்களை தண்ணீரில் அமுக்க தோது உடையவர்கள் ஆனார்கள் என்று ரூஸ்வெல்ட் சொல்லி இருக்கிறார். ஆனால் பிரிடனைப் போல் அமெரிக்காவும் இந்த பயமுறுத்தலைத் தகர்க்க நிர்மாணித்திப்பதாக அவர் சொல்லுகிறார். நாம் ரெய்டர்களில் முன்னேற்றம் அடைந்ததுபோல் நீர்மூழ்கிக் கப்பல்களிலும் அடைவோம் என்று சொல்கிறார். பிரிடனின் கடல் ஆதிக்கத்தைத் தாக்க, மேலே சொல்லப்பட்ட 2 தந்திரங்களைத் தவிர அவைகளைவிட புதிதும் உக்கிரமான மற்றொரு உபாயமும் ஜெர்மானியர் தேடி இருக்கிறார்கள். கிரீட்டில் நடந்த யுத்தத்தைப் போன்றதிலிருந்து, பிரிடிஷார்கள், தங்கள் கஷ்டத்தை பாவிக்கும் குணத்திற்கு ஏற்க தங்கள் கடற்படைக்கு ஏற்பட்டிருக்கும் பயமுறுத்தலைத் தவறுதலாக எண்ணவில்லை. போரில் பிரிடன் தற்காப்புக்காக ஏராள கடற்படைகளை இழக்கநேரிட்டதுடன் துணிந்தும் போர்புரிய நேர்ந்தது. அதன்படிப்பினையும் நன்கு அறியப்படுகிறது—பிரிடனும் கிரீட்டைப்போல் ஒரு தீவு. அதை ஜெர்மானியர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள் எனினும் கடல்மார்க்கத்திலும் நிலமார்க்கத்திலும் சரிவர பாதுகாக்கப்பட்டது. பிரிடனின்மீது போர்புரிவதின்மூலம் தான் ஹிட்லர் ஐரோப்பாவை ஜயிக்க நினைக்கலாம். ஆங்கில—அமெரிக்க ஒற்றுமையைத் தகர்க்க எத்தனிக்கலாம், உலகத்தையும் ஜயிக்க உத்தேசிக்கலாம்.

இத்தீவிலிருந்து நாம் யுத்தத்திற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறோம். ஜயிப்பது நிச்சயம் என்றும் உறுதியாய்ச் சொல்லுகிறோம். 'கிரீட் யுத்தத்தில் ஏற்பட்ட படிப்பினையை நாம் உபயோகப்படுத்துகிறோம். நமக்கு இதுவரை ஏற்பட்ட ஆபத்துகளிலிருந்து தப்பியதிலிருந்து எந்தக்கஷ்டத்திலிருந்தும் மீள நமக்கு வழி இருக்கிறது. இது விஷயத்தை ஒரு கடல் சம்பவத்திலிருந்து நான்





நிரூபிக்கிறேன். காப்டென் மா குயர் (Captain Mcquire) என்பவருக்கு ஜோஸப் கான்ராட் (Joseph Conrade) புத்தகத்தில் ஒரு புயல் ஏற்பட்டதாகச் சொல்லி இருப்பது போல் நாமும் ஒரு புயலில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். அதில் அந்தப்புயல் ஆகாயத்தைப் பறவைகளையும், மரங்களையும், கப்பல்களை அழிப்பது போல் செய்ததாகவும் என்றாலும் காப்டன் மாகுயர் தன் கப்பலை இழக்கமுடியாதென்றும் தீரமாகச் சொன்னாரும். அது போல் நம் தீவு ஜனங்களும் மனோதிடத்துடன் இருக்கிறார்கள். ஒரு கப்பல் புயலிலிருந்து மீளுவதற்கு புயல் மார்க்கத்திலே எதிர்த்துச்செல்ல வேண்டும் என்றும், உலக வசவைக் கவனிக்கக்கூடா என்றும் மாகுயர் சொல்லுகிறார். இதேபோலவே நம் மனோபாவமும் ஜெர்மன் எதிர்பபு சம்பந்தப்பட்டவரை இருக்கிறது. கடலை காப்பதுபோல் இந்தத் தீவையும் நாம் காப்போம். எவ்விதம் அட்லாண்டிக்கைக் கடக்க எத்தனித்த பிஸ்மார்க் அழிவுண்டதோ அது போல நம் பிரதேசத்துக்குள் வர எத்தனிக்கும் எந்த அன்னியர்களையும் எதிர்த்து அதே விதிக்கு ஆளாக்குவோம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

சென்ற 12 நாளாக ருஷ்ய ஜெர்மானிய எல்லைப்புறத்தில் உக்கிரமான சண்டை நடந்து வருகிறது. பின்லண்டு தேசத்தார் நாஸிகள் பக்கம் யுத்தத்தில் கலந்து கொண்டுவிட்டார்கள்; ஐந்தாரு தேசங்களின் துருப்புகள் ரணகளத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியருடைய யந்திரபலங்கொண்ட சைனியமானது ருஷ்யரின் ஆள்பலங்கொண்ட துருப்புகளை எதிர்க்கிறது. எதிர்ப்பதிலும் எதிர்ப்பை தடுப்பதிலும் ருஷ்யர்களுக்குள்ள சாமார்த்தியம் எதிர்பாராத விதமாக மொம்மரமாக இருக்கிறது. யுத்தமானது இப்படியும் அப்படியும் இருந்து கொண்டிருக்கிறது; மொத்தத்தில் உயிர் நிலையான இடங்களில் ஜெர்மானியர்களை ருஷ்யர்கள் அடக்கிவந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான ஜெர்மன் விமானங்களைச் சாய்த்தும், அநேக டாங்கு (Tanks)களை த்வம்சம் பண்ணியும் இருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் இங்கு ஒரு போரில் வெற்றியடையலாம், அங்கு ஒரு ஊரைப்பிடிக்கலாம், ஆனால் பெரும் வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டோமென்று ஜெர்மானியருக்கே வெகு சீக்கிரத்தில் புலப்படும்.

பின்லண்டு யுத்தத்தில் சேர்ந்ததின் பயனாக அமர்களம் விரிந்தது. அதன் துருப்புகள் ருஷ்யருடன் வெள்ளைக் கடலிலிருந்து பின்லண்டு வளைகுடா வரை போராடுகின்றன. கரீலியன் வழியாக லெனின்கிராடை பின்லண்டிலிருந்து எதிர்க்க வேண்டுமென்பது ஜெர்மானியர் நோக்கங்களில் ஒன்று. இந்தப் பிரதேசத்தில் ருஷ்யர்கள் நிலைத்து நிற்கிறார்கள். மர்மான்ஸ்க் (Murmansk)குப் பக்கம் உக்கிரமான சண்டை நடக்கிறது. எதிரிக்கு ஏராளமான சேதம் ருஷ்யர்கள் விளைவித்திருக்கிறார்கள்.

லாட்வியாவிலும் (Latvia) லிதுவேனியாவிலும் (Lithuania) நடக்கும் சண்டை முக்கியமானது. ஏனெனில் மின்ஸ்க் பிடிபடுவதும், ஜெர்மானியர் மாஸ்கோ போவதும் இப்பிரதேசங்களில் நடக்கும் சண்டையைப் பொறுத்திருக்கிறது. லிதுவேனியாவில் ஜெர்மானியருக்கு பெரும்பாலும் ஜயம்தான்; ஆனால் லாட்வியாவில் அவர்கள் தீவிரமாக எதிர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இப்பொழுதிய நோக்கம் மின்ஸ்க்கைப் பிடிக்கவேண்டும் என்பது. இந்தப்பக்கம் கொரடா மாதிரி ஜெர்மன் துருப்புகள் செல்லுகின்றன. ருஷ்யத் துருப்புகளை வளைத்துக்கொள்ளவேண்டுமென்பது அவர்கள் எண்ணம். வில்னு (Vilna), பாரனோவிட்ச்(Baranovitch) வழியே வடமேற்கு திக்கில் போகவேண்டும் என்ற அவர்கள் எண்ணம் கொஞ்சம் நிறைவேறி இருக்கலாம். இது ஒரு முக்கியமான பிரதேசம். இங்கு நடந்த சண்டையைப்பற்றித்தான் தங்களுக்கு பலமான வெற்றி கிடைத்திருப்பதாக ஜெர்மானியர் பேசுகிறார்கள். இதுதான் பெயர்போன ப்ரிப்பெட் (Pripet)சதுப்பிரதேசம்; இப்பிரதேசத்தைப்பற்றி ஹிண்டன்பர்க் (Hindenburg) தீவிரமான சர்ச்சை செய்துவந்தார். இப்பிரதேசத்தில் ஜெர்மானியர் வடபாகத்தில் மாஸ்கோவை உத்தேசித்து நெபோலியனை (Napoleon) அனுசரித்துச் செல்லப்பார்க்கிறார்கள். யூக்ரேனின் தலைநகராகிய கியெவ் (Kiev)ஐ நோக்கியும் செல்லுகிறார்கள்.

ஜெர்மானியர் மின்ஸ்க்கைப் பிடித்து விட்டதாகவும் மாஸ்கோவிற்குச் செல்லும்வழியில் இருக்கும் ஸ்மாலென்ஸ்க்கு (Smolensk)க்குப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இதை ருஷ்யர்கள் மறுக்கிறார்கள்; மேலும் முன்னே சென்றிருக்கும்பான்ஸர் துருப்புகளை பின்பாகத்தில் ஆதார நிலயங்களிலிருந்து வெட்டி விட்டதாகவும் சொல்லுகிறார்கள். இந்த இடத்தில் தங்கள் கையிருப்புத் துருப்புகளை ருஷ்யர்கள் கொண்டுவந்து ஜெர்மானியர்களை அமுக்கினார்களானால் ஜெர்மானியர் தப்புவது அரிது.

தெற்கே பெஸ்ஸரேபியாவில் எதிரியை விரட்டி அடித்து ப்ருத் (Pruth) நதியின் கிழக்கரையில் ருஷ்யர்கள் பலமாயிருக்கிறார்கள். லக் (Luck) பிரதேசத்திலும் ஜெர்மானியர் முன்செல்வதை நிறுத்திவிட்டார்கள்.

இன்னும் சில தினங்களில் சில முக்கியமான சம்பவங்கள் நடக்கும் என்று விஷயம் தெரிந்தவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நமக்குக் கிடைக்கும் தட்டுக்கெட்டலான தகவல்களில் உண்மை நடப்பை நிர்ணயிப்பது சிரமமாயிருக்கிறது. ஒன்று மட்டும் நன்றாகத் தெரிகிறது. அதாவது ஜெர்மானியர்கள் சொல்லுவது வெகு அஸம்பாவிதமாக இருக்கிறது. ரிகா (Riga)வைப் பிடித்தோம் என்று ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள். அதை ருஷ்யர்கள் மறுக்கிறார்கள். இது ஒரு புறம் இருக்க, வீழ்த்தப்பட்டதாகச் சொல்லப்படும் ருஷ்ய விமானங்கள் என்ன, கைதி செய்யப்பட்டதாக சொல்லப்படும் ருஷ்ய துருப்புகள் என்ன, உடைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் டாங்குகள் என்ன இவை எல்லாம் கேவலம் மனோதர்மசிருஷ்டிகளே. 24,000 ருஷ்ய விமானங்களை வீழ்த்திவிட்டோம் என்கிறார்கள். இது



நம்பமுடியாது. நாஸிகள் பெரும் புளுகர்கள். ஷேக்ஸ்பியர் சிருஷ்டித்திருக்கிற பால்ஸ்டாப் (Falstaff) என்பவரின் புளுகு நாஸியர் புளுகுக்கு உரை போடக் காணாது.

ருஷ்யர்கள் தங்கள் விமானங்களை வெகு நன்றாய் உபயோகப்படுத்துகிறதாக தெரிகிறது. ஜெர்மன் டாங்குகளை எதிர்க்க விமானங்களை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். டாங்குகள் வேகமாகச் செல்லும். அவைகளை எதிர்ப்பது சிரம சாத்யம். அப்படி இருந்தும் நூற்றுக்கணக்கான ஜெர்மன் டாங்குகளை உடைத்து பலவழிகளிலும் வெகு வேலை செய்திருக்கிறார்கள்.

ருஷ்ய விமானப்படை வெகுபலமானது; இந்த யுத்தத்தின் முடிவானது இந்தப்படையைப் பொறுத்திருக்கிறது. யுத்த சமத்காரத்தில் ருஷ்யர்கள் நிபுணர்கள். அதில் விமானங்களை நன்றாக உபயோகிப்பவர்கள். பாரசூட் வேலையிலும் இவர்கள் நிபுணர்கள். பாரசூட்களை இவர்கள் கண்டுபிடித்தார்கள் என்று ஒத்துக்கொள்ளாதபோனாலும் அவைகளைச் செம்மைப்படுத்தினார்கள் என்பதில் சந்தேகமில்லை. பாரசூட்களைக்கொண்டு வெகு நல்லவேலை செய்வார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

ருஷ்யன் கப்பற்படை சும்மாவிருக்கவில்லை. பால்டிக் சமுத்திரத்தில் இரண்டு நீர்மூழ்கிகளையும், கருங்கடலில் ஒரு நீர்மூழ்கியையும் அமுக்கிவிட்டார்கள்.

யுத்தத்தின் எதிர்காலப்போக்கை நிர்ணயிப்பதில் மூன்று விஷயங்கள் கவனிக்கப்படவேண்டியது. ஒன்று ருஷ்யாவின் பெரும் விஸ்தீர்ணம். லெனின்கிராட், மாஸ்கோ, கியெவ், பிடிபட்டாலும் யூரல் மலைவரை சுமார் 1,500 மைல் பிரதேசம் ருஷ்யர்களுக்கு இருக்கிறது. அதிலிருந்து கொண்டு ஜெர்மானியரை விடாது அவர்கள் தாக்குவார்கள். இதை நினைத்தாலே ஜெர்மானியருக்கு சஞ்சலமாய் இருக்கும். இரண்டாவதாக, மேற்குப்புறத்தில் பிரிடன் உதவிசெய்யப்போகிறார்கள். விமானங்களைக்கொண்டு ஜெர்மானியருடைய விமான, கப்பல், ரயில், கைத்தொழில் நிலயங்களைத் தகர்ப்பார்கள். இந்த வேலையைத் துவக்கிவிட்டார்கள். மூன்றாவது அமெரிக்கர்களும் முழுமனதுடன் உதவிசெய்யப்போகிறார்கள். கர்னல் நாக்ஸ் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "ஜெர்மன் ஆபத்தை நமது கப்பற்படையைக்கொண்டு விலக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. இதுவே வேலைசெய்யும் தருணம். ஹிட்லர் இந்த யுத்தத்தைக் கிளப்பியபின் இந்த யுத்தத்தின் முடிவை நிர்ணயிக்கும் விதமாக வேலைசெய்ய சந்தர்ப்பம் இப்பொழுது வாய்த்திருக்கிறது. அவசியமானால் பிரிடிஷாரைப்போலவே அமெரிக்கர்களும் வியர்வை கீழேவிழ, கண்ணீர் ததும்ப, ரத்தம் சிந்த, போர்புரிந்து நாஸிகள் அதிகாரம் உலகம் முழுதும் பரவி அழிக்காவண்ணம் நாம் பாடுபட வேண்டும்".

## பிரிடிஷ் விமானப்படை.

ருஷ்ய-ஜெர்மன் யுத்தத்தின் துவக்கத்தில் பிரிடிஷ் பிரதம மந்திரி கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி மேல் புறத்தில் ஜெர்மானியரை பிரிடிஷ் விமானிகள் பொடிபண்ணி வருகிறார்கள். பகலில் விமானிகள் சென்று வெடிகுண்டுகள்

வாரி இறைத்து பெரும் சேதம் விளைவிக்கிறார்கள். ரயில் பாதைகளும், தொழிற்சாலைகளும் வடபிரான்ஸிலும் மேல் ஜெர்மனியிலும் பல முறை வெற்றிகரமாக தாக்கப்பட்டன. துறைமுகங்களும், கப்பற்கூடங்களும் அப்படியே தாக்கப்பட்டன. ருஷ்யருடன் ஜெர்மனி போர் புரிந்து வரும் இச்சமயம் மேல் பக்கத்தில் ஜெர்மனிக்குச் செய்யக்கூடிய சேதத்தை கூடியவரையும் செய்ய பிரிடன் தயாராக இருக்கிறது.

## ஆகாயப்படை.

ருஷ்ய-ஜெர்மன் சண்டை ஆரம்பித்தகாலத்தில் இங்கிலாந்து பிரதமமந்திரி அளித்த வாக்குறுதிதப்படி நமது ஆகாயப்படை விரோதிகளின் கேந்திரஸ்தானங்களின் பேரில் வெடி குண்டுகளைப் போட்டு த்வம்ஸம் செய்து வருகிறார்கள். அவர்கள் வட பிரான்ஸிலும், ஜெர்மனியின் மேல் பாகத்திலும் கொடுமையான பகல் சாலங்களில் வெடி குண்டுகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். விமானங்கள் தங்குமிடங்களென்ன, கப்பல்கள் கட்டுமிடங்கள், ரயில் பாதைகளென்ன, வெடிகுண்டு தயாரிக்குமிடங்களென்ன இவைகளெல்லாம் நாசமாய்க்கொண்டு வருகின்றன. ஜெர்மனி கிழக்குப் பிரதேசத்தில் வித்தியமானத்தில் முழு மும்முரமாய்ச் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் இப்பிரமயத்தில் பிரிடன் ஜெர்மனிக்கு சாத்யமான விபத்துக்களை விளைவிக்க விடாமுயற்சி செய்துவருகிறது.

## ஸிரியா.

ருஷ்யாவின் பிறகு, ஸிரியா மிகவும் சிறிய சங்கதி. அங்கே விஷயங்கள் மெதுவாக நடக்கின்றன. ஏனெனில் ஸ்தல சந்நிவேசங்கள் அங்கே ராணுவங்கள் செல்லவும் சண்டை செய்யவும் அனுகூலமில்லை. விஷி ராணுவங்கள் வைராக்கியத்துடன் சண்டை போடுவதோடு, பெய்ருட்டுக்குச் சமீபத்தில் நம்முடைய வலது கைப்பக்கம் சைனியங்களை தாக்க முயலுகின்றன. நமது ராணுவங்கள் பெய்ருட்டுக்குச் சமீபத்திலுள்ள இடங்களிலுள்ள நிர்பந்தங்களை நிவர்த்தி செய்து கொண்டு பிறகு பெய்ருட்டை தாக்க பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள். பெய்ருட்டு நம் கைக்கு சிக்குவது கொஞ்ச கால வேலை.

பின் வருமாறு ஒரு ஜி. ஹெச். க்யூ. அறிக்கை எழுதப்பட்டிருக்கிறது.

'பால்மைராப் பட்டிணத்தை நமது துருப்புகள் சூழ்ந்து விட்டன. டமாஸ்கஸ்ஸிலும் (Damascus) கடற்கரைப் பிரதேசங்களிலும் நமது சைனியங்கள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. மத்திய பிரதேசத்தின் நிலைமை மாறவில்லை.

## அபிஸீனியா.

இன்னும் அநேக இதாலிய சிப்பாய்கள் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே சுத்தப்பிரதேசங்களும் பிடிக்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் அநேகமாய் நாடகம் முடிந்து விட்டதாகவே சொல்லலாம்.



## இந்திய தேசத்து ராணுவங்கள்.

மத்திய கிழக்குப் பிரதேசத்தில் நடந்த போர்களில் இந்தியப்படைகள் கீர்த்தி சம்பாதித்திருக்கிறார்கள். இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிற கொடைகளும், இந்தியத் துருப்புகள் தைரியத்துடன் செய்திருக்கும் புகழத்தக்க வேலைகளை உத்தேசித்து லண்டன் கவர்ன்மெண்டார் வைஸிராய் அவர்களின் யுத்தநிதிக்கு அளித்திருக்கும் பெரும் கொடையும், நமக்கு எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும் விஷயமே. மஹாராஷ்டிர கால்நடைப்படைகள் எரிட்ரியா (Eritrea) வில் செய்திருக்கும் புகழத்தக்க காரியங்களைப் பற்றி சமீபத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் விளம்பரங்களைப்படிக்க வெகு உத்சாஹம் ஏற்படுகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; | எதிரிகளின் விமான படையெடுப்புகளால் நஷ்டம். விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 23—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | பிரிடிஷ் விமானங்களால். | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பிற்பகல்.-இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). தொழிற்சாலை.—பெத்யூன் (Bethune). | 2 விமானங்கள். ...... | 7 விமானங்கள் சேதமாயின. ...... |
| | மாலை.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | 2 விமானங்கள். | 13 விமானங்கள். |
| | இரவில்.—துறைமுகம் கப்பல் துறைகள்—கலே (Calais), புலாயின் (Boulogne), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), எம்டன் (Emden), ஹானோவர் (Hanover). ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.-விரோதி ஆக்கிரமித்திருக்கும் நாடுகள். | ...... 1 விமானம். | எங்கும் படுசேதம். ...... |
| | ஸிரியா (Syria). | | |
| | விமான நிலயங்கள், தரையிலிருந்தும் விமானங்கள்.—பால்பெக் (Balbek), டாலியா (Talia), ரயாக் (Rayak). | ...... | 8 விமானங்கள். பல சேதமாயின. |
| | விமான நிலயம், கட்டடங்கள், மோட்டார் வண்டிகள்.—ஹாம்ஸ் (Homs)க்கருகில் ஸுவீடா (Suweida)க்கோட்டை. | ...... | பல விமானங்களும் வண்டிகளும் சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 23—6—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | படகுகள், சைனியங்கள் வசிக்குமிடம், துறைமுகம்,—ஸிராக்யூஸ் (Syracuse). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல் துறைகள்.—பெங்காஸி (Benghazi). ரயில் பாதை சிறிய துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... 1 விமானம். | தீப்பிடித்தது. ரயில்பாதைகள் நாசமாயின. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | பாதுகாப்பு.—தரைப்படைகளுக்கும், விமான நிலயங்களுக்கும். | ...... | ...... |
| 24—6—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | |
| | பகலில்.—படையெடுப்பு வடபிரான்ஸ் (France). மின்சார சக்தி உற்பத்தி செய்யுமிடம்.—கோமின்ஸ் (Comines). | ...... 2 விமானங்கள். | ...... பலத்த சேதம். 9 விமானங்கள். |
| | **ஸிரியா (Syria).** | | |
| | ரயில்பாதை, விமான நிலயம்.—ரயாக் (Rayak). | ...... | கட்டடங்களும், ரயில் பாதைகளும் சேதமாயின. |
| | கோட்டை.—ஸூஸிபா (Souciba). | ...... | ...... |
| | விரோதி நாசகாரிகள்.—பீரட் (Beirut) துறைமுகம். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—எல் கஸாலா (El Gazala). | ...... | பல விமானங்கள் நாசமாயின. |
| | கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீப்பிடித்தன. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 24—6—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | கருங்கடல் துறைமுகம்.—கான்ஸ்டான்ஸா (Constanza). | ...... | துறைமுகம் முழுவதும் தீமயம். |
| | டான்யூப் (Danube) நதிப்பட்டணம்.—கலாட்ஸ் (Galatz). | ...... | ...... |
| | **டான்ஸிக் (Danzig).** | | |
| | துறைமுகம்.—டான்ஸிக் (Danzig). | ...... | ...... |
| | **கிழக்கு பிரஸ்ஸியா (Prussia).** | | |
| | கோனிக்ஸ்பர்க் (Konigsburg). | ...... | ...... |
| | **போலந்து (Poland).** | | |
| | தலைநகரமான வார்ஸா (Warsaw). | ...... | பெட்ரோல் தொட்டிகளில் தீப்பிடித்தது. |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—லப்லின் (Lublin). | ...... | ...... |
| 25—6—41. (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலை.—படையெடுப்பு— இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). ஜெர்மன் விமான நிலயம்.—லாங்குனெஸ் (Longuenesse). ரயில் சாமான் கிட்டங்கிகள்.—ஹேஸ்ப்ருக் (Hazebrouek). | ...... ...... 2 விமானங்கள். | ...... 7 விமானங்கள். ஒரே தீமயம். |
| | இரவில்.—கடற்படை நிலயம்-கீல் (Kiel). துறைமுகம்.—ப்ரமன் (Bremen) ... கப்பல் துறைகள்.—புலாயின் (Boulogne). | ...... ...... 1 விமானம். | பெருந்தீக்கள் கிளம்பின. சேதமாயின. |
| | **ஸிரியா (Syria).** | | |
| | பாதுகாப்பு.—ஸிரியாவிலிருக்கும் தரைப் படைகள். | ...... | 3 விமானங்கள்; பல படுசேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
| --- | --- | --- | --- |
| 25—6—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான இறங்குமிடங்கள்.—கஸாலா (Gazala). | ...... | ...... |
| | பல இடங்கள்.—ஸிரேனேகா (Cyrenaica). | நஷ்டமில்லை. | 12 விமானங்கள். |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **பின்லாந்து (Finland).** | | |
| | ஜெர்மன் விமான நிலயங்கள்.—பின்லாந்து (Finland). | ...... | ...... |
| | **ஜெர்மனி (Germany).** | | |
| | மெமெல்.—(Memel). | ...... | ...... |
| | **லாட்வியா (Latvia).** | | |
| | விரோதிக் கப்பல்கள்.—லிபா (Libaw) விற்கு வடக்கே. | ...... | ...... |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | பெட்ரோல் தொட்டிகள்.—கான்ஸ்டான்ஸா (Constanza). | ...... | ...... |
| 26—6—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுப்பு; இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | 3 விமானங்கள். | 9 விமானங்கள். |
| | இரவில்.—கப்பல் துறைகள் கப்பல் கட்டுமிடங்கள்-கீல் (Kiel). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | தொழிற்சாலைகள்.-கொலோன் (Cologne) டஸ்ஸெல்டார்ப் (Dusseldorf). | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |
| | விமான நிலயங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகள். | நஷ்டமில்லை. | 1 விமானம். |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமான நிலயங்கள், விமானங்கள்.—ரயாக் (Rayak), டேர் எஸ்ஸார் (Deir Ez Zor), ஹோம்ஸ் (Homs). | ...... | 11 விமானங்கள். |
| | பெட்ரோல் கிட்டங்கிகள், ரயில் வண்டிகள் டெல் கலாக் (Tel Kalakh). | ...... | தீப்பிடித்தன. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
| --- | --- | --- | --- |
| 26—6—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | இதாலிய சைனியங்கள் தங்குமிடம்.—செல்கா (Chelga) விற்கு தென்கிழக்கே. | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | ருமேனியா.—(Rumania) தலைநகரமான புகாரெஸ்ட் (Bucharest). | ...... | சேதமாயிற்று. |
| | எண்ணெய் உற்பத்தியாகும் போலெஸ்டி (Polesti). | ...... | தீப்பிடித்தது. |
| | கான்ஸ்டான்ஸா.—கருங்கடல் துறைமுகம் (Constanza). | ...... | ...... |
| | **யுத்தம் நடக்குமிடங்கள்.** | | |
| | விரோதி கவசமணிந்த டாங்கிகள் வில்னா (Vilna), ப்ராடி (Brody), பாரனோவிச் (Baranovitch). | ...... | பல டாங்கிகள் நாசமாயின. |
| 27—6—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—ஜெர்மன் விமான நிலயங்கள் துருப்புகள் பீரங்கிகள்.—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | பிற் பகலில்.—ஒரு விரோதிக் கப்பல்—டங்கர்க் (Dunkirk). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | மாலையில்.-படையெடுப்பு-வட பிரான்ஸ் (France). | ...... | 7 விமானங்கள். பல சேதமாயின. |
| | எஃகுத் தொழிற்சாலை.—லில்லி (Lille)... | 10 விமானங்கள். | தாக்குண்டது. |
| | இரவில்.-துறைமுகம்-ப்ரமன் (Bremen). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | கப்பல் கட்டும் துறைகள், தொழிற்சாலைகள்.—வெகிஸாக் (Vegesack). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | எம்டன்.—(Emden), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), கக்ஸ்ஹாவன் (Cuxhavan), ஒல்டன்பர்க் (Oldenburg), டென்ஹெல்டர் (Denhelder), டங்கர்க் (Dunkirk). | ...... | சேதமாயின. |
| | கப்பல்துறைகள்.—(Calais) ... | 12 விமானங்கள். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 27—6—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விமான நிலயங்கள், சைனியங்கள் கண்டையிடும் இடங்கள்.—ஸிரியா (Syria). | ...... | ...... |
| | விமானக் கூடம், தரையிலிருக்கும் விமானங்கள்.—டெர் எஸ் ஸார் (Deir Ez Zor). | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள்.—டமாஸ்கஸ் (Damascus) ஸுக்கு மேற்கே. | .... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica), டாமெட் (Tamet). | ...... | 3 விமானங்கள் நாசம்; தீப் பிடித்தது. |
| | துறைமுகம், கடல் விமான நிலயம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | 1 கப்பல் தாக்குண்டது. |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | நிலக்கரி தீக்கிரையாகியது. |
| | நஷ்ய விமானங்களால். | | |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | தலை நகரான புகாரெஸ்ட் (Bucharest), டல்ஸி (Tulcea). | ...... | ...... |
| | யுத்த முன்னணிகள். | | |
| | ஜெர்மன் சைனியம், விமான நிலயங்கள்.—பல போர் அரங்கங்களில். | ...... | ...... |
| 28—6—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | மின்சார உற்பத்தி செய்யுமிடம்—ஸெண்ட் கோமின்ஸ் (St. Comincs). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 29—6—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | |
| | தொழிற்சாலைகள் நிறைந்த ஜில்லாக்கள், கப்பல் கட்டுமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg). ப்ரமன் (Bremen). | ...... | பெரிய தீக்கள் கிளம்பின. |
| | ப்ரமர்ஹாவன் (Bremerhaven), எம்டன் (Emden). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்—டென்ஹெல்டர் (Den-helder). | 11 விமானங்கள். | சேதமாயின. |
| | **ஸிரியா (Syria).** | | |
| | துறைமுகம்—பீரட் (Beirut) ... | ...... | 1 விமானம். |
| | சைனியங்கள் வசிக்குமிடங்கள் சாமான் கிட்டங்கிகள்—பால்மைரா (Palmyra) | ...... | பலத்த சேதம். |
| | தரையிலிருக்கும் விமானங்கள்—அலெப்போ (Aleppo). | ...... | பல விமானங்கள் சேதம். |
| | விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள். | ...... | 4 விமானங்கள். |
| | க்யூஸிர் (Quesoir), டெர் எஸ்ஸார் (Deir-Ez zor), | ...... | 5 விமானங்கள். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi) | ...... | தீப்பிடித்தது. |
| | சிறிய துறைமுகம்—டெர்ணு (Derna). | ...... | ... |
| | நஷ்ய விமானங்களால். | | |
| | நஷ்ய ஜெர்மன் எல்லை. | | |
| | சைனியங்கள், விமான நிலயங்கள்.—பலபோரரங்களில். | 21 விமானங்கள். | 53 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்பு விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 24—6—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—மர்ஸிஸைட் (Mersyside); தென்கிழக்கு இங்கிலாந்து (England). | 4 விமானங்கள். | சொற்பச் சேதமும்; சிலர் கொல்லப் பட்டனர், |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 24—6—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | யுக்ரேனி (Ukraine)ன் தலைநகரான கீவ் (Kiel), வெள்ளை ருஷ்யா (White Russia)வின் தலைநகரான மின்ஸ்க் (Minsk). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—லாட்வியா (Latvia) விலுள்ள லிபா (Libaw), ரிகா (Riga). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | துணைக்காவல் கப்பல்கள்.—வடக்கு ஆபிரிக்கா (Africa)வின் கடற்கரை. | ...... 1 விமானம். | ...... சேதமேயில்லை. |
| | **பாலஸ்தீனம் (Palestine).** | | |
| | ஹைபா (Haifa), ஆக்ரி (Acre). | ..... | சேதமேயில்லை. |
| 25—6—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—பல இடங்கள்—தென் இங்கிலாந்து (England). ஒரு இடம்.—ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்குக் கடற் கரை. | 2 விமானங்கள். | சொற்பச் சேதம் சிலருக்குக் காயம். நஷ்டமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | பட்டணங்கள்.—ருஷ்யா (Russia). | 76 விமானங்கள் | பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர், 17 விமானங்கள். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 3 விமானங்கள். | ...... |
| | **தென் அட்லாண்டிக் (Atlantic).** | | |
| | ஒரு ஜெர்மன் கப்பல்.—வர்டி (Verde) முனைத் தீவுகள். | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | **ஸிரியா (Syria).** | | |
| | டமாஸ்கஸ்.—(Damascus). | ...... | 7 ஜனங்கள் கொல்லப் பட்டனர். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 26—6—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England), ஓர் இடம்—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ... | சேதமுமில்லை, ஒருவரும் சாகவுமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | ருஷ்ய சைனியம்.—போர் முன்னிலை முழுவதிலும். | ...... | ...... |
| | போரிஸோவ்.-(Borisov), போப்ரியுஸ்க் (Bobruisk) மொகிலாவ் (Mogilav). | ...... | ...... |
| 27—6—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | ஒரு இடம்.—ஸ்காத்லாந்தி (Scotland)ன் கிழக்குக் கடற்கரை. | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | விமான நிலயங்கள், சைனியங்கள் அணி வகுத்து நிற்குமிடங்கள்.-பல போரரங்கங்களில். | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ...... | 6 விமானங்கள்; பல சேதமாயின. |
| 28—6—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | சேதமேயில்லை. |
| 29—6—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓர் இடம்-கிழக்கு இங்கிலாந்து (England). | 1 விமானம். | ... |

# யுத்தக் குறிப்புகள்.

## மத்திய கிழக்குப் பிரதேசம்.

ஒரு கட்டடமாயிருந்தாலும் சரி, ஒரு கப்பலாயிருந்தாலும் சரி, ஒரு யுத்தமாயிருந்தாலும் சரி, அதைச் சமீபத்திலிருந்து உற்றுக் கவனிப்பதைக்காட்டிலும் தள்ளி நின்று கவனித்தால் விஷயம் உள்ளது உள்ளபடி மனதிற்கு வரும். உதாரணமாக, மத்தியகிழக்கு நாடுகளில் நடக்கும் யுத்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள் (இப்போதைக்கு ருஷ்யாவை மறந்து விடுவோம்). சென்ற வருஷத்திய நடவடிக்கைகள் எல்லாம் பிணைந்து நிற்பது புலப்படும். இதாலியின் முக்கிய யுத்தப்படையானது லிபியா (Libya)வில் சென்ற குளிர் காலத்தில் அழிக்கப்பட்டது; அபிஸீனியாவில் அதின் அதிகாரம் சிதற அடிக்கப்பட்டது. இவைகளெல்லாம் ஜெர்மானியர் பால்கன் நாடுகள் வழியே புகுந்து "கொரடா" வேலையைச் செய்வதற்கு முன்னேயே நடந்தேறிவிட்டன. கிரீஸு (Greece)க்கு நாம் உதவி செய்யப் போக நாம் மேலெழுந்த வாரியாகப்பிடித்துக்கொண்டிருந்த ஸிரெய்னிகா (Cyrenaica)வை இழக்கநேரிட்டது; ஆனால் ஜெர்மானியர் எகிப்து வருவதை தடுக்கும் விதமாக டொப்ருக்கைப் பாதுகாத்து வந்தோம்; இது கிழக்கு ஆபிரிக்காவில் வெற்றியடைந்த சைனியங்கள் வட ஆபிரிக்காவிற்கு வந்து சேரும் வரை நடந்தது. கிரீட்டை இழந்தோம். ஆனால் ரஷீத் அலியை அமுக்கி இராக்கில் அமைதி உண்டாக்கும் வரையிலும், ஸிரியாவை நாம் முன் ஜாக்கிரதையாகக் கைப்பற்றிக்கொள்ளும் வரையிலும் ஜெர்மானியரை முன்விடவில்லை. நாம் இப்பொழுது ஸைப்ரஸை (Cyprus) பாதுகாத்து வருகிறோம். ஸைப்ரஸ் இல்லாமல் ஆசியா கண்டத்தின் பேரில் ஜெர்மானியர் கால் வைக்க முடியாது. கிழக்கு மத்தியதரைக்கடல் ராஜ்யத்தில் தொலைந்து போய்க்கொண்டிருக்கிற விஷி வர்க்கத்தாருக்கு ஜெர்மன் உதவி இன்றேல் தவிக்கப்படுகிறது. அம்பா அலகியில் அயோஸ்டா பிரபு தஞ்சம் புகுந்ததின் பயனாக ஏராளமான தென் ஆபிரிக்கத் துருப்புகள் எகிப்தில் தளகர்த்தர் வேவலுக்குக் கிடைத்தன.

கப்பற்படை சம்பந்தமாக, நமது தரைத் துருப்புக்களை அழைத்துப்போயும் அழைத்து வந்தும், இப்பொழுது ஸிரியாவில் நமது துருப்புகளுக்குச் சகாயம் செய்து வருகிறது. இனிமேல் லிபியாவிலுள்ள ஜெர்மானியருக்கு சாமான்கள் வருவதை தடுக்க ஆரம்பித்துவிடும். மேற்படி சாமான்களும் நீர்மூழ்கிகள் மூலம் அனுப்புகிறார்களாம்! இதுவே நமது கப்பல் போலீஸின் திறமைக்கு அத்தாட்சி.

சுருக்கச்சொல்லில் ஒரு சண்டையால் ஓர் பறந்த சண்டை முடிவாகாது. பறந்த சண்டையால் ஒரு பெரிய யுத்தம் முடிவடையாது. ஒரு தோல்வியின் பயனாகவே வேறொரு இடத்தில் வெற்றி பெறலாம்! ஒரு வெற்றியின் பயனாக ஓர் முக்கியமான ராணுவ கேந்திர ஸ்தானத்தில் தோல்வி ஏற்படலாம். (உதாரணம், ஜெட்லண்ட் யுத்தத்தில் ஜெர்மானியரைக்காட்டிலும் நமக்கு சேதம் அதிகம்; ஆயினும் அந்தத் தேதி முதல் ஜெர்மன் கப்பற்படை வெளியே தலையைக் காட்டவேயில்லை).



## ஒரு விசித்திரமான உரு மாற்றல்.

உள்புறம் வேலைகளே ஜெர்மன் வெற்றிகளுக்குக் காரணமென்று கேட்டுக் கேட்டு காது புளித்துப்போய்விட்டது. யுத்த நிபுணர்களின் இந்தப் பாடம் தலைகீழ்ப் பாடமாய் மாறிவிட்டலாம். மத்திய கிழக்கு நாட்டுச் சண்டையை எடுத்துக் கொள்ளுங்கள். தளகர்த்தர் வேவலின் வலது கை ரோனை வட ஸிரியாவில் இருக்கிறது. இடது கையானது எகிப்து (Egypt)—லிபியா எல்லைப்புறத்திலிருக்கிறது. இந்தப்படைக்கு வெளியே அச்சு தேசத்துத் துருப்புகள் சுழல்கின்றன, எதிர்த்துச் செல்கின்றன, சென்ற வழியே திரும்பிப்போகின்றன. நமது துருப்புகளின் ஆதார நிலயமான பிரிடன் கொஞ்சம் தூரத்தில் தான் இருக்கிறது. ஆனால் அவைகளுக்கு "உள் பக்கம் வரிசை" கள் உண்டு. பெரிய கப்பற்படை, இளைசரி ஜாஸ்தியாகும் வலுக்கொண்ட விமானப்படை, அவைகளுக்குண்டு. மேலும், பஸிபிக் சமுத்திர வழிகளும் செங்கடல் வழிகளும் இருக்கின்றன. இவைகளை அமெரிக்க கவர்ன்மெண்டார் உபயோகிக்கிறார்கள்.

## துருக்கி.

நடுநிலைமை வகிப்பவர்களுக்குள் அதிகமாக ஏமாந்த நாடு துருக்கி. அது அநேகமாக வளைக்கப்பட்டுவிட்டது. ஆனால் அமைதியாக இருக்கிறது. (?) ருஷ்யாவிற்கும் துருக்கிக்கும் நடந்தபோட்டியில் துருக்கி வெற்றியடைந்தது. ருஷ்யா பெயரில் துருக்கிக்கு சண்டை. 1940-ம் டிஸம்பரில் ஸ்டாலின் அதை மொகனரயில் அடித்தார்; இவைகள் நடவாதிருந்தால் நாஸிகளுக்கு விரோதமாக இவ்விருதேசத்தாரும் புத்திசாலித்தனமாக உடன்படிக்கை செய்துகொண்டிருப்பார்கள். உடன்படிக்கை என்றால், ருஷ்யா எதிர்க்கப்பட்டால் துருக்கியும் மாட்டிக்கொள்ளும். துருக்கியின் பேரில் நாஸிகள் படையெடுத்தால் ருஷ்யா கல்பிள்ளையாக அசையாது இருக்கும் என்று துருக்கிக்காரர் எண்ணினார்கள்.

மேலும், எப்பாடுபட்டும் யுத்தமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது அத்தியாவசியமாக இருந்தது. அதாவது அவர்களுடைய உற்ற நண்பர்களான பிரிடிஷார் யந்திர பலத்திலும், விமான பலத்திலும் ஜெர்மானியருக்கு மேல் போகும்வரை சண்டையில் மாட்டிக்கொள்ளக்கூடாது என்பது அவர்கள் நோக்கம். இந்த எண்ணம் நிறைவேறிவிட்டது. ருஷ்யாதான் நாஸிகளால் எதிர்க்கப்பட்டிருக்கிறது.

## ஸிரியா.

இங்கே எல்லாம் சரிவரத்தான் நடக்கிறது—கொஞ்சம் மெள்ள மெள்ளத் தான். ஆயினும், கதம்பமான இந்நாட்டில் முக்கியமான கேந்திர ஸ்தானங்கள் இருக்கின்றன. ஜெர்மானியர்கள் என்ன செய்கிறார்கள். சில அருமையான விமான நிலயங்களையும், ஸிரியா கடற்கரையையும் நாம் பிடித்தது.

இந்தக் காரணத்தினாலேயே நாம் இவைகளைப் பிடித்துக்கொள்ளாமல் இருக்கவேண்டி, ஜெர்மானியர் உக்கிரமாக எதிர்ப்பார்கள் என்று நாம் எண்ணக்கூடும். ஒருவேளை அவர்கள் அப்படியே செய்வார்கள். இந்த யுத்தத்தில் முக்கியமான சண்டைகளில் ஒன்று இப்பொழுதே ஆரம்பிக்கலாம்.

ஆனால் ஜெர்மானியர் இஷ்டப்படிக்கல்ல! அந்தேசத்திற்கு அவர்கள் அனுப்பிய விமானங்களென்ன, மாறுவேஷம் பூண்ட துருப்புகள் என்ன, யந்திர வேலைக்காரர்கள் என்ன அவர்கள் எல்லாம் திரும்பிப்போகிறார்கள். பிரிடன்தான் வம்புச் சண்டைக்காரர்கள் என்று சாட்ட கோயபல்ஸ் (Goebbels) இப்படி உத்தரவிட்டிருக்கலாம்; ஒருவேளை டார்லான் இதற்குக் காரணபூதமாக விருக்கலாம். ஜெர்மானியர் புகுந்தால் பிரிடிஷார் வருவார்கள். செயலற்ற விஷி துருப்புகள் என்ன செய்யக்கூடும் என்று அவர் கட்சியாடியிருக்கலாம்.

எது உண்மையானாலும், இதில் சில ரஸமான அனுமானங்களுக்கு இடம் உண்டு. முதலாவது, ஜெர்மானியர் இப்பொழுது ஸிரியாவில் புகுந்து பிரிடிஷாரை விரட்டுவது நடக்காது. ஸைப்ரஸை அவர்கள் இன்னும் பிடிக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்திருந்த இராக் கிளர்ச்சியும் பலிக்கவில்லை. மத்தியதரைக் கடல் யுத்தத்தை அவர்கள் மகத்தான யுத்தமாகக் கருதலாம். அவர்கள் எகிப்து பேரிலும், ஸூயஸ் கால்வாய்பேரிலும் கண் வைத்திருக்கிறார்கள். அதற்காக சௌகரியமான இடங்கள் தேடுகிறார்கள்; கிடைக்கும் இடங்களைவைத்து நிலை கிப்பது சிரமமானால் அங்கிருந்து விலகிவிடுவார்கள். ஆகையால்தான் அலெக்ஸான்டிரியாவை வெடி குண்டுகள்போட்டு தாக்குகிறார்கள்போலும். (அதுவும் கிரீட்டிலிருந்து 200 மைல்தான்; சிறிய கடற்கரையோ ரோட்ஸிலிருந்து 450 மைல்). ஸிரேனைகா பக்கமிருந்து எகிப்து எல்லைப்புறத்தையும் இக்காரணத்தால் தான் தாக்குகிறார்கள் போலும்; ருஷ்யாப் பேரில் இந்த அகாரணமான சண்டைக்கும் இதுவே காரணமென்று நம்புகின்றேன், எண்ணெயும் கோதுமையும் கிடைத்தவரை லாபமென்று எண்ணலாம்; ஆனால் காகேஸிய மலைகள் மூலமும் ஈரான் மூலமும்போய், மேல் பக்கமாக ஸூயஸ் கால்வாயைக் குறிவைத்துச் செல்லலாம்.

## அவசரப் பேர்வழிகளுக்குச் சில விஷயங்கள்.

ஸிரியாவைப்பற்றி நாம் சொல்வதாவது:—

(1) தாங்கள் சன்னம் சன்னமாக ஸிரியாவில் ஸ்தாபித்துக்கொள்ள எண்ணிய எண்ணம் நிறைவேறாமல் போனாலும், நேச தேசத்தார் முன் ஜாக்கிரதையாக அங்கே போனதும் ஜெர்மானியருக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கு அவர்கள் பிரசாரமே சான்று.

(2) இதுவரை கைவசப்படுத்தப்பட்ட பிரதேசங்களில், அராபிய ஜனங்களே நமது துருப்புக்களை வரவேற்கிறார்கள் என்று வேண்டிய சின்னங்கள் இருக்கின்றன.

(3) நாம் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுகிறோம். அராபியருக்கு உதவி செய்வதாக நாம் வாக்குக்கொடுத்தோம். அவர்களுக்குச் சுயேச்சை அதிகாரம் கொடுப்பதாக தளகர்த்தர் காட்ரு வாக்களித்தார். இவை இரண்டும் ஸிரியா ஜனங்களுக்குக் கூடிய சீக்கிரம் கிடைக்கும். இதை விடுவிப்பதாக மழமழப்பாய் ஜெர்மானியர் கொடுத்த வாக்குறுதிகளுடன், முக்கியமாக அவர்கள் வலையில் மாட்டிக்கொண்ட ரஷீத் ஆலிக்கு அவர்கள் செய்த நன்மையுடனும் ஒப்பிட்டுப்பார்க்கலாம்!



(4) இயற்கைச் சாதனங்கள் இருக்கும் இடத்தில் எதிர்ப்பு கொஞ்சம் பலமாக இருந்தபோதிலும், இந்தச் சண்டையில் விஷி துருப்புகளுக்கு மனம் செல்லவில்லை. வெறும்பேச்சுக்கென்று உடுப்புப் போட்டு எந்த மனிதனுமை துருப்புக்களும் வந்தாலும்கூட அவர்களை சுடவேண்டுமென்று அவர்கள் தளகர்த்தர்கள் போட்ட உத்தரவுகள் நமது கைக்கு கிடைத்திருக்கிறது. விஷி கவர்ன்மெண்டாருக்கு தங்கள் துருப்புகளிடத்தில் நம்பிக்கை இருப்பதாக இது காட்டவில்லை.

(5) சண்டை ஊக்கமாகச் செய்யவேண்டும் என்பதற்காக தளகர்த்தர் டென்ஸ் தனது துருப்புகளுக்கு ஜாஸ்தி சம்பளம் கொடுப்பதாகச் சொன்னார். இப்படி தளகர்த்தர் வேவல் செய்வாரா? கிரீட்டை கம்பீரமாக பாதுகாத்த வீரர்களுக்குச் சண்டையின் மத்தியில் தளகர்த்தர் பிரேபர்க் இம்மாதிரி லஞ்சம் கொடுப்பாரா?

## மாறும் சன்னிவேசம்.

வெகு சீக்கிரத்தில் பிரிடிஷ் விமானப்படை சங்கையை அதிகரித்து ஜெர்மன் படையை எங்கிலும், முக்கியமாக மத்திய கீழ் நாடுகளில், எதிர்ப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எகிப்து விமான நிலயங்களின் ஆதாரத்தின்பேரில் ஏராளமான சண்டை விமானங்கள் இருக்கின்றன; கிரீஸ் சண்டையில் நமக்கு இப்படியில்லை. இந்த நிலயங்களிலிருந்து கிரீஸ், கிரீட், டோடிகானிஸ், இவைகளிலுள்ள நாஜி ராணுவ நிலயங்களை நாம் இப்போது தாக்கலாமென்றால் நமது நிலைமை விருத்தியாகியிருக்கிறதென்று அடையாளம்.

ஸிரியா விமான நிலயங்களும் நமது கைவசம் வருகின்றன. இதனால், ஒருவேளை கிரீடில் செய்ததுபோல் ஸைப்ரஸில் மின்னல் படையெடுப்பு செய்ய ஜெர்மானியர் முயன்றால், நாம் அவர்களை வெகு பாடுபடுத்தலாம். இது சம்பந்தமாக இரண்டு விஷயங்கள் சொல்லவேணும். முதலாவது, பக்க நிலயங்களில் சண்டை விமானங்கள் பலம் நமக்கிருப்பதால், ஜெர்மானியரின் பெயர்போன முழுகி வெடிகுண்டு போடும் விமானங்களின் ஜம்பம் பலிக்காது. இரண்டாவது, ஒருவேளை ஸைப்ரஸ் ஜெர்மன் வசமானாலும்கூட, அங்கிருந்து ஸிரியாவைத் தாக்கினார்களானால், ஸிரியாவிலிருந்தே வலுத்த எதிர்ப்பு ஏற்படும். கிரீஸ், கிரீட் யுத்தத்தில் நடந்ததுபோல் சொற்பமான எதிர்ப்பு இராது.

## ஜப்பான்.

ஜப்பானில் இப்போது வெளிவரும் செய்திகளில் காணப்படும் சந்தேக தொனி இயல்பு. ருஷ்ய சண்டையானது மத்ஸுவோகா மட்டுமில்லாமல் பலரை பிரமிக்கச் செய்துவிட்டது. யோசனை சொல்லக்கூடியவர்கள் ஜெர்மனியின் துணைவன் என்றால் துணைவனுக்குக் கிடைக்கும் பிரயோஜனத்தைப்பற்றி எண்ணுகிறார்கள். இதாலியிலும் இதுதான் நடந்தது. தோல்விகளடைந்தமேல் சங்கடங்கள் ஜாஸ்தியானாலும் இதாலியர் சந்தியில் இழுக்கப்பட்டார்கள். இது ஜப்பானில் அநேகருக்குப் புலப்படுகிறது. கச்சேரிகளிலுள்ள ஜெர்மன் 'யோசனை

சொல்லுபவர்கள்' பிரசார இலாகாவில் ஜெர்மன் ஸ்வான்தார்கள், அச்சு தேசத்தாரைப்பற்றி உற்சாகக்குறைவுள்ள ஜப்பானியப் பிரஜைகளைப்பற்றி ராணுவ இலாகா அதிகாரிகளிடம் 'கோள்' சொல்லும் ஜெர்மன்கள், டோக்யோவிலேயேயுள்ள 'கெஸ்டாபோ' வை ஒத்த ரகசிய போலீஸ்—இவைகளெல்லாம் இதாலிக்கு நேர்ந்த கஷ்டங்களை ஜப்பானியருக்கு ஞாபகமூட்டுகின்றன; இதாலி மட்டுமல்ல, ஜெர்மன் வலையில் மாட்டிக்கொண்ட எல்லா நாடுகளுமே படும் பாடுகளையும் ஞாபகமூட்டுகின்றன.

---

## ஹிட்லர் இந்த யுத்தத்தில் ஜயமடைய முடியாததற்குக் காரணங்கள்.

## அமெரிக்க ராஜ்ஜிய தந்திரி நான்கு காரணங்கள் சொல்லுகிறார்.

## கடலாதிக்கத்தின் இல்லாமையும் விமான உயர்வுக்கு ஏற்பட்டிருக்கும் பங்கமும்.

## நாஜிகள் அடைந்திருக்கும் லாபங்களை ஐக்கிய நாடுகள் பொறுக்கமாட்டார்கள்.

[டெயிலி டெலிகிராப் பத்திரிகையில் ஹாரி ஹாப்கின்ஸ் எழுதுகிறார்].

பிரிட்டனிலிருந்து சமீப காலத்தில் திரும்பி வந்தவரும் ரூஸ்வெல்டிற்கு மந்திரியும் கடவாட இரவல் சட்டப்படி நடத்தும் நிர்வாகியுமான மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் டெயிலி டெலிகிராப் பத்திரிகையில் எழுதிய ஒரு வியாசத்திலிருந்து சில அம்சங்களை இங்கு எழுதியிருக்கிறோம்.

இந்த யுத்தத்தில் ஹிட்லர் ஜயமடைய மாட்டான். இதற்கு நான்கு முக்கியமான காரணங்கள் உண்டு. அவனுக்கு வாஸ்தவமான கடல் ஆதிக்கம் கிடையாது. விமானங்களின் மேன்மையானது கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து வருகிறது. அவனுக்கு எதிரிடையாக பிரிட்டனாரும் ஐக்கிய நாடுகளும் சேர்ந்து தயாரிக்கும் பொருளாதார சாதகங்கள் ஹிட்லருக்குக் கிடையாது. கடைசியாக, அநியாயமாக சம்பாதிக்கப்பட்ட லாபங்களை ஹிட்லர் ஒன்று சேர்க்கும்படி செய்வது, அமெரிக்காவின், பொருளாதார, ராஜ்ய, நியாயமான முறைகளுக்கு முரண்பட்டது.

ஹிட்லரையாவது, அவனுடைய ராணுவ பலத்தின் மேன்மையையாவது நான் குறைத்துக் கூறுகிறேனென்று நினைக்கவேண்டாம். ஹிட்லரின் தலைமையின் கீழ் ஜெர்மனியின் ராணுவ பலம் மிகவும் வெற்றிகரமாயிருந்தது. உலகத்தில் மிகவும் வலுவுள்ளதாகவுமிருக்கிறது. அவர்களைப் பேட்டி காண்கிறவர்களுக்கு விஷயங்களும் கணக்குகளும் கொடுப்பதில் ஜெர்மானியர்கள் சாமர்த்திய சாலிகள். ஆனால் இத்தகவல்களையும் கணக்குகளையும் நன்றாய் பரிசீலனை செய்யவேண்டும்.

ஒத்தாசைக்கு வேண்டிய விமானங்களும் விமானிகளும் இல்லாத விமான பலத்தின் அணிவகுப்பு, பிரசாரத்துக்



கும், அறைகுறையாய் ஆயுதங்களுள்ளதும், நன்றாய் ஆயுத பலமும் இல்லாத தேசங்களை பயமுறுத்துவதற்கும் நன்றாய் உபயோகப்படக்கூடியதுதான். சமமான விமான பலமுள்ள எதிரிகளுடன் முக்கியமான போர்முனையில் விமான ஆதிக்கம் பெறுவதற்குப் போடப்படும் சண்டைக்கு அவைகள் லாயக்கில்லாதவை.

## சண்டை போடும் விமானங்கள், வெடிகுண்டு விமானங்கள் இவைகளின் நிலைமை.

இப்பொழுது பிரிட்டிஷார்கள் சண்டை போடும் விமானங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஜெர்மானியர்களைக்காட்டிலும் யோக்கியதாம்சத்திலும், சங்கியையிலும் மேன்மை அடைந்து விட்டார்கள். இந்த மேன்மையானது வெடிகுண்டு விமானங்களில் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் மேன்மையைப் பங்கப்படுத்திவிட்டது. பிரிட்டிஷார்கள் போதுமான அளவு தயாரித்திருப்பதும் பாதுகாக்கப்பட்டதுமான விமான தளங்களுள்ள பரப்புகளின் பேரில் அதிகமான லக்ஷியத்துடன் இவைகளை ஜெர்மானியர்கள் உபயோகிக்கமுடியாது. தங்களுடைய தொழிற்சாலைகளையும் மற்ற முக்கியத்தவம் வாய்ந்த பரப்புகளையும் பகலில் ஏற்படும் வெடிகுண்டு வீழ்ச்சிகளிலிருந்து பிரிட்டிஷார்கள் நன்றாய்ப் பாதுகாக்கக்கூடும். வாரங்கள் செல்லச் செல்ல பிரிட்டிஷார்கள் முன்னேற்றமடைகிறார்கள். நம்முடைய உதவியும் கிட்டிவிட்டால் ஒரு வருஷத்திற்குள் ஜெர்மனியுடன் ஸம அந்தஸ்துள்ளதாக ஜனநாயக நாடுகள் மாறிவிடக்கூடும். அதற்குப் பிறகு தானே நமக்கு மேன்மை ஏற்பட்டுவிடும்.

அந்தச் சமயம், அமெரிக்காவின் பெரிய விமான உற்பத்தி சாலைகளில் கட்டப்பட்டு வரும் பெரிய வெடிகுண்டு விமானங்களின் தாக்குதலிலிருந்து தப்பிக்கத் தன்னுடைய தொழிற்சாலைகளை கிழக்கே வெகு தூரம் கொண்டுபோக ஹிட்லருக்கு இயலாது.

அவைகள் ஒவ்வொரு எண்ணெய் சுத்திசெய்யும் தொழிற்சாலையையும், எண்ணெய் உற்பத்தி ஆலையையும், பெரிய யந்திரங்களையும், விமான தொழிற்சாலையையும், நிலக்கரி அடுப்புகளையும் கண்டுபிடித்து அவைகளை நாசம் செய்யும். இப்பொழுதும் இரவில் சண்டை செய்யும் பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் வெடி குண்டு விமானங்களையும் தாக்க ஆரம்பித்துவிட்டன.

ஒவ்வொரு இரவிலும் ஆயிரம் ஜனங்களை அக்கிரமமாகக் கொல்வதினின்றும் பிரிட்டிஷ் ஜனங்களின் மனோதைரியத்தை அழித்துவிட முடியாது. சென்ற மாரி காலத்தில் இங்கிலாந்தின் பேரில் ஸ்வல்பமாக ஏற்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலை நான் பார்த்தேன். இதைக் கண்ணுற்றவர்கள் நினைப்பது போல நானும், பொது மக்களை ஒன்றுக்குப் பத்தாக வெடி குண்டுகளால் தாக்குகிறார்களென்று வைத்துக்கொண்டாலும், இது பிரிட்டிஷ் மக்களின் மனோதைரியத்தைக் குறைத்துவிடாதென்று தான் நினைக்கிறேன். அவர்கள் இதற்கு பயப்படக் கூடியவர்களல்ல. கடினமான மனதுடையவர்கள். எவ்வளவு கடுமையாக இருந்தாலும் ஒவ்வொரு புதிய வெடி குண்டு வீச்சும், கடைசி வரையில் ஹிட்லரை எதிர்த்து நிற்க தீர்மானமுள்ளவர்களாக ஜனங்களின் மனதைத் திடப்படுத்துகிறது. கடைசி வரையில் யுத்தம் செய்வோமென்று

சொல்லும் ஆங்கிலேயர்களின் தீர்மானம் தான் நமக்கு முக்கியமான முதல்தரமான ஆஸ்தி." இதுதான் யுத்தத்தின் போக்கை ஜனநாயக நாடுகளுக்கு சாதகமாகத் தீர்மானம் செய்யப் போகிறது.

## ஹிட்லருடைய நிலைமை.

கடல் ஆதிக்கத்தை அவமதித்தும் விமான பலத்தின் உயர்வை அதிகமாகக் கருதியதும்தான் ஹிட்லர் செய்த பெரிய தவறுகள். விமானங்களை உபயோகப்படுத்தி பிரிட்டிஷ் துறைமுகங்களையும், பிரிட்டிஷ் தொழிற்சாலைகளையும் நாசமாக்கியும் நீர்மூழ்கிகளுக்குச் சாதகமாக சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களையும் கண்டுபிடித்துத் தகவலும் கொடுத்துவிட்டால், வெற்றியடைந்துவிடலாமென்று ஹிட்லர் நினைத்தான். சென்ற வருஷம் பிரிட்டனுக்காக நடந்த யுத்தத்தில் பிரிட்டிஷாருக்குத் தேவையான சண்டை விமானங்களிருக்கா விட்டால் இது வாஸ்தவமாக ஆகி இருக்கும்.

கடைசியாக பரிசோதிக்கும் பொழுது, பிரிட்டன் தோல்வியடைய வேண்டியதுதான் என்று அபிப்பிராயப்படுகிறவர்கள் தீர்மானமான முடிவுக்கு வருவதற்கு ஆதாரமென்னவென்றால், ஐக்கிய நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள ஜீவநாடி போன்ற கடல் மார்க்கத்தைத் தகர்த்துவிட ஹிட்லர் சக்தியுள்ளவனென்று அவர்கள் நம்புவது தான்.

ஜெர்மானிய நீர்மூழ்கிகளும், கொள்ளைக் கப்பல்களும், விமானங்களும் ஜனநாயக நாடுகள் கட்டக்கூடியதற்கு மேலாகவே கப்பல்களை அமிழ்த்திவிட முடியும் என்று தோல்வியேற்படுமென்று நம்புகிறவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் அவர்கள் அம்மாதிரி சொல்லும்பொழுதும் நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. வரப்போகும் எட்டு மாதங்களில் ஐக்கிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள கடல் மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டியதில் ஒரு விபத்தான நிலை உண்டாகியிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் 10 லக்ஷம் டன் எடைமானமுள்ள கப்பல்களைக் கட்டவேண்டிய ஏற்பாட்டை செய்துவருகிறோம். நம்முடைய கப்பல்களின் சங்கியை விசேஷமாக அதிகரித்துவிடலாம். இத்துடன் பிரிட்டிஷாருடைய கப்பல்களும் சேர்ந்து, ஒவ்வொரு மாதமும் இங்கிலாந்துக்கு வந்து சேரக்கூடிய கப்பல்களின் சங்கியை அதிகரிக்காமல் இருக்கும்படி செய்ய வேண்டுமானால் ஜெர்மனியானது ஒவ்வொரு மாதமும் சராசரி 5 லக்ஷம் டன் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடிக்க வேண்டும்.

## பிரெஞ்சுக் கடற்கரையிலிருக்கும் கொள்ளைக் கப்பல்கள்.

நீர்மூழ்கிகளால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் சங்கியை அதிகரிக்கவில்லை. நேசநாடாகயிருந்த பிரான்ஸ், நார்வே இவைகளின் கடற்கரையில் இருந்து கிளம்பும் கொள்ளைக்கப்பல்களும், விமானங்களும் பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களுக்கு ஏராளமான சேதம் உண்டுபண்ணி வருகிறது. ஆகிலும், வெகு தூரம் சென்று சண்டை போடக் கூடிய விமானங்கள் அதிகரித்துவிட்டதாலும், வியாபாரக் கப்பல்களுக்கு பாதுகாப்பு நன்றாய் அமைக்கப்பட்டிருப்பதாலும், இந்த கஷ்டங்களும் விருத்தி அடையாமல் குறைந்து வரக்கூடும். நம்முடைய கடற்படையின் சேர்ந்து விஸ்தரிக்கப்



பட்டு இருப்பதால், அமெரிக்காவின் அமைதிக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடிய கொள்ளைக் கப்பல்களையும் நீர்மூழ்கிகளையும் அடிக்கடி கவனித்து வரக்கூடும். நம்முடைய ஸப்ளைகளில் இருந்து ஏற்படக்கூடும் விமான பலத்தின் மேன்மையுடன் ஜனநாயக நாடுகளின் கடலாதிக்கம் அதிகரித்து நாமே எதிர்ப்பு யுத்தம் ஆரம்பிக்கக்கூடும். கடல் யுத்தத்தின் தற்காப்பு என்ற முறையானது நின்று போய்விடும். சண்டை விமானங்களால் ரக்ஷிக்கப் பட்டும் வெகு தூரம்சென்று வெடிகுண்டுகள் போடக்கூடிய விமானங்களின் உதவியுடனும் வேவுபார்க்கும் விமானங்களுடன் ஒத்துழைத்து சமுத்திரத்தில் செல்லும் கப்பல்கள் ஹிட்லர் வசம் உள்ள பெரிய கடற்கரையின் சமீபத்தில் தங்களுக்கு இஷ்டமானபடி எந்தப் பிராந்தியத்திலும் தைரியமாகச் செல்லக்கூடும். மற்றொரு பக்கத்தில், அடக்கமான ஒரு பரப்பைப் பாதுகாத்துவரும் பிரிட்டன் ஹிட்லருக்குள்ள மிதமான கடற்படைகள் பிரிட்டனை எதிர்த்தால் அதைத் தடுப்பதற்கு எல்லா பாகங்களிலும் தயாராகயிருக்கிறது.

அட்லாண்டிக் சமுத்திரத்தில் யுத்தமும், பிரிட்டனுடைய ஜீவ நாடியான சமுத்திர வழியை அடைபடாமல் தடுப்பதும்தான், நம்முடைய முஸ்திப்புகளையும் உணவுப் பொருள்களையும் பிரிட்டிஷ் துறைமுகங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதைவிட முக்கியமான வேலை. உலகத்திலுள்ள ஜன நாயக நாடுகளெல்லாம் முன்னேற்றத்தைக் கைக்கொள்ளுகிறவர்களென்று அர்த்தம். அதுக்கபடி அவர்கள் செய்ய வேண்டியது யாதெனில், ஜன நாயக நாடுகள் வசமுள்ள ஏராளமான பொருளாதாரங்களை யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக ஒருங்கு சேர்க்க வேண்டும். பிரிட்டனுடையவும் அமெரிக்காவினுடையவும் உருக்கு சாலைகளின் உற்பத்தி ஒரு வருஷத்திற்கு 1,100 லக்ஷம் டன்களுள்ளது. ஜெர்மனியின் அதிகாரத்துக்குட்பட்ட ஐரோப்பா முழுவதும் ஒரு வருஷத்துக்கு 420 லக்ஷம் டன்களுக்கு மேல் உற்பத்தி செய்யமுடியாது. நம்முடைய தொழிற்சாலைகளின் சக்தி ஜெர்மானியர்களுடையதைவிட உயர்வானது.

யுத்த தளவாடங்கள் செய்வதற்கும் உபயோகப்படுத்துவதற்கும் நிக்கல் எஃகுதான் சுலபமானது. ஒருவருஷத்திற்கு நமக்கு 1,10,000 டன்கள் நிக்கலும் ஜெர்மானியர்களுக்கு 2,500 டன்கள் நிக்கலும் கிடைக்கும் மற்ற முக்கியமான உருக்குகளுக்கு குரோமியம் தான் உபயோகப்படுத்த வேண்டும். இப்பொழுது வருஷத்திற்கு ஜெர்மனிக்கு 1,00,000 டன்கள் கிடைக்கக் கூடும், நமக்கு 7,00,000 டன்கள் கிடைக்கும். யுத்த தளவாடங்களுக்கு லாயக்கான மற்ற முக்கியமான சாமான்கள் செம்பும் தகரமும். பிரிட்டனுக்கு நாம் உதவி செய்து பிரிட்டன் செய்யும் முற்றுகையையும் மீறி திருட்டுத்தனமாக ஜெர்மனிக்குத் தகரம் கிடைத்தாலொழிய, வருஷத்திற்கு 1,000 டன்களுக்குமேல் ஜெர்மனிக்குக் கிடைக்க முடியாது. நம் வசம் 2,00,000 டன்களிலிருக்கின்றன. ஒரு வருஷத்தில் ஜெர்மனிக்குக் கிடைக்கக் கூடிய செம்பை, நேச நாடுகளும் ஐக்கிய நாடுகளும் அவர்களின் உற்பத்தி ஏற்பாட்டில் மூன்று வாரங்களில் உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

### அலுமினிய வசதி.

அலுமினிய உற்பத்தியில் தான் ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும் நேச நாடுகளோடும் ஐக்கிய நாடுகளோடும் ஸமமான நிலை பெற்றிருக்கிறது. ஆகிலும் நம்மிடம் ஏராளமாகயிருக்கும் மற்ற உலோகங்களுக்குப் பதிலாக அலுமினியத்தை ஜெர்மனி உபயோகிக்கவேண்டியிருக்கிறது. ஜெர்மனிக்கு ரப்பரும் பெட்ரோலியமும் அத்யாவசியமாகத் தேவை. முற்றுகைக்குட்பட்டிருக்கும் ரப்பரைத் தவிர ஜெர்மனிக்குப் புதிதாக வரத்துயில்லை. நமக்கு 5,00,000 டன்கள் ரப்பர் கிடைக்கும். அவர்கள் பதில் வெட்டி ரப்பரை உபயோகிக்கிறார்கள். இதை தயாரிப்பதற்கு ஜெர்மானியரின் ரஸவாத தொழிற்சாலைகள் அதிகமாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. மேலும், அவைகள் அபாயங்களுக்கு உட்படும் மற்ற இடையூறுகளும் நேரிடக்கூடிய நிலைமையிலிருக்கின்றன.

பெட்ரோலிய உற்பத்தியைப்பற்றி ஜெர்மனிக்கு உண்டாகியிருக்கும் கவலையை நன்றாய் நிவர்த்திக்க முடியாது. எந்நிலைமையிலும் ஜெர்மனி, வேறு வகையில் உற்பத்தி செய்யப்பட்டதோடு கூடச்சேர்ந்து 150 லக்ஷம் டன்களுக்கு மேல் எண்ணெய் அடைய முடியாது.

ஜன நாயக நாடுகளின் பாதுகாப்புக்கு இவ்விதமான எல்லா ஐச்வர்யங்களையும் ஒன்று கூட்டமுடியுமாவென்பது அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் நடக்கும் யுத்தத்தில் தான் நிர்ணயிக்கப்படும். நமக்கு அனுகூலமாக நம்மிடம் ஏராளமான சாமான்களிருக்கின்றன. இஷ்டப்படாத, முறியடிக்கப்பட்ட ஜனங்களை அடக்கியாள வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படவில்லை. ஜன நாயக நாடுகளின் உற்பத்தி சக்தியை அபிவிருத்தி செய்ய சுயேச்சை ஜனங்களின் சாதகத்தையும், புத்திசாலித்தனத்தையும், ஆர்வத்தையும் உபயோகப்படுத்தி விடலாம். நம்முடைய சுய நலத்திற்காகவே, நம்முடைய ஐச்வர்யங்களின் மேன்மையால் நாம் உண்டு பண்ணக்கூடிய யுத்த தளவாடங்கள் எகிப்திலுள்ள சைனியங்களுக்கும், சமுத்திரங்களில் ரோந்து செய்யும் நேச தேச கடற்படைக்கும், உலகத்திற்கு சுதந்திரம் அளிக்கவேண்டி சண்டை செய்யும் விமானப்படைகளுக்கும் போய்ச் சேரும்படி நாம் செய்யவேண்டும்.

### மற்ற ஜனநாயக நாடுகளுக்கும் உதவி.

பிரிட்டிஷாரைப்போல ஐரோப்பாவிலுள்ள விழுந்து போன ஜனநாயக நாடுகளாகிய நார்வே, போலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா இவைனும் மற்றவைகளுக்கும் உதவி செய்ய ஐக்கிய நாடுகள் தயார்தாராகயிருக்கிறார்கள். உலகம் பூராவையும் ஆக்ஷிபுரிவதற்காகச் செய்யும் யுத்தமாகையால் முடிவு வரையில் நாம் யுத்தம் செய்யப் போகிறோம். ஜெர்மானியர்களின் ஜாதி உயர்வைப்பற்றி தன்னுடைய கொள்கையைத் தெளிவாகவும் சந்தேகப்பட முடியாத சொற்களாலும் ஹிட்லர் தெரிவித்திருக்கிறான். ஜெர்மானியர்கள் தான் உலகத்தை ஆள லாயக்குள்ளவர்களென்று சொல்லியிருக்கிறான்.

ஜப்பானியர்கள், சைனாக்காரர்கள் இந்தியர்கள், ஆபிரிக்கர்கள், ஸ்பெயின் தேசத்தார்கள், போர்ச்சுகல் தேசத்தார்கள், அமெரிக்கர்கள் எல்லோரும் கீழ்தர ஜாதியைச் சேர்ந்தவர்கள். அமெரிக்கர்கள் அன்புடன் ஆதரித்து வரும் ஒவ்வொரு சுதந்திரத்தையும் அவர்கள் மறுக்கிறார்கள்.

கிழக்கே சூர்யன் உதிப்பதென்பது நிச்சயம் என்பது போல், இந்த யுத்தத்தில் ஹிட்லர் வெற்றி பெற்றால், தங்களுடைய மனோபீஷ்டப்படி ஈஸ்வரனைத் தியானம் செய்யவொட்டாமல் தடுத்துவிடும் நாள் அமெரிக்க ஜனங்களுக்குக் கிட்டிவிட்டதென்றே சொல்லலாம். ஹிட்லர் ஆக்ஞாபிக்கும் மார்க்கத்தில் தான் அவர்கள் செல்லவேண்டிவரும். ஜாதி, மதம், கொள்கை இவைகள் சம்பந்தமாக நாஸி கக்ஷியில் நோக்கமுள்ள ஜனங்கள் உண்டாகுவதிலிருந்து அமெரிக்காவில் கெடுதல்கள் நேரிடக்கூடும்.

உண்மையாக, ஹிட்லருடைய கவசம் பூண்ட படைகளும், அவனுடைய காவல் முகாம்களும், அவனுடைய பொருளாதார நிகழ்ச்சிகளும், உலகத்தில் சுதந்திரமில்லாத ஜனங்களுக்கு ஏழ்மைத்தனமும் கொடுமையும் தான் அளிக்கப்போகின்றன. ஜன நாயக நாடுகள் வெற்றி பெற்றால், இந்த ஜனங்களுக்கு, அவர்கள் இது வரையில் அறிந்திராத வாழ்க்கையை அனுபவிக்க சந்தர்ப்பம் வாய்க்கக்கூடும்.

உயர்வான ஜாதியார் என்று சொல்லப்படும் ஜெர்மானியர்களின் வெற்றியைவிட நம்முடைய வெற்றியிலிருந்து ஜனங்கள் எல்லோரும் நல்ல இல்லற வாழ்க்கையும், நல்ல ஆடைகளும், அதிக உணவுப்பொருள்களும், தங்கள் தேசத்தின் பேரில் விசேஷமான பாத்தியமும் பெறுவார்களென்பது நிச்சயம். இந்தியா, ஆபிரிக்கா, ஜப்பான், சைனு இவைகளின் ஜனங்களும், நமக்குத் தெற்கேயுள்ள மற்றெல்லோரும் நம்முடைய ஜயத்தின் பயனாக, அவர்களுக்கு வாழ்க்கையில் அவசியமானவைகளை மட்டுமாவது நிச்சயமாகப் பெறக்கூடிய ஒரு முறையை அடைவார்கள்.

### பொருளாதார சுதந்திரத்துக்காக யுத்தம்.

பேச்சு உரிமைக்கும், மத உரிமைக்கும், கூட்டுறவு வாழ்க்கை அடைவதற்கும் மட்டும் செய்யப்படும் யுத்தமல்ல. இது பொருளாதார சுதந்திரத்துக்காக போடப்படும் யுத்தம். 200 வருஷங்களாக நமது முன்னோர்கள் யுத்தம் செய்து கஷ்டப்பட்ட விதமாக இந்தத் தலை முறையிலும் அவைகளை நிலைநாட்ட நமது ஜனங்கள் யுத்தம் செய்கிறார்கள்.

இப்பேர்ப்பட்ட ஜனங்களை அடிமைகளாக்கவும், தனக்கும் தனக்கு இஷ்டமானவர்களுக்கும் வாழ்நாளுக்கு வேண்டிய நல்ல பதார்த்தங்களை எடுத்துக் கொள்ளுவதற்கும் ஹிட்லர் ஏற்பாடு செய்யப் போகிறான். இந்த ஜனங்களை விடுவித்து விட்டதாக ஜெர்மனியின் பிரசார இலாகா அறிவிக்கிறது. அவனுடைய செய்கைகள் இதைப் பொய்யாக்குகின்றன. இப்பொழுது அவன் முறியடித்த ஒவ்வொரு தேசத்தின் ஜனங்களையும் பட்டினி போட்டுக் கொல்லுகிறான். பிறகு நம்முடைய ஜனங்கள் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கொடுக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறான்.

ஜனநாயகத்துக்கு வெற்றி ஏற்படும் காலத்தில், உலகத்தின் எல்லா ஐச்வர்யங்களையும் எல்லா ஜனங்களும் பகிர்ந்து கொள்ளலாம். இந்த வெற்றியிலிருந்து ஜெர்மானிய ஜனங்களுக்குக் கொடுமை ஏற்படக்கூடாதென்பதுபோல, அநேக

வருஷங்களாக இழுத்திருக்கும் போது [illegible] பான பேச்சு [illegible] ஏற்படும் [illegible].

. உலகத்திலுள்ள மற்ற அநேக தேசங்களைப்போல, வலுவுள்ள சத்ருவின கடுமையான எதிர்ப்பின் கீழ் எங்களுடைய தேச நாடுகள் ஒவ்வொன்றும் நாசமடையும் வரையில் நாங்கள் போராடப் போகிறதில்லை ஜனநாயக [illegible] ஒத்தாசை [illegible] நாடுகள் தீர் [illegible] இந்த உதவி [illegible] கவர்மென்டி யிலும் அளிக்கப்பட வேண்டும். ஹிட்லர் வலுவுள்ளவன். ஜனநாயக நாடுகள் அதிக வலுவுள்ளவை. ஹிட்லர் வெற்றி அடைய முடியாது.

---

## பிரிட்டனில் ஜனங்களின் ஒற்றுமை.
## தொழிற் கட்சியினரின் மனப்பான்மை.
## பார்லிமெண்ட் மஹா சபையில் சர்ச்சை.
## தேசம் முழுவதும் மந்திரி சர்சிலுக்கு ஆதரவு அளிக்கிறது.

ச. எ. மாண்டேகு சொல்லுவது.

இப்போது நடந்திருப்பதான மனதுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் காரியம் போர் முனையில் கூட நிகழவில்லை என்பது என் கருத்து. இது தொழிற் கட்சியினர் வெஸ்ட் மினிஸ்டர் மண்டபத்தில் கூடியபோது நடந்தது. இது, யுத்தத்தினால் கஷ்டம் அடைந்திருக்கும் கோடிக்கணக்கான தொழிலாளிகளின் பிரதிநிதிகளின் கூட்டமாகும். குண்டை லக்ஷியம் செய்யாது நிற்கக்கூடியதான வீடுகள் இல்லாததால் விமானப்படையெடுப்புக்குத் தற்காப்பாக உள்ள காம்புகளில் தங்குபவர்கள் இவர்கள். தங்கள் உரிமைகளை கருதாது நெடும்போது பல மணி நேரம் வேலை செய்ய ஒப்புக்கொண்டுள்ளவர்கள்.

இவர்கள்தான் சட்டசபையில் எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள். நீடித்த சமாதானம் வேண்டுமானால் யுத்தத்தில் கட்டாயம் ஜயம் பெறவேண்டுமென்று 100-க்கு 99 சதவிகிதம் ஓட்டுக்கொடுத்தவர்கள். சர்சிலுக்கு தேசம்முழுமையும் தன்னை ஆதரிக்கிறதா என்ற சந்தேகம் இருந்திருக்குமானாலும் அது நிவர்த்தியாகி விட்டது. இவ்விதமாக இருக்கிறது இன்றைய தேசமக்களின் ஒற்றுமை. உண்மையில் கவர்ன்மெண்டுக்கு எவ்வித எதிர்ப்பும் இப்போது கிடையாது. ஒரு மாதத்துக்கு முன் கவர்ன்மெண்டாரிடத்தில் சபைக்கு நம்பிக்கையிருக்கிறதா என்று சர்சில் கேட்டபோது 447 பேர்கள் சாதகமாகவும் 3 பேர்கள் விரோதமாகவும் ஓட்டுக் கொடுத்தனர்.

### ஒளிவு மறைவில்லாத சர்ச்சை.

காமன்ஸ் சபையின் நிலை மிகவும் அபூர்வமாக இருக்கிறது. எதிர்கட்சிகளான தொழிற்கட்சி, மிதவாதக்கட்சி இவைகளின் தலைவர்கள் கவர்ன்மெண்டில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் தங்கள் கட்சிகளின் ஆதரவுகளையும் பெற்றிருக்கிறார்கள்.



கவர்ன்மெண்டுக்கு உண்மையில் விரோதமாயிருப்பது நாட்டுக்கே நாசம் என்று உணர்ந்து, எதிர் கட்சிகளின் வாஸ்தவமான நோக்கமான, சர்ச்சைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். தேசத்தின் நன்மைக்கு இது அவசியம். இவர்களில் ஒவ்வொருவரும் தான் தான் கவர்ன்மெண்டுக்கு விரோதமில்லாதவன் என்று வற்புறுத்திக்கூறுவார்.

இவர்கள் எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள். இவர்களில் முக்கியஸ்தர்கள் குடியுரிமை கட்சியைச் சேர்ந்த 'ஷின்வெல்', கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த விண்டர்டன் பிரவு, மிதவாதியான க்ளிமண்ட் டேவிஸ் மற்றும் தனிப்பட்டவர்களான லாயிட் ஜார்ஜ், ஹோர்பெலிஷா இவர்களும் இப்படிப்பட்டவர்கள்.

இவர்களும் இன்னும் அநேகரும் கவர்ன்மெண்டாரின் நடவடிக்கைகளைப் பற்றி பகிரங்கமாகவே குறைகூறுகிறார்கள். யுத்தத்துக்கு முன் சமாதான காலத்தில் நிகழ்ந்த கட்சிப் பிரதிகட்சி ராஜீய விஷயங்களில் சர்ச்சை நடந்ததைப் பார்க்கிலும் இப்போது அதிக பகிரங்கமாக நடக்கிறது.

இந்த வருஷ ஆரம்பத்தில், ஆங்காங்குள்ள நாட்டுப்புற உத்தியோகஸ்தர்கள் தாங்களாகவே ஞாயிற்றுக்கிழமைகளில் நாடக சாலைகள் நடக்க அனுமதிக்கலாம் என்று கொண்டுவரப்பட்ட சட்டம் காமன்ஸ் சபையில் தள்ளப்பட்டது ஞாபகமிருக்கும்.

இவ்விதம் தள்ளுபடி செய்தது மதியீனமானதா என்பது ஒரு புறம் இருக்கட்டும். விஷயம் என்னவென்றால் கவர்ன்மெண்டு தரப்பில் கொண்டுவரப்படும் சட்டத்தை தள்ளுபடிசெய்யக் கூடுமானபடி சுயேச்சை இந்தச் சபைக்கு இருக்கிறதா என்பதுதான். முக்கியமானதான யுத்த விஷயத்தில் சபை பூராவும் சர்சிலுக்கு ஆதரவு அளிக்கிறது.

### தேர்ச்சிக்கு ரஜா.

தொழிற்கட்சியினரின் கூட்டத்தில் சண்டை செய்யக்கூடாது என்ற கொள்கையுடைய ஒருவர் பிரதம மந்திரியின் ஜீவியத்தில் பல குறைகள் இருப்பதாக எடுத்துக் காட்டியபோது கூட்டம் பூராவும் கை கொட்டி நகைத்தார்கள்.

இருந்தும் பார்லிமெண்டு சபையைப் போலவே தொழிற்கட்சி கூட்டம் கவர்ன்மெண்டாரின் நடவடிக்கைகளைப்பற்றி சர்ச்சைகள் நடத்தியது. பிரதிநிதிகள், அதிகாயம் அடையப்படுவதைப் பற்றியும், ஆகாரவினியோகம் செம்மையாய் செய்யப்படவில்லை என்றும் குறை கூறிப் பேசினார்கள். [illegible] கள் சரியாக நடத்தப்படவில்லை என்று வற்புறுத்தி [illegible] இன்னும் பலவிதம் [illegible] பட்டன [illegible] யமும் யுத்தத்தை எவ்விதம் நன்கு நடத்த வேண்டும் என்ற [illegible] தடவையேகூறப்பட்டன. நான் பிரிடிஷ் தொழிற்கட்சியினரிடத்தில் பிரியமில்லாதவன். ஆனால் இப்போது இவர்களை நன்கு மதிக்கிறேன். தேர்ச்சிலைய நிறுத்தி வைக்க இவர்கள் சம்மதித்து இருக்கிறார்கள். அதாவது தற்போதுள்ள எந்த கக்ஷியினரும் தன் ஸ்தானத்தை இழந்தால் அதை பூர்த்திசெய்ய தேர்தல் வேண்டியதில்லை என்பதே. எந்த கட்சியைச் சேர்ந்தவர்களின் ஸ்தானங்காலியானாலும்

அந்தக்கட்சியைச் சேர்ந்தவேறு ஒருவர் அந்த ஸ்தானத்துக்கு நியமிக்கப்படுகிறான். இதனால் ஜன சமூகத்தின் மன வேறுபாட்டின் காரணமாக தொழிற்கட்சியார் தேர்தல் மூலம் அதிக ஸ்தானங்கள் அடைய முடியாது.

தேசத்தின் நன்மைக்கு விரோதமாக தங்கள் கட்சி பலமடையவேண்டுமென்று எவரும் கருதவில்லை. தங்களால் ஆனவரை ஒத்தாசை செய்யவேண்டும் என்ற பரந்த நோக்கத்துடன் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்விதமான யாதொரு வற்புறுத்தலுமன்றி சுயேச்சையாக ஏற்பட்டிருக்கும் தேச மக்களின் ஒத்துமையே நமக்கு வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

---

## புது நிருசு பிரிடிஷ் வெடிகுண்டுகள்.
## அவைகளின் அபூர்வ வெடிப்பு வேடிக்கைகள்.
## ஹாம்பர்க்கில் எதிர் ஒலி.

மே மாதம் 28-ம் தேதி 'டெயிலி எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் நிருபர் 'லிஸ்பன்' நகரிலிருந்து விடுத்த செய்தி.

புதிய பிரிடிஷ் வெடிகுண்டுகளின் அபூர்வ செய்கைகள் ஹாம்பர்க்கர்களுக்கு வியப்பு உண்டாக்குகிறது.

பெரிய மாளிகையைத் தரைமட்டமாக்கியும், அடுத்தாற்போல் உள்ள சின்னக் கட்டடத்தை நஷ்டம் செய்யாமலும், 200 கெஜத்துக்கப்பால் உள்ள வேறு ஒரு மாளிகையை நாசமாக்கியும் விளையாடுகிறது இப்புதிய குண்டு.

வெள்ளை நிறமான மாளிகைக்கு முன்னிருந்த சிகப்புக் கட்டடம் குண்டுக்கு இரையாகி பொடிப் பொடியாயிற்று. சிறிது விநாடிக்கெல்லாம் இந்தச் சிகப்புக் கட்டடத் தூள் பரவி வெள்ளைக் கட்டடம் சிகப்பாயிற்று.

இந்த விதமான குண்டுகளை—வெடிக்காமல் விழுந்து கிடப்பவைகளை—பொறுக்குவது மிக்க பயங்கரமானதாகக் கருதப்படுகிறது. 20 வருஷம், ஆயுள் பரியந்தம் இவ்விதம் சிறைவாசம் விதிக்கப்பட்ட கைதிகள் இவ்வேலைக்கு வருவதாய்ச் சொல்லிக்கொண்டால் அவர்களுக்கு தண்டனை குறைக்கப்படுகிறது.

இவர்களில் அநேகர் இவ்விஷயத்தில் உயிர் துறந்திருக்கின்றனர். பலர் சுயேச்சை பெற்று ஜெயிலிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள்.

இந்நகரத்திலுள்ள, நீதி மன்றங்கள், பாங்கி கட்டடங்கள், வியாபார மஹால்கள், அமெரிக்க தூது நிலயங்கள் இவைபோன்ற பல பெரிய கட்டடங்கள் சேதமாய் விட்டன.

பத்து நாட்களுக்கு முன் நடந்த ஒரு விமானப்படையெடுப்பில் 220 பேர்கள் இறந்தார்கள் என்று கவர்ன்மெண்டு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் அநேகர் பாழடைந்த கட்டடங்களுக்குள் புதை யுண்டனர். இவர்களில் கப்பல் கட்டுவதில் தேர்ச்சி பெற்றவர்கள் பலர்.



கப்பல் கட்டுமிடத்தில் எவ்வளவு சேதம் என்று நிச்சயமாய் சொல்ல முடியாது. ஏனென்றால் அங்குள்ள எவனும் எவ்வளவு சேதம் என்று உண்மையைச் சொன்னால் உடனே அவனுக்கு மரண தண்டனைதான். அவர்களில் பலரும் சேதமடைந்த இடத்தைப் பார்க்க விடப்படுவதும் அபூர்வம்.

ஹாம்பர்க்கிலிருந்து லிஸ்பனுக்கு வந்துள்ள ஒரு 'ப்ரசீலியர்,' அந்நகரத்தார் காங்க்ரீட் சுரங்கங்களில்கூட இந்த புதிய குண்டுகளினால் ஆபத்து என்று நினைப்பதாகக், கூறுகிறார். இவர்கள் சுரங்க ரயில் பாதைகளில் தான் அபாயமில்லை என்று கருதுவதாகக் கூறுகிறார்.

இவ்வித குண்டுகள் பிரயாணிகளுக்கானதான அமெரிக்க விமானங்களை யுத்தத்துக்காக மாற்றி அமைக்கப்பட்டு அவைகளிலிருந்து எறியப்படுவதாக ஜனங்கள் நம்புகிறார்கள்.

பள்ளிக்கூடம் போகும் சிறுவர்கள் எல்லாரும் வேறு ஊர்களுக்கு அனுப்பப் பட்டுவிட்டனர். இப்போது பிரிடிஷ் ராணுவ கைதிகளை நகருக்கு சமீபத்தில் வைத்திருக்கிறார்கள்.

---

## கிரீஸ் போரையும், கிரீட் போரையும் நாம் பாராட்ட வேண்டும் விதம்.
## ஸூயஸுக்காகச் சண்டையில் பக்கப் பாதுகாப்பு வேலை என்று மதிக்கவேண்டும்.
## மத்திய கீழ்த்திசையில் ஹிட்லர் சண்டை போடுவதாய்த் தீர்மானம் செய்ததின் ஆதாரம்.

[லெப்டினென்ட் ஜெனரல் Sir டக்லஸ் பிரௌன்ரிக் எழுதியது.]

கிரீட் தீவை ஜெர்மானியர்கள் கைப்பற்றியதிலிருந்து, எகிப்து தேசத்தில் வெடிகுண்டு விமானங்களுக்கு வேண்டிய இலக்குகளை 100 மைல் தூரம் தனக்கு சமீபத்தில் வரும்படி ஜெர்மானியர்கள் செய்துகொண்டுவிட்டார்கள். நமது கப்பற்படைக்கும், மத்யதரைக்கடல் பிரதேசம் குறுகலாக்கப்பட்டுவிட்டது. ஸைப்ரஸ் தீவின்பேரில் ஒரு எதிர்ப்புத் தொடுப்பதற்கு லாயக்கான நல்ல ஸ்திதிக்கு ஜெர்மானியர் வந்துவிட்டார்கள். தவிரவும் அதே விதமாய் துருக்கியை ஐரோப்பா பக்கத்தில் முழுமையும் வட்டமாய் வளைக்கவும் ஹேதுவாய்விட்டது. தவிரவும் ஜெர்மானியர்களுக்கு ஒரு ஜயத்தால் உண்டான ஒரு கௌரவமும் கிடைத்திருக்கிறது. இவைகள் ஒருவாறு ஒப்புக்கொள்ளப்பட்டாலும், நம்மவர்கள் பக்கத்திய வரலாறுகளையும் கவனிக்கவேணும்.

கிரீஸில் நமக்கு ஜயம் கிடைப்பது சிரமந்தானென்று யுத்த காபினெட்டுக்கு நன்றாய்த் தெரிந்திருந்த விஷயம்தான். மூன்று வாரங்களுக்கு முன்பு காமன்ஸ் சபையில் Mr. ஈடன் இதை ஸ்பஷ்டமாக்கியிருந்தார். ஆதலால் ஜெர்மானிய விமானப்படையின் அதிக பலத்தால் நிச்சயம் கிரீட் தாக்கப்பட்டு ஜயிக்கப்படும்

என்று பிரிடிஷ் மந்திரி சபைக்குத் தெரிந்திருக்கும். அல்லது ஜயம் கிடைப்பது சந்தேகம்தான் என்று அதற்கு தெரிந்திருக்கும். இருப்பினும் ஜயா அபஜயத்தைச் கவனிக்காமல் போரில் இறங்கினார்கள். ஏன்? யுத்த மந்திரி சபையும், அவர்களுக்கு யோஜனை சொல்லும், உத்தியோகஸ்தர்களும், யுத்தம் முழுவதையும் ஒன்று சேர்த்துப் பார்க்கிறார்களேயொழிய, மற்ற பாமர ஜனங்கள் பார்ப்பது போல் ஒரேயிடத்தில் பகட்டான காரியம் நடக்குமென்றும், நடக்கவேணுமென்றும் எதிர்பார்க்கிறதில்லை.

## மாறும் தோற்றங்கள்.

யுத்தத்தை மொத்தமாய் நோக்கியதிலிருந்து, கிரீஸ், கிரீட் பிரதேசங்களில் நாம் செய்யும் தவக்கப்படுத்தும்படியான எதிர்ப்புகளினால், நம்முடைய ஏக சக்ராதிபத்திய படைகள் உலகத்தில் பல பாகங்களில் முக்கியமான காரியங்களைச் சாதிக்க அவகாசம் கிடைக்கும் என்று பிரிடிஷ் மந்திரி சபையோர் நினைத்திருக்கிறார்கள். இப்படி இவர்கள் எதிர்த்து நின்றதால், அமெரிக்கா, ஸ்பெயின், துருக்கி, அராபிய தேசங்கள் பிரிடிஷாரைப்பற்றி என்ன அபிப்பிராயம் சொல்லுகிறார்கள் என்றும் அறிந்துகொள்ள சாத்தியமானது.

ஜெர்மானியர் கிரீஸில்போட்ட திட்டங்களில் 3 வாரத் தவக்கத்துடன் கிரீட்டில் ஏற்பட்ட இரண்டு வாரத் தவக்கத்தை சேர்க்க, இலைகளுக்கு உபரி பயன் கிடைத்தது. இந்த மாதத்தில் வெகு சமாசாரங்கள் நடந்தன. அமெரிக்கர்களின் கொள்கை ஸ்திரப்பட்டது. கோடையில், கடும் பாலைவனத்தில் ராம்மல் படை நிற்கும்படிக்கும் செய்யப்பட்டது; ரஷீத்அலி படுதோல்வியடைந்தான். இதாலிக்குச் சொந்தமான கிழக்கு ஆபிரிக்கா ஏக சக்ராதிபத்தியம் நசித்து, எகிப்து போருக்கு சாதகமாயிருக்க அந்தப் பிரதேசத்திலிருந்து பிரிடிஷ் துருப்புகள் வரும்படி செய்யப்பட்டிருக்கின்றன. ஏன் அவசியமானால் இந்தத் துருப்புகள் பாலஸ்தீன எல்லை வழியாய் ஸிரியா படையெடுப்புக்குக்கூட சித்தமானவையாக யிருக்கின்றன.

கிரீஸ் கிரீட் சண்டைகள் இரண்டும் ஸூயஸ் கால்வாய்க்காக போடப்படும் யுத்தத்திலும், இராக் எண்ணெய்க் கிணறுகள் சம்பந்தமான யுத்தத்திலும், நாம் செய்த பக்கப் பாதுகாப்புச் சண்டைகள் என்று நான் சொந்தத்தில அபிப்பிராயப் படுகிறேன். இந்த இரண்டு சண்டைகளால் நாம் மத்திய கிழக்குப் பிரதேச முக்கியம்வாய்ந்த பெரிய போருக்கு, மூல சைனியத்திற்குப் போதுமான அவகாசம் கிடைத்தது.

"யுத்தம் நடக்கும்பொழுது என்னை எதுவேணுமானாலும் கேள் தருகிறேன் அவகாசம் மட்டும் கேட்காதே" என்று நெப்போலியன் ஒரு காலத்தில் சொன்னான். இந்த விலைமதிக்கவொண்ணாத பொருளை—மாதக் கணக்கான அவகாசம்—ஹிட்லர் இழந்துவிட்டான்.

இப்படிப் பேசும்பொழுதே, ஜெர்மானியப் போக்குவரத்து விஷயமாய் நாம் நினைக்கவேண்டியது அவசியம். ஹிட்லர் தரைச் சண்டைபோட்டவரையில், அவனுடைய போக்குவரத்து சாதனத்தைப்பற்றி அவனுக்குப் பயமே



கிடையாது. ஆனால், ஆகாச மார்க்கத்தினாலேயே ஒரு சைனியம் வெகுகாலம் சம்ரக்ஷிக்கப்படுவது என்பது சாத்தியமல்ல. ஸைப்ரஸ் தீவின்பேரிலும் ஸிரியாவின் பேரிலும் யுத்தம் தொடுக்கப்படும் பக்ஷத்தில், பிரிடிஷ் கப்பற்படை பலத்திற்கு எதிரிடையாய்தான் போக்குவரத்து வைத்துக்கொள்ளவேணும். துருக்கி மார்க்கமாய் வழி பார்க்காமல் ஹிட்லர் இந்த அபாயமான முறையை சாதிக்கப் பார்க்கிறான்— இந்தமாதிரி ஹிட்லர் செய்வதற்கு பலமான காரணங்கள் அவனுக்கு இருந்தாகவேணும். நமது கடற்படையின் ஆதிக்கம் வாய்ந்த பிரதேசங்களில் இதுவரை ஹிட்லர் ஒரு பிரதேசத்தில் தான் கடல்தாண்டி தன்னுடைய போக்குவரத்து வழியை ஏற்படுத்திக்கொண்டான். அது லிபியா போவதற்கு—ஆனால் அவனுடைய போர்வேலையானது தீர்மானமாக தடைகலங்கிவிட்டது. இது லிபியாவில் ராம்மல் பற்றிய குறிப்பு.

இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் வெளிவரும், வருங்கால யுத்த நடவடிக்கைகள் நமக்கு மிகவும் தைரியமும் சாதகமும் அளிக்கும் விதமாயிருக்கிறதென்று தெரியும். இது மட்டுமல்ல, ஹிட்லருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், பிரிடன் பேரில் படையெடுக்காமல் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் அவன் போர் துவக்கியதிலிருந்து நிச்சயமாய் அவன் ஜயமடையமாட்டான். அவனுக்கு நிச்சயமான ஜயம் கிடைக்குமா கிடைக்காதா என்று பார்ப்பது, பிரிடன் போரில் தான் தெரியும். இந்த டயம்தான் வட ஐரோப்பாப் பிரதேச சீதோஷ்ண நிலை சரியான போருக்கு உகந்தது. இந்தக் கடும் கோடைகாலத்தில் எந்த முரடனும் மத்திய கிழக்குப்பிரதேசத்தில் போர் துவக்கமாட்டான். இருப்பினும், பின் சொன்ன மத்திய கிழக்குதேசப் பிரதேசத்தில் போர் தொடுத்துவிட்டான்—ஆரம்பித்து தொடுப்பதில் ஹிட்லர் எப்பொழுதும் முந்திக்கொள்ளுகிறான். இருப்பினும், இவன் யோசனை செய்திருப்பதைப் பார்த்தால் அவனுக்கு காரியம் கைநழுவிக் கொண்டிருக்கிறது என்று தெரியவரும்.

---

## ஐக்கிய நாடுகளை யுத்தத்தில் இறங்காமல் செய்ய ஜெர்மானியர்களின் ஆவல்.

## பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

## கப்பல்களை எப்படி காப்பாற்றலாம்.

## கடல் பாதைகளில் ரெய்டர்கள் இல்லாமல் செய்வது.

[மேமீ 29உ "டெயிலி டெலிகிரா"பின் வாஷிங்டன் நிருபர் அனுப்பிய தந்தி.]

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் பிரசங்கத்தினால் ஏற்பட்டிருக்கும் பயன்களைப் பற்றி இவ்விடத்தில் கிடைத்துள்ள உத்தியோகமுறை ரிப்போர்ட்டுகளால் ஐக்கிய நாடுகள் யுத்தத்தில் இறங்குவதைத் தடுப்பதற்கு ஜெர்மானியர்கள் எதுவும் செய்யத் தயாராயிருக்கிறார்கள் என்று அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டது.

அமெரிக்க பொதுஜன அபிப்பிராயத்தை, எதிரி நாடுகளின் கொள்கையில் இருந்து தனிப்படுத்தியிருக்கும் எல்லைக் கோட்டிலிருந்து சற்றிக்கு இழுப்பதற்கு அமெரிக்கா ரோந்துக் கப்பலில் ஒன்றைச் சுட்டுத்தள்ளுவது போன்ற ஏதாவதொரு சம்பவம் போதுமானதென்று ஜெர்மானியர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

பிரஸிடெண்டின் கொள்கைகளுக்கு எதிரிடையாக யுத்தத்தில் இறங்காமல் தனித்திருக்கவேண்டுமென்ற கொள்கையையுடைய கட்சியை பலப்படுத்துவதாய் நாஸிகள் பலமாய்க்கூறி பயமுறுத்துவார்கள்; ஆனால் கிரியாம்சையில் அவ்வாறு செய்ய அவர்கள் இஷ்டப்படமாட்டார்கள்.

இந்தச் சமயம் ஐக்கியநாடுகள், பிரயாணத்துக்குத் தயாராய் ஓடிக்கொண்டிருக்கும் இன்ஜினையுடைய ஒரு கப்பலைப் போலிருக்கிறது. கப்பித்தான் கப்பல் பாலத்தின்மேல் வந்துவிட்டார். அவர் எங்கே போகப்போகிறார் என்று எல்லோருக்கும் தெரியும்.

கப்பல் பிரயாணிகளில் ஒரு பகுதியார் பிரயாணச் சீட்டில் கையெழுத்துப் போடத் தயங்குவது தான் கப்பல் புறப்படுவதற்குத் தாமதமாகிறது. கப்பல் பிரயாணிகள் அதாவது அமெரிக்க பொது ஜனங்கள், இரண்டு நாட்களுக்குமுன் அவர்களுடைய கப்பித்தான் செய்த பிரசங்கத்தின் பயனாய், ஒத்துப்போய் விட்டார்கள்; ஆனால் மொத்தத்தில் அமெரிக்கா ஜனங்களே மெதுவாய்த் தான் ஒரு காரியத்திலிறங்குவார்கள்.

தன் தேசத்தின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் வரும் ரிப்போர்ட்டுகளை கவனமாய்ப் படித்துவிட்டு தன்னுடைய பிற்கால திட்டங்களைப்பற்றி பிரஸிடெண்ட் ஒரு விதமான தீர்மானத்துக்குவர இன்னும் சில வாரங்கள் பிடிக்கும்.

மிஸ்டர் ரூஸ்வெல்ட் எப்பொழுதும் இரண்டு சங்கதிகளை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்:—தேசத்தை ஒன்றுக்கொன்று ஒத்துக்கொள்ளாத அநேக கட்சிகளாய்ப் பிரித்துவிடக்கூடும் என்ற ஆபத்து ஒரு பக்கம், நாட்டின் சாவதானத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைத் தடுப்பதற்கு உசிதகாலத்தில் நடவடிக்கை நடத்தாமலிருக்கும் ஆபத்து மற்றொருபக்கம்.

28உ இரவு நடந்த பத்திரிகைக்காரர் மகாநாட்டில், அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலுள்ள ரோந்து ஏற்பாட்டை அதிகப்படுத்த தனக்கு எண்ணமில்லை என்று கூறிவிட்டு, பிரெஸிடெண்ட், தனக்கு அவ்வித எண்ணமிருந்தாலும் ஹிட்லர் அலைகளின் விபரங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளாவண்ணம் தான் அதை முன்னால் வெளியிடமுடியாதென்று கூறியிருக்கிறார்.

பிரஸிடெண்டின் கப்பற்படை மந்திரிகள் பொதுப்படையாய்ச் செய்யும் யோசனைகள் எல்லாம் இங்கே ஜெர்மானியர்களுக்கு நிச்சயமாய் நன்றாய்த் தெரிந்திருக்கின்றன.

துணைக்கப்பல் என்ற பேச்சே நிச்சயமாய் கிடையாது. அதற்குப் பதிலாய் கப்பல் வழிகளை சாவதானமாய் வைத்துக்கொள்வதென்ற அபிப்பிராயத்துக்கே திரும்பி வந்துவிட்டார்கள். இந்த இரண்டுவகைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரு உதாஹரணத்தால் எடுத்துக்காட்டலாம்.



ஒரு பட்டணத்தின் சட்ட அமுலில்லாத ஒரு பகுதியில் நீங்கள் நடந்து செல்ல வேண்டியிருந்தால் நீங்கள் உங்களுடன் இரண்டு காவலாளிகளை அழைத்துச் செல்லவேண்டும். அல்லது அந்தப் பிரதேசத்தில் நீங்கள் நுழைவதற்கு முன்னால் போலீஸ் மூலமாக அங்குள்ள துஷ்டர்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றவேண்டும். துணைக்கப்பல்கள் காவலாளிகளுக்குச் சமானம். புதியவழியோ ரஸ்தாவிலிருந்து துஷ்டர்களை விலக்குவது.

இப்பொழுது ஐக்கிய நாடுகளின் அக்கரை ஐஸ்லாந்துவரை எட்டியிருக்கிறது. அட்லாண்டிக் துறைமுகங்களிலிருந்தும் இப்பொழுது நியூபௌண்ட்லாந்து, கிரீன்லாந்து இவைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தளங்களிலிருந்தும், அமெரிக்க கப்பல் ரோந்தும் ஆகாய ரோந்துப்படையும் வேலை செய்வதால் சுலபமாய் சமுத்திர வழியில் இந்தக் கொள்ளைக்காரர்கள் இல்லாமல் செய்யலாம். மத்தியஸ்த நாடாய் இருக்கவேண்டுமென்ற சட்டத்தை மாற்றும்படி தான் காங்கிரஸைக் கேட்கப்போவதில்லை என்று பிரெஸிடெண்ட் சொல்லிவிட்டதால் இந்தப் பிரயாணத்தின் இறுதி பாகங்களைக் காப்பாற்றவேண்டியது இங்கிலாந்தின் பொறுப்பாகப்போய்விட்டது.

மத்தியஸ்த நாடாயிருக்கவேண்டுமென்ற சட்டத்தையும் கருதாமல் அமெரிக்கக் கப்பற்படையும் ஆகாயப்படையும் சண்டையில் நுழைந்து விடலாம்; ஏனென்றால் அந்தச் சட்டம் அமெரிக்க வியாபாரக் கப்பல்களுக்குத்தான் அன்வயிக்கும். ஆனால் பொதுவாய்ச் சொன்ன பிரகாரம் அமெரிக்கர்களின் வேலை ஐஸ்லாந்துடன் முடிந்துவிட்டதென்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

பிரெஸிடெண்டின் பிரசங்கத்தில் ஒரு சமாசாரத்தைப்பற்றிச் சொல்லப்படவில்லை; அது ஜனங்களின் கவனத்துக்குள்ளாகிறது; அதாவது, இங்கிலாந்தின் பேரில் படையெடுப்பு முயற்சிகள் செய்யப்பட்டால் அமெரிக்கா என்ன செய்யப் போகிறதென்பதைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. ஜெர்மானியர்கள் இங்கிலாந்தின் பேரில் படையெடுப்பது அவ்வளவு 'சம்பாவிதமில்லை' யென்று பிரெஸிடெண்ட் தன்னுபடி செய்துவிடக்கூடுமென்றும் அட்லாண்டிக் தீவுகளையும் ஆபிரிக்காவின் மேலக் கரையிலுள்ள துறைமுகங்களையும் ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்துக் கொள்வது ரொம்ப சம்பாவிதமென்றும் இவ்விடத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள் வெளியிட்டுச் சொல்லுகிறார்கள்.

இருந்தாலும் அமெரிக்க ஸர்க்கார் ரிப்போர்ட்டுகள் பிரெஞ்சு மேல ஆபிரிக்காவில் ஜெர்மன் நடமாட்டம் இல்லை என்று அறிவிக்கின்றன. ஆகையால் பிரிட்டனுக்கு உதவி செய்வதென்ற கொள்கையை ஐக்கிய நாடுகள் விட்டுவிட்டதற்கு வெளிப்படையான காரணம் ஒன்றுமில்லை.

## நாஜிகளின் விஸ்தாரமான மறைவுதான முறைகள்.

## ஹாம்பர்க், ஹனோவர், ப்ரமன், இந்த நகரங்களின்பேரில் விமானத் தாக்குதல் ஏற்பட்டதின் பயன்.

## ராயல் ஆகாய விமானப்படை செய்த களேபரத்தின் விவரணம் பிரயாணிகளால் அறிவிக்கப்படுதல்.

[மேமீ 28உ "டெயிலி டெலிகிராப்" பத்திரிகையின் ஜெர்மன் எல்லைப்புற விசேஷ நிருபரால் தந்திமூலம் அனுப்பிய செய்தி].

ஹாம்பர்க், ஹனோவர், ப்ரமன் நகரங்களின்பேரில் பிரிடிஷ் ஆகாய விமானப் படை விளைவித்து வரும் அபார நஷ்டங்களை மூடுதல் செய்யவேண்டி ஜெர்மானியர்கள் விஸ்தாரமாக மறைவு ஸ்தானங்கள் ஸ்தாபித்து வருகிறார்கள். அந்த மூன்று நகரங்களையும் சமீபத்தில் பார்த்த ஒரு பிரயாணி அவைகளை அறிவிக்கிறார். ஹனோவர், ஹாம்பர்க் ரயில்வே ஸ்டேஷன்களையும், இன்னும் அங்கேயுள்ள மற்ற பார்த்த இலக்குகளை பலகைகளால் செய்யப்பட்ட பெரிய கூடாரங்களால் ஜெர்மானியர்கள் மறைத்திருக்கிறார்கள். நூதனமாய் ஏற்படுத்தப்பட்ட மண் மேடுகள்போல் தாழ்ந்த ஸ்லோப்புடன் கூடியதாகத் தோன்றும்படி அமைக்கப்பட்டு, அவைகளில் மேல்பக்கம் புல் பத்தைகளை வளரும்படி செய்தும், வரிசை வரிசையாக சிறுசெடிகள் வளர்த்தும் வைத்திருக்கிறார்கள். ஆகாயத்திலிருந்து பார்ப்பதற்கு, ஒரு குன்றின் சிகரத்தின் பேரில் வயல்கள் வழியாய்ச் செல்லும் ரஸ்தாக்கள் போல் தோன்றும்படி செய்யப்பட்டிருக்கிறது.

ஹாம்பர்க் நகரத்திற்குச் சமீபத்தில் பிரிடிஷ் விமானங்களின் வேலைகளை தடுப்பதற்காக, விமான ஓட்டிகளுக்குத் தெரிந்திருந்த முக்கியமான அடையாளங்களை யாவரும் அறிந்து கொள்ளாவண்ணம் மறைக்க ஜெர்மானியர்கள் எத்தனம் செய்கிறார்கள். ஆல்ஸ்டர், ஏரியின் வடிவத்தை மாற்றிவிட்டார்கள். அந்த ஏரியின் சில பாகங்களை கால்கள் ஊன்றி பலகைகளைப்போட்டு மறைத்ததின் மூலம் வடிவு மாற்றம் செய்யப்பட்டது. ஹாம்பர்க் நகரத்திற்குச் சமீபத்திலுள்ள மற்றொரு ஏரியும் இதே முறையில் வடிவு மாற்றப்பட்டிருக்கின்றது.

ஹனோவர் நகர சமீபத்தில் 8, 9 எண்ணெய்க் கிடங்குக் கிணறுகள் குண்டு வீச்சினால் நாசமாக்கப்பட்டன. அதனால் பல வாரங்களில் உற்பத்திவேலை நின்று விட்டது. பிறகு நாஜிகள் உடைக்கப்படாத மற்ற கிணறுகளின் பேரில் பொய்வீடுகள் கட்டப்பட்டு அவைகள் தெரியாத வண்ணம் செய்திருக்கிறார்கள்.

ஸ்தல அடையாளங்களுக்கு முழுமையும் மறைப்பதற்கென்றே பத்து லக்ஷக்கணக்கான மார்க்குகள் செலவழிக்கப்படுகின்றன என்று அந்தப் பிரயாணி அறிவித்தார்.

அந்த மூன்று நகரங்களிலும் விமானத் தாக்குதலால் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றி வர்ணித்ததில் அவர் ஹனோவர் நகரம் வெகு ஜாஸ்தியான பாதிப்பு அடைந்ததென்றார். அந்த நகரத்தின் தொழில் பிரதேசங்களிலுள்ள வீதிகள் பூராவும், தரைமட்டமாக்கப்பட்டது.



அடிக்கடி விமானத்தாக்குதலுக்கு இலக்காயுள்ளது காண்டினென்டல் ரப்பர் தொழிற்சாலை என்பது. அதில்தான் ஜெர்மானியர்களின் விமானப்படையில் பாம்பர் விமானிகளுக்கு வேண்டிய ரப்பர் படகுகளும், நீர்மூழ்கிக் கப்பலைச் சேர்ந்த பாகங்களுக்கு ரப்பர் உறைகளும் செய்யப்படுகின்றன.

கடல் ஜலத்தினால் கப்பல்கள் பேரில் பூசப்பட்டிருக்கும் வர்ணம் அழிந்து ஆகாயத்திலிருந்து பார்த்தால் தெரியும்படி நீர்மூழ்கிகளின் உருக்கு பாகம் பிரகாசமாய்த் தெரிகிறது. இதற்கு மாற்றாய் அவைகளின்பேரில் ரப்பர் உறை போடுகிறார்கள். இந்த தொழிற்சாலையின் பேரில் ஒரு தடவை பிரிடிஷ் விமானப் படை தாக்கியதின் பயனாக 10 நாள்வரை, அந்தத் தொழிற்சாலை வேலை செய்ய முடியாமல் செய்யப்பட்டுவிட்டது.

சமீபத்தில் ஏற்பட்ட மற்றொரு விமானத்தாக்குதலில் ஹனோவர் டிராம் டிப்போவின் பேரில் நேரடி குண்டு வீசப்பட்டது. டிப்போ முழுமையும் எரிந்து பாழாகியது. 145 டிராம் வண்டிகளும் பஸ்களும் நாசமாக்கப்பட்டன. நகரத்திய போக்குவரத்து இப்பொழுது அலங்கோலமாக்கப்பட்டது.

அந்தப் பிரயாணி ஹாம்பர்க் நகரத்தில், துறைமுகப் பிரதேசத்தில் விமானத் தாக்குதலில் ஏற்படுத்தப்பட்ட அதிபயங்கரமான நஷ்டங்களைப் பார்வையிட்டார். அவர் மனதிலிருந்து அகலா வண்ணம் அவைகள் இருந்தன. இடிபட்ட கட்டடங்களின், செங்கல் சாமான் குவியல்களும், அக்னி பாதையால் சேதமாக்கப்பட்ட கட்டடங்களும், எங்கே பார்த்தாலும் இருந்தன. துறைமுகத்திலுள்ள மின்சார யந்திர சாதனங்களுக்கு வெகுவான பழுது ஏற்படுத்தப்பட்டிருந்தது.

லம்பார்ட்ஸ் பிரிட்ஜ் குண்டடிபட்டது. அதன் கீழ் போகும் 3 கால்வாய்களில் இரண்டு கால்வாய்களில் படகுகள், கப்பல்கள் போகமுடியாமல் செய்யப்பட்டுவிட்டது: ஹாம்பர்க் நகரத்திய ஒரு பெரும் பண்டகசாலையானது ஒரு அக்னி குண்டால் நாசமாக்கப்பட்டது. அந்த பண்டகசாலையின் பெயர் "ஆல்ஸபெர்காஸ்." இது ஆதியில் ஒரு யஹூதிக்குச் சொந்தமாயிருந்து அவரிடமிருந்து ஜெர்மானிய ஸர்க்கார் பறிமுதல் செய்து "ஆரியன்" என்று சொல்லிக்கொள்ளும் ஒரு ஜெர்மானியனுக்கு மாற்றப்பட்டது. விமானப் பாதுகாப்பு காவலாளிகள் ஏற்படுத்தாமலிருந்து விட்ட தவறுதலை ஸர்க்கார் லேசாய் மன்னித்துவிட மாட்டார்கள் என்று பயந்து இந்த "ஆரியன்" ஜெர்மன் தற்கொலை புரிந்து கொண்டான்.

அதே பிரயாணி, ப்ரமன், வயர்ச்சி துறைமுகத்தில், தானிய விடுதிகளையும், காப்பிகோட்டை ஸ்டோர்களையும், சாமான்கள் அற்று வெறும் எலும்புக் கூடுகள் மாதிரி இருந்ததைக் கண்டார். இப்பொழுது மேற்படி சரக்குகள், அழியா வண்ணம், காலியாக்கப்பட்ட பல சிறு பங்களாக்களில் அடைந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

## அமெரிக்கர் திருஷ்டி-மூலம் ஐரோப்பிய நிலைமை.

## ஜெர்மானியர் முயற்சி எவ்வளவு நாள்தான் ஓடும்?

## ஐக்கிய அமெரிக்கா ஜெனரல் டி. காலே ஒப்புக்கொள்ளும் பிரச்னை.

## அயரின் போக்கைப்பற்றி கண்டனம்.

'சிகப்பு புஸ்தகத்தில்' ஹெர்மன் ராஷ்னிங் எழுதுகிறார்:—

மெல்ல மெல்ல தவிர்க்க முடியாதவகையில் ஜெர்மன் ஜாதியாரின் முடிவு அவர்களைச் சூழ்கிறது. அச்சாதியாரைப் பழக்குவதும் ஏமாத்துவதும் எளிது. பழக்குவது, பயமுறுத்தல், மிருகத்தனமான கட்டாயம் இவைகள் எல்லாம் என்ன செய்யமுடியுமோ அதை அப்பேர்ப்பட்ட ஜாதியாருக்கு நாஜிஸம் செய்து முடித்திருக்கிறது; ஆனால் மேற்கொண்டு தியாகம் செய்யவேண்டிய அவசியத்தில் நம்பிக்கை ஊட்ட அதனால் முடியவில்லை. யுத்தம் தன் எல்லைப்புறத்துக்கு வெளி தூரத்துக்கு அப்பால் நடக்கும் ஒரு கூத்தாக இருக்கும் வரையில், நல்லது, அவர்கள் சில கஷ்டங்களைச் சகிக்கத் தயார். ஆனால் அவ் விஷப்பாம்பு ஊருக்குள்ளேயே தலைதூக்கித் தாண்டவமாட ஆரம்பித்தால் அவர்கள் மனமும் மாறும். புது அமுலின் சாயம் வெளுத்துவிடும். ஆகாயத்தாக்குதல்களின் கொடுமைகளை அவர்கள் சகியார்கள். ஜனங்கள் உறுதி இழப்பார்கள். மீண்டும் 8—8—1918 கதை திரும்பி நடைபெறும்; சேனையும் ஜனங்களும் யுத்தம் எங்களுக்கு வேண்டாம் என்பார்கள். 1918-ல் கீழ்ப்படிதல் என்ற மந்திரம் பலிக்காமல் போனமாதிரி, தற்பொழுது பயமுறுத்தல் மந்திரமும் பலிக்காமல் போனால், தலைவர்கள் செயலற்று விடுவார்கள். ஜெர்மன் ராணுவத் தலைவர்களுக்கு இது தெரியும். எவ்விதத்திலும் இதைத் தடுக்க அவர்கள் முனைவார்கள். ஆயினும் அது நடந்தே தீரும்.

## ஒரு பத்திரிகையின் மன மாற்றம்.

1—6—41 நியூயார்க் டைம்ஸ் எழுதுகிறது.—

'டிட்ராயிட் ப்ரீப்ரெஸ்' அதன் ஞாயிற்றுக்கிழமை வெளியீட்டின் கொள்கையை விவரிக்கும் தலையங்கத்தில் தான் யுத்தத்தினின்று தனித்து நிற்கும் கொள்கையை கைவிட்டு பிரஸிடெண்டுக்குப் பூரா ஆதரவு அளிக்கத் தயார் என்று கூறுகிறது. தலையங்கம் கூறுகிறது:—ப்ரீப்ரெஸ் நம்மை யுத்தத்தில் இழுக்கும் ஒவ்வொரு அடியையும் எதிர்த்தது......ஆனால் இப்பொழுது ஒரு பட்சத்தில் இறங்கிவிட்டோம். இப்போது நமது நிலைமை காங்கிரஸ் ஜெர்மனியுடன் வெளிப்படையாக யுத்த வெளியீடு செய்ததுமாதிரிதான். இனி நாம் திரும்ப முடியாது. இவ்விஷயத்தில் ப்ரீப்ரெஸ் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டுக்கு யுத்த தலைவராக தனது பூரண ஆதரவையும் அளிக்க வாக்குறுதி செய்கிறது.

## ஜெனரல் டி. காலின் அங்கீகாரம்.

யுத்த ஆரம்பத்தில் பிரெஞ்சு எந்தக்கொள்கைக்காக அதில் இறங்கினரோ அதற்குப் பிரதிநிதிகளாக இருக்க விஷி கொஞ்சம்கூட தகுதியுள்ளவர்கள் அல்ல



என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஆகையால் அதில் நம்பிக்கை இருக்கும் நாமும் விஷியிடமிருந்து, சளைக்காமல் அதை நிலைநிறுத்திவரும் சிறு பிரெஞ்சுப் படைக்கு—ஜெனரல் டி காலின் படைக்குத்தான், திரும்பவேண்டியிருக்கிறது. பிரான்ஸின் உண்மைப் பிரதிநிதிகள் அவர்கள்தான், பிரான்ஸில் நடந்துகொண்டிருக்கும் கவர்ன்மெண்டு அல்ல, பிரெஞ்சு சைனியமல்ல, கடற்படை அல்ல. ஐக்கிய அமெரிக்காவும் டி கால் கூட்டத்தாரை அதிகாரமுறையில் ஒப்புக்கொண்டு தன்னால் இயன்ற எல்லா ஒத்தாசையும் செய்யவேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

## அயரின் போக்கு.

1—1—41 'ஸின்ஸினாட்டி என்க்வயரர்' எழுதுகிறது:—

அயர் கவர்ன்மெண்டு இன்னும் உலக அனுபவம் பெற்றதாகவும், தனக்கு எது நலம் தீங்கு என்று உணர்ந்ததாகவும் தெரியவில்லை.

அயர் பிழைப்புக்கே பிரிடன் மீது சார்ந்து நிற்கிறது. பழைய சச்சரவுகளின் ஞாபகம் இன்றைய தேவைகளை மறைப்பது முட்டாள்தனம்.

நாளுக்கு நாள் அச்சு நடுநிலைமை வகிக்கும் தேசங்களை நடத்தும் உதாரணங்கள் ஜாஸ்தியாகிக்கொண்டே வருகிறது. இந்நிலைமையில் பிரிடனுக்கு அவசியமான துறைகளை ஐரிஷார் கொடுக்க இன்னும் மறுத்து வருகின்றனர் என்பதை நம்ப முடியவில்லை.

## அமெரிக்க அபிப்பிராயக் காற்று எத்திசை குறிக்கிறது.

(ஐக்கிய அமெரிக்காவில் முக்கியமான தேச, சமூகப் பிரச்னைகளைப்பற்றி அந் நாட்டின் பிரதிநிதிகள் என்று மதிக்கக்கூடியவர்களின் அபிப்பிராயத்தை அறிய 'காலப் இன்ஸ்டிட்யூ' என்ற ஒரு ஸ்தாபனம் இருந்து வருகிறது. அதில் யுத்த சம்பந்தமாக அனுப்பிய பிரச்னைகளும் அவைகளுக்கு ஜனபிரதிநிதிகளின் அபிப்பிராய சதவீதாசாரமும் கீழே கொடுக்கப்படுகின்றன).

காலப் ஸ்தாபனம் பின் வரும் பிரச்னையை அனுப்பினர்—பிரிடன் ஜெர்மனிக்கு சரணடைவதை விரும்புவாயா, அல்லது ஐக்கிய அமெரிக்கா யுத்தத்துக்குப் போவதை விரும்புவாயா? அபிப்பிராய கணிதம் பின் வருமாறு இருந்தது. 'அமெரிக்கா யுத்தத்தில் இறங்குவதை விரும்புவேன்' என்ற பகுதி 100-க்கு 62. 'பிரிடன் சரணடைவதை விரும்புவேன்' என்ற பகுதி 100-க்கு 26. தீர்மானிக்க முடியாதவர் 100-க்கு 12.

'யுத்தம் முடியும் முன் ஐக்கிய அமெரிக்கா அதில் இறங்குமா, அல்லது வெளியிலேயே அது நின்று விடும் என்று அபிப்பிராயப்படுகிறாயா?' என்ற பிரச்னைக்கு, 'யுத்தத்தில் சேருக' என்ற கட்சியில் 100-க்கு 85 பேரும், 'வெளியில் நிற்க' என்ற கட்சியில் 100-க்கு 15 பேரும் இருந்தனர்.

'இந்த யுத்தத்தில் ஜெர்மனியும் இதாலியும் பிரிட்டனை தோற்க அடிக்குமாகில், அடுத்த 10 வருஷங்களுக்குள் அவர்கள் ஐக்கிய அமெரிக்கா மீது யுத்தம் துவக்குவார்கள் என்று எண்ணுகிறாயா, அல்லவா' என்ற பிரச்னைக்கு, 'ஆம்' என்று 100-க்கு 62 பேரும், 'மாட்டார்கள்' என்று 100-க்கு 29 பேரும், ஒரு வித முடிவுக்கு வராமல் 100-க்கு 9 பேரும் இருந்தனர்.

---

## கதம்பம்.

1. "யூக்ரேனிலும் காகஸஸ் மலையிலும் நடக்கும் யுத்தம் இந்தியாவை அடைவதற்காகச் செய்யும் யுத்தம்."

(இந்திய தேசிய கமிட்டியின் காரியதரிசி, மிஸ்டர் பாலின் ஸீல், லண்டன், ஜூன் 30).

2. "நம்மால் இயன்ற அளவு இடைவிடாமல் முயற்சி செய்தோமானால், யுத்தத்தின் முடிவைப்பற்றி கவலைப்படவாவது, அல்லது பயப்படவாவது அவசியமில்லை."

(ஸப்ளை இலாகா மந்திரி, லார்டு பீவர்ப்ரூக், லண்டன், ஜூன் 30).

3. "இந்தியர்கள் ஒன்றும் பயப்படவேண்டியதில்லையென்றும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை ஒழிக்கத்தான் ஹிட்லர் யுத்தம் செய்கிறானென்றும் அபிப்ராயப்பட்டவர்கள், நாஸிகளின் யுத்த யந்திரங்கள் ஈவு இரக்கமன்னியில் செய்யும் அட்டூழியங்களை கவனித்தால், நடுநிலைமை வகிப்பதினால் அவர்களுக்கு ரக்ஷணை ஏற்படுமென்று நினைக்கமாட்டார்கள்."

(மதராஸ் கவர்னருக்கு மந்திரி, மிஸ்டர் T. G. ரதர்போர்ட், கோயம்புத்தூர், ஜூன் 30).

4. "நாம் ஜெர்மானியர்களை நசுக்கி விடுவோம்."

(மிஸ்டர் மாலடோவ், மாஸ்கோ, ஜூன் 30).

5. "ஹிட்லரையும் நாஸி ஆக்ஷியின் ஒவ்வொரு சின்னங்களையும் அழித்து விடுவதாய் நாம் தீர்மானித்திருக்கிறோம்."

(மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், லண்டன் ஜூன் 22).

6. "நமக்காக எவனாவது ஒரு ஜெர்மானியனைக் கொல்லும் பக்ஷத்தில் ஒரு அரிய வேலையை அவன் செய்தவனாவானென்பது நிச்சயம்."

(ஆஸ்திரேலிய பிரதம மந்திரி, மிஸ்டர் மென்ஸீஸ், கான்பெர்ரா, ஜூன் 23).

7. "ஐரோப்பாவிலுள்ள தேசங்கள் தயாராக இல்லாத சமயங்களில் ஒன்றன்பின் ஒன்றாக நாஸிகளின் தந்திரத்தோடு கூடிய கெடுதலான தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன. இம்மாதிரியாக அலட்சியமாயிருந்து, இந்தியாவும் நாஸி வலையில் அகப்பட்டுக்கொள்ளப்போகிறதா.?"

(பீல்டு மார்ஷல் லார்டு பெர்டுவுட், மதராஸ் மெயில் ஜூன் 25).



8. "மஹாத்மா காந்தியும் காங்கிரஸ் கக்ஷிக்காரர்களும் இப்பொழுது கூட உண்மையான நிலைமையை அறிந்துகொள்ளவில்லையா. அல்லது "பூனைக்கும் தோழன், பாலுக்கும் காவல்" என்ற பழமொழிப் பிரகாரம் நடந்துகொள்ளுகிறார்களா.?"

(ஹிஸ் எக்ஸால்டட் ஹைனெஸ் நிஜாம் ராஜ்ஜியத்தின், சீர்திருத்த மந்திரி, ஸர் முகமது யாகூப், ஹைதராபாத் ஜூன் 23).

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### பெரிய குட்டிக் கரணம்.

ருஷ்யாவின் பேரில் அகாரணமாகப் படையெடுத்ததற்குச் சென்ற ஞாயற்றுக்கிழமையன்று ஹிட்லர் உலகத்துக்கு விடுவித்த காரணங்கள், சென்ற 22 மாதங்களாக நாஸிகள் செய்த பிரசாரம் முழுமையையும் நாசம் செய்து விட்டன. பகிரங்கமாக எந்த ராஜ தந்திரியும் ஒப்புக்கொண்ட பிரகாரம் இவைகள் ராஜ்ஜிய தந்திர முறையில் ஏற்பட்ட பெரும் தோல்வியென்றும் கருதப்படலாம்.

1939-ம் வருஷம் ஆகஸ்டு 24 தேதியன்று ஹிட்லரின் தூதனை வான் ரிப்பன்டிராப் என்பவர் ருஷ்யாவுடன் அவன் செய்த ஒப்பந்தத்தைப்பற்றி "இது இந்த இரண்டு தேசங்களின் சரித்திரப்போக்கில் ஒரு முக்கியமான சம்பவம் என்று சொன்னான். உடனே கோயபல்ஸின் பிரசார இலாகாவின் முயற்சிகள்" உலகம் பூராவையும் விசேஷமாக ஜெர்மன் ஜனங்களையும், ருஷ்யா-ஜெர்மன் ஒப்பந்தம் புத்திசாலித்தனமும் வாஸ்தவமுமான ராஜ்ஜிய தந்திர ஏற்பாடு என்று, நம்பும்படி செய்ய, உபயோகப்படுத்தப்பட்டது.

22 மாதங்களுக்குப் பின், கண்ணீர் ததும்பிக்கொண்டு "இந்த ராஜ்ஜிய தந்திர வெற்றியின் பலன்கள் ரொம்பவும் கடுமையாகயிருந்ததென்றும் அநேக மாதங்களாக சகிக்க முடியாத கஷ்டத்துக்குத் தன்னை உள்ளாக்கி விட்டதென்றும்" ஹிட்லர் ஒப்புக்கொள்ளுகிறான்.

## பிரிட்டனுடைய பொய்யான நம்பிக்கைகள்.

இந்த ஒப்பந்தம் இருந்து வந்தபொழுது அதைப்பற்றி ஹிட்லர் என்ன சொல்லி வந்தான். 1940-ம் வருஷம் ஜுலை 19-ந்தேதி ரெக்ஸ்டாக்கில் ஹிட்லர் பேசிய பொழுது அங்கு அவனுடன் ஒத்துப் பாடக்கூடியவர்களுக்கு அவன் சொன்னதாவது.

“இங்கிலீஷ் மந்திரிகள் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் மனஸ்தாபம் ஏற்படக்கூடுமென்று நம்புகிறார்கள். ஆனால் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள சம்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு விட்டன. ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் சண்டை உண்டாகுமென்ற நம்பிக்கை வீணானது. ஐரோப்பாவில் புதிதாக ஒரு கலவரம் ஏற்படும், அதனால் தனக்கு பளுக் குறைந்து விடுமென்று பிரிட்டிஷார் நம்புவது பிசகு. இது ருஷ்யாவும் ஜெர்மனியும் சம்பந்தப்பட்ட வரையில் இல்லை.”

இம்மாதிரியான வார்த்தைகளை சொல்லி வாய் மூடுவதற்குள் ஒரு தேசியத் தலைவனும் ஹிட்லரைப்போல் பொய்யாக்கவில்லை. மந்தபுத்தியுள்ள ஜெர்மானியர்களும் இந்த புதிதான ஐரோப்பிய கலவரத்துக்கும் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட இந்தப் புதிய சண்டைக்கு பிரிட்டனுடைய வலுவான எதிர்ப்பும், சென்ற இலையுதிர் காலத்தில் ஜெர்மன் விமான பலத்துக்கு ஏற்பட்ட பெருந் தோல்வியும், கண்மூடித்தனமாய் போடப்பட்ட வெடிகுண்டுகளால் பிரிட்டிஷார் பயமடையாததும், ஹிட்லர் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அவனை எதிர்த்து யுத்தம் செய்ய பிரிட்டனுக்கு வலு அதிகரித்து வருவதும்தான் காரணம் என்று அறிவார்கள். ஹிட்லர் ருஷ்யாவைத் தாக்குவதினின்றும் ஒரு நீடித்த யுத்தத்தை நடத்த சாமான்களை அடைவதாக உத்தேசித்தான். இந்தக் கொடுங்கோல் யதேச்சாதிகாரிக்கு நீடித்த யுத்தம் செய்யவேண்டுமென்ற இந்த உண்மை புலப்பட்டுவிட்டது. அவன் மின்னல் எதிர்ப்புகளின் மேன்மையில் பூர்ணமான நம்பிக்கை வைத்திருக்கிறான்.

## துரோகத்துக்குமுன் இனிய சொற்கள்.

இந்த வாரத்தில் நடந்த சம்பவங்களுக்கிடையில் சென்ற சில மாதங்களாக ஜெர்மன் ஆதாரங்களிலிருந்து கிடைத்த ஸ்வாரஸ்யமான சில அபிப்பிராயங்களைப் பிரசுரிக்கிறோம்.

“1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திலிருந்து ருஷ்யாவுக்கும் நமக்குமுள்ள சம்பந்தங்கள் ஒத்துழைப்பும் நேச பாவமும் தான் என்று நமக்குத் தெரியும். இதை ருஜிப்பிப்பதற்கு விஸ்தாரமான பிரசாரம் வேண்டியது இல்லை.” (நாஸி ஒலி பரப்பு 1940, நவம்பர்-13).

“மற்ற கக்ஷியின் அக்கரையையும் சண்டை உண்டாகக்கூடிய நோக்கங்களை ஒழிப்பதற்கும், வேண்டிய கொள்கைகளை ஜெர்மனியும், ருஷ்யாவும் ஏற்றுக் கொள்ளுகிறது. இந்த மனப்பான்மை முக்கியமானது. இது தாத்காலிகமாகச் செய்யப்படவில்லை.” (நாஸி ஒலிபரப்பு 1940, நவம்பர்-13).



“புதிய தேசங்களை ஸ்வீகாரம் செய்யும் முறைகளுள்பட்ட எல்லா பொருளாதார பிரச்னைகளும் இருதரப்பாருடைய அக்கரைக்கும் விரோதமன்னியில் தீர்மானம் செய்யப்பட்டுவிட்டன.” நாஸி ஒலிபரப்பு 1941, ஜனவரி-11).

ஞாபக சக்தியுள்ள ஜெர்மானியர்கள் இவைகள், இவைபோன்ற சொற்களை மறந்திருக்கமாட்டார்கள். சண்டை ஆரம்பிப்பதற்கு முன் மெயின்காம்பில் ஹிட்லர் எழுதிய வார்த்தைகளை அவர்கள் நன்றாய் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடும். “ருஷ்யாவுடன் ஜெர்மனி ஒப்பந்தம் செய்வதுதான் புதிய யுத்தத்தை ஆரம்பம் செய்ய அடையாளம் இந்த யுத்தம் இறுதியில் ஜெர்மன் அழிவோடு முடியும்.” இந்த ஜோஸ்யத்தின் முதல் பாகம் வாஸ்தவமாக ஆகிவிட்டது.

## அலெக்ஸான்ட்ரியாவில் விமானத் தாக்கல்.

ஜுன் மீ 19-ம் தேதியன்று ஆங்கில பாஷையில் ஒலிபரப்பியபொழுது ஜுன் மாதம் 17, 18 தேதிகளில் ஜெர்மன் குண்டு வீசும் விமானங்கள் அலெக்ஸான்டிரியா துறைமுகத்திலுள்ள ராணுவ முக்யத்வம் வாய்ந்த நிலயங்களை வெற்றிகரமாகத் தாக்கின என்று நாஸிகள் வெளியிட்டார்கள்.

ஆனால் எகிப்தில் வெளிவந்த பிரசுரப்படி, எதிர்ப்பு எச்சரிக்கை ஒன்றரை மணிவரையில் தானிருந்தது என்று வெளியாகுகிறது. ஒருவர் மாண்டார். சேதம் ரொம்பவும் சொல்பம். இந்தப் பிரயோஜனங்கள் ஜெர்மானியர்கள் சொல்லுகிறபடி ரொம்பவும் கனமான வெடிகுண்டுகளைப் பிரயோகம் செய்ததினால் உண்டானவை யென்று சொல்லப்படுகிறது.

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## துருக்கி-ஜெர்மன் ஒப்பந்தம்.

ஜுன் மாதம் 19-ம் தேதியன்று ஆசியா பாஷைகளில் ஜெர்மன் ஒலிபரப்புகள் வேறுமென்று துருக்கி-ஜெர்மன் ஒப்பந்தத்தைப்பற்றிப் பேசும்பொழுது பிரிட்டனுக்கு இதிலிருந்து தோல்வி வந்துவிட்டதென்று வெளியிட்டன.

வாஸ்தவமாக, சென்ற அநேக மாதங்களாக துருக்கியை வேண்டிய அளவு பலவர்தப்படுத்தியும் துருக்கி ஜனங்கள், யுத்தத்தில் கலந்துகொள்ளாத தன்மையை நிலைநாட்டியதுமட்டுமல்லாமல், ஆங்கில-துருக்கி ஒப்பந்தப்படி நடத்துவதாகத் தீர்மானித்திருப்பதாகவும் காண்பித்திருக்கிறார்கள். டாக்டர் கோயபல்ஸின் பிரசாரப் புளுகு முறைப்படி, துருக்கிக்கும் பிரிட்டனுக்கும் உள்ள கட்டுப்பாடுகள் யாதொருவிதமான மாறுதலும் அடையவில்லையென்று M. ஸாராஜுகுலு விடுத்த செய்தியின் முக்கியத்தை ஜெர்மன் ஒலிபரப்புகள் முற்றிலும் மறந்துவிட்டனபோலும்.

## இராக்கைப்பற்றிய பொய்கள்.

ஜெர்மனியின் ஒலிபரப்பு ஹிந்துஸ்தானியில் ஜூன் 16-ம் தேதியன்று, பிரிட்டிஷாருக்கும் இராக்குத் துருப்புகளுக்கும் சண்டை நடைபெற்றுவருகிறதென்றும் பிரிட்டிஷாராலும் யூதர்களாலும் பாக்டாட்டில் அட்டூழியங்கள் நடத்தப்படுகின்றன என்றும் பொருள்படும்படிக்கும் அழுத்தமாயும் முற்றிலும் பொய்யாகவும் ஒலிபரப்பியது.

சமாதான உடன்படிக்கையின் ஷரத்துகள் பிரகாரம், இராக்கித் துருப்புகள் தங்கள் ஸ்தானங்களுக்குத் திரும்பி வந்துவிட்டன. போலீஸ் அதிகாரிகளை ராஷீத் அலி அப்புறப்படுத்தியதிலிருந்தும் உண்டான கலவரங்கள் யாவும் ஓய்ந்துவிட்டன. ஜமீல் மாட்பெயின் மந்திரிசபையானது தேசம் முழுவதும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டிவிட்டது. எங்குபார்த்தாலும் ஒழுங்கான நிலைமை நிலவுகிறது.

## மேற்குப் பாலைவனத்தில் டம்-டம் குண்டுகள்.

ஜூன் 18உ ஹிந்துஸ்தானியில் ஜெர்மன ஒலிபரப்புகள், டொப்ருக் பிராந்தியத்தில் பிரிட்டிஷ் துருப்புகளும் விமானிகளும் டம்-டம் குண்டுகள் உபயோகப்படுத்துகிறார்கள் என்று ஒரு அமெரிக்கர் சொல்லுகிறார் என்று வெளியிட்டன.

இது மானிட இயல்பே இல்லையென்று சொல்லும் காரணம் தவிர, இந்த குண்டுகள் எப்பொழுதும் உபயோகிக்கக்கூடியவையல்ல. ஏனென்றால் இவைகள் நேரடிச்செல்வதில்லை. மேலும் துப்பாக்கியின் குழாயை சீக்கிரம் சேதம்செய்துவிடும். இம்மாதிரியான குண்டுகளை பிரிட்டிஷ் விமானிகள் உபயோகிக்கும். அதி வேகமுள்ள யந்திர பீரங்கிகளில் உபயோகிக்கமுடியாது.

இந்த ஜெர்மன் புளுகுக்கு சமாதானமென்னவென்றால், டொப்ருக்கிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளை வெளிவிரட்டமுடியாததற்கு இதை ஒரு ஜவாப்பாகச் சொல்லுகிறார்கள்.



## துருப்புகளுக்கு ஆடைகள்.

இந்தியாவின் நெசவு தொழிற்சாலைகளில் ஏற்பட்டதாகச் சொல்லும் வேலை நிறுத்தங்களைப்பற்றிப் பேசுங்கால் பிரிட்டிஷ் அரசாங்கம் துருப்புகளுக்கு வேண்டிய ஆடைகளுக்குக்கூட கஷ்டப்படவேண்டியிருக்கிறதென்று ஜூன் 17 தேதியில் நாஸி ஒலிபரப்புகள் வெளிவிட்டன.

இந்த கஷ்டங்கள் நாஸிகளின் பொய்யான கட்டுக்கதைகள் என்பது, மதராஸ் மாகாணத்தில் மட்டும் துருப்புகளுக்கு வேண்டிய ஆடைகள் சென்ற மாதத்தில் 10 லக்ஷத்துக்கு மேலாக உண்டுபண்ணப்பட்டன என்பதினால் ருஜுப்பிக்கப்படுகிறது.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் LI.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூலை | ... 5, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| | 6, ஞாயிற்றுக்கிழமை. | கீரப்பழனி | ... ,, | 6.00 |
| | | ஆத்தூர் | ... ,, | 6.30 |
| | 7, திங்கட்கிழமை ... | செம்மட்டிவிடுதி | ... ,, | 6.00 |
| | | மழையூர் | ... ,, | 6.30 |
| | 8, செவ்வாய்க்கிழமை. | காலையூர் | ... ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... ,, | 6.30 |
| | 9, புதன்கிழமை ... | அண்டக்குளம் | ... ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... ,, | 6.30 |
| | 10, வியாழக்கிழமை. | நார்த்தாமலை | ... ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி | ... ,, | 6.30 |
| | 11, வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் | ... ,, | 6.00 |
| | | வேகுபட்டி | ... ,, | 6.30 |

### பிரஸங்கம் LII.

| | | | |
|---|---|---|---|
| 12, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| 13, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... காலை | 10.15 |
| | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | மாலை | 5.00 |
| | குளவாய்ப்பட்டி | ... ,, | 6.00 |
| | கீழையூர் (தெற்கு) | ... ,, | 6.30 |
| 14, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... காலை | 10.15 |
| | ஒலிக்கூர் | ... மாலை | 6.00 |
| | ராங்குப்பட்டி | ... ,, | 6.30 |
| 15, செவ்வாய்க்கிழமை. | மேலூர் | ... ,, | 6.00 |
| | பில்லமங்கலம் | ... ,, | 6.30 |
| 16, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| | வெள்ளனூர் | ... மாலை | 6.00 |
| | புத்தாம்பூர் | ... ,, | 6.30 |
| 17, வியாழக்கிழமை ... | திருவரங்குளம் | ... ,, | 6.00 |
| | வம்பன் | ... ,, | 6.30 |
| 18, வெள்ளிக்கிழமை... | புலியூர் | ... ,, | 6.00 |
| | கண்ணங்குடி | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 70—5-7-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் ஜூலை மீ 12உ [நெ. 52.

# வருஷாந்தரப் பதிப்பு

## 1940—1941.

புதுக்கோட்டை:
ஸ்ரீ பிரகதாம்பாள் ஸ்டேட் பிரஸ்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயத்திய

### பிரசுரத்திற்கு சந்தா விபரம்.

மூன்று மாதங்களுக்கு (13 பிரசுரங்கள்.)

| | | |
|---|---|---|
| இங்கிலீஷ் காபி ஒன்றுக்கு | ... | ரூ. 2—8—0 |
| ஒன்றுக்கு மேற்பட்ட ஒவ்வொரு காபிக்கும். | | ,, 1—8—0 |
| தமிழ் காபி ஒன்றுக்கு | ... | ,, 2—8—0 |
| ஒன்றுக்கு மேற்பட்ட ஒவ்வொரு காபிக்கும். | | ,, 1—8—0 |
| இங்கிலீஷ் அல்லது தமிழ் ஆறு காபிகள் வரை. | | ,, 5—0—0 |

ஆறு மாதத்திற்கு (26 காபிகள்) மேற்கண்ட விகிதத்திற்கு இரட்டிப்பு.

அதிகக் காபிகள் வேண்டுவோர் எழுதிக்கேட்டால் தபால் சார்ஜு உள்பட ஸ்பெஷல் ரேட் என்னவென்று தெரிவிக்கப்படும்.

மேற்கண்ட விகிதப்படி பிரசுரக்காபிக்கு சந்தா செலுத்த விரும்புவோர் தயவுசெய்து புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலய காரியதரிசிக்கு தொகை அனுப்பி எழுதிக்கொள்ளவும்.

## மஹாரா-ரா-ஸ்ரீ ஹிஸ் ஹைனெஸ் மன்னர் அவர்கள் அனுப்பிய செய்தி.

**NEW PALACE,**
*Pudukkottai, 27-6-41.*

ஸமீபத்தில் நடந்த எனது பிறந்த தினக்கொண்டாட்டத்தில எனக்கு அளிக்கப்பட்ட ஆசி மொழிகளைப் போலவே, நமது யுத்த அறிக்கை நிலயம் ஒரு வருஷம் வேலைசெய்து மறு வருஷத்தின் பத்திரிகையின் முதற்பதிப்பு பிரசுரிக்கப்படும் இச்சமயம் அதன் பத்திராதிபருக்கு ஆசிமொழிகள் வெகு சந்தோஷத்துடன் அனுப்புகிறேன்.

எனது பிரஜைகளுக்கு யுத்த சம்பந்தமாக சரியான செய்திகள் பரவுவதற்காகச் செய்யப்பட்ட திட்டத்தில் ஆரம்பம் முதற்கொண்டே எனக்கு அதிகமான அக்கரையுண்டு; ஆனால் யுத்த அறிக்கை நிலயத்தின் பத்திரிகைக்கு நாம் எதிர் பார்த்ததிற்கு மேல் இச்சமஸ்தானத்திலும் ஸமஸ்தானத்திற்கு வெளியிலும் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்தப் பத்திரிகையானது விஷய புஷ்டியையும் குறிப்பிட்ட காலத்தில் தவறாமல் வெளிவந்திருப்பதையும் பற்றி நிலயத்தாரையும், ஸமஸ்தான அச்சு இலாகாவையும், நான் பாராட்டுகிறேன் என்ற சங்கதியை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்; அத்துடன், இந்த நெருக்கடியான நிலைமையில் இச்சமஸ்தானத்தில் உள்ள நம் எல்லோருக்கும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கும், மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியின் சாம்ராஜ்ஜியத்திற்கும் அக்கரையுள்ள உயிர் நிலையான விஷயங்களைப்பற்றி நமக்கு சரியான தகவல்கள் இப்பத்திரிகை மூலம் கொடுப்பதில் ஊக்கம் கொஞ்சமேனும் குறையாதென்று எதிர் பார்க்கிறேன்.

**RAJAGOPALA TONDAIMAN,**
*Raja of Pudukkottai.*

## அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், ஸி. ஐ. இ. அவர்கள் அனுப்பிய செய்தி.

---

சென்ற ஒரு வருஷகாலமாக யுத்த அறிக்கை நிலயம் சம்பந்தமாக செம்மையாக வேலை செய்து வந்து வருஷம் பூர்த்தியானதைப்பற்றி, காப்டன் ஜி. டி. பி. ஹார்வியும் அவருடன் உழைத்து வந்தவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

நிலயத்தார் பதிப்பித்து வந்திருக்கும் பத்திரிகை வெகு உயர்தரமானது; குறிப்பிட்ட காலங்களில் தவறாமல் வெளியாகி வந்தது. இந்த விஷயம் இச் சமஸ்தானத்திற்கு வெளியில் வெகு தூரத்தில்கூட ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வேறு எந்த இடத்திலும் இதைக் காட்டிலும் மேலான பத்திரிகை இருந்திருக்க முடியாதென்று நினைக்கிறேன். எதிர்காலத்தில் இந்தப் பத்திரிகையானது இதுவரை நடத்தி வந்திருக்கிற மேலான தரத்தை ஒத்து நடத்தி வரப்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

## சில வருஷாந்தரக் குறிப்புகள்.

---

1. இந்தப் பத்திரிகை அனுப்ப வேணுமென்று கேட்டுக்கொண்டிருக்கிற சிலர்:—

| | |
|---|---|
| ஒரு பிரதம மந்திரி. | லண்டனில் அக்னி அணைக்கும் இலாகா வேலைக்காரர். |
| ஒரு கன்னி மடத்தலைவி. | ஒரு இந்திய யுத்தக் கப்பல் தலைவர். |
| ஒரு ஜெர்மன் யுத்தக் கைதி. | ஒரு சகோதர சமூகத் தலைவர். |
| ஒரு இருப்புப்பாதை ஜெனரல் மானேஜர். | ஒரு பிரிடிஷ் ரெஸிடெண்ட். |

—இத்துடன் ஒவ்வொரு பிரசங்கத்திற்குப்பின் படியாத பிள்ளைகள் பலர்!

2. சென்ற வருஷத்தில் புதுக்கோட்டை டவுனில் 204 பிரசங்கங்களும், கிராமங்களில் 455 பிரசங்கங்களும் நடத்தியிருக்கிறோம்.

- எங்கள் பிரசங்கங்களை (குறைக்குக் கேள்விகள், கல்லெரியாமல்) கேட்டவர்கள் 1,65,860 பெயர்கள்.
- அப்படியிருந்தும், யுத்தப் படங்கள் காட்டத் தொடங்கிய பின் முன்னிலும் இரண்டு மடங்கு பெயர்கள் எங்கள் பிரசங்கங்களிற்கு வந்திருக்கிறார்கள்.
- பத்தாயிரம் ஏகர்கொண்ட காகிதம் நாங்கள் இனமாகக் கொடுக்கும் யுத்தச் செய்திகள் அச்சுப்போட உபயோகித்திருக்கிறோம்—கையெழுத்திற்காக இன்னும் எவ்வளவு உபயோகித்திருக்கிறோமென்பது கடவுளுக்குத்தான் தெரியும்!
- கணக்குகளிலிருந்து பார்த்தால் யுத்த சமாசாரம் குறைவாக தெரிந்துகொண்டவர்கள், அதில் குறைவான அக்கரையுள்ளவர்கள் 'தலைநகர்' வாசிகள் பழமொழிப்படி 'கற்கண்டு கொடுத்துப்பாருங்கள்' அல்லது, நாங்கள் செய்கிறபடி, படங்களைக்கொண்டு இழுத்துப்பாருங்கள்.
- எங்கள் ஆபீஸ் பியூன் கசரத் கற்றுக்கொடுக்கும் வஸ்தாத் வேலைக்கு அநேகமாக லாயக்தான். எங்கள் நிலயத்தின் காரியமாகவே ஒவ்வொரு நாளும் சுமார் 40 மைல் வரை சைக்கிள் சவாரி செய்கிறார்.
- ஒரு எலெக்டிரிக் பங்காவின் கீழ் எங்கள் ஆபீஸ் நாற்காலிகளில் உட்கார்ந்து 11,000 பேர் வரை எங்கள் பத்திரிகைகளையும், தேச படங்களையும், பல விஷயங்களை துலக்கும் படங்களையும் பார்த்தும் படித்தும், எங்கள் புஸ்தகத்தில் கவர்னர்களுடனும், ரெஸிடெண்ட்களுடனும், அவர்கள் போன்ற மற்றவர்களுடனும் கையெழுத்துச் செய்திருக்கிறார்கள்.
- ஸமஸ்தான அச்சுக்கூடத்திற்கு 9,156 மணி நேரம் உபரி வேலை கொடுத்திருக்கிறோம்.
- எங்கள் நிலயம் ஸ்தாபிக்கப்பட்டு வேலை ஆரம்பித்தபோது, ஐந்து பேருடன் ஆரம்பித்தோம். இப்போது 20 பேர்களிருக்கிறோம். ஆனால் படித்தவர்களும் விஷயம் தெரிந்தவர்களும் தேவை. (அதாவது படித்தவர்கள், விஷயம் தெரிந்தவர்களில் இப்போதிருப்பவர்களுடன் இன்னமும் தேவை என்கிறோம்!)

## விமானப்போர்.—எதிர்ப்பு, நஷ்டக் கணக்கு.

ஒரு வருஷத்திற்கு (2—7—40 முதல் 1—7—41 வரை).

**A** — பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்த இடங்கள்:

| | பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்த இடங்கள் | படையெடுப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஐரோப்பா—(Europe) | புலாயின் (Boulogne) ... | 91 |
| | கலே (Calais) ... | 80 |
| | ஆஸ்டெண்ட் (Ostend)... | 71 |
| | ஹாம்பெர்க் (Hamburg) | 70 |
| | ப்ரெஸ்ட் (Brest) ... | 63 |
| | ப்ரமன் (Bremen) ... | 65 |
| | கொலோன் (Cologne)... | 55 |
| | ரூர் (Ruhr) ... | 47 |
| | ஹாம் (Hamm) ... | 46 |
| | பெர்லின் (Berlin) ... | 45 |
| | லோரியான் (Lorient)... | 42 |
| | கில் (Kiel) ... | 39 |
| | எம்டன் (Emden) ... | 39 |
| | வில்ஹெல்ம்ஷாவன் (Wilhemlshaven) | 38 |
| | மான்ஹீம் (Mannheim) | 31 |
| | கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen) | 29 |
| | ஹானோவர் (Hanover) | 26 |
| | டஸ்ஸல்டார்ப் (Dusseldorf) | 24 |
| | எஸ்ஸன் (Essen) ... | 22 |
| | ஸோயஸ்ட் (Soest) ... | 21 |
| | ஆஸ்னாப்ருக் (Osnabruck) | 18 |
| | ரைன்லாந்து (Rhineland) | 11 |
| ஆப்பிரிக்கா—(Africa) | பெங்காஸி (Benghazi) | 75 |
| | டொப்ருக் (Tobruk) ... | 58 |
| | பார்டியா (Bardia) ... | 40 |
| | ட்ரிபோலி (Tripoli) ... | 31 |
| | மாஸ்ஸாவா (Massawa) | 22 |
| | எல். குப்பி (El. Gubbi) | 17 |

**B** — தினப்படி விமானப் படையெடுப்பு.

விரோதிக் கப்பல்கள்—எல்லா கடல்களிலும்.

விரோதி விமான நிலயங்கள்— ஜெர்மானியர் ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பா (Europe), இதாலிய ஆபிரிக்கா (Africa).

**C.**

விமான நஷ்டக் கணக்கு.

| எவ்விடங்களில். | பிரிடனுக்கு. | ஜெர்மனிக்கு. |
|---|---|---|
| ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பா (Europe). | 559 | 577 |
| மால்டா (Malta) ... | 39 | 161 |
| ஆபிரிக்கா (Africa) ... | 123 | 486 |
| பிரிடன் (Britain) ... | 784 | 3439 |
| இராக் (Iraq) ... | 4 | 24 |
| ஸிரியா (Syria) ... | 15 | 51 |
| கடல் (Sea) ... | 7 | 54 |
| ருஷ்யா (Russia) ... | 38 ருஷ்யாவுக்கு. | 287 ஜெர்மனிக்கு. |

குறிப்பு:—1. சேதமான விமானங்களின் எண்ணிக்கை இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை.

குறிப்பு:—2. ஜெர்மன் விமான நஷ்டக்கணக்கில் இதாலிய விமான நஷ்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பிரஸங்கம் LII.

# விமானப் போரில் புது உபாயங்கள்.

1. இச்சமயம் உலகத்தாரின் கவனமானது ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் நடை பெற்றுவரும் மகத்தான தரைப் போரில் நிலைகொண்டிருக்கும் பொழுது அதே காலத்தில் உலகத்தில் பெரிய நிலப்படைக்கும் நீர்ப்படைக்கும் நடக்கும் போர் நிற்கவில்லை என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஓயாமல் ஒழியாமல், சப்தமில்லாமல் அட்லாண்டிக் மஹா யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ஸண்டர்லாந்து கடல் விமானம் என்ன, "ரூஸ்வெல்டின் சிசுக்கள்" என்று விமானிகளால் அழைக்கப்படும் அமெரிக்க கடோலினு விமானங்கள் என்ன, ஹட்ஸன், ஆன்ஸன், பிளென்ஹிம் முதலிய விமானங்கள் என்ன இவைகள் எல்லாம் பல விதமாக இப்போரில் கலந்து கொள்கின்றன.

## வெவ்வேறு அலுவல்கள்.

2. யுத்தம் துவங்கினதிலிருந்து அவைகள் ஆயிரக்கணக்கான கப்பல்களுக்கு துணை கொடுத்து அனுப்பியிருக்கின்றன. நடுக்கடலில் மிதந்துகொண்டிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களை மீட்டிருக்கின்றன. சிறிய படகுகளுக்கு ஆகாரமும் குடிதண்ணீரும் கொடுத்திருக்கின்றன. எதிரிக் கப்பல்களையும், சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்களையும், எதிரிகளின் கப்பல்கள் ஒளிந்திருக்கும் ஸ்தானங்களையும் பகலும் இரவும் இடைவிடாது தேடி வருகின்றன.

3. ஆகிலும் அவைகளுடைய முக்கியமான லக்ஷியங்கள் யூபடகுகளைக் கண்டு பிடிப்பதுதான். கை ஓயாமல், கண் கொட்டாமல் வெகு திறமையுடன் கொடுமை வாய்ந்த அவைகளைக் கண்டு பிடித்து நாசம் செய்கின்றன. ஆபிரிக்காவிலுள்ள டாகார் என்ற துறைமுகத்திற்கும் தென் அமெரிக்காவிலுள்ள பெர்னும்புகோவென்ற துறைமுகத்திற்கும் மத்தியிலுள்ள விஸ்தாரமான கடல் வெளிகளை உங்கள் மனக்கண்ணுக்குக் கொண்டுவாருங்கள். ஒரு பெரிய யுத்தக் கப்பல்கூட ஒரு சிறிய துளியாகத்தோன்றும். பேரலைகள் அடித்துக்கொண்டிருக்கும். புயல் காற்றுகள் சூழுறிக்கொண்டிருக்கும். இவைகளுக்கு மத்தியில் நம் விமானங்கள் சத்துருவின் நீர்மூழ்கிகளையும் கொள்ளைக் கப்பல்களையும் துரத்துகின்றன. தண்ணீர் பரப்புக்கு மேல் நீட்டிக்கொண்டிருக்கும் நீர்மூழ்கி ஸதம்பத்தையும், எண்ணெய்க் கோடுகளையும் கண்டுபிடிப்பதென்றால் அதற்கு பரம தைரியமும், ஜாக்கிரதையும் வேண்டும். அதிலும் கால நிலையும் கெட்டு, பார்வை வசதிகள் பங்கப்படுங்காலங்களில் இப்பெரிய 4 யந்திரங்கள் கொண்ட பூதாகாரமான விமானங்கள் பூதலோகத்திலுள்ள மீன்கொத்திகள் தன் ஆகாரமான மீன்களுக்கு காத்துக்கொண்டிருப்பதுபோல் அலைகளுக்கு 100 அடிக்கு மேல் பறந்து கவனித்து வரும். வானம் தெளிவாக இருக்கும் காலங்களில் நீர்மூழ்கிகளை கவனிப்பதற்காக 1,500 அடி வரை இறங்கி கவனித்து வரும்.

இந்த நீர்மூழ்கிகளைத் தேடும் பிரயத்தனம் சாங்கோபாங்கமாகப்போடப்பட்டு சாங்கோபாங்கமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு விமானமும் 15 மணிக்கு ஒரு தரம் மாற்றப்படுகிறது. 15-மைல் தூரம் சமுத்திரத்தைக் கவனிப்ப தென்றால் நின்ற இடத்திலிருந்து கவனிப்பதல்ல என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். வெகு சுறுசுறுப்பாக சமுத்திரம் முழுவதையும் உற்று நோக்குவதென்றால் நரம்புகளெல்லாம் தளர்ந்து போகக்கூடிய வேலை. அதனால் சமுத்திரத்தை பாகம் பாகமாக பிரித்துக்கொண்டு ஒரு பாகம் கூட விடாமல் தேடுகிறார்கள். நீர்மூழ்கி இருப்பதைக் கண்டுபிடித்து விட்டாலோ உடனே நாலா பக்கமும் தகவல் கொடுக்கப்படுகிறது. யுத்தக் கப்பல்கள் 4 பக்கங்களிலிருந்தும் வளைத்து வருகின்றன. இனிமேல் தண்ணீருக்குள் இருக்க முடியாதென்று தளர்ந்து போய் நீர்மூழ்கி வெளியே நீர் மட்டத்துக்கு வந்து பிரிடிஷ் கடற்படையின் பீரங்கிகளின் குண்டுகளால் நொறுக்கப்படும் வரை அதற்கு விடுதலையில்லை.

## விமானங்களின் திறுசுகள்.

வேவு பார்க்கும் நம்முடைய ஸண்டர்லாண்ட் கடல் விமானங்களை ஜெர்மானியர், பறக்கும் முள்ளம்பன்றிகள் என்று கூப்பிடுகிறார்கள். ஏனெனில் அவைகளில் அவ்வளவு ஏராளமான பீரங்கிகள் இருக்கின்றன. அமெரிக்காவின் பதில் வெட்டான கெரோலினா விமானம் ஸண்டர்லாண்டைக்காட்டிலும் அதிக தூரம் அதிக பாரம் எடுத்துக்கொண்டு போகக்கூடிய அதிக விஸ்தாரமுள்ள வான்கலம். விமான தளங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து சென்று யுத்தம் செய்யவேண்டியிருக்கும் சந்தர்ப்பத்தில் மேற்சொன்ன விஷயங்கள் அத்தியாவசியமானவையால் அமெரிக்க கெரோலினாவைப்பற்றி அடிக்கடி நாம் கேள்விப்படுவோம்.

நாலு யந்திரங்கள் படைத்த தூர சஞ்சாரி விமானங்கள் ஜெர்மனியரிடமும் இருக்கின்றன. அவைகளுக்கு பாக்வூல்ப்ஸ் என்றும், காண்டார் என்றும் கூரியர் என்றும் பெயர். இவைகள் வெடிகுண்டு விமானங்கள், வேவுபார்க்கும் விமானங்கள் வகுப்பைச் சேர்ந்தவைகள். அவைகள் பிரான்ஸிலுள்ள மெரிக்நாக் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு நார்வேயிலுள்ள ஸ்டாவெங்கர் என்ற இடம் வரை அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஒரு பெரிய அர்த்த வட்டமிட்டுப் பறந்து சென்று தாக்குகின்றன. நம் விமானப் படையும் அந்த இரண்டு இடங்களிலும் உள்ள விமான தளங்கள் இருக்கும் இடங்களையும் இடைவிடாது தாக்கி அழிக்கின்றன. "தேடித் தாக்கு" என்பதே அவர்களுடைய மந்திரம்.

4. மற்றொரு விதமான அலுவலில் நம் விமானப் படையைச் சேர்ந்த போபோர்ட்ஸ் என்ற விமானங்கள் சத்துருவால் வியாபிக்கப்பட்ட கடற்கரைகளின் பேரில் பறந்து சென்று அக் கடற்கரைகள் ஓரமாய் ஊர்ந்து நார்வே துறைமுகங்களுக்கு கள்ளத்தனமாய் சாமான்கள் கொண்டு செல்லும் சத்துருக் கப்பல்களை வெடிகுண்டுகளால் தாக்குகின்றன. அச் சமுத்திரங்களில் கப்பல்களிருக்கும் விமானங்கள் கண்ணிகள் போட்டிருக்கின்றன.



5. இன்னும் முக்கியமான பல வேலைகளையும் நம் விமானப்படை செய்கிறது. பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் உள்ள நீர் மூழ்கி தளங்களையும், தொழிற்சாலைகளையும் தாக்குகிறது. படையெடுப்புத் துறைமுகங்களையும், நீர் மூழ்கி தளங்களையும் நம் விமானப் படை தாக்கினதில் வெகு சேதம் விளைந்திருக்கிறது என்று நன்றாகத் தெரிகிறது. ஏனெனில் பிரான்ஸில் தான் வியாபித்திருக்கும் பிரதேசங்களில் உள்ள பெரிய யந்திர சாலைகளையும், தொழிற்சாலைகளையும் தன்னிடம் கொடுத்து விட வேண்டுமென்று ஹிட்லர் விஷி கவர்ன்மெண்டிடம் கேட்டுக் கொண்டிருக்கிறான். நம் வெடி விமானங்களுக்கு இரையாகா வண்ணம் நீர் மூழ்கிகளை இத் தொழிற்சாலைகளில் கட்டியும் ஒழுங்கிட்டும் கொள்ளலாம் என்று ஹிட்லர் நினைத்திருக்கவேண்டும்.

பிரெஞ்சுப் பிரதேசத்திலுள்ள பெரிய தொழிற்சாலைகளை நம் விமானப்படை விடவில்லை. காமின்ஸ் போன்ற இடத்திற்கும் சென்று இருக்கிறது. இதைவிட, சென்ற 4 வாரங்களாக நம் விமானப்படை வெகு தீவிரமாக ரூரை தாக்கி வருகிறது என்று கேள்விப்படுகிறோம்.

அநேக மாதங்களாக இங்கிலீஷ் கால்வாய்பேரில் நடந்ததான யுத்தமானது பிறகு பிரெஞ்சு தேசத்தின் பேரிலும், அதன் பிறகு எதிரியின் தேசத்தின் பேரிலும் தாக்குதலாக மாறிவிட்டது. பிரிடிஷ் வெடிகுண்டுகளைக் கண்டு அவர்கள் நடுநடுங்குகிறார்கள்.

## வேகமான மாறுதல்கள்.

6. புதியமாதிரி விமானங்கள், புதுவித தாக்குதல்கள், தற்காப்புகள், புதிய தந்திரங்கள், உபாயங்கள் எல்லாம் கற்பிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பழய கீர்த்தி பழம் பஸலியாகப் போய்விட்டது. வீரமும், நூதனமும், திட்டம் போடுவதில் வேகமும் கொண்ட பெரிய மனிதர்கள் இது வரை உலகத்திலேயே 'கண்டிராத தேச பக்தியும், ஏகமதியும் கொண்ட இங்கிலாந்து தேசத்தை நடத்திவருகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்வரை போர் விமானங்களில் ஹரிகேன், ஸ்பிட்பயர் என்ற இரு விமானங்களும் வெடி விமானங்களில் விட்லி, பிளென்ஹிம் முதலிய விமானங்கள் முதன்மையானது என்று நினைத்துக்கொண்டிருந்தோம். இந்த விமானங்களுக்கு இப்பொழுது இன்னும் அதிக சக்தி வாய்ந்த யந்திரங்கள் பூட்டப்பட்டிருக்கின்றன. அதனால் அதிவேகமாகச் சென்று அதி லாகவமாக பாய்ந்து வெகுநேரம் பறந்துசெல்ல சக்தி வாய்ந்திருக்கின்றன. போயிங் என்ற விமானம் ஒரு பெரிய பூதம். அது ஒரு பறக்கும் கோட்டை. அதன் பலமும் வேகமும் தாக்கும் சக்தியும் அளவற்றது. வெகுதூரம் வெகு பெரிய வெடிகளை எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய பெரிய வெடி விமானங்கள் இப்பொழுது உபயோகத்தில் இருந்துவருகின்றன. டக்ளஸ்—பி—19 என்ற விமானத்தின் புகழைப் பற்றி நாம் ஏற்கனவேயே கேள்விப்பட்டிருக்கிறோம். கெரோலினா என்ற அமெரிக்க விமானம் இப்பொழுது நடக்கும் அட்லாண்டிக் பெரும் போரில் வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

இப்பொழுது நாம் பிரயோகம் செய்யும் வெடி குண்டுகள் பழய ரகங்களைக் காட்டிலும் ஐந்து மடங்கு வெடிக்கும் சக்தியுள்ளவை. வெகு வேகமாகச் செல்லும் வஸ்துக்களைக் குறிதவறாமல் அடிப்பதற்காக ஆகாய மீன் வெடிகள் (aerial torpedoes) உபயோகப்படுத்தப் படுகின்றன. இதாலியிலுள்ள டாரண்டோ வளைகுடாவில் நடந்த கடற்போரில் இத்தோணி வெடி எவ்வளவு நஷ்டம் விளைவித்ததென்பதை நாம் ஏற்கனவேயே கேள்விப்பட்டிருக்கிறோம். ஜெர்மன் முதல்தர யுத்தக் கப்பலான பிஸ்மார்க்கை எவ்வாறு ஒரு தோணி வெடியால் நம் விமானப் படையைச் சேர்ந்த "காடலின்" என்ற கடல் விமானம் அடித்து அதன் வேகத்தைக் குறைத்து அழியாப் புகழைப் பெற்றது என்று நாம் கேள்விப்பட்டோம். இந்த விஷயத்தைப் பற்றிப் பின்னும் சொல்லுவோம்.

## பகலில் விமானப் போரின் தந்திரங்கள்.

7. விமானங்களின் அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களினின்றும் அவசியம் ஏற்பட்ட விமானப் போரின் புதிய அம்சங்களைப்பற்றி இங்கு கூறுவோம். சென்ற ஸெப்டம்பர் மாதம் பிரிடன் யுத்தத்தில் ஹிட்லர் பின் வாங்கின பிறகு மேகங்களின் மறைவில் தவிப்பட்ட விமானங்கள் பகலில் சென்று தாக்கும் உபாயம் கைக்கொள்ளப்பட்டது. இந்த உபாயம் வெற்றிகரமாக இருக்கவேண்டும் என்றால் குறிப்பிட்ட லக்ஷியம் எதுவோ அதற்கு மேல் மேகங்கள் இருக்கவேண்டியது அவசியம். இம்மாதிரி சந்தர்ப்பம் தேடிக்கொடுக்கவேண்டியது உளவு விமானங்களின் நல்லவேலையைப் பொருத்திருக்கிறது.

பகற்காலங்களில் சிலசமயம் பகிரங்கத் தாக்குதல்கள் செய்யப்படுகின்றன. பிரிடனில் பாதுகாப்புக்காக இருக்கும் சண்டை விமானங்களின் பதில் தாக்குதலிலிருந்து அநுபவத்தில் இது ஒரு நஷ்டகரமாக முடிந்திருக்கிறது. ஆனால் பிரிடிஷ் விமானங்கள் ப்ரெமன்போன்ற இடங்களில் பகிரங்கத்தாக்குதலைக் கைவிடவில்லை. இவ்விஷயத்தை ஜெர்மனி ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். நஷ்டத்தைக் குறைக்க வேண்டுமென்றால் விமானங்கள் வெகு மின்னல் வேகத்தில் அல்லது வெகு உயரத்திலிருந்து தாக்கவேண்டும். ஏனெனில் சத்துரு பிரதேசத்திலுள்ள லக்ஷியங்கள் வெகு பலமான தற்காப்புகள் கொண்டிருக்கும். ஆகையால் வேகத்தில் அல்லது உயரத்திலிருந்து வெடி போடுவதென்றால் ஏராளமான தைரியமும் அஞ்சா நெஞ்சமும், விமானம் ஓட்டுவதில் வன்மையும் வேண்டும். இம்மாதிரியான தாக்குதல்களில் நம் விமானிகள் வெகு சமர்த்தர்கள்.

8. இப்பொழுது கொஞ்சகாலமாக பகலில் பகிரங்கமாக படையெடுப்பதற்காகச் செல்லும் வெடி விமானங்களுக்கு போர் விமானங்கள் துணையாகச் செல்லுகின்றன. துணையற்ற வெடி விமானம் எதிரியின் வழி மறிக்கும் போர் விமானத்தோடு சண்டையிட்டு நிர்வகிக்க முடியாது. வெடி விமானத்தின் சுடும் சக்தியும் லாகவமும் வெகு குறைவு. துணைசெல்லும் போர் விமானம் வழி மறிக்கும் போர் விமானத்தோடு போர் புரிவதில் அதற்கும் ஒரு பலஹீனம்



இருக்கிறது. வெகுதூரம் பறப்பதற்கு வேண்டிய கரியைக்கொண்டு போகிறதற்கு கட்டப்பட்டிருப்பதால் ஒரு வழி மறிக்கும் போர்விமானத்தோடு ஒப்பிடும் போது அது பெரிதாகவும் வெகு மெதுவாகவும் மந்தமாகவும் செல்லக்கூடியதாக இருக்கிறது. மேலும் துணை விமானமானது வெடி விமானத்தைக் காக்கவேண்டி இருக்கிறது. அதனால் அதன் சலனங்கள் சேஷ்டைகள் எல்லாம் வெடி விமானத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற ஒரே லக்ஷியத்தில் வரையறுக்கப் பட்டிருக்கிறது. மேலும் சத்துரு விமானங்களோடு போர்புரிந்து கொண்டு இருக்கையில் விமானி சதாசர்வ காலமும் எண்ணெய் அளவைப் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும். ஏனெனில் வீட்டுக்குத் திரும்பப் போதிய எண்ணெய் இருக்கும் போதே அவன் திரும்பவேண்டும். அதோடு ஏகமனதாய் சத்துருவோடு போர் புரிந்துகொண்டிருக்கும் சமயம் வீட்டுக்குத் திரும்புவது வெகு கடினம்; மேலும் இம்மாதிரி அந்த விமானம் திரும்பவேண்டும் என்றே எதிரி பிரார்த்தித்துக்கொண்டிருப்பான். ஏனெனில், விமானத்தின் பின்பாகத்தைக் காட்டினவுடனேயே அதை சுட்டு வீழ்த்துவது வெகு எளிது. ஆகையால் போர் விமானங்கள் முன்னேதான் சண்டையிடும். அவைகளின் துப்பாக்கிகளும் எதிரே ஒரு லக்ஷியத்தைத்தான் சுடும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் எதிரே சத்துருவை வைத்துக் கொள்ள எவ்வளவு வேகமாகத் திரும்பமுடியுமோ அவ்வளவு வேகமாகத் திரும்பவும், எவ்வளவு அதிகமாகச் சுடமுடியுமோ அவ்வளவு அதிவேகமாகச் சுடவும் வேண்டும் என்றவைகள்தான் அவைகளின் அபிப்பிராயங்கள்.

9. சில சமயம் சத்துருவின் போர் விமானங்கள் துணை செல்லும் நம் போர்விமானங்களை அதன் காப்புகளான வெடிவிமானங்களிடமிருந்து பிரித்து அப்பால் இழுத்துக்கொண்டுபோகக்கூடிய தந்திரத்தை அநுஷ்டிக்கும். இவ்வாறு செய்வதற்கு இரண்டு சமங்களிலிருந்தோ, அல்லது பல சமங்களிலிருந்தோ எதிரியின் போர் விமானங்கள் தாக்கும். அல்லது சத்துருவின் வழிமறிவிமானங்கள் பல கூட்டங்களாக பல சமங்களிலிருந்து எதிர்க்கும். இப்படியாக நம்முடைய போர் விமானங்கள் எதிரியின் போர் விமானங்களோடு சண்டையிடும் காலத்தில் மற்ற சமத்துவத்திலிருக்கிற எதிரியின் போர் விமானங்களுக்கு நம் வெடி விமானங்கள் எளிதில் இரையாகக்கூடியதாக இருக்கின்றன. நம்முடைய துணைக்காவல் சண்டை விமானங்களில் சுற்றியடிக்கக்கூடிய பீரங்கிமேடைகளிருப்பதென்பது வாஸ்தவம். ஆகிலும் சுற்றும் பீரங்கிமேடையால் இந்த பிரச்னை பூராவும் தெளிவுறாது. வெகு வேகமாகவும் லாகவமாகவும் செல்லும் போர்விமானங்களைச் சுழலும் துப்பாக்கிகளால் விரட்டமுடியாது. பின்னாலிருக்கும் துப்பாக்கிகள் தற்காப்பிற்காகவே ஒழிய தாக்குதலுக்கு அல்ல. அநுபவத்திலிருந்து புதிய தந்திரங்கள் கற்கப்படுகின்றன. எத்திசையிலும் சுட்டுத்தாக்கும் விமானம் கண்டுபிடிக்கும் காலம் எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் போர்விமானங்கள் எதிரேதான் போரிடமுடியும். ஆகையால் சமீபத்திலிருக்கும் தளத்திலிருந்து பறந்துவரும் வழிமறிப்போர் விமானம் வெகு தூரத்திலிருந்து பறந்துவரும் தூரசஞ்சாரி போர்விமானத்தை முறியடித்துவிடும்.

இதே நன்மையை நம் ஹரிக்கேன், ஸ்பிட்பயர் போர் விமானங்கள் மெஸ்ஸர்ஸ்மிட் 109 உடன் பிரிடிஷ் வானங்களில் போரிடுவதில் அனுபவிக்கின்றன. நம்முடைய இயற்கையான உயர்வுக்குப்பதிலாக சத்துருக்களுக்கு விசேஷமான பலமிருக்கிறது. சத்துருவின் தூரசஞ்சாரி போர்விமானங்கள் 150 மைலிலிருந்து வேலைசெய்யக்கூடியது. ஆனால் நம்முடைய தூரசஞ்சாரிகளோ 600மைல் போய் 600மைல் திரும்பவேண்டியிருக்கிறது. இப்படியாக சத்துரு விமானங்கள் பிரிட்டனின்பேரில் வெகு நேரம் பறக்க வசதியிருக்கையில் நம் விமானங்கள் ஜெர்மனியின்பேரில் வெகுநேரம் நிற்க இயலவில்லை. ஆகையால் பாதுகாப்புக்கு லாயக்கான கொஞ்சதூரம் செல்லக்கூடிய சண்டை விமானங்களின் பலம் நமக்கு அவசியமானது. ஆனால் பிரிடிஷ் ஆகாயங்களிலிருந்து சத்துருவை விரட்டுவதற்கு நம் போர் விமானங்கள் அலைமேல் அலையாக அனுப்பப்படுகின்றன.

ஆகையால் தூரசஞ்சாரிக்கும் வழிமறி விமானத்திற்கும் ஒரு போர் நடந்து அதில் தூரசஞ்சாரி ஜயிக்கவேண்டுமானால் இரு விமானங்களின் தளமும் போர்களத்திலிருந்து சமதூரத்தில் இருக்கவேண்டும். இக்குறையினால்தான் பிரிடிஷ் விமானப்படையின் அதிகாரிகளில் சிலர் பகலில் துணைகொண்டு செல்லும் வெடி விமானப்படையெடுப்பைக் கண்டிக்கிறார்கள். வெடி விமானத்துடன் தூரசஞ்சாரியைச் சேர்த்துவிடுவதால் தூரசஞ்சாரியின் லாகவமும் அப்பாக்கியின் வீச்சும் குறைந்துவிடுகிறது.

பிரிடிஷ் விமானப் படையெடுப்பைப்பற்றி கடைசியாகவந்த செய்திகளிலிருந்து துணைக்காவலுடன் பகலில் வெடி வீசும் உபாயம் அதிக வெற்றிகரமாக பிரயோகிக்கப்படுகின்றது என்று தெரிகிறது. சத்துருவும் ருஷ்யாவுடன் பெரும் போர் நடத்துவதால் அதிக எதிர்ப்பு இல்லை என்று தெரிகிறது. எனினும், ஷிவர்ஸ்டோர்ட் என்ற விமான தந்திர விமர்சகர் கட்டியிருக்கும் முடிவு கீழேகாட்டப்பட்டிருக்கிறது. அதாவது போர் விமானங்களுடன் தானே சண்டையிட்டு தற்காத்துக்கொள்ளும் சக்திவாய்ந்த, புதிய வெடிவிமானங்கள் அமைக்கப்படும்வரை அதிக சேதமில்லாமல் பகற் படையெடுப்பு எடுத்து இன்னும் ஜாஸ்தியான வெற்றி எதிர்பார்ப்பதில் புண்ணியமில்லை.

## இரவில் ஏற்படும் விமான தந்திரங்கள்.

10. **இரவில் படையெடுப்பு.**—இங்கிலாந்தின்பேரில் இரவில் சத்துரு படையெடுப்பது வெகு அரிதாக இருக்கிறது. பிப்ரவரி மாதத்தில 16 எதிரி விமானங்களும் மார்ச்சில் 43-ம் ஏப்ரலில் 87-ம் சுட்டு வீழ்த்தப்பட்டன. இம்மாதிரியான வெற்றிக்குக் காரணம் விமான எதிர்ப்பு பீரங்கிகளை சீர்படுத்தியிருப்பதால் ஏற்பட்டது. இரவு சண்டை விமானங்கள் என்ற புதிய விமானங்களை உபயோகிப்பதால் ஜெர்மன் விமானப்படை இங்கு வருவதற்குப் பயப்படுகிறது.

இது நிலவுள்ள இரவுகளில் சாதாரண கண்பார்வையைக்கொண்டே இரவு சண்டை விமானங்கள் போரிடுகின்றன. ஆனால் பகற்படையெடுப்புக்கும் அதற்கும் பேதமில்லை. இருண்ட இரவுகளில் பார்ப்பதற்காக புதிய பிரத்யேகமான உபாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளில் புதிதாக



கண்டுபிடிக்கப்பட்டு இருக்கும் சூக்ஷ்மதர்சினி என்ற கருவியானது நீர்மூழ்கிகளையும் இரவில் படையெடுக்கும் வெடி விமானங்களையும் கண்டுபிடித்து தாக்குவதற்கு பெரிய உதவியாக இருக்கிறது.

**சத்துரு பிரதேசங்களின்பேரில் இரவு படையெடுப்பு.**—சத்துரு பிரதேசங்களின் பேரில் பிரிடன் செய்யும் இரவு படையெடுப்பு பகலில் வெடிகுண்டுபோடுதல் அதிகரித்திருப்பதிலிருந்து தளரவில்லை. டக்ளஸ் ஹாவக் என்ற விமானமும் போயிங் என்ற போர் விமானமும் இப்படையெடுப்புகளில் உபயோகப்படுத்தப் படுகின்றன. ராணுவபலமுள்ள முக்கியமான குறிகளை விரைவு வழியில்தென்படும் எந்த சத்துருவையும் எதிர்க்க இந்த விமானங்கள் சக்தியுள்ளவை. இந்த இரவு படையெடுப்புகளில் சத்துரு விமானங்களையும், விமானதளங்களையும் முக்கிய லக்ஷியமாகக் கொண்டிருக்கின்றன. நல்லிருளில் சத்துரு விமான தளங்களின்மேல் இவைகள் வட்டம் இடுகின்றன. சத்துரு விமானங்கள் இறங்குவதற்கும் அல்லது உயரே பறப்பதற்கும் ஏற்படும் ஜோதி வழியை உற்று நோக்கிக்கொண்டிருக்கின்றன. அந்த ஜோதி வழி ஏற்பட்டவுடன் நம் விமானங்கள் வெகு நிசப்தமாக இறங்கி படபடப்பு இல்லாமல் வேலை செய்து எதிரி யந்திரங்களை சுட்டுத்தள்ளி அதன் பின் உயரேசென்று விமானங்கள் தொங்கவிடப்படும் ஸ்தம்பங்களையும் விமானக் கட்டடங்களையும் வெடி வீச்சுக்குள்ளாக்குகின்றன. வீரம் செறியும் அறிய செயல்கள் தினந்தோறும் நடத்தப்படுகின்றன. ஆயினும் நாம் அவ்வீரச்செயல்களுக்கு வெகு அருகே இருப்பதால் அவைகளின் மகிமையை நாம் உணரவில்லை. இவைகள் எதிரியின் மனோதைரியத்தை நிச்சயமாய் பாதிக்கக்கூடுமென்பது சந்தேகமில்லை. எதிரியும் அவன் தற்காப்புகளையும் விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் இரவு போர் விமானங்களையும் ஒழுங்கு செய்துகொண்டிருக்கிறான் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆகையால் பகற்படையெடுப்பைப்போல இரவு படையெடுப்பும் அபாயகரமாக இருக்கிறது.

## டார்பிடோ ஏற்றிச்செல்லும் விமானங்கள்.

11. சென்ற நவம்பர் மாதத்தில் டாரண்டோ வளைகுடாவில் இதாலிய யுத்தக் கப்பல்களைத் தாக்கினதிலிருந்து ஆகாயத்தோணி வெடிகளின் செய்திகள் முன்னணிக்கு வந்தன. பிரிடிஷ் விமானவாஹினியான இல்லஸ்டிரியஸ் என்ற கப்பலிலிருந்து பறந்துசென்ற விமானங்கள்தான் நஷ்டம் விளைத்தன. கீழ் மத்தியதரைக்கடலில் மடபான் முனைக்கப்பால் நடந்த கடற்போரில் நம் வெற்றிக்குக் காரணமும் பிரிடிஷ் உளவு விமானங்களும் போர் விமானங்களும் பிரிடிஷ் கடற்படையோடு ஒத்துமையாய் உழைத்ததே. மேலும் தோணிவெடி தாங்கிச்சென்ற விமானங்களே எதிரி கப்பல்களைத்தாக்கி வேகத்தை குறைத்திருக்கின்றன. பிஸ்மார்க் என்ற ஜெர்மன் யுத்தக் கப்பலுடன்செய்த போரில் தான் விமானத்தால் உளவறிதல், தாக்குதல் என்ற தந்திரங்களின் உச்சதசை உலகத்தாருக்குக் காண்பிக்கப்பட்டது. பிரிடிஷ் உளவறியும் விமானங்கள் நார்வேயிலுள்ள பெர்கன் என்ற துறைமுகத்திலிருந்து புறப்பட்டதைக் கண்டு

பிடித்து அறிவித்தது. கிரீன்லாந்து கரையோரத்து பிரிடிஷ்படையுடன் பிஸ்மார்க்குக்கு சந்திப்பு ஏற்படும்வரை அதன் தடம்பற்றியே சென்றது. ஸஃபோக் என்ற பிரிடிஷ் கப்பலை அது மூழ்கடித்து தப்பித்து ஓடயத்தனிக்கவே வெகு ஊக்கமாக அது பின்பற்றப்பட்டது. இரவின் இருளிலும் பிஸ்மார்க்கை தளராமல் தொடர்ந்து ஆகாயத்தோணி வெடிகளால் தாக்கின. அத்தோணி வெடிகளும் கெடலின் என்ற கடல் விமானத்தினின்றும் விக்டோரியஸ் என்ற விமான வாஹினியின் விமானங்களிலிருந்தும் விடுக்கப்பட்டன. இதனால் பிஸ்மார்க்கின் வேகம் குறைந்துபோயினும் அதன் தடம் இழக்கப்பட்டது. அதன்மேல் நடுசமுத்திரத்தில் அதைத்தேடும் வெகு கடினமான பிரயத்தனம் கைக்கொள்ளப்பட்டு ஊக்கமாய் நடத்தப்பட்டது. லாக்ஹீட்ஹட்ஸன் என்ற நிலவிமானமும் கெடலின் என்ற நீர்விமானமும் இதில் கலந்து கொண்டன. பிஸ்மார்க் மறுபடியும் ப்ரெஸ்ட் என்னும் ஊருக்கு 400 மைலுக்கப்பால் கண்டு பிடிக்கப்பட்டது. ஆர்க்ராயல் என்ற மற்றொரு பிரிடிஷ் கப்பலிலிருந்து கிளம்பிய விமானங்களால் விடுக்கப்பட்ட விமானத்தோணி வெடியால் பிஸ்மார்க் கடைசியாக மூழ்கடிக்கப்பட்டது.

## விமானதளங்களின் பிரயோஜனம்.

12. கிரீட் போரில் விமான பலத்தின் உபயோகத்தினால் அவ்வளவு மேன்மையான பிரயோஜனம் ஏற்படவில்லை. கீழ் மத்தியதரைக்கடலின் ஒடுக்கமான பிரதேசங்களில் கடல் வன்மையானது நிலதளங்களுடைத்தான விமானப்படையுடன் போர்புரிய லாயக்கில்லாதது. கிரீட் தீவுக்கு வெகு அருகில் ஜெர்மனிக்கு விமானதளங்கள் இருந்ததாலும் பிரிடன் தன்னுடைய கடல் பலத்தை அங்கு பிரயோகிக்க முடியாமல் போனதாலும் கிரீட் தீவில் விமானப்படையெடுப்பை விரட்ட போதிய ஸ்தல தற்காப்புகள் இல்லாமையாலும் பிரிடன் பின்வாங்க நேரிட்டது.

நம்மிடம் சில விமான தளங்களிருந்ததென்பது வாஸ்தவம். ஆகாயத்தில் சண்டை நடந்தால் நம் விமானதளத்தை எதிரி பிடித்துக்கொள்வதற்கு ஒருக்காலும் விடக்கூடாதென்பது. விமானதளத்தை நாம் எப்படியாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அது முடியாதென்றால் அதை அழித்து உபயோகமற்றதாகச் செய்ய வேண்டும். கிரீட் தீவில் உள்ள மெலாமி விமானதளத்தை அப்படியே விட்டு விட்டு பின் வாங்கினதால் சத்துருவின் துருப்பு வஹிக்கும் விமானங்களும் சுழல் விமானங்களும் இறங்கவும் மறுபடி பறந்து தாக்கவும் இயன்றது. இல்லையேல் இறங்க இடமில்லாமல் கண்ட இடங்களில் இறங்க முடியாமல் விழுந்து நொறுங்கிக் கொண்டு எதிரிக்கு வெகு சேதம் விளைந்து கொண்டிருக்கும்.

கிரீட்டிலிருந்து மற்றொரு விஷயம் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். சமீபத்திலுள்ள தளங்களிலிருந்து வேலைசெய்யும் வழிமறி விமானங்கள் தூர தளங்களிலிருந்து வரும் தூரசஞ்சாரிகளைக் காட்டிலும் மேன்மையானவை என்று நிரூபிக்கப்பட்டது. [illegible]



தூரசஞ்சாரிகள் ஜெர்மானிய மெஸ்ஸர்ஸ்மிட் என்ற போர்விமானங்களோடும் ஸ்டூகா என்ற மூழ்கி விமானங்களோடும் யுங்கர்ஸ்—52 என்ற துருப்பு வாஹினிகளோடும் வெகு சிறிது நேரம்தான் சண்டைபோட முடிந்தது. ஜெர்மன் சண்டை விமானங்களுக்கு சமீபத்திலுள்ள தளங்களிலிருந்து பெட்ரோல் கிடைத்து வந்தது.

## மிதக்கும் கலன்களும் விமானக்குடைகளும்.

13. கிரீட் தீவில் விமானக்குடைகள் மூலமும் யந்திரமற்ற மிதப்பு கலன்கள் மூலமாகவும் துருப்புகளை இறக்கி படையெடுக்கும் உபாயம் சற்று வெற்றியுடன் எதிரியால் உபயோகிக்கப்பட்டது.

விமானக்குடை துருப்பு என்ற உபாயமே ருஷ்யர்களால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டது. இந்த விஷயத்திலும் மற்றும் வான் போரில் நவீனமான ரூபங்களிலும் ருஷ்யர்களே முன்னணியில் உள்ளவர்கள். விமான வாஹினி துருப்புகள், விமான வாஹினி பீரங்கி மோட்டார்கள், யந்திரமில்லாமல் மிதக்கும் வான்கலத்தொடர்கள் இவைகளெல்லாம் ருஷ்யர்கள் மனதில் உதயமாகி அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆயினும் ஜெர்மானியர்களே அவ்வுபாயங்களை பழுதின்றி பண்புப்படுத்தினார்கள். கிரீட் ஸம்பவத்துக்குப்பிறகு, இந்தப்புதிய ஏற்பாட்டைப்பற்றி விவரிப்பது உசிதமானதே.

“மிதப்பு” (glider) என்று கூப்பிடப்படும் யந்திர மில்லாத இரண்டு வான் கலம் சாதாரணமாக துருப்பு வஹிக்கும் ஒரு விமானத்தால் இழுத்துச் செல்லப்படுகிறது. ஒவ்வொரு துருப்பு வாஹினியும் தனியே செல்லும் போது 22 போர் வீரரை தாங்கிச்செல்கிறது. ஆனால் அது மிதப்பு விமானங்களை இழுத்துச்செல்லும் போது 10 போர் வீரர்களை தூக்கிச் செல்கிறது. மிதக்கும் விமானங்களில் ஒவ்வொன்றிலும் 12 போர் வீரர்கள் உட்காரமுடியும். அதனால் ஒரு காலத்தில் 34 போர் வீரர்கள் செல்லமுடியும். மிதந்து செல்லக்கூடிய பிரதேசத்துக் கருகாமையில் வரும் பொழுது விமானத்திலிருந்து இஞ்சினில்லாத மிதப்பு விமானங்கள் அவிழ்த்து விடப்படுகின்றன, பிறகு அவைகள் மெதுவாகச் சென்று, சில சமயங்களில் அநேக மைல்கள் கடந்து கரைக்குப் போகின்றன. மறுபடியும் அவைகளைப்பிடித்தாலொழிய அவைகளைத் திரும்பவும் அடைய முடியாது. ஆகிலும் அவைகள் அரிய வேலையைச்செய்து விட்டன. அவைகளிலிருந்து அதாவது 500 அல்லது 1000 அடி உயரத்திலிருந்து ஆயுதபாணிகளாய் 24 மனிதர்கள் விமானக்குடைகள் மூலம் இறங்கிவிடுகிறார்கள்.

ருஷ்ய ராணுவ தந்திரிகர்கள் ராணுவ மர்மஸ்தானங்களை அழிப்பதற்கானவர்களையும் ஐந்தாம் படையாளர்களையும் எதிரி தேசத்தில் இறக்குவதற்கும் விமானக்குடைகளை உபயோகிக்க இந்த ஏற்பாட்டை அனுஷ்டிக்கலாமென்று நினைத்தார்கள். மேலும் சத்துருவின் பிரதேசத்தில் ஒளிந்துகொண்டு திடீரென்று தாக்குவதற்கு வேண்டிய துருப்புகளை விமானக்குடைகள் மூலம் “பொசிய” விடலாம். இந்த யுத்தத்திற்கு முன் ருஷ்யாவுக்கு சென்றிருந்த சேனாதிபதி

வேவல் அவர்கள் விமானக்குடை விஷயமாய் உள்ள அபிப்பிராயத்தை பிரிடிஷ் ஸர்க்காருக்கு அறிவித்திருக்கிறார். இதாலியிலுள்ள சில முக்கியமான ராணுவ ஸ்தலங்களை அழிப்பதற்காக சில மாதங்களுக்கு முன்னால் நம்மால் இவ்வுபாயம் கைக்கொள்ளப்பட்டு பரீக்ஷை செய்யப்பட்டது. ஆகிலும் நிலை நின்று போர் செய்ய வேண்டிய யுத்தங்களில், உதாரணமாக, முற்றுகையில் அல்லது பிரிடனில் இருப்பதுபோல உயர்ந்த ஸ்தல முஸ்தீப்புகளுடன் ஸ்தாபனம் செய்து கொண்டு சன்னத்தமாக இருக்கும் ஒரு சேனைக்கு எதிரிலும், இந்த விமானக்குடைத்துருப்பு மூலம் படையெடுப்பது வீணான நஷ்டத்தை விளைவிக்கக் கூடியது. இக்குடைத் துருப்புகள் இறங்கி வியாபிக்கும் ஒரு சைனியமாக மாறுவதற்கு வெகு நேரம் பிடிக்கும். அந்தக் காலத்தில் தான் முற்றுகை போடப்பட்ட சைனியமோ, தற்காப்பிலிருக்கும் சைனியமோ இறங்கும் துருப்பை நசுக்கி விடுவதற்கு நல்ல தருணம்.

இம் மாதிரியான விமானக்குடை மூலம் தாக்குதலிலிருந்து வெற்றி பெறுவதென்றால் இத்தாக்குதலால் எதிரிக்கு ஏற்பட்ட முற்றுப்பாட்டிலிருந்து எதிரியை மீளவொட்டாமல் தடுக்க மேலுக்கு மேல் மனிதர்களையும் யுத்த தளவாடங்களையும் இறக்கித் தாக்க வேண்டும். க்ரீட் தீவுக்கு அருகே எதிரிக்கு விமான தளங்கள் இருந்ததால் இம்மாதிரி ஜனங்களை மேலுக்கு மேல் கொண்டு வர இயன்றது. தீவில் விசேஷமாக வலுவான அரண்களுமில்லை. நம்முடைய விமானங்கள் ஆஸ்வாஸப்படுத்திக்கொள்ள லாயக்கான விமான தளங்கள் மட்டும் தான் அங்கே வைத்திருந்தோம்.

பிரான்ஸ் தேசத்தில் இன்னும் அதிக சமீபத்தில் சத்துருவுக்கு விமான தளங்கள் இருந்தும் பிரிடன் பேரில் இம்மாதிரியான தாக்குதலை எதிரி கைக்கொள்ளவில்லை. இதற்குக் காரணங்கள் ஸ்பஷ்டமானவை. கலே, லோரியான், ஸெயிண்ட் நஜேர், டங்கர்க், முதலிய கால்வாய் துறைமுகங்கள் நம்முடைய சண்டைபோடும் வேட்டை விமானங்களால் தாக்கக்கூடிய தூரத்திற்குள் இருக்கின்றன. இவைகளிலுள்ள தளங்கள் எல்லாம் நம்முடைய பீவர் ப்ருக் என்னும் விமானங்களின் அதிக உக்கிரமான வெடிகளால் சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஆகாய மார்க்கமாய் ஏராளமான விமானக்குடைகள் மூலம் துருப்புகள் இறக்குவதென்பது ஸாவதானமான காரியமல்ல.

---

## அனுபந்தம் I.

## வெகுதூரம் சென்று விமானங்களால் தாக்குவதற்கு ஜெர்மனி பயப்படுகிறது.

## ஜெர்மன் விமானப்படைக்கு நிலயங்களின் முக்கியத்வம்.

## கிழக்கு மத்தியதரைக்கடலில் நிலைமை.

(பிரிடிஷ் ஒலிபரப்பில் ஆலிவர் ஸ்டுவர்ட் சமீபத்தில் வெளியிட்டது).

மத்திய கிழக்கில் யுத்த சம்பவங்கள் சிக்கலான நிலைமையை அடைந்து வருகின்றன. க்ரீட் ஜெர்மனி வசமானதிலிருந்தும், ஸிரியாவுக்குள் பிரிடிஷ் பிரெஞ்சுத் துருப்புகள் புகுந்ததினின்றும், இந்தப் பிராந்தியத்தில் இந்த இரண்டு



இடங்களிலிருந்துதான் நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடுமென்று நாம் எதிர்பார்க்கலாம். எல்லாவற்றையும்விட எதிர்காலத்திய சம்பவங்களின் போக்கை நிர்ணயிக்கக் கூடியவைகள் விமான நிலயங்கள் தானென்று சமீபகாலத்தில் ஏராளமான ருஜுக் கிடைத்திருக்கிறது. முன்னணியாகவிருக்கும் விமான நிலயங்களிலிருந்து ஜெர்மானியர்கள் அவர்களுடைய பெரிய எதிர்ப்புகளைத் துவக்குகிறார்கள். நம்மிடமிருக்கும் விமான நிலயங்களுக்குத் தகுந்தபடி பலமாகவோ அல்லது பலஹீனமாகவோ நாம் தற்காப்புச் செய்துவருகிறோம். கவசம்பூண்ட விமானப் படையின் எதிர்ப்பு யுத்தத்தின் பலன்கள், ஒரு குட்டையில் கல்விழுந்த இடத்திலிருந்து அலைகள் பரவுவதுபோல, விமான நிலயங்களிலிருந்து பரவுகின்றன. அது போகப்போக, பலஹீனமாகப் போய்விடுகிறது.

சமீபமாயுள்ள ஒரு பிரதேசத்தில் உபயோகப்படுத்தப்பட்டால் விமானப் படைக்கு அதிக சக்தியுண்டென்று ஜெர்மனியின் தலைவர் நம்பியிருந்தார். ஆகையால் ஜெர்மானியர்கள் நிகழ்த்திய பெரிய எதிர்ப்புகளையெல்லாம், அவைகள் எந்த விமான நிலயங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டனவோ அதைக்கொண்டு வகுப்புப் பிரிவினை செய்துவிடலாம்.

வெகுகாலமாக எதிரி விமான பலத்தின்பேரில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறானென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்கக்கூடும். சமீப காலத்தில்தான் விமான பலத்திற்கு விமான நிலயங்கள் தேவையென்று அவன் நினைக்கிறானென்று ஸ்பஷ்டமாகிவிட்டது. ஒவ்வொரு சண்டையிலும் ஒரே மாதிரியான முறைகள்தான் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றன. விமான நிலயங்களை ஏற்பாடு செய்ய முதலில் முயலுகிறது. பிறகு அவைகளைப் பூர்ணமாக உபயோகப் படுத்தல்.

## முக்கியமான குறைவுகள்.

ஜெர்மனியின் முறைகளைத் தெரிந்துகொண்டு விட்டபடியால் நாம் மத்திய கிழக்குப் பிரதேசத்தை ஆராய்ச்சி செய்து அங்கேயுள்ள ஸன்னிவேசங்கள் எப்படி பாதிக்கப்படுகின்றன என்று கவனிப்போம். க்ரீட் தீவைக் கைப்பற்றியதிலிருந்து கிழக்கு மத்தியதரைக் கடலிலுள்ள நமது கப்பல்களுக்குத் தீங்கு விளைவிக்க ஜெர்மன் விமானங்களுக்கு விசேஷமாக நல்ல ஸ்திதி ஏற்பட்டிருக்கிறதென்பது தெளிவாயிருக்கிறது. க்ரீட்டிலிருந்து நேராக வட ஆபிரிக்காவின் கடற்கரைக்கு ஜெர்மனியின் பாய்ந்து செல்லக்கூடிய வெடி விமானங்கள் செல்லக்கூடும். அந்தப்பக்கம் செல்லும் ஒவ்வொரு கப்பலும் அங்கிருந்து விமானங்களால் தாக்கக்கூடியதாயிருக்கிறது. ஜெர்மன் விமானப் படையுடன் இது வரையில் நன்றாய்ப் போர்புரிந்த நம்முடைய கடற் படை வருங்காலத்தில் இன்னும் தீவிரமாக யுத்தம் செய்யவேண்டும். கிழக்கு மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் கடல், விமான பலத்தின் நிலையில் குறைவு படுத்தக்கூடிய அம்சமானது பாய்ந்து செல்லக்கூடிய வெடி விமானங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறைவுகளைப் பற்றி சொல்லக்கூடியது.

மெதுவாகப் போய்க்கொண்டிருக்கும் லக்ஷியங்களின்பேரில் பாய்ந்து செல்லும் வெடி விமானங்கள் பிரயோஜனமில்லாமல், ஆனால் குறிப்பாக குண்டுகளை வீசக்கூடும். கப்பல்களின்மேல் அடிக்கடி வெடி குண்டுகளை அவைகள் போடக்கூடும். குண்டுகளை அவைகள் ரொம்பவும் தாழ்ந்த பரப்பிலிருந்து போடுவதால் வெடிகுண்டுகள் லக்ஷியங்களின் பேரில் விழும்பொழுது பூரா வேகத்துடனும் விழுகிறதில்லை. இதனால் லக்ஷியங்களைப் பிளப்பதற்கு அவைகளுக்கு வலுக் குறைவு உண்டாகிறது.

இவைகளினின்றும் ஏற்படக்கூடியதென்னவென்றால். ஸமுத்திரத்தில் இந்தப் பிராந்தியத்தில் கிரீட்டிலுள்ள விமான நிலயங்களிலிருந்து ஜெர்மானியர்கள் நம்முடைய வியாபாரக் கப்பல்களையும், கவசம்பூண்டிராத கப்பல்களையும் தங்கள் வெடி விமானங்களால் நாசமாக்கக்கூடும். நம்முடைய கனமாகக் கவசம் பூண்ட கப்பல்களை நாசமாக்குவதற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகமான வசதிகள் ஜெர்மனிக்கு ஏற்படமுடியாது.

ஸமுத்திரத்தில் இதுவரையில் ஏற்பட்டிராத வலுவான பாய்ந்து செல்லும் வெடி விமானங்களின் தாக்குதலிலிருந்தும் தப்பித்துக்கொண்ட இல்லஸ்ட்ரியஸ் என்று பெயர் விளங்கிய விமானம் தாங்கிச் செல்லும் கப்பலின் கதையை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். இல்லஸ்ட்ரியஸ் சேதமடைந்தது, தன்னுடைய சக்தியைக் கொண்டே அது அலெக்ஸாண்ட்ரியாவுக்குச் சென்றது. சராசரி நல்ல வேகத்தோடும் சென்றது.

பாய்ந்து செல்லும் வெடி விமானங்கள், கவசமில்லாத கப்பல்களைத் தாக்கும்பொழுதும், அதிக பயங்கரமானவையென்றும், கவசம்பூண்ட கப்பல்களைத் தாக்குவதில் அவ்வளவு உபயோகமுள்ளதல்லவென்றும் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியங்களுக்கு இந்த சம்பவம் வலுக் கொடுக்கிறது.

நம்முடைய கப்பல் படைக்கு கிரீட்டிலிருக்கும் ஜெர்மன் வெடி விமானங்களிலிருந்தும் அடிக்கடி தொந்தரவுகள் ஏற்படக்கூடும். ஆயினும் நமக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் அநுபவம் நீதி கற்பிக்கக்கூடியதென்றால், இந்தப் பிராந்தியத்தில் ஏற்படக்கூடிய முடிவான எதிர்ப்பை நடத்துவதற்கு அவைகளுக்கு சக்தியில்லையென்று நான் சொல்லவேண்டும்.

## நிலப்போர்.

இப்பொழுது இரண்டாவது பாகமான நிலப்போரைப்பற்றி கவனிப்போம். கிரீட்டைப் பிடித்ததிலிருந்து, எகிப்துக்கு ஸமீபத்தில் 100 அல்லது அதற்கு மேற்பட்ட மைல்களுக்குள்ளாகயிருக்கும் விமான நிலயங்களுக்கு ஜெர்மானியர்கள் வந்துவிட்டார்கள். ஸிரியாவுக்கும், இராக்குக்கும் ஸமீபத்தில் விசேஷமாக அவர்கள் கிட்டவில்லை. ஏனெனில், ரோட்ஸ் தீவுகள் இதாலியர்கள் வசமிருக்கின்றன.



கிரீட்டிலிருந்தும், கிரீஸின் தெற்கு பாகத்திலிருந்தும், ஜெர்மன் வெடி விமானங்கள் அலெக்ஸாண்ட்ரியா போன்ற இடங்களுக்குச் செல்லக்கூடும். அவைகள் டொப்ரூக்கை சுலபமாய் அடைந்துவிடும். விமானங்களின்மூலம் இந்த இடங்களுக்குத் துருப்புகள் கொண்டுபோகப்படலாம்.

ஆனால் இந்த ஸ்தானங்களை நமது சண்டை செய்யும் விமானங்கள் பாதுகாத்து வருகின்றன. நம்முடைய விமானங்கள் சமீபத்திலுள்ள நிலயங்களிலிருந்து சண்டை செய்கின்றன. ஆகையால் எதிரியின் விமானங்கள் வெகு தூரம் பறந்து செல்ல வேண்டியதையும் நம்முடைய விமானங்கள் சிறிது தூரம் செல்ல வேண்டியதையும் கவனித்தால், வெற்றிகரமாகத் தடங்கல் செய்வதற்கு நமக்குத்தான் அதிக வசதிகள் உண்டென்று, நான் ஏற்கனவே சொன்ன விஷயத்தை ருஜுப்பிக்கிறேன்.

ஜெர்மானியர்கள் ஸிரியாவின் சம்பவங்களில் கலந்து கொள்வார்களென்று எல்லோராலும் கருதப்படுகிறது. அப்படியானால், அவர்கள் இது வரையில் செய்தது போல் நடத்தினால், முதல் முதலில் போர் முனைக்கு சமீபத்திலுள்ள விமான நிலயங்களைக் கைப்பற்ற வேண்டும். அதாவது ஸைப்ரஸ் தீவைத் தாக்க வேண்டிய அவசியம் ஏற்படும். கிரீட்டில் ஜெர்மானியர்கள் விமானங்கள் மூலமாய்ச் செய்த படையெடுப்பு வெற்றிகரமாக முடிந்ததென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஸிரியாவில் தலையிட்டுக் கொள்ளுவதற்கு முன்னணியாக ஸைப்ரஸின் பேரில் படையெடுப்பை ஜெர்மானியர்கள் ஆரம்பிக்கலாம்.

இராக்கிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களில் ஜெர்மனிக்கு விசேஷமாக அக்கறை யுண்டென்று அவர்கள் ஏற்கனவே தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு ஸிரியா முக்கியமானது. விமான பலத்தினால் ஸைப்ரஸைப் படையெடுப்பது, இறுதியில் வெற்றிகரமாக முடிந்தாலும், வெகு காலம் பிடிக்கும். இம்மாதிரியான காலதாமதம்தான் நமக்கு உபயோகமானது.

## ஜெர்மனியின் பழக்கம்.

அநேக வருஷங்களாக கிழக்கு மத்யதரைக்கடலுக்குச் செல்லுவதற்கு கிரீட் மிகவும் முக்கியமான திறவுகோல் என்று கருதப்பட்டிருக்கிறது. இதை ஜெர்மானியர்கள் பிடித்துக் கொண்டதிலிருந்து ஸிரியாவிலும் எகிப்திலும் நம்முடைய அலுவல்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டுவிட்டது. ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட விமான வெற்றிகளெல்லாம் சமீப பிராந்தியங்களில் சென்று ஏற்பட்டதென்றும், ஸைப்ரஸை முதல் முதலில் பிடித்துக் கொள்ளாமல் ஸிரியாவில் தலையிட்டுக் கொள்ளவேண்டுமானால், அவர்கள் தங்கள் பழக்கங்களை மாற்றி வெகுதூரம் சென்று சண்டை செய்ய வேண்டுமென்பதும் உண்மையான விஷயம். ராணுவ விமானப்படைக்கு பறந்து செல்ல வேண்டிய தூரத்தின் வேறுபாடுகளினின்றும் என்ன பயன்கள் உண்டாகுமென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

முதலாவதாக, அதிக உபயோகமாக வேலை செய்யக்கூடிய வகுப்பைச் சேர்ந்த சண்டை விமானங்கள் தங்களுடைய நிலயங்களுக்கு சமீபத்தில் அதாவது 150 மைல்களுக்குள்ளாகத்தான் பிரயோஜனமுள்ளதாக சண்டை போடக்கூடும். இரண்டாவதாக, வெடி விமானங்களும், துருப்புகள் ஏற்றிச்செல்லும் விமானங்களும் நிலயங்களுக்கு சமீபத்தில் வேலை செய்யும் பொழுதுதான் பெரிய சுமைகளை ஏற்றிச்செல்லக்கூடும். ஒரு காலன் பெட்ரோல் 7½ பவுண்டு இடைமானமுள்ளது. 400 அல்லது 500 மைல்கள் சென்று சண்டை செய்யவேண்டுமானால் அதற்கு வேண்டிய பெட்ரோலை விமானத்தில் சேமித்துவைக்கவேண்டும். இது விமானத்தின் பளுவை பெரும்பாலும் அதிகரித்து விடுமாதலால் வெடிகுண்டுகளும், துருப்புகளும் ஏற்றிச்செல்லுவதற்கு அதில் வசதிக் குறைவு ஏற்படுகிறது.

இந்த யுத்தத்தில் வெகு தூரம் சென்று யுத்தம் செய்ததென்பது, எனக்கு ஞாபகமிருக்கிற வரையில், பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் போலந்தின் தென்மேற்கு பாகத்திற்குச் சென்று திரும்பி வந்ததுதான். அவைகள் சுமாராக 1750 மைல்கள் சென்றன. அதாவது மணிக்கு சராசரி 875 மைல்கள் வீதம் பறந்திருக்கவேண்டும். அவைகளில் அதிக கனமான சாமான்கள் ஏற்றப்படவில்லை. அவைகளின் வேலை துண்டுப் பிரசுரங்கள் போடுவதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஜெர்மானியர்கள் இவ்வளவு தூரம் பறந்து செல்ல முயலவேயில்லை. அவர்கள் இந்த ஏற்பாட்டையே எதிர்க்கிறார்கள். அவர்கள் சமீபங்களிலுள்ள தளங்களை அடைவதற்கும் ஏராளமான அளவில் விமானத் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு முன் பொறுத்துக்கொண்டிருப்பதற்கும் பிரியப்படுகிறார்கள்.

## சமீப தூரத்தில் செய்யக்கூடிய தந்திரங்கள்.

பிரிட்டனில் ஏற்பட்ட வெடி விமானத் தாக்குதல்களுக்கு முன், ஆக்கிரமிப்பு பிரெஞ்சு தேசக் கடற்கரையில் தளங்கள் ஏற்படும் வரை ஜெர்மானியர்கள் பெரிய விமானப்படை வெடிப்புகளை ஆரம்பிக்கவில்லை. பாரிஸ்ஸுக்கு சமீபத்தில் வரும் வரையில் அங்கேயும் பெரிய வெடி விமானத் தாக்குதலை அவர்கள் ஆரம்பிக்கவில்லை. கிரீஸிலும் அதற்கு சமீபத்தில் தளங்கள் ஏற்படுத்தி அங்கே நிலை நாட்டிக்கொள்ளும் வரையில் ஜெர்மானியர்கள் தாக்கவில்லை.

ஆகையால் கிழக்கு மத்யதரைக்கடல் பிரதேசத்தில் நம்முடைய நிலைமையைப் பற்றி முடிவான அபிப்பிராயமென்னவென்றால், சைப்ரஸ் போன்ற தீவை கைப்பற்றுதல் போன்ற சில புதிய லாபங்களை ஜெர்மானியர்கள் அடையாதபோனால் எகிப்திலாவது ஸிரியாவிலாவது நமக்கு பாதமாக சமீப தூரத்திலிருந்து அடிக்கும் விமான உபாயங்களை அவர்கள் பிரயோகிக்க முடியாது. அவர்களிடம் வெகு தூரம் சென்று சண்டை செய்யக்கூடிய விமானங்களிருக்கின்றன. தூரதேசம் சென்று யுத்தம் செய்யும் உபாயங்களை ஜெர்மனி ஏற்றுக்கொள்ளமாட்டாதென்பதற்கு ஒரு முகாந்திரமுமில்லை. ஜெர்மானியர்கள் பூர்ணமான நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு யந்திரத்தோடு கூடிய பாய்ந்து செல்லும் வெடி விமானங்கள் அப்பொழுது வேலைசெய்ய முடியாது.



போலந்திலும், ஹாலந்திலும், பிரான்ஸிலும், கிரீஸிலும், கிரீட்டிலும் ஜெர்மானியர்கள் ஏராளமாக பிரயோகித்த ஜங்கர் 87 என்னும் வெடி விமானம் சிறிது தூரம் சென்று அடிக்கக்கூடிய விமான வகுப்பைச் சேர்ந்தது. வெகு தூரத்திலிருக்கும் லக்ஷியத்தை அடிக்க இது பிரயோஜனப்படும் படியாக உபயோகிக்க முடியாது. ஜங்கர் 88 என்பதும் ஒரு பாய்ந்து செல்லக்கூடிய வெடி விமானம்தான். அதில் இரண்டு யந்திரங்களுள்ளது, அதிகதூரம் செல்லக்கூடியது. சண்டைகளில் ஒரு இஞ்சினுள்ள விமானங்களை ஏராளமாக உபயோகிப்பதுபோல் இரண்டு இஞ்சினுள்ள விமானங்களை உபயோகப்படுத்தும் உத்தேசமுள்ளவர்களாக ஜெர்மானியர்கள் காணப்படவில்லை.

கிரீஸிலும் கிரீட்டிலிருந்தும் கிடைத்த லாபங்களிலிருந்தும் கிழக்கு மத்திய தரைக்கடலிலுள்ள நம்முடைய கப்பல்களைத் தாக்குவதற்கு ஜெர்மனிக்கு ஏராளமான வசதிகள் ஏற்பட்டு விட்டன. அலெக்ஸாண்டிரியா போன்ற தூரதேசத்திலுள்ள பிரதேசங்களுக்கும் சென்று இரவில் குண்டுகள் வீசுவதற்கும் சாதகம் ஏற்பட்டு விட்டது. ஆகிலும் சமீப தூரத்திலிருந்து கிளம்பி விமான தந்திரங்களை அடிக்கடி உபயோகிக்க ஜெர்மனிக்கு வசதி ஏற்படவில்லை.

ஜெர்மானியர்கள் தங்களுடைய பலமான பாய்ந்து செல்லும் வெடிவிமானங்களை உபயோகப்படுத்தக்கூடிய சமீப லக்ஷியம் டொப்ருக்தான். அதிலிருந்து 250 மைல்களுக்குள்ளாக இருக்கும் விமான தளங்களை ஜெர்மானியர்கள் பிடித்திருக்கிறார்கள். இந்த தளங்களை தாக்குவதற்கு உபயோகிக்கலாம். மற்ற இடங்களில் ஏற்பட்டது போல இவ்விடத்தில், இராக்காலத்தைத் தவிர, மற்ற சமயங்களில் அதிகலாபம் ஏற்படாது.

## லாபகரமான அமைப்பு.

டொப்ருக் நம்முடைய சண்டை விமானங்களின் பாதுகாப்பிலிருந்து வருகிறது. எகிப்திலிருக்கும் தளங்களிலிருந்து நமது சண்டை விமானங்கள் யுத்தம் செய்யக்கூடும். அங்கிருக்கும் எதிரியின் வெடி விமானங்களையும் தாக்கக் கூடும். நாம் நமது நாட்டில் சுட்டுவீழ்த்துவதுபோல் அவ்விடத்தில் அதிகமான சேதங்கள் விளைவிக்க எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் நிச்சயமாய் நம்முடைய சண்டை விமானங்கள் எதிரிகளின் வெடி விமானங்களைத் தாக்குவதோடு சத்துருவின் அணிவகுப்புகளையும் சின்னபின்னப்படுத்திவிடும்.

என்னுடைய அபிப்பிராயப்படி கிழக்கு மத்தியதரைப்பிராந்தியத்தின் நிலைமையைப்பற்றிய சுருக்கம் இதுதான். ஜெர்மனி சிறிது தூரம் சென்று தாக்கமுடியாது. தூரதேசம் சென்று வேலை செய்ய ஜெர்மனிக்கு அபிப்பிராயமிருக்கிறதாகத் தெரியவில்லை. இதிலின்றும் ஏற்படக்கூடியது யாதெனில் ஜெர்மானியர்கள் தங்களுடைய முறைகளை மாற்றி வெகு தூரம்சென்று சண்டை போடவேணும் அல்லது ஸிரியாவில் நடக்கும் சண்டையில் முக்கியமான பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அதற்கு மத்தியில் ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் அதிக தூரம் சென்று ஜெர்மானியர்கள்

அடிக்கக்கூடுமென்பதை நான் மறுக்கவில்லை. 150 மைல் தூரம் கொண்டு போகப்பட்டபடி 400 மைல்களுக்கப்பால் இருக்கும் இடங்களுக்கு விமானங்களில் குருப்புகள் ஏன் ஏற்றிச் செல்லக்கூடாதென்று கேட்கிறேன். ஆனால் இந்த ஏற்பாடு கொஞ்சம் கஷ்டமானது. கூடுமானவரையில் இதை விலக்கி விடுவதற்குத்தான் ஜெர்மானியர்கள் பிரியப்படுகிறார்கள். இப்பொழுதுதான், எதிர்ப்புகளை ஆரம்பிப்பதற்குமுன் வெகு தூரம் சென்று சண்டை போட வேண்டிய ஒரு சத்துருவை எதிர்க்கும்படியான சந்தர்ப்பம் நமது விமானப் படைக்கு வாய்த்திருக்கிறது. நாம் கொஞ்சகாலமாக அடைந்திருந்த ஸ்திதியைவிட இது லாபகரமான நிலைமை. இந்த அவகாசத்தை நாம் பிரயோஜனப்படும் படியான முறையில் உபயோகித்தல் வேண்டும்.

---

## அனுபந்தம் II.

## விமான யுத்தத்தில் நூதன முறைகள்.
## இராக்கால எதிர்ப்பு அதிகரித்தல்.
## பிரிடிஷாரின் புதிய விமானங்களின் மதிப்புரை.

[பிரிடிஷ் ஒலிபரப்பில் ஆலிவர் ஸ்டுவர்ட் பேசுகிறார்].

நமது அரசாங்க நிர்வாகத்திலுள்ள மந்திரிகளில் அநேகர், வருங்காலத்தில் நமது நாட்டின் பேரில் ஏராளமான, கடுமையான வெடி குண்டுகளின் தாக்குதல்கள் ஏற்படக்கூடுமென்று எச்சரித்திருக்கிறார்கள். அவைகளைத் தடுப்பதற்கு ஆகாயத்திலும் தரையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இந்த வெடி குண்டுகளின் இரண்டாவது யுத்தம் ரொம்பவும் கடுமையாக நடக்கப்போகிறது. இருதரப்பிலும் வெடிகுண்டு விமானங்கள் ஏராளமாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அதிகமான விமானங்களும் உபயோகப்படுத்தப் படும். ஒவ்வொரு விமானத்திலும் ஏராளமான வெடிகுண்டுகள் அமைக்கப் பட்டுமிருக்கும். ஏற்கனவே இருந்ததைவிட புதிதாக ஏற்படக்கூடும் எதிர்ப்புகள் 100-க்கு 50 மடங்கு அதிகமாகயிருக்குமா, அல்லது 100 மடங்கு பலமாகயிருக்குமா என்று ஒருவரும் சொல்லமுடியாது. ஆகிலும் எதிர்ப்புகள் நிச்சயமாக பலமாய்த் தானிருக்கக்கூடும்.

ஆகையால் இந்தப் புதிய சண்டையில் பொதுஜன தற்காப்பு சேவையும், பொது ஜனங்களும், இருபக்கத்திலுமுள்ள விமானப்படைகளும், தரை யுத்தத்தில் முன்னணித் துருப்புகள், சண்டை போடுவதுபோலக் கலந்து கொள்ள வேண்டும்.

நடைபெறப்போகும் யுத்தத்தில் நமக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பற்றிச் சொல்லப்போகிறேன். யுத்தப்போக்கில் முக்கியமான மாறுதல்கள் ஏற்படுத்தாவிட்டால் யுத்தத்தை முடிக்க முடியாதென்று நான் நினைக்கிறேன்.



யுத்தகளத்தில் பிரிடனும் ஜெர்மனியும் ஒன்றோடொன்று மோதி சண்டை செய்ய முடியால் தடைப்படும்வரையில், விமான எதிர்ப்பினால் ஒன்றை மற்றொன்று அடைவதற்குத் தங்களால் இயன்ற அளவு இருதரப்பாரும் முயலுவார்கள்.

### தற்காப்பு.

முதல் முதலாக தற்காப்பைப்பற்றி கவனிப்போம். இரவில் சண்டை போடும் விமானப்படைகளும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், விமான எதிர்ப்புக்கு வேண்டிய முன் ஜாக்கிரதை செய்யும் வேலைக்காரர்களும், நெருப்பு அணைக்கும் சேவையும் கொண்ட ஒரு தற்காப்பு இருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றும் முக்கியமானவை. சமீப காலத்தில் இரவில் சண்டை போடும் விமானங்களின் சக்தியை அதிகரித்து விட்டது. முக்கியமாக, இவைகள் சத்துருக்களைக் கண்டு பிடிப்பதில் அதிக சாமர்த்தியமடைந்துவிட்டன. இது, கண்டு பிடிப்பதற்காக உபயோகப்படுத்தப்படும் யந்திரங்களின் ஆதிக்கத்தைப் பொருத்ததாகும். இந்த தந்திரம் தான் இந்த பிரச்னையின் முக்கியமான பாகமாகக் கருதப்படுகிறது.

சமீப காலத்தில் இந்தக் கருவிகளை அபிவிருத்தி செய்வதில் உபயோகமுள்ள வகையில் அநேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஒரு வருஷத்திற்கு முந்தி இருந்ததைவிட இப்பொழுது இரவில் சண்டை செய்யும் விமானிகள் சத்துருக்களை சுலபமாகக் கண்டுபிடிக்கக்கூடும். இந்த முறைகளில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது என்பது, இராக்காலங்களில் அதிகமானத் தடங்கல்கள் ஏற்படுவதினின்றும் வெளியாகுகிறது.

மே மாதத்தில் இரவில் இங்கிலாந்தின் கடற்கரையோரங்களில் எதிரிகளின் 144 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. இதே பிராந்தியத்தில் பகலில் ஏற்பட்ட சேதங்களைவிட இரவில் ஏற்பட்ட சேதங்கள் இரண்டு மடங்குள்ளவை. பகலில் எதிரியின் விமானத்தைச் சுட்டுவீழ்த்துவதில் 100-க்கு 60, விமானத்தைக் கண்டுபிடிப்பதும் 100-க்கு 40, விமானத்தை வெற்றிகரமாகத் தாக்குதலும் தான். இரவிலோவென்றால், 100-க்கு 95 பங்கு, கண்டுபிடிப்பதும் 100-க்கு 5 பாகம், எதிர்ப்பதுமாகயிருக்கும்.

இரவில் சண்டைபோடும் விமானம் எதிரி விமானத்தைக் கண்டுபிடித்து விட்டால், அதைச் சுட்டு வீழ்த்துவதில் அதற்குக் கொஞ்சமேனும் சிரமமில்லை. ஆனால் கண்டுபிடிப்பதுதான் மிகவும் சிரமசாத்தியமானது. இராக்கொள்ளை விமானங்களை எதிர்ப்பதில் நமக்கு இதுவரையில் உண்டான தொந்தரவுகளுக்கெல்லாம் இதுதான் முக்கிய காரணம்.

நம்முடைய விமானங்கள், இரவில் பார்வையானது மிகவும் நன்றாயிருந்தாலொழிய, எதிரி விமானங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்விஷயத்தில் அநேக கஷ்டங்களிருக்கின்றன. இவைகளைப் பகிரங்கமாகச் சர்ச்சை செய்யவில்லை. உதாரணமாக, விமானத்தையும், அதைச் சுற்றியிருக்கும் வெளிச்சத்தையும் பிரித்துக்கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டது.

அதிக சக்திவாய்ந்த விமானத்தின் யந்திரத்தைச் சுற்றிலும் exhaust வளையம் ஒன்று போடப்பட்டிருக்கிறது. இது இரவில் கொஞ்சமாக வெளிச்சத்தைக் கொடுக்கும். ஆனால், விமானியானவன் இரவில் ஆகாயத்தை எட்டிப் பார்த்து மற்றொரு விமானத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமானால் அது அவனுக்குத் தொந்தரவு உண்டுபண்ணும். ஆகையால் அதிக இருளுள்ள இரவில் கொஞ்சம் கூட வெளிச்சமன்னியில் exhaust-ஐ வைத்து அமைப்பதற்கு அதிக சக்திவாய்ந்த விமானங்களைத் திருத்தியமைக்கவேண்டிய முறைகளைத் தேடவேண்டியிருக்கிறது.

இது ஒருவகைக்கஷ்டம். இன்னும் அநேகங்களிருக்கின்றன. கடைசியாக எதிரிகளின் விமானங்களிருக்கும் ஸ்தானங்களை நிர்ணயிப்பதிலும், அவைகளை பின்பற்றிச் செல்லுவதிலும் முக்கியமான சிரமங்கள் ஏற்படக்கூடும்.

இரவில் சத்துருவின் வெடிகுண்டு விமானங்கள் குறிப்பிட்ட உயரத்தில் நேரான வழியாகச் செல்லுகிறதில்லை. விமான எதிர்ப்பு பீரங்கிகளையும், சண்டை விமானங்களையும் தாண்டிச் சென்றால் தங்களுக்கு அனுகூலமாகயிருக்குமென்று அவர்கள் கருதினால், தங்களுடைய வழிகளையும், உயரத்தையும் அடிக்கடி மாற்றி விடுவார்கள்; பின்னும் 20,000 அடிகள் உயரத்திலிருந்து 6,000ம் அடிக்குக் கீழே பறந்தும் செல்லுவார்கள்.

இப்பொழுதுதான் முக்கியமான சிரமம் ஏற்படுகிறது. அப்பொழுது நமது விமானங்கள் எதிரி விமானத்தைச் சரியானபடி தாக்கும்படி செய்யப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துரிதமாக வேலை செய்யும்படி செய்யவேண்டும். சத்துருவின் வெடிகுண்டு விமானங்களின் வேகம் வேறுபட்டது. இரவில் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படும் ஜங்கர்ஸ் 88 என்னும் விமானங்கள் சாதாரண விமானங்களைவிட அதிக வேகமுள்ளவைகள். இத்துடன் மெஸ்ஸர்ஸ்மிட் 110 என்ற சண்டை விமானமும் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது.

இரவில் எதிரிகள் உபயோகிக்கக்கூடிய அதிவேகமுள்ள விமானங்களைத் தாக்குவதற்கு நம்முடைய தற்காப்பு ஏற்பாடுகள் வேகமாக வேலை செய்ய வேண்டும். மெஸ்ஸர்ஸ்மிட் 110-ன் ஜாஸ்திவேகம் மணிக்கு 350 மைல் என்று வைத்துக்கொண்டு, மணிக்கு 300 மைல் வீதம் அது சஞ்சரிக்கிறதென்று வைத்துக்கொண்டால், ஒவ்வொரு பாகமும் எவ்வளவு வேகமாக வேலை செய்யவேண்டுமென்பதை அறியலாம்.

கடற்கரையைத்தாண்டி லண்டனில் போய் வெடிகுண்டுகள் போடும் வரையில் சுமார் 20 நிமிஷங்களாகும். ஆகையால் இருபது நிமிஷத்திற்குள்ளாக நம்முடைய தற்காப்புகள் எதிரி விமானங்களைக் கண்டுபிடிக்கவேண்டும்; உயரத்தை அளவிடவேண்டும்; மார்க்கத்தை நிர்ணயிக்கவேண்டும். இந்தத் தகவல்களை ஒரு மத்திய ஆபீஸுக்கு அனுப்பவேண்டும். அங்கே வேலை செய்யும் உத்தியோகஸ்தர் ஏற்பாடுகளைச்செய்து எதிரிகளின் விமானங்களைத் தாக்குவதற்கு எந்த இடத்திற்கு விமானங்களை அனுப்பலாமென்றும் தீர்மானிக்க வேண்டும்.



பிறகு உத்தரவுகள் விமானிகளுக்கும் விமானங்களில் வேலை செய்யும் ஆள்களுக்கும் பிறப்பிக்கப்படவேண்டும். அவர்கள் விமானங்களில் ஏறிக்கொண்டு, ஒன்று அல்லது இரண்டு யந்திரங்களைப் பூட்டி, புறப்பட்டு உயரக்கிளம்பவேண்டும். ஒரு ஹாக்கர் ஹரிகேன் என்னும் விமானம் 15,000 அடி உயரம் செல்லுவதற்கு $6\frac{1}{3}$ நிமிஷங்கள் பிடிக்கும். டிபையண்ட், ஹாவாக் போன்ற சண்டை விமானங்களில் அநேகம் சிப்பந்திகளிருப்பதால் உயரச் செல்ல அதிகநேரம் பிடிக்கும்.

ஆகையால் நம்முடைய விமானங்கள் புறப்பட்டு பதினைந்து நிமிஷத்துக்குள்ளாக எதிரி விமானங்களைக் கண்டு பிடிக்கக்கூடிய சரியான உயரத்தை அடைவதென்பது அதிக வேகத்தோடு ஒன்று சேர்ந்து வேலை செய்வது என்னும் அம்சத்தில் ஒரு அரியவேலை செய்ததாக ஆகும். இதே சமயத்தில் எதிரியும் ஒரு மணிக்கு 200 அல்லது 300 மைல் வேகத்துடன் பறந்து செல்லுகிறானென்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

சத்துரு விமானம் மெஸ்ஸர்ஸ்மிட் 110 ஆக யிருந்து, நம்முடைய சண்டை விமானங்கள் அதைத் துரத்துவதாகவும் அந்த விமானி அறிந்து விட்டால் அவன் அடைப்பைத் திறந்துவிட்டு மணிக்கு 350 மைல் வேகமாகச் செல்லக் கூடும். ஆகையால் சதாகாலமும் அவனுடைய மார்க்கத்தைக் கவனித்து, இடைவிடாது தகவல்கள் அனுப்பிவிக்கவேண்டும். இந்தத் தகவல்கள் மத்திய ஆபீஸுக்குக் கிடைத்து அங்கிருந்து விமானங்களின் வேலைக்காரர்களுக்குக் கிட்ட வேண்டும்.

இதுவரையிலிருந்ததைவிட இப்பொழுது நம்முடைய தற்காப்புகள் நன்றாயிருக்கின்றன. மே௴ 10-ம் தேதியன்று எதிரியின் 33 விமானங்களை சுட்டுத் தள்ளியதென்பது இதுவரையில் ஏற்படாத ஒரு பெரிய வெற்றி. அது வெற்றிகளைப்பற்றிப் போடப்படும் கோடு சாவதானமாக உன்னத ஸ்திதியை அடைந்ததற்கு அடையாளம். இதிலிருந்து நம்முடைய தற்காப்பு முறைகள் விருத்தியடைந்து வருகின்றன என்பது வெளியாகுகிறது.

சத்துருவின் விமான எதிர்ப்புகள் வலுவடைந்து வரும் பக்ஷத்தில், நம்முடைய சண்டை விமானங்கள் சுட்டு வீழ்த்தும் எதிரி விமானங்களின் கணக்குகள் அதிகரிக்கக்கூடும். இகை விறு விமான எதிர்ப்பு பீரங்கிகளும் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. சண்டை விமானங்கள் செய்யும் வேலைகளிலிருந்து பீரங்கிகளுக்கு பிரயோஜனம் ஏற்படுகிறது. பீரங்கிகள் செய்யும் வேலைகளிலிருந்து சண்டை விமானங்களுக்கும் லாபம் ஏற்படுகிறது.

ஜெர்மன் விமானப் படைக்கு அநேக தடங்கல்கள் உண்டாகுகின்றன. பயித்தியக்காரன் தன் தலையை சுவற்றில் கொண்டுபோய் மோதுவதுபோல் ஜெர்மனியின் விமான எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. ஆகிலும் விமானங்களின் நஷ்டங்களின் எண்ணிக்கை அதிகமாகும்பொழுது எதிர்ப்பை ஜெர்மனி நிறுத்தி விடுகிறதென்றும் நமக்குப் புலப்படுகிறது.

## நம்முடைய எதிர்ப்புத் தாக்குதல்.

எதிர்ப்புத் தாக்குதலைப்பற்றி இங்கு சொல்லுவோம். நம்மைப்போல ஜெர்மனியின் தற்காப்புகளும் மேன்மையடைந்துவிட்டன. நம்முடைய இரவில் செல்லும் வெடிவிமானங்கள் அதிக வலுக்கொண்ட பீரங்கிகளின் எதிர்ப்பை அநுபவிக்க வேண்டும். இவைகளை ஜெர்மன் சண்டை விமானங்கள் ஏராளமாகத் தாக்குகின்றன.

ஆனால் புதுதினுசான அநேக வெடி விமானங்களை நாம் உற்பத்திசெய்து வருகிறோம். ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு முன் அரசாங்கப் பிரசுரங்களில் இந்த சமாசாரம் வெளியிடப்பட்டது. முதல் முதலாக ஸ்டர்லிங் என்னும் ஒரு விமானத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதற்குப் பிறகு ஆவ்ரோ மாஞ்சஸ்டர், ஹாண்ட்லீ பேஜ் ஹாலிபாக்ஸ் என்னும் விமானங்களின் பெயரும் வெளிவந்தன. இவையெல்லாம் பெரிய விமானங்கள்.

இரவில் ஒருவகையில் இவைகள் லாயக்கில்லாதவைகள். பெரிய விமானமாயிருந்தால் பீரங்கியின் குண்டுகளுக்குச் சுலபமான லக்ஷியமாக ஆகிவிடுகின்றன. சண்டை போடும்பொழுது சுலபமாக அசைந்து செல்லக்கூடியவையல்ல.

அதிர்ஷ்டவசமாக, இந்தப் புதிய விமானங்களெல்லாம் பெரியதாகமட்டுமில்லாமல் வேகமாகவும் செல்லக்கூடியவை. இவைகளின் வேகம் வெல்லிங்டன், விட்லீ விமானங்களைவிட அதிகமானது.

தற்காப்பு ஏற்பாடுகளைப் பற்றிப் பேசும்பொழுது எவ்வளவு வேகமாகச் சண்டை விமானம் பறந்து சென்றாலும் அதிவேகமாகச் செல்லும் எதிரியின் வெடி விமானத்தைத் தாக்குவதென்பது சிரமமானதென்று நான் சொன்னேன். ஆகையால் நம்முடைய புது வெடி விமானங்களின் வேகம் அதிகரித்திருப்பது அவைகளுக்கு ஒரு வகையில் பாதுகாப்புக்கு சாதகமாயிருக்கிறது. இருளிருக்கும் சமயங்களைப் பயன் படும் படியாகச் செய்வதற்கும் நமக்கு வசதி ஏற்படும்.

நமது வெடி விமானங்களின் விமானிகள் முக்கியமான லக்ஷியங்களைப் போய்த் தாக்கவேண்டுமானால் ஜெர்மன் விமானிகளைக் காட்டிலும் அதிகதூரம் பறந்து செல்லவேண்டியிருக்கிறது. பெர்லினுக்கு சமீபத்திலிருக்கும் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யும் சாலையைத் தாக்கவேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமானால், கூடியவரையில் அது நீடித்ததாக இருக்கும்படி தயார் செய்து கொள்ளவேண்டும். ஆகாயத்திலிருந்து வெடி குண்டுகள் போடுவதானது நீடித்த காலம் ஏற்பட்டால் இரட்டிப்பு மடங்கு பிரயோஜனமுள்ளதாக ஆகும். ஆகையால் இம்மாதிரியான எதிர்ப்புகளை ஆரம்பிக்கவேண்டுமானால் வெடிகுண்டு விமானங்களின் இலாகாவானது முடிந்தவரையில் வெகு நேரம் லக்ஷியத்தின் பேரில் விமானங்கள் வரிசை வரிசையாகப் பறந்து செல்லவேண்டிய ஏற்பாட்டைச் செய்துவிடுவார்கள்.



இந்தக் காலத்தின் அளவு விமானங்களின் வேகத்திலிருந்து நிர்ணயிக்கப்பட வேண்டும். சத்துருவைக் காட்டிலும், நமக்கு இரவில் வெடிகுண்டு விமானங்களின் வேகம்தான் அவசியமானது.

அதிக கனமுள்ளதும் மிகவும் பெரிதுமான வெடிகுண்டுகளைக் கொண்டு போக சக்தி வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். அவைகளை வேகமாகவும் எடுத்துச் செல்லவேண்டுமென்றும் ஆசைப்படுகிறோம். இரவில் வெடிகுண்டுகள் போடுவது மெதுவானதும் சோம்பேரித்தனமான ஒரு வேலையென்றும் பகலில் விமானப் போரில் வேகம்தான் முக்கியமானதென்றும் அபிப்பிராயப்பட்டதெல்லாம் பழங்கதையாக மாறிவிட்டன.

இரவில் வெடிகுண்டு வீசுவதென்பது அதிவேகமான விமானங்களைக் கொண்டுதான் செய்யப்படவேண்டும். எதிர்ப்பு எவ்வளவுகாலம் நடத்தக்கூடுமென்பதும் எதிர்ப்பில் கலந்துகொள்ளும் விமானங்களின் பாதுகாப்பும் வேகத்தை அவலம்பித்திருக்கிறது. வேகத்துக்கு ஒரு வேறுபாடு உண்டு. அதாவது உயரமென்பது.

அமெரிக்காவின் போயிங் என்ற புதிய நான்கு யந்திரங்களுள்ள வெடி விமானங்கள் கொஞ்சகாலம் வேலை செய்த பிறகுதான், வேகத்துக்குப் பதிலாகவும் வேகத்துக்கு ஒத்தாசையாகவும் உயரச் செல்வது எவ்வளவு பிரயோஜனப் படுமென்பதை நாம் அறியக்கூடும். யுத்தப் போக்கில் எதிர்பாராதவண்ணம் முற்றிலும் நூதனமான ஸம்பவங்கள் ஏற்பட்டாலொழிய, சமீப காலத்தில் இரண்டு தரப்பிலும் ஏராளமான சேதங்கள் ஏற்படக்கூடும். சதாகாலமும் பிரிடனில் விமான எதிர்ப்பு ஏற்படக்கூடும். ஜெர்மனியிலும் இதே மாதிரித்தான்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 3—7—41-லிருந்து 9—7—41-வரை.

### ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

ருஷ்யாவின்மேல் தொடுத்திருக்கும் அக்கிரமப்போரானது இப்பொழுது மஹாயுத்தமாக ஆகிக்கொண்டுவருகிறது. போர்முனையோ அபாரமான விஸ்தீரணமுள்ளது: அதில் கைகலக்கும் சைனியங்களுக்கும், யந்திரங்களுக்கும் கணக்கிட முடியாது. ஜெர்மானியர் தங்களுக்குள்ள சைனியங்களையெல்லாம், யந்திரசாதனங்களோடு போர்முனைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ருஷ்யர்களும் அதே மாதிரி ஏராளமாகப் படையைத் திரட்டியிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் யந்திர சாதனப் படைகளைக்கொண்டு முன்னேறி, பிறகு காலாட்படைகளைக்கொண்டு வளைத்து எதிரியைப் பிடித்துக்கொள்ளப்பார்க்கிறார்கள்: ருஷ்யர்கள், ஆழமாக அணிவகுத்துத் தடுத்துக்கொள்ளுவதோடு, தாமும் திருப்பி யெதிர்த்து ஜயமடைய யத்தனிக்கிறார்கள்.

**ஸ்டாலின் அரண்.**—முதல் இரண்டு வாரங்களில் சிறு சண்டைகள் எல்லைப் புறத்தில் நடந்தன. இப்பொழுது இருதிறத்தாரும் ஸ்டாலின் அரணில் எதிர்த்து நிற்கிறார்கள். இந்த அரண் மாஜிநோ அரணைப்போலில்லாமல் பூமியின் அமைப்பை அனுசரித்துக் கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே உள் நாடுகளிலிருந்து ஏராளமான ருஷ்யப்படைகள் வந்திருக்கின்றன. சமீபத்தில் கிடைத்த ஒரு ஜெர்மன் அறிக்கைப்படி இங்கே ஜெர்மனி தடைபட்டிருக்கிறது. ஸ்டாலின் அரணின் பலத்தையும் ஜெர்மானியர் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

**ருஷ்ய தந்திரங்கள்.**—ருஷ்ய அறிக்கை இலாகாவுக்குத் தலைவரான எம். லொஸோவ்ஸ்கி சொல்லுகிறபடி சற்றுக் களைப்பாறக்கூட இடங்கொடுக்காது ஜெர்மானியர் துரத்தியடிக்கப்படுகிறார்கள். எங்கேயாவது ஒரு ஜெர்மன் துருப்பு சற்று தங்கினால் உடனே அது எதிர்க்கப்படுகிறது. ஜெர்மானியர் பிடித்த இடங்களில் சிறு ருஷ்ய சில்லரைப் படைகள் வந்து வம்பு செய்கின்றன. 'எதிரிக்கு உபயோகப்படக்கூடிய தானியம், பெட்ரோல் எல்லாவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்: முடியாவிட்டால், அவைகளை அழித்துவிடவேண்டும்' என்று ஸ்டாலின் போட்டிருக்கும் உத்தரவுப்படி ஜெர்மானியர் பிடித்துக்கொண்டிருக்கும் இடங்களில் குடியானவர்கள் வைக்கோல் போர்களையும், வளரும் கோதுமைப் பயிர்களையும், காய்கறி, பழங்களையும் அழித்துவருகிறார்கள். ருஷ்ய சேனாதிபதி டிமோஷென்கோ ஏராளமான படையை யூக்ரேனில் திரட்டியிருக்கிறார். கடைசி வரையில் சண்டை செய்யவேண்டுமென்றும், ஒரு சமயம் பின்வாங்க நேரிட்டால், அங்குள்ள களஞ்சியங்கள், கதிர்கள், தொழிற்சாலைகள் இவற்றையெல்லாம் அழித்துவிடவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். பின்லாண்டில் வைமா பள்ளத்தாக்கிலிருக்கும் சக்தி உற்பத்தி சாதனங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. நெபோலியன் தோற்றபடி ஹிட்லரின் தோல்வியும் பஞ்சத்தால் ஏற்படப் போகிறது. வயல்களெல்லாம், எதிரிக்கு உணவில்லாது பொசுக்கப்படும்.

**முன்னேற்றம் அசந்துபோய்க்கொண்டிருக்கிறது.**—சண்டை துவக்கிய முதல் வாரத்தில் ஜெர்மன் ரேடியோக்கள் செய்த ஆர்ப்பாட்டமிப்பொழுது காணோம். இப்பொழுது வரும் செய்திகள் புலம்பலாயும், மறைபொருளாயும் இருக்கின்றன. சில சமயங்களில் செய்தியே கிடையாது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, ஆரம்பத்தில் ஏற்பட்ட ஜயம் திடீரென்று எதிர்த்ததனால் கிடைத்தது. அப்பொழுது எல்லைப்புறத்திலிருந்த சில சிறு ருஷ்யப்படைகள் தான் எதிர்த்தன. இரண்டாவது, சற்று தூரம் முன்னேறிய பிறகு, ஜெர்மன் டாங்கிகள் பழுதுபட்டு, சீர்பார்க்கும் நிலைமையிலிருக்கின்றன. மூன்று, ருஷ்ய ரெயில் பாதைகள் அகலமாயிருப்பதால் ஜெர்மனியிலிருந்து தளவாடங்கள் வர தடைப்படுகின்றன. பிடித்த இடங்களிலெல்லாம் சிறு ருஷ்ய சைனியங்கள் பின் வந்து தாக்கிக்கொண்டேயிருக்கின்றன. இதோடு தரை அமைப்பு ஜெர்மன் முன்னேற்றத்துக்குப் பாதகமாயிருக்கிறது. ருஷ்யப்படைகளோ அபாரம்; நன்கு பயிற்சியானவை; யந்திர பலமதிகம்; ஜயிக்கவேண்டுமென்ற பூர்ண தீர்மானத்தோடு மகத்தான ருஷ்ய தேசம் போரிலிறங்கிவிட்டது.



**ஜெர்மானியர்கள் சொல்லும் பொய்.**—பின்னர்கள் ஆலண்டை பிடித்துவிட்டதாகவும், ருமேனியர்கள் ஸெர்னாடி, டானின் நகரங்களை கைப்பற்றியதாகவும், ஹங்கேரியர்கள் கார்பேதியனைத் தாண்டிவிட்டதாகவும், ஜெர்மானியர் ரீகா, மின்ஸ்க், கீவ் முதலிய ஸ்தலங்களை வென்று விட்டதாகவும் வெளிவரும் பேச்சுகளிளெல்லாம் பொய் பலமாக கலந்து நிற்கிறது. உதாரணமாக மர்மான்ஸ்கை பிடித்துவிட்டதாக முதலில் சொல்லிவிட்டு, இப்பொழுது இல்லையென்கிறார்கள், உத்தியோகஸ்தர்கள் சிலரை ருஷ்ய சிப்பாய்கள் கொன்றுவிட்டார்களென்றும், 52,000 ருஷ்ய சிப்பாய்கள் ஜெர்மனியோடு சேர்ந்துவிட்டார்களென்றும் சொல்லுவதெல்லாம் அபாண்டப்புளுகாகும். இவர்கள் சொல்லும் உத்தியோகஸ்தர்கள் நியமனமே இப்பொழுது கிடையாது.

**ஜெர்மானியருக்கேற்பட்டிருக்கும் நஷ்டம்.**—ஆனால் ஜெர்மானியருக்கு பலத்த நஷ்டமென்பதற்குச் சந்தேகமில்லை. முதலிரண்டு வாரங்களில் 6,00,000 பேர்கள் சேதத்தோடு, முதல் வாரத்தில் 1,500 விமானங்களும், 2,500 டாங்கிகளும் அழிந்தன. இதுவரையில் நடந்த 22 மாதயுத்தங்களில், ருஷ்யப்போருக்குமுன் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டம் 6,00,000 சிப்பாய்கள், 4,500 விமானங்கள், 2,000 டாங்கிகள்.

**ருஷ்ய யத்தனங்கள்.**—ஜயத்தை நாடி ருஷ்யா பலமான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. ஸ்டாலினை தலைமைகொண்ட தற்காப்பு சபையொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டன், அமெரிக்காவின் உதவியைநாடி, அதுவும் கிடைத்திருக்கிறது. விமானப்படையை பலப்படுத்த பிரிடிஷ் நிபுணர்கள் வந்துவிட்டார்கள்.

**வடமேற்கு ஜெர்மனிமேல் பிரிடிஷ் விமானப்படையெடுப்பு.**—இப்பொழுது பிரிடிஷ் விமானங்கள் வடமேற்கு ஜெர்மனியை இடைவிடாது தாக்குகின்றன. இதுபலமாய் நடப்பதால், அதிகாரவட்டங்களில், இதை படையெடுப்பென்றே கருதுகிறார்கள்.

**தற்கால நிலைமை.**—கிழக்குப்போர்முனையில் தற்போதிருக்கும் நிலைமை பின்வருமாறு. ஜெர்மானியர் சொல்லிக்கொண்டபடி மர்மான்ஸ்க் பிடிபடவில்லை. கரீலியன் பூசந்தியில் முன்னேறமுடியவில்லை. பின்லாண்டுக்குத்தெற்கே ட்வைனா நதியிலிருந்து லெனின்கிராடை நோக்கிநடக்கும் எதிர்ப்பை ருஷ்யர்கள் தரைப் படைகளைக்கொண்டும், விமானங்களைக்கொண்டுமெதிர்க்கிறார்கள். மேலும் தெற்கே நீபர், பெரஸினா நதிக்கரைகளிலும் ருஷ்யர்கள் திருப்பியெதிர்த்து வருகிறார்கள். பிரிபெட் சதுப்பு நிலங்களுக்கு வடபுறத்தும், வேவைநோக்கி பெஸரேபியாவுக்குக் குறுக்கேயும் நாஸிப்படைகள் குழுமியிருக்கின்றன. ஜூலை 9-ம்தேதி செம்படையறிக்கைப்படி, ஆஸ்டிராவ், பொலட்ஸ்க், நவகராட் வாலின்ஸ்க், பியல்ட்ஸி பிரதேசங்களில் கடும்போர் நடக்கிறது. எல்லாமுனைகளிலும் எதிரி தடுக்கப்பட்டு, துரத்தப்படுகிறான். இதுவரையில் இவ்வளவு நல்லசெய்தி ருஷ்யப்போர் முனையிலிருந்து வந்தது கிடையாது.

**ஸிரியா: விஷியின் சரணாகதி.**—13 நாள் முற்றுகை போட்டு பால்மைரா பிடிக்கப்பட்டது. இது ஸிரியாவின் மத்தியிலுள்ள செழிப்பான முக்கிய ஸ்தலம். இதன் வழியாக பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான மண்ணெண்ணெய் குழாய் போகிறது. பால்மைரா விழுந்ததிலிருந்து விஷி எதிர்ப்புக்கும் பலம் குறைந்து விட்டது. ஏற்கனவே அங்கு உத்ஸாகமுமில்லை. இதற்கு பல காரணங்கள் உண்டு. தளவாடங்களும் உப சைனியங்களும் வராது பிரிடிஷ் கப்பற்படை தடுத்து விட்டது. பிரிடிஷ் விமானப்படையின் எதிர்ப்புத்தாங்க முடியவில்லை. ஸிரியாவுக்கும், லெபானனுக்கும் ஸ்வதந்திரமளிக்க வாக்குக் கொடுக்கப்பட்டது. பிரிடனை எதிர்ப்பது தங்களுக்கே பிரதிகூலமென்று விஷிகளுக்கே தெரிந்து விட்டது.

பால்மைரா பிடிபட்ட பிறகு, இந்தியத் துருப்புகள் பிரதானமாய் கொண்ட சாம்ராஜ்ஜிய சைனியங்கள் டெயிர் எல் ஸார், எல் அட்ஜுவா, எல்பவும், டெமிர் காபூர் என்ற இடங்களை டாமூர் நதியைத் தாண்டி பிடித்துக் கொண்டு, இப்பொழுது பெய்ரூட்டை நோக்கிச் செல்லுகின்றன. இது லெபானன் கடற்கரையில் முக்கியமான இடம். ஹோம்ஸ் நகரத்துக்கும் விபத்து அணுகி விட்டது. அலெப்போ விமானங்களால் தாக்கப்படுகிறது.

இந்த வாரத்து ஆரம்பத்தில் விஷிக்காரர்கள் ஒரு நாள் உணவை மட்டும் வைத்துவிட்டு டமாஸ்கஸிலிருந்து விலகிக் கொண்டார்கள். பிரிடன் அதைப் பிடித்ததிலிருந்து பஞ்சம் நீங்கி விலைவாசியும் குறைந்து விட்டது. பெய்ரூட்டும் இந்தக் கஷ்டத்திற்கு உள்ளாகும் போலிருக்கிறது. ஆனால் அதிர்ஷ்டவசமாக ஸிரியா யுத்தம் இனி தீர்ந்து விடும். விஷி சேனாதிபதி சரணாகதியடைய தயாராயிருப்பதாக செய்தி அனுப்பி விட்டார். ஸிரியாவில் நடந்த சண்டை தர்ம சங்கடமானது. பிரிடனுக்கு நேயர்களாயிருந்தவர்களோடு சண்டை செய்ய நேரிட்டது. ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள் விஷி பிரெஞ்சுக்காரர்களோடு சண்டை செய்யலாயிற்று.

**அமெரிக்காவின் பேருதவி: யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை ஐஸ்லாண்டுக்கு வந்து விட்டது.**—சமீபத்தில் அமெரிக்கப் பிரமுகர்கள் எழுதியதிலிருந்தும் பேசியதிலிருந்தும் ரூஸ்வெல்ட் ஏதோ ஒரு பேருதவியைச் செய்வார் என்று தோன்றிற்று. 'லுக்' என்னும் பத்திரிகையில், கர்னல் நாக்ஸ் 'அட்லாண்டிக்கிலிருந்து ஜெர்மன் விபத்தை விலக்க நம் கப்பற்படையை உபயோகிக்கும் காலம் வந்துவிட்டது' என்று எழுதினார். ஸ்வதந்திர நாள் கொண்டாட்ட தினத்தன்று மிஸ்டர் வெண்டல் வில்கி 'பிரிடனுக்கு வேண்டிய சாமான்களை தடையின்றிக் கொண்டு சேர்க்க அமெரிக்கக் கப்பற்படை விரைவில் உபயோகப்படுத்தப்படும்' என்றார். இதை யொத்து இப்பொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்ட், காங்கிரஸுக்கு விசேஷ செய்தி விடுத்து ஐஸ்லண்டின் பிரதம மந்திரி கேட்டுக்கொள்ள, அதன் ஸ்வதந்திரத்துக்கு ஹானியில்லாமல் சேனைத் தலைவரென்ற ஹோதாவில் உத்தரவு போட்டு, அட்லாண்டிக்கின் பாதைகளை பாதுகாப்பதற்காகவும்



ஜெர்மானியர் அணுகாதிருக்கவும், யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படையை ஐஸ்லாண்டுக்கு அனுப்பியிருக்கிறார். இவைகள் முதலில் அங்கிருக்கும் பிரிடிஷ் படையோடு கூட இருந்து பிறகு தனியாகவே பாதுகாக்கும். இது ஒரு பெரிய செய்தியேயாகும். இதனால் அனுகூலங்களாவன :—

(1) ஐஸ்லாண்டிலிருக்கும் பிரிடிஷ் படைகள் மற்ற இடங்களை பாதுகாக்க அனுப்பிவிடலாம்.

(2) இதனால், 4,000 மைல் விஸ்தீரணத்துக்கு சமுத்திரம் பாதுகாக்கப்பட்டு, அட்லாண்டிக் பிரிடனுக்கும், அமெரிக்காவுக்குமே சொந்தமான ஏரியாய் விடும்.

(3) குத்தகைக்-கடன்—சட்ட பிரகாரம் அமெரிக்கா கொடுக்கும் சாமான்கள் பிரிடனுக்கு பத்திரமாய் வந்து சேரும்.

(4) இப்போது தற்காப்புக்கென்றிருந்தாலும், இனி இதிலிருந்து அமெரிக்காவும் யுத்தத்திலிறங்க நேரிடலாம். ஐஸ்லாண்டு பூகோளத்தின் மேற்பாதியைச் சேர்ந்தது. ஜெர்மனி இதை பிரிடனுடைய போர் அரணாகவும் கருதுகிறது. நாஸிகளின் ஆக்ஷேபணைகளும் ஏற்கனவே காதில் படுகின்றன. பிரிடிஷ் ராஜ்ய ஆதிக்கத்திலிருக்கும் பிராந்தியத்தில் அமெரிக்கப் படைகள் வந்ததிலிருந்து ரூஸ்வெல்ட் யுத்தத்தைத் தனக்கு அருகாமையில் கொண்டுவருகிறார். ஜெர்மனிக்குக் கோபத்தை மூட்டுவதோடு, வம்புகள் தானாகவே ஏற்பட்டு, அதிலிருந்து, சண்டையிலிறங்கலா மென்று நினைக்கிறார் போலும், என்று 'டிப்ளோமாடிக் கரேஸ்பான்டென்ஸ்' என்ற ஜெர்மன் பத்திரிகை எழுதுகிறது.

(5) ஐஸ்லாண்டைப்போல, மேற்கு ஆபிரிக்காவில் டாக்கார் முதலிய இடங்களும் கைப்பற்றப்பட்டு, அட்லாண்டிக்கிலேயே நாஸிகளின் உபத்திரவம் ஒழிந்துவிடலாம்.

**ஜப்பானுக்கு.**—என்ன செய்வதென்று புரியவில்லை. ஒரு பக்கம் அச்சு நாட்டு உடன்படிக்கையும், மற்றொரு பக்கம், புதியதாய் ஏற்பட்ட ருஷ்ய ஒப்பந்தமும் இழுக்கின்றன. என்ன செய்யப்போகிறதென்று தெரியவில்லை. சும்மாவும் இருந்து விடலாம். சமயத்துக்குத் தகுந்தபடி அகப்பட்டதைச் சுருட்டும் சுபாவமுள்ளது. அதன் தலைவர்கள் புரியாதபடி பேசுகிறார்கள். கோனோயே பிரபு 'உலகமெப்படி மாறினாலும் ஜப்பான் தன் வழியேபோகும்' என்கிறார். ஜப்பானிய மந்திரிசபை அடிக்கடி கூடுகிறது. மத்ஸுவோகா அடக்கிப் பேசுகிறார். ஜப்பான் பத்திரிகைகள் பயமுறுத்துகின்றன. ஜப்பானை ஏய்க்க ஜெர்மனி; இதாலி, அவைகளின் கையாட்களான, ருமேனியா, பல்கேரியா, ஸ்பெயின் தேசங்கள் சைனா சிநேகத்தை ரத்து செய்து, நான்கிங் பொம்மை அரசாங்கத்தை அங்கீகரிக்கின்றன. ஜப்பானை எப்படியாவது பிரிடனோடும், அமெரிக்காவோடும் வம்பில் இழுத்துவிட ஜெர்மனி முயற்சிக்கிறது. சமீபத்தில் ஜப்பானிய கப்பல்களெல்லாம் பஸிபிக்குக்குத் திரும்பவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக்காரணம் கப்பல் குறைவென்றும், பொருளாதாரமென்றும் சாக்குச் சொல்லப்படுகிறது...

சீன-ஜப்பான் யுத்தத்து 4-ம் வருஷதினத்தை ஜப்பானியர் சில தினங்களுக்குமுன் கொண்டாடிய காரணம் தெரியவில்லை. இதுவரையில் 16,00,000 ஜப்பானியரும், 20,00,000 சீனர்களும் மாண்டும், இன்னும் யுத்தம் முடியாமல் இருப்பதற்கர்கவா இந்தக் கொண்டாட்டம். இது வெகு பயபக்தியோடு இறந்தவர்களுக்கு ஞாபகார்த்தப் பூஜையோடு, மாண்ட குதிரைகளுக்காகவும், நாய்களுக்காகவும், கோலாகல சங்கீதக்கச்சேரி நடத்தப்பட்டதாம். விந்தைதான்.

ஆனால் அதேதினத்தில் சீன சேனாதிபதி சியாங்-கெய்-ஷேக் இப்பொழுது உலகத்தில் உலாவும் ஆபத்தை எடுத்துக்காட்டியது கவனிக்கத்தக்கது. இப்பொழுது உலகத்தைச் சுடும் அக்கினியின் உற்பத்தியிடம் ஆசியாவாகும். அட்லாண்டிக்கைப் போல் பஸிபிக்கையும் ஜனநாயக நாடுகள் காப்பாற்றவேண்டுமென்றார்.

அபிஸீனியா.—அபஸீனியப் போர் முடிந்ததாகவே வைத்துக்கொள்ளலாம். கிம்பி காலிசெய்யப்பட்டு, டெஸ்பி பிடிபட்டு, டெப்ரா, டாபூர் 3,000 இதாலியர்களோடும், 1,000 ஆபிரிக்கர்களோடும் சரணமடைந்தது. அபிஸீனியாவிலிருக்கும் இதாலிய சேனைத்தலைவரான காஸராவும் தன் சைனியங்களோடு சரணமடைந்தார். காண்டார்தான் பாக்கி. இங்கு சிற்சில இதாலியர்கள்தானிருக்கிறார்கள். அதற்குப் போகும்வழியும் திறந்துவிட்டது வேட்டைதான்.

பிரிடனின் விமானப்போர்.—இப்பொழுது வடமேற்கு ஜெர்மனியிலும், பிடித்த நாடுகளிலும் கடுமையாக இரவும், பகலும் நடக்கிறது. ருஷ்யாவில் ஜெர்மனி யுத்தம் செய்வதால் இப்பொழுது அதை மேற்குப் (மற்றொரு) பக்கத்தில் தாக்குவது பலனைக்கொடுக்கும். இப்பொழுது யந்திரங்களைச் செய்து ருஷ்யாவுக்கனுப்பும் தொழிற்சாலைகள் பலமாய்த்தாக்கப்படுகின்றன. முடிவில் ருஷ்யா தோற்றுப்போனாலும் ஜெர்மனி பிரிடனைத் தாக்காதிருக்கவும் இது உபயோகப்படும். மேலும், கப்பல்கட்டும் துறைகளை பிரிடிஷ் விமானங்கள் தாக்கியதிலிருந்து அட்லாண்டிக் யுத்தம் மட்டுகெட்டியிருக்கிறது. ருஷ்யப் போர்முனையில் நடக்கும் சண்டையை பிரிடிஷ் விமானப் போரால் மாற்ற முடியாவிட்டாலும், அங்கு இருக்கும் ஜெர்மன் விமானங்களின் ஒரு பகுதியை ஜெர்மனியின் பாதுகாப்புக்குத் திரும்பச் செய்யலாம்.

'டிராவன்கூர்' என்ற இந்திய யுத்தக் கப்பல்.—கடல் வெடிகளை விலக்கவும் நீர்மூழ்கிகளை துரத்தவும் உபயோகப்படக்கூடிய சண்டைக் கப்பலொன்று H. H. திருவாங்கூர் மஹாராஜா அவர்களால் கட்டப்பட்டு இந்திய கப்பற்படைக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி கப்பல் கட்டியது இந்தியாவில் இது முதல் பிரயத்தனமாகும். மற்றொரு விசேஷம் இது இந்தியாவிலேயே, இந்திய தளவாடங்களைக்கொண்டே கட்டப்பட்டது. இஞ்சின், பாயிலர் மட்டும் வெளியேயிருந்து வந்தன. சிங்கப்பூரமையன்று கப்பற்கட்டும் துறையிலிருந்து இந்தக் கப்பல் கடலில் மிதக்கப்பட விட்டது.



## பல பல விஷயங்கள்.

1. **மேலதிகாரத்தில் மாறுதல்கள்.**—இந்தியாவில் சேனாதிபதியாயிருந்த ஸர் க்ளாட் ஆகின்லெக் மத்திய-கிழக்குக்கும், மத்திய-கிழக்கு சேனாதிபதியாயிருந்த ஸர் ஆர்சிபால்ட் வேவல் இந்தியாவுக்கும், சேனைத்தலைவர்களாகவும், பரஸ்பரம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். மத்திய-கிழக்கு சேனாதிபதித் தலைவர், இதுவரையில் வட-ஆபிரிக்கா, அபிஸீனியா, கிரீஸ், கிரீட், ஸிரியா முதலிய விடங்களில் யுத்தம் நடத்துவதோடு, தரை, நீர், ஆகாயப்படைகளை ஒன்று சேர்க்கவும், ராஜீய காரியங்களை பார்க்கவும் நேரிட்டது. இது சாத்திய மில்லாமல் போக, பின்னிரண்டு வேலைகளை அவரிடமிருந்து எடுத்து, ஒரு தனிமந்திரிக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் யுத்த சபையில் ஒரு அங்கத்தினராய் இருந்துகொண்டு, மத்திய-கிழக்கில் ராஜீய காரியங்களை நடத்தி, ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள் அபிஸீனிய சக்கிரவர்த்தி முதலானவர்களோடு பிரிடிஷ் காரியங்களை நடத்தி, யுத்தக்கைதிகள், செலவாணி, பொருளாதாரம் முதலியவைகளை கவனிப்பார்.

2. **சமாதானப்பேச்சென்பது கிடையாது.**—ஜூலை 5-ல் லீட்ஸில் பேசும்போது அயல் நாட்டு இலாகா மந்திரி மிஸ்டர் அந்தோனி ஈடன் 'பூமியில் ஹிட்லரின் அரசியலும், நம்முடைய அரசியலும் சேர்ந்திருக்க இடமில்லை. ருஷ்யப் போரில் தனக்கு அநுகூலமான சமயத்தில், சமாதானத்தில் ஆசைப்பட்டவர் போல வேஷம் தரித்து, பேச்சுகளை ஹிட்லர் விடலாம். ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியே இதற்குக் காரணமாகும். ஜெர்மன் தலைவர் தன் செய்கைகளால், பொய்யனென்று உலகத்துக்கு ருஜுப் படுத்தி விட்டார். அவரோடு எந்த விஷயத்திலும், எச்சமயத்திலும் சமாதானம் பேசப்போவதில்லை. யுத்த முயற்சிகளை இன்னும் அதிகப்படுத்தி ஹிட்லரையும், அவர் கொள்கைகளையும் அழித்துத்தான் விடுவோம்' என்றார்.

3. விஷியானது ருஷ்யாவோடு ராஜ்ஜிய சம்பந்தத்தை ரத்து செய்து விட்டது. ருஷ்ய பாங்கிகளையும் மூடி, ருஷ்ய ஏஜெண்டுகளையும் அப்புறப்படுத்திவிட்டார்கள். பிரான்ஸிலிருக்கும் ருஷ்யர்கள் ஸர்க்காருக்கு விரோதமாயிருக்கிறார்களாம். விஷியானது ஜெர்மனியின் ஊழியக்காரனாய், அது சொன்னதையெல்லாம் செய்கிறது.

4. ராஜ்ஜிய அவசியத்தின் பொருட்டு இரண்டு பிரெஞ்சுக் கப்பல்களில் அமெரிக்காவிலிருந்து வடமேற்கு ஆபிராவுக்கு உணவு கொண்டுவந்து வினியோகம் செய்ய பிரிடன் அனுமதித்திருக்கிறது. ஜெர்மன், ருமேனிய சிப்பாய்களைத் தங்களுடைய வீடுகளிலிருந்து சுட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு 500 யூதர்கள் ஜாஸியில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

5. ஜெர்மானியர் கிரீஸைப் பிடித்துக்கொண்டதிலிருந்து பஞ்சம்ஏற்பட்டு விட்டது. ஆதன்ஸில் 80,000 பேர்களுக்கு பொதுக்கஞ்சித்தொட்டியிலிருந்து அன்னமிடப்படுகிறது. உணவுப் பொருள்களும் 10-க்கு 1 ஆக குறைந்து வினியோகமாகிறது.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 30—6—41. (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.— கப்பற்துறைகள் .— ப்ரமன் (Bremen). | ...... | ...... |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ஓல்டன் பர்கு (Oldenburg)க்குத் தெற்கே. | ...... | ...... |
| | கப்பற்துறைகள் கம்பியில்லாத் தந்தி ஆபீஸ்.—டச்சு (Dutch) த் தீவான டெர்ஸ்செல்லிங் (Terschelling). | ...... | சேதமாயின. |
| | காவல்காக்கும் கப்பல்.—டெர்ஸ்செல்லிங் (Terschelling)குக்குத் தென்கிழக்கே. | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | விரோதிக் கப்பல்கள் (துணைக் காவலுடன் கூடியது).—நார்டர்னி (Norderney)த் தீவு. | ...... | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |
| | பகலில்.—கப்பற்துறைகள்.—கீல் (Kiel). | ...... | ...... |
| | விரோதி தளம்.—ஸில்ட் (Sylt). | 2 விமானங்கள். | ...... |
| | மாலையில்.—படையெடுப்பு.—வட பிரான்ஸ் (France). | ...... | 6 விமானங்கள். |
| | மின்சாரசக்தி உற்பத்தி செய்யுமிடம்.—பாண்ட்-ஆ-வென்டின் (Pont-a-Vendin). | 1 விமானம். | தகர்க்கப்பட்டது. |
| | இரவில்.—டூயிஸ்பர்க் (Duisberg). | ...... | ...... |
| | டூஸ்ஸெல்டார்ப் (Dusseldorf) கொலோன் (Cologne). | ...... | ...... |
| | தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland). | ...... | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பீரட் (Beirut). | ...... | பல கப்பல்கள் நாசமாயின. |
| | விமான நிலயம்.—அலெப்போ (Aleppo) | ...... | விமானக் கூடங்கள் நாசமாயின. |
| | சைனியங்கள் வசிக்குமிடம், சாமான் கிட்டங்கிகள்—பால்மைரா (Palmyra). | ...... | தீப்பிடித்தது. |
| | விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்—பால்பெக் (Baal Beck). | ...... | இரண்டு என்ஜின்களுள்ள விமானங்கள் பல சேதமாயின. |
| | ராணுவக் கட்டடங்கள்—ஸோவிடா (Soucida). | நஷ்டமில்லை. | தாக்குண்டன. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 30—6—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள், கப்பலைவிட்டு கீழே இறங்கின சைனியங்கள், விரோதி கடல் விமானங்கள்— ட்ரிபோலி (Tripoli.) | ...... | கப்பல்கள் சேதமாயின, பலத்த சேதம், பலருக்குக் காயம். |
| | விமானநிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்—ட்ரிபோலி (Tripoli). | ...... | 5 விமானங்கள். 1 துருப்பேற்றும் விமானம் நாசம். |
| | பாதுகாத்தல்.—ஸிரெனெய்கா (Cyrenaica) கடற்கரைகளில் சஞ்சரிக்கும் கப்பல்கள். | ...... நஷ்டமில்லை. | ...... 7 விமானங்கள். |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்கு ஜெர்மனி (Germany).** | | |
| | ஜெர்மன் சைனியங்கள், விமான நிலயங்கள்—போர் நடக்குமிடங்களில். | ...... | ...... |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | |
| 1—7—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—படையெடுப்பு—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | ரயில்வே சாமான் கிட்டங்கிகள், பக்கத்திலிருக்கும் கால்வாயிலிருக்கும் படகுகள்—ஓல்டன் பார்க் (Oldenburg). | 2 விமானங்கள் | எங்கும் பெருத்த தீ சூழ்ந்தது. |
| | பிற்பகலில்.—கடல் விமானநிலயம்—போர்கும் (Borkum). | 1 விமானம். | கட்டடங்கள் இடிந்தன, 1 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. பல விமானங்கள் சேதமாயின. |
| | படையெடுப்பு.—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | மாலையில்.—படையெடுப்பு— வடபிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில்.—ஷார்ன்ஹார்ஸ்ட் (Scharnhorst) நீஸெனோ (Gneisenau), பிரின்ஸ் யூஜன் (Prince Eugen) என்னும் மூன்று ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் — ப்ரெஸ்ட் (Brest). | | பலத்த சேதம். |
| | கப்பற்துறைகள்—செர்பரோ (Cherbourg). | 2 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 1—7—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | விரோதி விமான நிலயம்—ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | ...... |
| | **ஸிரியா (Syria).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள்—ரேயாக் (Rayak). | | 6 விமானங்கள். |
| | டாங்கிகள் (Tanks), மோட்டார் வண்டிகள் ரேயாக் (Rayak)-பிரதேசத்திலுள்ள ரஸ்தாக்களில். | | 2 டாங்கிகள், 20 மோட்டார் வண்டிகள் நாசமாயின. |
| | சைனியங்கள் வசிக்குமிடம்—பால்மைரா (Palmyra) விமான நிலயம் | | பலத்த சேதத்திற்குள்ளாகியது. |
| | கோட்டை—ஸோவிடா (Souieda) ... | நஷ்டமில்லை. | குண்டுகளுக்கு இலக்காகியது. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | கருங்கடல் துறைமுகம்—கான்ஸ்டான்ஸா (Constanza). | ...... | எங்குபார்த்தாலும் ஒரே தீ மயம். |
| | வியாபாரக் கப்பல்கள் — ட்ரிபோலி (Tripoli) துறைமுகம் | ...... | பல தீப்பிடித்தன. |
| | பெங்காஸி (Benghazi), கஸாலா (Gazala). | ...... | தீப்பிடித்தது. |
| 2—7—41. (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விரோதி விமான நிலயம், தரையிலிருக்கும் விமானங்கள்—மெர்வில் (Merville). | ...... | கட்டடங்கள் இடிந்தன, பல விமானங்கள் சேதமாயின. |
| | ரயில்வே ஜங்ஷன்—லில்லி (Lille)-க்கு தென் கிழக்கே. | ...... | ...... |
| | விமான யுத்தம்—வட பிரான்ஸ் (France) | 10 விமானங்கள். | 21 விமானங்கள். |
| | மாலையில்—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில் தொழிற்சாலைகள் நிறைந்திருக்கும் இடங்கள் — ப்ரமன் (Bremen), கொலோன் (Cologne), டூயிஸ்பர்க் (Duisburg). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின, பலத்த சேதம். |
| | கப்பற்துறைகள்.—செர்பரோ (Cherbourg) | ...... | ...... |
| | எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம (Rotterdam). | 4 விமானங்கள். | 1 விமானம். |
| | ஒரு சாமான் கப்பல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 2—7—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிரியா (Syria).** | | |
| | விஷி (Vichy)க் கப்பல்கள்.—பீரட் (Beirut) துறைமுகம். | ...... | பல கப்பல்கள் தாக்குண்டன. |
| | கோட்டை, சைனியங்கள் வசிக்குமிடம்.—ஸோவீடா (Soueida). | ...... | தாக்குண்டன. |
| | விமான நிலயம்.—நஸ்ருல்லா (Nasrullah). | ...... | ...... |
| | சமுத்திரக்கரை ரஸ்தா.—ஹோம்ஸ் (Homs)க் கருகில். | ...... | விஷி (Vichy) மோட்டார் வண்டிகள் நாசமாயின. |
| | ஆகாயக் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli)த் துறைமுகம். | ...... | பல சேதமாயின. |
| | மோட்டார் வண்டிகள்.—பீரட் (Beirut) டுக் கருகில். | நஷ்டமில்லை. | ...... |
| | **(ருஷ்ய விமானங்களால்.)** | | |
| | **ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் போலந்து (Poland).** | | |
| | விரோதி டாங்கிகள்.—லக் (Luck) பிரதேசம். | ...... | நசுக்கப்பட்டன. |
| | யுத்த சாமான் கிடங்கிகள்.—புகாரெஸ்ட் (Bucharest). | ...... | தீப்பிடித்தன. |
| | விமானச்சண்டை.—போர் நடக்கும் இடங்கள். | ...... | 5 விமானங்கள். |
| | **(பிரிடிஷ் விமானங்களால்).** | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | ...... |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—கஸாலா (Gazala). | ...... | பல சேதமாயின. |
| | விமான நிலயங்கள்.—மார்டுபா (Martuba), இன்னும் மற்ற இதர இடங்கள். | ...... | தீப்பிடித்தது. |
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| 3—7—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | ரயில் வண்டிகள்.—ஹேஸ்ப்ருக் (Hazebruck), ஓமர் (Omer) பிரதேசம். | 7 விமானங்கள். | 11 விமானங்கள் சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 3—7—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | இரவில்.—க்ருப்ஸ் (Krupps) யுத்த சாமான்கள் செய்யுமிடம், எஸ்ஸன் (Essen). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr). | ...... | ...... |

## ஸிரியா (Syria).

| | | | |
|---|---|---|---|
| | கப்பல்கள், துறைமுகம்.—பீரட் (Beirut). | ...... | தீப்பிடித்தது. |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. |
| | விமான நிலயம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| | அச்சு நாடுகளின் சைனியங்கள் வசிக்குமிடங்கள்.—பெங்காஸி (Benghazi)க் கருகில். | ...... | கூடாரங்கள் தீக்கிரையாகின. |
| | விமானமிறங்குமிடம்.—காட் எல் அஸ்மார் (Gadd El Asmar). | ...... | ...... |

(ருஷ்ய விமானங்களால்.)

கிழக்கு யுத்த அரங்கம்.

| | | | |
|---|---|---|---|
| | ஜெர்மன் யந்திரஸாதனங்களுடன் கூடிய படைகள்.—ட்யூனு (Duina), நதிக் கருகில், பொப்ருயிஸ்க் (Bobruisk), டார்னோபால் (Tarnopol). | ...... ...... | ...... ...... |
| 4—7—41. (வெள்ளிக்கிழமை). | | | |

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | காலையில்.—ஒரு பெரிய தொழிற்சாலை, சாமான் கிட்டங்கி, ரயில்வே ஜங்ஷன், சாமான் ஏற்றும் ரயில் வண்டி, விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்-ப்ரமன் (Bremen). | ...... | தகர்க்கப் பட்டது, தீயும், வெடிச் சத்தமும் கிளம்பியது. |
| | சைனியங்கள் வசிக்குமிடம், பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்—ப்ரிஸியன் (Frisian) தீவான நார்டர்னி (Norderney) | 5 விமானங்கள் | ...... |
| | பிற்பகலில்.-படையெடுப்பு-வட பிரான்ஸ் (France). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 4—7—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | மின்சார உற்பத்தி நிலை, இரஸாயன தொழிற்சாலை, ரயில்வே ஜங்ஷன்—பெத்யூன் (Bethune). | ...... | ...... |
| | இரவில்.—தொழிற்சாலை, துறைமுகம்—கிரிஸ்டியன்ஸண்ட் (Christiansund) கப்பல்கள்.—சிறிய துறைமுகம்—ஹாகுஸண்ட் (Haguesund). | ...... 1 விமானம். | தீப்பிடித்தது. |
| | கப்பல் நிற்குமிடங்கள், மூன்று ஜெர்மன் யுத்தக்கப்பல்கள்—ப்ரெஸ்ட் (Brest). துறைமுகம், ஸப்மரைன்கள் (Submarines) லோரியான் (Lorient). கப்பற்துறைகள்-செற்பரோ (Cherbourg) தொழிற்சாலைகள்—ரைன்லாந்து (Rhineland). ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்—அப்பீவில் (Abbeville). | ...... ...... ...... 4 விமானங்கள். | கப்பல்கள் அழிக்கப்பட்டன. தீப்பிடித்தது. 2 விமானங்கள். சேதமாயின. ...... |

## ஸிரியா (Syria).

| | | | |
|---|---|---|---|
| | கப்பல்கள் துறைமுகம்—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| | விமான நிலயக் கட்டடங்கள்—பால்பே (Baalbec). | ...... | சேதமாயிற்று. |
| | விமானங்கள் இறங்குமிடங்கள்—பால்பே (Baalbec)வுக்கருகில் | ...... | ...... |

(ருஷ்ய விமானங்களால்)

## ருமேனியா (Rumania)

| | | | |
|---|---|---|---|
| | கருங்கடல் துறைமுகம்.—கான்ஸ்டான்ஸா (Constanza), ஸுலீனு (Sulcina), போயஸ்டி (Poesti). விரோதி கவரமணிந்த சைனியங்கள்—எல்லாப் போரரங்கங்களிலும். | 27 விமானங்கள். | 43 விமானங்கள். |

## ஸிரியா (Syria).

| | | | |
|---|---|---|---|
| | விஷி (Vichy) சைனியங்கள், எரிமிலைய்கள்.—பீரட் (Beirut). | ...... | ...... |

## இத்தாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வண்டிகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | ...... | பல சேதமாயின. 3 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 4—7—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி ((Bengazi), டெர்னு (Derna). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தன. |
| | விமான நிலயம்.—மெகாலே (Meckale). | ...... | சேதமாயிற்று. |
| 5—7—41. (சனிக்கிழமை). | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பிற்பகலில்.—முக்கியமான இரும்புத் தொழிற் சாலைகள்—லில்லி (Lille). | ... | எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம். |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடம்.—அப்பீவில் (Abbeville). | ... | தாக்குண்டது. |
| | மாலையில்.—படையெடுப்பு வட பிரான்ஸ் (France). | ... | 2 விமானங்கள். |
| | ஜெர்மன் சாமான் கப்பல்கள்.-பெல்ஜியன் (Belgian) கடற்கரை. | 3 விமானங்கள். | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | இரவில்.—மன்ஸ்டர் (Munster), பீலிபீல்ட் (Bielefeld), மாக்டெபர்க் (Magdeburg). | ... | தீப்பிடித்தது. பலத்தசேதம். |
| | முக்கியமான தொழிற்சாலைகள்.—வெஸ்ட்பேலியா (Westphalia). | ... | ...... |
| | ரீன்.—(Rheine). | ... | ...... |
| | கப்பற் துறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam), டென்ஹெல்டர் (Den Helder). | 3 விமானங்கள். | ...... |
| | விமான நிலயம்.—வட பிரான்ஸ் (France). | ... | ...... |

ஸிரியா (Syria).

| | | | |
|---|---|---|---|
| | ராணுவக் கட்டடங்கள், துறைமுகத்திலிருக்கும் சிறிய படகுகள்.—பயடீடின் (Bieteidin) விமான நிலயம், விமானங்கள் (தரையிலிருக்கும்)—அலெப்போ (Aleppo). | ...... | சேதமாயிற்று. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | கப்பற்துறைகள், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகள், நிறுத்துமிடம், ரயில் வண்டிகள் நிறுத்துமிடம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |

(ருஷ்ய விமானங்கள்.)

கிழக்கு யுத்த எல்லை.

| | | | |
|---|---|---|---|
| | தவசாமணித்த மோட்டார் படைகள்.—யுத்த அரங்கம். | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 6—7—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | பலத்த சேதம். |
| | இரும்புத் தொழிற்சாலை.—லில்லி (Lille). | 9 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | இரவில்.—ராணுவ முக்கியமுள்ள இடங்கள் மன்ஸ்டர் (Munster). | ...... | ...... |
| | தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland)—முக்கியமாக டார்ட்மண்டு (Dortmund). | ...... | சேதமாயிற்று. |
| | டஸ்ஸெல்டார்ப்.—(Dusseldorf), கொலோன் (Cologne). | ...... | ...... |
| | துறைமுகம்.—எம்டன் (Emden) ... | ...... | ...... |
| | கப்பற்றுறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | தீப்பிடித்தது. |
| | கடற்படை நிலயம், துறைமுகம், ஜெர்மன் யுத்தக்கப்பல்கள்.—ப்ரெஸ்ட் (Brest). | 6 விமானங்கள். | தகர்க்கப்பட்டன. |

ஸிரியா (Syria).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயம்.—அலெப்போ (Aleppo). | ...... | 3 விமானங்கள், தீக்கிரையாகின. |
| | சைனியங்கள் வசிக்குமிடங்கள், துறைமுகம், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—பீரட் (Beirut). | ...... | ...... |
| | கப்பல்கள்.—பீரட் (Beirut) ... | ...... | ...... |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்பு விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 1—7—41. (செவ்வாய்க்கிழமை). | | | |

பிரிடன் (Britain).

| | | | |
|---|---|---|---|
| | சில இடங்கள்.—வேல்ஸி (Wales)ன் தென்மேற்கு, தெற்குப்பாகங்கள். | ..... | சொற்பச்சேதம். சிலர் மாண்டனர். |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | மால்டா.—(Malta) | 2 விமானங்கள். | நஷ்டமில்லை. |

பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | ட்ரிபோலி.—(Tripoli) | 1 விமானம். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 2—7—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸிப்ரஸ் (Cyprus). | ...... | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமும் இல்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | சைனியங்கள்.—வெள்ளை ருஷ்யா (Russia). | ...... | ...... |
| | **பாலஸ்தீனம் (Palestine).** | | |
| | ஹைபா (Haifa). | 1 விமானம். | ...... |
| 3—7—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடவடிக்கையேயில்லை. | | |
| | **கிழக்கு ருஷ்யா (Russia).** | | |
| | ருஷ்ய சைனியங்கள்.— எல்லாப்போர் முன்னணிகளிலும். | ...... | ...... |
| 4—7—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா—(Malta) | 2 விமானங்கள். | சேதமேயில்லை. |
| 5—7—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—பல இடங்கள்—மிட்லண்ட்ஸ் (Midlands), தென்வேல்ஸி (Wales)ன் தென்கிழக்கு, தென்மேற்குப்பாகங்கள். | 3 விமானங்கள். | சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 6—7—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.-தென்மேற்கு, கிழக்கு இங்கிலாந்து (England). | 3 விமானங்கள். | சொற்பச் சேதம். சிலருக்குக்காயம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | ருஷ்ய சைனியங்கள் இருக்குமிடங்கள்.—யுக்ரேன் (Ukraine), கிழக்கு போலந்து (Poland). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 1 விமானம். | சேதமேயில்லை. |
| 7—7—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—பட்டணங்கள்—தென் இங்கிலாந்து (England), தென்கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சிலர் மாண்டனர், சொற்பச்சேதம். |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## ஒரு பிறந்த நாள்.

இந்தப் பத்திரிகையைப் போலவே, இந்த 'அங்கம்' (?) ஒரு வருஷகாலமாக நடைபெற்று வருகிறது. இன்னமும் ஒரு வருஷம்வரை இது நடைபெறுமென்று சொல்ல முடியவில்லை; ஏனென்றால் நமது பிரதம மந்திரியும், ஜெர்மனியில் அவருக்கு எதிரான பேர் சொல்லத்தகாத பேர்வழியும் 1942-ல் யுத்தம் நடைபெறுவது நிச்சயமென்று சொல்லுகிறார்கள். ஆனால் இவ்விதக் குறிப்புகள் ஐம்பது வாரம்வரை எழுதி முடியுமுன் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை நமக்கு ஜாஸ்தியாகும் என்ற நம்பிக்கை எனக்கு பலமாக இருக்கிறது; ஏனென்றால், வருகிற குளிர்காலத்தில் ருஷ்யர்கள் ஜெர்மானியரை எதிர்த்து தடுத்துக் கொண்டு வந்தால், மனிதரை கிடுக்கிடச் செய்யும் இந்த யுத்தப் பேய் ஆவேசம் அடங்கி தலையை கீழே சாய்க்கும்; தாக்கல் அதிகரித்து நிர்வகிக்க முடியாமல் நீர்மூழ்கிகள் சாய்வது போல் சாயும்.

## ருஷ்யாவைப்பற்றி நாம் நினைக்கவேண்டிய நினைப்பு.

18 மாதங்களுக்கு முன் நான் பெஷாவரிலிருந்து வந்திருக்கும் ஒரு இஸ்லாம் சிநேகிதருடன் யுத்தப்பேச்சுப் பேசிக்கொண்டிருந்தேன் (அவர் ஊர் பெஷாவருக்கும் அப்பால் உள்ளது; "ருஷ்ய பயம்" என்பதைப்பற்றி எல்லா குடும்பங்களும் அடிக்கடி பேசிவந்த நாட்டிலுள்ளது). அச்சமயம் ருஷ்யாவும் ஜெர்மனியும் சிநேகமாயிருந்தன; ஆகையால் ருஷ்யா படையெடுக்கும் என்ற பழைய காபரா மறுமுறையும் கிளம்புமோ என்பதைப் பற்றிப்பேசினோம். "அவர்கள் படையெடுக்க முயற்சி செய்யலாம், ஆனால் அவர்கள் தெய்வ நம்பிக்கை யற்றவர்கள். அப்படிப்பட்ட பெயர்கள் எப்படி ஜயிக்கக்கூடும்?" என்று அவர் சொன்னார். அவருடன் மறுபடியும் சமீபத்தில் பேசினேன். ருஷ்யர்கள் மதவிரோதிகளானதால் அவர்களிடம் அவருக்குப் பிடித்தமில்லை, ஆயினும் முன்னே சிநேகமாயிருந்த இவ்விரு தேசத்தாருள் யார் உலகத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவர்கள் என்பதில் இவருக்கு சந்தேகமில்லை. தெய்வப்பற்றில்லாத ஒரு கவர்ன்மெண்டிடம் இவருக்குள்ள கசப்பானது நாஸ்திகத்துவத்தின் பேரில் இவருக்குள்ள விரோதத்திற்கு உரைபோடக்காணாது. இந்தியாவிலுள்ள எல்லா நல்ல முஸ்லீம்களின் அபிப்பிராயமும் இதுதான் என்பதில் சந்தேகமில்லை.

நாஸ்திகர்கள், அபேதவாதிகள் முதலியவர்களிடம் பற்றில்லாத நம்போன்றவர்கள் ஹிட்லரின் மூர்க்கங்கொண்ட புது விரோதியிடம் நமது மனோபாவம் எப்படியிருக்கவேண்டுமென்று பிரதம மந்திரி ரேடியோ மூலம் நமக்கு வழி காட்டினார். பிரிடனும் ருஷ்யாவும் துணைவர்களல்ல; ருஷ்யருடன் நமக்கு ஒத்த மனோபாவமில்லை, ஆயினும்..........................................

Mr. சர்ச்சில் சொல்லுகிறார், "கையொப்பமிட்ட எல்லா உடன்படிக்கைகளையும் எப்படி ஜெர்மானியர் அலட்சியம் செய்து அக்கிரமம் செய்தார்களோ, அதைப்போலவே," பதின்மடங்கு 'மேற்கொண்டும் அக்கிரமமான காரியம், இவர்கள் ருஷ்யா மீது படையெடுத்தது. மேலும் அவர் சொல்லுவதாவது.

"ருஷ்யாவுக்கு வந்த ஆபத்து, நமக்கு வந்த ஆபத்து, அமெரிக்காவுக்கும் வந்த ஆபத்து" "நமக்கு ஒரே கருத்து. ஹிட்லரையும் நாஸி அரசாட்சியையும் வேரோடு அறுத்துவிட வேண்டுமென்பது நமது நோக்கம்", ஆகையால் "நாஸித்துவத்தை எதிர்க்கும் எல்லா மனிதர்களுக்கும் தேசங்களுக்கும் நாம் உதவி செய்வோம்.' ஆகையால் ருஷ்யாவுக்கும் ருஷ்யர்களுக்கும் நாம் நம்மால் முடிந்தவரை சகாயம் செய்வோம்."

"நம்மால் முடிந்த உதவி பொருளாதார வழியிலும் எல்லா காரியங்களிலும் ஸோவியத் ருஷ்ய கவர்ன்மெண்டிற்கு நாம் தருவதாகச் சொல்லியிருக்கிறோம்."

"பழைய பிசகுகளும், பேதமைகளும், குரூர காரியங்களும் மறக்கப்படுகின்றன; ஏனென்றால் ஒரு வெகு குரூரமான படையெடுப்பை எதிர்த்துத் தங்கள் நாட்டை பாதுகாப்பதன் மூலம் ருஷ்யர்கள் பிரிடனைப்போன்ற நோக்கங்களையே உடையவர்களாகிறார்கள்."



## ஒரு எச்சரிக்கை.

விஸ்தீர்ணம், ஜனத்தொகை, இயற்கை சாதனங்கள் முதலியவைகளின் பெருக்கால், ருஷ்யாவிடம் இந்தியர்களுக்கு ஜாஸ்தி மதிப்பு. இப்படிப்பட்ட தேசத்துடன் ஜெர்மனி சண்டையில் புகுந்து விட்டது. யுத்தம் நமக்கு சாதகமாக முடியுமென்ற நம்பிக்கையுள்ளவர்கள்கூட ஹிட்லர் ஆழ்ந்த யோசனை பேரில் சண்டைக்குப் போனானென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேணும். பிறதேசங்களுடன் புழங்குவதில் ஜெர்மானியர் பொய் சொல்லியும் ஏமாற்றியும் துர்பல ஹிம்சைகள் செய்து வந்தபோதிலும் காரியத்தில் ஏமார்ந்தவர்களல்ல.

நாம் சம்பந்தப்பட்டவரை ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்தது நல்லதென்று நினைக்கவேணும்; ஏனென்றால், யுத்த ஏற்பாட்டில் பெரிய மாறுதல் ஏற்பட்டால், எங்கேயோ தட்டுக்கிடல் ஏற்பட்டிருக்கிறதென்று அடையாளம். எங்கே தட்டுக்கிடல் என்றால், அச்சு தேசத்தார் சீக்கிரம் வெற்றியடைய வேண்டுமானால், அது வரைகூட பிரிடனை படையெடுக்கவேணும்; அந்தப் படையெடுப்பு தள்ளிப்போடும்படி போய்விட்டது; ஒருவேளை அந்த எண்ணம் முற்றிலுமே கைவிடப்பட்டிருக்கலாம்; ஜெர்மன் ராணுவ அதிகாரிகளிலும் அரசியல் வாதிகளிலும் எவருமே 18 மாதங்களுக்கு முன் எதிர்பாராத ஒரு பெரிய, நாள்பட்ட யுத்தத்தை நடத்தப் போதுமான சாமக்கிரியைகள் நடுக்கமெடுத்துப் பதறித் தேடும் நிலையில், ஒரு மகத்தான தேசத்தைப் பல்லைக் கடித்துக்கொண்டு விடாமுண்டர்களாக போர் செய்யும் விரோதி தேசமாக ஹிட்லரும் இதர ஜெர்மானியரும் செய்யும்படி நேர்ந்து விட்டதென்றும் இந்த சம்பவத்திற்கு அர்த்தம்.

இதனால் ஹிட்லர் நிர்வகிக்க முடியாதென்று சொல்லமுடியாது. இப்போது அவன் செய்த காரியம் பின்னால் பெருத்த இடைஞ்சலாக மாறினாலும், இப்போதைக்கு அவன் நிர்வகிக்கக்கூடும்.

## பொருந்துப் பாருங்கள்.

இந்த யுத்த சம்பந்தமாக என்ன நடக்கப்போகிறது என்று பலவிதமாக யோசனை செய்ய பத்திராதிபர்களுக்கு இடமுண்டு. நாம் யுத்த சாஸ்திரி நிபுணர்களாய் இல்லாத வரையிலும், பால்டிக் சமுத்திரம் முதல்கொண்டு கருங்கடல் வரை உள்ள பிரதேசமானது நமது சொந்த வயல் வரப்புகளைப்போல நமக்குத் தெரியாத வரையிலும், ஹிட்லர் அவனுடைய ராணுவ அதிகாரிகளுடன் யோசனைகள் செய்யும்பொழுது நாம் கூடயிருந்து விஷயங்களை அறியாத வரையிலும், யுத்த சமாசாரங்களைக்கேட்டு பிரதி தினமும் உத்சாகப்படுவதோ மனம் தளர்வதோ பிசகு. குறுகின பார்வையில் ஜெர்மனி தாத்காலிகமாக ஜயிக்குமென்றும், தூரதிருஷ்டியில் ருஷ்யா தலைதூக்கி ஜெர்மனி தோல்வியடையும் என்று நினைப்பது பிசகல்ல. அப்படி நினைக்கக் காரணங்கள் பின் வருமாறு. டைப்புகளைப் பற்றிய செய்தி தெளிவாயில்லாததாலும், எல்லாம் ஏறுகுழப்பமாயிருப்பதாலும் உத்சாஹப்படுவதோ, தளர்ச்சியடைவதோ சரியல்ல. பின் குறிப்பிடப்படும் செய்திகளை கவனித்து மனதிற்கு வாங்கவேண்டியதவசியம்!

(1) இந்த யுத்தம் ஜெர்மன் யுத்த தயாரிப்பிற்கு ருஷ்ய ஏற்பாட்டைக் காட்டிலும் ஒத்ததாய் இருப்பதால், சீக்கிரத்தில் ருஷ்யருக்கு வெற்றி கிடைக்குமென்று எதிர் பார்க்க முடியாது.

(2) ருஷ்ய விமானப்படையைக் காட்டிலும் ஜெர்மன் விமானப்படையின் சங்கியை குறைவாக இருக்கலாம். ஆயினும் தயாரிப்பிலும், வல்லமையிலும், விமானிகளின் சாமர்த்தியத்திலும் மேலாக இருக்கக்கூடும்.

(3) எதிர்பாராத வேலைகள் செய்யக்கூடும். போர்க்களத்தில் சைனியங்கள் இருக்க பின் இருந்து எல்லா வேலைகளையும் கிரமப்படி செய்வதில் ஜெர்மானியர் சமர்த்தர்கள்; ருஷ்யர்களோ சீர்திருத்தங்கள் செய்துகொண்டு வருகிறார்களென்றாலும் அவர்கள் கொஞ்சம் சாவகாசமாக நடப்பவர்கள். ஆகையால் இது ஜெர்மானியருக்கு சாதகம்.

(4) ருஷ்யர்கள் தேசிய உணர்ச்சி இப்பொழுது பொங்கி வந்தாலும், பல வருஷங்களாக ருஷ்யாவில் ஐந்தாம்படை வேலை, முக்கியமாக யூக்ரேனில், பலமாக நடந்து வந்திருக்கிறது. சமயங்களில் ருஷ்ய ஏற்பாடுகளைக் கலக்கிவிடுவது எதிர்பார்க்கலாம்.

## இவை ஒரு புறமிருக்க.

(1) நாள் பட்டால் ஜெர்மனிக்கு ஜோலி ஜாஸ்தி. அதாவது, விரோதபாவம் கொண்ட பெரும் புது ஜனங்களை மேல்பார்க்கிறது. ஜயித்த நாடுகளை கவனிக்க உத்தியோகஸ்தர்கள், இதுவரை யாதொரு சம்பந்தமுமில்லாத தேசத்தார்களுக்குள் பரஸ்பர விரோதமான மனோபாவம்—இவையெல்லாம் வம்பிற்கிடம்.

(2) போக்குவரத்து கஷ்டங்கள் அதிகரிக்கும். ஸ்திரமான இருப்புப் பாதைகள், பாதை இறுசுகளில் வேறுபாடு இருக்கும் சாதனங்களை ருஷ்யர்கள் அப்புறப்படுத்துவது.

(3) ஜெர்மனி தேடுவது எண்ணெயும், கோதுமையும் என்கிறார்கள். அது உண்மை. அப்படியானால் இவை அவர்கள் கைக்கெட்டாது. முடிந்தவரை ருஷ்யர்கள் சாகுபடி செய்து மகசூல்களை அப்புறப்படுத்தி விடுவார்கள். முடியாததை அழித்துவிடுவார்கள். தேவைக்கேற்க வெள்ளாமை அபாரமாகச் செய்வதென்றால் அசாத்தியமான காரியம். சொற்ப சேதமிட்டு, எதிரிகளான ருஷ்யர்களை வேலை வாங்குவது வெகுசிரமமான காரியம். ருஷ்யாவிலிருந்து தான் எண்ணெய் கிடைக்கும். அதை ருஷ்யர்கள் எதிரி கையில் அகப்படாமல் செய்து விடுவார்கள். இதனால் ஜெர்மன் வேலை தவக்கப்படுவதுடன், வேலையின்றி பெரிய ஜெர்மன் சைனியங்கள் ருஷ்யாவில் தூங்கி வழியும். எண்ணெய் அழிபட்டால் ருஷ்யாவுக்கு இடைஞ்சலில்லை. ஏனென்றால் வ்ளாடிவாஸ்டாக் (Vladivastock) வழியாய் வேண்டிய எண்ணெய் அமெரிக்காவிலிருந்து ருஷ்யாவுக்குக் கிடைக்கும்.

(4) ருஷ்ய சிப்பாய் பாதுகாப்பு யுத்தத்தில் தீரன். என்னவானாலும் விடாமல் சண்டை செய்யும் திறமையுடையவன்.



## ஸிரியாவும் பிரெஞ்சுசாம்ராஜ்ஜியமும்.

இதைப்பற்றி ஜெர்மன் ரேடியோ ஜூன் 9ல் "நமக்கு சம்பந்தமில்லாத இந்த சண்டையில் நாம் சும்மா வேடிக்கை பார்ப்பவர்தான்" என்று பிரசுரித்தது. நாம் ஸிரியாவில் சென்ற சமயம் அப்படிச் சொன்னது. இதற்கு அர்த்தம், விஷி வர்க்கமும் பிரெஞ்சுக்காரர் செல்வாக்கும் எக்கேடு கெட்டுப்போனாலும் போகட்டும் என்பது.

இந்த முக்கியமான பிரதேசத்தில் நேசதேசத்தார் கொஞ்சம் மெதுவாக வியாபிப்பதைக் கண்டு சிலர் பொறுமை யில்லாமல் பேசக்கூடும். உண்மையில் நாம் எதிர் பார்த்ததைக் காட்டிலும் வலுவான எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அதை கொஞ்சம் அடக்கி வருகிறோம். (உதாரணம், பால்மைரா இன்று காலை பிடிபட்டது) விஷி துருப்புகள் சீர்கெட்டு மனந்தளர்ந்து எங்கு பார்த்தாலும் பின் வாங்குகின்றன. ஆனால் கூடுமானவரை நாம் உயிர்ச்சேதமில்லாமல் பார்த்து வருவதை ஸிரிய ஜனங்கள் மெச்சி நன்றியுடையவர்களாக விருக்கிறார்கள். முரட்டுத்தனமாக ஜயித்து, பின்னால் சோறுபோட்டு ஆளுவதைக் காட்டிலும், சுயேச்சையும் சிநேகபாவமும்கொண்ட ஜனங்களை ஆளுவதில் சிரமம் வெகு குறைச்சலாக யிருக்கும்.

அச்சு ரேடியோ மட்டும், நாம் மெதுவாகச் செல்லுவதை வைத்தும, இடையிடையே தீவிரமாக நடக்கும் சண்டையை வைத்தும் நாம் அக்கிரமமாக படையெடுத்தவர்களென்று சொல்லி பிரெஞ்சுக்காரருக்குக் கோபம் போட பார்க்கிறது. இது ஒரு அளவிற்கு பலித்தாலும், டார்லானுக்கு விரோதமாக கிளர்ச்சிகள் ஏற்படுகின்றன, பிடேனிடம் மதிப்பும் குறைந்து வருகிறது. நெராகில் (Nerac) டார்லான் பிறந்த ஊரிலுள்ள சுவர்களிலெல்லாம் அவரை ஏளனம் பண்ணி பொம்மைகள் எழுதப்படுவதாயும் ஸ்விட்ஜர்லண்ட் பத்திரிகை 'பாஸ்லர் நாக்ரிக்டன்' வெளியிடுகிறது. பிடேனைப்பற்றியும் அவமதிப்பான படங்களும் பிரான்ஸ் பூராகவும் காணப்படுகின்றனவாம்; அவர் வெளிப்படுத்தும் "நோட்டீஸ்" களெல்லாம் கிழிக்கப்படுகின்றனவாம்.

இந்த விதமான நடப்புகளால் விஷி வர்க்கத்தார் கொள்கை மாறுதிருக்கலாம்; ஆனால் அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படவில்லையென்றுத் தெரிகிறது; தளகர்த்தர் டி காலே (General De Gaule) ஆபிரிக்காவிலிருந்து வெளியே தள்ள வட ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சுப்படைகளை சேர்த்துவைக்கவேணுமென்ற டார்லான் கொள்கையை அனுசரிக்காமல் வேகாண்டு செய்தது ஒரு நல்ல சூசனை. பிரான்ஸிலும் பிரெஞ்சு சாம்ராஜ்ஜிய நாடுகளிலும், டார்லான்—லவால் ஒத்துழைப்பில் அவநம்பிக்கை ஏற்பட்டு விடுமோவென்ற பயம் விஷி கவர்ன்மெண்டாருக்கு இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த நிலைமையில், ருஷ்யாவைக் கொள்ளையடிக்க தீவிரமாக முனைந்து நிற்கும் ஹிட்லர், தான் முதலில் அமுக்கி கைவசம் செய்த நாட்டாருக்கு யாதொரு உதவியும் புரியாமல் தனிமையில் விட்டுத் தவிக்க விடுகிறான்.

# ஐந்தாம்படைத் தந்திரம்.

சமீப காலத்தில் பிரான்ஸ் இப்பொழுது எவ்வளவு துக்கப்படுகிறதோ அவ்வளவு துக்கத்தில் ஆழ்ந்திருந்தது. பாரிஸில் சாம்ப்ஸ் எலிஸிஸ் வழியாய் ஆர்க்டிட்ரயம்ப் வரை ஜெர்மன் சைனியங்கள் பிரவேசித்து விட்டன. வீடுகளின் கதவுகள் எல்லாம் அடைத்துக் கிடந்தன. ஜனநாயக நாட்டிலிருந்து ஆல்சேஸ் லொரைன் பிடுங்கிக் கொள்ளப்பட்ட பொழுது பிரெஞ்சுக்காரர்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்கவேண்டியதாயிற்று. அது நடந்தது 1870-ம் வருஷத்து யுத்தத்தின் பின் பாதியில். அக்காலத்தில் ஒருவர் மட்டில் தலைமையாக பிரான்ஸ் ஐரோப்பாவில் தான் இழந்த நாட்டுக்குப் பதிலாக வெளிநாடுகளில் ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார். அவர் பெயர் ஜூல்ஸ்பெர்ரி. ஜனங்கள் அவரைக் கண்டித்தார்கள். கோபங்கொண்ட பிரதிநிதி ஒருவர் "இரண்டு பெண்களை பறிகொடுத்து விட்டேன்; அதற்குப் பதில் இருபது வேலைக்காரர்களைக் கொடுக்கிறீரோ?" என்றார். ஆனாலும், ஜூல்ஸ்பெர்ரிதான் ஜயித்தார். ஜெர்மானியர்கள் ஜயமடைந்த உடனடியிலேயே பிரெஞ்சுப் பணமும், பிரெஞ்சு யுத்த வீரர்களும், அந்நிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் பிரெஞ்சுக்காரர்களும் கடல்களைத் தாண்டி ஒரு புதுபிரெஞ்சு நாட்டைக் கண்டுபிடிக்கக் கிளம்பி விட்டார்கள். பெர்ரி சொன்ன பிரகாரம் ட்யூனிஸ், மடகாஸ்கர், காங்கோ, இந்து சீனா, முதலிய இடங்களுக்கு பிரெஞ்சுக் கொடியைத் தாங்கிச் சென்றார்கள். அந்த நூற்றாண்டின் இறுதியில், பெர்ரி ஒரு அட்மிரலால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட பொழுது, உலகத்திலேயே இரண்டாவதாக விளங்கக்கூடிய ஒரு பெரிய சாம்ராஜ்யம் பிரான்ஸுக்குச் சொந்தமாயிருந்தது. அந்த சாம்ராஜ்யத்தின் இன்றைய விஸ்தீர்ணம் 46,00,000 சதுர மைல், ஜனத்தொகை சுமார் 6,50,00,000. மறுபடியும் இப்பொழுது ஜெர்மானியர்களின் ஜயத்தின் உடனடியிலேயே, பிரெஞ்சுக்காரர்கள் இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தையே நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். பிரான்ஸ் தன்னுடைய அழகான பெண்கள் போன்ற பல பிரதேசங்களை இழந்து விட்டது. இந்த வளப்புக் குழந்தைகளிடமிருந்து அவர்கள் எவ்விதமான உதவியை எதிர் பார்க்க முடியும்? பிரெஞ்சு சாம்ராஜ்யத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? இந்தக் கேள்வியின் பதில் தான் இன்று யுத்தத்தின் முதல் பிரச்னையாக இருக்கிறது. பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் விதியைப் பொருத்துத்தான் இருக்கிறது யுத்தத்தின் போக்கு.

ஆகையால் இந்த யுத்தத்தின் பெரிய சண்டைகளில் ஒன்று கிழக்கு மத்திய தரைக்கடலில் நடக்கும். மற்றொன்று மற்றொரு கடலிருக்கிறது. ஜெர்மானியர்கள் ஆவலாகவும் நம்பிக்கையுடனும் அதன் பக்கம் திரும்பி இருக்கிறார்கள். அக்நுயற்களாவே யுத்தம் ஆரம்பித்து விட்டது. இந்த யுத்தம் முடியும் வரை அந்தக் கடலில் சண்டை நடந்து கொண்டே தான் இருக்கும். இதுதான்



இந்த யுத்தத்திலேயே மகத்தான ரணகளம். அதுதான் அட்லாண்டிக் மகா சமுத்திரம். கிழக்கு மத்தியதரைக் கடலில் பிரெஞ்சுக்காரர்கள் தனக்கு உதவுவார்கள் என்று ஜெர்மனி எதிர் பார்ப்பது போலவே, இங்கேயும் விஷி ஸர்க்காரின் துரோகமும், பிரெஞ்சு ஸர்க்காரால் பிரெஞ்சு சாம்ராஜ்யம் ஜெர்மன் அதிகாரத்துக்குள்ளாக்கப்படுவதும் தனக்கு ஒத்தாசையாக இருக்குமென்று ஜெர்மனி நம்புகிறது. அட்மிரல் டார்லான் தன்னிடம் ஸிரியாவை ஒப்படைத்து விடுவானென்று ஜெர்மனி எதிர் பார்த்தது; அந்த நாஸி எண்ணம் பலிக்கு முன் நாம் முந்திக்கொண்டுவிட்டோம். அட்லாண்டிக்குக்குள் துருத்திக் கொண்டிருக்கும் பிரெஞ்சு வடக்கு ஆப்பிரிக்காவையும் மேற்கு ஆப்பிரிக்காவையும் அட்மிரல்டார்லான் தன்னிடம் கொடுத்துவிடுவார் என்று ஜெர்மனி இன்னமும் நம்புகிறது. முக்கியமாய், டாக்கர், காஸாப்ளாங்கா இந்த இரண்டு துறைமுகங்களையும் ஜெர்மனி உபயோகப்படுத்திக்கொள்ள விரும்புகிறது.

ஜெர்மானியர்களுக்கு இந்த இரண்டு துறைமுகங்களும் ஏன் வேண்டுமென்பதைப்பற்றி நான் விவரமாய் விரித்துக்கூறவேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவுக்கு ரொம்ப சமீபத்திலுள்ள இடம் டாக்கர். அங்கிருந்து தென் அமெரிக்காவுக்குப் போவதற்கு உள்ள மைல்கள், வட ஜெர்மனியிலுள்ள ஆகாய விமான தளங்களிலிருந்து ஒரு வருஷத்துக்கு முன்னால் நார்வேயிலுள்ள நார்விக்குக்கு, ஒருநாள் அதிகாலையில் ஜெர்மன் படைகள் ஏற்றிச் சென்ற ஆகாயக் கப்பல்கள்போக எவ்வளவு மைல்கள் பிடித்தனவோ அதைக்காட்டிலும் கொஞ்சம்தான் அதிகமாக இருக்கும்.

காஸாபிளாங்கா டாக்கரைக்காட்டிலும் அமெரிக்காவிலிருந்து கொஞ்ச தூரத்தில்தான் இருக்கிறது; ஆனால் பிரிடன் தோல்வியடையாமல் வெளியேறவேண்டுமானால் பிரிடனும் ஐக்கிய நாடுகளும் கட்டாயமாய் காபந்து செய்துகொள்ளவேண்டியதாய் ஜெர்மானியர்கள் உள்பட நன்கறிந்ததான அட்லாண்டிக்கிலுள்ள முக்கிய வியாபார வழிகளுக்கு ரொம்ப சமீபத்திலிருக்கிறது. இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு வெகுநாள் முன்பாகவே காஸாபிளாங்கா எவ்வளவு முக்கியமென்பதை பிரெஞ்சுக்காரர்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். இனிமேல் புதிதாக வரும் யுத்தத்தில் வடக்கு ஆப்பிரிக்காவிலுள்ள காலனிகளுடன் தங்களுடைய மத்தியதரைக் கடல் போக்குவரத்துப் பாதைகளுக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதையும் தெரிந்துகொண்டுவிட்டார்கள். அட்லாண்டிக்கைத்தாண்டி தங்களுடைய ஆப்பிரிக்கக்காலனிகளுக்குச் செல்லுமாறு ட்யூனிஸிலிருந்து காஸாபிளாங்கா வரை இருப்புப்பாதை போட்டார்கள். ஹிட்லர் உதவியைக் கொண்டு மத்தியதரைக் கடல் துறைமுகங்களிலிருந்து டாக்கருக்குத் தற்பொழுது மற்றொரு ரயில்பாதை போடப்பட்டுவருகிறது. இந்த யுத்தத்தில் காஸாபிளாங்காவும் டாக்கரும் ஜிப்ரால்டரையும், சூயஸையும்போல அவ்வளவு பிரசித்தி பெறப்போகின்றன என்பதை நம்புங்கள். யுத்தம் ஆரம்பிக்கும் முன்பே இது ஹிட்லருக்கு நன்கு தெரியும். பிரெஞ்சு மாகினோட் லயனே அசைக்கமுடியாத அரண் என்று நினைத்துக்கொண்டிருந்த நாள்

களிலேயே ஹிட்லரின் ஒற்றர்கள் இந்தப் பிரெஞ்சு பிரதேசங்களில் ரகசியமாக வேலை செய்துகொண்டிருந்தார்கள். பிரான்ஸ் விழுந்தது முதல் இவர்களின் சங்கியை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. டாக்கர் விமானத்தளத்தில் ஒரு விமானம் வந்து நிற்கிறது; பிரயாணிகள் வந்து இறங்குகிறார்கள்; அவர்களுக்கு ஸ்விஸ், பெல்ஜியன், ஸ்வீடிஷ் பிரயாணச்சீட்டுகள் இருக்கின்றன; துறைமுகத்தில் நிற்கும் இதர பிரயாணிகளுடன் அவர்கள் கலக்கிறார்கள்; துறைமுகத்தை நீர்மூழ்கித் தளமாக அமைப்பது சாத்தியமா என்றதை பரிசீலனை செய்கிறார்கள்; ஐக்கிய நாட்டு காங்ஸலின் வேலைகளை அவர்கள் வேவு பார்க்கிறார்கள்; வேறு சிலர்கள் விஷி ஸர்க்காரின் சம்மதத்தின்பேரில் அனுப்பப்பட்ட ஜெர்மானிய சமாதான கமிஷனைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு வந்து அமைந்து கொண்டு விட்டார்கள். ஜனவரியில் இந்தக் கமிஷனர்களின் சங்கியை 80 ஆகி இருந்தது. அவர்கள் கஸாபிளாங்காவிலிருந்தார்கள். இப்பொழுதோ அவர்களில் 250 பேர்கள் மொராக்கோ என்ற சிற்றரசு நாடுமுழுவதும் வியாபித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த தேசாந்திரிகள் விடுமுறை நாட்களை அனுபவிக்கிறார்கள்; அவர்களுக்குச் செலவுக்கு ஏராளமான பணம் இருக்கிறது; மொராக்காவின் ஒரு டஜன் பட்டணங்களிலுள்ள தெருக்களில் அவர்களைப் பார்க்கலாம். ஆனால் அவர்கள் உடுப்பிலிருந்து அவர்களை நீங்கள் கண்டுபிடித்துவிடமுடியாது. அடியில்கண்ட சில்லரை விஷயங்களால்தான் அவர்கள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள்:— பிரெஞ்சுக்காரர்கள் சில சதங்கள் கொடுக்கும் இடத்தில் பூட் துடைக்கும் கூலிக்கு ஒரு டாலராவது கொடுக்கிறார்கள். சில வாரங்களுக்குமுன்தான் இது போன்ற சம்பவங்கள் டமாஸ்கஸ்ஸில் நடந்தது. உத்தேசிக்கப்பட்ட படையெடுப்புக்கு ஜெர்மன் பிரயாணிகள் ஒரு பூர்வாங்கம்; ஸிரியாவுக்குமுன் இந்த ஜெர்மானிய விடுமுறை சுகவாசிகள் நார்வே, ஹாலந்து, டென்மார்க், ருமேனியா, பல்கேரியா, யுகோஸ்லாவியா, இராக் இந்த இடங்களுக்கு மழைகால விளையாட்டுக்காகவும், வஸந்தகால விடுமுறைக்காகவும் சென்றார்கள். இவைகள் எல்லாவற்றையும்விட பிரெஞ்சு வடக்கு ஆப்பிரிக்கா பெரிய பரிசு. மிஞ்சி விளையாடுவதற்கு மத்தியில் டாக்கரிலும் காஸாபிளாங்காவிலும் இந்த ஜெர்மானிய தேசாந்திரிகள் ஏராளமான வேலை செய்வார்களென்பது நிச்சயம்.

ஜெர்மன் சமாதான கமிஷனர்கள் சமாதானத்தை விட யுத்தத்தில் அதிக அக்கரையுள்ளவர்கள். சீக்கிரத்தில் அவர்கள் வேலைக்கு கூப்பிடப்படலாம். பிரிடிஷ், பிரெஞ்சுப் படைகள் ஸிரியாவுக்குள் பிரவேசித்தது விவகாரத்தை துரிதப்படுத்திவிட்டது. அட்மிரல் டார்லான் கொஞ்சம் கொஞ்சமாய் காட்டிக்கொடுத்து விசுவதாய் ஜெர்மானியர்களுடன் ஒப்புக்கொண்டிருந்தார். முதல் தவணைக்கு கொடுக்க வேண்டியது ஸிரியா; காஸாபிளாங்காவும் டாக்கரும் அந்த ஜாப்தாவில் எவ்வளவு தூரம் தள்ளியிருந்தது என்பதை நாம் யோசிக்கத்தான் முடியும், ஆனாலும் அவைகள் அந்த ஜாப்தாவில் இருந்தனவென்பது நிச்சயம். தற்கால ஸ்திதி மொத்தமாய் எல்லோருக்கும் நன்றாய்



தெரிந்ததுதான், மறக்கமுடியாது. இந்த துறைமுகங்கள் ஜெர்மானியர்களுக்கு ரொம்பவும் பிரயோஜனப்படக்கூடும். தன் சக்திகொண்ட மட்டில் எல்லாவகையிலும் ஜெர்மானியர்களுக்கு ஒத்தாசை செய்வதென்று அட்மிரல் டார்லான் தெளிந்துவிட்டார். ஸிரியாவில் யுத்தம் செய்யவேண்டியதாக ஏற்பட்டுவிட்டதானது ஜெர்மானியர்களையும் அவர்கள் கையாளான விஷி சர்க்காரையும் எதிர்ப்பு ஏற்படுவதற்கு முன் டாக்கர், காஸாபிளாங்காவில் அவர்கள் பிடிப்பை பலப்படுத்தச் செய்யும்.

ஜெர்மானியர்கள் தங்கள் பிரசாரங்களில் தங்களுக்கு ஐரோப்பாவில் மட்டில்தான் அக்கரையென்று பாசாங்கு செய்கிறார்கள். ஐரோப்பா ஜெர்மானிய ஆட்சியில் ஒன்றுபட்டுவிட்டதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த பிராந்தியத்தில் தலையிட பிரிடிஷாருக்கு என்ன அதிகாரம், அமெரிக்கருக்குத்தான் என்ன அக்கரை? நடப்புகள் இந்தப் பொய்களை வெளிப்படுத்துகின்றன. மத்தியதரைக் கடலின் கீழ்க்கோடியிலும் மேலக் கோடியிலும் ஜெர்மனி ஆப்ரிக்காவுக்குள் நுழைவதற்கு முயன்றுவருகிறது. ஆப்ரிக்கா தன் தனதுக்காக மட்டில் முக்கியமானதல்ல, ஆனால் ஆப்ரிக்காவின் மேலக் கரை எதிர்கால பெரிய ரணகளமாகிய அகன்ற சமுத்திரங்களுக்கு வழியாகிறது. இது நமக்கும் தெரியும் ஜெர்மானியர்களுக்கும் தெரியும். "இந்தச் சண்டைக்கு நாஜிக் கொள்கைகளை அடியோடு அழிப்பதைத் தவிர வேறு முடிவு கிடையாது" என்று தன் தலைவர் மொழிகளில் உறுதி கூறியுள்ள அட்லாண்டிக்குக்கு அப்பால் உள்ள சத்ருவுடன் நெருங்கி யுத்தம் செய்ய ஆப்ரிக்கா அவகாசமளிக்கிறது.

---

## யுத்தமும் தினசரி பத்திரிகைகளும்

## பத்திரிகாலயங்கள் தங்கள் வேலைகளை செய்து கொண்டு தான் இருக்கின்றன.

## நாலாபக்கமும் தீயினால் சூழப்பட்டும் பத்திரிகைகள் பதிப்பிக்கப்பட்டுவருகின்றன.

ஜான் பிஷர் எழுதுவது:—

சிறிது காலத்துக்கு முன் கிராம பத்திரிகையான பெர்ரோவின் வொர்செஸ்டர் ஜர்னல் என்பது 250-வது ஆண்டு விழாவை கொண்டாடியது. இப்பத்திரிகை 8 இங்கிலீஷ் அரசர்களையும், 2 அரசிகளையும், பிரெஞ்சு குடிகள் கலவரத்தையும், அமெரிக்கா சுயேச்சை அடைந்ததையும் கண்டிருக்கிறது. நீராவி யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும், பேசும் படங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும் இது கண்டிருக்கிறது.

பிரிடிஷ் பத்திரிகைகள் மிக்க பலமுள்ளவை.

ஆனால் இவ்யுத்த முடிவில் இதிலும் அதிக பலமடையப்போகின்றன.

ஜெர்மானியர், பத்திரிகாலயங்களை தீயிட்டு கொளுத்தவும், பத்திரிகைகளை ஏற்றிச் செல்லும் ரயில் வண்டிகளை நாசம் செய்யவும், பத்திரிகை நிருபர்களை குண்டுகளுக்கு இரையாக்கவும், எத்தனை எத்தனைப்பட்டும் சராசரி தினம் ஒன்றுக்கு 10,000,000 பத்திரிகைகள் வீதம் ஹிட்லர் போலந்துக்குள் பிரவேசித்த 1939-ம் வரு செப்டம்பர்மீ முதல் இன்னமும் பிரதி பிரிட்டிஷ் வீடுகளுக்கும் தபால் பெட்டிகளில் நுழைந்து கொண்டே இருக்கின்றன.

பெர்மிங்ஹாமின் வொர்செஸ்டர் ஊர்களை ஒத்த உள்நாட்டுப் பத்திரிகைகளைப்பற்றி நான் காட்ட வரவில்லை. இவைகளை சந்தாதார்களுக்கு கொடுப்பதற்கு ஒரு வண்டியோ, அல்லது ஒரு வைசிக்கிளும், ஒரு சிறுவனுமோ இருந்தால் போதும். நான் இருப்பது ஒரு குக்கிராமமாயிருந்தாலும் எந்த பிரிட்டிஷாரும் தன் தேசிய கொள்கைகளை விருத்தி செய்து கொள்ள லண்டனில் பிரசுரமாகும் பத்திரிகையையே விரும்புகிறான்.

மேற்குப் பாகமான நாடக சாலைகள் உள்ள பிரதேசத்தை நகரத்தோடு சேர்ப்பதான 'ப்ளீட்' தெரு தான் பத்திரிகை உலகத்துக்கே முக்கியமானது. இத்தெருவிலுள்ள 5 பத்திரிகைகள் சேர்ந்து ஏறக்குறைய 90 லக்ஷம் பிரதிகளை தினப்படி பிரசுரிக்கின்றன.

இவ்வளவு விசேஷமான காரியம், தக்க ரயில் போக்குவரத்து சாதனங்கள் அமைந்துள்ள தேசத்தில் தான் ஒரே இடத்தில் அமையப்பட்டிருக்கக் கூடும்.

இதர தேசங்களில் மாதாந்திர பத்திரிகைகள் பூரா தேச மக்களுக்கும் பரவுகிறதோ அதே மாதிரி இங்கு தினசரி பத்திரிகைகள் பரவுகின்றன. ஹிட்லர் என்னதான் முயன்றாலும் இதை தடுப்பது முடியாது.

மற்றொரு யுத்த காலத்தில் பத்திரிகைகளை பதிப்பதான விஷயம் பணநெருக்கடி. இதையும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பொருட்படுத்தவில்லை. பிரிட்டனில் எல்லா பத்திரிகைகளுமே ஒவ்வொன்றும் ஒரு பென்னிக்கு விற்கப்படுகின்றன. இது பிரிட்டிஷ் மக்கள் ஒவ்வொருவருக்கும் சௌகர்யமாய் இருக்கிறது. வாஸ்தவத்தில் கொடுத்த பென்னிக்கு மேலாகவே லாபம் அடைகிறான்.

காகிதங்கள், பேபர் ஒன்றுக்கு 2/3 பென்னி மட்டில் கிடைத்தால், நஷ்டமடைய இடமில்லை என்று ஒரு பத்திரிகை நிர்வாகிபதி என்னிடம் கூறினார். இங்கிலாந்தில் 11,000 மைல் நீளமுள்ள காகிதம் விலைக்கு வாங்கி பிரசுரிக்கக் கூடும். நிருபர்களின் தந்தி செலவு, தபால் கூலி, பத்திரிகை அனுப்பும் செலவு, கட்டடச் செலவு இவைகள் தான் அதிகப்படி.

விளம்பரம் செய்வதற்கான பணம் கிடைக்காவிட்டால் பத்திரிகைகள் நஷ்டம் அடையும் என்பது வாஸ்தவம். சமாதான காலங்களில் விளம்பரம் செய்கிறவர்கள் வருஷத்தில் சுமார் 2, 3 கோடி பவுன் செலவிடுகின்றனர். இப்பத்திரிகைகளில் 1 அங்குலம் விளம்பரம் செய்ய 6 பவுன் கொடுக்க வேண்டும். படங்கள் மூலம் பத்திரிகை விளம்பரங்கள் போடுவதானால் இந்த 6 பவுனும் ஒரு கால் அல்லது மூக்குக்கு தான் ஆகும்.

அநேகர், விளம்பரம் செய்வது சமாதான காலங்களில் மட்டும் தான் கூடும்



என்று நினைத்தார்கள்.

ஆச்சர்யமாக யுத்தம் நிகழும் போது இதில் நினைத்தபடி மாறுதல் ஏற்படவில்லை.

சிக்கனத்தைக் கருதி பத்திரிகைக்காரர்கள் பத்திரிகை பக்கங்களை பாதி அளவு செய்து விட்டார்கள். இருந்தபோதும் விளம்பரக்காரர்கள் போட்டியிட்டு முந்தி வருகிறார்கள். இதனால் பல பத்திரிகைகளும் லாபத்துடனேயே வேலை செய்கின்றன.

பத்திரிகைகளின் எல்லா அம்சங்களும் குறுக்கப்பட்டுமட்டும் இருக்கின்றன. இப்போதும் பிரதி பிரிட்டிஷாரும், பந்து விளையாட்டு, நாடக நிகழ்ச்சிகள், புதிதாக பிரசுரிக்கப்பட்டுள்ள புத்தக விமர்சனங்கள், ராஜீய சர்ச்சைகள், யுத்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் அறிய முடிகிறது.

## நிருபர்களின் நிலைமை என்ன?

யுத்தமிருந்தாலும் இல்லாவிட்டாலும் பிரிட்டிஷ் நிருபன் சௌகர்யமாகவும், சுயேச்சை உள்ளவனுமாகவே இருக்கிறான். பத்திரிகைகளைச் சேர்ந்த நிருபர்கள், கதை எழுதுபவர்கள், விமர்சனக்காரர்கள், இவர்களில்பெரும்பாலோர் படிப்பு பட்டங்கள் பெற்றவர்கள். எந்த லண்டன் பத்திரிகை நிருபரும் வாரத்துக்கு 8 பவுன் சம்பளத்துக்கு குறைவில்லாதவன். இதற்குமேல் அவன் செலவும், 1-வது கிளாஸ் ரயில் சார்ஜும் அவனுக்கு கொடுக்கப்படுகிறது.

அவன் எவ்வளவுக்கெவ்வளவு தேர்ச்சி அடைகிறானோ அவ்வளவுக்கவ்வளவு சம்பளம் ஜாஸ்தி. பெரிய ஹோட்டல்களில் அங்குள்ள சமாசாரங்கள் கிரகிப்பதற்காக அவன் சாப்பிடலாம். 'டெய்லி மெயிலை'ச் சேர்ந்த சார்லஸ் க்ரேவ்ஸும், 'சண்டே எக்ஸ்ப்ரஸை'ச் சேர்ந்த காட்ப்ரீ வின்னும் வருஷத்துக்கு 3,000 பவுனுக்கு மேலேயே ஊதியம் பெறுகிறார்கள்.

பத்திரிகை வேலை மிக முக்கியமென்றே கவர்ன்மெண்டாரும் நிருபர்கள் 30 வயதுக்குமேல் ராணுவத்தில் சேரவேண்டியதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இருந்தும் இவ்வயதுக்கு மேற்பட்ட அநேக நிருபர்கள் தாமாக ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

அவ்விதம் சேராத மற்றவர்களுக்கு ராணுவத்தில் சேர்ந்தால் எவ்வளவு கஷ்டமோ அதே மாதிரி வேலை இருக்கிறது.

பத்திரிகைக்காரர்கள் 'நார்வே' யில் நடந்த விமான யுத்தத்திலும், டோவருக்குச் சென்ற துணைக்கப்பல் படை வேலைகளிலும், கொடூரமான விமான எதிர்ப்புகளிலும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவரின் சம்சாரம் தன் கணவனுக்கு படுத்துக் கொள்வதற்காக தந்த கம்பளியை அவன் தன் மோட்டாரின் கூட்டின் பேரில் போட்டுக்கொண்டான் என்பதைத்தவிர இவர்கள் எவ்வித தற்காப்பு முஸ்தீப்பும் செய்து கொண்டதாக நான் கேள்விப்படவில்லை.

சமாதான காலங்களில் நிகழ்வதைப் போலவே யுத்த காலத்திலும் பத்திரிகை பிரசாரங்கள் விஷயங்களை பிரசுரிக்கின்றன. விஷயங்கள் பிரசுரிப்பதில் தடைகள் ஒன்றும் கவர்ன்மெண்டால் செய்யப்படவில்லை. தாமாகவே எந்த விஷயம் பிரசுரிக்கப்படாது என்று பத்திரிகைகள் தடை செய்து கொள்கின்றன. எதை பிரசுரித்தால்

சத்ருவுக்கு பயன்படும் என்பதை இவர்கள் நன்கு உணர்ந்து நிபுணர்களாகி விட்டனர்.

பத்திரிகைகள் சட்டப்படி சுயேச்சை உள்ளவைகளாகவே இருக்கின்றன. கவர்ன்மெண்டு நடவடிக்கைகளை பகிரங்கமாகவே குறை கூறுகின்றன. விமான படையெடுப்பு காலங்களில் ஜனங்கள் தப்ப வசதியான இடங்கள் பற்றியும், விமான எதிர்ப்புக்கு அவசியமான தற்காப்பு சாதனங்களைப்பற்றியும் பிரசுரமான சங்கதிகள் கவர்ன்மெண்டுக்கு மிகவும் பயன் அளித்தன. மந்திரி சபை அங்கத்தினர்கள் பலரும் பத்திரிகைகளினால் கவர்ன்மெண்டு தப்பு பிசகுகளை சீக்கிரம் அறியக்கூடுமென்றும் பத்திரிகைகள் சுயேச்சை உள்ளவைகளாகவிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் பத்திரிகை நிலயம் எவ்விதம் நடைபெறுகிறதென்று பார்ப்போம். பெரும்பாகம் மாறுதல் அடையவில்லை. பத்திரிகாசிரியர் என்ன வக்கீல்கள் என்ன (இவர்கள் எப்போது பத்திரிகைகளில் அவதூறான விஷயங்கள் வெளியாகும் என்று மேம்பார்ப்பவர்கள்), வாசிப்பவர்கள் என்ன, நிருபர்கள் என்ன, எல்லாருமே குண்டு வீழ்ச்சிகள் நிகழும்போதுகூட வேலை செய்கின்றனர். ஆனால் சில மேஜைகள் காலியாயிருக்கின்றன.

பிரிட்டனிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு பந்தயம் வைத்து பறந்த விமானம் ஓட்டியும் என்னுடன் கூட பத்திரிகை நிலயத்திலிருந்தவருமான நிருபர் விக்டர் ரிக்கட்ஸ் என்பவர் கடற்கரை விமானப் படையில் சேர்ந்திருக்கிறார். செய்தி பத்திரிகாசிரியர் விமான உற்பத்தி சாலையிலிருக்கிறார். இவர் குண்டு போடும் விமானங்களைப் பற்றியும், சண்டை போடும் பறவை கப்பல்களைப்பற்றியும் அடிக்கடி அறிக்கைகள் வெளியிட்டு வருகிறார். சினிமா நிருபர் கடற் படையிலிருக்கிறார். பிரபலஸ்தியும், 5 அடி உயரமுள்ள வீருமான ஹில்டி மார்க்ஷெண்டைப் போன்ற ஸ்திரீ நிருபர்களும் முக்கிய வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

விமான எதிர்ப்புக் காலங்களில் நிலைய கட்டடங்களின் மாடிகளின் மேல் நின்றுகொண்டு, அவைகளுக்கு அபாயம் நேரிடக்கூடுமோ என்று கவனிக்க பத்திரிகைக்காரர்களே தாமாகவே ஈடுபட்டிருக்கின்றனர். கட்டடங்களில் நேர் உச்சிக்குமேல் விமானங்கள் வருவதாய் இருந்தாலொழிய வேலை நிறுத்தப்படுவதில்லை.

சிறிது நாட்களுக்கு முன் கூட தற்கால வேலைப்பாட்டுடனும், நொருங்கக்கூடியதான கருப்புக் கண்ணாடிகளில் அமைந்ததுமான 'டெயிலி எக்ஸ்பிரஸ்' பத்திரிகாலயத்துக்கு முன்னும், பக்கத்திலும் உள்ள கட்டடங்கள் தீக்கு இரையாய்க்கொண்டிருக்கும் போதும், அதே சமயம் பின் புறமுள்ள வீதியில் நெருப்புப் பிடித்து எரிந்துகொண்டிருக்கும் போதும், அந்த பத்திரிகை நிலயம் வேலை செய்துகொண்டேதான் இருந்தது. தீ அணைப்பதில் அநுபவமுள்ள 20 பேருடன் தாமாக இவ்வேலையில் ஈடுபட்டுள்ள 80 பேர்களும் சேர்ந்த தீ அணைக்கும் படை ஒன்று இப்பத்திரிகை நிலயத்தால் நியமித்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

அதே இரவு தங்கள் கட்டடத்தில் பற்றிய தீயை தீ அணைக்கும் படையினர் அணைத்துக் கொண்டிருக்கையி



லேயே, 'அசோஸியேடட் பிரஸின்' யுத்த நிருபர்கள் கணுக்கால் ஆழமான ஜலத்தில் நின்றுகொண்டே தங்கள் அலுவல்களை பார்த்துக் கொண்டிருந்தனர்.

பத்திரிகை பிரசுரம் செய்வதென்பது கேவலம் அச்சுக் குத்துவது மட்டும் அல்ல. இதர ஐரோப்பிய நாட்டு பத்திரிகைகள் போல அல்லாமல் இப்பத்திரிகைகள் கொட்டை எழுத்துகள் என்ன படங்கள் என்ன இனினும் பலவகையான நாகரீக முறைகளுடன் வெளிவருவன. குண்டுகள் பொழியும்போது கூட எந்த அச்சு கோர்க்கலாம் என்றும் எவ்விதம் கோர்க்கலாம் என்றும் இவர்கள் சலனமன்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் அப்பப்போதைய நிகழ்ச்சிகளை பிரசுரிப்பதாக பத்திரிகைகள் வெளிவரவேண்டிய நேரங்களை அடிக்கடி மாற்றவேண்டியிருக்கிறது.

யுத்தத்துக்கு முன் வெளியாகும் போதுள்ள அவைகளின் அமைப்புகள் கொஞ்சம்கூட மாறுதல் அடையவில்லை.

முக்கியமான மாறுதல் என்னவென்றால் இப்போது இவைகள் முன்னைவிட சீக்கிரமே அச்சடிக்க அனுப்பப்படுகின்றன. ஒருகால் எதிர்பார்க்கப்படும் விஷயம் வராதாமதமாகுமோ என்று பதில்கள் அச்சிடப்பட்டு தயாராயிருக்கின்றன. மத்தியானம் வெளியாகும் 'ஈவனிங் ஸ்டாண்டர்ட்' என்ற பத்திரிகை பதிலி அச்சுக்கோர்த்த யந்திரத்துடனேயே எப்போதும் தயாராகவிருக்கிறது.

ஒரு விஷயத்தில் மட்டிலும் இப்போது அவசரம் கம்மியாகவே இருக்கிறது. பத்திரிகைகளை ஏற்றிச்செல்வதற்கென்றே ஏற்பட்டிருக்கும் பிரத்தியேகமான ரயில் வண்டியை எதிர்பார்த்து 1-மணிக்கு முந்தியே பத்திரிகைகள் ரயில் ஸ்டேஷனுக்கு வந்துசேருகின்றன.

சிறிது நாளுக்கு முன் ஞாயிறு தோறும் வெளியாகும் பத்திரிகைகளில் ஒன்று, இவ்வித ரயில் புறப்படும் இடமான பாடிங்டன் ஸ்டேஷனுக்கு ரயில் புறப்படும் நேரத்துக்கு 1-மணி முன்னதாகவே வந்து சேர்ந்தது. இதற்கு 10-நிமிஷம்கழித்து பிரஞ்சு கடற்கரை துறைமுகங்களின்பேரில் பிரிடிஷ்விமான எதிர்ப்புபற்றி விஷயம் கிடைத்தது. இதைக்கொண்டு பெரிய தலையங்கம் கொண்டதை எழுதலாம். உடனே மறு வெளியீட்டை ஆயிரக்கணக்காய் பதிப்பித்து ரயில் நேரத்துக்குள் பாடிங்டனுக்கு அனுப்பமுடிந்தது.

பத்திரிகை மூட்டைகளை வண்டிகளிலேற்றி ஸ்டேஷனுக்கு கொண்டுபோகிறவர்களைப்பற்றி நான் இன்னும் கூறவில்லை. அச்சு யந்திரங்கள் கட்டடங்களுக்குள் கூச்சலிடுகையில் இவர்கள் வெளியில் வண்டிகளுடன் நிற்கிறார்கள்.

வண்டிகளுக்கு கவசங்கள் இல்லாவிட்டாலும் பலர் இவ்வேலைக்கு சுயேச்சையாகவே வருகிறார்கள்.

கடைசியாக இன்னும் ஒரு விஷயம் ரயிலைப்பற்றி. சில ரயில் வண்டிகள் வேகமாக செல்லாவிட்டாலும் ஒரு புகை வண்டித்தொடரும் இதுவரை ஒரு ராத்திரிகூட நிறுத்தப்படவில்லை சேதப்படுத்தப்படவுமில்லை. வண்டி நிற்கும் இடத்தில் கையால் அச்சுக் குத்துபவன் பத்திரிகைகளை எதிர்பார்த்துக்கொண்டிருப்பான். பிரசுரகாலத்துக்கு பிறகு நேரிட்டிருக்கும் முக்கிய விஷயத்தை பத்திரிகைகளில் கையால்

அச்சுக்குத்தி விடுவான்.

இவ்விதம் நை அச்சில் கண்ட விஷயங்கள் மிகவும் முக்கியமானவைகளாகவே தான் இருக்கும்.

சென்ற சிறிது காலமாகவே இவைகள் எல்லாம் நற்செய்திகளாகவேதான் இருக்கின்றன. வரும் காலத்தில் இதுவரை பத்திரிகைகளை எதிர்பார்த்ததைவிட அதிக உற்சாகத்துடன் பிரதி பிரிட்டிஷாரும் தன் பத்திரிகையை எதிர்பார்க்கும்படிக்கே இருக்கும் என்று நான் உறுதியாய் கூறுவேன்.

---

## அச்சுக்கு விரோதமாய் ஒரு வருஷ யுத்தம்.
## வரவு செலவு எப்படி நிற்கிறது.
## இருவிதத் தாக்குதல் எப்படி சமாளிக்கப்பட்டது.
## ஆகாயத் தாக்குதலும் கடல் முற்றுகையும் என்ன பண்ணக் கூடும் என்பது.

ஸ்ட்ராடெஜிகஸ் எழுதுகிறார்—

பிரான்ஸ் விழுந்தவுடன் பிரிடன் பணிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இது கோரதலைக்கண்டே ஜெர்மனியும் இதாலியும் உடன் காலத்தில் இங்கிலாந்தைத் தாக்குவது, அத்துடன் அதனுடைய சாம்ராஜ்ய போக்குவரத்து மார்க்கங்களையும் தாக்குகிறதென்ற திட்டம் வகுத்தன. மிக்க முன் யோசனையுடன் வகுக்கப்பட்ட இந்த திட்டத்தை பிரிடன் ஒரு வருஷம் எதிர்த்திருக்கிறது. ஒரு ஐந்தொகை போட்டு லாபநஷ்டம் கணக்கிடுவது இப்பொழுது சாத்தியம்.

ஒவ்வொரு சைனியமும் ஒரு காபந்தான முக்கிய கொத்தளத்திலிருந்துதான் யுத்தத்தில் பிரவேசிக்கவேண்டும் என்பது ஒரு அஸ்திவாரக் கொள்கை. ஆனதால் பிரிடன் தன்னை முதன் முதலில் காபந்து செய்துகொள்ளவேண்டியதாயிற்று.

இங்கிலாந்து பணிய ஹிட்லர் ஆறு வார கெடு நியமித்திருந்ததே அதற்கு ஒரு மரியாதை. அதன் நோக்கத்தை கணக்கில் சேர்க்காமல், மற்ற சந்நிவேசங்களை மட்டில் கவனித்தால், யுத்தப் புயலிலிருந்து அது தப்புவது அரிதென்று எதிரிகள் எதிர்பார்த்ததில் என்ன பிசகு? அதன் முதலணித் துருப்புகள் டங்கர்க்கில் பன்மடங்கு எதிரிகளுடன் போரிட்டு வாபஸ் வாங்கின; தன் தளவாடங்களையெல்லாம் இழந்தன. ஜெர்மனிக்கு எந்த அம்சத்திலும் ஈடாக நின்று போரிட பிரிடனுக்கு ஒரு சாதனங்கூட இல்லை.

ஜெர்மனியுடன் ஒப்பிட்டால் அதற்கு சைனியமில்லை. டாங்கிகளோ, பீரங்கிகளோ ஒன்றும் சொல்லும்படியாக இல்லை. ஒரு சிறு விமானப்படை மட்டில் இருந்தது. கடலில் மட்டில் உண்மை ஆதிக்கம் இருந்தது; ஆனால், இதாலிய கடற்படையும், ஜெர்மன் கடற்படையும் ஒன்று சேர்ந்தால் அது ஒண்டியாக சமாளிக்க முடியுமா என்ற விவரம் தெரியவில்லை.



## ஆகாயத்திலிருந்து முதன் முதல் சோதனை.

முதல் சோதனை ஏற்பட்டது ஆகாயத்திலிருந்து. ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பிரிடிஷ் தீவுகளே இடைவிடாமல் கொடூரமாக லுப்ட்வாபால் 'ஜெர்மன் விமானப்படை, தாக்கப்பட்டன. தன்னைக்காட்டிலும் பன் மடங்குள்ள ஜெர்மன் படையை ஆர். ஏ. எப். இசுக்கன்னியில், அநேக சண்டைகளில் தோற்கடித்தது. நாளதுவரை பிரிடிஷ் தீவுகளை படையெடுப்பதில் வெற்றி ஏற்படவில்லை.

இரண்டாவது சோதனை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. போக்குவரத்து வழிகளின்மீது ஏற்பட்ட தாக்குதலை இங்கிலாந்து முறியடிக்கவேண்டும். வெளிநாடுகளில் இங்கிலாந்து செய்யும் சந்நாஹங்கள், தன் யுத்த சக்திகளை ஒன்று திரட்டுவது,—ஏன்? அதன் ஜீவாதாரமே இதில் வெற்றி பெறுவதைப் பொருத்திருக்கிறது. இதில் ஜெர்மனி சந்தேகமற தோற்கடிக்கப்படாவிட்டாலும், அது யாதொரு பெரும் சேதமும் செய்ய முடியவில்லை. முக்கியமான யுத்த சப்ளைகளை பிரிடனுக்குக் கொண்டுவந்த கப்பல்கள் மூழ்கியது வாஸ்தவம். மார்க்கங்கள் அபாயத்துக்குள்ளாகி தடைப்படாமலிருந்தால் வெளிநாடுகளில் எவ்வளவு யுத்த சந்நாஹங்களை விருத்தி செய்திருக்கலாமோ அவ்வளவு செய்யமுடியவில்லை என்பதும் உண்மை. ஆனால் எதிரிக்கு இவ்வளவுதான் லாபம்—பிரிடனை கொஞ்சம் தாக்காட்டியது.

பிரிடிஷ் யுத்த முயற்சிகளைத் தடுக்கும் ஜெர்மன் திட்டம் ஆர். ஏ. எப். பின் வளர்ச்சியை தடைசெய்ய முடியவில்லை. ஆர். ஏ. எப். விடாமல் பலமாக ஜெர்மனியின் யுத்த சக்திகளை அழித்துவருகிறது. ஜெர்மனி பிரிடிஷ் உறுதியை குலைக்க முயன்றது. பிரிடிஷாரின் பிடிவாதம் உலகப்பிரசித்தியானது. இதற்கு மாறாக பிரிடிஷார் தாங்கள் முழு பலத்தையும் ஜெர்மன் யுத்தத் தொழிற்சாலைகளில் பிரயோகித்து தாக்கினார்கள். ஆங்கில வீடுகள் எவ்வாறு ஜெர்மன் வெடிகுண்டால் 'புதுபுது' என்று உதிர்ந்தனவோ, அதேமாதிரி ஜெர்மன் தொழிற்சாலைகளும் உதிருகின்றன. ஆங்கில வீடுகள், ராணுவ திருஷ்டியாக பயனற்றன; ஜெர்மன் தொழிற்சாலைகள் மிக்க முக்கியம்.

பிரிடிஷ் முற்றுகையின் சுருக்கை ஜெர்மனி தளர்த்தமுடியவில்லை. இரு தாக்குதல்களின் பயனாக ஜெர்மனியின் கோதுமை, கொழுப்புகள், எண்ணெய், அநேக உலோகங்கள் குறைவு ஏற்பட்டிருக்கிறது. விமானத்தாக்குதல்களால் விருத்தியடைந்த பிரிடிஷ் கடல் முற்றுகை ஜெர்மனியை கீழேவிழச்செய்யும், அப்பொழுதுதான் நாம் தரையில் ஜெர்மனியை தாக்கும் பக்குவகாலம். சென்ற மஹாயுத்தத்தில் ஜெர்மனியை தோற்கடித்தது கடல் முற்றுகைதான் என்று திருப்பித்திருப்பிச்சொல்வது ஹிட்லரே. அதுதான் தரையில் இறுதியான தாக்குதலுக்கும் வெற்றிக்கும் வழி விலக்கியது என்று நாமும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆகாயத் தாக்குதலின் உதவியால் அது இப்பொழுதும் அதே அனுகூலம் செய்யப்போகிறது.

கடலில் பிரிடன் ஜெர்மன் கப்பல்களுள் 'பிஸ்மார்க்கை' மூழ்க அடித்து விட்டது; 'ஷார்ன்ஹார்ஸ்டையும்' 'நீஸ்னௌவையும்' 'பிரின்ஸ் யூஜெனையும்' சண்டைக்குலாயக்கன்னியில் துளைத்துவிட்டது, டாரன்டோவிலும், மடபானிலும் இதாலிய கடற்படையின் இடுப்பை முறித்துவிட்டது. பிரிட்டனுக்கு நஷ்டம், 'ஹூட்', கிழக்கு மத்தியதரைக்கடலின் குறுகிய நீர்நிலைச்சண்டைகளில் அநேக க்ருய்ஸர்களும் நாசகாரிகளும், ஆனால் இதுவகைக் கப்பல்களில் எதிரியின் சேதம் ஜாஸ்தி. ஆனதால் வரவு செலவு கணக்கில் லாபம் பிரிட்டனுக்கே.

நாலுலட்சம் பலமுள்ள இருபெரும் இதாலிய சைனியங்களை பிரிட்டன் அழித்திருக்கிறது. இதன் முக்கியத்வத்தை நாம் சரிவர உணரவில்லை. வெற்றி அவ்வளவு இலகுவானது. ஒன்றுமட்டில் ஞாபகம் வைத்துக்கொள்ளுக—ஒவ்வொரு சைனியத்தின் சேனாதிபதி ஒரு யோக்கியதைபெற்ற இதாலியத்தலைவர்; சைனியத்தின் தளவாடங்கள் அபரிமிதம்; பயிற்சி சிலவருஷக்கணக்காக. முதலில் ஜெனரல் வேவலின் படையைவிட அவர்கள் ஆள் பலம் பதின்மடங்கு, பீரங்கிபலம் 20 மடங்கு.

இவ்வளவு மடங்கு அதிகபலம் வாய்ந்த சத்துருவுடன் சண்டை செய்வதில் தோல்விகள் ஏற்படாமல் இருக்குமா? அதன் பயனாக கிரீஸ், கிரீட் இவைகளிலிருந்து வாபஸ் வாங்கவேண்டியதாயிற்று, ஆனால் நமக்குக் கிடைத்திருக்கும் தகவலால், இவ்வாறு கிரீஸிலும் க்ரீட்டிலும் நாம் இறங்கியதால்தான் இராக்கில் ரஷீத் அலியின் ஒத்தாசைக்கு ஜெர்மனிவரமுடியவில்லை, என்று தெரியவருகிறது. இதன் விளைவாக, இராக்கை ஜெர்மனி பிடித்துக்கொள்ளவேண்டும் என்ற முயற்சிகள் பலிக்கவில்லை. சமீபக்கிழக்கின் நிலைமையில் ஒரு அடிப்படையான மாறுதலும் ஏற்பட்டது.

இராக் கலகத்தை அடியிலேயே நசுக்காமலிருந்திருந்தால் ஜெனரல் வேவல் ஸிரியாவுக்குள் பிரவேசித்திருக்கமுடியாது. ஸிரியா பிரவேசத்தில் ஒத்தாசைக்கு இராக்கிலிருந்து ஒரு பகுதியை அனுப்பியிருக்கமுடியாது. லிபியாவிலிருந்து நாம் வாபஸ் செய்ததில்தான் ஒரு நஷ்டமுமில்லை. ஆனால் முதன்முதலே, கிரீஸுக்கு ஒரு படை அனுப்பினால் ஜெனரல் வேவலின் படை பலஹீனப்படும், ஏதாவது திடீர் தாக்குதலுக்குட்பட வேண்டிவரும் என்பது எதிர் பார்க்கப்பட்டதுதான்.

ஜெனரல் வேவல் தன் முன் அணிகளை வாபஸ் வாங்கவேண்டிவந்தது. ஆனால் ஒன்று குறிப்பிடத்தக்கது—எகிப்து எல்லையைத்தாண்டி உட்பிரவேசித்த எதிரி 10 வாரங்களுக்கு முன் எங்கிருந்தானோ அங்கேயேதான் இருக்கிறான்.

ஜெனரல் வேவல் ஜெர்மன் நிலைகளின் பலாபலத்தை ஆராய ஒரு பலத்த தாக்குதல்கூட செய்தார். 4 நாள் யுத்தத்தில் அவர் எதிரிக்கு பெருத்தநஷ்டம் விளைவித்து அநேக கைதிகளையும் பிடித்தார், இத்துடன் ஸிரியாவும் பிடிபட்டு வருகிறது. ஆனால் அது வெறும் ராணுவயுத்தமாக அல்லாததால் சற்று தாமதம் ஆகிறது.

இதுதான் பிரிடன்தனித்து நின்று போர்செய்த ஒரு வருஷத்தின் லாப நஷ்டக்கணக்கு. இதனால் பிரிட்டிஷார் எவ்வாறு சந்தோஷம் அடையமுடியாமல் இருக்கமுடியும்?



# ருஷ்ய-ஜெர்மானிய யுத்தத்துக்கு முன் சின்னங்களின் ஒரு சுருக்கம்.

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் முற்றிக்கொண்டுவந்த சச்சரவுகள் ஜூன்மீ 22வ ஞாயிற்றுக்கிழமையன்று அதிகரித்துவிட்டன. ஐரோப்பா பூராவிலும் உலாவிக்கொண்டிருந்த வதந்திகளுக்கு யுத்தம் ஆரம்பித்தது மூலம் முடிவு ஏற்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் எச்சரிக்கையில்லாமலும், யுத்த அறிவிப்பு இல்லாமலும் பால்டிக் சமுத்திரத்திலிருந்து கருங்கடல் வரையிலுள்ள விஸ்தாரமான போர்முனையில் ருஷ்யர்களை ஜெர்மானியர்கள் தாக்கினார்கள். இதற்கு இரண்டு மணிகளுக்கு முன்தான் மாஸ்கோவிலிருக்கும் ஜெர்மானிய அயல்நாட்டு மந்திரி ஒரு லக்கோடாவில் ஜெர்மனி ஏற்படுத்தியிருக்கும் குற்றப்பத்திரிகையைக் கொடுத்தான்.

## ஜெர்மானிய ஆடு.

இருதரப்பாரும் எல்லாவிதமான முறைகளையும் அனுஷ்டித்தார்கள். மாஸ்கோ ஒலிபரப்பில் ஜெர்மானிய எதிர்ப்பு ஒப்பற்ற பெருந்துரோகமான செய்கையென்று M. மாலடோவ் ஒலிபரப்பினான். ஹர் வான் ரிப்பன்ட்ராப் அழகுள்ளதும் ரத்தம் தோய்ந்ததுமான ஆட்டுத்தோலைப் போட்டுக்கொண்டு, ருஷ்ய ஓநாயானது பயந்த ஜெர்மன் ஆட்டை வெருட்டுகிறதென்றும், மெதுவாயும் வெண்மையாயுமுள்ள அதன் ரோமங்களைக் கத்தரிக்க யத்தனம் செய்வதாகவும் குறைகூறினான். முக்கியமாக, பின்லாந்துக்கு ஜெர்மனி உதவி செய்ய மறுத்ததுமல்லாமல், அப்பொழுது நேசநாடாகயிருந்த இதாலியிலிருந்து உதவி வந்ததைத் தடை செய்ததையும் மறந்துவிட்டு பின்லாந்து யுத்தத்தில் ருஷ்யாவின் முயற்சியில் கவலையுள்ளவன்போல் அவன் பாசாங்கு செய்தான். இதற்கு ஆதாரமாக பெல்கிரேடிலிருந்து தஸ்தாவேஜிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளிலிருந்து, சமாதானத்தில் அபிலாஷையுள்ளவும், கபடமற்றவனுமான ஹிட்லரைக் குறித்துக் கபடமாய் ருஷ்யா ஏற்பாடு செய்தது என்று ருஜுவாயிற்று. சென்ற நவம்பர் மாதத்தில், டார்டனெல்ஸின் ஆதிக்கத்தைக் கொடுக்கும்படி துருக்கியை கட்டாயப்படுத்த தனக்கு உதவி செய்யவேண்டுமென்று ஜெர்மனியை ருஷ்யா கட்டாயப்படுத்தியதென்று அபாண்டமாகப் புளுகினான்.

## நாய் திரும்புகிறது.

ஹிட்லரும் குறிப்பாகப் பேச ஆரம்பித்தான். சென்ற இரண்டு வருஷங்களாக கவனமில்லாமல் பெர்கஸ்காடனில் புஸ்தக அலமாரியின் மேல் தட்டில் கிடந்த மெயின் காம்பு என்னும் புஸ்தகத்தை எடுத்து ருஷ்யாவைப்பற்றி எழுதியிருக்கும் இரண்டாவது அனுபந்தம் 14-வது அத்தியாயத்தைப் பிரித்து, மறுபடியும் படிக்க ஆரம்பித்தான். "ருஷ்யாவிலுள்ள தற்காலத்திய அரசர்கள் ரத்தம் தோய்ந்த குற்றவாளிகளென்பதை மறக்கக்கூடாது. எல்லா தேசங்களிலும்

வியாபித்திருக்கும் யூதன்தான் இன்று ருஷ்யாவில் எஜமானன். பிஸ்ஸிபப் மூல
மாக இந்தப் பிசாசை ஓட்டமுடியாது" என்று எழுதியவைகளுக்கு உதவியாக
"பொது உடைமைக் கொள்கைக்கும் தேசிய ஜனநாயகத்துக்கும் மிகுந்த விரோதம்.
பொது உடைமைக் கொள்கையுள்ள ருஷ்யா, தேசிய ஜனநாயகக் கொள்கையுள்ள
ஜெர்மனியை பின்பக்கமாகக் கொலைசெய்ய உத்தேசித்தது. பொது உடைமைக்
கொள்கையின் அபாயங்கள் அதிகமானவை" என்று சொன்னான். தான் சொன்ன
வார்த்தைகளுக்கெல்லாம் புதுமாதிரியாக அர்த்தம் சொல்ல ஹிட்லர் ஆரம்பித்து
விட்டான். "யுத்தம் செய்யவேண்டிய நோக்கத்துடன் இல்லாத ஒரு ஒப்பந்தம்
அர்த்தமில்லாதது, பிரயோஜனமற்றது." ஒப்பந்தங்களை முன் போக்காகவுள்ள
யுத்தங்களெல்லாம் ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டவர்களோடுதான். அதில்
சம்பந்தமில்லாத மூன்றாவது தேசத்தாரோடு அல்ல.

## ஹிட்லரின் அவசரத்துக்குக் காரணம்.

ருஷ்யாவை திடீரென்று தாக்கியதற்குக் காரணம் இந்த யுத்தத்தில் சீக்கிர
மாக வெற்றியடைய முடியாதென்று ஹிட்லர் கண்டுகொண்டதுதான். நீடித்த
யுத்தத்திற்கு, ஐரோப்பாவில் தனக்காக வேலை செய்பவர்களுக்கு உணவுக்குத்
தேவையான கோதுமையை யூக்ரேனிலிருந்து அடையவேண்டும். அமெரிக்கா
வின் பூர்ண உதவியுள்ள பிரிடிஷாரைத் தாக்குவதற்கு தன்னுடைய யந்திரங்
களுக்கு எண்ணெயை காகஸஸ் மலைகளிலிருந்து பெறவேண்டும். ஐரோப்பாவில்
அறுவடையின் குறைவு ஏற்படக்கூடுமென்பதினால் கோதுமை ஸப்ளையை
அதிகரிக்க வேண்டிய அவசரம் ஏற்பட்டுவிட்டது. யூக்ரேனில் ஏராளமான
கோதுமை கிடைக்கக்கூடிய ப்ரதேசங்களிருக்கின்றன. இராக்கையும் மத்தியக்
கிழக்கையும் வசப்படுத்த முடியாமல் போனதிலிருந்தும் பிரிடனுடைய
விமானங்களின் எதிர்ப்பு விருத்தியடைவதிலிருந்தும் எண்ணெய் ஸப்ளையை
அதிகப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. பிரிடனை இப்பொழுது
தாக்குவது முடியாத காரியமென்று ஹிட்லர் நினைத்தான்போலும். இந்த
விஷயத்தில், பாதுகாப்புக்கு விமானங்களின் உதவியில்லாதிருந்தும் பிரிடிஷாரிட
மிருந்து ஜெர்மனிக்கு கிரீட்டில் ஏற்பட்ட நஷ்டங்களையும் ஹிட்லர் பொருட்
படுத்தியிருக்கவேண்டும். தனக்கு ருஷ்யாவிலிருந்து கிடைக்கக்கூடிய சாமான்
களின் ஸப்ளையை மதித்து ஹிட்லர் பிரிடனுடைய முற்றுகை ஏற்பாட்டை
பரிகசிக்கவும், பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் எதிராக விமானங்களையும்
பீரங்கிகளையும் டன் கணக்கில் ஏராளமான வெடிமருந்துகளையும் உபயோகப்
படுத்தவும் நினைக்கிறான்.

## ஜெர்மனியின் வேலை.

இந்தப் பெரிய எதிர்ப்பில் 200 மிலியன் ஜனங்களுள்ள ஒரு பெரிய தேசத்தை
ஜெர்மனி அழிக்கவேண்டும். அவர்களிடமே வேண்டிய வெடிமருந்துகள் ஸப்ளை
யுள்ளவும், தங்களுடைய வாழ்க்கைக்காக யுத்தம் செய்யவேண்டுமென்ற
தீர்மானத்தோடும் இருக்கும் ஒரு பெரிய சைனியத்தை ஜெர்மனி ஜயிக்கவேண்டும்.



பிறகு சதியாலோசனை செய்வதில் சாமர்த்தியசாலிகளும், பிரசார முறைகளில்
தீரர்களுமான இந்தப் பெரிய தேசத்தை அடக்கியாளவேண்டும். ஜெர்மனிக்குத்
தேவையான பொருள்களை ருஷ்யாவுக்கு வேண்டியவைகளிலிருந்துதான் எடுத்துக்
கொள்ளவேண்டும். இங்கேயும் அதிருப்தியுள்ள ஒரு ஜனங்களிருப்பதை அவன்
எதிர்பார்க்கவேண்டும். ருஷ்யாவில் குயிஸ்லிங்குகளிருந்தாலும் அவர்கள்
அவ்வளவு சாமர்த்தியமாக துரோகம் செய்யமாட்டார்கள். பிறகு அவர்கள்
ருஷ்யாவின் போக்குவரவு மார்க்கங்களை சீர்படுத்த வேண்டும். முக்கியமாக
ருஷ்யாவிலுள்ள இருப்புப் பாதைகளை ஜெர்மனி, ஐரோப்பாவிலுள்ள சாதாரண
அகலத்துக்கு அனுசரித்ததாக மாற்றவேண்டும்.

## எதிர்த்து நிற்கும் படைகள்.

ருஷ்யப் போர் முனையில் ஜெர்மனிக்கு 140 பகுதி சைனியங்களும், ருஷ்யர்
களுக்கு 160 பகுதி சைனியங்களுமிருக்கின்றன. யந்திரங்களைக்கொண்டு சண்டை
செய்வதில் சாமர்த்தியம் வாய்ந்த ஜெர்மனிக்கு ருஷ்யாவின் சாய்ந்த பொட்டல்
கள் லாயக்கான பிராந்தியங்கள். ஆனால், அநேக வருஷங்களாகத் தன்னுடைய
தற்காப்புகளை ருஷ்யா பலப்படுத்தியிருக்கிறது. சென்ற பின்லாந்து யுத்தத்
திற்குப் பிறகு மார்ஷல் டிமோஷென்கோவின் தலைமையின் கீழ், அநேக பாடங்
களைக் கற்றுமிருக்கிறது. ருஷ்ய சைனியமானது ஏராளமாக கவசம் பூண்டிருக்
கிறது. யூரல் மலையிலுள்ள யுத்த தளவாட சாமான்கள் உற்பத்தி செய்யும்
நிலயங்கள், ஜெர்மன் விமான எதிர்ப்புக்கு அப்பாலிருக்கின்றன. ருஷ்ய விமா
னப்படையானது ஜெர்மனியுடன் ஒப்பிட்டால் இரண்டாவதாகச் சொல்லலாம்.
ருஷ்யாவிடம் ஏராளமான, புதிதான, ரகசியமான விமான விசேஷங்களிருப்ப
தாக அவர்கள் அறிவிக்கிறார்கள். ருஷ்யாவிடம் கனமான கப்பல்களில்லை
என்பது உண்மை. ஆகிலும் அவர்களிடம் நவீன முறையில் கட்டப்பட்ட அநேக
நாசகாரிகளும், நீர்மூழ்கிகளுமிருக்கின்றன. அவைகளைப் பால்டிக் ஸமுத்திரத்
திலிருந்து ருஷ்யாவிலுள்ள நதிகள், கால்வாய்களின் வழியாக கருங்கடலுக்குக்
கொண்டுவரலாம்.

## ருஷ்யர்களின் மனோதைரியம்.

ருஷ்யாவுக்குத் தேவையான யுத்த தளவாடங்கள் அங்கேயே உண்டு
பண்ணப்படுவதாலும், ருஷ்யாவின் தற்காப்பு ஏற்பாடுகளைப்பற்றி பகிரங்கமாக
ருஷ்யா வெளிப்படுத்தாததாலும், அதன் வலிமையையாவது, அல்லது ருஷ்யா
வின் பலஹீனத்தை, (அதாவது ஏற்பாட்டுக் குறைவை) அது சீர்திருத்திவிட்டதா
என்றாவது மதிக்க இயலவில்லை. ருஷ்யாவைப்பற்றிச் சொல்லுவதில் நிபுணரான
ஸர் பெர்னார்ட் பாரிஸ் என்பவர் சாதாரண ருஷ்யர்களின் மனோதைரியத்தைப்
பற்றியும், இது ருஷ்யாவில் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் கல்வி அபிவிருத்தியின்
பயனென்றும் வியாக்யானம் செய்திருக்கிறார். இந்த யுத்தத்தில் முதலாவது
வெற்றிபெறுவதானால் வேனிற்காலத்திற்குள் ருஷ்யாவை ஹிட்லர் பாழாக்க
வேண்டும்.

# பின்னும் ஒரு ஒப்பந்தம் ரத்தாகிவிட்டது.

மெயின் காம்பில் ஹிட்லர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்தால் அது தான் புதிய யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அடையாளம். இந்த யுத்தத்தின் இறுதியில் ஜெர்மனி அழிந்துவிடும்.

1939-ம் வருஷம் ஆகஸ்டு 24-ம் தேதி, வெகு நாளாக ஏற்பாடுகள் செய்து வந்த யுத்தத்திற்கு அடையாளமாக ருஷ்ய-ஜெர்மன் அநாக்கிரமண ஒப்பந்தத்தை ஹிட்லர் செய்து முடித்தான். அவனுடைய ஜோஸ்யத்தின் முதல் பாகம் வாஸ்தவமாக ஆகிவிட்டது.

1941-ம் ௵ ஜூன் ௴ 22-ம் தேதியன்று மற்றொரு ஒப்பந்தத்தை ரத்து செய்து ருஷ்யாவைத் தாக்கியதன் மூலம், ஜெர்மனியின் முடிவு என்ற ஜோஸ்யத்தின் இரண்டாவது பாகத்தை ஹிட்லர் பகிரங்கப்படுத்தி விட்டான்.

## அக்காலமும், இக்காலமும்.

1940-ம் ௵ ஜூலை ௴ 19-ம் தேதியன்று, அதாவது ஒரு வருஷத்துக்கு முன், பிரிட்டனுக்குக் கடைசியாக ஒரு முறை சமாதான முறையை ஹிட்லர் போதித்தான். அச்சமயம் ஹாலந்தும் பெல்ஜியமும் ஹிட்லர் வசமாகி விட்டன. பிரான்ஸ் நாசமாக்கப்பட்டு, இரண்டு பாகமாகி விட்டது. ஸ்காண்டிநேவியாவிலும், நெதர்லாந்திலும், பிளாண்டர்ஸிலும், பிரான்ஸிலும் நிலயங்கள் ஏற்பட்டதினின்றும் பிரிடிஷ் தீவுகளைத் தாக்க ஜெர்மனிக்கு விசேஷமான அநுகூலம் ஏற்பட்டது. வட ஆபிரிக்காவில் ஸூயெஸுக்கு இதாலியர்களிடமிருந்து பயம் உண்டாகியிருந்தது.

நியாயமாக அவன்தான் வெற்றிபெற்றவன் என்று ஹிட்லர் கோஷித்தான். அவனுடைய வெற்றிகளைப்பற்றியும் அவனுடைய வலுவைப்பற்றியும் பீத்திக் கொண்டான். இந்த யுத்தம் இன்னும் ஏன் நடந்துவருகிறதென்றும் அவன் சொன்னான்.

பின்னும் அவன் சொன்னதாவது:—ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் புதிதாக ஒரு மனஸ்தாபம் ஏற்படுமென்று இங்கிலீஷ் மந்திரிகள் நம்புகிறார்கள். ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்குமுள்ள சம்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டுவிட்டன. ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் சச்சரவு ஏற்படும் என்பது பாலியமானது. ஐரோப்பாவில் ஏற்படக்கூடிய கலவரத்திலிருந்து தன்னுடைய பளுவை ஒருவாறு நீக்கிவிடலாமென்ற பிரிடிஷ் எண்ணமானது ஜெர்மனி, ருஷ்யா சம்பந்தப்பட்ட மட்டில் பொய்தான்.

## மாறுதலான சமயம்.

ஹிட்லரின் பிரட்டல் வெளியாகிவிட்டது. அவனுடைய சமாதானப் பேச்சை பிரிடிஷார் அவமதிப்புடன் தள்ளிவிட்டார்கள். கோயரிங்கின் விமான பலத்தினால் உண்டான சேதங்களை அநுபவித்தார்கள்.



புதிய நிலயங்களிலிருந்து ஜெர்மன் வெடிகுண்டு வீசும் விமானங்கள் 20, நூறுகளாக வந்தன. 20, நூறுகளாக பகலில் சுட்டும் தள்ளப்பட்டன. படையெடுப்புக் கப்பல்கள் தயார் செய்யப்பட்டு அவை கால்வாயைத் தாண்டுவதற்கு முன்னாகவே நாசமாக்கப்பட்டுவிட்டன. பிறகு விமானங்கள் இரவில் எறிவெடிகுண்டுகள் வீசி ஜன நெருக்கமுள்ள பிரதேசங்களில் சேதம் விளைவிக்க முயன்றன. அமைதியும், தைரியமும், பாதுகாப்பு ஏற்பாடுகளில் மேன்மையும் இருந்ததால் இந்தப் பிரயத்தனங்கள் வீணாகப்போய் விட்டன.

இங்கு ஏற்பட்ட விசேஷமான அபஜயத்திலிருந்து தான், ஜெர்மனி பிறகு செய்த, ராணுவ, ராஜ்ஜியத் தந்திர ஏற்பாடுகள் கிளம்பின. தன்னுடைய வீட்டிலேயே, பிரிடனை ஹிட்லர் முறியடித்திருந்தால் சென்ற ஒன்பது மாதங்களில் ஹிட்லர் கைக்கொண்ட ஏற்பாடுகளெல்லாம் அவசியமாகயிருந்திருக்காது.

இராக்கில் அவனுடைய கருவியான ரஷீத் அலி தோல்வியுற்றதும், வட ஆபிரிக்காவில் ஜெர்மன் துருப்புகளுக்கு ஏற்பட்ட தடங்கலும், கிரீட்டில் பிரிடிஷாரின் உக்கிரமான எதிர்ப்பு ஏற்பாடும், ஸிரியாவில் விஷிக்கு எதிராகச் செய்த ஊக்கமான ஏற்பாடும், ராணுவ லாபங்களை அளிக்க சம்மதிக்க மாட்டோமென்ற துருக்கியின் தீர்மானமும், இம்மாதிரியாக நாஸிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளும் இவைகளுக்குப் பின்னும் பிரிடன் ஐக்கிய நாடுகள் இவைகளின் வலு அதிகரிப்பதும் தான் ஒரு நீடித்த யுத்தத்தை நடத்தவேண்டி வருமென்ற பயத்தை ஹிட்லருக்கு உண்டுபண்ணி விட்டன.

ஹிட்லர் செய்யக்கூடியது இரண்டு காரியங்கள் தான்—பிரிடன் பேரில் படையெடுப்பது. அல்லது ருஷ்யா பேரில் படையெடுப்பது. பிரிடன் பேரில் படையெடுக்க, நல்ல காரணங்களைக்கொண்டு ஹிட்லர் பயப்படுகிறான். ருஷ்யாவுடன் யுத்தத்தில் ஹிட்லர் வெற்றி பெற்றால், கடைசியில் திரும்பி, மேற்கு திசையில் தன்னுடைய முடிவை எதிர் பார்க்கவேண்டியது தானென்று சர்ச்சில் எச்சரித்திருக்கிறார். "இப்" என்னும் பதத்தின் வித்யாசத்தை இன்னும் சில வாரங்களில் தெரிந்துகொள்ளலாம்.

## நாஸிகள் தங்கள் வார்த்தைகளையே விழுங்குகிறார்கள்.

நாஸிகள் வாக்குறுதிகள் நாஸிகளின் வெருட்டல்தானென்னும் அர்த்தத்தை விரிவான முறையில் ஹிட்லர் பகிரங்கமாகக் காட்டிவிட்டான். சென்ற 22 மாதங்களாக ஜெர்மானியர்கள் இடைவிடாது செய்து வந்த பிரசாரத்தை ஒரு நிமிஷத்தில் ஹிட்லர் கவிழ்த்து விட்டான். இனிமேல் பூராவாக நம்பியவர்களும்கூட நாஸிகளை ஒரு பொழுதும் நம்ப மாட்டார்கள்.

### ஹிட்லரின் பேச்சு.

"பெருங்கஷ்டங்களும் அனுபவித்து அநேக மாதங்களாகப் பேசாமலுமிருந்து விட்டு இப்பொழுது பகிரங்கமாகப் பேசத்தருணம் வாய்த்து விட்டது. ஜெர்மன்—ருஷ்யா ஒப்பந்தத்தின் பயன்கள் ரொம்பவும் கொடுமையானவை."

"ருஷ்யாவுக்குப் போலந்தில் கிடைத்த பாகமானது ஜெர்மானியர்களின் சைனியங்கள் பாடுபட்டதைவிட அதிகமாகவேயிருக்கிறது."

"பிறகு பின் லாந்திலும் பால்டிக் நாடுகளிலும் ருஷ்யாவின் எதிர்ப்புகளைப்பற்றி ஹிட்லர் தாக்க ஆரம்பித்தான். இந்த ஏற்பாடுகளெல்லாம் ஜெர்மனிக்கு எதிரிடையாகத் தான் நடத்தப்பட்டன என்றும் சொன்னான்."

### இதற்கு முன் நாஸிகள் விடுத்த செய்திகள்.

மற்றொரு தரப்பாரின் அக்கறைகளையும் கவனித்தும், இருவருக்கும் சச்சரவு ஏற்படாமலிருப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை ஜெர்மனியும் ருஷ்யாவும் செய்து வருகிறார்கள். அவர்களுடைய நோக்கங்கள்—ஒத்துழைப்பு என்பதை அடிப்படையாக உள்ளவை, தங்களுடைய அபிவிருத்தியிலும்க்ஷேமத்திலும் அக்கரையுள்ள ஏற்பாடுகளென்று இரு தரப்பாரும் நினைக்கிறார்கள்.

### ட்யூசேயின் ராஜ்ஜியத் தந்திர நிருபர். 1940-ம் வருஷம் நவம்பர் 13.

போலந்தில் எல்லைச்சரகங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட மேலே சொல்லிய முடிவுகள் இரண்டு தேசங்களுக்குமுள்ள சிநேக பாவத்தை விருத்தி செய்யக்கூடியவையென்று ஜெர்மனி, ருஷ்யா இவைகளின் அரசாங்கத்தார் மதிக்கிறார்கள்.

### ஜெர்மன்-ருஷ்ய ஒப்பந்தத்தில் 4வது நிபந்தனை, 1939-ம் வருஷம் செப்டம்பர் 29.

போலிஷ் எல்லைச்சரகத்தை ருஷ்யர்கள் தாண்டுவதற்கு முந்தியே, ஒப்பந்தப்படி போலந்தில் எல்லைகள் நிர்மாணம் செய்தாகிவிட்டன.

### ஜெர்மன் ஒலிபரப்பு. செப்டம்பர் 24, 1939.

பால்டிக் சமுத்திரத்துக்குச் செல்ல ஒரு பாதை ருஷ்யாவுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்பது எங்களுடைய அபிப்பிராயமும் தான்.



### ஜெர்மன் செய்தி நிலயம். நவம்பர் 29, 1939.

ருஷ்யாவின் ஆதிக்கத்துக்குள்பட்ட நாடுகளிலுள்ள பனிக்கட்டியில்லாத துறைமுகங்களுக்குச் செல்ல வசதிகள் ருஷ்யாவுக்கு ஏற்படுத்துவதற்கு, பிரிட்டனுடைய ஆட்சியை முறியடிக்கப் போடப்படும் யுத்தத்தில் ருஷ்யாவுக்குச் சொல்பச் செலவுதான் ஏற்படக்கூடும்.

### டான்ஸிகர் வார் போஸ்டன், ஜனவரி 23, 1940.

இன்று ருஷ்யாவுக்கு உரித்ததான ஸ்தானத்தை ஐரோப்பாவில் அது அடைந்து விட்டது.

"பொது உடமைக் கொள்கைக்கும் தேசிய ஜன நாயகத்துக்கும் பரம விரோதம். மாஸ்கோவானது தேசிய ஜன நாயகக்கொள்கையுள்ள ஜெர்மனி இருப்பிடத்திற்காக யுத்தம் செய்து வந்தபொழுது பின் பக்கமாகத்தாக்க ஏற்பாடு செய்தது. தங்களுடைய தாய் நாட்டைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் பொது உடமைக் கக்ஷியின் கொடூரத்திலிருந்து நாகரீகம் வாய்ந்த பூரா உலகத்தையும் காப்பாற்ற வேண்டியது தங்கள் கடமையென்று ஜெர்மானியர்கள் நன்றாய் அறிந்து விட்டார்கள்."

### நாஷனல் ஸீடங். மார்ச்சு 13, 1940.

யுத்தமானது ருஷ்யாவின் பொது உடமைக்கொள்கையின் முறைப்படி தான் நடத்தப்படவேண்டும். யுத்த காலத்தில் செய்யும் பொருளாதார சீர்திருத்தங்கள் உண்மையில் பொது உடமைக் கக்ஷியின் ஏற்பாடுதான். பொது உடமைக் கக்ஷியின் கொள்கைகளின்படி யுத்தமானது எல்லாவற்றையும் தலை கீழாக மாற்றக்கூடியது தான்.

**நாஸி தொழிலாளர் தலைவர், டாக்டர் லீ. 1939, நவம்பர் 7 அன்று வெளியிட்டது.**

### திரு. சர்ச்சிலின் பிரசங்கம் 22—6—41.

நமக்கு ஒரே ஒரு நோக்கம் தான். அது மாற்றக்கூடாதது. ஹிட்லரையும் நாஸி ஆக்ஷியின் ஒவ்வொரு கிளைகளையும் நாசம் செய்ய நாம் தீர்மானித்திருக்கிறோம். இந்த எண்ணத்திலிருந்து நம்மை ஒன்றும் மாற்ற முடியாது. நாம் வீணாகப்பேசப் போகிறதில்லை. ஹிட்லருடனாவது அவனுடைய கூட்டத்தாரோடாவது நாங்கள் சமாதானப் பேச்சுகள் பேசமாட்டோம்.

இதற்கு முன் ஜெர்மனி செய்த அக்கிரம எதிர்ப்புகள் போல, ருஷ்யாவைத் தாக்கியதும் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தையும் தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையையும் நிராகரித்ததாக ஆகும். நாஸிகளின் அநாகரீக மற்ற கொடுமையினின்றும் பின்னும் 10,000 லக்ஷம் ஜனங்களின் உயிருக்கும் சந்தோஷத்துக்கும் ஆபத்து வந்திருக்கிறதென்று சொன்னால் அது மிகையில்லை.

நாஸி தத்வத்தை எதிர்த்துப் போர் புரியும் எவருக்கும் எந்த தேசத்தாருக்கும் எங்கள் உதவி கிடைக்கும். ஹிட்லருடன் சேர்ந்து செல்லும் எவனும், எந்த தேசமும் எங்களுடைய விரோதி..........எங்களுக்கு சாத்தியமானதும் அவர்களுக்கு உபயோகிக்கக்கூடியதுமான யந்திர சாஸ்திரிகளுடைய ஒத்தாசையும் பொருளாதார ஒத்தாசையும் ருஷ்யாவுக்கு அனுப்ப நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இன்னும் அதிகமாகவே பகலிலும் இரவிலும் ஜெர்மனியை வெடிகுண்டுகளால் தாக்குவோம்.

நாஸிகளின் நிர்வாகமானது பசிப்பிணியும் ஜாதி உயர்வையும் தவிர மற்றபடி விஷயமுள்ளதும் ஒழுங்குள்ளதுமாகவுமில்லை. இது இரண்டு வகுப்புகளுக்குள் ஏற்பட்ட சண்டையில்லை. ருஷ்யாவைத் தாக்குவதினின்றும், ஹிட்லரின் முடிவுக்காகப் பாடுபடும் ஜனநாயக நாடுகளின் நோக்கங்களை மாற்றுவதற்காகவாவது, அல்லது முயற்சிகள் தளர்ச்சி அடைந்துவிடுமென்றாவது ஹிட்லர் கருதினால், அவன் மிகவும் தப்பான அபிப்பிராயம் கொண்டவனென்பதில் சந்தேகமில்லை.

---

## மதராஸ் ஆகாய விமானப்படைப் பகுதிகள். அவைகளின் அற்புதச் செயல்களின் ரிகார்டு.

[லண்டனிலிருந்து அடியில்கண்ட கடல் தந்தி வரப்பெற்றது].

பிரிடிஷ் ஆகாய விமானப் படையின் 6 யுத்த விமானப்படைப் பகுதிகளுக்கு இந்தியாவின் பல பாகங்களின் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விமானப்படைப் பகுதிகளின் வேலையைப்பற்றி விவரித்திருக்கும் அநேக அறிக்கைகளில் இதுவும் ஒன்று. இது மதராஸ் ஸ்பிட்பயர், ஹரிகேன் விமானப் பகுதிகள் செய்த வேலையை வர்ணிக்கின்றது.

1940-ம் வருஷத்தில் பல மாதங்கள் இங்கிலாந்தின் மேலப் பிரதேசங்களில் இந்தப் பகுதிகள் ஸ்திரமாக வைக்கப்பட்டிருந்தன: அந்த கார்ன்விஷ், டிவான்—டார்ஸெட், ஹாம்ப்ஷயர் கரையோரங்களில் செல்லும் வியாபாரக் கப்பல்களுக்கு ரக்ஷிப்புக் கொடுக்கும் காரியத்தில் ஓய்வு ஒழிவு யில்லாமல் கவனிப்பில் ஈடுபட்டிருந்தது. பிரிடிஷ் கப்பல்களையும், நேசதேச கப்பல்களையும் காப்பாற்றுதலில் இவைகள் செய்த ரோந்து வேலையால் இவைகளுக்கு அபாரக்யாதி கிடைத்திருக்கின்றது.



1940-ம் ௵ ஸெப்டம்பர்௴த்தில் லண்டன்மாநகரப் பாதுகாப்பிற்காக இந்த மதராஸ் விமானப் பகுதிகள் உத்தரவிடப்பட்டு முதல் சண்டையிலேயே இந்த லண்டன் விமான யுத்த அரங்கத்தில் இதில் சேர்ந்த ஸ்பிட்பையர் விமானங்கள் 13 சத்துரு விமானங்களைச் சுட்டுத் தள்ளின. இப்படிச் செய்தது, அங்குவந்து சேர்ந்த 4 நாட்களுக்குள் செய்த வேலை, "லண்டன்மாநகரப் பாதுகாப்பு" என்ற வகையில் எதிரியின் வீழ்த்தப்பட்ட விமான சங்கியையை 30 ஆக்கியது.

பிறகு இந்த மதராஸ் பகுதிகள் மேல இங்கிலாந்துக்கு மாற்றப்பட்டது. அவைகள் அங்கு, நவம்பர் 29, 1940-ல், "ஜாவலின்" என்ற நாசகாரியை எதிரி விமானத் தாக்குதலிலிருந்து காப்பாற்றியது. இந்த வேலையானது மிகவும் முக்கியம்வாய்ந்த அதிசயச் செயல்.

இந்த "ஜாவலின்" நாசகாரி, இங்கிலீஷ் சானலில் கடல் யுத்தத்தில் டார்பிடோ வெடிகுண்டால் தாக்கப்பட்டு, அரைகுறையாய் அதன் பலம் பாதிக்கப்பட்டிருந்தது. அதை ஜெர்மன் விமானங்கள், அஞ்சல் அஞ்சலாக வந்து தாக்கின. வெகு மணி நேரங்களாக நமது மேற்படி பகுதிகள் சத்துரு விமானங்களைத் தாக்கி விரட்டிற்று. "ஜாவலின்" துறைமுகத்திற்குப் பத்திரமாய்ச் சேர்க்கப்பட்டுவிட்டது. எதிரியின் வெடிகுண்டு விமானங்கள் மூன்று நாசமாக்கப்பட்டது. ஒன்று பழுதாக்கப்பட்டது. ஆனால் நமது மதராஸ் விமானப் பகுதிகளில் ஒரு சேதமுமில்லை.

1940-ம் ௵ ஸெப்டம்பர்௴ 15ல 185 விரோதி விமானங்கள் நாசம் செய்யப்பட்டபொழுது, நம்முடைய பகுதியின் பங்கு (4) M. E.—110-களும் (1) M. E.—'09-ம்; அதாவது இந்த 5 எதிரி விமானங்களும் தெற்குக் கரையோரத்தில் சுட்டுத்தள்ளப்பட்டன.

நாள்துவரை, இந்த விமானப் பகுதிக்கு 3 D. F. C. களும், 2 D. F. M. களும், ஒரு B. E. M.-ம் வெகுமானமாகக் கிடைத்திருக்கின்றன (i. e. யுத்த கௌரவப் பட்டங்கள்). D. F. M. கௌரவப் பட்டங்களில் ஒன்று, இந்தப் பகுதி செய்த ஒவ்வொரு ரோந்து வேலையிலும் ஈடுபட்டிருந்த ஒரு சார்ஜண்டுக்கு அளிக்கப்பட்டது. அவர் 6 எதிரி விமானங்களை சுட்டுத்தள்ளியிருந்தார், இந்தப் பகுதியின் பைலட் ஆபீஸர்களில் ஒருவருக்கு, D. F. C. கொடுபட்டிருக்கின்றது. அவர்மட்டில் 14 எதிரி விமானங்களை சுட்டுத்தள்ளியிருந்தார். ஒரு சமயத்தில், எதிரியின் சண்டையிடும் விமானங்கள் வலுத்துச் சேர்ந்துபோன லக்கில், இவர் தன் விமானத்தை அவைகளின் மத்தியில் செங்குத்தாய் இறக்கி, இரண்டு, நான்கு இஞ்சின் பாம்பர்களைத் தாக்கினார்.

சாம்ராஜ்யத்திற்கு யுத்தப் பிரயுக்தமாய் செய்யப்பட்ட ஒத்தாசையை சாஸ்வதமாய் அபிமானிக்க வேண்டுமென்று 3 விமானப் பகுதிகளைப் பொருக்கியிருக்கிறார்கள். அவைகளில் மதராஸ் விமானப் பகுதியையும் எடுத்திருக்கிறார்கள் என்றதிலிருந்தே இவைகளின் அதிசயச் செயல்கள் நன்கு விளங்கும்.

அக்டோபர் 1939-ம் ஒரு—காலையில் மேகமில்லை. கரையோரத்திலிருந்து ஒருவர் டார்னியா—17 என்ற விரோதி விமானி, சூட்டிக்கர்ணம் அடித்துக் கொண்டு சமுத்திரத்தில் விழுந்ததைக் கவனித்தான். அது விழும்போது ஆகாசமளாவின ஸ்தம்பம் மாதிரியான புகையை விட்டுக்கொண்டேயிருந்தது. விழுந்த இடத்தை 3 ஹரிகேன் விமானங்கள் வட்டாரமிட்டன. பிறகு டோவர் ஜல சந்தியில் முதல் எதிரி விமானம் வீழ்த்தப்பட்டது என்ற சங்கதியை தலைமை ஆபீஸுக்குத் தெரிவிக்கச் சென்றது.

மதராஸ் விமானப் பகுதியின் பைலட்கள்தான் அந்தவேலை செய்தவர்கள். அவர்கள் வெகு உயரப் பறந்து வேவு பார்க்கும்போது இந்த எதிரி விமானம் தென்பட்டு தாக்கி வீழ்த்தப்பட்டது.

இது முதல் ஜயம். பிறகு, பிரான்ஸ் பிரதேசத்தில் 65 எதிரி விமானங்களை சுட்டுத் தள்ளியிருக்கின்றது.

ஹிட்லர் ஹாலண்டு பெல்ஜியம் தேசங்களை படையெடுத்தபொழுது, இந்த மதராஸ் விமானப்படைப் பகுதிகள் பிரான்ஸில் விமானப்படையின் ஒரு அங்கமாக நிறுவப்பட்டிருந்தது. 10 நாட்களில் 25 எதிரி விமானங்களை நாசம்செய்து விட்டன. இன்னும் அநேக சத்ருவிமானங்களை பழுதாக்கிவிட்டது. வீடு திரும்பிய கடைசி தினம்கூட 10 விமானங்களைச் சுட்டிருக்கின்றது.

இங்கிலாந்து திரும்பிய பிறகு, வடகிழக்குக் கரையோரப் பிரதேசத்தில் ஒரு பாகத்தை இந்த விமானப் படைப் பகுதி பாதுகாத்தது. ஆகஸ்டு மாதத்திய பெரிய மின்னல்போர் துவக்கப்பட்டபொழுது முன்அணிப் பாதுகாப்புக்கு உபரி பலமளிக்க தெற்கே இந்தப் பகுதிகள் மாற்றப்பட்டன. ஆகஸ்டு 15உ 5, H. E. 111-களை வேட்டித் தீர்த்தது. இந்த எதிரி விமானங்கள் கெண்ட் விமான நிலையத்தைத் தாக்கிக்கொண்டிருந்தன. மறு நாள் 5 M. E. 109-களையும், ஒரு M. E. 115-யும் நாசமாக்கிவிட்டது.

இந்த விமானப்படைப் பகுதியின் வேலைகளில் மிகவும்—கியாதி வாய்ந்தது அதை செப்டம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் செய்ததுதான். அப்பொழுது லிவர்பூல் நகரம் எதிரிகளால் பகலில் விமானத் தாக்குதல் செய்யப்பட்டது. நமது விமானங்களில் 9 ஹரிகேன்கள, St. டேவிட்ஸ்ஹெட் என்ற இடத்தில் எதிரி விமானங்களைத் தடுத்துத் தாக்கிற்று. எதிரிகள் புறங்காட்டி ஓடின. ஆனால் அதில் ஒன்று நாசமானது.

ஜெர்மன் இராத்தாக்கு விமானங்கள்பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் இந்த பகுதிப் படைக்கும் பங்குண்டு. மார்ச்சு மாதத்தில் ஒரு இரவு, தென்வேல்ஸ் பிரதேசத்தின்மேல் ஒரு கானடியன் பிளைட் லெப்டினெண்டு J. U. 88-ஐச் சுட்டுத் தள்ளினார்.

இந்த விமானப் பகுதியைச் சேர்ந்த விமானிகளுக்கு 4 D. F. C.-யும் 10 D. F. M.-களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. அநேக விமான போர்களில் அதி மனோதைரியத்தையும், மேதையையும் காண்பித்த ஒரு ஆபீஸருக்கு



D. F. C. பட்டம் கொடுக்கப்பட்டது. ஒரு தடவை அவர் M. E.—109 விமானத்தை இவர் தாக்கிக்கொண்டிருக்கும்போது, 6 ஹெங்கல் 113-கள் இவரைத் தாக்கியது. ஹெங்கல்பேரில் பாய்ந்து ஒன்றை விழுத்தாட்டி, இரண்டாவதைப் பழுதாக்கினார். ஆனால் வெடிமருந்து குறைந்துபோனதால் சண்டையை நிறுத்திக்கொண்டது. மறுநாள் ஹெங்கல் 111-களின் ஒரு சேர்ந்த தொகுதியைப் பார்த்து ஒன்றை சுட்டு, அதுவும் எரிந்துகொண்டு விழும் படி செய்தது.

சமீபத்தில் நடந்த விமானச் சண்டைகளில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மற்றொரு பைலட் ஆபீஸர் எதிரியின் 5 விமானங்களை அழித்துவிட்டார். ஒரு யுத்தத்தில் அவர் 8 மணிநேரகாலம் ஆகாயத்திலேயே இருந்தார். அவருக்கு D. F. C. பட்டம் கொடுக்கப்பட்டது:

---

## இந்தியாவுக்கு வரக்கூடிய விபத்து.
## நாஜிகள் ஆதிக்கத்தால் வரக்கூடிய ஆபத்து.
## ஒத்துழைப்பின் அவசியம்.
## ஐரோப்பாவில் ஒற்றுமையில்லாது வந்த கேடு.

(பீல்ட் மார்ஷல் பர்ட்வுட் பிரபு எழுதியது).

ஐரோப்பாவில் சமீபத்தில் இரண்டு கேடுகள் விளைந்தன. இக்காலத்தில் விமானங்களும், விரைவில் செல்லும் யந்திரசாதனப்படைகளும் ஏற்பட்டதிலிருந்து தூரமாயிருந்த தேசங்கள் போர்முனைக்கு சமீபித்து வந்துவிட்டன. ஆகவே, தூரத்திலிருக்கும் நாடுகளுக்கும் தற்காப்பில்லாது, போரைவிட்டு விலகிநிற்க முடியவில்லை. ஆனால், இந்த உண்மை அறிந்துகொள்ளாது ஐரோப்பிய நாடுகள் பல ஏமாந்தன. இது ஒரு கேடு. மற்றொன்று, நாஜிகளின் பொய்யில் ஏதாவது, எள்ளளவேனும் உண்மையிருக்குமென்று நம்பி, ராஜதந்திரிகளும், பத்திராதிபரும் இன்னும் ஏமாந்துபோவது.

ஒரு தேசம் ஏமாந்ததைப்பார்த்த பிறகும்கூட இதேகஷ்டம் நாளைக்குத் தனக்கும் வரும்; ஆகவே முன்னதாகவே ஜாக்கிறதையாயிருக்க வேண்டுமென்று நினையாது தேசங்கள் ஏமாந்துபோவது மூன்றாவது கேடென்றும் சொல்லலாம்.

அசந்த சமயம் பார்த்து, நாஜிகள், ஐரோப்பாவில், திடீரென்று வெகு யுக்தியாக, தேசங்களைக் கவிழ்த்து விட்டார்கள். ஆசியாவும், அதிலும் விசேஷமாக இந்தியாவும் இந்தப் பிசகைச் செய்யப்போகிறதா என்பதுதான் இப்பொழுது கேள்வி.

இராக்கிக்குள் பிரவேசிக்க நாஜிகள் முயற்சித்தது இந்தியாவுக்கு விபத்தில்லையென்றும், இராக் எங்கேயோ தூரத்திலிருக்கும் தேசமென்றும், இந்தியர்கள்—அதிலும் படிக்காத இந்தியர்கள் நினைக்கலாம். இடையே இரானும், ஆப்கனிஸ்தானமும், இருப்பதால் பயமில்லையென்று நினைத்தகாலமெல்லாம் போய்விட்டது. இப்பொழுது இவ்விதம் நினைப்பது முட்டாள்தனத்தோடு,

ஆபத்துக்கிடமானது. நாஸிகள் கிழக்கு திசையை நோக்கிவருவது சாம்ராஜ்ஜியத்துக்காகவே. இதை, அசட்டையினாலோ, தீர் எண்ணத்தாலோ, கவனியாது இந்திய சமூகத்தலைவர்களிருந்தால் அதினால் மிகக்கேடுவரும்.

ஐரோப்பாவிலுள்ள ஜனநாயக அரசுகளும், ஸ்வதந்திர நாடுகளும் நாஸிகளின் விபத்து அதிகரித்து வருவதை உணர்ந்து, முன்னதாக ஒன்று சேர்ந்திருந்தால் நாஸிகளின் முன்னேற்றம் ஆரம்பத்திலேயே நசுக்கப்பட்டிருக்கும்.

அயல் நாடுகளுக்குள்ளிருக்கும் பரஸ்பர விரோதங்களையும், உள்நாட்டு வம்புகளையும் அதிகப்படுத்தித் தன் சுயலாபத்துக்கு நாஸிகள் அவைகளை உபயோகப்படுத்திக்கொண்டு அத்தேசங்களை தன்வசமாக்கிக்கொள்வது அவர்களது உபாயம். இது, ஒரு ஆப்பிள் பழத்துக்குள் பூச்சி நுழைந்து, தன் முட்டைகளை அதன் நடுவேவைத்து, அவைகள் பின்பு பூச்சிகளாகி அந்த ஒரு பழத்தையல்லாது அதிருக்கும் தோட்டத்தையே அழித்து விடுவதையொக்கும்.

ஐரோப்பிய நாடுகள் ஒற்றுமையும், திடமனதுமில்லாது அழிவதைப் பார்த்து இந்தியா நற்புத்தியை அடையுமோ, அல்லது 'ஒத்திருந்தால் பிழைக்கலாம், இல்லாவிட்டால் அழிவு' என்ற பழமொழியை, காலம் கடந்துதான் கற்றுக்கொள்ளுமோ தெரியவில்லை.

தற்காலத்திய ஜெர்மனியின் நிலைபானது உலகத்தில் ஆஸ்திகர்களாலும் எல்லா கௌரவஸ்தர்களாலும் வெறுக்கக்கூடியதாயுமிருக்கிறது. அதற்கு வாக்கு சத்தியம் கிடையாது. யுத்தத்தில் ஜயமடையப் பொய்யையும், துரோகத்தையும் பகிரங்கமாக எடுத்த எடுப்பில் உபயோகிக்கிறது. தான் அடிமையாக்க நினைக்கும் நாடுகளோடு செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் அவைகளை அசரச் செய்வதற்கும், ஏமாற்றவும்தான். எல்லா மதங்களையும் துவேஷிப்பதோடு, டியூடன் ஜாதியார்களே தெய்வீகமென்ற மத விரோதமான கொள்கையையும் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாஸி தத்துவம் அயோக்கியத்தனமானதாகவும், மத விரோதமாகவும் இருக்கிறது.

வட ஆப்பிரிகாவில் இதாலியர்கள் குடியேறி செய்த அக்கிரமங்களிலிருந்து இஸ்லாமவர்களுடைய நோக்கங்களுக்கும் பாவங்களுக்கும் அன்பு பாராட்டுவதாக அச்சு நாடுகள் சொல்லுவதெல்லாம் பாசாங்கென்று அராபியர்கள், அநுபவத்தில் தெரிந்துகொண்டார்கள். முஸ்லீம் க்ஷேமத்துக்கும், அவர்களுடைய மதத்தின் நன்மைக்கும் நாஸிகள் காட்டும் அநுதாபமும் நம்பத்தகாததென்றும், காரணரூபமாய், தெரிந்துவிட்டது.

ஐரோப்பாவில் கிறிஸ்துவர்களையே இம்சிக்கும் நாஸ்திக நாஸிகள் தங்களுடைய தேசங்களையும் பிடுங்கிக்கொண்டு, வியாபாரத்தையும், செல்வத்தையும் அபகரித்துக்கொள்வதோடு, மதசம்பந்தமான துராக்கிரமமும் செய்வார்களென்று அராபியர்கள் தெரிந்துகொண்டு விட்டார்கள்.

'ஒவ்வொருவரும் தம்தம் மதத்தை வழிபட ஸ்வதந்திரம் உண்டு' என்று குரான் வாக்கியம் இருக்கிறது. ஆனால் இராக்கில் நாஸிகள் கால் வைத்துவிட்டால் நாப், கார்பீலா, காஸிமன் முதலிய புண்ணியஸ்தலங்களைக் கெடுத்து விடுவார்கள்.



அதேமாதிரி இந்தியாவுக்கு வந்தால், இந்து, முஸ்லிம் புண்ணியஸ்தலங்களை, அவர்களுடைய காரியங்களுக்குக் குறுக்கிட்டால், கெடுத்து விடுவார்கள். பிரிடிஷ் ஸர்க்காரைப்போல மதவிஷயங்களில் மரியாதையும், தாக்ஷண்யமும் காட்டமாட்டார்கள்.

இவ்விதமாக, ஸமூகக்ஷேமத்துக்கும் செல்வத்துக்கும், மதத்துக்கும் நாஸிகளின் வரவு விபத்தை யளிக்குமென்று இந்தியத்தலைவர்கள் நன்குணர்ந்திருக்கிறது இந்தியாவின் அதிர்ஷ்டமேயாகும். இந்தியா செய்து வரும் யுத்த முயற்சி ஏற்கனவே உன்னதமாயிருப்பதோடு நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. வடஆபிரிகாவிலும், மற்ற போர் முனைகளிலும் இந்தியத்துருப்புகள் வீரச் செயல்கள் செய்து உலகமெங்கும் புகழ்பெற்று நிற்கின்றன. இதைக்கேட்க, இந்திய சைனியத்துக்குப் பிதாவென்று சொல்லும் எனக்கும் அளவில்லாத பெருமையும், சந்தோஷமும் உண்டாகிறது. ஏற்பட்டிருக்கும் விபத்தை நன்றாய் உணர்ந்து இந்திய அரசர்களும், பணத்தாலும், சைனியத்தாலும் ஏராளமான உதவியைச் செய்திருக்கிறார்கள்.

என்னுடைய அத்தியந்த சிநேகிதராகிய ஒரு முஸ்லிம் அரசர் சில தினங்களுக்கு முன் எனக்கெழுதியனுப்பிய கடிதம் பின் வருமாறு:—

"அக்கரைச்சீமைக்குச் சில தினங்களுக் கெல்லாம் புறப்பட்டுப்போய், சக்கிரவர்த்திக்கும், சாம்ராஜ்ஜியத்துக்கும் என்னால் முடிந்த உதவியை செய்வேன். ஜீவராசிகள் மேல் கருணைகூர்ந்து அல்லா போரை முடித்து உலகத்தில் சமாதானத்தையும், அமைதியையும் சீக்கிரம் அளிப்பாரென்று நம்புகிறேன். இப்பொழுது நாஸிகளாகிய துஷ்டர்களை சம்ஹாரம் செய்யும் நோக்கமொன்றுதான் பொதுவானது: இதற்கு வம்சபரம்பரையை ஒத்து முயன்று வருகிறோம்.

இதுவே இந்தியாவின் உண்மையெண்ணம்—அதாவது இந்த துஷ்டர்களையும், அவர்களுடைய கர்வம் பிடித்த, பொய், போலிமதத்தையும் ஒழிக்கவேண்டும். உலகத்தில் நிர்பயமாய் சுகமாய் மறுபடியும் வாழவேண்டும்—நாம் ஐரோப்பாவில் ஒருவருக் கொருவர் சில்லரை விவகாரங்களில் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு, தீர்க்க யோசனைசெய்யாது கெட்டுப்போனபடி நாமும் கெடாது, இப்பொழுதே, நம்முடைய மதத்தையும், கல்வி, நாகரீகத்தையும், பழுது படாது காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இல்லா விட்டால், இராக் அகப்பட்டுக்கொள்ளுவதாய் இருந்ததைப்போல், விபத்தில் அகப்பட்டு, கஷ்டத்தையும் அடிமையையும் அனுபவித்து அழிந்து போவது நிச்சயம்.

இந்த இரண்டு வழியைத்தவிர, மூன்றும் வழி யொன்றும் கிடையாது.

---

## மரியாதையான பதில்.

சென்ற சில வாரங்களுக்குமுன் இந்தப் பிரசுரத்தில் மிஸ் எலியனூர் ராத்போன் எழுதிய ஒரு பகிரங்கக் கடிதத்தை வெளியிட்டோம். அந்தக் கடிதத்தைப் பற்றி உண்டான கண்டனங்கள், விசேஷமாக டாக்டர் ரவீந்திரனாத் டாகூர்

எழுதியது, இவைகளுக்கு காரிய காரணங்களுடனும் அழகாகவும் அவள் பதிலுரைத்திருக்கிறாள். அவள் எழுதுவதாவது:—

ஸர் ரவீந்திரநாத் டாகூர் முதலான அநேக இந்திய சிநேகிதர்கள் என்னுடைய கடிதங்களைப் பற்றி வியாக்யானம் எழுதியிருக்கிறார்களென்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. வியாதிகிரஸ்தராகப் படுக்கையில் படுத்துக் கொண்டு டாகூர் எழுதியிருக்கிறபடியால், அவர் என்னுடைய கடிதத்தைப் பூராவும் படித்திருக்கமாட்டாரென்று நம்புகிறேன். அப்படி இருந்திராவிட்டால் அவர் என் கடிதத்தின் முக்கியக் கருத்தை முழுவதும் பொருட்படுத்தாமல் இருந்திருக்க முடியாது. மேலும் விரோதிகள் கண்டனம் செய்வதுபோல், இவரும் பிரிடிஷ் ஆட்சியைப்பற்றிப் பழைய குறைகளை மறுபடியும் சொல்லியிருக்க மாட்டார். பிரிடிஷ் அரசாங்கத்தைப் பாதுகாக்க எனக்குக் கவலையில்லை. என்னைப்போல் இந்தியாவின் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் இந்தியர்களை, ஒத்துழையாமை என்ற இயக்கமானது வாஸ்தவத்தில் அவர்கள் நோக்கங்களுக்கு எவ்வளவு சாதகம் அளிக்கிறதென்று கேட்பதாகத் தான் என் அபிப்ராயம். 1939-ம் வருஷம் மார்ச்சுமீ 28-ம் தேதியன்று பண்டித நேரு எழுதியதாவது: "பாஸிதத்வமாவது, நாஸிதத்வமாவது உலகில் ஆதிக்கம் பெற்றால், இந்தியாவிற்கு ஏற்படும் சுய ஆட்சி வெகுநாட்கள் நீடித்திருக்கமுடியாது." இந்த அபிப்ராயம் இன்று மாறி விட்டதா? இந்த உலகத்துக்கும் அதில் ஆதிக்கம் பெறவேண்டுமென்ற நாஸிக் கொடுமைக்கும் மத்தியில் பிரிடனும் அதன் நேச நாடுகளும் தானே இடையூறாகவிருக்கின்றன. பிரிடனுடைய பிழைகளும், குறைகளும் எவ்வாறு இருப்பினும், இந்தியாவுடையவும் உலகத்தினுடையவும் நன்மைக்காக ஹிட்லர் ஜயமடைவதைவிட நாம் ஜயிப்பது நலமல்லவா? அவர்களின் இயக்கத்தின் எண்ணங்கள் எவ்வாறாயிருப்பினும், ஒத்துழையாமைக் காரர்கள், உண்மையில் ஹிட்லருக்கு உதவி செய்வதாக ஆகவில்லை என்று மறுப்பார்களா? என்னுடைய கடிதத்தைப்பற்றி எழுதும் வியாக்யானங்களில் இந்தப் பிரச்னையைத் தள்ளி விட்டிருப்பதால், இந்தக் கேள்விகளுக்கு அவர்களால் பதிலளிக்கமுடியவில்லை என்று நான் கருதுகிறேன்.

---

## இதுதான் நல்ல மனப்பான்மை.

[புதுக்கோட்டை வாஸியான ஒரு பெரியார் எங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். மேலே சொன்ன பிரகாரம் இதுதான் நல்ல "மனப்பான்மை." ப.]

கனவான்களே,

இந்த மகத்தான யுத்த முயற்சிகளில் என்னாலியன்ற அளவு ஒரு சிறிது கைங்கரியம் செய்யவேண்டுமென்று நான் வெகு நாட்களாக ஆவல் கொண்டிருந்தேன். இந்த முயற்சியை நீங்கள் மிகவும் வெற்றிகரமாகச் செய்து வருகிறீர்கள். இந்த யுத்தத்தைப்பற்றி சில குறிப்பான சொற்பொழிவுகளை மற்றும் பொறுக்கி சில சமயங்களில் அனுப்பியதையும், எவர் ஜயமடைந்தாலென்று மிகவும் அலட்சியமாகவிருக்கும் சில நகரவாஸிகளின் தப்பு அபிப்பிராயத்தை எதிர்த்துப்பேசியதையும் தவிர, நான் விசேஷமாக ஒன்றும் செய்யவில்லை.



இப்பொழுது இந்த யுத்தப்பிரசாரத்தில் உங்களுடன் ஒத்துழைக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்த முறையில் என்னுடைய சேவை தங்களுக்குத் தேவையானால், எந்த சமயத்திலும் நான் வேலை செய்யத்தயாராக இருக்கிறேன். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் யாதெனில்:

(1) இந்தியாவில் யுத்தத்துக்கு வேண்டிய முயற்சிகள் போதாது.

(2) சுயேச்சை, சுதந்திரம், நமக்கு அருமையான எல்லா விதமான பிதுரார்ஜித சொத்துக்களுக்கும் நாசம் விளைவிக்கக்கூடியதும், மனித வர்க்கத்துக்கே பரம சத்துருவுமான ஒருவன் கர்ஜனை செய்து செய்துகொண்டும், அதிக ஆக்ரோஷத்துடனும் கிறிஸ்து நாகரீகத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கும் மனித வாழ்க்கை என்ற விருக்ஷத்தை அடியோடு வெட்டித் தள்ளிக்கொண்டுமிருக்கும் தருவாயில், ஒத்துழையாமை இயக்கத்தைக் கைக்கொள்ளுவது காங்கிரஸ் கக்ஷிக்கு அழகில்லை.

அதிகமாக எழுதி உங்களை சிரமப்படுத்துவதாக நான் உத்தேசிக்கவில்லை.

உங்கள் ஊழியன்.

---

## கதம்பம்.

1. "எண்ணெய்தான் ஹிட்லரின் பொருளாதார நிலைமையில் பலஹீனமான பாகம். அவனுக்கு வருங்காலத்தில் கிடைக்கும் எண்ணெய் வரத்துகளைப் பற்றித் தான் அவன் கவலைப்படுகிறான்."

(யுத்தத்தின் பொருளாதார மந்திரி டாக்டர், ஹ்யூ டால்டன், ஜூன் 28, 1941).

2. "ஹிட்லரோடாவது, ஹிட்லருடைய கொள்ளைக் கூட்டத்தாரோடாவது நாம் சம்பாஷணை செய்யமாட்டோம், தாகும் பேசமாட்டோம்."

(மிஸ்டர் சர்ச்சில், ஜூன் 22-ம் தேதி ஒலிபரப்பியது).

3. "இந்தியாவிலுள்ள இந்தியர்கள் பிரிடனுக்கு ஒத்தாசை செய்யக் கூடுமானவரையில் பிரயத்தனம் செய்வதாகத் தீர்மானித்துவிட்டார்கள்."

(ஜூன் 25-ம் தேதியன்று பம்பாயில் சமஸ்தானங்களின் மந்திரிகள் கூட்டத்தில் ஸர் அக்பர் ஹைதாரி பேசியது).

4. "இச்சமயத்தில் சொல்லக்கூடாத விஷயங்களைத் தெரிவிக்கப் பிரியப்படுகிறேனென்று நான் சொல்லவிரும்புகிறேன். ஆகிலும் அம்மாதிரிச் செய்ய முடியாத நிலையிலிருக்கிறேனென்று வருந்துகிறேன்."

(ஜப்பானிய அறிக்கை இலாகாவின் உப தலைவரான மிஸ்டர் கோஷி என்பவர் தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பற்றி டோகியோவில் நடந்த பத்திராதிபர்களின் கூட்டத்தில் கேள்விகளுக்கு

பதில் சொல்லாமல் அவைகளை நிராகரித்தபொழுது சொன்னது. இது ஜூன் ௴ 24-ம் தேதியன்று ஜப்பானிய ஒலிபரப்பில் ஆங்கிலேயத்தில் சொல்லப்பட்டது).

5. "புத்திசாலித்தனம்வாய்ந்த வேலைகளுக்கு கருப்பு மனிதர்களைத் தயாரிப்பது ஈச்வர-சம்மதமே ஆகாது."

(மெயின்காம்பில், ஹிட்லர் எழுதியது).

6. "கொடுமையைப்பற்றி ஏன் பிதற்றுகிறாய். சித்ரவதை செய்வதைப் பற்றி ஏன் கோபம் கொள்ளுகிறாய். பொது ஜனங்களுக்கு இது ருசிகரமாகயிருக்கிறது. மயிர்க்கூச்சலடையும்படியான ஒரு நிகழ்ச்சி அவர்களுக்குத் தேவை."

(ஹிட்லர் பேசுகிறான் என்ற புஸ்தகத்தில் 89-வது பக்கத்தில் ஹிட்லர் ஹெர்மான் ராஷ்னிக்குக்கு எழுதியது).

7. "நாஜிகள் இப்பொழுது பயக்கப் பார்க்கிறார்கள். ஹிட்லர் பலவிதமான உபாயக்காரர். இப்பொழுது பயப்பால் வெல்லப் பார்க்கிறார். ஹிட்லர் அட்டகாசம் செய்து படாடோபமாய் பேசும்போது அவ்வளவு மோசமில்லை. நயமாய் பேசும்போதுதான் விஷம்கலந்த சர்க்கரை."

(கர்னல் பிராங்க் நாக்ஸ்—லுக் பத்திரிகை—ஜூன் 30).

8. "எதிரிகள் இந்தியாவின் எல்லைக்கு வந்தால், வரும்போதுதான் இந்தியப் படைகளை உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று சிலர்கள் சொல்லி கதறி பேசுகிறார்கள். இப்படிச் செய்தால் தோல்வி நிச்சயம். இதையே சரித்திரம் நமக்குக் கற்பிக்கிறது. எதிரிகளை தூரத்திலேயே தடுத்துவிடவேண்டும். எதிரிகளைக் கண்டவிடத்திலெல்லாம் எதிர்க்கவேண்டும். நம்முடைய துருப்புகளையும், கப்பல்களையும், விமானங்களையும் எவ்வளவுக் கெவ்வளவு தூரத்துக் கனுப்புகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் காப்பாற்றப்படுவோம். தற்காப்பென்பதெல்லாம் படையெடுப்புத்தான். படையெடுக்கத்தான் வேண்டும்; படைதான் எடுப்போம்."

(H. E. ஸர் கிளாட் ஆகின் லெக்—அச்சுப்பிரசுரம், ஜூலை 2).

9. "நம்முடைய தாய்நாட்டுக்காகப்படும் இந்த யுத்தம் ஐரோப்பிய, அமெரிக்க ஸ்வதந்திர யுத்தத்தோடு கலந்துவிட்டது. ஹிட்லருடைய சைனியங்களால் அடிமைப்படாதபடி தடுக்கமுயலும் எல்லா நாடுகளும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன."

(M. ஸ்டாலின்—ஜூலை 3).

10. "ஜெர்மானியர் செய்யும் பொய் பிரசாரத்தோடு ஒப்பிடும்போது பிரிடிஷ் பிரசாரம் அல்பமாகத்தான் தோன்றும். ஆனால் நம்முடைய பலமெல்லாம் ஸத்தியம்தான். ஸத்தியத்தின் முன் பொய் நில்லாது."

(ஸர் ஜான் ஆண்டர்ஸன்—ஜூலை 3.)

11. "உலகமெல்லாம், சர்வாதிகாரிகள் பிடித்து பொட்டலாக்கிய பிறகு, அமெரிக்காமட்டும் ஸ்வதந்திரத்தை வளர்க்குமென்று நினைப்பது முடியாது."

(ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜூலை 4.)



# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### பொய்க் காரணங்கள்.

ருஷ்யாவோடு போர்தொடுத்ததற்கு பலவிதமான பொய்க் காரணங்களை ஜெர்மனி சொல்லிக்கொண்டுவருகிறது. எல்லாம் பாசாங்கு. ஜூன் 29ல் ஹாஹா பிரபுவும் இந்தப் பொய்க்காரணத்தைப் பிரஸ்தாபித்தார். ருஷ்யாவிலிருக்கும் அட்டூழியக்காரர்களைச் சமாதானப்படுத்த ஹிட்லர் எவ்வளவோ பாடுபட்டார். ருஷ்யாவோ அதற்கிணங்காது, பின்லாண்ட், லிதுவேனியா, லாட்வியா, இஸ்தோனியா, ருமேனியா தேசங்களைப் படையெடுத்தது. வேறு வழியில்லாது, கட்டாயத்தின் பேரில் ருஷ்யாவை முடிவில் தாக்க நேரிட்டதாம்.

என்ன சாந்தமூர்த்தி! இந்த சாந்தமூர்த்தியான ஹிட்லர்தான் போலண்ட், டென்மார்க், நார்வே, ஹாலண்ட், பெல்ஜியம், லக்ஸம்பர்க், பிரான்ஸ், கிரீஸ், யூகோஸ்லாவியா தேசங்களை படையெடுத்தும், ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா தேசங்களை, படையெடுக்காமல் தந்திரமாய் பிடித்தும் கொண்டான்.

ஹிட்லருக்கு ருஷ்யாவைப் பிடித்துக்கொள்ளும் எண்ணம் எப்பொழும் உண்டு. இதுவரையில் படையெடுக்காது சமாதானம் பேசியதற்குக் காரணம் மேல், தென் ஐரோப்பாவை முதலில் கைவசப்படுத்தும் எண்ணம்தான். அந்தக் காரியம் முடிந்தவுடன், 'மனசாக்ஷி' ஏவியதுபோல் பாசாங்குசெய்து பின்லண்ட் முதலிய தேசங்களை ஆக்கிரமித்ததற்காக, பழிக்குப்பழி வாங்குவதுபோல் இப்பொழுது ருஷ்யாவைப்படையெடுத்திருக்கிறான்.

### அயல்நாட்டுச் சைனியங்கள்.

ஜூன் ௴ 29-ம் தேதி ஜெர்மன் அறிக்கைகளின்படி, ருஷ்யர்களை எதிர்க்க 18,000 ஸ்பானிஷ் மக்கள் சேர்ந்திருப்பதாயும், நார்வே, டென்மார்க், ஹாலண்ட் பெல்ஜியம், 'ஸ்வதந்திர'க் குரோஷியாவிலிருந்தெல்லாம் சிப்பாய்களாய் சேர ஜனங்கள் தானாகவே முன் வருவதாயும் சொல்லப்படுகிறது. பயமுறுத்தி ஏற்கனவே பின்லாண்ட், ருமேனியா, ஸ்லோவேகியா, ஹங்கேரி தேசங்களை ருஷ்யாவுக்கு விரோதமாய்ச் சேரச்சொல்லி கட்டாயம் செய்தாய் விட்டது.

பிரிடன் அயல்நாட்டுச் சைனியங்களைக்கொண்டு சண்டை போடுவதாகச் சொன்ன ஜெர்மனி இப்பொழுது கணக்கில்லாத அயல்நாட்டு உதவியைத் தேடுகிறது! ஜெர்மானியர் பிறர் உதவியில்லாது தனித்து நின்று சண்டை செய்ய முடியுமென்று சொன்ன நாளெல்லாம் போய்விட்டது.

### உண்மை வெளிவரவில்லை.

நடப்பு விஷயத்தைப்பற்றிப் பேசப்போவதாகச் சொல்லி காலத்தையும் குறிப்பிட்டு விட்டு பிறகு அந்த நேரம் வந்தவுடன் பிரசங்கத்துக்குப் பதிலாக ஜெர்மன் ரேடியோக்கள் பாட்டுப்பாட ஆரம்பித்து விடுகின்றன. இது இப்பொழுது வழக்கமாய்ப் போய்விட்டது. இதற்கு இரண்டு காரணங்களிருக்கலாம்.

ஒன்று—நேற்று வரையில் சிநேகமாயிருந்து விட்டு, திடீரென்று ருஷ்யாவின்மேல் பாய்ந்ததற்கு நியாயம் சொல்லத் தெரியாது திகைக்கலாம். இரண்டு, கோயபெல்ஸின் பொய்-உற்பத்திச் சாலைகளான ரேடியோ நிலையங்கள்மேல் பிரிடிஷ் விமான வெடிகள் விழுந்து அவை அழிந்து போயிருக்கலாம்.

### சர்ச்சில் அதிகப் பேச்சுக்காரராம்.

சர்ச்சில் உள்ளதை உள்ளபடி சொல்லிவிடுகிறாரென்றும், ரகஸ்யங்களை வெளியிட்டுவிடுகிறாரென்றும் ஜூன் 28-ல் இடாலி குற்றம் கண்டுபிடிக்கிறது. ஆனால் சில தினங்களுக்குமுன் இடாலியும், ஜெர்மனியும், சர்ச்சில் ரகஸ்யமாய் பார்லிமெண்டோடு கடல்-யுத்தத்தைப்பற்றிப் பேசப்போவதாகச் சொன்னதை பரிகாசம் செய்தன. சர்ச்சில் காமன்ஸ் சபைக்குச் சொல்லாமல் விஷயங்களை மறைக்கிறாரென்றும் சொல்லி பிரிடிஷ் மக்களுக்கு அனுதாபம் காட்டுவதுபோல் நடித்தன.

### பகலில் நடக்கும் விமானப் போரில் பிரிடன் கை மேல்.

வட பிரான்ஸில் ஜெர்மானியரின் ஸ்தலங்கள் பேரில் பகல் போரில் பிரிடிஷ் விமானங்கள் நாளுக்கு நாள் அதிகமாய் வெற்றியடைந்துவருகின்றன. இதை ஜெர்மன் விமானங்களால் தடுக்கமுடியவில்லை. இதை மறைக்க டாக்டர் கோயபெல்ஸ் படாத பாடுபடுகிறார். உதாரணமாக:—

'ஜூன் 21-ல் சில பிரிடிஷ் பாம்பர்கள், பல பைடர்களோடு பிரெஞ்சு கரைக்கு வந்தன. இவைகளில் 26 பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களாலும் மற்றும் 2, நில பீரங்கிகளாலும் சுட்டுத் தள்ளப்பட்டன' என்று ஜூன் 23-ல் செய்தி விடுத்திருக்கிறார்.

இது உண்மைக்கு நேர் விரோதம். 28 விமானங்களை நஷ்டமடைந்தது ஜெர்மானியர்களேயொழிய பிரிடனல்ல. இவைகளில் பிரான்ஸில் 26-ம் இங்கிலாந்துக்கரையில் 2-ம் அழிந்தன. தங்களுக்கேற்பட்ட நஷ்டத்தை பிரிடனுக்கென்று மாற்றிவிட்டார்கள். அன்று, பிரிடனுக்கு நஷ்டம் ஒரு பாம்பரும் 3 பைடரும்தான். ஒரு மாலுமி காப்பற்றப்பட்டான்.

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### அச்சு நாடுகளும் முஸ்லீம்களும்.

முஸ்லீம் நாடுகளோடு அவர்களுக்கு நேசம்தான் என்று பலமுறையறிவிப்பதில் சோர்வடையாத நாஸிகள் ஜூன் மீ 27, 28, தேதிகளில் ஹிந்துஸ்தானியிலும் பாரஸீக பாஷையிலும் ஒலிபரப்பியபொழுது, முஸ்லீம்களுக்கு பிரிடிஷ்காரர்கள் பரம விரோதிகளென்று அராபியர்கள் மதிக்கிறார்களென்று வெளியிட்டனர். நாஸிகளின் பொய் பிரசாரத்துக்கு மாறாக, இந்தப்போலீஸ் சிநேகிதர்களால் இரக்க மன்னியில் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்ட அலெக்ஸாண்ட்ரியா, டமாஸ்கஸ் முதலிய இடங்களிலுள்ள முஸ்லீம்கள், நாஸிகளின் நட்பு



என்னவென்று நன்றாய் அறிந்து விட்டார்கள். விமான எதிர்ப்பு பாதுகாப்புக்காக எகிப்துக்கு பிரிடிஷ் அரசாங்கத்தார் பத்துலக்ஷம் பவுன்கள் நன்கொடை அளித்தபொழுது எகிப்திலுள்ள அல் மாஸிரி என்ற பத்திரிகை சந்தோஷத்தை அறிவித்ததுமல்லாமல் இந்த தாராளமான மனப்பான்மையையும் இதே காலத்தில் ஜெர்மானியர்களும் இடாலியர்களும், தங்கள் நண்பர்களான எகிப்திய முஸ்லீம்களுக்கு, இறப்பு, சேதம், அழிவு, பிரிவு என்ற கொடைகள் அளித்ததையும் ஒப்பிடுகிறது. இடாலியோவென்றால், லிபியாவில் தான் குடியேறியதைப் பற்றி முஸோலினிக்கு உறைக்கும்கால், லிபியாவின் ரோமர்களுடைய சமாதானம் என்னும் புஸ்தகத்தில் எழுதுகிறார். "பொது ஜனங்களுக்கு அங்கிருக்கும் போலீஸ்காரர்கள், பற்களால் கிழித்தெறியும் ரத்த மோப்ப நாய்களைப் போல் கலகக்காரர்களை அடக்கக்கூடியவர்கள். நாளாக நாளாக ஒவ்வொருவராக அவர்களை அழித்துவிட வேண்டும்.

### மத சம்பந்தமான கொள்கையைக் கிளர்ச்சி செய்வது.

ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து இரண்டு வருஷங்களுக்குப் பிறகும், ஹிட்லருக்கு சாதகமாகயிருக்கும் வரையில் அதன்படி அனுஷ்டித்து பிறகும், நாஸிகள் ஜூன் மீ 21 தேதியன்று ஹிந்துஸ்தானி, பெர்ஸியன் பாஷைகளில் ஒலிபரப்பிய பொழுது போல்ஷிவிஸத்திலிருந்து ஐரோப்பாவை விடுவிக்க மத சம்பந்தமான ஒரு யுத்தத்தை ஜெர்மனி செய்கிறதென்று சொல்ல ஆரம்பித்துவிட்டது. நாஸிகளின் நாஸ்திகத்தை எதிர்த்த எல்லா விதமான கிருஸ்துவ ஜனங்களையும் துன்புறச் செய்த நாஸிகள் இப்படிச் சொல்லுவது அழகாகவேயில்லை. உதாரணமாக, காலம் சென்ற லோக குருவான XI-வது பயஸ் என்பவர் ஜெர்மனியிலுள்ள கிருஸ்துவர்கள் அதிகமான கஷ்டத்துக்குட்பட்டிருக்கிறார்களென்றும், இதன் பலன்கள் ரொம்பவும் பயங்கரமாகவும், கொடூரமாகவும் வருந்தத்தக்கதாயுமிருக்கின்றனவென்றும் ஒப்புக்கொண்டார். இம்மாதிரி கஷ்டப்படுத்துவது லோக குருவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மனதார ரத்து செய்ததாகும். மற்ற ஒப்பந்தங்களையும், வாக்குறுதிகளையும் அவர்கள் மதிக்காததுபோல் இந்த ஒப்பந்தத்தையும் அவர்கள் அவமதித்து விட்டார்கள்.

### ஐரோப்பிய நாடுகளும் ருஷ்யாவும்.

பெர்லின் ஒலிபரப்பில் ஹிந்துஸ்தானியில் ஐரோப்பாவிலுள்ள எல்லா தேசங்களும் ருஷ்யாவுக்கு எதிரியாக யுத்தத்தில் கலந்துவிட்டன என்று சொல்லப்படுகிறது. இது வெறும் பீத்தலென்பது, சுதந்திரத்துடனிருக்கும், ஸ்விட்ஸர்லாந்தும், போர்ச்சுகலும், ஸ்பெயினும், துருக்கியும், ஸ்வீடனும் இந்தப் போரில் நடுநிலை வகிக்கின்றன என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டால் வெளியாகும். இதை விட, நாஸி ஆட்சியின் கீழ் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளின் உண்மையான பிரதிநிதிகளான, நெதர்லாந்தின் ராணியான வில்ஹெல்மினாவும், யூகோஸ்லாவியாவின் தளகர்த்தரான ஸிமோவிச்சும், நார்வேயின் பிரதம மந்திரியான ஜோஹன் நிகார்ட்ஸ்வோல்டும், அக்கிரம எதிர்ப்பில் ருஷ்யாவுடன் அவர்களுக்கு அனுதாபமிருப்பதாகச் சொல்லிவிட்டார்கள்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் LII.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூலை | ...12, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 13, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | மாலை | 5.00 |
| | | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கோவிலூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 14, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ஒடுக்கூர் ... | மாலை | 6.00 |
| | | நார்த்தாமலைப்பட்டி ... | ,, | 6.30 |
| | 15, செவ்வாய்க்கிழமை. | மேலூர் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 16, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | வெள்ளனூர் ... | மாலை | 6.00 |
| | | புத்தாம்பூர் ... | ,, | 6.30 |
| | 17, வியாழக்கிழமை ... | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 18, வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் LIII.

| | | | | |
|---|---|---|---|---|
| | 19, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 20, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பூவரசகுடி ... | மாலை | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 21, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 22, செவ்வாய்க்கிழமை. | ராணி பெண்பாடசாலை... | காலை | 10.15 |
| | | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | | கிழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 23, புதன்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | காஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 24, வியாழக்கிழமை. | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பொம்பூர் ... | ,, | 6.30 |
| | 25, வெள்ளிக்கிழமை... | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | மின்னூர்கோட்டை ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—13-7-41.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜூலை ௴ 19௳ [ந. 53.


பிரஸங்கம் 53.

## நமது நேச நாடான அமெரிக்கா.

அமெரிக்காவுக்கும் நமக்கும் யாதொரு ஒப்பந்தமும் கிடையாது; நம்முடைய
ஜன்ம விரோதியுடனாவது அல்லது வேறு யாரோடாவது அமெரிக்கா
யுத்தத்தில் இறங்கவில்லை. வீணாக காலங் கடத்தி வருகிறார்களென்றும், சுயநலம்
பாராட்டுகிறார்களென்றும், அவர்களுக்கு ரோஷமேயில்லையென்றும் அமெரிக்கர்
களை நிந்திக்கும் மனப்பான்மை எங்கும் இருப்பதாய் தெரியவருவதால், அது
இல்லை என்று காட்டுவதற்காகவே இந்தக் கட்டுரைக்கு இந்தத் தலையங்கம் இட்டிருக்
கிறோம். சென்ற வாரம் வாக்கில் மேலே கண்டபடி குறைகூற இடமில்லாமலிருக்
கலாம். ஆனால், ஏப்ரல், மே மாதங்களில் நெருக்கடி ஏற்பட்டிருந்த காலத்தில்,
"இதைப்பற்றி ஏன் அமெரிக்கா ஒன்றும் செய்யாமலிருக்கிறது?" "நான்
சொல்வதைக் கேள், அமெரிக்கா யுத்தத்தில் இறங்காது" என்றெல்லாம்
வார்த்தைகள் சகஜமாய் காதில் விழுந்தன. அவ்வாறு அமெரிக்காவின் பேரில்
குறை கூறுவது வீண் முட்டாள்தனமான விஷம பிரசாரம் என்பதை எடுத்துக்
காட்டுவதுதான் இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம்.

சில மாதங்களுக்கு முன், பிரெஸிடெண்டை தேர்ந்தெடுத்த காலத்தில்,
அப்பொழுதைய ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி, அப்பொழுதைய அமெரிக்காவின்
நோக்கத்தைப்பற்றி நாம் பிரசங்கம் செய்தோம். மிஸ்டர் ரூஸ்வெல்டாயிருந்தாலும்
சரி, அல்லது தேர்தலில் வெற்றியடையும் எந்த நபராயிருந்தாலும்சரி, தன்னுடைய
முந்திய ராஜீயக் கொள்கைகள் எப்படி யிருந்தாலும், அப்பொழுது அவர்கள் எதிர்த்
துப் போராடவேண்டிய விஷயம் எவ்வளவு மகத்தானதென்று எடுத்துக் காட்டி
னோம். பல ரகப்பட்ட ஒரு பெரும் ஜனத்தொகை, எண்பது லக்ஷம் ஜெர்மானியர்

கள், அநேகமாய் அதே அளவு இதாலியர்கள் உள்பட எவ்வளவு தேசத்தார்கள் அங்கிருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு வெவ்வேறு ராஜீயக் கொள்கைகள் ; கடுத்தர ஜனங்களில் பெரும்பாலோருக்கு சென்ற யுத்தமும் அதில் அமெரிக்கா எடுத்துக்கொண்ட பங்கும், யுத்தத்தில் ஜயித்தும், நாட்டுக்கு விபரீதத்தை விளைவித்துவிட்டதென்று அபிப்பிராயம் ; இவர்களைக் காட்டிலும் அதிகம் பேர், அமெரிக்கர்களைச் சுற்றி 3,000, 4,000 மைல்களுக்குச் சமுத்திரம் இருப்பதால் அமெரிக்காவுக்கு ஒரு ஆபத்தும் வராது என்று பூர்ணமாய் நம்பி தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்ட ஒரு தனி ராஜீய கக்ஷியாக அமைந்துகொண்டார்கள் ; சமாசாரப் பத்திரிக்கைகள், பாங்கிகள், உற்பத்தி சாலைகள், சமூக வட்டாரங்கள், ராஜீய வட்டாரங்கள் இவைகள் போன்ற ஏராளமான நிதி சம்பந்தமான அக்கரையுள்ள பல ஸ்தானங்களின் அதிகாரத்தில் புகுந்துகொள்ள சென்ற சுமார் 10 வருஷங்களாய் உழைத்து வந்ததும், பிரிடிஷாருடன் பகிரங்கமாய் விரோதம் பாராட்டி வந்ததுமான ஐந்தாம்படை. அப்பொழுது எல்லாவற்றுக்கும் ரொம்ப முக்கியமான விஷயம் ஒன்றை நாம் கவனித்தோம்:— அதாவது, அப்பொழுது ஐக்கிய நாடுகளில் ஒரு மஹா சமுத்திரத்தைக் காக்கப் போதுமான அளவுக்குக் கப்பல் படை இருந்தாலும்கூட, ராணுவ பரிபாஷையில் ஐக்கிய நாடுகள் எவ்விதமான யுத்தத்துக்கும் தயாராகயில்லை.

தேர்தலின் முடிவும், புது பிரஸிடெண்டின் வெளிப்படையான பேச்சும், சர்வதேச தர்மத்தைப்பற்றியும், அச்சு நாடுகளின் அபிப்பிராயத்தைப்பற்றியும் அவருக்கு எடுத்துரைக்கும் மந்திரிகளும், கொஞ்ச நாள்களுக்கு முன் அவருக்கு எதிர் கக்ஷியிலிருந்த மிஸ்டர் வெண்டல் வில்கி யுத்த ஆர்வங்கொண்ட ஜனநாயகக் கக்ஷியில் சேர்ந்துகொண்டதும், என்ன கஷ்டம் வந்தாலும் பிரிடனைக் காப்பாற்ற முயற்சிக்காமல் தோல்வியடைய விட்டு விட்டு அமெரிக்கா பார்த்துக்கொண்டு இருக்கமாட்டாது என்று நம்பப்போதுமான காரணங்களாயின. புது அரசாங்க நிர்வாகத்தில் இருக்கும் சிரமத்தைக்கூடக் கருதாமல் பூர்ண அமெரிக்க உதவி நமக்குக் கிடைக்குமென்று இங்கு எல்லோரும் நம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

அமெரிக்காவைப்பற்றிக் குறைகூறுகிறவர்களெல்லாம் முக்கியமாய் இந்த அளவுக்குமேல்தான் புகார் செய்கிறார்கள். அவர்கள் சொல்லுவதாவது:—

"இதெல்லாம் ஒன்பது மாதங்களுக்கு முன்பல்லவா? ஒன்பது மாதங்கள் நாமும், உலகமும் மகத்தான ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்த ஒன்பது மாதங்கள் ; நமக்குத் தோல்விகளேயன்றி ஸ்வல்ப வெற்றியுள்ள ஒன்பது மாதங்கள் ; நகரங்கள்; கிராமங்கள், ஸ்திரீகள், குழந்தைகள், விருத்தர்கள் எல்லாம் நாசம் செய்யப்பட்ட ஒன்பது மாதங்கள். பொது நிலைமை வகிப்பதைப்பற்றிய சட்டங்கள், கடன் ஒத்தி மசோதா, பூரண உதவி இவைகளைப்பற்றி நாம் ரொம்ப ரொம்பக் கேள்விப்பட்டோம். ஆனால், ஒரு வாரத்துக்குமுன் அதாவது கார்டல் ஹல், கர்னல் நாக்ஸ். முதலியவர்களின் தைரியமான பிரசங்கங்களுக்குப் பிறகு, பிரிடிஷ் கப்பற்படைகள், அமெரிக்கர்களின் கடல்களை காபந்து செய்துகொண்டிருக்க, ஒரு அரை டஜன் யுத்த நாடுகளுக்கு யுத்தத் தளவாடங்கள் விற்பதால்



வரும் லாபங்களால், தங்கள் பைகளை ரொப்பிக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் விரோதி நாடானது வெகு தூரம் என்றும், அமெரிக்காவில் ஒருவரும் யுத்தத்தை விரும்பவில்லை என்றும் பிரஸிடெண்டு ஒலிபரப்புமூலம் வழவழ கொழகொழ என்று பேசியிருக்கிறார்."

இது ஒரு அதிசயோக்தியாக இருக்கலாம் ; ஏனென்றால், பிரிடன் உண்மையில் ஐக்கிய நாடுகளிலிருந்து அநேக வியாபார வசதிகளும், ஏராளமான கடன் களும், முதலில் கவனிக்கப்படும் ஆர்டர் வசதிகளும், உற்பத்தி முறைகள் விதிப்பது முதலான விதிகளை அடைந்துவருகிறதென்றும், ஜப்பானியர்களை தயங்கச் செய்யவேண்டியதற்காக அமெரிக்கா செய்துவரும் வேலைகளைப்பற்றிச் சொல்லவேண்டியதேயில்லையென்றும் அநேகர் இப்பொழுது தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவிருந்தும் அமெரிக்கர்கள் நாகரீகத்தை இழந்ததுமட்டும் அல்லாமல், உடனேயே எதிரிகளை எதிர்ப்பதற்காக நம்முடன் சேராததால் தங்களுக்கே ஆபத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள் என்றோ, அல்லது ஒரு அமெரிக்க போர்வீரன்கூட யுத்தம் செய்வதற்காகக் கடல்களைத் தாண்டக்கூடாதென்று முந்தி பிரஸிடெண்டு கூறிய வாக்கானது காப்பற்றப்படவேண்டியதாயிருந்தாலும் கூட ஐக்கிய நாடுகளின் கப்பல்படையாவது, உடனே ஹிட்லருக்கு விரோதமாய் எதிர்க்கவும், நாட்டைக் காப்பாற்றவும் உபயோகப்படுத்தவேண்டுமென்றோ சொல்லுபவர்கள் அநேகர் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு அமெரிக்கா, இந்த யுத்தத்தில் நமது பக்கம் சேர்ந்திருக்கிறதென்பதைத் தவிர, அது மிகுந்த உபயோகமுள்ள விதமாய் யுத்தத்தில் சேர்ந்திருக்கிறதென்றும், எவ்வளவு தூரம் கஷ்டங்களையெல்லாம் சமாளித்துக்கொண்டு நமக்குத் தகுந்த உதவி செய்திருக்கிறதென்றும் காட்டுவதற்கும், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலும், மிஸ்டர் பிராங்கிலின் ரூஸ்வெல்ட்டும் அமெரிக்காவில் சங்காதம் முழக்கி, யுத்தக்கொடிகள் பறக்கவிடவில்லையே என்றால், அவர்கள் செய்வது சரியாகத்தான் இருக்கவேண்டுமென்று நாம் நம்புவதற்குப் போதுமான முகாந்தரங்கள் இருக்கின்றன என்று அறிவிப்பதற்காகவும், அமெரிக்காவில் ஜனங்களை யுத்தத்துக்கு எழும்படி செய்ததால், ஹிட்லர் இதுவரை மிகவும் பயந்துவந்ததும், இதுவரை ஆகாயத் தாக்குதலாலும், "யூ" படகுகளின் தாக்குதலாலும் உபத்திரவிக்கப்படாமலிருக்கிறதும், இயற்கை விளை பொருள்களை வேண்டியவரை பெற்றுள்ளதுமான அமெரிக்கா நாட்டில் ஜனநாயகத்துக்கு ஒரு அசூயமான ஆயுதசாலையை நிர்மாணம் செய்யவேண்டுமென்றது மான அமெரிக்கக்கொள்கை சீர்குலைந்துவிடும் என்பதைக் காட்டவும்தான் இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

ஆகையால், ஆபத்துக்காலத்தில் எந்த நாடும் தன் சாவதானத்தைத்தான் முதலில் கவனித்துக்கொள்ளவேண்டுமென்பது வெளிப்படை. அதனால்தான், ஹிட்லர் 1939-ம் வருஷ ஸெப்டம்பர் மாதம் தன் வேட்டை நாய்களை ஏவிவிட்ட பொழுது, இதர வல்லரசுகளைப்போலவே அமெரிக்காவும் தயாராக இல்லாமல் இருந்தது. எந்தக் காலத்திலும் அதற்கு ஒரு கப்பல்படைக்குப் பதிலாக இரண்டு

கப்பல் படைகள் வேண்டியிருக்கும் :—(1) ஒரு பாதுகாப்பு ஸைனியமும், (2) தன்னைக் காப்பாற்றிக்கொள்ள சகல பரிவாரங்களுடன் கூடிய ஒரு ஆகாய சம்ரக்ஷணைப்படை. இதை முதலில் நாம் மனதில் வைத்துக்கொண்டுதான், பொதுப்படையாய் உலகத்தோரின் சுயேச்சைக்காகவும், கௌரவத்துக்காகவும், முக்கியமாய் பிரிட்டனுக்குத் தக்க உதவியளிப்பதற்காகவும், அமெரிக்கா செய்து வரும் மகத்தான, தினே தினே விருத்தியாகிற முயற்சிகளை நாம் கவனிக்க வேண்டும்.

நம்முடைய முந்திய பிரசங்கத்தில் அமெரிக்கா தான் என்னசெய்ய விரும்புகிறதென்பதையும், என்னசெய்யப் போகிறதென்பதையும் அநேகவிதமாய் எடுத்துக் காட்டுகிறதென்று விஸ்தரித்துக் கூறினேம். உதாரணமாக அடியில் கண்டவைகளை கவனிக்கலாம்:—சமாசாரப் பத்திரிகைகளின் மகாநாட்டில் வெளியிடப்பட்ட ஆவேசம்நிறைந்த விஷயங்கள்; ராஜ்ய காரியங்களில் பிரெஸிடெண்டுடன் நெருங்கியிருந்து கூடவே வேலை செய்பவர்களின் பகிரங்கமான பிரசங்கங்கள், பிரஸிடெண்டவர்களே உத்தியோக முறையில் ஒலிபரப்பிய செய்திகள், காங்கிரஸில் மசோதாக்களை பிரேரேபணை செய்தது. இங்கு மறுபடியும் நாம் மற்றொரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது காங்கிரஸில் பிரேரேபிக்கப்பட்டவைகளுக்கு என்ன முடிவு ஏற்படுகிறதோ அதைத்தான் நிர்வாகிகள் நடத்தவேண்டும்; அதனால் கவர்ன்மெண்டாரை எதிர்ப்போராகிய பெரும்பாலோரால் விரும்பப்பட்ட தலைவர்களும், சமாசாரப் பத்திரிகைக் கூட்டங்களும், ஸெனெட் சபையவரை இதை எதிர்த்து காலதாமதம் செய்து, திருத்தங்கள் பிரேரேபித்தும், திருத்தங்கள் பிரேரேபித்து காலதாமதம் செய்தும் இப்படியே முடிவில்லாமல் செய்துகொண்டேயிருக்கவும்கூடும். ஆகையால் தான், பிரெஸிடெண்டைப்போல் அதிகாரம் வாய்ந்த எந்த மனிதனும் தன்னுடைய திட்டங்களுக்கு பொது ஜனங்களின் பக்கபலமிருக்கிறதென்பதை உறுதியாய்த் தெரிந்துகொண்டுதான் அதன்மேல் காங்கிரஸில் தனக்கு விரோதி கக்ஷியிலிருந்து எதிர்ப்போரை தேசத்தின் அபிப்பிராயத்துக்கு குனிந்து கொடுக்கும்படி செய்யவேண்டியதாயிருக்கிறது.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற எந்த நாட்டின் ஸ்திதியைக் காட்டிலும் சுயேச்சை, பரஸ்பர நம்பிக்கை முதலிய கொள்கைகளுக்கு ஜெர்மானியரின் தடித்தனமான இரக்கமற்ற எதிர்ப்பால் வந்திருக்கும் ஆபத்தானது அமெரிக்காவை ரொம்பவும் இளகும்படி செய்துவிட்டது என்று நினைக்கிறேன். இதுதான் ஹிட்லரின் வெற்றிகரமான, பயங்கரமான யுத்த யந்திரத்துக்கு தைரியமாய் முட்டுக்கட்டைபோட்ட ஒரே தேசமான பிரிட்டனுடன் பகிரங்கமாய், அநேகமாய் ஜெர்மனியின் எதிரிநாடென்ற முறையிலேயே நேசப்பான்மை கொள்ளும்படியான ஸ்திதிக்கு அமெரிக்காவைக் கொண்டுவந்து விட்டதென்றும் தோன்றுகிறது. அதனால் ஜனநாயகக் கொள்கைகளுக்காக அமெரிக்கா செய்துவரும் யுத்த முயற்சியில் முக்கியமான கட்டங்களை கவனிப்போம். லீமா மகாநாட்டில் மிஸ்டர் கார்டல் ஹல் பங்கெடுத்துக்கொண்டதும், மன்ரோ தீர்மானம் உல்லங்கனம் செய்யத்தக்கதில்லையென்று திருப்பித்திருப்பி அழுத்தமாய்ப் பேசியதும்,



மத்யஸ்த நாடாயிருப்பது சம்பந்தமான சட்டத்தை திருத்தியமைத்ததும், கிரீன்லாந்தை ருடகோளத்தில் சேர்த்துக்கொண்டதும், இவைகளெல்லாம் பிரிட்டனுக்கு உதவுவதற்காக மசோதா தயாரிக்கப்பட்டதற்குமுன் அச்சுநாடுகள் அறிந்துகொள்ளும்படி முன்னாலேயே காண்பிக்கப்பட்ட அடையாளங்களில் சில. இப்பொழுது நாம் ஒத்தி, கடன் மசோதாவுக்கு முன்புள்ள விஷயங்களை கவனிக்கவேண்டியதில்லை.

தேர்தலைப்பற்றி நடந்த கக்ஷிப் போராட்டங்கள் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அச்சுநாடுகளை எதிர்த்து தைரியமாயும் அவர் பேசி வெற்றியடைந்திருந்தாலும்கூட இந்த வருஷம் மார்ச்சுமீ 8-ம் தேதிதான் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் அவர் அரசாங்கமும் ஒத்திக்கடன் மசோதாவை சட்டமாக்க முடிந்தது. இந்த மகத்தான காரியம் கைகூடும்படி செய்தது ஒரு பெரிய ராஜ தந்திரியின் வழிகளை உதாகரித்துக்காட்டும் காரிய வரிசைகளில் முதலாவதாகும். அவர் முதலில் தன் கொள்கைகளை பகிரங்கப்படுத்துகிறார்; உத்யோக முறையிலும், தனது முறையிலும் அவருடன் வேலை செய்பவர்கள் அவருடைய ஒலிபரப்புகளையும் பிரசங்கங்களையும் மேலெழுந்தவாரியாய் பார்த்துவிட்டு பலமாக ஆமோதித்து விடுகிறார்கள்; இதனால் அமெரிக்காவிலும், உலகத்தின் மற்றபாகங்களிலும் இந்த பிரசங்கங்களால் ஏற்படும் மாறுதல்கள் கவனிக்கப்படுகின்றன; அதன்பிறகு ஒரு மௌனம்;..........“ஏன் பிரஸிடெண்ட் மேல்கொண்டு ஒன்றும் செய்யவில்லை” என்று ஏராளமான ஜனங்கள் கூக்குரல் போடும்வரை ஒரு மௌனம்; பிறகு ரூஸ்வெல்ட் வேலையை ஆரம்பிக்கிறார்; ஆரம்பிக்கும்பொழுது பிரமாதமாய் அநேகமாய் தான் நினைத்தபடியே நடத்திவிடுகிறார்; ஆனால் தேசத்தின் இஷ்டத்தை வெளிப்படுத்துகிற ஒருவனுடைய தீர்மானத்துடன் இதைச் செய்கிறார். பிரஸிடெண்டுக்கு ஊக்கம்போருதென்று சொன்னவர்களும், தலைதூக்க ஆரம்பித்த தனித்திருக்கவேண்டுமென்ற கக்ஷியினர் ஓய்ந்துவிட்டார்கள். தேசமும் திருப்தியாய் ‘இப்படிச் செய்யவேண்டுமென்று தான் நாங்கள் வெகுநாளாய் சொல்லிவந்தோம்” என்று சொல்லிக்கொண்டு தன் தலைவர் சொன்னபடி நடந்துவிட்டது.

அந்த மசோதாவை நிறைவேற்றிய பிறகு, அதன்படி அனுமதிக்கப்பட்ட விதமாய் ஆர்டர்கள் கிடைக்கும்வரை மறுபடியும் ஒரு மௌனம். மிஸ்டர் ரூஸ்வெல்ட் தான் செய்தது சரிதானா என்று கவனித்துக்கொண்டிருந்தார். அவருடைய முறைகளில் சில விவரங்கள் நாம் பார்ப்போம்.

முதலில் அநேக பெரியோர்களின் பிரசங்கங்கள் வெள்ளப் பெருக்குப்போல் நடந்தன.

(i) மேயர் லாகார்டியன், கார்டல் ஹல், கர்னல் நாக்ஸ், எல்லோரும் அமெரிக்கன் கப்பல்களுக்கு துணைகள் அனுப்ப வேண்டுமென்று கேட்டார்கள்.

(ii) அவர்கள் தன் மனதிலுள்ளதைத்தான் கேட்டிருக்கிறார்கள் என்றும் ஆனால் அந்த சமயம் ரோந்து முறையை மட்டில்தான் தான் விஸ்தரிக்கப் போவதாகவும் மிஸ்டர் ரூஸ்வெல்ட் சொன்னார்.

(iii) காபந்து முறையின் அளவைப்பற்றி அட்மிரல் ஸ்டார்க் பிரசங்கங்கள் செய்தார்.

(iv) கர்னல் லிண்ட்பர்க் அதை எதிர்த்து ஒரு பிரசங்கம் செய்தார். ஆனால் அவர் நன்றாய் அடிபட்டு கமிஷனிலிருந்து ராஜிநாமா செய்யவேண்டியதாயிற்று.

முடிவு என்ன?—(i) (ii) ஷரத்துக்களுக்குள் உள்ள வித்யாசத்தின் பயனாய் தலைவர் இன்னும் பலமான நடவடிக்கைகள் நடத்த வேண்டுமென்று ஒரு கூக்குரல் ஏற்பட்டது. "சுயேச்சைக்காக போர் புரியும் கமிட்டியார்" என்று சொல்லப்பட்ட நேசதேசத்தாருக்கு பக்ஷபாதமுள்ள ஒரு கமிட்டியார் துணைக்கப்பல்கள் அனுப்பத்தான் வேண்டுமென்று அறிக்கைப்படுத்தினார்கள். பத்திரிகாசிரியரின் கூட்டம் ஒன்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் வழி காட்டவேண்டுமென்றார்கள். மிஸ்டர் விண்டல் வல்கி, ரூஸ்வெல்ட்டு பொதுஜன அபிப்பிராயத்தை சும்மா அனுசரிப்பதற்கு பதிலாய் விஷயங்களை உள்ளபடி தெரியப்படுத்தி ஜனங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்றார்.

தலைவர் பெரிய காரியங்கள் செய்யவேண்டிய காலம் முற்றிவிட்டது. ஒரே நிமிஷத்தில் அது என்னவென்று நீங்கள் அறிவீர்கள். ஏதன்மத்தியில், இவ்வளவு காலமும் வீணடிக்கப்பட்டதாய் நினைக்கிறீர்கள். பின்னணியில் மும்முரமாய் செய்யப்பட்ட வேலைகளில் சிலவற்றை கீழே குறிப்பிடுகிறோம்:—

(i) பத்து வழிகாட்டிக் கப்பல்களும், இருபது மோட்டார் டார்பிடோ படகுகளும் பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டது.

(ii) காங்கிரஸில் இரட்டை மகாசமுத்திரக் கப்பல்படை மசோதா நிறைவேற்றப்பட்டது. சாதாரண நாள்களில் இந்த மாதிரி மசோதாவை நிறைவேற்ற அநேக வருஷகாலம் பிடிக்கும்.

(iii) பிரிட்டனுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் யுத்த தளவாட உற்பத்தி சாதனங்களை ஒருங்கு படுத்தவும், அது சம்பந்தமாய் கானடாவுக்கு நிதி உதவி புரியவும் ஒருக்கூடிய ஐக்கிய நாட்டு ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டது.

(iv) யுத்த பிராந்தியத்துக்கு வெளியே சாமான் ஏற்றிச்செல்லும் பொறுப்பு பிரிடிஷ் கப்பல்களுக்கு இல்லாமல் செய்ய, அதாவது ஜனநாயகங்களுக்குப் பூரண உதவி அளிப்பதற்காக, எல்லைகயிலும் 20,00,000 டன்கள்வரை கப்பல்களுக்கு ஏற்பாடு செய்யவேணுமாய் தலைவர் மாரிடைம் கமிஷனைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

(v) தென் அமெரிக்காவுக்கும் வட அட்லாண்டிக் துறைமுகங்களுக்கும் மத்தியில் இதுவரை வேலைசெய்து கொண்டிருந்த 50 பிரிடிஷ் டாங்கர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காக 50 எண்ணெய் டாங்கர்கள் வேலை செய்யும்படி திட்டம் செய்ய வேண்டியது.



பிறகு, திடீரென்று, "சமுத்திரங்களின் சுயேச்சையை காப்பாற்றவேண்டும்" என்பதுதான் தற்போதைய அமெரிக்கா தேசத்தின் கொள்கை என்ற தலைவர் ரூஸ்வெல்ட்டின் ஆச்சரியகரமான பிரகடனம் நமக்குக் கிடைக்கிறது. இந்த வார்த்தைகள் நமக்கு பரிச்சயமான வார்த்தைகளாகவே இருக்கின்றன. ஆனால் இந்தக்கொள்கையை ஸர்க்காரார் அனுசரிப்பது நமக்கும் ஜெர்மானியர்களுக்கும் எவ்வளவு முக்கியமானதென்பதை அறிந்துகொள்ள அந்த வார்த்தைகளின் உள் அர்த்தத்தை நாம் ஆராயவேண்டும். அதன் அர்த்தமென்ன?

(i) குடகோளத்தில் நாஜிகளின் ஆதிக்கம் பரவ அமெரிக்காவுக்கு எதிராக உபயோகப்படுத்தக்கூடியதாய் உள்ள எந்த சமுத்திரத்திலோ, அல்லது துறைமுகங்களிலோ அவர்களின் ஆதிக்கம் ஏற்படவொ விடாமல் எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் மும்முரமாய் அதை எதிர்ப்பது

(ii) பிரிட்டனுக்கு யுத்த தளவாடங்களை சாவதானமாய்க் கொண்டுபோய் சேர்ப்பதென்ற வாக்குறுதியை ஸ்திரப்படுத்துவது; இதற்கு பிரதியிடமாய் ஹிட்லர் எதைச் செய்ய முயற்சித்தாலும் அமெரிக்கா அவர்களின் எதிர்ப்பைத் தடுக்க தன்னுடைய படைகளை உபயோகப்படுத்த தயங்கமாட்டாது.

இந்தத் தீர்மானத்தை பலப்படுத்த ரூஸ்வெல்ட் உபயோகப்படுத்திய ஆஸன்ன சம்பவங்களை கவனிக்க ஸ்வாரஸ்யமாயிருக்கும். விஷி ஸர்க்காரின் ஸிரியா சம்பந்தமான பாசாங்குகளும் பொதுவாய் பிரெஞ்சுக்காரரின் தோல்வி மனப்பான்மையும் அமெரிக்காவுக்கு நன்றாய் தெரிந்தபொழுது, "எந்த துணைக் கப்பல் முறையும், அல்லது பிரிட்டனுக்குச் செய்யப்படும் கப்பல் படை உதவி எதுவும் ஒரு யுத்த நடவடிக்கையாகும்; ஜெர்மன் கப்பல் படை இதற்கு தகுந்த பதிலளிக்கும்" என்று அட்மிரல் ரீடர் பிரகடனம் செய்தார். இந்த கடித்தனமான பிரகடனத்துக்கு அடுத்தாப்போலேயேதான் அட்லாண்டிக் யுத்தத்தில் பிஸ்மார்க்கும், ப்ரின்ஸ் ஈஜினும், அபாயத்தைக்கூட கவனிக்காமல் புகுத்தப்பட்டது; நார்வே கடற்கரைகளில் நடமாட்டம் அதிகரித்தது; ஐஸ்லாந்து மீது படையெடுப்பதற்கு பூர்வாங்கமாக க்ரீன்லாந்தில் வந்து இறங்குவதற்கு ஜெர்மானியர்கள் எண்ணங்கொண்டார்கள். இந்த மாதிரி அவர் தோள் தட்டியதற்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட் நிஸ்ஸந்தேகமாயும், திருப்திகரமாயும் பதில் கூறியிருக்கிறார்.

மேலே சொல்லியபடி அமெரிக்கா முதலில் கிளம்பியதிலிருந்து நாளது வரை அமெரிக்காவின் உதவி வீண் ஆடம்பரப்பேச்சாகத்தான் இருக்கிறதென்று யாரும் நினைத்து விடக்கூடுமாகையால், பிரிட்டனுக்கு உதவி செய்தல் என்ற கொள்கை இந்த மத்திய காலத்தில் எவ்வளவு தூரம் கிரியாம்சையில் வந்துவிட்டதென்பதைக் காண்பிப்பதற்காக கீழே சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

(i) குத்தகைக் கடன் சட்டத்துக்காக செலவாகக்கூடிய 7,500,000,000 டாலர்களில் பெரும்பாலும் தனியே எடுத்துவைக்கப்பட்டுவிட்டது.

இத்துடன் கப்பல் கட்டும் தொழிற்சாலைகளுக்காகவும், கப்பல்கள் கட்டுவதற்காகவும் 550,000,000 டாலர்களும், ஆர்டினன்ஸ் ஸ்டோர்களுக்காக 880,000,000 டாலர்களும், டாங்குகளுக்கும் கவச வண்டிகளுக்கும் 318,000,000 டாலர்களும் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

(ii) 75,000,000 டாலர்கள் விலையுள்ள யுத்த தளவாடங்களும், விமானங்களும் ஏற்கனவே பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(iii) நேசதேச வியாபாரக் கப்பல்களில் 60 கப்பல்களுக்கு சீர் செய்யப்பட்டு, ஆயுதபலத்தோடு கூடியதாய் செய்யப்பட்டு, கண்ணிகளால் சேதமேற்படாமலிருக்கும்படியான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அமெரிக்க துறைமுகங்களில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுக்கு சீர் பார்க்கும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

(iv) ஆகாய விமானங்களுக்காக பிரிடிஷாரால் அனுப்பப்பட்டு அமெரிக்க தொழிற்சாலைகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஆர்டர்கள் சம்பந்தப்பட்டமட்டில், இந்த வருஷம் மே மாதம் முடிய கொடுக்கப்பட்டிருப்பது, சென்ற வருஷத்தில் இதே 5 மாதங்களுக்கு எவ்வளவோ அதைப்போல் பத்து பங்காகும்.

(v) முதல் முதலில் சமுத்திரத்தில் 300 மைல் தூரத்துக்கு மட்டில் ஏற்பட்டிருந்த ரோந்து முறையானது அநேகமாய் அட்லாண்டிக் முழுவதற்கும் வியாபித்துவிட்டது. "எங்க அமெரிக்க அவுட்போஸ்டுக்கும் 1,000 மைல்கள் கிழக்கே" என்று அவர்கள் சொன்னதற்கு இதுதான் அர்த்தமாகிறது. இத்துடன், வழியில் ஏதேனும் நீர்மூழ்கிகளோ அல்லது கொள்ளைக்கப்பல்களோ வந்தால் அந்த விஷயத்தை பிரிடிஷ் கப்பல்களுக்கு அறிவித்து அவைகளை உஷார்ப்படுத்தவேண்டுமென்று இந்த ரோந்துக் கப்பல்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(vi) அச்சு நாடுகளின் உத்தரவின் பேரில் ஏற்படக்கூடிய விஷமச்செயல்களைத் தடுப்பதற்காக முதல் முதலில் அமெரிக்கத் துறைமுகங்களில் 68 அச்சு நாட்டுக் கப்பல்கள் பிடிக்கப்பட்டன. அந்தக் கப்பல்களை தம் தேச உபயோகத்துக்காக பிரயோஜனப்படுத்தவும், பனமா ரிஜிஸ்ட்டரியில் பிரிட்டனுக்கு அனுப்புவதற்காகவும் அதிகாரம் கொடுப்பதற்காக காங்கிரஸில் அவசர அவசரமாய் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பொது ஜனங்களின் பக்கபலமிருக்கிறதென்று தெரிந்துகொண்டு, அதே மாதத்தில் பிந்திய தேதியில் (மே மாதம் 28-ம் தேதி) தலைவர் திடீரென்று ரொம்ப முக்கியமான மேல் நடவடிக்கை ஒன்று நடத்தினார். இது வரை அந்த நாட்டு ராஜாங்க முறையில் மறைந்து கிடந்ததான தேசத்தின் ஆயுதம் தாங்கிய



படைகளின் சேனாபதியின் அதிகாரங்களை அவர் ஏற்றுக்கொண்டு தன் தேசம் எல்லா வகைகளிலும் எந்த நிமிஷமும் யுத்தத்துக்குத் தயாராயிருக்கவேண்டுமென்று பகிரங்கப்படுத்தினார்.

உண்மை இதுதான் :—ஜனநாயக நாடுகள் பீதியடைந்து விட்டன; அச்சு வல்லரசுகளோ, அமெரிக்காக்களில் ராஜீய கக்ஷிகளும், அபிப்பிராயபேதங்களும் ஏராளமாயிருப்பதால் ஒரு மகத்தான ஐந்தாம்படையின் உதவியால் அமெரிக்காக்களில் ஏகோபித்த தேசீய உற்பத்தி முயற்சிகள் சீர்குலைந்துவிடலாம் என்று தைரியமாயிருந்தார்கள். மே மாதத்தில் ரொம்ப முக்கியமான மோட்டார் தொழிற்சாலைகளிலும், கப்பல் கட்டும் இடங்களிலும், சுரங்கங்களிலும் இடைவிட்டு இடைவிட்டு உண்டான வேலை நிறுத்தங்கள், விஷமிகளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த வியவகாரங்களை சாதாரணமான பஞ்சாயத் தீர்மானங்களுக்கு அனுப்புவதிலிருக்கும் அபாயத்தை வெளியிட்டன. தலைவர், மறுபடியும் தன்னுடைய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூலமும், சமூக சிநேகிதர்கள் மூலமும் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு வேலை நிறுத்தமென்ற இந்த கொண்டி மாட்டை அடக்கிவிட்டார். சுருக்கமாய்ச் சொன்னால், அவசியமேற்பட்டால் இந்த வேலை நிறுத்தங்களை பலாத்காரமாய் அடக்குவதற்காக தனக்குள்ள அவசர அதிகாரங்களை அவர் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார். எக்காரணத்தை முன்னிட்டாவது வேலையை நிறுத்துவதாய் பயமுறுத்தும் தொழிற்சாலைகளை சர்க்கார் வசப்படுத்திவிட தலைவருக்கு அதிகாரம் கொடுத்து விட ஸெனெட்டும் சட்டங்கள் நிறைவேற்றி விட்டது.

இந்தக் கூட்டில் சேர்ந்து யுத்தம் செய்யும் நாம் வேண்டுவதும் இந்த மாதிரியான சட்ட திட்டங்கள்தான். அமெரிக்காவின் போர் சக்தியைக் கணக்கிடுவது நக்ஷத்திரங்களை எண்ணிக் கணக்கிடுவது எவ்வளவு அசாத்தியமோ அவ்வளவு அசாத்தியமென்றால் அது அதிசயோக்தியாகாது. தொழில் அபிவிருத்தி நிபுணர்கள் எதை "சாத்தியமாக இருக்கலாம்" என்று மதிக்கிறார்களோ, அது குறிப்பிட்ட காலத்தில் உண்மை புள்ளி விவரங்களாகி விடுகிறது. உதாரணமாக உருக்கை எடுத்துக் கொள்ளுங்கள். "ஜெர்மனியினுடையவும் அது பிடித்துக் கொண்டிருக்கும் நாடுகளுடையவும் உருக்கு உண்டு பண்ணும் சக்திக்கு டன்னுக்கு டன் சரி சமானமாய் உருக்கு உற்பத்தி பண்ணும் சக்தி அமெரிக்காவுக்குத் தான் உண்டு என்பதில் "சந்தேகமில்லை" என்று இரும்பு உருக்கு சாலையின் தலைவர் Mr. டவர் சொன்னார். உண்மையில் அமெரிக்கா அவ்வாறு செய்யும். இந்த வருஷம் மே-மீ முடிவில் சென்ற வருஷத்தில் தான் உற்பத்தி செய்த உருக்கு சாமான்களைக்காட்டிலும், அமெரிக்கா 50 சத விகிதம், 7,60,00,000 டன்கள் வரை, அதிகப்படுத்தி இருக்கிறது. ஏகோபித்த கண்ட்ரோல் மூலம் இந்த எண்ணிக்கை மிகுதியாய்க் கூடிவிடும். மே மாதத்தில் மட்டில் 80,000 டன்கள் வரை புதுக்கப்பல்கள் கட்டப்பட்டன; 12 புதுக்கப்பல்கள் கடலில் ஓட்டப்பட்டன. இந்த வருஷம் 12½ லக்ஷம் டன்களுக்கு திட்டம் செய்யப் பட்டிருக்கிறது. அடுத்த வருஷத்துக்கு 35 லக்ஷம் டன்கள்; 1943-ல் 50 லக்ஷம் டன்கள். இந்தப் புள்ளி

விவரங்களை பிரிடனின் கப்பல் கட்டும் முயற்சிகளோடு சேர்த்தால் அது பெரும் கொள்ளைக்காரனான ஹிட்லருக்குப் பெரிய மனக்குழப்பத்தை உண்டு பண்ணும். முதலிலேயே 200 லக்ஷம் டன்கள் உள்ள கப்பல்களுடன் ஆரம்பித்து, அதுமுதல் அநேக மத்யஸ்த நாடுகளிலிருந்தும், நேச தேசங்களிலிருந்தும் வருஷம் 1-க்கு சுமார் 30 லக்ஷம் டன் விகிதமாய் 50 லக்ஷம் டன்கள் வரை சேர்த்துக் கொண்டு இருக்கிற—இதுவும் போராததாய் இருக்கும்—பிரிடனை தனக்கு உணவுப்பொருளும் யுத்த சாமான்களும் கொண்டு வந்து சேர்க்க கப்பல்களில்லாமல் செய்து பட்டினியாய் கிடக்கச் செய்ய வேண்டுமென்ற ஹிட்லரின் எண்ணம் அமெரிக்காவின் வருங்கால முயற்சியால் இருந்த இடம் தெரியாமல் அழியத்தான் வேண்டும்.

அமெரிக்காவில் ஆகாய விமானங்களின் உற்பத்தியும் அவைகளை இங்கிலாந்துக்கு அனுப்புவதும் இதே போல் நமக்கு தைரியமளிக்கிறது. உதாரணமாக ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டது 1,411 விமானங்கள்; இது ஸ்வல்பம் தான். ஆனால் வருஷம் முடியுதற்குள்ளாக மாதம் ஒன்றுக்கு 1,800, அல்லது 2,000 வீதம் உற்பத்தி செய்யப்படும் என்று நிச்சயமாய் எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர ஏற்கனவே 1,000-க்கு மேல்பட்ட புதிய அழகான "டொமோஹாக்" என்ற விமானங்கள் பிரிடனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்குத் தீவுகள் வழியாக எகிப்துக்கு நேரடி பாம்பர்கள் பறந்துபோகும்படி செய்யப்பட்டிருக்கிறது; "கடலினா" ஆகாயப்படை "பிஸ்மார்க்கை" சுட்டுவீழ்த்த உதவியது; க்ளென்மார்ட்டின் "பாம்பர்களும்", "டொமோஹாக்" சண்டை விமானங்களும் இப்பொழுதுதான் லிபியாவில் முதல் தரமான வேலைகள் செய்திருக்கின்றன. டாங்குகள், பீரங்கிகள் உள்பட எல்லாவிதமான யுத்த தளவாடங்களும் ஏராளமாய் பிரிடனுக்கும் அதன் யுத்த முனைகளுக்கும் கப்பல் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. சமீபத்தில் ரொம்ப வேகமாகச் செல்லக்கூடியதும் நல்ல பலமுள்ளதுமான ஒரு டாங்கு உற்பத்திசெய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, ரொம்ப முக்கியமான விஷயத்தில் ஏற்கனவே நமது நேச நாடாகத்தான் இருக்கிறதென்ற இந்த என் கட்டுரையில் கண்ட விஷயங்களை ஊர்ஜிதப்படுத்தத்தான், "ஜன நாயகங்களுக்கு ஆயுத சாலையாகவேண்டும்" என்று அமெரிக்கா சொல்லிக்கொள்வதன் அர்த்தம் என்னவென்பதைக் காட்டக்கூடிய சில விவரங்கள் கொடுக்கத்தான் நான் சிரமப்பட்டேன். முன்பே ஒரு விதமான தீர்மானத்துக்கு வந்துவிட்டவர்கள் என்றும், தீர்க்காலோசனையற்றவர்களென்றும், அசிரத்தையுள்ளவர்களென்றும், அமெரிக்கர்கள் யார் யாரைச் சொன்னார்களோ அவர்களெல்லாம் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிவிட்டார்கள். இது போன்ற உபரியான விஷயங்களையெல்லாம் நான் சொல்லவில்லை. இதுவும் முக்கியமானதுதான்; தர்மமே ஆபத்திலிருந்ததால் அமெரிக்கா ஏகாதிபத்ய நாடுகளுக்கு விரோதமான கக்ஷியில் சேர்ந்ததுபோலவே பிரிடனின் அடக்கமும் தைரியமும் அமெரிக்கர்களின் வியப்புக்கும் இரக்கத்துக்கும் காரணமாயிற்று. ஆங்கிலம் பேசும் இந்த இரண்டு நாடுகளும் அவர்களுடைய



சரித்திரத்தில் ஒருபொழுதும் இவ்வளவு நெருங்கிய மனோபாவத்துடன் இருந்ததில்லை. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டிருக்கும் நேசமும் தற்காலத்திய ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும்விட எவ்வகையிலும் பலமானது.

## பின்செய்தி.

இப்பொழுது, இந்தக்கட்டுரையை நான் முடிப்பதற்குமுன் ஐஸ்லாந்தை ஆக்ரமணத்திலிருந்து காப்பதற்காக அமெரிக்கப்படைகளும் பிரிடிஷ்படைகளுடன் சேர்ந்துவிட்டனவென்று செய்திகிடைக்கிறது. இதுதான் தீர்மானமான "ஸூசகம்". அமெரிக்காவின் எல்லை சாகரத்தில் முந்நிலையைக்காட்டிலும் ரொம்ப தூரமுள்ள ஒரு நிலையையும் சேர்த்துவிட்டது. அதனால் அமெரிக்க எல்லைக் கடலானது 1,000-மைல் கிட்டத்தட்ட லிவர்பூல் வரை வந்துவிட்டது. மிஸ்டர் ரூஸ்வெல்டு, அஸோர்ஸும், கானரித்தீவுகளும் இதேபோல் அமெரிக்க சாவதானத்துக்கு அவசியமானதுதான் என்று கருதிவிட்டால், யுத்த அபாயம் முழுவதும் அமெரிக்காவுடன் வியாபாரம் செய்யும் நாடுகளுக்குமட்டும்தான் இருந்து வருகிறதென்ற புகாருக்கு இடமேயில்லாமல் போய்விடும்.

மிஸ்டர் ரூஸ்வெல்டின் ஆக்ஷியின் ராஜீய தந்திரத்தை கவனியுங்கள். இன்னும் அவர்கள் யுத்தத்தில் சேரவில்லை. அவர்கள் செய்யும் திட்டங்கள் எல்லாம் பாதுகாப்புக்காகத்தான். அவர்கள் தங்களைச்சுற்றி வெகு தூரத்துக்கு பலத்த கோட்டைகளால் காபந்து செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த எல்லைகளுக்குள் அவர்கள் வேவுபார்த்து காவல் காக்கிறார்கள். கொள்ளைக்காரன் இந்த காவலை மீறி உள்புகுந்தால் அவனுக்கும் அமெரிக்காவுக்கும் யுத்தம் துடங்கிவிடும்.

நாம் புகார் செய்ய ஏதேனும் இடமுண்டா? ஏராளமாய் யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யக் கூடியதும், அதேகாலத்தில் உலகத்தைக் காப்பதற்காக ஏகோபித்து நன்றாய் ஆலோசித்து சாவதானமாய் தான் செய்யும் முயற்சிகளைக் கெடுத்துவிடக்கூடிய சத்துருக்களை தேசத்துக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் துரத்தியடிக்கிறதும், ஒரு பெரிய பண்டகசாலையாக விளங்குகிறதுமான அமெரிக்காவை தன்னுடைய யந்திரங்களை சீர்குலைத்துக்கொண்டு, தன்னுடைய ஆள்பலம் முழுவதையும் ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் வீணுக்கி தங்கள் சாவதானத்துக்கு பங்கம் விளைவித்துக் கொள்ளும்படி நாம் நினைக்கலாமா? ஆனால் அமெரிக்காவை குறைகூறுபவர்கள் இதுதான் வேண்டும் என்கிறார்கள். ஆனால், ஆச்சரியத்திலும் ஆச்சரியம், இந்தியாவுக்குப் புதிதாய் வந்திருக்கும் சேனாதிபதியிடமிருந்து இவர்களுக்கு பக்க பலம் ஏற்பட்டிருக்கிறது. கெய்ரோவில் சமாசாரப் பத்திரிக்கைக்காரர்களுக்கு அவர் கொடுத்த பேட்டியில் இதைத்தான் சொல்லியிருக்கிறார் என்று தோன்றுகிறது. சேனாதிபதி அமெரிக்காவின் ஆள் பலம் தேவையென்று சொன்னதைப்பற்றி மிஸ்டர் ரூஸ்வெல்டின் காரியதரிசியான மிஸ்டர் ஸ்டீபன் யேர்லியைக் கேட்டபொழுது அவர் சொன்னதாவது:—"கடாசியாக நான் லண்டனிலிருந்து கேள்விப்பட்டது, 'ஆயுதங்களை எங்களுக்குக் கொடுங்கள் நாங்கள் வேலையை முடித்து விடுகிறோம்'

என்று மிஸ்டர் சர்ச்சில் சொன்னதுதான். இந்த சேனாதிபதி மிஸ்டர் சர்ச்சிலுக்கு கீழ்ப்பட்டவர்தான் என்று கருதுகிறேன்." அவர் சொன்னதுதான் சரி என்று நமக்குத் தோன்றுகிறது.

அமெரிக்கா உண்மையில் நம்முடன் சேர்ந்து அதன் திட்டங்களை நிறைவேற்றிவருவது ஹிட்லரின் யுத்த முறைகளை முழுவதும் மாற்றிவிட்டது என்றதனால்தான் நாம் சொல்லுகிறோம். உலகத்தை ஆக்கிரமிக்க வேண்டுமென்ற பைத்தியக்கார யோசனையில் மெயின்காம்பில் கண்டபடி அவன் முதலாவது லக்ஷியம் பிரிட்டனை முதலில் நசுக்கிவிட்டு பின்னாடி ருஷ்யாவை ஜயிக்க வேண்டுமென்பதுதான். இப்பொழுது முதலில் அவன் தன்னுடைய ஆயுதசாலையான ருஷ்யாவையே அதிலுள்ள எண்ணெய், தானியம், தாதுக்கள் இவைகளோடு கைப்பற்ற முயல வேண்டியிருக்கிறதென்று நன்றாய்த் தெரிகிறது; ஏனென்றால், அமெரிக்கா போன்ற ஆயுதசாலை பிரிட்டனுக்கு இருக்கும்பொழுது அதற்குச் சமமாகச் செய்துகொள்ள ஹிட்லருக்கு இது தேவையாகிறது. அமெரிக்கா தன்னால் இயன்றவரை நமக்கு உதவிக்கொண்டுதான வருகிறது; அதற்கு நாம் ரொம்பவும் நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

---

## அனுபந்தம்.

---

### ஐக்கிய (அமெரிக்க) நாடுகளில் உள்ள ஜெர்மன் ஸ்தானிக காரியாலயங்கள் மூடப்பட்டன.

### அமெரிக்கா ஆக்ஷேபித்த நடவடிக்கைகள்.

### பிரிடிஷ் பிரசார நிலயங்களின் உதவி.

(எட்வர்ட் மாண்டகாமெரி எழுதுவது).

குத்தகைக் கடன் மசோதாவிற்குப் பிறகு இத்தேசத்தில் சந்தோஷமளித்தகால செய்திகளில் அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் ஸ்தானிக நிலயங்களை மூடச் செய்யப்பட்டதுதான் விசேஷமானது. இச்செய்தி வாஷிங்டனில் ஸம்மர் வெல்ஸால் எல்லா பிரசார மார்க்கங்களிலும் வெளியிடப்பட்டது.

சென்ற வெகு நாட்களாகவே எவ்விதம் அந்நிய நாடுகளை எதிர்த்துப் பகைப் பற்றுமுன், அந்நாடுகளில் பல முகாந்திரங்கள் சொல்லிக்கொண்டு சகஜமாகவும் கொஞ்சம் கொஞ்சமாகவும் ஜெர்மன் கலவரக்காரர்கள் உட்புகுந்து அங்கங்கு கலகாஸ்பதமான நடவடிக்கைகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள் என்பது பற்றி, நம்மில் பலர், பெல்ஜியன், டச்சு, பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து அறிந்திருக்கிறோம். இதனால் அமெரிக்காவில் எங்கிலும் ஏராளமான ஜெர்மானியர் ஸ்தானிக நிலயங்களுடைய சிப்பந்திகள் என்று கூறிக்கொண்டு பரவி இருந்ததைக் கண்டு நாம் அச்சம் கொண்டது உண்டு.



ஏனென்றால் அந்நாடுகளில் உள்நாட்டு கவர்ன்மெண்டுக்கு பலஹீனம் உண்டாக்கிய புரட்சிகளுக்கு எல்லாம் மர்மஸ்தானம் அந்நாடுகளில் இருந்த ஜெர்மன் ஸ்தானிக காரியாலயங்களேயாம்.

அதனாலேயே வரிசைக்கிரமமாக அந்நாடுகள் ஜெர்மனியால் எதிர்க்கப்பட்ட போது அந்த எதிர்ப்பிலிருந்து தற்காப்பு செய்துகொள்ளக்கூடாமல் உள்நாட்டுப் புரட்சியின் காரணமாக பலக்குறைவு ஏற்பட்டிருப்பதைக் கண்டன.

ஒவ்வொரு நாட்டிலும் ஜெர்மன் முறை ஒரு விதமாகத்தான் இருந்திருக்கிறது. எந்தவிடத்திலும், இன்றும்கூட, ஜெர்மன் ஸ்தானிக காரியாலயமோ, ஜெர்மன் யாத்ரிகர் நிலயமோ, இருக்குமானால் அதுதான் சகல புரட்சி, கலவரம், சூது இவைகளுக்குப் பிறப்பிடம் என்று கண்டுகொள்ளலாம். இவைகளைப் பொசுக்கி விடுவது சுலபமென்று, நாம் கருதலாம். இது முடியாது. ஏனென்றால் ஆதிகால முதல் இவ்வித இதர நாட்டு ஸ்தானிக காரியாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்ட கால முதல் இவற்றிலுள்ளவர்களை கண்யமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு தர்ம நியாயம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்த மாமூல் அனுஷ்டானத்தை தங்கள் துஷ்டச் செய்கைகளுக்கு பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர் தங்கள் துஷ்ட பிரசாரகர்களை மேற்படி காரியாலயங்களிலுள்ளவர்கள் என்று ஏற்படுத்திக்கொண்டு தங்கள் அயோக்கியத்தனமான நடவடிக்கைகளுக்கு, ப்ராசீனதர்ம உரிமையை உபயோகப் படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

தங்களில் ஒருவரோடு ஒருவரும், தங்கள் தேசத்துடனும் சமிக்ஞையான பாஷைகளில் தகவல்கள் கொடுத்துக்கொள்ளவும் இது பயனளித்தது. எல்லா விடத்திலும் இவ்விதமே நடந்துகொண்டிருக்கிறார்கள்.

தங்கள் அயோக்கியத்தனமான இவ்வித நடவடிக்கைகளை மேற்சொன்ன உரிமையைக்கொண்டு கையாண்டு வந்ததால் பேருட்டிலாவது ஜெர்மனியுடன் சமாதானமாயிருப்பதாக இருக்கும் நாடுகள் ஒன்றும் செய்வதற்கில்லாமல் இருந்தது.

இவ்வித நடவடிக்கைகளைக் கண்டிக்கவும், நடக்கவொட்டாது தடுக்கவும்கூடும் என்றும், காரியாலயங்களை மூடச்செய்ய செய்யக்கூடுமென்றும், அதே சமயமும் அக்காரியாலயங்களின் தாய் நாட்டுடன் சமாதானமாகவே இருக்கவும்கூடும் என்றும், இதற்கு இந்நாட்டின் கவர்ன்மெண்டு பலமுள்ளதாகவும், அதை அத்தேச ஜனசமூகம் ஆதரிப்பதாகவும் இருக்கவேண்டும் என்றும், படிப்பினை புகட்டியது அமெரிக்காதான்.

இதனால் ஜெர்மானியரின் முறை மிக்க தந்திரமானதென்று அர்த்தமில்லை. சில சமயம் அவர்களுடைய முயற்சிகள் முரட்டுத்தனமானதாகவும், அநாகரிகமானவைகளாகவும், அசட்டுத்தனமானவைகளாகவும் இருந்தாலும் ஒவ்வோர் சமயம் மிக சாதுர்யமானவைகளாகவும் இருந்தன.

ஜெர்மனியின் துஷ்ட பிரசாரங்களின் பிறப்பிடம் கோயபல்ஸின் காரியாலயம் என்று நினைக்கிறோம். பல சமயம் இப்பிரசாரங்கள் உள்நாட்டிலே ஏற்படுவதாகும்.

ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இத்தேசத்திலுள்ள சகலவிதமான ஜனங்களுடன் பழக்கமுள்ளவனும், பத்திரிகை நடத்துவதில் 12 வருஷ அனுபவமுள்ளவனுமான நான், இன்று, கூடிய சீக்கிரம் ஜெர்மனியோடு சமாதான மேற்படப் போகிறது என்று சொன்னேனானால் நீங்கள் எவரும் நம்பமாட்டீர்கள். ஆனால் எதிர் வீட்டு 'ஜோன்ஸ்' இச்சமாசாரத்தைப்பற்றி சர்ச்சில் மந்திரி பதவியை ராஜிநாமா செய்யப்போவதாகவும், வேறு மந்திரி சபை ஏற்பட்டு, ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ளப் போவதாகவும் சொன்னால் இதை உடனே நம்புவீர்கள். ஏனென்றால் ஜோன்ஸ் பொய் சொல்லமாட்டான். நாணயஸ்தன். நீர் வெகு நாள் அவனை அறிவீர். அவன் வேணுமென்று உம்மை ஏமாற்றமாட்டான் என்று நம்பிக்கை.

வாஸ்தவம், ஆனால் நீரும் ஜோன்ஸும் அறியாதது என்னவென்றால், இந்த சமாசாரத்தை ஜோன்ஸுக்குச் சொன்னவருக்கு, தகவல் கொடுத்தமற்றவர், எவனிடமிருந்து இதைத்தெரிந்து கொண்டாரோ அவன் என்ன அந்த காரியாலயத்து உத்தியோகஸ்தரிடம் பெரும்தொகை பெற்றுக்கொண்டு இந்தப் பீதிப் பேச்சைக்கிளப்பிவிட்டவன், என்பதே.

ஜெர்மானியரின் சூதுகளில் இது ஒருமுறை. இதை நம்பாவிட்டால் ஒரு வாரம் 10-நாட்களுக்குமுன் என்ன நடந்தது என்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களும், பல அத்தேசபத்திரிகைகளும்கூட இச்செய்தி உண்மையோ என்று மயங்கி இருந்தார்கள். இது சம்பந்தமாய் தான் வினண்ட் அமெரிக்காவுக்கு ரூஸ்வெல்ட்டிற்கு உண்மை அறிவிக்க நேரில்சென்றது. இதற்கு இடங்கொடுத்தது ஸ்காட்லாண்டுக்கு ஹெஸ் பறந்துவந்தது.

இச்செய்தி கோயபல்ஸால் பர்லினில் கிளப்பிவிடப்பட்டு 21 அமெரிக்க முக்கிய நகரங்களிலுள்ள ஜெர்மன் காரியாலயங்களின் மூலம் வெளிப்படுத்தப் பட்டதாகும்.

இதனால்தான் இங்கிலாந்திலுள்ள நாம் யாவரும், அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் நிலயங்கள் மூடிவிடும்படிக்கு கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிற விஷயத்தைக்கேட்டு சந்தோஷப்படுகிறோம். இச்சந்தர்ப்பத்தில் பிரிடிஷ் பிரசார நிலயங்களைப்பற்றிக் குறிப்பிடத்தான் வேண்டும்.

இச்சமாசாரம் சென்ற சில நாட்களாகவே விசேஷமாக குறிப்பிடப்பட்டு வருகிறது. இதுவும் அமெரிக்காவில் பிரிடிஷ் பிரசார நிலயாதிபதியாக சர் ஜிரால்ட் காம்பெல் நியமிக்கப்பட்டிருப்பதும் விசேஷமாக கூறப்படுகின்றன.

அமெரிக்காவில் பிரிடிஷ் தரப்பு விஷயங்கள் அறிவிக்கப்படுவதற்காகவுள்ள பிரசார நிலயங்கள் நியாயமாகவே குறை கூறப்பட்டிருக்கின்றன. குறை கூறுபவர்கள் பலசமயமும் ஆலோசனை செய்வதில்லை என்றே நான் நினைக்கிறேன்.



ஏனென்றால் விஷயங்களை பூராவும் வெளியிடுவது என்பது ராஜ தந்திரத்துக்கு விரோதமானதாகவே சிலசமயம் ஏற்படக்கூடும். யுத்த முயற்சிகளுக்கும் விரோதமானதாகும்.

பிரிடனானது இந்த யுத்தத்தை, ஜனசமுதாயத்தின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவே, தொடங்கியிருப்பதில், அவ்வுரிமைகளை க்ஷீணிக்கச்செய்யக்கூடாது.

தான் எதிரி தர்ம விதிகளை புறக்கணித்து பலசௌகரியங்களை அடைவதாயிருந்தும், பிரிடன் இவ்விதிகளுக்குப் புறம்பாக நடக்க இயலாது. இக்கோட்பாடு வாய்மொழிச் சண்டைக்கும் குண்டுபோடும் சண்டைக்கும் அன்வயிக்கும்.

ஜனங்கள் மத்தியிலும், தேசங்களிடையிலும், பரஸ்பரம் சூது மோசம் இருப்பதுகூடாது என்றே, பிரிடன் இந்த யுத்தத்தில் பிரவேசித்திருப்பதில், புளுகும் பொய்யுமான பிரசாரங்களை வெளியிடுவது பிரிடனுக்கு ஒத்ததில்லை. எதற்கும் துணிந்த துஷ்டனுடன் போட்டியிடும் காலத்தில் தர்ம நியாயப்படி நடப்பது அசந்தர்ப்பமாகவேதான் இருக்கும். தக்க மூஸ்தீப்புகளுடன் பிறட்டுப் புரட்டு பித்தலாட்ட பிரசார அறிக்கை வெளியிடும் கோயபல்ஸின் நிலயங்களுடன் போட்டியிடுவதில் பிரிடிஷ் நிலயங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பல கஷ்டங்களுக்கும் இதுதான் காரணம். பிரிடிஷ் பிரசார நிலயங்களில் குறைகள் இல்லை என்று நான் கூறவில்லை. ஆனால் இவ்வித யுத்த காலங்களில் மேற்படி நிலயங்களின் அவசியத்தைதான் குறிப்பிடுகிறேன்.

தனிப்பட்ட ஆதரவில் வெளியிடப்படும் ரேடியோ செய்திகளோ, பத்திரிகைகளில் குறிப்பிடப்படும் விஷயங்களோ, யுத்த காலத்தில் யுத்த முயற்சிகளைப் பற்றியும், யுத்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் உண்மைகளை விளக்க, போதுமானவைகள் அல்ல.

இதில் ஏற்படும் கஷ்டமான கடமைகளை பிரிடன் அறியவில்லை என்று குறை கூறப்படுகிறது. தற்போது அமெரிக்காவில் பிரிடிஷ் தரப்புச் செய்திகளை பரவச் செய்ய செய்துள்ள ஏற்பாடுகளிலிருந்தும், முன்பே இதற்கென்று நிறுவப்பட்டிருந்த பிரசார நிலயங்கள் சீர் செய்யப்பட்டு வருவதிலிருந்தும், பிரிடன் இக்குறையை அறிந்து உள்ளது என்றும், அதை நிவர்த்தித்து வருகிறதென்றும், அறியக் கூடுகிறது.

நான் அமெரிக்கா என்ற முறையில் இதைப்பற்றி மற்றொரு விஷயம் சொல்லுகிறேன். பிரிடனின் முயற்சியுடன், அமெரிக்கப் பத்திரிகைகள் என்ன, தனிப்பட்ட நிலயங்கள் என்ன இவைகளின் முயற்சிகளால், பிரிடனில் உள்ளவர்கள் அமெரிக்காவைப்பற்றி அறிந்துகொள்கிறதைவிட அதிகமாகவே, தற்போது அமெரிக்கர் பொதுவில் எல்லாருமே பிரிடனைப்பற்றி அறிந்துகொள்ளக்கூடுகிறது.

யுத்த காலத்தில் பிரிடிஷ் பத்திரிகைகளுக்கு அதிகமாக அமெரிக்க நிருபர்களை உபயோகித்துக் கொள்வது சிரமமாய் இருக்கிறது. கப்பல் வசதிக் குறைவின் காரணமாக எல்லா பத்திரிகைகளும் 4 பக்கங்களுக்கு குறைக்கப்பட்டு இதற்குள் உலக சமாச்சாரங்கள் அனைத்தையுமே பதிப்பிக்கவேண்டியிருக்கிறது.

அமெரிக்கர்கள் தினப்படி இரு முறை கடைசியான செய்திகள்கூட ரேடியோ மூலம், தங்கள் ரேடியோ நிருபர்கள் மூலம் பெற முடிகிறது. ஆனால் பிரிட்டன் வாரத்துக்கு ஒரு முறை அதுவும் 15, 20 நிமிஷங்களுக்குத்தான் ரேமாண்ட் கிரும் ஸ்விங் போன்ற ரேடியோ நிருபர்களின் அறிக்கைகளைப் பெற முடிகிறது.

கப்பல் வசதிக் குறைவால் பல அமெரிக்க மாதாந்திர பத்திரிகைகள்கூட வறத்தப்படக்கூடவில்லை. இந்தேச மக்களிடையே அமெரிக்காச்செய்திகள் அறிய பெரிய அவா இருக்கிறது. இவர்கள் அமெரிக்காவை உணர விரும்புகிறார்கள். ஏனென்றால் உணர்ச்சி இல்லாமல் பரஸ்பர சிநேகம் அசாத்தியம். இந்த அவாவை, தாகத்தை சமனம் செய்ய தக்க முறைகள் அனுஷ்டிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 10—7—41-லிருந்து 16—7—41-வரை.

## ருஷ்யா-ஜெர்மன் யுத்தம்.

**ஓய்வு.**—இந்த வார ஆரம்பத்தில் 36 மணி நேரத்துக்குக் கிழக்கு யுத்த அரங்க முழுவதும் சண்டை நிறுத்தமாயிருந்தது. ஆனால் இது இரண்டாவது. மின்னல் எதிர்ப்பைத் தொடுக்க ஜெர்மானியர் சற்று எடுத்துக்கொண்ட ஓய்வு என்று இப்பொழுது வெளியாகிறது.

**இரண்டாம் மின்னல்—படையெடுப்பு.**—இந்தப் போரை நிகழ்த்தியதில் ஸ்டாலின்-அரணை எல்லா முனைகளிலும் பிளந்துவிட்டு, லெனின் கிராட், கியவ் நகரங்களை நோக்கிச் செல்லுவதாக ஜெர்மானியர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இச்செய்திகள் ஊர்ஜிதமாகாதிருப்பதோடு, மறுக்கவும்படுகின்றன. எல்லாவிடங்களிலும், ருஷ்யர்கள் எதிரியைத் தடுத்துக்கொண்டோ, அல்லது திருப்பி அடித்துக்கொண்டோ, அல்லது பின்னப்படுத்திக்கொண்டோயிருப்பதாகத் தெரிகிறது. முன்னேறி வரும் ஜெர்மானியரை ருஷ்யர்கள் தங்கள் விமானங்களைக்கொண்டு சுட்டு, முன்னே செல்லும் ஜெர்மன் டாங்கிகளுக்கும், பின்வரும் அவர்களுடைய காலாட்படைக்கும் நடுவே புகுந்து போர் செய்கிறார்கள்.

**தற்போதிய நிலைமை.**—மாஸ்கோவிலிருந்து ஜுலை 16-ல் கிடைத்த செய்தியிலிருந்து ப்ஸ்கோவ்—பார்கோவ் பிரதேசத்திலும், விடெப்ஸ்க்—நவ்கிராட்—வாலின்ஸ்க் அரங்கத்திலும் கடும்போர் நடப்பதாகத் தெரிகிறது.

**ருஷ்யாவின் உபாயங்கள்.**—ருஷ்யர்கள் இந்த யுத்தத்தில் தங்களுக்குச் சொந்தமான சில தந்திரங்களை அனுஷ்டிக்கிறார்கள். நாஸிகளை முன்விட்டு சிறு



கூட்டங்களாகப் பின்வந்து தகர்க்கிறது ஒன்று. போலிக் கோட்டைகளைக் கட்டி ஏமாற்றுவது மற்றொன்று. எதிரி கைப்பற்றுவதற்கு முன் நகரங்களிலுள்ள காஸ் (gas), நீர், மின்சார சப்ளைகளை யெல்லாம் அழித்து, கோழி முதலியவைகளுக்கு விஷமிட்டுவிடுவது மூன்றாவது. நான்காவது, பெரிய கும்பலாக வராமல், சிற்சிலர்கள் திடீரென்று தோன்றி எதிரிக்குப் பலத்த சேதத்தை விளைவித்துவிட்டு மறைந்து விடுவது. இதற்குப் பக்கத்திலுள்ள அடர்ந்த காடுகள் சாதகமாயிருக்கின்றன.

**மின்னல் படையெடுப்பில் வேகமில்லை.**—ஒரு மாஸ்கோ அறிக்கை கூறுகிறபடி, படையெடுப்பில் மின்னல் வேகத்தைக் காணோம். எதிர் பார்த்த வேகத்தில் ஒரு பாதிகூடக் கிடையாது. ருஷ்ய விமானங்கள் எதிர்ப்பதால், அவைகளைத் தடுக்க சில பீரங்கிகள் சகிதமாய் ஜெர்மன் சைனியங்கள் முன்னேறவேண்டியிருக்கின்றன. பீரங்கிகள் மெள்ளவேதான் நகரும். இதுவரையில் ஜெர்மன் படைகள் அநேகம் அடியோடு நாசமாய்விட்டன. 10 லக்ஷம் ஆட்களும், 2,300 விமானங்களும், 3,000 கவச மோட்டார்களும் இதுவரையில் சேதமாய்விட்டன. ருஷ்ய படைகள் பின்வாங்கும்போதும்கூட அணிகலையாது பத்திரமாய் வளைக்கப் படாமல் போகின்றன. பொது ஜனங்களும், அதிலும் விசேஷமாக ஸ்திரீகளும், கிலியில்லாது, ரஸ்தாக்களை அடைக்காது, அவசியமேற்படும்போது நகரங்களைக் காலிசெய்து விடுகிறார்கள். இதற்கு ரயில் பாதைகளின் உதவியுமதிகம். இந்த ஏற்பாடுகள் பிரான்ஸிலில்லாததினால் சென்ற வருஷம் அங்கே சைனியங்கள் சண்டை செய்வதற்கு பொது ஜனங்களால் தடையேற்பட்டது. மேலும் ருஷ்ய யுத்தமானது அகண்டமான ஸ்தலத்திலும், வெகு நீண்ட போர்முனையிலும் நடப்பதால், ஏதோ சிற்சில இடங்களில் ருஷ்யர்கள் பின்வாங்கினதிலிருந்து ஆபத்தொன்றும் வந்துவிடாது. ஆனால் ஜெர்மானியருக்கு இதிலிருந்து நஷ்டம் அபாரம். பின்வாங்கிக்கொண்டுபோய் ஜெர்மானியர் பலத்தைக் குறைக்கவேண்டுமென்பதுதான் ருஷ்யர்கள் செய்யும் தந்திரம்.

**ருஷ்யர்களுக்கேற்பட்டிருக்கும் வெற்றி.**—ருஷ்யர்களும் திருப்பியெதிர்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள். லெபலில் எதிரியை முறியடித்தார்கள். ஸ்மலென்ஸ்கில் எதிரியைப் பின்வாங்கச் செய்தார்கள். கான்ஸ்டன்ஸா, ஸலினு, கலாட்ஸ் துறைமுகங்களை விமானங்களாலெதிர்த்து ஜெர்மன் கப்பல்களை பல்கேரியத் துறைமுகங்களுக்கு விரட்டியாய் விட்டது. பிளோயஸ்டாவை தகர்த்ததிலிருந்து ருமேனிய எண்ணெய் உற்பத்தி க்ஷீணித்துவிட்டது.

**ஜெர்மானியர்களின் கவலை.**—நாளுக்கு நாள் ஜெர்மனியில் கவலையதிகரித்துக் கொண்டுவருகிறது. பிரிட்டனையெதிர்க்கவோ, அல்லது ஜெர்மனியை பாதுகாக்கவோ வைத்திருக்க வேண்டிய சைனியங்களை ஹிட்லர் ருஷ்யாவில் மடிய வைக்கிறாரென்ற அபிப்பிராயம் பரவிவருகிறது. பிரிடிஷ் கப்பல் நஷ்டங்களை அதிகப்படுத்திச்சொல்லி ஏய்ப்பதாகவும் ஒரு சந்தேகம். சமீபத்தில் ஜெர்மனி மேல் பிரிடிஷ் விமானங்கள் இடைவிடாது வருவதிலிருந்து ஜெர்மனியைப்

பிடிக்க போர் துவங்கி விட்டதென்றும், பிரிடிஷ், விமானப்படைகளும், ருஷ்ய விமானங்களும் சேர்ந்து விட்டால், அதன்முன் ஜெர்மன் விமானப்படை நிலைக்க முடியாதென்றும் எண்ணம் பிறந்திருக்கிறது.

மூன்று வாரங்களாகக் கிம்ப்பார் நடத்தியும், பாரமான நஷ்டமேதவிர வெற்றியைக் காணோம். ஜெர்மன் சிப்பாய்களுக்குத் தளர்ச்சியேற்பட்டுவிட்டது. ஜெர்மானியர்களுக்கு மனத்தளர்ச்சியும், வெற்றியில் வெறுப்பும், அலுப்பும், உத்ஸாகமின்மையும் வந்துவிட்டன. பிரான்ஸையும், கிரீஸையும் பிடித்ததில் வந்த லாபமென்னவென்று கேட்கிறார்கள். சென்ற யுத்தத்தில் இம்மாதிரி வெற்றிகள் பெற்று, முடிவில் எல்லாம் கவிழ்ந்துவிட்டதென்கிறார்கள். பிரிடிஷ் விமானவெதிர்ப்பைத் தாங்கவே முடியவில்லை. யுத்தத்தை ஒரு வெற்றிகரமாக முடிக்க யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரதிக்ஞை செய்துவிட்டது. நாஸி கக்ஷியில் கலசல். ஹெஸ் ஓடியதிலிருந்து ஊர் இரண்டுபட்டுவிட்டது. ஹிட்லர் கோயரிங்கோடு சண்டைபோட்டுக்கொண்டு 'பயங்காளி' யென்று வைதாராம். கோயரிங் இப்பொழுது அவர் வீட்டிலேயே கைதியாயிருக்கவேண்டும் அல்லது, சரீர சுகத்தைநாடி எங்கேயாவது போகவேண்டியதுதான். தனக்கு வேண்டாதவர்களைக் கொலை செய்யாது ஹிட்லர் மிரட்டிக்கொண்டுவருவதாகத் தெரிகிறது.

**ஆங்கில-ருஷ்ய ஒப்பந்தம்.**—பரஸ்பரம் யுத்தத்தில் உதவி செய்துகொள்ளுவதாகவும், சமாதானமொன்றும் தனித்துச் செய்துகொள்ளுவதில்லையென்றும், பிரிடனும், ருஷ்யாவும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டிருக்கின்றன. இதன்படி ருஷ்யர்களை நேயர்களாக பிரிடன் சேர்த்துக்கொள்ளுகிறது. ஏற்கனவேயிருக்கும் ராணுவ ஒத்துழைப்பை ஊர்ஜிதப்படுத்துகிறது. 'டெயிலி ஹெரால்ட்' அழகாய்ச் சொல்லுகிறபடி ஹிட்லருடைய தயவால், பிரிடன் எதிர்பார்க்காதபடி திடீரென்று அபாரமான ருஷ்யப்பலம் சேர்ந்துவிட்டது. உலகத்திலேயே யந்திர வசதியுள்ள சைனியங்களில் ருஷ்ய சைனியம் இரண்டாவதாகும். நமது பலம் பன்மடங்கு அதிகமாய்விட்டது. இதிலிருந்து ராஜீய ராணுவ சௌகர்யங்கள் பல ஏற்படப்போகின்றன.

**பிரிடிஷ் ராணுவ கோஷ்டி.**—இதைச்சேர்ந்த நிபுணர்கள் ருஷ்யாவுக்குவந்து, விமான மல்யுத்தம், வெடி விமானங்களைத் தடுத்தல், நிலபீரங்கிச் சண்டை, அக்னி-விபத்து-எதிர்ப்பு முதலிய நவீன முறைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

**ஜெர்மனிக்கு பரஸ்பர தேச-சட்ட பகிஷ்காரம்.**—தங்கள் நீர்மூழ்கிக் கப்பல்கள் பால்டிக், ஆர்க்டிக் கடல்களில் செல்ல அனுமதிக்கவேண்டுமென்று ஜெர்மனி சமீபத்தில் கேட்டதற்கு ருஷ்யா மறுத்துவிட்டது. அதற்குச் சொல்லிய காரணங்கள் மூன்று,—ஒன்று, ஜெர்மனி இந்தக் கப்பல்களை யுத்த காரியங்களுக்கு உபயோகப்படுத்தும்; இரண்டு, ஏற்கனவே ருஷ்ய நீர்மூழ்கிகளின்மேல ஜெர்மனி குண்டுகளைப் போட்டிருக்கிறது. மூன்று, தேசங்களுக்குள் ஏற்படும் நிபந்தனைகளையும், உடன்படிக்கைகளையும் ஜெர்மனி ஒன்றன்பின் ஒன்றாக மீறிவிட்டது உலகப்பிரசித்தமாய்விட்டது. ஆகையால், ஹேகில் செய்யப்பட்ட சர்வதேச விதிகளிலிருந்து ஜெர்மனி பகிஷ்காரமாய்விட்டதென்று சொல்லப்பட்டது.



**ஜெர்மனிமேல் விமானப்போர்.**—சில வாரங்களுக்கு முன் ருஷ்ய யுத்தம் துவக்கப்பட்டபோது, மிஸ்டர் சர்ச்சில் 'ஜெர்மனியை இனி இரவு பகலாக நாளுக்கு நாள் அதிகப்படும் உக்கிரத்தோடு தாக்குவோம்' என்று சபதம் செய்துகொண்டார். அதற்குச் சரியாக இப்பொழுது போர் நடந்துவருகிறது. திங்கட்கிழமையன்று ஹௌஸ் ஆப் காமன்ஸ் பார்க்குப் பிரசங்கத்தில் அவர் சொன்னதாவது :—

'இந்த மாதத்தில், ஜெர்மனியில் நகரங்களையும், துறைமுகங்களையும், தொழிற்சாலைகளையும், மற்ற ராணுவ கேந்திர ஸ்தலங்களையும் முறையே, சாஸ்திரயுக்தமாய் உக்கிரகத்தோடு எதிர்த்து வருகிறோம்.'

"இந்தப்போரை இன்னுமதிகமாகக் கடுமையாக இனி நடத்திக்கொண்டு போவோம். ஒன்று, நாம் ஜெர்மனிக்குள் புகுந்து நாஸிக் கக்ஷிக்காரர்களின் கொடுமைகளிலிருந்து ஜெர்மனியை விடுவிப்போம், அல்லது உள்நாட்டில் கலகம் வந்து ஜெர்மனியே விடுவித்துக்கொள்ளும். இரண்டாவது சம்பவமே நல்லது."

"இந்த யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு ஜெர்மானியர் பிரிடன் மேல் வீசியதில் பாதிக்குமேலுள்ள வெடிகளை இந்த சில வாரங்களுக்குள் நாம் ஜெர்மனி மேல் வீசியிருக்கிறோம். ஆனால் நம்முடைய எதிர்ப்பு இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது. அடுத்த ஜூலைக்குள் முதலோடு வட்டி பலமுறை சேர்க்கப்பட்டு திருப்பிக்கொடுக்கப்படும்."

சென்ற மூன்று வாரங்களில் 50 இடங்கள் கூடுதல் 150-தடவை எதிர்க்கப்பட்டன, இவைகள் யுத்த ஸாதனங்களைச்செய்யும் இரும்புப்பட்டரைகள், எண்ணெய் தொழிற்சாலைகள், ஸப்ளைகள் கொண்டுவருவதற்கவசியமான போக்குவரத்து சாதனங்களாகும். இந்த எதிர்ப்புக்குப்பயந்து சில தொழிற்சாலைகள் ஆஸ்திரியா, போலண்டு முதலிய உள்நாட்டுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியில் சாமான்களின் உற்பத்தி 100-க்கு 30-வீதம் குறைந்துவிட்டது. ஜெர்மனியில் கிடைக்கும் இரும்பு, நிலக்கரியில் 100-க்கு 70 பங்கு ரூர் பிரதேசத்தில் இருப்பதால் ரூர் போனால் ஜெர்மனி போய்விடுமென்று சொல்லுவதுண்டு. அதே பிரகாரம் ரூரை பிரிடிஷ் விமானங்கள் தாக்குவதிலிருந்து ஜெர்மன் யுத்த முயற்சிக்கே மோசம் வந்துவிட்டது.

பிரிடிஷ் விமானங்கள் அடிக்கடி எதிர்க்கும் சில நகரங்கள் மறைக்கப்பட்டுவருகின்றன. ஹாம்பர்க்கிலுள்ள பிரதான ரயில்வே ஸ்டேஷன் ஒரு சிறு மலைபோலவும், அதன்மேல் மரங்கள், புல் முளைத்திருப்பதாயும் பாவனைசெய்து மறைக்கப்பட்டிருக்கிறது. பினெஹஸ்டர் ஏரியை பலகைகள் போட்டு மூடி, அதன்மேல் பொய்வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள்.

ப்ளாம், வாஸ், துறைமுகங்களில் நாசகாரிகள் கட்டும் ஸ்தாபனம் எரிபட்டுபோய், பண்டகசாலைகள் அப்புறப்படுத்தப்பட்டுப்போயின. இவைகளைக் காட்டிலும் ஹேம், எம்டனும் அதிக நாசத்தை அடைந்திருக்கின்றன.

சென்ற நான்கு வாரங்களில் ஒவ்வொரு வாரத்திலும் 100-க்கு மேலாகவே ஜெர்மனிக்கு விமான நஷ்டமேற்பட்டிருக்கிறது. சென்ற வாரத்தில் 133

விமானங்கள் நஷ்டம்—பிரிடன்மேல் 22, ஜெர்மனியிலும் அதன் கைவச நாடுகளிலும் 82, மத்திய கிழக்கில் 30. (விஷி, இதாலிய விமானங்களுள்பட).

## ஸிரியாவில் சமாதானம்.

ஸிரியாவில் நடந்த சிறியபோர் நல்லவேளையாய் சமாதானத்துக்கு வந்து விட்டது. ஆனால் விஷி அதிகாரிகளின் சஞ்சலபுத்தியால் சற்றுமேலும் சண்டை நடந்துதான் சமாதானமேற்பட்டது. இதற்குள் டாமூர், காமெக்ஷி, டேமூர் காபு, மஸ்ராத் எட்குப், ரவுஸ்டி இடங்கள் பிடிக்கப்பட்டு, பெய்ரூட்டுக்கும் ஆபத்து வந்துவிட்டது. முடிவில் 34-நாள் போர் நடந்தபிறகு ஜூலை 11-ம் வெள்ளிக்கிழமையன்று விஷி சேனாபதி டென்ட்ஸ் சமாதானத்தைநாட, பிரிடிஷார் தங்கள் நிபந்தனைகளைத் தெரிவித்தார்கள். ஜெர்மானியாருக்கு பயந்து, விஷி அரசாங்கம் போருக்கு மறுத்துவிட்டு, சேனாபதி டென்ட்ஸைமட்டும், ராணுவ அவசியத்தை அனுசரித்து யுத்தத்தை முடித்துக்கொள்ள அனுமதித்தது. ஸ்வதந்திர-பிரெஞ்சுக் கக்ஷியை அங்கீகரிக்க விஷிக்கு இஷ்டமில்லை.

22-நிபந்தனைகளடங்கிய ஒப்பந்தம் முடிவில் ஏகரில் 13-ம்தேதி கையொப்ப மிடப்பட்டது. சேனாபதி டென்ட்ஸும், அவருடைய சைனியங்களும், அவர்கள் கண்ணியமாகப்போர் செய்ததற்காக, மரியாதையாய் நடத்தப்படுவார்கள். விஷி துருப்புகள் வேண்டுமானால் நேயக் கக்ஷியில் சேரலாம், அல்லது பிரெஞ்சுக் கப்பல்களில் ஊர்போய் சேரலாம். கையிலிருக்கும் யுத்தத் தளவாடங்களை கொடுத்துவிட வேண்டும்.

மிஸ்டர் சர்ச்சில் அழகாய்ச் சொல்லியபடி இருதிறத்தாரும் மனப்பூர்வமாக ஒத்து, பிரெஞ்சுக்காரர்களோடு பிரெஞ்சுக்காரர்களும், சென்ற வருஷம் பிரிடிஷ் ஆஸ்திரேலியா, இந்தியத் துருப்புக்கள் பிரான்ஸில் நேயமாகச் சண்டை செய்தது போக, இப்போது பிரெஞ்சுக்காரர்களோடு போர்செய்வதை நிறுத்தச் செய்துகொண்ட சமாதானமாகும். விஷி அரசாங்கத்தின் அடிமைத்தனத்தினால் ஜெர்மானியர் ஸிரியாவுக்குள் மெள்ள மெள்ள வர ஆரம்பித்துவிட்டார்கள்: அது இப்பொழுது ஒழிந்தது. ஸிரியாவுக்கும், லெபானனுக்கும் இனி ஸ்வதந்திரம் கிடைக்கும். மத்தியக் கிழக்குப் பிரதேசங்களில், துருக்கி எல்லைவரையில் இனி பிரிடிஷ் பாதுகாப்பு ஊர்ஜிதமாய் விட்டது.

இரண்டு கக்ஷிக்காரர்களும், சத்தியம் தவற மாட்டார்களென்ற நம்பிக்கையோடு செய்துகொண்ட உடன்படிக்கையென்று டெய்லி டெலிகிராப் இந்த சமாதானத்தைப் புகழ்ந்து கொள்ளுகிறது. அதோடு, இம்மாதிரியான ஒரு உடன் படிக்கை நாஜிகளை நம்பிச் செய்துகொள்ளவே முடியாதென்கிறது.

## கடல் யுத்தம்.

அட்லாண்டிக் சண்டையைப் பற்றி இந்த வாரம் நல்லசெய்தி கிடைத்திருக்கிறது. ஜூன் மாதத்திய கப்பல் நஷ்டம் வெகுகுறைவு. அதாவது 329, 296-டன் நிறைகொண்ட 79 கப்பல்கள் இவைகளில் 52 பிரிடிஷ் கப்பல்கள்,



19-நேசக்கப்பல்கள், 8 நடுநிலை நாட்டுக் கப்பல்கள். மே-மாத நஷ்டத்தைக் காட்டிலும், 25 கப்பல்கள் குறைவு, 168, 551 டன் நிறைகுறைவு.

எதிரிக்குச் சமாசாரங்கள் எட்டி விடுவதைத் தடுப்பதற்காக இனி கப்பல் நஷ்டக் கணக்கு மாதா மாதம் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் அப்போதைக் கப்போது ஒவ்வொரு சமயங்களில் வேண்டிய தகவல்கள் கொடுக்கப்படும்.

எதிரிக்கப்பல்கள் மேல் பிரிடிஷ் எதிர்ப்பு நடந்து கொண்டுவருகிறது. ஜூலை 7-ம் தேதியோடு முடிவான ஒரு வாரத்தில் 1,05,000 டன் நிறையுள்ள 37 எதிரிக்கப்பல்கள் அதிகப்பழுதாக்கப்பட்டன. இரண்டு இதாலியச் சண்டைக் கப்பல்கள் எதிர்க்கப்பட்டு, ஒன்று முழுகி, மற்றொன்று பழுதாய் விட்டது. பெய்ரூட்டும், பெங்காஸியும் 6 தடவை தாக்கப்பட்டன. வடகடல், ஜெர்மனியின் வடமேற்குக் கடற்கரை, ஹாலண்டு, பெல்ஜியம் பிரான்ஸ் கரைகள் வெடிகுண்டு விமானப்படையால் தாக்கப்பட்டன.

## அமெரிக்க உதவி நாமமாத்ரமாயில்லை.

'நியூஸ் கிரானிகள்' பத்திரிகையிலிருந்து கீழ்கண்ட செய்தி யெடுக்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து முதலில் விலகி நின்ற அமெரிக்காவிலிருந்து இப்பொழுது எவ்வளவு உதவி கிடைக்கிறதென்று தெரியும்:—

'22 மாதங்களுக்கு முன் பிரிடன் அமெரிக்காவிடமிருந்து யுத்த தளவாடங்களை வாங்கவோ, கடனாய் கேட்கவோ முடியாமலிருந்தது.'

'இப்பொழுதோ இந்தத் தடைகள் எடுபட்டு, எல்லா விதமான யுத்த தளவாடங்களும் 7,000,000,000,000 டாலர் வரை கடன் அல்லது குத்தகைக்குக் கொடுக்கலாமென்று ஆய்விட்டது.'

'வெற்றி வேண்டாம் சமாதானம் போதும்' என்று சொன்னது போக, இப்பொழுது 'ஹிட்லர் ஆதிக்க மேற்பட்ட உலகம் நமக்கு வேண்டாம்: பிரிடனுக்கு வேண்டிய சகாயம் செய்வோம்; நம்மால் முடிந்தவரை உழைத்து, வேண்டுமானால் உயிரையும் கொடுப்போம்' என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லத்தலைப்பட்டுவிட்டார்.

'ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்காவில் வரவேற்றதுபோக, இப்பொழுது அமெரிக்கக் கப்பற்படை 2,000 மைல் தூரத்துக்கு வேவுபார்த்து ஜெர்மன் நீர்மூழ்கிகளின் சஞ்சாரத்தைப்பற்றி செய்தியனுப்புகின்றன. அட்லாண்டிக் சமுத்திரத்திலேயே ஜெர்மானியரை ஒழித்து விடுவதாக அமெரிக்க கப்பற்படை மந்திரி சொல்லுகிறார்.'

'10 மாதங்களாகக் கட்டாய ராணுவப்பயிற்சி ஏற்பட்டு இப்பொழுது யுனைடெட்-ஸ்டேட்ஸில் 15 லக்ஷம் சைனியம் தயாராய் விட்டது.'

'50 நாசகாரிகளை பிரிடனுக்கு விற்றதுமல்லாமல் புதுக்கப்பல்கள் பிரமாதமாய்க் கட்டப்படுகின்றன.'

'6,000,000,000,000 டாலர்கள் கொண்ட யுத்த தளவாடங்கள் ஏற்கனவே செய்யப்பட்டு, அதிவேகமாக உற்பத்தி செய்ய ஏற்பாடாகிறது.'

'1917-ம் வருஷத்தில் கட்டியதைவிட அதிகமாக புதுக்கப்பல்கள் கட்டப்பட்டு, மாதா மாதம் பிரிடனுக்கு அனுப்பப்படுகின்றன.'

'அமெரிக்காவிலிருந்த ஜெர்மன் கப்பல்களை பிடித்துக்கொண்டு, அவர்கள் சொத்துக்களை நிறுத்தி வைத்து, ஜெர்மன் காரியஸ்தர்களையும் விரட்டியாய் விட்டது.'

'இவைகளெல்லாம் இந்த 22-மாதங்களில் நடந்த காரியங்கள். ஆகவே அமெரிக்க உதவி தாமதப்பட்டு வருகிறதென்று சொல்லுவதற்கு இடமில்லை.'

ஜூலை 14.—பாஸ்டீல், ஜெயிலானது பல வருஷங்களுக்கு முன்னால் ஜூலை 14-ல் திறக்கப்பட்டு, அதிலிருந்து பிரெஞ்சு மக்களுக்கு ஸ்வதந்திரமேற்பட்டதிலிருந்து இந்த நாள் பிரான்ஸில் விசேஷக்களிப்போடு கொண்டாடப்படுவதுண்டு. ஆனால் இந்த வருஷம், பிடேனின் உத்தரவால் இறந்தவர்கள், சைநிகர்கள், இடிந்த ஸ்தாபனங்களைப்பற்றி நினைத்து துக்கப்படும் தினமாக பாவிக்கப்பட்டது. ஸ்வதந்திர காதலிக்காரர்களோ விடுதலைக்கு நம்பிக்கையேற்படும் நாளாகக்கொண்டாடுகிறார்கள். அன்றையதினம், ஜெனரல் டிகாலுக்கனுப்பிய செய்தியில், 'பிரான்ஸின் ஆத்மா ஒரு நாளும் அழியாது. பிரெஞ்சு மக்களின் தைரியம் தற்போதைய கஷ்டத்திலின்றும் விடுபட்டு புனருத்தாரணமாகும்' என்று மிஸ்டர் சர்ச்சில் செய்திவிடுத்தார்.

## இந்தியாவின் யுத்த முயற்சி.

கிழக்கு-சாம்ராஜ்ஜிய நாடுகளின்-சப்ளை-சபை அங்கத்தினராகிய மிஸ்டர் எம். எஸ். எ. ஹைதரி ஜூலை 12-ல் கல்கத்தாவில் சொல்லியபடி, இப்பொழுது யுத்தத்துக்குவேண்டிய தளவாடங்களில் முக்கால் பங்கு இந்தியாவில் செய்யப்படுகின்றன. அவைகளாவன:-வஸ்திரம், பாலங்கள் முதல் ஆணிவரை, பீரங்கிகள், வெடிமருந்து, கவசத்தகடுகள், மருந்துகள், டயர்கள் முதலியன. கடல் வெடிகளைப் பொறுக்கவும், நீர்மூழ்கிகளை விரட்டவும் சிறு யுத்தக்கப்பல்கள் கட்டப்படுகின்றன. யோசித்துப் பார்க்குமளவில் இந்த யுத்த முயற்சியெல்லாம் வீண் போகாது. நவீன யுத்தத்துக்கு சாமான்கள் செய்ய எத்தனையோ லாகவம் வேண்டும். ஏராளமாய் உற்பத்தி செய்வதோடு, சாமர்த்தியமும் வேண்டும். இந்த யுத்தம் முடிவதற்குள் இந்தியத் தொழிலாளிகளின் சாமர்த்தியம் அதிகரித்துவிடும்.

---



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 7—7—41. (திங்கட்கிழமை). | | | |
| | பிரிடிஷ் விமானங்களால். | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—படையெடுப்பு— வடபிரான்ஸ் (France), வடமேற்கு ஜெர்மனி (Germany). | நஷ்டமில்லை. | ...... |
| | இரவில்.—விமானத் தொழிற்சாலைகள்— மியால்ட் (Meanlto). | ...... | பலத்த சேதம். |
| | மின்சார உற்பத்தி சாலை, ரஸாயனத் தொழிற்சாலை.—பெத்யூ (Bethune) துக்கருகில். | 3 விமானங்கள். 2 விமானிகள் பத்திரம். | 7 விமானங்கள். |
| | துணைக்காவலோடு கூடிய 8 சாமான் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | ஆறு கப்பல்கள் தாக்குண்டு சேதமாயின. |
| | மற்றொரு துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—கலே (Calais)யிக்கருகில். | 4 விமானங்கள். | 1 கப்பலும், 1-E படகும் மூழ்கடிக்கப்பட்டன. |
| | ஸிரியா (Syria). | | |
| | துறைமுகக் கப்பல்கள்.—பீரட் (Beirut). | ...... | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | விரோதி விமானங்கள்.—காம்பூத் (Gambut). | ...... | 6 விமானங்கள் தீக்கிரையாகின. |
| | விரோதி சைனியங்கள்.—காம்பூத் (Gambut)துக்கருகில். | ...... | சுடப்பட்டனர். |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi) ... | ...... | வெடிச்சத்தமும், தீயும் கிளம்பின. |
| | விமானம் இறங்குமிடங்கள்.—டெர்னு (Derna), மார்டுபா (Martuba), கஸாலா (Gazala). | 4 விமானங்கள். | ...... |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—பார்டியா (Bardia). | ...... | ...... |
| | ருஷ்ய விமானங்களால். | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள், விமான நிலயங்கள்.—ஜெர்மன் அணிகளுக்குப் பின்னால். | 10 விமானங்கள். | 102 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **8—7—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—படையெடுப்பு— இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | 7 விமானங்கள். | 11 விமானங்கள். |
| மின்சார உற்பத்தி ஆலை, ரஸாயன தொழிற் சாலை.—லில்லி (Lille). | ...... | ...... |
| பிற்பகலில்.—கடற்படை நிலையம்—வில் ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | நஷ்டமில்லை. | சேதமாயிற்று. |
| இரவில்.—பட்டணம், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்—ஹாம் (Hamm). | ...... | ...... |
| மன்ஸ்டர்.—(Munster), பீல்பெல்ட் (Bielfeld). | ...... | தீப்பிடித்தன. |
| எண்ணெய் உற்பத்தி செய்யுமிடம்.—ல்யூனா (Leuna). | ...... | தீப்பிடித்தது. |
| துறைமுகம்.—ஹாகிஸண்ட் (Haugesund) | ...... | ...... |
| கப்பல்கள்.—பிரான்ஸின் வடக்கு, மேற்கு கடற்கரைகள். | ...... | பல சேதமாயின. |
| விமான நிலையம்.—வட பிரான்ஸ் (France). | 7 விமானங்கள். | ...... |
| **ஸிரியா (Syria).** | | |
| ரயில்வே ஸ்டேஷன்.—அலெப்போ (Aleppo). | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| எண்ணெய்த் தொட்டிகள்.—பீரட் (Beirut) | ...... | தீப்பிடித்தன. |
| விஷி கடல் விமானங்கள்.—ஸிரியன் (Syrian) கடற்கரை. | ...... | பல சேதமாயின. |
| விமான நிலையம்.—பால்பெக் (Baalbeck) | ...... | ...... |
| தரையிலிருக்கும் விமானங்கள்.—டாலியா (Talia). | நஷ்டமில்லை. | 3 விமானங்கள். |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| விமானமிறங்குமிடங்கள்.—டெர்ணா (Derna), மார்டூபா (Martuba), எல்மிமி (Eltmimi), கஸாலா (Gazala). | 1 விமானம். | ...... |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| விரோதி டாங்கிகள் (Tanks), கவசமணிந்த மோட்டார் வண்டிகள்.—யுத்த முன்னணிகளில். | 7 விமானங்கள். | 62 விமானங்கள். பல சேதமாயின. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **9—7—41.** (புதன்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—எண்ணெய் உற்பத்தி செய்யுமிடம்.—ல்யூனா (Leuna). | ...... | தீப்பிடித்தது. |
| ஹால்லி (Halle), பீல்பெல்ட் (Bielfeld). | ...... | ...... |
| ரயில் தொடர்கள்.—ஹாம் (Hamm) ... | ...... | வெடிச்சத்தமும், தீயும் கிளம்பின. |
| படையெடுப்பு.—வட பிரான்ஸ் (France). | 8 விமானங்கள். | 26 விமானங்கள். |
| இரவில்:—நிலக்கரி அகப்படும் இடங்கள் ஆசன் (Aachen). | ...... | ...... |
| ரயில்வண்டிகள், ஸ்டேஷன்.—மன்ஸ்டர் (Munster). | ...... | சேதமாயின. |
| மின்சார உற்பத்தி ஆலை.—பெத்யூன் (Bethune). | ...... | ...... |
| தொழிற்சாலைகள், போக்குவரத்து சாதனங்கள்.—ஆஸ்னப்ருக் (Osnabruck). | 4 விமானங்கள். | ...... |
| கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்ட் (Ostend) | ...... | ...... |
| **இதாலி (Italy).** | | |
| துறைமுகம்.—நேபிள்ஸ் (Naples). | ...... | ...... |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| மிதக்கும் இதாலிய விமானங்கள்.—ஸிராக்யூஸ் (Syracuse). | ...... | 3 விமானங்கள் எரிந்துபோயின; பல சேதமாயின. |
| விமானக் கொட்டகைகள்.—ஸிஸிலியன் (Sicilian) கடற்கரை. | நஷ்டமில்லை. | பல விமானங்கள் சேதமாயின. |
| **ஸிரியா (Syria).** | | |
| தரையிலிருக்கும், விமானங்கள்.—அலெப்போ (Aleppo). | ...... | 2 விமானங்கள் நாசம், 10 விமானங்கள் சேதம். |
| கவசமணிந்த மோட்டார்கள்:—பீரட் (Beirut), டாமூர் (Damour) பிரதேசம். | ...... | ...... |
| வெடிமருந்துகள்.—பீரட் (Beirut). | ...... | தீக்கிரையாகியது. |
| ரயில்வண்டிகள் நிற்குமிடம்.—ரேயாக் (Rayak). | ...... | ...... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| விமானங்கள்.—மார்டூபா (Martuba), கஸாலா (Gazala). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 9—7—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப்போர்முனை.** | | |
| | கருங்கடல் துறைமுகம்.—கான்ஸ்டான்ஸா (Constanza). | 1 விமானம். | 7 விமானங்கள். |
| | எண்ணெய் அகப்படும் சுரங்கங்கள்.—ப்ளோயஸ்டி (Ploesti). | ...... | ...... |
| | போக்குவரத்து சாதனங்கள்.—டல்ஸி (Tulcea), ஸுலீனா (Sulina). | ...... | ...... |
| 10—7—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | |
| | பகலில்.—6 விரோதிக் கப்பல்கள் (30,000 டன்கள்) செர்போர (Cherbourg), ஹவேர் (Haire) துறைமுகங்கள். | ...... | 6 கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. |
| | ரஸாயனத் தொழிற்சாலை.—சோகஸ் (Choques). | 12 விமானங்கள். | 12 விமானங்கள். |
| | இரவில்.—ஜெர்மன் ஆக்கிரமித்திருக்கும் துறைமுகங்கள்—இங்கிலீஷ் கால்வாயின் கிழக்குப்புறத்தில். | ... | தகர்க்கப்பட்டன. |
| | இரும்புத் தொழிற்சாலைகள்—கொலோன் (Cologne), ரைன்லாந்தி (Rhineland)ல் பல இடங்கள். | 9 விமானங்கள். | 16 விமானங்கள். |
| | **இதாலி (Italy).** | | |
| | கடற்படை நிலயம்.—நேபிள்ஸ் (Naples). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ஒரே தீமயம். |
| | விமானமிறங்குமிடங்கள்.—டெர்னு (Derna), மார்டுபா (Martuba), கஸாலா (Gazala) எல்மிமி (Elmimi). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி கவசமணிந்த படைகள்.—ஆஸ்ட்ராய் (Ostror), நோவோகராட் வோலின்ஸ்க் (Novograd-Volynsk) பிரதேசம். | .... | ...... |
| | விரோதி சைனியங்கள்.—வடக்கு ட்விஞ (Dvina). | 9 விமானங்கள். | 58 விமானங்கள். |
| | விமானக் கண்டைகள்.—போர் அரங்கங்கள். | ... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 11—7—41. (வெள்ளிக்கிழமை) | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—பிரெஞ்சு துறைமுகங்கள்—கலே (Calais), புலாயின் (Boulogne), டங்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | ...... |
| | பிற்பகலில்.—படையெடுப்பு—வடபிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில்.—கடற்படை நிலயம்—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | ... | ...... |
| | கடற்கண்ணி அகற்றும் கப்பல்.—பிரான்ஸி (France)ன் வடமேற்குக் கடற்கரை. | நஷ்டமில்லை. | 6 விமானங்கள் தீப்பிடித்தன. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கடற்படை நிலயம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமான நிலயம்.—டெர்னு (Derna). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி கவசமணிந்த படைகள், விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள், விமான நிலயங்கள்.—போர் அரங்கம் முழுவதும், ப்ளோயஸ்டி (Ploesti). | ...... | ...... |
| 12—7—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—ரயில்பாதை, கால்வாய்கள் ஸெயிண்ட் ஓமர் (St. Omer). | ...... | ...... |
| | பிற்பகலில்.—படையெடுப்பு—வடபிரான்ஸ் (France). | 2 விமானங்கள். | 6 விமானங்கள். |
| | விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | ...... |
| | பீரங்கிவைக்குமிடங்கள்.—வால்செரன் (Walcheren) தீவு. | 1 விமானம். | ...... |
| | இரவில்.—தொழிற்சாலைகள், கப்பல் கட்டுமிடங்கள்.—ப்ரமன் (Bremen). | ...... | தீப்பிடித்தது. |
| | தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 12—7—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்.—ரோட்ஸ் (Rhodes), கலாடோ (Calato). | ...... | தீயும், வெடிச்சத்தமும் கிளம்பின. |
| | விமான நிலயம், கட்டடங்கள், விமானங்கள் இறங்குமிடங்கள்.-மாரிட்ஸா (Maritza). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| | விமான நிலயம்.—கடாவியா (Catavia). | ...... | ...... |
| | விமானத் தளங்கள்.—லிபியன் (Libyan) கடற்கரை. | ...... | 1 விமானம். |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | |
|---|---|---|---|
| | கவசமணிந்த படைகள், விமான நிலயங்கள்.—போரரங்கம் முழுவதும். | 131 விமானங்கள். | ...... |
| 13—7—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—படையெடுப்பு—வடபிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில்.—தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள்—ப்ரமன் (Bremen), வெகிஸாக் (Vegesack). | ...... | ...... |
| | கப்பல் கட்டுமிடங்கள்—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | ...... |
| | எண்ணெய்த் தொட்டிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | தீப்பிடித்தது. |
| | விமான நிலயங்கள்—வடபிரான்ஸ் (France). | 1 விமானம். | ...... |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்.—ஸிரெனேகா (Cyrenaica). | ...... | ...... |
| | துணைக்காவலுடன் கூடிய விரோதிக் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli)த் துறைமுகத்திற்கு வெளியில். | ...... | ...... |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | |
|---|---|---|---|
| | விரோதி சைன்யங்கள், டாங்கிகள், விமான நிலயங்கள்.—போர் அரங்கம் முழுவதும். | ...... | ...... |
| | விமானத் தளங்கள்.—பல இடங்களில் யாஸ்ஸி (Jassy), ப்ளோயஸ்டி (Ploesti). | 12 விமானங்கள். | 91 விமானங்கள். |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்பு விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—7—41. (செவ்வாய்க்கிழமை). | | | |

**பிரிடன் (Britain).**

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—வைட் (Wight) தீவு. | 2 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| | இரவில்.—சில இடங்கள்—மிட்லண்ட்ஸ் (Midlands), இங்கிலாந்தி(England)ன் தெற்குப் பாதி. | ... | நஷ்டமில்லை. சொற்பச்சேதம். |
| | ஒரு பட்டணம்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ... | சிலருக்குக் காயம். |
| | ஒரு இடம்.—ஸ்காத்லாந்து (Scotland). | 5 விமானங்கள். | ...... |

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

| | | | |
|---|---|---|---|
| | ஸிப்ரஸ்.—(Cyprus). | ... | 1 விமானம்; சில ஜனங்கள் கொல்லப்பட்டனர். |
| | மால்டா.—(Malta). | | 1 விமானம், சேதமேயில்லை. |
| 9—7—41. (புதன்கிழமை). | | | |

**பிரிடன் (Britain).**

| | | | |
|---|---|---|---|
| | இரவில்—சில இடங்கள்.—தென்கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland); ஒரு தோட்டம்—வட இங்கிலாந்து (England). ஒரு கிராமம்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | 4 விமானங்கள். | சேதம் சொற்பம். சிலருக்குத்தான் காயம். |

**ருஷ்யா (Russia).**

| | | | |
|---|---|---|---|
| | ருஷ்ய சைனியங்கள், விமான நிலயங்கள்.—எல்லா முக்கியமான போர் அரங்கங்களிலும். | ...... | ...... |

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

| | | | |
|---|---|---|---|
| | மால்டா.—(Malta). | ...... | ...... |
| 10—7—41. (வியாழக்கிழமை). | | | |

**பிரிடன் (Britain).**

| | | | |
|---|---|---|---|
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி(England)ன் கிழக்கு, வடகிழக்குப் பாகங்கள். | 2 விமானங்கள். | சிலர் மாண்டனர். சொற்பச்சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 11—7—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓரிடம்.—வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சேதமேயில்லை ஒரு சிலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா.—(Malta). | 3 விமானங்கள் பல சேதமாயின. | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | ருஷ்ய சைனியங்கள்.—போலாந்து (Poland). | ...... | ...... |
| 12—7—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—இங்லோந்தி (England)ன் தென்மேற்கு, கிழக்குப் பாகங்கள். | ...... | சேதமேயில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸைப்ரஸி (Cyprus) லிருக்கும் பாமகூஸ்டா (Famagusta) த் துறைமுகம். | ...... | சொற்பச் சேதந்தான். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | சொற்ப சேதம். |
| 13—7—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஓரிடம்-மேற்கு இங்கிலாந்து (England). | ...... | சிலருக்குக் காயம் |
| | இரவில்.—சில இடங்கள்—தென் கிழக்கு மேற்கு இங்கிலாந்து (England). | 2 விமானங்கள். | ...... |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | சொற்பச்சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | சுற்றியுள்ள பிரதேசங்கள் :—லெனின் கிராட் (Leningrad), ஸ்மாலென்ஸ்க் (Smolensk). | ...... | ...... |
| | ராணுவம் முக்கியமுள்ள இடங்கள் :—கீவ் (Kiev). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 14—7—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு ரயில் தொடர்—ஹோம் கவுண்டீஸ் (Home Counties), ஓர் இடம்—ஸ்காத்லாந்தி (Scotland) ன் கிழக்குக் கடற்கரை. | 2 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | இரவில்.—ஓர் கடற்கரைப் பட்டணம்—தென் கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சொற்பச்சேதம். சிலருக்குக் காயம். |
| | ஓர் சில இடங்கள்.—மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஜிப்ரால்டர் :—(Gibraltar). | ...... | விரட்டியடிக்கப் பட்டன. |
| | ஸைப்ரஸ்.—(Cyprus). | ...... | சேதமேயில்லை. |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## பிரிடிஷ் விமானப்படையின் வெற்றி.

எதிரியைக் காட்டிலும் சென்ற வாரத்தில் நாம் அதிக விமானங்களை இழந்தோம். ஆனால் இது ஆச்சரியமல்ல. ஒவ்வொரு நாளும் எதிரியைக் காட்டிலும் நாம் அதிக விமானங்களை அனுப்பினோம். ஜெர்மன் விமானிகள் நமக்கு இழைத்த தீமைகளைக் காட்டிலும் பதின் மடங்கு தீங்கு நாம் எதிரிக்கு ஜெர்மனியிலும், வட பிரான்ஸிலும், கடற்கரையிலும் விளைவித்தோம்.

மேலும், இரவிலும் பகலிலும் இடைவிடாது நாம் செய்துவரும் விமானத் தாக்கலானது கேவலம் எதிரி கிழ் ஐரோப்பாவில் யுத்தத்திற்கு போயிருப்பதால் மட்டும் அல்ல. பிரிடன் பேரில் படையெடுப்பது என்ற எதிரியின் யோசனையானது தவக்கப்பட்டிருப்பதில் ஜெர்மனியை பொடிபண்ண வேண்டுமென்ற நமது நெடுநாள்பட்ட எண்ணத்தை அனுசரித்து விமானப்படை வெகுநாளைக்கு முன் ஆரம்பித்த வேலையை இப்பொழுது பலமாகச் செய்கிறார்கள். பொடி பண்ணுவது என்பது சரியான வார்த்தை. அது சரி என்பது விமான இலாகா செய்திகளால் ரூபிக்கப்படுகிறது. ஒரு நடுநிலைமை தேசநிருபரும் ஜூலை 11டல் செய்தி சொன்னார். பிரிடிஷ் வெடிகுண்டுகளால் சொத்துக்கள் நாசமாகி மனதும் தளர்ந்ததின் நிமித்தம், ஜெர்மனியில் கவலை அதிகரித்து விட்டது.

இங்கிலாந்திலுள்ள ஒரு விமானப்பத்திரிகை, "ஜெர்மனி விமானப்படை தோற்றுப்போனப் பிராயம்தான்" என்று சொன்ன அபிப்பிராயமானது ஒருவேளை கொஞ்சம் அவசரப்பட்ட யோசனையாக இருக்கலாம். ஆனால், அது கேவலம் ஆசையால் சொல்லப்பட்ட ஆதாரமற்ற வார்த்தையல்ல.

## யோசனைக்கு விஷயம்.

மேலே திருப்திகரமான விஷயத்தைச் சொன்னோம். ஆனால் சுலபமாக திருப்தி அடையக்கூடாதென்று அடிக்கடி நாம் எச்சரிக்கை செய்து வந்திருக்கிறோம். ஆகையால் மேலே சொன்ன திருப்திகரமான அபிப்பிராயம் ந்யாயம் என்று காட்ட சில காரணங்கள் குறிப்பிடுகிறோம்.

(1) இரவில் பெரிய விமானத் தாக்கல் நடந்ததிலிருந்து பகலிலும், அப்படிச் செய்வது இயல்பு. உள்நாட்டு போக்குவரத்து சாதனங்கள் கட்டு கெட்டுப் போனபடியால் கடற்கரைக் கப்பல்களை வைத்துத்தான் ஜெர்மானியர் கைவரிசையைக் காட்டவேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுக்கு மகத்தான நஷ்டம்.

(2) இரவில் எதிரிகள் கொஞ்சகாலமாக பதுங்குகிறார்கள். இரண்டு வாரங்களில் பிரிட்டன் பேரில் இரண்டு தரம்தான் விமானங்களை அனுப்பினார்கள். நமது குறி சரி என்பதும் ஜெர்மன் விமானப் படைக்கு நாம் விளைவித்த பெரும் சேதமும், ருஷ்யச் சண்டைக்கு ஜெர்மன் விமானங்கள் ஏராளமாக அனுப்பப் பட்டதும் இதற்குக் காரணம். இதற்கு முன்னமேயே அவர்கள் அனுப்பி வந்த விமான சங்கியை குறைத்து விட்டது. அவர்கள் அனுப்பிய விமானங்களிலும் சிலவற்றை நாம் சேதமாக்கி வந்தோம்.

(3) பகலில் நமது விமானங்கள் வட பிரெஞ்சு அரமுகங்களைத் தாக்கியும், வேகமான வெடிகுண்டு விமானங்கள் உள்புறம் சென்று தாக்கியும், எதிரி விமானங்கள் எதிர்த்து வருவதைத் தடுத்து நாசமாக்கியும் (நமது விமானம் ஒன்றுக்கு எதிரி விமானங்கள் 5-ஆக சேதம்) வந்ததில் ருஷ்ய-ஜெர்மானிய யுத்தத்திற்கு முன்னமேயே வெற்றிகரமாக இருந்தது. விமானச் சண்டை போடும் ஸ்தலத்தைத் பிரிட்டனிலிருந்து அடுத்த சமுத்திரத்திற்கும் அங்கிருந்து பிரான்ஸுக்கும், பிரான்ஸிலிருந்து வடமேற்கு ஜெர்மனிக்கும் நாம் ஏற்கனவே தள்ளிக்கொண்டு போய்விட்டோம்.

இதெல்லாம் எதிரி வேறிடத்தில் வேலையாய் இருந்தான் என்ற காரணத்தால் ஏற்பட்ட அகஸ்மாத்தான காரியமல்ல. சென்ற வருஷம் நாஜிகள் பிரிட்டனில் தோற்கடிக்கப்பட்டார்கள். நமது புதிய விமானங்களை முக்கியமாக ஸ்பிட்பையர் (Spitfire), ஹரிக்கேன் (Hurricane) விமானங்களைக்கண்டு நாஜிகளுக்கு கலக்கம். நமது விமானிகளின் தைரியத்திற்கும் செயலுக்கும் சமமாக எதிரி தரப்பில் இல்லை. சமீபத்தில் நாம் ஏராளமான புதிய விமானங்களையும் உபயோகத்திற்கு கொண்டு வந்து விட்டோம். ஆகையால், விமானப்போரில் வெற்றி நமக்கு அதி சீக்கிரத்தில் வருமென்பது கேவலம் சொப்பனமல்ல. விரைவில் கைகூடக் கூடியது.



## ஹிட்லரின் கூபரா.

ஏராளமான பணத்தை சம்பாதிக்கும் விஷயத்தில் விசேஷ திருஷ்டியுள்ள ஒரு மனிதன் பற்பல இடங்களில் ஜனங்கள் பங்கெடுத்துக்கொள்ளும் படியான வியாபார ஸ்தாபனங்களை ஏற்படுத்தி ஏதேனும் ஒன்றுக்கு நஷ்டம் ஏற்படும் பக்ஷத்தில் எல்லா ஸ்தாபனங்களும் தலைகீழாக விழுந்து விடுமோ என்று பயந்துகொண்டே கவனித்துக்கொண்டு வருபவன் போல் ஹிட்லர் ருஷ்யாவின்மீது படையெடுத்தலிருந்தும் ஐரோப்பா கண்டத்தில் மாத்திரம் இருந்த யுத்தத்தை உலகம் முழுதும் வியாபிக்கும் படியாய்ச் செய்ததினின்றும் தான் உலகம் முழுமையையும் ஜயித்தாலொழிய தான் நினைத்த காரியத்தை சாதிக்கமுடியாது என்று ஹிட்லருக்கு ஒரு பெரிய பயம் தனக்குத்தானே ஏற்பட்டிருக்கிறது. இந்த ஜெர்மன் ஆதிக்கியம் நீடித்து நிலைபெறாது. மின்னல் போல் ஹிட்லருக்கு ஜெயம் சீக்கிரத்தில் உண்டாக வேண்டும்; லோகாதிபத்தியம் ஏற்படவேண்டும். இல்லாவிடில், தலைகீழாக முழுகிப்போவார். ஆகையால்தான் ருஷ்யாவின் தலைவாசலைக் கடந்திருக்கிறார். அவருக்கு இனி ஏற்பட்டிருக்கிறது பிரிட்டனை முற்றுகைப் போட வேண்டியதுதான். தவறினால் அடியுடன் தோல்விதான். துருப்புக்களை பல திக்குகளில் கொண்டுபோய் சண்டைபோடுவதும், அவர் செய்யும் சாணக்கியங்களும் (ராஜ தந்திரங்களும்) இதற்கு அத்தாக்ஷி. அவருடைய தென்பாகத்திலுள்ள ராஜ்யங்களுக்கு ஹானி நேராமல் இருக்குமாறு துருக்கியோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அவருடைய பொருளாதார நோக்கங்களென்ன, ராஜ தந்திர நோக்கங்களென்ன, நாஜி கோஷ்டிகளுடைய முயற்சிகளென்ன, இவைகளைக் கொண்டு ஸ்டாலினை (Stalin) பயப்படுத்த முடியாமல் போகும் பக்ஷத்தில் அவருடன் சண்டை செய்ய நேரிடுமானதால் துருக்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். ஸ்டாலினை பயமுறுத்த முடியவில்லை. ஸ்டாலினு (Stalin)-க்கு விசேஷ அதிகாரத்தை விளைவித்த ஜனக் கொழப்பத்திற்கு ஆதாரமான முக்கிய கொள்கைகளை விட்டு விட ஸ்டாலின் சம்மதிக்கவில்லை. ஹிட்லருக்கு வேண்டிய சாமான்கள் வகையறாக்களை ஸ்டாலின் கொடுக்க ஒருவாறு சம்மதித்தாலும் அது ஹிட்லருக்குப் போதுமானதில்லை. அவர் தலைதிரும்பிப் போயிருந்ததால் ஸ்டாலினுக்கு ஒருவிதமான அவகாசமும் கொடாமல் ஒரு பெரும் போரை ஆரம்பித்துவிட்டார். இந்த பூலோகத்தில் இது வரையிலும் நேர்ந்திருக்கும் சகல சண்டைகளிலும் இது தான் பெரிய சூதாட்டம். இப்பொழுது கிடைத்திருக்கும் வர்த்தமான பத்திரிகைகளிலிருந்து ஹிட்லர் ஆரம்பித்திருக்கும் சண்டையானது ஆர்டிக் மஹாசமுத்திரத்திலிருந்து கருங்கடல் வரையில் மூன்று வாரங்களாகியும் இந்த பெரும் சூதாடியான ஹிட்லருக்கு நாளுக்கு நாள் கஷ்டங்கள் அதிகமாகிக்கொண்டே வருவதாகத்தோன்றுகிறது.

## ஒரு பிரகாசமான நீர்க்குமிழி.

'மெயின் காம்ப்' (Mein Kampf) என்கிற ஹிட்லரின் புஸ்தகத்தைப் படித்த ஒருவராவது ஹிட்லர் பிரமாதமான யோசனைகள் செய்திறவரென்று சந்தேகமன்னியில் நினைக்காமல் இருக்க மாட்டார்கள். ருஷ்யாவின் பேரில் ஹிட்லர்

ஆரம்பித்திருக்கும் கொடும் போரானது நாம் எதிர் பாராவண்ணம் ஒருக்கால் ஜயமடைந்து விட்டால் இந்த அச்சில் (Axis) சேராத நம்முடைய கதி இன்னதாகு மென்பதை முன்னாலேயே உணர்ந்து கொள்வது நலமாயிருக்கும். அப்படி நேரும் பக்ஷத்தில் இந்தியாவிற்கு சீக்கிரத்தில் பயமேற்படலாம் என்று கட்டாயமாகச் சொல்ல நேரும். ருஷ்யாவுடன் சண்டை போட்டு முடிந்த பிறகு அதனால் ஏற்படும் சங்கடங்களையும் ஒருவாறு நிவர்த்தி செய்து கொண்டு தன் நிலைமையையும் பலத்தையும் விருத்தி செய்து கொண்டு தெற்கிலும், தென்கிழக்கிலும் இருக்கக்கூடிய பிரதேசங்களைக் காக்கவும் அவைகளை ஜயிக்கவும் வேண்டிய ராணுவங்களென்ன, யுத்த முஸ்தீப்புகள் என்ன இவைகளை சேகரிக்கவும் அப் பிரதேசங்களுக்குக் கொண்டு போகவும் ஏராளமான காலங்கள் செல்லும். இம்மாதிரி ஹிட்லர் ஸ்திரப்படுத்திக் கொள்ளும், முந்தியே நாம் விசேஷ முயற்சி எடுத்து ஹிட்லரை வெகு தூரத்திலேயே இருக்கும்படியாய்ச் செய்ய வேண்டியது. அவர்களுடைய கொடிகள் வசீகரமுள்ளது என்று தோன்றலாம். ருஷ்யாவை ஜயிக்கும் பக்ஷத்தில் 225 முழு பிரிவு சைனியங்களும், 14 யுத்தக்கருவிகள் கொண்ட பிரிவுகளும் மேற்கில் பிரிட்டனையோ அல்லது தெற்கில் ஈரான், ஈராக் மூலமாக ருஷ்யாவையும் இந்தியாவையும் தாக்க ஸித்தமாகும். யு. எஸ். எஸ். ஆர் (U.S.S.R.) என்னும் தேசமானது முன் காலத்தில் இருந்தது போல் அடிமைகளடங்கிய சின்ன சின்ன ஜாதிகளாக பிரிந்து போய் விடும். நிலக்கரி பயிரிட்டு, கோதுமை என்ன, மாங்கனீஸ் என்ன, பெயர் போன ருஷ்யாவில் உற்பத்தியாகும் எண்ணெய் இவை எல்லாம் ஜெர்மனியின் உபயோகத்திற்காக சேகரம் செய்ய ஏராளமான அடிமைகள் கிடைத்து விடுவார்கள். பஸிபிக் மஹா சமுத்திரக் கரையிலிருக்கும் விளாடிவாஸ்டக் (Vladivostok)கிலிருந்து மேற்கே பிஸ்கே வளைகுடா வரை (Bay of Biscay) ஹிட்லர் அசைக்க முடியாத ஒரு பலமான நிலைமையை அடைந்து விடுவார்.

## ஒரு ஸ்வப்னாவஸ்தையான சமாதானம்.

இதெல்லாம் முடிந்த பிறகு ஹிட்லர் ஒரு நியாயமான சமாதானம் ஏற்படுத்த ஆரம்பிப்பார். அமெரிக்கா கண்டம் அமெரிக்கர்களுக்கும்; ஐரோப்பாவும் (ஆபிரிக்காவில் ஒரு பாகமும்) நாஸிகளுக்கும், ஆசியர்களுக்கும், தென் பஸிபிக் மஹா சமுத்திரத்திலுள்ள சகல நாடுகளும் ஜப்பானுக்கும் என்று ஏற்படும். இந்த உலகிலுள்ள ஏற்றுமதி இறக்குமதி எல்லாம் அவர்கள் கைவசமாகும். பிறகு அடிமைகளைக் கொண்டு சகல வேலைகளையும் நடத்துவதால் சாமான்கள் உற்பத்தியிலே குறைந்தும், விற்பனையிலே அதிகமும் ஆகி மற்றவர்களைக் காட்டிலும் நல்ல லாபத்திற்கே விற்கும்படியான நிலைமை வந்துவிடும். அப்பொழுது பாதிப்படும் ஹிட்லரின் விரோதிகளான கிரேட் பிரிடன் (Great Britain) என்ன, அமெரிக்கா என்ன, பிரிடனைச் சேர்ந்த வெளி தேசங்களென்ன இவைகளெல்லாம் பொருளாதார நிலைமை மிகவும் தவறி அவர்கள் சத்துருவான ஹிட்லருடன் சமாதானத்திற்கு வரும்படியாக நேரிடும். என்ன நேர்த்தியான கல்பனை !!



## ஒருக்காலும் இல்லை !

முதலாக: இந்த நீர்க்குமிழியை பொற்கக்கூடிய குண்டூசிகள் :—

(1) நாளுக்கு நாள் அபிவிருத்தியாகும் அமெரிக்காவின் யுத்த முஸ்தீப்புகளென்ன, ஜெர்மனியில் யுத்த முஸ்தீப்புகள் செய்யப்படும் ஸ்தலங்களை நாள் தவறாமல் நாசம் செய்துவரும் நம்முடைய விமானங்களுடைய வேலைகளென்ன, இவைகளால் நாளுக்கு நாள் பலம் குறைந்துவரும் ஹிட்லர் இந்த வருஷம் மாரி காலத்திற்குள் சண்டையை ஜயிக்க வேண்டும். கோடைகாலத்தில்தான் ருஷ்யா தேசத்தில் பெரும் சைனியங்களைக் கொண்டுபோவதும், சண்டை போடுவதும் சாத்யமான காரியம்.

(2) ஜெர்மானியரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டிருக்கும் தேசங்களில் அவர்கள்படும் கஷ்டங்களைப் பற்றி அநேக விருத்தாந்தங்கள் நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. அநேக லக்ஷம் சதுர மைலில் விஸ்தீர்ணமுள்ள ருஷ்யா தேசத்தை ஸ்வாதீனப்படுத்தி அங்கு சண்டை சச்சரவு கலகங்கள் இல்லாமல் அடக்கி ஆள்வதற்கு ஏராளமான சைனியங்கள் தேவை.

(3) தேசத்தின் ஆட்சி சரியாக இல்லாத பக்ஷத்தில் கலகங்கள் சகஜமாய்ப் போய்விடும். அடிக்கடி பலவிடங்களில் சம்பவிக்கும். ஆகையால் ஜெர்மானியருடைய ராணுவங்கள் ஏராளமாயும் சண்டை காலத்திலிருக்கக்கூடியது போல் எண்ணிக்கையும் இருக்கும்படியாய் நேரும்.

(4) ராப்பகல் அஹோராத்திரம் ஆர். ஏ. எப் (R. A. F.) விமானங்களின் நாளுக்கு நாள் விருத்தியாகும் குண்டு வர்ஷனையால் தங்கள் ஸ்வதேசத்திலிருக்கும் ஜெர்மானியர்களுடைய தௌர்பாக்கியமான நிலைமை நாளுக்கு நாள் விருத்தியாகும்.

ஹிட்லர் கொண்டிருக்கும் கொள்கையில் நேரக்கூடிய சம்பவங்கள் சிலதை மேலே குறிப்பிட்டிருக்கிறோம். நாம் அவைகளை நினைத்துக்கொண்டு சாய்ந்து கொண்டிருக்கக்கூடாது. ஒவ்வொரு தேசத்தாரும், ஒவ்வொரு மனிதனும், ஹிட்லருடைய ஸ்வப்னங்கள் மனோராஜ்ய பட்டாபிஷேகம் என்று நினைத்தாலும் அவருடைய எண்ணங்கள் பூலோகத்திலுள்ள நாகரீகத்திற்கே மகத்தான விபத்துக்களை உண்டு பண்ணக்கூடியது என்று உணரவேண்டும். அதுமட்டும் அல்ல. இந்தியாவிற்கும் சங்கடம் ஏற்படலாம். முன்னொரு காலத்தில் நெபோலியனும் (Napolcon) இன்னும் படையெடுத்த சிலர்களும், தாங்கள் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு திரும்பி ஓடும்படியாய் நேர்ந்ததினால், இப்பொழுதும் ஹிட்லருக்கும் அப்படியே நேரிடும் என்று நாம் நினைத்துக்கொண்டு செய்ய வேண்டிய முயற்சிகளை தளர விடுவது பெரிய பிசகாகும். ஸ்வயேச்சையை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு தேசத்தாரும், ஒவ்வொரு மனிதனும் விடா முயற்சி செய்து இப்பொழுது உலகத்திற்கு சம்பவித்திருக்கும் கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டும். அவ்விதம் முயற்சி செய்யாவிடில் இவ்வருஷ முடிவிற்குள்ளேயே ஹிட்லர் ஒரு மஹோன்னதப் பதவியை அடைந்து விடலாம். நாம் திருந்த முயற்சி எடுக்கும் விஷயத்தில் ஹிட்லர் நாசகதியை அடைவார்.

## பிரிடனின் பாரசூட் தளவாடம்.

## எவ்விதம் மின்னல் யுத்தப்படை தயாரிக்கப்படுகின்றன.

## மின்னல்படை தயாரிப்பில் ராணுவமும் ஆகாய விமானமும் பங்கெடுத்துக்கொள்ளல்.

விங் கமாண்டர் எல். வி. பிரேசர் எழுதியது:—

இங்கிலாந்தும் தோற்கடிக்கமுடியாத மின்னல் யுத்தப்படை தயாரித்து வருகிறது. இந்த பாரசூட் சைனியத்தின் ஒத்திகையை முடிவடையப் போகிறது. அவர்கள் தீவிர அநுபவசாலிகள். சுமார் 25 வருடங்களுக்குள்ளாக இதே எதிரிகளை பணிமுடியும், யந்திர சாதனங்களோடு, மின்னல் கம்பிகளால் பாதுகாக்கப்படும் விதைப்புகளோடு கூடியதுமான யுத்தத்தில் எதிர்த்து போர்செய்த வீரர்களின் உண்மைப் பிள்ளைகள். மிகத் தேர்ந்தவர்கள். இங்கிலாந்தின் பாரசூட் துருப்புகளின் பலத்தை இதாலியர்களே தெரிந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பிரிடிஷ் ஆகாய விமானத்தில் கொண்டுபோகப் பட்டார்கள். இந்த விமானங்களும் இத்தாலிய எதிரிகளின் நாட்டில் வெகுதூரம் அபாயமான இடங்களுக்குச் சென்றன. அவைகள் தங்குமிடம் படத்தில் ஒரு சமிக்ஞை இட அடையாளம் அதிகமில்லை. ஆனால் விமானங்கள் வெகு ஜாக்கிரதையாகக் குறிப்பிட்டபடி பறந்துசென்று அவைகள் வேலையை தொடங்குமுன் துருப்புகள் எதிர்பார்த்த சர்வாதிகாரியைப் பார்த்து "ஆகா, சர்வாதிகாரியைக் கண்டால் எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்று கேலியாகப் பாட்டுப் பாடினார்கள்.

ஒத்திகை அதிகம். ஆவலுடன் காத்திருக்கும் வாலண்டியர்களிலிருந்து தேர்ந்தெடுத்தலும் அதிகம். தைரியம், வீரியம், அறிவு, சண்டையிடும் சாமர்த்தியம் இவைபோன்ற கூடிய தேகக்கட்டுள்ள மனிதர்கள் அவசியம். விரோதியுடன் எந்த நிலைமையிலும் எதிர்த்து நிற்கவேண்டி முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளை நூதன ஒத்திகைக்கு அனுப்புகிறார்கள். இந்த வேலைக்கு உடுப்புகள், தளவாடங்கள், ஆயுதங்கள் அதற்கேற்ற பாதுகாப்புகள் இவைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஒத்திகையாளரும் முதலில் ஆகாய விமானத்துடன் நெருங்கிப் பழக்கப்படுகிறார்கள். ஆரம்ப பாரசூட்டில் இறங்குதலும் செய்யப்படுகின்றன. பின் ஆகாயப் படை முழுவதும் வேலை செய்கிறது. விமானமும் மணிக்கு நூறு மைல் வீதம் பறந்து செல்லும் பொழுது கீழே இறங்குவது ஆரம்பிக்கிறது. ஒரு செகண்டு நேரத்தில் துருப்புகளும் சுமார் இருநூறு கஜ தூரம் செல்லும். சீக்கிரம் செல்ல வேகம் முக்கியம். ஒரு முறை பூமியை அடைந்தால் சுறுசுறுப்பும் திடமான எண்ணமும் அவசியம். ஏனென்றால் யுத்த தளவாடங்களும், ஆயுதங்களும் பிரத்தியேகமாக விமானங்களிலிருந்து இறக்கப்படுவதால் உடனே அவைகளை எடுத்துக்கொண்டு ஒன்றாக ஒன்று சேருவது வெகு சிரமம்.



இதனாலேயே பாரசூட் துருப்புகள் இறங்கியவுடன் விமானங்களிலிருந்து விடுத்துக்கொண்டு தளவாடங்களை அரை செகண்டில் தயாரித்துக் கொள்ள முடியும்.

இந்த ஒத்திகையில் மன்னர் ஆகாயப் படையும், காலாட் படையும் கலந்து கொள்கின்றன. ஒன்று யுத்த தந்திரத்தைப் புகட்டவும் மற்றொன்று ஆகாயத்தில் பறக்கக் கற்றுக் கொடுக்கவுமாகும். மன்னர் ஆகாயப்படை பறக்கும் சாதனங்களை உண்டாக்கி விமானங்களிலிருந்து இறங்கும் வழியைக் காட்டுகிறது. காலாட்படை தரையில் சண்டை செய்யும் விதத்தையும் தந்திரத்தையும் சொல்லிக் கொடுக்கிறது. கற்கும்பொழுது மன்னர் ஆகாயப்படை புறப்படும் இடத்திலிருந்து குறிப்பிட்ட இடத்தை அடைந்து விமானத்திலிருந்து இறங்க ஆரம்பிக்கும் வரை ஜவாப்தாரியாக இருக்கிறது.

விமானம் ஓட்டுவது ஒரு பெரிய கடினமான வேலை. குறிப்பிட்ட இடத்தைச் சேருவது ரொம்பவும் முக்கியம். இதன் பின் ராணுவ ஒத்திகை ஆரம்பமாகிறது. இந்த ஒத்திகைகளில் தேர்ச்சி யடைந்த பாரசூட் துருப்புகள் அவைகளுக்கு விதிக்கப்பட்ட அடையாளத்தைத் தரிக்கிறார்கள்.

பாரசூட் துருப்புகளின் நடவடிக்கை சம்பந்தமான எல்லா விஷயங்களும் அவைகளின் ஒத்திகையின்போதே சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. அவைகளுக்கும் சில ரகசியங்கள் இருக்கின்றன. அவைகள் உசித காலத்தில் உண்டாக்கப்படும். பத்து வருஷங்களுக்கு முன் ருஷ்யாவில் ஜெர்மனி தெரிந்துகொண்டு விருத்திசெய்திருக்கும் விஷயங்கள் இப்பொழுது அநுபவமாகிவிட்டது. ஆரம்பத்தில் ஜெர்மனியின் முயற்சிகளும் தாத்காலிகமாகவும் பரீக்ஷார்த்தமாகவும் இருந்தன. நார்வேயில் ஜெர்மனிக்கு அதிக ஜயம் கிடைக்கவில்லை. ஆனால் அந்த அநுபவம் ஹாலந்தில் உபயோகமாக இருந்தது. பாரசூட் துருப்புகள் படையின் முன் அணியில் யுத்த தளவாடங்கள் வந்து சேரும்வரை பாதுகாப்பாக இருந்துகொண்டு இருந்தது. சுமார் இம்மாதிரி இரண்டாயிரம்வரை உபயோகப்படுத்தப்பட்டு அவைகளுக்கு ஜெர்மன் ஐந்தாம்படை உதவியாக இருந்துவந்தது. இதுவரை விடாமுயற்சியுடன் வேலைசெய்து இம்மாதிரி துருப்புக்களை அவைகளின் நாசத்தை கொஞ்சமும் கருதாமல் சைனியங்களுக்கு முன் அணியில் உபயோகப்படுத்தி தங்கள் யுத்த தந்திரத்தை முடித்துக்கொண்டார்கள். கிரீட்டில் இந்த தந்திரத்தை இன்னும் அதிகம் உபயோகப்படுத்தினார்கள். இச்சண்டையில் ஜெர்மனிக்கு பெருத்த ஆள் சேதமும் தளவாடங்களின் சேதமும் ஏற்பட்டாலும் அத்தீவை ஆக்கிரமித்துக்கொண்டார்கள். ஏனென்றால் பிரிடனால் விமானப் படையெடுப்பை எதிர்க்க விமான நாசகாரிகள் கொண்டுவரமுடியாதது காரணம் தெரிந்ததே. இந்தச் சேதம் அவர் எடுத்துக்கொண்ட சிரமத்துக்கு ரொம்பவும் அதிகம் என்பது பிரயோசிக்கவேண்டிய விஷயம். இதே முறையை இன்னும் அதிகமான அளவில் பலத்த துருப்புகளுடன் இங்கிலாந்து விஷயத்திலும் அநுஷ்டித்தால் ஜெர்மனிக்கு இன்னும் அதிகச் சேதம் ஏற்படும் என்பது நிச்சயம். இம்முறையும் நாளடைவில் பயனற்றதாக ஆகிவிடும். பிரிடனின் ஆகாயப் படையும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது.

## வெடிகுண்டு விமானங்களுடையவும், எதிர்ப்பு விமானங்களுடையவும் அலுவல்கள்.

(சமீபத்தில் ஆகாய விமானப்படை தளபதி A. க்ளாட் ரைட் A. F. C. என்பவரால் ஸிம்லாவிலிருந்து ஒலிபரப்பியது).

இந்தியன் விமானப்படையைப்பற்றி தொடர்ச்சியாக பேசப்பட்டவைகளில் இது கடைசிப் பேச்சு. முதல் முதலில், சமாதான காலங்களில் எப்படி பறக்கும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, தாங்களாகவே தைரியமாய் பறக்கும் சக்தி கிடைக்கும்வரை மெள்ளமெள்ள பயிற்சி அளிக்கப்படுகிறதென்றும், பிறகு அவர்கள் அதிபால்ய பைலட்டுகளாகச் செய்யப்படுவதையும், தேசம் முழுவதையும் ஆகாய விமானப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்ததால், தங்கள் விமானங்களை தாங்களே பழுதுபார்க்கும் யோக்யதைக்குறிய, யந்திர சம்பந்தமான அறிவுகள் அவர்களுக்கு ஊட்டியது என்றும் நீங்கள் கேட்டிருந்தீர்கள்.

எவ்விதமாய் விமானத்தைச் செலுத்தும் பைலட்டும், மெக்கானிக்கும் அவர்கள் வேலைப்பழக்கம் துவக்கிறார்களென்றும் கேட்டீர்கள். முதலில் ஆபீஸர்களின் துவக்க டிரெயினிங் பள்ளிக்கூடங்களில் அவர்கள் சேருவதையும், அங்கே தங்கள் சரீரங்கள் தகுதியாயும் உறுதியாயும் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தையும், ஆகாயத்தில் அவர்களுக்கு ஏற்படப்போகும் புது வாழ்விற்குறிய சிரமம் மிகுந்த பரீக்ஷைகளுக்குத் தயாராகும் விதத்தையும் எப்படித் தெளிவாய் தாங்கள் யோசனைசெய்து, சீக்கிரமான முடிவுக்கு வரவேண்டுமென்றும், அப்படி சீக்கிர முடிவுக்கு வந்தால்தான் தாங்கள் ஒரு தலைமைப் பதவியை அடையக்கூடும் என்பதையும் அவர்கள் அங்கு கற்றுக்கொண்டார்கள் என்று நீங்கள் விஸ்தாரமாய்க் கேட்டீர்கள்.

பிறகு விமானிகள் Service டிரெயினிங் ஸ்கூலுக்கு அனுப்பப்பட்டு, அங்கே வெகு லாகவமாய் பறக்கும் சக்தியை அடைகிறார்களென்றும், அதனால் பைலட்டு வேலை செய்வதே தன்னுடன் கூடப்பிறந்த சக்திபோல் அப்படி சுலபமாய் பழக்கப்படுகிறார்களென்றும் காற்று மழையால் ஏற்படக்கூடிய தொந்தரவுகளையும் பொருட்படுத்தாமல், தாங்கள் சேரவேண்டிய இடத்திற்கு தப்பாமல் சேருவதற்கு பழக்கப்படுகிறார்கள் என்றும், யுத்த யந்திர சாதகங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளும்படியாயும் பழக்கப்படுகிறார்களென்றும் உங்களுக்கு ஏற்கனவே சொல்லப்பட்டது. அவர்கள் தங்கள் பீரங்கிகளின் ரகஸிய விஷயங்களை அறிந்துகொள்ளுகிறார்கள். அந்தத் துப்பாக்கிகளை எப்படி பிரயோகப்படுத்துகிறதென்றும், வெடிகுண்டுகளின் பிரயோகம் எந்தக் காரணத்திற்கு என்றும் இலக்குகளின்பேரில் குறிதப்பாமல் வெடிகுண்டுகளைத் தள்ளவேண்டிய விதமும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

பைலட்டும், விமானத்தைச் சேர்ந்த மற்ற தொழிலாளிகளும் எப்படி ஒத்துழைக்க வேண்டியதென்றும் கற்றுக்கொள்ளுகிறார்கள். தன்னம்பிக்கை அவசியமாக அவர்களுக்கு ஏற்படும்படி பழக்கம் அளிக்கப்படுகின்றது. அந்த



விமானிகள் தாங்களாகவே வேலை தொடுக்கும் திறமையடைகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் அமைதியான மனோதைரியமானது நிச்சயமாய் வெற்றிகிடைக்கும்படி அமையப்பெறுகிறது.

சென்ற வாரத்தில், மெக்கானிக்குகள் எவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் என்றும், அவர்களின் கை வேலையும், பொறுமையும், ஆகாய விமானத்தின் ஒவ்வொரு பாகமும் முற்றிலும் நன்றாய் வேலைசெய்யும்படி செய்ய தேவையாக இருக்கிறது என்றும், விமானத்திலுள்ள கணக்குக்கடங்காத தனிக்கருவிகளும், பாகங்களும், பழுதுபார்க்கப்பட்டு அவர்கள் சீராய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் இன்னும் அநேகவிதமாய் அவர்களுக்கு சர்வீஸ் டிரெயினிங் அளிக்கப்படுகின்றது என்று உங்களுக்குச் சொல்லப்பட்டது.

அவர்களின் திறமையைப் பொறுத்துதான் விமானத்திலுள்ள மனிதர்களின் ஜீவன்கள். விமானிகள் செய்யவேண்டிய வேலைகள் பூர்த்தியாக செய்யப்படவேண்டியதற்கு இந்த மெக்கானிக்குகளின் திறமைதான் காரணபூதம். முக்கியமாக மெக்கானிக்குகள் செய்துவைத்திருக்கும் திறமையான வேலையால், விமானிகளுக்கு யாதொரு கவலையும் தொந்தரவுமில்லாமல், தங்கள் விமானம் பத்திரமாய் வேலை செய்யும் என்ற தைரியம் ஏற்படுகின்றது. விமானிகள் கவலையற்று உழைக்க ஹேதுவாகின்றது.

நாடகம் அமைக்கப்பட்டுவிட்டது. நடிகர்கள் பழக்கப்பட்டு அவர்களிடங்களிலிருக்கிறார்கள். எனக்கு முந்திய பேச்சாளர்கள் முகவுரை படித்துவிட்டார்கள். இந்த விமானிகள், வெடிகுண்டு விமானங்களிலும், எதிர்ப்பு விமானங்களிலும் என்ன விதமாய் பங்கெடுத்துக்கொண்டு வேலை செய்கிறார்கள் என்று நான் சொல்லப்போகிறேன். சைன்யத்துடன் அவர்கள் ஒத்துழைத்து வேலைசெய்யும் சங்கதியைப்பற்றி சொல்லப்போகிறேன். சில விமானப்பகுதிகள் இந்த வேலைகளில் விசேஷத்வம் அடைந்திருக்கின்றது. ஏற்கனவே அநேகப் பகுதிகள் இதில் ஈடுபட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லுங்கால் நாம் "பாம்பரை" யும் "ரைடரை" யும் எடுத்துக்கொண்டு அவைகளின் செய்கைகளை கவனிப்போம்.

ஒரு இலக்கு குறிப்பிட்டுக் கொடுபட்டு அதன் பேரில் வெடிகுண்டு போடவேணுமென்றும், ஒரு வெடிகுண்டு வீசும் விமான பைலட்டுக்கும் மற்ற அதைச் சேர்ந்த விமானிகளுக்கும் உத்தரவு போடப்படுகிறது. இந்த பைலட்டும் விமானிகளும், இங்கு எத்தனை மைல் தூரமென்று நிர்ணயித்து போகும் வழியில் சீதோஷ்ண நிலைமையைப்பற்றி விபரம் தெரிந்துகொள்ளுவதுடன் காற்றுவீசும் திசைகள் முதலியது குறித்துக்கொள்ளுகிறார்கள். தன்னுடைய விமானத்தைப் பற்றிய நிலைமை ரிபோர்ட்டை விமானம் செலுத்தும் பைலட்டு பார்த்துக்கொள்ளுகிறான். தன்னுடைய துப்பாக்கிகளை சரிபார்த்துக்கொள்ளுகிறான், வெடிகுண்டுகள் சரிவர ஏற்றப்பட்டிருக்கிறதா என்றும் கவனித்துக்கொள்ளுகிறான்.

விமான "கண் நோக்காளர்" பார்க்கவேண்டிய பிரதேசத்தைக் குறித்த படங்களை வைத்துக்கொண்டு, "பாம்ப்ஸைட்கள்" "காமிரா" முதலியவைகளை சரிபார்த்துக் கொள்ளுகிறான். கம்பியில்லாத் தந்தியை கையாளும் விமானி தன் மொழிகளைக் கவனிப்பதுடன், பீரங்கியின் மேலுறையை கவனித்துக்கொண்டு விட்டான். பிறகு இந்த மூவர்களும், ஆபரேஷன் அறைக்குள் செல்லுகிறார்கள்.

அவர்களுடைய, விமானப்பகுதியின் பாலயத் தலைவன் அவர்களுக் குரிய வேலையைப்பற்றி புள்ளி விபரங்களையும் கொடுக்கிறார் "நாம், நம்முடைய இலக்குக்கு மேல் 10 மணிக்குப்போய்ச் சேரவேண்டும். உங்கள் கை கடிகாரங்களை சரி செய்து கொள்ளுங்கள். நாம் பெரிய எதிர்ப்புப் படையில் ஒரு பாகம். ஆதலால் நாம் காலம் தவறாமல் போய்ச்சேரவேண்டும். நதி கிழக்கே திரும்புகிறதே அந்த இடத்திற்கு சரியாய் 20 மைல் தூரத்தில் நமது இலக்கு இருக்கிறது பாருங்கள் — விமானத்தை எதிர்த்தாக்கும் பீரங்கிப்படை கொஞ்சம் வலுத்தது. ஆதலால் "C" விமானப்பகுதி 10,000 அடி உயரத்தில் பறந்து நெருங்கவேண்டும். மற்ற இரண்டு விமானங்களும் செங்குத்தாய் பாய்ந்து இறங்கவேண்டும். "A" விமானம் கிழக்கேயிருந்தும் "B" விமானம் வடக்கிருந்து அதாவது மலைப்பிரதேசத்து மலையிலிருந்து எதிர்க்கவேண்டும். இதோ இருக்கிறது நாம் வெடிகுண்டுபோட வேண்டுமென்று திட்டம் போட்ட இலக்கின் புகைப்படம். ஒரு புகைப்போக்கி தெரிகிறதே ஒரு தாழ்ந்த கட்டடத்தின் மேல்பரப்பில், அதற்கு 100 கெஜம் கிழக்கேயுள்ளதுதான் நாம் தாக்கவேண்டியது—நெருப்புக்களின் விடுதிகள் தெரிகின்றனவே அவைகளெல்லாம் நாம் ஒரு அமைப்புடன் போகவேண்டியதல்ல. ஏனெனில் அந்த இலக்கு வெகு சிறியது. ஆதலால் நாம் தனித்தனியாகச் செல்லவேண்டும். பணிச்சென்று நாம் தனித்தனியாய் பிரியவேண்டும், பத்தைக் காட்டிக்குமேல் "C" விமானப்பகுதியுடன் சேரவேண்டும். மறந்துவிடக்கூடாது. நமக்குத் துணையாக எதிர்ப்பு விமானம் வருகிறது. ஆதலால் வெடிமருந்தை பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள், ஆனால் திரும்புகாலில் ஒருவரோடு ஒருவர் நெருங்கிவரவேண்டும். வேறு ஏதாவது சந்தேகமா? கேளுங்கள்," என்றான்.

அருமையான விமானப் பகுதித்தலைவருக்கு என்ன செய்யவேண்டியது என்று ஸ்பஷ்டமாய்த் தெரியும். காரியங்கள் முடிந்தவுடன் எப்படி ஒரு குரங்கு சேனையும் வெகு சீக்கிரத்தில் கலைந்து செல்லுகின்றனவோ! அப்படியே சென்று விடும்படி செய்கிறார்.

விமானிகள், "பாம்பே" என்ற பெயருடைய ஒரு விமானத்தில் ஏறிக் கொள்ளுகிறார்கள். தங்கள் விமான உடுப்பை சரிப்படுத்திக் கொள்ளுகிறார்கள். "காம்பாஸ்" என்ற திசைக்கருவிகள் சரியாக வைக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் கடைசியாக எல்லாவற்றையும் சரிபார்த்துக்கொள்ளுகிறார்கள். எல்லாம் சித்தம் என்று விமானத்திற்குள்ளிருக்கும் டெலிபோன் மூலம் பைலட்டுக்கு அறிவிக்கப் படுகின்றது. விமான இன்ஜின்கள் ஓட்டப்படுகின்றன. தலைவர் விமானத்திற்கு பின் அவரவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இடங்களில், பறந்துசெல்லுகிறார்கள்.



பிறகு பகுதித்தலைவர் சமிக்ஞை செய்கிறார். விமானிகள் உறுதியாய் உயர் வழி ஏறி பறக்கிறார்கள். உடனே விமானிகள் தங்கள் "கரியமல வாயு" வசதியை பரிசோதித்துப் பார்க்கிறார்கள்—மேகங்கள் நடுவில் 8,000 அடி—10,000 அடி உயரம்—பிறகு கரியமலவாயு கொஞ்சம் திறந்துவிட்டுக் கொள்ளுகிறார்கள். கடைசியாக 20,000 அடி உயரம் ஏறி நேர்வழி சாவதானமாய் பறக்கிறார்கள்.

ஆகாசம் நிர்மேகமாய் ஸ்படிகம்போல் தெளிவாகிறது. வெகு தூரத்திற்குகீழே மேகங்கள் சஞ்சரிக்கின்றன. வெண்மை மேகங்கள் இங்கு மங்கும் உருளுகின்றன. கொஞ்சம் விலகினதில் ஒரு சிறு குட்டை மாதிரி தோற்றம். கீழே நிலம் மங்கலாய்த் தெரிகிறது. இந்த வெளிகளை கவனித்துக்கொண்டும், விமானங்களை சரிவர செலுத்துவதில் ஈடுபட்ட விமானக்கண் நோக்காளர், விமானத்தின் நிலையை சரிபார்த்துக்கொள்ளுகிறார். இதற்காக வைத்திருக்கும் ரிஜிஸ்தரில் விமான நிலவரத்தை குறித்துக்கொள்ளுகிறார்.

ஒவ்வொரு விமானியும், தனக்கு கொடுபட்ட ஆகாய வெளிபாகத்தை உற்று கவனிக்கிறான். ஏதாவது எதிரி எதிர்ப்பு விமானங்கள் தென்படுகிறதா என்பதற்காகத்தான் இப்படி உற்று நோக்குகிறார்கள். இப்படி 2 மணி நேரம் கவனிப்பதும், கணக்கிடுவதுமாக செலவழிக்கப்படுகின்றது.

திடீரென பைலட்டினுடைய பேசும் கருவியில் ஒரு குரல் கேட்கின்றது. அது பகுதி தலைவரின் குரல். "எதிரியின் எதிர்ப்பு விமானங்கள், நமக்கு மேல் ½ மைலிலிருக்கின்றன. கொஞ்சம் நமக்கு வலது பக்கமாய் போகும் வழியில் 10° யாக மாற்றிக்கொள்ளுங்கள். மேகங்களிருக்குமிடத்திற்கு இறங்குங்கள்"— உடனே விமானிகள் யாவரும் கீழே இறங்குகிறார்கள், பிறகு மற்றொரு குரல் கேட்கிறது. இந்தக் குரல் விமான பீரங்கி கையாளுபவருடையது. "நாம் 600 கஜம் வரும்வரை சுடாதேயுங்கள்" என்கிறான். பிறகு வெண்மையான மூடுபனி விமானங்கள் பேரில் ஓடுகின்றது. ஆனால் மற்ற விமானங்களை ஒவ்வொரு விமானியாலும் பார்க்கப்படுகிறது,—ஒரு குரல் "B" விமானப்பகுதி 4° வலது பக்கம் 2 நிமிஷம் தள்ளிச்செல்லட்டும். 10,000 அடி உயரத்திலிருக்கட்டும். சாம்பல் நிறமான மேகங்கள் மத்தியில் 10 நிமிஷம் விமானங்கள் சஞ்சரிக்கின்றன, தலைவர்களை நெருங்கியே நிற்கிறார்கள். மெள்ள மெள்ள உயரம் குறைகின்றது. ஓடும் மேகங்கள் மறைகின்றன; எதிரி தேசத்தை விமானிகள் பார்க்கிறார்கள்.

தங்கள் வசமிருக்கும் தேசப் படங்களைப் பார்த்து ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் சரியான வழியில், வழிதப்பாமலிருக்கிறார்களா என்று பார்த்துக்கொள்ளுகிறார்கள். தலைவன் "மணிக்கு 250 மைல் வேகம்" என்று உத்திரவிடுகிறார். கீழே நாட்டுப்புறத்தில் ஒரு நதி வெள்ளை பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லுகின்றது.

கடைசியாக அந்த நதியின் வளைவு தென்படுகிறது. நிச்சயமாக அந்த வளைவுதான் என்று உறுதி செய்யப்படுகிறது. மறுபடியும் விமான தளபதியின்,

உத்தரவு மைக்ரோபோனில் கேட்கிறது "தயாரித்துக்கொள்ளுங்கள்"—"C" பகுதி உயரத்தாவுகிறதுபோல் தோற்றம். "B" பகுதி "A"யை பின் தொடர்கிறது. எல்லா விமானங்களும் ஒன்றோடொன்று பின்னப்பட்டதுபோல் இருக்கின்றன. கீழேயிருந்து ஒரு குடிசை யவ்வளவு ஆகிருதியுள்ள புகை "குபுக்" "குபுக்" என்று விமானங்களை நோக்கி வருகின்றது. விமானங்கள் அவைகளிடமிருந்து தவ்வித் தவ்வி ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாறி மாறி பறக்கின்றன.

ஆம். எதிரியின் விமானத்தை எதிர்த்துச் சுடும் பீரங்கி தரை பீரங்கியிலிருந்து வெகு உக்கிரமாய் வெடிகள் கிளம்புகின்றன. "A" பகுதி ஒரு பக்கத்திற்கு ஒதுங்குகிறது. நம்முடைய "B" விமானம், குண்டுகளின் பாதையிற்கு பாய்ந்து இறங்குகின்றன, பிறகு வடக்கு பக்கத்திற்கு திரும்புகின்றன.

தொழிற்சாலை தெரிகிறது. ஒரு பசுமையான மேஜைமேல், வேஷ்டிமாருட்டத் துணிகள் போட்டாப்போல் தோற்றம்; மறைவுதளம் செய்யப்பட்டிருக்கின்றன. சில வர்ணங்கள் பூசப்பட்டு இருக்கின்றன. கண்ணோக்காளர் வெடிகுண்டுகளை தள்ளுவதற்கு ஆயத்தமாய் மெள்ள இறங்குகிறான்.

எங்கே அந்த தட்டையான கட்டடம்?

விமானங்கள் மற்றொரு பக்கம் வெளிப்புறமாய் பறக்கின்றன. விமான "ப்ளைட் சேனாபதி" சோர்வாய் "சேர்" ஒழுங்காய்ச் சேர்ந்துகொண்டு—எதிர்த்த சண்டை தயங்குங்கள்" என்று உத்தரவிட்டார்.

நமது விமானிகள் இருக்கும் இறுக்கக் கட்டப்பட்ட கம்பிபோலிருக்கிறார்கள். அவர்கள் தெளிவாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மூன்று சங்கதிகள் மட்டும் தான் அவர்களுக்கு கவனம்—விமானம் எதிர்நோக்கிச் செல்லுதல், மட்டமான கட்டடம்—உயரம்—இவைகள்தான்.

"கொஞ்சம் சரி—சரி—நிறுத்திக்கொள்ளுங்கள்" என்று "பாம்லைட்" என்ற கருவியை கண்ணோடு ஒட்டி வைத்துக்கொண்டு சொல்கிறான். கண்ணோக்காளர் பிறகு அவன் "விழுந்துவிட்டது" என்று ஒரு கூச்சல் படுகிறான். பைலட்டு விமானத்தை உயரப்போகும்படி செய்கிறான். 3 ந. வருகின்றது.

ந. 1 பகுதிக்காக கவலையுடன் பார்க்கிறார்கள். "இலக்கு அகப்பட்டது" என்று சொல்லிக்கொண்டு யாவரும் ஒன்றுசேர்ந்து, குறி தப்பாமல் காரியம் முடித்ததாய் என்று சற்று திரும்பி பார்க்கிறார்கள்.

உருண்டுகொண்டு பலவர்ணங்களோடு கூடிய புகை பிழிந்து கிளம்பும்பெரும் தண்ணீர் பீச்சாங்குழாய்களிலிருந்து போல கிளம்புகின்றன. ஆகவே "A" பகுதியின் வெடிகுண்டுகள் வீசப்படுகின்றன. புகை, ஒரு சுரங்கத்திற்கு பெரும கொழுந்துவிட்டு எரிகிறதுபோல மாறுகின்றது. ஆனால் சேதம் தெரியவில்லை. அதற்குள் விமானங்கள் வெகுதூரம் பறந்துவிட்டன. இவர்கள் பார்க்காவிடில் என்ன நஷ்டம், படைப்படம் பிடிக்கும் கருவி வேலைசெய்கின்றது.



பிறகு விமானங்கள் மேல்கிளம்பி பறக்கின்றன. சந்தோஷத்தால் தாண்டவம் செய்கின்றன. பிறகு, "C" பகுதி விமானங்களை சந்திக்கின்றன. அலைகள் ஆகாச வெளியில் பேனாக்கத்தி முனையால் செய்யப்பட்ட கீரல்கள் மாதிரி தோன்றுகின்றன.

பத்லைதக்காட்டைப் பாதி சுற்றிய பிறகு "A" பகுதி தலைமையில் பறக்கின்றன. "இதுவரை க்ஷேமம்தான். வீடு நோக்கிச் செல்வோம்—பகுதிகள் ஒழுங்காய் சேர்ந்து பறக்கவேணும். நெருங்கிச் செல்லுங்கள். துப்பாக்கி பிரயோகத்தை நிறுத்துங்கள்". என்று உத்தரவு போடப்படுகிறது.

மேகங்களை நோக்கி செங்குத்தாய் விமானங்கள் பறக்கின்றன. ஏதன் மத்தியில் கண்ணோக்காளர் சுறுசுறுப்பாய் வேலைசெய்து வருகிறார்கள். விமானிகள் யாவரும் ஒருங்கே கூடின பத்லைதக்காட்டிலிருந்து, வீடு போகும்வரை வழியை படத்தில் அவர் குறித்துவிட்டார். காற்று அடிக்கும் திசை முதலியது பார்த்து வழி போட்டிருக்கிறார். ஒவ்வொரு கண்ணோக்காளரும், பிரிந்துபோய் விட்டால், இம்மாதிரி வழி போட்டுக் கொள்வதுதான்.

இல்லை—இந்தத் தடவை இவர்கள் மற்ற எதிரி விமானிகளால் தாக்கப்படவில்லை. யாவரும் பத்திரமாய் தரைவந்து சேர்கிறார்கள். களைப்புத்தானோ? ஆம். ஆனால் வெகு சந்தோஷத்துடன் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு இராக்கடைசியில் விடுமுறை கிடைக்கின்றது. யுத்தமெனினும் இதை பால்ய விமானிகள் தகுதியாகவும், குஷியாகவும் இருக்கும்படி செய்யப்படுகிறார்கள்.

வெடிகுண்டு விமானத்தைப்பற்றி இத்தனை சங்கதிகள் சொல்லப்பட்டது. இனி எதிர்த்துப் போரிடும் யுத்த விமானங்களைப்பற்றிச் சொல்லுவோம்.

ஒருநாள் சாயந்திரம்தான் செய்த வேலையைப்பற்றி எதிர்ப்பு விமான பைலட்டிடமிருந்து ஒரு வரலாறு கேட்போம். "ஸ்பிட்பையர் விமானங்கள் நன்றாய் கவனிக்கப்பட்டிருந்தது; முந்திய எதிர்ப்புக்குப் பிறகு, பீரங்கி மருந்துகளால் நிறப்பப்பட்டு நன்றாய் மறுபடி யுத்த வியூகங்கள் அமைக்கப்பட்டிருந்தது. அந்த விமானங்களுக்கு சமீபத்தில் வேவுப் படைப்புக்குக் கீழ் ஒரு கூடாரம் போட்டுக்கொண்டு தங்கியிருக்கிறோம். எங்கள் விமானங்களுக்கு விதவிதமான இந்தியப் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. என் விமானத்திற்கு "ஜீம் இந்தியா" என்று பெயர். இதுதான் எங்களுக்கு கடைசியாக இரவு போடவேண்டிய சண்டை வேலை. ஏனெனில், அடுத்தவாரம் பிரான்ஸ் தேசத்தின் பேரில் பகல் சண்டைக்குப் போகும்படிக்கு உத்தரவு".

"டெலிபோன் மணி அடிக்கிறது. விமானதளபதி உஷார். நாம் நமது விமானத்திற்கு ஒரே ஓட்டத்தில்போய்ச் சேரவேணும். அவசரமாய் ஏறிக்கொண்டு, இன்ஜின்களை வேலை செய்யும்படி செய்து, டாஷ்போர்டை கடைசியாக ஒரு தடவை பார்க்கவேணும்". நாம் ஒவ்வொருவரும் தளபதிக்கு ரிபோர்ட்டு செய்துகொண்ட மேல் ரேடியோவில் "Redcalling" என்று சொல்லுகிறோம்.

3 விமானங்களடங்கிய இரண்டு பகுதிகளாய் வெகு சப்தத்துடன் கிளம்புகிறோம். இரண்டு நிமிஷத்தில் கிளம்பியாயிற்று. வெகுஜோராய் கிளம்பினோம்.

"முதல் பகுதியில் நான் ந. 2; நான் "Flight commander" க்கு அடுத்தவனாகச் சென்றேன். நாங்கள் 27,000 அடி உயரப்பறந்தோம். அடே அப்பா! என்ன குளிர்! ஆகாசம் இன்னும் பிரகாசமாயிருக்கின்றது. ஆனால் கீழே பூமி முழுவதும் ஒரே இருள்மயம். இந்தத் தடவை எங்களுக்கு ஒரு யுத்தம் கிடைக்குமென்று நம்புகிறேன்.

"Red calling Tulip" என்று இரண்டு தடவை சொல்லி நோக்கு சுற்றுங்கள் என்றான்—உடனே கீழேயிருந்து உடனே "Tulip" பேசுகிறது என்று தகவல் வந்தது—"எதிரிவிமானங்கள் தெற்கு நோக்கிச் செல்லுகின்றன—250 மைல் வேகம்—உங்கள் மார்க்கத்தை 150 டிக்கிரியில் மாற்றிக்கொண்டு 300 மைல் வேகத்தில் சென்று அந்த எதிரி விமானங்களைச் சந்தித்துத் தாக்குங்கள்"—என்றது.

உடனே 300 மைல் வேகத்தில் திசையைக் குறித்துப்போகிறோம். ஒரு நிமிஷம், 2 நிமிஷம் போகின்றன. உடனே "Red" கூப்பிட்டு "உங்கள் வலது பக்கத்தில் 30° யில் அவர்களிருக்கிறார்கள் 2 மைல் தூரம்—உங்கள் உயரத்துக்கு மேல் அவ்வாறே எதிரி விமானங்கள் ஆகாயத்தில் தென்படுகின்றன. நாங்கள் அவைகளுக்குக் கீழே செல்லுகிறோம். நாங்கள் பார்க்கப்படவில்லை.

"Red" மறுபடியும் கூப்பிட்டுச் சொல்கிறது". No. 3-க்கு அருகில் நின்று, கடைசி "போ" என்ற உத்தரவு வந்தபின் எதிரில் வந்து பீரங்கிப் பிரயோகம் செய்கிறோம். பீரங்கிகள் கர்ஜிக்கின்றன. ஒரு க்ஷணம் நான் கிடப்பதுபோல் தோன்றியது.

எதிரி ஒருவன விமானம் கவிழ்ந்துவிழுகின்றது. ஆனால் இது ஒரு பழய தந்திரமோ? என்று நினைத்து கவனித்தேன் வாஸ்தவம்தான். புது பீரங்கிகள் நன்றாய் வேலை செய்திருக்கின்றன. விமானம் வெடித்து சிதறி விழுகின்றன.

நான் மேலே கிளம்பி No. 3-க்கு நெருங்கி வந்து என்ன நடக்கிறது என்று கவனிக்க யத்தனித்தேன். "Red" சட்டென்று கூப்பிட்டு "பின் தொடர்ந்துபோ" என்றது—எதிரி விமானங்கள் மேற்கே வெகுதூரம் போகிறார்கள். சாயம் சந்தி காலத்தில் கடைசியாக ஜ்வலிக்கும் வெளிச்சமும் மங்குகின்றது.

ஆஹா! என்ன அவகாசம் கிடைத்திருக்கிறது. "Red சத்தமிட்டிருக்கிறது. "திரும்பியிருங்கள் No. 1 எதிர்த்துப் போரிடுங்கள்." நாங்கள் உடனே கொஞ்சம் கீழேயிறங்கி அவர்கள் வாலுக்குக் கீழே அமைகிறோம். என் விமானம் கொஞ்சம் தள்ளிப்போய்விட்டது. பிறகு சமாளித்துக்கொண்டு ஒரு குண்டு பிரயோகம் செய்தேன். ஒருவன் பிடிபட்டான். தவிடுபொடியாகிவிட்டது. அதன் வலது இறக்கை நொருங்கியது. அது நான் பார்த்தது. அது உறுதியாக வேறும்.

நான் என்னுடைய மெகானிக்குகளைப் பற்றி என்ன. நினைக்கிறேன். அவர்கள் மென்மைதான் என்ன, பூராவாக சமர்த்தாக உழைக்கிறார்கள். எங்களுடன் வர



வேணுமென்று பிரியப்படுகிறார்கள். வரக்கூடுமானால் நல்லது—நிச்சயமாய் அவர்களுக்கு நன்மை பயக்கும்—ஆகாச விமானப்படை வேலைக்குச் சேர இவர்கள் பிரிட்டிஷ் ஏகசக்ராதிபத்யத்தின் பல பாகங்களிலிருந்து மனிதர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் பல தொழிலிலிருந்தவர்கள். காலேஜ் பையன்கள் சிலர் கடல் படையிலிருந்தார்கள். காலாட்படையிலிருந்தவர்கள், சர்வ கலாசாலை, ஸ்கூல் ஆபீஸர்கள், அவர்கள் யாவரும் தங்கள் தேசத்திற்கு உழைக்க ஆசையுடன் முன்வந்தவர்கள். தவிர அவர்களுக்கு புது அனுபவங்கள் வேணுமென்ற அவா உடையவர்கள்.

அவர்களும் உங்களைப் போலத்தான். விமானப்படைப் பள்ளிக்கூடங்களில் சேர்ந்தபோது, தைரியமும், மனோவலிமையும் தங்களுக்கு யிருக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் பின்னால் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து அந்த குணங்கள் அதிசயமாய் அவர்களிடம் தோன்றின.

இந்திய இளைஞர்களே! இம்மாதிரி தைரியசாலியுடன் சேர்ந்து உழைக்க வேணுமானாலும், அவர்கள் பூர்வ சரிதையில் உங்களுக்குப் பங்குவேணுமானால், உங்கள் சரீரமும், மூளையும் சரியானபடி திடமாய் யிருக்கும்படி பழக்கிக்கொள்ள வேணுமானால், பின்னால் அமைதி நிலவும்போது நீங்கள் செய்யவேண்டிய காரியத்திற்கு சித்தமாக்கிக்கொள்ளவேணுமானால் இந்திய விமானப்படையில் சேருங்கள். யந்திர சாதன சங்கதிகளைத் தெரிந்துகொள்ளவும், பறப்பதற்கு சக்தி அடையவும் இதுதான் தருணம். ஆகாச விமானப்படை உத்தியோகஸ்தர்களுக்கு வேலைகற்றுக்கொள்ளும் டயத்தில் 60% குறைத்து விட்டார்கள். பிரிடனிலுள்ள வியாபாரக் கம்பெனிகள் இப்படிச் செய்திருக்கின்றன. ஏன் இந்தியாவிலும் செய்யக்கூடாது? பெற்றோர்களே! உலகம் முழுமையும் கியாதிபெற்றுவரும் இந்த விமானப்படை அங்கிகள் அணியும்படி உங்கள் குழந்தைகளை உத்சாகப் படுத்துங்கள்.

---

# ருஷ்ய-ஜெர்மன் யுத்தத்துக்கு முன்.

## "சண்டையில் கலக்காமல் இருக்க துருக்கியின் விருப்பம்"

## ஜெர்மனியுடன் ஒப்பந்தத்துக்குக் காரணம்.

## இதாலியை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அனுமதியில்லை?

அங்காராவிலுள்ள "டைம்ஸ்" பத்திரிகை நிருபர் ஜூன் மாதம் 20-ம் தேதி அனுப்பிய செய்தி (ருஷ்யாவின்பேரில் ஜெர்மனி சண்டை தொடங்குமுன்):—

ஜூன் 18உ கையொப்பமிடப்பட்ட துருக்கி ஜெர்மானிய ஒப்பந்தத்தின், காரணம், காரியங்கள், அதன் பயன்களைப்பற்றி தீவிர பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. அங்காராவிலுள்ள யூலஸ் என்ற ராஜீயப் பத்திரிகையின் நோக்கத்தை

முற்கொண்டு இந்த ஒப்பந்தமானது துருக்கி தான் சண்டையில் கலக்காமலிருக்கவும் கிரேட் பிரிட்டனுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவை நீடித்திருக்கவும், ஜெர்மனியுடன் சிநேகமாகவுமிருக்கவும் விரும்பியதின் காரணமாக ஏற்பட்டதாக கருதுகிறது.

மேற்படி ஒப்பந்தத்துக்கும் ஆரம்பம் ஜெர்மனி சென்ற மாரிகாலத்தில் தன் சைனியங்களை ருமேனியாவில் பலப்படுத்திக் கொண்டபொழுது வெளிப்பட்ட ஜெர்மன் ரீச்சின் சூழ்ச்சியிலிருந்து ஏற்பட்டது. அப்பொழுது துருக்கி ஒன்றுதான் பிரிட்டன் பக்கம் சேர்ந்து எதிரியால் துன்புறுத்தப்படும் பால்கன் நாடுகளுக்காக சண்டையிடுவது, அல்லது தான் நடுநிலைமை வகித்து ஜெர்மனியுடன் சிநேகபான்மையோடு இருப்பது என்ற இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டியதாயிற்று. அதனால், தனக்கு பிரிட்டனால் தகுந்த உதவி செய்ய முடியாமலிருப்பதால்தான் எதிர் நின்று சண்டையிட முடியாதென்று முடிவுசெய்து யோசனை கூறிய தன் யுத்த நிபுணர்களின் யோசனைப்படி அது இரண்டாவது முறையைக் கைக்கொண்டது. இந்தத் தீர்மானத்தின் முதல் பலன் ஜெர்மானியர்களால் தங்கள் அயல் நாட்டு மந்திரி வான்பேபனின் முதல் வெற்றி என்று வரவேற்கப்பட்ட பிப்ரவரி 17உ-ய துருக்கி பல்கேரிய அறிக்கை. அதன் பின் பிரஸிடெண்டு இநோநுக்கு ஹிட்லரின் இரு கடிதப் போக்குவரவுகள் நடந்தது. வான் பேபனும் ராஜ தந்திரச் செய்கைகள், இவைகள் கடைசியில் ஜூன் 18உ ஒப்பந்தத்துடன் முடிவடைந்தது.

கிரேட் பிரிட்டனிலுள்ள அநேகர்களும் துருக்கியில் உள்ள சிலரும் துருக்கியின் நடவடிக்கை ரொம்பவும் பரபரப்பை உண்டுபண்ணுவதாக நினைத்து துருக்கிக்கும் பிரிட்டனுக்கும் ஏற்கனவே ஏற்பட்ட சிநேகபான்மையின் பெருமதி என்ன என்று கேட்கலாம். அதற்குப் பதில் இன்று அடிக்கடி கேட்கப்படும் பின் வரும் கேள்வியில் அடங்கி இருக்கிறது. இராக், ஸிரியா, நாடுகளில் நிகழ்ச்சிகளை யோசிக்கவும், பிரிட்டனின் நோக்கத்திற்கு இணங்கவும், துருக்கி, யூகோஸ்லாவியா, கிரீஸ், இந்த நாடுகளுடன் சேர்ந்து சண்டை செய்து ஜெர்மனி அதையும் ஆக்கிரமிக்கம் செய்திருந்தால் நன்றாக இருக்குமா, அல்லது அது இப்பொழுது இருப்பது போல் நடு நிலைமை வகித்து ஜெர்மனிக்கு மத்திய கிழக்குப் பிரதேசங்களில் ஆக்கிரமிக்க விடாமல் ஒரு தடையாக இருப்பது நல்லதா? இதுதவிர துருக்கி, ஜெர்மன் துருப்புகளை, தனக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட நேசபான்மையால்தான் தன் ராஜ்யத்தின் வழியாகச் செல்ல அனுமதிக்கவில்லை என்று உறுதி கூறியதாக நம்பப்படுகிறது. மேற்படி ஒப்பந்தத்துக்குக் காரணமும் அநேகமாக துருக்கிக்கும் ஜெர்மனிக்குமிடையே வியாபாரம் விருத்தியடையவும், (பிரிட்டனுக்கு கடினத் தீர்க்க மூல காரணமான குரோம் தாதுவில் ஜெர்மனிக்குள்ள அவாவே). எப்படியாவது புதிய சமூகத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் துருக்கியையும் ஒன்று சேர்க்க வான் பேபன் முயற்சிக்கலாம் என்பதுமே இருக்கலாம். ஸிரியாப் பேச்சுவார்த்தைகளிலும் மேற்படி ஒப்பந்தம் கையெழுத்தான பின் மேற்படி



ஒப்பந்தத்தில் மேற்குப் பிரதேசத்துக்கும், கிழக்குப் பிரதேசத்துக்கும் ஒரு தடையாக இருக்கும். துருக்கியின் நோக்கத்தைப்பற்றி அவர் விடுத்த அறிக்கையில் உள்ள சில பாகங்களே போதுமானது.

இந்த அதிகப்படியான நோக்கங்களில் என்ன உண்மை இருந்தபோதிலும் ருஷ்யா விஷயமாக ஜெர்மன் சூழ்ச்சிகளுக்கு புதிதாக ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் எவ்விதமோ சம்பந்தமுள்ளதாக தெரிகிறது. ஜெர்மனி ருஷ்யா விஷயத்தில் வாஸ்தவத்தில் என்ன என்ன செய்ய நினைத்திருக்கிறதோ என்ற விஷயம் இன்னும் சந்தேகத்துக்கு இடம் கொடுக்கும் சமாசாரம். அது சம்பந்தமாக கிடைக்கும் செய்திகளோ முன்பின் முரணாக இருக்கிறது. ருஷ்யாவிலிருந்து வரும் செய்திகளோ கலக்கவைக்கிறது. கான்ஸ்டன்ஸா பிரதேசத்திலுள்ள ஜனங்கள் காலி செய்வதாகத் தெரிகிறது. ஈஸ்டன்புல் துறைமுகத்திலிருக்கும் ருமேனியக் கப்பல்கள் கருங்கடல் பிரயாணத்தை நிறுத்தும்படி அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியின் சூழ்ச்சி என்னவாயினும் அதில் துருக்கியின் சம்பந்தம் பூனைபோல், ஒருநாள் ருஷ்யா பேரில் யுத்தம் தொடங்கப்பட்டால் ஜெர்மன் சைனியங்களின் ஒரு சாரிக்கு ஆதரவாக இருக்கும் என்று காணப்படுகிறது.

"டெயிலி டெலிகிராப்" பத்திரிகையின் அங்காரா நிருபர் ஜூன் 2-ம் தேதி அனுப்பிய செய்தி:—

தான் செய்துகொண்ட புது ஒப்பந்தம் பேச்சு நடக்கும் பொழுதெல்லாம் ஜெர்மனிதான் சகஜமாக சொல்லும் "ஜெர்மன் வெற்றி நிச்சயம்" என்பதற்கு மாறாக "நாங்கள் ஜெயித்தாலும் சரி, தோற்றாலும் சரி" என்ற வார்த்தைகளையே உபயோகித்திருக்கிறது. முஸோலினியும் துருக்கியுடன் இது மாதிரியே தானும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டுமென்று பிரென்னர் கணவாயில் சந்தித்தபொழுது சொன்னதாக இப்பொழுது தெரியவருகிறது. ஜெர்மனி, இதாலியும் துருக்கியும் வம்சபரம்பரையாக விரோதிகள் என்றும் அவ்விதம் இருவருக்கும் ஒப்பந்தம் ஏற்பாடு செய்தால் அது ஜெர்மனியுடன் ஏற்படும் ஒப்பந்தத்திற்கு பாதிக்கும் என்று சொல்லி அதற்கு இணங்கவில்லை. இந்த அனாக்கிரமிப்பு ஒப்பந்தமானது, அனடோலியா வழியாக மத்திய கிழக்குப் பிரதேசத்துக்குள் ஜெர்மனி ஆக்கிரமிக்கும் அபாயத்தை நீக்குவதுடன் இங்கிலீஷ்காரர்களின் நிலைமையை சுலபமாக்கிவிட்டது.

---

## ருஷ்யாவை ஹிட்லர் சுலபமான ஒரு பலி எனக் கருதுவதேன்?
## ஸோவியத் எதிர்த்து நிற்க முடியாதென்று சிலர் நினைப்பதின் முகாந்திரங்கள்.
## இந் நினைப்புகளுக்கு எம்மட்டு தக்க ஆதாரம் இருக்கிறது.

'டெய்லி மெயில்' பத்திரிகையில் ஜார்ஜ் க்நூப்பேர் எழுதுவது:—

(இங்கிலாந்திலிருக்கும் ராஜீய விமர்சகர்களுள் ருஷ்யாவைப் பற்றி மிகச் சிறந்த அறிவாளி என்று டெய்லி மெயில் ஜார்ஜ் க்நூப்பெரைப்பற்றிக் கூறுகிறது).

இதர தேசங்களைக் காட்டிலும் ருஷ்யா தனக்கு எளிதில் பலியாகும் என்று ஹிட்லர் கருதுகிறார் என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது. ஜெர்மனியை ருஷ்யா எதிர்க்க முடியாது என்று எண்ண முகாந்திரங்கள் என்ன? அநேகம் இருக்கின்றன.

ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு 20 வருஷங்களாகின்றன. லெனினும் அவன் சகாக்களும் ஸ்தாபித்த அரசாட்சியில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மாறுதல்களுக்குக் காரணம் இவை:—(1) பொதுவுடமைக் கொள்கையின் சில அம்சங்களைப் பற்றி மனிதர்க்கு இயல்பாக ஏற்படும் விரோதம். (2) ருஷ்ய ஸ்வபாவம், ஐதிகம் இவைகளுக்கு மாறாக காலாந்தரத்தில் ஏற்பட்ட அநேக முரண்கள். (3) ராஜீய உலகில் தலைவர்களின் தோற்றுகள்.

புது ஆட்சி ஆரம்பத்தை விட இப்பொழுது ருஷ்யாவில் தேசீய உணர்ச்சி ஜாஸ்தி. ஆயினும் அநேக ஆக்ஷேபிக்கக்கூடிய அம்சங்களுடன் இன்றும் ஸ்டாலின் சர்வாதிகார நடவடிக்கைகளின் கொடுங்கோன்மையால் தான் ஆளுகிறான்.

ருஷ்யாவில் உண்மை சுயேச்சை இல்லை, ஜனங்களுக்கு உரிமைகள் இல்லை, 'வோட்' உரிமை வெறும் பசப்பு. ஆளும் கட்சிதான் அபேட்சகர்களை நியமிக்கலாம். ஆனதால் ஜனங்களுக்குப் பிரியமன்னியில் அநேக விஷயங்கள் வலுவந்தமாக ருஷ்ய ஜனங்கள் தலையில் கட்ட வேண்டியிருக்கிறது.

பொதுவுடமையின் எல்லா நோக்கங்கள், அனுஷ்டானங்களையும் ஸ்டாலின் கை விடமுடியாது. அப்படிச் செய்தால் அவன் அரசாங்கத்திலிருந்து விலக வேண்டி வரும். மார்க்ஸ் என்பவரின் பொதுவுடமை புஸ்தகத்தைக் கொண்டு அவன் முன்னுக்கு வந்தான். அதற்கு வியாக்யானம் செய்தே அதிகாரத்தை நிலை நிறுத்தி வருகிறான்.

ஆனால் சிவப்பு அரசாங்கத்துக்கு அநேக வருஷமாக ஒரு வெட்ட வெளிச்சமாகிக் கொண்டே வந்தது:—உலகப் புரட்சிக் கனவு தேய்ந்து தேய்ந்து கொண்டே வருகிறது; யுத்தம் நெருங்கி நெருங்கி வருகிறது. யுத்தத்தில் தேசப் பாதுகாப்புக்கு ஊக்கமளிக்கக்கூடிய மனப்பான்மை தேச பக்தி ஒன்று தான்.

தேச பக்தி என்பது பிறந்த நாட்டிற்கு அன்பு. ஜன்ம ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் அதற்கு பண்டைகாலப் பெருமைகளில் ஒரு பற்றுதல் வேண்டும்; எதிர் காலத்தில் அவைகள் ஊன்றி நிலை நிற்க வேண்டும் என்பதையும் அது வேண்டுகிறது.

இதெல்லாம் போல்ஷிவிக் கொள்கைகளுக்கு விருத்தம். பொதுவுடமைக் காரர்களுக்கு உலக சரித்திரம் 1917 ல்—அதாவது ருஷ்யப் புரட்சி ஆரம்பித்த பொழுதுதான்,—துவக்குகிறது.

ருஷ்யாவின் இன்றைய சோகநாடகம் அளிக்கும் காட்சி இது:—திடனமும் உறுதியும் வாய்ந்த ஸ்தாபனங்கள் இன்னும் முற்றி பூரண தசைக்கு வரவில்லை. ஒளிக்கும் சர்வதேச பொதுவுடமைக்கும் வளரும் தேச பக்திக்கும் போராட்டத்தின் நேர நிலை, பொதுவுடமைக் கொள்கைகளை சில இரக்க மண்ணியில்



ஜனங்கள் மீது அமுல் நடத்துவது, கொடுங்கோன்மை, இவைகளால் ஜனங்களின் ஆன்மீக அல்லது சமூக உணர்ச்சிகளை வளர்க்கக்கூடிய யாதொரு உற்சாகமும் இல்லாத குறை கண்கூடாகக்கிடக்கின்றன.

ருஷ்யாவில் பட்டினியால் மாண்டவர் அநேகம். முன்பும் இன்றும் வயிறார உண்ண உணவின்றி லக்ஷக் கணக்கானவர் காலங் கழிக்கின்றனர்.

ஆனால் ஹிட்லரின் ஆக்கிரமிப்பு தேசபக்தி, தேசப்பெருமை, உற்சாகம் இவற்றைத் தட்டி எழுப்பிவிட்டது. இவைகள் ஸ்டாலினை விட்டு சைனியத்தில் புகலாம். சைனியத்தின் உத்தியோகஸ்தர்கள் பேருக்கு பொதுவுடமைக் காரர்களாயிருக்கலாம்; ஆனால் சைனியம் புரியும் வேலைகள் தேசியமானவை. படைகளின் மீது அடிக்கடி அரசாங்கம் ராஜீயக் கமிஸார்களின் நாட்டாண்மையை தலையில் கட்டியிருக்கிறது. மார்ஷல் கொச் செவ்ஸ்கியின் படுகொலையின்போது சர்வாதிகாரி ஸ்டாலின் உத்தரவின்பேரில் உத்தியோகஸ்தர்களில் முக்கால் வாசி அவனுடன் கொல்லப்பட்டனர்.

ஆனதால் தற்போதைய பிரச்னை இது:—சென்ற 4 வருஷங்களுக்குள் புது உத்தியோகஸ்தர்களின் பயிற்சி திருப்திகரமாக இருக்கிறதா?

பொதுவுடமை ஆட்சியின் சீர்கேட்டால் ருஷ்யப் பொருளாதார நிலைமையும் சீர்கேடாகி விட்டது. ஆயினும் யுத்தத்தை எதிர்பார்த்து ஏராளமான உணவுப்பொருள்கள், எண்ணெய் இவைகள் சேமிக்கப் பட்டிருக்கின்றன. ஏராளமான ஆள்கள், விமானங்கள், டாங்குகள், தளவாடங்கள்—இவைகள் முதல் தரமாக இல்லாவிட்டாலும்—சேகரிக்கப் பட்டிருக்கின்றன.

ஆனதால் ருஷ்யா வெகு நாள் எதிர்க்க முடியாதென்று ஹிட்லரின் கட்சி நிச்சயம் வாய்ந்ததாக இல்லாவிட்டாலும், நடைபெறக்கூடியதென்பதில் பிசகில்லை. அவன் தாக்குவது வெகு காலம் நோய்பிடித்து சமீபத்தில்தான் ஸ்வஸ்தமாகிக்கொண்டு வரும் ஒரு நாடு.

ஆனால் ருஷ்யர் ஒரு பலமும் புத்தியும் படைத்த நாட்டினர். பண்டைநாளில் அவர்கள் சாதித்தது மட்டுமல்லாமல், கஷ்டம் நிறைந்த தற்காலத்திலும் அவர்கள் சாதித்திருப்பதே அவர்களுடைய ஆண்மைக்கு அறிகுறி.

சாயம் வெளுத்த பழைய பூச்சிக்கூட்டிலிருந்து ஒரு புத்துயிர்பெற்ற இளம் ருஷ்யா வெளிக்கிளம்புகிறது. அது புது நோக்கங்களை நாடுகிறது.

இம்மாதிரி ஜனங்கள் தான் இதுவரை வாய்க்காத சத்ருக்களில் மிக்கபலிஷ்டமானவர்களை எதிர்த்து நிற்கிறார்கள். சென்ற 25 வருஷங்களாக அவர்கள் மிக்க சிரமத்தின் பேரில் செய்த ஆராய்ச்சிகளை சீர்தூக்கும் காலமும் இதுவே. இவைகளின் பயனாக, மிக்க கஷ்டங்களுக்கிடையே, அவர்களின் ஆன்மீக சக்திகள் வளர்ந்து, ஜெர்மன் ஆக்கிரமிப்புக்கு அவர்கள் அணைபோட்டுத் தடுத்தாலும் தடுக்கலாம்.

முடிவில், நேசநாடுகளின் ஒத்தாசையால், ஜெர்மன் வெட்டுக்கிளிகள் ஒழிக்கப்படுவோர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த வேலை காலம் பிடிக்கும்.

என்றும், சில காலம் ருஷ்யாவின் பெரும் பகுதியோ அல்லது முழுவதுமோ ஜெர்மனியின் வசத்தில் இருக்கக்கூடும் என்றும் எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமானது.

இந்த விளைவை ஜெர்மன் சைனியத்தால் மட்டில் உண்டுபண்ணுவதாக ஹிட்லருக்கு எண்ணமில்லை. ருஷ்யாவின் மனப்பான்மையிலும் அரசாங்கத்திலும் இருக்கும் நிலையின்மையை அனுகூலமாகக்கொண்டு, அநேக வருஷங்களாகத் தயாரித்து வரும் ருஷ்யக் குவிஸ்லிங்குகளைக் கொண்டு (துரோகிகள்) தன் பதில் வெட்டிக்கொள்ளுகைகளை ருஷ்யாவிலும் புகவிட்டுப் பார்க்கிறான்.

இவர்களுள் முக்கியமானவர்கள் ருஷ்ய ஸ்தாபனத்தின் தலைவன் ஜெனரல் பிஸ்குபிஸ்கியும், யூக்ரேனிய ஸ்தாபனத்தின் தலைவன் ஜெனரல் ஸ்கோரோபாட்ஸ்கியும்.

ஜெர்மன் சைனியத்தால் நிலை நிறுத்தப்படும் இந்தப் பொம்மைகள் ஜெர்மன் பொருளாதார, அரசாங்க நிபுணர்களின் ஒத்தாசையைக்கொண்டு, ருஷ்ய ஜனங்களுக்கு முன்னைக் காட்டிலும் சுயேச்சை வாய்ந்த ஒரு ஆட்சியையும், முன்னைக் காட்டிலும் வசதி சௌகரியங்களையும் அளித்து, தற்கால சர்வாதிகார கோரங்களையும் போக்குகளையும் காட்டிலும் கவர்ச்சியுள்ளவைகளை சமத்காரமாக பரவுவார்களாகில், அவர்களுக்குள் சற்று ஊன்றிக்கொள்ளலாம்.

ஆயினும் தன் தாய் நாட்டுக்காக ரத்த பலி கொடுக்கும் சைனியத்தில் ஆவிர்பவித்திருக்கும் ருஷ்யாவின் ஆன்மா, அழியாது. அது ஜெர்மன் கொடிய ஆட்சியை அங்கீகரிக்காது.

---

## ருஷ்யாவின் பொருளாதாரத்துக்கு யூக்ரேனின் முக்கியத்வம். அதன் விவசாய, தொழிற்சாலைகளின் பிரயோஜனம். நாஸிகள் பிரவேசிப்பதினின்றும் ஏற்படக்கூடிய பலன்கள்.

*ருஷ்ய-ஜெர்மானிய யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு பகுதியில் மான்செஸ்டர் கார்டியனுடைய ராஜ்யதந்திர நிருபர் எழுதியது.*

ஜெர்மானியர் பொருளாதார முறையில் யூக்ரேனிலும் தெற்கு ருஷ்யாவிலும் உள்ள ஐசுவர்யங்களைத் தங்களுக்கு உபயோகமுள்ளதாகச் செய்து கொள்ளுவதற்கு முன் அவ்விடங்களில் புகுந்து விட்டால், ருஷ்ய பொருளாதாரத்துக்கு இந்த பிரதேசங்களின் பிரயோஜனமில்லாமல் போய்விடும். ஸோவியத் நிர்வாகிகள் இதைப் பொறுக்கமாட்டார்கள். யூக்ரேனைக் கைவிட்டு விடுகிறது என்ற ஏற்பாட்டின் லாப நஷ்டங்களை மதித்துப் பார்த்தாலும், இம்மாதிரியான வேண்டுகோளை ஆயுத பலத்தைக்கொண்டு எதிர்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யக் கூடியதல்ல.

யுத்த முயற்சிகளுக்காக யூக்ரேனிலுள்ள ஐசுவர்யங்கள் ஜெர்மனிக்குத் தேவையென்பது ஸ்பஷ்டமானது. யுத்தத்தின் எதிர்காலப் போக்கை கவனித்தால் ஜெர்மனி இவைகளை அடைய ஏற்பாடு செய்யவேண்டித்தான் வரும். ஆனால்,



ஜெர்மனியின் எண்ணங்கள்—இவைகள் பொருளாதார முறையில்தானென்றும் ஜெர்மன் சாம்ராஜ்ஜியத்தின் ஆட்சிக்குள் யூக்ரேனையும் சேர்த்து விடவேண்டுமென்றும் அவர்கள் வெளிப்படையாய் இது வரையில் சொல்லாத போனாலும் ருஷ்யாவின் க்ஷேமத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவை. ருஷ்யாவிலுள்ளவர்களை நாசம் செய்தாலொழிய இந்த எண்ணங்கள் ஜெர்மனிக்குக் கிட்டாதென்பது நிச்சயம். இதர வல்லரசீர்களை விட, ஜெர்மனியின் கோரிக்கைகளுக்கு உடன் காலத்திலேயே இணங்கி, ருஷ்யா தற்கொலை செய்து கொள்ளுமென்று எதிர் பார்க்கலாமா?

யூக்ரேன் பிரதேசம், முக்கியமாக ருஷ்யாவின் களஞ்சியம் என்று எல்லோராலும் கருதப்பட்டாலும், விவசாய முறையைக் காட்டிலும் தொழில் அபிவிருத்தி முறையில் அது ருஷ்யாவுக்கு முக்கியமானது. யூக்ரேனில் விளைந்த தானியத்தின் சேமிப்பு 19,40,00,000 குண்டால்ஸ். அதாவது ருஷ்யா பூராவிலுமுள்ள விளைபொருள்களில் 100-க்கு 23 பங்கு என்று கணக்கிடப்படுகிறது. அறுவடை ஜூலை மீ துவக்கத்திலிருந்து தெற்கு வெளிகளில் ஆரம்பமாகிறது. இது பெரும்பாலும் யந்திரங்களால் நடத்தப்படுகிறது. விளைவு நன்றாயிருக்கக் கூடுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. ருஷ்யாவின் சர்க்கரைவள்ளிக் கிழங்கின் 100-ல் 70 பாகமும் எண்ணெய் விதைகளின் பெரும்பாகமும் யூக்ரேனில் விளைவாகின்றன.

சென்ற பதினைந்து வருஷங்களில் யூக்ரேனிலுள்ள தொழிலாளிகளின் சங்கியை இரட்டித்து விட்டது. அங்கு 3,00,00,000 ஜனங்களிருக்கிறார்கள். ஆகையால் ருஷ்யா ராஜ்ஜியத்தில் யூக்ரேன் மிகவும் அதிகமான ஜனநெருக்கமுள்ளது. ஜனங்களில் 3-ல் 1 பாகத்துக்கு மேலாகவே தொழிலபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள். யூக்ரேனில் ருஷ்யாவுக்கு வேண்டிய இரும்பு உலோகத்தில் 100-க்கு 3 பாகமும், எஃகில் 100-க்கு 43 பாகமும், காய்ச்சப்பட்ட உலோகத்தில் 100-க்கு 48 பாகமும், அலுமினியத்தில் 100-க்கு 72 பாகமும், மாங்கனீஸில் 100-க்கு 35 பாகமும் உண்டாகிறது. ருஷ்யாவிற்குத் தேவையான நிலக்கரியில் 100-க்கு 60 பாகம் யூக்ரேனிலிருந்து கிடைக்கிறது. கோக் நிலக்கரியை அடைவதற்கு ருஷ்யாவின் தொழிற்சாலைகள் யூக்ரேனைத்தான் நம்பிக்கொண்டிருக்கின்றன.

யூக்ரேனிலுள்ள கனமானதும், ரஸவாத சம்பந்தமான தொழிற்சாலைகளும் ருஷ்ய பொருளாதாரத்துக்கு முக்கியமானவை. அங்கு உயர்தரமான எஃகு சாலைகளும் ஐரோப்பாவிலுள்ள பெரிய மின்சார உற்பத்தி சாலைகளுமிருக்கின்றன.

ருஷ்யாவின் யுத்த தளவாடங்கள் உற்பத்திசெய்யும் தொழில்களுக்கு யூக்ரேன் ரொம்பவும் முக்கியமானது. ருஷ்யாவிலுள்ள உயர்தரமான தொழிற்சாலைகள் யூக்ரேனிலிருக்கின்றன. மிகவும் முக்கியமானது ஸிபொரோஷி என்னுமிடத்திலுள்ள எஃகுசாலை. இதில் கவசங்களுக்கு வேண்டிய மின்சார சம்பந்தமுள்ள எஃகுகள் உற்பத்தி செயயப்படுகின்றன. பின்னும் இங்கு ஒரு பெரிய அலுமினிய தொழிற் சாலையுமிருக்கிறது. அந்த தேசத்திலேயே கியாதிபெற்ற உலோக உற்பத்திசெய்யும் சாலைகள் வொர்ஷின்ஸ்கிலும், அஸாவ் ஸ்டாலிலுமிருக்கின்றன.

## ருஷ்யாவில் நிகழ்ச்சிகள் எவ்விதம் நடைபெறும்.

## பூகோள அமைப்பின் முக்யத்வம்.

## ருஷ்யாவுக்கு நீடித்த யுத்தத்திலிருந்தும் ஏற்படக்கூடிய பலன்கள்.

## ருஷ்யாவின் தீர்க்காலோசனையுள்ள ஏற்பாடுகள்.

ருஷ்ய யுத்தத்தைப்பற்றி ந்யூஸ் க்ரானிகிளின் ராணுவ நிருபர் ஜூன் 24 தேதியன்று எழுதுகிறார்.

சம்பவங்களின் போக்கைப்பற்றி ஜோஸ்யம் சொல்லுவதற்கு இப்பொழுது சரியான காலமில்லை. ஆயினும் ஸ்பஷ்டமாக இரண்டு குறிப்பான விஷயங்கள் புலப்படுகின்றன. இவைகள் பூகோள அமைப்பினின்றும் ஏற்படுகின்றன. நிலை அடிக்கடி மாறிவரும் இச்சமயத்தில் பூகோள நிலைதான் சாச்வதமானது.

ப்ரெஸ்ட்-லிட்வாஸ்க்கை மத்ய ஸ்தானமாக வைத்துக் கிழக்கே கவனியுங்கள். இந்த மத்தியப்பிரதேசத்துக்கு வடக்கேயும் தெற்கேயும் 100 மைல்கள் விஸ்தீர்ணத்துக்கு பிரிபெட் சதுப்பு நிலங்களிருக்கின்றன. இந்த சதுப்பு நிலங்கள் கிழக்கே நூற்றுக்கணக்கான மைல்கள் பரவுகின்றன. இவ்விடத்தில் எதிரி பிரவேசிக்க முடியாது.

ஜெர்மனியின் எதிர்ப்பு இரண்டு முனைகளிலிருந்து ஏற்படவேண்டும். பிரிபெட் சதுப்பு நிலங்களுக்கு வடக்கேயுள்ள பால்டிக் நாடுகளைக் குறித்து வட பாகத்தில் ஒரு எதிர்ப்பும், தெற்கு பாகத்தில் பிரிபெட் சதுப்பு நிலங்களுக்குத் தெற்கே பக் நதி வழியாகவும் பிறகு தென்மேற்கே நீஸ்டர் நதி பள்ளத்தாக்கு வழியாக 500 அல்லது 600 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒடெஸ்ஸாவைக் குறித்தும் இரண்டாவது எதிர்ப்பு ஏற்படக்கூடும்.

இவ்விடத்தில் பெஸ்ஸரேபியாவைத்தாக்கி அதைப் பிடித்துக்கொள்ளுவதின் மூலம் ருமேனியப்படைகள் ஜெர்மனியோடு கலந்துகொள்ள முயற்சி செய்யும்.

மனோராஜ்ஜியத்தில், ஜெர்மானியர்கள், வடக்கே இருந்து தெற்கே கீவ் வழியாகச் செல்லும் நீபர் நதிக் கரையை கிழக்கு எல்லையாக உள்ள பிரதேசத்தை முதலெடுப்பில் ஆக்கிரமிப்பதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

இதை அடைவதற்கு, பிரிபெட் சதுப்பு நிலங்களை, வடக்கேயும், தெற்கேயும் செல்லுவதன் மூலம் சுற்றி வளைத்து, அதன் மூலம் யூக்ரேனின் மூன்றில் இரண்டு பாகத்தை ஆக்கிரமித்தும் விடுவார்கள்.

ருஷ்யாவை வென்றுபின்னம் செய்வதற்கு இது போதாதென்று ஜெர்மனி நினைத்தால், அவர்கள் காகேஸஸ் மலைகளுக்குச்செல்ல இரண்டாவது எதிர்ப்பை ஆரம்பிக்கத்தயாரித்துக்கொள்ளவேண்டும். இரண்டாவது எதிர்ப்பின் முடிவு டான், வால்கா நதிப்பிரதேசங்கள்.

இந்த விவரணம் ஜெர்மனியின் ஏற்பாடுகளுக்கு ஒத்ததாக இருக்கக்கூடும். இப்பேற்பட்ட வெற்றிகளை அடைவதற்கும் அடையக்கூடாதற்கும் ஜெர்மனிக்கு



எவ்வளவு சந்தர்ப்பம் அல்லது அசந்தர்ப்பம் உண்டென்று சொல்ல ஒருவராலும் முடியாது. ஜெர்மனிக்கு நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக முடிந்துவிட்டாலும், மாஸ்கோ விழும் வரையிலும், டான், வால்கா நதிகளுக்கு அவர்கள் வரும் வரையிலும், ருஷ்யா இறுதியில் தோற்கடிக்கப்படக்கூடிய அபாயத்திலிருக்கிறதென்று ஒப்புக்கொள்ள மாட்டேன்.

இந்த நதிகளுக்குச் செல்லுவதென்றால் ஏராளமான பாதுகாப்பு உள்ள 1500 மைல்கள் கொண்ட பிரதேசத்தை ஜெர்மனி கடக்க வேண்டும். 1500 மைல்கள் கடந்து செல்லுவது போக்கு வரவு மார்க்கங்கள் இல்லாத பிரதேசத்தில் செல்லுவதோடு முன் செல்லச்செல்ல சாமான்களின் ஸப்ளை வரவர சிரம ஸாத்யமாகவும் அபாயகரமாகவும் ஏற்படக்கூடியதாகவும் மாறிவிடும்.

இவ் விஷயத்தில் ருஷ்யாவிலும் சென்ற வருஷத்தில் பிரான்ஸிலும் உள்ள நிலைமையின் வித்யாசங்கள் ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றன. பிரான்ஸில் பெட்ரோல், மற்ற எண்ணெய்கள் ஏராளமாய்க் கிடைத்தன. இவைகளின் ஆதாரத்தைக் கொண்டுதான், ஜெர்மன் பான்ஸர் துருப்புகள் வெற்றிகரமாக முன்னேற்ற மடைந்தன.

இப்பொழுது ஜெர்மனி ஜயிப்பதாக உத்தேசித்திருக்கும் தேசத்தில் இம் மாதிரியான நிலைமை இருக்கவில்லை.

ஜெர்மானியர்கள் பிரான்ஸிலுள்ள ஐசுவர்யங்களை உபயோகப்படுத்திக் கொண்டார்கள். ருஷ்யாவில் அவ்விதம் ஜீவிக்க முடியாது. முன்னேறும் துருப்புகளுக்குத் தேவையான ஸப்ளைகளெல்லாம் பின்பக்கத்திலிருந்து கொண்டு வரவேண்டியவைகள்தான்.

நான் சொன்ன விதமாகப் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும், தீர்க்க ஆலோசனையின்பேரில் ஐரோப்பாவில் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதைக் குறைத்தும், வால்கா நதிக்கு அப்பால் கிழக்கேயும் முக்கியமாக தூரக்கிழக்கில் யூரல் மலைகளுக்கு அப்பாலும் தொழிற்சாலைகளை நிர்மாணம் செய்ய ஏற்பாடுகளும் ருஷ்யா செய்து வந்திருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த ஏற்பாடுகள் வெகுவாய்ச் செய்து முடிந்து விட்டன. முதலெடுப்பில் தோல்வி ஏற்பட்டாலும் நீடித்த காலத்தில் ருஷ்யாவிற்கு வெற்றியேற்படக் கூடுமென்று நம்புவதற்குக் காரணங்கள் இதினின்றும்தான் ஏற்படுகின்றன.

# கதம்பம்.

1. "இந்த யுத்தம் நம்முடையதுதான். நாஸி ஆட்சி நமக்கு விரோதி. நம்முடைய யுத்தமானதால் நாம் யுத்தம் செய்யவேண்டும். நாம் ஆயுதங்களை மட்டும் கொடுத்து பிரிட்டிஷாரை உயிர் துறக்கும்படி செய்வது யோக்கியமானதல்ல."

(நியூயார்க் போஸ்டு, ஜூலை 10).

2. "நம்முடைய நம்பிக்கைகளும், நம்முடைய நோக்கங்களும், நம்முடைய எண்ணங்களும், எல்லாம், ஜனநாயகத்துக்காக சண்டை செய்கிறவர்களுக்கு வெற்றிகரமாக இந்த கோரமான யுத்தம் முடிவடையாத பக்ஷத்தில், தவிடு பொடியாக ஆகிவிடும்."

(இந்தியா கவர்ன்மெண்டின் வியாபார இலாகா மெம்பரான கனம் ஸார். ஏ. ராமஸ்வாமி முதலியார், மதராஸ் ஜூலை 12).

3. "இந்தியாவின் யுத்த முயற்சியில் இந்தியர்களும் ஐரோப்பியர்களும் ஒருமனதுடனிருக்கிறார்கள். இதற்கு நல்ல முகாந்திரமிருக்கிறது. இருவரும் ஒரே படகிலிருக்கிறோம். இதை ஹிட்லர் டார்பிடோ செய்தால் நாம் இருவரும் மூழ்கி விடுவோம்."

(கிழக்கு நாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் ஸப்ளை கௌன்ஸிலின் இந்திய பிரதிநிதியான மிஸ்டர் M. S. A. ஹைதாரி ஜூலை 12).

4. "ஒரு வருஷத்துக்கு முன்னும் இன்றும் நாம் ஒரே ஒரு சத்துருவைத்தான் மதிக்கிறோம். எந்த வேஷத்திலும் அவனைக் கண்டு பிடித்து விடுவோம். எல்லாவிதமான ஆயுதங்களாலும் அவனை எதிர்ப்போம். இறுதியில் எதிரி தோல்வியடைந்த பிறகுதான் நம்முடைய அலுவலைப் பூர்த்தி செய்துவிட்டதாக நாம் கருதக்கூடும்."

(பிரெஞ்சு தேசிய இலக்கொண்டாட்ட தினத்தன்று, பிரிட்டனுடைய பர இலாகா காரியதரிசி, மிஸ்டர் அந்தோனி ஈடன், ஜூலை 14).

5. லண்டனிலுள்ள ஜனங்கள் பகோபித்து, ஹிட்லருக்கு அறிவிப்பார்கள்: "இவ்வுலகத்தில் எல்லாவிதமான குற்றங்களையும் நீ செய்துவிட்டாய். எந்த இடத்தில் உனக்குக் குலைச்சலான எதிர்ப்பு ஏற்பட்டதோ அங்கே நீ மிகவும் கொடுமை விளைவித்திருக்கிறாய். கண்மூடித்தனமாய் வெடிகுண்டுகள் வீச ஆரம்பித்தது நீதான். யுத்தம் ஆரம்பமானபொழுது வார்ஸாவின் கோரத்தை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறோம். உன்னுடைய கொடுமையான பழக்கங்கள் பெல்கிரேட்டில் நடந்த கோரமான கொலைகளிலிருந்து மறுபடியும் ஞாபகத்துக்கு வருகின்றன. ருஷ்யாவின் ஜனங்களை ஆடுமாடுகளைப்போல் நீ நடத்துவதை



நாங்கள் அறிகிறோம். அவர்களிடம் எங்களுடைய பூர்ண அனுதாபத்தை நாங்கள் காட்டுகிறோம். உன்னுடனாவது, உன்னுடைய இழிவான முறைகளில் ஈடுபட்டிருக்கும் உன் பரிவாரங்களோடாவது சமாதானமாவது அல்லது பேச்சுவார்த்தையாவது நாங்கள் செய்யமாட்டோம். உன்னால் முடிந்தவரையில் செய், எங்களால் முடிந்ததை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்."

(மிஸ்டர் சர்ச்சில், ஜூலை 14).

6. "என்னுடைய அன்பர்களான துருப்புகளும், மாலுமிகளும், விமானிகளும் வலுவுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், விச்வாசமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நம்முடைய கஷ்டங்களின் முடிவில் உலகத்தில் பெரும் கியாதி நமக்கு கிடைக்கப்போகிறது—அதாவது சரணடையாத மனிதர்களுக்குரித்தான கௌரவம்."

(தளகர்த்தர் டி. காலி, ஜூலை 14).

7. "எதிரியை தூரத்திலே நிலைநிறுத்தி வைக்கவேண்டும். அவனிருக்கும் இடங்களிலெல்லாம் அவனைத் தாக்கவேண்டும்."

(ஜூலை 2-ல் வெளியானது. மத்தியக்கிழக்கு நாடுகளிலிருக்கும் துருப்புகளுக்கு கமாண்டராக நியமிக்கப்பட்டு இந்தியாவைவிட்டு விலகும்பொழுது ஸர் கிளாடி ஆகின்லெக் கொடுத்த பிரிவு அறிக்கை).

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### 1941-ம் ௵ ஜூன்௴ 30-௳ முதல், ஜூலை௴ 6-௳ வரை.

### நடப்பையொழியப் பிரசாரமல்ல.

ஹாஹா பிரபு ஜூலை 6-ம் தேதியன்று வெளியிட்ட விசித்திரப் பொய் அறிக்கைப்படி ஜெர்மன் சைனிய இலாகா, ருஷ்ய சைனிய இலாகாவைப்போல் நடப்பை அறிவிக்காத பிரசாரங்களைச் செய்யாதென்று சொல்லப்படுகிறது.

பிரிடிஷ் அறிக்கை இலாகாவின் கொள்கைப்படி உண்மை சமாசாரத்துக்கும் பிரசாரத்துக்கும் வித்தியாசமென்பது கிடையாது. நடப்பைச் சொல்லுவதேதான் பிரசாரம். ஜெர்மனியிலோ நடப்பு வேறு, பிரசாரம் வேறு. இதுவரையில் இது யாவரும் தெரிந்த விஷயமாயினும் இப்பொழுதுதான் ஜெர்மனியே இதை ஒப்புக்கொண்டது.

ஜூலை 2-ம் தேதி அறிக்கையில் ஜெர்மன் ராணுவ நிபுணர் சொல்லுவது:—

'உலக சரித்திரத்திலேயே முக்கியமான சண்டை பியாலிஸ்டாகுக்குக் கிழக்கே நடந்து, எதிரி அழிக்கப்பட்டான். ஐரோப்பா முழுவதும் சோவியட் (சமதர்ம)க் கொள்கை யென்ற நெருப்பைப் பரவச் செய்ய முன்னணியாய் வைத்திருந்த ருஷ்யப் படை ஜெர்மனியைப் பின்னால் தாக்க நினைத்தது வீணாய்ப் போய், சைனியமும் சின்னாபின்னமாய்விட்டது.'

இது செய்தியா? பிரசாரமா? இதிலிருக்கும் செய்தி கடுகளவுதான்—அதாவது, பியாலிஸ்டாக்கில் ஒரு சண்டை நடந்தது என்பதுதான். இதை ஆங்கிலத்தில் 62 வார்த்தைகளாக கயர் திரித்துப் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. இதில் 50 வார்த்தைகள் அநாவசியம்.

## விமானப்போர்.

ஒருநாள் பகல் எதிர்ப்பில வட பிரான்ஸின்மேல் பிரிட்டன் படையெடுத்த போது 25 வெடி விமானங்களுக்குத் துணையாக 200 சண்டை விமானங்கள் வந்ததிலிருந்தே ஜெர்மன் விமானங்களுக்கும், ஜெர்மன் பீரங்கிகளுக்கும் பிரிட்டிஷ் விமானங்கள் பயப்படுவது ருஜுவாய்விட்டதாக ஜூலை 4ல் ஜெர்மனி அறிவிக்கிறது.

பகற்காலத்தில் வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் சேர்ந்து நாள் தவறாது இந்த கடிக்கோட்டையில், பிரிட்டிஷ் விமானப்படை எதிர்த்து வருகிறது. இதுவரையில் பிரிட்டனுடைய கடற்கரையில் நடந்துவந்த போர் இப்பொழுது ஐரோப்பிய கண்டத்தில் கடற்கரைக்கு 60 மைல் தள்ளி உள்ளே நடக்கிறது.

பிரிட்டிஷ் சண்டை விமானங்கள் துணை செல்லுவதோடு, ஜெர்மன் நிலப்படைகளையும், சில பீரங்கிகளையும் தாக்குகின்றன.

இப்பொழுது ஜெர்மானியரின் எல்லைக்குள்ளேயே விமான மல்-யுத்தம் நடந்தாலும், சென்ற இலையுதிர் காலத்தில் பிரிட்டனில் நடந்த சண்டையில் ஜெர்மனிக் கேற்பட்ட நஷ்டத்துக்குக் குறையாமலே இப்பொழுதும், பிரிட்டிஷ் நஷ்டத்தோடு ஒப்பிட்டுப்பார்க்க, ஒரே ரீதியாய் அதிகமாய் ஏற்பட்டுவருகிறது.

## ஜெர்மனியின் விமான நஷ்டம்.

ஜூன் மாதத்திய பின் இரண்டு வாரங்களில் வட பிரான்ஸின்மேல் நடந்த பிரிட்டிஷ் விமான எதிர்ப்பினால் ஜெர்மனிக்கு 157 சண்டை விமானங்களும், ஒரு கடல் விமானமும் நஷ்டம்; பிரிட்டனுக்கு நஷ்டம் 48 சண்டை விமானங்களும், 6 வெடி விமானங்களும்தான். இந்த மாதத்து முதல் 5 நாட்களில் அதே பிரதேசத்தில் நடந்த போரில், ஜெர்மனிக்கு 51 சண்டை விமானங்களும், பிரிட்டனுக்கு 20 சண்டை விமானங்களும், 11 வெடி விமானங்களும் நஷ்டம்,



இதிலிருந்து பிரிட்டிஷ் விமானங்கள் நிர்ப்பயமாய் சண்டை செய்யக்கூடிய நிலைமையிலிருப்பது வெளியாகிறது.

## அராபியர்களும் யூதர்களும்.

இஸ்டாம்பூலிலிருந்து பாக்டாடுக்கு வந்த சஞ்சாரிகள், யாரோ, அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் பிரமாதமான கலகம் நடப்பதாகச் சொன்னதாக ஜெர்மன் ரேடியோ ஜூலை 2-ம் தேதியன்று ஒலிபரப்பிற்று.

ஆனால் 1939 செப்டம்பரில் பாலஸ்டின் என்ற பத்திரிகை 'இந்த உலக யுத்தம் நடக்கும் போது உள்ளூர் மனஸ்தாபங்களை பாராட்டாது, அராபியர்கள் யுத்தத்தில் கலந்து கொள்ளுவார்கள்; நியாயக்கக்ஷி வெற்றி பெறும்போது, அராபியர்களுக்கு ராஜ விசுவாசத்தோடு நடந்து கொண்டதற்குப் பலன் கிடைக்கும் என்று எழுதியதை இப்பொழுது ஞாபகப்படுத்தவேண்டியிருக்கிறது.

# B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

## பிரிட்டனும், சிறிய தேசங்களும்.

பெர்லின் ரேடியோவிலிருந்து ஜூலை மாதம் முதல் தேதி ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பிய செய்திதான், டாக்டர் கோயபல்ஸ் இது வரையில் சொல்லியதைவிட மகா புளுகு. இங்கிலாந்து தேசம் பல சிறிய தேசங்களுடைய சுதந்திரத்தைப் போக்கடித்து அடக்கி ஆண்டுகொண்டிருக்கிறதாம். இம்மாதிரி கொஞ்சமேனும் ஆதாரமில்லாத பெரும்புளுகை அதிலும் நாஸி ஜெர்மனி சொல்லுவது மிகவும் பொருத்தமானதானதாக இல்லை. இதே நாஸி ஜெர்மனி 12 சிறிய தேசங்களை போருக்கிழுத்து அத்தேசங்களில் பலரைக்கொன்று ரத்த வெறி பிடித்து நிற்கிறது. இத்தேசங்களில் சுதந்திரமென்பதையே பார்க்கமுடியாது. ராஜ்ஜியத் துறையிலோ, பொருளாதாரத் துறையிலோ, மத விஷயங்களிலோ, ஏன் ஒவ்வொருவனுடைய சொந்தக் காரியங்களில்கூட சுதந்திரம் என்பது கிடையாது. ஆனால் பிரிட்டனோ, "கிரீஸ் (Greece), பெல்ஜியம் (Belgium), அமெரிக்காவிலிருக்கும் ஸ்பானிய குடியேற்ற நாடுகள், முஸ்லீம் நாடுகளான இராக் (Iraq), எகிப்து (Egypt), இதாலி (Italy) இந்நாடுகளின் முன்னேற்றத்தில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பது உலக சரித்திர மூலமாய்த்தெரியும். அல் மாஸ்ரி (*Al Masri*) என்னும் எகிப்தியப்பத்திரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது "வெரும் பேச்சிலே மாத்திரமல்லாமல், காரியத்திலும் பிரிடன் தான் கேவலம் மண்ணாசைக்காகவும், பொன்னாசைக்காகவும் சண்டைப்படுவதில்லை, பிரதேசங்களுடைய உரிமைகளுக்காகவும் சுதந்திரத்துக்காகவுந்தான் சண்டை செய்கிறது என்பதை நிரூபித்துவிட்டது. அபிஸீனியா (Abyssinia)வை

இதாலியரிடமிருந்து விடுவித்த பிறகு, ஸிரியா (Syria) வினுடையவும் லெபான (Lebanon)னுடையவும் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக போரிடும் சுதந்திர பிரெஞ்சுப் படைக்கு பிரிடன் ஒத்தாசை செய்கிறது."

## பெர்லின் ரேடியோவின் இந்துஸ்தானி பாஷையில் ஒலிபரப்பு.

### ஜூலை மாதம் 4-ம் தேதி, 1941.

"இஸ்டான்புல்(Istanbul)லிருந்து மிகவும் நம்பத்தகுந்த இடங்களில் இருந்து ஸ்வீடன் (Sweden) தேசத்துப் பத்திரிகையான ஆப்டான்ப்ளாடெட் (*Aftonbladet*)க்கு பின் வரும் செய்தி கிடைத்திருக்கிறது. இரான் (Iran) தேசத்தின் வழியே இந்தியாவிற்காவது, எகிப்திற்காவது செல்ல ஸ்டாலின் (Stalin), மாலடோவ் (Molotov), தளகர்த்தர் வொரோஷிலாவ் (Marshal-Voroshilov) முதலிய ருஷ்ய பிரமுகர்கள் உத்தரவு கேட்டிருக்கிறார்கள்."

## ஜெர்மன் புளுகு.

முன் காலத்தில் மதத்தைக் காப்பாற்றச் சண்டைக்குச் சென்றவர்களைப்போல் இப்பொழுது ஜெர்மானியர்கள் வேஷம்போடுகிறார்கள். ருஷ்யாவை எதிர்த்து சண்டை செய்வதற்கு, ஜெர்மனிக்கு எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஒத்தாசை செய்கிறார்கள் என்று ஜூன் மாதம் 6-ம்தேதி பெர்லின் ரேடியோ இந்துஸ்தானி, பர்ஷியன், அராபிக் முதலிய பாஷைகளில் ஒலிபரப்பிற்று. எம்மாதிரி அத்தேசங்கள் ஒன்றுக்கொன்று ஒத்தாசை செய்துகொள்ளுகிறதென்று ஸோவியத் பிரசார இலாகாவின் தலைவர் வெளியிட்டிருக்கிறார். தோற்றுப்போன ஒரு ஜெர்மன் டாங்கிப் படையிடமிருந்து அகப்பட்ட ஒரு ரகசிய கடிதாசியை வெளியிட்டிருக்கிறார். அதில் பின்வருமாறு எழுதியிருக்கிறது:—"ஸோவியத்திலிடம் இருக்கும் எண்ணெய் ஊற்றுகளை நாம் வசப்படுத்திக் கொள்ளும்பொழுது ஹங்கேரியத் துருப்புக்களை அவைகளினருகே வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்காக அங்கே ஸெகோஸ்லோவாகியா சைனியங்களை நாம் உபயோகப்படுத்துவதால் ஹங்கேரிய சைனியங்களுக்கும் ஸெகோஸ்லோவியத் துருப்புகளுக்கும் சண்டைவராமல் பார்த்துக்கொள்ள ஒரு ஜெர்மன் படை இருக்கவேண்டும்." இவ்விஷயத்தையும், தோற்றுப்போய் சக்தியற்றுக் கிடக்கும் யூகோஸ்லாவியாவை பங்குபோட்டுக்கொள்ளும் விஷயத்தில் இதாலியும் ஹங்கேரியும் போடும் சண்டைகளையும் பார்த்தால் ஹிட்லருடைய அதிகாரத்துக்கு உட்பட்டு நடக்கும் இச்சிறிய தேசங்களின் சைனியங்கள் ஒரே ஒரு பெரிய காரியத்திற்காக ஒத்துழைக்கும் பலதேசத்து சைனியங்களைப்போல் தெரியவில்லை. கேவலம் கொள்ளைக்கூட்டத்தார்கள் எப்படி கொள்ளையடித்தபிறகு பங்கு போட்டுக்கொள்ள ஒருவரோடொருவர் அடித்துக்கொள்ளுவார்களோ அம்மாதிரியே காணப்படுகின்றனர்.

## இந்திய சைனியத்தைப்பற்றி ஜெர்மனியின் அபிப்பிராயம்.

இந்திய சைனியம் பிரிடனுடன் சேர்ந்து இந்தியாவைப் பாதுகாக்காமல், ஜெர்மனியின் பொய் வார்த்தைகளில் மயங்கி ஜெர்மனியின் இஷ்டப்படி செய்யும்



என்று ஜெர்மனி கனவு காண்கிறது. ஜெர்மனியிலிருந்து ஒலிபரப்புபவர் இந்திய சைனியத்தில் சேர்க்கப்படுகிறவர்களெல்லாம், கட்டாயப்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டவர்கள் என்று கூறினார். அவரும் ஒரு நாஜிதானே. கட்டாயப்படுத்துவது என்பதைத் தவிர அவருக்கு வேறென்ன தெரியும். இந்திய சைனியத்தில் இருக்கும் ஒவ்வொருவனும் தன் சுய இஷ்டத்தின் பேரிலேயேதான் சேர்க்கப்பட்டிருக்கிறான். சைனியத்தில் ஒரு சிறிய உத்தியோகஸ்தரிலிருந்து பெரிய உத்தியோகஸ்தர்வரை எல்லோரும் பிரிடிஷார்கள்தான் என்றும் ஜெர்மன் ஒலிபரப்பாளர் கூறினார். இது எவ்வளவு தூரம் வாஸ்தவமென்பது இந்தியாவிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 53.

| 1941— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜூலை | ...19, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 20, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | | பூவரசகுடி ... | மாலை | 6.00 |
| | | | வேந்தகட்டக்குளம் .. | ,, | 6.30 |
| | 21, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 22, | செவ்வாய்க்கிழமை. | ராணி பெண்பாடசாலை... | காலை | 10.15 |
| | | | அரிமளம் ... | மாலை | 6.00 |
| | | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 23, | புதன்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 24, | வியாழக்கிழமை. | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | | | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | | பொம்பூர் ... | ,, | 6.30 |
| | 25, | வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

## நிகழ்ச்சி முறை—தொடர்ச்சி.

### பிரஸங்கம் 54.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூலை மீ ...27, | ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... மாலை | 6.30 |
| ,, | | வயலோகம் | ... ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... ,, | 6.30 |
| 28, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை | ... ,, | 10.15 |
| | | நச்சாந்துபட்டி | ... மாலை | 6.00 |
| | | விராச்சிலை | ... ,, | 6.30 |
| 29, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... காலை | 10.15 |
| | | திருக்கோகர்ணம் | ... மாலை | 5.30 |
| | | திருமயம் | ... ,, | 6.00 |
| | | கோனாபட்டு | ... ,, | 6.30 |
| 30, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| | | கல்லூர் | ... மாலை | 6.00 |
| | | மண்டையூர் | ... ,, | 6.30 |
| 31, | வியாழக்கிழமை ... | பனையப்பட்டி | ... ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... ,, | 6.30 |
| ஆகஸ்டு ... 1, | வெள்ளிக்கிழமை... | ராஜகிரி | ... ,, | 6.00 |
| | | விராலிமலை | ... ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3000—19-7-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஜூலை மீ 26௳ [ந. 54.

வி

பிரஸங்கம் 54.

## ஒரு பெரிய சூதாட்டம்.

சரித்திர பூர்வமாக நமக்குத் தெரிந்தமட்டில் மஹா பெரிய யுத்தமென்று சொல்லக்கூடிய ருஷ்யாவின்பேரில் ஜெர்மனி தொடுத்திருக்கும் தாக்குதலைப்பற்றி நாம் இதுவரை எவ்விதமான அபிப்பிராயங்களையும் வெளியிடவில்லை. அப்படிப் பட்ட அபிப்பிராயங்கள் கொள்வதற்குவேண்டிய விஷயங்கள் மிகவும் குறைவாக

இருந்திருக்கிறது. இந்த உபந்நியாசம் அச்சிடப்பட்டு வெளிப்படுவதற்குள் இந்த மஹாயுத்தம் ஆரம்பித்து சுமார் ஒருமாதகாலம் ஆகிவிடலாம். மத்திய காலத்தில் ஐரோப்பா கண்டத்தின் தேசங்களுடைய எல்லைகளில் சில மாறுதல்கள் ஏற்படலாம். ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் பலவிடங்களிலிருந்து அவரவர்களின் மனோபாவத்தை ஒத்துவரும் சமாசாரங்களை ஆதாரமாகவைத்து இந்தப் பெரிய யுத்தத்தைப்பற்றி சுருக்கமாய் எடுத்துச்சொல்லவும் இடம் கொடுக்கும்.

## சொப்பனம்.

இதற்கு முந்திய ஒரு அறிக்கையில் ஹிட்லருக்கு பைத்தியம் பிடிக்கவில்லை என்று ஒருவிதமான அபிப்பிராயத்தைக் காட்டினோம். அவர் குட்டிச்சுவரில் முட்டிக்கமாட்டாரென்று வருங்காலத்தில் நல்லதே சம்பவிக்குமென்று நினைக்கும் சில உத்சாகமான மனிதர்கள் தெரிவித்தார்கள். நாஸிகள் வசமிருக்கும் சில விஷயங்களிலிருந்து அவர்கள் செய்யும் முயற்சி வீண் முயற்சி இல்லையென்றும் உத்தேசித்த பலனைக்கொடுக்கக்கூடும் என்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். சென்ற வாரத்திய யுத்தக்குறிப்பில் நாம் எடுத்துக்காண்பித்திருப்பது போல் இந்த யுத்தத்தில் ஜெர்மனி ஜயிக்குமாயின் அதனுடைய பலன் வ்ளாடிவாஸ்டாக்கிலிருந்து (Vladivostok) பிஸ்கே வளைகுடா (Bay of Biscay) வரையில் ஜெர்மன் சாம்ராஜ்ஜியம் ஏற்படுவதோடு மத்தியப்பிரதேசங்களிலுள்ள உலோகங்களென்ன, விளைபொருள்களென்ன, மற்றுமுள்ள சாமான்களென்ன அவர்கள் சுவாதீனப்பட்டு விடுமென்றும், அவ்வித சாமான்களை ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வேண்டிய துறைமுகங்கள் இதர சாதனங்கள் ஏற்பட்டுவிடுமென்றும், அவர்களுக்குப் போட்டியாக வியாபாரம் செய்பவர்களுடைய கதி மோசமாய்விடுமென்றும், அவர்கள் முடிவில் ஜெர்மனிக்கு பயப்படும்படியாய் நேரிடுமென்றும் கூறினோம். ஏனெனில் சமாதானத்தின்பயனாக இரண்டு அமெரிக்காக்களும், கலைந்த பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமும் அல்லது புதியதான ஜப்பானிய பஸிபிக் சாம்ராஜ்ஜியம் இருந்துவந்த போதிலும், அவைகள் விருத்தியடையமுடியாது. ஏனென்றால், இப்போதே நமக்கு அனுபவப்பட்டவிதமாக ஜெர்மானிய கைத்தொழில்கள், ராஜாங்க பண உதவி மேல்பார்வை இவைகளால் அடிமைத்தொழிலாளிகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் வியாபித்துவிடும். இதுதான் ஹிட்லரின் சொப்பனம். கிரமப்படிக்கு பிரிடனை அழித்து பின்னால் ருஷ்யாவை எதிர்க்கவேண்டியது இருக்க முதலில் ருஷ்யாவை அவர் எதிர்த்தபோதிலும், இந்த எண்ணமானது ஒத்துமையும் உத்ஸாஹமும்கொண்ட ஒரு வலுத்த யோக்கியப் பொறுப்பற்ற ஒரு வர்க்கத்தார் கைக்கொண்டிருக்கிறார்கள்.

## பைத்தியந்தெளியும் விஷயம்.

இந்த யுத்த சம்பந்தமாக சமாசாரங்கள் வந்தபொழுது ஹிட்லர் கொஞ்சமேனும் மூளை இல்லாதவன் என்று பலர் சொல்வதைக்கேட்க ஆச்சரியமாயிருந்தது. அவர் செய்த காரியத்திற்கு ஏதோ சில காரணங்கள் இருந்தன என்பது ஹிட்லரின் பிரசாரத்திலிருந்தே தெரிந்தபோதிலும், அநேக பத்திரிகை



களும், ஒலிபரப்புகளும் அதைச்சரிவர மனதிற்கு வாங்கவில்லை. இந்தப் போரானது ஏதோ ஒரு புதிய முறைக்கும், அபேதவாதம் என்ற பிசாசுக்குமுள்ள ஓர் போரென்று ஹிட்லர் பறைசாத்துவதிலிருந்து பிரிடன் ஏமாறவில்லை. ஜெர்மனியின் க்ஷேமம் என்பதைவைத்து தத்துவங்களையும், ஞாயங்களையும், கக்ஷிகளையும், உடன்படிக்கைகளையும், ஹிட்லர் கோஷ்டி மதிக்கிறதில்லை என்பது நமக்குத் தெரியும். பிரிடனோ உலக நாகரீகத்திற்கே அனர்த்தமாகக்கிளம்பிய இப்பெரும் விபத்தை தொலைக்கவேண்டும் என்ற எண்ணத்தைக்கொண்டிருக்கிறது. எல்லா தேசத்தாருமே, இவ்வெண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லமுடியவில்லை. உலகத்தில் அமைதியும் செல்வமும் இருக்கவேண்டியதற்கு புதிய கொள்கைகளும் பழையகொள்கைகளும் போட்டிபோட்டு வருவதில் ஒரு வழியிலும் சேராமல் சிலதேசத்தார்கள் முற்றிலுமோ அல்லது ஒரு பகுதியிலோ முடிவிற்கு வராமல் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் ஹிட்லர் பக்கம் சேரலாம் என்பது ஹிட்லருக்குத்தெரியும். இப்படிச் சேருபவர் மதவித்தியாஸம் உள்ளவர்களிலும்கூட காணலாம். ஆகையால் தன் சாணக்கியத்தால் பின்வருமாறு பிரசாரம் கிளப்பினார்.

(a) சென்ற 20 வருஷமாக ருஷ்யாவிற்கு யார் சிநேகிதர்கள்? ஒருவரும் இல்லை. தனிமையில் பிறரால் நிந்திக்கப்பட்டு தனக்குள்ளேயே தான் உழன்டு கொண்டு, பெரிய தேசத்தாரில் ஒன்றாயிருக்கவேண்டி ஒரு பாராச்சாரியான பிசாசாக தன்னை நினைத்துக்கொண்டது. பஞ்ச் (Punch) பத்திரிகை, படம் ஒன்றில் ஒரு வீதியில் அலையும் சிறுவன் அடிபிடி சண்டையில் மாட்டிக்கொண்ட ஒருவனைப் பற்றி "இழுத்து உதையடா, அவனுக்கு உதவிக்கு ஆளில்லை" என்று சொன்னது போல் இருக்கிறது.

(b) வேர்க்க விருவிருக்க ராஜதந்திரம் மூன்று நான்கு வருஷம் செய்து அதன்மேல் இரண்டு வருஷம் போர்புரிந்து இருக்கும் இச்சமயம் நமது சாயம் கொஞ்சம் வெளுக்கத் தொடங்குகிறது. நம்ப ஜம்பத்தைக்கண்டு ஸ்காண்டிநேவியர்களும் (Scandinavians), ஸ்பெயின் தேசத்தாரும், போலண்டு தேசத்தாரும், ஜெக்கர்களும், கிரேக்கர்களும் மதிக்கிறார்கள் இல்லை. அவர்கள் தேடுவது பிரகாசமான இரும்பு அங்கிகள். வெகுநாளாக ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் கலங்கச் செய்துவந்த அபேதவாதம் என்ற கொள்கையை எதிர்ப்போம். ஆகையால் கிறிஸ்துவ மதத்தின் சார்பாக சண்டைசெய்யப்போன வீரர்களைப் போல் இந்த யுத்தத்தை நாம் ஒரு மத சம்பந்தமான யுத்தத்தைப்போல் நடத்த வேண்டும்.

## கஞ்சாவும், மதிமயங்கினவர்களும்.

டாக்டர் கோயபல்ஸ் துவக்கினார் வேலையை. ஜெர்மனியிலும், வசமாக்கப்பட்ட பத்திரிகைகளைக்கொண்டு ஆக்கிரமண நாடுகளிலும், தேசத்துரோகிகளைக் கொண்டும் ஜெர்மன் ஸ்தானிகர்களைக்கொண்டும் நடுநிலைமை நாடுகளிலும் தர்ம யுத்தமென்று பெயர் வைத்து பத்திரிகைப் பிரசாரங்கள் பிரவாகமாக வருகின்றன.

ஒரு பத்திரிகையானது இந்த யுத்தத்தின் விஷயத்தை சரியாக அறிந்துகொண்டவர்களென்று பல தேசத்தாரைக் குறிப்பிடுகிறது. இன்னமும் சொல்லுகிறது:— "அபேதவாதிகளுக்காக பிரிடனானது ஜெர்மனியை எதிர்த்து ஐரோப்பாவையே மறியல் செய்கிறது......பிரிடன் ஐரோப்பாவை கஷ்டத்திற்கு உள்ளாக்கி மெள்ள ஒதுங்கிவிடும்......உலக நாசத்திற்கென்று தலைப்பட்டிருப்பவர்களை தோற்கடித்து உலகத்தைச்சீர்படுத்த முன் வந்திருப்பவர்களை அநுசரிக்க (ஸஹாயிக்க) ஐரோப்பா ஜனங்கள் தயாராக இருக்கிறார்கள்." இன்னொரு பத்திரிகை சொல்லுகிறது:— "ஹிட்லர் ஓர் பலமான கூடிக்குத் தலைவர்; அபேத வாதத்திலிருந்து ஐரோப்பாவை விடுவிக்க முன்வந்திருக்கும் ராணுவத்தாருடன் கூடஇருந்து ரத்தம் சிந்த சண்டை செய்ய அவர்கள் தயாராய் இருக்கிறார்கள்."

மாட்ரிட்டிலிருந்து (Madrid) ஜெர்மனியின் நிருபரான வால்டர் பான்டியன் என்பவர் சொல்லுகிறார்:— "ஸ்பெயின்காரர், இதாலியர்கள், ஜெர்மானியர் ஒருவரை ஒருவர் டிராம் வண்டிகளிலும் ஹோட்டல்களிலும் சந்தித்தால் பாஸிஸ்ட் முறையில் ஸலாம் செய்து கொள்ளுகிறார்கள். ருஷ்யாவேபேரில் புரியப்படும் இந்த தர்ம யுத்தத்தைப்பற்றித் தான் என்றுமே பேச்சு."

ஐரோப்பிய நாகரீகத்தையே 'காப்பற்ற வேண்டுமென்று, இந்த வெட்கம் கெட்ட இங்கிலீஷ்காரரைத் தவிர மற்ற எல்லா ஐரோப்பிய தேசத்தாரும் சண்டைபோட்டு வருகிறார்கள் என்ற எண்ணமானது எல்லோர் மனதிலும் உண்டாகும்படி தன் வசமுள்ள பத்திரிகைகளைக்கொண்டு வேலை செய்கிறார்கள். 'போர்சென்' என்ற கோபன்ஹேகன் பத்திரிகையில் ஜுன் 27-ல் பின்வருமாறு:—"இந்தச் சண்டை ஐரோப்பாவிற்கு பொதுவான சண்டை............ டென்மார்க் யுத்தத்தில் கலக்கவில்லை, ஆயினும் ஐரோப்பாவின் பொது நலத்தை உத்தேசித்து டென்மார்க் சும்மா இருக்கக்கூடாது." இந்த எண்ணத்தைக் கொண்டுதான் டேனிஷ் ஸ்தானிகர்கள் மாஸ்கோவிலிருந்து திரும்பிவந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள்!

## இன்னமும் ஏமார்ந்தவர்கள்.

நாம் பைத்தியக்காரத்தனமென்று நினைக்கிற வேலையாலேயே, அரை மனதாயிருக்கிறவர்களில் சிலர் அச்சு தேசத்தாரைச் சேரலாம். பின்லண்டும் ருமேனியாவும் ஹிட்லரின் பக்கம் சண்டையிடுகிறார்கள். ஹங்கேரியிலும், ஸ்பெயினிலுமுள்ள பொது மக்கள் அவன் பக்கம் ஜாஸ்தி அநுதாபம் காட்டலாம்; அல்லது அபேதவாதிகள் பக்கம் அவர்களுடன் நின்று சண்டை செய்யும் நம்மிடம் அநுதாபமில்லாதவர்களாக விருக்கலாம். ஸ்காண்டிநேவியாவில் ஆக்கிரமிக்கப்பட்ட பாகமும் ஆக்கிரமிக்கப்படாத பாகமும் ருஷ்யாவிடம் மற்ற நாடுகளைக் காட்டிலும் விரோதமாகவே யிருக்கின்றன; நாஸித்வமா, புதுமுறையா என்று வாதாடி வந்த சமயம் லத்தீன் அமெரிக்காவில் நோக்கங்களைப்பற்றி விஷயம் சரிவர மனதிற்கு வாராமல் உளறுபடியாக விருந்ததில் அந்த சந்தேக நிலைமை ஊட்டி வளர்க்கப்பட்டது. அப்பேர்ப்பட்ட பேர்வழிகளுக்கு அச்சுதேச முறையா அபேதவாத அனர்த்தமாவென்று ஸ்பஷ்டமாகக் கூறி பேதத்தைக் காண்பித்தால்



மனதிற்கு சுலபமாகப் புரியலாம். பிரிடனிலும், அமெரிக்காவிலும் ருஷ்யர் பின்லண்டுக்காரர்கள் எதிர்த்து நின்றபோது அவர்கள் போற்றப்பட்டார்கள். அவர்களை நாம் நமது பக்கம் இழுத்துக் கொள்ளவில்லையென்பதை வைத்து அச்சு தேசத்தார் லாபமடையப் பார்க்கலாம்.

ஸ்பெயினில் பலாஞ்சின் (Falange) செல்வாக்கு அதிகரித்திருக்கவேணும்; ஏனென்றால் அவர்கள் ருஷ்யாவை பரம விரோதிகளாக கருதிவந்திருக்கிறார்கள்; அவர்கள் ராணுவத்துடனும் கத்தோலிக் மதஸ்தர்களான மத்தியதர மக்களுடனும் இப்போது ஒன்று சேரலாம்; ஜெர்மானியர் கிளப்பிவிடுகிறபடி ருஷ்யாவுடன் சண்டை செய்யலாமென்ற யோசனை பலித்தால் நிர்ப்பந்தமன்னியில் மூவர் உடன்படிக்கையில் சுயேச்சையாக ஸ்பெயின் சேர்ந்ததாகும்.

## கிறிஸ்துவ கோவில்கள் சகாயம் நேடுதல்

ருஷ்யர்களுக்கு அதிகார தோரணையில் தெய்வம் கிடையாது. கீழ் நாட்டு மதஸ்தர்களை புரட்சிக்குப்பின் ருஷ்யர்கள் கொஞ்சம் ஹிம்சித்தார்கள். இவைகளை எல்லாம் கூடுமானவரை ஜெர்மானியர் உபயோகித்துப்பார்க்கிறார்கள். ருஷ்யாவை எதிர்ப்பது என்றால் காட்டுமிராண்டித்தனமான நாஸ்திகவாதத்திற்கு விரோதமாக கிறிஸ்துவ மத சார்பாக சண்டை போட்டதாகும். "கடலுக்கப்பால்" என்ற பத்திரிகையானது சொல்லுகிறது (இது பிசகாக இருக்கலாம்). ஜெர்மன் வைதிக வர்க்கத்தாரெல்லாம் இந்த எதிர்ப்பானது யுத்தத்தின் சுபாவத்தையே மாற்றிவிட்டதென்று செப்பிவிடுத்திருக்கிறார்களாம். ஸோவியத்தை எதிர்ப்பது மத விஷயத்தில் சுயேச்சைக்காக போடும் சண்டை. இதை ஒத்து கோவில்களில் பாதிரிமார் பிரசங்கம் செய்யவேணுமாம்.

இப்படியே தான் கத்தோலிக் நாடுகளிலும் ஜுன் 27-ல் போப்பாண்டவர் அரண்மனையிலிருந்து ஒரு பத்திரிகை நிருபர் எழுதுகிறார்:—"ஜெர்மானியரும் இதாலியரும் ருஷ்யாவுடன் சண்டைக்குப் போனதில் எல்லோருக்குமே வெகு திருப்தி. இதனால் மதத்திற்கும் குடும்ப க்ஷேமத்திற்கும் விரோதமான ஒரு கொள்கையானது தொலைக்கப்படும்."

## சரியான ஆயுதம்.

ஹிட்லரின் யோசனை சொல்பவர்கள் இவ்விதமாகத் தகவல்கள் கொடுத்து வந்துகொண்டிருக்க, யந்திரபலம் போதுமானவரைகொண்ட 120 பங்குகள் கொண்ட ஒரு பெரிய சைனியம் தயார் செய்யப்பட்டு கருங்கடல் முதல் பால்டிக் சமுத்திரம்வரை யுத்தம் செய்யவேணுமென்ற ஆத்திரத்துடன் காத்துக் கொண்டிருந்தது. ஜெர்மன் விமானப்படை பிரிடிஷ் விமானப்படையால் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். ருஷ்யாவரை பிரிடிஷ் விமானப்படை வர முடியாது; ருஷ்ய விமானப்படை சங்கியை பெருத்திருக்கலாம், ஆனால் அதை எதிர்ப்பது சிரமமல்ல. கடலில் பிரிடிஷ் கப்பற்படைக்கு ஜெர்மன் படை ஈடுகொடுக்க முடியாதுதான்; ஆயினும் தரையில் (சேதம் எவ்வளவானாலும்) சென்றவிடமெல்லாம் ஹிட்லரின் படைகளுக்கு வெற்றி; அவைகளை ஜயிக்க முடியாதென்ற பெயரும் வந்துவிட்டது. மேலும் அவன் ராணுவ இலாகா தலைவர்கள் தரை யுத்தத்தில் ஒரு புதுமுறை கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதை

எதிர்க்க மற்ற தேசத்தார் வழியொன்றும் கண்டுபிடிக்கவில்லை; அதாவது, "டாங்கு"களை முன்னுக்குவிட்டு கனம்மிக்க மோட்டார் பலங்கொண்டு சைனியங்களை பிரவாகமாகத் தாக்கிச்செல்வது என்றமுறை. போக்குவரத்து சாதனங்கள், கையிருப்பு சைனியங்கள் என்ற ராணுவ தத்துவங்களை இந்நாளில் கெட்டியாக கையாளவேண்டியதில்லை. முதலில் வேகமாக எதிர்த்து, தீவாரமான எதிரி "குடலிற்கு" சமீபமுள்ள முக்கிய ஸ்தலங்களை ஜெர்மன் "பான்ஸர்" (Panzer) துருப்புகள் பிடித்துக்கொள்ளும். பலே! போகட்டும் சைனியங்கள்—எல்லா இடங்களிலும் தாக்காவிட்டாலும், நான்கு முக்கியமான குறிகளைவைத்து எதிர்க்கட்டும்; அவைகள் விழுந்தால் ருஷ்யர் விறாப்புப் பறந்துவிடும், அவர்கள் போக்குவரத்து சாதனங்கள், அவர்கள் சைனியங்களில் பெரும்பான்மை பாகம் எல்லாம் அழிந்துபோகும். ஜமாய்! செல்லட்டும் சைனியங்கள், லெனின்கிராட், மாஸ்கோ, கீவ், ஒடெஸ்ஸா இவைகளை நோக்கி!

ருஷ்ய எதிர்ப்பா—ருஷ்ய சிப்பாய் தைரியங்கொண்டவனாயிருக்கலாம், ருஷ்ய ராணுவ பலம் எண்ணிக்கைக்கு அகப்படாமலிருக்கலாம், அவர்களிடம் விமானங்களும் 'டாங்கு'களும் ஏராளமாக விருக்கலாம், ஆயினும் சில பேர்போன இடையூறுகளுண்டு. அதாவது, ராணுவ காரியங்களில் அரசியல் வாதிகள் தலையிடுவது, இருப்புப்பாதை வசதிக்குறைவு. 1901 (ருஷ்ய-ஜப்பானிய யுத்தகாலம்) முதல் 1939 (ருஷ்ய—பின்லண்டு யுத்தகாலம்) வரை வெளியானபடி ராணுவத் தலைமை அதிகாரிகளில் நைபுண்யக்குறைவு, பொதுஜன கட்டுப்பாடு, இவ்வித இடைஞ்சல்களெல்லாம் உண்டு. அவர்கள் தலைவர், ஸ்டாலினே, பல விஷயங்களிலும், ராணுவ முறைகளிலும், அரசியல் தலைமை வகிப்பதிலும் எவரேனும் நைபுண்யமடைந்தால், அவர்களை வெளியே பிடித்துத்தள்ளி தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டவர். எச்சமயம் இந்த ஜோஸப் ஸ்டாலினை (Joseph Stalin) விரட்டி பதிலுக்குபதில் செய்யலாமென்று காத்துக்கொண்டிருப்பார் பலவர்க்கத்தார்!

இப்படியெல்லாம் எண்ணி எண்ணி முடிவிற்கு வந்தான் ஹிட்லர். பூமி கெட்டியாயிருக்கும்வரை போகவேண்டியவழி தூரமானாலும் ரஸ்தாக்கள் குறைவானாலும் யந்திரபலம் பொருந்திய ஜெர்மன் சைனியங்களுக்கு லட்சியமில்லை. அவர்கள் "டாங்கு"களும் "பான்ஸர்"களும் எவ்வித எதிர்ப்பையும் உடைத்துச் செல்லும்; இங்குமங்கும் திரும்பி, துறப்புகளில் விடப்பட்ட சைனியங்களை வளைத்துக்கொள்ளும். அப்படியே தலைநகரங்களையும், தொழிற்சாலைகளையும் நோக்கிச்செல்வார்கள்; பின்தொடர்ந்துவரும் ஜெர்மன் கூட்டங்கள் யுக்ரேனிலுள்ள கோதும்பையையும் எண்ணெயையும் வசமாக்கிக்கொண்டு, காகேஸிய மலைச் சாரலிலுள்ள எண்ணெயையும் வசமாக்கிக்கொண்டு, ஸோவியட் நாடுகளை ஜெர்மனிக்குக் கட்டுப்பட்ட பொம்மைகளை, தலைவர் அல்லது ராஜகுமாரர் அல்லது பிரபுக்கள் என்று பெயரிட்டு ஆட்டிவைத்து டாக்டர் லே (Dr. Ley) யின் பரிவாரங்களைக்கொண்டு ருஷ்ய தொழிலாளிகளை வலி, கெஸ்டாபோ (Gestapo) வைக்கொண்டு துப்பறிந்து வேலை செய்யும்படி நிர்ப்பந்தித்து மனம் போன போக்கெல்லாம் போகலாம். இவையெல்லாம் ஹிட்லர் யோசனை.



எல்லாம் ஹிட்லர் எதிர்பார்த்தபடி நடந்ததோ என்னமோ, பெரும்பாடு பட்டு செலவிட்டு ஒரு மாதமாகியும் ஹிட்லருக்கு ஏதேனும் பலித்ததோ, சந்தேகந்தான். ருஷ்யத் துருப்புகள் சேதமானதைப்பற்றியும், ருஷ்யநாடுகள் பிடிபட்டதைப்பற்றியும், ருஷ்ய விமானங்கள், 'டாங்கு'கள், துருப்பு பங்குகள் சேதமானதைப்பற்றியும் ஹிட்லர் கொடுக்கும் கணக்குகள் நம்பத்தக்கவையல்ல; அதுபோலவே அவர் போட்டுக்கொண்டதாக சொல்லப்படும் காலவரை. ஆயினும், தன் குறிகளுக்குச்செல்லும் வழியிலுள்ள ஸ்தலங்களில் சண்டை நடப்பதென்பது நிச்சயம். பொலாட்ஸ்க், (Polotsk), மின்ஸ்க் (Minsk), கெம்மெனெட்ஸ் (Kemenetz), நீஸ்டர் நதி (The Dniester) எல்லாம் கடந்தாய் விட்டது; லெனின்கிராட், ஸ்மலென்ஸ்க், கீவ் சமீபித்துவிட்டன. இதில் அவனுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிடமுடியாது. பத்து லக்ஷமென்கிறார்கள் ருஷ்யர்கள்; ஆனால், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறிகளை அடைந்தால், பத்து லக்ஷம் பேர் செத்தாலென்ன, ஆயிரக்கணக்கான 'டாங்கு'களும் விமானங்களும் நாசமானாலென்ன?

"ஆனால்" என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். யுத்த அறிக்கைகள் பரஸ்பர விரோதமாகவிருக்கின்றன. தூரதிருஷ்டிகள் பார்க்க இந்த யுத்தம் எப்படி இருக்கிறது என்று சொல்லுவது சாத்தியமில்லை. நமது நோக்கம் இதுதான். ஏதோ ஹிட்லர் செய்த காரியம் பெரும் பிசகு, இத்துடன் அழிந்தான், இனி, பிரிடன், இந்தியா, சாம்ராஜ்யம் பூராவுமே ஹிட்லர் அடியோடு அழியும்வரை கவலையற்றிருக்கலாமென்று எண்ணுவது சரியல்லவென்பதை எடுத்துக்காட்டுவது தான் நமக்கு எண்ணம்.

## மற்றொரு விதமான விமர்சனம்.

இதற்கு முன் நடந்தவைகளை வைத்துக்கொண்டும், ஜெர்மானியர் ஜாதியினுடைய காரியங்களை வைத்துக்கொண்டும் பார்த்தால் ஹிட்லர் ஒரு நாள் தோற்றுத்தான் போக வேண்டும். தைரியமோ, காரியங்களை நடத்துவதில் திறமையோ இல்லாமல் போனதாலல்ல. ஆனால் சுயமாக ஜாதிக்கு இயற்கையாக உள்ள தன்னைக்காட்டிலும் மேலானவர் கிடையாது என்ற ஒரு மமதையினால் தான். சென்ற யுத்தத்தில் அமெரிக்கர்களை சண்டைக்கு எப்படி வேண்டும் என்று இழுத்தார்களோ, எப்படி தாங்கள்தான் உலகத்தில் எல்லோருக்கும் எஜமானர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ, (இது இவர்கள் நடத்தைக்கே விரோதம்), எப்படி சமீபத்தில் வான் பேபனை விட்டு துருக்கி மூலமாக பிரிடனோடு சமாதானம் செய்து விடலாம் என்ற வீண் எண்ணம் கொண்டிருந்தார்களோ அதேமாதிரி ஹிட்லர் ருஷ்யாவின் தற்கால ராஜீய நிலைமையைச் சரியாக மதித்திருந்தாலும், ருஷ்யர்களின் மன ஊக்கத்தை சரியாக மதிக்கவில்லை என்று சொல்லக்கூடும். அவர் அம்மாதிரி எண்ணிவிட்டான் என்பதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. அவர் அம்மாதிரி பிசகாக எண்ணி பிடிவாதமுள்ளவர்களும், ஏமாற்றமடையாதவர்களுமான ருஷ்யர்கள் தங்கள் ராஜ்யம் எம்மாதிரி இருக்கவேண்டுமென்பதைப் பற்றி சர்ச்சை செய்வதைவிட்டு தன் தேசத்தைக்காப்பாற்ற முன் வந்தார்களேயானால் ஹிட்லரின் கால

அட்டவணை தடுமாறிவிடும். தங்களுக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கக்கூடுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் களைத்துப்போன ஜெர்மானியர்களுக்கு வேண்டியதை சேகரிப்பதற்குள் பிரிட்டனின் முக்கிய ஆதாரமான அமெரிக்கா முழு பலத்துடனும் தீவிரத்துடனும் யுத்தத்தில் இறங்கிவிடும். இதனால் ஹிட்லர் ஓடும் பந்தயம் தோற்றுவிடும்.

## பிசகான எண்ணங்கள்.

ருஷ்ய யுத்தமுனையானது ஒரு நேர் கோடு போல் ஜெர்மானியர்களின் முதல் முரட்டுக் குத்தினால் கிழக்கே தள்ளப்பட்டு கிழக்கேயே போய்க்கொண்டிருக்கிறது என்று எண்ணக்கூடாது. அது ஒரு கட்டான் போட்ட பலகைபோலும். அந்தக் கட்டான்களுடைய வர்ணங்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பதுபோலும் நடுவில் இடைவெளி உள்ளதுபோலும் நினைக்கப்படவேண்டும். யுத்த முஸ்தீபுகளின் போக்குவரத்தைக்குறித்து வெகு நாளாக வழங்கிவரும் பழக்கங்களை ஜெர்மானியர்கள் தள்ளிவிட்டு முக்கியமான இடங்களைக் குறித்து தனித்தனியாக சேனைகளை அனுப்பி ருஷ்யாவின் நரம்பு போன்ற ஸ்தானங்களை அடிக்கலாம் என்ற ஆசைகொண்டிருக்கிறார்கள். பாலிஸ்டாக் என்ற இடத்தில் ஒரு தடவை அவர்கள் நாலாபக்கத்திலும் இருந்து 1,000 பெயர்கள் கொண்ட ருஷ்யா சைனியத்தைச் சுற்றிக் கொண்டதாகவும், ஆனால் அவர்களுடைய பான்ஸர் வகுப்புகள் நேராடிச் சென்றதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் பிரான்ஸில் செய்தமாதிரி ஒவ்வொரு பிரிவிலும் வடக்கும் தெற்கும் திரும்பி ருஷ்ய சேனையைச் சுற்றிக்கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். இம் மாதிரி செய்யமுடியுமா என்பதுதான் சந்தேகம்.

மேற்கண்ட நடுநிலைமைக்காரர்களின் அபிப்பிராயங்களைப் பார்த்தாலும் பெர்லின் ரேடியோவிலிருந்து வரும் சில செய்திகளையும் சேர்த்துப் பார்த்தால் இது சந்தேகம் என்றுதான் நாம் நினைக்கவேண்டி இருக்கிறது.

1. ஸ்டாலின் (Stalin) எங்கும் எரித்துவிட்டுப் போகும்படி உத்தரவிட்டிருக்கிறார். அவர்களுடைய சேனைகள் ஜெர்மானியர்கள் சமீபத்தில் வரும் வரை காத்துக் கொண்டிருக்கக்கூடாது. அவர்கள் பின் வாங்கிக்கொண்டே ஒவ்வொரு எண்ணெய்ச் சேகரம், தானியக்களஞ்சியம், இன்னும் எதிரிகளுக்கு உபயோகப்படக்கூடியது எதுவாய் இருந்தாலும்சரி நாசம் செய்துவிட வேண்டும். சுருக்கமாக அவர்களுடைய எண்ணம் தன்னுடைய சேனைகளை யூரல் மலைகள் வரை பின் வாங்கும்படி செய்துகொண்டு ஆனால் உயிருடன் இருக்கும்படி செய்யவேண்டியதுதான். என்றைக்காவது ஒருநாள் ஜெர்மானியர்கள் களைத்துத் தங்கள் தேசத்தைவிட்டுத் தள்ளி இருக்கும் பொழுது அவர்களை எதிர்ப்பதற்கு இந்த "தோற்ற" ருஷ்ய சேனை உபயோகப்படப்போகிறது.

2. இது சம்பாவிதம் என்று தோன்றுகிறது. ஏனெனில், இதற்கு முன் வெறும் பேச்சாகப் பேசிக் கொண்டிருந்த ஸ்டாலின் சமீபத்தில் தேச சேவை செய்யும்படி தன்னுடைய ஜனங்களுக்கு விடுத்திருக்கும் பேச்சை அவர்கள்



கேட்டு தங்களுக்குள் இருந்த அபிப்பிராய பேதங்களை விட்டு நாஸிக் கொள்கைக்கு விரோதமாக ஒன்று சேர்ந்து சண்டைபோடுவதாகத் தீர்மானித்து விட்டார்கள் என்று தெரிகிறது.

3. ஹிட்லரின் ராணுவ அதிகாரிகளுக்குத்தான் யோசனை ஜாஸ்தியென்றில்லை. ருஷ்யர்களின் யுக்திகளால் ஜெர்மானியருக்கு ஏராளமான சேத மேற்பட்டதுடன் எதிர்பாராத சம்பவங்களும் நடந்தன. அவைகளில் ஒன்று, முன் ஜாக்கிரதையாகவிருந்து ஜெர்மன் முன் அணியிலிருப்பவர்களைக் கீழே சாய்க்கிறது. 'டாங்க்' படைகளை எதிர்க்க 'டாங்க்' படைகள் வைத்திருந்தார்கள். நவீன ஜெர்மன் யுத்தமுறையை பலனில்லாமல் செய்யவேணுமானால், 'பான்ஸர்' பங்குகளுக்குள்ள எண்ணெய் முதலியவையெல்லாம் செலவழிந்து மேலே போக வொட்டாமல் போகும் வரை தங்கள் கையிருப்புக்களை, முக்கியமாக விமானப்படை கையிருப்புகளை, காபந்து செய்து வைத்திருப்பார்களேயானால் ஜெர்மன் ஜம்பம் பலிக்காது.

4. 'பிடிக்கப்பட்ட' ஸ்தலங்களுக்குப் பின் ருஷ்யர்கள் எதிர்பாராத விதமாக மறைவாயிருந்து தலைகிளப்பி வம்பு செய்கிறார்கள் என்று ஜெர்மன் ரேடியோ இடையிடையே முணங்குகிறது. ஜயித்து பிடித்த இடங்களில் மறுமுறையும் சண்டைக்கிழுப்பது என்ன நியாயம்! ஒரு விஷயம் ஸ்பஷ்டமாக புலப்படுகிறது, அதாவது ஹிட்லர் ஒழியும் வரை ஒவ்வொரு ருஷ்ய சிப்பாயும் விடாமல் சண்டையிடுவாரென்பது திண்ணம். தஞ்சமடைவார்களேயானால் தங்களுக்கு வந்துவிடும் அனர்த்தம் என்று ருஷ்யர்களுக்குத் தெரியும்; ஆகையால், சண்டை போடவேணும், பின்வாங்கவேணும், பிடிக்கவேணும், மறுபடியும் சண்டைபோடவேணும்; ருஷ்ய நாடுமுழுவதும் இழுத்து இழுத்துச்சென்று ஜெர்மன் இடுப்பை ஒடித்து அவர்கள் அசையமுடியாமல் போகும் வரை இப்படியெல்லாம் செய்யவேணும்.

முன்னே நடந்த ஏழு வருஷயுத்தத்தில் "ருஷ்ய சிப்பாய் செத்தாலும் சாவான், தோற்கடிக்கப்படமாட்டான்" என்ற பெயரைப்பெற்றான். இதற்கேற்க, பலே ஜோராக யுத்தம் புரிந்து வருகிறான்.

இது ருஷ்ய அதிகாரிகள், ஜனங்கள், சபைகள், ஸ்டாலின் முதலிய எல்லோருக்கும் தெரியும்; தாங்கள் தப்பவேணுமானால் ருஷ்ய சேனை விடாது சண்டை செய்து வரவேணுமென்று அவர்களுக்குத்தெரியும்.

ஹிட்லருள்பட உலகத்தார் எல்லோருக்கும் தெரியும், இந்த யுத்தத்தில் காலம் முக்கியமானதென்று. குளிர்காலம் வருவதற்குள் ஜெர்மானியர் ஜயிக்காவிட்டால் அவர்கள் தோல்வியடைந்தவர்களாவார்கள். இதுவரை இடம் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்; இது பெரும்பாலும் நாசமாக்கப்பட்ட நாடாயிருக்கும்; ஆனால் ருஷ்ய யந்திர சேனைகளில் ஜாஸ்திபாகம் அழிக்கப்படவில்லை; ருஷ்ய விமானப்படையை பங்கப்படுத்தவில்லை; "பாருட்" வேலை பலிக்கவில்லை; விழித்துக்கொண்டிருக்கும் ருஷ்யர்கள் ஜெர்மானியரைக் கொஞ்சம் கொஞ்சமாக கைதி செய்கிறார்கள்; எல்லாவற்றிலும் மேலாக, ருஷ்யர்கள்

ஜெர்மானியரை எதிர்த்துப்போர்செய்ய சமயம் பார்த்து வருகிறார்கள்; அதை ஜெர்மானியர் நிர்வகிப்பது துர்லபம்.

முடிவாக, சில ஜெர்மன் பத்திரிகைகளிலிருந்து சில முக்கிய செய்திகளைக் குறிப்பிடுகிறோம்: ருஷ்யர்கள் "எல்லோரிலும் வலுத்த விரோதிகள்" என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. அவர்கள் நவீன ஆயுதபாணிகளென்றும், எதிர்த்து வருபவரை எதிர்ப்பதில் தீரரென்றும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. யூக்ரேனில் ஜெர்மன் துருப்புகள் மெள்ளச்செல்லுவதற்குக் காரணம் பனிப் புசலாம்! இவ்வித செய்திகள் பெர்லின் பத்திரிகைகளில் இதுவரை காணப்படாதவை. ஆயினும் ஜெர்மானியர் கவலைப்பட்ட நிலையைக்கண்டு நாம் திருப்தியடையக்கூடாது. நாம் முக்கியமாக மனதில் வைக்கவேண்டிய விஷயம் இது தான். அதாவது, ஆரம்ப சண்டைகளில் ஏராளமான துருப்புகள் நாசமடையலாம்; அப்படியானாலும், மாஸ்கோவிற்கு மேற்கிலோ, யூரல் மலையடிவாரத்திலோ, அசந்துபோன ஜெர்மானியரை சமயம் பார்த்து நிலைசாய்க்கும் விதமாக எதிர்த்துச்செல்ல லாயக்காக துருப்புகளென்ன, "டாங்கி"களென்ன, பீரங்கிகளென்ன, விமானங்களென்ன—விமானங்கள் தான் எல்லாவற்றிலும் முக்கியம்—போதுமான அளவிற்கு கையிருப்பாக வைத்திருப்பதைப் பொருத்தது இந்த யுத்தத்தின் வெற்றிகரமான முடிவு.

---

# ‘வி’

## விஜயத்துக்காக

**வி**ஜயமென்ற பதத்தின் முதலெழுத்தாகிய **‘வி’** யென்ற எழுத்து வெற்றியைக் காண்பிக்கும் குறியாக எடுக்கப் பட்டிருக்கிறது. இது **பிரிட்டிஷ் ஜயத்தையும், ஜனநாயக வெற்றியையும், வீரர்கள் வெற்றியையும், ஜெர்மானிய அசுரர்களைத் தொலைக்கும் வெற்றியையும்** காண்பிக்கிறது.

**‘வி’** யென்பது கேவலம் பயமுறுத்துவதற்காக ஏற்படுத்திய உபாயமல்ல. கோடிக்கணக்கான ஜனங்கள் வெற்றியை நினைத்து வருகிறார்கள். இவர்களை ஒன்று சேர்க்கத்தான். ஹிட்லர் பிடித்த நாடுகள் கிளம்பி ஸ்வதந்திரம் பெற பிரமயம் வந்துவிட்டதையும் இது குறிப்பிடுகிறது.

சிறைப்பட்ட நாடுகள் ஸ்வதந்திரம் பெற அடைந்திருக்கும் மனோதிடத்தைக் காண்பிக்கவும், நாஜி கொடுங்கோல் தொலையவும் ஏற்பட்ட அடையாளமிதுவென்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார்.

விஜய நாளில் ஜூலை 20-ம் தேதி நிசியில் **‘வி’** இயக்கம் பி. பி. ஸி. மர்ம-பிரஸங்கியாகிய கர்னல் பிரிட்டனால் துவக்கப்பட்டது.

இந்த **‘வி’** சைனியத்தில் சேர்ந்துகொள்ள வெற்றிக்குழைக்க சத்தியம் செய்துகொள்ளவேண்டும். எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் **‘வி’** அடையாளத்தை வைக்கவேண்டும். **‘வி’** சப்தத்தை தந்தி கொடுப்பதுபோல் தட்டிக்காட்டவேண்டும்.

இந்த இயக்கம் உலகமெல்லாம் பரவிவிட்டது. இந்தியர்களும் லக்ஷக் கணக்காகச் சேர்ந்துகொள்ளவேண்டும். நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது.

**குறிப்பு**:—இதன் மற்ற விவரங்கள் ‘வார யுத்தச் செய்திகள்’ என்ற தலைப்பில் 17 & 18 பக்கங்களில் பார்க்கலாம்.

# வார யுத்தச் செய்திகள்.

17—7—41-லிருந்து 23—7—41-வரை.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

ஓச்சொலொழிவில்லாது பிரமாதமாக நாலு வாரங்களாக சண்டை செய்தும் ஜெர்மனி மெள்ள மெள்ளத் தயங்கித் தயங்கி முன்போவதோடு, சைனியத்திலும், தளவாடங்களிலும் அபார நஷ்டத்தை அடைய நேரிட்டுவிட்டது. ருஷ்ய அணிகளைக் கலைக்க முடியவில்லை. இதற்குக் காரணம் பிரான்ஸைப் போல முக்கியத் தொழிற்சாலைகள் இங்கு நெருக்கியில்லாது பல இடங்களில், கிழக்கு பாகங்களில் ஜெர்மன் படைக்கு எட்டாது ஒதுங்கியிருப்பதுதான்." ஆகவே ஜெர்மன் மின்னல் படையெடுப்பினால் தோல்வி ஏற்படவில்லை. பின்வாங்க நேரிட்டாலும், ருஷ்யத் துருப்புகள் காலி செய்யுமிடங்களை அழித்து விடுவதால், எதிரிகளுக்கு அநுகூலமில்லாமல் போகிறது. இப்படியேதான் நெபோலியன் அழிந்தது. ருஷ்யர் யுத்தத்தில் விடாமுயற்சியோடு, தந்திரத்தையும் காண்பிக்கிறார்கள். ஜெர்மானியர் தங்கள் டாங்கிகளைக்கொண்டு முன்னேறினால் அவைகளுக்குப் பின்னே வந்து போக்குவரத்து சாதனங்களை ருஷ்யர்கள் கெடுத்து விடுகிறார்கள். தெரியாதவிடங்களில் மறைந்துகொண்டு சுட்டுவிடுகிறார்கள். தளவாடங்களின் வரத்தைத் தடுத்துவிடுகிறார்கள். ருஷ்ய விமானங்கள் ஜெர்மன் விமானங்களை அடிக்கப் பார்க்கின்றன. ருஷ்யச் சிறு படைகள் ஓயாது எதிர்த்து வம்பு பண்ணுகின்றன. 'ருஷ்ய சாமான்களைக் கொள்ளை கொள்வதால் ஏற்படும் லாபத்தைவிட எங்களுடைய நஷ்டமதிகம்; வெற்றிகளால் பிரயோசனமில்லை' என்று ஒரு ஜெர்மன் தளகர்த்தர் சொல்லுகிறார். 'இதெல்லாம் ருஷ்யாவுக்கு ஒரு கொசுக்கடிதான். ருஷ்ய மண்ணில் மங்கோலியர் மாண்டதுபோல் ஜெர்மானியர் மண்ணோடு மண்ணாவார். உலகத்தை ஆளப் பேய் பிடித்து வந்தவர்கள் கெதி ருஷ்யாவில் இப்படியே முடிந்திருக்கிறது. இதற்கு முன் டாமர்லேன், செஞ்சிஸ்கான், நெபோலியன் அழிந்தபடியே ஹிட்லரும் அழிவார்' என்று நியூயார்க் டைம்ஸ் சொல்லுகிறது.

**ஜெர்மானியரின் கஷ்டங்கள்.**—ருஷ்யாவின் மேலெடுத்திருக்கும் எதிர்ப்பு தயங்குவதற்குக் காரணமேதாயிருக்கவேண்டும். துருக்கிக்குக் கொடுக்க வேண்டிய எண்ணெயைக் குறைக்கப்போவதாக ருமேனியா சொல்லுவதிலிருந்து எண்ணெய் பஞ்சமிருக்கவேண்டும். ஸ்வீடனுக்குப் போகும் கடற்பாதை தடைபட்டு, சாமான்கள் ஹாம்பர்க், ப்ரமென் வழி செல்லவேண்டியிருக்கிறது. கான்ஸ்டான்ஸா தகர்க்கப்பட்டதிலிருந்து அப்பிராந்தியத்துச் சரக்குகள் பர்காஸ் வழியும், சலோனிகா மார்க்கமாயும் போகவேண்டியிருக்கிறது. ஸைபீரியா ரயில் பாதை அடைபட்டதிலிருந்து ஆசியாவிலிருந்து சரக்குகள் வர துருக்கி மார்க்கமொன்றுதான் இருக்கிறது. சைனியங்கள் போராது, உபசைனியங்களுக்காக ருமேனியாவையும், இதாலியையும் ஹிட்லர் கேட்டிருப்பதாகப் பிரஸ்தாபம்.

**ஸ்டாலின் கால்வாய்.**—லெனின்கிராடிலிருந்து, லடோகா, ஒனீகா ஏரிகள் வழியாக வெண்கடலுக்குப் போகிறது. ஜெர்மானியர் எஸ்டோனியாவைப் பிடித்துக்கொண்டு, லெனின்கிராடை நோக்கினால் ருஷ்ய சண்டைக் கப்பல்கள் பால்டிக்கில் அடைபட்டுவிடுமென்று யோசித்து, இந்தக் கால்வாயின் வழியாக இப்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளை அப்புறப்படுத்திவிட்டார்கள். ஜெர்மானியர் கால்வாயைத் தகர்த்து பழுதாக்கியும், ஒரு நீர்மூழ்கியைத் தவிர மற்றவையெல்லாம் வெளிப்படுத்தப்பட்டன.

**தற்போதிய நிலைமை.**—மாஸ்கோவிலிருந்தும், லண்டனிலிருந்தும் கிடைத்த ஜூலை 22-ம் தேதி செய்திப்படி லெனின்கிராட், மாஸ்கோ, கீவ்வை நோக்கி யுத்தம் நடக்கிறது. நீபர் நதி வளைவில் ருஷ்ய சைனியங்களை வளைத்துக்கொள்ள ஜெர்மானியர் முயற்சிக்கிறார்கள். லெனின்கிராட்டுக்குப் போக முடியாதபடி பெய்பஸ் ஏரிக்கரையில் ஜெர்மானியர் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். லடோகாவுக்கும், ஒனீகாவுக்கு மத்தியில் ஜெர்மானியர் புதிதாயொரு எதிர்ப்பைத் துவக்கியிருக்கிறார்கள். பெட்ரோஸா வாட்க்ஸில் சண்டை நடப்பதாக முதல் முதலாக இப்பொழுது அறிவிக்கப்படுகிறது. ப்ஸ்கோவ், பொலோட்ஸ்க், நெவல், ஸ்மலென்ஸ்க், நவோகிராட்—வாலின்ஸ்கில் பலத்த சண்டை. ஸ்மலென்ஸ்க்கையும், கீவ்வையும் ஜெர்மானியர் இன்னும் பிடித்ததாகக்காணோம்.

**விமான எதிர்ப்பு.**—20, 21-ல் லெனின்கிராட் மேலும், 21, 22-ல் மாஸ்கோ மேலும் விமான எதிர்ப்பு நடந்தது. ஜெர்மானியர் மாஸ்கோவை த்வம்ஸம் செய்து விட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஸ்டாலின், ஏதோ இரண்டு ஒரு விமானங்கள் தனித்து வந்ததாகச் சொல்லுகிறார். ராயிடர் விசேஷ நிருபர் சொல்லுகிறபடி, நடுத்தர-மின்னல் எதிர்ப்பென்று இதைச் சொல்லலாம். மாஸ்கோவின் தற்காப்பு பலமாயிருப்பதோடு, ஜெர்மன் விமான நிலயங்கள் வெகுதூரத்திலிருக்கின்றன, வழக்கம்போல் ஜெர்மானியர்கள் கொள்ளிகளைப்போட்டார்கள். ருஷ்ய நில-பீரங்கிகள் திருப்பிச் சுட்டன. வாணவேடிக்கைக்குக் குறைவில்லை.

**ஐரோப்பிய சைனியம்.**—ருஷ்ய ஜன சமத்துவக்கொள்கையை எதிர்க்க ஹிட்லர் படைதிரட்டுவதெல்லாம் வீணாயிற்று. நார்வேயில் 38 பேர்களும், பிரான்ஸில் 5, 6 பேர்களும்தான் சேர்ந்தார்கள், ஸ்பெயினில் பேருக்குத்தான்.

## தூரக்-கிழக்கு.

இங்கே யுத்தம் வரும்போலிருக்கிறது. திடீரென்று 16-ம் தேதியன்று ஜப்பானில் மந்திரிசபை ராஜீநாமா செய்தது. 'தேசிய, உலக நடவடிக்கையையொத்து நடக்க பலத்த புதுசபையொன்றை அமைக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. 48-மணி நேரம் கலந்துபேசி, 'கவனித்து தாமதித்துக் காரியங்களை நடத்த' புதுசபையொன்று பழைய பிரதம மந்திரி ராஜகுமார் கோனோயாவின் தலைமையிலேயே, மறுபடியும் (இது மூன்றும் தடவை) அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சபையில் மத்ஸுவோகாவைக் காணோம். இந்தப் புது அமைச்சர் சபை செய்யப் போவதென்னவென்று புரியவில்லை. இதில் முதலாளிகளிருப்பதால் ஜப்பான் ஐரோப்பிய சிக்கலிலிருந்து விடுவித்துக்கொள்ளப் பார்க்குமென்பது

ஒரு அபிப்பிராயம். ராணுவஸ்தர்கள் பலரிருப்பதிலிருந்து சண்டை வருமென்று சிலர் நினைக்கிறார்கள். மத்ஸுவோகா ராஜிநாமா செய்த காரணம் தெரியவில்லை. மூவரசு ஒப்பந்தத்திலும், ருஷ்ய ஒப்பந்தத்திலும் ஜப்பானை மாட்டிவிட்டது இவர்தான். இவர் ராஜிநாமாவிலிருந்து இந்த நோக்கங்களுக்கு மாறுதல் ஏற்படுமா? சிலர், ஜப்பான் வடக்கேயும், சிலர் தெற்கேயும் சண்டையைத் துவக்கும், சைனாவோடு சண்டையை சற்று நிறுத்திக்கொள்ளுமென்கிறார்கள்.

இது இப்படியிருக்க இந்து சைனாத்தலைவர் திடீரென்று ஜப்பானுடைய ராணுவ-கோஷ்டியிருக்கும் ஹனாயிக்கு வந்திருக்கிறார். இங்கே, ஸிரியாவைப் போல் வம்பு ஏற்படுமோ, என்னமோ? பிரிடனும், அமெரிக்காவும் சேர்ந்து கொண்டு, தாய்லாந்திலும், இந்து சைனாவிலும் தலையிடப் பார்ப்பதாக, நாஸிகளைப் போல நிஷிநிஷி ஷிம்பன் என்ற ஜப்பானியப் பத்திரிகை கட்டிவிட ஆரம்பித்து விட்டது. ராஜகுமார் கோனோயா பத்திராதிபர்களோடு பேசவிருந்த சபை யொன்று கூட்டப்படவில்லை. ஜப்பானிய கப்பல்கள் அமெரிக்காவிலிருந்து திருப்பி கொண்டுவரப்படுகின்றன. ரேடியோ தந்திச் செய்திகளெல்லாம் ஜப்பானில் அடக்கி ஆளப்படுகின்றன. கடைசியாய் கிடைத்திருக்கும் செய்திப்படி ஜப்பான், இந்து சைனாவைப்பற்றி விஷிக்கு ஒரு யுத்த எச்சரிக்கை கடிதம் அனுப்ப, ராணுவ நிலயங்களை விஷி கொடுத்துவிட்டதாகத் தெரிகிறது.

இந்து சைனாவில் பிரிடன் பிரவேசிப்பதாகச்சொல்லும் வதந்தியானது சிங்கப்பூரில் மறுக்கப்பட்டிருக்கிறது.

ஜூலை 18-ல், பிரான்ஸிஸ்கோவிலில் பேசும்போது ஹாலிபாக்ஸ் பிரபு ஜப்பான் விஷயமாக பிரிடன் கொண்டிருக்கும் நோக்கத்தை வெளியாக்கினார். பிரிடனும், அமெரிக்காவும் பஸிபிக்கில் சமாதானத்தைக் கைக்கொள்ளத்தான் விரும்புகின்றன. இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் சண்டைவரக்காரணமில்லை. ஆனால் பிரிடன் பஸிபிக்கிலிருக்கும் தன்னுடைய ஸ்வதந்திரங்களை விட்டுவிடாது.

## ஜெர்மனியைப் பிடிக்கும் சண்டை.

ஏராளமான சைனியங்களையும், தளவாடங்களையும் ருஷ்யப்போர் முனையில் விரயம் செய்துகொண்டிருக்கும் இச்சமயத்தில், அதன் மேற்குப் புறத்தில் பிரிட்டிஷ் விமானங்கள் தகர்த்துக்கொண்டிருக்கின்றன. இவ்விதம் ஜெர்மனி இருபுறமும் நஷ்டத்துக்குள்ளாவதுதான் ஜெர்மனியைப் பிடிக்கும் சண்டையின் துவக்கம். கடும் விமானப்போர் துவக்கிய பின் முதல் மூன்று வாரங்களில் பிரிடன் நடத்தியிருக்கும் விமானப்போர் விவரத்தைக் கீழே பார்க்கலாம்:— எண்ணிக்கைகள் எவ்வளவு தடவைகள் தாக்கப்பட்டனவென்று குறிக்கின்றன.

### ஜெர்மனியில்.

ப்ரமென் 9, கீல் 5, வில்ஹெல்ம்ஷாவன் 4, பிரமெர்ஹேவன் 3, வெகர்ஸாக் 1, கக்ஸ்ஹேவன் 1, எம்டன் 5, ஹாம்பர்க் 1, கொலோன் 11, டஸல்டார்ப் 1, டூயிஸ்பர்க் 4, ஹனோவர் 1, ஒல்டன்பர்க் 3, ஆஸ்னாப்ருக் 2, பீல்பெல்ட் 2, எஸ்ஸன் 2, மாக்டிபர்க் 1, ரீன் 1, மன்ஸ்டர் 4, டார்ட்மண்ட் 1, மன்சன் கிளாட்பாக் 1, பிராங்க்பர்ட் 1, கிரெபெல்ட் 1, ரெயிட் 1, ஹாம் 1, ல்யூரு 1.



### கைவச நாடுகள்.

புலாயின் 7, டங்கர்க் 4, ராடர்டாம் 4, ஆஸ்டெண்ட் 1, ஷெர்பர்க் 4, ப்ரஸ்ட் 4, லெ. ஹாவர் 1, கலே 2, டென்ஹெல்டர் 3, டெர்ஷெல்லிங் 1, லோரியான் 1, கிரிஸ்டியான்ஸண்ட் 1, ஹாக்ஸண்ட் 2, ஹாயஸ்ப்ரக் 3, பெதூன் 4, காமினெ 2, லென்ஸ் 1, லீலே 5.

ஜூன் 16-லிருந்து ஜூலை 10-க்குள்ளாக ரூர் பிரதேசத்தில் 2,000 டன் வெடிகளும், கொலோன் மேல் 1,000 டன் வெடிகளும், ப்ரெமன் மேல் 500 டன்களும் போடப்பட்டன. பிரிடிஷ் விமானங்களால் ஏற்படும் விபத்தைத் தடுத்துக் கொள்ளுவதற்காக ருஷ்யப்போர் முனையிலிருக்கும் விமானங்களைத் திருப்பி ஜெர்மனிக்குக்கொண்டு வர நேரிட்டு, அதிலிருந்து ருஷ்யாவில்படும் சண்டை தளர்ச்சியடைகிறது. நடப்பு வாரத்தில் ஹாம்பர்க், பிரெமென், டஸல்டார்ப், சானல் துறைமுகங்கள், பாலர்மோ, ஸிஸிலி, நேபிள்ஸ் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன. ஆனால் இனித்தான் பிரிடிஷ் எதிர்ப்பு கடுமையாக்கப்படும். ஹாலிபாக்ஸ் பிரபு சொல்லியபடி வரப்போகும் 6-மாதங்களில் இந்தப்போர் அதிகரிக்கும். ஹிட்லர் பிரிடனை யெதிர்த்ததைக் காட்டிலும் அதிகமாக ஜெர்மனி தாக்கப்படும்.

## கடற்சண்டை.

அட்லாண்டிக் சண்டை.—இந்தச் சண்டை நீடிக்குமென்றும், இனித்தான் கடும்போர் ஏற்படுமென்றும் கடற்படை இலாகா மந்திரி மிஸ்டர் எ. வி. அலெக்ஸாண்டர் ஜூலை 16-ல் பேசினார். மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் சைனியங்களையும் தளவாடங்களையும் கப்பற்படை பத்திரமாய் கொண்டுபோய்ச் சேர்த்துக் கொண்டிருப்பதோடு அட்லாண்டிக்கில் வர்த்தகக் கப்பல்களையும் காப்பாற்றி வருகிறது. அட்லாண்டிக் போர் இடைவிடாது நடக்கிறது. ஆனால் எப்பொழுதும் ஆபத்துத்தான். அசந்தால் மோசம் வந்துவிடும். ஆனால் இப்பொழுது நமக்கு முன்னேயிருந்ததைவிட துணைக்கப்பல்களதிகம். கடற்கரை விமானங்களும், அமெரிக்க விமானங்களும் உதவுகின்றன, ஜெர்மனியினுடைய கப்பல் நிலயங்களையும், கப்பல்களையும், வழிகளையும் பிரிடிஷ் விமானங்கள் தாக்குகின்றன. மேலும் ஜெர்மன், இதாலியக் கப்பல்கள் ஏராளமாய் கவிழ்க்கப்படுகின்றன.

## அமெரிக்காவில் தளவாட உற்பத்தி.

ஒரு நாளைக்கு ஒரு கப்பல்வீதம் கட்டினால் எதிரி ஓடத்தான்வேண்டும் ஜூலை 10 ஒடு முடிவான 40 நாட்களில், நாளொன்றுக்கு ஒரு கப்பல்வீதம் அமெரிக்காவில் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். வரும் ஏப்ரலுக்குள் ஜெர்மனியை விட அதிகமாக விமானங்களையும், டாங்கிகளையும் அமெரிக்கா கட்டிவிடும், ஜூலை 18ல், கடன்—குத்தகை இலாகா, மேலதிகாரியான மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் சொன்னதாவது:—

'இதுவரையில் கேள்விப்படாத ஏராளமான கப்பல்களைக்கட்ட திட்டம் போட்டுவிட்டோம். இங்கிலாந்துக்கும், மற்ற ஹிட்லரை எதிர்த்துநிற்கும் ஜனநாயக நாடுகளுக்கெல்லாம் தளவாடங்களையனுப்ப போதுமான கப்பல்களைக் கட்டிவிடுவோம்.'

'புது விமானங்களைக்கட்ட பலத்த ஏற்பாடுகளாகிக் கொண்டிருக்கின்றன.'

'பிரிடனும் அமெரிக்காவும் சேர்ந்து ஜெர்மனியைவிட அதிக விமானங்களையும், சிறந்த விமானங்களையும் கட்டிவிடுவோம்.'

'இதிலிருந்து சர்வாதிகாரிகள் திகைத்துப்போய்விடுவார்கள். அந்தப் பயல்களை சாட்டைகொண்டடிப்போம்.'

**அமெரிக்காவில் ராணுவ சேவை நீடிக்கப்படப்போகிறது.**—யுனைடட் ஸ்டேட்ஸில் ஒருவருஷ சேவைக்கென்று ராணுவத்துக்கு ஆட்கள் திரட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய ஊழியகாலத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காங்கிரஸ் சபையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். உலகநிலை சென்ற வருஷத்தைக் காட்டிலும் இப்பொழுது சீர்குலைந்துவிட்டது. ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியாகண்டங்களில் ஜெர்மனி திட்டம்போட்டுக்கொண்டு அபகரித்து வருகிறது. உடன்படிக்கைகளெல்லாம் தூளாய்போயின. மேலும் அமெரிக்கா கண்டத்திலுள்ள நாடுகளைக்காப்பாற்றும் பொறுப்பு யுனைடட்ஸ்டேட்ஸுக்கிருக்கிறது. அவைகளை கைவிடுவது நம்பிக்கை மோசமாகும்.

**பொலிவியாவிலிருந்து நாஸி மந்திரியை விலக்கியாய்விட்டது.**—ஜெர்மன் மந்திரியின் சூழ்ச்சியால் பொலிவியாவில் அரசாங்கப் புரட்சி யேற்படுமென்று தெரிந்து இந்த உத்தியோகஸ்தரை 24 மணி நேரத்துக்குள் புறப்பட்டுப் போய்விடவேண்டுமென்று உத்தரவுபோடப்பட்டு அவரும் புறப்பட்டுவிட்டார். இதிலிருந்து ஏதாவது சங்கடங்கள் நேர்ந்தால் பொலிவியாவுக்கு உதவி செய்வதாக யுனைடட் ஸ்டேட்ஸ் வாக்களித்திருக்கிறது.

**யுனைடட் ஸ்டேட்ஸில் இந்திய ஏஜண்ட்.**—யுத்த நெருக்கடியால் ஏற்பட்ட அவசியத்தால், இந்தியாவுக்கும், யுனைடட் ஸ்டேட்ஸுக்கும் பரஸ்பரம் ஏஜண்டுகளை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனரபிள் ஸர் கிரிஜா சங்கர் பாஜ்பாய் யுனைடட் ஸ்டேட்ஸில் இந்திய ஏஜண்டாகவும், மிஸ்டர் மர்ரே வில்ஸன் இந்தியாவில் யுனைடட் ஸ்டேட்ஸ் ஏஜண்டாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மந்திரிகளின் அந்தஸ்துண்டு.

**மிஸ்டர் டப் கூபர்.**—அறிக்கை இலாகாவிலிருந்து மாற்றப்பட்டு, தூரக் கிழக்கில் ராணுவ, அரசியல் காரியங்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளை ரிபோர்ட் செய்ய இவர் அனுப்பப்பட்டிருக்கிறார்.

**வைஸிராயின் நிர்வாக சபை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது: தேசிய தற்காப்புக் கவுன்ஸில்.**—வைஸிராயின் நிர்வாக சபை விசாலப்படுத்தப்பட்டு அதிலிப்பொழுது 8 உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினரடங்கியுள்ளார்கள். இதோடு, இந்திய ஸமஸ்தானங்கள், தொழில், வியாபார, ராணுவ, சிறுவகுப்பினர், பிரதிநிதிகளடங்கிய 30 மெம்பர்கள் கொண்ட தற்காப்பு சபையொன்று நியமிக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக் கொருமுறை ரகஸ்யமாக வைஸிராயின் தலைமையில்கூடும். இந்த சபை ராஜதானிகளில் நடக்கும் யுத்த முயற்சிகளை மேல் அரசாங்க



முயற்சியோடு இணைத்துவைக்கும். இந்த மாறுதல்கள், இப்பொழுதிருக்கும் அரசியல் திட்டத்துக்குள்ளடங்கி, இனி ஏற்படக்கூடிய அரசியல் மாறுதலுக்கு தடையாய் நிற்காது வேலை செய்யும் யுத்த காரியங்களைப் பார்க்கும். அதிலிருந்து அரசியலும் மாறலாம். இந்தியர்கள் அதிகமாயுள்ள இந்த யுத்த அமைச்சர் சபையிலிருந்து வைஸிராய்பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுவார்.

**விஜயத்துக்கு 'வி' குறிப்பு.**—ஜெர்மானியர் பொது ஓய்வு நாளாய் வைத்த ஜூலை 20-ம் தேதியன்று 'வி' இயக்கத்தை பி. பி. ஸியின் மர்ம பிரசங்ககாரன கர்னல் பிரிட்டன் தொடுத்தார். இவர் யாரென்று தெறியவில்லை. சிலர் ராணுவ ரகஸ்ய சமாசார உத்தியோகஸ்தரென்கிறார்கள்; சிலர் அன்னிய இலாகா விமான ஆலோசகரென்கிறார்கள்; சிலர் விமான இலாகாவின் அன்னிய ஆலோசகர் என்கிறார்கள். பி. பி. ஸி. ஒன்றும் சொல்லமாட்டேனென்கிறது. 'வி' இயக்கம் பயமுறுத்தக் கிளப்பிவிட்ட பொய்யல்ல. உலகத்தில் ஸ்வதந்திரத்தைக்கோரி, நாஸிகள் ஒழிய வேண்டுமென்று எண்ணுபவர்களடங்கிய படையைக்கிளப்பும் இயக்கம். ஹிட்லர் கைவசப்படுத்தியிருக்கும் அடிமை ஜனங்கள் கலகம் செய்து ஸ்வதந்திரத்தைப் பெறவிருந்த இயக்கம்.

'வி' என்பது 'விஜயம்'. ஜெர்மன் அசுரர்களை தொலைத்து. வெற்றிபெற வீரர்கள் சேரும் இயக்கம்.

ஜூலை 20-ம் தேதி நிசியில் மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய ஒரு செய்தியை வாசித்து, கர்னல் பிரிட்டன் இந்த இயக்கத்தை பி. பி. ஸியில் பேசித் துவக்கினார். மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய செய்தியாவது:—'வி' யானது நாஸிகளை தொலைக்க நிற்கும் குறி; ஐரோப்பாவை விடுவிக்க பிடிபட்ட நாட்டார்களின் மனோ பலத்தைக் காண்பிக்கும் குறி.

'வி' படை எழுப்பப்பட்டு, கோடிக்கணக்கான மக்கள் சேரப்போவதாக கர்னல் பிரிட்டன் பி. பி. ஸி. ரேடியோவில் தெரிவித்தார். இப்படையில் சேருவதற்கு நாஸிகளைத் தொலைக்க மனதில் சபதம் செய்துகொண்டு, 'வி' குறியை கண்டவிடங்களில் வரைவதும்: தந்தியடிக்கும் சப்தங்களால் 'வி' தொனியைத் தட்டிக் காண்பிப்பதும்தான்.

இந்த இயக்கம் உலகமெல்லாம் பரவி விட்டது. சுவர்கள், ரயில்வே ஸ்டேஷன்கள், வண்டிகள், போஜன டிக்கட்டுகள்—முதலியவைகளிலெல்லாம் 'வி' எழுதப்பட்டிருக்கிறது. ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா கண்டங்களிலெல்லாம் காணப்படுகிறது. பத்திரிகைகளும், ரேடியோக்களும் இதில் சேர்ந்து கொண்டன.

ஜெர்மானியர் பிடித்து வைத்திருக்கும் நாடுகளில் இது விசேஷமாய் பரவியிருக்கிறது. ஆம்ஸ்டர்டாம், ராட்டர்டாம், ஹேக் முதலானவிடங்களில் 'வி' கொடிகள் பறக்கின்றன. பெல்ஜியத்தில் வண்டிகளிலெல்லாம் 'வி'க்குறி போடப்பட்டிருக்கிறது. பாரிஸில் எய்பல் கோபுரத்திலும், ஆஸ்லோ நகரத்திலும் 'வி'க் கொடிகள் பறக்கின்றன. ப்ராக், க்ராகவ், வார்ஸா நகரங்களில் பத்திரிகைகளிலும், சினிமாக்களிலும், வண்டிகளிலும் காணப்படுகின்றன.

ஜெர்மானியர் திகைத்துப்போய் ‘வி’ அடையாளம் தங்களுடைய வெற்றியை குறிக்கிறது என்கிறார்கள்.

ஆனால் ஜெர்மனியில் ‘வி’ என்றால் வான்ரிப்பன்ட்ராப், வான்பேபன், கிராம்யம், கொடுமை, பலி, கிருமிகளைக்காட்டும் பதங்களாகும்.

தங்களுக்கேற்பட்டிருக்கும் அவமானத்தை மறைக்க ‘வி’ தங்களுடைய வெற்றியின் அறிகுறியென்கிறார்கள். அவர்களுடைய பாஷையில் ‘ஸீக்’ (seig) என்பது தான் வெற்றியைக் குறிக்கும்மொழி.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச நேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **14—7—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—கப்பல் துறைகள், கப்பல்கள், ரயில்வே ஸ்டேஷன், சாமான் ரயில் நிற்குமிடங்கள், ஒரு தொழிற்சாலை.—செர்பர்க் (Cherbourg). | ...... | ஒரு 6,000 டன் கப்பல் தீக்கிரையாகியது. ரயில்வே ஸ்டேஷன் சேதமாயிற்று. தீப்பிடித்தது. |
| | கப்பல் துறைகள், கப்பல்கள், ரயில் வண்டிகள் நிறுத்தப்படுமிடங்கள்.—லாஹாவ்ர் (Lehavre). | 6 விமானங்கள். | சேதமாயிற்று. |
| | ரயில் வண்டிகள் நிறுத்தப்படுமிடங்கள்.—ஹேஸ்ப்ருக் (Hazebrouck). | 2 விமானிகள் பத்திரமாயிருக்கிறார்கள். | 8 விமானங்கள். |
| | பிற்பகலில்.—துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—டச்சு ப்ரிஸியன் (Frisian) தீவுகள். | நஷ்டமில்லை. | 3 கப்பல்கள் தாக்குண்டன. 1 விமானம். |
| | இரவில்.—கப்பல் துறைகள்.—ப்ரமன் (Bremen). | ...... | தீப்பிடித்தது. |
| | தொழிற்சாலைகள்.—ஹானோவர் (Honover). | ...... | சேதமாயிற்று. |
| | கப்பல் துறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **14—7—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | பல இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | **இதாலி (Italy).** | | |
| | இதாலியத் துறைமுகம்.—மெஸ்ஸினா (Messina). | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | விமான நிலயங்கள்.—எலூஸிஸ் (Elusis), ஹஸ்ஸானி (Hassani). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம்.—ஹெராக்லியான் (Heraklion). | ...... | சேதமாயிற்று. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | பெங்காஸி (Benghazi), டெர்னா (Derna), பார்டியா (Bardia). | ...... | ...... |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—கொண்டார் (Gondar) பிரதேசம். | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள், விமான நிலயங்கள், மோட்டார் துருப்புப்படைகள்.—யுத்த அரங்கமுழுவதும். | ...... | ...... |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | புகாரெஸ்ட் (Bucharest). | ...... | ...... |
| **15—7—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | 1 விமானம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானச் சண்டை.—லிபியா (Libya)வின் கடற்கரை. | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **15—7—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| மோட்டார் படைகள் | ...... | ...... |
| ருமேனியா (Rumania). | | |
| எண்ணெய்ச் சுரங்கங்கள்.—ப்ளோயஸ்டி (Ploesti). | ...... | பெருந்தீ மூண்டது. |
| **16—7—41.** (புதன்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| காலையில்.—ஒரு விரோதிச் சாமான் கப்பல் பிரான்ஸின் வடமேற்குக் கடற்கரை. | ...... | தாக்குண்டு மூழ்கடிக்கப்பட்டது. |
| பிற்பகலில்.—விரோதிக் கப்பல்கள்—ராட்டர்டாம் (Rotterdam) கப்பல் துறைகளில். | ...... | 4 பெரிய கப்பல்களும், 2 சிறிய கப்பல்களும் தாக்குண்டன. தீக்கள் கிளம்பின. |
| சாமான் கிட்டங்கிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |
| மாலையில்.—விரோதி எண்ணெய்க் கப்பல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... மூழ்கடிக்கப்பட்டது. |
| இரண்டு சாமான் கப்பல்கள்.—பிரான்ஸி (France)ன் மேற்குக் கடற்கரை. | ...... | சேதமாயிற்று. |
| விரோதி சாமான் கப்பல்.—நார்வே (Norway) கடற்கரை. | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| இரவில்.—தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பிரதேசங்கள்.—ஹாம்பர்க் (Hamburg). | ...... | தீயும், வெடிச் சத்தமும் கேட்டன. |
| கப்பல் துறைகள், சாமான் கிட்டங்கிகள்.—புலாயின் (Boulogne). | 3 விமானங்கள். | ...... |
| மற்ற முக்கியமான இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **16—7—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| துணைக்காவலோடு விரோதிக் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli) கடற்கரை. | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. |
| விரோதிக் கப்பல், எண்ணெய்க் கப்பல், துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) | ...... | எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| சிறிய துறைமுகங்கள், நிலக்கரி கிட்டங்கிகள், ரயில் வண்டிகள் ரிபேர் செய்யுமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீப்பிடித்தது. |
| சைனியங்கள் வசிக்குமிடங்கள், மின்சார உற்பத்திசாலை, ராணுவ மோட்டார்கள் வைக்குமிடங்கள்.—டெர்ணு (Derna). | ...... | தீயும், வெடிச்சத்தங்களும் கிளம்பின. |
| பார்டியா.—(Bardia). | ...... | ...... |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| தரையிலிருக்கும் விமானங்கள், விரோதி மோட்டார் படைகள்.—போர் முழுவதும். | ஜூலை 15, 16 தேதிகளில் 23 விமானங்கள். | ஜூலை 15, 16 தேதிகளில் 98 விமானங்கள். |
| **17—7—41.** (வியாழக்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| காவல் புரிதல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 6 விமானங்கள். | 9 விமானங்கள். |
| இரவில்.—தொழிற்சாலைகள்—ரைன்லாந்தும் (Rhineland), முக்கியமாக கொலோன் (Cologne). | ...... | எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம். |
| 4,000 டன் நிறையுள்ள கப்பல்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகள். | 1 விமானம். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 17—7—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலி (Italy).** | | |
| | கடற்படை நிலயம், யுத்தக் கப்பல்கள்.—பாலர்மோ (Palermo). | ...... | ஒரு யுத்தக் கப்பல் தாக்குண்டது. |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயங்கள்.—ஜெர்பினி (Gerbini) அகஸ்டா (Augusta). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—டெர்ணு (Derna). | ... | தீயும், வெடியும் |
| | துறைமுகம், கப்பல்கள்.—பார்டியா (Bardia). | நஷ்டமில்லை. | கிளம்பின. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள்.—போர்கள முழுவதும். | 6 விமானங்கள். | 39 விமானங்கள். |
| 18—7—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.–கப்பல்கள்–பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ... | 1 விமானம். |
| | ஒரு சாமான் கப்பல்.–டன்கர்க் (Dunkirk). | 3 விமானங்கள். | மூழ்கடிக்கப்பட்டது. |
| | இரவில்.—தொழிற்சாலைகள் உள்ள பிரதேசங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| | கோண்டார்.—(Gondar). | ...... | சேதமாயிற்று. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | கவசமணிந்த மோட்டார் படைகள், விமானங்கள்.—போர்களம் முழுவதும். | ...... | 32 விமானங்கள். |
| | **பின்லாந்து (Finland).** | | |
| | முக்கியமான இடங்கள்.—பின்லாந்து (Finland). | 2 விமானங்கள். | பலத்த சேதம். |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 19—7—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | |
| | பகலில்.—விரோதி துணைக்காவல் கப்பல்கள் டச்சு (Dutch)க் கடற்கரை. | ... | 4 கப்பல்கள் சேதமாயின. |
| | கப்பல் துறைகள்.—டன்கர்க் (Dunkirk). | 5 விமானங்கள். | 4 விமானங்கள். |
| | துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—நார்டர்னி (Norderney). | ...... | 2 கப்பல்கள் எரிந்து போயின, 2 கப்பல்கள் சேதமாயின. |
| | எண்ணெய்க் கப்பல்.–பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | ...... |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—ஹானோவர் (Hanover), ரைன்லாந்தி (Rhineland)ல் மற்றும் சில இடங்கள். | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ராணுவத் தலைமைக் காரியாலயங்கள், ராஜாங்க கட்டடங்கள், ரயில் வண்டிகள் நிறுத்துமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீயும் வெடிச் சத்தமும் கிளம்பின. |
| | மின்சார உற்பத்திசாலை, ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.–ட்ரிபோலி (Tripoli). | ...... 2 விமானங்கள் | மின்சார உற்பத்திசாலை தகர்க்கப்பட்டது. |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயம்.—கடானியா (Catania). | நஷ்டமில்லை. | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள், மோட்டார் படைகள், தரையிலிருக்கும் விமானங்கள்.—போர்களம் முழுவதும். | ...... | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

20—7—41. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France), இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| விரோதி எண்ணெய்க் கப்பல், துணையாக கூடவரும் விமானம் சுடும் பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் கப்பல்—பிரான்ஸ் (France) கடற்கரை. | ...... | எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| இரவில்.—தொழிற்சாலைகள் நிறைந்திருக்கு மிடங்கள்—ரைன்லாந்து (Rhineland)ம், அதில் முக்கியமாக கொலோன் (Cologne). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |
| படையெடுப்பு.—பிரான்ஸிலுள்ள விரோதி விமான நிலயங்கள். | ...... | சேதமாயிற்று |
| பாதுகாத்தல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| தொழிற்சாலை கட்டடங்கள்.—ஆசென் (Aachen). | 1 விமானம் | ...... |

இதாலி (Italy).

| | | |
|---|---|---|
| துறைமுகம், ரயில் வண்டிகள் நிற்கு மிடங்கள்.—நேபிள்ஸ் (Naples). | ...... ...... | தீயும், வெடிச் சத்தமும் கிளம்பின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| கப்பல் துறைகள்.—பெங்காஸி (Benghazi) | ...... | ...... |

ருஷ்ய விமானங்களால்.
கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விமானச்சண்டைகள்.—விரோதி விமான நிலயங்கள். | ...... | 25 விமானங்கள். |

கருங்கடல் (Black Sea).

| | | |
|---|---|---|
| விரோதி டார்பிடோ குண்டு வீசும் படகு.—கருங்கடல் (Black Sea). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. விரோதி விமானப் படையெடுப்பு விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

15—7—41. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

விரோதி விமான நடமாட்டமேயில்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| சைப்ரஸ் (Cyprus) | ... | சேதமில்லை. |

ருஷ்யா (Russia).

| | | |
|---|---|---|
| விமானச் சண்டைகள்—யுத்தகளம் முழுவதும். | 52 விமானங்கள். | 24 விமானங்கள். |

16—7—41. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

| | | |
|---|---|---|
| பகலில்.—இங்கிலாந்து (England)ன் தெற்குக் கடற்கரை. | 1 விமானம். | சேதமேயில்லை. |
| இரவில்.—சில இடங்கள்—கிழக்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (England). | 1 விமானம். | சேதம் சொற்பம், காயம்பட்டவர்களும் சொற்பம். |

17—7—41. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

| | | |
|---|---|---|
| இரவில்.—ஒரு பட்டணம்—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ... | சொற்பச்சேதம். |
| சிற்சில இடங்கள்—இங்கிலாந்து (England). | ... | ... |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| மால்டா (Malta). | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |

ருஷ்யா (Russia).

| | | |
|---|---|---|
| ஸ்மலென்ஸ்க் (Smolensk). | ... | ... |

18—7—41. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

| | | |
|---|---|---|
| பகலில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | ... | 2 விமானங்கள். |
| இரவில்—ஓரிடம்—கிழக்குப்பிரதேசத்தில் ஓரிடம். | ... | ... |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| சைப்ரஸ் (Cyprus). | 1 விமானம். | சேதமேயில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 19—7—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—மிட் லண்ட்ஸ் (Midlands). | ...... | சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | ஒருவன் மாண்டான். 7 பேருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் கப்பல்கள்.—வட ஆபிரிக்கா (Africa) க் கடற்கரை. | ...... | விரட்டியடிக்கப் பட்டன. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | ஸோவியத் கடற்படையைச்சேர்ந்த சில கப்பல்கள்.—எஸ்தோனியன் (Estonian) தீவுகள். | ...... | ...... |
| | பட்டாளங்கள்.—ஸோவியத் (Soviet), பின்னிஷ் (Finnish) எல்லை. | ...... | ...... |
| 20—7—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad) | ... 11 விமானங்கள். | சொற்பச்சேதம். |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பிரிடனி (Britain) ல் ஓரிடத்திலும் விமான நடவடிக்கையே இல்லை. | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad) | ... 8 விமானங்கள். | 4 விமானங்கள். |
| | மாஸ்கோ (Moscow) | ... 22 விமானங்கள். | சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். |



# யுத்தக் குறிப்புகள்.

## பலவான அபிப்பிராயங்கள்.

நம்முடைய வருஷமலரைப்பற்றி சில நண்பர்கள் நல்வார்த்தைகள் கூறியிருக்கிறார்கள். நமக்கு ஆசிமொழிகளும் கூறியிருக்கிறார்கள். எதற்காக ஆசிமொழிகள் என்றுதான் புரியவில்லை. எவ்வளவு காலம் நம்முடைய அறிக்கைகள் பிரசுரமாகும் என்று அவர்கள் நம்புகிறார்கள்' என்பதைப்பற்றி ஒருமுகமான அபிப்பிராயத்தைக்காணோம். நாம் பிரசுரித்திருக்கும் வருஷ மலர் கடைசி மலராக இருக்கவேண்டும் என்று ஒரு நிருபர் நம்புகிறார். மற்றொருவர் நிச்சயமாக 1943-ஆம் ஆண்டில் பிரசுரிக்கவேண்டிய அவசியமிராது என்கிறார். மற்றொரு உத்தமர் அடுத்த வருஷம் ஜூலை மாதம் மத்தியம்வரை யுத்தம் நடவாதென்கிறார். நாம் என்ன நினைக்கிறோம். ஆகாயக் கோட்டைகட்டுவது நம்முடைய வழக்கமல்ல. பரிபூர்ணவெற்றி நம்முடையதாகும்வரை (இவ்வுலகெங்கும் அடிக்கும் இப்பெரும்புயல் அடங்கும் சமயம் வெற்றியாருக்குக்கிடைத்தால் என்ன அதன் பயன்தான் என்ன) ஹிட்லரும், நாஸியமும், அதன் லக்ஷியங்களும், மனோரதங்களும் உலகத்திலிருந்து ஒழிக்கப்படும்வரை யுத்தம் நடந்தே தீரும். மத்தியில் முடிவடையாது! இத்தொல்லையானவேலை நிறைவேற சிறிதுகாலம் பிடிக்கும். அவ்வளவேகாலம்தான் எங்கள் வாராந்திரப் பத்திரிகையும் யுத்த வழியைக் காட்டி பிரசுரிக்கப்படும். ஆகையால் இப்பொழுது உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டதல்லவா?

## புதிய ஸிரியா.

ஸிரியாவில் காரியங்கள் துரிதகரமாகவே நடந்தேறின. நேசதேசத் துருப்புகள் அலப்போ நகரத்திற்குள் பிரவேசிக்கப்போவதாக இன்று காலைப் பத்திரிகைகள் விளம்பரப்படுத்தின. பெய்ரூட்டில் துருப்புகள் வரவேற்கப் பட்டதுபோல் அலெப்போவிலும் வரவேற்கப்படுவார்கள் என்று எண்ணுகிறோம். டமாஸ்கஸ், பெய்ரூட், அலெப்போ முதலிய இடங்களையும் பாலஸ்தீனத்திற்கும் துருக்கிக்கும் மத்தியிலுள்ள முக்கியமான விமான தளங்களையும் நாம் பிடித்துக் கொண்டதால் நமக்குள்ள நன்மைகளோடு, ஸிரியர்களுக்கு நம்மால் காரியமாக வேண்டியிருக்கிறது. விஷி ஸர்க்காருக்குச் சாதகமாக ஸிரியர்கள் இல்லை. ஹூணனைக்கண்டால் அவர்கள் பயப்படுவதுடன் அவனைப் பகைக்கிறார்கள். தங்கள் தேசம் ஒரு பொது அமர்களமாக ஆவதில் அவர்களுக்கு இஷ்டமில்லை. அதனால் தங்கள் பட்டணங்களிலுள்ள ஜனங்களுக்கும் கிராமவாஸிகளுக்கும் ஏற்படும் கஷ்டங்களையும், அவர்களுடைய வர்த்தகம், அரசியல் முதலிய துறைகளுக்கு ஏற்படக்கூடிய காரிய தாழ்வுகளையும் அவர்கள் நன்கறிவார்கள்.

நேசதேசத்தார் ஸிரியாவை வியாபிக்க வெகுகாலதாமதம் செய்ததாக சிலர் குறைகூறுவதைக் கேட்டோம். ஒரே ஒருமாதம் தான் பிடித்தது. பிரெஞ்சுக்காரரும் அவர்களது குடியேற்ற நாட்டுத்துருப்புகளும் தங்கள் ராணுவ பிரமாணத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வெகு ஊக்கத்துடனும் சாமர்த்தியத்துடனும் எதிர்க்க எண்ணினார்கள். போர்க்கள பூமி சந்நிவேசமும் வெகு

சிரமத்தைத் தரக்கூடியதாகயிருந்தது. அதிலும் நமக்காவது எதிரிகளுக்காவது அதிக உயிர்ச்சேதமின்றி முடிந்ததே சேனாபதிகளான வில்ஸன், கருத்ரு இவர்களுடைய அரசியல் தந்திரத்தையும் யுத்த நைபுண்யத்தையும் காட்டுகிறது.

இப்பொழுது நேசதேசத்தாருடையவோ, ஜெர்மானியருடையவோ, முற்றுகையிலிருந்து ஸ்வதந்திரம்பெற்று வர்த்தகத்தை விருத்திசெய்ய முற்படலாம்.

துருக்கியருடைய நீர் நில போக்குவரத்து சாதனங்கள் அபாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டதால் துருக்கியர் சந்தோஷமடைந்திருக்கிறார்கள். அச்சுதேசத்தாருடன் ஒப்பிடுமளவில் துருக்கியின் பலம் அதிகப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் வெளி கொத்தளம், போன்ற ஸூயஸ் கால்வாய் சாவதானப் படுத்தப்பட்டதால் இந்தியாவும் களித்திருக்கிறது.

மத்திய ஆசியாவிலுள்ள முஸ்லீம் தேசங்களில் போரைப் பரப்பி தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அச்சரசுகளின் கொள்கையையும், முஸ்லீம் தேசங்களுக்கு சமாதானம், சாவதானம், ஸ்வதந்திரம் இவைகளை ஸ்தாபிக்க பிரிடன் கொண்டிருக்கும் உண்மையான அக்கரையையும் மத்திய ஆசியாவிலுள்ள தேசங்கள் இப்பொழுது ஒப்பிட்டுப்பார்க்கும்.

ஸிரியாவில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் 2,500-பேர்களில் பாதி ஸ்வதந்திர பிரெஞ்சுச் சேனையைச் சேர்ந்தவர்கள் என்றால் சேனாபதி டிகாலின் இயக்கத்தின் முக்கியத்துவம் தெரியவரும்.

## மகத்தான நில யுத்தம்.

ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்ததைப்பற்றி இவ்வறிக்கையின் மற்றொரு பாகத்தில் காண்பீர்கள். ஆகையால் அதைப்பற்றிச் சுருக்கமாக இங்கு சொல்லப்படும். ஜெர்மானியர் முன்னேறுவதாகவும், ஸ்மலன்ஸ்கைப் பிடித்துவிட்டதாகவும் லெனின்கிராட் சீக்கிரம் விழுந்துவிடும் என்றும் அவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் 10-நாட்களில், அல்லது மூன்று வாரங்களில் ருஷ்யாவைத் தோற்கடிப்பதாக ஜெர்மானியர் இப்பொழுது சொல்லிக்கொள்ளவில்லை. ருஷ்யரின் விமான பலத்தைப்பற்றி தங்களுக்கு உண்மையை உரைக்காமல் ஏமாற்றிவிட்டதாக ஜெர்மன் போர் வீரர்கள் குறைகூறுகிறார்கள். இந்த ஒரு மாதக் கடும்போரில் அவர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று நாம் சொல்லமுடியாது. ஆனால் அவர்களை எதிர்க்கும் ருஷ்யச் சேனையோ திருப்தியற்ற கூட்டமல்ல. தேச பக்தி நிறைந்தவர்கள். பயிற்சியற்ற, அநுபவமற்ற, அதிகாரிகளற்ற துருப்புகளல்ல. தற்காலத்திய யந்திர சாதனம் கொண்ட சேனை. எண்ணிக்கையில் ஜெர்மன் சேனைக்கு ஒப்பானது. யுத்தத்திற்காக சேகரித்து அப்புறப்படுத்தியிருக்கும் சேனையோ ஜெர்மன் சேனையைக் காட்டிலும் பெரிது. இம் "மின்னல் போர்" பல மாதங்கள் மிகுந்த நஷ்டத்துடன் நடக்கவேண்டியிருக்கும். மாரிகாலமும் வந்து இரவுகளும் குறுகினால், போரின் "மின்னல்" மழுங்கிவிடும்.



## லிட்வினாவ்.

1939-ம் ஏப்ரல் மாதத்தில் வெளிநாட்டு காரியாலயத்திலிருந்து விலகி மௌனம் சாதித்த லிட்வினாவ் நாளது ஜூலை மீ 8உயன்று ருஷ்யர்களுக்கு ஒலி பரப்பினார். அவர் அயல்நாட்டு மந்திரியாகயிருந்தகாலத்தில் ஜனநாயகங்களுடனும், சர்வதேச சங்கத்துடனும் ஒத்துழைக்கவேண்டுமென்று பாடுபட்டார். பிறகு அவர் திடீரென்று மறைந்தார். ருஷ்யாவில் நம்பிக்கை வைத்தவர்கள் கவலைப்பட்டார்கள். மேற்கிலிருந்து கிடைக்கும் நன்மைகளைக்காட்டிலும் அதிகமாக ஜெர்மனியிடமிருந்து அடையலாமென்று ஸ்டாலின் எண்ணி, ஜெர்மானிய-ருஷ்ய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். இப்பொழுது மறுபடி லிட்வினாவ் அரசியல் மேடைக்கு வந்து ஸ்டாலினைப்போலவே தேசபக்தி ததும்பும் சொற்களைப் பொழிவது வெகு ஸ்வாரஸ்யமானதே.

அச்சொற்பொழிவின் சிறிது நேரத்திற்கெல்லாம் திரு. சர்ச்சில் அவர்களும் ருஷ்யர்கள் இப்பொழுது நமது நண்பர்கள் என்று தெளிவாக உலகத்திற்கு வெளியிட்டார். இவ்வசனங்கள் ஜனநாயகங்களுக்குத் தைரியத்தை அளித்தது. மேலும், வெகு சீக்கிரம் தோற்றுப்போகப்போகும் ஒரு தேசத்துடன் சிநேகம் கொண்டிருப்பதாக திரு. சர்ச்சில் அவர்களைப்போன்ற புகழும், புத்தியும் வாய்ந்த ஒருவர் சொல்லுவதென்றால் சாதாரணமா? "எதிரியை நாம் ஒன்றுசேர்ந்து அடிக்கவேண்டும். ஒரேகாலத்தில் ஓயாமல் அடிக்கவேண்டும்" என்று லிட்வினாவ் சொன்ன வீரவார்த்தைகளின் த்வனியை ஒட்டியே நம் பிரதம மந்திரி பேசினார். ஜனநாயகத்தையும், சமதர்மத்தையும் பிரித்துவைக்க ஹிட்லர் செய்த பிரயத்தனம் பலிக்கவில்லை.

## ஜப்பானியரின் தர்ம சங்கடம்.

பிரிடன், அமெரிக்கா, ஜெர்மனி மூன்று தேசங்களும் ஜப்பானியரின் அரசியல் உணர்ச்சிகளை அறியமுடியவில்லை என்றால் நம்மால் முடியுமா? ராஜகுமார் கோனாயே ராஜிநாமா கொடுக்கிறார். புதிய மந்திரிசபை அமைக்கிறார். ராணுவ அசாமிகள் அதனால் ராணுவ கொள்கை பலப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். தேசத்தின் பொருளாதார நிலையையும், ராணுவப் பணச் செலவையும் கண்டிக்கும் முதலாளிகள் இனிமேலாவது நம் வார்த்தை ஏறும் என்று நம்புகிறார்கள். மத்ஸூவோகாவுக்கு ஜலதோஷம். அவரிடம் ராஜிநாமாபெற ஒருவர் அவர் வீட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. இறுதியாக வந்த மந்திரி ஜாப்தாவில் அவருடைய பெயரைக்காணவில்லை. அவர் சிறிது காலத்துக்குமுன் ஸ்டாலினிக்கும், மாலடோவுக்கும் தன் கையெழுத்திட்ட படத்தை அனுப்பியதுபோல் இப்பொழுது ஹிட்லருக்கு அனுப்பினதாகப் பத்திரிகைகள் கூறவில்லை. எல்லாம் ஒரு குழப்பமாக இருக்கிறது. நாம் கொஞ்சம் எல்லாச் சிக்கல்களை எடுத்துப் பிரிக்கப் பார்ப்போம். தூரக்கிழக்குப் பிரதேசத்தில் ருஷ்யாவுடன் சண்டைசெய்யவேண்டுமென்று ஜெர்மானியத் "தார்" குத்தித்தள்ளுகிறது. "கீழப் பிரதேசத்தில் புதிய திட்டம்" என்ற கொள்கை தெற்கே இழுக்கிறது. சைனாவிலுள்ள

கஷ்டத்தைக் குறித்து, ஜெர்மனியைப் பொருட்படுத்தாது தெற்கே சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று ஆசையிருக்கிறது. இம்மாதிரியான பலவிதமான ஆகர்ஷணங்களுக்கு மத்தியில் இந்த உலகத்திலே ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கக்கூடிய ஒரு கொள்கை பகிரங்கப்படுத்தப்பட்டது. அது என்ன தெரியுமா? "ஜப்பான் ஜாக்கிரதையாகவும் தயாராகவும் இருக்கவேண்டும்" என்பதே.

ஜப்பானுக்கு புதிய திட்டத்தில்தான் அதிகப் பிரியம் என்று தெரிகிறது. ஜப்பானியர் ஏற்கனவே இண்டோ சீனத்தில் கால்வைத்துவிட்டார்கள். சைகோனுக்கு அருகேயுள்ள கம்ரான் வளைகுடாவில் சில சலுகைகள் அபேக்ஷிக்கிறார்கள். தாய்லாந்திலிருக்கும் தங்கள் செல்வாக்கை உபயோகிக்க நினைப்பார்கள். அவர்களுடைய கடற்படை ராணுவத்தைப்போல் யுத்தத்தால் களைப்படையாமல் உத்ஸாகத்தோடு இருப்பதால் அதை உபயோகிக்க எண்ணுவார்கள்; இவைகள் எல்லாம் செய்தாலும், அமெரிக்காவோடு போராட்டம் இன்னும் ஏற்படாமல் இருக்கும்.

வடக்கே பிரவேசிக்கலாமென்றால், ஜெர்மானியருக்குத் திருப்தியை அளித்த போதிலும், சீனாவில் சைனியத்தை அதிகரிக்கவேண்டும். அதோடு ஒரு பெரிய புதிய எதிரியைத் தலையில் வரவழைத்துக்கொண்டதாகும். இது ஒரு பெரிய அபாயகரமான பொறுப்புதான். ஏனெனில் நிச்சயம் அமெரிக்காவோடு சண்டை ஏற்படும். ஏனெனில் இப்பொழுது வெடிமருந்து சாமான்கள் நிறைந்த அமெரிக்கக் கப்பல்களை ருஷ்யாவுக்குக் கொண்டுபோக வ்ளாடிவாஸ்டாக் என்ற துறைமுகத்தை அமெரிக்கர் பகிரங்கமாக உபயோகிக்கிறார்கள். அவைகளை நிறுத்தும்படி ஜெர்மானியர் ஜப்பானியரைக் கேட்பார்கள். அப்படி ஜயமடைந்தாலும் குளிர்மிகுந்த பொட்டல் பிரதேசங்கள்தான் கிடைக்கும். ஜப்பானியருக்குக் குளிரென்றால் பயம். மஞ்சுகுவோவைப் பிடித்து அதில் 3 கோடி சீனரைக் குடியேற்றினதுபோல் தானாகும்.

## பிற்பட்ட செய்திகள்.

இன்று கிடைத்த செய்தியிலிருந்து ஜப்பான் புதிய மந்திரி சபையும் "காத்துப்பார்ப்போம்" என்ற ரகமாகத்தானிருக்கிறது. மத்ஸுவோகா இல்லாதது ஒன்றுதான் பேதம். "காப்ப"தென்றால் ருஷ்ய-ஜெர்மனி யுத்தம் தெளிவாகும் வரையில் என்றும், "பார்ப்ப"தென்றால் இண்டோ-சைனா, தாய்லாந்து இவைகளைப் பார்ப்பதென்றும், ஆனால், சிங்கப்பூர், டச்சுக் கிழக்குத்தீவுகள் இவைகளின்பேரில் ஒரு கவனமான கண்ணோட்டத்தோடு பார்ப்பதென்றும் தோன்றுகிறது. ஒருக்கால் ஜெர்மானியர் வெற்றிபெற்றால், நம் கிழக்கு அலங்கமான சிங்கப்பூரை ஜப்பானியர் தாக்கத் துணிவார்கள். ருஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்கு வெற்றியில்லாமலடித்துவிட்டால், பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் பகைத்துக்கொள்ளாமல் ஜாக்கிரதையாகவிருக்கும்.



## ஐஸ்லாந்து விளைவுகள்.

யுத்த தந்திரப்படி கவனித்தால் அமெரிக்க ஐக்கிய ஸமஸ்தானங்கள் ஒரு தீவு என்றே சொல்லலாம். பிரிட்டனைப்போல் அதன் சாவதானம் கடல் பலத்தை ஒட்டியதாகி விட்டது. ஜெர்மானியர் ஜயிக்கவேண்டுமென்றால் அட்லாண்டிக் சமுத்திரத்தை ஜெர்மானிய ஏரியாகச்செய்தாகவேண்டும். ஆனால் அமெரிக்க சேனைகள் இப்பொழுது ஐஸ்லாந்தில் அதாவது ஸ்காட்லாந்திலிருந்து 600 மைல்களுக்கருகேயிருக்கின்றன. ஆகையால் அமெரிக்காக் கடல் ஸ்வாதந்திரியத்தை நிலைநிறுத்தவேண்டும். ஹிட்லரே வர்த்தகக்கப்பல்களை மூழ்கடிக்கும் பாத்தியத்தை நிலைநிறுத்த பிரயத்தனப்படுகிறான். ஒன்று ஹிட்லர் அமெரிக்க சங்கல்பத்தை ஏற்றுக்கொண்டு அட்லாண்டிக் யுத்தத்தை இழக்கவேண்டும், அல்லது அமெரிக்கா ஐஸ்லாந்தைக் காலிசெய்து, பிரிட்டனுடைய உயிர் நாடியை அறுக்கச் செய்து தானும் மரணாபாயத்துக்குள்ளாகவேண்டும்.

இவை தான் உண்மையான நடப்புகள். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தன் கடல் படைக்கு உத்தரவு செய்து அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள அச்சின் ஆக்கிரமணத்தை ஒழிக்கச் சொல்லவில்லை (கர்னல் நாக்ஸும் இன்னும் பலரும் அவ்வாறு அபேக்ஷித்தார்கள்). ஆனால் ஐஸ்லாந்தை வியாபித்துக் கொண்டதிலிருந்தே அம்மாதிரியான சந்தர்ப்பத்துக்கருகே வந்துவிட்டார் என்பது நிச்சயம்.

## இன்னும் தெற்கே.

ஜெர்மானியர் நார்வேயில் செய்திருக்கும் யுத்த பிரயத்தனங்களைத் தடுக்க அமெரிக்கர் முந்திக்கொண்டபடியால் தென் அட்லாண்டிக்கில் ஜெர்மானியர் கவனம் செலுத்தி மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள டாகார், கஸாபிளாங்கா என்ற துறைமுகங்களைப் பிடித்துக்கொண்டு அமெரிக்காவின் பக்கம்—ஒருக்கால் பிரேஸில் மீது இருக்கலாம்—பாய்வதற்குத் தயார் செய்கிறார்கள். நம்மைப் போல் அமெரிக்காவும் இமைக் கொட்டாது கவனிக்கிறது. மேலும், மேற்கு ஆப்பிரிக்காவில் ஸெனிகாலுக்குத் தெற்கேயுள்ள காம்பியாவில் ஒரு துறைமுகத்தை நாம் அமெரிக்காவிற்கு மேற்கு இந்தியத் தீவில் குத்தகை விட்டது போல் குத்தகையாக விடலாமென்று ஒரு ஸ்வாரஸ்யமான அபிப்பிராயம் பிரிடிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. அப்பொழுது விஷி டாகாரை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுக்க துரோக சிந்தை கொண்டாலும், அதன் கொடுக்கை வாங்கிவிடலாமென்று உத்தேசம் கூறப்படுகிறது. இது ஒரு நல்ல யோசனை தான். ஆனால் இதுவரை அமெரிக்கா பிரெஞ்சு வட ஆப்பிரிக்காவுக்கு சரக்குகள் தன்னுடைய மேல் பார்வையின் பேரில் அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பினால் விஷி ஸர்க்கார் அச்சரசுகளுடன் சேர சேனாபதி வேகாண்ட் உடன்படாமலிருக்கலாமென்று அமெரிக்கா நினைக்கிறது. டாகாரைத் தாக்குவதற்கான சமீபத்தில் அமெரிக்காவிற்கு ஒரு படைத்தளம் கொடுப்பதே வெகு மேலானதென்று தோன்றுகிறது.

## இரு முனைகளில் ஆகாயப் போர்.

## ருஷ்யா-ஜெர்மனி ஆகாய பலம்.

## நாஸி யுத்த முறைகளுக்குப் போட்டியாக ஸோவியத் திட்டங்கள்.

## இலக்குகளின் தூரந்திய விரிவால் விளைவுகள்.

(பி. பி. ஸியில் ஆலிவர் ஸ்வேர்ட்டின் ஒலிபரப்பு).

யுத்த முனைகளிலிருந்து சமாசாரம் கிடைப்பது அரிது. அதிலும் பின்லண்டு முதல் கருங்கடல் வரை பிரமாண்டமான நீளத்துக்கு விரிந்து கிடக்கும் ஜெர்மனி ருஷ்யாவை தாக்கும் யுத்த முனையைப் போல குறைந்த தகவல் கிடைக்கும் போரரங்கம் இருக்க முடியாது. பரந்த தூரங்கள்; போக்கு வரத்து சாதனங்கள் கிடையாது; ஆனதால் நிகழ்ச்சிகளுக்கு வெகு காலம் கிரமித்து அல்லாமல் சமாசாரம் எட்டுகிறதில்லை.

எதிரிகளின் இரண்டு விமானப் படைகளுக்கு முன் நிற்கும் அடிப்படையான பிரச்னைகள் என்ன? இவற்றை நாம் அறிந்தால் தற்பொழுது நடக்கும் யுத்தம் நமக்கு தெளிவாகும்.

இரு புறத்திலும் இரு பிரமாண்ட விமானப் படைகள். சங்கியையில் ஒன்றுக்கு ஒன்று இளைத்ததல்ல. ருஷ்யப் படை, கட்டுவதில் எவ்வளவு குறைகள் இருந்த போதிலும், கற்பனா சக்தி மிகுந்தது. வாஸ்தவத்தில், யுத்தத்தில் ஆகாயப் படையை உபயோகிப்பதைப் பற்றி, ருஷ்யா மிக்க தீர்க்க தரிசியாக இருந்திருக்கிறது.

ஜெர்மனி கையாளும் முறைகள் ருஷ்ய கற்பனையின் விளைவு—யுத்த நடவடிக்கைகளில் ஆகாய மூலம் மனிதர்கள் சாமான்களை தூக்கிச் செல்வது என்ற எண்ணமே ருஷ்யாவின் உற்பத்தி. பாரசூட் மூலம் துருப்புகளை இறக்குவது டாங்குகளை இறக்குவது, இவைகளைக் கண்டு பிடித்தது ருஷ்யா.

பாக்கி தேசங்கள் பெரும் விமானங்களைக் கட்ட அஞ்சின; ருஷ்யாவில் இந்த அச்சம் இல்லை. மற்ற எத்தேச விமான நிர்மாணத்தைக் காட்டிலும் ருஷ்ய நிர்மாணத்தில் கற்பனை தலை தூக்கி நிற்கிறது. முதன் முதலில் இவைகள் அசம்பாவிதம் என்று ஏளனம் செய்யப்பட்டன. இப்பொழுது அவைகளில் அநேகம் அனுஷ்டான சாத்தியமாகி விட்டன.

வெளியில் நின்று பார்ப்பவனுக்கு இரு படைகளின் தோற்றம் இது:— ருஷ்ய கிரப்பில் ஒரு கற்பனை மிக்க படை, ஜெர்மன் கிரப்பில் நன்றாக விருத்தி அடைந்த ஒரு படை; ஒரு புறம் மனவிரிவு, மற்றொரு புறம் தொழில் விருத்தி. கிட்டத்தட்ட நிலைமையை இவ்வாறு வகுத்துக் கூறலாம். இது கூறி இந்தப் புதிய போர் முனையில் சாதக பாதகம் செய்யக் கூடிய சில விசேஷ அம்சங்களைக் குறித்துக் கூறுவோம்.

### விசேஷ அம்சங்கள்.

இதுவரை ஜெர்மனி தாக்கிய பிரதேசங்களின் அளவு சிறிது, ஜன நெருக்கமும் ஜாஸ்தி. ருஷ்யாவிலோ நகரங்களும் வாசஸ்தலங்களும் சிதறி இருக்கின்றன, தூரங்களும் ஜாஸ்தி.



இரு கிரப்புக்கும் போக்குவரத்துகளின் நீளம் ஜாஸ்தி. தற் போதைய விமானப் படையை இது மிகவும் பாதிக்கிறது. ஒவ்வொரு விமானப் படைக்கும் அநேக தனி ஸாதனங்களும் நுண்ணிய யந்திர சௌகர்யங்களும் தேவை. அவற்றில் சிலதை ஆகாய மூலமாகவே கொண்டு போகலாம்; சிலதை தரை மீது தான் கொண்டு போக வேண்டும்.

பலத்த ஆகாயத்தாக்குதல் செய்ய வேண்டுமெனில் முன்னணிக் கொத்தளங்களுக்கு இடைவிடாமல் ஸப்ளைகள் போய்க் கொண்டிருக்க வேண்டும். எதிரிகளின் தாக்குதலுக்கிடையேயும் இம்மாதிரி ஸப்ளைகளைக்கொண்டு வருவதில் ஜெர்மானியர் வல்லவர் என்பதை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் மற்ற இடங்களைக் காட்டிலும் ருஷ்யாவில் ஜெர்மானியருக்குக் கஷ்டம் அதிகரிக்கும். ஜெர்மானியரின் போக்குவரத்து சாதனங்களை இடையூறு செய்ய ருஷ்யர்கள் எந்த அளவு சாதிக்கிறார்களோ அந்த அளவு அவர்களுக்கு வெற்றி.

ருஷ்யாவில் போக்குவரத்து சாதனங்கள் மற்றொரு திண்டாட்டம். நவீன சைனியங்களின் தளவாடங்களை தாங்கக்கூடிய ரோடுகளோ ரயில்களோ அதில் அதிகமில்லை. பாம்களை வீசுவதில் இலக்குகள் ஒரே இடத்தில் இருக்க இருக்க அவை பிரயோஜனமுள்ளவை. பாமிங் விமானத்துக்கு ஒரு முக்கிய இலட்சியமும், இரண்டாவது இலட்சியமும், சிலதடவை மூன்றாவது இலட்சியமும் கூட உண்டு. விமானி முக்கிய குறியை நோக்கித்தான் செல்ல வேண்டும். ஆனால், ஆகாய நிலைமை, அல்லது எதிரிகளின் குறுக்கீடு, அல்லது மெஷின் தொந்தரவு ஏற்பட்டால் அவன் இரண்டாவது இலக்கை குறித்துச் சென்று அதன் மீது பாம்கள் வீசலாம்.

இலக்குகளைத் திட்டம் செய்வதில் விமானம் செல்லும் மார்க்கம் முக்கியமானது. ஜெர்மன் பாமர் இங்கிலாந்துக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். அதன் இரண்டாவது இலட்சியம் முதல் இலட்சியத்தைப் போல் அவ்வளவு முக்கியமாகவே இருக்கும். நமது நகர்களும் தொழிற் பிரதேசங்களும் நெருங்கி நிற்கின்றன. ஆனதால் இலக்கு இல்லாத ஒரு பிரதேசமுமில்லை என்றே சொல்லலாம்.

ருஷ்யாவிலோ தக்க இலக்குகளாகக்கூடியவைகள் சிலவைதான், இடையே தூரம் ஜாஸ்தி. பூரா பாம் பாரங்களைச் சுமந்துசெல்லும் சாதாரண ஜெர்மன் பாமிங் விமானங்களுக்கு எட்டாக்கையில் பெரும் ருஷ்ய தொழிற் சாலைப் பிரதேசங்கள் இருக்கின்றன. பாமிங்கிலும் ஜெர்மானியர்கள் மிக்க செட்டாகஇருக்கவேண்டும். அதிக எண்ணெய்ச் செலவு பிடிக்காத இலக்குகளையே அவர்கள் குறியிடுகிறார்கள்.

இந்த யுத்தத்தில் தெரியக்கூடிய விஷயங்களில் இது ஒன்று:—விரிந்த தூரம், சிதறிய இலக்குகள் இவைகள் எம்மட்டு ஆகாயத் தாக்குதல்களில் பலத்தை குறைத்து வீணாக்குகின்றன என்பது.

ஆகாயத் தாக்குதல் செலவுபிடிக்கும். பெருந்தாக்குதலை திட்டம் செய்வது ஒரு பெருங்காரியம். அதற்கு வேண்டிய சாமான்சட்டுகளை சேகரிப்பது எளிதல்ல. தற்போது வீசப்படும் பெரும் பாம்களை எத்தவும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக்

கொண்டுபோகவும் பிரத்தியேகமெஷின்கள் வேண்டும்.

சத்துரு தன்மீது மிக்க முயற்சிகளைச் செய்யும்படிக்கும் அதனால் தான் பாதிக்கப்படாமலும் ஒரு தேசம் இருக்குமானால் அதன்மீது ஆகாயத்தாக்குதல் அம்மட்டில் வீணாகும், பலமும் குன்றும். உலகப்பரப்பில் ருஷ்யாவுக்கு 6-ல் 1 பங்கு. அதன் ஜனத்தொகை பெரிது. ஆயினும் அதன் யுத்த நாடிகள் எனக்கூடிய தொழிற்சாலைகள் சிதறி நிற்கின்றன. ஆகாயத் தாக்குதலுக்கு அது நல்ல களமல்ல.

கிழக்கே நடக்கும் ஆகாய யுத்தத்தைப்பற்றி நமக்கு இன்னும் சரிவர விவரம் கிடைக்கவில்லை. அது கிடைப்பதிலும் கஷ்டமுண்டு. ருஷ்யா விவரம் கொடுக்கத் தயாராயில்லை என்பதல்ல, அவ்வளவு எட்டாக் கைகளிலிருந்தும் அதற்கே தகவல்கள் சரிவர கிடைக்க வேண்டும். நாளடைவில் ஆகாயயுத்தத்தின் போக்குவிளங்கும்.

விளங்குகிறது ஒன்று மட்டில்— மேற்கே தங்கள் ஆகாயபலம் குறையும் அளவுக்கு கிழக்கு முனைக்கு ஜெர்மானியர் அவ்வளவு பலத்த ஆகாயப்படையைதிரட்டி அனுப்பி இருக்கின்றனர். இந்த நல்ல அவகாசத்தை ஆர். ஏ. எப். ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளையும் தாக்க பயன் படுத்திக்கொண்டிருக்கிறது. மேற்கிலிருந்து இந்தத் தாக்குதல் ருஷ்ய முனையில் ஜெர்மன் தாக்குதலின் பலத்தை சற்று குறைக்கலாம்.

ஆர். ஏ. எப்.பின் தாக்குதல்கள் இப்பொழுது காலம் நீடித்து நடக்கின்றன. 24-மணியில் அவைகள் பெரும் காலம் நடக்கின்றன. இம்முறையில் முன்பு நாம் பகலில் நீடித்து ஆகாயத் தாக்குதல் செய்யமுயற்சிக்கவே இல்லை.

இதன் காரணம் பகல் தாக்குதல்களில் சேதம் ஜாஸ்தியாயிருக்கும் என்பதால். இதை ஜெர்மானியர்கள் சென்ற வருஷம் கண்டுகொண்டார்கள். யுத்த ஆரம்பத்தில் நாம் செய்த முயற்சிகளிலிருந்தும் நாம் இதைத் தெரிந்து கொண்டோம். பகலில் பாமர் விமானம் குறுக்கிட்டு சண்டை செய்யும் வேட்டை விமானத்திலிருந்து காத்துக் கொள்ளமுடியவில்லை என்பதைக் கண்டோம்.

ஆனதால் ஆக்கிரமண பிரான்ஸில் நமக்கு எதிரிடையாக ஜெர்மானியர்களிடம் ஏராளமான வேட்டை விமானங்கள் இருந்தபொழுது, நமது தேசத்தைக் காப்பாற்றவே நம்மிடம் வேட்டை விமானங்கள் போதும் போதாததாக இருந்தபோது, பகலில் நாம் தாக்க ஆரம்பிப்பது முட்டாள்தனம். நமது பாமர் விமானங்களுக்குமிக்க சேதம் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் ருஷ்யப் படையெடுப்புக்கு முன்பே ஜெர்மன் ஆகாயப்படை கிழக்கே சென்றுவிட்டது என்று நமக்குத் தெரிந்தவுடன், இரவுத் தாக்குதல்களுடன் நில்லாமல் பகல் தாக்குதல்களையும் துவக்கினோம். பகல் பாமர்களைத்தனியாக அனுப்பவில்லை. அவைகளும் பலத்த வேட்டை விமானங்களும் செல்கின்றன. எதிரி வேட்டை விமானங்களை முன் நின்று தடுக்கின்றன.

நல்ல பயன் இதனால் கிடைத்திருக்கிறது. எதிரிக்கு மிக்கசேதம். இந்த தாக்குதல்களின் எல்லை வேட்டை விமானங்கள் பறக்கும் அளவு. அது பகல் பாமரின் வரம்பைக் காட்டிலும் குறுகியது.



ஆக்கிரமண பிரான்ஸில் ஜெர்மன் கை குன்றும் வரை ஆர். ஏ. எப். ஆகாயத்தில் வெற்றிபெற முடியுமானால், ஜாஸ்தி தூரத்திலிருக்கும் இலக்குகளைத் தாக்க பகல் பாமர்களை நாம் அனுப்புவது சாத்தியம்.

அப்பொழுது 24-மணி நேரமும் ஜெர்மன் இலக்குகளைத் தாக்கும் காலம் வரும். அதுதான் நமது இறுதியான இலட்சியம். நமக்கு மிக்க சேதமின்றி ஜெர்மன் பிரதேசங்களில் சென்று பலமாகத் தாக்குவதின் மூலம் ஜெர்மன் ஆகாயப்பிரதேசங்களில் கை மேலோங்கி நிற்பது.

ஜெர்மன் இலக்குகளை பகலில் தாக்கியிருக்கிறோம். ஆயினும், அங்கு எங்கும் நமக்கு சந்தேகமற்ற முகாண்மை சித்திக்கும் வரை அவைகளை நாம் இரவு அல்லது மேகமூட்டமன்னியில் தாக்குவது அசாத்தியம்.

இதுதான் தற்பொழுது கிழக்கிலும் மேற்கிலும் நடந்துவரும் ஆகாய யுத்தம். கிழக்கே ஜெர்மன் ஆகாயப்படைக்கு எதிரே ருஷ்யப்படை, மேற்கே ஆர். ஏ. எப். நமக்கு அதிர்ஷ்டவசமாக இவ்வாறு கிடைத்திருக்கும் அவகாசத்தை நாமும் ருஷ்யர்களும் கை நழுவ விடமாட்டோம். முதன் முதலில் ஜெர்மானியர்கள் தாக்குவதுபோல் தாக்கப்படுவதற்கும் உட்படவேண்டும்.

---

## ஒரு தீபிகை.

**ருஷ்யாவுடன் நாஜிகள் செய்த பேச்சுவார்த்தைகளின் வரலாறு,**

**யூக்ரேன் பிரதேசத்தை தங்கள் ஆதிக்கத்தில் விட்டு வைப்பதாயிருந்தால், அந்தப் பிரதேசத்தை யாதொரு தாக்குதலுமில்லாமல் பார்த்துக்கொள்வதாக வாக்குத் தந்தும்.**

**ருஷ்யர்கள் இந்தப்பேச்சுக்களை முறித்ததேன்.**

[ஜூன்மீ 29உ ஆச்சியன் கோல்டிங் "டெயிலி டெலிகிராப்" பேபருக்கு தந்திமூலம் அனுப்பிய செய்தி.]

லண்டன் போவதற்கு மாஸ்கோவைவிட்டு Sir ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் (ராஜிய தூதர்) புறப்பட்டபொழுது, ஜெர்மன் ஆதிக்கத்தில் யூக்ரேன் பிரதேச எண்ணெய்க் கிணறுகளையும், தான்யக் களஞ்சியங்களையும் விடவேணுமென்றும் தங்கள் மேதாவிகளைக்கொண்டு கண்காணிப்பு செய்துகொள்ளுவதாயும், இதற்கு பதிலாய் அந்தப் பிரதேசங்களுக்கு யாதொரு ஆபத்துவராமல் தாங்கள் பார்த்துக் கொள்வதாயும் ருஷ்ய அந்நிய இலாகா மந்திரி மாலடோவுடன், கவுண்டு ஷுலம்பர்க் மூலம், ரிப்பன்டிராப் (ஜெர்மன் அன்னியதேசமந்திரி)—பேச்சு நடத்திக்கொண்டிருந்தான். சென்ற மார்ச்சுமீ முதல் இம்மாதிரி பேச்சுத் தொடங்கியது.

Sir ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் மாலடோவிடம், தனக்கு ரகஸ்யமாய் சில தஸ்தாவேஜிகள் மூலம் ஜெர்மனி ஜூன் மீ 1வ ருஷ்யாமேல் படையெடுக்க உத்தேசித்திருக்கிறதென்று தெரியவருவதாயும், பல்கேரியா தேசத்தில் ஜெர்மானியர் கையாண்ட முறையைப்போலவோ, அமைதியாகவே ஜெர்மானியர்கள் யூக்ரேனுக்குள் நுழைய எத்தனிப்பதாயும்—தகவல் கொடுத்தார்—இந்தத்தகவல் கிடைத்தவுடன் பேச்சுக்களை ருஷ்யா நிறுத்திக்கொண்டது.

இந்தக் காரணத்திற்காகத்தான், ருஷ்ய சேனாதிபதி மார்ஷல் டிமாஷென்கோ தன் மூலபலத்தை முழு உக்ரமாய் போர்நடத்தவேண்டி யூக்ரேனில் வைத்திருப்பதுடன், கடைசிவரை யுத்தம் நடத்தவேணுமென்றும், பின்வாங்கும்படி நேரிடும் போதெல்லாம், வைக்கோல்போர்களையும் தானியங்களையும், தொழிற்சாலைகளையும், வயல் விளைவுகளையும் அழித்துவிடவேணுமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

இந்தக் காரணத்தின் நிமித்தமாய் பெஸரேபியாவிலும், பிரஸ்மிஸிலும் ருஷ்யர்கள் திரும்பி மின்ஸ்க் பகுதியிலுள்ள தயாரான அரண்களுக்கு வருமுன் வெகு தீவிரமாயும், ஜயபேரிகையுடன் ஜெர்மானியர் திருப்பி வெரட்டித் தாக்கினார்கள். இந்தத் தாக்குதலில் ருஷ்யர்களுக்கு வெகு நஷ்டம்தான்.

இதே காரணத்தினால்தான், ருமேனியாவிற்குச் சொந்தமான கருங்கடல் துறைமுகமான "கான்ஸ்டான்ஸா" என்ற நகரத்தை பயங்கரமான விதத்தில் தாக்குதல் செய்தார்கள். இந்தத் துறைமுகத்தில்தான் ருஷ்யாவின்பேரில் படையெடுப்புக்கு ஆயத்தமான கப்பற்படையையும், ஒடிஸாபேரில் ஆகாச மார்க்கமாயி குடை விமானங்களின் உதவியால் தாக்கவேண்டிய ஆகாயப்படைகளையும் மேற்படி கப்பற்படைக்கு உபபலமாகவும் ஜெர்மானியர்கள் நிறுத்தி வைத்திருந்தார்கள்—"ஸ்டாக்ஹோம்"க்கு வந்த தகவல்களிலிருந்து, இம்மாதிரியான தாக்குதல் ஜெர்மானியர்களால் எத்தனிக்கப்பட்டு வீணாகிவிட்டது என்று தெரிகிறது.

எந்தத் தெற்கு அரங்கத்தில் ருஷ்யர்கள் தங்கள் 15 காலாட்படைப் பகுதிகளையும் எட்டுக் கத்திரிக்கோல் சேனைப்பகுதிகளையும் 2,000 கவசம்வாய்ந்த மோட்டார்களையும், 12,500 ஆகாசவிமானங்களையும் கொண்டு உக்ரமாய்த் தாக்கி வருகிறார்களோ, அந்த யுத்த அரங்கத்தை சப்பைகட்டுவதற்காக, தங்களுடைய ஸர்வியா தேசத்திலுள்ள ஆக்கிரமிப்புத் துருப்புகளை வாபஸ் வாங்கிக்கொண்டு அதற்குப்பதிலாக ஹங்கேரித் துருப்புகளை அங்கே மாற்றியிருக்கிறார்கள். அதாவது ஹங்கேரித் துருப்புகள், தெற்கு யுத்த அரணில் முனைந்து போர்புரிய லாயக்கில்லை என்ற காரணம்தான்.

மேற்படி சம்பந்தமாய் ஒரு உடன்படிக்கை இன்றுதான் ஜெர்மானி ஹங்கேரி கவர்ன்மெண்டாருடன் செய்துகொண்டது.



நாஸிகளுக்கு, பொஹீமியா ப்ரொடக்டரேட் ஜனங்களிடமிருந்து மேலும் உபத்திரவங்களும் கஷ்டங்களும் உண்டாகியிருக்கின்றன. அதனால் அவர்கள் அந்த நாட்டில் வைத்திருக்கும் காலாட்படைகளை பலப்படுத்தும்படிக்கு ஏற்பட்டிருக்கிறது. தவிரவும் கட்டுப்பாடுகளையும் மேலும் இருக்கியிருக்கிறார்கள். தவிரவும் இரா நடமாட்டம் கூடாது என்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

நாஸிகளுக்கு எதிரிடையாக அகில ஸ்லாவிய இயக்கம் பலமாகிக்கொண்டு வருவதை கட்டுக்கு அடங்காத குதூஹலத்துடன் பிராக் என்ற பொஹீமிய தலைநகரத்தில் வரவேற்கிறார்கள் என்று ஒரு பிரயாணி தகவல் கொடுக்கிறார்.

எஸ்தோனியாவிலும், டாகோ ஒசல்—தீவுகளிலும், பால்டிஸ்கி—டால்லின் கரைகளிலும், உள்ள ருஷ்ய விமான நிலயங்களின் பேரிலும், கப்பல் தளங்களின் பேரிலும், ஜெர்மானியர்கள் விமானப் படையெடுப்பும், கப்பல் படையெடுப்பும் செய்கிறார்கள்.

இப்படிப் படையெடுப்பதற்கு ஒரு காரணம் யாதெனில், பால்டிக் ஸமஸ்தானங்கள் எதிர்பாராதபடி தங்களை வெகு உக்ரமாய் எதிர்ப்பதுதான்—தவிரவும் ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட அபார நஷ்டங்களுக்கு ஈடுசெய்ய, பின்பாகத்திலிருந்து தாக்கவேண்டியது அவசியமாகிவிட்டது.

மற்றொரு காரணமும் இதற்கு உண்டு. பின்லண்டு தேசத்தில் ஜெர்மானியர் ஏராளமாய் திரட்டி நிறுத்திவைத்திருக்கும் துருப்புகளின் பேரிலும், ஹெல்சிங்கை—ஏபோ நகரங்களின் பேரிலும், ருஷ்யர்கள், தற்போது செய்யும் தாக்குதல்களை நிவர்த்திக்கவே, இந்த யுத்த தளங்களை ஜெர்மானியர்கள் கைப்பற்ற உத்தேசிக்கிறார்கள்.

ருஷ்ய பளுக்கப்பற்படைகளை ஜெர்மானியர் கடற்படை, எஸ்தோனியக் கடல்களுக்கு தங்கள் E படகுகளையும் மீன்வெடிப் படகுகளையும் அனுப்பி வெகு பலமாகத் தாக்குகிறார்கள்.

மின்னல் போர் ஆயுதங்களால், அந்த ஜீவாதாரமான கடல் தளங்களையும், விமான நிலயங்களையும், பிடிக்க ஹேதுவாய், கடல்மார்க்கமாயும் ஆகாய குடை விமானங்கள் மூலமாயும் ஜெர்மானியர்கள் துரிதமாய் துருப்புகளை அனுப்பி சேனையை அந்தக் கரைகளில் இறக்க தயார்செய்யும்படி அவைகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பால்டிக் யுத்த நடவடிக்கையைப் பொருத்ததுதான் ஜெர்மானியரின் பின்லண்டு துருப்புகளின் வேலை. காரிலியாவின் கோட்டைக் கொத்தளங்களும், அதிலுள்ள சேனை பலமும் சேர்ந்து, அந்த ஜெர்மன் துருப்புக்களை சிதரடித்துவிட்டது. வடக்கு பின்னிஷ் யுத்த அரங்கத்தில் ருஷ்யாவுக்கு 12 டிவிஷன்களுள்ள செஞ்சேனையிருக்கின்றது. இதனுடைய பலத்தாலும் ஜெர்மன் துருப்புகள் சிதரடிக்கப்பட்டன.

லெனின்கிராடின் எதிர்பாராத எதிர்ப்புகளால் பால்டிக் ஸமஸ்தானங்களில் நாஜிகள் முன்னேறமுடியாமல் தடைபட்டால், இச்சப்படைகள், அந்த நகரத்தின் பேரில் திட்டம்போடப்பட்ட கத்திரிக்கோல் வியூகமாக எதிர்ப்பு நடத்தும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

பின் தேசத்தார்களைப் பற்றியோவெனில், விஷயம் நன்கு அறிந்த ருஷ்யர்கள் இதை பின் தொடுத்த யுத்தம் கேவலம் தற்காப்புக்கு யுத்தம் என்று நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இது மட்டுமல்ல ருஷ்யர்களின் சேனையானது கொஞ்சம் பலஹீனமாகி விட்டது என்ற குறிகள் தெரிந்தால், 4 லக்ஷம் பின்னர்கள் உடனே ருஷ்யா பேரில் பாயும் என்று ருஷ்யர்களுக்கு நிச்சயமாய்த் தெரியும்.

ஆதலால் இரு திறப்பார்களும், வரும் மாபெரு யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள். வெகுசாய் கெரிலியாவிலும், லடோகா ஏரியின் வடகரைப் பிரதேசத்திலும் போரிடுவார்கள்.

நாஜிகள் தங்கள் ஆல்பைன் துருப்புகளைக்கொண்டு (கர்மெனியிலிருந்து வந்தவர்கள்)—மூர்மான்ஸை மின்னல்போல் தாக்கி—மூர்மான்ஸ் லெனின்கிராட் ரயில்வேயைத் துண்டாட எத்தனப்பட்டார்கள். ஆனால் ருஷ்யர்கள், ஆர்டிக் அரங்கத்தில் நிலைமையை சமாளித்து விட்டார்கள்.

மூர்மான்ஸ்கையும், ருஷ்ய ஆர்டிக்கரையையும் ரக்ஷிப்பதற்காக, நகரக்குக் கீழே அமைத்துவைக்கப்பட்ட போர் விமானங்களின் நிலயங்களைத் தாக்கி நொறுக்கவேண்டிய நோக்கத்துடன் ஜெர்மானியர்கள் விமானங்களை அனுப்புகிறார்கள்.

இவர்கள் செய்யும் காரியங்களைப் பொருட்படுத்தாமல், ருஷ்ய தேசத்து ராணுவ தந்திரிகள் ஜெர்மானியர்களின் மின்னல் எதிர்ப்புப் போருக்கு எதிரிடையான வேலைகளை வெகு தீவிரமாய் திட்டமாயும் செய்து வந்து அந்தத் திட்டத்தை மேன்மேலும் அமுலுக்குக்கொண்டுவந்துவிட்டார்கள். யுத்தம் துடர்ந்த இரண்டாம் நாளன்றே, பின்லண்டு தேசத்திய துறைமுகமான வியார்க்கை ருஷ்யா—தன்வசமிருந்ததை—விலையுயர்ந்த சாமான்களற செய்யப்பட்டது.

தவிரவும், ருஷ்யர்கள் ஸைமா பள்ளத்தாக்கு, எலெக்டிரிக் பவர் உற்பத்தி ஸ்தானத்தையும், பழைய பின்லண்டில் தொழிற் / உற்பத்திசாலைகளடங்கிய ஜில்லா முழுமையும் எரித்து பாழாக்கி விட்டார்கள்.

---



## ஆலோசனையில் பிழையா?

## ருஷ்யாவில் பொருளாதார சகாயம் கிடைக்கும் என்று ஹிட்லர் நினைப்பதானால் எவ்வளவு தூரம் இந்த எண்ணம் கைகூடும்!

## இந்த 2 மாதமாக ஜெர்மன் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டிருக்கும் தடையினால் விளைவு என்ன?

(யார்க்ஷையர் போஸ்ட்டின் லண்டன் நிருபர் எழுதுவது).

ஜெர்மன் எதிர்ப்புக்கு பொருளாதார அவசியமும், ராஜீய பேராசையும் எவ்வளவு மட்டில் காரணமாகும் என்பது பரிசீலனைக்கு உகந்தது. ருஷ்யா பேரில் படையெடுத்திருப்பது ஏதோ கொஞ்சமாகவாவது பொருளாதார சௌகர்யத்தை உத்தேசித்துத்தான் என்பது நிச்சயம். ருஷ்யாவின் வியாபார ஸ்திதியை அறிந்துள்ள நிபுணரின் வார்த்தைப்படி பார்த்தோமானால் ஜெர்மனியின் இவ்வெண்ணம் பலன் பெறவில்லை என்பது அறிவுறுத்தப்படுகிறது.

அவருடன் நான் பேசியதிலிருந்து, ருஷ்யாவுக்குள் அதிதூரிதமாக ஜெர்மனி நுழைந்தால் அல்லாமலும், எதிர்பார்க்கப்படுவதற்கு மாறாக, ருஷ்யா இவ்விதம் ஜெர்மன் முன்னேற்றத்தின்போது, தன் பிரதேசத்திலுள்ள விளைபொருள் எதிரிக்குக் கிடைக்காதபடி செய்யத் தவறினால் அல்லாமல், ஜெர்மனிக்கு இப் போரினால் எள்ளளவும் சௌகர்யம் கிடைக்கமாட்டாது.

ஒருக்கால் முன்னேற முடியாமல் ஜெர்மனி தடை செய்யப்பட்டால் இதனால் அதற்கு பெரிதும் தீங்கே நேரும். வளாடிவாஸ்டாக் மூலமும் டிரான்ஸ் ஸைபீரியன் ரயில் பாதை மூலமும் இதர தேசங்களிலிருந்து ஜெர்மனி அடைந்து வந்த அவசிய சாமான்களையும் இந்த யுத்தத்தினால் இழக்க நேரிடுகிறது.

இப்புதிய சந்தர்ப்பத்தில் பிரிடிஷ் கடல் முற்றுகையில் தூம்பாக கருதப்பட்ட வளாடிவாஸ்டாக் ஜெர்மன் முற்றுகைக்கு பெரிய துரப்பாக ஏற்பட்டிருக்கிறது.

ருஷ்யாவுக்குள் நெடுந்தூரம் ஜெர்மனி பிரவேசிக்குமானால் அதனால் ஏற்படும் லாப நஷ்டத்தைப்பற்றியும் அவர் சொல்லுவதாவது:— யூக்ரேன் பிராந்தியத்தில் பிரவேசிக்கவொட்டாமல் 6, 8 வாரங்கள் வரையிலாவது ஜெர்மனி தடைசெய்யப்பட்டால் இவ்வருஷத்திய விளைபொருள் பலன் ஜெர்மனிக்குக் கிட்டாமல் செய்யப்படும்.

காகஸியன் எண்ணெய்க் கிடங்கு சம்பந்தமாய், இப்பிராந்தியம் வரையில் ஜெர்மனி முன்னேறுமா என்பதையும், முன்னேறுங்கால் இப்பிராந்தியம் எந்த நிலைமையில் அவர்கள் வசம் சிக்கும் என்பதையும் பொறுத்திருக்கும் கிடங்குகளிலிருந்து எண்ணெய் கிடைப்பது. பாழாக்கப்பட்ட எண்ணெய்க் கிணறுகளை உபயோகத்துக்குக் கொண்டுவர ஒரு வருஷகாலமாவது பிடிக்கும்.

ருஷ்யாவின் பொதுப்பண்ணைப் பயிற்சியும் அதற்கு அவசியமான பொதுப்பட்ட யந்திர சாதனங்களும் ஜெர்மனிக்கு அசௌகரியத்தையே உண்டாக்கும். பாழாக்கப்பட்ட யந்திர வசதிகளுக்குப் பதிலாக உபயோகப்படக்கூடியதாய் குதிரைகளைக்கொண்டு வேலை செய்யக்கூடியதான ஏர் முதலிய விவசாயவசதிகள் கிடைக்காது. பொதுப்பண்ணையின் அநுபோகமுள்ள நிபுணர்களை ருஷ்யா அப்புறப்படுத்துமானால் அவர்களுக்கு பதிலாக குறைந்தது 2,50,000 கூலிகளையாவது இவ்வேலைகளுக்கு ஜெர்மனி தயாரிக்க நேரிடும். விவசாயம் தனிப்பட்ட குடியானவர்களின் வசமே இருந்திருக்குமானால் இவ்வளவு சங்கடம் இல்லை. பொதுப்பண்ணை காரணமாக ருஷ்யாவுடன் சமாதானமாக இருந்தபொழுது கிடைத்ததைவிட மிகக்குறைவாகவே இந்தப் பிராந்தியத்தை கைப்பற்றின பிறகு ஒருவருஷத்தில்கூட விளைபொருள் ஊதியம் கிடைக்கமாட்டாது.

யூரல் மலைத்தொடர் வரையில் ஜெர்மனி முன்னேறுமானால் ஏதோ கொஞ்சம் இரும்பு அதற்கு கிடைக்கக்கூடும். அங்கும் ருஷ்யா முன்னெச்சரிக்கையுடன் நடப்பதால் அப்புறப்படுத்தப்பட்ட யந்திர சாதனங்களை ஸ்தாபிக்க காலஞ் செல்லும். மேலும் இவைகளை மேல் பார்க்கத்தக்க ஆள்களை நியமிப்பதும் கஷ்டம்.

ட்ரான்ஸ் ஸைபீரியன் ரயில் பாதை மூலம் ஜெர்மனிக்கு சாமான்கள் கிடைக்கக்கூடாதபடி ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பம் நமக்குத்தான் அதிக பயன் கொடுப்பதாக ஆகிறது. இப்பாதை மூலந்தான் பிரதி வருஷமும் ஜப்பானிலிருந்து ஜெர்மனிக்கு 4,00,000 டன் கொழுப்பு கிடைத்துக் கொண்டிருந்தது.

இதைவிட ரப்பரும் கிடைத்தது. வருங்காலத்தில் ஏராளமாக ரப்பரும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மசகு எண்ணெயும் தெளிவு எண்ணெயும் இப்பாதை வழியேதான் கிடைத்தது. ஆனால் சென்ற ஒரு வருஷ காலமாகவே இப்பாதை வழியாக ஜெர்மனிக்குக் கிடைத்துவந்த பஞ்சு அமெரிக்காவின் முயற்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. சென்ற ஒரு வருஷத்தில் 20,000 டன்தான் ஜெர்மனிக்கு கிடைத்திருக்கிறது.

---

## கதம்பம்.

---

1. "நாஸி தத்துவத்தின் தெய்வ வெறுப்பையும், கொடுமையையும், நம்பிக்கையின்மையையும், அகௌரவத்தையும் அறிந்த எந்த இந்தியரும் எவ்வகையிலும் நாஸி தத்துவத்தையும் அதனாலாவதுகளையும் எதிர்க்கவேண்டுமென்றும் இந்தியாவைப் பாதுகாப்பதற்காக ஒன்று சேரவேண்டுமென்பதைப்பற்றியும் சந்தேகப்படவே மாட்டார்."

(இந்திய சேனாதிபதி, ஸர் ஆர்ச்சிபால்ட் வேவல், ஸிம்லா, ஜூலை 17).



2. "ஹிட்லருடனும் அவன் பரிவாரங்களுடனும் நாம் ஒரு ஏற்பாடும் செய்து கொள்ளமாட்டோம். ஐரோப்பாவிலிருந்து நாஸி தத்துவம் என்ற வியாதியை நிவர்த்திக்கும் வரையில், ஆரோக்கியமும், சமாதானமும் உண்டாகாது."

(ஸர் ஆர்ச்சிபால்ட் ஸின்க்ளேர்—ஜூலை 19).

3. "உங்களுடைய உதவியுடன், இதை வேர்ப்பிடுங்கலாய் அகற்றி, ஹிட்லருக்கு முடிவு ஏற்படும்படி செய்ய நாங்கள் தீர்மானம் செய்திருக்கிறோம்."

(அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் அயல் நாட்டு மந்திரியான ஹாலிபாக்ஸ்பிரபு, ஸான் பிரான்ஸிஸ்கோ, ஜூலை 19).

4. "'வி' என்பது ஆக்கிரமிப்பு நாடுகளின் தோல்வியடையாத மனோதைரியத்தின் அடையாளம். நாஸிக் கொடுமைக்கு ஏற்படப்போகும் முடிவுக்கு ஒரு அறிகுறி."

(மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், ஜூலை 20).

5. "அநேகம் சண்டைகள் செய்து தான் பிரிடன் மேன்மையடைந்திருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் ஒன்றுபட்ட நாடாக இந்தியா மாறியதும் அதிக சிரமத்தினாலேதான்."

(இந்தியாவைப்பற்றி ஒலிபரப்பியபொழுது ஸர் டெனிஸ் ப்ரே வெளியிட்டது).

6. "ஹிட்லர் மின்னல் எதிர்ப்புக்கு வசமாகி, அதனாலேயே கொல்லப்படும்பொழுது, இங்கிலாந்து எதை வேண்டுமானாலும் செய்யலாம்."

(நியூ யார்க் போஸ்டில் மிஸ்டர், ஸாமுயல் கிராப்டன், ஜூலை 21).

7. "அரசாங்க நிர்வாகத்தைப்பற்றி யோசிப்பதற்கு யுத்த காலம் உசிதமல்ல. ஆயினும் யுத்த முயற்சிகள் தான் எல்லா வகுப்பாரையும் எல்லா நிலைமைகளையும் ஒன்று சேர்க்கக்கூடியது. இந்தியாவின் யுத்த முயற்சிகள் அபரிமிதமாயிருந்தபோதிலும் இந்தியாவிலுள்ள பிரமுகர்கள் இதை இன்னும் அதிகமாக விருத்தி செய்யக்கூடும்."

(பிரிடிஷ் ஒலிபரப்பில் ஸர் டெனிஸ் ப்ரே சொன்னது).

---

## ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

### A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

ஜூலை 7உ முதல் 13உ வரை.

### பொதுவாய் பேசுமிடத்து.

'பொதுப் பிரசாரம்' என்ற தலையங்கத்தின் கீழ் வால்ட் மிட்லர் நடப்புக் காரியங்களைப்பற்றி ஜூலை 8உ ரேடியோவில் பேசிமுடிக்கையில், 'ஐயோ பாவம்!

பிரிடிஷ் மக்கள் ஏமார்ந்தவர்கள்; அவர்களுக்குச் சரியான யோசனை சொல்லுவாரில்லை. பெர்லின் நகரத்தார்களைப் போலவே லண்டன் நகரத்தார்களும் கஷ்டப்பட்டிருப்பார்கள்," என்று அனுதாபம் காட்டியிருக்கிறார்கள்.

சரீர அமைப்பில் ஒரேவிதமான ரத்தத்தாலும் மாம்சத்தாலும் அமைக்கப்பட்டவர்களானாலும் தைரியத்தில் பெர்லின் வாசிகளைப்போல் லண்டன்வாசிகள் கோழைகளல்ல. லண்டன் நகரத்திலேயே 3,00,000 யூதர்கள் வசிக்கிறார்கள்.

## முஸோலினியின் 'சாம்ராஜ்ஜியம்'.

கிழக்கு ஆபிரிக்காவில் 2½-லக்ஷம் இதாலிய சைனியத்தைப் பறிகொடுத்துவிட்டதைப்பற்றி ரோம் ரேடியோ ஜூலை 10-ல் ஒப்பாரிவைத்து அழுதது. முடிவில் அச்சு நாடுகளுக்கு வரப்போகும் வெற்றிக்காக இதாலி பலிகொடுத்ததற்கு இது ஒரு சாச்வதமான அத்தாக்ஷியென்று சொல்லிக்கொண்டது.

இதே ரேடியோவிலிருந்து மூன்று மாதங்களுக்குமுன் ஸினியர் அன்ஸால்டோ "ஆபிரிக்காவை இதாலி ஆளப்போவது நிச்சயமென்று இதுவரையில் இவ்வளவு திட்டமாய் இதாலியர்கள் நினைத்ததில்லை" என்றார்.

இப்பொழுதோ இதாலிக்குச் சொந்த தேசமும் போய்விட்டது. 'டாஸ்ரைச்' என்ற ஜெர்மன் வாரப்பத்திரிகை இதாலியை ஜெர்மனி பிடித்த நாடுகளில் ஒன்றாகச் சேர்த்துவிட்டது. 5-லக்ஷம் சைனியத்தைப் பறிகொடுத்துவிட்டு, முடிவில் சாம்ராஜ்ஜியத்தையும் தோற்று, பாபாஸி, ஜெர்மன் அமீனுக்கள் வாரண்டோடு திண்ணையில் பிடித்துக்கொள்ள உட்கார்ந்திருக்கிறார்கள். இதாலி குசாடி எல்லா வற்றையும் தோற்றுவிட்டது.

## ஐஸ்லாண்டைப்பற்றி ஹா-ஹா சொல்லுவது.

'மன்ரோ சித்தாந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, பூகோள மேற்கு பாகத்தைக்கடந்து வந்து, அமெரிக்கா ஜெர்மனியை சண்டைக்கிழுக்கிறது. ஆனால் ஜனங்கள் ரூஸ்வெல்டை ஜனநாயகப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தபோது இந்தப் பேச்சு கிடையாது. தேர்தல் சமயத்தில் ஒன்றைச் சொல்லிவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அதை மாற்றிவிடுவது தான் ஜனநாயக அரசியல் போலும்' என்று ஹா ஹா பிரபு ஜெர்மன் ரேடியோவில் ஜூலை 13-ல் சொன்னார்.

ஹிட்லரைத் தேர்ந்தெடுத்தபோது அவர் என்ன வாக்குத்தத்தம் செய்தார்? யுத்தம் துவக்கப் போவதாகச் சொன்னாரா? ஆனால் ஹிட்லர் வசிக்கும் நாட்டில் ஜனநாயகமேது.

## ருஷ்யாவுக்கு பிரிடிஷ் விமான உதவி.

பிரிடிஷ் சானல் கரையிலும், பாதுகாப்பில்லாத மன்ஸ்டர் போன்ற பழைய ஜெர்மன் பட்டணங்களிலும் பிரிடிஷ் விமான எதிர்ப்பினால் ருஷ்ய யுத்தம் மாறிவிடாதென்று ஜூலை 10-ல் பெர்லின் ரேடியோ ஒலிபரப்பியிருக்கிறது.



ஜெர்மன் அணிவகுப்புக்குப் பின்னாலுள்ள ஸ்தலங்களையும் பாதைகளையும் திட்டப்படி அழிப்பது தான் பிரிடிஷ் விமானப்படையின் வேலை. ஜெர்மானியர் சொல்லுகிறபடி மன்ஸ்டர் பாதுகாப்பில்லாத ஸ்தலமல்ல. அது ஒரு முக்கியமான ரயில்வே ஸ்டேஷன், விமான நிலயம், சைனியம் தங்க விடுதியிருக்கிறது.

## வெற்றியைப்பற்றி வேவலின் அபிப்பிராயம்.

நியூ யார்க் டைம்ஸ் நிருபரோடு பேசிக்கொண்டிருக்கையில் சேனாபதி வேவல், பிரிடனால் யுத்தத்தில் வெல்ல முடியாதென்று வெளிப்படையாய்ச் சொன்னதாக ஜெர்மனி ஜூலை 8-ல் ஒலிபரப்பியது. இதிலிருந்து எகிப்தின் அரசாங்கத்தாரும் இலைக்கவலிக்கத்தக்கதாயிருந்ததாகச் சொல்லப்பட்டது.

இதற்கு ஐந்து நாட்களுக்குமுன்தான் அலஅஹ்ராம் என்ற பத்திரிகையில், 'ஆபத்துக்காலத்தில் தன் சைனியத்தை நம்பி, வெற்றி நிச்சயமென்று திடமனதுடன் வேவல் சண்டை செய்தார்' என்று எகிப்தின் பிரதமமந்திரி ஹூஸேன் ஸிர்ரி பாஷா எழுதியிருக்கிறார்.

## கடற்சண்டை.

ஆஸ்திரிலேயாவில் மீதப்படும் கோதுமையையெல்லாம் வாங்கிக் கட்டிவிடப் போவதாக ஆஸ்திரேலிய வியாபாரமந்திரி சொன்னதை வைத்துக்கொண்டு ஜூலை 11-ல் ஜெர்மன் ரேடியோ அட்லாண்டிக் யுத்தத்தில் ஜெர்மனி வெற்றியடைந்துவிட்டதற்கு இது ஒரு அத்தாக்ஷியாகச் சொல்லுகிறது.

இந்தக்கடல் மகாயுத்தத்தில் ஜெர்மனி சாதித்தது ஸ்வல்பம்தான். யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து வரும் சாமான்களில் 100-க்கு 4 பங்குதான் இங்கிலாந்துக்குவந்து சேரவில்லை.

தினசரி 2,000 பிரிடிஷ் கப்பல்கள் கடலில் சஞ்சரிக்கின்றன. இவைகளில் 300 கப்பல்கள் ஜெர்மனி தாக்குமிடங்களிலிருக்கும். ஆயினும் இந்த வருஷத்து பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, மாதங்களில் சராசரி வாரத்துக்கு 27 கப்பல்கள் தான் சேதம்.

---

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

## ஐக்கிய அமெரிக்க நாடுகள்-ஜெர்மனியின் துர் எண்ணங்கள்.

அமெரிக்கா ஐஸ்லாந் (Iceland)தை ஆக்கிரமித்துக்கொண்டதைப்பற்றி ஜூலை மாதம் 10-ம் தேதி இந்துஸ்தானியில் இதாலி ஒலிபரப்பியது. ஜெர்மனி

பூகோளத்தின் மேற்குப்பாதியை தன் ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டுவரப்பார்க்கிறதென்று ஒரு பொய்யான முகாந்திரத்தை வைத்துக்கொண்டு தலைவர் ரூஸ்வெல்ட் இம்மாதிரி செய்துவிட்டார் என்று இதாலிய ரேடியோ கூறிற்று. ஜூலை மாதம் 13-ம் தேதி கிரேட் பிரிடனு (Great Britain) க்கும், வட அமெரிக்காவிற்கும் (North America) ஆங்கிலத்தில் ஒலிபரப்புகையில் அச்சு நாடுகள் அமெரிக்காவை ஒரு நாளும் தாக்கவே தாக்காது என்று இதாலிய ரேடியோ கூறிற்று. அப்படிச் சொல்லுகையால் அதை அறியாமலேயே உண்மையும் வெளியாயிற்று. இதாலிய ரேடியோ கூறியதாவது:—"ஹிட்லரும், முஸோலினியும் அமெரிக்காவை ஒரு நாளும் பிசகான (சரியில்லாத) சமயத்தில் தாக்கமாட்டார்கள்". அமெரிக்காவைத்தாக்க எது சரியான சமயமென்றும், ஜெர்மனி அதற்கு எப்பொழுது தயாராக இருக்குமென்றும் நாஸி தொழிற்கக்ஷியின் தலைவரான டாக்டர். லீ (Doctor Ley) ஜூன் மாதம் 6-ம் தேதியன்று ஒருகட்டுரை எழுதியிருக்கிறார். "இன்னும் இரண்டு வருஷங்களில், ஜெர்மனியையும், இதாலியையும் ஒருவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாடாவது அவர்களை ஜயிக்கமுடியாது. அப்பொழுது, உலகம் முழுவதும் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கும் பல இடங்களிலிருந்து அகப்படும் மூலாதாரப் பொருள்களை ஆதாரமாகக்கொண்ட 1,700 லக்ஷம் ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்கள், இவர்களை ஐரோப்பா முழுவதுமுள்ள 3,000 லக்ஷம் ஐரோப்பியர்கள் ஐரோப்பா முழுவதிலிருந்து அகப்படும் மூலாதாரப் பொருள்களை ஆதாரமாகக் கொண்டு எதிர்ப்பார்கள்".

## அவர்கள் வாயாலேயே உண்மை வெளியாகிறது.

உலகத்தை ஏமாற்றித்தான் ருஷ்யாவோடு பொல்ஷிவிஸம் (கடவுள் இல்லை என்னும் கொள்கை) என்னும் கொள்கையை எதிர்த்து உலகத்தின் க்ஷேமத்திற்காகச் சண்டை போடுவதாக பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஜெர்மனியின் வார்த்தைகளில் உலகமா மயங்கிவிடும். ஜூலை மாதம் 10-ம் தேதி இந்துஸ்தானி, பர்ஸியன், அராபிக் பாஷைகளில் பெர்லின் ரேடியோவில் ஒலிபரப்பும் பொழுது இப்பொய்யை ஸ்தாபிப்பதற்காக நார்வேயில் ஒரு பத்திரிகை பின்வரும் விஷயத்தை எழுதியிருப்பதாகக் கூறிற்று. "ஐரோப்பா முழுவதும் ருஷ்யாவின் பொல்ஷிவிஸம் (Bolshevism)த்தை எதிர்த்துப் போராடும்பொழுது, தலைவர் ரூஸ்வெல்ட் (Roosevelt) பின்னாலிருந்துகொண்டு ஐரோப்பாவைத் தாக்குகிறார்." ஆனால் கடற்படைத் தலைவர் ல்யூட்ஸோ (Luetzow) ஜெர்மானியர்களுக்காக ஒரு நாள் நடத்திய சொற்பொழிவில் இதைப்பற்றி ஒன்றுகூடச் சொல்லவில்லை. ருஷ்யாவைத் தோற்கடித்து ருஷ்யாவையும், அதன் மூலம் பொருள்களையும்தன் வசமாக்கிக் கொள்வதே ஜெர்மனியின் நோக்கம் என்று அவர் ஒளியாமல் கூறினார். இதாலியர்கள் அவசரப்பட்டு பிசகாக உண்மையை வெளிப்படுத்திவிட்டார்கள். ருஷ்யாவில் அகப்படும் அபரிமிதமான தானியங்கள், எண்ணெய், மாங்கனீஸ் (Manganese) என்ற உலோகம் இவைகளைப்பற்றி நீண்டதோர் விமர்சனம் கூறி அவைகள். சீக்கிரம் அச்சு நாடுகளுக்குக் கிட்டும் என்று இதாலிய பேபர் கூறிற்று.



## அலெக்ஸாண்டிரியா (Alexandria)வின் மேல் ஜெர்மன் விமானப் படையெடுப்பு.

ஜூலை மாதம் 8-ம் தேதி இந்துஸ்தானி பாஷையில் ஜெர்மனியில் ஒலிபரப்பிய பொழுது, ஜூலை 6-ம் தேதி அலெக்ஸாண்டிரியாவை ஜெர்மன் விமானங்கள் தாக்கின வரலாற்றைக் கூறினார்கள். ஒரு பிரிடிஷ் யுத்த விமானமேற்றும் கப்பல், துறைமுகம், ரயில்வே ஸ்டேஷன் இவைகளெல்லாம் தாக்குண்டன. உண்மையில் பொது ஜனங்களின்மேல் தான் ஜெர்மன் விமானங்கள் படையெடுத்தன. இரண்டுபேர் கொல்லப்பட்டனர். பதினன்கு பேருக்குக் காயம். ஜெர்மானியர்கள் எப்பொழுதுமே பொது ஜனங்களின் மேல்தான் குண்டுகளை வீசுவது வழக்கம். இதற்கு முந்தி ஜெர்மானியர்கள் ஒரு தரம் அதே நகரத்தின் மேல் விமானத்தால் தாக்கினபொழுது, ஜூன் மாதம் 13-ம் தேதி அல் பலாக் (Al Balagh) என்னும் கெய்ரோ (Cairo) பத்திரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது. "அச்சு நாடுகளின் விமானிகள் பொது ஜனங்களின் மேல் குண்டுகளைப் போடுவதற்குத் தயங்குவதில்லை. அச்சு நாட்டு விமானங்களுக்கு துறைமுகத்தில் இருக்கும் பிரிடிஷ் யுத்தக்கப்பல்களருகே போகக்கூட தைரியம் கிடையாது. ஆனால் அவர்களுடைய ஆத்திரத்தை யெல்லாம் பொது ஜனங்களின் மேல் தான் அவர்கள் காட்டுவார்கள்."

## புதுக்கோட்டை ஸம்ஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 54.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜூலை மீ | ...27, ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 28, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | நச்சாந்துபட்டி ... | மாலை | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 29, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் .... | காலை | 10.15 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | திருமயம் ... | ,, | 6.00 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 30, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | கல்லூர் ... | மாலை | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 31, வியாழக்கிழமை ... | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| ஆகஸ்டு | ....1, வெள்ளிக்கிழமை... | ராஜகிரி ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 55.

| | | | | |
|---|---|---|---|---|
| | 2, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 3, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவப்பூர் ... | மாலை | 5.30 |
| | | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 4, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | அன்னவாசல் ... | மாலை | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 5, செவ்வாய்க்கிழமை. | பெருமாநாடு ... | ,, | 6.00 |
| | | புல்வயல் ... | ,, | 6.30 |
| | 6, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | குழிபிறை ... | மாலை | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |
| | 7, வியாழக்கிழமை. | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 8, வெள்ளிக்கிழமை... | வாராப்பூர் மாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | எம்பல் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—26-7-41.

69401

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஆகஸ்டு மீ 2உ [ந. 55.

பிரஸங்கம் 55.

SL
V21194:19(3/m)m,N39
N41

## மலயாவும் யுத்தமும்.

இடை இடையே காடுகள் அடர்ந்து மலைவளம் பொருந்திய மலயாவின் காண்தகுகாட்சிகளும் ஆகர்ஷணை சக்தியும், ஸாமர்ஸெட்மாம் என்ன, ப்ரூஸ் லாக்ஹார்ட் என்ன இந்த ஆசிரியர்கள் ரீதியாக, மிகவும் ஸ்வாரஸ்யமானது. இவை ஸாஹித்திய ரீதியாக. ஆனால் அச்செழிப்பும் மிக்க விருத்தியும் செய்யப்படாத நாட்டில் வசிக்கும் சாதாரண மனிதன் குறி பணம் பண்ணுவதில். அது ஒரு வற்றாச்சுரங்கம். அதில் அநேக இடங்களில் தங்கம் கிடைக்கிறது. தங்கத்திலும் இந்நாட்களில் மதிப்பு பெற்றிருக்கும் வெள்ளீயமும் ரப்பரும் தேசத்தின் பெரும்பாகத்தில் ஏராளமாக அகப்படுகின்றன.

### சிங்கப்பூரின் உற்பத்தி.

ஆயினும் அநேகருக்கு மலயா என்றால் அத்தேசத்தின் குதிகாலில் இருக்கும் சிங்கப்பூரைத்தான் குறிக்கிறது. அம்மாநகர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ்ஸால் 1819-ல் கட்டப்பட்டது. அடிப்பரப்பை அவர் ஜௌஹோர் சுல்தானிடமிருந்து வருஷம் ஒன்றுக்கு 5,000 பவுன் கிரயத்துக்கு வாங்கினார். அப்பொழுது சிங்கபுரம் மீன் பிடித்துவசிக்கும் ஓராங்லௌத்தென்றவர்களின் ஒரு சிறு குக்கிராமம். அன்று முதல் இன்று வரை 122 வருஷங்கள் கடந்தன. என்ன பிரமிக்கத்தக்க மாறுதல்கள்! மலயாவுக்கு பணம் கொழிக்கும் மேநாடுகளுடன் பிணைப்பு ஏற்பட்டது. ந்யூ யார்க், லண்டன், ஐரோப்பா, டோகியோ எல்லாம் அதன் வெள்ளீயத்துக்கும் ரப்பருக்கும் அண்ணாந்து நிற்கின்றன.

## மதிப்புப் பெறாத ஜோஸ்யன்.

இந்திய மஹாசமுத்திரத்தின் வடக்கு கிழக்குக் கரைகளில் இருக்கும் நாடுகள்—முக்கியமாக இந்தியா—ஸர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸுக்கு என்றென்றைக்கும் நன்றி காட்டவேண்டி நிற்கின்றன. கிழக்கேயிருந்து யுத்த காலங்களில் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் ஆபத்தே கிட்டத்தட்ட ஒழிந்திருக்குமாயின் அது அவருடைய தீர்க்க திருஷ்டியால் தான். ஆனால் சிங்கப்பூரை ஸ்தாபித்தபொழுது ராபிள்ஸ் சத்துருவாகக் கருதினது இங்கிலாந்தின் தற்போதைய நேசநாடு டச்சுக்காரர் என்றால் அதில் ஹாஸ்யத்துக்கு இடமிருக்கிறது. அவருடைய திட்டங்களும் அவர் காலத்தில் எல்லோராலும் அங்கீகரிக்கப்படவில்லை. அவர் வாழ்நாளிலே அவருடைய தீர்க்க திருஷ்டி படைக்காத மூட உலகம் அவரை ஏளனம் செய்து நிந்தித்தது. ஜொஹோர் சுல்தானுடன் அவர் ஒப்பந்தம் செய்ததைக் கேட்டதும் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு அவர் மீது அபார அதிருப்தி. கிழக்கேயே எல்லாவற்றிலும் பெரிய கடற்படை விமானப்படை தளமாகப் போகும் இடத்தை ஸ்தாபிக்கப்போன பிரயாணச் செலவை ராபிள்ஸ் இறந்த மேல் அவர் விதவை கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தது.

## கிரேட் பிரிடன், அமெரிக்கா இவைகளுக்கு சிங்கப்பூரின் அவசியம் என்ன, முக்கியத்வம் என்ன?

கிரேட் பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் பஸிபிக் மஹா சமுத்திரத்தின் இந்தப் பகுதியிலிருக்கும் பலதிறப்பட்ட விரிவான நலன்களை அறிந்தவனும், இவ்விரு வல்லரசுகளும் மலயாவின் பாதுகாப்பு விஷயத்தில் காட்டும் ஊக்கத்தைக்குறித்து ஆச்சரியப்படமாட்டான். ஏனெனில் அது இங்கிலாந்து சம்பந்தமாக சிங்கப்பூரைச்சுற்றியிருக்கும் பிரிடிஷ் நாடுகளின் பாதுகாப்பாகும்—இந்தியா, பர்மா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து. அமெரிக்கா சம்பந்தமாக அதனுடன் போட்டிபோடும் ஜப்பானிடமிருந்து பிலிப்பைன் தீவுகள் என்ன, அமெரிக்காவுக்குக் கிழக்கிலிருக்கும் அதன் தீவுகள் என்ன, இவைகளின் பாதுகாப்பாகும்.

'வியாபாரம் கொடியைப் பின்பற்றும்' ஆனதால் மேலே கூறிய ராணுவ சந்நிவேச முக்கியத்வத்தை விட மலயாவின் வியாபார முக்கியத்துவம் அபாரம். சிங்கப்பூர், இந்தியாவுக்கும் தூரத்து கிழக்குக்கும் நேர் மார்க்கத்திலிருக்கிறது. டச்சு இந்திகளுக்குள், சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் இந்த நாடுகளும் பஸிபிக் மூலம் அமெரிக்காவுக்கு அவைகளின் வியாபாரிகளும் கணக்கு வழக்குகள் பார்த்து அதிகம் பிரதி கொடுக்கிற நகரமும் சிங்கப்பூர்தான். சமாதான காலத்தில் என்று எடுத்துப் பார்த்தாலும் சுமார் 20,00,00,000 பவுன் பிரிடிஷ் சரக்குகள் மலாகா ஜலசந்தி வழியாகச் செல்லுகின்றன. அதில் ரப்பர் உலகின் ஸப்ளை 3-ல் 2-பங்கு, வெள்ளீயம் 100-க்கு 60. இந்த இரண்டு சரக்குகளும் முக்கியமான யுத்த தேவைகள். அவை நம்மிடம் இருந்தால் நாம் யுத்தத்தில் ஜயிக்கலாம். சத்துருவிடம் அவை இல்லாவிடில் அவன் தோற்கத்தான் வேண்டும். பிரதி வருஷமும் சிங்கப்பூர் துறைமுகத்தை 3,00,00,000 டன் கப்பல்கள் உபயோகிக்கின்றன. உலகத்தில் அதுதான், ஆறாவது பெரும் துறைமுகம், கிழக்கு தீவுகளுக்கு



யுத்தம், சமாதானம் இவைகளில் அதுதான் வியாபாரத்தின் கேந்திரஸ்தானம். அதிலிருந்து வடக்கே வியாபார மார்க்கங்கள் வடக்கே சீனா, ஜப்பான் அமெரிக்காவுக்கும், தெற்கே ஆஸ்திரேலியா, நியூஸிலாந்துக்கும், மேற்கே இந்தியா, ஆபிரிக்கா, ஐரோப்பாவுக்கும் கவர்பாய்கின்றன. ஆதலால் யுத்தகாலத்திலும் அமைதி காலத்திலும் சிங்கப்பூர் பலமாக காபந்து செய்யப்படவேண்டியது பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத் தேவைமட்டுமல்ல," அது ஓர் உலகத் தேவை. 1819-ல் ஸர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் சொன்ன ஜோஸ்யம் "மேற்கே மால்டா என்னமாக இருக்கிறதோ, சிங்கப்பூர் அதுமாதிரி கிழக்கே ஆகலாம். என் குடியேற்ற நகரம் ஒரு பெரும் வியாபார ஸ்தலமாகவும் கிழக்கின் திலகமாகவும் விளங்கலாம்" மிகையல்ல என்பது வெளிப்படை.

## இந்தியாவுக்கு மலயாவின் பொருள் ஆதாரத் தேவை.

இந்தியாவுக்கும் மலயாவுக்கும் வியாபாரமுறைகள் பரஸ்பர லாபத்துடன் விருத்தியாவதை எதிர்பார்ப்பது சகஜமே. அதே பிரகாரம் ஊக்கமுள்ள இந்தியர்கள் அநேகர் மலயாவில் குடியேறியிருக்கின்றனர். இந்திய மக்கள் பலர், முக்கியமாக சதா பஞ்சம் நீங்கா தமிழ் மக்கள் தங்கள் நாட்டில்விட நூறு மடங்கு வசதிகளுடன், நல்ல சம்பளத்துக்கு அங்கு அமர்ந்திருக்கின்றனர். இதன் விளைவாக இரண்டரை லக்ஷம் தென்னிந்திய குடியானவர்கள் மலயாவில் சாச்வதமாக குடியேறி இருக்கின்றனர். இன்னும் 5 லக்ஷம் ஜனங்கள் இந்தியாவிலிருந்தும் இதர பாகங்களிலிருந்தும் அவர்களுடன் குடியேறியிருக்கின்றனர். இவர்களில் எல்லோரும் கேவலம் தோட்டங்களில் அத்தக்கூலிக்கு வேலை செய்பவர்கள் அல்லர். பஞ்சாப் வாசிகளிலும் அநேகம் இருக்கின்றனர். மலையாளிகளும் அநேகர் பெரும் உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். மலயாவில் இந்தியாவின் எல்லா பிரதேச வியாபாரிகளும் தொழில் செய்தபோதிலும் நமது ஸமஸ்தானத்திய நாட்டுக்கோட்டை செட்டியார் வியாபாரிகள் அங்கே சென்று தொழிலில் தலைமை வகிப்பது நமக்கு ஸ்வாரஸ்யம் அளிக்கிறது. சீனாக்காரருக்கும் மலயாவில் ஏராளமான பணம், தொழில் நன்மைகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் லேவாதேவி செய்துவரும் அவர்களுக்குப் போட்டியாக செட்டியார்கள் சரிக்குச் சரியாகத் தொழில் நடத்துவது குறிக்கத்தக்கது.

## கொத்தளம் கட்ட தீர்மானம்.

ராபிள்ஸ் இறந்து மறக்கப்பட்ட சுமார் ஒரு நூற்றாண்டு கழிந்தது. முந்திய மஹா யுத்தத்துக்கு முன் சிங்கப்பூரில் ஒரு கடற்படைக் கொத்தளம் அமைத்து விருத்தி செய்யவேண்டும் என்று லார்ட் பிஷர் யோசனை கூறினார். தூரக்கிழக்கே ஒரு கடற்படையை நிறுத்துவது, இங்கிலாந்திலும் மத்தியதரைக்கடலிலும் மற்றொரு படையை நிறுத்துவது, ஆக இரு கடற்படை நிரவுவது என்பது அவர் ஆலோசனை. இந்தத் தடவையும் ஆலோசனையும், ஆலோசனை கூறுபவரும் ஏற்ற காலத்துக்கு முன் உதித்ததாகத் தோன்றுகிறது. ஏனெனில் இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. 1914—1918-வரை பஸிபிக்கில் பிரிடிஷ் நலன்கள் ஜப்பானால் பாதுகாக்கப்பட்டன. கீழ்த்திசை காபந்தின்

மீது அளவில்லாப் பணத்தைச் செலவழிப்பது அனாவசியமாகி விட்டது. ஆனால் யுத்தம் முடிந்ததும் வாஷிங்டன் மகாநாட்டுக்குப்பின் இங்கிலாந்து—ஜப்பானிய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. நிலைமை வெகுசீக்கிரம் மாறிற்று. முக்கியமாக டொமினியன்கள் ஜாஸ்தி காபந்துக்கு வற்புறுத்தின. இவைகளின் விளைவாக சிங்கப்பூரில் ஒரு கடற்படை கொத்தளம் அமைக்கிறது, என்று 1921-ல் தீர்மானிக்கப்பட்டது. எவ்வித பெரும் யுத்தக் கப்பலும் அணைந்து தங்கக் கூடிய ஒரு பிரமாண்டமான கப்பல் சாலை அமைக்க உடனே திட்டங்கள் வகுக்கப்பட்டன.

ஜப்பானுக்கு இதன் விஷயமே பிடிக்கவில்லை. இது ஜப்பான் சாம்ராஜ்ஜியத்துக்கு எதிரிடையாக ஆக்கிரமணத்துக்காக அமைக்கப்படுகிறது, பஸிபிக் சமுத்திரத்தில் புதிய கோட்டைகள் அமைக்கக்கூடாதென்ற வாஷிங்டன் மகாநாட்டின் நிபந்தனைக்கு இது விரோதமென்றும், ஜப்பானியர் குறைகூறுகின்றனர். வாஸ்தவத்தில் இவை பிசகு. நியூ யார்க்கிலிருந்து ஜிப்ரால்டர் எவ்வளவு எட்டியிருக்கிறதோ அவ்வளவு யோகஹாமாவிலிருந்து சிங்கப்பூர் எட்டி நிற்கிறது. வாஷிங்டன் ஒப்பந்த நிபந்தனைகளும் சிங்கப்பூர் பிரதேசங்களுக்கு அன்வயிக்கவில்லை. ஆனதால் கொத்தளத்தின் நோக்கம் காபந்தே ஒழிய ஆக்கிரமணம் அல்ல என்பது வெளிப்படையாகும். வேலைகளும் சரிவர நடந்து அந்த அற்புத கொத்தளமும் முடிவடைந்தது.

## கடற்படைக் கொத்தளம்.

தீவின் கிழக்கே ஸெலேதார் பக்கம் 20 சதுர மைலுக்கு பிரிடிஷ் கடற்படை முழுவதும் ஏக காலத்தில் தங்கக்கூடிய ஆழ்ந்த நீர் நிலைகள் இருக்கின்றன. சுற்று முற்றும் பெரும் கப்பற்சாலைகள் என்ன, அவைகளின் சாமக்கிரியைகளுடன் கூடிய ஒரு நவீன துறைமுக நகரம் உற்பத்தியாயிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளிகள், பெரும் பெரும் தொழிற்சாலைகள், ரிபேர் கடைகள், ஆயுத சம்பாரங்கள், மாலுமிகளுக்கு வாசஸ்தலங்கள் இவைகள் அதில் காண்கின்றன. கப்பல்கள் தங்கள் ஓயாத வேலைகளுக்குத் தேவையான காலம் கடலில் தயாராக இருக்கச் செய்வதற்காக சீர்பார்க்கும் வேலைதான் துறைமுகம் அமைக்கப்பட்டதின் முக்கிய கருத்து. இங்கு தனித்துக் குறிப்பிடப்பட வேண்டியது கொத்தளத்தின் அநேக வசதிகளுள் முக்கியமாக கருதப்படவேண்டியது 1938-ல் திறக்கப்பட்ட 'ஆறாவது ஜார்ஜ் மன்னர்' கப்பற்சாலை. மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவருக்கு ஏதோ பூமியில் பெரும் துவாரம்போல் தோன்றும். ஆனால் அது உலகிலுள்ள எந்தப் பெரும்கப்பலுக்கும்—யுத்த கப்பலோ, லயனரோ, தங்க இடங்கொடுக்கும். சமுத்திரப் பக்கமுள்ள சுவரண்டை. அநேக யுத்தக் கப்பல்கள், சாமான்கள் ஏற்றியோ அல்லது கரி அல்லது எண்ணெய் ஏற்றியோ ஒரே காலத்தில் நிற்க முடியும். பண்டகசாலைகளில் செயற்கைக் குளிரால் பாதுகாக்கப்பட்ட உணவு என்ன, இதர சாமான்கள் என்ன, ஒரு நகரின் தேவைக்கான சாமன்கள் எதிர்பாராத நெருக்கடிக்காக சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. படையின் தேவைக்காக ஏராளமான எண்ணெய் ஸப்ளைகள் கையிலிருக்கின்றன.



சுருக்கமாக, கிழக்கே ஸாம்ராஜ்ஜியக்காபந்தில் சிங்கப்பூர்தான் முகான்மையானது என்று சொல்லலாம். ஆகாயத் தாக்குதலிலிருந்து அது பக்காவாகக் காபந்து செய்யப்பட்டிருக்கிறது. பல முறைகளில் மாறிமாறி இலக்குத் தவராமல் சுடக்கூடிய கரை ஓரத்து பீரங்கிகளால், அது கடற்பக்கத்திலும் பலமாகக் காபந்து செய்யப்பட்டிருக்கிறது. எதிரி ரெய்டர் கப்பல் அதை எத்திசையிலிருந்தாவது தாக்குவது என்பது பிரமப்பிரயத்தனமாகிவிட்டது.

## விமானக் கொத்தளம்.

எதிரியின் விமானப்படைத் தாக்குதலை எதிர்த்து நின்று மீற அநேக நவீன விமானங்கள் சிங்கப்பூரில் இருக்கின்றன. விமானக்கொத்தளத்தில் ஆபீஸ் கட்டடங்கள், உத்தியோகஸ்தர், விமான ஓட்டிகள், யந்திர நிபுணர்கள் இவர்களின் ஜாகாக்கள், விமானந்தாங்கிகள், தொழிற்சாலைகள், ரிபேர் சாலைகள் இவைகள் இருக்கின்றன. விமானங்களின் எல்லா தினுசுகளும் அங்கு ஏராளமாய் இருக்கின்றன; பாம்பர்கள், டார்பிடோ பாம்பர்கள், வேவு விமானங்கள், நீர் விமானங்கள், வேட்டை விமானங்கள், புது புது தினுசு அமெரிக்க விமானங்களும் வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன. இதனால் சிங்கப்பூர் ஸாம்ராஜ்ஜிய விமானக் கொத்தளங்களுள் முக்கியமானவற்றுள் ஒன்றாகிவிட்டது.

## எல்லைச்சரகங்களின் பாதுகாப்பு.

மலயாவின் காபந்து நாம் மேலே கூறிய ஆகாய கடற்காபந்தில் மட்டில் என்று ஒருவரும் எண்ணக்கூடாது. வடமேற்கிலுள்ள மலைப்பிரதேசம் ஒரு பட்டாள வாஸஸ்தலமாக மாற்றப்பட்டிருக்கிறது. நிலத்தில் காபந்து ரீதியாக பிரச்னை இதுதான்.—சில நாட்களுக்குமுன் ஜப்பானின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக வதந்திகள் உலாவிய தாய்லாந்திலிருந்து, தன் தெற்கு பாகத்தில் தன் சொந்தத் துருப்புகளை அதிகரித்த தாய்லாந்திலிருந்து, ரயில் அல்லது தார் ரோடு, அல்லது சாமான்களை சுங்கம் கொடுக்காமல் ரகசியப் பாதைகள் வழியாகக் கொண்டுபோகும் எல்லா மலயா—தாய்லாந்து பாதைகளையும் கார்ப்பது. எல்லைச்சரகத்தின் காவல் வேலை இந்தியப்படைகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ரோந்துப் படைகள் உஷாராயிருக்கின்றன. காட்டில் பாதைகள் செதுக்கும் ஆள்கள் முன் செல்ல, இந்தியப்படைகள் காட்டுச்சண்டை பழகிவருகிறார்கள். ஆபத்து காலத்தில் ரோடுகள், ரயில்கள், பாலங்களை வெடிவைத்து உடைக்க முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## இந்தியத் துருப்புகள்.

இந்தியச் சிப்பாயின் மெச்சத்தகுந்த விசேஷம் இது—அவன் மாறும் சீதோஷ்ண நிலைகள் என்ன, மாறும் சண்டை முறைகள் என்ன, மாறும் சந்தி வேசங்கள் என்ன இவைகளுக்குத் தக்கபடி ஒத்துப்போவான். ஒரு உதாரணம். பழய முண்டாசுக்குப் பதிலாக காட்டு வேலையை முன்னிட்டு, ஆஸ்திரேலியர் அல்லது கூர்க்கர் அணியும் சாய்ந்த தொப்பியை அணிய பழகிவிட்டான். ஆனால் அவனுடைய மாறுதலேற்க மாறும் குணம் யந்திரச் சண்டையை, அவன் உற்சாகமாகவும், வெற்றியுடனும் மேற்கொண்டதில்தான் வெளியாகிறது. ஒருவர்

எழுதியபடி "இந்திய யந்திர சாதனப்படை ஒன்று, பிரென் பீரங்கி வண்டிகளில் ஏறி சத்துருவின் பிரதேசங்களைத் தாக்கி, தெருமல் இறங்கி, சண்டை ஸ்தலங்களுக்குச் செல்லுவதைப் பார்த்தால் எவருக்கும் உற்சாகமுண்டாகும். நவீன தானாகச் சுடும் ஆயுதங்கள் அவர்களுக்குத் தண்ணீர்பட்ட பாடாகிவிட்டது— பிரென் பீரங்கிகள், விகர்ஸ்-பெர்தியர் பீரங்கிகள், தாம்ஸன் ஸப்மெஷின் பீரங்கிகள், துப்பாக்கிகள் இந்த ஆயுதங்களை அவர்கள் ஏந்திச்சுடும் நேர்த்தி என்ன, வேகம் என்ன இவற்றையும், கவாத்துப் பழகும்போது அவர்களின் முகங்களில் ஒழுகும் சுறுசுறுப்பு, ஏகாக்ரதை இவைகளைப் பார்க்கும்பொழுது, இவர்களை எதிர்க்கும் விரோதிப்படை வருந்த வேண்டியதுதான்." இந்தியப் படைகளைப் பார்த்த ஒரு அமெரிக்கன் பத்திராதிபர் கூறுகிறபடி, 'இந்திய பீரங்கிக்காரன்கள் பிடிவாதக்காரப்பயல்கள்'!

## யாரிடமிருந்து காபந்து?

இந்தப் பிரதேசத்தில் தற்பொழுது நிலவிவரும் சமாதானம் குலைக்கப்படுமானால் அது அச்சின் மூன்றாவது பங்காளியாகிய ஜப்பானால்தான். பஸிபிக்கின் சமாதானத்தில் அமெரிக்கா, கிரேட் பிரிடன் இரண்டும் கண்ணும் கருத்துமாயிருக்கின்றன. 'அநாம், கொச்சின் சைனா, கிழக்கு இந்தி, மலயா, பர்மா, இந்தியா, பிலிப்பைன்ஸ் இவைகளில் வாழும் 50,00,00,000 ஜனங்களின் விடுதலை' என்ற போலிக்காரணத்தின்பேரில், 'புதுக்கிழக்கிந்திய ஏற்பாட்டை' ஸ்தாபிக்கும் சர்வாதிகாரப் பேராசைக் கனவை நிறைவேற்ற ஜப்பான் தெற்கே பாயுமாகில் அன்று யுத்தம் ஏற்படத்தான் ஏற்படும். அதன் மற்ற இரு கூட்டாளிகளுக்கும் ஜப்பான் ருஷ்யாவை வடக்கேதாக்குவது உகக்கும். ஆயினும் அதன் 'விரிவு நோக்காளர்கள்' ஜனநாயகங்கள் இதர இடங்களில் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை பயன்படுத்திக் கொள்ளப்பார்ப்பார்கள் என்று எண்ணுவது சாத்தியம். அது அவ்வாறு செய்யுமாயின் அதன்பாடு திண்டாட்டமாகும். 'இந்திய மஹா சமுத்திரத்தின் ஜிப்ரால்டர்' போன்ற சிங்கப்பூரின் தற்போதைய பலத்தகாபந்து நிலைமையில் ஜப்பான் மிகவும் சிரமப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஜப்பானின் உருட்டல் மிரட்டல்களுக்கு அமெரிக்கா என்னசெய்யக்கூடும் என்பதைக் காட்டக்கூடிய வழியில் ஐக்கிய அமெரிக்கா ஏற்கனவே கரிபியன் கடல், பஸிபிக் சமுத்திரம் இவைகளில் பந்தோபஸ்துகள் செய்து, காபந்து கடல் எல்லைகளையும், ஆகாய எல்லைகளையும் விதித்திருக்கிறது. நிப்பான் (ஜப்பான்) பூகோளத்தின் இந்தப் பிரதேசத்தின் க்ஷேமலாபத்தையும் பந்தோபஸ்தையும் நேரடி சண்டைமூலம் குலைக்க முயலுவது என்ற பயங்கரமான முயற்சிக்கு இவ்விருபெரும் ஜனநாயகங்களும் தயாராயிருப்பதுடன் மட்டில் அல்லாமல், அந்த முடிவை சந்தோஷத்துடன் வரவேற்பார்கள் என்றே தோன்றுகிறது.

இந்த நெருக்கடியான தருவாயில், தூரக்கிழக்கிந்திய பிரிடிஷ் கமாண்டர் இன்-சீபின் தீர்மான வார்த்தைகள் மனதில் பதியக்கூடிய சிலநிதானஸ்தர்களேனும் ஜப்பானில் இருக்க வேண்டும். சமீபத்தில் அவர் சொன்னார்:— 'மலயாவின் காபந்துகளை விருத்தி செய்வதினின்று ஓயோம். நானும் தூங்கப்



போவதில்லை, பிறரையும் தூங்கவிடப் போவதில்லை'. இதைச் சொன்ன ஸர் ராபர்ட் ப்ரூக் போபாம் ஒரு கர்மவீரன். சென்ற 5 மாதங்களுள் இந்த வார்த்தைகளின் தாத்பர்யத்தை நடத்தையில் காட்டிவிட்டார். உதாரணமாக, 1941 பிப்ரவரியில் பிளென்ஹீம் பாமர்களும் ஆஸ்திரேலிய விமானப்படையும் வடக்கு மலயாவை காக்க வந்தன. சிங்கப்பூர் ஜலசந்தியின் கிழக்கு வாசலில் கண்ணிகள் போடப்பட்டன. எல்லாவற்றிலும் பெரிய கடற் படைஒன்றின் காபந்தின் கீழ் ஆஸ்திரேலிய துருப்புகளும் ஆயுத முஸ்தீபுகளும் வந்து சேர்ந்தன. 6,000 மைல் பறக்கக்கூடிய 4 இஞ்சின் போயிங் பாமர்கள் அமெரிக்காவிலிருந்து மலயாவுக்கு வந்திருக்கின்றன. மார்ச்சு 1941 முதல் சிங்கப்பூர் துறைமுகத்தின் கிழக்குப் பிரதேசங்கள் வழியாக ஒரு கப்பலும் வரக்கூடாதென்று தடை செய்யப்பட்டிருக்கிறது. பின்பும் புது பிரிடிஷ், இந்தியப் படைகளும் ஆர். ஏ. எப்.-பும் வந்திருக்கின்றன. 1941 ஏப்ரலில் புது ப்ரூஸ்டர் பபலோ விமானங்களில் அநேகம் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும், ஆஸ்திரேலியப் படைகளும் வந்தன. 1941-ம் ௵ மே மாதம் பிரிடன் படைகளும் ஆர். ஏ. எப்.-பும், கடற்படைகளும் வந்தன. அமெரிக்க வாடகைக் கடன் மசோதாப்படி ஐக்கிய அமெரிக்காவிலிருந்து ஏராளமான யுத்த தளவாடங்கள் வந்தன. மீண்டும் வடக்கு எல்லையிலிருந்து போர்னியோவரை காபந்து பட்டாளங்கள் வலுவு செய்யப்பட்டன. 1941 ஜூன் ௴ 30,000 ஆட்கள் கொண்ட மலயா நாட்டாரின் ஒரு படை காபந்துக்காக திரட்டப்பட்டது. சிங்கப்பூரில் மட்டில் 13,000 ஆகாயத் தாக்குதல் காபந்துக்காக ஆள்கள் பதிந்து கொண்டிருக்கிறார்கள். மேலே கண்ட இதன் பிரகாரமும் இதர வழிகளிலும் வேலைகள் மும்முரமாக நடந்தேறி வருகின்றன. இந்த சமிக்ஞைகளையும் ஜப்பான் புறக்கணிக்குமா?

---

# அவசரச் செய்தி.

---

## ருஷ்யாவின் நிலைமை.

## ஆகாயம் வெளிவாங்குகிறது: அபாயம் குறைகிறது.

### போர் நிலைமை 10 நாட்களுக்குள் எவ்வளவு மாறிவிடுகிறது!

ருஷ்ய யுத்தத்தைப்பற்றி, 10 தினங்களுக்குமுன், உத்தியோக பூர்வ செய்திகள், ஒன்றுக்கு மற்றொன்று முரணாய், புரியாதபடி, வந்ததிலிருந்து, விசாரத்தோடு, வெகு ஜாக்கிரதையாய், நாம் அதைப்பற்றி எழுதும்படியிருந்தது. டாங்கிகளும் படைகளும் பாம்புபோல் முன்னேறுகின்றன: ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் சேதமானார்கள்; சமாசாரங்கள் வந்தன. அவைகளில் ஒரு நாள் அச்சு நாடுகளுக்குச் சந்தோஷமான செய்தி: மற்றொரு நாள், ஜனநாயக நாடு

களுக்குச் சந்தோஷமான செய்தி: இவ்வாராக சமாசாரங்கள் வந்து கொண்டிருந்தன. ஜெர்மன் மின்னல் படையெடுப்பு அதிக ஜயம் பெறவில்லை என்று வந்த ஒரு செய்தியே சற்று திருப்தியைக் கொடுத்தது. ஆனால் இதிலிருந்து தைரியமாய் வெற்றி நமக்கென்று சொல்லிக்கொள்ள இடமில்லை.

ஆனால் இன்று வெளிவந்த பத்திரிகைகளில் வந்திருக்கும் இரண்டு செய்திகளிலிருந்து எதிர்கால நிலைமை திருப்திகரமாய் மாறிவிடலாமென்று தோன்றுகிறது. இச்செய்திகள் நடுநிலை ஸ்தலங்களாகிய ஜூரிக், ஸ்டாக்ஹோமிலிருந்து கிடைத்திருக்கின்றன. 'ருஷ்யர்கள் திடமாய் நிலைத்து நிற்கிறார்கள்' என்பது ஒரு செய்தி; ஜெர்மானியர் 'நிலவரைகளில் நின்று சண்டை செய்யப்போகிறார்கள்' என்பது மற்றொரு செய்தி.

இதிலிருந்து இரண்டாவது மின்னல் படையெடுப்பு நிறுத்தப்பட்டு விட்டதாகவும், ஜெர்மன் சைனியத்தின் ஒரு பாகத்தையாவது ருஷ்யர்கள் திருப்பி—எதிர்க்கப் போவதும் வெளியாகிறது. இவை இரண்டு காரியங்களும் ஹிட்லருக்கு பிரதிகூலமானவை.

ஆனால் இந்த சம்பவங்களிலிருந்து ருஷ்ய யுத்தம் முடிந்துவிட்டதாகவாவது அல்லது ஜெர்மனி தோற்றுவிட்டதாகவாவது முடிவுக்கு வரக்கூடாது. ஆனால், இக்காலத்தில் உலகத்திலேயே வெகு வேகமாயும், பலமாயும் முன்னேறக் கூடியதென்று சொல்லக்கூடிய ஜெர்மன் சைனியத்தை ருஷ்ய சேனாதிபதிகள் யுக்தி செய்து நிறுத்திவிட்டார்களென்பது நிச்சயமாய்விட்டது. பான்ஸர் சைனியங்களின் மின்னல் முன்னேற்றத்தைத் தடைபட்டுவிட்டது. இம் மாதிரியாக இன்னும் 7, 8 வாரங்கள் போய்விட்டால் மாரிகாலம் வந்து, ஜெர்மானியர்கள் ஓட்டம் பிடித்துவிடுவார்கள்.

ருஷ்ய யுத்தம் ஆரம்பித்தபோது பால்டிக் நாடுகளையும், ருஷ்யன் போலண்டையும் ஜெர்மானியர் சுலபமாய் பிடித்துக்கொண்டார்கள். அதற்குக் காரணம் அப்பொழுது ருஷ்ய சைனியங்கள் திரட்டப்படவில்லை யென்பது ஒன்று. ஜெர்மனியோ தன் படையை ஏற்கனவே திரட்டிவைத்துக்கொண்டு, திடீரென்று பாய்ந்தது இரண்டு. ருஷ்ய முன் அணிகளும் அப்பொழுது பலமாயில்லை. இருந்தும், சாமர்த்தியமாய் எதிர்த்து, ஜெர்மானியரின் முன்னேற்ற வேகத்தைக் குறைத்தார்கள். இரு பக்கத்திலும் ஏராளமான சேதமேற்பட்டது ருஷ்ய ராணுவ பலமும் சோதிக்கப்பட்டு, அதன் வலிமையும் ஸ்திரமாயிற்று. 'பின்வாங்க நேரிட்டால் காலிசெய்யுமிடங்களை பொசுக்கி விடுங்கள்' என்று ஸ்டாலின் போட்ட உத்தரவின் பிரகாரம் இடங்கள் காலி செய்யப்பட்டன.

ஜூலை மாதத்தின் மத்தியில் புதுயந்திரசாதனப் படைகளோடும், காலாட் படைகளோடும் ஜெர்மானியர் தங்களுடைய இரண்டாம் படையெடுப்பைத் துவக்கி 500 அல்லது 600 மைல்களுக்கப்பாலுள்ள லெனின்கிராட், மாஸ்கோ, கீவை நோக்கி முன்னேறப் பார்த்தார்கள். அப்பொழுதுகூட ருஷ்ய சைனியம் பூராவாகத் திரட்டப்படவில்லை, இருந்தபோதிலும் ஏற்கனவே திரட்டப்பட்ட ஏராளமான படைகளைக்கொண்டு ருஷ்யர்கள் ஜெர்மன் படைகளைத் தடுத்து முன்னேற்ற வேகத்தைக் குறைத்துவிட்டார்கள். அப்பொழுது ஜெர்மானியர் ருஷ்யர்களின் முழுசைனியமும் சண்டைக்கு வந்துவிட்டதாகப் பொய் பிரசாரம் செய்தார்கள். மேலும், ஸ்டாலின், அரண் ஒரே வாரத்தில் பிளக்கப்படும், இரண்டு பக்கங்களிலும் வளைத்துக்கொண்டு லெனின்கிராடை பிடித்து விடுவோம்; ருஷ்ய கப்பற்படையை நகரவிடாது நிறுத்திவிடுவோம்; கீவ், ஸெபாஸ்டபோலைப் பிடித்து விடுவோம்; யூக்ரேனியில் விளைவை யெல்லாம் அபகரிப்போம்; ருஷ்ய அரசாங்கம் கலைந்துவிடும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டார்கள்.



அந்தச் சமயத்தில் அபாயம் அதிகமாய்தானிருந்தது. மூன்று முக்கியப்போர் முனைகளுக்கு வரோஷிலாப், டிமோஷென்கோ, புடெனியென்ற மூன்று ருஷ்ய சேனாதிபதிகள் அனுப்பப்பட்டார்கள். பத்து நாட்கள் யுத்தம் நடந்து ஜெர்மன் முன்னேற்றம், பலமாய் தடைபட்டு, சைனியங்களும் அசந்துபோயின. இப்போழுது களைப்பார சும்மாவிருக்கின்றன. தாமதமெல்லாம் ஜெர்மானியருக்கு இடையூறாகும். இன்னும் லெனின்கிராடைச் சேர 150 மைலும், மாஸ்கோவைச்சேர, 200 மைலும், கீவைச்சேர 80 மைலும், போகவேண்டும். இதற்குள் முதலிரண்டு நகரங்களையும் பிடித்து விட்டாதாக சென்ற வாரமே ஜெர்மானியர் பொய்ச் செய்திகளை விடுத்துவிட்டார்கள். ஜெர்மன் சைனியங்கள் சொந்த தேசத்திலிருந்து வெகுதூரம் வந்து விட்டன. இவ்வளவு தூரத்துக்கு உணவு, தளவாடங்கள் வந்து சேரவேண்டும். குறுக்கே, ஜெர்மானியர் பிடித்தாகச் சொல்லிக்கொள்ளுமிடங்களிலெல்லாம் ருஷ்ய சிறுபடைகள் உபத்திரவம் செய்கின்றன. ஜெர்மன் விமானப்படையின் பராக்கிரமம்கூட ஆகாயத்து வெளியிலிருந்து ருஷ்ய விமானப்படையை விரட்டமுடியவில்லை. ஜெர்மனியிலும் வடகடலிலுள்ள ஆக்கிரமிப்பு நாடுகளிலும் பிரிடிஷ் விமானங்களால் ஏற்படும் கோரமான பாய்ச்சல் களையும் எதிர்ப்புகளையும் தவிர்க்க ஜெர்மனியின் விமானப்படையின் பெரிய, விசேஷ சக்திவாய்ந்த பாகத்தை ஜெர்மனி கிழக்கேயிருந்து இங்கே அனுப்ப வேண்டியதாக ஏற்பட்டதிலிருந்து ஜெர்மானியர்களைவிட ருஷ்யாவின் விமான ஆதிக்கம்தான் ஏற்படுவது சகஜம்.

ஏன். நாம் முன் ஒரு சமயம் ஏன் பிழை செய்தோம். ஜெர்மனியை ருஷ்யா தேக்கிவைக்கக்கூடுமானால், பிரான்ஸிலும் ஏன் அம்மாதிரி செய்திருக்கக் கூடாது. இதற்குக் காரணங்கள் பின்வருபவை.

1. முதலாவது, ருஷ்யாவின் பரப்புகள் பிரெஞ்சுப் பரப்புகள் போலுள்ளவையல்ல. ருஷ்யாவில் நகரங்களும் பட்டணங்களும் நெருக்கமாகயில்லை. அதன் ரஸ்தாக்கள் அநேகமில்லை. ரஸ்தாக்களுக்கு இடையிலுள்ள பிரதேசங்களும் அதிகமானவை. ஒரு நகரம் விழுந்ததிலிருந்து பக்கத்திலுள்ள நகரத்துக்கு சமீப காலத்தில் விபத்து ஏற்படாது. இருநகரங்களுக்கிடையே உள்ள ரஸ்தாக்களிலும் பின்னுள்ள ரஸ்தாக்களிலும் அடைக்கலம் புகுந்தவர்கள் ஏராளமாக வந்து ரஸ்தாக்களை அடைத்துவருகிறதில்லை. ருஷ்யாவிலுள்ள ரஸ்தாக்களில் பெட்ரோல் ஸப்ளை வசதிகளும், தொழிற்சாலைகளும், வேறுவிதமான கொள்ளைப் பொருள்களும் அதிகமாகக்கிடையாது.

2. இரண்டாவது ருஷ்யாவின் மூன்று பெரிய சேனாதிபதிகளுக்குப் பூர்ணமான அதிகாரம் (ஒருவரைவிட்டு ஒருவர் பிரியும்படி நேர்ந்தால், அவர்கள் அதிகாரத்துக்குள்ள சேனைகள் பின்வாங்கவேண்டியதைத் தவிர, என்று நினைக்கிறேம்) கொடுத்து அனுப்பியதிலிருந்து பாதுகாப்பின் சௌலப்யத்தையும் அதன் பிரயோஜனத்தையும் நாம் அறியலாம். குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் அவர்கள் சண்டைசெய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு அவர்களுக்கு இல்லை. அவர்கள் மாரிகாலம் வரும்வரையில் யுத்தம் செய்துகொண்டிருக்கவேண்டும்.

3. மூன்றாவது, ஸ்டாலின் அரணென்பது மாஜினோ அரணைப்போல் விலாப் பக்கத்திலிருந்து கைப்பற்றக்கூடியதல்ல. அப்படி கைப்பற்றப்படவுமில்லை. அது ஸ்பஷ்டமாயில்லாத நூற்றுக்கணக்கான மைல்கள் பரவிய பூதாகாரமான ஒரு அரண். ருஷ்யர்கள் எதிர்பார்த்தபடி ஜெர்மானியர்களுக்கு முதலில் சில வெற்றிகள் ஏற்பட்டன. அவைகளிலிருந்து ருஷ்யர்களுக்குக் கலக்கம் ஏற்படவில்லை. அவர்கள் பின்வாங்கி, நேரானவோ, அல்லது அரைவட்டமோ, அல்லது வளைந்து வளைந்தோ உள்ள மற்றொரு நல்ல ஸ்தானங்களை அடைந்ததோடு, எதிரியின் போக்குவரத்து சாதனங்களுக்கும் ஸப்ளைகளுக்கும் கஷ்டங்களையும் உண்டு பண்ணிவிட்டார்கள். அவர்கள் செல்லச்செல்ல இந்தக் கஷ்டங்கள் அதிகரிக்கும்.

4. நான்காவது, இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இப்பொழுது அதிகமாக வேகமுறையை ஜெர்மானியர்கள் கையாளவேண்டும். எந்நிலைமையிலும் அவர் முன்னேறவேண்டும். (ஏற்கனவே குறைந்த பக்ஷம் 10 லக்ஷம் துருப்புகள் மாண்டுவிட்டன) அல்லது அவர்கள் தோல்வியடைந்துவிட்டதாக ஒப்புக் கொள்ளவேண்டும். இந்த முயற்சியில் ஜெர்மனியின் பான்ஸர் வகுப்பை அவர்கள் உபயோகிக்கவேண்டும், ருஷ்யாவின் நூதனமான கவசம்பூண்ட துருப்புகளை எதிர்க்கவேண்டும். ஸப்ளை வசதிகள் குறைந்துவரும். தங்கள் தளங்களிலிருந்து முன்னேற ஏற இலைகள் இல்லாமலே போய்விடும்.

ஜெர்மனியின் மகத்தான இரண்டாவது எதிர்ப்பு யுத்தத்தை நாசமாக்கியிருக்கும் ருஷ்யர்களின் யுத்த தந்திரத்தைப்பற்றி இதுதான் ஒரு ஆராய்ச்சி செய்பவரின் அபிப்பிராயம். அவர்கள் தேசத்தில் 10,000 சதுர மைல்களுக்குள்ளிருக்கும் நகரங்களெல்லாம் பாழடைந்து விடுவதாயிருந்தாலும பொருட்படுத்தாமல், ஜெர்மனியின் அடுத்த எதிர்ப்பையும் ருஷ்யர்கள் தடுத்துவிடுவார்களேயானால், ஜெர்மனியின் அபிப்பிராயப்படி இந்த யுத்தமானது உபயோகமற்றதாக முடிந்துவிடும்.



# வார யுத்தச் செய்திகள்.

24—7—41-லிருந்து 30—7—41-வரை.

## ஜப்பானிய ஆக்கிரமம்.

**தற்காப்பு ஒப்பந்தம்.**—பொழுது விடிந்தால் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுவதும், காரியமானவுடன் அவைகளை ரத்து செய்வதும் அச்சுநாடுகளுக்கு இடைவிடாத வேலையாய்ப்போயிற்று. ஆனால் புதன்கிழமை யன்று ஜப்பானோடு விஷி செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்போல் கேவலமானது நாம் இதுவரைக் கேழ்விப்பட்டதில்லை. தூரக்-கிழக்குப் பிரதேசங்களுக்குத் தலைமையும், அங்கு கலகம் வராது தடுக்க ஜப்பானுக்கு உரிமையையும் விஷி அங்கீகரித்து விட்டதாம். இதற்கு பதிலாக இந்து-சைனாவில் பிரான்ஸுக்குள்ள அரசு பாத்தியம் ஒப்புக் கொள்ளப்பட்டுக் காப்பாற்றப்படுமாம். இந்த ஒப்பந்தத்துக்குக் காரணம் பிரிடன் ஆக்கிரமிக்குமென்ற பயமாம். ஏதோ இச்சாக்குகளைச் சொல்லிக்கொண்டு தென்-இந்து-சைனாவை ஜப்பான் கொள்ளையடித்துவிட்டது. காம்ரான் குடாக் கடலிலும், ஸைகானிலும் கப்பல் நிலயங்களையும், 8-விமான நிலயங்களையும் கைப்பற்றிக்கொண்டு, 40,000 துருப்புகளையும் இங்கு இறக்கியிருக்கிறது. பிரிடன் ஆக்கிரமிப்பதாகச் சொல்லுவதெல்லாம் வெறும் கற்பனையே. இப்பொழுது விஷி அடைந்திருக்கும் அவமானமே அச்சு நாட்டோடு சேருவதின் பலனாகும். பெர்லின் சொன்னதை யெல்லாம் கேட்டுச் சம்மதித்து அடிமையாய் நிற்பதையும் பார்த்தால் விஷிக்கு புத்திமாராட்டமோவென்றுகூட நினைக்கவேண்டியிருக்கிறது.

**பிரிடனுடைய நோக்கம்.**—பிரான்ஸுக்குச் சொந்தமான இந்து-சைனாவை சேர்த்துக்கொள்ளும் நோக்கம் பிரிடனுக்குக் கிடையாது. முடிந்த மட்டும் பஸிபிக்கில் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். இதற்காகவே யுனைடெட் ஸ்டேட்ஸ், நெதர்லண்ட்ஸ்,-கிழக்கு-இந்தியத் தீவுகளில் வம்பு வராதிருக்க, ஜப்பானுக்கு வேண்டிய எண்ணெயைத் தானே கொடுத்து வந்தது. மேலும் சமீபத்தில் அமெரிக்காவும், பிரிடனும், சைனாவும், நெதர்லண்ட்ஸ், கிழக்கு-இந்தியாவும் சேர்ந்துகொண்டு இந்து-சைனாவைக் காப்பாற்றுவதாக வாக்களித்தன. பெர்லின் வேண்டாமென்று சொல்லச் சொன்னதின் பேரில் பிரான்ஸ் இந்த நட்பை அலக்ஷியம் செய்துவிட்டது.

**ஜப்பானின் நோக்கங்கள்.**—ஜப்பானின் ஆக்கிரம நோக்கங்கள் நெடு நாளாய்த் தெரிந்ததுதான். 1931-ல் மஞ்சூரியா, 1932—37-வட-சைனா, 1938-ல் கான்டனும், தென்-சைனாவும், 1939-ல் ஹைனன், 1940-டாங்கிங், இப்பொழுது, அதாவது, 1941-ல் ஸைகான். அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

**ஜப்பானுடைய தந்திரம்.**—இப்பொழுது அதிகாரத்துக்கு வந்திருக்கும் கோனோயே மந்திரிசபை தந்திரமாய் தென்-இந்து-சைனாவை பிடித்திருக்கிற

தென்பதில் சந்தேகமில்லை. இதிலிருந்து பிரிடனேயாவது, யுனைடெட் ஸ்டேட்ஸை யாவது, சண்டைக்கிழுத்ததாகச் சொல்லமுடியாது: ஐரோப்பிய யுத்தத்திலும் கலந்து கொண்டதாகச் சொல்லமுடியாது.

**ஜப்பானின் உள்ளெண்ணம்.**—தெரிந்தது தான். தென்-இந்து-சைனாவில் ராணுவ ஸ்தலங்களைக் கைப்பிடித்துக்கொண்டு, அங்கிருந்து மற்ற இடங்களை அபகரிப்பது தான். இதில் ஒளிவுமறைவில்லை. பக்கத்தில் பிலிப்பைன்ஸ், மலயா, போர்னியோ, நெதர்லண்டஸ் கிழக்கு-இந்தியாவெல்லாமிருக்கின்றன. ஆனால் இவைகளுக்கு 'அபாயம்' கிட்டிவிட்டதென்று சொல்லமுடியாது. ஸைகான் சிங்கப்பூரிலிருந்து 600-மைலுக்கும், போர்னியோவிலிருந்து 750-மைலுக்கும், ரங்கூனிலிருந்து 900-மைலுக்கும் அப்பால் இருக்கிறது. காம்ரான்-குடாக் கடலினால் லாபமொன்றுமில்லை. இங்கு சிறு சண்டைக் கப்பல்கள் தான் தங்கலாம்.

**பொருளாதார யுத்தம்:— (a) யுனைடெட் ஸ்டேட்ஸ்.**—இக்காரணங்களால், இப்போது ராணுவச் சண்டையில்லாது பொருளாதார யுத்தத்தைத்தான் ஜப்பான் மேல் தொடுக்கவேண்டியிருக்கிறது. அமெரிக்க சாமான்களை, வியாபாரத்தைக் கெடுத்துப்போவதில், ஜப்பான் உலகத்தில் மூன்றாவது பெரிய வியாபாரியாகும். ஒரு சிறிதுத் தயக்கம்கூடவில்லாது யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள ஜப்பானிய ஐவேஜிகளை வழங்காது அமெரிக்கா இப்பொழுது தடுத்துவிட்டது. இதனால் 1,310 லக்ஷம் டாலர்கொண்ட ஜப்பானிய முதலும் தடைபட்டு, 60,000-லிருந்து 70,000 வரை ஜப்பானிய முதலாளிகளும் வியாபாரமின்றி கஷ்டப்படுவார்கள். இதர அமெரிக்க நாடுகளும், இம்மாதிரி செய்யவேண்டுமென்றும், யுத்த சாமான்களை ஜப்பானுக்கனுப்பக்கூடாதென்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் கேட்டுக்கொண்டிருக்கிறது. முன் ஜாக்கிரதையாக ஹவாயிலுள்ள நிலப்படைகளுக்கு எச்சரிக்கை கொடுத்ததோடு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிலிப்பைன்ஸ் சைனியத்தையும் கைக்கொண்டுவிட்டார். ஹவாயிலிருந்த கடற்படையும் எங்கேயோ புறப்பட்டுவிட்டதாகக் கேள்வி.

**(b) பிரிடன்.**—பிரிடனும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகளும் இதேமாதிரி ஆங்காங்குள்ள ஜப்பானிய ஐவேஜிகளை நிறுத்திவிட்டன. மேலும், ஜப்பானோடு பிரிடனும், இந்தியாவும், பர்மாவும் செய்துகொண்டிருக்கும் வியாபார ஒப்பந்தங்களையெல்லாம் ரத்துசெய்யப்போவதாக பிரிடன் எச்சரிக்கை செய்துவிட்டது.

சைனா ஐவேஜிகளும் இப்பொழுது அடைக்கப்பட்டிருக்கின்றன. சைனாவில் ஒரு பாகத்தை ஜப்பான் பிடித்து வைத்திருப்பதால், சைனா மூலமாக, சைனா பேரால் வைத்துக்கொண்டு ஐவேஜிகளை ஜப்பான் உபயோகப்படுத்தாமலிருக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம்.

**நேதர்லண்ட்ஸ்.**—ஜப்பானிய செலாவணியைத் தடுத்து, அதற்கு சாமான்களனுப்பவும், பாங்குகளில் பணமெடுக்கவும் அனுமதிச் சீட்டு வாங்கவேண்டுமென்று செய்துவிட்டது.



**ஜப்பானின் பிரதீகாரம்.**—பதிலாக, ஜப்பானும், பிரிடிஷ், யுனைடெட்-ஸ்டேட்ஸ், டச்சு ஐவேஜிகளை நிறுத்திவிட்டதாகச் சொல்லுகிறது.

**பொருளாதாரப் பூட்டு.**—இவ்விதமாகவெல்லாம் ஜப்பானைச்சுற்றி வியாபாரத்தைத் தடுக்க பூட்டுப்போட்டாய்விட்டது. இனி ஜப்பான் இதன் ஆதிக்கத்திலுள்ள சில நாடுகளோடும், சில தென்-அமெரிக்க நாடுகளோடும்தான் வியாபாரம் செய்யமுடியும்.

இதற்கு மேற்கொண்டு ஜப்பான் ஏதாவது வேறு அம்புகளைத் தொடுத்தால் அவைகளை எதிர்க்க ஜனநாயக நாடுகள் தயாராயிருக்கின்றன.

**தாய்லாண்டு.**—பிரிடன் தாய்லாண்டை அபகரிக்கப்போவதாயும் பிரிடிஷ் சைனியங்களும், கப்பல்களும் அதற்காக வந்துகொண்டிருப்பதாகவும், தாய் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடப்பதாயும் அபாண்டமான பொய்களை ஜப்பான் ரேடியோ மூலம் பரப்பிக்கொண்டிருக்கிறது. இவ்வதந்திகளின் காரணமாய் ஜப்பான் தாய்லாண்டைப் பிடித்துக்கொள்ளலாமென்ற எண்ணம்தான். சென்ற வருஷம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தாய்லாண்டு விஷயத்தில் பிரிடன் அனுக்கிரமத்தை அனுசரிக்கும். பிரிடிஷ் நோக்கம் வெளிப்படையானதென்பதை தாய்க்காரர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிறருக்குத் தாய்லாண்டு காட்டும் உரிமைகளைவிட அதிகமான உரிமைகளை பிரிடன் கேட்கவில்லை. பிரிடனிடத்தில் தாய்லாண்டுக்குள்ள பூர்ண நம்பிக்கையையும், யுத்தாவசியத்தைப் பொருத்தோ, பொருளாதாரத்தைப்பொருத்தோ பிரிடன் தாய்லாண்டுக்குள் அனுக்கிரமிக்கக் காரணமில்லையென்றும் பாங்காக் ரேடியோ சொல்லிவிட்டது.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

**இரண்டாம் மின்னல் எதிர்ப்பு பலிக்கவில்லை.**—இந்த யுத்தம் துவங்கி இப்பொழுது 6-வது வாரம் வந்தும் சொல்லத்தக்க முன்னேற்றமொன்றையும் காணோம். ஸ்மலென்ஸூக்கு முன்னே ஜெர்மன் படைகள் தடுக்கப்பட்டுவிட்டன. இரண்டாவது மின்னல் எதிர்ப்பு வீணாயிற்று. மூன்றாவது எதிர்ப்பின் சின்னங்களொன்றையும் காணோம். சென்ற வருஷம் ஜெர்மன் விமான எதிர்ப்பை பிரிடன் தடுத்தது போல, இப்பொழுது ஜெர்மன் நிலயெதிர்ப்பை ருஷ்யா தடுத்துவிட்டது. ருஷ்யாவுக்கு உப சைனியங்களெல்லாம் அற்று விட்டதாகச் சொன்னது போக யூரல் மலைச்சாரலிலிருந்து ஏராளமான சைனியங்கள் புதிது புதிதாய் வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மன் சைனியங்கள் முன்னேற முடியாமல் நில அரைகளைத் தோண்டிக்கொண்டு, நிலைத்துக் கொள்ளப்பார்க்கின்றன. சமீபத்தில் மாரிகாலம் வரப்போகிறது. அப்பொழுது ஜெர்மன் சிப்பாய்கள் என்ன கஷ்டப்படப் போகிறார்களோ தெரியவில்லை. ருஷ்யாவில் குளிரானது விபரீதமானது.

**பயங்கர யுத்தம்.**—ஒரு ஜெர்மன் சிப்பாயே ஒப்புக்கொள்ளுகிறபடி யுத்தம் ஜெர்மானியாருக்கு பயத்தை உண்டுபண்ணுகிறது.

"நீண்டகாடுகளின் வழியாக மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு, இளைத்துக் கொண்டு, ஜெர்மன் சிப்பாய்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்: ரஸ்தாக்கள் கிடையாது: பாரவண்டிகள் கிடையாது: மோட்டார் ஸைக்கிள்கள் கிடையாது".

"இரவுகாலங்கள் குளிரும், ஈரமும் அதிகமாயிருந்தும், போர்வைகளை எடுத்துச்செல்ல முடியவில்லை".

"பகல் வேளையில் உஷ்ணமதிகரித்து, கொசுக்களின் உபத்திரவம் அதிகமாயிருக்கிறது".

"சிலசமயங்களில் சேர்வழியே செல்லவேண்டியிருக்கிறது".

"காடுகள் ருஷ்யர்களுக்கு ஒளிந்துகொள்ள சாதகமாயிருக்கின்றன: அவைகளில் ஒளிந்திருக்கும் ருஷ்யர்களைக் கண்டுபிடிக்க ஜெர்மனியாருக்குச் சாத்தியமாயில்லை". அதற்குள் ஜெர்மானியர் நாலைந்தால் மரங்களிலிருந்து சுடப்படுகிறார்கள்.

"தரையோடுதரையாக, கண்ணுக்குத்தெரியாதபடி கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன". இவைகளுக்குமுன் வெடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

**மாஸ்கோவின்மேல் எதிர்ப்பு.**—மின்னல்-எதிர்ப்புப் பயன்படாததை மறைக்க மாஸ்கோவின்மேல் விமானங்கள் படையெடுப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதெல்லாம் ஜெர்மன்வாசிகளை மயக்கித் திருப்தி செய்தால்தான். உண்மையில் விமானங்கள் மாஸ்கோ வரையில் எட்டுவதில்லை.

**ஹிட்லர் செய்த பெரும் பிழை.**—ஹிட்லர் இந்த ருஷ்ய யுத்தத்தைத் துவக்கியிருக்கவே கூடாது. ஜன சமத்துவக் கொள்கையைத் தடுக்கவென்று ஹெஸ் முதலானவர்களைத் திருப்திசெய்ய இந்த யுத்தம் துவக்கப்பட்டது. ஹிட்லருடைய சேனாதிபதிகளில் சிலருக்கு இஷ்டமில்லை. பிரிடன்-அமெரிக்க மன உறுதியாலும், எதிர்பாராத ருஷ்ய எதிர்ப்பாலும் ஹிட்லர் அகப்பட்டுக்கொண்டார். இரு பக்கங்களிலும் எதிர்க்கப்படுவதிலிருந்து ஜெர்மன் விமானப்படை கலகலத்து விட்டது. ருஷ்யாவுக்குள் நுழைந்ததிலிருந்து அங்கிருந்து வந்த சாமான்கள் நின்றுவிட்டன. ராணுவ தளவாடங்கள் செய்யும் ருஷ்ய தொழிற்சாலைகள் யூரல் மலையடிவாரத்தில் ஜெர்மன் துருப்புகளணுகாத தூரத்திலிருக்கின்றன. சேமித்துவைத்த எண்ணெயை யெடுக்கவேண்டிவந்துவிட்டது. விலைவாசிகள் ஜெர்மனியில் ஏறிவிடுமென்று டாக்டர் ஷாட் எச்சரித்துவிட்டார். ஜெர்மன் அதிகாரிகளுக்குள் சண்டையேற்பட்டுவிட்டது. மெஸ்ஸர் ஷிமித் என்ற விமானத்தை நிர்மாணம் செய்தவர் கைதியாக்கப்பட்டாராம். ஹிட்லர் கக்ஷியில் மதிப்புள்ளவரான கார்ல ஹௌஷாபரும், எர்னெஸ்ட் உடெட் என்ற விமானப்படை அதிகாரியும் தற்கொலை செய்துகொண்டார்களாம். கொயரிங்கை வேலையிலிருந்து தள்ளி; மில்லைஹ அந்த வேலைக்கு நியமனம் செய்துவிட்டதாக அடிக்கடி காதில் படுகிறது.



**ஜெர்மானியரின் பொய் பிரசாரம்.**—ருஷ்ய யுத்தம் நடக்க நடக்க ஜெர்மனியின் பொய் பிரசாரம் வலுத்துக்கொண்டுபோகிறது. யுத்தம் துவக்கிய நான்கு தினங்களுக்குள்ளேயே ஜூன் 26-ல் ருஷ்ய சைனியம் தோற்றுப் போனதாயும் ஜெர்மனியில் சொல்லப்பட்டு, ருஷ்ய விமானப்படை அழிந்து விட்டதாயும்: இனி ஜெர்மானியரின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாதென்றும் இதாலியும் ஒத்துப்பாடிற்று. ஜூலை 13-ல், முக்கியமான இடங்களில் ஸ்டாலின்-அரண் பிளக்கப்பட்டதாயும், இனி ருஷ்யாவுக்குள் தாராளமாய் போகலாமென்றும் ஜெர்மனி சொன்னதின் பேரில், ருஷ்ய சைனியமேயில்லை யென்று இதாலி சொல்லிவிட்டது. ஜூலை 21-ல் சில தினங்களுக்குள் லெனின்கிராட்டைப் பிடித்துவிடப் போவதாகச் சொன்னார்கள். இதைக் கேட்டு ருஷ்யர்கள் நகைக்கிறார்கள். மேலும், மாஸ்கோவைப் பிடிக்க முடியாததால் கீவை நோக்கிச் செல்வதாக ஜெர்மானியர்கள் இப்பொழுது தாங்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

ஜூலை 30-ல் மாஸ்கோவிலிருந்து கிடைத்த செய்திகளின்படி நவார்ஜாவ், நெவல், ஸ்மலென்ஸ்க், ஜிடோமிரை நோக்கிக் கடும் போர் நடக்கிறது.

## கடற்சண்டை.

**துணைகொண்ட பிரிடிஷ் கப்பல்களைத் தடுக்க முடியவில்லை.**—மத்தியதரைக் கடலின் மத்திய பாகத்தில் கடற்சண்டை மூன்று நாட்கள் நடந்து துணை கொண்ட பிரிடிஷ் கப்பல்கள் வெற்றிகரமாய் சென்றதிலிருந்து மத்தியதரைக் கடலின் ஆதிபத்தியம், இதாலிக்கல்லாது, பிரிடனுக்குத்தான் உண்டென்பது ஊர்ஜிதமாய்விட்டது. முக்கியமான யுத்த தளவாடங்களையேற்றிச் சென்ற பிரிடிஷ் கப்பல்களை ஜூலை 22-ல் எதிரி விமானங்கள் ஸிஸிலிக்கும், லிபியாவுக்கும் நடுவே மறித்துக்கொண்டு மூன்று நாட்கள் தாக்கியும், பத்திரமாய் போய்ச் சேர்ந்தன. பிரிடனுக்கு 'பியர்லெஸ்' என்ற ஒரு நீர்மூழ்கி நஷ்டம்; எதிரிக்குப் பல விமானங்கள் நஷ்டம்.

**மத்தியதரைக் கடலில் பிரிடிஷ் ஆதிக்கம்.**—சற்றும் குறையவில்லையென்பதற்கு மற்றிரண்டு காரணங்களும் இந்த வாரத்திலேற்பட்டன. ஒன்று, இதே சமயத்தில், அருகாமையில் துணைகொண்டு சென்ற நான்கு இதாலியக் கப்பல்களில் மூன்று மூழ்கடிக்கப்பட்டன. இரண்டாவது வாலெட்டா துறைமுகத்தை எதிர்க்க வந்த இதாலியக் கப்பல்கள் துறைமுகத்தை அணுகுவதற்குள்ளாகவே அழிக்கப் பட்டன.

**அட்லாண்டிக்-யுத்தம்.**—இந்த யுத்தத்தின் கடுமை குறைந்துவிட்டதாகவே சொல்லலாம். கனடாவின் ராணுவ-தளவாட மந்திரி சொன்ன பிரகாரம், ஜூன் ஜூலை மாதங்களில் பல கப்பல்கள் பிரிடனுக்கு வந்துவிட்டன. இது விஷயமாக ஜூலை 27-ல் லண்டனில் மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் விடுத்த ஒலிபரப்பு சந்தோஷகரமாகயிருக்கிறது. அவர் சொன்னதாவது :—

'இப்பொழுது அட்லாண்டிக் மஹா சமுத்திரமானது ஒரு சிறு கால்வாயாகி விட்டது. சிநேகமென்ற பாலம் அதன்மேல் போட்டாய்விட்டது. இப்பாலம்

அமெரிக்கர்களுடைய அன்பைக் கொண்டும், பிரிடிஷ்காரர்களிடத்திலிருக்கும் மதிப்பைக் கொண்டும் வாஷிங்டனிலிருந்து லண்டனுக்குக் கட்டப்பட்டிருக்கிறது. இது கண்ணுக்குப் புலப்படாத பாலமானாலும் நாஜிகளின் பயங்கர முறைகளால் உடைக்கமுடியாது.

'ஆரம்பத்தில் அமெரிக்கர்கள் தங்களுடைய அனுதாபத்தை மட்டுமே காட்டினார்கள். இது போதாதென்று தெரிந்துகொண்டு, அனுதாபத்தைக் காட்டினாலும், குண்டுகளை வீசும் விமானங்கள் அவசியமென்றும், கேவல மதிப்பைக் காண்பிப்பதைவிட, நாசகாரிகளையனுப்பி நீர்மூழ்கிகளை உடைப்பது நன்மையென்றும், இப்பொழுது யுத்த தளவாடங்களையனுப்புகிறோம். இதுவே கடன்-குத்தகை மசோதாவின் நோக்கம். இதைக்கொண்டு, ஜனநாயகத்தை அடிமையாக்கப் பார்க்கும் கொடுங்கோல் அதிகாரிகளை வதைப்போம்.

"அமெரிக்காவில் செய்யப்பட்ட டாங்கிகளை, சரிசாரியாக இப்பொழுது மேற்குப் பாலைவனத்தில் பார்க்கலாம். எங்கே பார்த்தாலும் அமெரிக்க விமானங்கள் ஜெர்மன் விமானங்களையெதிர்த்து நிற்கின்றன.

'பிரிடனுக்கு வேண்டிய ஆகாரத்தேவைகளையும் நாங்கள் மறக்கவில்லை. பிரிடன் பசியோடிருப்பதைப் பார்க்க நாங்கள் சகியோம். எங்களுடைய உணவைக் குறைத்துக்கொண்டு, விளைவை அதிகப்படுத்தி, உதவுவோம். பாலடைக்கட்டி, பன்றியிறைச்சி முட்டை, பாத்திரங்களில் அடைத்த மீன், பழவற்றல், பால்-பொடி, பழச்சார் முதலியவைகளை ஏராளமாய்வரும் 12 மாதங்களிலனுப்புவோம்.

'மிஸ்டர். சர்ச்சில் பிரிடனுக்கு யுத்த ஆயுதங்கள் வேண்டுமென்றார் அவைகள் இப்பொழுது வந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் கிழக்கரையிலிருந்து பிரிடன், மத்திய-கிழக்குவரை ஆயுதங்களாய் நிரம்பியிருக்கின்றன. இவைகள் ஏராளமாய் வந்துசேரும். ஜனாதிபதி ருஸ்வெல்ட் தளவாடங்களை பிரிடனுக்குப் பத்திரமாய் கொண்டு சேர்ப்பதாகவும் வாக்களித்துவிட்டார். நடக்காததைச்சொல்லும் சுபாவம் அவருக்குக் கிடையாது. பிரிடிஷ் மக்களே! பிரிடிஷ்-சாம்ராஜ்ஜிய மக்களே! நீங்கள் தனித்துநின்று போராடவில்லை: அமெரிக்க பலம் உங்களுக்குண்டு."

## விமானப்போர்.

இந்த வாரத்தில் பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியைச் சேர்ந்த பலவிடங்களைத் தாக்கின:—ஷார்ன்ஹார்ஸ்டென்ற ஜெர்மன் சண்டைக் கப்பல் ஒளிந்து நிற்கும் லாபாலிஸ், நீஸ்னௌ ஒளிந்துநிற்கும் ப்ரெஸ்ட், பெர்லின் (இங்கு வெகு கனமான குண்டுகள் வீசப்பட்டன). பிராங்பர்ட், மான்ஹீம், ஹாம்பர்க், ஹனோவர்.

## லதீன்-அமெரிக்காவில் நாஜிப்-புரட்சி.

எவ்வளவு தூரமிருந்தாலும் எந்த நாடும், விழித்திராவிட்டால், நாஜிப் புரட்சிக்குள்ளாகுமென்பது நிச்சயம், பிரஸீல், கொலம்பியா, மெக்ஸிகோ, பனாமா, உருக்வே, காடிமாலா, ஹாண்டுராஸ், ஸான் ஸால்வடார் முதலிய அமெரிக்க



மத்திய தெற்குப் பிரதேசங்களில் ஏற்கனவே இம்மாதிரிப் புரட்சிகள் ஏற்பட்டன. சமீபத்தில் பொலிவியாவில் புரட்சியைக் கிளப்பப்பார்த்த ஜெர்மன் மந்திரியை பொலிவியாவும், ஸிஸிலியும் விரட்டி விட்டன. ரஷீத்அலி கலகமும் இதில் சம்பந்தப்பட்டதாம். ஸான் ஜோஸில் நாஜிப்—புரட்சியைத் தடுக்க எதிர்க்கக்ஷி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

## மிஸ்டர் சர்ச்சில் காட்டியிருக்கும்—6 வெற்றிச் சின்னங்கள்.

ஜூலை 29 அன்று பேசும்போது 6 வெற்றிச் சின்னங்கள் இருப்பதை மிஸ்டர் சர்ச்சில் எடுத்துக் காட்டினார்:—

"வரவரப் போர்முனைகளதிகரித்து வரும் இந்த யுத்தக்குழப்பத்தில் சந்தோஷப்படுவதற்கும் பயப்படுவதற்கும் காரணங்களிருக்கின்றன. தைரியத்தை மேற்கொள்ளவிருக்கும் காரணங்களாவன:—

1. வஞ்சகமாய் எதிர்க்கப்பட்டும் ருஷ்யாவின் மகத்தான சைனியங்கள் பலமாய் திருப்பி எதிர்த்து ஜெர்மன் சைனியத்தை ஏராளமாய் அழிக்கின்றன.

2. யுனைடெட் ஸ்டேட்ஸ் என்ற உலகத்தில் முதலான வல்லரசு ஏராளமான உதவியை நமக்குப் புரிவதோடு, கோபமதிகரித்து யுத்தத்திலிறங்கும்போலுமிருக்கிறது.

3. ஜெர்மன் விமானப்படையின் மேன்மை போய், பிரிடன்மேல் படையெடுப்பும் இப்பொழுது நின்றுவிட்டது.

4. அட்லாண்டிக் யுத்தத்தில் நமக்கு வெற்றி தாமதித்தாலும், அமெரிக்கா உதவியால் வரவர நமக்கு அது சாதகமாய்க்கொண்டிருக்கிறது.

5. சென்ற வருஷத்திலும், மூன்று மாதங்களுக்குமுன்னும் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது நைல் நதி தீரத்தில் அபாயம் குறைந்திருக்கிறது.

6. எதிரி சொல்லிக்கொண்டிருந்த கொள்கைகளும், சமாசாரங்களும் பொய்யாகி, அவனுடைய அயோக்கிய சுபாவமும், புத்திஹீனமும் வெளியாய் விட்டன. எதிரியின் வெற்றியெல்லாம் அவனுக்குச்சுமையாயும், தடையாயுமாய் விட்டன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிட்டிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **21—7—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—தொழிற்சாலை—லில்லி (Lille). | 3 பகற் கால சண்டை விமானங்கள். | 8 பகற்கால சண்டை விமானங்கள். |
| | விரோதிக் கப்பல்கள்.—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள், போக்குவரத்து சாதனங்கள்—பிராங்பர்ட் (Frankfurt) மான்ஹீம் (Mannheim). | ...... | பலத்தசேதம். |
| | விமான நிலையங்கள்.—வட பிரான்ஸ் (France). | ...... | சேதமாயின. |
| | ஜெர்மன் சைனியங்கள் தங்குமிடங்கள்.—டென்மார்க் (Denmark) கடற்கரை. | 1 ராக்கால குண்டு போடும் விமானம். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியங்கள்.—டொப்ருக் (Tobruk)குக்கு வெளிப்புறங்கள். | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி மோட்டார் வண்டிகள், விமான நிலையங்களிலிருக்கும் விமானங்கள்.—போர்களம் முழுவதும். | 8 விமானங்கள். | 32 விமானங்கள். |
| **22—7—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—கப்பல்கட்டும் துறைகள் லா ட்ரெயிட் (La Trait)—சீன் (Seine) நதிக் கரையில். | 3 பகற் கால விமானங்கள். | பெருந்தீக்கள் மூண்டன. 4 பகற் கால விமானங்கள். |
| | படையெடுப்பு.—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | இரவில்.—விரோதி தொழிற்சாலைகள்—பிராங்பர்ட் (Frankfurt), மான்ஹீம் (Mannheim). | ...... | பலத்த சேதம். |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **22—7—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | மற்றும் பல தொழிற்சாலைகள் நிறைந்திருக்கும் ஜில்லாக்கள்.-மேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—டன்கர்க் (Dunkirk), ராட்டர்டாம் (Rotterdam) ஆஸ்டெண்ட் (Ostend). | ... | சேதமாயின. |
| | விமான நிலையங்கள்.—வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | விரோதி துணைக்காவலுடன் கூடிய 4 கப்பல்கள்.—இதாலியத் தீவான பாண்டெல்லீரியா (Pantelleria). | நஷ்டமில்லை. | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒன்று சேதமாயிற்று அதுவும் மறுபடியும் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.-பெங்காஸி (Benghazi). | நஷ்டமில்லை. | வெடிச்சத்தங்கள் கிளம்பின. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதியின் யந்திர சாதனங்களுடன் கூடிய சைனியங்கள்.—போர் அரங்கம் முழுவதும். | 17 விமானங்கள். | 39 விமானங்கள். |
| | விமானங்கள்.—விரோதி விமான நிலையங்கள். | ... | ...... |
| **23—7—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.-விரோதிக் கப்பல்கள்-பிரெஞ்சு (French)க் கடற்கரை, ஹாலந்து (Holland), பெல்ஜிய (Belgiam)க் கடற்கரைகள். | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது |
| | பிற்பகலில்.—ராணுவ முக்கியமுள்ள இடங்கள்—செயிண்ட் ஓமர் (St. Omer). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 23—7—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—பிரெஞ்சு (French)க் கப்பல்கள். | ...... | ஒரு கப்பல் சேதமாயிற்று. |
| | விமானச் சண்டைகள்.—பிரான்ஸ் (France). | 5 பகற்கால குண்டு போடும் விமானங்கள். 5 சண்டை விமானங்கள். | 5 பகற்கால சண்டை விமானங்கள். |
| | மாலையில்.—ராணுவ முக்கியமான இடங்கள்.—பெத்யூன (Bethune)க் கருகில். | 5 பகற்கால சண்டை விமானங்கள். | 6 பகற்கால சண்டை விமானங்கள். |
| | இரவில்.—தொழிற் சாலைகள்—ப்ராங்பர்ட் (Frankfurt), மான்ஹீம் (Mannheim). | ...... | பெருந்தீ கிளம்பிற்று. |
| | கப்பல் துறைகள்.—லா ஹாவர் (Le Havre), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | ...... |
| | **ஸிஸிலி (Sioily).** | | |
| | விரோதிக் கப்பல்கள்—ட்ரபானி (Trapani). | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | விரோதி ஈ—படகு.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள் யந்திர சாதனங்களுடன் கூடிய துருப்புகள்.—போர் அரங்கம் முழுவதும். | 19 விமானங்கள். | 58 விமானங்கள். |
| | **பின்லாந்து (Finland).** | | |
| | டர்கு (Turku) நகரத்தின் சுற்றுப் புறங்கள். | ...... | ...... |
| | **பல்கேரியா (Bulgaria).** | | |
| | ருஸ்துக்.—(Ruscuk), ப்ளிவன் (Pleven), லொவெட்ஸ் (Lovetz). | ...... | சேதமாயின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 24—7—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—ஜெர்மன் யுத்தக் கப்பல் நீஸ்நௌ (Gneisenau), கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest). | ...... | யுத்தக் கப்பல் 7 தரம் தாக்குண்டது. கப்பல் துறை சேதமாயிற்று. |
| | ஜெர்மன் யுத்தக் கப்பல் ஷார்ன்ஹார்ஸ்ட் (Scharnhorst)—லாபாலிஸ் (Lepallice). | 15 பகற்கால குண்டு எறியும் விமானங்கள். | கப்பல் துறைகள் பலத்த சேதத்துக்குள்ளாயின. |
| | துறைமுகம்—செர்பார்க் (Cherbourg). | 7 பகற்கால சண்டை விமானங்கள். | 21 பகற்கால சண்டை விமானங்கள். |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ஹேஸ்பருக் (Hazaboruck). | ...... | ...... |
| | விமானச் சண்டைகள்.—போகும் வழியெல்லாம். | ...... | 12 சண்டை விமானங்கள். |
| | இரவில்.—கடற்படை தளங்கள், கப்பல் கட்டுமிடங்கள்—கீல் (Kiel), எம்டன் (Emden). | ...... | பெருந் தீக்கள் கிளம்பின; பலத்த சேதம். |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven). | 5 விமானங்கள். | ...... |
| | கப்பல் துறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—போர்க்களம் முழுவதும். | ...... | 47 விமானங்கள். |
| | விரோதித் துணைக்காவலுடன்கூடிய கப்பல்கள்.—பால்டிக் (Baltic). | ...... | 10 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**25—7—41.** (வெள்ளிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இரவில்.—பெர்லின் (Berlin)—ஜெர்மனியின் தலைநகரம். | ...... | வெகு பலத்த சேதம். |
| தொழிற்சாலைகள், கப்பல் துறைகள், போக்குவரத்து சாதனங்கள்.—ஹானோவர் (Hanover), ஹாம்பர்க் (Hamburg). | 9 ராக்கால வெடிகுண்டெறியும் விமானங்கள். | சேதமாயின. |
| விமான நிலயங்கள்.—வடபிரான்ஸ் (France). | | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi) ... | ...... | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விரோதி யந்திர சாதனங்களுடன்கூடிய சைனியங்கள், விமானங்கள்.—ருஷ்ய-ஜெர்மனியபோர் அரங்கம் முழுவதும். | ...... | ...... |

**26—7—41.** (சனிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| காலையில்.—கடற்படை நிலயம்—எம்டன் (Emden). | ...... | ...... |
| படையெடுப்புகள்.—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | 1 பகற்காலகுண்டெறியும் விமானம். |
| ஒரு விரோதிக் காவல்காத்தும் சிறிய கப்பல்.—புலாயின் (Boulogne). | நஷ்டமில்லை. | சுடப்பட்டன. |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விரோதி ஈ-படகுகள்.—மால்டா (Malta) விலிருக்கும் வாலெட்டா (Valetta) துறைமுகத்தைத் தாக்கிக்கொண்டிருக்கும் பொழுது. | 1 பகற்கால சண்டை விமானம். விமானி தப்பிப்பிழைத்தார். | 8 ஈ-படகுகளும் 9 டார்பிடோ குண்டெறியும் படகுகளும் நாசமாயின. 3 விமானங்கள். |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | நஷ்டமில்லை. | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**26—7—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விரோதி யந்திர சாதனங்களுடன் கூடிய சைனியங்கள், விமான நிலயங்கள்.—போர்க்களம் முழுவதும். | 36 விமானங்கள். | 109 விமானங்கள். |

**27—7—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பிற்பகலில்.—படையெடுப்புகள்—டோவர் (Dover) ஜலசந்தி. | 1 விமானம். | 1 விமானம் பல விமானங்கள் சேதமாயின. |
| இரவில்.—கப்பல் துறைகள்—டன்கர்க் (Dunkirk). விரோதி விமான நிலயங்கள்.—வடபிரான்ஸ் (France). | 1 ராக்கால வெடிகுண்டெறியும் விமானம். | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | நஷ்டமில்லை. | சேதமாயிற்று. |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விரோதி யந்திர சாதனங்களுடன் கூடிய சைனியங்கள்.—ருஷ்ய ஜெர்மன் போர்களம் முழுவதும். | ...... | ...... |

*விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**22—7—41.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

| லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இரவில்.—இரண்டு பட்டணங்கள்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரை, வடக்கு கடற்கரைப் பிரதேசம் | ...... | சொற்பச்சேதம் ஒருவருக்கும் காயமே இல்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 22—7—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | துணைக்காவலுடன்கூடிய பிரிடிஷ் கப்பல்கள்.—இங்கிலீஷ் கடற்கரை. | 1 விமானம். | ஒரு கப்பலுக்காவது சேதமேயில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | சொற்பச்சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 15 விமானங்கள். | சில வீடுகள் தீக்கிரையாயின. சொற்பச் சேதந்தான். |
| | விமானச் சண்டைகள்.—நாள் முழுவதும். | 87 விமானங்கள். | 14 விமானங்கள். |
| 23—7—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்.—வட மேற்கு இங்கிலாந்து (England), ஸ்காத்லாந்து (Scotland). | 3 ராக்கால வெடி குண்டெறியும் விமானங்கள். | சேதமேயில்லை. நஷ்டமுமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | ...... | ...... |
| 24—7—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓரிடம்.—இங்கிலாந்தின் (England) கிழக்குக் கடற்கரை. | ...... | சேதமேயில்லை ஒருவருக்கும் காயமேயில்லை. |
| | டன்டால்க் (Dundalk).—ஐயர்லாந்தில் | ...... | சொற்பச்சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | ஒரு விமானந்தான் தாக்க முடிந்தது அதுவும் சுட்டுத்தள்ளப்பட்டது. | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | காலையில்.—மால்டா (Malta). | 2 குண்டெறியும் விமானங்கள். | ...... |
| | இரவில்.—மால்டா (Malta). | 1 விமானம் சேதம். | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 25—7—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—விமான நடமாட்டமேயில்லை | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 5 விமானங்கள். | சேதமேயில்லை. |
| | துணைக்காவல் கப்பலுடன் கூடிய கப்பல்கள்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | 12 விமானங்கள். 4 விமானங்கள் சேதம். | 3 கடற்படையைச் சேர்ந்த விமானங்கள். |
| 26—7—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓரிடம்—ஸப்பக் (Suffolk) கடற்கரை. | ...... | சேதமேயில்லை ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **எகிப்து (Egypt)** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | சொத்துக்களுக்குச் சொற்பச்சேதம். ஒருவருக்கும் காயமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 8 விமானங்கள். | சில வீடுகளுக்கு மட்டும் சேதம். |
| 27—7—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லண்டன் (London). சில இதர இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (England). | 3 விமானங்கள். | சொற்பச்சேதம். சிலருக்குக் காயம். ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | வெடிகுண்டு எறியும் விமானங்கள். | நஷ்டமில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 28—7—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—மூன்று இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia). | ...... | சொற்பச்சேதம். சில ஜனங்களுக்குச் சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 9 விமானங்கள். | ...... |

திருத்தம்.—52-வது பிரசுரத்தில் உள்ள விமானக் கணக்கில் குறித்த லக்கங்களை பின்வருமாறு மாற்றிக்கொள்ளவும் :—

| பக்கம். | தேதி. | ஆர். ஏ. எப். | விரோதி. |
|---|---|---|---|
| 37 | 3—7—41 பகல் | 14 விமானங்கள் | 12 விமானங்கள். |
| 39 | 4—7—41 இரவு | 14 விமானங்கள் | 18 விமானங்கள். |
| 41 | 6—7—41 ,, | ... | 1 விமானம். |
| 42 | 2—7—41 | ... | ... |
| 42 | 3—7—41 | ... | 1 விமானம். |
| 42 | 4—7—41 | ... | 3 விமானங்கள். |
| 42 | 4—7—41 | ... | 2 விமானங்கள். |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## இந்த 'வி' வேலை.

ஐரோப்பா முழுவதும்—இப்பொழுது உலகம் முற்றிலும்—பரவி இருக்கும் "வி" இயக்கம், குழந்தைகளுக்கு இருட்டில் பூச்சாண்டி காட்டுவது போன்ற ஒரு சிறு பிள்ளைத்தனம் என்று பலருக்குத் தோன்றலாம். ஆனால் பிரசார அதிகாரிகளில் மனோ தத்வநிபுணர்கள்தான் இந்த வேலையின் பயனை அறிவார்கள்; இந்த இயக்கம் நிச்சயமாய் மனோதைர்யத்தை உண்டு பண்ணுகிறது. அதனால் ஜெர்மானியர்கள் இந்த குற்றவாளிகளைக்கண்டு பிடித்துவிட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டியதாய் ஏற்பட்டு விடுகிறது. தன்படைகளை பராமரிப்பதற்காக ஒரு ஜெஸ்டாபோ தலைவன் ஜெர்மன் நாடுகளில் சுற்றி வருவதாய் வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவருடைய காவலாளி ஒருவன் வேலையை விட்டு வீட்டுக்குப்போகும் பொழுது



தன் முதுகில் ஒரு பெரிய "வி" அடையாளத்தைப் போட்டுக்கொண்டு போகிறான்; அல்லது அவருடைய மோட்டாரின் முன் பக்கத்திலேயே அவருக்கும் தெரியாமல் ஒரு முரட்டு "வி" எழுதப்பட்டுவிடுகிறது. அவருக்கு என்ன விதமாய் இருக்கும்: தூக்கி வாரிப்போடு மல்லவா? அவர் என்ன செய்வார்? அன்று வேலையை அத்துடன் நிறுத்திவிட்டு 50-மைல்களுக்கப்பால் உள்ள ஒரு ஹோட்டலுக்கு ஓடி நன்றாய் சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டுவிடலாமென்று ஓடுவார். அங்கு போனதும் என்ன நடக்கிறது. உள்ளே நுழையும் போதே யாரோ ஒருவர் மேஜைமீது கரண்டியால் "வி" என்ற எழுத்துக்கு ஏற்பட்ட அடையாளத்தை தட்டியடிக்கிறார். உடனே ஜெஸ்டாபோ தலைவர் ஹோட்டல்க்காரரை அழைத்து இதைப் புலன் விசாரிப்பதற்காக ஜெஸ்டாபோவை அழைக்கச் சொல்லுகிறார். உடனே ஊது குழாயிலிருந்து மூன்று குட்டை ஊதலும் ஒரு நீள ஊதலும் ஊதப்படுகிறது. இதன் ரகசியமென்ன? லக்ஷக்கணக்கான விஸ்வாசமுள்ள ஜனங்கள் ரகசியமாய் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம், வெறுக்கப்பட்ட சத்துருவின் பேரில், ஜனநாயகம் வெற்றி பெற்று வருகிறது என்ற நம்பிக்கையைக் காட்டக்கூடிய அடையாளத்தை எழுதவோ, சப்திக்கவோ முன் வருகிறார்கள். எதிரிகள் என்ன செய்யமுடியும்? நாம் செய்வதையே திருப்பிச்செய்து "இது எங்களுடைய 'விக்டோரியா என்ற' வார்த்தையின் அடையாளம்" என்று சொல்லிக்கொள்ள வேண்டியதுதான். இவர்களுக்கு "விஜயம்" என்பதற்கு ஜெர்மன் பாஷையில் "சீக்" (Seig) என்று நல்ல வார்த்தையிருக்கிறதே.

## ருப்ட்வாப்பு நொறுங்கிறது.

சென்ற சிலதினங்களாய் வானொலி மூலம் வெளியிடப்படுகிற ஆகாய யுத்தத்தின் சில அம்சங்களைக் கவனித்தால் நமக்கு நிஜமாகவே தைரியம் உண்டாகிறது. அது வீண் குருட்டு தைரியமாகாது. நம்முடைய புதிய நேசதேசமான ருஷ்யாவுக்கு நாம் முக்கியமாய் செய்யும் உதவி என்னவென்றால் ஜெர்மானியரால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்ட பிரான்ஸிலும், மேலஜெர்மனியிலும் வெடிகுண்டுகள் வீசுவதை அதிகப்படுத்துவதேயாகும். முதல் ஒருபக்ஷம் ஸ்வல்பச் செலவில் ஆர். ஏ. எப். படைக்கு அபரிதமானவெற்றி கிடைத்தது. ஹூணர்கள் தங்கள் மின்னல் எதிர்ப்பைப்பற்றி நிச்சயம் செய்து கொள்ளுவதற்காக தங்களுடைய பெரிய ஆகாயப் படைகளை கிழக்குப் பக்கம் கொண்டுபோய்விட்டார்கள். சென்ற பத்து நாட்களின் ஆர். ஏ. எப். ரிப்போர்ட்டுகளிலிருந்து என்ன தெரிகிறதென்றால் நாம் இடைவிடாது தைரியமாய் தாக்குவதால் அதிலிருந்து ஜெர்மானியர்களைக் காப்பாற்ற ஏராளமான யுத்தப்படைகள் பிரெஞ்சு ஆகாய விமான நிலயங்களுக்கு மாற்றப்பட வேண்டியதாயிருக்கின்றன. இதன் அர்த்தமென்ன? அச்சு விமானங்களில் 7,500 வீழ்த்தப்பட்டதும், மருந்து சாலைகளையும், உற்பத்திசாலைகளையும், தொழிற்சாலைகளையும் விடாமல் நாம் குண்டுக்கு இரையாக்குவதும் பலனளிக்க ஆரம்பித்துவிட்டன. ஹிட்லரின் சைனியங்கள் ஒரே காலத்தில் இரண்டு போர்முனையில் சண்டை செய்வதை விலக்க வேண்டுமென்று எண்ணி

னாலும்கூட கொயரிங்கின் லுப்ட்வாப் அவ்வாறு செய்ய வேண்டித்தான் இருக்கிறது; ஆனால் எதாவது ஒரு முனையில் ஜயிக்கக்கூட போதுமான ஆள்பலமோ, யந்திரங்களோகூட அவர்களுக்கில்லை. ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும், அனேகமாய் ஒவ்வொரு நாளும் அவர்களுடைய கஷ்டம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஜெர்மன் கொயரிங்கும், அவருடைய பின்வார்சுகளும் தங்களுடைய வளப்புக் குழந்தையான, ஒருவராலும் ஜயிக்க முடியாதென்று அவர்கள் எண்ணியிருந்த இந்த ஆகாயப்படையைப்பற்றி மனத்தளர்ச்சியடைகிறார்கள் என்று நமக்குக் கிடைக்கும் செய்திகளில் ஆச்சரியமொன்றுமில்லை; ஏனென்றால் அதன் பலத்தை அளந்து பார்த்துவிட்டோம்.

## அந்தப்பெரிய சண்டை.

யுத்த விஷயங்களில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வியாக்யான கர்த்தா காப்டன் சிரில்பால்ஸ் தான். ருஷ்ய ஸ்திதியைப்பற்றி சரியான முடிவுக்கு வருவதற்கு ஒரு வாரத்துக்கு முன் ஒலிபரப்பில் அவர் பேசியதை ஆதாரமாக வைத்துக்கொள்வது திருப்திகரமாகவேயிருக்கிறது. "சரித்திரத்திலேயே ஒரு பெரிய யுத்தமானது அதன் நாலாவது வாரத்தின் இறுதியை அடைந்து கொண்டிருக்கிறது:......ஜெர்மானியர்களின் எதிர்ப்பில் உள்ள விஷத்தை எடுத்தாய்விட்டதென்று சொல்லிவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் வேண்டுமென்றே அவ்வாறு சொல்லவில்லை:.........." என்று அப்பொழுது அவர் சொன்னார். அவர்கள் ஏராளமான மனிதர்களை இழந்துவிட்டார்கள். சென்ற ஒரு மாதத்து யுத்தம் மின்னல் எதிர்ப்புக்குக் கீழ்ப்பட்டதாய் இருந்ததென்பதைத் தவிர அவர்களுக்கு இளைப்பைக் கொடுத்திருக்கவேண்டும்; அப்படி இருந்தாலும் ருஷ்யாவில் அநேக முக்கிய லக்ஷியங்களுக்கு ஆபத்து ஏற்படும்படியாய் ஜெர்மானியர்கள் வெகுதூரம் முன்னேறிவிட்டார்களென்றும், அந்த லக்ஷியங்களுக்குள் லெனின்கிராடை-நோக்கிப்பாய்வது தான் முக்கியமென்று ஹிட்லர் கருதி இருந்தான் என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது:—"எஸ்தோனியாவிலிருந்து வந்த எதிர்ப்பைப்பற்றித்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன்..........பின்லாந்தியர்கள் கரீலியன் பூசந்தியை நெருக்குவதால் இந்தப் பயம் அதிகரித்து வருகிறது; ருஷ்யர்களின் பதிலெதிர்ப்பு ஆபத்தை இன்னும் குறைக்கவில்லை .........லெனின்கிராட் அடியில்கண்ட காரணங்களால் முக்கியமானது:—அருகிலுள்ள க்ரான்ஸ்டாட் ருஷ்யாவின் பால்டிக் படைக்கு தளமாகிறது. பின்லாந்திலுள்ள தாலின், ஹாங்கோ முதலிய மற்ற தளங்கள் நெருங்கித் தாக்கப்படுகின்றன. பால்டிக் சமுத்திரத்தில் ஆதிக்கம் வகிக்க ருஷ்யப் படைக்குப் போதுமான பலமிருக்கிறது. லெனின்கிராடை பிடிப்பதால் அந்தப் படையின் வேலைகளைத் தடுத்துவிட்டால் பால்டிக் ஒரு ஜெர்மன் ஏரியாகிவிடும். நிலச்சண்டையிலும் இதற்கு ஒரு முக்கியமான பயனிருக்கும்; ஏனென்றால் லெனின்கிராடில் சத்துருக்கள் ஒரு தளத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்; தன்னுடைய படைகளுக்கு நிலமார்க்கமாய் சாமான்கள் அனுப்புவதைக் காட்டிலும், இந்த தளத்துக்கு கடல் மார்க்கமாய் சீக்கிரமாய் சாமான்கள் அனுப்பலாம். ருஷ்யர்கள் ஒரு பெரிய ஆபத்திலிருக்கிறார்களென்று நான் நம்புகிறேன்."



அவர் கடைசியில் அடியில் கண்டவாறு சொல்லி முடித்தார்:—"யுத்த களத்தில் சத்துருவை நசுக்கி ஜயமடைவதைக்காட்டிலும் வெற்றிக்கு வேறு வழியில்லை என்று நான் சொல்ல வரவில்லை. இந்த யுத்தத்தில் இந்த மாதிரியானபோர் ஓரிடத்திலும் செய்யப்படவில்லை. ருஷ்யர்கள் சண்டையிடும்வரை, சண்டையிட்டுக்கொண்டேயிருக்கவேண்டுமென்று கருதும் வரை ஜெர்மானியர்களுக்கு தீர்மானமான ஜயம் உண்டாகாது. டன்கர்க், ட்ராண்டீம், சலோனிகா, ஏதென்ஸ் முதலிய இடங்களில் செய்ததுபோல் பிளந்து கொண்டுபோக முடியாது. நேருக்கு நேர் நின்று யுத்தகளத்தில் போர் புரிந்துதான் ஜயமடைய வேண்டும். எப்பேற்பட்ட யுத்தகளம்!"

ஏன்! மற்றொரு வாரமும் ஆகிவிட்டது; நமக்குத்தெரிந்தவரை ருஷ்யாவுக்கு நல்லகாலமாகவே சென்றுவிட்டது. அப்பொழுது ஜெர்மானியர்களால் பிடிக்கப்பட்டுவிட்டதாய் சொல்லப்பட்ட ஸ்மலென்ஸ்க் இன்னமும் ருஷ்யர்கள் கையிலேயே இருப்பதாய் சொல்லப்படுகிறது. வடக்குக் கோடியில் பின்லாந்தியர்கள் எவ்வித முன்னேற்றமுமடையவில்லை. சத்துருவோ, யூக்ரேனின் தலைநகரான கீவிலிருந்து இன்னும் 80 மைல்களுக்கப்பால் இருக்கிறான். ஜெர்மன் அதிகார வட்டாரத்தில் அநேகர்களுடைய, முக்கியமாய் வான்ப்ராஹீஷ், கீட்டல் இவர்களுடைய, ராஜீனாமாக்கள் முதலிய கதைகள் கேட்கப்படுகின்றன. தேசப்படத்தில் போலந்திலிருந்தும் ருமேனியாவிலிருந்தும் ஜெர்மானியர்களின் முன்னேற்றத்தை நீண்டகருப்பு அம்புகள் இன்னமும் காட்டுகின்றன; இந்த அம்புமுனைகள் அதிகபயங்கரமாய் விருத்தியாகிவிட்டன. நடப்பிலும், படையெடுப்பவர்கள் தங்கள் 2-வது பாச்சலில் தங்கள் லக்ஷியங்களை அடைந்தபாடில்லை. ருஷ்யர்கள் இன்னும் சண்டை போடுகிறார்கள், யுத்தம் செய்ய தங்கள் இஷ்டத்தையும் காட்டுகிறார்கள். இந்தச் சண்டையில் நேருக்குநேர், நின்று போர்புரிந்துதான், ஜயிக்கவேண்டும். ருஷ்யாவின் மூன்று சைனியங்களையும் யுத்தம்செய்யும் பகுதிகளாய் வைத்திருக்கும்வரை ராஜ்யங்களை இழப்பது ஒரு அற்பவிஷயமாகும். இதுவரை மாஸ்கோவில் ராஜீயத் தலைமையில் ஒரு பிசகும் ஏற்படவில்லை; ருஷ்ய ராணுவ அதிகாரிகளும் உறுதியை இழக்கவில்லை என்று நாம் அறிகிறோம்.

## கோயபல்ஸின் திண்டாட்டம்.

ஜெர்மானியர்கள் காரியம் சரியாய்நடக்காவிட்டால் டாக்டர் கோயபல்ஸ் பாடு திண்டாட்டம்தான். அவர் பிடிக்காத சமாசாரங்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லித் தொலைக்கவேண்டும். சமீபத்தில் பேசமுடியாத டாக்டருக்கு கஷ்டம் உண்டுபண்ணிய விஷயங்களில் ஸ்டாலினின் "தரைக்கொளுத்தும்" கொள்கை ஒன்று, "ஒரு ரயிலாவது, ஒரு வண்டியாவது, ஒரு துண்டு ரொட்டியாவது, ஒரு உழக்கு பெட்ரோலாவது சத்துருக்களுக்குக் கிடைக்கும்படி விடக்கூடாது.........அவர்களுக்குச் சகிக்கமுடியாத ஸ்திதியை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு அடியாக அவர்களைத்துரத்தி நாசம்செய்யவேண்டும்" என்றார்

ஸ்டாலின். இந்தக் கண்டிப்பான உத்தரவை அப்படி அப்படியே நிறைவேற்றுவதால் ஜெர்மன் சைனியங்களுக்கு எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் ஜெர்மன் பிரசார ஆபீஸுக்கும் உண்டு. அது கீழ் வருமாறு :—

இதனால் கோயபெல்ஸுக்கு முதலில் ஏற்பட்ட மாறுதல் என்னவென்றால் 'ருஷ்ய அக்கிரமங்கள்" என்ற தலைப்பில் ஒரு ஐட்டமாக இதை உபயோகப்படுத்தவேண்டியதாயிற்று. உதாரணமாக, ஜூலை ௴ 5-ம் தேதியில், ஸ்டாலினின் இரக்கமற்ற கொள்கையின், பயனாய் கோடிக்கணக்காய் பொருமதியுள்ள உணவுப் பொருள்கள் நாசம் செய்யப்பட்டு வருகின்றன என்ற செய்தியை ஒலிபரப்ப, கொள்ளையடிக்கப்பட்டு பசியால் வருந்தும் ஹாலந்தை, தகுந்த ஸ்தானமாய் பொறுக்கியெடுத்தார்.

ஆனால், சில அச்சு நண்பர்களுக்கு இது தோல்வியடைந்த மனப்பான்மையைக் காட்டுவது போல் தோன்றிவிடப்போகிறதே என்று மறு நாள் பெல்ஜியத்தில் அடியில் கண்டவாறு சொல்ல ஆரம்பித்துவிட்டார் :—"போல்ஷிவிஸ்டுகள் தலை தெறிக்க ஓடுவதில் தங்கள் பயிர்களை அழிக்க முடியாமல் போய்விட்டது". ஐரோப்பாவின் மற்ற பாகத்திலும் இதே போன்ற உண்மைகளும் மாறுபடாத வார்த்தைகளும் தான்! உதாரணமாக யூக்ரேன் பயிர்கள் எரிபட்டுவிட்டன என்று ஹங்கேரியில் சொல்லப்பட்டது; இரண்டு நாள் கழித்து அந்தப் பயிர்கள் சாவதானமாய் இருப்பதாய் சொல்லப்பட்டது; அதற்கு மறு நாள் அவைகளை முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டதாய் பேச்சு. ஸ்டாலினின் கொள்கை ஜெர்மானியர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதும், தங்கள் அபிப்பிராயங்களை அச்சாபீஸ்களுக்கு வெளியிடாமலிருக்க முடியவுமில்லை என்பது நிச்சயம். உதாரணமாக "அங்க்ரீப்" என்ற பத்திரிகை ஜூலை ௴ 12-ம் தேதி பிரசுரத்தில் வெளியிடுகிறது :—"ஒவ்வொருவரும் மின்ஸ்கில் ஒரு தங்கலை எதிர்ப்பார்த்தார்கள்; ஆனால் அவர்கள் பார்த்ததெல்லாம் புகைந்துகொண்டிருக்கும் பாழ்களும், ஒவ்வொரு மறைவான இடத்திலும் ஒளிந்து திரியும் துப்பாக்கிக்காரர்களும் தான். ஜூலை ௴ 20-ம் தேதி ரோம் ரேடியோ ரொம்பக்கோபமாய், கிஷினேவ் (பெஸரேபியா) மூன்று நாளாய் எரிந்து கொண்டிருக்கிறதென்றும், நெருப்பை அணைக்க ருமேனியப் போர் வீரர்கள் எவ்வளவோ சிரமப்பட்டும் முடியவில்லை என்றும் கூறிற்று. 'நகரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ருஷ்யர்கள் நெருப்பு வைத்துவிட்டார்கள்' என்று அது அழுதது. அதே தேதியில் "டிரிப்யூன்" என்ற இதாலியப் பத்திரிகை "ஸ்மலென்ஸ்க் நன்றாய் அழிக்கப்பட்டுவிட்டது" என்றும், கரீலியாவில் ருஷ்யர்கள் "பட்டணங்களை தரையோடு தரையாய் அழித்துவிட்டார்கள்" என்று உள்ள ஜூரிக் சமாசாரத்தை வெளியிட்டது. வெர்ட்ஸிலாவோவிலுள்ள பெரிய சீமன்—மார்ட்டின் வேலைகளில் ஒன்றுமே மிச்சமில்லை என்று "டிரிப்யூன்" சொல்லுகிறது. இரக்கமற்ற தன்மை என்பது ரீஷ்வரின் தனியான குணமாகத் தோன்றவில்லை. ஒரு பெரிய விவசாய ஜனத்தொகை, தங்கள் நாட்டிலும், நிலங்களிலும் அசாத்திய அபிமான முள்ளவர்கள். அந்த நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்



துக்காகவும் சண்டை செய்கிறார்கள், தன் நிலத்தை, விட்டுப்போகும்படி ஏற்பட்டால் அதன் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பொசுக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

## ஹூணர்களின் மர்மஸ்தானம்.

ஜெர்மானியர்களின் தேக அமைப்பிலேயே மனோதத்துவம் தான் மர்மஸ்தானம் என்றும் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சமயமும் நெருக்கடி வந்தபோதெல்லாம் தங்கள் காரியங்களை அவர்களே கெடுத்துக் கொண்டுவிடுவார்கள். "புனிதமான யுத்தம்" என்று அவர்கள் செய்த பிரசாரமே இதற்கு முதல் உதாரணம்.

போல்ஷிவிக்குகளுடன் யுத்தம் செய்வதால் கதை கட்டிவிடுவதற்கு நிச்சயமாய் உபயோகப்படும் என்றும், அடியில்கண்ட பிரயோஜனங்கள் ஏற்படுமென்றும் நினைத்தார் :—

(i) யுத்தமோ, சமாதான முயற்சியோதான் வெற்றிகரமாய் முடியும் என்று நினைக்கும்படியான விதமாய் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் ஒரு குழப்பத்தையும் கக்ஷியையும் உண்டாக்குவது.

(ii) ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளும், மத்தியஸ்த நாடுகளும் ஹிட்லரின் தர்ம யுத்தத்தினால் ஏற்படும் ஒற்றுமையையும் போல்ஷிவிஸத்தினால் ஏற்படும் சீர்குலைவையும் காண்பார்கள்.

(iii) ருஷ்யாவிலேயே, ஸர்க்காருக்கு எதிர்கக்ஷிகளான பழைய கோவில் கக்ஷியார், யூக்ரேனிய தேசீயக் கக்ஷியார் முதலானவர்கள் படையெடுப்பவர்களுக்கு உதவும்படி உத்ஸாகப்படுத்தப்படுவார்கள். ஜூலை மாதம் 12௳ ஒரு ஜெர்மானிய வானொலி "ருஷ்யக் கோவிலின் தலைவர்களே, உங்கள் தலைகளை நிமிர்ந்து பாருங்கள். வைதீக புனருத்தாரணம் நெருங்கிவிட்டது. பழைய கோவில் கக்ஷியார் என்ற மோசக்காரர்களை நம்பாதீர்கள்" என்று கூறிற்று. பூர்ண நம்பிக்கையுடன் ஹிட்லர் தன் கை மருந்துகளை விற்பனைக்கு வீடு வீடாய் எடுத்துச் சென்றார். அதை ஜனங்கள் எப்படி கிரஹித்தார்கள் பாருங்கள்!'.

பிரிட்டனில் மிஸ்டர் சர்ச்சில், பத்திரிகைகள், பொது ஜனங்கள் எல்லோரும் நேச தேசமான ருஷ்யாவை பிரியமாய் வரவேற்றார்கள். ஜெர்மன் ரேடியோவோ "இங்கிலாந்திலுள்ள முதலாளி வகுப்பார் எல்லாம் வெகு காலமாக போல்ஷிவிஸத்தை கிளப்பிவிட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள்" என்று பிரகடனம் செய்யவேண்டியதாகிவிட்டது!!!

அமெரிக்காவில் கால்ப் தேர்தலில் அமெரிக்கர்களில் 100-க்கு 72 பேர்கள் ருஷ்யர்கள் ஜயிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். பிரிட்டனுடன் அமெரிக்கர்களின் ஒத்துமையைக் காட்டவேண்டிய அமெரிக்கர்கள் ஐஸ்லாந்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள்.

ஸ்பெயினிலோ, ருஷ்யாவை எதிர்க்க வாலண்டியர்கள் அனுப்பப்போவதாய் ஒரு தீர்மானம் தமுக்கடிக்கப்பட்டது. ஒரு வாலண்டியர் படை அனுப்பப்பட்டது. ஆனால் வாலண்டியர்கள் போதுமானவர்களில்லை; அதனால் கிரமமான யுத்தப்-படைகள் அனுப்ப வேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது.

ருஷ்யாவில் யூக்ரேனிய தேசியக் கக்ஷியார்களைப்பற்றி நடந்த பேச்செல்லாம் ஜெர்மன் படைகளுக்கு விரோதமாய் செய்யப்பட்ட அக்கிரமங்களைப் பற்றிதான். பழைய ஸோவில் கக்ஷியாரின் தேச பக்தியும் வீரநிலையும் உலகம் முழுவதும் அறிந்த விஷயமே.

கடாசியாக போல்ஷிவிஸத்தை எதிர்ப்பது என்ற கொள்கையை விட்டு கிறிஸ்தவ மதத்துக்காக கொடிபிடித்து யுத்தத்துக்குச் செல்வதாய் கூறியதின் பயனாய் மத்தியக் கிழக்கு தேசங்களை தன் குறிப்புப் புஸ்தகத்திலிருந்து ஹிட்லர் எடுத்துவிட வேண்டியதாய்விடும். பொது உடைமைக் கக்ஷியில் ஏற்பட்ட வெறுப்பு துருக்கி, இரான், எகிப்து முதலிய இடங்களில் சரியாய் வேலை செய்யும். ஆனால் கிறிஸ்தவ மதத்திற்காகச் செய்யும் மத யுத்தம் என்று இந்தப் பிராந்தியங்களில் பிரசாரம் செய்தது பெரும் பிசகாக முடிந்தது. உலகத்தின் மற்ற பாகங்களிலெல்லாம்—ஜெர்மனியிலும்கூட நிச்சயமாய் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலும்—ஜெர்மனியின் ஜூலை 16உ ஒலிபரப்புதலைக் கேட்டதும் சிரிப்புதான் வந்திருக்க வேண்டும்; அந்தச் சிரிப்பும் வெறும் கேலிப் புன்னகையாயிருந்திருக்க முடியாது; பெரிய எகத்தாளச் சிரிப்பாய்த்தான் இருந்திருக்க வேண்டும். அந்த ஒலிபரப்பில் சொன்னதாவது:—"கடவுள், தர்மம், கௌரவம், குடும்பம் இவைகளில் முழு நம்பிக்கை வைத்திருக்கும் உலகத்துக்கு அச்சு நாடுதான் ஆத்மீய-பிரதிநிதியாகும்"!!! உண்மைதான்—"ஹிட்லர் கையால் ஒரு தடவை தொட்டாலே உலகம் முழுவதும் உரவாகி விடாதா"!

---

## ஹிட்லர் ஏன் ருஷ்யாவைப் படை யெடுத்தார். ருஷ்யப்படை எவ்வாறு நடந்துகொள்ளும்? ஜெர்மனிக்கு அனுகூலமற்ற விஷயங்கள்.

(விக்காம் ஸ்டீட் என்பவர் வானொலியில் பேசுகிறார்.)

இன்று ஒவ்வொருவருடைய மனதிலும் முன் நிற்பது ருஷ்யாவின்பேரில் ஜெர்மனிபடையெடுத்திருப்பதுபற்றித்தான். ஹிட்லர் எழுதிய "மெயின்காம்பு" என்ற புஸ்தகத்தைப்படித்தவர்களைப் போல், ஹிட்லர் பிரான்ஸ் தேசத்தைத் தாக்கி முடித்தால் இங்கிலாந்தையும் நசுக்குமுன்னோ பின்னோ ருஷ்யாவை சின்னா பின்னப் படுத்துவது நிச்சயம் என்று அநேகதரம் நானும் நினைத்திருக்கிறேன்.

ஆனால் அவர் எந்தப்பக்கம் முதலில் தாக்குவார் என்பது நிச்சயமாக இல்லை. இதை எவ்விதம் ஒருவன் நிச்சயிக்க முடியும்? இந்த நூற்றாண்டு ஆரம்பம் முதலே ஜெர்மன் ராணுவத்துக்கு ஐரோப்பிய யுத்தத்தை கிழக்கிலிருந்து



தொடுப்பதா மேற்கிலிருந்து தொடுப்பதா என்ற சந்தேகம் ரொம்பவும் கஷ்டப்படுத்திக்கொண்டிருந்தது. உலகத்தையே ஆளவேணுமென்ற ஜெர்மனியின் பழைய நோக்கத்துக்கு ஹிட்லராவது, ஹிட்லரின் கொள்கையாவது மாறுபட்டது என்று நினைப்பது பெரும் தவறு.

ஹிட்லர் தேர்ந்த போக்கிரித்தனத்தையும் தீவிரமான முட்டாள்தனத்தையும் காட்டிலும் ஒன்றும் புதிதாகக்கண்டு பிடித்துவிடவில்லை. ஜெர்மனியின் துர்க்குணங்களை முன்னுக்கு கொண்டுவந்திருக்கிறார்.

'மெயின்காம்பு' புஸ்தகத்தின் கடையங்கத்தில் ஜெர்மனியின் ராஜ தந்திரம் என்று சில பகுதிகள் எழுதியிருக்கிறார். அது இம்மாதிரி ஆரம்பமாகிறது. "ஜெர்மானியர்களின் ராஜ்ஜிய தந்திரம் என்னவென்றால் ஐரோப்பாவிலும் இன்னும் மற்ற கண்டங்களிலும் மற்றொரு ஐரோப்பிய சாம்ராஜ்ஜிய நாடு ஏற்பட இடங்கொடுக்காமலிருப்பது தான். ஜெர்மன் நாட்டுக்குப் பக்கத்தில் ஏற்கனவே விசேஷ படை பலம் பொருந்தி இருக்கும் நாடுகளும், இனிமேல் அப்படி ஏற்படும் நாடுகளும், சிறிய தேசங்களாக இருந்து பின்னால் படை பலம் பொருந்திய நாடாகமாரக்கூடியதாக இருக்கும் நாடுகளையும் அவ்விதம் இருக்கவொட்டாமல் எவ்வழியிலும் அவசியமிருந்தால் சைனியத்தை உபயோகப்படுத்தியும் அவைகளைத் தடுத்தும் ஏற்கனவே படைப் பலம் பொருந்திய நாடாக இருந்தால் அவைகளைச் சிதைத்துத்தள்ள வேண்டியதுதான்".

இது 1927-ம் வருஷத்தில் வெளிப்படுத்தப்பட்டது. ஹிட்லருடன் நெருங்கிப் பழகிய ஒவ்வொரு ராஜதந்திரியும், இதை மனப்பாடமாக அறிந்திருப்பார்கள். மேற்படி விஷயமும் ஜூன் மீ 22உ ஹிட்லருக்காகப் பேசிய கோயபல்ஸின் விவரமான ஸ்டேட்மெண்டில் அடங்கி இருக்கிறது.

ஜெர்மனிக்கு எதிராக, ருஷ்ய-இங்கிலீஷ் ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது என்று பொய்ப் பிரசாரஞ் செய்துகொண்டு ஹிட்லரின் கோயபல்ஸ், இக்காரணங்களால் தான் கிழக்குப் பிரதேசத்தில் பலத்தபடை திரட்டலும் மேற்கே விமானப்போர் நீங்கலாக ஒருவாறாக போரை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்றும் சொன்னார்.

ஹிட்லர் தன் ஜனங்களை சுத்த முட்டாள்களாக ஆக்கிவைத்திருந்தாலொழிய அவர்கள்மேல் கண்ட சங்கதிகளை மேலே சொல்லிய பகுதிகளில் கண்டிருப்பார்கள். ஜெர்மனி இங்கிலாந்தில் மேற்குப் பக்கத்தில் இதுவரை துன்புறுத்தப்பட்டது என்றும், ஹிட்லரும் கோயபல்ஸும் மேற்படியார்களின் அநேக வாக்குறுதிகளுக்கு மாறாக நடந்தும் இங்கிலீஷ்காரர்களின் பாதுகாப்பை இன்னும் தாண்டிச் செல்ல முடியவில்லை யென்றும், இங்கிலாந்து யுத்தத்திலாவது, அல்லது ஜெர்மனி இங்கிலாந்தின் பெரிய நகரங்களை இரவில் விமானங்களிலிருந்து வெடிமருந்தால் அழிக்க முயற்சித்ததிலும், அட்லாண்டிக் சமுத்திரப் போரிலும் ஜெர்மனிக்கு ஜயம் கொண்டுவரவில்லை என்றும் கண்டிருப்பார்கள். மேற்படி யுத்தத்தை படித்ததிலிருந்து அவர்கள் அதைத்தெரிந்துகொண்டிருப்பார்கள்.

இந்த ஜயத்தை 1940-ஆம் ஆகஸ்டு 15உ ஹிட்லரும் லண்டனில் ஜய கோஷத்துடன் பிரவேசிக்கும் பொழுது கொண்டாடியிருக்க வேண்டியது. அது இப்பொழுது ஜெர்மனி-ருஷ்ய சாம்ராஜ்ஜியத்தை ஜயிக்கும் வரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

நான் ஒரு ஜெர்மனாக இருந்து நான் சுய அறிவுடனிருந்திருந்தால் ஜெர்மனிக்கு ஏற்பட்ட இந்த நிலையில் என் மனம் உடைந்திருக்கும். நான் ஒரு ஜெர்மானியனாக இல்லாததால் எனக்கு இந்நிலை தைரியத்தைக் கொடுக்கிறது. ஹிட்லர் கோயபல்ஸ் இருவரும் ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்ததற்குச் சொல்லும் இம்மாதிரியான காரணங்களை நாம் நம்பக்கூடாதென்று நினைத்தாலும் ஹிட்லருக்கு இந்தப் படையெடுப்பும் மேற்கு முனை யுத்தத்தில் பூர்ண ஜயத்தை அடைய உதவியாக இருக்காது.

ஜெர்மன் மக்கள் இவ்விதமான ஹிட்லர் கோயபல்ஸின் வார்த்தையை நம்பலாம். ஆனால் நான் ஒரு ஜெர்மானியனாக இருந்தால் இந்த ருஷ்யப் படையெடுப்பால் ஜெர்மனியின் சேனாபலத்துக்கு ஏதாவது உதவி ஏற்படுமோ என்று யோசனை செய்வேன். யுத்தம் நடக்கும் மத்தியில் நான் இதற்கு சாதகமான பதிலை கண்டு பிடிக்க முடியாதென்றே நினைக்கிறேன்.

இது என்னை ஒரு மோசமான நிலைக்கு கொண்டுவருகிறது. ருஷ்ய-ஜெர்மனியின் டாங்குப்படை, விமானப்படை, யந்திரப்படை, மின்னல் துருப்புகள் இவைகளின் வேகத்தை நெடுநாள் எதிர்த்துநிற்க என்ன காரணங்கள் இருக்கின்றன. தடஸ்திகமாய் சொல்ல, நான் அறியேன் என்றுதான் சொல்ல வேண்டும். என்னால் அனுமானிக்க முடியாது. என்னால் சொல்லக்கூடியதெல்லாம் என்னவென்றால் பொதுவாக எனக்குச் செய்திகள் கிடைத்தவரைக்கும் நான் யோசித்தவரைக்கும் எல்லாம் ருஷ்யாவுக்குச் சாதகமாகவே தெரிகிறது.

இது ருஷ்யாவின் விசேஷம் என்றது மட்டுமல்ல. ஆனால் எவ்விதத்திலும் ருஷ்யாவுக்குச் சாதகமான விஷயங்கள் எல்லாம் ஜெர்மனியின் முன்னேற்றத்துக்கு விரோதமாக இருப்பதாகத் தெரிகிறது.

சில வருஷங்களுக்குமுன் 1904, 1905 வருஷங்களில் ஜப்பானை எதிர்த்து கொடும்போர்புரிந்த ஒரு ருஷ்ய தளகர்த்தரை வியன்னாவில் சந்தித்தேன். அவர் ருஷ்ய தேசத்து சைனியத்தை அதிகம் கல்வியறிவும், தேர்ச்சியுள்ளவுமான ஜப்பானிய சைனியங்களால் தோற்கடிக்கப்பட்டதென்றும், ஜப்பானிய சைனியங்களில் அநேகமாக எல்லோரும் எழுதவும், படிக்கவும், வரையவும் நன்றாகத் தெரிந்தவர்கள். ருஷ்ய துருப்புகளில் நூற்றுக்கு எழுபத்தைந்து கிராமவாசிகள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்றும் சொன்னார்.

அவர் இன்னும் சொன்னதாவது நாங்கள் எங்கள் கிராமவாசிகளை கல்வியில் முன்னேற்று முன் மறுமுறை ஐரோப்பிய யுத்தத்தில் ஈடுபட நேர்ந்தால் நாங்கள் மறுபடியும் தோற்கடிக்கப்படுவோம் என்றார்.



1914-ம் வருத்தில் ஜெர்மனிக்கு எதிராக ருஷ்யா சண்டையில் கலந்து கொண்டபொழுது ருஷ்ய சைனியம் கல்வியபிவிருத்தியில்லாமலும் சொல்பமே கல்வியபிவிருத்தியடைந்திருப்பதாகவும் கண்டார்கள். இத்துடன் யுத்த தளவாடங்களும் ஆயுதங்களும் குறைவால் சில சமயங்களில் ருஷ்ய துருப்புகள் போர்முனையில் ஒரு சிப்பாய் மற்றொரு சிப்பாய் சாகும்வரை காத்திருந்து பின் அவனுடைய ஆயுதங்களை சண்டைக்கு உபயோகிக்க வேண்டியிருந்தது.

அப்படியிருந்தும் முதல் இரண்டு வருஷங்களில் ருஷ்யர்கள் எதிர்த்து கடும் போர் கொடுத்தனர். அந்த யுத்தத்தில் சண்டை செய்த ஒரு ஆஸ்திரிய ஹங்கேரி வீரர் ஒரு நாள் இந்த ஆஸ்திரிய ஹங்கேரி துருப்புகள் ருஷ்யர்களைக் காட்டிலும் அதிகம் தேர்ச்சியடைந்திருந்தபோதிலும் ருஷ்ய குதிரைப் படையின் தீவிர எதிர்ப்பை மிஞ்சி சண்டை செய்வது மிகவும் கடினமாக இருந்ததும் பின் ருஷ்யர்கள் பின் வாங்க வேண்டி நேர்ந்த போழுது அவர்களுக்குப்பின் எல்லாப் பிரதேசங்களும் அழிக்கப்பட்டு இருந்தபடியால் முன்னேறும் படைகள் பாலைவனங்களில் செல்வது போல் இருந்தது என்றும் சொன்னார்.

இந்த யுத்தத்தில் ஜெர்மானியர்கள் ருஷ்யர்களை அடித்துத்துரத்தி விடுவார்களேயானால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய எல்லா சாமான்களையும் அவர்களே கொண்டுவரவேண்டியதாயிருக்குமென்றும்; போக்குவரத்து சாதனங்கள் தூரத்தில் போகப்போக உணவுப் பொருள்களின் ஸப்ளைவசதியும் போக்குவரத்து சாதனமும் ரொம்பக் கஷ்டமாகிவிடுமென்றும் அவர் சொன்னார்.

1933-ம் வருஷத்தில் ருஷ்யர்களை திடீரென்று எதிர்த்து தோற்கடிக்கும் வழிகளைக் கவனித்து வருவதற்காக ஒரு ஜெர்மானிய தளகர்த்தரை ஹிட்லர் ருஷ்யாவுக்கு அனுப்பினார். சிலமாதங்களுக்குப்பிறகு அந்த ஜெர்மானிய தளகர்த்தர் ருஷ்ய சைனியம் தோற்கடிக்கப்படலாமாயினும், இவ்வளவு விஸ்தாரமான தேசத்தைக்கிளம்ப முடியாமல் அடிப்பதென்பது எவ்விதமான யுத்த தந்திரத்தாலும் சாத்தியமில்லை என்பது தான் இதில் உண்மையான கஷ்டம் என்று ரிபோர்ட்டு செய்தார். ஒரு இடத்துக்கும் மற்றொரு இடத்துக்குமுள்ள அபாரமான தூரத்தால் ருஷ்யாவின் மர்மஸ்தானங்களைப் போய் அடைவது வெகு கஷ்டமாகிவிடும்.

அது முதல் ருஷ்ய சைனியம் திருதியாய் பலப்படுத்தப்பட்டிருக்கிறது; அதிலும் ரொம்ப முக்கியமான விஷயம், ருஷ்யப்போர் வீரர்களில் 100-க்கு 75 பேர் விகிதம் படிக்கவும் எழுதவும் அறிந்தவர்கள். சமீபகாலத்தில் ருஷ்ய நாட்டு விவசாயம் முழுவதும் "ட்ராக்டர்" கள் மூலமே செய்யப்பட்டு வந்திருப்பதால் அவர்களில் பலருக்கு விவசாய "ட்ராக்டர்" களை உபயோகிக்கவும் பழக்கமாகியிருக்கிறது. "ட்ராக்டர்" களை ஓட்டிப் பழகினவர்களுக்கு டாங்குகளை ஓட்டுவது கஷ்டமில்லை.

மொத்தமாய் ருஷ்யர்கள் வசமுள்ள மனித பலத்தையும், டாங்குகளையும், ஆகாய விமானங்களையும், கணக்குப்பண்ணிப்பார்த்தால், ஜெர்மானிய ஸர்க்காரால் கூட உறுதியாக சொல்லக்கூடாதான, யுத்தத்தின் அடிப்படையான முடிவைத் தேடவேண்டி, தன்னுடைய மகத்தான ஸைனியங்களின் பெரும்பாலான பாகத்தை மேற்கு முனைக்குத் திருப்பிக் கொண்டு வரமுடியாமல் ஹிட்லரை தடை செய்யப் போதுமான விதமாய் எதிர்ப்பதற்கு அப்படைகள் போதுமென்று நினைக்கிறேன்.

எது எப்படி இருந்தாலும் கிழக்கு முனையில் யுத்தம் எவ்வாறு முடியும் என்று நான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. தினசரி விருத்தியாகிக் கொண்டு வருகிற பிரிடிஷ், நேச தேச, ஆகாயப்படைகளின் முழுபலத்தோடும் ராப் பகலாக நாம் ஜெர்மானியர்களை அடித்து வருகிறோம். வடக்கு பிரான்ஸிலும் பிரிடிஷ் பாம்பர்களும் சண்டை விமானங்களும் பகல் வேளைகளில் நடத்தும் தாக்குதலை சமாளிக்க ஜெர்மானியர்களிக்கு முடியவில்லை. நாம் ருஷ்யாவிக்கு ராணுவ தூது கோஷ்டிகள் மூலமும் பொருளாதார தூதுகோஷ்டிகள் மூலமும் உதவிகள் அளிப்பதாய் சொல்லி அவர்களும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; ஐக்கிய நாடுகளும் ருஷ்ய-ஜெர்மானிய யுத்தத்தில் மத்யஸ்த நிலையில் இருப்பதால் பிரகடனம் செய்யாமல் ஜாக்கிரதையாய் இருந்துவிட்டார்கள்,

ஜெர்மானியர்கள் ருஷ்யாவை எதிர்த்ததால் வ்ளாடிவாஸ்டக் வழியாகவும் ருஷ்யா வழியாகவும் ஜெர்மனிக்குள் திருட்டுத்தனமாய் சாமான்கள் போவது தடுக்கப்பட்டு விட்டதென்பது மற்றொரு சாதகம்.

ஜெர்மனி ருஷ்யாவை எதிர்த்தது யுத்தத்தில் ஒரு முக்கியமான சம்பவமென்று நான் நினைக்கிறேன். அதன் அஸலான முக்கிய பிரயோஜனத்தையாவது அல்லது அதன் அவாந்தர பலனையாவது ஒருவரும் எதிர்பார்க்கவோ முன்கூட்டிச் சொல்லவோ முடியாது. மேற்கு ஐரோப்பாவிலுள்ள எந்த அரசியல் நிபுணரைக் காட்டிலும் ருஷ்யாவின் பாதுகாப்புகளைப்பற்றி நன்றாய் தெரிந்து கொண்டிருக்கிறவரான ஸெக்கோஸ்லோவாக்கியா தலைவரான பெனஸ் என்பவர் ஹிட்லர் ருஷ்யாவை எதிர்த்ததைப்பற்றி இது ஒருபெரும் தவறென்றும் இதனால் ஜெர்மனியின் தோல்வி நிச்சயமாகி விட்டதென்றும் கூறியிருக்கிறார். ரொம்பக் கஷ்டமாகவும் சங்கடமாகவும் போகக்கூடிய ருஷ்யா-போலிஷ் ஸ்திதியானது, ஹிட்லரின் கொள்கையால் பிரிட்டனிலுள்ள போலந்து ஸர்க்காரும் ருஷ்ய ஸர்க்காரும் ஒன்று சேர நாளாசரியில் மிகவும் சுலபமாய் போய்விடும் என்று நினைப்பது ரொம்ப அதிகமாக மாட்டாது.

பொதுவாக சத்துருவை எதிர்ப்பதில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்ற ஒரே கொள்கையினால் பிரிடனும் ஐக்கிய நாடுகளும் ருஷ்யாவோடு ஒத்துழைக்கத் தீர்மானித்திருப்பது போலவே, இங்கிலாந்திலுள்ள ருஷ்ய ஸார்காலத்து ருஷ்யர்கள் தற்காலத்து ருஷ்ய அதிகாரிகளுடன் தேசிய சுயேச்சைக்காக யுத்தத்தில் சேர்ந்து விடுவதாய் பகிரங்கமாய் பிரகடனம் செய்திருக்கிறார்களென்பதை நாம் அலக்ஷியம் செய்யமுடியாது.



“சென்ற யுத்தத்தில் ரொம்ப பராக்கிரமத்துடன் போர் புரிந்து நமக்கு ஜயம் கிடைக்கும்படி நமக்கு ருஷ்யர்கள் உதவினார்கள். அப்பொழுது ருஷ்ய ஸைனியம் நமக்கு நேசமாய் இருந்து நம்முடைய அத்யந்த விரோதியை எதிர்த்தார்கள். ஆனால் அந்த ஜயத்தில் அவர்களுக்கு பங்கு கிடைக்காமல் போய்விட்டது. அது நம்முடைய பிசகாலல்ல” என்று சென்ற யுத்தத்தில் நடந்தவற்றை மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் ஞாபகப்படுத்திப் பேசியபொழுது அவர்களும், ஸோவியத் முறையை எதிர்க்கும் ருஷ்யர்களும் ரொம்பவும் இரக்கப்பட்டார்களென்று நான் அறிகிறேன்.

1918-௵ ஆகஸ்டு மாதத்தில் ருஷ்யர்கள் ப்ரஷ்யாவுக்குள் பிரவேசித்து பிரான்ஸையும், பிரிட்டனையும் மேற்கே ஏற்படக்கூடிய பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றவும், மார்ன் யுத்தத்தில் தீர்மானமான ஜயத்தை சாத்தியமாகச் செய்வதற்கும் காரணமாயிருந்ததென்பதில் சந்தேகமே இருக்கமுடியாது.

இந்த மாதிரி ருஷ்யர்கள் படை யெடுத்ததால் அவர்களுக்குப் பெருத்த நஷ்ட மேற்பட்டு அதிலிருந்து தலைதூக்கவே இல்லை.

ஆனாலும், ஜெர்மனியும் ஆஸ்டிரியா ஹங்கேரியும் ஐரோப்பிய ருஷ்யாவில் அநேக விஸ்தாரமான பிரதேசங்களை வியாபித்துக்கொண்டு, போல்ஷிவிஸ்டுகள் தலையில் அக்கிரமமான ப்ரெஸ்ட் லிடொவ்ஸ்க் ஒப்பந்தத்தை வைத்துக்கட்டியும், ஜெர்மானியர்கள் கிழக்கே பத்து லக்ஷம் வீரர்கள் வைத்திருக்க வேண்டியதாய் இருந்தது. 1918-ம் ௵ மார்ச்சு மாதக்கடாசியில் பிரிடிஷ், பிரெஞ்சுப்படைகளுக்கு விரோதமாய் நடத்தப்பட்ட லுடெண்டார்வ்வின் எதிர்ப்பில் அந்த வீரர்களை உபயோகப்படுத்த முடியவில்லை.

ஆகையினால் பிரிடிஷ் பிரதமமந்திரி, ஸார்கக்ஷி ருஷ்யர்களுக்கு நாம் எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை ஒப்புக்கொண்டு பேசியதும் இன்று ருஷ்யாவோடு சேர்ந்து நின்றதும் சரித்திரரீதியாகவும், ராஜீய ரீதியாகவும் நியாயம்தான். “சீக்கிரமாய் கொடுத்தவன் இரண்டு தடவை கொடுத்தவனாவான்” என்று லத்தீன் பழமொழி. பிரிட்டனுக்காகவும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்காகவும், மிஸ்டர் சர்ச்சில் சீக்கிரமாய் கொடுத்தார். அவர் இன்னமும் செய்தார். அவர் அடியில்கண்ட கொதிக்கிற உண்மையான வார்த்தைகளில் பிரிடிஷ் கொள்கைகளை அவர் வெளியிட்டிருக்கிறார்:—“நமக்கு ஒரே குறி. தள்ளமுடியாத ஒரே காரியம்! ஹிட்லரையும் நாஸி ஆளுகையின் அம்சங்களையும் லவலேசங்கூட இல்லாமல் நாசம் செய்வதென்று நாம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோம். இந்தக் காரியத்திலிருந்து எதுவும் நம்மைப்பின்வாங்கச் செய்யாது. நாம் ஒரு பொழுதும் நல்லவார்த்தை பேசப்போவதில்லை. ஹிட்லருடனோ, அவனுடைய கூட்டத்தாருடனோ நாம் சமாதானம் பேசப்போவதில்லை. தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் நாம் அவனோடு போர்புரிவோம். கடவுளின் உதவியால் இந்த உலகத்தில் ஹிட்லரின் நிழல்கூட இல்லாமல் ஒழித்து ஜனங்களை இந்த கஷ்டத்திலிருந்து விடுவிக்கும்வரை நாம் போர்புரிவோம். நாஸிக்கொள்கைகளை எதிர்த்துச் சண்டையிடும் எந்த மனிதனும், எந்த சமஸ்தானமும் நம்முடைய

உதவியைப்பெறும். ஹிட்லருடன் சேர்ந்துகொள்ளும் எந்த மனிதனும், எந்த ஸமஸ்தானமும் நமது சத்துருவாகிறான். இது தான் நமது கொள்கை. இதைத் தான் நாம் பிரகடனம்செய்கிறோம். இதன் பயனால் ருஷ்யாவுக்கும் ருஷ்ய ஜனங்களுக்கும் நம்மால் ஆன உதவியை நாம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. உலகத்தின் எல்லா பாகங்களிலுமுள்ள நம்முடைய சிநேகிதர்களையும் நேச நாடுகளையும் நாம் செய்வதுபோலவே அதேமாதிரியான வழியில் இறங்கி மேலும் மேலும் உண்மையாகவும் விடாமுயற்சியுடனும் கடைசிவரை அந்த வழியைப் பின்பற்றி நடக்கும்படி நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்."

---

# பிரிடிஷ் விமானப்படையே முன்னேறுங்கள்.

---

## எதிர்ப்பு யுத்தத்தில் பிரிடிஷ் விமானப்படைக்கு ஏற்பட்ட நஷ்டங்களின் அளவு.

## ஜெர்மன் விமான நஷ்டத்தோடு ஒப்பிடல்.

## ஜெர்மன் துணைக்கப்பல்களைப் பகலில் தாக்குதல்.

## நாஜிகளின் சேமிப்புகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள்.

(விங் கமாண்டர் L. V. பிரேஸர் எழுதியது)

பிரிடிஷ் விமானப்படை ஏராளமாக அபிவிருத்தியடைந்துவரும் சமயத்தில், ஜெர்மன் விமானப்படை இரண்டு போர்முனைகளில் யுத்தம் செய்யும்படி நேர்ந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை பிரிடிஷ் விமானப்படை உபயோகப்படுத்துகிறது. விருத்தியடைந்துவரும் அதன் தொந்தரவை ஜெர்மானியர்கள் மூன்று வகையில் உணருகிறார்கள்.

முதலாவது, ஜெர்மன் துறைமுகங்களையும், தொழிற்சாலைகளுள்ள நகரங்களையும் இரவில் நொறுக்குதல். இவைகளைப்பற்றி விமான இலாகா வெளியீடுகள் என்றும் சொல்லுகிறதில்லை. நாம் படிப்பதெல்லாம் "வரிசையாக ஏழாவது இரவு ரூர் பிரதேசத்தை பலமாகத் தாக்கினார்கள்..........." "வரிசையாக பதினைந்தாவது இரவு" என்பது தான்.

இந்த வெறும் வார்த்தைகளுக்குப் பின்னால், ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலையின் விசாலமான பரப்புகளிலும், துறைமுகங்களிலும், போக்குவரவு சாதனங்களிலும் ஏராளமான சேதம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது. ஒவ்வொரு இரவிலும் இரக்கமின்றியில் ஜெர்மனியின்பேரில் கனமான வெடிகுண்டுகள் வீசப்பட்டும், அடுத்த குண்டுவீச்சு ஏற்படுவதற்குமுன் விளைந்த சேதத்தை ஒழுங்கு செய்வதற்குக்கூட அவகாசமில்லாமலும் தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதற்குப் பிறகு வடபிரான்ஸில் பகலில் ஏற்படும் எதிர்ப்புத் தாக்குதல்கள்.



சண்டைபோடும் விமானப்பகுதி இப்பொழுது எதிரியின்பேரில் எதிர்ப்பு யுத்தம் துடங்கிவிட்டது. சென்ற வருஷம் விமான யுத்தம் பிரிடிஷ் கடற்கரையில் நடைபெற்றுவந்தது. இப்பொழுது யுத்தம் இங்கிலீஷ் கால்வாயைத்தாண்டி எதிரி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் ஆரம்பமாகிவிட்டது. ஜூன் மீ 16-ம் தேதி முதல் 24-ம் தேதிக்குள்ளாக பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதலிலிருந்து ஜெர்மனியின் 122 விமானங்கள் நாசமாகிவிட்டனவென்று நிச்சயமாய்த் தெரிகிறது. பின்னும் அநேக விமானங்கள் பழுதுபட்டுவிட்டன. ஆனால் இவைகள் நாசமடையவில்லை. இந்த அவகாசத்தில் பிரிடனுக்கு 28 விமானங்கள் நஷ்டமாயின. 5 விமானிகள் பத்திரமாய் வந்துசேர்ந்தார்கள்.

## எதிர்ப்பு யுத்தத்தின் அர்த்தம்.

இந்த எதிர்ப்பு யுத்தத்தின் முக்கியத்வம் யாதெனில், விமான நஷ்டக் கணக்கில் தராதரம் முற்றிலும் மாறுதலடைந்துவிட்டது. 1940-ம் வருஷத்தில் இதே காலத்தில் ஜெர்மனி ஏராளமாக எதிர்ப்பு யுத்தத்திற்காக விமானங்களை அனுப்பியபொழுது, ஹிட்லர் நடுநடுங்கக்கூடியதான விமான நஷ்டங்கள் ஏற்பட்டன. பாதுகாப்பாளர்கள் என்ற முறையில் பிரிடனுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் நான்கில் ஒரு பங்குக்கு மேலானவை என்று சொல்லலாம். இப்பொழுது அதே கணக்கு எதிரியின்பேரில் நாம் தொடுத்திருக்கும் எதிர்ப்பு யுத்தத்தில் ஏற்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, வெளிப்படையாகத் தெரியாதபோதிலும் நாளடைவில் பிரயோஜனப்படக்கூடியமுறையில் பிரிடிஷ் விமானப்படை எதிர்ப்பு யுத்தம் ஆரம்பித்திருக்கிறது. இவ்வருஷம் மார்ச்சு 12-ம் தேதியன்று வெடிகுண்டு விமானங்கள் நார்வேயிலிருந்து மத்தியதரைக்கடல் வரைக்குமுள்ள ஜெர்மானியக் கப்பல்களை பகற்காலத்தில் தாக்க ஆரம்பித்தன. அதுமுதல் ஜூன் 22-ம் தேதிவரை எதிரிகளின் 97 கப்பல்கள் நாசமாக்கப்பட்டும் 19 நன்றாய் பழுதாக்கப்பட்டும் அல்லது வேலைக்கு லாயக்கில்லாமல் செய்யப்பட்டும், பின்னும் 66 கப்பல்கள் சுமாராகப் பழுது அடைந்துமிருக்கின்றன.

## கடற்கரை வழியாகப் போக்குவரத்து.

இது எதிர்பார்க்கப்பட்டது. தவிர்க்கமுடியாதது. வசந்தகாலம் வந்தவுடன், காலநிலை நன்றாகவும் மாறியதும், ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு கடற்கரை வழியாக உணவுப்பொருள்கள் கொண்டுபோவதற்கும், பிரிடனைத் தாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தளங்களுக்கு ஜெர்மனியிலிருந்து சாமான்கள் அனுப்புவதற்கும், கப்பல்களை அனுப்ப ஜெர்மனி நிச்சயமாய் பிரயத்தனம் செய்யக்கூடும். இந்த ஏற்பாட்டில் அதிகப் போக்குவரவு உள்ள இருப்புப் பாதைகளை உபயோகிக்காமல் செய்யக்கூடும். அட்லாண்டிக் சமுத்திரப் பக்கத்திலுள்ள பிரெஞ்சுக் கடற்கரையிலிருக்கும் நீர்மூழ்கி நிலயங்களுக்கு எண்ணெய் சுலபமாய் அனுப்பக்கூடும். ஜயிக்கப்பட்ட நாடுகளிலுள்ள நிலயங்களிலிருந்து

விளை பொருள்களை ஜெர்மனிக்குக் கொண்டுபோகலாம். டென்மார்க், நார்வே கடற்கரைகள் வழியாக, ஜெர்மனியின் உபயோகத்துக்காக பண்டம் மாற்றுதல்களும் ஏற்படக்கூடும்.

மார்ச்சு 12-ம் தேதியன்று வேகம் பொருந்திய வெடி விமானங்கள், டச்சுக் கடற்கரையின்பேரில் பாய்ந்து தாக்க ஆரம்பித்தன. அவைகளுக்கு சண்டை விமானங்கள் துணைக்குச் செல்லவில்லை. அவைகள் மேகங்களுக்குப்பின் ஒளிந்து கொள்ளவில்லை. அன்றையதினம் வடகடலின்பேரில் விசாலமான பரப்புகளில் நிர்மலமான ஆகாசம் காணப்பட்டது. சுமார் 1,000 டன் எடைமானமுள்ள ஒரு கப்பல் தென்பட்டது. அந்த வெடி விமானங்கள் வெற்றிகரமாக வெடிகளால் தாக்கின. அது முதல் ஊக்கமாக எதிர்ப்பு யுத்தம் ஆரம்பமாயிற்று. ஒவ்வொரு நாளும் கடற்கரை ஓரமாய் மெதுவாய்ச் செல்லக்கூடிய கப்பல்களைக் கண்டுபிடிப்பதற்காக எதிரியின் கடற்கரைகளில் ரோந்து செய்யப்பட்டது. எதிரிக்கு முதல் முதலில், வலுவான சண்டைக் கப்பல்களின் துணையுடன் வந்த இரண்டு எண்ணெயை ஏற்றிச் செல்லும் கப்பல்கள், ஒவ்வொன்றும் 6,000 டன்கள் எடைமானமுள்ளது, மூழ்கடிக்கப்பட்டன. தவிரவும், ஒழுங்காகவும், நார்வேயில் லோன்போர்டிலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைப் பார்த்திருக்கும் பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள போர்டோ வரைக்கும் உள்ள 1,600 மைல்கள் உள்ள கடற்கரையானது ரோந்து பார்க்கப்படுகிறது. எந்த இடத்தில், பகலில் எந்த நேரத்தில் பிரிடிஷ் விமானப்படை தாக்குமென்று சத்ருக்கள் ஒரு பொழுதும் அறியக்கூடவில்லை.

## ஜெர்மனி செய்வதென்ன?

பிரிடிஷ் விமானப்படை விளைவித்த நஷ்டங்களின் கணக்கு, ஜெர்மானியர்கள் ஆதிக்கம் பெறாத சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களின் நஷ்டத்தோடு நிற்கவில்லை. ஜெர்மனியின் ரயில் வண்டிகள் அதிகமாக வேலை செய்யவேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது. திருட்டுத்தனமாய்ச் செல்லும் கப்பல்களையும், அவைகளிலிருக்கும் திருட்டு சாமான்களையும் பாதுகாக்க ஜெர்மனி புதிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிற்று.

அங்கச் சண்டை விமானங்களையும், விமானம் சுடும் பீரங்கிகளையும் பட்டப்பகலில் ஏற்படும் தாக்குதல்களைத் தடுக்கவேண்டிய ஏற்பாட்டுக்காக உபயோகிக்கவேண்டியதாயிற்று. வேறு இடங்களில் உபயோகிக்கக்கூடிய அநேக சண்டை விமானங்களை ரோந்துக்காக நிறுத்திவைக்கும்படியும் ஏற்பட்டது. ஜெர்மனியின் சாமான் கப்பல்களிலெல்லாம் விமான எதிர்ப்பு பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சொற்பமாயுள்ள சாமான் கப்பல்களுக்கும், சண்டைக் கப்பல்களின் துணை அவசியமாயிருக்கிறது. முக்கியத்வம் வாய்ந்த கப்பல்களை நாசகாரிகள் பாதுகாத்து வருகின்றன. இம்மாதிரியான பாதுகாப்புகள் வலுவாகயிருந்தபோதிலும், கப்பல்களின்மேல் பாய்ந்து சென்று, குறி தவறாமலும், விசேஷ பிரயோஜனத்தோடும், வெடி குண்டுகளை வீசும் வெடி விமானத்தை எதிர்க்க இவைகள் சக்தியற்றவை. சக்தியுள்ளதாகவும் ஆகமாட்டா.



வெடி விமானங்களில் அநேகம் நாசமடைந்திருக்கின்றன. ஆகிலும், பிரிடிஷ் விமானப்படையின் ஜனங்களின் ஆர்வம் தளர்ச்சியடையவில்லை. மேலும், இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளையே அவர்கள் தாக்குகிறார்கள். அவைகள் கொடிபோட்டிருக்கும் கப்பல்களையும், நாசகாரிகளையும் வெடி குண்டுகளால் தாக்கியிருக்கின்றன. எதிரியின் சண்டை விமானங்களால் ஏற்பட்ட தாக்குதல்களை அவைகள் நிராகரித்திருக்கின்றன. சமுத்திரத்திற்குள் அநேக விமானங்களை வீழ்த்தியிருக்கின்றன. ஜெர்மன் கப்பல்கள் துறைமுகத்தைவிட்டு வெளியே செல்ல யத்தனிக்கும்போதெல்லாம், பிரிடிஷ் விமானப்படை தினந்தோறும் ரோந்து சுற்றிக்கொண்டேயிருக்கும். இதை அதிகப்படுத்தும்.

ஜெர்மன் கப்பல்கள் சமுத்திரத்தில் வராதபோதிலும், அவைகள் பாம்பர்களின் லக்ஷியத்திலிருந்து தப்பமுடியாது. துறைமுகத்திலேயே கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. கீல் வாய்க்காலின் அரண்களுக்குப்பின் இருப்பவைகளும்கூட நாசமடைந்திருக்கின்றன. சத்ருவின் கடற்கரை ஓரங்களை பிரிடிஷ் விமானங்கள் அடிக்கடி தாக்கியிருக்கின்றன. இந்த இடம் மட்டும்தான் பிரிடிஷ் கடற்படை ஜெர்மனியின் உபயோகத்துக்கு விட்டிருக்கிறது. பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, ஜெர்மனி முதலிய தேசங்களின் கப்பல் தளங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. அநேகம் தடவை ஹெலிகோலாந்தின்பேரில் கீழாக வெடி விமானங்கள் பறந்து, திடீரென பாதுகாப்பு முறைகளைத் தாக்கியிருக்கின்றன.

பகல் எதிர்ப்புகள் கடற்கரையிலிருக்கும் லக்ஷியங்களோடுமட்டும் நிற்கவில்லை. ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, டென்மார்க், பிரான்ஸ் முதலிய இடங்களில் வயல்கள், கிராமங்கள்பேரில் கீழாகப்பறந்து செல்லும் பிரிடிஷ் வெடி விமானங்களை ஜனங்கள் ஆதரவுடன் எதிர்பார்க்கிறார்கள். ஏனென்றால், தங்களுடைய பந்தத்தை நிவர்த்திசெய்ய வரப்போகும் சைனியத்தின் முன்னணியாக இவைகள் வந்திருக்கின்றன என்று அங்கு உள்ள அடிமை ஜனங்கள் அறிகிறார்கள். ஜெர்மனியின் தற்காப்புகளைத் தாக்கவும், ஜெர்மனியின் அமைதியற்ற சாம்ராஜ்யத்தின் எல்லைப்புற அரண்களை நாசம் செய்யவும் செல்லும் வெடி விமானங்களைப்பார்த்து அவர்கள் ஆசிகூறுகிறார்கள்; கரகோஷம் செய்கிறார்கள்; உத்ஸாகப்படுகிறார்கள்.

---

# நேயர்கள்.

---

'யுத்தத்துக்கு உபயோகப்படாத நட்பு பிரயோசனமற்ற 'நட்பு', என்று மேயின் காம்பில் ஹிட்லர் கூறியுள்ளார். பிரிடன் இப்பொழுது இந்தப் பாடத்தைத் திருப்பி வாசித்து, யுத்தத்தில் வெற்றி பெற ருஷ்யாவோடு ஸ்நேகம் செய்து கொண்டிருக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்துக்கும், அரசாங்க ஸமரஸப் பேச்சுகளுக்கும் விருத்தமாகவும் ருஷ்யாவின் மேல் ஜெர்மனி சென்ற

மாதம் படையெடுத்தவுடனே, ஜெர்மனியின் இரு பார்சத்திலுமுள்ள ருஷ்யா, பிரிட்டன் ஆகிய இரு வல்லரசுகளும் ஹிட்லரின் அரசியலைத் தொலைக்க ஒன்று சேர்ந்து கொண்டன. ஹிட்லர் அரசாக்ஷியானது விவேகமற்றது. பிறரைப் பயமுறுத்த ஏற்பட்டது. பழைய யுத்தங்களைப் பற்றி தப்பாய் நினைத்துக் கொண்டு, சண்டை செய்வதற்காகவே அமைக்கப்பட்ட அரசாங்கம் இது. இதை யுத்தம் செய்தே ஸம்ஹாரம் செய்யவேண்டும். 'நிலத்திலும், கடலிலும் ஆகாயத்திலும், கடவுள் கொடுத்த நம்முடைய முழுபலத்தோடு, இது வரையில் கேள்விப்படாத பாதகங்களைச் செய்து வரும் ஜெர்மானிய அரக்கர் கொடுமையை ஒழிக்க யுத்தம் செய்வதே நம்முடைய நோக்கமாகும்', என்று பிரிட்டனுக்குப் பேராபத்து நேரிட்டிருந்த சென்ற மே மாதத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னதை இப்பொழுது ருஷ்யாவும் முழுமனதோடு அங்கீகரித்துவிட்டது.

யுத்தம் செய்ய ஏற்பாடுகள் சரிவரச் செய்யாத நாடுகளைத் திடீரென்று எதிர்த்து ஒன்றன் பின் ஒன்றாக அவைகளைப் பிடித்திலிருந்து இருமாப்படைந்திருக்கும் ஹிட்லரும், அவருடைய சேனாதிபதிகளுங்கூட, தங்களுடைய இரு பக்கங்களில் இப்பொழுது இரு வல்லரசுகள் சேர்ந்து விட்டதைப் பார்த்து பயப்படுகிறார்கள். சமீபத்தில் மிஸ்டர் ஈடன் சொல்லியபடி விமானக்குடையின் வழி ருடால்ப் ஹெஸ் பிரிட்டனில் இறங்கியதற்கும் அதிகமான ஆச்சரியங்கள் இந்த யுத்த முடிவதற்குள் நாம் பார்க்கப் போகிறோம். பயித்தியக்காரர்கள் ஆஸ்பத்திரியில் ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொள்ளுவது போல் ஹிட்லரும் கோயரிங்கும், ரிப்பன் டிராப்பும் சண்டை போட்டுக்கொள்ளுகிறார்களாம். இவர்களை கொள்ளைக் கப்பல்காரர்களுக்கும் ஒப்பிடலாம். பிரிடிஷ்-அமெரிக்க முதலாளிகளை எதிர்க்கவும், போல்ஷிவிக் என்ற ஜன-சமத்துவக் கொள்கையைத் தடுக்கவும் ஜெர்மனி போர்புரிவதாக இப்பொழுது பலமான பிரசாரம் நடந்து வருகிறது. ஆனால் பிரசாரத்தால் மயங்கி ஒருவரும் ஜெர்மனியோடு சேரக்காணோம்: இதிலிருந்தே ஜெர்மன் பிரசாரத்தின் மதியீனம் வெளியாகிறது. தான் முற்கனவே பிடித்துக் கொண்ட சில நாடுகள்தான், ஜெர்மனியால் இழுக்கப்பட்டு, இப்பொழுது, அதுடன் பின் போகின்றன: இவைகளின் பாரத்தாலேயே அதி வேகமாய் படுகுழியில் ஜெர்மனி விழுந்து விடப்போகிறது. லஞ்சம் கொடுத்தோ, அல்லது பயமுறுத்தியோ அயல் நாட்டார்களைச் சண்டையில் ஜெர்மனி சேர்க்கப்பார்க்கிறது. இவர்களைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபம் செய்யப்படுகிறது. சென்ற வருஷத்தில் நேயநாயிருந்த இதாலியானது இப்பொழுது பிடிபட்ட நாடாக ஆய்விட்டது.

சென்ற வருஷம் தனித்து நின்றபோது நிர்ப்பயமாய் பிரிட்டன் தன் தனிநிலைமையை பகிரங்கமாய் சொல்லிற்று. ஆனால் அப்பொழுதும் ஒருவாறு அதற்குத்துணையுண்டு. இப்பொழுது ஐரோப்பா முழுவதற்கும் லண்டனே தலைநகராகும். ஜெர்மனி உண்மையில் தனித்து நிற்கிறது. இனி இதை மறைக்க டாக்டர் கோயபல்ஸ் நெயர்களைக் கற்பிக்க வேண்டியதுதான். தன்னை இதர நாடுகள் வளைத்துக் கொண்டிருப்பதாக முன் பொய் பிரசாரத்தை ஹிட்லர் செய்தார். இப்பொழுதுதானே தன்னை வளைத்துக் கொண்டுவிட்டார்.



## ருஷ்ய ஜெர்மன் போரில் ஒரு முகச்சாயல்.

## வரையறை அற்ற வெட்ட வெளிகளில் பிரதேச யுத்தப் போக்கு.

## ருஷ்யர்கள் ஒரு போருக்குள் பலபோர்கள் நடத்துகிற விதம்.

ஜூலை-மீ 4உ "டைம்ஸ்" பத்திரிகையின் ராணுவ நிருபர் எழுதுவது:—

இந்த யுத்தத்தில் போரானது, பத்திபத்தியாக வரிசைப்படுத்தி நடத்தப்படுவதிலிருந்து பிரதேசப்பாங்காய் நடத்தப்படுவது மிகுதியாயிருக்கிறது. அதுவும் வரையறை அற்ற வெட்ட வெளிகளில் இப்படி பிரதேசப்பாங்காய் நடத்தப்படுவது வெகு முதன்மையாகத்தோன்றச் செய்கிறது. மின்ஸ்க் யுத்த அரங்கத்தில், முன்னேறிச்சென்ற ஜெர்மன் சைனியப்பகுதிகளுக்கும் ஜெர்மன் மூல சைனியத்திற்கும் நடுவில் ருஷ்யப்படைகள் நிற்கின்றன. அவைகள் பொது நிலைமையை சற்றும் கவனிக்காமலும், ஒரு சைனியம் நாலா பக்கமும் சூழப்பட்டால் அந்தச் சைனியம் பலமற்றுச் செய்யப்பட்டது என்ற பழமையான தத்துவத்தையும் பொருட்படுத்த மறுத்தும், ஒரு போருக்குள் பல சண்டைகளை நடத்துகின்றன.

ஜெர்மானியர்களுக்கு இந்த நிலைமை ஒரு வக்ரமாகத்தானிருக்கிறது. அவர்கள் இம்மாதிரி யுத்த முறையைத்தான் கடைபிடித்திருக்கவேணுமென்று வற்புறுத்தியவர்கள். தாங்கள் நினைவில்கூட எதிர்பாராதவிதமாய் அத்தனை மாபெரும்விதத்தில் தங்கள்பேரில் இதே முறை கையாளப்பட்டவுடன் கொஞ்சம் பொறுமை இழந்து, குற்றம் சாட்டுவதாகத் தோற்றுகிறது. இருப்பினும் யுத்தம் மேல்நடத்தவேணுமென்றால் சைனியங்கள் சாப்பிடவேணும். யுத்த வண்டிகளுக்கு எண்ணெய்வேணும், குண்டு வீசும் ஆயுதங்களுக்கு வெடிகுண்டு, ரவைகள் அத்யாவசியமான தேவை. வெடிகுண்டுகள் ஸப்ளை செய்யப்படாதபோனால் ஆயுதம் ஒருகவைக்கும் உதவாது. இருந்தாலும் கத்திரிக்கோல் பகுதிகளாய் பிரிந்து தாக்கிய ஜெர்மன் சைனியப்பகுதிகளால், தாண்டிச்செல்லப்பட்ட இந்த ருஷ்ய சைனியங்கள் போர் நடத்தப்போதுமான பிரதேசங்கள் வெட்ட வெளிகளாகயிருக்கின்றன. ஆனால் இந்தச் சைனியங்களுடைய போக்குவரத்து சாதனங்களை ஜெர்மன் யந்தர கவசம் தாங்கிய மோட்டார்கள் உடைத்துத்தகர்த்து எரிந்துவிடுமாயின், சேர்ந்தாஞ் சேர்க்கையாய் நின்று யுத்தம், தொடர்ந்து செய்ய இயலாது.

வேறு எவ்விதத்திலாவது இந்த ருஷ்ய சேனைகள் போரை விடாமல் நடத்தக்கூடுமா? ஸ்டாலின் சமீபத்தில் செய்த பிரசித்தமான ரேடியோப் பேச்சில் அவர்கள் போரை விடாமல் நடதக்கூடும் என்று உறுதிகூறியிருக்கிறார். வாஸ்தவமாக, இந்தப்பேச்சில் மிகவும் ஸ்வாரஸ்யமான வாக்கியங்களில், இம்மாதிரி ஓடியடித்து மறைந்து யுத்தம் தொடுப்பது தான் முறை என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். இதற்கு "க்வரில்லா"ச் சண்டை என்று பெயர். எதிரித்துருப்புகளின் ஸப்ளைக்குரிய பின் போக்குவரத்துகளை சிறு காலாட்படைப்

பகுதிப்பிரிவைக்கொண்டும், சிறு பகுதிப்படைப் பிரிவைக்கொண்டு தாக்கவேண்டுமென்றும் எதிரிகள் வசம் வரும் யுத்த தளவாடங்களை அழிப்பதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்யும் ரகஸ்ய அழிக்கும்படை பிரிக்கப்பட வேண்டுமென்றும், போதித்தருளுகிறார்.

பிரம்மாண்டமான யுத்தத்தில் இந்த மாதிரியான முறை புதிது. இதுவரை, இப்படி கையாளப்படவில்லை.

ருஷ்யா இனியும் உக்ரமாய் மாபெரும் யுத்தத்தில் திருப்பித்தாக்குதல் ஆரம்பிக்கலாம். ருஷ்ய சைனியம் பூராவும் யுத்த ஸன்னத்தமாக்கப்படவுமில்லை; ஜெர்மானியர்கள் யுத்தம் தொடுத்த சமயத்தில், தகுதியான இடங்களில் நிறுத்திவைக்கப்படவுமில்லை. சந்தேகமில்லை! புது யுத்தப்படைகள் குழுமிக்கொண்டிருக்கின்றன. ஆனால் ஜெர்மன் யுத்த யந்திரம் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டால், அதை நிறுத்துவது எத்தனை சிரமசாத்தியமான காரியம் என்பதை, ஜெர்மானியர்கள் இத்தனை சுலபமாகச் செய்த செய்கைகளை கவனித்துப்பார்த்தால் சொல்லாமலே தெரிந்துகொள்ளக்கூடும். இந்த சங்கதியை உறுதிப்படுத்துவது தேவையில்லை.

---

## கதம்பம்.

1. "நாஸி முறையென்பது தன் இஷ்டப்படி நினைப்பதற்கும் தன் இஷ்டப்படி பேசுவதற்கும் உரிமையுள்ளதல்ல. பிறர் சொல்லுகிறபடி செய்வதும் பிறர் அபிப்பிராயப்படி நினைப்பதும் தான் அதின் அர்த்தம்."

(ரெவினியூ போர்டு மெம்பர் மிஸ்டர் E. M. காலி—ஜுலை 21).

2. "ஹிட்லர் நம்முடைய ஸ்வதந்திரத்தை எதிர்க்கிறான். அவன் நம்மை அடிக்கும் வரையில் நாம் மூலையில் பதுங்கியிருக்கக்கூடாது. தைரியமாய் முன்னேறி ஹிட்லரைத் தொலைக்கவும் அவனை மதிமயங்கும்படி செய்யவும் நாம் முயல வேண்டும். நாம் அடிப்பதைக் கணக்கு எடுக்கும்படியாக அவனைச்செய்து விட வேண்டும்."

(மிஸ்டர் வெண்டல் வில்கி—ஜுலை 24).

3. "எதிர்த்து நிற்பது அபாயகரமானது. நடுநிலையென்பது சாவை விளைவிக்கும். ஐரோப்பாவில் ஹிட்லருடைய நிஷ்டூரத்தை நாம் எதிர்க்கிறோம். பஸிபிக்கில் இதன் மொழி பெயர்ப்பை அனுஷ்டிக்கும் ஜப்பானை நாம் எதிர்க்க வேண்டும். இவ்விருவர்களும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறார்கள். ஆகினும் இவ்விருவர்களும், ஜன சமூகத்தின் சந்தோஷத்தையும், வாழ்நாளையும், சுயேச்சையையும் ஒழிக்க கோரமான சதியாலோசனை செய்து வருகிறார்கள்."

(நியூ யார்க் டைம்ஸ்—ஜுலை 26).



4. "பெர்லினைச்சேர்ந்த பைத்தியக்காரனுடைய த்ரவமற்ற அதிகாரத்தை ஒழிக்கும் தீர்மானத்தில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டும் மிஸ்டர் சர்ச்சிலும் ஒரே மனதுடனிருக்கிறார்கள்."

(பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் விசேஷ தூதரான மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் லண்டன்—ஜுலை 27).

5. "எதிர்ப்பு இல்லாமல் நாம் அவர்களை அடிப்பது எதிர்பார்க்க முடியாது. வாரங்கள் செல்லச் செல்ல நாம் இன்னும் வலுவாக அடிக்க உத்தேசித்திருக்கிறோம்."

(மிஸ்டர் சர்ச்சில்—ஜுலை 14).

6. "ஜனங்களை அக்கிரமமாய் அழிக்கக்கூடிய ஆகுதியை ஹிட்லர் ஏற்றுமதி செய்து வருகிறான். ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த இழிவான ஏற்றுமதிச் சரக்கை, இங்கிலாந்தும், சோவியத் நாடுகளும், ஐரோப்பாவின் ஜனங்களும், அழித்துவிடப் போகிறார்கள். பிறகு தங்களுடைய எதிர்கால முடிவை அவர்களே ஏற்பாடு செய்து கொள்ளுவார்கள். ஹிட்லருக்கு முடிவு ஏற்பட வேண்டியதின் அர்த்தம் அதுதான். வேறல்ல."

(மாஸ்கோ ஒலிபரப்பு—ஜுலை 22).

7. "சமாதானம் வேண்டுமென்றால் இடைவிடாது ஜாக்கிரதையாகயிருக்க வேண்டும்."

(மிஸ்டர் ஆண்டனி ஈடன், பிரிடிஷ் அன்னிய நாட்டுக் காரியதரிசி—ஜுலை 29).

8. "நாஸி தத்வத்தை எதிர்க்கும் ஜன சமூகத்தின் நான்கில் மூன்று பாகத்தின் ஒற்றுமையானது வலுவாகவும் பிரயோஜனப்படக்கூடிய முறையில் வேலை செய்யவும் வேண்டுமானால் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள எல்லோரும், உயர்வானவும், ஏராளமாகவும், நீடித்ததுமான யுத்த சகாய முயற்சிகள் செய்ய வேண்டும். நாம் கஷ்டத்துக்குள்ளாவோம், நமக்குத் தடங்கல் ஏற்படக்கூடும். ஆகிலும் நாம் அழிபட மாட்டோம்."

(மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில்—ஜுலை 29).

---

## ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

### A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஜோஸ்யம்.

'பொது மக்களுக்கு ஞாபக சக்தி குறைவு. ஆகவே அவர்களை எளிதில் ஏய்த்து விடலாம். பிரிடனைப்போல ஜெர்மனி கேவலமாய், ஜோஸ்யம் சொல்லாது. நடப்பைத்தான் சொல்லும்' என்று ஜெர்மனி ஜுலை 14-ல் ஒலிபரப்பி

அதிலிருந்து ருஷ்ய யுத்தத்தைப்பற்றி வெளிவரும் பிரிடிஷ் அறிக்கைகளை பொய்யாக்க ஜெர்மனி பார்க்கிறது.

'பொது மக்களுக்கு அறிவு மட்டு: கிரகிக்கும் சக்தி குறைவு: மறதி அதிகம்,' என்று மைன் காம்பில் ஹிட்லர் எழுதி, அதன்படியே நாஸி பிரசாரம் இப்பொழுது நடந்து வருகிறது.

இதையொத்து, '1940-மார்ச்சில், அடுத்த நாலுமாதங்களுக்குள் பிரிடனை வென்று ஜெர்மானியர் வேடிக்கையாய் அதைச்சுற்றிப் பார்க்க ஏற்பாடுகள் செய்யப்படுமென்று டாக்டர் கோயபல்ஸ் ஜோஸ்யம் சொன்னார். பலிக்கவில்லை. 1940 செப்டம்பரில் பிரிடனைப் பிடித்துவிடப்போவதாக ஜெர்மன் ரேடியோ தப்படித்தது; நடப்பு வருஷம் முடிவதற்குள் யுத்தத்தை முடிக்கப்போவதாக ஸ்பெயினைச்சேர்ந்த நிருபர்களிடம் இந்த வருஷம் மார்ச்சில் மறுபடியும் கோயபல்ஸ் வருங்காலமுரைத்தார். ஒன்றையும் காணோம்.

## இருநாள் ஜெர்மன் ஜோஸ்யம்.

### மூன்று வாரமென்பது மூன்று யுகமாயிருக்கிறது.

ஹிட்லர் ருஷ்யாவைப் படையெடுக்கத் தீர்மானித்தவுடன் அவருடைய சேனாதிபதிகள் மின்னல் படையெடுப்பெடுத்து மூன்றே வாரத்தில் ருஷ்யாவின் தலைநகரைப்பிடித்து ஜெர்மன் கொடியை அதன்மேல் நாட்டிவிடலாமென்றார்கள். மாஸ்கோ, ஜெர்மன் எல்லைக்கப்பால் 525-மைல் தூரத்திலிருக்கிறது. முதல் வாரத்தில் 200 மைல் முன் சென்றார்கள்: அடுத்த 100 மைல் செல்ல மூன்று வாரங்கள் பிடித்தன. ஆகவே நாலு வார யுத்தத்தின் முடிவாக மாஸ்கோவைச் சேர இன்னும் 225-மைல் முன்னேறவேண்டும். ஆகவே 100-க்கு 80-பங்கு படையெடுப்பின் வேகம் குறைந்துவிட்டது.

## மேற்குப் போர் முனை.

ஜெர்மனியின் மேற்குப்பாகங்களிலுள்ள தரை மார்க்கங்களையும், கடல் பாதைகளையும், அவ்வழியே ஜெர்மனி தன் சைனியங்களை ருஷ்யாவுக்குக் கொண்டுபோகாதபடி தடுத்து பிரிடிஷ் விமானங்கள் அவைகளை அழிக்கின்றன. மேலும், பகற்காலங்களில் அநேக ஜெர்மன் ஸ்தலங்களை பிரிடிஷ் விமானங்கள் சேதிக்கின்றன. ருஷ்யாவுக்கனுப்பப்பட்ட ஜெர்மன் விமானங்கள் இவைகளை எதிர்த்து, ஜெர்மனியைப் பாதுகாக்கத் திரும்பிவிட்டன. இவ்விதமாயெல்லாம் பிரிடன் நேராகவும், மற்றபடிக்கும் ருஷ்யாவுக்குதவி புரிவதைக்குறைத்துப்பேசி ஒவ்வொரு நாளும் மேற்குப் போர்முனையில் நடக்கும் விமானச் சண்டையை ஒன்றுமில்லையென்றும், ஏதோ பிரிடிஷ்-கால்வாயில் சில பிரிடிஷ் விமானங்கள் வரப்பார்த்து, ஆனால் விரட்டப்பட்டதாயும் வர்ணிக்கப்படுகிறது. பக்கத்தில் இதற்கு திருஷ்டாந்தமாக ஜெர்மனியின் ஒலிபரப்பும், அன்று பிரிடிஷ் அறிக்கைப்படி உண்மை நடப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது.



| ஜெர்மன் ஒலிபரப்பு. | பிரிடிஷ் விமான இலாகா அறிக்கையிலிருந்து எடுத்த குறிப்புகள். |
|---|---|
| ஜுலை 14. | |
| ஏதோ சில பிரிடிஷ் விமானங்கள் நேற்றிரவு ஜெர்மனியின் வடமேற்கில் தாக்கின. நமது இரவு குண்டு விமானங்கள் ஒரு பிரிடிஷ் குண்டு விமானத்தைச் சுட்டுத்தள்ளின. | ப்ரெமனும், வெகஸாக்கும் பலமாய்த் தாக்கப்பட்டன. ஆம்ஸ்டர்டாம், ஆஸ்டெண்ட் கப்பல்கட்டும் துறைமுகங்கள்; ராட்டர்டாம் எண்ணெய்த் தொட்டிகள்: (நஷ்டம் ஒரு பாம்பர் பிரிடனுக்கு; ஒரு பைடர் ஜெர்மனிக்கு). |
| இன்று காலை, துணைபைடர்களோடு பிரிடிஷ் குண்டுவிமானங்கள் கால்வாய்க் கடுத்த கரையைத் தாக்கப் பார்த்தன. ஜெர்மன் சேஸர்கள் இவைகளை விரட்டி 9-விமானங்களைச் சுட்டுத்தள்ளின. | ஹேஸ்பிரக் (கலேயிலிருந்து 40 மைல் உள்ளே) ரயில்வே கூடங்கள்; ஷெர்பர்கிலும், லாஹாவரிலும் கப்பல்கள்; பிரிஸியன் தீவுகளுக்கப்பால் துணைகொண்ட வியாபாரக் கப்பல்கள்—5-மொத்த நிறை 22,200 டன்கள்—எல்லாம் எதிர்க்கப்பட்டன.<br>6-பிரிடிஷ்—8 ஜெர்மன் விமானங்கள் நஷ்டம். |
| ஜுலை 15. | |
| சாளஸ் கடற்கரையை எதிர்க்க முயற்சி செய்த பிரிடிஷ் விமானங்களில் 12 நமது பைடர்களாலும், சில பீரங்கிகளாலும், மற்றொன்று கப்பல் பீரங்கியாலும் சுட்டுத்தள்ளப்பட்டன. | பகலில் நடவடிக்கை ஒன்றுமில்லை. |
| நேற்றிரவு ஹனோவர் முதலிய வடமேற்குக் கரையோரங்களில் வெடிகளையும் கொள்ளிகளையும் பிரிடிஷ் விமானங்கள் எறிந்தன. நமது இரவு பைடர்களும், சில பீரங்கிகளும் அவைகளில் 7 விமானங்களைச் சுட்டுத் தள்ளின. | ப்ரெமன், ஹனோவர், ராட்டர்டாம் பலமாய் எதிர்க்கப்பட்டன.<br>5 பிரிடிஷ் வெடிவிமானங்கள் நஷ்டம். |
| ஜுலை 16. | |
| நேற்றிரவு சில பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியின் மேற்குப் பாகத்தில் வெடிகளையும் கொள்ளிகளையும் போட்டன. அவைகளில் மூன்று வெடி விமானங்கள் ஜெர்மன் இரவு பைடர்களால் சுட்டுத் தள்ளப்பட்டன. | டேயிஸ்பர்க்-ரூராட் பலமாய்த் தாக்கப்பட்டது. ரூரிலுள்ள தொழிற்சாலைகள் தாக்கப்பட்டன.<br>3 பிரிடிஷ் வெடி விமானங்கள், ஒரு ஜெர்மன் பைடர் விமானம் நஷ்டம். |

| ஜெர்மன் ஒலிபரப்பு. | பிரிடிஷ் விமான இலாகா அறிக்கையிலிருந்து எடுத்த குறிப்புகள். |
|---|---|
| ஜூலை 17. | |
| நேற்று டச்சுக்கடற்கரையை பகலில் பிரிடிஷ் விமானங்கள் தாக்க முயற்சித்தன. நம்முடைய காவல் கப்பல்கள் 6 வெடி விமானங்களையும், சில பீரங்கிகள் மூன்றையும் சுட்டுத்தள்ளின. | ராட்டர்டாமில் கிட்டங்கிகள், கப்பல் கட்டும் துறைகள், கப்பல்கள் எதிர்க்கப்பட்டன. 90—100 ஆயிரம் டன் நிறையுள்ள 17 கப்பல்கள் சேதம்; 10-15 ஆயிரம் டன்னுள்ள மற்ற 5 கப்பல்கள் பழுதாயின. இரண்டு கிட்டங்கிகளும், ஒரு தொழிற்சாலையும் நெருப்புப் பிடித்துக்கொண்டன. 5 பிரிடிஷ் வெடி விமானங்கள் நஷ்டம். |
| நேற்றிரவு வடமேற்கு ஜெர்மனியில் சில வெடிகளும் கொள்ளிகளும் வீசப்பட்டன. சேதம் வெகு ஸ்வல்பம். நமது இரவு பைடர்களும் சில பீரங்கிகளும் 3 விமானங்களைச் சுட்டுத்தள்ளின. | கொலோன் பலமாய் எதிர்க்கப்பட்டது; ஹான்லாஸ்டில் தொழிற்சாலைகள், ஹெலிஸ்ட் காலேஸில் கப்பல்கள் எதிர்க்கப்பட்டன. நஷ்டம் ஒரு பிரிடிஷ் வெடி விமானம். |
| ஜூலை 18. | |
| சானல் அக்கரையை பிரிடிஷ் விமானங்கள் நேற்று எதிர்க்கப்பார்த்த போது நமது பைடர்களும் சில பீரங்கிகளும் 10 விமானங்களைச் சுட்டுத்தள்ளின. ஜெர்மன் கடல்-வெடி-பொருக்கும் கப்பல்கள் இரண்டை அழித்தன. நேற்று முதல் இன்று காலை வரை பிரிடனுக்கு 32 விமானங்கள் நஷ்டம். | துணையோடு சென்ற கப்பலொன்று சானலில் எதிர்க்கப்பட்டது. பிரிடிஷ் விமானங்கள் 6; ஜெர்மன் 9 நஷ்டம். |
| ஜூலை 19. | |
| நேற்று சானலை எதிர்க்கப்பார்த்த பிரிடிஷ் விமானங்களில் ஜெர்மன் பைடர்களால் 5-ம், காவல் கப்பல்களால் 3-ம், கப்பல் பீரங்கிகளால் 2-ம், சுட்டுத்தள்ளப்பட்டன. | ஸப்ளை சாமான்கள் ஏற்றிச்சென்ற கப்பல்—6,000டன் டன்கர்க்குக்கப்பால் எதிர்க்கப்பட்டது. 3 பிரிடிஷ் விமானங்களும், ஒரு ஜெர்மன் விமானமும் நஷ்டம். |
| **ஜெர்மன் கணக்குப்படி** | **உண்மையாக.** |
| பிரிடன்—67; ஜெர்மனிக்கு நஷ்டமில்லை. | பிரிடனுக்கு 30 விமானங்கள், ஜெர்மனிக்கு 20 விமானங்கள் நஷ்டம். |



ஜெர்மன் நாசகாரிகளும், சண்டைக் கப்பல்களும், வெடி விமானங்களும், ஒன்றுசேர்ந்துகொண்டு 10-நாள் இரவுபகலாய் எவ்வளவு பிரிடிஷ் கப்பல்களைச் சேதம் செய்தனவோ அதற்குச் சரியாக ஒரே ஒரு பகலில் பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மன் கப்பல்களுக்கு நாசத்தை ஜூலை 17-ல் உண்டாக்கியிருக்கின்றன. இதை எல்லாம் மறைத்து ஏதோ அங்குவரப் பார்த்ததாக மட்டும் சொல்லி ஜெர்மனி நடப்பை மறைக்கிறது.

ஆனால் உள்நாட்டு ஜெர்மானியருக்குச் சொல்லும்போது சற்று உண்மையைச் சொல்லத்தான்வேண்டியிருக்கிறது. 'இந்த மாதிரியான எதிர்ப்புக்களை முழுவதும் தடுக்கமுடியவில்லை; நம்மால் முடிந்தவரையில் எதிரி விமானங்களை பழுதாக்குகிறோம். இருந்தபோதிலும் நமக்கு விபத்தை உண்டாக்குகின்றன' வென்று ஜூலை 6-லும், 'போர்முனையில் பீரங்கிகளைத் தடுக்க முடியாததுபோல் ஆகாயத்தில் இந்த விமான எதிர்ப்புகளையும் தடுக்கமுடியாதென்றும்' ஜூலை 9-லும் ஜெர்மனி ஒலிபரப்பிற்று.

## ஹிட்லர் பேசுகிறார்.

பிரிடனுக்கு உண்டாகியிருக்கும் கப்பல் நஷ்டத்தைப்பற்றி பிரிடனில் கலவரம் உண்டாகியிருக்கிறது என்று பெர்லினிலிருந்து ஜூலைமீ 16உ ஒரு ரேடியோ விமர்சகர் வெளியிட்டார். வரவர பிரிடன் அமெரிக்க உதவியை அதிகம் நாடவேண்டியிருக்கிறது என்றும் அவர் வெளியிட்டார்.

இம்மாதிரி பிரிடன் யுத்த சாமான்களுக்கு அமெரிக்காவை வரவர அதிகமாகக் கேட்கவேண்டியிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம்தான். அதை நிறைவேற்றி சாமான்களைக் கொண்டுவந்து ஒப்புவிப்பதாயும் அமெரிக்கா வாக்களித்திருக்கிறது.

ஜெர்மன் ஒலிபரப்பாளர் போன வருஷம் ஹிட்லர் செய்த பிரசங்கத்திலிருந்து சிலவற்றை எடுத்துக் கூறினார். ஹிட்லர் கூறியதாவது "ஒரு நாள் சண்டைபடும் இரு கக்ஷிகளில் ஒன்று சண்டை செய்யமுடியாமல் கைவிரிக்க நேரிடும். ஆனால் அப்படிச் செய்யப்போவது நாஷனல் ஸோஷலிஸ்ட் ஜெர்மனி (National Socialist Germany)அல்ல."

இதைப்பற்றி பல சமயங்களில் ஜெர்மானியர்கள் சொன்னவைகளில் சிலவற்றைக் கீழே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

1. **கப்பல் நஷ்டம்.**—(ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி, 1940) "இன்னும் இரண்டே மாதங்களில் பிரிடிஷ் கப்பல்கள் பூராவும் மூழ்கடிக்கப்பட்டோ, நாசமாக்கப்பட்டோ போய்விடும்."
2. **சாப்பாடில்லாமல் பட்டினி.**—(ஜூலை மாதம் 19-ம் தேதி, 1940) "பிரிடனில் சேமித்து வைத்திருக்கும் சாப்பாடு இன்னும் இரண்டு வாரங்களில் தீர்ந்து போய்விடும்."
3. **படுதோல்வி.**—(ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி 1940) "பிரிடனின் யுத்த காரியங்களெல்லாம் சீர்குலைந்து போய் அடுத்து வரும் மாரிகாலத்தில் யுத்தத்தில் படுதோல்வி அடையும்."

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### நாஸிகளுடைய துஷ்பிரசாரத்தால் ஜப்பானின் குட்டு வெளியாயிற்று.

ஜூலை மாதம் 15-ம் தேதி ஹிந்துஸ்தானி பாஷையில் "ஜெர்மன் யுத்த அறிக்கைகள் மாசற்ற உண்மை" என்னும் விஷயத்தைப்பற்றி ஜெர்மன் ரேடியோ விமர்சகர் பேசுகையில் பின்வருமாறு சொன்னார். "யுத்தம் நடக்குமிடங்களில் படங்கள் எடுத்து அதை ஆதாரமாகக்கொண்டு ஜெர்மன் யுத்த அறிக்கைகளை வெளியிடுகிறோம். ஆகையால் அவைகள் கடவுளின் வார்த்தைகளைப்போல் அவ்வளவு உண்மையானது. வார்த்தைகள் ஒருவேளை பொய்யாகப் போனாலும் போகும். படங்கள் ஒரு நாளும் பொய்யாகவே இருக்க முடியாது."

ஜெர்மானியர்கள் எடுக்கும் படங்களின் உண்மை வெகு சமீபத்தில் வெளியாயிற்று. ஸோவியத் ருஷ்யா பொது ஜனங்களின் மேல் குண்டுகள் வர்ஷிப்பதை நிதர்சனமாகக் காண்பிப்பதுபோல் ஒருபடம் எடுத்து அதற்கு "பயங்கரம்" என்று பெயர் கொடுத்து அதை பின்லாந்தில் காண்பித்தார்கள். சைனாவில் கான்ஸூ (Kansu) என்று எடுத்ததைப் பார்த்தவர்களுக்கு இப்படத்தைப் பார்த்ததும் அடையாளம் தெரியாமலிருக்க முடியாது. இப்படம் ஜப்பானியர்கள் கான்ஸூ (Kansu) நகரத்தின் மேல் தங்களுடைய கடற்படையைச் சேர்ந்த விமானங்களால் தாக்கினபொழுது எடுத்த படம். அவ்விடத்தைப் பார்த்தவர்களுக்கு இதில் சந்தேகமே இருக்க முடியாது.

### அந்நிய நாட்டுத் தொழிலாளிகளும், நாஜிகள் அவர்களை நடத்தும் விதமும்.

ருஷ்யத் தொழிலாளிகளை ருஷ்யாவின் கொடுங்கோலிலிருந்து தாங்கள் விடுவிக்க வந்திருப்பதாக ஜூலை மாதம் 17-ம் தேதி ஹிந்துஸ்தானி, பர்ஷியன், அராபிக், பாஷைகளில் பெர்லின் ரேடியோ ஒலிபரப்பிற்று. ஆனால் ருஷ்யத் தொழிலாளிகளுக்கு நாஸிகளிடத்தில் வேலை பார்ப்பதில் எவ்வளவு தூரம் சுயேச்சை உண்டென்பது தெரியும். நாஸிகளுடைய மனப்பான்மை "ஒஸ்ட் டூட்ஸ்சர் பியோபாக்டர் (Ostdeutscher Beobachter)" என்னும் ஜெர்மன் பத்திரிகையிலிருந்து வெளியாகிறது. அப்பத்திரிகை ஜூன் மாதம் 21-ம் தேதி பின்வருமாறு எழுதிற்று. "ஜெர்மானியர்களுக்கு இருக்கும் சௌகர்யங்களையெல்லாம் போலந்தியர்களுக்கும் செய்துதர முடியாது. அவ்வாறு செய்தால் ஜெர்மானியர்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பிவிடும். போலந்தியர்கள் ஜெர்மானியர்கள் செய்யும் அதே வேலையைச் செய்தாலும், அபாயங்கள் ஏற்பட்டால் அதற்காக அவர்களுக்குச் சில சௌகர்யங்கள் செய்து கொடுப்பது, நோயுற்றுப் படுத்தாலும் சம்பளத்தில் ஒரு பாகம் கொடுப்பது என்பதுபோன்ற சில சௌகர்யங்கள் போலந்தியர்களுக்குச் செய்து கொடுக்கமுடியாது."



### ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசத்தில் விரோதி விமானப் படையெடுப்பு.

நாஸிகள் ஸூயஸ் (Suez) கால்வாய்ப் பிரதேசத்தின்மேல் நடத்திய விமானப் படையெடுப்பைப்பற்றி ஜூலை மாதம் 13-ம் தேதி ஹிந்துஸ்தானி பாஷையில் பெர்லின் ரேடியோ மிகைப்படுத்திக் கூறிற்று. "நாங்கள் குண்டுகளை வர்ஷித்துக் கொண்டேயிருந்தோம்."

அதைப்பற்றி வெளியான எகிப்திய ஸர்க்காரின் அறிக்கையாலோ "படையெடுப்பால் 6 பேர்கள் மாண்டனர், 14 பேருக்குக் காயம். அதைத்தவிர வேறு சேதமேயில்லை" என்று கண்டிருந்தது. இம்மாதிரி நாஸிகள் புளுகுவதைப்பற்றி எகிப்திய பத்திரிகையான "ரெவ்யூ ஆல் இட்னின் (Revue All Itnein)" ஒரு பரிகாசப் படம் மூலம் எகிப்தியர்களின் மனோபாவத்தை வெளியிட்டிருந்தது. அப்படத்தின்படி அதிலிருக்கும் குறிபார்த்து வெடிகுண்டு எறிபவர் விமானம் செலுத்துபவரை நோக்கி பின்வருமாறு உரைத்தாராம் "அய்யையோ, நாம் பெரிய பிசகல்லவோ செய்துவிட்டோம். ராணுவ முக்கியத்வமுள்ள ஒட்டகத்தில் குண்டை எறிந்துவிட்டோமே."

### ஹிட்லரும் இஸ்லாம் மதமும்.

க்ரோயேஷியா (Croatia) விலிருக்கும் முஸ்லீம்கள், ஜெர்மானியர்கள் இந்தியாவை போல்ஷிவிஸத்தில் (ருஷ்யாவின் கொள்கையில்) இருந்து காப்பாற்றச் செய்திருக்கும் அரும்பெரும் சேவைக்காக நன்றி செலுத்துகிறார்கள் என்று ஜூலை மாதம் 18-ம் தேதி நாஸி ஒலிபரப்பு கூறிற்று. முஸ்லீம்களின் நன்மதிப்பைப் பெற நாஸிகள் எவ்வளவோ முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதற்கு அருகர்களா. ஒரு நாளும் இல்லை. ஐரோப்பாவில் நாஸிகளின் கொடுங்கோலின் கீழ் முஸ்லீம்கள் எவ்வளவு தூரம் துன்புறுகிறார்கள் என்று எகிப்திய பத்திரிகையான வாப்ட் எல் மிஸ்ரி (Wafd El Misri)யில் மகமத் எல் ஹாஷிமி (Mahamoud-el-Hashimi) என்பவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார். "ஹிட்லரின் ராக்ஷஸர்கள் யூகோஸ்லாவியா (Yugoslavia)வை படையெடுத்தபொழுது முஸ்லீம் பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும்தான் சேதம் அதிகம். ஸராஜீவா (Sarajevo) என்னும் பட்டணத்திலிருக்கும் வெகு அழகான மசூதிகளெல்லாம் தரை மட்டமாக்கப்பட்டன. அந்தப் பட்டணம் இப்பொழுது நிசப்தமாகவும், துக்ககரமாகவும் சுடுகாடுபோலிருக்கிறது". மற்றொரு முஸ்லீம் நாடான அல்பேனியா (Albania) வைப்பற்றியும் அவர் பின்வருமாறு எழுதுகிறார். "அல்பேனியா (Albania) விலிருக்கும் முஸ்லீம்களின் கதி நிர்கதி. அவர்கள் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான். மசூதிகளும் புண்ணிய ஸ்தலங்களும் தரைமட்டமாக்கப்பட்டுக்கிடக்கின்றன. ஊர்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. சிறிய கிராமங்களெல்லாம் போர் அரங்கங்களாக மாறிவிட்டன."

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 55.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு ... | 2, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 3, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவப்பூர் ... | மாலை | 5.30 |
| | | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| | 4, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | அன்னவாசல் ... | மாலை | 6.00 |
| | | கிழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 5, செவ்வாய்க்கிழமை. | பெருமாநாடு ... | ,, | 6.00 |
| | | புல்வயல் ... | ,, | 6.30 |
| | 6, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | குழிபிறை ... | மாலை | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |
| | 7, வியாழக்கிழமை. | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 8, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 56.

| | | | |
|---|---|---|---|
| 9, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 10, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | மாலை | 5.30 |
| | கீரப்பழனி ... | ,, | 6.00 |
| | ஆவூர் ... | ,, | 6.30 |
| 11, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | காரையூர் ... | மாலை | 6.00 |
| | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 12, செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 13, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... (பொன்னமராவதி) | காலை | 10.00 |
| | புதுப்பட்டி | மாலை | 6.00 |
| | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |
| 11, வியாழக்கிழமை ... | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 15, வெள்ளிக்கிழமை... | செம்பட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | மழையூர் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3000—2-8-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஆகஸ்டு ௴ 9௳ [ந. 56.

பிரஸங்கம் 56.

## ருஷ்யாவில் சமீபத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்.*

### ருஷ்ய-ஜெர்மன் யுத்தத்தின் தாத்பரியம்.

தற்போது ஐரோப்பிய ருஷ்யாவின் எல்லைப்புறத்தில் நடப்பது ஒரு தனிச் சண்டையில்லை; பல சண்டைகளின் கலவம். இதைப்பற்றி உண்மையான சம்பவங்களைத் தெரிந்துகொள்ளும்பொழுது பொதுவாக தத்வ பரிசீலனை செய்வது பொருத்தமில்லாததாகும்.

ருஷ்யாவையும், காஸ்பேயின் மலை வடச்சாரலையும், நீஸ்டர், புருகு, நதி தீரங்களில் அமைந்துள்ள பெஸரேபியாவையும், நேரே பார்க்காமல், இவை எவ்வகைப்பட்டவை என்று மனோபாவத்திற்குக் கொண்டுவருவது மிகவும் சிரமம்.

படத்தில் மாத்திரம் முக்கியமானவைபோல் காணப்பட்டாலும், உண்மையில் இதுவரை பிடிபட்டு, திரும்பப்பிடிங்கின இடங்களெல்லாம் குக்கிராமங்களே. சுபிக்ஷமில்லாத வெறும் பொட்டல்வெளிகள். நெருக்கமாயும் இல்லை. மேலும் ராணுவப் பிரதானம் இல்லாததாலும் இவைகளைப் பிடிப்பதால் லாபமொன்றும் இல்லை.

இச்சமயம் நாஸி ஜெர்மனிக்கும் ஸோவியத் ருஷ்யாவிற்கும் ஏற்பட்ட சண்டை, படைகலக்கும் யுத்தம் மாத்திரம் அல்ல. அதில் தேசிய, தத்வ, தர்மங்களின் அம்சங்கள் அடங்கியிருக்கின்றன.

* பி. பி. ஸியில் மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் செய்த ஒலிபரப்பை அநுசரித்தது.

## ஐரோப்பாவில் இனி மிஞ்சுவது.

போலந்தின்கதியும், ஐரோப்பாவின் எதிர்காலமும், போலந்திற்கு இருபக்கங்களிலும் உள்ள ருஷ்யா, ஜெர்மனி இவைகளின் நடத்தையைப் பொருத்துத்தான் இருக்கிறது. ருஷ்யாவோ அகண்டதேசம், ஜெர்மனியோ அநேக ஸமஸ்தானங்கள் சேர்ந்து அதிக பலமுள்ளது.

## போல்ஷிவிஸம்.

15-வருஷங்களுக்குமுன், ஜெர்மனி, ருஷ்யா இரண்டும் நாகரீகத்திற்குத் தீங்குவிளைவிக்கும் நாடுகள் என்று கருதப்பட்டன; ருஷ்யாவின் சரிசமத்துவக் கொள்கை விபத்தை விளைவிக்கும், ஹிட்லரின்முறை கொடுங்கோன்மை.

## ருஷ்யாவிற்கு விரோதமாகப் பிரசாரம்.

ஆரம்பகாலங்களில் ருஷ்யாவின் உதவியால்தான் ஜெர்மனி தன்னைப் பலப்படுத்திக்கொண்டது. அப்படியிருந்தும், போல்ஷிவிஸத்தையும், மார்க்ஸ்—தத்துவத்தையும், யூதர்களையும் இஷ்டப்படி நிந்திக்க ஆரம்பித்தான். அக்காலத்தில், எல்லா ஜெர்மன் நாடுகளும் பிணைக்கப்படும் என்ற ஹிட்லரின் பிரசாரம், பாதாள வஞ்சகமாய் ஏமாற்றப்பட்ட ஜெர்மானியர் மனதைக் கலைத்ததே தவிர இதர தேசங்கள் அதைக் கண்டு பயப்படவில்லை.

வரவர இம்மாதிரியான தப்பு எண்ணம் தலைகீழாக மாறிவிட்டது. சண்டை செய்யும் நாடுகளுக்குள்ளேயே நாம் நினைப்பதைவிட விரைவாகவே மாறி வருகிறது.

எதிர்பார்த்தபடி, ருஷ்யாவை எதிர்க்கத் தீர்மானித்தபொழுது, ஹிட்லரும் கோயபல்ஸும் ஜனசமத்துவக் கட்சிக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார்கள். அவர்களுடன் ஒத்துப்பாடுபவர்களான இதாலியரும், விஷியும், ஏமாற்றமடைந்த லிண்ட்பர்க் முதலியோரும் இவர்களின் அறுப்பல்லவியைத் தொடுத்துப் பாடி முடித்தார்கள்.

ஆனால் இதே ஜெர்மனி 2 வருஷங்களுக்குமுன் ருஷ்யாவைப்புகழ்ந்து பேசியது நமக்கு ஞாபகம் இருக்கிறது. இவ்வளவு சீக்கிரத்தில் இந்த விபரீதமான மாறுதல் ஏன் ஏற்பட்டது? இப்பொழுதுதான் ஏன் ஏற்படவேண்டும்?

## கார்ல் மார்க்ஸ்-கொள்கை விடப்பட்டது.

தற்போதைய ருஷ்யா 10, 15 வருஷங்களுக்கு முன் இருந்ததைப்போலல்ல. அக்காலங்களில் சுவர்களில், மதம் ஜனங்களை ஏமாற்றுகிறது என்ற மார்க்ஸின் உபதேசம் எழுதப்பட்டிருந்தது. இந்த நாஸ்திகவாதப் பிரசாரம் இன்னும் நடந்து கொண்டிருக்கலாம்.

ஆனால் உள் அந்தரங்கத்தில் இரண்டு மாறுதல்கள் ருஷ்யாவில் நடந்திருக்கின்றன; ஒன்று தேசீய உணர்ச்சி. இவ்வுணர்ச்சி சிறு பள்ளிக்கூடங்களில் புராதன சரித்திரம் போதிக்கும்பொழுது சொல்லிக்கொடுக்கப்படுகிறது. தேசம் பூராவும் இது விஷயமாக சர்ச்சைசெய்யத் தருணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.



மற்றொன்று மதசம்பந்தமானது. மாஸ்கோவில் 12,000 ஜனங்களுக்குமேல் ஒன்றுசேர்ந்து ருஷ்யாவிற்கு ஜயம், கௌரவ நிலை, ஸ்வதந்திரம் வேண்டுமென்று ஈசுவரனைப் பிரார்த்தித்தார்களாம். மார்க்ஸ் நாஸ்திக வாதத்தையும், மதம் ஜனங்களுக்கு விஷம் என்ற சமத்துவ பிரசாரமும் கேட்ட ஜனங்களே, அவர்களின் சொந்த அபிப்பிராயங்கள் எப்படியானாலும், தேசசேவைக்கு வந்து சேரவேணுமாய் ஸ்டாலின் ஒலிபரப்புமூலம் கேட்டுக்கொண்டார். சண்டையில் ஜயித்த பிறகு பலவாராக நிந்திக்கக்கூடிய நாஸ்திகத்தைக் கைக்கொள்ளலாம் என்றும், புது திட்டத்தை ஸ்தாபிப்பதாகச்சொல்லும் ஹிட்லரின் தற்புகழ்ச்சிபோல் இத்தத்துவங்கள் நிலைக்காதென்றும் ஸ்டாலின் அபிப்பிராயம்.

## ஆகாரம் மட்டில் ஜனங்களுக்குத் திருப்தியளிக்காது.

ருஷ்யாவில் தற்போது நடந்த மாறுதல்கள் சமயத்திற்கு தகுந்தாற்போல் செய்தவையே. ரகசியமாக நடந்தேறின இவை இனி நிலைத்திருக்கும் என்று நம்பலாம். ஆஸ்திக இயக்கத்தை முன்கொண்ட இந்த மாறுதல்கள் கலாசாலைகளில் நெடுநாளாகக் கற்பிக்கப்பட்டு, அரசாங்கத்தாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும்.

இவையெல்லாம் உண்மையானால், ருஷ்யாவோடுமட்டும் நிற்காமல், சரித்திரத்திலிருந்தே லோகாயதிக வித்தையின் கொள்கை அகற்றப்படும். மனிதனின் வாழ்க்கையில் அசித்தான பொருளும், அதன் பொருளாதார நிலையும்தான் முக்கியமானது என்ற எண்ணம் சில இளைஞர்களை கெடுத்துவந்தது. இனி இக்கொள்கை தள்ளப்படும்.

## சுயேச்சையும்—ஜனநாயகமும்.

பொருளாதார விமர்சங்களின் சரித்திரக்காரர் என்ற வகையில் கார்ல் மார்க்ஸ் ஒரு பெரிய முக்கியமானவர்தான். ஆனால் தத்வஞானம் சம்பந்தப்பட்ட மட்டில் அவர் குறுகிய நோக்கமுடையவர், ஒருதரப்பு வாதி.

சரித்திரத்தில் லோகாபிராமமாக அவர் சொல்லும் தத்துவம், பாதி விமர்சனம் இல்லாமலும், விவரிக்கமுடியாமலும் போய்விடுகிறது. ஸ்வதந்திரத்திற்காகத் தற்சமயம் பிரிடனிலும், நாகரீக உலகத்தில் பெரும்பாகம் எங்கிலும் பல்லாயிரக் கணக்கான ஸ்திரீ புருஷர்களும் சண்டை போட்டு மடியத்தயாராக ஏன் இருக்கிறார்கள் என்ற விஷயத்தை அவருடைய தத்துவம் விளக்கவில்லை.

சுயேச்சையை என்னவென்று விவரித்துக் கூறுவது சிரமம். ஆனால் அது பொருளீட்டும் வழியல்ல. அது ஒரு உன்னதமான லக்ஷியம். பலதினுசுகளோடு அது பொருந்தும். ஆனால் அதற்காக, பிராணத்தியாகம் செய்துகொள்ளுபவர்கள் கேவலம் ஜாஸ்தி கூலி அடையவோ, பெரிய வியாபாரம் செய்யவோ, மலிவான மோட்டார் வண்டிகள் வாங்கிக்கொள்ளவோ யுத்தத்தில் இறங்குவதில்லை. மற்ற ஆட்சிகளைக் காட்டிலும் பூர்ணமாகவும், ஸ்திரமாகவும், தனிப்பட்ட நபரின்

ஸ்வதந்திரத்தைப் பாதுகாப்பதே பிரிடிஷாருக்கும் நேசதேசங்களுக்கும் நோக்கமாக இருக்கிறது. அத்தகைய ஸ்வதந்திரம்தான் ஜனநாயக ஆட்சியில் இணைக்கப்பட்டிருக்கிறது.

## ஸ்டாலினும் சுயேச்சையும்.

19-ம் நூற்றாண்டின் லிபரல் கக்ஷியாரின் ராஜீய நோக்கம் போலத்தான், பிரிடிஷாருடையவும் நேசதேசத்தாரினுடையவும் யுத்த நோக்கம் இப்பொழுது விஷயத்தில் ஒத்து இருக்கிறது. பொருளாதார ஏற்பாட்டுடன் மேற்கண்ட யுத்த நோக்கம் சேர்க்கப்பட்டிருப்பதாக லிபரல் கக்ஷியார்கள் சிலர் அன்றும், அதற்குப் பின்பும் குறைகூறினார்கள். அவர்களில் சிலர் அதற்கு விரோதமாகவும் இறங்கினார்கள். மற்றவர்களுக்கு ஸர்வஜனங்களுக்கும் சமமான ஆஸ்தியிருக்கவேண்டுமென்ற இயக்கத்திலோ, ஐக்கியபத்தியத்திலோ ஆஸ்தை ஏற்பட்டிருக்கலாம். பின் சொல்லப்பட்டவர்கள் ருஷ்யாவை, மெக்கா மாதிரி கருதுகிறார்கள். அப்பேற்பட்ட ஒரு தேசத்திலிருந்து ஸ்டாலின் சமீபத்தில் சுயேச்சையைப்பற்றி பிரசாரம் செய்திருப்பது ஸ்வதந்திரத்தின் லக்ஷியத்திற்கு முக்கியமில்லையா?

## ஹிட்லரின் அதிகார ஆசை.

அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸின் உதவியுடன் வெற்றிகரமாக யுத்தம் புரிகிறோம். இந்தியப் பாதுகாப்பையும் மத்தியக்கிழக்குப் பிராந்தியத்தின் பாதுகாப்பையும் இணைக்க ஏற்பாடுகள் செய்துவருகிறோம். பிரிடிஷ் தீவுகளில் பிரவேசிக்காமல் தடுக்க கிரீட்டில் நடந்ததை முன்னிட்டு வெகு ஜாக்கிரதையாக இருந்து வருகிறோம். அதோடு இப்பொழுது ருஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களைப்பற்றி சிந்திப்பது பொருத்தமாகும்.

இப்படி சிந்தித்துக்கொண்டு விரோதிகளின் நோக்கங்களை நாம் கவனியாமல் இருந்துவிடக்கூடாது. அப்படிச் செய்தால் அது மோசமாகும். ஹிட்லரைத் தூண்டின மனநோக்கங்கள் ஜெர்மானியரை ஒன்று சேர்ப்பதற்கு இருக்கலாம்; அதிக ஆசைப்படலாம்; அல்லது அவன் தன் பலம் தெரியாமல் ஆடலாம். இதனால் அவன் நோக்கத்தைப் பயித்தியக்காரனின் எண்ணமென்று சொல்லலாம். இன்றோ நாளையோ அவன் தூக்கப்படவேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்று சொல்லி நாம் மனத்தேர்ச்சி அடையலாம். இருந்தாலும் ஓர் உணர்வோ அல்லது பிடிவாதமான மூடநம்பிக்கையோ ஏற்பட்டுத்தான் அவன் காரியங்களைச் செய்துவருகிறான். ஆனால் ஹிட்லரின் அந்தரங்க எண்ணம் ஆக்கிரமமே. அது ஒரு மூடபக்தியாயும் ஆவேசமாயும், மதவெறியாயும் இருக்கிறது.

சில வருஷங்களுக்குமுன் ஜெர்மன் ராணுவ பலத்தை அதிகப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டது. லாபம் அடையவேண்டுமென்ற எண்ணமில்லாமல் ஆதிக்கத்தை அடையவேண்டுமென்ற எண்ணத்துடன் தயாரித்து வரப்பட்டதாக நுண்ணறிவுள்ள ஓர் ஜெர்மானியர் எழுதியுள்ளார். ஹிட்லருக்கு அதிகாரத்தின் ஆசைதான் முக்கிய நோக்கமென்றும், ஆதிக்கத்தின் மூலம் வேறு பலன் ஹிட்லர் எதிர்பார்ப்பதில்லை என்றும் இவர் சொல்லுகிறார்.



இது பெரும்பாலும் உண்மையாயிருக்கலாம். ஹிட்லரும் அலெக்ஸாண்டர், நெபோலியன் இவர்களைவிட தனக்கு இன்னும் அதிகம் உலகத்தை ஜயிக்கவேண்டுமென்ற அபேக்ஷையை முன்னிட்டு பிரயத்தனப் படுகிறதாகத் தெரிகிறது. அவருக்கு அந்த எண்ணமிருக்கலாம், ஆசை இருக்கலாம், ஆனால் அவர் நடவடிக்கையோ ஹூணர் ஜாதியைச்சேர்ந்த அட்டிலாவைப் போல உலகத்தை அழிக்கிறது.

## அடிமையா, ஸ்வதந்திரமா?

ஆகவே இந்த யுத்தத்தில் கலந்துகொண்டிருப்பவர்களுக்கு இரண்டு வெவ்வேறு நோக்கங்கள் இருக்கின்றன. உலகத்தை அடிமைப்படுத்தவும் ஜனங்களை ஆளுவதற்குமுள்ள பலனையும், சந்தோஷத்தையும், பெருமையையும் அடைவதற்காக ஜெர்மானியர் தரப்பில் ஆதிக்கம் அபேக்ஷிக்கப்படுகிறது. ஆனால் பிரிடிஷ் தரப்பிலும் நேசதேசத்தார் தரப்பிலும் ஆதிக்கம் அபேக்ஷிப்பது எதற்காகவென்றால் மனிதர்களும் தேசத்தார்களும் சுயேச்சையாகவும், அடிமைத்தனமில்லாமல் வாழவும்தான். அவர்கள் தர்மத்திற்குத்தான் கட்டுப்படுவார்கள். அந்த இரண்டு நோக்கங்களுக்குள் மனிதர்களும் அரசாங்கங்களும் எது உசிதம் என்று முடிவுக்குவந்து அதற்காக உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். மனிதர்களின் ஸ்வதந்திரத்திற்காக சண்டையிடுபவர்களின் தரப்பில் ஒருவிதமாக பலம்சேரும்படி ஹிட்லர் ருஷ்யாவை விரோதித்துக்கொண்டது முழுத் தவறு என்பதை பெரிய விஷயமாக நாம் எண்ணவேண்டும்.

## விஷியும், மார்க்ஸின் கொள்கையும்.

1789-ம் வருஷத்தில் பெரிய பிரஞ்சு குழப்பத்தின் இறுதியில் பிரசுரித்திருக்கப்பட்ட மனுஷ்ய ஸ்வதந்திர உரிமைகளை நிராகரித்துவிட்டு அட்டூழியம் செய்யும் சைனியங்களுடன் ஏன் விஷி மனிதர்கள் அதிக ஆவலுடன் சேர்ந்தார்கள் என்பதை நாம் இப்பொழுது செய்த தத்துவ ஆராய்ச்சி விளக்கும்.

மார்க்ஸின் லோகாபிராமமான தத்துவத்தில் அருவெறுப்புக்கொண்டு, விஷி ஜனங்களும் இன்னும் மற்றவர்களும் இந்தமாதிரி சேர்ந்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட அருவெறுப்பு, ஸ்வதந்திரத்தின் தத்துவத்தில் நூதனமாய் ருஷ்யாவுக்கு ஏற்பட்டுள்ள பற்றுதலை அறியாததனால்தான்.

## ஸ்வதந்திரத்திற்காக யுத்தம்.

இந்த ஸ்வதந்திரத்தின் தத்துவத்தை நாமும் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு ஸெர்பிய புராதன பழமொழிப்படி "சுதந்திரத்திற்காக தேவதூதர்கள்போல் சண்டையிடவேண்டும். அவ்வாறு ஜயித்தவுடன் ஸ்வதந்திரத்தில் ரிஷியைப்போல் வாழவேண்டும்".

## ஸ்வதந்திரம் என்றால் என்ன?

சென்ற மஹாயுத்தத்திற்குப் பிறகு ஆங்கில தத்துவ ஞானி ஆப் ஹவுஸ் எழுதியிருப்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்

எழுதியதாவது:—" ராஜீய ஸ்வதந்திரத்தின் நோக்கம் ஒரே மனதாயிருப்பதென்பதில்லை. வித்தியாச அபிப்பிராயங்களில் விரோத புத்தி இல்லாமலும் அவைகளை ஏற்றுக்கொள்ளுவதுமே. இதனால் நமது வாழ்க்கையும் கண்மூடித்தனமாய் ஒரே வழியில் போகாது" பலவித சுகங்களுக்கும் இடங்கொடுக்கும்.

மனுஷ சுபாவத்தில் எல்லோருக்கும் மனோபாவம் ஒன்றாய் இருக்காது அதைக் கோருவதும் சாத்தியமானதல்ல. ஆனால் தானும் பிறரும் அவரவர் அபிப்பிராயத்தைத் தெரிவித்து ஒத்துழைக்க நினைப்பதே ஸ்வதந்திர நோக்கமாகும். இதற்குமேல் இருந்தால் கொடிய ஆட்சியின் ஆரம்பம்; அதற்குக் குறைவாய் இருந்தால் அடிமைத்தனம்.

உலகத்தார் பூராவும் தன்மனதைப்போல் இருக்கும்படி நிர்பந்தம் செய்ய வேண்டுமென்பதே ஹிட்லரின் எண்ணம். ஆனால் ஜனநாயக சட்டத்தின்படி தன்னிச்சையாகச் சேர்ந்தும் பல மனோபாவத்துடனும் ஒன்றுசேர்ந்து வாழ்வது என்பதுதான் நம்முடைய நோக்கம். நாஜி இயக்கம் ஆத்மாவையும் ராஜீயத்தையும் அடிமையாக்கிவிடும். ஆனால் நாம் அறிந்த ஸ்வதந்திரமோ ஆத்மாவையும் ராஜீயத்தையும் விடுதலை செய்யும். இப்பொழுது ஸ்டாலின்கூட ருஷ்ய ஜனங்களை ஸ்வதந்திரத்திற்காகச் சண்டையிடும்படி தூண்டிவருகிறார். அவர்கள் அவ்வாறு செய்வதின்மூலம் அவர்களும் உலகத்தார்களும் ஸ்வதந்திரத்தை அணுகலாம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

31—7—41-லிருந்து 6—8—41-வரை.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

இந்த யுத்தம் துவங்கி ஏழு வாரங்களாகப் போகின்றன. ருஷ்யாவின் மனம் குளிர்ந்துகொண்டும் ஜெர்மனியின் மனம் கசந்துகொண்டும் வருகிறது. 'ஜெர்மானியர் இன்னும் முறியடிக்கப்படாவிட்டாலும் அவர்களுடைய மின்னல் படையெடுப்பு பலிக்காமல் போய்விட்டது, என்று ருஷ்ய ராணுவப் பத்திரிகையான ரெட்-ஸ்டார் எழுதுகிறது. ஜெர்மன் பத்திரிகைகளோ மின்னல் படையெடுப்பின் வைபவத்தைப் பாடுவதை இப்பொழுது நிறுத்திவிட்டன. ஜெர்மனி ருஷ்யாவில் தோற்றால் ஜெர்மனிக்கு ஆபத்தென்று டாக்டர் கோயபல்ஸ் சமீபத்தில் புலம்பியதாகத் தெரிகிறது.

**நொண்டிச்சாக்கு.**—தோல்வியை மறைப்பதற்காக ஜெர்மானியர்கள் சாக்குச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு அடி நிலத்தையும் கடும் போர் புரிந்து பிடிக்க வேண்டியிருக்கிறது; சைனியத்தின் பின்னிற்கும் ருஷ்ய கூட்டங்களைக் காலி செய்து கொண்டுதானே முன்னேறவேண்டும்; துருப்புகள் களைப்பாறவும், யந்திரசாதனங்கள் பழுது பார்க்கவும், புது சைனியங்களைக் கொண்டுவரவும்



காலம் செல்லாதா; பகட்டான வெற்றிகளால் என்ன பயன்; பூமியைப் பிடிப்பதைவிட சத்துரு சம்ஹாரம் முக்கியம்-என்று பலவிதமான சாக்குகள் சொல்லப்படுகின்றன. இவைகளின் அர்த்தம் மின்னல் படையெடுப்பு பலிக்கவில்லையென்பதுதான். ஜெர்மானியர் ருஷ்யாவில் அகப்பட்டுக்கொண்டார்களென்பதுதான். போல்ஷிவிஸத்தால் ஆத்ம நாசமேற்பட்டதால் ருஷ்யர்கள் பிராணன் போக மாட்டேனென்கிறதென்று சொல்லும் சாக்கு எல்லாவற்றைக்காட்டிலும் விபரீதமானதுடன், கேவலமாயுமிருக்கிறது.

**தோல்விக்குக் காரணம்.**—சென்ற வருஷம் பிரான்ஸில் பலித்த மின்னல்-படையெடுப்பு இந்த வருஷம் ருஷ்யாவில் பலிக்காமல் போனதற்கு இரண்டு காரணங்களுண்டு. பிரெஞ்சு நிலவெளி அதற்கு சாதகமாயிருந்தது. ருஷ்ய போக்குவரத்துக்கள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. மேலும் இவ்வித எதிர்ப்புக்கு பிரெஞ்சுக்காரர்கள் தயாராயில்லை; ருஷ்யர்கள் தயாராயிருந்தார்கள். ஜெர்மன் டாங்கிகள் முன்னேறினால் அவைகளின் பின்வந்து ருஷ்ய சைனியங்கள் வளைத்துக் கொள்ளுகின்றன; ருஷ்ய விமானங்கள் முன்னே நின்று எதிர்க்கின்றன. டாங்கிகளும், விமானங்களும் காலிசெய்த பிறகுதான் ஜெர்மன் காலாட்படைக்கு முன்னேறத் தெரியும்: அது இல்லாதபோக, திண்டாடுகின்றன. டாங்கிச் சண்டைக்குப் பதிலாக துப்பாக்கிச் சண்டையைத் துவக்க ஹிட்லர் யோசிப்பதாகத் தெரிகிறது.

**போக்குவரத்துக் கஷ்டங்கள்.**—ஸ்பெயினில் உள்நாட்டுக்கலகம் நடந்ததிலிருந்து அங்கே ரயில்வண்டிகள் குறைந்துவிட்டன. ஆனால் ஸ்பெயின் ருஷ்ய இருப்புப்பாதைகள் ஒரே அகலமானவை. இதற்காக ஏதோசில வண்டிகளை ஸ்பெயினிலிருந்து, ஜெர்மன் ரயிலில் தூக்கிவைத்துக்கொண்டு ஜெர்மானியர் ருஷ்யாவுக்குக் கொண்டுபோகிறார்கள். இதிலிருந்து ஜெர்மானியருக்கிருக்கும் வண்டி சாதனக்குறைவு வெளிப்படுகிறது.

**கலகமும், துரோகமும், பஞ்சமும்.**— ருஷ்யாவில் அடிபட்டுவரும் இந்தச் சமயத்தில், ஹிட்லர் பிடித்த தேசங்களில் கலகமும், துரோகமும், பஞ்சமும் பரவிக்கொண்டிருக்கின்றன. துரோகச் செயல்களுக்காக யூகோஸ்லாவியாவில், பலர்கள் கொலை செய்யப்பட்டு, கலகத்தையடக்க 25,000 பேர்கொண்ட ஜெர்மன் சைனியமொன்று வைக்கப்பட்டிருக்கிறது. ருமேனியாவில் பசியால் கலகம் செய்கிறவர்களை சம-ஜனவாதிகளென்று கொல்லப்படுகிறார்கள். ஆஸ்திரிய சைனியங்கள் பல யுத்தகளத்தில் சேதமாய்விட்டதால், இந்த நாட்டில் மனத்தாங்கலதிகப்பட்டு வருகிறது. மிலானிலும், பிளாரன்ஸிலும், உணவில்லாது கலகம்செய்யும் ஜனங்களையடக்க ஜெர்மன் சிப்பாய்கள் வந்திருக்கிறார்கள். கிரீஸின் கஷ்டத்துக்கெல்லையில்லை. எங்கே பார்த்தாலும் பஞ்சமும் நோயுமாயிருக்கிறது. கடைகளில் உணவு பதார்த்தங்களில்லை; ஜெர்மானியர் கொள்ளையடித்து விடுகிறார்கள்; பெண் மக்கள் பசியால் நொந்து இக்கடைகளுக்குமுன்னால் சோர்ந்து விழுந்து இறக்கிறார்கள்.

**ருஷ்ய வெற்றிகள்.**—'வி' என்று மட்டும் குறிக்கப்பட்ட ஒரு போர்முனையிலும், ஸ்மாலென்ஸ்கிலும் ஜெர்மன் 253-ம், 137-ம் படைகள் முறியடிக்கப்பட்டன. ருஷ்யக் கடல், விமானப்படைகள் சேர்ந்துகொண்டு பல ஜெர்மன் நாசகாரிகளையும், வியாபாரக் கப்பல்களையும் பால்டிக்கில் அமிழ்த்திவிட்டன; பாரென்ட்ஸ் கடலிலும் கடும்போர் நடந்தது.

**பிரிடிஷ் நேர்உதவி.**—கர்க்குனஸ், பெட்ஸாமோவென்ற நார்வே துறைமுகங்களில் நின்ற ஜெர்மன் கப்பல்களை பிரிடிஷ் கப்பல்—விமானங்கள் தாக்கின. இது ருஷ்யாவுக்கு பிரிடன் செய்த நேர் ராணுவ உதவியாகும். பிரிடிஷ் கப்பற்படையும், ருஷ்ய நிலப்படைகளும் இங்கு சேருவதிலிருந்து, ஆர்க்டிக் பிராந்தியத்தில் மேலும் பிரிடன் சண்டை செய்யலாமென்று தோன்றுகிறது.

**தற்கால நிலைமை.**—கடைசியாய் கிடைத்த செய்திகளிலிருந்து கீவில் சண்டை ஓய்ந்துவிட்டதென்றும், அதற்குச் சமீபத்திலுள்ள கொரோஸ்டன், பியலயா-ஸெர்கோவ் இடங்களில் நடப்பதாயும்; மேலும் கோம், ஸ்மாலன்ஸ்க், எஸ்டோனியாவில் கடும்போர் புரிவதாயும் தெரிகிறது.

ருஷ்யாவுக்கும், நார்வேயும் சிநேகத்தைமுன்னிட்டு பரஸ்பரம் மந்திரிகளை நியமிப்பார்களென்று தெரிகிறது.

**ருஷ்ய-போலந்து ஒப்பந்தம்.**—இவ்விரண்டு நாடுகளும் ஜுலை 30-ம் தேதி செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தம் விசேஷமானது. கொள்ளைக்கார ஜெர்மானியர்களைத் தோற்கடிக்க லக்ஷக்கணக்கான மனிதர்கள் சேருவதற்கு இது ஒரு அடையாளம் என்று, இந்த ஒப்பந்தத்தை மிஸ்டர் சர்ச்சில் வர்ணிக்கிறார். இதன்படி, இப்பொழுது ருஷ்யாவில் கைதியாயிருக்கும் 1,00,000-போலிஷ் சிப்பாய்கள், 5,00,000-பொதுமக்களும் விடுவிக்கப்பட்டு, ருஷ்யா உதவிக்காக போலிஷ் சைனியமொன்று, போலிஷ் சேனாதிபதி தலைமையில், ருஷ்ய அதிகாரத்துக்குட்பட்டு, ருஷ்யாவில் திரட்டப்படும். சென்ற வருஷம் ஜெர்மனியும், ருஷ்யாவும் போலந்தைப் பங்குபோட்டுக்கொண்ட ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும். போலந்தின் எல்லை, சண்டைக்குப்பிறகு நிர்ணயிக்கப்படும். இவ்வொப்பந்தம் பிரிடிஷ் அன்னியநாட்டு மந்திரி மிஸ்டர், அந்தோனி ஈடன் பிரயாசைப்பட்டு முடித்துவைத்தது. இதனால் போலந்தின் ஸ்வதந்திரம் நிலைநாட்டப்பட்டு, ஐரோப்பாவில், கீழ், மத்திய பிராந்தியங்கள் ருஷ்ய சம்ரக்ஷணையில் வாழும்.

## தூரக்கிழக்கு.

இந்து-சைனாவை ஜப்பானுக்கு ஒப்படைத்ததைப் பற்றி அமெரிக்கா விஷியை பலமாய்க் கண்டித்திருக்கிறது. ஸிரியாவில் ஜெர்மனிக்கிடம் கொடுத்து பிரிடனை எதிர்த்த விஷி, இந்து-சைனாவை ஜப்பானுக்குக் கொடுத்து, அதிலிருந்து நேய நாடுகளை எதிர்க்கும் ஸ்திதிக்கும் கொண்டுவந்துவிட்டது. இனியும் அச்சு நாடுகளின் ஆக்கிரமத்துக்குட்பட்டால் விஷி சம்பந்தமாக அமெரிக்கா தன் கட்சியை மாற்றிக் கொள்ளவேண்டிவரும் என்று மிஸ்டர் வெல்ஸ் அமெரிக்காவின் சார்பாகச் சொல்லிவிட்டார். இந்து-சைனா ஸிரியாவைப் போலில்லாது ஆக்கிரம



பயத்திலில்லை யென்று விஷி சொல்வது சரியல்ல. ஸிரியாவும் சரி, இந்து-சைனாவும் சரி, அச்சு-நாட்டு ஆக்கிரமத்தைத் தவிர மற்ற எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.

**பொருளாதார முற்றுகை.**—ஜப்பான் மேல் துவக்கப்பட்ட பொருளாதாரப் போர் நடந்து கொண்டுவருகிறது. மோட்டார் எண்ணெய் அமெரிக்காவிலிருந்து இனி ஜப்பானுக்குக் கிடைக்காது. பனாமா கால்வாயும், பழுது பார்ப்பதற்கு என்று ஜப்பானுக்கு மூடப்பட்டுவிட்டது. பெட்ரோலின் குறைவு ஜப்பானுக்கு மீன்பிடிப்பது குறைந்து விட்டது.

**ஜப்பானின் பயம்.**—யுத்தத்தால் ஜப்பான் பலமாய் பாதிக்கப்படுமென்றும் கொனோய் அதற்குத் தயாராக ஜப்பானியர் தயாராயிருக்க வேண்டுமென்றும் ராஜ குமாரர் சொல்லியிருப்பதிலிருந்து ஜப்பானுக்கு மனதுக்குள் பயந்தானென்று தெரிகிறது. டியுடிலா வென்ற அமெரிக்கக் கப்பல் மேல் ஜப்பானிய விமான குண்டுகள்பட, ஜப்பான் ஸர்க்கார் அமெரிக்க மன்னிப்பைநாடி, நஷ்டத்தை ஈடு செய்வதாக உடனே ஒப்புக்கொண்டதும் ஜப்பானியர் பயத்தைக் காட்டுகிறது. ஆனால் சமயம் வாய்த்தால் ஜப்பான் சும்மாயிருக்காதென்பதும் நிச்சயம். தாய்லாந்தை 'புது-அமைப்பில்' சேரச்சொல்லி, அங்கு விளையும் அரிசி, வெள்ளீயம், ரப்பரையெல்லாம் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறது. தாய்லாந்தும், பயந்து, மஞ்சுகோ பொம்மை அரசாங்கத்தை அங்கீகரித்து, தன்னுடைய பாங்கும், ஒரு ஜப்பானிய பாங்குக்கும் 100, லக்ஷம் பாட்வரையில் கடன் கொடுத்துக்கொள்ள அனுமதித்திருக்கிறது. இந்து-சைனாவிலெல்லாம் ஜப்பானிய சைனியங்கள் வந்து விட்டன. ஒரு சிங்கப்பூர் செய்திப்படி நிலைமை நன்றாயில்லை.

ஜப்பானுடைய விஷமம் வடக்கேயும் பரவுகிறது: மஞ்சுகோ, எல்லையில் சைனியங்கள் பலப்படுத்தப்படுகின்றன.

## நார்வேயில் கலகம்.

ஸ்வதந்திர நார்வே சைனியத்தில் சேர ஓடியதற்காக நார்வேயில் அவர் குடும்பத்தார்கள் தண்டிக்கப்பட்டதிலிருந்து, நார்வே முழுவதும் கலகம் வந்து விட்டது. ருஷ்யாவை எதிர்க்க நார்வேயில் சைனியம் திரட்ட முடியாததிலிருந்து ஆபத்து நிலை இருவர்களைக் கட்டாயப்படுத்திச் சேர்த்து விடுவோமென்கிறார்கள். அமுலுக்கு வரும் மையிருப்பதாவும், வேண்டிய இடங்களின் ராணுவ அதிகாரம் என்றும் ஜெர்மானியர் உத்தரவுபோட்டிருக்கிறார்கள்.

## ஈரானில் துரோகிகள்.

4,000 ஜெர்மன் துரோகிகள் பிரயாணிகளாக வேஷம் போட்டுக்கொண்டு, டாப்ரிஸில் முக்கியமாய் தங்கி, ருஷ்ய காகஸஸ், டர்கோமான் டர்கிஸ்டானில் எல்லாம் வம்பு செய்வதாகத் தெரிந்து, பிரிடிஷ், அமெரிக்க ஸ்தானிகர்கள் இரான் ஸர்க்காருக்கு எச்சரிக்கை கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

## விமானப்போர்.

இந்த வாரத்தில் நடந்த பிரிடிஷ் விமானப் படையெடுப்பிலிருந்து கில் ஹாம்பர்க், கலே, மான்ஹீம், பிராங்க்பர்ட், கார்ல்ஸ்ரூ, ரூர், ரைன்களில் சேத

மதிகம். ஏற்கனவே 50 தடவை எதிர்க்கப்பட்ட பெர்லின் நகரம் மறுமுறை தாக்கப்பட்டது. இனி இரவுகாலம் அதிகரிக்க அதிகரிக்க எதிர்ப்பு வளரும். பெர்லின் நகரவாசிகள் முகத்தில் சந்தோஷத்தைக்காணோம். பெர்லினைக் காப்பாற்ற போலி நகரமொன்றை பக்கத்தில்கட்டி, பொய்த் தெருக்களையும், வீடுகளையும், ரயில்வே ஸ்டேஷனையும் அமைத்து, ஒரு பெரிய பலகைகள் கொண்டு மறைத்து, தெருக்களைப் பச்சைத்துணிகளைப்போட்டு கருப்புச்சாயம் போட்டும்மூடி பிரிடிஷ் விமானங்கள் வரும்போது சிலவெளிச்சத்தைக்காட்டி, சொக்கப்பானைகொளுத்தி, ஊர் நெருப்புப் பிடித்துக்கொண்ட பாவனையைச் செய்கிறார்கள்.

பிரிடன்மேல் ஜெர்மன் படையெடுப்பு பாவனைக்குத்தான் நடக்கிறது. ஒவ்வொரு சமயம் பொய்யையும் சொல்லுகிறார்கள். சில நாட்களுக்கு ப்ளிமொத்தையும், யார்மொத்தையும் நாசமாகச் சொல்லிக்கொண்டார்கள்—இவைகளுக்கு 40 மைலுக்குள்ளாக குண்டுகளே விழவில்லை!

இந்த வருஷத்திய முதல் ஏழுமாதங்களில் பிரிடனைப் படையெடுத்த விமானங்களில் 2,500 சேதம்; இவைகளில் சென்ற ஒரு மாதத்தில்மட்டும் 433 போயின. இதிலிருந்து ஜெர்மனிக்கேற்படும் நஷ்டமும், பிரிடிஷ் விமானங்களின் வலிமையும் வெளியாகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 28—7—41. (திங்கட்கிழமை). | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயங்கள்.—கடானி (Catani), ஸிராக்யூஸ் (Syracuse), மஷாலா (Mashala) பொரிஸோ (Borizzo) விமானமிறங்கும் இடம், டிரபானி (Trapani). | நஷ்டமில்லை. | 36 விமானங்கள். நாசமாயின. பல சேதமாயின, விமான நிலய ஆட்களுக்கு பலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | சாமான் ஏற்றிய கப்பல்.—மத்தியதரைக் கடலின் நடுவில். | நஷ்டமில்லை. | மூழ்கடிக்கப்பட்டது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கப்பல்கள் துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 28—7—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள்.—பல இடங்களில். | ஜுலை 27, 28-ல் 51 விமானங்கள் | ஜுலை 27 & 28 தேதிகளில் 74 விமானங்கள். |
| | விரோதி விமான நிலயங்கள்.—போர்களத்திற்குப் பின்னால். | ...... | ...... |
| 29—7—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமானத் தளம்.—எகிப்து லிபியா எல்லைப் புறம். | ...... | 1 விமானம். |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி டாங்கிகள், காலாட்படை, விமான நிலயத்தில் இருக்கும் விமானங்கள்.—போராங்கம் முழுவதிலும். **ருமேனியா (Rumania).** ப்ளோயஸ்டி (Ploesti), ஸூலீனா (Sulina). | 5 விமானங்கள். ...... | 9 விமானங்கள். பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. |
| 30—7—41. (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—ஜெர்மன் கப்பல்கள்.—வட ஸ்காண்டிநேவியாவில் (Scandinavia), கர்க்னீஸ் (Kirkanes), பெட்ஸாமோ (Petsamo) துறைமுகங்கள். | 16 கடல் விமானங்கள். | 4 கப்பல்கள் தாக்குண்டன; கர்க்னீஸ் துறைமுகத்தில் உள்ள யுத்தக் கப்பலும் தாக்குண்டது. பெட்ரோல் ஏற்றிச் செல்லும் கப்பலில் தீப்பிடித்தது. 4 விமானங்கள், |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **30—7—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| இரவில்.—தொழிற்சாலைகள்.—மேற்கு ஜெர்மனி. | ...... | ...... |
| **ஸார்டினியா (Sardinia).** | | |
| இதாலிய கடல் விமான தளம், விமான நிலயம்.—எல்மாஸ் (Elmas). | ...... | 5 குண்டெறியும் விமானங்கள் தீக்கிரையாயின. பல சேதமாயின. |
| விமானச் சண்டை.—ஸார்டினியா (Sardinia) வுக்கு அருகில். | ...... | 4 இஞ்ஜின்கள் உள்ள ஒரு பெரும் விமானம். |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). கஸாலா (Gazala). பார்டியா (Bardia). | நஷ்டமில்லை. | தீக்கள் மூட்டப்பட்டன. வெடிகளும், தீக்களும் மூட்டப்பட்டன. |
| எதிரி குண்டெறியும் விமானங்கள்.—ஸுரா (Zura). | நஷ்டமில்லை. | தரையில் இருக்கும் பல விமானங்களுக்குச் சேதம். |
| **பின்லாந்து (Finland).** | | |
| லினாஹமாரி (Linahamari) | ...... | சுடப்பட்டது. |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| எதிரியின் மோட்டார்படை, யந்திர சாதனங்கள் உள்ள படைகள், காலாட்படை.—போர் நடக்கும் இடம் முழுவதும். | ...... | ...... |
| விமானச் சண்டைகள்.—யுத்தரங்கத்தில். | 8 விமானங்கள். | 15 விமானங்கள். |
| இரண்டு ஜெர்மன் காவல்புரியும் கப்பல்கள்.—பால்டிக் கடல் (Baltic). | ...... | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; மற்றொன்று சேதமாயிற்று. |
| எதிரி விமானங்கள் சத்துருவுக்குப் பின்புறத்தில் இருக்கும் விமான நிலயத்தில். | ...... | 12 விமானங்கள் நாசமாயின. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **31—7—41.** (வியாழக்கிழமை). | | |
| **ஸிஸிலி (Sicily)** | | |
| கப்பல்கள்.—மெஸ்ஸினா (Messina) துறைமுகம். | ...... | ...... |
| விமான நிலயம்.—பாலெர்மோ (Palermo). | ...... | ...... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம்—பெங்காஸி (Benghazi) | ...... | ...... |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| விரோதி மோட்டார்படை, யந்திரப்படை, விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—முழுப் போர்முனையிலும். விமானச் சண்டை.—யுத்தப் பிரதேசம். | 7 விமானங்கள். | 15 விமானங்கள். |
| **பால்டிக் கடல். (Baltic).** | | |
| 5,000-டன் எடையுள்ள எண்ணெய்க் கப்பல்.—பால்டிக் கடல் (Baltic). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| **1—8—41.** (வெள்ளிக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—துணைக்காவலுடன்கூடிய எதிரிக் கப்பல்கள்.—பெல்ஜியன் (Belgian) கடற்கரைக்கருகில். | 2 வெடி விமானங்கள் ஒரு சண்டை விமானம். | ஒரு கப்பல் எரிந்து போய்விட்டது; 2 கப்பல்கள் சேதமாயின. |
| இரவில்.—கப்பல் துறைகள்—கீல் (Kiel). | ...... | சேதமாயிற்று. |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| போக்குவரத்து மோட்டார் வண்டிகள்.—ஸிடி ஓமார் (Sidi Omar). | ...... | பல மோட்டார் வண்டிகள் நாசமாயின. |
| கடல் விமான தளம், பெட்ரோல் எத்திச் செல்லும் படகு, நிலக்கரி கிடங்குகள்.—பெங்காஸி (Benghazi) | ...... | ...... |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| எதிரியின் துணைகாவலுடன்கூடிய கப்பல்கள்.—மத்தியதரைக்கடலின் (Mediterranean) மத்தியம். | ... | ஒரு கப்பல் தாக்குண்டது. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **1—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **கிரீட் (Crete).** | | |
| விமான நிலயம் போர்த் தளவாடக் குவியல்கள்.—மலேமி (Malami). | ... | வெடித்து நாசமாகியது. |
| விமான நிலயம்.—காண்டியா (Candia). | ... | ... |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்.—போரிஸ்ஸோ (Borizoo). | ...... | ...... |
| **லம்பெடூஸா தீவு (Lampedusa Island).** | | |
| இரு கப்பல்கள்.—தீவிற்கு அருகாமையில். | ...... | இரண்டும் பூரா சேதமாயின. |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| விரோதி பான்ஸர் (Panzer) படை யுத்த ரங்கம் பூராவும். விமானத் தளம்.—போர்முனை பூராவும். | 10 விமானங்கள். | 11 விமானங்கள். |
| **பால்டிக் (Baltic).** | | |
| 5 நாசகாரிகளால் பந்தோபஸ்து செய்யப்பட்ட 8 சாமான் மற்றும் கப்பல்கள்.—பால்டிக் (Baltic) கடல். | நஷ்டமில்லை. | 1 நாசகாரியும் 1 கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. 2 நாசகாரிகளும், 1 கப்பலும் சேதமாயின. |
| **2—8—41.** (சனிக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—கப்பல் தங்கும் துறைமுகங்கள் கீல் (Kiel). | ...... | ...... |
| விரோதியின் காவல்புரியும் கப்பல்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்குச் சமீபத்தில் | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| பீரங்கி வைக்கப்பட்டிருக்கும் இடம்.—அமலாந்து (Ameland) தீவு. | ...... | தகர்க்கப்பட்டது. |
| விரோதி சைனியங்கள், விமான நிலயங்கள் விமானங்கள், படகுகள்.—வடக்கு பிரான்ஸ். | 1 வேட்டை விமானம். | ...... |
| இரவில்.—ஜெர்மனி (Germany)யின் தலைநகரான பெர்லின் (Berlin). | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—கீல் (Kiel). | ...... | ...... |
| கப்பல் துறைகள், ரயில் பாதைகள், தொழிற்சாலைகள்.—ஹாம்பர்க் (Hamburg). | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **2—8—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம், விரோதியின் விமானம் சுடும் பீரங்கிகள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| விமானம் சுடும் பீரங்கிகள் ஆகாய விளக்குகள்.—பெர்கா (Berka) | ...... | உடைக்கப்பட்டன. |
| விமான நிலயம்.—காம்பூத் (Gambut). | ...... | சேதமாயிற்று. |
| சைனியங்கள் வாஸஸ்தலமும், தற்காப்புக் கோட்டை.—மிஸூராடா (Misurata). | நஷ்டமில்லை. | கட்டடங்கள் இடிந்தன. |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| எதிரி மோட்டார்படை, யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—போர்முனை பூராவும். | ...... | ...... |
| **3—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—எதிரிப்படைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| காவல் கப்பல்கள், தரையிலிருக்கும் விமானங்கள், பீரங்கிகள், விமான நிலயம்.—வட பிரான்ஸ். (France). | 1 விமானம். | 4 பகல் விமானங்கள். |
| தொழிற்சாலைப் பிரதேசங்கள்.—ரூர் (Rhur) ரைன்லாந்து (Rhineland). | ...... | சேதமாயின. |
| தொழிற்சாலைகள், போக்குவரவு சாதனங்கள்.—ஹானோவர் (Hanover) பிராங்பர்ட்-ஆன்-மெயின் (Frankfort-on-Main). | ...... | போக்கு வரவு தடைப்பட்டது. |
| கப்பல் தங்குமிடம்.—கலே (Calais), புலாயின் (Boulogne). | 1 விமானம். | ...... |
| **இதாலி (Italy).** | | |
| இதாலியச் சண்டைவிமானங்கள்.—ரிகியோ (Reggio)வின் தரையில். | ...... | 11 விமானங்கள் நாசமாயின. பல சண்டை விமானங்கள் சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **3—8—41.** | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | படையெடுப்பு.—*விரோதி ஆக்கிரமித்த பிரதேசம்.* | ...... | ...... |
| | துறைமுகம் விமானமிறங்குமிடம்.—*டெர்னா* (Derna). | ...... | *தீக்கள் மூட்டப்பட்டன; பீரங்கிகள் அடக்கப்பட்டன.* |
| | தரையிலிருக்கும் விமானங்கள் ஒரு கூடாரம்.—*எல்கஸாலா* (ElGazala). | ...... | *வெடிகளும், தீக்களும் கிளம்பின.* |
| | விமானமிறங்கும் இடம்.—*மார்டுபா* (Martuba). | ...... | *தீ மூட்டப்பட்டது.* |
| | கப்பல்கள்.—*அப்போலோனியா* (Appolonia)*வுக்கு அருகில்.* | ...... | *2 கப்பல்கள் தாக்கப்பட்டன.* |
| | ராணுவக் கட்டடங்கள், துறைமுகம், கப்பல்கள்.—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | 8,000*டன் எடையுள்ள ஒரு கப்பல் உடைக்கப்பட்டது.* |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | எதிரியின் மோட்டார்ப்படை, யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, *யுத்தகளம் பூராவும்.* | ...... | ...... |
| | விமானங்கள்.—*விரோதி விமான நிலயங்கள்.* | 6 *விமானங்கள்.* | 20 *விமானங்கள்.* |

---

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **29—7—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—*சில இடங்கள்—இங்கிலாந்தி* (England)*ல் இங்குமங்கும்.* | ...... | *மேலெழுந்த வாரியாகச் சேதம்.* |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **29—7—41.** | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் கப்பல்கள்—*ஸிரெனைகா* (Cyrenaica)*வின் கடற்கரைக்கருகில்.* | 4*வெடி விமானங்கள், 2 சண்டை விமானங்கள்.* | *சேதமே இல்லை. 2 விமானங்கள்.* |
| | **எகிப்து (Egypt).** | | |
| | *கெய்ரோ* (Cairo). | ...... | *சேதமுமில்லை, நஷ்டமுமில்லை.* |
| **30—7—41.** | (புதன்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—*சில இடங்கள்—இங்கிலாந்தின்* (England) *கிழக்கு தென்மேற்கு பாகங்கள்.* | ...... | *சொற்பச் சேதம்.* |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 1 *விமானம்.* | *நஷ்டமில்லை.* |
| **31—7—41.** | (வியாழக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—*இங்கிலாந்தி* (England)*ன் கிழக்கு, தென்மேற்கு பாகங்கள்.* | 1 *விமானம்.* | *சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை.* |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | ...... | *சேதமில்லை.* |
| | *லெனின்கிராட்* (Leningrad). | ...... | ...... |
| | **எகிப்து (Egypt)** | | |
| | நைல் நதிப் பிரதேசம் (Nile Delta). | ...... | *2 பேருக்குத்தான் காயம். வேறு சேதமில்லை.* |
| **1—8—41.** | (வெள்ளிக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—*சிலஇடங்கள் இங்கிலாந்தி* (England)*ன் தென் மேற்கு, ஸ்காத்லாந்து* (Scotland). | 1 *விமானம்.* | *சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை.* |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 1—8—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 2 விமானங்கள். | சிறிது சேதம்தான்; நஷ்டமில்லை. |
| 2—8—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக் குக்கரை. | 2 விமானங்கள். | ...... |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு பாகமும், தெற்கு பாகத்தில் ஒரு இடம். | 2 குண்டு வீசும் விமானங்கள். | சிறிது சேதம்தான். ஆனால் ஒருவருக்கும் காயமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 2 விமானங்கள். | பல விரட்டப்பட்டன. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் சண்டைக் கப்பல்கள்.—வட ஆபிரிக்கா (Africa)வின் கடற்கரை. | 3 சண்டை விமானங்கள். | 4 குண்டு வீசும் விமானங்களும் 1 சண்டை விமானமும்; மற்றும் பல சேதமாயின. |
| 3—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஒரு இடம்.—இங்கிலாந்தின் (England) தென் கிழக்குக் கடற்கரை. | 1 குண்டு வீசும் விமானம். | சிறிது சேதமும் சிலருக்குக் காயம். |
| | இரவில்.—இங்கிலாந்து (England), ஸ்காத்லந்து (Scotland) இவைகளின் கிழக்குக் கடற்கரை. | ...... | ...... |
| | ஆங்காங்கு சில இடங்கள்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சிலர் கொல்லப்பட்டனர், சில வீடுகள் தகர்க்கப்பட்டன. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயெஸ் கால்வாய் (Suez) பிரதேசம். | ...... | 17 பேர்கள் கொல்லப்பட்டனர். 58 பேர்கள் காயமடைந்தனர். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 3—8—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 1 விமானம். | கொஞ்சம் சேதம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | ...... | சொற்பச் சேதம்; சில வீடுகள் எரிந்து விட்டன. |
| 4—8—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பிரிடனில் எங்கும் விமான நடமாட்டமே இல்லை. | | |
| | இங்கிலிஷ் கால்வாய் (English Channel). | | |
| | ஒரு ஆயுதம் தாங்கிய சிறிய கப்பல்.—இங்கிலீஷ் கால்வாய். | 1 விமானம். | சேதமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயெஸ்.—(Suez) கால்வாய் பிரதேசம். | ...... | வீடுகளுக்குச் சொற்பச்சேதம். 90 பேர்கள் கொல்லப்பட்டனர். 106 பேர்களுக்குக் காயம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ.—(Moscow). | 1 விமானம். | சேதமில்லை. |

---

## யுத்தக் குறிப்புகள்.

---

### இருகட்சியும் பரஸ்பர சம்மதமின்றி சண்டையை நிறுத்த மாட்டா.

இம்மொழிகள் ஆங்கிலேயருக்கும் ருஷ்யருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையில் இருக்கின்றன. ருஷ்யச் சண்டையை மிக்க கவலையுடன் நோக்குங்கால் இதன் பரம தாத்பரியத்தை மறக்கக்கூடும். லண்டன் டைம்ஸ் பத்திரிகை இவ்விதம் அபிப்பிராயப்படுகிறது. "இதனால் பரஸ்பர ஐகமத்தியமில்லாமல் சண்டையை நிறுத்தவும் கூடாது, சமாதான திட்டங்களையும் ஏற்படுத்தவும்கூடாது. இரு தேசத்தாரும் ஏகோபித்துத்தான் செய்யவேண்டும்".

ஹிட்லர் இருபக்கங்களிலும் அகப்பட்டுக்கொண்டு சண்டை செய்வது கேவலம் ராணுவத்தின் விஷயமல்ல, இதிலிருந்து ஒற்றுமையான ராஜீய ஏற்பாடுகளும் ஏற்படலாம்.

நாஸிகள் யுத்தத்தில் அழிந்த பிறகு கிழக்கு தென்கிழக்கு மத்தியக் கிழக்கு தூரக்கிழக்கு தேசத்தார் யாவரும் விடுதலை அடைந்துவிடுவார்கள். அவர்கள் யாவரும், இனி ஏற்படும் எதிர்ப்புகளைத் தடுக்க, ஒத்துழைப்பதைப்பற்றி யோசிப்பார்கள். அதில் நவீன யுத்த முறைகளில் தேர்ச்சிபெற்ற ருஷ்யர்கள் கலந்து கொள்ளுவார்கள்.

## நாஸிப் பகைவர்களுக்குள் நட்பு.

ஹிட்லர் பேரிலும், அவர் அக்கிரமச் செயல்கள் பேரிலும், உள்ள பகை, ஸ்வதந்திரத்தை விரும்பும் நாடுகளை நன்கு ஒன்றுசேர்த்துவைக்கிறது. 2 வருஷங்களுக்கு முன் பரம சத்துருக்களாக இருந்த போலிஷ்காரர்களும், ருஷ்யர்களும் சமீபத்தில் லண்டனில் மெயிஸ்கி—ஸிகோர்ஸ்கி மூலம் சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இந்த ஒப்பந்தத்திற்கு முன்பு இந்த நாடுகளுக்குள் இருந்த சிக்கல்கள் பலமானவைதான். அதில் ஒன்று, ருஷ்யர்கள் வசமிருந்த 2,20,000 போலிஷ் கைதிகளை விடுவிப்பது. இரு தேசத்திற்கும் இடையிலுள்ள எல்லைப்புற பிரச்னை மற்றொன்று. யுத்தத்திற்குப் பிறகு எல்லைத்தகராறு கவனிக்கப்படும். ஆகையால் தற்சமயம் இந்த இருவருக்கும் சிநேகபாவம் இருந்து வருவதால் 1939-ம் வருஷம் ஜெர்மனியும் ருஷ்யாவும் செய்துகொண்ட உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. சண்டை நின்ற பிறகு செய்யப்போகும் ஏற்பாடே இத்தகராறுகளைத் தீர்த்துவிடும். பிரகிருதமான உடன்படிக்கைப்படி ருஷ்யாவில் இருக்கும் போலிஷ் கைதிகளை உடனே விடுவிக்கப்படும். போலிஷ் சைனியம் ஒன்று திரட்டப்பட்டு தங்கள் சேனாதிபதிகளின் அதிகாரத்திலேயே ருஷ்யாவில் வைக்கப்படும். இருவருக்கும் பிரதிநிதிகள் உண்டு. இப்படி ஜன்ம விரோதிகளான இரு தேசத்தாரையும் சேர்த்துவைப்பதில் பிரிடிஷ் அரசாங்கம் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டது. இனி நடக்காது என்று நினைத்த காரியத்தை பிரிடிஷார் நடத்திவைத்தனர். இதனால் ஹிட்லருக்குக் கோபம்வரத்தான்வரும்.

## ஜப்பானுக்கு வெறிபிடிக்குமா?

இதுவரை பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. சக்தியற்ற விஷி ஸர்க்காரிடமிருந்து ஸைகோனையும், காம்ரான்குடாவையும் பிடுங்கிவிட்டார்கள். முன்னை விட அதிகமாகத் தெற்கே 700-மைல் தூரம் ராணுவங்களை சண்டை துவக்கவே நடத்தி இருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு கடும் வார்த்தைகள் மாத்திரம் போதாது. பிரிடன் அமெரிக்கா இருவரும் கூடி காண்பித்தால்தான் கோனுய் ராஜகுமாரன் பதுங்கிப்பாய்வது என்ற மார்ஜார யுக்தியை மறுபடி கைக்கொள்ளுவார். தங்கள் உண்மை அபிப்பிராயத்தை உலகம் அறியாது என்று நினைத்துக் குறைவுகளைத்தான் பகிரங்கப்படுத்துகிறது. இப்படிச்செய்வது தந்திரமாகாது. இண்டோ-சைனாவிலிருந்து தங்களுக்குத் தேவையான ஏராள அரிசியையும், சிறிது ரப்பரையும் அடையலாமென்று ஜப்பானியர் உத்தேசித்திருக்கலாம். ஆனால் அங்கே அப்பொருள்கள் இல்லை என்றும், தாய்லாந்து, மலாயா, டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகளிலும்தான் கிடைக்கின்றன என்று நேரில் பார்த்த



யாவருக்கும் தெரியும். இவ்விடங்களில் பிரிடன் அமெரிக்கா, ஹாலந்து இவைகளுக்குத்தான் அதிகச் சம்பந்தம் இருக்கிறது. "இச்சம்பந்தத்திற்கு ஒரு இடைஞ்சலும் செய்யவில்லை" என்று காட்டுப்பூனை, கோழிக்கூடாப்புக்கு மேல் பதுங்கி இருப்பது போல் இருந்து சொன்னால் எவ்வளவு உண்மையாகும். ஜப்பானின் செய்கை அமெரிக்கர்களுக்கு விபத்தை விளைவிக்கும் என்று மிஸ்டர் ஸம்மர் வெல்ஸ் ஸ்பஷ்டமாகச் சொன்னார். "சமாதான முறையில்லாது வேறுவிதமாக முன்னிருந்த நிலைமை மாறக்கூடாது. மாறினால் பஸிபிக் பிரதேசம் பூரா யுத்தம் வந்துவிடும்". பிரிடனோ, பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமோ, அமெரிக்காவோ ஜப்பானின் கொள்ளைத்தொழிலுக்கு வேண்டிய எண்ணெய் இரும்பு, மாங்கனீஸ் முதலிய பொருள்களை அனுப்பாததோடு, ஜப்பானிய ஜவுளிகளையும் வியாபாரத்தையும் நிறுத்திவிடும். இனி தன் புதிய திட்டத்தை கிழக்கே ஸ்தாபிக்க ஆசைப்பட்டால் சண்டை துவக்கவேண்டிவரும். யுத்தத்திற்கு வேண்டிய வசதிகளை நாம் நிறுத்தி விடுவோம். ஆகையால் பழைய முறைக்குத்தான் போகவேண்டும். அக்கிரமச் சண்டையை நிறுத்தி சைனா பேரில் நடத்தும் ஆக்கிரமணத்தையும் நிறுத்தும் என்று தற்போதைய நிலையை ஊன்றிப்பார்ப்போர் கருதுகிறார்கள்.

## இந்தியாவுக்கு அபாயம் உண்டா?

இப்பரத கண்டத்தின் கீழ்க்கரையில் வசிக்கும் நாம் காத்தாடிபோல் மாறி மாறிக் கொண்டிருக்கும் ஜப்பானின் செய்கைகளை கவனித்துவருகிறோம். உண்மையில் இண்டோ-சைனாவின் தென்பாகங்களைப் பிடித்தால் நமக்கு ஒருவிதமான பயமும் இல்லை. ஏனென்றால் இண்டோ-சைனாவிற்கும் பர்மாவுக்கும் நடுவில் தாய்லாந்து இருக்கிறது. இதில் தேசிய உணர்ச்சியும் பிரிடனுடன் நட்பும் அதிகமாகயிருக்கிறது. ஜப்பானையும் இதர ஐரோப்பிய நாடுகளையும் உள்ளே தலை காட்ட அனுமதிக்காது. மேலும், தாய்லாந்துக்கும் பர்மாவுக்கும் இடையில் மார்க்கங்கள் புலப்படாத மலைப்பாங்கான ஷான் தேசங்கள் இருக்கின்றன. இங்கே மலைத்தொடர்களும், பெரும் நதிகளும், நெருக்கமான காடுகளும்தான் இருக்கின்றன. ஆகையால் ஜப்பான் இந்த வழியாக இந்தியாவிற்கு வர இயலாது. சிங்கப்பூர் மார்க்கமும் எளிதல்ல. அங்கே கோட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## ருஷ்யர்கள் சண்டையில் நிலைத்திருக்கிறார்கள்.

ராக்ஷஸத்தனமான ஜெர்மானியரை ருஷ்யர்கள் எதிர்க்கும் முறையை ஜனநாயக நாடுகள் ஆச்சரியத்துடனும், நன்றியுடனும் கண்டு மகிழ்கின்றன. யுத்த சரித்திரத்தில் இதுவரை இல்லாதபடி நூதனமாக சைனியத்தின் அமைப்பும் முறையும் இருக்கின்றன. முன்போல சைனியங்கள் அணிவகுக்கப்படவில்லை. வரவர தற்போது தரையில் செய்யும் யுத்தம் கடற்சண்டையைப்போல் ஆகிக்கொண்டிருக்கிறது. அகண்ட சமுத்திரத்தில் பெரிய கப்பற்படைகள் ஒன்றை ஒன்று மறுகுவதுபோல் நிலத்திலும் இரு சைனியங்கள் மறுகுகின்றன. கடலில் சண்டைக்கப்பல்களுக்கு க்ரூயிஸர்களும் நாசகாரிகளும் உதவுவதுபோல் நிலத்தில் காலாட்படைக்கு விமானப்படையும் யந்திரங்களும் உதவுகின்றன

கடலில் கப்பல்களுக்கு நிலயங்கள் இருப்பதுபோல் நிலத்தில் கைத்தொழிற் சாலைகளும், ரயில்வே ஜங்ஷன்களும், விமான தளங்களும் பிரயோஜனப் படுகின்றன.

இச்சண்டையின் ஆரம்பத்தில் ஜெர்மனி நூதனமாக, தரைப்படையையும் ஆகாயப்படையையும் ஒன்றுசேர்த்து குறுகிய இடங்களில் எதிரிகளைத் தாக்கின தால் போலந்தும் பிரான்ஸும் எதிர்த்து நிர்வஹிக்க முடியவில்லை. இப்பொழுது ஜெர்மானியர் சமுத்திரத்திற்கு ஒப்பான ருஷ்யாவின் அகண்ட சமவெளிகளில் தகுந்தபடி ஆயத்தப்படுத்தப்பட்டதும் நல்ல தேர்ச்சிபெற்றதுமான கப்பற் படையை ஒத்துள்ள ருஷ்யர்களின் சைனியத்தை எதிர்த்துப்போராட வேண்டி யிருக்கிறது. இதுவரை எதிர்க்கமுடியாது என்று நினைத்த ஜெர்மன் பான்ஸர் பிரிவு, இப்பொழுது திடீரென்று பின்புறத்தில் எதிர்பாராத விதமாய் தாக்கப் படுகிறது. கடலில் சண்டைக் கப்பல்களுக்கு இடைஞ்சல்களை நீர்மூழ்கிகளால் விளைவிப்பது போல ஜெர்மன் சைனியத்திற்குப் பின்புறமாக ருஷ்யர்கள் தொந்தரவளிக்கிறார்கள்.

இதை ரொம்ப விசித்திரமாக நினைக்கலாம். திட்டம் போட்டுக்கொண்டு சண்டைபுரியும் இந்தச் சமயங்களில் ஜெர்மானியர் கடியாரம்போல் ஒன்றன்பின் ஒன்றாக முறைகள் கையாளுவதால் அவர்களைத் தோற்கடிப்பது சிரமசாத்திய மாகும். ஆனால் எதிர்பாராதபடி சண்டை நடைபெறுவதால் ஜெர்மன் ரேடியோ உண்மையை மறைக்கச்செய்யும் முயற்முயற்சிப்புப்போல், அவர்கள் யுத்தரங்கத்தில் தட்டுத் தடுமாறுகிறார்கள்.

## கனவின் அறிவு.

சென்ற சில வாரங்களாக நடுநிலைமையுள்ளதும், சற்று நடுநிலைமை மத்திம மான தேசங்களும் ஓயாது பிரஸ்தாபித்து வரும் சமாதானப் பேச்சிலிருந்து ஜெர் மானியர்கள் ருஷ்யாவின் பேரில் துரிதமான வெற்றியை அடைவதில் மிகவும் பொருட்படுத்துகிறார்கள் என்று தெரிகிறது. ஜெர்மானியர் தங்களுக்கு ருஷ்யா வில் கூடிய சீக்கிரம் ஜயம் கிடைக்குமென்றும், அப்படி கிடைத்தவுடனேயே பிரிடிஷாருக்கு புத்தி வந்து சமாதானப்பேச்சு எடுப்பார்கள் என்றும் ஜெர்மன் பொதுமக்கள் இன்றும் நம்புகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. மிஸ்டர் சர்ச்சில், ஈடன் இவர்கள் சமாதானப்பேச்சு ஜெர்மனியோடு ஒரு நாளும் கிடையாதென்று ஒரே போடாய் போட்டுவிட்டார்கள். ஆனால் ஜெர்மானியரோ இவர்கள் கேவலம் சண்டை பரப்புவர்களென்றும், அவர்களுடைய பேச்சும் வெறும் வீச்சே ஒழிய வேறில்லை என்று தள்ளிவிட்டார்கள். சில, ஜெர்மானியர்கள் லெனின்கிராட், மாஸ்கோ, கீவ் இந்த இடங்களில் தாக்குதல்களில் தாங்கள் எதிர்பார்த்த அளவுக்குமேல் ருஷ்யர்கள் தங்களுக்கு தொந்தரவு கொடுப்பதாக அறியலாம். ஆனால், அவர்கள் தங்களுடைய மற்றுமுள்ள சூழ்ச்சிகள், உதாரணமாக யூக்ரேன் மூலமாகவும், கருங்கடல் மூலமாகவும் துருக்கி மூலமாகவும் ஒரே சமயத்தில் துரிதமாகத் தாக்கிவிடலாம் என்று எண்ணி மனத்தேர்ச்சியடைகிறார்கள். இதன்



நோக்கம் ருஷ்யாவிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்கள் 100-க்கு 80 விகிதம் பாகு பிராந்தியத்தில் இருக்கின்றன. இதர ருஷ்ய பொருள்களெல்லாம் யூரல் மலைச் சாரலில் இருக்கின்றன.

ஆனபோதிலும் வெளிநாட்டிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகர்கள் வெளிநாட்டு அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளப் பார்க்கிறார்கள். (ருஷ்யாவைத் தோற் கடித்துவிட்டு!) பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைப் பங்கப்படுத்தாது சமாதானம் செய்து கொள்ள ஹிட்லர் தயாராயிருப்பதாயும், அதற்கு அமெரிக்கா ஜவாப்தாரியாக இருக்கவேண்டுமென்றும், ஹிட்லர் ஒலிபரப்பிக் கேட்க நேரிட்டால் அமெரிக்கா சம்மதிக்குமா என்று தெரிந்துகொள்ள ஜெர்மன் ஸ்தானிகர் அமெரிக்க மக்களின் மனதை ஆழம்பார்க்கிறார். ஷாங்கேயிலும், ஜெர்மன் ஸ்தானுபத்திய உத்தியோ கஸ்தர்கள் (ஜெர்மானியர்களுக்கு அங்கு சுயேச்சையாக இருக்கும்படி விட்டால்) ஜெர்மனியுடன் சமாதானம் ஏற்படவேண்டுமென்ற காலம் வந்துவிட்டது என்று பெருமைபடுத்திப் பேசுகிறார்கள். லிஸ்பனிலுள்ள ஜெர்மானிய ஸ்தானாதிபதி யுடன் நெருங்கிப் பழகியவர்கள், ருஷ்யா தோற்கப்பட்டவுடன் இங்கிலாந்து உலகத்திற்கு அதிகக் கஷ்டம் நேரிடாதபடி ஜெர்மனியுடன் சமாதான ஏற்பாடுகள் செய்துகொள்ளுமென்று ஓயாமல் சொல்லிவருகிறார்கள். பிரிடன் கடல் ஆதிக் கத்தையும், ஜெர்மனி ஐரோப்பிய நில ஆதிக்கத்தையும் சமமாகப் பிரித்துக் கொண்டு சமாதானம் செய்யப்போவதாக ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் பின்லாந் தில் பிரஸ்தாபிக்கிறார்கள். (ஆனால் எவ்விதமாக பாகம் செய்வதென்றுதான் தெரியவில்லை.)

## ஜெர்மனியின் மற்றொரு மதிகெட்ட மனோபாவம்.

விஷயமில்லாத கனவுகாண்பதே ஜெர்மானியரின் சுபாவம். அவர்களின் அனுமானத்தில் ஏற்பட்டுள்ள அடிப்படையான பிசகை முற்றிலும் உணரவில்லை. உலகத்தையே கையாள வேண்டுமென்று ஹிட்லர் சண்டை செய்கிறார். பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும், அதன் நேசதேசங்களுக்கும் அத்தகைய எண்ணமில்லை. பிரிடிஷ் ஜனசத்துருவாகிய ஹிட்லரை அழித்து ஸ்வதந்திரத்தை நாட்டப் பாடுபடு கிறார்கள். ஆதிக்கத்தில் அவர்களுக்கு ஆசை இல்லை. உண்மையிலும் ஸ்வதந்திரத் தின் பரிசுத்தத்திலும் நம்பிக்கையுள்ளவர்களுக்கு விரோதமான மிருகத்தன்மை வாய்ந்த மூலகாரணங்களிலும், மனுஷ்ய ஆவேஷமுள்ள காரணங்களிலும் பெருமை கொண்டதும், இகழத்தக்கதுமான ஜெர்மன் ராஜ்ஜிய பரிபாலனத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

## கௌரவத்தைப்பற்றி விஷியின் அபிப்பிராயம்.

டார்லானின் அனுமதியின்பேரில் பிரெஞ்சு இண்டோ-சைனாவில் கப்பற்படை ஆகாயப்படை தங்கியிருக்கும் தளங்களை ஜப்பானியர் இப்பொழுது கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். கௌரவம் என்பதைப்பற்றி விஷி முன்பின் விரோத மாகப் பேசுகிறது. ஸிரியாவில் பிரெஞ்சு ஆதிக்கமுள்ள பிராந்தியத்தில் ஜெர் மானியர்கள் ஏராளமாக வந்து நிரம்பியபொழுது பிரிடிஷாரும் ஸ்வதந்திரம் வாய்ந்த

பிரெஞ்சு சேனைகளும் அங்கு வருவதை ஆயுத பலத்தால் தடுக்க பிரெஞ்சு கௌரவம் தூண்டினது. ஆனால் இருநூறு வருஷகாலமாக இருந்து வரும் பிரெஞ்சு குடியேற்ற நாட்டை ஜப்பானியர்கள் கைப்பற்றினபொழுது, விஷியின் கௌரவம் அபகரிப்பதைத் தடுக்கத் தோன்றவில்லை!

நம்மில் அனைவருக்கும் பிரெஞ்சு சிநேகிதர்கள் இருக்கிறார்கள். நமக்குப் பிரியம் வாய்ந்த பிரெஞ்சு தேசத்தார் எப்பொழுதாவது, எப்படியாவது மறுபடியும் தலை தூக்குவார்களா வென்று ஏக்கத்துடன் நினைத்துக்கொண்டிருக்கிறோம். இதாலியர்கள் இந்தச் சண்டையில் செய்ததானது அருவெருப்பையும், பரிகாசத்தையும், அவர்களுக்குச் சம்பாதித்திருக்கிறது. ஆனால் பிரெஞ்சு தேசத்தில் ஒரு சிறு கக்ஷிக்காரர்களில் பிரட்டும், சூழ்ச்சியும் செய்துகொண்டிருப்பவர்கள் தொலைந்து ஸ்வதந்திரப் பிரெஞ்சு கக்ஷி தலையெடுப்பதற்கு பிரிட்டனின் வெற்றி அவசியம்.

---

## ஜெர்மன்–ருஷ்ய கடல் யுத்தத்தின் அம்சங்கள்.
## பிரிட்டிஷ் முற்றுகையின் பயன்.
## ருஷ்யன் எண்ணெய் துறைமுகங்கள் தாக்கப்படுமா?
## கருங்கடலில் போரிடும் கடற்படைகள்.

(எச். வி. பெர்ரோரி பி.பி.ஸியில் சமீபத்தில் பேசியது.)

ஹிட்லர் ருஷ்யாவை எதிர்த்ததினால் அச்சு நாடுகளை நாம் முற்றுகை போடுவதற்கு அதிக உதவியாயிருக்கிறது. சென்ற அநேக மாதங்களாக ஒரு இடைவெளி ஏற்பட்டிருந்ததென்றும், அதன் வழியாகப் போதுமான அளவு சாமான்கள் கள்ளத்தனமாக ஜெர்மனிக்கு வர இயலும் என்றும், பொருளாதார யுத்த மந்திரி ஏற்கனவேயே சொல்லிவந்தார்.

இந்த இடைவெளி ருஷ்யாவின் துறைமுகமான விளாடிவாஸ்டக்தான். பஸிபிக் மஹா சமுத்திரக்கரையிலிருக்கும் இந்த துறைமுகம் ஐரோப்பாவுடன் ட்ரான்ஸ் ஸைபீரியன் இருப்புப் பாதைமூலம் பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்த துறைமுகத்தின்மூலம் வெளிநாடுகளிலிருந்து வழக்கமாக இறக்குமதி செய்யும் பொருள்களைவிட யுத்த நிமித்தம் இன்னும் அதிகமாகவே ருஷ்யா இறக்குமதி செய்துவந்தது. இந்த உபரியான சாமான்கள் நம்முடைய எதிரிகளுக்கு இந்த இருப்புப் பாதை மார்க்கமாய் போய்க்கொண்டிருந்ததென்று அநுமானிக்கவேண்டுமென்று பொருளாதார யுத்த மந்திரி பல தடவைகளில் பகிரங்கமாய் வெளியிட்டிருக்கிறார்.

### ருஷ்யாவின் இறக்குமதி.

இறக்குமதி சம்பந்தமான கணக்குகளைச் சொல்லி உங்களை ஆயாசப்படுத்தப் போவதில்லை. ஆனால் ஒன்று அல்லது இரண்டு உபமானங்கள் இங்கு கூறுவோம். சமாதான காலத்தில் ஒரு வருஷத்திற்கு சராசரி எவ்வளவு தாமிரம் ருஷ்யா தன் துறைமுகம்



விளாடிவாஸ்டக்கில் இறக்குமதி செய்யுமோ அவ்வளவு தாமிரம் இந்த ஏழு மாதங்களில் வந்திருக்கிறது. யுத்த தளவாடங்கள் தயாரிப்புக்கு அதிக அத்தியாவசியமான மாலிப்டினம் (Molybdenum) என்ற உலோகத்தை ருஷ்யா இரண்டு பங்கு அதிகம் ஏழு மாதங்களில் இறக்குமதி செய்திருக்கிறது. இந்த உலோகம் இல்லாமல் ஜெர்மானியத் தொழிற்சாலைகள் தவித்துக் கொண்டிருந்தன.

சென்ற மாரிகாலத்தில் இரண்டு மாதங்களில் ருஷ்யாவில் வாங்கப்பட்ட அமெரிக்கப் பருத்தி மூட்டைகள், ருஷ்யா வழக்கமாக பூரா வருஷத்திற்கும் எல்லா உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து இறக்குமதி செய்யும் பருத்தியைக் காட்டிலும் அதிகம். இந்த இறக்குமதிகளும் இவைகளை விடு இதர இறக்குமதிகளும் (விளாடிவாஸ்டக்) துறைமுகத்திற்குக் கடல் மார்க்கமாய் கொண்டுவரப்பட்டன.

ஏன் நாம் அவைகளை நிறுத்தவில்லை? என்று கேட்கலாம். உலகத்தின் அகண்ட சமுத்திரங்களில் கள்ளத்தனமாகச் சாமான்களைக்கொண்டு செல்லும் எல்லா வியாபாரக் கப்பல்களையும் அணுகி சோதனை செய்ய நமக்குள்ள உரிமையை வற்புறுத்தப் போதுமான யுத்தக் கப்பல்கள் நமது வசம் இல்லையென்பதுதான் இதற்குக் காரணம். ஆனால் இப்பொழுது ருஷ்யாவுடன் போர் துவக்கிவிட்டதால் அதன் வழியாக ஒரு சரக்கும் ஜெர்மனி இனி வரவிடாது.

விளாடிவாஸ்டக் துறைமுகம் மூடப்படுவதினால் ஜெர்மானியப்படை வெகு துரிதத்தில் அழிந்து போகும்படி நேரிடுமென்று நான் சொல்லவில்லை. கடலாதிக்கத்தின் வன்மை நாளடைவில் தான் தெரியும். ராஜீய மண்டலங்களில் உபயோகப்பட்டு வந்த மொழியைக் கொண்டுதான் அதைத் தெளிவுபடுத்திச் சொல்லலாம். அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும். இது செட்டாட்டத்தில் கசக்கி விளையாடுவதை ஒத்திருக்கும். கடைசி இரண்டு மூன்று பிடிகள் பாக்கி இருக்கும் பொழுதுதான் எதிரி தம்மை அமுக்கிவிட்டது தெரியவரும். அதைப் போலவே கடல் யுத்தத்தில் பொருளாதார வன்மையினால் எதிரி தாங்க முடியாதபடி கவிழ்ந்து போகவேண்டிய நிலைமையை அடைந்து விடுவான்.

பொதுப் படையான துறைமுகத்தில் தனக்கில்லாமல் மூடினதில், ஹிட்லர் தாமாகவே தனக்குவரும் சாமான்களை இழந்து விட்டார்.

### கடல் யுத்தத்தின் முக்கியமான அம்சங்கள்.

தேச சரித்திரத்தில் குறிப்பிடக் கூடிய மகத்தான கடல் யுத்தங்கள் நடக்க ஹேதுவில்லை. ஆனால் சிறிய சண்டைகள் பல ஏற்படலாம்.

முதலில் பால்டிக் படையை எடுத்துக்கொள்வோம். ருஷ்யாவின் பால்டிக் கப்பற்படையில் ரொம்பப் பழைய மூன்று யுத்தக் கப்பல்களும் இரண்டு புதிய காவல்புரியும் கப்பல்களும் சில பழைய சஞ்சாரிகளும் அநேக புதிய நாசகாரிகளும் அடங்கியிருக்கின்றன. ருஷ்யாவிடம் இருப்பதாகச் சொல்லப்படும் இருநூறு நீர்மூழ்கிகளில் பால்டிக் கடலில் எவ்வளவு தங்குகின்றன என்பது நமக்குத் தெரியாது.

சென்ற யுத்தத்தில் செய்த பிரகாரம் ஜெர்மனி தனியாக பால்டிக் கப்பற்படை வைத்திருந்ததுபோல் இப்

பொழுது வைத்துக்கொள்ளாமல் தன் நோக்கம்போல் வட கடலுக்கும் பால்டிக் கடலுக்கும் கீல்வாய்க்கால் மூலம் தன் கப்பல்களை மாற்றி மாற்றி அனுப்பிவருகிறது. ஒருவிதத்தில் அந்தப் பிரதேசத்தில் ருஷ்யாவுடன் சண்டை நடத்துவது ஜெர்மானியர்களுக்குப் பிரதிகூலமாயிருக்கிறது. இதுவரையிலும் கப்பல் கட்டினவுடனே சமுத்திரத்தின்மேல் போகும் கப்பல்களுக்கோ நீர்மூழ்கிகளுக்கோ கீழ் பால்டிக் கடலை முற்றிலும் அமைதியான பயிற்சிசாலையாக உபயோகப்படுத்த முடிந்தது. இது இனி முடியாது.

உதாரணமாக பிஸ்மார்க் கப்பல் கட்டப்பட்ட பிறகு அதன் மாலுமிகளை பழக்க மூன்றுமாதம் பிடித்தது. இனி அவ்விதம் அமைதியாகவும் தடங்கலன்றியிலும் பயிற்சி செய்ய ருஷ்யாவின் நீர்மூழ்கிகளும், மோட்டார் இடிகுண்டு படகுகளும் அங்கிருந்து தடை செய்யும்.

## கடல்வழி படையெடுப்பு நடக்காது.

பின்லாந்து குடாக்கடலின் கரையோரமாகக் கப்பற்படை யுத்தம் முயற்சிப்பது அசம்பாவிதமாகத் தோன்றுகிறது. சென்ற யுத்தத்தில் கப்பற்படையின் பாதுகாப்பில் படைகளைக் கொண்டுபோய் இறக்கும்பொழுது ரீகாவில் ஜெர்மானியர்களுக்குத் துக்ககரமான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் விபோர்க் என்னுமிடத்திற்கு அருகாமையில் சிறு கூட்டங்களாக இறங்குவதற்கு அவர்கள் முயற்சித்தது அபஜயமாய் முடிந்தது.

மேற்சொன்ன ஜெர்மன் படையை ருஷ்யர்கள் துரத்தி அடித்ததாகச் சொல்லுகிறார்கள். ஜெர்மானியர்கள் அதைப்பற்றி பிரஸ்தாபிக்கவேயில்லை. பின்லாந்து மூலமாய் தரை மார்க்கமாய் ஜெர்மானியர்கள் லெனின்கிராடை தாக்கக்கூடுமாதலால் சமுத்திர மூலமாய் படையை கொண்டுவரவேண்டுமென்பது அவசியமில்லை.

தொப்புக்காக பால்டிக் கடலில் இரண்டொரு சண்டைகள் நாம் எதிர்பார்க்கலாம். ருஷ்ய கடற்படையில் ஜெர்மன் டிர்பிட்ஸுக்குச் சமமான கப்பல் இல்லாமையால் அது ஒரு முறை அல்லது இருமுறை குடு குடு ஒன்று ஓடி அடித்துத் திரும்ப இடமிருக்கிறது. சோவியத் கடற்படையில் இந்தக் கப்பலை அடித்துவிட்டேன் அதோ அந்தக் கப்பலை அடித்துவிட்டேன் இன்னும் மற்றொரு கப்பலும் போய்விட்டது என்று இப்படியாக வழக்கம்போல் ஜெர்மானியர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் நமக்கு ஏற்பட்ட நீண்ட அனுபவத்தால் பெர்லினிலிருந்து வரும் வதந்திகளுக்கு உண்மையான ஆதாரம் ஏதாவது இருப்பது அரிது என்று நமக்குத் தெரியும்.

## இரண்டு உயிர் நிலையான துறைமுகங்கள்.

இது வரையில் பால்டிக் கடலில் நடந்ததாகத் தெரியவரும் கப்பற்படை யுத்தங்கள் லேசான சண்டைகளுக்கு மேல் அதிகமில்லை. பின்லாந்து வளைகுடாவில் ருஷ்யப் படைகளின் பலாபலத்தை ஜெர்மனியின் வேகமான சில மரக்கலங்கள் பரிசோதித்தன. இரு தரப்பார்களுக்கும் கொஞ்சம் நஷ்டம் நேர்ந்திருக்கிறது. ஆனால் ஜெர்மன் ஸர்க்கார் பிரசுரத்தை நாம் நம்பமுடியாது.

சென்ற சில நாட்களாக கருங்கடலில் நடந்த விசேஷமான செய்கைகளின் சில அம்சங்களின் செய்தி கிடைத்திருக்



கிறது. ஜெர்மானியர்கள் தாக்குதலின் ஆரம்பத்திலேயே ஸெபாஸ்டபோலில் பலமாய்த் தாக்கினார்கள். ஏனெனில் கருங்கடலில் ருஷ்யாவிற்கு முக்கியமாக கப்பற்படை தங்குமிடம் ஸெபாஸ்டபோல்தான். அங்கு சமுத்திரம் வழியாக படைகளைக் கொண்டுபோக முயற்சிப்பதை ஆக்ஷேபனை செய்யக் கூடிய நவீன ருஷ்ய யுத்தக் கப்பல்களுக்கு சேதம் விளைவிக்க ஜெர்மானியர்கள் பார்க்கிறார்கள்.

ருஷ்யர்கள் டான்யூப் நதிவாயில் உள்ள ருமேனிய துறைமுகங்களில் சேகரிக்கப்பட்டிருந்த படகுகளையும் கப்பல்களையும் இடிகுண்டு போட்டு தாக்குவதின் மூலம், ஆரம்பத்திலேயே கடல் மூலம் ஜெர்மனி படைகளைக் கொண்டுபோக முயற்சிப்பதைத் தடுப்பதின் பொருட்டு அவ்விதம் தாக்கினதாக அறிவிக்கிறார்கள். இரு தரப்பார்களின் மனப்பான்மை எவ்விதப்பட்டதென்பதை நாம் தெரிந்துகொள்வது சுலபம்.

கருங்கடலின் கீழ்க்கரையில் பாத்தூம், துவாப்ஸி என்று இரண்டு துறைமுகங்களைப் படத்தில் நீங்கள் பார்க்கலாம். அவைகளின் பெயரை அநேகம் பேர்கள் கேட்டிருக்க முடியாது. மற்றவர்களுக்குப் பாத்தூம் என்னும் துறைமுகத்துக்கும் எண்ணெய்க்கும் ஏதோ சம்மந்தம் இருப்பதாய் கொஞ்சம் தெரிந்திருக்கலாம். ஆனால் பெரிய பாகு (Baku) எண்ணெய் தளங்களிலிருந்து கிடைக்கும் எண்ணெயை வெளி ஏற்ற அவைகள் முக்கியமாக இருப்பதால் ருஷ்யாவிற்கு அந்த இரண்டு துறைமுகங்களும் மிகவும் முக்கியமானவை. ருஷ்யா அவற்றைப் போக்குவரத்துக்கு லாயக்காக தன் வசத்திற்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

## கடலாதிக்கத்தின் அவசியம்.

ஜெர்மனி அவற்றைக் கைப்பற்ற முயலுகிறது. அவற்றின் மூலமாக மேற்கே பக்கத்தில் எண்ணெய் ஏற்றுமதி செய்து கொண்டுபோவதற்காக அல்ல. ஆனால் ருஷ்யாவின் யந்திரப் படைக்கு எண்ணெய் கிடைக்காமல் தடுப்பதற்காகத்தான். எங்கேயும் கடல் ஆதிக்கத்தின் முடிவான பலத்தை நீங்கள் பார்க்கலாம். உபாயத்தின் ஒரு அம்சமாக விரோதிகளுக்கு வரும் சாமான்களை தடை செய்வதின் மூலம் பொருளாதார நெருக்கடியை இது உண்டாக்கும்.

ருமேனியா எல்லைப்புறத்திலிருந்து 500-மைல் தூரத்தில் பாத்தூம் இருக்கிறது. ஜெர்மன் படைகள் ஒன்று அல்லது இரண்டு வாரத்தில் தரை மார்க்கமாய் பாத்தூமைச்சேர தெற்கு ருஷ்யாவைக் கடந்து கைப்பற்ற முடியாது. அந்தப் பிராந்தியத்தில் ஜெர்மானியர்கள் கடலாதிக்கம் பெறக்கூடுமானால் மெதுவாய்ச் செல்லும் படகுகளின் துடரினால் ஒரு கடற்படை, கருங்கடல் மார்க்கமாய் மூன்று நாளில் போய்ச் சேரலாம்.

அது முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம். கடலாதிக்கம் என்பது உலகத்தில் பெரிய சமுத்திரங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஏனெனில் ஆதிக்கம் பெரும்பாலும் சமுத்திர ஆதிக்கமுள்ளவர்களைத் தான் குறிக்கிறது. முற்றிலும் சிறிய கப்பல்களின் மூலமும் அவ்விதம் ஆதிக்கம் அடையலாம்.

சென்ற யுத்தத்தில் டங்கனீகா ஏரியில் இரண்டு யந்திரப் படகுகள்

சண்டையிட்டு கடலாதிக்கம் பெற்றன. ஜெர்மன் தொடுத்த கிழ் ஆபிரிக்கா யுத்தத்தில் இவைகள் முக்கியமாய் பிரயோஜனப்பட்டன. டங்கனீகா ஏரியே ஒழிய, அகண்ட சமுத்திரமல்ல.

### அநுகூலமான நிலை.

கருங்கடலும் ஒரு ஏரியைப்போலவே இருக்கிறது. கடல் ஆதிக்கம் பெறுவதற்காக நடக்கும் சண்டைகளில் அங்குள்ள கப்பல்களும் அல்லது உள்நாட்டு நதி, ஆறுகளின்மூலம் செல்லக்கூடியதுதான் கலந்துகொள்ளும். ருஷ்யர்களுக்கு அங்கு கப்பற்படை இருக்கிறது. அவர்களுக்கு முக்கியமான நவீன சண்டைக் கப்பல்களும் இருக்கின்றன.

கருங்கடலில் கப்பல்களுக்கு துணைக் காவலாக அனுப்பியிருக்கக்கூடிய இடிகுண்டு படைகளும் இருநூறுடன் நீர்மூழ்கிகளும் போன்ற சிறு கலங்களும் ருமேனியா, பல்கேரியாவிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் யுத்தக் கப்பல்களுமே ஜெர்மானியர் வசம் இருக்கிறது.

கருங்கடலில் ருஷ்யாவின் எல்லைத் துறைமுகங்கள் ஜெர்மானியக் கப்பற்படையினால் தாக்கப்படுவது சுலபத்தில் முடியாது. பெரிய ருஷ்யாவின் நாசகாரிகள் அதை எதிர்க்கும். அவைகளில் ஐந்து, 5" பீரங்கிகள் கொண்ட ருஷ்ய சஞ்சாரிகள் ருமேனிய நாசகாரிகளைக் காட்டிலும் பெரியவை. இன்னும் இத்துடன் ருஷ்யர்கள் கருங்கடலில் பனிரெண்டு நாசகாரிகளைக் கட்டியோ, கட்டிக்கொண்டோ இருக்கிறார்கள். இதற்குள் அவர்கள் 8,800 டன் எடையுள்ள இரண்டு சஞ்சாரிகளையும் கட்டி முடித்திருக்கலாம்.

கருங்கடலிலுள்ள கப்பற்படை ருஷ்யர்களுக்குச் சாதகமாய் இருக்கிறது. இதைச் சாமர்த்தியமாய் உபயோகித்தால் பாத்துமை படையெடுக்கும் ஹிட்லரை தோற்கடிக்கலாம். நாசகாரிகளைப்போல் பெரிய கப்பல்களை எதிர்க்க ஹிட்லரும், முஸோலினியும் கட்ட நினைத்திருக்கும் "ஈ" படகுகளும், யந்திர இடிகுண்டு படகுகளும், கப்பற்படைக்கு தகுதியற்றவை என்று அவர் தெரிந்து கொள்வார். நீர்மூழ்கி கப்பல்கள் துணைக்கப்பலாக உபயோகப்படுத்த தகுதியற்றவை என்றும் தெரிந்துகொள்வார்.

---

# அறிவுறுத்தும் புள்ளி விவரம்.

## விளைபொருள், உற்பத்திப் பொருள் சம்பந்தமாய் தேசங்களின் நிலைமை.

ருஷ்யாபேரில் ஏற்பட்டிருக்கும் ஜெர்மன் படையெடுப்பைப்பற்றியும் ருஷ்யாவுக்கு ஜனநாயக நாடுகளால் செய்யப்பட்டுவரும் பொருள் ஆதார உதவிபற்றியும் அறிவுறுத்தக்கூடிய சில புள்ளி விபரங்களை க்வீன்ஸ்லண்ட் ஸர்க்கார் நிபுணரான காலின் கிளார்க் என்பவர் வெளியிட்டிருக்கிறார். உலகில் சமாதானம் நிலவிய பொழுது ஜனநாயக நாடுகளில் தொழிற்சாலைகள் சாதாரணமாகவே சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்ததில் அதே சமயம் அதாவது 1939-ம் ஆண்டு ஜெர்மன்



தொழிற்சாலைகள் அதிமும்மரமாகவே சாமான்கள் உற்பத்தி செய்தது. 1,000 டாலரைக்கொண்டு வாங்கக்கூடியதான சாமான்களை அளவையாகக்கொண்டு ஒப்பிட்டால் ஜெர்மானியார் 2,62,00,000 அளவும் பிரிடனால் 2,90,00,000 அளவும் பொருள்கள் உண்டாக்கப்பட்டன. அச்சு நாடுகளில் ஆதிக்கத்திலுள்ள ஐரோப்பா கண்டம் பகுதி பூராவிலும் 5,70,00,000, அளவும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் பூராவிலும் 5,60,00,000 அளவும் ஐக்கிய அமெரிக்காவில் 9,54,00,000 அளவும் சாமான்கள் உண்டாக்கப்பட்டன.

ஆகையால் அச்சு நாடுகளுக்கு 8,30,00,000, அளவும், ஜனநாயக நாடுகளுக்கு 18,00,00,000 அளவும் உண்டாக்கப்பட்ட பொருள்கள் கிடைப்பதாகிறது. சென்ற 2 வருஷங்களாக யுத்த காரணமாக தொழிற்சாலைகளில் உற்பத்திப் பொருள்கள் ஜாஸ்தி செய்யப்பட்டிருப்பதினால் தற்போது 20,00,00,000, அளவு தேறுகிறது.

உற்பத்திப் பொருளைவிட விளைபொருள் கிடைப்பது விசேஷமானதாகும். உலக விளைவில் தனிநிலைமை கொண்ட தேசங்களுக்காக 28 சதவீதம் நீக்கி ஜனநாயக நாடுகளுக்கு 62·4 சதவீதம் மண்ணெண்ணெய் விளைகிறது. ரப்பர் (விளைபொருளாக) 85 சத வீதமும், தாம்பரம் 85·4 சதவீதமும், நிக்கல் 90·6 சதவீதமும் ஜனநாயக நாடுகளில் விளைவாகிறது. 60·7 சதவீதம் ஈயமும் உண்டாகிறது. பிரிடனும் ஐக்கிய அமெரிக்காவும் உலக விளைவில் 63·9 சதவீதம் பஞ்சு விளைச்சல் உடையன. 50 சதவீதம் கம்பளமும், 50 சதவீதம் இரும்பு விளைவும் உடையன.

பெர்லினுக்கும் மாஸ்கோவிற்கும் மனத்தாங்கல் ஏற்படுவதற்குமுன், சென்ற மேமீ 16உக்குள் நாஜா ஜெவாடா என்ற ருஷ்யப் பத்திரிகை, ஜெர்மனியும் அதற்குட்பட்ட நாடுகளும் வருஷத்தில் 4,50,00,000 டன் எஃகும், பிரிடனுக்கும் அமெரிக்காவுமாகச் சேர்ந்து 10,50,00,000 டன் நிறை எஃகும் உண்டாக்குவதாகக் கூறியது.

### பிரிடிஷ் உற்பத்தி அதிகரிப்பு.

சகஜமாக அதிகரித்துக்கொண்டு வந்தாலும் பிரிடிஷ் உற்பத்தி பூரா அளவு அடையவில்லை. 1,00,000 பேர்கள் இன்னும் வேலையில்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் மந்திரி சபையில் இவர்களை தற்போது சாதாரணத் தொழிலில் உபயோகப்படுத்திக்கொள்ள இயலாதென்று கூறுகிறது. ஆனால் தொழிற்சாலைகளின் கண்காணிப்புகளிலிருந்தும், அந்நிய நாட்டினர் பதிவு செய்து கொள்ள நிர்ப்பந்தம் செய்யப்படுவதிலிருந்தும் இன்னும் ஆயிரக்கணக்கானவர் தொழிற்சாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் என்று தெரிகிறது.

கவர்ன்மெண்டாரின் செலவு திட்டம் அதிகப்பட்டிருப்பதிலிருந்தும் உற்பத்தி அதிகரித்திருப்பது அறியக்கூடுகிறது. ஜூலை முதல் ஸெப்டம்பர்மீ முடிய 1,00,00,00,000, பவுன் பத்துவழிசெய்ய கவர்ன்மெண்டு அனுமதி பெற்றிருக்கிறது. தினப்படி செலவு தற்போது 1,00,00,000 பவுன் ஆகிறது. இது

1,40,00,000 பவுனாகக்கூடிய சீக்கிரம் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வருஷம் ஜனவரி முதல் மார்ச்சு வரை தினப்படி செலவு சராசரி 1,40,00,000-லிருந்து 1,45,00,000, பவுன் ஆகியது. இந்தத் தொகையில் அமெரிக்காவுக்குக் கொடுக்கப்பட்ட பணமும் சேர்ந்ததாகும். ஏப்ரல் மீ முதல் அமெரிக்காவிலிருந்து வரும் சாமான்கள் குத்தகைக்கடன் ஒப்பந்த ஷரத்துப்படி கிடைக்கிறது. அச்சமயம் தான் தினப்படி செலவு 1,00,00,000 பவுனாகக் குறைந்தது. இவ்விதம் பலவாரம்வரை இருந்தது. ஆனால், இப்பொழுதில் ஏப்ரல் 1உ முதல் ஜூன் 14உ வரை 75 நாட்களுக்கு செலவு 88,70,00,000 பவுன் ஆகியிருக்கிறது. சராசரி தினம் 1-க்கு 1,20,00,000 பவுனாகி விட்டது. அதாவது சகஜமாய், முன்பு, பிரிடன் என்ன அமெரிக்கா என்ன இவ்விரண்டினுடைய உற்பத்திக்குச் சமமாக, பிரிடனுடைய பிரத்தியேகமான உற்பத்திமட்டிலேயே அதிகரித்துவருகிறது என்பது வெளியாகிறது. இவ்விதம் பார்க்க ஒரு வருஷத்துக்குள் பிரிடனின் உற்பத்தி 50 சத விகிதம் அதிகரித்திருக்கிறதென்று அறிய முடியும். உற்பத்தி இன்னும் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது.

---

## ஐஸ்லாந்தின் முக்கியத்துவம்.
## அமெரிக்காவின் யுத்த தந்திரம்.
## "யுத்தப் பிரதேசத்தில்" அமெரிக்கா பிரவேசிப்பதினால் வரக்கூடியது.

மான்செஸ்டர் கார்டியனில் "அமெரிக்காவின் தந்திரம்" என்பதைப்பற்றி தலை அங்கத்தில் ஜூலை 9உ பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

மே மீ 27உ அன்று பிரஸிடெண்டின் ஒலிபரப்புக்குப் பிற்பட்டு, அமெரிக்கர்கள் தந்திர உணர்ச்சியை அடைந்துவிட்டார்கள். அட்லாந்தின் சில தீவுகளை நாஸிப் படைகள் ஆக்கிரமித்தாலும் சரி, அல்லது தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டாலும் சரி, வட, தென் அமெரிக்காக்களின் பாகங்கள், யுனைடெட் ஸ்டேட்ஸின் சொந்தமான தீவுகள் இவைகளின் நெருங்கிய பாதுகாப்புக்கும், அமெரிக்காவின் முடிவான பாதுகாப்புக்கும், பங்கம் ஏற்படுமென்று அவர்கள் அறிந்திருக்கிறதாகச் சொன்னார்.

"எதிரியை முதலெடுப்பிலேயே அடிவைக்கவிடாமல் தடுப்பது, பருத்தரிவுக்கு எட்டியமட்டில், தந்திரோபாயந்தான்". ஐஸ்லாந்து எதிரிகளின் தாக்குதலுக்கு உட்படாமல் யுனைடெட் ஸ்டேட்ஸ் பாதுகாக்கும் முறையில் இறங்கிவிட்டது. இந்த முக்கியமான எல்லைப்புறத் தீவைப் பாதுகாக்க அது உதவுகிறது. மேலும் பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் பிரஸ்தாபித்தபடி டிரினிடாட், பிரிடிஷ் கயானா என்ற இடங்களில் பலமான படைகளை அனுப்பி அமெரிக்காவிற்கு எதிராக ஜெர்மானியர்கள் இருபக்கமும் வந்து வளைத்துக்கொள்ளாதபடி தடுக்க யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏற்பாடுகள் செய்துவிட்டது. அதுதான் எதிரியைத் தடுப்பதற்கு எதிர்காலத்திற்கு வேண்டிய பாதுகாப்பு. ஐஸ்லாந்தை, கப்பல்,



விமான தளமாக வைத்துக்கொண்டு அட்லாண்டிக் சமுத்திரத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸின் ஆதிக்கம் அதிகமாக விருத்தியடைந்து வருகிறது. இதுவே இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சாதகம்.

ஹிட்லர் "போர் முனை" என்று குறிப்பிட்டிருக்கும் வட அட்லாண்டிக் சமுத்திரத்தின் குறுக்கே எதிரி அணுகாதபடி அமெரிக்கா தன் படைகளைக் கொண்டு வந்து வைத்திருக்கிறது. ஐஸ்லாந்திற்கும் அமெரிக்காவுக்கும் 20-ம் மெரிடியன் வரையிலுள்ள வட அட்லாண்டிக் கடல்பாதை போக்குவரத்துக்கு இடையூறின்றியில் பாதுகாக்கப்படும்.

இதனால் அட்லாந்தின் வழியாக சாமான்கள் இறக்குமதி செய்ய ஹேதுவாய் இருப்பதின் மூலம் யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரிடனுக்கு அதிகம் ஒத்தாசை செய்வதாகவே கருதவேண்டும். ஏப்ரல் மாதம் முடிவிலிருந்தே ஹாலிபாக்ஸிலிருந்து, கிரீன்லாந்து, ஐஸ்லாந்து, ஸ்காத்லாந்து முதலிய இடங்களுக்குச் செல்லும் கடல் வழிகளைத் திறந்து வைக்க பொது முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பிரிடிஷ் அமெரிக்கா அதிகாரிகளுக்குள் ஏற்பட்ட பேச்சைப்பற்றி பல அறிக்கைகள் அமெரிக்கப் பத்திரிகைகளின் மூலம் வெளிவந்திருக்கின்றன. ஐஸ்லாந்து கடல்வரை அமெரிக்கக் கப்பல் போக்குவரத்துக்குப் பாதுகாப்பு ஏற்பட்டிருப்பதாய் வைத்துக்கொள்ளலாம். அப்பால் பிரிடிஷ் கப்பற்படை அவைகளைப் பாக்கி வழி பாதுகாக்கவேண்டும். இவ்விடத்தில் அபாயம் அதிகம். யுனைடெட் ஸ்டேட்ஸ் காவல்துணை புரிய வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லை. அமெரிக்கா ஐஸ்லாந்து வரையிலும் வரக்கூடிய சாமான்களைப் பாதுகாக்க பாரார் கொடுக்கப் போகிறதா அல்லது துணைக்கப்பல் அனுப்பப்போகிறதா என்பது தெரியவில்லை. யுனைடெட் ஸ்டேட்ஸ் இதுவரையிலும் கைக்கொண்டிருக்கும் இதர முறைகளைப் போலவே, இந்த முறையும் அதிக ஆபத்துக்குட்பட்டது. தான் அனுப்பும் பொருள்கள் பிரிடனுக்கு பத்திரமாய் போய்ச் சேரவேண்டுமென்று விரும்பினால் யுத்தம் செய்துதான் ஆகவேண்டும். "போர் முனையில்" பிரவேசித்ததிலிருந்தே அமெரிக்கா இந்த அபாயத்தை எதிர் பார்த்ததாகத் தெரியவருகிறது. இது விஷயத்தில் பிரிடன் மிகவும் நன்றி பாராட்டுகிறது. இதிலிருந்து வெற்றி வரலாம். வியாபாரக் கப்பல்களின் பாதுகாப்பிலும் கொள்ளைக்காரர்களின் வாலை எதிர்ப்பதிலும் உதவுவதற்கு அகண்ட அவகாசம் கொடுக்கிறது.

---

## யந்திர முறையினால் ஏற்பட்டிருக்கும் பிரச்னைகள்.
## ருஷ்யர்கள் எவ்விதம் அவைகளுக்குப் பதில் செய்கிறார்கள்.
## ருஷ்ய-ஜெர்மானிய வெற்றிகளை எவ்வாறு கண்டறிய வேண்டும்.

(சாணக்யன் எழுதுவது).

ருஷ்யாவில் தற்போது நிகழும் யுத்தத்தைப்போல் இதுவரை எந்த தேசத்திலும் எந்த யுத்தமும் உக்கிரகமாக நிகழ்ந்ததில்லை. எத்தனை படைகள் எதிர்த்து நிற்கின்றன என்று கூறமுடியாது. நாம் நினைத்திருந்த அளவுக்குமேலேயே

படைகள் இருக்கின்றன. ஜெர்மானியர் யந்திர சாதனம் கொண்டவைகளை விட 120 படைப்பகுதிகளை உபயோகிக்கின்றனர் என்று முன்பு நினைத்தோம். தற்போது அதற்கு மேலும் 40 படைப்பகுதிகளை உபயோகப்படுத்துகிறார்கள் எனத் தெரிகிறது. ருஷ்யர்கள் தங்கள் முழுபலத்தையும் உபயோகிக்கத்தான் செய்வார்கள். ஜெர்மானியர் படை எண்ணிக்கையை நம்பமுடியாது.

ருஷ்யப் போர் முனையில் எது நேர்ந்தாலும் யுத்தம் பழயமாதிரி இருக்காது. ருஷ்ய சைனியங்களை சின்னபின்னப்படுத்தி, ருஷ்ய எதிர்ப்பை, அபிஸீனியாவில் எவ்விதம் சிற்சிறு பகுதிகளான படைகள் எதிரிகளை துன்புறுத்தினார்களோ, அவ்விதமே, சிற்சிறு பகுதிகளால் நேரிடும்படி செய்தாலும், அதனால் ஜெர்மனிக்கு அது நினைத்த விதம் வெற்றிபெற்றதாகமாட்டாது. இவ்விதமின்றி ஜெர்மனிக்கு ஏராள நஷ்டமேற்படுமாயினும் பெரும் நஷ்டமும், நீண்டகால யுத்தத்துக்குப்பிறகும் அது வெற்றியடைந்தாலும், அது தோல்விக்கு சமத்துவமானது. இப்போது தாங்கள் இந்தப் போரில் மாட்டிக்கொண்டது பெரிய பிழை என்று உணருவதாகத் தெரிகிறது.

ருஷ்யரின் விடாமுயற்சியும், பராக்கிரமும் அவர்களுக்கு வியப்பை அளித்திருக்கிறது. "சைனியமும் பொருளும் ஏராளமாக நஷ்டப்பட்டிருக்கிறார்கள்."

முதன்முதலாக இப்போதுதான் தங்களுக்கு வல்லமையிலும், சைனிய பலத்திலும் குறைந்தவனுமில்லாத எதிரியை ஜெர்மனி காண்கிறது. ருஷ்யாதான் தற்கால யுத்தமுறையை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறது. வரிசைவரிசையாகவும், ஆங்காங்கு யுத்த ஸ்தலங்கள் நிர்மாணித்துக்கொண்டும் நடத்தப்பட்ட பழய யுத்த முறைகள் இன்றைய போரில் பிரயோஜனமற்றவை. இப்புதிய முறைகளான நீண்ட நீளமுள்ள யுத்த அரங்கத்தில் எவ்விதம் யந்திர துருப்புச் சாதனங்களைக்கொண்டு நடத்துவது என்று ஜெர்மனி பல யுக்திகளை கையாடிவருகிறது. நீண்ட போர்முனையில் யுத்தம் நடந்துவருகிறது என்பதை கவனத்தில் வைத்துக்கொண்டேதான் யுத்த அறிக்கைகளைப் படிக்கவேண்டும். ருஷ்யர்கள் "டாங்" களின் எதிர்ப்பைத் தேக்குவதற்கும், எதிர்த்து துரத்தி அடிக்கவும் பலமாகப் பிரயத்தனம் செய்கிறார்கள். இந்நோக்கத்துடன்தான், வேலின் நுனி போன்ற டாங்கி எதிர்ப்புகளுக்கும் பின் அணியான காலாட்படைகளுக்கும் மத்தியில் ருஷ்யா தன் காலாட்படைகளை அணிவகுத்திருப்பது.

ஆகையினால் எல்லைப்புறத்திலும் 200 மைல் கிழக்கேயும் ஒரேகாலத்தில் சண்டை நடக்கிறது. வெகுதூரம் எதிரி பிரவேசித்திருப்பதாகத் தோன்றும் பிராந்தியத்தில் டாங்கிச் சண்டைதான். எல்லைப்புறத்தில் இருதரப்பு காலாட்படைகளுக்கும் கைகலப்பு. ஆகையால் யுத்தம் எவ்விதம் நடந்துவிட்டது என்று சுத்தமாகக் கூறமுடியாது.

மேல் ஐரோப்பிய யுத்த அரங்கத்தில் டாங்கிகள் உள்புகுதலைத் தடுக்க இயலாமல் அவைகளுக்கு முன்பின் அடைந்துகொண்டே இருந்தன. ஏனெனில் சர்வ சைனியமும் ஒரேவரிசையாக எதிர்ப்பை தடுக்கவேண்டுமென்ற தப்பான



எண்ணத்தின்பேரில்தான். இதனால் பெரும் விபத்தும் நஷ்டமும்தான் ஏற்பட்டது. அவசர அவசரமாகச் சைனியங்களை வாபஸ் பெறுவது ஆபத்துக்கிடமாகியது.

ருஷ்யர்கள் எதிரியின் எதிர்ப்பை யுக்தியாக தடைசெய்கிறார்கள். டாங்கிகளை முழுபலத்தையும் வீணேசெலவழிக்கும்படி செய்து முன்னேற விடுத்து ஆகாயத்திலிருந்தும் தங்கள் டாங்கிகள்மூலமும் பிற்பட்டு எதிர்க்கிறார்கள். தங்கள் காலாட்படைகளைக்கொண்டு எதிரிகளைத் தாக்குகிறார்கள். அதாவது முன்காலத்திய குதிரைப்பட்டாளத்தைப்போல் இந்த டாங்கிப்படைகளைச் செய்துவிட்டார்கள். இம்முறையினால் எவ்வளவு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறதென்று கூறமுடியாது. ஆனால் இவ்விதமான முறையில்தான் டாங்கிகளின் எதிர்ப்பிலிருந்து ஒரு விதமாகத் தப்பமுடியுமென்று கருதப்படுகிறது. எவ்வளவு சீக்கிரத்தில் ருஷ்யப்படைகளை சீர்குலையச்செய்கிறார்கள் என்பதிலிருந்து ஜெர்மனியினுடையவும், எவ்வளவு நீண்டகாலம் ஜெர்மன்படைகளை முன்னேறவிடாமல் தடைசெய்கிறது என்பதிலிருந்து ருஷ்யாவினுடையவும் வெற்றி தோல்விகளை நாம் கணக்கிடமுடியும். மாஸ்கோவிற்கு மேற்கிலிருந்து கீவுக்கு மேற்குவரையிலுள்ள நீண்ட போர்முனையில் நிகழும் யுத்தம் ஜெர்மனியின் மின்னல் படையெடுப்பைப் போன்றதல்ல.

---

## ஆசிய-ருஷ்யாவின் முன்னேற்றம்.

## ருஷ்யாவின் மேற்கு பாகத்திலிருந்த தொழிற்சாலைகள் கிழக்கே மாற்றிவிடப்பட்டன.

## யூக்ரேன் பிடிபட்டால் ருஷ்யர்களை எவ்வாறு பாதிக்கும்.

(ஆசிய-ருஷ்யாவின் முன்னேற்றத்தைப்பற்றி அடியில் கண்ட விஷயங்கள் 'எகனாமிஸ்ட்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது).

மாக்னிடோகர்ஸ்க் என்னுமிடத்திலிருக்கும் சுரங்கங்களைச் சுற்றியுள்ள யூரல் தொழிற்சாலையோடு பிணைக்கப்பட்ட குஸ்னேட்ஸ் (Kusnotzk) என்ற இடம்தான் மத்திய ஆசியாவில் முக்கிய கைத்தொழிற்சாலை. அங்கு நடக்கும் கைத்தொழில் இயக்கம் பின்வரும் கணக்கிலிருந்து நன்கு தெரியும். 1913-ம் வருஷத்தில் யூக்ரேனில் நிலக்கரி உற்பத்தி 100-க்கு 87·2-ம், 1938-ல் 100-க்கு 60·3 மாக இருந்தது. இந்தக் கணக்கில் பார்த்தால் 1942-ல் 100-க்கு 48·7 தான் ஆகும். ஆனால் மாஸ்கோவைச் சுற்றி 100-க்கு 6·1 லிருந்து 15-க்கும், யூரலில் 6·4-ல் இருந்து 11-க்கும், மத்திய ஆசியாவில் 100-க்கு ·7-லிருந்து 2 வரையிலும் விருத்தி அடைந்திருக்கிறது.

இரும்பு, எஃகு உற்பத்தியிலும் இவ்விதமான மாறுதலைக் காணலாம். சென்ற யுத்தத்திற்கு முன் யூக்ரேன் பிராந்தியத்திலிருந்து பூரா இரும்பும், எஃகும் எடுக்கப்பட்டன. ஐந்துவருஷ திட்டத்தின் படி 1912-ம் வருஷத்தில் 2,75,00,000 டன் அதாவது 100-க்கு 53 வீதம் தான் எடுக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். விவசாயத்திலும் நீர்ப்பாசன திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றன.

சீதோஷ்ண ஸ்திதியும் ரப்பர் முதலான விளைபொருள்களுக்குச் சாதகமாக இருக்கிறது. விவசாய அபிவிருத்திக்காக பல பெரிய திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

யூக்ரேன் பிடிபட்டால் ருஷ்யாவின் சுமார் பாதி இரும்பு கைத்தொழில்களுக்கு கெடுதி ஏற்படும். காகேஸஸ் (Caucasus) ஜயிக்கப்பட்டால் எண்ணெய், அதைச் சுத்தி செய்யும் தொழிற்சாலைகளும் நஷ்டமாகும். ஆனால் ஐரோப்பிய ருஷ்யா பூராவும் ஆக்கிரமிக்கப்பட்டாலும், யூரல் பிரதேசத்திலும், ஆசியாவிலுமிருக்கும் கைத்தொழில்கள் கெடமாட்டா.

ஒருக்கால் ருஷ்யர்கள் யூரல் மலைச்சாரல் வரை நிதராமல் பின் வாங்கினால், யந்திர சாமான்கள், முக்கியமாக எண்ணெய்க் எடுக்கும் யந்திரம் தேவையாக இருக்கும். இவைகளைக் கொண்டு ஆசிய-ருஷ்யாவில் புது எண்ணெய்க் கிணறுகள் தோண்டலாம். சீக்கிரத்தில் எல்லா இந்த உபகரணங்கள் வ்ளாடிவாஸ்டக் மூலம் வருவதைப் பொறுத்து இருக்கிறது.

---

# அமெரிக்கரின் அபிப்பிராயங்கள்.

---

## ருஷ்யாவிற்கு அமெரிக்கா உதவவேண்டுமா?

## அமெரிக்கக் கப்பற்படை செய்யக்கூடிய உதவி.

## நாஜிகள் கிழக்குப்பக்கம் போக ஹெஸ் காரணமாகுமா?

**போஸ்டன் டிராவலர்.**—ஜூன் 25-ம் தேதி.

ருஷ்யாவிற்கு உதவி புரிந்து அதன் சிநேகத்தை அடைவது கெடுதலல்ல. ஜெர்மனியை எதிர்க்கும் எந்த நாடுகளுக்கும் சாமான்கள் உதவுவதென்று சொல்லுவது ஹிட்லரின் கொள்கையை அடியோடு ஒழிக்க சகாயம் செய்வதாகும்.

**நியூ யார்க் டைம்ஸ்.**—ஜூன் 30-ம் தேதி.

பிரிடனை எதிர்க்கு முன்னே அவசியமாயும் துணிகரமாயும் ஹிட்லர் ருஷ்யாவை எதிர்ப்பது புத்திஹீனமாகவோ, அயோக்யத்தனமாகவோ தளவாடங்களின் குறைவோ காரணமாக இருக்கலாம். ஜெர்மனி தற்பொழுது நாஸித்தலைமை குறைந்து சைனிய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருக்கிறது. லேயின் செல்வாக்கு குறைந்தும், கோயபல்ஸும் புதுக்கட்சியில் உதவி புரிய அவகாசம் கொடுக்கப்பட்டார். இதர சிறு கட்சித்தலைவர்கள் தள்ளப்பட்டார்கள். பிரசார இலாகாவின் பத்திரிகைத் தலைவர் போயுமர் மூன்று வாரங்களுக்கு முன் போன இடம் தெரியாது. ஹெஸ் பிரிடனுக்கு ஓடின பிறகு ரகசியப் போலீஸ், ஸ்டாம் டுரூபர் ஆடையில் வண்டிகளில் இருந்த பலரை வடபெர்லினில் சூழ்ந்துகொண்டது. பிரஜைகளுடன் ஹிட்லருக்கு சம்பந்தம் குறைந்தது. ஹிட்லருடன் சில சமயங்களின் முக்கியமான விஷயங்களைப்பற்றிப்பேச உத்தியோகஸ்தர்களுக்கே பல



வாரங்களுக்கு ஒருதரம் அவகாசம் கிடைக்கிறது. அப்பொழுது அவர்கள்மீது எரிந்து விழுகிறார். ஜனங்கள் ஒத்தாசை தனக்கு இல்லையென்றும், அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்றும் அவரிடம் தெரியப்படுத்த பயப்படுகிறார்கள். ஜெர்மன் அதிருப்தியைப்பற்றி ஹெஸ் நன்கறிவார். ஆகையால்தான் பிரிடிஷ்காரர்களை சமாதானம் செய்யச்சொன்னார். ஜெர்மன் உரிமைகளை ருஷ்யா மறுத்தால், ஜெர்மனி சண்டை தொடரும் என்றும்; அப்பொழுது பிரிடனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் சண்டையைத் தொடர்ந்தால் ஜெர்மனி ருஷ்யாவில் மட்டியும் என்றும் ஹெஸ் பயந்தார்.

**நியூயார்க் ஸன்.**—ஜூன் 30-ம் தேதி.

சண்டையில் ஈடுபடாத பொது ஜனக்கூட்டம், தொழிலாளிகள் கூட்டம் சேகரிக்க பிரிடிஷாரின் அழைப்பிற்கு யுனைடெட் ஸ்டேட்ஸின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் பதில் வந்திருக்கிறது. நியூ யார்க்கிலுள்ள பிரிடிஷ் கான்ஸலேட் ஆபீஸில் தினம் மனுக்கள் குவிகின்றன. இரண்டு வாரங்கள் செல்வதற்கு முன்னே கனடாவின் ஒரு துறைமுகத்திலிருந்து வாலண்டியர்களின் முதல் கூட்டம் வெளியேறும்.

ரேடியோ இஞ்சினியர்கள், கொல்லுவேலைக்காரர்கள், மின்சார இஞ்சினியர்கள், தச்சுவேலைக்காரர்கள், யந்திர ஆயுத வேலைக்காரர்கள் கப்பல் கட்டும் வேலைக்காரர்கள் இதில் அடங்கி இருக்கிறார்கள். இவர்களுள் அநேகம் பேர்கள் ரேடியோலொகேடர் வேலை செய்து எதிரிகள் கப்பல்களை வேவு பார்க்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்,

இத்தொழிலாளிகளைத் திரட்டும் முதல் வாரத்திலேயே 3,000 மனுக்களுக்கு மேல் வந்தன. மேலும் நூற்றுக்கணக்கான மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. எல்லாவித பொது மக்களிடமிருந்து வருகின்றன.

**நியூயார்க் ஹெரால்ட் டிரிபியூன்.**—ஜூலை 1-ம் தேதி.

கடல் மூழ்கிக் கொள்ளையிலிருந்து சமுத்திரங்களைப் பாதுகாக்கவும் பிரிடனுக்குப் போக்குவரத்து சாதனங்களை ஆபத்தில்லாமல் செய்யவும் அமெரிக்கக் கப்பற்படையின் தீவிர உபயோகம் வெகுவாக உதவவேண்டும். ருஷ்யாவில் சண்டை எப்படி ஆனாலும், பிரிடிஷ் படைகள், மேற்கு ஜெர்மனியில் அமைந்துள்ள கட்டடங்களுக்கும் போக்குவரவு சாதனங்களுக்கும், இன்னும் நீர்மூழ்கி வைக்கக் கூடிய இடங்களுக்கும் கடுமையான ஆபத்தை விளைவிக்கவேண்டும்.

இவையெல்லாம் லுப்ட்வாப்படை ருஷ்யாவிற்குப் போயிருக்கும் சமயத்தில்தான் செய்யலாம். பகல் வேளைகளிலே ஹாம்பர்க், ப்ரெமன் முதலிய இடங்களில் கடுமையாக பிரிடிஷார் தாக்குகிறார்கள்; இருதிறப்பார்களும் மும்மரமாக இருப்பதினால் சிலவாரங்களில் பெரிய வெற்றியைக் கடைசியாக எதிர்பார்க்கலாம்.

**ஸெயின்ட் லூயி ஸ்டார் டைம்ஸ்.**—ஜூன் 30-ம் தேதி.

தங்கள் எண்ணம் நிறைவேறவே, நாஸி மேலதிகாரிகள், ஸோவியத் ருஷ்யாவிற்கு விரோதமாக ஐரோப்பிய நாடுகள் கிளம்புகின்றன என்று பொய்யாகச்

கூறுகிறது. நாஸி அரசாங்கத்தாரால் தவித்துக்கொண்டிருக்கும், போலந்து பல்கேரியா, கிரீஸ், யூகோஸ்லாவியா கிளம்பவில்லை; பிரிடன் அமெரிக்க சிநேகம் முறியவில்லை. சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் இந்த இரண்டு நாடுகளின் நோக்கத்தை பகிரங்கமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுடன் நேசமான டிகாலி, நார்வே, நெதர்லந்து தலைவர்கள் ஒற்றுமையாகவே இருக்கிறார்கள். டென்மார்க்குக்கூட ருஷ்யாவிற்கு விரோதி என்று பல தடவைகளில் கெட்ட உரம் போட்டுப் பேசும் ஹிட்லரின் மொழிகளுக்கு இணங்கவில்லை.

## கதம்பம்.

1. "நான் விரும்பும்போதெல்லாம் ஒவ்வொரு சமயத்திலும் மனப்பூர்வமாக உதவும் சைனியத்திற்கு தளகர்த்தாக இருப்பதை நான் கௌரவமாக நினைக்கிறேன்".

(ஜெனரல் ஆர்ச்சிபால்டு வேவல் அவர்களின் அறிக்கை, ஜூலை 18)

2. "இந்தியா தேசிய தற்காப்புச்சபை 'ஆமாம்சாமி' என்று சொல்லும் அங்கத்தினர்கள் நிறைந்ததல்ல".

(மிஸ்டர் அமெரி, லண்டனில், ஜூலை 22.)

3. "நாம் இருவரும் சேர்ந்து எதிர்க்கும் பெருமையோடு நாங்கள் வந்தனமளிக்கிறோம், ஜயம் கிடைக்கும்வரை நாம் ஒன்றுசேர்ந்து யுத்தம் புரிவோம்."

(மாஸ்கோ ஸோவியத் அக்கிராசனாதிபதிக்கு தந்தி செய்தி லண்டன் ஜில்லா சபை அக்கிராசனர், மிஸ்டர் இ. ஜி. அம்மான், ஜூலை 23)

4. "இந்தத் தடவை யுத்தத்தின் முடிவிலடையும் சமாதானம் பிறகு அழியாது. சமாதானத்தைப் பாதுகாக்க மேலான அஸ்திவாரம் போடுவோம்."

(பெல்ஜியத்தின் தேசிய நாள் கொண்டாட்டத்துக்கு பிரிடிஷ் வெளிநாட்டுக் காரியதரிசி, மிஸ்டர் ஈடன், ஜூலை 21.)

5. "சென்ற கோடைகாலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியடைந்தவுடன் இங்கிலாந்தின் நிலைமையில் ஜெர்மனி இருந்தால், ஜெர்மானியர் நிச்சயமாய்ச் சரண்புகுந்திருப்பார்கள்."

(பி. பி. ஸி. பேச்சில் ஸெபஸ்டியன் ஹாப்பனர் என்பவரின் அபிப்பிராயத்தை ஜெ. பி. பிரிஸ்ட்லி மேற்கோளாக எடுத்துக்காட்டியது, ஜூலை 17.)

6. "சென்ற புதன்கிழமை பிரிடிஷ் விமானங்கள் ராட்டர்டாமுக்குமேல் பறந்தவுடன் அங்கிருக்கும் ஜனங்கள் வெகுவாக ஆரவாரம் செய்தார்கள். ஜெர்மானியர் அபிப்பிராயப்படி இது கெட்ட வழக்கமாம். டச்சுக்காரர்கள் இதை இன்னும் விடவில்லையாம்."

(ஜெர்மனிக்கு அடங்கிய ஹாலந்து, கம்பியில்லாத் தந்திச்செய்தி, ஜூலை 23).

7. "விவாகத்தின் லக்ஷியம் தெய்வத்தன்மை வாய்ந்ததுமல்ல, இயற்கையானதுமல்ல. ஆனால் ராஜாங்கத்திற்குட்பட்டது. அதாவது ராஜாங்கத்திற்கு



குழந்தையின்பேரில் பூரா அதிகாரமும் இருக்கிறது. இப்படிக்கில்லா விவாகம் யோக்கியமானதல்ல. ஆகையால் அது நிறுத்தப்படவேண்டும்." ஹிட்லர் இந்தியாவைப் பிடித்துக்கொண்டால் இந்த கெதிதான்.

("எலைட் கார்டு," என்ற நாஸி ஸர்க்கார் பத்திரிகை.)

8. பனிரெண்டு மாதங்கள் ஆகியும் வெற்றி சமீபித்துவிட்டது என்று இன்னும் சொல்லுவதற்கில்லை. முதல் மல்யுத்தம் முடிந்து மறுயுத்தத்திற்கு 'தம்' எடுத்துக்கொண்டிருக்கிறோம். சென்ற வருஷத்தைவிட இப்பொழுது, நாம், பனிரெண்டு மாதங்களாய்ச் செய்த பிரயத்தனத்தால் வெற்றி நெருங்கிவிட்டது.

(மேன்மை தங்கிய வைஸ்ராய் மதராஸ் ஜூலை 31.)

9. "நாம் நினைப்பதைவிட சமீபத்தில் க்ஷேமம் வந்துவிட்டது. ஹிட்லரால் தொந்தரவடையும் ஜனங்கள் அதைக்காண்கிறார்கள்."

"இச்சண்டைத் தீ பெரும் காட்டுத்தீயைப்போல் பரவுகிறது. கொஞ்சமும் கலைக்காமல் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவோம்."

(மிஸ்டர் எச். ஏ. வாலஸ், யுனைடெட் ஸ்டேட்ஸின் உபதலைவர், பெர்லிங்டன், ஜூலை 31.)

10. "ஸூயஸ் கால்வாய்க்கும் ஹாங்காங்குக்கும் மத்தியில் இந்தியா ஸ்வதந்திர யுத்தத்திற்கு தளவாட உற்பத்திசாலையாக இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது துவக்கப்பட்டிருக்கும் ராஜீய மாறுதல்கள் ஸர்க்காருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளாக இருந்தவைகளை தேசிய தொழிற்சாலைகளாக மாற்றுவதேதான்."

(லண்டன் டைம்ஸ், ஆகஸ்டு 1.)

11. "நூறு வருஷங்களுக்குமுன் நெபோலியன் செய்தபடி ஹிட்லர் உலகத்தை தலைகீழாக மாற்றிவிட்டார். கடைசியில் நெபோலியன் டியூக் ஆப் வெல்லிங்டனால் துலைக்கப்பட்டான்..........சமீபித்து வரும் மாதங்கள் சிரமமான காலமாய் இருந்தபோதிலும், முடிவில் வெற்றி நம்முடையதென்று நிச்சயமாய் நம்பலாம்."

(பிரிடிஷ் பிரதிநிதி லார்டு ஹாலிபாக்ஸ், வாஷிங்டன், ஆகஸ்டு 2.)

## ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

### A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### கோயபல்ஸுக்கு மோசம் வந்துவிட்டது.

ஐயோ, பாவம் எத்தனையோ திரவ்யச் செலவுசெய்து, பிரமாதமான ஏற்பாடுகளோடு ஜெர்மனியில் பிரசார இலாகா ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது ருஷ்யாவில் ஜெர்மன் சைனியங்களின் தோல்வியை மறைக்கச் செய்யப்படும் பிரசாரங்கள் கேவலமாயும், அவமானமாயுமிருக்கின்றன.

ஏதோ இரண்டு இடங்களில் சற்று முன்னேறியதைத் தவிர, ஜெர்மன் சைனியங்கள், மற்றபடியாக, முன்னேறவேயில்லை. 15-நாட்களுக்குமுன்னேயே பிடி-

படப்போவதாகச்சொன்ன கீவ் நகரம் இன்னும் ருஷ்யர் கைவசம்தானிருக்கிறது. ஜுலை 16-ம்தேதியிலேயே கைக்கொண்டதாகச் சொன்ன ஸ்மாலென்ஸ்கும் இன்னும் பிடிபடவில்லை.

40 லக்ஷம் ஜெர்மன் வீர வாலிபர்களை, பலமற்ற, தலைவற்ற உத்சாகமற்ற ருஷ்யக் கூட்டங்கள் எதிர்ப்பதாக ஜெர்மனி பிரசாரம் செய்கிறது.

முறியடிக்கப்பட்ட ருஷ்ய சைனியங்களை எப்படியாவது காப்பாற்றுவதற்காக ஸ்திரீ சைனியங்களுடைய வாலிப சங்கங்களை போருக்கு ருஷ்யர்கள் அனுப்பி இதுவும் போதாது. பீடர்ஸ்பர்கிலுள்ள தொழிற்சாலை காவல்க்காரர்களையும், பென்ஷன்பெற்ற போலீஸ்க்காரர்களையும், நெருப்பு-அணைக்கும் காரியஸ்தர்களையும், ஒட்டைத் துப்பாக்கிகளையும், கத்திகளையும் கொடுத்து, போகாவிட்டால் பீரங்கிக்கு இரையாகவேண்டுமென்று பயமுறுத்தி, ஜெர்மன் மின்னல்படையோடு சண்டைபோடச்சொன்னதிலிருந்து 1,000 கணக்காக ஜனசமத்துவக் கட்சியைச் சேர்ந்த ருஷ்யர்கள் கைதுசெய்யப்பட்டும், மாண்டும் போனார்கள். என்று ஜுலை 21-ல் இந்தியாவுக்கு ஜெர்மனி ஒலிபரப்பிற்று.

ஆனால், அதற்கு 3-நாட்கள்கழித்து, நாஷனல் ஸெய்டங் என்ற எஸ்ஸன் பத்திரிகை, 'ருஷ்யர்களுக்கு ஏராளமான சைனியமிருக்கிறது; புதுப்புதுப் படைகள் வருகின்றன; பிடித்ததாக நினைத்த கோட்டைகளெல்லாம் மறுபடியும் சுரங்கங்களிலிருந்து சண்டை கிளம்புகிறது; கைப்பற்றிய இடங்களை மறுபடியும் பிடிக்கவேண்டி வருகிற' தென்று எழுதியிருக்கிறது.

இதிலிருந்து, கேவலம் காவல்க்காரர்கள், நெருப்பு அணைப்பவர்கள், ஒட்டைத் துப்பாக்கிக்காரர்களென்றவர்கள் சாதாரணமானவர்களில்லை என்று தெரிகிறது.

## அழிக்கப்பட்ட ரேடியோ நிலயம் திடீரென்று புனருத்தாரணமாயிற்று.

ஜுலை 18-ல் ஜெர்மன் விமானத் தகர்ப்பால் லெனின்கிராடிலுள்ள ரேடியோ நிலயம், ஒரு க்ஷணத்தில், யந்திரங்களுள்பட, அழிந்ததாகச் சொல்லிவிட்டு, ஜுலை 23-ம் தேதியன்று அழிந்த ரேடியோவிலிருந்து மாஸ்கோ நகரத்தின் மேல் நடந்த விமான எதிர்ப்பைப்பற்றிய செய்தி வந்ததாக ஜுலை 24-ல் ஜெர்மன் ரேடியோ பிரஸ்தாபித்தது. 18-ம் தேதிக்கும், 23-ம் தேதிக்கும் நடுவே 5 நாட்கள்தான் உண்டு: இதற்குள் இடிந்த, உடைந்த ரேடியோ நிலயம் எப்படிக் கட்டப்பட்டதோ தெரியவில்லை!

## மத்தியதரைக்கடல் முஸோலினிக்குச் சொந்தக் கடலாம்.

சென்ற வாரத்தில் மத்தியதரைக்கடலில் துணையோடுசென்ற பிரிடிஷ் கப்பல்களை விமானங்களைக் கொண்டு எதிர்த்ததைப்பற்றி ஜுலை 25-ம் தேதி இதாலிய யுத்த அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகிறது:—

'நமது வெடி விமானங்கள் 10,000 டன் பிரிடிஷ் கப்பலை அமிழ்த்திற்று: மற்றொரு 21,000, டன் கப்பலையும், 15,000 டன் டான்கரையும் டார்பிடோ விமானங்கள் அமிழ்த்தின.'



'ஜிப்ரால்டருக்குத் திரும்பிச் சென்ற ஒரு க்ருயிஸரும், யுத்தக் கப்பலும் தாக்கப்பட்டன: பின் சொன்ன கப்பல்மேல் 500 கிலோ கிராம் குண்டு விழுந்தது. ஜுலை 23-ல் ஒரு இதாலிய வெடி விமானத்தால் விமானம்தாங்கிக் கப்பல் பழுதாக்கப்பட்டது இதோடு வியாபாரக் கப்பலொன்றும் நஷ்டம். இதாலிய விமானங்களில் 5 காணோம்: 8 பிரிடிஷ் விமானங்கள் உடைக்கப்பட்டன.'

இந்த 3 நாள் சண்டையில் உண்மையாய் பிரிடனுக்குக் கேற்பட்ட நஷ்டம்:—

1—நாசகாரி-பழுதாகிப் பின் பிரிடிஷ் கப்பல்களாலேயே அமிழ்த்தப்பட்டது.
1—நாசகாரி பழுதாக்கப்பட்டது.
1—வியாபாரக் கப்பல் பழுது: ஆனால் பத்திரமாய் துறைமுகம் சேர்ந்தது.
6—விமானங்கள்: ஆனால் விமான ஓட்டிகள் பத்திரம்.

**இதாலியின் நஷ்டம்:—**

1—நீர்மூழ்கி—உடைபட்டிருக்கலாம்.
1—ஈ-ப்படகு—அமிழ்த்தப்பட்டது.
1—ஈ-ப்படகு—பழுது.
12—விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன.
4—விமானங்கள் பழுதாயிருக்கலாம்.

'இந்தச் சண்டை மத்தியதரைக்கடலில், எதிரி நிலயங்களுக்குச் சமீபத்தில் ஒடுக்கமான, அபாயமான இடத்தில் நடந்தது. புதுச் சைனியங்களும், வெடிகளும், ஸப்ளைகளும் நம்முடைய கப்பல்களில் போய்கொண்டிருந்தன; ஆனால் துணை கொண்டு சென்ற இந்தக் கப்பல்கள் சரியான காலத்தில் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தன' என்று கப்பற்படை இலாகா மந்திரி மிஸ்டர் ஏ. வி. அலெக்ஸாண்டர் ஜுலை 26-ல் ஒலிபரப்பித் தெரிவித்தார்.

கரியரெ-டெல்லா-ஸெர்ரா விடுத்திருக்கும் செய்தி, மற்ற இதாலியச் செய்திகளைப்போலவே முழுப் பொய்யென்று 1941—மே-27-ல் ஜெர்மன் உத்தியோக அறிக்கை சொன்னதை ஒத்திருக்கிறது.

## ஜெர்மனிக்குப் பயம் பிடித்துவிட்டது.

ஜுலை 22, 23, 24-ல் ஜெர்மனிக்கு 7 விமானங்களும், பிரிடனுக்கு 102 விமானங்களும் நஷ்டமென்று ஜெர்மனி ஜுலை 24-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

உண்மை நஷ்டக் கணக்கு ஜுலை 22-ல் 6 பிரிடிஷ் பைடர்கள், ஜெர்மனிக்கு 9. ஜுலை 23-ல் 10 பிரிடிஷ் பைடர்களும் 5 பிரிடிஷ் வெடி விமானங்கள், 14 ஜெர்மன் பைடர்கள்; ஜுலை 24-ல் 7 பிரிடிஷ் பைடர்களும் 15 பிரிடிஷ் வெடி விமானங்களும், 34 ஜெர்மன் பைடர்களும்.

ஆகவே, மொத்தத்தில் பிரிடிஷ் பைடர் நஷ்டம் 43, 102 அல்ல; ஜெர்மனிக்கு நஷ்டம் 57. ஜெர்மனி சொல்லுவதை விட 50 கூட.

பிரிடிஷ் விமானப்படையெடுப்பு பலக்க பலக்க, ஜெர்மானியர் கிலிபிடித்து பிரிடிஷ் விமான நஷ்டத்தை அதிகப்படுத்திச் சொல்லுகிறார்கள். சென்ற வருஷம் பிரிடன் மேல் விமான எதிர்ப்பும்போது தனக்கேற்பட்ட நஷ்டத்தை பிரிடனுக்கென்று மாற்றிவிட்டார்கள்.

## ஜெர்மனி சீக்கிரத்தில் சண்டையை முடிக்க விரும்புகிறது. கோயபல்ஸின் காலநிர்ணயம்.

கொடுமையான ஜெர்மன் தாக்குதலுக்குத் தகுந்தபடி ருஷ்யா ஜவாப்பு சொல்லுவது ஜெர்மானியரின் மேகண்ட தற்புகழ்ச்சியான எண்ணங்களைக் கவிழ்த்துவிட்டது.

**நவம்பர், 1940**

"இன்னும் 6 மாத காலத்திற்குள், நான் சொன்னபடி வெற்றியை அடைவேன்."

ஸ்காண்டிநேவியன் நிருபருக்கு கோயபல்ஸ் பெர்லினில் சொன்னது.

**மார்ச், 1941.**

"இவ்வருஷத்திற்குள் ஜெர்மனி சண்டையை முடித்துவிடும் என்று நிச்சயமாய்க் கூறுகிறேன்".

ஸ்பெயின் நிருபருக்கு கோயபல்ஸ் பெர்லினில் சொன்னது.

**ஜூன் 26, 1941.**

"ருஷ்ய சைனியம் ஆரம்பத்திலேயே தோற்கடிக்கப்பட்டதே."

கோயபல்ஸ், டென்ஸ்ட்-அப்-டியூட்ச்லண்டில் சொன்னது.

**ஜூன் 30, 1941.**

"தற்சமயம் ஜெர்மன் சைனியம் நிச்சயமாக எதிர்க்கப்படவில்லை."

பெர்லின் சமாசாரத்தை ரோம் ரேடியோ ஒலிபரப்பியது.

**ஜூலை 7, 1941.**

"ருஷ்யச் சைனியம் பூரா மடிந்துவிட்டது."

ஜெர்மன் யுத்த கம்யூனிகே.

**ஜூலை 13, 1941.**

"இது முதற்கொண்டு ருஷ்யாவில் ஜெர்மானியர் வெற்றிகரமாகப்போகும்."

ஜெர்மன் ஒலிபரப்பு.

**ஜூலை 15, 1941.**

"ருஷ்ய சைனியம் அறவே மடிந்தது என்றதை ஒருவரும் மறுக்கமுடியாது."

போர்ச்சுகீஸ் பாஷையில் ரோம் ஒலிபரப்பு.

**ஜூலை 20, 1941.**

"ருஷ்ய சைனியத்தின் பலம் தொலைக்கப்பட்டது."

ஜெர்மன் ஒலிபரப்புகள்.

**ஜூலை 21, 1941.**

"இன்னும் சில நாட்களில் லெனின்கிராட்டைப் பிடிப்போம் அல்லது தானாகவே காலி செய்யப்படும்."

நார்வீஜியன் பாஷையில் ஜெர்மன் ஒலிபரப்பு.



எந்தெந்த வாரங்களில் ஜெர்மானியர் வெற்றியடைந்தார்களோ அவ்வேளைகளிலெல்லாம் ருஷ்ய சைனியம் கலையாமல், சத்ருக்களின் பின்னால் முன் விட்டுப் பின்தாக்கித் திடீரென்று பாய்ந்தன. இது ஹிட்லருக்கு நாசம்தான்.

ஜெர்மானியர் நினைத்தபடி துரிதமாகவே ருஷ்யாவில் நடந்தேறுவதால் நாடறிந்த சமாதானப்பேச்சுகள் ஜெர்மனியின் ஆக்கிரமணத்திற்குக் குறுக்கே இருக்கும் நாடுகளிடம் பிரஸ்தாபிக்கப்படும் என்று அனுமானிக்கப்படுகிறது.

பித்தலாட்டம் செய்கிற ஜெர்மனியுடன் கலந்துகொள்ள பிரிடன் நிச்சயமாக மறுத்துவிட்டது. உலகம் நாஸி கொடுங்கோலுக்கு நிரந்தரமாக உட்படுமென்று ஜெர்மன் தலைவர்கள் ஜெர்மன் மக்களிடம் சொல்லிவருகிறார்கள்.

ருஷ்யச் சண்டையில் ஜெர்மன் ஜயித்தால் மற்ற நாடுகளுக்கு விபத்து அதிகப்படும். ஆனால் பிரிடிஷ் உதவியுடன் ருஷ்யா ஜயித்தால் ஜெர்மனியின் எண்ணங்களெல்லாம் முறிபடும். இப்பொழுது எல்லா நாடுகளும் ஜெர்மனியின் ஆதிக்கத்தால் விளையும் கேடுதல்களைத் தடுக்க ஆரம்பித்துவிட்டன. கொடிய பிராணியைச் சாதாரணமாகக் கட்டியிருப்பதைப்போலல்லாமல், யாவரும் ஒன்று சேர்ந்து ஜெர்மனியை இறுகக்கட்ட தாமதிக்கக்கூடாது.

## ஒரு காரணம் இருக்கிறது.

வின்ஸ்டன் சர்ச்சில் விமானங்களால் தாக்குண்ட ஜனங்களின் இடையே சென்று யோக க்ஷேமம் விசாரிப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஜனங்களும் அவரை வரவேற்கிறார்கள். ஆனால் ஹிட்லர் அப்படி செய்கிறதாக நான் கேள்விப்படவேயில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

டச்சு பெர்னார்ட் ராஜகுமாரன், லண்டன், ஜூன் 14, 1941.

## B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### நாஸிகள் வாக்களித்தால், வந்தது ஆபத்து.

ஜெர்மனியில் யுத்தக் கைதியாக இருக்கும் இந்திய சிப்பாய்களைப்பற்றி பல தடவைகளில் பலவாறாக பெர்லின் ரேடியோ ஹிந்துஸ்தானி பாஷையில் ஒலிபரப்பியிருக்கிறது. ஜூலை மாதம் 24-ந்தேதி அம்மாதிரி ஒலிபரப்பியபொழுது ஜெர்மனிக்கு இந்தியாவிடத்தில் கொஞ்சமேனும் விரோத மனோபாவம் என்பதே கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிற்று.

இம்மாதிரி பேச்சுகளினால் உலகம் ஏமாந்துபோய்விடாது. நாஸிகளின் கைகள் ரத்தத்தில் தோய்ந்துகிடக்கின்றன. நாஸிகள் ஒரு நாட்டைத் தாக்கவில்லை என்று உறுதியளித்தாலே அந்த நாட்டுக்கு வந்தது ஆபத்து என்பது உலகம் அறிந்த சமாசாரம். நாஸிகள் செய்த கணக்கு வழக்கில்லாத குற்றங்களில் சிலவற்றைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஹாலந்து (Holland).—1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி ஹேக் (Hague)கிலிருக்கும் ஜெர்மன் ஸ்தானிகர் பின்வருமாறு பேசினார்:—"எச்சமயத்திலும், எக்காரணங்களுக்காகவும் ஜெர்மனி ஹாலந்தைப் படையெடுக்காது" ஹாலந்து 1940-ம் வருஷம் மே மாதம் ஜெர்மனியால் தாக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டது.

2. பிரான்ஸ் (France).–1939, ஸெப்டம்பர் 9-ம் தேதி கொயரிங் (Goering) சொல்லியதாவது—"பிரான்ஸினிடமிருந்து எங்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை. பிரான்ஸை நாங்கள் ஒரு நாளும் படையெடுக்க மாட்டோம்." பிரான்ஸ் 1940-ம் வருஷத்தில் ஜெர்மனியால் தாக்கப்பட்டு, சீர்குலைக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டது.

ருஷ்யா (Russia).—1939, ஸெப்டம்பர் 25-ல் வோல்கிஷர் பியோபாச்டரி (Voelkischer Beobachter)ல் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "பிரிட்டனுக்காக, ருஷ்யாவும் ஜெர்மனியும் இனிமேல் ஒருநாளும் தங்கள் வாலிபர்களை பலி கொடுக்காது. பெரிய ஐரோப்பிய நாடுகளான ருஷ்யாவிற்கும், ஜெர்மனிக்கும் ஏற்பட்டிருக்கும் இவ்வொப்பந்தம் உலக சரித்திரத்திலேயே ஒப்புயர்வற்றது." 1941 ஜூன் 22-ம் தேதி ருஷ்யா தாக்கப்பட்டது.

## இராக் (Iraq)கில் (நடக்காத) அக்கிரமங்கள்.

ஜூலை மாதம் 21-ம் தேதி ஹிந்துஸ்தானி, பர்ஸியன், அராபிக் பாஷைகளில் பெர்லின் ரேடியோ இராக்கில் பலர் தூக்கிலிடப்படுகிறார்களென்றும், ஹிம்சிக்கப்படுகிறார்களென்றும் ஆதாரமற்ற பல கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டார்கள். அவர்களுக்கு ஆதாரமாக அங்காரா (Ankara) செய்திகள் சொல்லுவதாகக் கூறிக் கொள்ளுகிறார்கள். அங்காரா (Ankara)வில் இராக்கைப்பற்றி பிரிடிஷார் மேற்கொண்டிருக்கும் கொள்கையைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை ஜூலை மாதம் 5-ம் தேதி துருக்கி பிரதம மந்திரி நிகழ்த்திய சொற்பொழிவில் விவரித்திருக்கிறார். "இராக்கின் நிலைமையை சமாளிப்பதில் பிரிடன் காட்டிய முன்யோஜனையும், சமயோஜித புத்தியையும் பாராட்டுகிறேன். இராக்குக்கு ஸ்வதந்திரம் அளித்ததைக்கேட்டு துருக்கி பிரிடனைப் புகழ்கிறது."

## பிரெஞ்சு ஸோமாலிலாந்து (Somaliland)க்கு உணவு.

ஜூன் மாதம் 22-ம் தேதி அராபிக் பாஷையில் ஒலிபரப்புகையில் பெர்லின் ரேடியோ பிரிடிஷார்கள் பிரெஞ்சு ஸோமாலிலாந்திலுள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும் பட்டினிபோட்டுக் கொல்லுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டியது.

உண்மையில் என்ன நடந்தது என்றால் போன ஜூன் மாதமே ஜெனரல் வேவல் (General Wavell) ஒன்று ஜெனரல் டிகாலின் ஸ்வதந்திரப் பிரெஞ்சுக் கக்ஷியைச் சேரவேண்டும், அல்லது விஷி அரசாங்கத்தின் அச்சுநாடுகளுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையை உதறித்தள்ளவேண்டும் என்ற இரண்டு



கோரிக்கைகளை ஜிபுடி (Jibuti) யிலிருக்கும் பிரெஞ்சு ஸோமாலிலாந்தின் கவர்னருக்கு சமர்ப்பித்தார். அக்கோரிக்கைகளை அவர் மறுத்தாலுங்கூட, பிரெஞ்சு ஸோமாலிலாந்திலிருக்கும் ஸ்திரீகளையும், குழந்தைகளையும் வெளியேற்ற தான் ஒத்தாசை செய்வதாகவும், அப்படி அவர்களெல்லோரையும் வெளியேற்றும்வரை பால் முதலான முக்கியமான சாப்பாடு வஸ்துக்களை தாங்களே ஸப்ளை செய்வதாகவும் ஜெனரல் வேவல் அறிவித்தார்.

## "படுகுழியில் விழப்போகிறோம்".

ருஷ்யாவில் கடந்த ஒரு மாதத்தில் ஜெர்மனி பெற்ற வெற்றிகளைப்பற்றி நாஸி ரேடியோ ஜூலை மாதம் 22-ம் தேதி ஹிந்துஸ்தானி பர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஒலிபரப்பியது "ஸோவியத்தின் சைனியத்திற்கும், விமானப் படைக்கும் படுசேதம் விளைவித்துவிட்டோம். இது வரையில் 15 லக்ஷம் ருஷ்ய சைனியங்கள் காயம்பட்டோ உயிர் துறந்தோ போயினர்". ஆனால் தன் சொந்த நஷ்டத்தைப் பற்றி ஜெர்மன் ரேடியோ ஒன்றும் சொல்லவேயில்லை. ருஷ்ய நஷ்டங்களைப்பற்றி ஜெர்மன் தளகர்த்தர்களே பலபேர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். 18-வது டாங்கிப்படையின் தளகர்த்தரான மேஜர் ஜெனரல் மெஹ்ரிங் (Major-General Mahring) என்பவர் தன் சைனியங்களுக்கு விடுத்த ஒரு உத்தரவு ருஷ்யப் படையால் கைப்பற்றப்பட்டது. அதில் பின்வருமாறு கண்டிருக்கிறது.—"நமக்கு மெஷினிலும், ஆயுதங்களிலும், இன்னும் மற்ற யுத்த தளவாடங்களிலும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் விரோதியிடமிருந்து ஒன்றும் நமக்கு கிடைக்கவில்லை. ஆம், நாம் ஜயித்துக் கொண்டுதான் போகிறோம். ஆனால் முடிவில் படுகுழியில் விழப்போகிறோம்".

## நாஸிகள் ஏமாற்றமடைந்தனர்.

ஜூலை மாதம் 23-ம் தேதி ஜெர்மன் ரேடியோ ஹிந்துஸ்தானி, பர்ஸியன், அராபிக் பாஷைகளில் பிரிடிஷார்கள் ஜூலை மாதம் 20-ம் தேதி ஐரோப்பா கண்டத்தில் தங்கள் சைனியங்களை இறக்குவதாக வாக்குறுதி செய்திருந்தார்கள் என்றும், ஆனால் அப்படி ஒன்றும் செய்யவில்லை என்றும் கூறிற்று.

பாவம், நாஸிகள் ஜூலை மாதம் 20-ம் தேதியன்று உச்சஸ்தாயியை யடைந்த "வி" (V) இயக்கத்தை இம்மாதிரி ஐரோப்பாவை பிரிடன் படையெடுக்கப் போகிறது என்று தப்பர்த்தம் செய்து கொண்டார்கள்போலிருக்கிறது. இதிலிருந்தே அவர்களுடைய மனோநிலை எந்த ஸ்திதியிலிருக்கிறதென்று தெரிகிறது. நாஸிகளுடைய தேசங்களைப் படையெடுப்பதற்கு முன்னால் பிரிடன் அவர்களிடம் தாங்கள் படையெடுக்கவருகிறோம் என்று சொல்லிவிட்டு வருவார்களென்று நினைத்தால், பாவம் அவர்கள் கட்டாயம் ஏமாந்தே போவார்கள்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 56.

1941—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு ... 9, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 10, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | மாலை | 5.30 |
| | | கீரப்பழனி ... | ,, | 6.00 |
| | | ஆலூர் ... | ,, | 6.30 |
| 11, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காரையூர் ... | மாலை | 6.00 |
| | | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 12, | செவ்வாய்க்கிழமை. | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 13, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... (பொன்னமராவதி) | காலை | 10.00 |
| | | புதுப்பட்டி | மாலை | 6.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |
| 14, | வியாழக்கிழமை ... | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 15, | வெள்ளிக்கிழமை... | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | | மழையூர் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 57.

| | | | | |
|---|---|---|---|---|
| 16, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 17, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| 18, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | மேலூர் ... | மாலை | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| 19, | செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| 20, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | | ஒலிக்கூர் ... | ,, | 6.00 |
| | | மருதம்பட்டி (நாங்குப்பட்டி). ... | ,, | 6.30 |
| 21, | வியாழக்கிழமை. | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| 22, | வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—9-8-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஆகஸ்டு ௴ 16௳ [ந. 57.

# 'வி'

'ஜயம்' 'ஜயம்'

பிரஸங்கம் 57.

## அச்சு நாட்டு பொய் பிரசாரங்களுக்கு இந்தியாவின் மறுமொழி.

" இந்தியாவையும், அதன் தொழிலையும், பிரிடன் ஸ்வய நலத்திற்கு உபயோகப்படுத்துகிறது."

### ஜெர்மன் பொய்கள்.

சண்டை தொடுத்த சில காலத்திற்குப்பிறகு, ஜெர்மன் பிரசாரகர்கள், இந்தியா, சண்டையில் பிரிட்டனுடன் கலந்துகொள்ளவில்லையென்றும் அது செய்யும்

உதவி மிகவும் கொஞ்சம் என்றும் மும்முரமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். லிபியாவிலும், அபிஸீனியாவிலும், இரிட்டிரியாவிலும், இராக்கிலும் இந்தியத் துருப்புகளின் வீரச்செயல்கள், முன்சொன்ன பிரசாரத்தைப் பொய்யாக்கின. ஆகையால் வேறுவிதமான பொய்யைக்கொண்டு ஏமாற்றும்படி வந்தது.

## பிரிடன் ஸ்வய லாபத்தை எதிர்பார்க்கிறது என்ற கட்டுக் கதை: பிரிடிஷ் முதல்.

பிரிடன் ஸ்வயநலம் இந்தியாவில் கருதுகிறது என்று சொல்லுவது சகஜம். இவ்விதமாகச் சொல்லும் வாதங்களைப் பரிசீலனை செய்யும்பொழுது, பிரிடன், இந்தியாவில் ஏராளமான முதல் செலவு செய்து ரயில்வேக்களும், தொழிற்சாலைகளும் அபிவிருத்தி செய்கிறது என்றுதான் தெரியவரும். இந்தத் தொழிற்சாலைகள் மூலம்தான் யுத்தத்தின் பொது உதவிக்குத் தேவையான தளவாடங்கள் தயார் செய்யப்படுகின்றன. விரோத பிரசாரம் செய்கிறவர்கள், ஐக்கிய நாடுகளிலும், தென் அமெரிக்க நாடுகளிலும் பிரிடன் போட்டிருக்கும் லக்ஷக் கணக்கான முதலைத் தன் நலத்திற்கு உபயோகிக்கிறதா என்பதை ஏன் கவனிக்கவில்லையோ. பிரிடிஷ் டொமினியன் நாடுகளிலும் ஏராளமாக பிரிடன் முதல் போட்டிருக்கிறது. ஆயினும் இவைகளைப்பற்றி குறைகூறாது இந்தியாவிலும் குடியேற்ற நாடுகளிலும் போட்டிருக்கும் முதலைப்பற்றித்தான் பிரஸ்தாபிக்கிறார்கள்.

## இந்தியத் தொழிலாளர்களை பிரிடன் தன் நலத்திற்கு உபயோகப்படுத்துகிறது என்ற கதை.

இந்தியத் தொழிலாளர்களை பிரிடன் ஸ்வயநலம் கருதியே உபயோகிக்கிறது என்பது மற்றொரு அபவாதம். அதாவது இந்தியாவில் தொழிலாளர் சங்கம் கூட்டவிடாமல் செய்து பணக்காரர்கள் அவர்களைக் கேவலம் அடிமை நிலைமையில் வைத்திருக்கிறார்களாம். ஆனால் ஜெர்மனி தான் தன் நாட்டில் வர்த்தகச் சங்கங்களை கலைத்து, ஜயித்த நாடுகளில் உள்ள தொழிலாளிகளை உண்மையான அடிமைகளாக்கி, உதாரணமாக, ஆயிரக்கணக்கான போலிஷ்காரர்களைத் தாழ்மைப் பட்ட நிலைமைகளில், ஜெர்மன் தொழிற்சாலைகளில் உழைக்கும்படி கட்டாயப் படுத்திற்று. இப்படி இருந்துகொண்டு பிரிடனைப் பறைசாற்றுவது ஆச்சரியம் தான். இந்தியாவில் உள்ள தொழிலுக்கும் பொது ஜனங்களுக்கும் அனுகூலமான சட்டங்கள் மற்ற தேசங்களைக்காட்டிலும் முன்னேறி இருக்கின்றன. முதல் தொழிற்சாலைச்சட்டம் 60-வருஷங்களுக்கு முன்னாடியே அமுலுக்கு வந்துவிட்டது. வர்த்தகச் சங்கங்கள், தகராறு தீர்க்கும்முறை, தொழிலாளிகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது, பிரசவ சாதனங்கள், சமாதானம், பஞ்சாயத்துத் தீர்ப்பது, சரியாக சம்பளம் பட்டுவாடா, கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் காலம், வசதிகள் சம்பந்தமாக எல்லாம் சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.



## மற்ற தேசங்களைவிட இந்தியாவில் தொழிலாளர் சட்டம் அதிகம் முன்னேற்றமடைந்திருக்கிறது.

இந்தியா இன்னும் விவசாயத் தொழிலைத்தான் கைக்கொண்டிருக்கிறது. ஆகையால் 40-கோடி ஜனங்களடங்கிய இந்தியாவில் சிறுபான்மையோர் தான் தொழிற்சாலைகளில் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள். ஆனால், தொழிற்சாலைகள் விருத்தியடைய அடைய தொழிலாளர் க்ஷேமத்தைக் காபந்துசெய்ய சட்ட திட்டங்கள் முன்னடைந்துவிட்டன. உதாரணமாக கடைசியாக 1934-ம் வருஷத்தில் திருத்தங்களுடன் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்சாலைச் சட்டம் விஸ்தாரமான ஏற்பாடுகள் கொண்டது. இதிலிருக்கும் சௌகரியம் மேல்நாடுகளில் கூட ஏற்படவில்லை. வேலை செய்யும் நேரம் குறிக்கப்பட்டிருக்கிறது: அதாவது வாரத்திற்கு 54-மணிகள்தான். சில இடங்களில் இதைவிட குறைவாகவே தானிருக்கிறது. சேர்ந்தாற்போல் இவ்வளவு மணிநேரம் தான் ஒரு கூலியாள் எஜமானனிடம் வேலைசெய்ய வேண்டுமென்பதும் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது. 12-வயதுக்குட்பட்ட ஒரு குழந்தையும் நியமிக்கப்படக்கூடாது. 12-வயது முதல் 15-வயதிற்குள்ளிருப்பவர்கள் தினம் 5-மணிகள் தான் வேலை வாங்கப்படலாம். ஆனால் கவர்ன்மெண்டு வைத்தியரிடமிருந்து சரீரத்தின் சரியான நிலைமைக்கு யோக்யதா பத்திரம் வாங்கி தாக்கல் செய்யவேண்டும். 15-வயது முதல் 17-வயது வரையில் உள்ள வாலிபன், தினம் 5-மணி நேரம் வேலை வாங்கப்படுவான். ஆனால் இவனும் சரீரத்தின் சரியான நிலைமைக்குப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டும். சரீரத்திற்கு அசௌகரியம் விளைவிக்காதபடி காற்றோட்டமிருக்கும்படியாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று எஜமானர்கள் நிர்பந்தம் செய்யப்படுகிறார்கள். நல்ல குடி தண்ணீர் வசதிகளும், வேலைக்கார ஸ்திரீகளுடைய குழந்தைகளுக்குத் தங்கும் வசதியும், கொஞ்சம் பிரதம வைத்திய சிகிச்சைக்கு வேண்டிய சாதனமும் தயாராக வைத்திருக்கப்படவேண்டும். வாரத்திற்கு வாரம் ரஜா நாட்களும், தினம் இடைப்பகல் (ஓய்வு) நேரமும் இருக்கவேண்டும். ஆபத்து நேராமல் சரியாக யந்திரங்களைச்சுற்றி பந்தோபஸ்து செய்யப்படவேண்டும்.

## ஆச்சரியப்படத்தக்க எண்ணிக்கைகள்.

சென்ற 40-வருஷங்களுக்குள் தொழிற்சாலைகளும் அதில் அமர்ந்துள்ளவர்களின் கணக்கும் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. 1902-ம் வருஷத்தில் 1,533 தொழிற்சாலைகளில், 5,41,634 வேலையாட்களும், 1922-ல் 5,144 தொழிற்சாலைகளில் 13,61,002 பேர்களும் இருந்தனர். கடைசியாகக் கிடைத்த கணக்கின் பிரகாரம் 1938-ம் வருஷத்தில் 9,743 தொழிற்சாலைகளில் 17,37,755 பேர்கள் இருந்தனர். அதில் 2,45,099 பேர்கள் ஸ்திரீகள். இவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மாலை 7-மணி முதல் காலை 6-மணி வரை ஓய்வுதான்.

## வர்த்தகச் சங்கங்கள்.

இந்தியாவில் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து சங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. பல தொழிற்சாலைகளில் கிராமத்தார்கள் வேலை

செய்கிறார்கள். கிராமத்திலுள்ளோர் பட்டிணங்களில் பணம் சம்பாதிக்க வருகிறார்களே ஒழிய அங்கே குடும்பத்துடன் வசிப்பதில்லை. ஆனால் கிராமங்களில் தான் வசிப்பது. இப்பேற்பட்டவர்களை சங்கங்களில் சேர்ப்பது சிரமமானதால் சங்கத்தார்கள் இவர்களை அதிகம் வற்புறுத்த முடிவதில்லை. மேலும் பெரும் பாலோர் இச்சங்கங்களை ராஜீய விஷயங்களில் தாங்கள் மேன்மை பெறவே வைத்திருக்கிறார்கள். இவ்வளவு சிரமம் இருந்தும் இவர்களின் அபிப்பிராயங்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறது. பிரிடனில் இருப்பதுபோலவே, 1926-ம் வருஷத்தில் இந்தியாவில் அமுலுக்குவந்த சங்க சட்டத்தினால் 1928—29-ல் 75 சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இவைகளில் 2,00,000 அங்கத்தினர்கள் இருந்தனர். 1937–38-ல் 420 சங்கங்கள் 4,00,000 அங்கத்தினர்களுடனும் தற்போது 700 சங்கங்கள் 5-லக்ஷம் அங்கத்தினர்களுடன் பதிவு ஆகியிருக்கின்றன. இதில் சந்தாக் கொடுக்கும் நபர்கள் ஸ்வல்பம்தான். சங்கங்களும் வரவு செலவு கணக்கு வைத்துக்கொள்ளுவதில்லை.

## சட்ட நிர்மாண சபைகளில் பிரதி நிதித்வம்.

1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி மாகாண சபைகளில் தொழிலாளர்களுக்குத் தனியே இடம் கொடுத்திருக்கிறது; இவைகளில் சிலர் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் தொகுதிகளாலும், தொழிலாளர் நிறைந்த விசேஷப் பகுதிகளாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

## வேலை ஆட்களுக்குத் தற்காப்பு: சமரஸ ஏற்பாடுகள்.

ராஜீய லக்ஷியங்களுக்காக விபரீதக் கக்ஷிகளால் தூண்டப்பட்டு வீணாகத் தொழில் நிறுத்தம் செய்வதில் இந்தியாவில் அதிக நஷ்டம் விளைந்திருக்கிறது. சில வருஷங்களாக பம்பாய் பஞ்சு யந்திர சாலைகளில் வேலை நிறுத்தத்தால் சுமார் 10-கோடி ரூபாய் நஷ்டம் விளைந்தது, என்று பம்பாய் தொழில் இலாகாக் கச்சேரியில் கணக்கிடப்பட்டது. அதே சமயத்தில் ஆமதாபாத்தில் யந்திர சாலைகளில் வேலைக்காரர்களுக்கு 2-லக்ஷ ரூபாய் தான் நஷ்டம். ஏனென்றால் ஆமதாபாத்தில் மில் சொந்தக்காரர்களடங்கிய பலமான சங்கம் ஒன்றும் வர்த்தகச் சங்கமும் இருக்கின்றன. மேலும் தொழிலாளிகளும், மில் சொந்தக்காரர்களும், அங்கே சிலநாள் வசித்த மகாத்மா காந்தியின் உபதேசத்தால், தாங்களாகவே தங்கள் நன்மைக்காகப் பஞ்சாயத்துச் செய்துகொண்டார்கள். இந்திய கவர்ன்மெண்டார் 1927-ல் இத்தகராறுகளைத் தீர்க்கச் சட்டம் ஏற்படுத்தினார்கள். அதன்படி பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தலாம். ஆனால் அதை ஒருவரும் பிரயோஜனம் செய்துகொள்ளவில்லை. 1934-ல் பம்பாய் கவர்ன்மெண்டு ஒரு சட்டம் கொண்டுவந்தது. அதன்படி லேபர் கமிஷனர்கள் மூலம் ஹிதத்தை நாடவும், கவர்ன்மெண்டு லேபர் உத்தியோகஸ்தர் மூலம் வேலைக்காரர்கள் தகராறுகளைத் தீர்க்கவும்கூடும். 1938-ல் இந்தச் சட்டம் விஸ்தாரப்படுத்தப் பட்டது. வேலைக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனவருத்தங்களைத் தீர விசாரிக்கவும் ஹைகோர்ட்டு நீதிபதியின் மேற்பார்வையில் விசாரிக்கவும் இடமிருக்கிறது. இந்த முறை மற்ற மாகாணங்களில் அநுசரிக்கப்பட்டுவருகிறது.



ஏனென்றால் தொழிலாளிகள் வேலையை நிறுத்தாமலும் எஜமானர்கள் தொழிற்சாலைகளைப்பூட்டிக்கொண்டு செல்லாமலும், தங்கள் இஷ்டம்போல் செய்யவிடாமல் சமாதான முறைகள் மிக அனுகூலமாக நடந்தேறின.

## சர்வதேசத் தொழிற்கூட்டத்திலும் இந்தியருக்குப் பிரதி நிதித்வம்.

இவ்விதமாக முன்னடைந்ததால், சர்வதேசத் தொழில்கூட்டத்தில் உத்யோக முறையில் இந்தியருக்கு இடம் கொடுக்கப்பட்டது. இதற்குச் சென்றவர்களில், மிஸ்டர் எம். என். ஜோஷி ஒருவர். ஜெனிவாவில் நடக்கும் கூட்டங்களுக்கு இந்தியாவிலிருந்து ஒவ்வொரு வருஷமும் ஒரு பிரதிநிதி அனுப்பப்படுகிறார்.

## உண்மை புலப்பட்டது.

ஆகையால் இது போன்ற உண்மை நடப்புகள்—இந்தியத் தொழிலாளிகள் வீணாக அடக்கப்படுகிறார்கள், அலக்ஷியம் செய்யப்படுகிறார்கள் என்ற—பொய்க் கதைகளை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அச்சுநாட்டுப் பிரசாரகர்கள் உண்மை நடப்புகளைத்தெரிந்து அவைகளைப் பரவச்செய்ய சிரமம் எடுத்துக்கொள்ளுவதில்லை.

---

# ஐரோப்பாவிலுள்ள இதர நடுநிலை நாடுகள்.

ஜெர்மனி ஏற்படுத்தப் போவதாய்ச் சொல்லுகிற உலக திட்டங்களை எதிர்த்து ருஷ்யா போர்புரிவதால், மற்றும் ஐரோப்பாவிலுள்ள நடுநிலைமை வகிக்கும் தேசங்களைக் குறித்து ஹிட்லர் மறுபடியும் கவனத்தைச் செலுத்தலாம். நடுநிலைமை வகிப்பதால் ஏற்படக்கூடிய தீங்குகளுக்கு இந்நாடுகள் காரணமாயிருக்கின்றன. சென்ற ஜூலை மாதம் 22-ம்தேதி யுனைடெட் ஸ்டேட்ஸின் காரியதரிசி மிஸ்டர் ஸம்னர் வெல்ஸ், "ஐரோப்பாவிலுள்ள இதர தனி அரசு புரியும் நாடுகளின்பேரில் ஜெர்மானியர் புதிய ஆக்கிரமிப்புத் திட்டம் போட்டிருப்பது," என்று தனக்குத் தகவல் வந்திருப்பதாக அறிவித்தார். இந்நாடுகள் சண்டை செய்யாமல் போனாலும், பரிதாபகர நிலையிலுள்ளவைகளாக இருக்கின்றன. அவைகளைப்பற்றி நாம் இங்கு சற்று ஆராய்வோம்.

## துருக்கி.

ஒரு மத்தியக்கிழக்கு ஸமஸ்தானம். ஆதலால் அதைக்குறித்து மிஸ்டர் வெல்ஸ் செய்த பிரஸ்தாபத்தில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அது எதிர்க்கப்படாமல் தப்பிக்கமுடியாது என்று நமக்குத் தெரிந்த விஷயமே. ஸம்னர் வெல்ஸ் பேசும்பொழுது, பின்லாந்து, பேருக்குமட்டில் நடுநிலை நாடாக இருந்தால் அதைப்பற்றியும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. ஸ்வீடன், ஸ்விட்ஜர்லாந்து, ஸ்பெயின், போர்சுகல் இவைகள்தான் பாக்கியுள்ளவை.

## ஸ்வீடன்.

ஸ்வீடனைச்சுற்றி, பின்லாந்து, எஸ்தோனியா, லெத்வியா, லிதுவேனியா, டென்மார்க்கு, நார்வே இவைகளெல்லாம் ஜெர்மன் கைவசத்திலோ அல்லது நாஸியின் ஆதிக்கத்திலோ இருக்கின்றன. ஆகவே ஸ்வீடன் நாலாபக்கத்திலும் வளைக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல சிறிய சைனியமும் அதைக்காட்டிலும் நல்ல பெரிய கப்பற்படையும் வைத்திருக்கிறது. ஆனால் ஸ்வீடனின் இரும்பு ஜெர்மனியில் நல்ல விலையாவதால் ஜெர்மனி விரும்பும் பக்ஷத்தில் ஸ்வீடனை ஒரே விழுங்காக விழுங்கிவிடும். சண்டையில்லாமலே ஜெர்மனி ஸ்வீடனிடமிருந்து தனக்குத் தேவையான பொருளை அடையக்கூடுமாகையால் ஜெர்மனிக்கு ஸ்வீடன் பேரில் சண்டைசெய்ய அவசியமில்லை. உதாரணமாக ருஷ்யா பின்லாந்தைத் தாக்கினபொழுது, பின்லாந்துக்கு ஸ்வீடன் உதவியனுப்பாமலும், ஸ்வீடிஷ் பிரதேச மூலமாக இதர நாடுகளை உதவியனுப்பவிடாமலும் ஹிட்லர் தடுத்து விட்டார்; இந்த வருஷம் ஜூன், ஜூலை மாதங்களில் பின்லாந்திலிருந்து ருஷ்யாவுடன் சண்டையிட ஏராளமான ஜெர்மன் பட்டாளங்கள் ஸ்வீடன் வழியாகவே சென்றன. இது ரொம்ப சுலபம்தான்! இதற்கு ஸ்வீடன் ஆக்ஷேபிக்கவேயில்லை. ஸ்வீடன் தேசத்தில் ராஜீய அநுதாபங்கள் வெவ்வேறாக இருப்பது உண்மை. நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் சிறுபாலர்; ஸோஷல்-டெமொகிராடிக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலர். நடுநிலைமையை வகிக்க வேண்டுமென்பது அவர்களுடைய புராதனமான சுதேசாபிமானமுள்ள விருப்பம். அவர்கள் நாஸி இயக்கத்தை வெறுத்து ஜனநாயகத்தைப் பாராட்டுகிறார்கள். அவர்கள் நாட்டின் எல்லைகளின் பக்கத்தில் இரண்டு பெரிய ராஜ்யங்கள் இருப்பதினால் பிறர் தூண்டுதலன்னியில் அவர்களுக்குச் சுயேச்சையாக ஒரு காரியமும் செய்யமுடியாமல் போய்விட்டது. பக்கத்திலிருக்கும் வல்லரசுகள் சொன்னபடிதான் ஆடவேண்டியிருக்கிறது. அது ஜெர்மானியர் சொல்லுகிறபடி இப்பொழுது ஆடுகிறபடியால் ஹிட்லர் இங்கே சண்டையிடத் தேவை இல்லை.

## ஸ்விட்ஸர்லாந்து.

ஸ்விட்ஸர்லாந்தில் தற்சமயம் யுத்த அபாயமில்லை என்று தோன்றுகிறது. ஜெர்மானியர்கள் தெற்கேயுள்ள பிரெஞ்சுப் படைகளைச் சுற்றிவளைத்துக்கொண்டு தாக்கும்படி இதாலியர்களைத் தூண்டிவிட்டு அதே சமயம் தாங்களும் நேராடி பிரான்ஸை நொறுக்கினபொழுதுதான் ஸ்விட்ஸர்லாந்துக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டது. அதற்கு முன்னால் அச்சுநாடுகளான இதாலியரும், ஜெர்மானியரும் இந்த தேசத்தில் பிரவேசிப்பார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. பிரான்ஸ் தோற்றுவிட்டபிறகு ஸ்விட்ஸர்லாந்தைப் பிடிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஸ்விஸ் பத்திரிகைகளில் அந்த நாடு நடுநிலை வகிக்காதென்றும், ஜெர்மனிக்கு விரோதமாக எழுதுவதென்றும் அதற்காக ஜெர்மனி அடிக்கடி பயமுறுத்தி வருகிறது. ஆனால் ஸ்விஸ் கைத்தொழில், விளைபொருள்கள் எல்லாம் ஜெர்மனியைப் போய்ச்சேருகின்றன. நாலா பக்கங்களிலுள்ள பிரதேசங்கள் ஜெர்மன் ஆதிக்கத்தில் இருக்கின்றன. இந்த நிலைமையில் ஹிட்லரின் மிரட்டல்களை அனுபவத்திற்குக் கொண்டுவந்து சண்டையிட அவசியம் ஏது?



மேலும் வெறும் பேராசைகொண்டு ஸ்விட்ஸர்லாந்தைப் படையெடுப்பதாக விரும்பினால், ஜெர்மானியர்களுக்கு விரோதமாக மூன்று விஷயங்கள் இருக்கின்றன. அவைகள் (1) அவர்கள் தேசம் சாதாரணமாக நுழையமுடியாத ஒரு மலை நாடு—பிரஜைகளும் தலைமுறை தத்துவமாய் பலமான தேசாபிமானிகள். (2) பிரிட்டனுக்கு அது சமீபத்திலிருப்பதால் பிரிடிஷ் விமானப்படை அதை சும்மாவிடாது. (3) ஜெர்மனிக்கும், இதாலிக்கும் இடையிலுள்ள போக்குவரத்து சாதனங்களைத் தடுத்தும், ஆல்பையின் மலைப்பாதைகளை உடனே அழித்தும் விடுவார்கள்.

## ஸ்பெயினும், போர்சுகலும்.

முன் சொல்லிய இரண்டு நாடுகளைக்காட்டிலும் இந்த நாடுகள் பெயருக்குக் கூட நடுநிலைமை வகிக்க முடியாமலிருப்பதை நாம் அறியவேண்டும். ஜெர்மானியர்கள், இவைகளை கேவலம் 'காசுக்குத்தோசை' என்று அலக்ஷியமாக நினைக்கவில்லை. (ஹிட்லர் இவ்விரண்டுநாடுகளையும் சேர்ந்தாற்போல் ஆக்கிரமித்துவிடலா மென்று இருக்கலாம்). ஜெர்மானியர்கள் இந்த நாடுகளில் பிரவேசித்துவிட்டால் அவர்களுக்கு வெகு சாதனங்கள் ஏற்படும். ஜிப்ரால்டரைத் தரைவழியாகத் தாக்கலாம்; வட ஆபிரிக்காவுக்கு இங்கிருந்து சுலபமாகச் செல்லலாம்; அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் புதிய தளங்கள் ஏற்படுத்திக்கொண்டு பிரிடிஷ் கப்பல்களையும், நேசதேசக் கப்பல்களையும் எளிதில் இரையாக்கலாம்; அமெரிக்காவையுங்கூடத் தாக்கலாம்.

உள்நாட்டுக் குழப்பத்தால் சோர்வடைந்திருக்கும் ஸ்பெயின் தேசத்து ஜனங்கள் மிகுதியாக எதிர்க்கமுடியாது. 'பலாஞ்சு' கக்ஷியில் நாஸிகள் பலர் இருக்கின்றனர். மேலும் ஸ்பெயினைப்பிடிக்க ஜெர்மானியத் துருப்புகள் பிரான்ஸ் வழியாக வெகு சுலபமாகச் செல்லலாம். நமக்குத் தெரிந்தவரையில் ஜெர்மானியர்கள் இந்த நாடுகளில் பிரவேசிக்காமலிருக்க ஒரே ஒரு காரணம்தான். ஸ்பானியர்களுக்கு உணவுபொருள்கள் ரொம்பவும் குறைந்திருக்கின்றன. பிரிடனும், அமெரிக்காவும் அவர்களுக்கு உதவிசெய்யாமல் போனால், பட்டினியால் வெறுப்படைந்து அவர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்து சிறு சண்டைகளைப்போடலாம். இந்நிலைமை வாராமலிருக்க இரண்டு கோடி நாற்பது லக்ஷம் ஜனங்களுக்கு உணவளித்து அன்னிய நாட்டுச் சைனியத்தை அத்தேசங்களில் ஆக்கிரமிக்காமலிருக்கும்படி தடுக்கவேண்டும், அல்லது ஜெர்மானிய சைனியத்தை நிறுத்தி அடக்கிஆளவேண்டும்.

இவ்விரண்டிலும் ஒன்றுகூட ஹிட்லருக்குச் சாதகமில்லை. ஆனால் ஸ்பெயினது ஒரு கவரக்கூடிய தேசம்தான். அவற்றைக் கைப்பற்ற யாருக்கும் ஆசையாய்த்தானிருக்கும். ஸ்பெயின்தேசத்தினர் புராதன ஜாதியர்கள். அவர்களைப் பட்டினிபோட்டோ, பலவந்தமாகவோ அழிப்பதிலிருந்து ஹிட்லர் நிற்கமாட்டார். ஆனால் இதர இடங்களில் தோல்வி அதிகரிப்பதிலிருந்து அவர் ஸ்பெயின்பேரில் பாயப்பார்க்கலாம்.

# ஜப்பான் கப்பற்படை.

## அதன் சண்டைபோடும் திறமை.

ஜப்பான் கப்பற்படையானது பிரிடன் கப்பற்படைக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படைக்கும் அடுத்தபடி மூன்றாவதாகச் சொல்லப்படுகிறது. 1922-ம் வருஷத்தில் வாஷிங்டனில் நடந்த கப்பற்படைச் சங்கத்தில் மூன்று பெரிய கப்பற்பலம் படைத்த தேசங்களான கிரேட் பிரிடன், யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜப்பான் இவைகளில் கப்பல்களின் மொத்த விகிதம் 5, 5, 3 என்று ஏற்பாடாயிற்று. ஆனால் 1934-ம் வருஷத்தில் ஜப்பான் இந்த உடன்படிக்கையை இரண்டு வருஷத் தவணைகண்டு நோட்டீஸ் கொடுத்து, ரத்து செய்து அதற்கடுத்த வருஷம் லண்டனில் நடந்த கப்பற்படைச் சங்கத்தில் தனக்கு சமமான விகிதம் வேண்டுமென்று வற்புறுத்திக்கேட்டது.

1937-ம் வருஷக் கடாசியில் "வார் இல்லஸ்டிரேட்" என்ற பத்திரிகையில் குறிப்பிட்டபடி 46,000 டன் நிறையுள்ள மூன்று சண்டைக் கப்பல்களை ஜப்பான் கட்டிக்கொண்டிருந்தது. இதை வினா 63 பெரிய யுத்தக் கப்பல்களை கட்டிக்கொண்டோ, கட்ட ஏற்பாடு செய்து கொண்டோ இருந்தது. ஜப்பானிய கப்பற்படைக்கு 7,56,798 டன் நிறையுள்ள 200 கப்பல்கள் இருந்தன. 1941-ம் வருஷத்துக்குள் 11,09,130 டன் நிறையுள்ள 289 கப்பல்கள் விருத்தியாகியிருக்கலாம். 1939-ம் வருஷத்தில் ஜப்பானிய கப்பல் மந்திரி அட்மிரல் 'யோனாய்' (Yonai) என்பவர் ஜப்பானிய கப்பற்படை, மற்றுள்ள மிகப் பலமான கப்பற்படை கொண்ட தேசத்திற்குச் சமமாக இருக்கவேண்டுமென்ற ஆறுவருஷ புதிய திட்டத்தைக் கொண்டுவந்தார். கிழக்கு ஆசியாவில் "புதிய ஏற்பாடு" செய்யப் பிரயத்தனப்படும் காலத்தில் இதர தேசங்கள் எதிர்த்தால் அவற்றைத் தாக்கப் போதுமான பலம் வேண்டுமென்பது அவர் கொள்கை. இதைக்கொண்டு 6-வருஷகாலம் கப்பல் கட்டும் திட்டத்தை, 1939-ம் வருஷத்தில் ஜப்பானிய மந்திரி சபை அங்கீகரித்தது.

ஜப்பான் கப்பற்படையைக் குறித்து விவரமாக வெளியே இதரர்களுக்குத் தெரியாது. ஆனால் ஜப்பானுக்குள்ள பண நெருக்கடியில் கைவசமுள்ள கப்பற்படையை முன்னேற்றத்துடன் வைத்துக்கொள்வதைக் காட்டிலும், உபரியாக விருத்தி செய்ய முடியாதென்ற சந்தேகத்திற்கிடமிருக்கும். ஜப்பானிய கப்பல் கட்டும் துறைகளில் 40,000 டன்களுக்கு மேலுள்ளதும் 16" பீரங்கிகள் அடங்கியதுமான, 4 அல்லது 5, யுத்தக் கப்பல்களை கட்டிக்கொண்டு இருக்கலாம். அவைகளில் 'மிஷன்' (Mission) என்ற கப்பல் 1939-ம் வருஷம் நவம்பர் மாதத்திலும் 'தாக்காமாத்து' (Takamatu) 1940-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலும் துவக்கின, இரண்டு கப்பல்களும் இவ்வருஷம் கட்டி முடிந்திருக்கலாம்.

இப்பொழுது ஜப்பானுக்கு 10 யுத்தக் கப்பல்களிருக்கின்றன. அவையாவன 1920—1921-ல் கட்டி முடிக்கப்பட்டதும் 32,720 டன்கள் நிறையுள்ளதும்,



எட்டு 16" பீரங்கிகளடங்கியதுமான (1) 'நாகத்து' (Nagato), (2) 'முத்து' (Mutu) என்ற பலமான கப்பல்கள் இரண்டு. மேலும் 29,330 டன் நிறையுள்ளதும் பன்னிரெண்டு 14", ஆறு 6" பீரங்கிகளடங்கிய (3) 'ஹூஸோ' (Huso) (4) 'யாமஸிரா' (Yamasira) என்ற கப்பல்களும், 29,900 டன் நிறையுள்ளதும் பன்னிரெண்டு 14" பீரங்கிகளும், பதினெட்டு 5-5" பீரங்கிகளுமடங்கிய (5) 'ஐஸ்' (Ise) (6) 'ஹூகா' (Hyuga) என்ற கப்பல்களும் ஜப்பானுக்கு இருக்கின்றன. கோங்கோ வகுப்பைச் சேர்ந்ததும் 1913—1916-ல் கட்டி முடிக்கப்பட்டதும், (7) 'கோங்கோ' (Kongo) (8) 'ஹருமா' (Haruma) (9) 'கிரிஸிமா' (Kirisima) என்ற பெயர் வழங்கிய மூன்று கப்பல்களுமுண்டு. அவைகள் 29,330 டன் நிறையுள்ளவை. எட்டு 14" பீரங்கிகளும் பதினாறு 6" பீரங்கிகளும் அவைகளிலிருக்கின்றன. 1930-ம் வருஷத்தில் இந்த வகுப்பில் சேர்ந்த (10) 'ஹீஜ' (Hiej) என்ற கப்பற்படையை எடுத்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது அந்தக் கப்பலுக்கு மறுபடியும் பீரங்கிகளை ஏற்றியிருக்கலாம்.

ஜப்பான் கப்பற்படையில் 8" பீரங்கிகளுடன் பலமான கவசம் பூண்ட 12 யுத்தக் கப்பல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகக் கட்டப்பட்ட கப்பலின் பெயரே அந்தந்த வகுப்பில் கட்டப்பட்ட கப்பல்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. "அடாகோ, தாகோ, தோகை, மாயா" இவை ஒவ்வொன்றும் 9,850 டன் நிறையுள்ளதும், பத்து 8" பீரங்கிகளுமடங்கியவை. அவைகள் 1932-ம் வருஷத்தில் கட்டப்பட்டன. 'நாடி,' 'மியோகோ,' 'அஸிகாரா,' 'ஹாகூரோ' என்ற கப்பல்கள் 10,000 டன் நிறையுள்ளவையும் பத்து 8" பீரங்கிகளுமடங்கியவை, இவை 1929-ம் வருஷத்தில் கட்டப்பட்டவை. 'காகோ,' 'ஹருதகா,' 'கினுகாசா,' 'ஐஓபா' என்ற பெயரிட்ட கப்பல்கள் 7,100 டன் நிறையுள்ளதும்; ஆறு 8" பீரங்கிகளும் அடங்கியவை. அவை 1926–1927-ல் கட்டப்பட்டவை. இதை வினா அதனிடம் ஐந்து பழய க்ரூயிஸர்களும் உண்டு. அவைகள் (9,010 டன் நிறையுள்ள) 'யுகோமா,' (9,180 டன் நிறையுள்ள) 'இடுமோ' 'ஐவாடி' (8,640 டன் நிறையுள்ள) 'அஸாமா,' (7,080 டன் நிறையுள்ள) 'காஸூகா,' என்ற கப்பல்கள்தான். இவைகள் ஐந்தும் ஜப்பான் கடற்கரை ஓரத்தைப் பாதுகாக்க உபயோகப்பட்டு வருகின்றன.

இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த க்ரூயிஸர்களில் புதிய யுத்தக்கப்பல்கள், 8,500 டன் நிறையுள்ளவை. அவைகள் ஒவ்வொன்றிலும் பதினைந்து 6–1" பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள்தான் 'மோக்மை' வகுப்பைச் சேர்ந்தவைகள். 'மோக்மை,' 'மிகுமா,' 'சூஸூயா,' 'குமானோ' என்ற கப்பல்கள் 1935-ம் வருஷம்முதல் 1937-ம் வருஷத்துக்குள் கட்டப்பட்டவை. 'டோனும்,' 'திக்குமாவும்தான் இந்த வகுப்பில் புதிதாய்க் கட்டப்பட்ட கப்பல்கள். அவைகளில் பதினைந்து பீரங்கிகளுக்குப் பதிலாக பன்னிரெண்டு 6—1" பீரங்கிகளாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஸிந்து (Zinto) வகுப்பைச் சேர்ந்த, ('ஸிந்து,' 'நாகா,' 'ஸோந்தை') என்ற மூன்று கப்பல்களும், 'நாடோரி'

(Natori) வகுப்பைச் சேர்ந்த ('நாடோரி,' 'இசுஸு,' 'கினு,' 'நகரா,' 'யூரா,' 'அபுகுமா') என்று பெயரிட்ட ஆறு கப்பல்களும், குமா, (Kuma) வகுப்பைச் சேர்ந்த ('குமா, தாமா, ஓய், கிதாகாமி, கிஸோ,' என்று வழங்கும் ஐந்து கப்பல்களும், 'தென்ருயு' (Tenruyu) வகுப்பிலடங்கிய ('தென்ருயு, டாடோ') என்று சொல்லப்பட்ட இரண்டு கப்பல்களும், 'யுகாரி' என்ற கப்பலும் ஜப்பானிய கப்பற்படையில் அடங்கியவை. 'ஸேக்தை' வகுப்பைச் சேர்ந்த கப்பல்கள் 5,195 டன்கள் நிறையுள்ளவை. 'யுகாரி' வகுப்பைச் சேர்ந்த கப்பல்கள் 2,890 டன்கள் நிறையுள்ளவை. மற்ற கப்பல்களின் நிறை பலவாராக இவ்வெண்ணிக்கைகளுக்குள் உட்பட்டிருக்கின்றன. இந்தக் கப்பல்களில் 5-5" பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

### ஆகாய விமானம் தூக்கிச்செல்லும் ஏழு யுத்தக் கப்பல்கள்.

ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லும் ஏழு யுத்தக் கப்பல்கள் ஜப்பானுக்கு உண்டு. இவைகளில் புதியவை, ஸோரியூ வகுப்பைச் சேர்ந்த (1) ஸோரியூ, (2) ஹைரியூ, (3) ஷியோகாகு என்ற மூன்று கப்பல்கள். அவை 10,050 டன் நிறையுள்ளவை. மற்றவை 7,100 டன் நிறையுள்ள (4) ரியுஸோயோவும், (5) 7,470 டன் நிறையுள்ள ஹோஸியோவும், இரண்டும் சேர்ந்து 26,900 டன் நிறையுள்ள (6) 'காகா' (7) 'அகாகி' என்று இரண்டு பெரிய கப்பல்களுமிருக்கின்றன. மேலும் இரண்டு ஆகாய விமானம் தூக்கிச் செல்லும் கப்பல்கள் கட்டப்பட்டும் வருகின்றன.

சிறிய கப்பல்களில் ஜப்பானியர்களுக்கு 130 நாசகாரிகளும் உண்டு. (12 கையுரோ வகுப்பைச்சேர்ந்தவை. அவைகளில் பத்து கட்டப்பட்டு முடியவுடையும் நிலைமையில் இருக்கின்றன. 10 'அஸோஸியா,' 10 'ஷிகுரி' 6 'ஹாத்சுஹாரு,' 28 'ஹாயூகி,' 12 'முதுகி,' 9 'காமி காஸி,' 15 'ஹோகை காஸி,' 7 'வாகாதாக்கி,' 19 'காயா,' 3 'மோமோ' வகுப்பைச் சேர்ந்தவைகள் மேலும் 12 டார்பிடோப் படகுகளுமிருக்கின்றன. இன்னும் பல கட்டப்பட்டு வருகின்றன. ஜப்பானின் நீர்மூழ்கிக் கப்பல்கள் நான்கு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன, அவை (1) சமுத்திரத்தில் செல்லக்கூடியவை, (2) கடலில் செல்லக்கூடியவை (3) கடற்கரை யோரத்தில் செல்லக்கூடியவை, (4) கடற் கண்ணிகளைப் பரவக்கூடியவையும். அவை 1,400 டன் நிறையிலிருந்து 1,000 டன் நிறை வரை கனமுள்ளவை. இப்பொழுது இம்மாதிரியான நீர்மூழ்கிகள் 72 இருக்கின்றன. இன்னும் பலவை கட்டப்பட்டுவருகின்றன.

யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படைகளில் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள பாகமும் ஜப்பானிய பூரா கப்பற்படையும் சமமாகும். அமெரிக்காவில் கப்பல் கட்டும் திட்டம் ஜப்பானைக் காட்டிலும் பெரிதானது. ஜப்பான் கப்பற்படைப் பத்திரிகைகளில் பிரஸ்தாபித்து வருகிறபடி பலமாகச் சண்டையிடத் திறமை வாய்ந்ததா என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. 'ஸ்வதந்திர ஐரோப்பா'



பத்திரிகையில் வாஷிங்டனிலுள்ள திருபர் ஹெஸ்ஸல் டில்ட்மான் என்பவர் சென்ற சில வாரங்களுக்குமுன் எழுதியதாவது:—

"ஜப்பானியர் கப்பற்படையை கப்பல் கப்பலாக சீர்தூக்கிப் பார்த்து குறி வைப்பதிலும், பாதுகாப்பிலும் அவைகளை ஓட்டுவதிலும், அமெரிக்க கப்பற்படை என்ன பிரிடிஷ் கப்பற்படை என்ன இவைகளைக் காட்டிலும் 100-க்கு 20 பங்கு விகிதம் சாமார்த்திய குறைவாகவே இருக்கிறதென்று பொது நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஒரு அமெரிக்க நாசகாரியைக் கொண்டு, ஜப்பானிய க்ரூயிஸரைத் தாக்கலாம் என்றும், ஒரு அமெரிக்க க்ரூயிஸரைக்கொண்டு ஒரு ஜப்பானிய யுத்தக் கப்பலைத் தாக்கவும்கூடும் என்றும் அமெரிக்கா கப்பல் உத்தியோகஸ்தர்கள் சொன்னார்கள். கீழ்த்திசையிலும் இரண்டு பெரிய பிரிடிஷ் அமெரிக்கக் கப்பற்படை மாலுமிகளுக்கு ஜப்பானிய கப்பற்படை மாலுமிகள் சமமாகமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் பரவி இருக்கிறது. இருந்தபோதிலும் ஜப்பானியர்கள் மிகவும் தைரியசாலிகள். அவர்களுடைய எதிர்ப்பை நாம் அவமதிக்கக்கூடாது."

---

# வார யுத்தச் செய்திகள்.

### 7—8—41-லிருந்து 13—8—41-வரை.

### ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

**மூன்றும் தடவையாக மின்னல்படை.**—ருஷ்யாவுடன் யுத்தம் ஆரம்பித்து 8 வாரங்கள் ஆகியும் ஒரு விதமான வெற்றியும் அடையாததால் ஜெர்மனி மின்னல்படையை மூன்றும் தடவையாக உபயோகித்திருக்கிறது. லெனின் கிராட்டுக்கு அருகிலுள்ள சால்ட்ஸி என்னும் இடத்திலிருந்தும் யூக்ரேனுக்குத் தெற்கிலும் ருஷ்யர்கள் சற்றுப் பின் நகர்ந்திருக்கிறார்கள். ஆனால் லெனின் கிராட், மாஸ்கோ, கீவ் முதலியனவெல்லாம் எப்போதும்போல் ருஷ்யர் வசம் தானிருக்கின்றன. மாஸ்கோவுக்கு நேராகப்போகும் வழியில் இருக்கும் ஸ்மாலென்ஸ்க் காலிசெய்யப்பட்டது. கீவில் சேராக ஸைனியம் செல்ல முடியாததால் ஜெர்மனி ஒடெஸ்ஸா, ஸெபாஸ்டபூல் என்ற இடங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அப்படியே காகஸஸ் மலைச்சாரலில் உள்ள உலோகங்களைக் கைப்பற்ற உத்தேசம்போல் இருக்கிறது. ஜெர்மனி பிடித்த ஸால்ட்ஸி, லெனின் கிராட்டிலிருந்து 123-மைல் தூரத்திற்கப்பால் இருக்கிறது. ஆனால் இவ்விடத்தை சூழ்ந்து கொள்ளுவதில் மின்னல்படையின் கதிபோல் தந்திரம் பலிக்கவில்லை. ஆர்க்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரையிலும் ருஷ்ய சைனியம் ஒரே வரிசையாக இருந்து ஒன்றுபட்டு சண்டை செய்து வருகிறது. சில இடங்களில் கொஞ்சம் பின்வாங்க நேரிட்டாலும் இவ்வரிசை கலைக்கப்படவில்லை.

**ஜெர்மன் சைனியத்தின் பின்புறம்.**—ருஷ்ய கொரில்லாப்படை திடீரென்று பாய்கிறது. இதனால் அடிக்கடி ஜெர்மானியருக்குப் பயம் ஏற்பட்டுவருகிறது.

மேலும் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளை ருஷ்யர்கள் தாங்களாகவே எரித்து எதிரிக்கு ஒன்றும் மிஞ்சாமல் செய்துவிடுகிறார்கள். ருஷ்யாவில் பல நதிகளும், ஏரிகளும், சதுப்பு நிலங்களும் அதிகம் இருப்பதால் ருஷ்யப் பொது மக்கள் முன் சொன்ன விதமாகவெல்லாம் செய்வது ருஷ்யச் சைனியத்திற்கு பெரும் ராணுவ உதவி முறைதான். "பழிக்குப்பழி வாங்குவது, ஈவு இறக்கம் கூடாது சுட்டுப் பொசுக்குங்கள்" என்ற முறைகளைக் கையாண்டு ருஷ்யர்கள் சரியானபடி நேருக்கு நேர் பழிக்குப்பழி வாங்கி சண்டை செய்கிறார்கள். யூக்ரேனில் இவ்வருஷம் வழக்கத்தைவிட 1-பங்கு அதிகமாக விளைவு ஆனதையெல்லாம் ஏற்கனவேயே சாகுபடி செய்து யூரல் மலைச்சாரலுக்குக் கொண்டுசேர்த்து விட்டார்கள்.

## பெர்லினை ருஷ்யர்களும் தாக்குகிறார்கள்.

கிழக்கிலும், மேற்கிலும் ஜெர்மனி இப்பொழுது ருஷ்யப்படைகளாலும் பிரிடிஷ் படைகளால் விமானத்திலிருந்து தாக்கப்படுகிறது. சென்ற வியாழக் கிழமை துவக்கிய எதிர்ப்பை ருஷ்யா விடாமல் ஜெர்மனியைத் தாக்கிவருகிறது. ஆனால் ஜெர்மானியர் இவைகளை முதலில் மறுத்தனர். இப்பொழுது பிரசாரத்திற்குத்தான் ஏற்பட்டதென்றும் ஜெர்மனியில் சேதம் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் சொல்லுகின்றனர். மேலும் பிரிடிஷ் விமானங்கள் வருவதையே எதிர் பார்த்ததினால் ருஷ்ய விமானங்கள் கவனிக்கப்படாமல் இருந்தனவென்றும் சாக்குச் சொல்லப்படுகிறது.

**ஏராள நஷ்டம்.**—ருஷ்யர்கள் 10-லக்ஷம்பேர் இறந்தனர் என்று ஜெர்மனி சொன்னாலும் ஜெர்மானியருக்கு 15,00,000 பேர்களும், 5,000 டாங்கிகளும், 8,000 துப்பாக்கிகளும், 6,000 விமானங்களும் நஷ்டம். இந்த நஷ்டங்களுக்கு பொய்க் காரணம் கூறுகையில், ஏதோ ஸ்டாலின் அரண் ஒன்று இருக்கிறதாகவும் அதனால்தான் ஜெர்மன் சைனியம் தடைபட்டு நாசமாக்கப்படுகிறதாகவும் ஜெர்மானியர் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படியொன்றுமில்லை. ருஷ்யர்கள்தான் வீரத்தனமாக யுத்தம் செய்கிறார்கள். அவ்விடங்களில் கோட்டைகள் கிடையாது. வீரம் தான் பகைவரைத் தடுக்கிறது. கடலில் ஜெர்மனிக்கு ஜூலையிலிருந்து ஆகஸ்டு வரையிலும் 14 நீர்மூழ்கிகள் சேதம்.

## ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் கலகம்.

யூகோஸ்லாவியாவில் ஜெர்மனிக்கு எதிராக கலகங்கள் ஏற்பட்டுவிட்டன. ஜெர்மன் சைனியத்தையும், போக்குவரவு சாதனங்களையும், பாலங்கள், டன்னல்கள், ஆகாரம், வெடிமருந்துகளையும் மறைந்திருந்து எதிர்க்கிறார்கள். இதைத்தடுக்க ஜெர்மன் ராணுவ பயங்கர அரசாட்சி ஏற்பட்டிருக்கிறது. கும்பல் கும்பலாக பொது ஜனங்கள் கொலைசெய்யப்படுகின்றனர். அல்பேனியாவில் இதாலியச் சைனியம், கலகக்காரர்களால் தாக்குண்டது. ஸெகோஸ்லோவாகியாவில் பஞ்சம் உண்டாயிருக்கிறது. அங்கே கம்யூனிஸம் பரவச் செய்கிறதற்காக 800 பேர்கள் கைதி செய்யப்பட்டனர். பால்கன் நாடுகளின் நிலைமை அபாயமாக



இருப்பதால் யுத்த தளகர்த்தர், லீஸ்டு, ருஷ்யப்போர் முனையில் சைனியத் தலைமை வகிப்பதை விட்டு விட்டு ஏதென்ஸுக்கு நழுவி விட்டதாகத் தெரியவருகிறது.

## ஸ்லாவ் தேசத்தினர்களின் சேர்க்கை.

போலாந்து, ஸெக்கோஸ்லோவாக்கியா, ஸெர்பியா, க்ரோட், ஸ்லாவ், மாஸிடோனியா, மாண்டிநீகரோ என்ற தேசத்தினர்களின் பிரதிநிதிகள், அவர்களுக்குப் பொதுவாயிருக்கும் எதிரியைத் தாக்குவதற்காக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியதென்று, ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி மாஸ்கோவில் கூடி ஆலோசனை செய்தார்கள். எதிரியுடன் போரிட ருஷ்யாவில் ஸெக் ராணுவப்படை ஒன்று தயாராகிக்கொண்டிருக்கிறது.

## தூரக் கிழக்குப் பிரதேசம்.

அமெரிக்காவும் பிரிடனும் உடனே பொருளாதார நடவடிக்கை எடுத்துக் கொண்டதிலிருந்து, இவ்வளவு தூரம் ஜப்பானின் கொள்கையில் ஒழுங்கு ஏற்படுமென்று சொல்வதற்கில்லை. இச்சமயம் அவ்விடத்தில் ஏதோ அமைதி போல் உலாவுகிறது. ஆனால் ஜப்பான் வடக்கிலும், தெற்கிலும் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்து வருகிறது. ஜப்பான் இருவகையில் தெற்கு நோக்கிப் போவதெல்லாம் சமாதான முறையில்தான் என்று அட்மிரல் டொயோடா (Toyoda) சொல்வது வெறும் ஆர்பாட்டமோ, அல்லது ஏமாற்றமோ அல்லது இரண்டுமோ. வெறும் ஆர்பாட்டம், ஜப்பானியர்களுக்கு நான்காம் படையாகச் சொல்லப்படுகிறது. வெளிப்படையாகச் சண்டை போடாமல் பொருளாதார நெருக்கடியினாலும், தந்திரத்தினாலும், ஜப்பான் கைப்பற்ற ஏற்பாடு செய்திருக்கிறது.

## உலகமெல்லாம் ஜப்பானை எதிர்க்கப்போகிறது.

அதிர்ஷ்ட வசமாக தாய்லாந்தும் அதன் நேசதேசத்தார்களும், தன்னைக் கவரவிடாமல் விழிப்பாகவேயிருக்கிறார்கள். அவசியமானால் தாய்லாந்து கடைசி வரையில் சண்டையிடத் தயாராகயிருக்கிறது. தற்காப்புக்காகக் கிழக்கு எல்லையில் அதன் ராணுவ பலத்தைச்சேர்த்து வைத்திருக்கிறது.

பிரிடன் முதலிலேயே எச்சரிக்கை செய்திருக்கிறது. காமன்ஸ் சபையில் அன்னிய நாட்டு மந்திரி, அந்தோனி ஈடன், ஆகஸ்டுமாதம் 6-ம் தேதி பேசின பொழுது, தாய்லாந்தின் தேசத்தையும் அதன் ஸ்வதந்திரத்தையும் குறைக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் சிங்கப்பூரை அபகரிக்க ஏற்பாடு என்று கிரேட் பிரிடன் பொருட்படுத்துமென்றும் சொன்னார். மலேயாவும், பர்மாவும் எதிர்ப்புக்குத் தயாராகயிருக்கின்றன. பிரிடிஷ் கப்பற்படை அருகிலோ, கூப்பிடு தூரத்திலோ எதிர்க்கத் தயாராகயிருக்கிறது. பிரிடிஷ் அரசாங்கமும் சிங்கப்பூரில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

**சைனு.**—சைனு தன்படைகளை இந்தோ சைனு எல்லைப்புறத்தில் யூனன் என்ற மாகாணத்தில் சேகரித்துவைத்திருக்கிறது.

## யுனைடெட் ஸ்டேட்ஸ்.

அமெரிக்காவும் சும்மாயில்லை. ஆகஸ்டுமாதம் 6-ம் தேதி யுனைடெட் ஸ்டேட்ஸ் காரியதரிசி, 'கார்டெல் ஹல்'என்பவர் தாய்லாந்தில் ஜப்பானியர் பிரவேசித்தால் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தேசத்திற்கு, அபாயம், பயம் உண்டாக்க முதல் படியாகுமென்று சொன்னார்.

## ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியா தனக்கு அபாய நிலை ஏற்படுமென்று தெரிந்துகொண்டிருக்கிறது. "ஆஸ்திரேலியா இச்சமயம் தன் தேச சரித்திரத்தில் இதுவரை கண்டிராத வெகு, பயமான நிலைமையிலிருப்பதாக" ஆகஸ்டுமாதம் 9-ம் தேதி ஆஸ்திரேலியா பிரதம மந்திரி ஆர். ஜி. மென்ஸீஸ் (Menzies) கூறினார்." "நடப்பதெல்லாம் ஆஸ்திரேலியா நன்கு கவனித்து வருகிறது" என்று அதன் கப்பற்படை மந்திரி W. M. ஹியூஸ் சொன்னார். தொழில் இலாகா மந்திரி மிஸ்டர் கர்டன் "ஆஸ்திரேலியா அபாயகரமான நிலைமையில் இருக்கிற"தாகக் கூறினார்.

ருஷ்யா.—கிழக்குப் பக்கத்தில் ஜப்பானை எதிர்க்க ருஷ்யாவும் தயாரித்துக் கொண்டிருக்கிறது. ஜப்பானிய சமாதானம் என்று சொல்லிக்கொண்டு வ்ளாடிவாஸ்டக் பக்கத்தில் ராணுவ பலத்தைச் சேகரிப்பதால், அங்கு எதிர்ப்பைத் தடுக்க, ருஷ்யாவும் அதைக்காட்டிலும் பெரியபடையை அங்கே சேகரித்திருக்கிறது. ஜப்பான் வடக்குப் பக்கத்தில் தாக்கினால் ருஷ்யாவில் துன்பப்பட்டிருக்கிற ஜெர்மன் படைக்கு சாதகமேற்படும் என்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது. ஆனால் வ்ளாடிவாஸ்டக் தாக்கப்பட்டால் அங்கு அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமுள்ள பாத்தியத்திற்குக் குறைவு ஏற்படுமாகையால், அமெரிக்காவும் பிரிட்டனும் சண்டையில் கலந்துகொள்ளும்.

ஜெர்மனி யுத்தம் செய்துகொண்டிருப்பதால், பிரிட்டனுக்கு மேற்குப் பிரதேசத்திலும், மத்தியக் கிழக்கிலும் தற்சமயம் ஜோலி இருக்கிறது. ஜெர்மனி ருஷ்யாவில் மாட்டிக்கொண்டு திண்டாடுகிறது. இந்தச் சமயத்தில் ஜப்பான் எதையாவது அபகரிக்கலாமென்று எதிர்பார்க்கிறது. ஆனால், அது வீண் பிரயாசை. ஜப்பானின் முக்கியமான படை சைனாவில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் 3,000 மைலுக்கு அப்பால் போய் ஜப்பான் யுத்தம் செய்யவேண்டும். அப்படிச் சொல்லுவதெல்லாம் வெறும் ஆர்பாட்டமாயிருந்தாலும் இருக்கலாம்.

## ருஷ்ய—சைனா ஒப்பந்தம்.

ருஷ்யாவுக்கும் சைனாவுக்கும், ராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் ஏற்படும் போலிருக்கிறது.

## விஷியின் அடிமைத்தனம்.

விஷி என்றால் பிரான்ஸ் தேசம் பூராவும் என்று நினைக்கக்கூடாது. பிரெஞ்சுக்காரர்கள் பூராவும் அச்சு நாடுகளின் கொடுமைக்கு எதிராக சண்டை



செய்யும்பொழுது விஷி மனிதர்கள் கோழைத்தனத்தினால் இந்தோ-சைனாவை ஜப்பானுக்கு விற்றுவிட்டார்கள். இன்னும் அதன் வடக்கு எல்லைப்புறத்தில் சைனா ஆக்கிரமிக்காமல் விஷி மனிதர்கள் பாதுகாத்தும் வருகின்றனர். மேலும் அவர்கள் வட ஆபிரிக்காவையும் நாஜிகளுக்குக் கொடுக்கத், தயாராய் இருக்கிறார்கள் போல் தெரிகிறது. அம்மாதிரி பிரெஞ்சு ஸர்க்காரை ஹிட்லர் கசக்குவதாக வதந்தி உலாவுகிறது. இதுவரையில் ஏற்பட்டிருந்த தடையை நீக்கி டாக்கருக்கும் காஸாபிளாங்காவுக்கும், விமானங்களையும், பீரங்கிகளையும் உற்பத்திசெய்து அனுப்பும்படி பிரெஞ்சு ஸர்க்காருக்கு ஜெர்மனி அனுமதியளித்திருக்கிறதாம். இப்பொழுது சண்டையை நிறுத்தி, தற்போதிய சமாதானத்தை விலக்கி, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி மூவரசு கக்ஷியில் விஷி கவர்ன்மெண்டாரைச் சேர்க்க ஜெர்மனி முயற்சிக்கிறது. ஆபிரிக்கா அரசாங்க நிர்வாக விஷயமாய் சமீபத்தில் டார்லானுக்குச் சர்வாதிகாரமும் கொடுக்கப்பட்டிருப்பதாலும், விஷி மந்திரி சபையில், ஆபிரிக்காவிலிருந்து வேகாண்டு (Weygand)ம் வந்திருந்ததாலும், இந்த வதந்தி இன்னும் ஊர்ஜிதமாகிறது. பிரான்ஸ் தேசம் சீக்கிரத்தில் துக்ககரமான நிலைமையில் வந்துவிடுமென்று சென்ற இரவுக்கு முந்தின இரவில் (ஆகஸ்டு 12-ம் தேதி) பிடேன் செய்த ஒலிபரப்பினால் வெளியாகிறது. இனி பிரான்ஸ் தேசத்தில் ஜனப்பிரதிநிதி சபையும் கிடையாது; ஜனநாயகமும் கிடையாது. வகுப்பு அரசாட்சியும் இனித்தலையெடுக்காது. "பழைய நிர்வாகமுறையை"ப் பின்பற்றியவர்கள் அடக்கப்படுவார்கள். அதற்குத் தக்கவாறு போலீஸும் பலப்படுத்தப்படும். இனிமேல் சர்வாதிகாரம் பூராவும் பிடேன் கையில் ஒப்புவிக்கப்பட்டு அவரிடம் ஒவ்வொருவரும் ராஜ விச்வாஸ பிரமாணம் நேராடிச்செய்ய வேண்டும். தற்காப்பு மந்திரியாக பிடேனால் நியமிக்கப்பட்டிருக்கும் அட்மிரல் டார்லான், இனி நிலப்படை, ஆகாயப்படை, கப்பற்படை இவைகளின் பூரா அதிகாரத்தையும் வகிப்பார். இனிமேல் தொழிலாளர் சட்டமடங்கிய பொருளாதார சீர்திருத்தமும் ஏற்படும். சுருக்கமாகச் சொல்லுமிடத்து ஹிட்லருக்கு ஜெர்மனியில் அதிகாரம் அதிகரித்து வரும்பொழுது, ஹிண்டன்பர்கு எவ்விதமிருந்தாரோ, அவ்விதமே பிடேன் பேருக்கு மாத்திரம் தலைவராக இருந்து விடுவார். டார்லான் சர்வாதிகாரம் வகிப்பார்.

இதற்கு முன் பெரிய தேசமாய் விளங்கின பிரான்ஸ் இப்பொழுது அழிந்து போய்விட்டதே என்ற அனுதாபத்தாலும், ஐரோப்பாவில் நடக்கும் ஜெர்மானிய சூழ்ச்சிகள் கிளைக்க இடங்கொடாமல், அவ்விடத்தில் நடுநிலைமை ஏற்படுத்தவும், அமெரிக்கா இதுவரையில் விஷி ஸர்க்காருடன் சிநேகப் பான்மையாயிருந்தது. இப்பொழுது அதன் நடவடிக்கைகளில் வெறுப்படைந்து எந்த சமயத்திலும் தந்திரமாய் சிநேக பாவத்தை விட்டுவிடலாமென்று நினைக்கிறது. குடகோளத்தில் மார்டினிகு (Martiniquo)வையும், இன்னும் இதரப் பிரெஞ்சு காலனிகளையும் வியாபிப்பது சரியென்று தீர்மானித்துவிட்டது. டாக்கரை ஜெர்மனி பிடித்துவிடாமல் தடுக்க பிரெஸிலிலுள்ள விமான தளங்களை வியாபிக்க, அமெரிக்கா ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

## இரானில் ஜெர்மன் ஐந்தாம்படை.

நாஸி ஐந்தாம்படையைச் சார்ந்தோர் உள்ளே பிரவேசித்ததினால் உண்டான கெட்ட நிலைமையை இரான் இன்னும் பூராவாக உணரவில்லை போலிருக்கிறது. உள்ளேயிருக்கும் பிரிடிஷ் மக்களும் ஜெர்மானியரும் ஒரே கணக்கில்தானிருக்கிறார்கள் என்று இரான் நினைப்பது பெரும் தவறு. ஏனென்றால் பிரிடிஷார் ஏற்கனவேயே அங்கிருக்கும் எண்ணெய்ச் சுரங்கங்களிலும், மற்றுமுள்ள தொழில்களில் வேலைபார்த்து வருபவர்கள். ஜெர்மானியர் யாவரும் தற்போது தான் சபடமாக உள்ளே புகுந்து வந்தவர்கள். இக் கபடச் செய்கைகளால் நடுக்கிழக்கு நாடுகளையும் பெர்ஸிய அரசனை ஷாவையும் கைப்பற்ற சூழ்ச்சி செய்கிறார்கள். இப்படி ஜெர்மானியர் நாளுக்கு நாள் அதிகமாகவே உள்ளே வந்து கொண்டிருப்பதை இரான் தடுக்காவிடில், அமெரிக்காவும், ருஷ்யாவும் சேர்ந்து ஆபத்து நேராமல் சரியானபடி தடுக்க சீக்கிரத்தில் ஏற்பாடுகள் செய்ய வேண்டியதுதான்.

## துருக்கிக்கு ஆங்கில-ஸோவியத்தின் ராஜாங்க காரியம்.

பிரிடனும் ருஷ்யாவும் சேர்ந்து துருக்கிக்கு வாக்களித்திருக்கின்றன. இதன் பிரகாரம் துருக்கியின் உரிமைகள் டார்டனல்ஸில், மாண்டிரீக் திட்டப்படி, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வேறே எந்த ஐரோப்பிய நாடும் துருக்கியை எதிர்த்தால் இவர்கள் உதவியளிப்பார்கள். ருஷ்யாவிற்கு டார்டனல்ஸைப் பிடிக்க எண்ணம் இருக்கிறதாம்! துருக்கி மூலம் ருஷ்யாவுடன் பிரிடன் சேர விரும்புகிறதென்றும் ஜெர்மானியர் செய்யும் பிரசாரத்தைத் தடுப்பதற்குத்தான் இவ்வுறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

## பிரிடிஷ் விமானப்படையின் எதிர்ப்புகள்.

பொதுவாக வடமேற்கு ஜெர்மனியும் விசேஷமாக கீல், ஹாம்பர்க், பெர்லினும் தான் பிரிடிஷ் விமானங்களுக்கு லக்ஷியங்களாக இருந்தன. 12-ம் தேதி பகலிலேயே கோலோனிலுள்ள பெரிய மின்சார யந்திரசாலைகள் தாக்கப்பட்டன. சென்ற மழைகாலங்களில் பிரிடன் மீது ஜெர்மன் விமானங்கள் படையெடுத்தது போல் பிரிடிஷ் விமானங்கள் இக்கோடைகாலம் முழுவதும் பலமாக ஜெர்மனியைத் தாக்கின. பிரிடிஷ் விமானங்களை 'பலமற்றபடை' என்றும் 'ஒரு விமானப்பகுதி' என்றும் ஜெர்மானியர் சொன்னபோதிலும் மொத்தத்தில் 300 விமானங்கள் வரை இப்போரில் ஈடுபட்டன. ஜூன் ஜூலை மாதங்களில் ரூர் ஜில்லாவில் மாத்திரம் 2,000 டன் குண்டுகள் போடப்பட்டன. இதைத் தவிர கோலோனில் 1,000 டன்களும், ப்ரெமன் பேரில் 500 டன் குண்டுகளும் வீசப்பட்டன. புதிதாகச் செய்யப்பட்ட பிரிடிஷ் குண்டுகள் ஜெர்மனியில் செய்யப்பட்டவைகளைவிட பெரியவை, சக்தியும் வாய்ந்தவை. இவைகளைப் பெர்லினுள்ளோர் பொறுக்க முடியவில்லை. அச்சமயங்களில் ஜனங்கள் முயல்களைப்போல் பயந்து ஒளிந்துகொள்ளுகிறார்களாம். பெர்லின், இங்கிலாந்திற்கு தூரத்தில் இருப்பதால் குறுகிய கோடையிரவுகளில் தாக்குவது சிரமம் தான். இருந்தாலும் 100 டன் நிறைவரையிலும் குண்டுகள் ஒரே இரவில்



போடப்பட்டன. இப்பொழுது பெர்லினுக்கு, இருபக்கங்களிலும் ருஷ்ய, பிரிடிஷ் விமானங்களால் தாக்கப்படுவதால் சேதம் இன்னும் அதிகப்படுகிறது. மேலும் வட பிரான்ஸிலும் போலிஷ் படை பிரிடிஷ் படையுடன் கலந்து விமானங்களிலிருந்து எதிர்க்கிறார்கள்.

ஜூலையில் ஜெர்மனியின் மீது 70 விமான எதிர்ப்புகளும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் 76 எதிர்ப்புகளும் செய்யப்பட்டன. இரவு எதிர்ப்புகளைத் தவிர, பகல் வேளைகளிலும் 'பாம்பர்' விமானங்களும் 'பைடர்' விமானங்களும் படையெடுத்தன. நடுக்கிழக்கு நாடுகளில், பீரட், பெங்காஸி, ட்ரிபோலி உள்பட பல லக்ஷியங்களில் 126 எதிர்ப்புகள் நடந்தன.

## ருஷ்ய போர்முனையைத் தவிர இதர விமான நஷ்டங்கள்.

| மாதம். | | பிரிடிஷ் விமானங்கள். | ஜெர்மன் விமானங்கள். | இதாலிய விமானங்கள். |
|---|---|---|---|---|
| மே | ... | 149 | 335 | 3 |
| ஜூன் | ... | 227 | 277 | 52 |
| ஜூலை | ... | 285 | 326 | 64 |
| மொத்தம் | ... | 661 | 938 | 119 |

## அட்லான்டிக் யுத்தம்.

காமன்ஸ் சபையில் ஆகஸ்டு 6-ட மந்திரி மிஸ்டர் ஸி. ஆர். அட்லி பின்வருமாறு சொன்னார். இங்கிலாந்திற்குச் சமீபத்தில் சரியானபடி காபந்து செய்யப்பட்டிருப்பதால் அமெரிக்கா, ஆபிரிக்கா முதலிய இடங்கள் வரையில் கடல் யுத்தம் பரவிக்கொண்டேவருகிறது. அப்படியிருந்தும் பிரிடிஷ் துறைமுகங்களில் இறக்குமதி சரியானபடி செய்யப்படுகிறது. துணையுடன்கூடிய கப்பல்களும் பத்திரமாகவே வந்துசேருகின்றன. ஆகாரம், யுத்த சாமான்கள் முதலியவை சேதமில்லாமல் அயல் நாடுகளிலிருந்து வந்து சேருகின்றன. பிரிடிஷாருக்கு ஆதிக்கம் கடலில் இருக்கத்தானிருக்கிறது. கடலில் வரமுயலும் போது எதிரியும் சரியானபடி சிக்ஷிக்கப்பட்டு வருகிறான். ஜூலை மாதத்தில் வடகடலிலும், அட்லான்டிக் கடற்கரையிலும் 2,91,000 டன் கனமுள்ள 69 விரோதிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மத்தியதரைக்கடலில், 1,68,000 டன் எடையுள்ள 23 விரோதிக் கப்பல்கள் நாசமாயின. இதோடு 30 கப்பல்கள், தாக்கப்பட்டும் பழுதாக்கவும்பட்டன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **4—8—41.** (திங்கட்கிழமை). | | |
| ஸார்டீனியா (Sardinia). | | |
| இதாலியத் துறைமுகங்களும், விமான தளங்களும்.—ஸார்டீனியா (Sardinia). | நஷ்டமில்லை. | அதிகச்சேதம். |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| விமானமிறங்கும் இடங்களும் ராணுவ நிலயங்களும்.-ஸிரெனேகா.(Cyrenaica). | ...... | ...... |
| விமானம் இறங்கும் இடங்கள்.-எல் கஸாலா (El Gazala), டிமிமி(Timimi). | ...... | தீக்களும், வெடிகளும் மூட்டப்பட்டன. |
| துறைமுகம்.—டேர்ன (Derna), மோட்டார் போக்குவரவு சாதனங்களும் ஒர்க்ஷாப்புகளும், விமானம் கட்டும் யந்திரங்களும்—டேர்ன (Derna). | ...... | சேதமாக்கப்பட்டன. |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| சிறு கப்பல்.—மிஸுராடா (Misurata) வுக்கு அருகில். | ... | மூழ்கடிக்கப்பட்டது. |
| விரோதி சாமான் ஏற்றும் கப்பல்கள்.—அப்போலோனியா (Appolonia) கரைக்கு அருகில். | ...... | 2 கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| விரோதி யந்திரப்படை, மோட்டார் படை, காலாட்படை, பீரங்கிப்படை. போர் அரங்கம் முழுவதும். | ...... | ...... |
| விரோதி விமான நிலயங்கள்.—அநேகமாக்குப் புக்குப் பின்னால். | 21 விமானங்கள். | 53 விமானங்கள். |
| **5—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| பகலில்.—விரோதித் துணைக் கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அருகில். | ...... | 2,000 டன் நிறையுள்ள ஒரு கப்பல் நேரே தாக்குண்டது. |
| காவல்புரியும் விரோதி கப்பல்கள்.—ஜெர்மன் கடற்கரைக்குச் சமீபத்தில். | ...... | 3 கப்பல்கள் தாக்கப்பட்டன. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **5—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி. | | |
| விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய்(English Channel), வட பிரான்ஸ் (France) | 1 பகல் விமானம். | ...... |
| விமான நிலயம்.-சேர்பர்க்கு (Cherbourg)க்கு அருகாமையில் | ...... | தரையில் பல விமானங்கள் சேதமாயின. |
| இரவில்.—ராணுவ நிலயங்கள்—மான்ஹீம் (Mannheim), பிராங்குபர்ட் (Frankfurt), கார்லஸ் ருஹ (Karls Ruhe). | ...... | பலத்த சேதம். |
| தொழிற்சாலைகளும் இருப்புப்பாதைகளும்.—ஆகென்(Aachen), கப்பல் கட்டுமிடம், ஆஸ்டெண்டு (Ostend). | 9 இரவு 'பாம்பர்' விமானங்கள். | ...... |
| ஒரு பெரிய சாமான் ஸப்ளை செய்யும் கப்பல்.—நான்டிஸ் (Nantes) துறைமுகம். | ...... | இரண்டு தடவை தாக்கப்பட்டது. |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| துறைமுகம், விமானமிறங்குமிடங்கள், மோட்டார் போக்குவரவு சாதனம், தொழிற்சாலைகள், நிலக்கரி வைக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள்.—டேர்ன (Derna), காம்புத் (Gambut). | ...... | தீக்களும், வெடிகளும் கிளம்பின. |
| விமானமிறங்கும் இடம்.—எல் கஸாலா (El-Gazala) | ...... | ...... |
| விரோதி சைனிய வாசஸ்தலங்கள்.—மிஸுராடா (Misurata) | 1 விமானம். | சேதம். |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| விரோதி யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—போர் அரங்கம் முழுவதும் | ...... | ...... |
| விரோதி விமானங்கள்.—விரோதி விமான நிலயங்கள். | 7 விமானங்கள். | 14 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 6—8—41. (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.— விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| | 2 விரோதி டாங்கிகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ஒரு கூட்டம் தீப் பிடித்தது. |
| | தரையிலுள்ள விரோதி விமானங்கள், விமானம் சுடும் பீரங்கிகள்.—செர்பர்க் (Cherbourg)க்கு அருகாமையிலுள்ள விமான நிலயத்தில் | 1 விமானம். | விமானம் சுடும் பீரங்கிகள் அடக்கப்பட்டன. அநேக விமானங்கள் சேதமாயின. |
| | இரவில்.—ராணுவக் கட்டடங்கள்—பிராங்க்பர்ட், (Frankfurt), மான்ஹீம் (Mannheim), கார்ல்ஸ் ருஹ் (Karls Ruhe) | 8 விமானங்கள். | தீக்கள் மூட்டப்பட்டன. மிகவும் பலத்த சேதம். |
| | விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ் (France). | 1 விமானம். | ...... |
| | விரோதிக் கப்பல்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக்கருகில். | ...... | ...... |
| | விமான நிலயம்.—நார்வே (Norway) ... | 1 விமானம். | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | தரையிலிருந்தும் விரோதி விமானங்கள்.—ஜெர்பின் (Gerbin). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| | விமான நிலயம்.—காமிஸோ (Comiso) ... | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) ... | ...... | ...... |
| | சைனிய வாசஸ்தலங்கள்.—பார்டியா (Bardia). | நஷ்டமில்லை. | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | எதிரியின் துணைக்காவலுடன்கூடிய கப்பல்கள்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ...... | 3 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; 1 கப்பல் சேதமாயிற்று; 1 கப்பல் நாசமாயிற்று. |
| | **ஸிஸிலி (Sicily)** | | |
| | நீர்மூழ்கி தளங்கள்.—ஆகஸ்டா (Augusta) | ...... | தீக்கள் மூட்டப்பட்டன; அநேகம் பேர் இறந்தனர். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 6—7—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | கலாட்படை, பீரங்கிப்படை, மோட்டார் படைகள்.—போரரங்கம் முழுவதும். | ...... | ...... |
| 7—8—41. (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—நாசகாரிகளால் துணைபுரியப்பட்ட சிறிய காவல் கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகில். | ...... | ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| | விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | 7 விமானங்களுக்கு பெருத்த சேதம். |
| | இரவில்.—யுத்த தளவாட தொழிற்சாலைகள்—எஸ்ஸன் (Essen). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| | தொழிற்சாலைகள், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—ஹாம் (Hamm), டார்ட்மண்டு (Dortmund). | ...... | கட்டடங்கள் நொருக்கப்பட்டன. |
| | எதிரி விமான நிலயங்கள், இதர லக்ஷியங்கள்.—டென்மார்க் (Denmark). | ...... | ...... |
| | கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகில். | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. |
| | எதிரி விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ் (France). | 4 வெடி விமானங்கள். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| | மோட்டார் போக்குவரத்து.—பார்டியா (Bardia), காபுஸோ (Capuzzo) காம்பூத் (Gambut). | ...... | மோட்டார் வண்டிகள் சேதமாயின. |
| | இதாலியப் படைகள்.—கோண்டார் (Gondar). | சேதமில்லை. | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி யந்திரப் படைகள். காலாட்படை, பீரங்கிப்படை.—போரரங்கம் முழுவதும். | ...... 14 விமானங்கள். | ...... 21 விமானங்கள். |
| | பேர்லின் (Berlin). | நஷ்டமில்லை. | சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—8—41. (வெள்ளிக்கிழமை). | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 10 பகல் 'பைடர்கள்' | 18 பகல் 'பைடர்கள்'. |
| | இரவில்.—கப்பல் கட்டுமிடங்கள், கப்பல் தங்குமிடங்கள்—கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg). | ...... | ...... |
| | இரண்டு மறைந்துபோன ஜெர்மன் ஸப்ளை கப்பல்கள்.—பெர்கனு (Bergen)க்கு வடக்கேயுள்ள நார்வீஜியன் சிறு துறைமுகத்தில். | ...... | கப்பல்கள் தாக்கப்பட்டன. |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம்.—கடானியா (Catania). | ...... | 2000 டன் நிறையுள்ள கப்பல் சேதமாயிற்று. |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| | எதிரி 'பான்ஸர்' படைகள், காலாட் படை, விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போராங்கம் முழுவதும். | 12 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | இருப்புப் பாதைகள், ராணுவ லக்ஷியங்கள்.—பெர்லின் (Berlin). | 1 விமானம். | தீக்களும், வெடிகளும் மூட்டப்பட்டன. |
| 9—8—41. (சனிக்கிழமை). | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | ராணுவ நிலயங்கள்.—கிராவிலின்ஸு (Gravelines)க்கு அருகாமையில். | ...... | 11 விமானங்கள். |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | கப்பல் கட்டுமிடங்கள்—ட்ரிபோலி (Tripoli). | ...... | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. |
| | துறைமுகம், மோட்டார் வண்டிகள் தங்குமிடம்.—பார்டியா (Bardia). | ...... | சேதமாயிற்று. |
| | ரயில் வண்டிகள் பாதை மாறுமிடங்கள். துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | துறைமுகம்.—டெர்ளு (Derna). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 9—8—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |

இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| | விமானங்கள் இறங்குமிடங்கள்—எல் கஸாலா (El Gazala). | ...... | வண்டிகள் நாசமாயின; தீக்கள் மூட்டப்பட்டன. |
| | சைனிய வாசஸ்தலங்கள், மோட்டார் போக்குவரத்து வண்டிகள், பெட்ரோல் எண்ணெய் ஏந்திச்செல்லும் வண்டிகள்.—மிஸுராடா (Misurata)க்கருகில். | ...... | |
| | யுத்த தளவாடங்கள் சேமித்துவைக்குமிடங்கள்.—பியுராட் (Bucrat). | ...... | வெடித்து நாசமாயின. |

ஸிஸிலி (Sicily).

| | | | |
|---|---|---|---|
| | ஒரு வியாபாரக் கப்பல்.—ஸிராக்யூஸ் (Syracuse). | ...... | ...... |
| | 'காஸோமீடர்'.—அகஸ்டா (Augusta). | 1 விமானம். | ...... |

கிரீஸ் (Greece).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயம்.—எலூஸிஸ் (Eleusis) | ...... | தரையிலிருந்த பல விமானங்கள் நாசமாயின. |
| | காரிந்த் (Corinth). | ...... | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | |
|---|---|---|---|
| | எதிரி 'பான்ஸர்' துருப்புகள், காலாட் படை, விமானப்படை—யுத்தரங்கம் பூராவும். | 25 விமானங்கள். | 45 விமானங்கள். |
| 10—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | பகலில்.—விரோதிக் கப்பல்கள்—பிரெஞ்சு (Franch)க் கடற்கரைக்கருகில். | 2 வெடிவிமானங்களும் 1 'பைடர்' விமானமும். | 1 கப்பல் எரிக்கப்பட்டது. 1 விரோதி 'பைடர்' விமானம். |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் போக்குவரத்து, பழுது பார்க்குமிடங்கள், ரயில் வண்டிகள் நிறுத்துமிடம், கப்பல் கட்டுமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | குண்டுகளும், தீக்களும் மூட்டப்பட்டன. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **10—8—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி | | |
| விமானம் தங்குமிடம்.—பெங்காஸி (Benghazi)க்குத் தெற்கில். | ... | ...... |
| மோட்டார் போக்குவரத்து.—டோப்ருக்-பார்டியா ரோடு, (Tobruk-Bardia.) | ... | பல 'வண்டிகள் நாசமாயின. |
| தொழிற்சாலை கட்டடங்கள்.—பார்டியா (Bardia) | ... | ...... |
| துறைமுகம், மின்சார உற்பத்திசாலை.—ட்ரிபோலி (Tripoli). | ... | ...... |
| விமானமிறங்குமிடம்:—கஸாலா (Gazala). | நஷ்டமில்லை. | ...... |
| ஸிஸிலி (Sicily). | | |
| ஒரு கப்பல் (1,300 டன் கனமுள்ளது).—ஸிரகூஸ் (Syracuse) துறைமுகம். | ... | நேராகத் தாக்கப்பட்டது. |
| விமானம் நிலயம்.—ஜெர்மெயின் (Germaine). | ... | 1 விமானம். |
| நிலக்கரிக் கப்பல்.—லம்பெடுஸா (Lempedusa). | நஷ்டமில்லை. | மூழ்கடிக்கப்பட்டது. |
| ருஷ்ய விமானங்களால். | | |
| கிழக்குப் போர்முனை. | | |
| விரோதி 'பான்ஸர்' படை, காலாட்படை, விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்.—போரரங்கம் முழுவதும். | ... | ...... |
| பெரிய ரயில்வே பாலம்.–செர்னேவோடி (Chernovody). | ... | பாலம் உடைக்கப்பட்டது. |
| கப்பல்கள்.–கான்ஸ்டான்ஸா (Contanza). | 25 விமானங்கள். | 39 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **5—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| பகலில்.—ஸ்வல்ப விமானப்போர் ... | ...... | ...... |
| இரவில்.—இங்கிலாந்தின் (England) கிழக்குக்கரை, ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சொற்பச்சேதம், சிலர் கொல்லப்பட்டனர். |



| தேதி. லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **5—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| மால்டா (Malta) | ... 3 "பாம்பர்" வெடி விமானங்கள். | பொது மக்களுக்கு மட்டில் சேதம். |
| **6—8—41.** (புதன்கிழமை). | | |
| பிரிடன் (Britain). | | |
| இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்து (England)ல் கிழக்கிலும், தென்கிழக்கிலும். | 2 விமானங்கள். | ...... |
| ருஷ்யா (Russia). | | |
| மாஸ்கோ.—(Moscow) | ... 9 விமானங்கள். | ...... |
| பாலெஸ்டின் (Palestine). | | |
| ஹைபா (Haifa) | .... ...... | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை. |
| எகிப்து (Egypt) | | |
| ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம் ... | ...... | 30 பேர்கள் கொல்லப்பட்டனர்; 35 பேர்கள் காயமடைந்தனர் |
| மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| மால்டா (Malta). | ... 1 விமானம்; மற்றவை விரட்டப்பட்டன. | சேதமில்லை. |
| **7—8—41.** (வியாழக்கிழமை). | | |
| பிரிடன் (Britain). | | |
| சில சிதரப்பட்ட இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியாவிலும், (East Anglia), வடகிழக்கு ஸ்காத்லாந்திலும் (North-East Scotland). | ...... | சொற்பச் சேதம், சிலருக்குக்காயம். |
| வடகிழக்கு ஸ்காத்லாந்தில் (North-East Scotland) ஒரு பட்டணம்.— | ...... | பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—8—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்குக் கடற்கரை ஓரங்கள். | 1 விமானம். | குண்டுகள் போடப் படவில்லை. |
| | இரவில்.—கிழக்கு இங்கிலாந்து (England), வடகிழக்குக்கரையில் ஓர் இடம். | ...... | சொற்பச்சேதம்; ஒருவருக்கும் காயமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் கால்வாய் (Suez). ... | ...... | 11 பேர் கொல்லப் பட்டனர்; 7 பேர் காயமடைந்தனர். |
| 9—8—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இங்குமங்கும் சில இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), கிழக்கு ஸ்காத்லாந்தி(Scotland)ல் ஓர் இடம். | ...... | சொற்பச்சேதம், சிலருக்குக்காயம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 8 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| 10—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓர் இடம்—ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சேதமும் நஷ்டமுமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 6 விமானங்கள். | சொற்பச்சேதம் தான். |
| 11—8—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | அன்று முழுவதும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 2 விமானங்கள். | சேதமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸான்டிரியா (Alexandria). | ...... | 4பேர் காயமடைந்தனர்; சிறிது சேதம் தான். |
| | ஸூயஸ்கால்வாய் (Suez). | ...... | 8பேர் கொல்லப் பட்டனர்; 13பேர் காயமடைந்தனர். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 2 விமானங்கள். | ...... |



# யுத்தக் குறிப்புகள்.

## பெர்ஸியாவின் ஆபத்தான நிலை.

நமது நிலயத்து யுத்த அறிக்கை இன்னும் பெர்ஸியாவுக்குச் சென்றதாகத் தெரியவில்லை. ஆனால் சில நேயர்களுக்கு அங்கே இருக்கும் சிநேகிதர்கள் மூலம் கடிதப்போக்குவரவு ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் யாவரும் பின்வரும் விஷயங்களை கவனிப்பது அவசியம். ஜெர்மானியர் உள்ளே பிரவேசிக்கும் விஷயமாக, ஒரு வருஷத்திற்கு முன்னிருந்த ருமேனியா, பல்கேரியா தேசங்களை இரானுக்கு ஒப்பிடுவது சகஜம் போல் காணப்படுகிறது. அவ்விரண்டு தேசங்களும் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்படும்போழுது படிப்படியாக மூன்று மாறுதல்கள் அடைந்தன. இவைகளை அங்கிருக்கும் ஜனங்கள் அறிந்து கொள்ளாததினால்தான் இப்பொழுது மிகவும் தீன நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆக்கிரமணத்தில் மூன்று விதமான மாறுதல்கள் (1) ஜெர்மனியில் தேர்ச்சிபெற்றவர்களை இரானில் முக்கியமான தொழிற்சாலைகளில் ஜெர்மனி அமர்த்துவது, (2) பிரசார ஏஜெண்டுகளென்றும், ஐந்தாம்படை வகுப்பாளர் என்றும், பெரிய மனிதர்களையும், உயர்ந்த சம்பளம் பெறுகிறவர்களையும் உபயோகிப்பது, (3) யாத்ரீகர்கள் என்ற பெயரினால் முதல் சைனியப் பகுதியை அனுப்புவதும்தான். இதுவரை கிடைத்த அறிக்கைகளிலிருந்தும், மிஸ்டர் ஈடன் பார்லிமெண்டில் செய்த உபன்யாசங்களிலிருந்தும், இரான் மூன்றாவது நிலைக்கு வந்துவிட்டது என்று பிரகாசமாகத் தெரிந்ததுதான்.

பல தடவைகளில்தான் நடுநிலைமை வகிக்கிறதாக இரான் சொல்லியிருக்கிறது உண்மையே. ஆனால் ஜெர்மனியால் செய்யப்பட்ட பொருளாதார மேன் பார்வை, ராஜீய ஆதிக்கத்தை அடைய ஒரு தந்திரம் என்பதை இரானிலுள்ளோர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜெர்மனியிலிருந்து வெளியாகிற ராஜீய-பொருளாதார வியாசங்களையும் உள் அர்த்தத்தோடு படிக்கவேண்டும். அவைகளில் ஜெர்மனி பெர்ஸியன் குடாவரையிலுள்ள மத்தியக்கிழக்கிலுள்ள துருக்கி, இரான், ஸிரியா, இராக் நாடுகளின் பொருளாதார மேன்பார்வையைத் தான் வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் மோசக் கருத்திற்கு திருஷ்டாந்தம் இராக்கில் ரஷீத் ஆலியின் கதியும், ஸிரியாவிலிருந்த விஷி ஸர்க்காரின் நிலையும்தான். துருக்கியில் ஏற்கனவே ஜெர்மனியின் பலாத்காரம் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகள் முறையிடுகின்றன. ருமேனியா பல்கேரியா நாடுகள், முதலில் சல்லிசாக இருந்த பொருளாதார ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி பிறகு ஜெர்மனியுடனேயே பிணைக்கப்பட்டதால் அடிமைகளாக்கப் பட்டன.

இராக், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகள் இந்தியாவுக்குச் சமீபத்தில் இருப்பதால்தான் நாம் இவைகளையெல்லாம் பிரசுரிக்கிறோம்.

**விஷி சமாதானம்.**—மற்ற தேசங்களோடு ஜெர்மனி செய்து கொள்ளும் சமாதானப் பேச்சுகளும், ஒப்பந்தங்களும் வெறும் ஏமாற்றம்தான். முடிவில் அந்த நாடுகளுக்கு விபத்துதான். அம்மாதிரி ஜெர்மன் அனுஷ்டானங்களை சிஷ்யன்போல் பின்பற்றும் ஜப்பான் குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாக அதிக சாமர்த்தியமாக காரியங்களைச் செய்துவருகிறது. இண்டோ-சைனாவிலுள்ள விஷி ஸர்க்காருடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்று சொல்லி விபரீத முடிவை உண்டாக்க யத்தனப்படுகிறது.

1. இப்பேச்சு சமாதானமுறையில் இல்லை. பிடேன் ஒப்புக்கொண்டபடி பலவந்தங்கள். பயமுறுத்தல்களால் இன்னும் பலப்படுத்திற்று. இதற்குப் பயந்து பிரெஞ்சுக்காரர்கள் பணிந்துவிட்டனர். இதனால் ஜப்பானுக்கு அதிக லாபமானாலும் பிரெஞ்சுக்காரர்களுக்கு தயவு காட்டியதுபோல் அபிநயிக்கப்படுகிறது. அச்சுநாட்டு வழக்கப்படி முன்னதாகவே ஜப்பானியப் பத்திரிகைகளும் இண்டோ சைனாவைப்பற்றி குறைகூற ஆரம்பித்தன!

2. அப்பொழுது ஏற்படுத்திய பத்திரத்தில் 'பொது-க்ஷேமப்பிராந்தியம்' என்று இருமுறை காணப்படுகிறது. அதுமுதல் இதுவரை பொது-க்ஷேமத்திற்குப் பிரயத்தனம்' ஒன்றும் இல்லை. ஆகையால் இப்பதங்களுக்குச் சமீபத்திலுள்ள நாடுகளை ஜப்பான் ஸ்வீகரிப்பது என்ற பொருள் ஏற்படுகிறது.

3. அல்லது இண்டோ-சைனாவை மற்றவர்கள் எதிர்க்காமல் காப்பது என்ற பரோபகார எண்ணம் ஜப்பானுக்கு இருக்கிறதாக நினைக்கலாம். அப்படியானால், நார்வே, டான்சிக், ருமேனியாவை ஜெர்மனி காப்பதாகச் சொல்லுவது போல்தான் முடியும்.

4. ஒருக்கால் இண்டோ-சைனாவின் எல்லைகளையும் ராஜ்ஜியத்தையும் மற்றவர்கள் பிடுங்கிக்கொள்ளாமல் ஸ்வதந்திரத்தை ஜப்பான் பார்த்துக் கொள்ளுவதானால் பிரான்ஸுக்குச் சொந்தமான துறைமுகங்களையும், விமான தளங்களையும் ஜப்பான் ஏற்கனவே பிடுங்கிக்கொண்டது ஏனோ.

5. இண்டோ-சைனாவோடு ஒற்றுமையுள்ள நாகரீகம், சரித்திரம், பொருளாதார சம்பந்தங்களை ஸ்திரப்படுத்துவதாக ஜப்பான் சொல்லுவதும் பரிகசிக்கத்தக்கதே. இதைப்போல் மலாய் நாட்டுடன் பொருளாதார ஒப்பந்தம் செய்யவும் தீர்மானிக்கும்போல் இருக்கிறது. மஞ்சூரியா, சைனாவை விழுங்கியது போல் விழுங்கத்தான் ஜப்பான் இவ்வொப்பந்தங்கள் செய்துகொள்ளுகின்றன. ஆகவே பொது க்ஷேமம் என்பது வஞ்சகமான பொருள் கொண்டதுதான்.

**அயலார்கள்.**—இவ்விதமெல்லாம் ஜப்பான் ஏன் ஏமாற்றவேண்டும். ஆனால் இதைக்கண்டு ஒருவரும் ஏமாறப்படவில்லை. அக்கம் பக்கத்திலுள்ளோர் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். பிரிடனும் அமெரிக்காவும் ஒரே சமயத்தில் ஜப்பானிய ஐவேஜிகளைக் கட்டுப்படுத்தின. டச்சுக்கிழக்கு இந்திய அரசாங்கமும் அம்மாதிரி செய்துவிட்டது. மிஸ்டர் ஸம்னர் வெல்ஸும் விஷி ஸர்க்காரை



ஸ்வதந்திரத்திற்கு விரோதமான ஜெர்மனி முதலியோருக்கு தின்பண்டம்போல் உதவிகளை மேல் மேலும் கொடுக்கக்கூடாதென்று கோபமாயும் பரிகாசமாயும் சொல்லிவிட்டார்.

அமெரிக்கா, பிரிடன், சைனா, டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகள் ஒன்று சேர்ந்துதான் இருக்கின்றன. நாளது வரை ஜப்பானைத் தாய்லாந்தில் முன்னேற விடாமல் செய்திருக்கிறார்கள். ஐரோப்பாவில் கழிவு கெட்டதும், பயங்கொள்ளியுமான விஷியிடமிருந்து இண்டோ-சைனாவைப் பிடிப்பது சுலபம். மர்ம நிலையிலும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தாய்லாந்தில் நாஸி தந்திரத்தைக் கையாளுவது முடியாது. இது இன்னும் 2 வாரங்களில் தெரியவரும். நடக்கும் விஷயங்களும் விபரீதமாக நடக்காது என்ற நம்பிக்கையை உண்டுபண்ணுகின்றன.

1. தாய்லாந்து, தீவிரமான தேசீய உணர்ச்சி கொண்டதாயும், ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதில் தீர்மானமாயும் இருக்கிறது.

2. சில மாதங்களுக்கு முன்புதான் பிரிடனுடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. அது முதல் அதற்குத் தேவையான எண்ணெயை பிரிடன் அனுப்புகிறது.

3. ஜெர்மனியோ, ஜப்பானோ மற்ற தேசங்களோடு செய்துகொண்ட ஒப்பந்தம்போலல்லாது பிரிடன் செய்துகொண்டது உண்மையில் சமரசமானது. இதை தாய்லாந்துக்காரர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

4. இங்கிலாந்து-தாய் ஒப்பந்தம் அன்யோன்யமானது. பிரிடன் மலாய் நாட்டில் செய்யும் முஸ்தீபுகளைக்கண்டு இவர்கள் பயப்படவில்லை. ஏனெனில் தாய்நாட்டிலுள்ளோரின் அபிப்பிராயமும் சேர்ந்திருக்கிறது.

5. ஏனெனில் சார்டல் ஹல்லும், மிஸ்டர் ஈடனும் மனதில் ஒன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை. முடித்து வைக்க முடியாததைப்பற்றி வாக்களிக்கவும் இல்லை. ஜப்பானைத் தாய்லாந்திலிருந்து அகன்று போகும்படி வியக்தமாகச் சொல்லிவிட்டார்கள்.

## மத்தியதரைக்கடல்.

ருஷ்யச் சண்டையில் அதிக கவனம் செலுத்துகையில் மத்தியதரைக் கடலைப்பற்றி கொஞ்சம் மறக்கக்கூடும். ஆனால் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு துணைகொண்ட கப்பல்கள் சேதமில்லாமல் அனுப்பப்படுகின்றன. இதாலியரின் கப்பற்படையில் பெரும்பாகம் சிற்சில குறுகிய இடங்களில் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் அவை நம் கப்பல்களை எதிர்க்க வசதி இருக்கிறது. இதாலியர் சிறு கப்பல்களைக்கொண்டு 27 மணி நேரம் எதிர்த்த போதிலும் பிரிடிஷ் சாமான்கள் சேதமன்னியில் துறைமுகங்களுக்குச் சேர்க்கப்பட்டன. இதாலிய பெரும் கப்பல்கள் தலைகாட்டவேயில்லை. பிரிடிஷ் கப்பற்படைக்கு கடலில் இவ்விதமாகவெல்லாம் ஆதிக்கமிருப்பதால் ஸார்டீனியா, ஸிஸிலி, கிரீட்டின் தென்பாகங்களிலும் எதிரியின் விமான எதிர்ப்பை நாம் பொருட்படுத்த

வில்லை. மத்தியதரைக்கடலில் நடு பாகத்திலும், கிழக்கிலும் ஆதிக்கம் இருப்பதாக ஜெர்மனி சொல்லுவது பொய்தான். ஆகையால் கொஞ்ச காலம் நிலப்படைகளாலும், மிஞ்சியிருக்கும் இதாலியக் கப்பற்படையின் உதவியாலும் மத்தியதரைக் கடலில் எதிர்ப்பு இருக்கத்தானிருக்கும். அதைச்சரியாக தடுத்து வருவதால், ஆபிரிக்கா, லெவாண்டு, எகிப்து முதலிய நாடுகளுக்கு ஹிட்லர் பந்தோபஸ்துடன் சாமான்கள் அனுப்ப முடியவில்லை. இதற்காக ஸூயஸ் கால்வாயையும், நடுக்கிழக்கு நாடுகளையும் தரைமார்க்கமாகத்தான் எதிர்க்க முடியும். அப்படிச்செல்ல, ருஷ்யாவை ஜயித்த பிறகு, நடுக்கிழக்கு நாடுகளைச்சுற்றி, நமக்குச் சொந்தமான இடங்களை வளைத்துக்கொண்டு போகவேண்டும். அப்பொழுதுதான் மத்தியதரைப் பிரதேசம் நம்மிடம் தங்காமல் போகும். ஆனால் இவையெல்லாம் நடக்காத எண்ணங்கள்.

## யுத்தம் இரு இடங்களிலா பல முனைகளிலா?

இப்பத்திரிகையில் சில வாரங்களுக்கு முன்பு ருஷ்யாவைப்பற்றிய முதல் வியாசத்தைப் படித்தவர்களுக்கு, ஜெர்மனி இரு முனைகளில் சண்டை செய்வதால் தோற்றுவிடாது என்று தெரியவரும். ஆனால் விபரீத அரசாட்சிக்கு வஞ்சகத் தலைவனான ஹிட்லர், பிரிடிஷாருக்குக் கெடுதி செய்ய பல இடங்களில் சண்டை துவக்கி, நேசதேசத் துருப்புக்களை கலைத்து நடுநிலைமையிலிருப்பவர்களை பயமுறுத்த ஏற்பாடு செய்வான். ஏனென்றால் உலகத்திலில்லாத பெரிய ராணுவங்களை வைத்துக்கொண்டிருப்பதாக நினைக்கிறான்.

துருக்கி, ஸ்பெயின், இரான், அமெரிக்கா நாடுகளெல்லாம், ஜெர்மானியரிடமிருந்து அதிக ஆபத்துக்குள்ளாகியே இருக்கின்றன. இவையும், விசேஷமாக நேச நாடுகளும் அலக்ஷியமாக இருக்கக்கூடாது. ஏனெனில் ஹிட்லர் உலக ஆக்கிரமணம் என்ற பைத்தியம் பிடித்துத் திரிகிறான்: அதற்குத் தேவையான ராணுவங்களும் இருக்கின்றனவாம். சும்மாயிருந்துகொண்டு எப்படியோ நடக்குமென்று இருக்கக்கூடாது.

## பூ-தகனம்.

ருஷ்யாவில் மூன்றாம் தடவை பெரிய ஜெர்மன் எதிர்ப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒருவாரம் ஆகியும் ஜெர்மானியர் ஒருவிதமான வெற்றியடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பெர்லின் அறிக்கைகள் மாத்திரம் ருஷ்யருக்கு அபார நஷ்டமென்றும், முன்னைவிட ஒடெஸ்ஸா, லெனின்கிராட்டிற்கு ஆபத்து அதிகமாகி விட்டதென்றும் தெரிவிக்கின்றன. நமது இக்குறிப்புகள் வெளிவருவதற்குள் ருஷ்யர்களுக்கு சற்று தோல்விபோல் காணப்படலாம். ஜெர்மானியருக்கு ஒருவித லாபமும் ஏற்பட ஹேது இல்லை. ருஷ்யர்கள், பலமாகவே எதிர்க்கிறார்கள். ஜெர்மானியரும் 'மூலபலச்சண்டை' என்ற முறையைப்பிடித்துக்கொண்டு தயாரில்லாத பொது மக்கள் பேரில் கணக்கில்லாத ஆயுதங்களையும் குண்டுகளையும் வீசுகிறார்கள். இதை விடப்பெரியதாக 'முழுதழிப்பு' என்ற எதிர்முறையை ருஷ்யர்கள் அவலம்பித்திருக்கிறார்கள். இது ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லை.



ருஷ்யாவிலுள்ள சொத்துக்களும் வயல்களும், எண்ணெய்க் கிணறுகளும், தொழிற்சாலைகளும் சேதமாக்கப்பட்டனவென்று பெர்லின் அதிகாரிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ருஷ்யர்கள் வீரத்தனமாயும் சொந்தசொத்துக்களை எரித்தும் சண்டையிடுகின்றனர். எதிர்த்து முன்னேறிவரும் ஜெர்மானியருக்குப்போகும் இடங்களில் ஆகாரம், ஜலம், போக்குவரவு சாதனம், மோட்டார் முதலிய யந்திரப்படைகளும் எண்ணெய் முதலியவை ஒன்றும் கிடைக்கவில்லை. ஈவு இரக்கமின்றி ருஷ்யர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

ருஷ்யப்படையும், ஸ்டாலின் உபதேசப்படி பூ-தகன முறையைச் செய்கிறார்கள். நெருப்பும் கலப்பையும்கொண்டு எல்லாம் அழிக்கப்படுகின்றன. ஜெர்மானியர் வந்தபொழுது செர்னோவிட், லிபா, மின்ஸ்க், டர்னபால் எல்லாம் பாழாகிக்கிடந்தன. ருமேனியர்கள் பிடித்தபோது கிஷ்ணவ் பட்டிணத்தில் எரியும் நெருப்பை அணைக்க 3 நாட்கள் பிடித்தன. வருஷத்திற்கு 30,000 டன் இரும்பு சாமான் செய்யும் ஸிமன்ஸ்-மார்டின் தொழிற்சாலையில் 2 கட்டடம்தான் மிஞ்சியிருந்தன.

இதற்குள் ருஷ்யா முழுவதிலும், முக்கியமாகச் சண்டை நடக்கும் இடத்திற்கு சமீபத்தில் போக்குவரவு கெடுதலடையாததால் 100-க்கணக்கான மைல்கள் வடக்கேயும் கிழக்கேயும், சாமான்கள் காபந்துடன் அனுப்பப்படுகிறது. ருஷ்யாவில் எதிரி வருவதற்குள்ளேயே அறுவடை செய்தும், தானியங்களை எடுத்தும் எதிரி கைப்பற்றாமல் அப்புறப்படுத்தப்படுகிறது. யூக்ரேன் பூரா புருஷர்கள் இரவும் பகலும் இம்மாதிரி வேலைசெய்கிறார்கள். கிரிமியாவிலுள்ள பொதுப்பண்ணையில் அறுவடையாகி அக்கம்பக்கங்களுக்கு ஏற்றப்பட்டது. புருஷர்கள் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் ஸ்திரீகள் வயல்வரப்புகளிலும், மோட்டார், ரயில் வண்டிகள் இருக்குமிடங்களிலும் வேலைசெய்கிறார்கள். ஆகையால் ருஷ்யர்கள் சண்டையில் ஜயித்தால் படும் பாட்டிற்கு பொருத்தமானதாக ஆகும்.

---

# நவீன யுத்தத்தின் அபார வேகம்.

ஹிட்லர் ருஷ்யாவை எதிர்க்கும் முன்னே, ஏன், அதற்கு வெகு காலம் முன்னமேயே, அறியாத சிலரைத் தவிர அல்லது அறியவேண்டாம் என்று பிடிவாதமிருக்கும் சிலரைத் தவிர ஹிட்லருக்கு உலகத்தைப் பூரா ஆக்கிரமிக்க வேண்டுமென்ற எண்ணம் யாவருக்கும் தெரியும். தற்சமயம் ஹிட்லரை நெபோலியனுக்கு ஒப்பிடுவது சரியானதுதான். கொடுங்கோல் மன்னர்கள் முடிவில் அநேகமாய் ஏமாந்துதான் போயிருக்கிறார்கள். நெபோலியன் மாஸ்கோவை நோக்கிச் சென்று, பட்டிணத்தை எதிர்த்த பிறகு, மடிந்த சைனித்தைப் பனிப்பாங்கான வழியாக ஐரோப்பாவுக்கு மீட்டிக்கொண்டு வந்தான். அதற்குள்ளாகவே ஐரோப்பா அவனுக்கு விரோதமாக ஒன்று சேர்ந்து

விட்டது. அவ்விதமே தோற்று ஹிட்லரும் திரும்பக்கூடும் என்று தைரியமாக நினைக்கக்கூடும். ஆனால் இவ்வித சரித்திர திருஷ்டாந்தங்களில் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. ஏனெனில் நெபோலியனுக்குப் பிறகு சண்டை வெகு விரைவாகச் செல்லுகிறது. அவனைத் தோற்கடிக்க 20 வருஷங்கள் பிடித்தன. தற்சமயம் இவ்வுலகம் அவ்வளவு காலம் சண்டையில் ஈடுபடுமென்பது சாத்தியமில்லை.

நெபோலியனின் யுத்த முறையிலிருந்து நாம் அறியவேண்டிய நுட்பமான பாடம் ஒன்றிருக்கிறது. சண்டையின் தந்திரத்திற்குப் புதுக்கோட்பாடுகளை அவன் திட்டம் செய்யும்பொழுது பிரஷ்யா வீரர் ஒருவர் பின்வருமாறு எழுதினார்:—"என்னுடைய பால்யத்தில் ஒரு சதுரயோஜனைகூட பிடிக்காமலும், இழக்காமலும் கோடைகாலம் முழுவதும் முன்னும் பின்னுமாகப் போய்க் கொண்டிருப்போம். பிறகு மாரி காலத்தில் கூடாரங்களுக்கு வந்துவிடுவோம். அப்பொழுது, நெபோலியன் துணிகரமாய், ராணுவ நிலைகளை அறியாமல் புலாயினிலிருந்து ஹாம்பட்டிணத்திற்கும் அங்கிருந்து மொரேவியாவிற்கும் வேகமாய் வந்து டிஸம்பர் மாதம் முழுதும் சண்டை போடுகிறான். அவன் சண்டைத் தந்திரத்தின் போக்கெல்லாம் மிக பிழையுள்ளது". அவ்விதமே ஹிட்லரின் ராணுவ தந்திரங்களும் வழக்க விரோதமானவை. பிரெஞ்சுக்காரர்களால் தாக்கப்படாமல் போக்குவரவு சாதனங்கள் காப்பாத்தப்படவேண்டுமென்று சொன்ன கக்ஷித் தலைவர்களையெல்லாம் ஹிட்லர் அவமதித்தான். பிரான்ஸில் ஸெடான் வழியாகப் பிளந்து சென்று அபிவில்லி வரை விரைவாகச் சைனியத்தை அனுப்பினான். நெபோலியனும் இந்தமாதிரி செய்தான். அவன் குதிரைப்படையினால் சண்டை செய்து ஹாம்பர்க், போரும்வரை நிற்காது முன்னேறினான். எதிரிகள் சிதறிப்போக விமானக்குடைகளையும், ஸைனிய வாஹிகளையும் ஹிட்லர் விடுவித்தார். ஆனால் நெபோலியனோ சத்துருக்களின் பின்னால் சில மத்தளச் சப்தங்களைக் கிளப்பி அதனால் தன் வருகையைத் தெரியப்படுத்தி எதிரியைப் பயந்து சின்னாபின்னமாகும்படி செய்தான். மேலும், நெபோலியனின், வேகமாகச் செல்லும் மத்தளங்களுக்கு ஒப்பானதுதான் ஆகாயப்படை தரைப்படை இவைகளின் சேர்க்கை. இதைக்கொண்டு ஹிட்லர் ஒரு மணிக்கு 200 அல்லது 300 மைல்கள் வீதம் தன் பீரங்கிப் படைக்கு விமானப் படையைகூட உதவச் செய்தார்.

ஆக ஜெர்மானியர் கையாண்ட நூதன முறைகளின் பயனென்ன? இதற்கு விடை ஒரு வார்த்தை தான். வேகம் முழுச் சண்டையும் இடுக்கிடும்படி துரிதப்படுத்தப்படுகிறது, சென்ற யுத்தத்தில் தனிச் சண்டைகளே பல நாட்கள், வாரங்கள்கூட பிடித்தன. இப்பொழுதோ ஹிட்லர், தேசத்தையே அந்தக்காலத்திற்குள் பிடிக்க முயலுகிறார். சென்ற ஐந்து வருஷகாலத்திற்குள் சண்டையின் வேகம், சென்ற நூறு வருஷங்களை விட அதிகமாகிவிட்டது. பிளிட்ஸ் கிரிக் (மின்னல்படை) என்பது எவ்விதம் அபிவிருத்தியடைந்தது என்பதைக் கொஞ்சம் கவனிப்போம். ஜெர்மானியர் முதலில் ஸ்பெயின் தேசத்தில் பரீக்ஷித்தார்கள். 1938-ம் வருஷத்தில் ஜெர்மன் டாங்கிகள்



ஸ்பெயின் கடற்கரை வழியாக தினம் 4 மைல் வீதம் கனானகன் முனையைத் துளைத்துச் சென்றன. போலீஷ் சண்டையில் வார்ஸாவைத் தாக்கும்பொழுது 150 மைல் தூரம் வரை, தினம் 12 மைல் வீதம் போக முடிந்தது. இங்கிலீஷ் சானல் கரையில் ப்ளாண்டர்ஸில் 14 மைல் வீதமும், பிரான்ஸில் மூன்று நாட்கள் வரை தினம் 30 மைல் வீதமும் சென்றன. லிபியாவில் ஜெனரல் வேவல் இதை இன்னும் துரிதப்படுத்தினார். அங்கேயே ஜெர்மானியர் எதிர்க்கும் பொழுது 12 நாட்கள் வரை 30 மைல் வீதம் சென்றார்கள். ஆகவே ஸ்பெயினில் 4 மைல், போலந்தில் 12, லிபியாவில் 30 மைல். இதைச் சற்று நினைத்துப் பாருங்கள்.

சண்டையின் வேகத்தால் இப்படி எண்ண முடியாதபடி வேகம் அதிகப்பட்டு வருகிறது. பல வாரங்கள், மாதங்கள், வருஷங்களில் செய்யப்பட்ட வேலையை ஒரு நாளில் முடிக்க வீரர்கள் உத்தேசிக்கலாமென்று தெரிகிறது. அதாவது நவீன யுத்தங்களில் ஜயத்தை விரும்புவோர் இவ்விதம் மின்னல்படையின் அவசியத்தை நினைக்கவேண்டும். வேகமே ஜயத்தின் திரவு கோல். காலம் தான் எல்லாவற்றையும் கவர்ந்திருக்கிறது, ஹிட்லரின் சமீப யுத்தங்களுக்கு அடிப்படையில் காலத்தின் சரியான கணனம் தான் இருக்கிறது. ருஷ்யா தேசம் விஸ்தாரமான பரப்பை உடையது. நெபோலியன் அதைப் பிடிக்க பலமாதங்கள் பிடித்தன. ஆனால் ஹிட்லர் நாட்கள் கணக்கில் பிடிக்கப் பார்க்கிறார். ஜெர்மன் பத்திரிகைகளும் அவ்விதம் சொல்லத் தொடங்கிவிட்டன. ருஷ்யா 70 நாட்களில் சரணாகதி செய்யுமென்கிறார்கள். இது தான் ஹிட்லரின் தந்திரத்தை வெளிக்காட்டுகிறது. ருஷ்யாவைப் பிடிக்கும் பைத்தியத்திற்கு இது தான் காரணம். ஹிட்லரும் 70 நாட்களுக்குள் ருஷ்யாவை முறியடித்து, ஆகாயப்படையைத் தூள்படுத்தி, தான் எல்லா விதமான— யந்திரங்கள் மனிதர்களடங்கிய சைனியத்தை மேற்கே திருப்பி பிரிடனைப் பிடிக்க நினைக்கிறார். நாட்கள் கணக்கிலேயேதான் ருஷ்யாவின் தோல்வியையும், இந்தத் தீவின் முற்றுகையையும், கடைசி ஜயத்தையும் வைத்திருக்கிறார். ஏனென்றால் அமெரிக்கச் சாமான்களை பூராவாகச் சேகரித்து அட்லாண்டிக் வழியாக இத் தேசத்திற்கு சாமான்கள் அனுப்ப பல மாதங்கள் ஆகுமென்று அவர் நினைக்கிறார். [தற்சமயம் 30 நாட்களும் கழிந்து விட்டன—பத்திராதிபர்].

ஆனால் எவ்விதம் அவர் உத்தேசங்கள் முறிக்கப்படலாம். பிரிடனும் அமெரிக்காவும் சேர்ந்து ஒப்பந்தம் செய்தபடி பொதுச் சத்துருவுக்கு விரோதமாக ருஷ்யாவின் பக்கம் சேர்ந்து சீக்கிரத்தில் பூர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சரிதான் பிரிடன் சம்பந்தப்பட்ட வரையில் சில வாரங்களாக ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். இத்தீவின் தெற்குக்கரைப் பக்கங்களில் ஜனங்கள் இரவும் பகலும் காவல் காத்துக்கொண்டும், கவனித்துக்கொண்டுமிருக்கிறார்கள். ஆகாசம் அனுகூலமாக இருக்கிறது. எதிரி விமானங்களின் உருமல் சப்தங்கள் கேட்கப்படவில்லை; பிரிடிஷ் பட்டிணங்கள் பொட்டலாகுவதையும்

வீடுகள் தகர்க்கப்படுவதையும், வர்ணிக்க முடியாத துக்கங்களையும், கவலைகளையும் தெரிவிக்க இடமில்லை. அதற்குப் பதிலாக ஆத்திரத்தையும் ஆசையையும் வெடி விமானங்களின் சப்தத்தில் ஊகிக்கிறோம். நாஸித் துப்பாக்கி, விமானங்கள் இவைகளின் சாட்டையை அனுபவித்த டோவர் இப்பொழுது வெளியே யுத்த யாத்திரைக்குப் போகும் வீரர்களுக்கு கடைசி விடையளிப்பையும், திரும்பி வருபவர்களுக்கு முதல் நல்வரவையும் அளிக்கிறது. கடந்த வருஷத்தின், ஸெப்டம்பர், நவம்பர் மாறி மாறி பாடம் படிக்கப்படுகிறது. இதைக் கண்களாலேயே பார்க்கப் பிரிடிஷ் மக்களுக்கு இது புத்துயிரைப் புகட்டுகிறது. பலமாகத் தாக்கப்பட்ட பிலிமௌத், கவன்டிரி, மர்ஸிஸயிட் லண்டன் பிரதேசங்களுக்கு ஆறுதலை அளிக்கிறது.

சென்ற 15 நாட்களாக, ஒவ்வொரு இரவும் பகலும் பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனிக்குள்ளும், ஜெர்மனியால் ஜயிக்கப்பட்ட ஐரோப்பாவிலும் சண்டையை பலமாகச் செய்கின்றன. எப்படி இந்த மாறுபட்ட அதிர்ஷ்டத்தை விளைவிக்க முடிந்தது? ஒன்று கூட மறக்கக் கூடாத இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலில் நிச்சயமாக ருஷ்யர்களுக்கு நாம் வந்தனம் அளிக்கவேண்டும். அவர்கள் லுப்ட்வாப் (ஜெர்மன் விமானப்படை)யின் ஒரு பாகத்தைக் கிழக்கே இழுத்துக் கொண்டார்கள். ஆகவே நமக்கு ஜெர்மன் கேந்திரஸ்தானங்களை சுலபமாகவும் பலமாகவும் அடிக்க சந்தர்ப்பம் கொடுத்தார்கள். மேலும் மற்றொரு காரணமும் உண்டு. இப்பொழுது விமான தளங்களிலிருந்து கிளம்பும் விமானங்கள் பிரிடிஷ் ஜனங்களால் 2, 3 மாதங்களுக்குமுன் கட்டி முடிக்கப்பட்டவை. கடந்த வருஷம் முழுதுமே தங்கள் உயிர்க்குழியில் இருக்கின்றனவென்று ஜனங்கள் அறிந்து புதிய தீர்மானத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இன்று அந்தக் கடுமையான வேலையின் பயனை அடைகிறோம். அப்படி வேலை செய்ய அவகாசம் இருந்திருக்காவிடில் ருஷ்யச் சண்டையின் பயனை நாம் அடைந்திருக்க முடியாது. அவ்விதமே இப்பொழுது செய்யும் முயற்சியும், யந்திரங்கள் சேகரிப்பதையும் பொறுத்துத்தான் இனி 60, 70 நாட்களுக்குப்பிறகு வரும் வெற்றி இருக்கிறது. அதில் நாம் அஜாக்கிரதையாக இருந்தால் 2 மாதம் கழித்து ருஷ்யர்களுக்கு உதவவோ, நம்மைத்தான் காப்பாற்றிக்கொள்ளவோ முடியாது.

ருஷ்யச் சண்டை நமக்குத்தான் நடக்கிறது என்று மனப்பால் குடித்துக் கொண்டு நாம் சும்மா இல்லை, முன்னைவிட அதிக முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. ஜெர்மானியர் ருஷ்யாவுடன் சண்டையிடுகிறார்கள் என்ற தகவல் கிட்டினவுடன் ஒரு பெரும் பரபரப்பு இங்கே பரவிற்று. சென்ற வருஷம் ஜெர்மனி பிரிடனை எதிர்த்தபடி இப்பொழுது நாம் ஜெர்மனியை அடிக்கத் தருணம் கிட்டியிருக்கிறது. மிஸ்டர் சர்ச்சில் ருஷ்யர்களுக்கு பிரிடனின் வரையறையில்லாத உதவியை, வியக்தமாயும், வற்புறுத்தியும், பிரகாசமான வாசகங்களிலும் வெளிப்படுத்தியவுடன் பிரிடனில் பரபரப்பு அதிகரித்தது. பழிக்குப்பழி வாங்க சமயம் வந்திருக்கிறது. பிரஸிடெண்டு ரூஸ்வெல்டும்



அம்மாதிரி பேசியதும் நம் சந்தோஷம் விருத்தியடைந்தது. கோபம், முடிவான எண்ணம் உள்ள மனிதர்கள் நிறைந்த இவ்வுலகம் நாஸிக் கூட்டத்தை பழி வாங்கக் கிளம்பியது போல் காணப்பட்டது. ஆகாயச் சண்டையில் கோபத்துடன் பிரிடன் முன்னேறி வருகிறது" என்று அறிந்தவுடன் நாம் ஜயிக்கலாம் என்ற நம்பிக்கையும் மேல் கிளம்பிற்று. மிஸ்டர் சர்ச்சில் பிரபுவோ, ரூஸ்வெல்டோ, பிரிடிஷ் சைனியமோ ஒருக்ஷணத்தையும் வீணாக்கவில்லை. வேகமான எதிர்ப்புகள் உள்ள இந்தச் சண்டைகளில் முக்கியமான வேகம், எண்ணெய், இரும்பு, ரேடியம், ரத்னங்கள் இவைகளைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததென்று ஹிட்லரால் கண்டுபிடிக்கப்பட்ட வேகம், நம்முடைய நோக்கமாயும் ஆகிவிட்டது. அட்லாண்டிக்கின் அக்கரையில் (அமெரிக்காவிலும்) அவ்விதமே நினைக்கப்படுகிறது. ஒவ்வொரு க்ஷணமும் முக்கியமாகிவிட்டது. ஹிட்லரின் யுத்த தந்திரங்கள் இதைத்தான் அனுசரித்திருக்கிறது. கிழக்குப்போர் முனையிலிருந்து ஜெர்மன் விமானங்களைத் திரும்பச்செய்தாலும், பட்டிணங்களைப் பாழாக்கி, விமான தளங்களை நாசப்படுத்தி, இரண்டு பக்கங்களிலும் வெகு நாளாகச் சண்டைக்குப் பயந்த நாஸிகளை ஈடுபடும்படி செய்தால் ருஷ்யர்களை காப்பாற்றி நம்மையும் காப்பாற்றிக் கொண்டவர்களாவோம். பிரிடன் தேசத்தார்கள் இன்று இவ்விதம் சொல்லுகிறார்கள். "ஒவ்வொரு வெடி விமானத்தையும் உபயோகியுங்கள், ஒவ்வொரு ஆயுதத்தையும் கையிலேந்துங்கள், உலோகத்துண்டுகள் யாவற்றையும் உபயோகியுங்கள். நாம் ஈச்வரனிடத்திலிருந்து வேகம் (அருள்) பெற்றவர்களாகிறோம். இதை நிராகரித்தால் மற்றொன்று கிடைப்பதரிது. இது ஒரு அபூர்வமானது. இதே கடைசியாக இருந்திருக்கலாம். வேகம் தான் முக்கியமானது. நாஸிகள் கைவசமிருந்து நாம் முதலில் அடிப்பதைக் கைப்பற்றுவோம். இந்தத்தீவின் முற்றுகை விஷயமான ஹிட்லரின் யோசனையை பயன்படாமல் செய்யுங்கள். நீண்ட தொந்தரவளிக்கும் சண்டையிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்."

---

## ருஷ்யாவின் மர்மம்.

## ஜெர்மனி மீது பழிவாங்க சண்டையிடுகிறவர்களுக்கு நாம் உதவுகிறோம்.

ருஷ்யா மீது ஜெர்மனியால் திடீரென்று செய்யப்பட்ட எதிர்ப்பை அறிந்தவுடன், சர்ச்சில், ராஜ்ஜிய தந்திரத்தின் நைபுண்யத்தை வெளிப்படுத்தி, புறக்கணிக்கப் படவேண்டுமென்று சில இடையூறுகளைச் சொல்லி, ஹிட்லருடன் சண்டைபோடும் யாவருக்கும் உதவவேண்டுமென்று சொன்னார். இதுதான் கவர்ன்மெண்டாரின் தீர்மானமான முடிவு. இதே முடிவு பல ராஜ்ஜிய நிர்வாகிகளாலும் பன்முறை சொல்லப்பட்டது. நமக்குள் எவ்விதமான அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் சர்ச்சிலுடன் நாம் இவ்

விஷயத்தில் ஒத்திருக்கிறோம், இவரே சென்ற யுத்தத்தின் கடைசியில் போல்ஷிவிஸ்ட் கக்ஷிக்கு விரோதமாக நின்றவர்களில் தலைமைப்பட்டவர். அவ்வமயம் யுத்த மந்திரியாக இருந்தார். அப்பொழுது தாத்காலிகமாக ஏற்பட்டிருந்த ருஷ்ய கவர்ன்மெண்டு நம்முடன் சிநேகமாக இருந்தது. சண்டை துவக்கப்பட்டு, மூன்று முறை நாசமான சைனியத்தை மறுபடி புதுப்பித்து நம்முடன் இருந்து ருஷ்ய சைனியம் உதவிற்று. சமாதானம் செய்து கொள்ளுவதில் அதிக ஆசைப்பட்டு போல்ஷிவிக்ஸ் கக்ஷிக்கு இடம் கொடுத்தது. சிலர் அவமானமான பிரஸ்டு-லிட்வ்ஸ்க் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். மற்றும் சிலர் சண்டையை விடாமல் நடத்தினர். அவ்விதமான ருஷ்யர்களை நாம் ஏமாறச் செய்யக்கூடாது. சர்ச்சிலும் அப்பொழுது சொன்னதைத்தான் தற்சமயமும் சொல்லுகிறார். "ஜெர்மனிக்கு எதிரில் மார்தட்டுகிறவர்களுக்காக நாம் இருக்கிறோம்." ருஷ்ய ஜனங்கள், இங்கிலாந்தைப்போல் உலகச் சத்துருவான ஹிட்லருடன் சண்டையிட தங்கள் நாட்டைக்காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள் என்று சேர்த்துச் சொன்னார். ஆம், சர்ச்சில் சொல்லுவது போல், ருஷ்ய ஜனங்கள் தங்கள் வீடுவாசல்களைக் காப்பாற்றுகிறார்கள்.

## பூர்வ சரித்திரம்.

சென்ற யுத்தத்தில் நிலைமை இம்மாதிரி இருந்தது. ருஷ்யாவின் தலைவர் த்ஸார்தான். ஆனால் பொம்மை போல் இருப்பதைத் தவிர அவர் வேறொன்றும் செய்வதற்கில்லை. உண்மையில், பார்ப்பதற்கு அழகிய உடம்பு வாய்ந்தவரே தவிர மனோதிடம் இல்லை. சம்சாரப் பேய் பிடித்தவர். ருஷ்யா கெடுதலடைந்ததற்கு இதுவே பிரதம காரணம். எல்லா சமயமும் ருஷ்ய சைனியத்துடன் இருந்தேனாகையால் போர் முனையில் ருஷ்யர்களுக்கேற்பட்டவைகளை நான் அறிவேன். 1915 மே௴ 2-ம் தேதியன்று தற்சமயம் ருஷ்ய சைனியம் சண்டைபோடும் இடத்தில்தான் ஜெர்மன் மெக்கென்ஸன் ருஷ்யர்களைத் துரத்திக்கொண்டு கெலிஷியாவிலிருந்து பின்ஸ்க் சதுப்பு நிலங்களுக்குச் சென்றது. ஒரு சிறு குன்றின் மேல் நான் உட்கார்ந்திருந்ததால் எதிரில் கார்ப்பேதியன் மலைத் தொடரும், ½ மைல் தூரத்தில் கீழே நடக்கும் செய்கைகளும் தெரிந்தன. இரண்டு பக்கங்களிலும் 5 மைல் தூரம் வரையிலும் காணமுடிந்தது. அதற்கு எங்களால் எதிர்செய்ய முடியாதபடி சத்துரு இடைவிடாது சுட்டான். ஒரு ருஷ்யவீரன் என்னைக்கடந்துசென்றான். "நீ பூமிக்குள் மறைந்த இடத்தில் இருந்துவந்தாயா" என்று கேட்டேன். "பள்ளங்கள் எல்லாம் மூடப்பட்டன" என்று பதிலளித்தான். "சத்துருக்களால் அவையெல்லாம் கொளுத்தப்பட்டன, உமக்குத் தெரியுமா, அய்யா, வீரனின் மார்பு என்ற ஆயுதம் ஒன்றுதானிருக்கிறது. ருஷ்யர்களுக்கு வீரத்தில் குறைவு இல்லை. ஆனால் தனக்கென்று துப்பாக்கி இல்லாததால் சண்டை செய்ய் முடியவில்லை." இது புகாராச் சொன்னதாக இல்லை. நான் அன்று சேர்ந்திருந்த ருஷ்ய சைனியம் 16,000-த்திலிருந்து 500-க்கும் அதில் ஒரு படை 4,000-த்திலிருந்து 41, (40 சிப்பாய்கள், ஒரு தளகர்த்தர்)க்கும் குறைந்தது. லார்டு கிச்சனர்க்கு ருஷ்ய சண்டை நிலயத்திலிருந்து



ரகஸ்யமாக நான் கொண்டுவந்த ருஷ்ய நஷ்டம், முதல் 10 மாதங்களுக்கு 38,00,000. சண்டை நஷ்டங்களைக் குறிக்கும் பெரிய ஜெர்மன் கணக்குப் புஸ்தகத்தில் ருஷ்யர்களின் நஷ்டம் உள்ள பக்கம் கிழிக்கப்பட்டது. 50-லக்ஷமோ, 80 லக்ஷமோ நமக்குத் தெரியாது. ருஷ்யர்களில் மறு அலைக்கு வழி கொடுக்க ருஷ்யர்களின் பிரேதக் குவியல்களை ஒதுக்க வேண்டியிருந்தது என்று எழுதியிருந்தது.

## முற்றுகையின் தோல்வி.

லுடன்டார்ப், ஹாப்ட்மான் அடிக்கடி தெரிவித்தபடி, இவையெப்படி இருந்தபோதிலும் ருஷ்யர்கள் பலமான பின் பந்தோபஸ்து முறைகளால், நஷ்டங்களை கவனியாது படிப்படியாகத்தான் பின் வாங்கினார்கள்; உதாரணமாக காகேஷியன் படை தினம் 1½ மைல் வீதம் வந்து அகண்ட நடு சைனியத்தை ஜெர்மானியரால் சூழப்படாமல் தப்பிற்று. லுடன்டார்ப் சண்டையின் வரலாற்றை முடிக்கும் பொழுது, ருஷ்யாவில் விஸ்தாரமான இடங்கள் கடக்கப்பட்டனவென்றும் அதனால் ஒரு விதமான பிரயோஜனம் இல்லை என்றும்—ஏனென்றால் ராணுவ சாஸ்திரத்தின்படி வெற்றியாகுமே தவிர உள்ளபடி அவர் வெற்றி அடையவில்லை—முடித்திருக்கிறார்.

## ருஷ்யப் புரட்சிகள்.

ருஷ்யாவில் நடந்த புரட்சிகளுக்குச் சென்ற சண்டையில் அடைந்த நஷ்டங்கள்தான் காரணம். கார்ல் மார்க்ஸ் காரணமில்லை. அவரின் செல்வாக்கு புரட்சிக்குப் பிறகு தான் முன் வந்தது.

## ருஷ்யாவின் தற்கால நிலை.

சென்ற யுத்தத்தில் ருஷ்யர்கள் கடுமையான நிலைகளில் சண்டையிட நேர்ந்தது. இப்பொழுது அவர்களுக்கு அம்மாதிரியான அசௌகரியங்கள் இல்லை. ருஷ்யாவை 20 வருஷங்களாகக் காணாதவர்களும் கடைசியாகப் பார்த்தபடி பார்க்கிறவர்களும் ஒரு தப்பிதம் செய்யக்கூடும். இப்பொழுது இருக்கும் ருஷ்ய கவர்ன்மெண்டு, சென்ற யுத்தத்தில் உயிர் விடும் தருவாயிலிருந்த த்ஸாரின் ராஜாங்கம் ருஷ்யாவுக்கும் அடைய முடியாதபடி ஜனங்களின் பலத்தையும், தத்துவத்தையும் காண்பிக்கிறது. ஒவ்வொரு ருஷ்யனும் தன் தேசத்திற்காகச் சண்டை போடுகிறான். முன்னிருந்ததைவிட இப்பொழுது தேசத்தில் தன் பாகத்தையும், அதைக்காப்பாற்ற புத்துயிர் பூண்ட உணர்ச்சியையும் அறிகிறான். ஸ்டாலினின் ஐந்து வருஷ திட்டத்தின் முக்கிய பயன், ஆயுதங்களின் வருந்தத்தக்க முன்னிருந்த குறைவு ஏற்படாமல் செய்வதில் காணப்படுகிறது. நிச்சயமாக ஜெர்மனி கையாளும் அளவைக் காட்டிலும் ருஷ்யா எல்லா விதமான யந்திரங்களிலும், பரிஷ்காரப்படாமல் இருந்தபோதிலும் அதிகம் கொண்டு இருக்கிறது.

## டிராட்ஸ்கியும், ஸ்டாலினும்.

1928-ல் டிராட்ஸ்கியின் மேல் ஸ்டாலின் அடைந்த வெற்றிக்குப் பிறகு, உலகப்புரட்சி என்ற சாதிக்க முடியாத எண்ணங்களைக் காட்டிலும் சுதேச முன்னேற்றம், தங்கள் காபந்து முதலியவைகளில் ருஷ்யா அதிக கவனம் எடுத்துக்கொண்டது. ஸ்டாலின், டிராட்ஸ்கி தொந்தரவைக் குறித்து நாங்கள் அறிந்ததைவிட நீங்கள் நன்கு அறிவீர்கள். அதிலெல்லாம் நாம் தெரிந்துகொண்டது இதுதான்: மற்றெல்லா தேசங்களில் ராஜ விரோதத்தை விதைக்கவே

டிராட்ஸ்கி முயன்றார். ஆனால் ஸ்டாலின் ருஷ்ய ஸ்வதேச நன்மைக்காகவே, நிற்கிறார். அவரின் முக்கிய கொள்கை ஸோஷலிஸம், (சமரச உரிமை வாதம்). அந்தக் கொள்கைக்கு முக்கிய உதாரண மார்க்கத்தாமே இருந்தார். முன்னிருந்த போல்ஷிவிக்ஸ்காரர்கள் துர்ஜனர்கள். பெருங்காலம் ஊருக்கு வெளியிலேயே வசிக்கும்படி செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு உலகப் புரட்சிதான் முக்கிய குறிப்பு. ஸ்டாலினும் அவரின் ஸகாக்களும் ருஷ்யாவுக்கு வெளியே சென்றவர்களே அல்ல. அப்படி இருக்கும் பொழுது அவர்களால் எப்படி புரட்சியில் ஈடுபடமுடியும். அவர்கள் லக்ஷியமும் வேறு. ஐந்து வருஷ திட்டம் என்ற முறையால் புத்துயிர் வாய்ந்த ருஷ்யர்களை தேசம் முழுதும் பரவின அனுபவங்களால் தைரியமும் வலுவும் பெற்றவர்களாயும் ராஜ்ஜிய அனுபவங்களில் தேர்ந்தவர்களாயும் செய்தார்கள். இவ்விதம் செய்தது பல யௌவன மனிதர்களுக்கு முப்பது வயதுக்குள் வேறு தேசங்களில் அடைய முடியாதபடி பெரிய உத்தியோகங்கள் அடைய எல்லையில்லாத இடம் கிடைத்தது. ஹிட்லரும் அவ்விதம் தான் முன்னுக்கு வந்தவர் (?) இது பிரான்ஸில் 1793-ம் வருஷத்தில் செய்ததிற்குச் சமமாக ஆகிறது. அவ்வருஷத்தில் தளகர்த்தர்கள் பலர் சிறை புகுந்தனர் என்பது உண்மை. ஆனால் மார்ஷல் நெ என்பவர் ஒரே ஒரு சண்டையில் சிறு சேனா வீரன் ஸ்தானத்திலிருந்து பெரிய படைத்தலைமை பதவியை அடைந்து பிறகு சாம்ராஜ்ஜியத்திற்கும் தலைமை வகித்தார். நெபோலியன் சொல்லியபடி அது முதல் ஒவ்வொரு சாதாரண சிப்பாயும் தளகர்த்தர் அடையாளங்களை தன் தோற்பையில் அணியத் துணிந்து விட்டான். இதுதான் முன்னிருந்த ருஷ்ய சைனியத்திற்கும் தற்போதைய சைனியத்திற்கும் உள்ள முக்கிய வித்தியாசம். அதற்கு மேலும் ஐந்து வருஷ திட்டத்தின் முறையில் தயாரான இஞ்ஜினியர்கள் ருஷ்யாவில் இருக்கிறார்கள். த்ஸார் காலத்திலோவெனில் பல கீழ் உத்தியோகஸ்தரை மேல் வேலைகளில் ஒப்படைப்பது நிச்சயமாக முடியாமல் இருந்தது. ஏனெனில் அவர்கள் வெறும் தற்குறிகள். இப்பொழுதோ படிப்பு எங்கும் வியாபித்து விட்டது. பழைய ருஷ்ய சைனியத்தில் இருந்த பல நற்குணங்கள் புது சைனியத்திலும் காணப்படுகின்றன. அவர்களும் ருஷ்யாவுக்காகப் போரிடுகிறார்கள். நிச்சயமாக சம உரிமை (கம்யூனிஸம்)க்காகவல்ல. அங்கிருந்து கிடைக்கும் யுத்த அறிக்கைகளிலிருந்து நாம் இவ்விதம் கூற முடிகிறது. பன்முறை ருஷ்யாவுக்குச் சென்றதிலிருந்தும் இந்த மாறுதல்கள் தெரியும். தேசம் தான் மேலானது. வேறு விதமான கொள்கைகள் கவனிக்கப்படவில்லை.

## கம்யூனிஸம் அல்லது சமத்துவம்.

ஆனால் ருஷ்யாவில் இக்கக்ஷி இல்லை என்று சொல்லவில்லை. இதை அவர்கள் அவலம்பிக்கத் தீர்மானித்தால் அது ருஷ்யர்களின் சொந்த விஷயம். உண்மையில் உத்யோகத்திலுள்ளவர்களின் முயற்சியால் தான் இக்கக்ஷி ஒரு முடிவுக்கு வரவில்லை. பரிக்ஷா நிலையில் இருக்கிறது. இதன் சில தத்துவங்கள் யாவருக்கும் புரிந்ததாகவும் இல்லை. சன்யாசிகளே இதைக் கைப்பற்றலாம். ஒவ்வொரு ருஷ்யனுக்கும் சமரச நிலையில் பற்றுதல்



உண்டு. ஆகவே காரியங்களைப் பிறருக்குச் செய்து, தனக்கும் செய்து கொள்ளுவது விசேஷ திருப்தியைக் கொடுக்கிறது. அப்படிச் செய்வது தனிப்பட்ட பணக்காரர்களுக்கு மாத்திரம் இல்லாமல் தேசத்தார் முழுதுக்கும் உபயோகமாகிறது.

## மதமும், சமத்துவமும்.

மத துவேஷத்திற்கும் சம நிலைக்கும் சம்பந்தமே இல்லை. ருஷ்யர்களின் இயற்கைக்கு இது மாறுபட்டது. அடிக்கடி ஸோவியத் உத்தியோகஸ்தர்களைக்கண்டு பேசியிருக்கிறேன் :—"ஏசுநாதர் கீழ் வகுப்பினரைச் சேர்ந்தவர் தானே?"

மதமென்பது மாறுபட்டிருக்கிறது. எல்லா மதங்களின் சரித்திரங்களிலும் அசந்தர்ப்பங்கள் நிரம்பியிருக்கின்றன. அவைகளை ஏன் திருத்தக்கூடாது என்ற பதில் கூறுகிறார்கள். ஒரு புது முறையில் கிருஸ்துவ மதத்தையே கைக்கொண்டு அதன் பேருதவியை அடைந்திருக்கலாம். கடவுளை மறுத்திருக்க வேண்டியதில்லை. கார்ல் மார்ஸ் சுமார் 100 வருஷங்களுக்கு முன், பாதிரிமாரை பெரிய மனுஷர்கள் நோக்கப்படி ஆடுகிறவர்களென்றும் மதம் பணக்காரருக்காகத்தானிருக்கிறதென்றும் சொன்னார். இப்படிச் சொல்லுவது வீண் பிடிவாதம்தான். இவ்விதமே தான் ஏசுநாதரையும் பணக்காரரைச் சார்ந்தவர் என்றார். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம் :—பொதுவான மனுஷ்ய சுவபாவம்போல் ருஷ்யர்களின் மனது நாஸ்திகமாகச் செய்ய முடியாது. மறை முகமான கடவுளைப் பற்றிய எண்ணம் சுவபாவத்திலேயே இருக்கிறது—அந்த எண்ணம் தான் மற்றவையைக்காட்டிலும் பெரியது என்றும் நினைக்கிறேன். ஆகையால் சமத்துவ கக்ஷியாரும் ஆஸ்திகத்தில் சேருகிறார்கள். ஆனீச்வர வாதிக் கூட்டத்தின் தலைவர்கள், சிஷ்யர்களின் அருசியைப்பற்றி குறைகூறுகிறார்கள். அச்சமயம் மதத்தை எதிர்த்த வரும் வகுப்பு இலாகா மந்திரியுமானவர் பின்வருமாறு அழகாகக் கூறினார். "மதமென்பது ஒரு ஆணிக்குச் சமானம். ஆணியை பலமாக அடிக்க அடிக்க முறியாமல் ஆழமாகப்போவது போல் மதத்தை துவேஷிக்க துவேஷிக்க பொது ஜனங்களின் நம்பிக்கை தான் பலப்படுகிறது."

## தேசத்துக்குரிய உத்ஸாகம். மஹிமை வாய்ந்த தேசத்தின் தற்காப்பு.

போர் முனையிலிருந்து இதுவரை கிடைத்த அறிக்கைகளிலிருந்து ருஷ்யர்கள் சென்ற யுத்தத்தைவிட சூரத்தனமாயும் உத்ஸாகமாயும் சண்டை செய்கிறார்கள் என்று கிடைத்திருக்கிறது. எல்லா விஷயங்களிலும் தேசக்ஷேமத்தைத்தான் முதன்மையாகக் கருதுகிறார்கள். இந்த யுத்தத்திலும் தேசாபிமானம் வளர்ந்திருக்கிறது. ஐந்து வருஷ திட்டப்படி சாமான்கள் உற்பத்தியிலேயே எவ்விதம் ருஷ்யர் ஈடுபட்டிருந்தது என்பதை நாம் நன்கறிவோம். தேசிய இயக்கக் கூட்டங்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் நடைபெறுகிறது. ஜனங்களும் வேலைகளை இரட்டித்துச் செய்வோமென்று சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டும் பூராவாகத் தேசீயத் தன்மையை போதிக்கும் வாசகங்களையே உபயோகிக்கும் முறைக்கு வந்துவிட்டது. த்ஸார்கள் அரசாங்கத்தில் பல நூற்றாண்டுகளில் அடைந்த விஷயம் திரும்பி ஞாபகப்படுத்தப்படுகின்றது. மேலும்

ஜெர்மன் சைனியத்தை தொலைத்த அலெக்ஸாண்டர் நெவ்ஸ்கியின் வெற்றிகரமான ஐஸ் என்ற யுத்தத்தை சினிமா படம் மூலம் பாராட்டுகிறார்கள். நெபோலியனைத் தோற்கடித்த முதல் அலெக்ஸாண்டரின் வார்த்தைகளை எதிரொலிக்கும்படி மாலடோவ் ஞாபகப்படுத்துகிறார். எங்கு பார்த்தாலும் "தயவற்ற சத்ருவினிடமிருந்து பூஜ்யமான ஸோவியத் நாட்டை காப்பாற்றுங்கள்" என்று கூறப்படுகிறது.

அதிக ஆவேசத்துடனும் சந்தோஷத்துடனும் ஜெர்மானியரைத்தான் எதிர்ப்பார்கள். ஜெர்மானியர் துஷ்டர்களென்றும், கண் தெரியாமல் பொட்ட அதிகாரம் செலுத்துகிறவர்களென்றும் தெரிய வரும். அவர்களின் செய்கையை பொருத்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே சமயம் வந்தபொழுது நேருக்கு நேர் அவர்களை எதிர்ப்பதைத் தவிர வேறொன்றும் சந்தோஷமளிக்காது.

---

## உயரப் பறக்கும் பந்தயம்.
## வெகு உயரப் பறக்கும் பிரிடிஷ் புதிய 'பைடர்கள்.'
## ஆகாய மண்டலத்தில் படையணிவகுக்கும் திறமை.
## பெரிய 'பாம்பர்' விமானத்தின் சாதகம்.
## விமானங்களை ஒருவிதப்படுத்திக் கட்டுவதிலிருக்கும் கஷ்டங்கள்.

(ஆலிவர் ஸ்டுவர்ட் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது.)

விமான உற்பத்தி இலாகா மந்திரி, கர்னல் மூர் பிராப்ஸன் ஒரு சமயம் 'காமன்ஸ்' சபையில் பேசியபொழுது, அதிக உயரம் விமானம் பறப்பதிலுள்ள சாதகத்தைப் பற்றியும், அத்தகைய விமானம் ஒன்றை உற்பத்தி செய்ய பிடிக்கும் நேரத்தைப் பற்றியும் குறித்துச் சொன்னார். அவை இரண்டும் எனக்கு மிகவும் பிடித்த விஷயங்கள். அவர் சொன்னதில் முதலாவதாக நமக்கு 40,000 அடி உயரத்தில் பறக்கக்கூடிய புதிய போர் விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவென்றும், அதற்கடுத்தபடியாக 'பைடரின்' யந்திரம் மட்டில் செய்து முடிக்க 75,000 மனுஷ-மணிகள் நேரம் பிடிக்கிறதென்றும் கூறினார்.

இதுவரை வெளிவந்த ஸர்க்கார் அறிக்கைகளில் 35,000 அடி உயரம்வரை ஆகாயச் சண்டை நடந்தது குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த உயரத்திற்கு மேல் சண்டை நடந்ததாகத் தெரியவில்லை. 40,000 அடி உயரம், அதாவது இன்னும் 5,000 அடி உயரப் பறக்க முடியுமானால், பிரிடிஷ் விமானப்படைக்கு பெரிய சாதகம் ஏற்படும். 40,000 அடி என்றால் கிட்டத்தட்ட 7½ மைலுக்கு மேலிருக்கும்.

யுத்தத்திற்குப் போகும் காலத்தில் விமானங்கள் மேலிருந்து ஒன்றன் கீழ் ஒன்றாக அணிவகுக்கப்படுகின்றன. இம் முழுஅணிகளுடைய பலமும் மேல்



அணியின் பலத்தைப் பொறுத்து நிற்கும். மூன்று வரிசையில் அணிவகுத்திருப்பதாக நாம் எண்ணிக்கொள்வோம். மேலணி எதிரி கையில் அகப்பட்டுக்கொண்டால், கீழ் உள்ள இதர அணிகளுக்கு ஆபத்து அதிகமாகும். எல்லாவற்றிற்கும் அடியிலுள்ள அணியில்தான் 'பாம்பர்' விமானங்கள் செல்லும்.

## ஆகாய எதிர்ப்புகள்.

முதல் வரிசை விமானங்கள், எதிரி விமானப்படை அணுகமுடியாதபடி அதிக உயரத்திலிருந்தால் அங்கிருந்துகொண்டு அடுத்த அணியில் இருக்கும் விமானப்படையைத் தாக்கப்படாமல் பாதுகாக்க முடியும். ஆகாயத்தில் கீழிருந்து மேல் நோக்கியும் யுத்தம் செய்யக்கூடும். இம்மாதிரி தாக்குதல்தான் அடிக்கடி முயற்சிக்கப்படுகிறது. ஆனால் அநேகமாய் மேலிருந்து கீழ் நோக்கித்தான் தாக்கப்படுகிறது. ஆனால் 'பாம்பர்' விமானங்களுக்கு உயரத் துணை விமானங்கள் எப்பொழுதும் கூடப்பறந்து வந்தால், அவைகள் நன்றாய் பாதுகாக்கப்படும்.

எதிரி விமானங்கள், 'பாம்பர்' விமானங்கள் பேரில் உயரத்திலிருந்து பாய்ந்தால், அவற்றைப் பாதுகாக்க மேலேயிருந்து துணை விமானங்கள் எதிரி விமானங்களை நோக்கிப்பாயும். அப்பொழுது எதிரி விமானங்கள் இவைகளைத் தாக்க திரும்பத்தான்வேண்டும். ஆகையால் எதிரி தேசம் பூராவும் இவ்விதம் மூன்று அடுக்குப் பெரிய விமானப்படை பரவிச்சென்று எதிரி விமானங்களும் அவைகளுடன் சண்டையிட்டால், அப்பொழுது அணிவகுப்புகளிலிருந்து மேலுள்ள விமானங்கள் கீழே இறங்கும். விரோதி இம்மாதிரி தன்னுடைய விமானங்களைக் கொண்டு, மேல் வகுப்பு விமானங்களோடு சண்டையிடச்செய்து, அப்படி சண்டை நடக்கும்பொழுதே வேறு விமானங்களை அனுப்பி கீழிருக்கும் பாம்பர்களை உடைக்கப் பார்ப்பான்.

ஆகையால் ஆகாயம் நிர்மலமாய் இருக்கும் சமயத்தில் நாம் வெகுதூரம் சென்று எதிரி தேசத்தைத் தாக்கும்பொழுது, எதிரிகள் அணுகாதபடி வெகு உயரம் பறக்கும் "பைடர்களை" துணையாகக் கொண்டுபோவது நலம். இது காரணத்தினால்தான் சமீப காலத்தில் ஆகாய விமானங்கள் உயரப் பறக்கும் சக்தியை விருத்தி செய்வதற்கு ஆழ்ந்த யோசனையும், பிரயாசையும் நாம் முக்கியமாக எடுத்துக்கொண்டது.

## "பிரிடிஷ் ஸ்ட்ராடோஸ்பியர் பைடர்கள்"

அல்லது.

## ஆகாய மண்டலம்வரை செல்லும் யுத்த விமானங்கள்.

பூரண ராணுவ முஸ்தீப்புடன் 40,000 அடி உயரம் போகக்கூடிய ஆகாயப் படைகள் உண்டென்று முதல் முதலில் தெரிவித்தது விமான உற்பத்தி இலாகா மந்திரி. இவ்விதமாக பிரிடனில் கற்பனை செய்து புதிய விமானங்கள் கட்டப்பட்டிருக்கிறதாக நான் நினைக்கிறேன்.

35,000 அடி முதல் 38,000 அடி வரை பறக்கக்கூடியதாகச் சொல்லப்படும் ஒரு ஆள் ஓட்டிச்செல்லும் புதிய ஜெர்மன் 'மெஸர்ஷிமிட்' (Messerchmitt) 109 F, விமானம், அதிக உயரத்தில் உபயோகப்படுத்த வேண்டுமென்று செய்யப்பட்டிருந்தாலும், புதிய பிரிடிஷ் விமானப்படையிலுள்ள விமானங்கள் செல்லக்கூடிய உயரத்தைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. இப்படிச் சொல்வது அனுபவத்தில் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில், புதிய 'பிரிடிஷ் ஸ்ட்ராடோஸ்பியர் பைடர்கள்' எதிரி விமானங்களைக் காட்டிலும் 2,000 அடி உயரம் செல்லக்கூடியதாக இருப்பதால், பிரிடிஷ் விமானப்படைக்கு சாதகம் இருக்கிறது.

இது ஒரு பெரிய சாதகமாகாது. இருந்தபோதிலும் விமானப் போரில் உயரம் பறப்பது தான் முக்கியமான அம்சம். அதனால் இதை சாதகமென்றே சொல்லவேண்டும். அதிக உயரம் செல்லக்கூடிய பிரிடிஷ் 'பைடர்'களைப்பற்றி விவரம் தெரியவில்லை என்றாலும், அவை புது டிஸைனவையல்ல. பழைய விமானங்களின் யந்திர அமைப்பை மாற்றி நூதன விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

38,000 அடி உயரத்திலிருந்துகொண்டு போர் புரிவதில், விமான மாலுமிகளுக்கு மிகவும் சிரமமாயிருக்கும். ஏனென்றால் அவர்கள் அடைபட்ட அறைகளில்லாமல், பிராணவாயு உற்பத்தி செய்யும் கருவியின் உதவியைக்கொண்டு சமாளிக்கிறார்கள். ஜெர்மன் விமானங்களைவிட பிரிடிஷ் விமானங்கள் உயரப் பறக்குமேயானால், ஜெர்மனியைத் தாக்கச்செல்லும் பிரிடிஷ் 'பாம்பர்' என்னும் வெடிவிமானங்களுக்குப் பலமான பாதுகாப்பு அளிக்கலாம்.

## பெரிய 'பாம்பர்' என்னும் வெடிவிமானங்கள் கட்டுவதைப்பற்றிய விஷயம்.

பெரிய 'பாம்பர்' விமானம் கட்ட 75,000 மனுஷ—மணிகள் நேரம் பிடிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது வேலைக்காரர்கள் எண்ணிக்கையோடு அவர்கள் வேலைசெய்யும் நேரத்தைப் பெருக்கினால் இந்தத் தொகை கிடைக்கும். இது யந்திரம் செய்வதற்காக ஏற்பட்ட எண்ணிக்கை. விமானத்தின் மற்ற பாகங்களைக் கட்டுவதற்கு மேலும் வேலைசெய்யவேண்டும். இது 1914—1918-ல் விமானம் கட்டுவதற்குப் பிடித்த வேலையைக்காட்டிலும் இப்பொழுது அதிக காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காரணத்தினால்தான் பெரிய பாம்பர்களைச்செய்ய அநேகர் ஆக்ஷேபிக்கின்றனர். அதனால்தான் பெரிய "பாம்பர்" விமானங்கள் ஸ்வல்பம் கட்டுவதைக்காட்டிலும் அநேகம் சிறிய விமானங்கள் செய்வதே மேல் என்று சிலரின் அபிப்பிராயம்.

ஆனால் விமானம் கட்டுவதைப்பற்றித் தனித்தனியே யோசிக்கவேண்டும். யந்திரம் செய்வதில் காலதாமதம் எவ்வளவு பிடிக்கிறதென்பது முக்கியமில்லை. குறிப்பிட்ட மணிக்குள், குறிப்பிட்ட நிறையுள்ள வெடிகுண்டுகளை, குறிப்பிட்ட லக்ஷியங்களில் வீசிவிட்டு திரும்புவதில் எவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது என்பதைப்பற்றித்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அப்படிப் பார்த்தால்



பெரிய 'பாம்பர்கள்' கட்டுவதில் பார்வைக்குத் தோன்றுவதுபோலல்லாமல், மொத்தத்தில் சிக்கனமென்றே தெரியும்.

மூன்று சிறிய விமானங்கள் ஏற்றிச்செல்லும் வெடிகுண்டுகளை ஒரே விமானம் கொண்டுபோகக்கூடும். ஆகையால் இராக்காலங்களில் படையெடுப்புக்கு அனுப்பப்படும் விமானங்கள் மூன்றுக்குப்பதிலாக ஒன்று அனுப்பித்தால் போதுமானது. இந்த விமானங்களை ஓட்டுவதற்கும் பயிற்சியடைந்த விமானிகள் அதிகம் வேண்டியதில்லை. ஒன்றுக்குப் பாதிகூடத் தேவையில்லை.

## ஒரேவித விமானங்கள் கட்டுவது.

இந்தக் காரணங்களை முன்னிட்டு உற்பத்திசாலைகளில் அதிகநேரம் செலவழித்தாவது மிகப் பெரிய 'பாம்பர்' விமானங்கள் செய்வதுதான் சிலாக்கியமென்று எல்லோரும் வாதிக்கிறார்கள். ஆனால் ஆகாயவிமான உத்தியோகஸ்தர்களில் அநேகர்களின் அபிப்பிராயப்படி எனக்கும் இது சம்மதமில்லை. சிறிய விமானம் செய்வதை நிறுத்தி பெரிய விமானம் மட்டில் செய்வதென்பது முடியாத காரியம். பெரிய 'பாம்பர்'களுக்கு மேகங்களினாலோ இருட்டினாலோ, அல்லது 'பைடர்' விமானங்களினாலோ பாதுகாக்கவேண்டும்.

பகல் வேளைகளில் வெகுதூரம் சென்று எதிர்க்கும்பொழுது 'பைடர்கள்' துணையின்றி 'பாம்பர்' விமானங்கள் போகநேரிடுகிறது. இச்சமயங்களில் துரிதமாய்ச் செல்லும் 'பாம்பர்' விமானங்கள் உபயோகப்படும். பிரிடிஷ் விமானப்படை சமீபத்தில் நடத்திவரும் பெரிய தாக்குதல்களில் இரவிலும் பகலிலும், அதிக கனமுள்ள பெரிய 'பாம்பர்' விமானங்கள் உபயோகப்படுத்தப் பட்டன. ஆனால் 'பௌன்கம்' என்ற ஜெர்மன் விமானத்தைப்போலுள்ள சிறிய 'பாம்பர்' விமானங்கள் முக்கியமான வேலைகளைச் செய்திருக்கின்றன.

ஆகையால் ஒரேவிதமான விமானங்கள் கட்டுவதென்பது சரியல்ல. ஒரே அச்சுக்கு நம்முடைய பெரிய விமானங்களைச் செய்தால் அதிலிருந்து சிக்கனப் படுத்தலாம். ஆனால் அவை சாத்தியமில்லாத காரியம்.

தொழிலாளிகள் ஒரேமாதிரி விமானங்கள் கட்ட நோக்கம் கொண்டவர்கள். ஆனால் விமானிகளும், விமானப் பிரயாணிகளும் அதை மாற்றிக் கொண்டேயிருப்பார்கள்.

---

## 25 நாட்களில் 2,000 டன் எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டன.

## பிரிடிஷ் படை ரூர் பிரதேசத்தை நாம், மன்ஸ்டரில் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து நாம் அறிவது.

(மான்செஸ்டர் கார்டியன்—ஜூலை 17.)

ஜூன் 16-ம் தேதிக்கும் ஜூலை 10-ம் தேதிக்கும் இருதியில் உள்ள 25 நாட்களில் ஜெர்மனியின் உயிர் நிலையான ரூர் ஜில்லாவில் பிரிடிஷ் பாம்பர்கள் சுமார் 2,000 டன் எடைக்கு மேலாகவே வெடிகுண்டுகளை வீசின. அதே காலத்தில் ப்ரெமன், கோலோன் என்ற இடங்களிலும் குண்டுகள் வீசப்பட்டன.

வரவர ஜெர்மனிமேல் எதிர்ப்பு கடுமையாக்கப்படும் என்று பிரதம மந்திரி சொன்னபடி செய்கையிலும் காட்டப்படுகிறது என்று தெரிய வருகிறது.

உலோகத்தொழிற்சாலைகள் சரியாக வேலை செய்யாததால், ஜெர்மனி மிகவும் பாதிக்கப்பட்டுவருகிறது.' முக்கியமாக மன்ஸ்டரில் ரயில் முதலிய போக்கு வரத்து சாதனங்களுக்கு சேதி அதிகமாயிற்று. ஜூன் 16, 17 இரவில் மாத்திரம் ஐரோப்பாவிலேயே பெரிய உள்நாட்டுத் துறைமுகமும், ரயில் சாமான் செய்யப்படும் இடமான டுயீஸ்பர்க்கும், கொலோனில் இருக்கும் எஃகு வேலைச்சாலையும் நேராக பலதடவைத் தாக்கப்பட்டன. சில இடங்களில் எண்ணெய்க் கிணறுகள் கொளுத்தப்பட்டன. ஆகையால் தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்காமல் திரிகிறார்களாம்.

ஜெர்மனியில் மருந்து சாமான்கள், எண்ணெய் உற்பத்திசாலை, ரப்பர், வெடி உற்பத்தி சாலைகள் உள்ள கோலோனில் இருக்கும் ரயில்வேக் கட்டடங்களும் பாதைகளும் நாசமாக்கப்பட்டதினால் ரயில் வண்டிகளை ஒழுங்குப்படுத்த இன்னும் சில காலத்திற்கு முடியாது. ரைன் நதியின் கிழக்குக்கரையிலுள்ள போக்குவரத்துக்கு உதவும் கால்வாய்களை சில வாரங்களுக்கு உபயோகிக்க முடியாது.

ஜெர்மனி ஆக்கிரமித்த பிரான்ஸிலும், லில்லி என்னும் இடத்திற்கு உதவும் மின்சார உற்பத்தி சாலைகளும் பழுதாக்கப்பட்டுவிட்டன.

ஹெலிகோலந்து, ப்ரெமன் என்னும் பட்டினங்களில் பகல் வேளைகளிலேயே பிரிடிஷ் வெடி விமானங்கள் வேறு துணையில்லாமலே வெற்றி அடைந்து வருகின்றன. முக்கியமாக, தைரியமாயும், பலமாயும் ப்ரெமன் பேரில் போக்கு வரவு அதிகமான சமயத்தில் தாக்கின.

மன்ஸ்டர் மீது முதலில் குண்டுகள் வீசியவுடன், பிரிடிஷ் வேவு பார்க்கும் விமானங்கள் அங்கே இருக்கும் ராணுவ நிலயங்களை புகைப் படம் பிடித்தன. அதில் ராணுவ நிலயங்கள் இருப்பது ருஜுவாகிவிட்டது. ஜெர்மானியர் ஜனங்களுக்குச் சேதி ஏற்பட்டது என்றும் சாராயக்கிடங்கு நிறைந்த புண்ணிய க்ஷேத்திரம் என்றும் சொன்னார்கள். அதில் உண்மையில் பொது மக்களே இல்லை. பொருளாதார யுத்த இலாகா மந்திரி சமீபத்தில் ஒரு படப் புஸ்தகத்தை காண்பித்தார். அது பிரிடிஷ் விமானங்கள், ஜெர்மனி விமான நிலயங்களுக்கு விளைவித்திருக்கும் நஷ்டத்தைத் தெரியப்படுத்துகிறது. டார்ட்மன்ட்-எம்ஸ்-கால்வாய்யைச் சுற்றியுள்ள விமான நிலயக் கட்டடங்களும், ராணுவ நிலயங்களும் பெரிய ரயில்வே ஜங்ஷனும் தாக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே இடத்தில் தான் அமைக்கப்பட்டவை.

அந்த மந்திரி, "அப்படத்தின் மூலம் ஜனங்கள் வசிக்கும் இடத்திற்குச் சேதமில்லை" என்றும், ராணுவ நிலயங்களை குறி தவறாமல் பிரிடிஷ் விமானங்கள் தாக்குகின்றன என்றும் சொன்னார்.



# லிபியாவில் அச்சுநாடுகளின் நிலை.

(டைம்ஸ் பத்திரிகையின் விசேஷ நிருபர் கெய்ரோவிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி—ஜூலை 10.)

ஜெர்மன் இதாலியருக்குச் சொந்தமான சாமான் கப்பல்களை அடிக்கடி பிரிடிஷ் நீர்மூழ்கிகளும், நாசகாரிகளும், இன்னும் கப்பற்படையும் சேர்ந்து லிபியாவுக்கு அருகில் தாக்கிவருவதாலும், லிபியா துறைமுகத்தையும், விமான தளங்களையும் பிரிடிஷ் ஆகாயப்படை, சரியானபடி தாக்கிவருவதாலும், விரோதிகளின் நிலைமை மிகவும் ஆபத்தானதாகவே முடிந்துவிட்டது. இப்பொழுது அச்சுநாடுகளுக்கு மத்தியதரைக்கடலில் நிச்சயமாகக் கப்பல்களின் உதவி குறைந்துவிட்டது. அதனால் கனமான கவசமணிந்த மோட்டார் வண்டிகளையும் யந்திரங்களையும், மற்ற பெரிய சாமான்களையும் ஏற்றிச்செல்ல முடியவில்லை. ஆகையால் லிபியாவில் இருக்கும் சைனியத்திற்கு யந்திர மோட்டார்களும், டாங்கிகளும் உதவிக்கு அனுப்புவது சாத்தியமில்லாமலிருக்கிறது. மேலும் ட்ரிபோலி, பெங்காஸி முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானங்களின் தாக்குதல்களால் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடங்கள் அதிகம் சேதப்பட்டிருப்பதால் சாமான்கள் அனுப்புவது சிரமப்படும். சென்ற மூன்று வாரங்களில் பெங்காஸி துறைமுகத்தில் மாத்திரம் ஒவ்வொரு இரவிலும் 10 டன் எடையுள்ள வெடிகள் போடப்பட்டன. அதனால்தான் பெரிய கப்பல்கள் கரையோரமாகக் கொண்டுவர முடியாது. தூரத்திலிருந்து சிறு கப்பல்கள் மூலம்தான் சாமான்கள் வரமுடியும். இந்தக் கஷ்டத்தால் சிறு துறைமுகங்களான டெர்னா, அப்போலினியா மூலம் அவைகள் கொண்டுவரப்படுகின்றன. ஆகையால் பிரிடிஷார் தாங்களாக முதலில் சண்டை தொடுக்கும் முறையை வெகுநாளாக கையாண்டுவருவதால்தான் ஜெர்மானியருக்கு இந்த வியாகூலமான நிலை வந்தது.

இக்காரணத்தால் மூன்றுமாதங்களுக்கு முன்பு ஒரு சிறிய லக்ஷியமாக கருதப்பட்ட டொப்ருக்கை எதிர்க்க இப்பொழுது துணியவேயில்லை. ஏனென்றால் முன்போல் சாமன்களுக்கும் மனிதர்களுக்கும் சேதம் விளையுமோவென்று பயப்படுகிறார்கள். ஆபிரிக்காவில் உள்ள ஜெர்மன்படைக்கு பாலைவனச் சண்டையில் பழக்கமில்லை என்று நன்கு தெரிகிறது; ஒருக்கால் உஷ்ணப் பிரதேசத்திற்கு வந்து இருக்கும் இடத்தில் இருப்பதே வீரச்செயல் என்று நினைக்கலாம். அத்துடன் இல்லாமல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தாவுவதால் வழிதடுமோட்டம் பசி தாகம் முதலியன ஏற்படுமென்றும் பயப்படுகிறார்கள்.

## வெடிகுண்டுகள்! முன்னைவிட பெரியவை.
## முன்னைவிட உறுதியானவை.
## விமானப் போரில் ஜயிக்கப் பேட்டி.

(யார்க்ஷையர் போஸ்டின் விமானக் கடற்படை நிருபர் எழுதுவது.)

பிரதம மந்திரி, ஜெர்மனியை ஆகாய மார்க்கமாய்த் தாக்க நாம் பிரிடிஷ் படையை இன்னும் விருத்திசெய்யவேண்டுமென்றும், இனிவரும் சண்டைகளில் முடிவான வெற்றியடைய மார்க்கத்தையும் வற்புறுத்தினார். பிரிடனைப்போல எதிரியின் படையில் யந்திரங்களிலும் ஏறக்குறைய சமமானதால் அவர்களை ஜயிக்க கனமான குண்டுகளை உபயோகப்படுத்தவேண்டும். அந்த சமயத்தில் பல லேசான குண்டுகளைவிட சில கனமான குண்டுகளைப் பிரயோகிப்பதுதான் நல்லது. அவ்விஷயத்தில் பிரிடிஷ் விமானப்படை சமீபத்தில் அதிகம் முன்னடைந்து இருக்கிறது. புது குண்டுகள் செய்யும் கணக்குப் பிரகாரம் பழைய குண்டுகளை நாம் பிரயோகித்து வருவதால் தடையின்றி எந்த சமயமும் நிர்வகிக்கமுடிகிறது.

பிரிடனை, ஜெர்மன் விமானங்கள் தாக்குவதைவிட ஜெர்மனியை பிரிடிஷ் விமானங்கள் தாக்குவது அதிக கஷ்டமானது. ஏனென்றால் ஜெர்மன் விமானங்களைவிட, பிரிடிஷ் விமானங்கள் அதிக தூரம் செல்லவேண்டியிருக்கிறது. தூரம் அதிகம் போகப்போக, எண்ணெய் டின்கள் அதிகம் தேவை. அதனால் அதிக நிறையுள்ள வெடிகுண்டுகளைக் கொண்டுபோக இயலாது, ஆனால் பிரிடிஷ் விமானப்படையில் பலமான வெடிகுண்டுகளைத் தாங்கிச்செல்லும் விமானங்கள் ஜெர்மன் யந்திரங்களைவிட சிலாக்கியமாகச் செய்யப்பட்டவையாதலால் தூரப் பிரதேசங்களுக்கு எதிரியின் விமானங்களைவிட அதிக கனமான குண்டுகளை ஏற்றிச் செல்லமுடியும். இதைவிட புதிய, பெரிய வெடிகுண்டு விமானங்கள் பிரிடனில் கட்டப்படுகின்றன. அவைகள் உபயோகப்படும்பொழுது இப்போது இருப்பதையும்விட மேலான நிலை ஏற்படும்.

இப்புதிய விமானங்கள் அதிக பெரிய வெடிகுண்டுகளை அதிகச் செலவின்றி ஏற்றிச் செல்லமுடியும். அப்படிப்பட்ட ஒரு விமானத்தைக்கட்ட 75,000 மனுஷ-மணிகள் பிடிக்கிறது. அதே மாதிரி விமானம் தூக்கிச்செல்லும் வெடிகுண்டுகளை உற்பத்தி செய்வதற்கும் அந்நேரம் பிடிக்கும். இவ்வளவு பெரிய விமானத்திலிருந்து மேகமறைவிலோ அல்லது இருட்டிலோ, நல்ல பக்கத்துணை போர்விமானங்களுடன், தேர்ச்சியுள்ள ஸ்வல்ப மாலுமிகள் குண்டுகளை வீசமுடியுமாதலால், இதைமிகவும் சிக்கனமாகவும் வெற்றிகரமாகவும் உபயோகப்படுத்திக் கொள்ளமுடியும் என்று லெப்டினண்டு கர்னல், மூர் பிரபஸன் காமன்ஸ் சபையில் சொன்னார்.

மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் வார்த்தைகளிலிருந்து குறிப்பிட்டு இன்னது தான் முடியும் என்று சொல்லப்படாவிட்டாலும், இப்போது ஒருதடவை எதிர்த்துச்செல்லுங் காலத்தில் ஜெர்மனியில் உள்ள லக்ஷிய இடங்களுக்கு நூற்றுக்கணக்கான டன்களை பிரிடிஷ் விமானப்படை கொண்டுபோவது முடியும் என்று வைத்துக்கொள்ளலாம்.



விமானப்போரில் அநேக சங்கதிகளை கவனிக்கவேண்டும். குறிப்பிடும் லக்ஷியத்துக்குத் தக்கவாறு பீரங்கியில் சரியானபடி குண்டுகளை பொருக்கிப்போட்டு உபயோகிப்பதுதான் மிகவும் முக்கியமான விஷயம். யுத்தக் கப்பலைத் தாக்குவதென்றால் சாதாரண வெடிகுண்டு பிரயோகத்தால் போதாது. அதே மாதிரியாகவே ஒரு எதிரிப்படையைத் தாக்க, பலமான கவசம் பூண்ட கப்பல்களைத் தாக்கக்கூடிய அவ்வளவு பெரிய குண்டுகளைக்கொண்டு தாக்குவதும் சிக்கனமுறையல்ல. போர் விமானங்களை ஒருமிக்கச் சேர்த்துக்கொண்டுபோய் ஒரே சமயத்தில் சத்ருவைத் தாக்குவதா, அல்லது தனித்தனியே போர்புரிவதா என்பது கவனிக்கவேண்டிய விஷயம்.

ஒரே குறியில் எவ்வளவு பலமாகத் தாக்கினாலும், சில சமயங்களில் லக்ஷியம் பூராவாக நாசமாக்கினோம் என்று சொல்லுவதற்கு முடியாமல் போகிறது. அநேக குண்டுகளைப் பலமுறை பிரயோகம் செய்வதனால்தான் ஸ்திரமான நாசத்தைச் செய்யமுடிகிறது. இவ்விதம் இடைவிடாமல் எதிர்ப்பதன்றால் அநேக பெரிய போர்விமானப்படையும், அவைகளை ஓட்டத்தேர்ச்சியுள்ள அநேக விமான மாலுமிகளும் வேண்டும். ருஷ்யாவை ஜெர்மனி எதிர்ப்பதற்கு கொஞ்சகாலம் முன்வரை ஜெர்மனியை பிரிடிஷ் விமானப்படைகள் இம்மாதிரி அதிக பலமாகத் தாக்கி எதிர்ப்பும் வரவர பலப்பட்டது.

குண்டுகள் வீசமுடியாதபடி பருவநிலை எந்த சமயத்திலும் செய்துவிடக்கூடும். அச்சமயங்களைத் தவிர இனி ஜெர்மன் சைனியம் முறிந்துபோகும்வரை பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியை இடைவிடாது தாக்கிக்கொண்டுதானிருக்கும். அதைத் தடுக்கவேண்டுமானால், ஜெர்மன் விமானங்கள் எதிர் யுத்தத்திற்கு வெடிகுண்டுப் படைகளை சேகரித்துத் தயாராக இருக்கவேண்டும்.

மேலே சொல்லியிருப்பதைத்தான் மிஸ்டர் சர்ச்சில் எதிர்பார்த்து சொல்லியிருக்கிறார். அவ்விதம் ஆகாய விமானத் தாக்குதலிலிருந்து காத்துக்கொள்ள முடியாவிட்டாலும், யுத்ததந்திர உபாயங்கள் எதிரிக்குச் சாதகமாய் இருந்தாலும் தாக்குவதற்குள்ள சக்தி நமக்கு அதிகரிக்குமாகையால், அவர்களுடைய எதிர்ப்பு பலமாய் இராது. ஆனால் நம்முடைய பாதுகாப்புக்கு வைத்திருக்கும் இரவு போர் விமானங்களை முன்னைவிட அதிக பலப்படுத்தியிருக்கிறோம். அதனால் ஜெர்மானிய விமானப்படையை வீழ்த்த அதிக எளிதாகும். ஆகையால் அவர்கள் நம்மைத் தாக்குவதைவிட நாம் அவர்களைத் தாக்க வலிவு ஏற்படும்.

இன்னும் அதிக பெரிய விமானங்களைக்கொண்டு நிச்சயமாய் வலுவாக எதிர்க்கப்போகிறோம். இரவில் அடிப்பதோடுகூட பகலிலும் தாக்கப்போகிறோம். ஒவ்வொரு நாளும் தவறாது பகைவர் தலையில் உயர்ந்த வெடிமருந்துகள் கனம் கனமாக வந்துவிழும். அதோடு நமது நகரங்களுக்கு முன்னைவிட அதிக பலமான பாதுகாப்பு அளிப்போம். அச்சமயம் நமது நகரங்கள் முன்னைவிட அதிகமாகத் தாக்கப்படலாம். ஆனாலும், மேழ வீழ்த்தப்படும் ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களின் மீத சாம்யம் அதிகரித்து வருகிறதென்பதையும், நாம் வாங்கிக்கொள்ளுகிற

அடியைவிட திருப்பிக்கொடுப்பது வலுவானதென்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகையால், அடியைப் பொறுத்துக்கொள்ள முன்னைவிடத் தயாராகவே இருப்பார்கள்.

ஆகவே, வெடிகுண்டுகளை போடுவதினால்மட்டில் வெற்றியடையலாமா? என்பது கேள்வி. இதுவரை ஜெர்மனி தாங்கள் பிறரை அடிப்பதைவிட, பிறர் தாங்களை அடிக்கமாட்டார்கள் என்று நினைத்திருந்தார்கள். ஆனால் இனி நம்முடைய விமான எதிர்ப்பு வெகு கடுமையாக நடக்கும்பொழுது, ஜெர்மானியர் தாங்கள் பிறரை வதைத்த பிரகாரம் தாங்களும் வதைக்கப்படுவதை உணர்வார்கள். அதிலிருந்து அவர்கள் சரணாகதிக்கு வந்து விடுவார்கள்.

இன்னும் நாம் எவ்வளவோ விமானங்களைக் கட்டப்போகிறோம். ஜெர்மானியர்களும் முன்னைவிட பெரியவைகளாக வெடிகுண்டுப் படைகளை ஏற்படுத்துவதில் பிரயாசைப்பட்டு முடியாமல் தவிக்கிறார்கள்.

பிரிடனும், அமெரிக்காவும் தங்களுடைய சாதனங்களை ஒன்றுசேர்த்து ஜெர்மனியைக் காட்டிலும் பெரிய விமானப்படையைத் தயாரித்துக்கொண்டு ஜெர்மனியுடன் செய்யும் ஆகாயப்போரில் நாம் ஜயமடைவோம் என்பது நிச்சயம்.

---

## கதம்பம்.

1. "நமக்கு ஜயம் வரக்கூடிய வழியைக் கண்டுபிடித்துவிட்டோம் இவ்வளவு நாட்களில் ஜயம் பெறப்போகிறோமென்பது சொல்ல முடியாத போனாலும் கூடிய சீக்கிரத்தில் 1918-ம் வருஷத்தில்போல், ஜெர்மானியர் தங்களுக்கேற்பட்ட நஷ்டங்களையும், முடியாத தன்மையும், அடைந்த வெட்கத்தையும் அறிந்து, தாங்களாகவே திடீரென்று முறிந்து அழிவார்கள்."

(டச்சு வெளிநாட்டு மந்திரி எம்-கட், ஆகஸ்டு, 4).

2. "தற்போதைய யுத்தத்தில் மிகவும் திருப்திகரமான சம்பவங்கள் இருக்கின்றன. இவைகளைப் பார்த்தால் தீவிர தத்வஞானிக்கும் உத்ஸாகம் ஏற்படாமல் இருக்காது."

(மிஸ்டர் ஸி. ஆர். அல்லி, ரகஸிய மந்திரி, ஆகஸ்டு 6).

3. "இந்த யுத்தத்தில், தன் தேசத் தற்காப்பிலும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைக் காப்பதிலும் முன் யுத்தத்தைவிட இந்தியா அதிகம் புகழ் அடையும் என்று நிச்சயமாய்க் கூறுகிறேன்."

(ஹிஸ் ஹைனஸ், பாட்டியாலா மஹாராஜா, சிங்கப்பூர், ஆகஸ்டு 7).



4. "ஆஸ்திரேலியாவைப் பாதுகாக்க, அதற்கு வெகு தூரத்திலேயே முடிந்தவரை தற்காப்புச் செய்துகொள்ளவேண்டும்."

(மிஸ்டர் ஆர். ஜி. காஸினி, ஆஸ்திரேலியா மந்திரி, ஆகஸ்டு 7).

5. "ஜப்பானுக்கு புத்திவரவேண்டுமானால் நாம் அதற்கு தாக்ஷண்யம் காட்டக்கூடாது."

(டெய்லி டெலிகிராப், ஆகஸ்டு 8).

6. "இதுவரை அடைந்ததாகச் சொல்லும் வெற்றிகள் பேருக்கே ஒழிய ஜெர்மனிக்கு நிச்சயமான ஜயத்தைத் தரவில்லை. ஒவ்வொன்றும் மேல்மேலும் சண்டையையே விளைவிக்கிறது. இவ்விதமாகச் செய்து, தனக்கும், தன் ராஜ்ஜியத்திற்கும், தன் ஜனங்களுக்கும் நாசத்தைத்தான் ஹிட்லர் விளைவிக்கிறார்."

(எம். பால் ஸ்பாக், லண்டனில் டச்சு வெளிநாட்டு மந்திரி, ஆகஸ்டு 9).

7. "ஆகையால் நமக்குள்ளிருக்கும் மத சம்பந்தமானதும், ராஜீய மானதும், ஆசார சம்பந்தமான தகராறுகளைத் தள்ளிவிட்டு யுத்த முயற்சிக்குப் பாடுபடுவோம்; இவ்விதம் ஒன்று சேருவதே நம்முடைய வித்தியாசங்களைத் தானாகவே சீக்கிரமாகத் தீர்க்க ஹேதுவாகும்."

(மாட்சிமையுள்ள-ஸர்-மாரிஸ்-ஹாலெட், ஐக்கிய மாகாண. கவர்னர், ஆகஸ்டு 9).

8. "டோவருக்கு 21 மைல் சமீபத்தில் இந்த ஹூண ஹிட்லர் இருந்தாலும், அவனுடைய அசுரச்செய்கைகள் டோவரிலுள்ள முன்னேற்றத்திற்கு 2,000 வருஷம் பழைமையானதாக இருக்கின்றன."

(மிஸ்டர் ஹாப்கின்ஸ் லண்டனிலிருந்து ஒலிபரப்பியது, ஜூலை 27).

9. "இந்தியா பிரிடனுக்கு உதவுவதைக் காட்டிலும் பிரிடனின் உதவி இந்தியாவுக்கு அதிகம் தேவை என்று நம்புகிறேன்."

(ஸர். மிர்ஸா-இஸ்மேல், பூனா, ஜூலை 27).

10. "மற்ற சண்டைகளைக் காட்டிலும், ருஷ்யாவில் நடக்கும் யுத்தம் அதிக திகிலைச்செய்கிறது."

('பண்டு' என்ற ஜூரிச் பத்திரிகையில் வெளியான ஜெர்மன் சிப்பாய் எழுதிய கடிதம், ஜூலை 29).

---

## ஜெர்மானியர் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளும் விதம்.

## கோயபெல்ஸ் கால அட்டவணை.

## ருஷ்யப் படையின் புனருத்தாரணம்.

| இது உண்மையா? | அல்லது இதுவா? |
| --- | --- |
| **1. ஜூன் 30.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.** | **ஜூலை 26.—பிராங்க் புர்டர், ஜீடங்.** |
| இரண்டு நாட்களுக்குமுன்பு தான் ருஷ்யர் பின்வாங்கியதைப் பற்றிப் பேசினோம். இப்பொழுது அவர்கள் தலை விரி கோலமாய் ஓடுகிறார்கள். | தற்காப்புச் செய்துகொண்டு இருந்தால் போதுமென்று சொப்பனத்திலும் ருஷ்ய அதிகாரிகள் நினைக்கவில்லை; ஆனால் ஆரம்பமுதல் ஜெர்மன் எதிர்ப்புகளைப் பலவந்தமாகத் திருப்பித் தாக்குகிறார்கள். |
| **2. ஜூன் 30.—பேர்லின் சொன்னதை ரோம் ஒலிபரப்பியது.** | **ஜூலை 21.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.** |
| ருஷ்ய விமானப்படைக்கு சண்டை புரிய சக்தியே இல்லை, ஆகையால் இனிவரும் ஜெர்மன் முஸ்திபுகளுக்கு ருஷ்ய விமானங்கள் நிச்சயமாகக் இடைஞ்சல் செய்யமுடியாது. | போர்முனை ஜெர்மனியிலிருந்து தூரம் அதிகரித்துக்கொண்டு போவதால், பின்புறமுள்ள போக்குவரத்து சாதனங்கள் எதிரிகளின் தாக்குதல்களுக்கு எளிதாயிருக்கிறது. அவைகளை எதிரி விமானங்கள் குறிபார்த்து அடிக்கின்றன. |
| **3. ஜூலை 17.—ஜெர்மன் அதிகார அறிக்கை.** | **ஜூலை 24.—நேஷனல் ஜீடங், எஸ்ஸன்.** |
| கடைசியான மூல பலங்களைக் கொண்டு ருஷ்யர்கள் நாம் முன்னேறுவதைத் தடுக்கப் பார்க்கிறார்கள். | ருஷ்யர்களுக்கு மேலும் மேலும் சைன்யம் சேர்க்க ஏராளமாக மனித உதவியிருக்கிறது. கும்பல் கும்பலாக ஸோவியத் சிப்பாய்கள் ஜெர்மானிய வரிசைகளைத் தடுக்க எப்பொழுதும் ஒன்று சேர்க்கமுடியும். |
| | **ஜூலை 26.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.** |
| | அடிக்கடி புதிதாக படையைத் திரட்ட முடியுமென்று ருஷ்யர்கள் காண்பித்திருக்கிறார்கள். |



| இது உண்மையா? | அல்லது இதுவா? |
| --- | --- |
| **4. ஜூலை 17.—பிராங்க் புர்டர், ஜீடங்.** | **ஜூலை 27.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.** |
| யந்திர சாதனமென்பதை ஐரோப்பிய நாடுகளில் தான் காணமுடியும், ருஷ்ய டாங்கிகள், யந்திர சக்தியில் மேலானவையல்ல. | இதுவரை நாம் எதிர்த்த எதிரிகளுக்குள் ருஷ்யர்களின் முஸ்திபு மிகவும் நவீனமானது என்று கிழக்கு தேசங்களில் சண்டை செய்யும் யாவருக்கும் தெரியும். |
| **5. ஜூலை 15.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.** | **ஜூலை 24.—புடாபெஸ்டின் 'பெஸ்டி' என்ற பத்திரிகையின் ஜெர்மன் நிருபர்.** |
| இங்கிலீஷ்காரர்களும், ருஷ்யர்களும் செய்துகொண்ட உடன்படிக்கை ஒரு பெரிய காரியமா? ருஷ்யாவிலுள்ளோர் லண்டனில் இருந்து எவ்வாறான உதவியை எதிர்பார்க்கமுடியும்! | இப்பொழுது பிரிட்டனுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்டிருக்கும் சேரான ராணுவ கூட்டுறவைப்பற்றி பேர்லின் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. பேர்லினில் இவ்விஷயம் தீவிரமாகக் கருதப்பட்டு, அவ்வொப்பந்தம் அதிக முக்யத்வம் வாய்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. |

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 57.

| 1941— | | | மணி. |
|---|---|---|---|
| ஆகஸ்டு ...16, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 17, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | வம்பன் ... | ,, | 6.30 |
| 18, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | மேலூர் ... | மாலை | 6.00 |
| | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| 19, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| 20, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | ஒடுக்கூர் ... | ,, | 6.00 |
| | மருதம்பட்டி (நாங்குப்பட்டி). ... | ,, | 6.30 |
| 21, வியாழக்கிழமை. | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| 22, வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 6.00 |
| | கண்ணங்குடி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 58.

| | | | |
|---|---|---|---|
| 23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 24, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | பூவரசகுடி ... | மாலை | 6.00 |
| | வேங்கடக்குளம் .. | ,, | 6.30 |
| 25, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 26, செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | பொம்பூர் ... | ,, | 6.30 |
| 27, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | அரிமளம் ... | ,, | 6.00 |
| | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| 28, வியாழக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | காஞ்ஞூர் ... | ,, | 6.30 |
| 29, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—16-8-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் ஆகஸ்டு மீ 23உ. [நெ. 58.

# ‘வி’

## விஜயத்துக்காக

பிரஸங்கம் 58.

## “பிளிட்ஸ் க்ரீக்,” “பான்ஸர்”

அல்லது

## “ஜெர்மன் மின்னல் படையும், பான்ஸர் படையும்.”

ராணுவ சம்பந்தமான பாஷை ஸ்பஷ்டமில்லாதவை. ராணுவ பரிபாஷை, மற்ற பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு முன்னாலேயே சம்பாஷணையில் அர்த்தம் தெரியாமலே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. பொது ஸ்தலங்களிலும், வீடுகளிலும் அர்த்தம் தெரிந்ததுபோலும் பரம ரகசியத்தை வெளியிடுவதைப்போல், 'அந்த வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதைக்கேட்டு பிறர்களும் அர்த்தம் புரியாமலே சொல்லுகிறார்கள். இவ்விதமாக புத்திக் குழப்பம் பரவுகிறது. இதற்கு உதாரணமாக என்னுடைய சொந்த அநுபவத்தைச் சற்றுச் சொல்லுகிறேன். "பிளிட் ஸ்க்ரீக்", "பான்ஸர்" என்ற பதங்களை எடுத்துக்கொள்வோம். இவைகளின் தாத்பரியத்தை என்னவென்று கேட்ட அநேகர்களுக்குப் பொதுப்படையான வார்த்தைகளைச் சொல்லியே மொழுகி மூடிவிட்டோம். இனி கேட்போர்களுக்கு மேமீ 10-ம் தேதி 'பிட்சர் போஸ்டு' என்னும் பத்திரிகையில் மிஸ்ட்டர் டாம் விண்டிரிங்ஹாம் எழுதிய வியாசத்திலிருந்து இப்பொழுது நாம் சரியானபடி பதில் சொல்லக்கூடும்.

## ஒரு பான்ஸர் பகுதி.

'பிளிட்ஸ்' என்ற மின்னல் போருக்கு தந்திரங்களில் பான்ஸர் பகுதி மிகவும் அவசியமானது. ஜெர்மானியர்கள் செய்யும் முன்னேற்றங்களுக்கு இது ஈட்டி முனையாகும். இது ஒரு பகுதியாயினும் இதன் தலைவன் தனித்த அதிகாரத்தைப் பெற்றவன். ஆகையால் அந்தப் படையில் பொருக்கியெடுத்த உத்தியோகஸ்தர்களும், ஆட்களும்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியின் அங்கங்களாவன:—

| | |
|---|---|
| கனமான டாங்கிகள் ... ... | 48 |
| நடுத்தரமான டாங்கிகள் ... ... | 84 |
| லேசான டாங்கிகள் ... ... | 252 |
| பட்டாளம் கொண்டு செல்லும் மோட்டார்கள் ... | 230 |
| (4", 5·9") கனமுள்ள பீரங்கிகளைச் சுமந்து செல்லும் வண்டிகள். | 96 |
| பாய்ச்சல் "பாம்பர்" விமானங்கள் ... ... | 27 |
| கவசம் பூண்ட மோட்டார் சைகிள்கள் ... | 258 |
| இன்னும் மோட்டாரில் செல்லும் காலாட்படை, இஞ்ஜினியர்கள், தந்தி கொடுப்போர்கள் (Signallers) அடங்கிய நாலு படைகளை ஏற்றிச் செல்லும் வண்டிகள். | 1,000 |

இவைகளின் மொத்தம் சுமார் 14,000 அல்லது 15,000 ஜனங்கள் இருக்கலாம்.

## பிளிட்ஸ் போரில் பான்ஸர்படை எவ்வாறு உபயோகப்படுத்தப்படுகிறது.

ஜெர்மனியர்களின் தாக்குதல் நூதன முறையானது. அது எதிரியினுடைய ஒரு வகைத் தற்காப்பை அழித்துப் பிளப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உபாயமென்று ஜெர்மானியர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். (நேசதேசத்தார்களுக்கும் ருஷ்யா வரையிலுள்ள தேசத்தினர்களுக்கும், தற்காப்பு முறை ஒன்றே ஒன்றுதான்). ஆனால் தற்காப்பு முறை, சைனியத்தை வரிசையாக நிறுத்தி எதிரிகள் அணுகாமல் சுட்டுக்கொண்டிருப்பதுதான், பிரான்ஸ் கையாண்ட முறை. அப்படையில் காலாட்படையைத் தடுக்க பீரங்கிகளும், டாங்கிகளைத் தடுக்க "ஆண்டி—டாங்கி" என்ற பெரிய பீரங்கிகளும் அடங்கியுள்ளவை.



ஜெர்மன் எதிர்ப்பில் ஜெர்மன் சைனியங்கள் சுவேதோடு நில்லாது, வெகு வேகமாகவும் முன் செல்லவேண்டும். பாதுகாப்பு செய்துவரும் இடங்களில் ஒடுக்கமான பாகங்களில், கனமான கவசம் பூண்டதும், வேகமாகச் செல்லக்கூடிய படைகளைத் திரட்டி, சுட்டுக்கொண்டிருக்கும் எதிரிகளைத் துளைத்துப் பிளந்து கொண்டு, எதிரிகளுக்குப் பின் பக்கமுள்ள பாதுகாப்பில்லாத இடங்களுக்கும் போய் ஜெர்மானியர்கள் த்வம்சம் செய்கிறார்கள்.

பிரெஞ்சுக்காரர்களின் பாதுகாப்புத் திட்டப்படி எதிரியை வெகுதூரத்தில் வரும்போதே தடுப்பதாகும். அவர்கள் சுட்டுக்கொண்டேயிருப்பார்கள். அதனால்தான் எதிரிகள் அணுக முடியாது. ஆனால் 'பிளிட்ஸ்' முறையிலோ சைனிய பலத்தோடும், மின்னல் வேகத்தோடும், செல்வதோடு யுத்தத்தில் சமீபத்தில் வந்து ஒருவருக்கொருவர் கைகலக்க வேண்டியதுதான். அதனால் அவர்கள் ராணுவப் படையில் சமீபத்தில் நின்று சண்டை செய்யக்கூடிய பீரங்கிகள், 'மார்டர்'கள் (Mortars), டாமி கன்ஸ், (Tommy guns), கிரனிடிஸ் (Grenades) இவைபோன்ற ஆயுதங்கள் சேர்த்திருக்கிறார்கள்.

## ஜெர்மானியர்கள் தாக்கும் முறை.

ஜெர்மானியர் தாக்கும் முறை நூதனமானது. வெகு விசாலமான இடத்தில் ஜெர்மானியர்கள் விஸ்தாரமாக எதிர்ப்பதில்லை. எதிரியின் பலஹீனமான முனையை அபார பலத்தைக்கொண்டு ஒரு குறுகிய இடத்தில் தாக்குகிறார்கள்.

## அவர்கள் சைனியத்தை ஒன்றை பத்தாகச் செய்துகொள்ளும் விதம்.

திடீரென்று ஒரு இடத்தில் எல்லா பலத்தையும் சேகரித்து பாதுகாப்பைத் துளைத்து, நுழைந்து மோட்டார்களைக்கொண்டு, ஒரு நாளைக்கு 15-மைல் முதல் 30-மைல் வரை முன்னேறிச் செல்லக்கூடிய சாமர்த்தியம் அவர்களுக்கு உண்டு. ஒவ்வொரு படை பாகத்திற்கும் மோட்டார்கள் உண்டென்று சொல்லவரவில்லை. பெரும்பாலும் சாதாரணமாயுள்ள பாதசாரிகளாய்ச் செல்லுகின்றன. அவை நடந்தோ, ரயில் மார்க்கமாகவோ செல்லுகின்றன. 'பான்ஸர்' பகுதியுடன் சேர்ந்து டாங்கிகளுக்குப் பின்னாலோ அல்லது டாங்கிகளுடனே செல்லுகிறதற்குப் போதுமான காலாட்படை அவைகளுக்குண்டு. அவை பாதுகாப்பை உடைத்து, உள்ளே நுழைந்தவுடன், மோட்டாரில் செல்லும் படையாகப் பிரிந்து பரவுகிறார்கள். அல்லது எதிரி அணிகளுக்கு பின்பக்கம் வந்து தாக்குகிறார்கள்.

சென்ற யுத்தத்தைக் காட்டிலும் இப்பொழுது ஐந்து மடங்கு வேகமாகத் திடீரென்று தாக்க மோட்டார் படையால் முடிகிறது. எதிரியின் பாதுகாப்பைத் தகர்த்து உள்ளே நுழைந்த பிறகும் இன்னும் ஐந்து மடங்கு வேகமாகச் சென்று ஜயத்தை அடையக்கூடியதாக இருக்கிறது.

## விமானங்களும், டாங்கிகளும்.

ஜெர்மன் ராணுவ தந்திரங்களில் இது ஒரு புதியமுறை. அதாவது பலஹீனமான இடத்தில் நன்றாய் கவசம் பூண்டதும், வேகமாய்ச் செல்லும் படைகளைத்

திரட்டித் தாக்குவதென்பது தான் அவர்களுடைய பிரதம தந்திரம். விமானங்களிலிருந்துகொண்டு பீரங்கிகளைப் பிரயோகிப்பதுதான் இரண்டாவது-புதிய தந்திரம். 'டாங்கிக் கூட்டங்களை' உபயோகப்படுத்துவதுதான் மூன்றாவது தந்திரம். போர்க்களத்தில் அவர்களுக்கு வேண்டிய இடத்தில் எதிரிகளின் படை ஒன்று சேராமலும், உதவிப்படையை அனுப்ப முடியாமலும் தடுத்து, பாதுகாப்புச் செய்யும் பீரங்கிகளைப் பிரயோகிக்க விடாமல், எதிரியின் சைனியத்தை இவர்கள் பிளந்து கொண்டு போகும்போது; தங்கள் விமானங்களிலிருந்து ஏராளமான வெடிகுண்டுகளைப்போடுகின்றனர்.

எதிரியினுடைய பீரங்கிகளின் வேகத்தைக் குறைக்கவே பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் டாங்கிகளை உபயோகப்படுத்திவந்தார்கள். ஆனால் ஜெர்மானியர்கள் அவைகளை, எதிரியின் யந்திர பீரங்கிகளையும், டாங்கிகளைத் தாக்கும் பீரங்கிகளையும் இன்னும் போரில் உபயோகிக்கப்படும் பீரங்கிகளையும் அழிப்பதற்காக உபயோகப்படுத்துவதில்லை. யுத்தகளத்தில் அவற்றைப் பெரும்பாலும் உபயோகப்படுத்துகிறது மல்லாமல், மோட்டார் படை சண்டை நடக்குமிடத்திற்குப் போவதற்கும், பீரங்கிகள் ஏற்றப்பட்ட வண்டிகளைக் கொண்டுபோவதற்கும், டாங்கிப் படையைக் கொண்டு, விரோதிப் படைகளை துளைத்துப் பாதைகள் ஏற்படுத்த உபயோகப்படுத்துகிறார்கள். இம்மாதிரியாக காலாட்படை எங்கெங்கு செல்லுகின்றதோ அவ்விடங்களுக்கு அத்துடன் பின்தொடர டாங்கிகளுக்கு ஹேதுவாயிருக்கிறது.

## பீரங்கிப்படை.

ஜெர்மன் பீரங்கிப்படை சிறிய பகுதிகளாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றது. சென்ற யுத்தத்தில், கும்பல் கும்பலாய் சென்று ஸ்தாக்களை மறித்து யுத்தம் செய்தார்கள். அதனால் இவைகளை நாம் திருப்பிச் சுடுவது சுலபமாக இருந்தது. இப்பொழுது அம்மாதிரி இல்லை. காலாட் படைக்கு ஒரு சிறு பகுதியும், டாங்கிப் படைக்கு ஒரு சிறு பகுதியும், மோட்டார் படைக்கு ஒரு சிறு பகுதியுமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. பீரங்கிப்படை செய்யவேண்டிய வேலையைப் பெரும்பாலும் ஆகாய விமானங்கள் செய்கின்றன. பீரங்கிப்படை போய்ச்சேரமுடியாத தூரங்களில் விமானப்படை தாக்குகின்றன. பாதுகாப்பு வரிசையைத் தாக்குகிறதோடு நிற்காமல், போக்குவரத்து சாதனங்களைத் துண்டித்தும், எதிரியின் பின்வரிசைக்குப் பின்னுள்ள படையையும் தாக்குகின்றன. பீரங்கிப்படை சீக்கிரத்தில் செய்யமுடியாத காரியத்தை விமானங்கள் செய்கின்றன. (ஏனென்றால் பீரங்கிப் படை "டாங்கிகளை"ப்போல விரைவாக ஒரு ஸ்தானத்திற்குப் போய்ச்சேரவோ அல்லது அந்த ஸ்தானத்திலிருந்து மாறவோ முடியாது). ஆனால் அதிக காலம் எதிர்த்துப் போராடும் விரோதியின் படையில் பிளவு உண்டாக்கி காலாட்படையோடு வேகமாய் முன்செல்ல பீரங்கிப்படை வேண்டியிருக்கிறது.

## ஜெர்மன் பான்ஸர் படை எல்லா சாதனங்களும் அடங்கினது.

சென்ற வருஷத்தில் பிரான்ஸில் நடந்த சம்பவங்களிலிருந்து, டாங்கிகள் ஐரோப்பா கண்டத்தில் உபயோகப்படுத்தி வந்த முறையை ஜெர்மானியர் மாற்றி



விட்டார்கள் என்று தெரியவரும். ஐரோப்பா கண்டத்தில் அதிலும் முக்கியமாக் பிரான்ஸில் முன்னேறிச் செல்லக்கூடும் காலாட்படையை உதவிசெய்ய மோட்டார்கள் உபயோகப்படுத்தப்பட்டன. இதனால், மணிக்கு 3-மைல்தான் போக முடிந்தது. ஆனால் ஜெர்மனியர்களோ இதை மாற்றி டாங்கிகளுக்கு உதவியாக, மோட்டாரில் ஏறிச்செல்லும் காலாட்படையை உபயோகப்படுத்துகின்றனர். இதனால் மணிக்கு 30-மைலுக்கு மேல் ஆய்விட்டது. ஆனால் ராணுவ சாஸ்திரத்தின் முறைப்படி இது பூரா மாறுதல்தான்; இப்பொழுது ருஷ்யாவில் நடக்கும் போரிலிருந்து அது எதிர்பார்க்கப்படாத ஒரு அதிசயமில்லை. "கால்வாய், ஆறு, அல்லது டாங்கிகள் போகாமலிருக்கும்படி கட்டப்பட்டிருக்கும் அகழ்கள், இம்மாதிரி டாங்கிகள் புகுந்து செல்ல முடியாத தடைகளின் அருகாமையில் அவைபோய்ச் சேர்ந்தால் டாங்கிப் படைகள், மோட்டார் படைக்கும், இஞ்சினியர்களுக்கும் சமிக்ஞை செய்து அகழை உடைத்தோ பாலங்கட்டியோ தாண்டும்படி செய்கின்றன. அவைகளின் அங்கமாகிய வெடிகுண்டு விமானங்களுக்கு சமிக்ஞை செய்து (பான்ஸர் பகுதியின் அமைப்பைப்பற்றி மேலே சொல்லிய பிரகாரம்) பாதுகாப்பவர்களை ½ மைல் தூரத்திற்கு இப்பாலே தாக்கித் துளைக்கின்றன.

## பிளிட்ஸ் படையெடுப்பைச் சேர்ந்த இதர தந்திரங்கள்.

மோட்டார்கள், டாங்கிகள், விமானங்கள் இவைகளை மேற்சொல்லிய விதமாக உபயோகப்படுத்துவதுதான், பிளிட்ஸின் முக்கிய தந்திரங்கள். இத்துடன் வேறு சில வகைகள் உண்டு; (1) வேகமாய்ப்போகும் படைகளுக்குச் சமாசாரம் தெரிவிக்க "ரேடியோ" உபயோகப்படுத்தல்; (2) ரகசிய வார்த்தைகளல்லாத சாதாரண வார்த்தைகளால், சுருக்கமான அவசர சமாசாரங்களை அனுப்பித்தல்! அத்தகைய விஷயம் எதிரிகளுக்கும் தெரிந்தபோதிலும், அடிக்கடி யுத்த நிலை மாறிக்கொண்டிருப்பதால் தெரிந்த சமாசாரத்தை எதிரி பிரயோஜனப்படுத்திக் கொள்ள முடியாது; (3) விரோதி பாதுகாப்பவர்களின் பின்னிருந்து, அவர்களைப் பலஹீனப் படுத்த துடைப்படையை ஆகாய மார்க்கமாய் இறக்குவது; (4) பெரும் புகையை விஸ்தாரமாய்ப்போட்டு மறைப்பது; ஆகிய இவைகள்தான்.

## புகை.

ஜெர்மானியர்கள் தங்களை மறைத்துக்கொள்ள புகையை உபயோகப்படுத்துவதில்லை, எதிரிகள் பக்கம் புகையைப்போட்டு, தங்களை அவர்கள் பார்வைக்குப் புலப்படாமல் செய்யப்படுகிறது.

"இது முதலிய சில்லரை உபாயங்கள் அவசியமானாலும் முக்கியமாக டாங்கிகள்தான் ஈட்டிமுனை; மோட்டார் படைகள்தான் ஈட்டி சொருகியிருக்கும் கோல்; மற்ற சாதாரணப்படைகள் ஈட்டியை வேகமாக முன்னால் எறியும் மனிதனின் சரீரம்."

## இவ்வெதிர்ப்பைத் தடுக்க முடியுமா?

இத்தகைய மார்க்கங்களினால் ஜெர்மன் படை பெரிய, பெரிய ஜயங்கள் அடைந்திருப்பதினால் சில கேள்விகளுக்கு இடம் ஏற்படுகிறது. பிளிட்ஸ் எதிர்ப்பை நம்மால் தடுக்க முடியுமா? எப்படி?

முதல் கேள்விக்கு "ஆம்" என்று பதில். ஏனெனில் இரண்டாவது கேள்விக்குப் பதில், ருஷ்யர்கள் அவர்களைத் தடுக்க ஒருவழி கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இதற்கடிப்படையாக இரண்டு உபாயங்களைச் செய்யவேண்டும். ஒன்று முதலாவதாக ஈட்டியென்ற பாகத்தைப் பிளந்தோ, அல்லது ஈட்டியை எறியும் கையிலிருந்து அதைத் தட்டியோ விடவேண்டியது. இரண்டாவதாக எதிரியினுடையஈட்டி பாகத்தை முன்னேறாது தடுக்கவேண்டும். அதே 'பிளிட்ஸ்' முறையில் நாம் திருப்பித் தாக்கும் வரையில் காலதாமதம் செய்யவேண்டும். அதாவது டாங்கிப்படையை மோட்டார் படையிலிருந்து பிரித்து விடவேண்டியது. அது முடியாமல் போனால், மோட்டார் படையைப் பின்தொடர்ந்து வரும் காலாட் படையிலிருந்து பிரித்து விடவேண்டியது. டாங்கிகளைக்கொண்டு மட்டில் ஸ்திரமான ஜயத்தை அடைய முடியாது. டாங்கிகளும் சிறிய வகுப்பு மோட்டார் படைகளும், ஜயித்த இடத்தை வெகுகாலம் கைப்பற்றி வைக்கமுடியாது.

'பிளிட்ஸ்' மின்னல் படைக்குச் சரியான எதிர்ப்பு ஒரு 'வலை' அல்லது 'சல்லடையைப்' போன்ற தற்காப்பு முறையை அனுசரிக்கவேண்டும். கேவலம் தற்காப்புச் சைனியங்களை ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து நிறுத்தக்கூடாது. 'வலை' என்ற பாதுகாப்பில், ஏதாவது ஒரு பாகத்தில் எதிரியை உள்ளேவிட்டு விடலாம். ஏனென்றால் அந்த பாகத்தில் பிரவேசித்தால் மட்டில் எதிரி ஜயிக்க முடியாது. அதனால் மோசம் வந்து விடாது. முதலிலோ, அடிக்கடியோ விரோதிகள் எதிர்ப்பை மற்ற பாகங்கள் தாங்கும் பக்ஷத்தில் உள்ளே புகுந்த எதிரிக்கு ஆபத்துத்தான். எதிரி இவ்விதம் உள்ளே நுழைந்ததும், 'வலை' போன்ற விரோதிப் படைகளுக்குள் அகப்பட்டுக்கொள்ளுகின்றன. அல்லது 'வலை'யிலிருந்து பிடுங்கிக்கொண்டு போக எத்தனித்தால், தூள் தூளாக அவைகள் நொருங்கி விடுகின்றன. அணிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தும் முறை ஏற்கனவே நேசதேசங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆனால் இப்பொழுது ருஷ்யர்கள் அனுசரிக்கும் முறை வேறு. இவ்'வலை' முறைக்குத் தக்கபடி தனிப்பட்ட இதர சிறு சைனியங்கள் நாலா பக்கங்களிலும் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இதற்குப் பின்னால் இதைப்போன்ற ரிஸர்வ் சைனியங்களும் உண்டு.

## அம்மாதிரி ருஷ்யா செய்துவிட்டதா?

இப்பொழுது நடக்கும் ருஷ்ய யுத்த சம்பந்தமாக மேற்கண்ட குறிப்புகள், யுத்த முறையை தெளிவாய் எடுத்துக் காட்டும். ருஷ்யப்படையில் இம்மாதிரி பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்டதினால் ஜெர்மன் படை அபஜயமடைந்து மின்னல் வேகத்தோடு செல்லாமல் நின்றுவிட்டது.

ஜெர்மானியர்கள் எதிரிப் பிரதேசத்தில் முன்னேறி வருவதை ருஷ்ய அறிக்கைகளிலிருந்து கவனிக்க மேற்சொல்லியபடி ருஷ்யர்கள் எதிர்த்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. குதிரைகள்மேல் சவாரிசெய்த நெபோலியன் விட்டிஸ்கில் 15-நாள் தங்கினதுள்பட சேர்த்துக்கணக்கிட ஸ்மாலென்ஸ்க்குப் போய்ச்சேர நாள்



ஒன்றுக்கு 6-மைல் வீதம் பிடித்தது. ஏழு வாரங்கள் சண்டையிட்ட ஜெர்மானியர்கள், அவர்கள் கைப்பற்றின பிரதேசங்களில் நாள் ஒன்றுக்கு 6-மைல் முதல் 7-மைல் வரையில்தான் முன்னேறி இருக்கிறார்கள். முக்கியமான இடங்களில் ஒரு நாளைக்கு 9-மைல் முதல் 10-மைல் வரை முன்னேறியிருக்கிறார்கள். இம்மாதிரி செய்ததில் அதிக உயிர்ச் சேதமும், பொருள் நஷ்டமும் உண்டாகியிருக்கிறது. இதோடு ருஷ்யர்கள் ஒத்துழைக்காவது, பொருளாதாரங்களுக்காவது நஷ்டம் உண்டாகவில்லை. ஆனால் ஜெர்மானியர்கள் இதர இடங்களில் அடைந்த வெற்றியை ஒப்பிட்டுப் பார்ப்போம். போலந்தில் படையெடுத்து, வார்ஸாவைக் கைப்பற்றியதும் பார்க்க ஜெர்மானியர்கள் நாள் ஒன்றுக்கு 12-மைல் வீதம் முன்னேறியிருக்கிறார்கள். பிரான்ஸில் ஸெடானிலிருந்து அபிவில்லிக்கு நாள் ஒன்றுக்கு 16-மைல் வீதம் சென்றிருக்கிறார்கள். அங்கிருந்து தெற்கே ரூபனுக்கும் பாரிஸைக் கைப்பற்றவும் நாள் ஒன்றுக்கு 30-மைல் வீதம் முன்னேறியிருக்கிறார்கள். ட்ரிபோலி, பெங்காஸி இவைகளிலிருந்து டோப்ருக் ஸோலும் வரையில் பாலைவனப் பிரதேசமாய் இருந்தால்கூட, இதே 30-மைல் வேகத்துடன் முன்னேறியிருக்கிறார்கள். பால்கன் பிரதேசம் பூராவும், பல்கேரியாவிலிருந்து, யூகோஸ்லாவியாவுக்கும் முன்னேறியிருப்பது நாள் ஒன்றுக்கு 18-மைல் வீதம் கணக்காகிறது. தெற்கே கிரேக்கர்கள் கடும்போர் செய்து பாதுகாத்தும், கடினமான பிரதேசத்திலும், தர்மாப்பொலி, லாமியா இவைகளிலிருந்து ஏதன்ஸுக்கும் நாள் ஒன்றுக்கு 18-மைல் வீதம் சென்றிருக்கிறார்கள். யூரல்ஸ், பாக்கு இவைகள் 1,100-மைலுக்கு அப்பால் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 10-மைல் வீதம் முன்னேறினாலும், மாரி காலம் வருவதற்குள், ஜெர்மானியர்கள் இந்த இடத்தை அடையமுடியாது.

[குறிப்பு.—ஆனால் ஜெர்மானியர்களைக் காட்டிலும் வெகு வேகமாக பிரிடிஷ் படைகள் வட ஆபிரிக்காவில் முன்னேறியிருக்கின்றன. உதாரணமாக ஜூபாலான்டுக்கும், அடிஸ் அபாபாவிற்கும் இடையில் 1,000-மைல், விஸ்தீர்ணம். இதெல்லாம் பெரும் பாலைவனம். இருந்தபோதிலும் பிப்ரவரி-மீ 25-ம் தேதியில் ஜூபாலாண்டிலிருந்து புறப்பட்டு ஏப்ரல்-மீ 5-ம் தேதியில் அடிஸ் அபாபாவுக்கு பிரிடிஷ் சைனியங்கள் போய் சேர்ந்தது. இது ஒரு நாளைக்கு 25-மைல் வீதம் கணக்காகிறது.]

முடிவாகக் கூறுவதென்னவென்றால், ஜெர்மன் படைகள் அபாரமானவை; தாக்கமுடியாதவை; போரில் அவர்கள் கை மேலாகவே இருக்கிறது. உலக ஆதிக்கம் கிடைக்கவேண்டுமென்றும், ஜயம் ஏற்படும் என்று ஆசைப்பட்டு சேனைத்தலைவர்கள் சைனியங்களை விரட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான ஆசை, அவர்களை முன்னேறிச் செல்லும்படி தூண்டுகிறது. அல்லது காலதாமதம் ஏற்படுவதில் உலக ஆதிக்கமோ, ஜயமோ, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ என்று அவர்களுக்கு கிலி பிடித்திருக்கிறது. உலகம் பூரா பயந்துகொண்டிருந்த இந்த ராணுவ திட்டத்தை அளவிடப்பட்டு, எதிரிடையாக ஒரு திட்டம் ஏற்படுத்தியாய்விட்டதென்று நாம் சந்தோஷப்படலாம். அதுதான் 'வலை' என்ற

தற்காப்பு முறை. போரசை பித்துக்கொண்ட ஹிட்லரின் மின்னல் படைக்கும் பான்ஸர் பகுதிகளுக்கும் பதிலளிக்கக்கூடிய பாதுகாப்பு, மன உறுதிகொண்ட தேசத்தார்கள் கைவசமுள்ள வலைப்பின்னல் பாதுகாப்புத்தான்.

---

## வார யுத்தச் செய்திகள்.

14—8—41-லிருந்து 20—8—41-வரை.

**அட்லாண்டிக்கடலில் சந்திப்பு.**—சென்ற வாரத்தில் மிஸ்டர் சர்ச்சில் பிரிடனை விட்டு வெளியே சென்றதற்குக் காரணம் இனி ரகசியமில்லை. இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுச்சென்று இவர் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுடன் அமெரிக்கக் கடற்கரைக்கு அருகில் சந்தித்துப்பேசினார். 'நோவாஸ்கோஷியாவுக்குச் சமீபத்தில் என்று பிரஸ்தாபம். இந்த இரு ராஜதந்திரிகளும் பிரிடிஷ் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்ற கப்பலிலும், அகஸ்டா என்ற அமெரிக்கக் கப்பலிலும் இருந்து பேசினார்கள். இவர்களுக்கு கலந்துயோசிக்க இரு தேசத்திலிருந்தும் இலாகாத் தலைவர்கள் வந்திருந்தனர்.'

**இங்கிலீஷ் அமெரிக்க அறிக்கை.**—இது வரை, பிரிடிஷ் பிரதம மந்திரியும் அமெரிக்க பிரஸிடெண்டும் இவ்விதம் சந்தித்ததேயில்லை. இருவரும் சேர்ந்து ஒரு அறிக்கை வெளியிடுவதென்று ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி, ஜெர்மனிக்கு எதிரில் சண்டை செய்யும் நேசதேசங்களுக்கு யுத்தத்திற்கு வேண்டிய சாமான்கள் சமீபத்தில் அனுப்புவதோடு, இனிமேல் வருங்காலத்தில் நடக்க வேண்டியதைப்பற்றியும் திட்டம் செய்யப்பட்டது. பொதுவான அம்சங்களும் ராஜீய தர்மங்களும் சர்ச்சை செய்யப்பட்டிருப்பதால் இதை மனித வர்க்கத்திற்கே மஹா சாஸனப்பத்திரம் என்றே சொல்லலாம்.

**எட்டு விஷயங்கள்**—அதில் ஒப்புக்கொள்ளப்பட்டவை :—

1. ராஜ்ஜியங்களை ஆக்கிரமிக்காமல் இருப்பது. (அனுக்கிரமம்).
2. ஏற்கனவே அந்தந்த ராஜ்ஜியங்களுக்கு ஏற்பட்டுள்ள எல்லைகளை பங்கப்படுத்துவதில்லை.
3. தங்களுக்குப்பிடித்த அரசாக்ஷியை வைத்துக்கொள்ள பொதுமக்களுக்கு உரிமை.
4. வியாபாரம் செய்யவும் விளைவுபொருள்களை வாங்கவும் எல்லாருக்கும் பொதுவசதி.
5. பொருளாதாரக் கூட்டுறவு, தொழில் முன்னேற்றம், அபிவிருத்தி செய்வது, தேசிய பயமின்மை.
6. நாஸிக் கொடுங்கோலை ஒழித்து, சமாதான ஸ்தாபனமும், பயம், ஆகாரத் தேவை இல்லாமல் செய்வது;
7. எல்லா கடல்களிலும் சுலபமாக யாவரும் போகவிடுவது.
8. யுத்த முஸ்திப்புக்களைக் குறைப்பது.



இவைகளின்படி இந்த இரு தேசத்தார்களும் அவசியம் நடந்துகொள்ளுவார்கள். ஏனென்றால் ஜனநாயக அரசாங்கத் தலைமை வகிக்கும் இருவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவை. ஆகையால்தான் வில்ஸன் தயாரித்த 14 விஷயங்கள் ஒரு சார்பாருக்கும் அவரவர்கள் சொந்த விஷயமாகவும் இருந்ததுபோல் இவை இருக்காது.

இவ்வறிக்கை நேசதேசத்தார் யாவரையும் உத்ஸாகப்படுத்தி, விரோதிகளை திகைக்கவைக்கிறது. இம்மாதிரியாக உத்ஸாகமளிக்கும் இவ்விருவர்களும் அடிக்கடி சந்தித்து இனி யுத்த சம்பந்தமாகச் செய்யவேண்டியவைகளை சர்ச்சை செய்யவேண்டும். லார்டு ஹாலிபாக்ஸும் இதை அதிகம் விரும்புகிறார். இதற்கு அனுகுணமாக லார்டு பிவர்புருக், ஹாரி ஹாப்கின்ஸ், அவரெல் ஹாரிமன் முதலியோர்களும் சரியான ஆலோசனையினால் பொது தர்மங்களை சர்ச்சை செய்வதுபோல், யுத்த தளவாட உற்பத்தி செய்வது பிறருக்கு உதவுவது முதலிய பிரச்னைகள் ஏற்கனவேயே தீர்மானிக்கப்பட்டன. இவைகளில் ருஷ்யாவுக்கு அவசரமாகத் தேவையான பொருள் கொடுத்து உதவுவதாயும் ஆலோசனை செய்யப்பட்டது.

**சமாதான நிகழ்ச்சி.**—யுத்தத்திற்குப் பிறகு சாச்வதமான சமாதானத்தை ஏற்படுத்துவதில் இவ்வறிக்கை மிகவும் மேலானது. ஏனென்றால் வில்ஸன் 14 விஷயங்கள், சர்வதேச சங்க உடன்படிக்கை (League of Nations) சர்வதேசத் தொழில்கூட்டச் சட்டம் முதலியவையெல்லாம் இவ்வளவு அம்சங்களை உட்கொள்ளவில்லை. இதன்படி வருங்காலத்தில் சத்தியமே வெல்லும், வலியார் அடக்கப்படுவார்கள், கொடுங்கோன்மை ஒழியும். ஆண்பெண் அடங்கிய மனித வர்கத்தையே சீர்படுத்தவும் கஷ்டங்களிலிருந்து மீட்கவும் தேவையான அம்சங்கள் காணப்படுவதால், இது அடையமுடியாத வீண் சொற்பனம் ஆகாது. டைம்ஸ் பத்திரிகை சரியாக சொல்லுவதுபோல் யுத்த முஸ்தீப்புகளைக் குறைப்பதென்றால், ஏற்கனவே தயார் செய்யப்பட்டவைகளை அழிப்பதும் கைப்பற்றுவதும் போதாது. சில சமயங்களில்தான் இவை அவசியமாகும். பெரும்பாலும் யுத்த சக்தியை அடக்கி, பெரும் தொழிற்சாலைகளை ஒருங்கு படுத்தி பொதுமக்களுக்குப் பஞ்சம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுவதுதான் விரும்பத்தக்கது.

**மூவரசு கூட்டம்.**—ரூஸ்வெல்டு சர்ச்சில் ஒப்பந்தத்தின் பயன் உடனேயே காணப்படுகிறது. மாஸ்கோவில் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய அதிகாரிகள் ஒன்று சேர்ந்து ருஷ்யாவுக்குத் தற்போது உள்ள தேவையைப்பற்றி தீர்மானிப்பதாக ஸ்டாலினுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. மாஸ்கோவைச் சீக்கிரத்தில் பிடித்து விடுவதாக ஹிட்லர் தற்புகழ்ச்சி கொண்டிருக்கும் பொழுது இவர்கள் இப்படி அங்கு கூடுவது கவனிக்கத்தக்கது.

அமெரிக்க-பிரிடிஷ் ஒப்பந்தத்தின் படி 'நீடித்து நடக்கக்கூடிய திட்டம்' என்று ஸ்டாலினுக்கு அனுப்பப்பட்டது. மேலும் பூரணவெற்றி அடைவதற்கு முன் 'அதிகக் கஷ்டங்கள் இருக்கின்றன' வென்றும் அச்செய்தியில் காணப்

பட்டிருந்தது. இச்சண்டை பலமுனைகளில் நடைபெறுகிறது. இன்னும் புதிதாக பலர் இதில் ஈடுபடும்படியாகவும் இருக்கும். நமக்குச் சாமான்கள் ஏராளமாக இருந்தாலும் அதற்கும் ஒரு எல்லை உண்டு. முடிவடைந்த சாமான்களையும், விளைவு பொருள்களையும் எவ்வளவு லாபகரமாக உபயோகப்படுத்த முடியுமோ அதற்குத் தகுந்த திட்டங்களுடன் உபயோகிக்கவேண்டும். ஆகையால் இவர்களுடைய எல்லா சாமான்களும் தேவைக்குத் தக்கவாறு பிரித்து உபயோகிக்க உடனே திட்டம் செய்யப்படும்.

இப்படி ரூஸ்வெல்டு-சர்ச்சில் சந்திப்பு கேவலம் சாமான்கள் ஸப்ளை சம்பந்தமான பிரச்னையை மாத்திரம் நிர்த்தாரணம் செய்ய ஏற்பட்ட போதிலும், அமெரிக்காவுக்குத் திரும்பிப்போய் பத்திரிகை ஆசிரியர்களுக்கு இந்த சந்திப்பினால் அமெரிக்கா முன்னைவிட அதிகமாக யுத்தத்தில் இறங்கவில்லையென்று ரூஸ்வெல்டு சொன்னாலும், சாமான் ஸப்ளை கூட்டுறவிலிருந்து, ராணுவத் தந்திரம், யுத்த திட்டம் முதலியவைகளும் தானாகவே எழும். அவைகளில் அமெரிக்கா நிச்சயமாக கலந்து கொள்ளும்படி நேரிடும். இதை கவனித்துத்தான் ஒப்பந்தத்தின் 6-வது விஷயம் எதிர்ப்பு, தற்காப்பு முறையைப் பற்றியிருப்பதால் பிரிட்டனுடன் அமெரிக்காவை யுத்தத்தில் ஈடுபடும்படி செய்ததாகவேதான் முடியும் என்று ஸெனடர் ஜான்ஸன் கொடுத்த அபிப்பிராயம் குறிப்பிடத்தக்கது. இவ் அபிப்பிராயத்தைத் தான் ரூஸ்வெல்டும் சந்திப்புக்குப் பிறகு பின்பற்றுகிறார். ஆகஸ்டு 19-ல் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டத்தில் ஒருவர் ரூஸ்வெல்டை இவ்விதமாகக் கேட்டார். "பிரிடிஷ் பிரதம மந்திரி, நம் உதவியினால் யுத்தத்தில் ஜயிக்கலாமென்றிருக்கிறாரா,?" அதற்கு ரூஸ்வெல்டு, லிங்கன் என்பவரின் அபிப்பிராயத்தை மேல்கோளாகக்கொடுத்து ஒரு ஒற்றுமையைக் காண்பித்தார். லிங்கன் சொன்னதாவது "யுத்தம் மிகவும் சிரமத்தின்பேரில் செய்யப்படவேண்டுமென்று ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லை". அதாவது வந்த சண்டையை இனி ஜயித்தாகவேண்டும். அதற்குப் பொதுமக்கள், சண்டைசெய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் பிரஸிடெண்டு சரியாகச் சொன்னார்.

**பேர்சி விமானப் போக்குவரவு.**—டாக்கரையும், கஸாபிலாங்காவையும் ஹிட்லர் பிடிப்பதாக பயமுறுத்தினாலும், இவ்வொப்பந்தத்தின்படி அமெரிக்காவுக்கும், ஆபிரிக்காவின் மேற்குக்கரைக்கும், மத்தியக்கிழக்கு நாடுகளுக்கும் தபால் விமானப் போக்குவரவு அதிகமாக்கப்படும். யுத்தப் பிரதேசத்தை விட்டு விலகி இவை செல்லும். விமானங்களில் சாமான்களை யுத்தப் பிரதேசத்திற்கு அனுப்புவதோடு தளவாடங்களும் செல்லும். டிரினிடாட்டிலிருந்து பிரிட்டனுக்கும், பிரஸீலிருந்து பாதர்ஸ்டு, கார்டூமுக்கும் ஆக இரண்டு பாதைகளில் செல்லலாம். மேலும் அலாஸ்காவிலிருந்து ஸைபீரியாவுக்கு யுத்த சாமான்கள் அனுப்பவும் ஏற்பாடாகி வருகிறது.

**ஹிட்லருக்குப் பேட்டியாக.**—இவ்விதம் பகிரங்கமாக மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்தது ஹிட்லர் முடிந்ததைச் செய்யலாமென்று வம்புக்கு இழுத்த மாதிரிதான், நூற்றுக்கணக்கான யு-படகுகள் தெரிந்த அட்லாண்டிக்கடலில் ஒரு எதிரி கப்பலும், விமானமும் தென்படவில்லை.



**ஆங்கில-ருஷ்ய பொருளாதார ஒப்பந்தம்** ஆகஸ்டு 10-ம் தேதி மாஸ்கோவில் கையெழுத்தாகிவிட்டது. அதன்படி சாமான்கள் கடனுக்குக் கொடுத்தும் பேத்துமாத்தல் செய்யவும் ஒரு கோடிப்பவுன்வரை ருஷ்யாவுக்கு பிரிடன் கடனும் கொடுக்கும்.

**அமெரிக்க உதவியும்** ருஷ்யாவுக்குக் கொடுக்கப்படும். குத்தகைக் கடன் மசோதாப்படிக்கில்லாத போதிலும், கிரயம் கொடுத்து சாமான்கள் பெற்றுக் கொள்ளலாம். ருஷ்யச்சண்டை இன்னும் மாரிகாலம், கோடைகாலம் வரையினும் நடக்குமென்று எதிர்பார்த்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு இப்பொழுதும் இனி மேலும் சாமான்கள் அனுப்புவதாக உறுதிகூறினார். ருஷ்யாவுக்குப் போக வேண்டிய எண்ணெய் முதலிய சாமான்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்கக் கப்பல்கள் புறப்பட்டுவிட்டன.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

**யூக்ரேன்.**—கடைசியாக, அதிகச் சேதத்தின் மேல் கீவிலிருந்து தெற்கு நோக்கி சில தாத்காலிக வெற்றியடைந்ததாகவும், கருங்கடல் துறைமுகமான நிகோலாயிவ்வையும், இரும்பு அகப்படும் இடமான கிரிவாய்ராக் என்ற இடத்தையும் பிடித்ததாக விரோதி அதிக சந்தோஷப்படுகிறான். இங்கிருந்து ஒடெஸ்ஸாவையும் தாக்கி டான் பிரதேசத்தையும் நீபர் நதி வழியாக எதிர்க்கப்பார்க்கிறான். தெற்கே ருஷ்ய சேனைத் தலைவரான ஜெனரல் பூடென்னி ருஷ்யச் சைனியத்தை சிதரவிடாமல் சாமர்த்தியமாக விலக்கிக்கொண்டு நீபர் நதிக்கு கிழக்கே நிற்கிறார் இதுவரை ஜெர்மனி ஏராள நஷ்டங்கள் பேரில் வெற்றிகள் அடைந்ததே ஒழிய, இவை சாச்வதமான ஜயத்தைக் கொடுக்காது. யூக்ரேனின் தென்பாகம் பூரா ஜெர்மானியர் மாண்டு கிடக்கின்றனர். நீபர் நதிக்கரையில் ஸ்மாலென்ஸ்கில் எதிர்த்தது போல் இரு சைனியங்களும் மோதிக் கொள்ளுகின்றன. ஒடெஸ்ஸாவும் டொப்ருக்கைப்போல் முற்றுகை போடப்பட்டு எதிரிக்கு வேண்டிய தொந்தரவைத் தருகிறது. நிகலாயவ்விலிருந்து வெளியேறுவதற்கு முன்னுடியே ருஷ்யர்கள், சேமித்த தானியங்களை வெளியே அகற்றிவிட்டு, களம் முதலியவைகளை அழித்து விட்டனர். கப்பல் துறைகள் பாழாக்கப்பட்டு கப்பல்களும் கவுக்கப்பட்டும் அப்புறப்படுத்தவும் பட்டன. ஆகையால் அது ஒரு பாழடைந்த பட்டணமாகத் தானிருக்கிறது. கிரிவாயிலுள்ள நீபர் நதிவரை இரும்புச் சுரங்கங்கள் பரவியிருக்கின்றன. ஒடெஸ்ஸாவிலுள்ள பலமான கோட்டை கொத்தளங்களிலிருந்து ருஷ்யர்கள் தைரியமாக எதிர்க்கின்றனர். தரைவழியாக இவர்களுக்குச் சாமான்கள் தடைபட்டாலும் கருங்கடல் மார்க்கமாக வந்து சேரும். ஒடெஸ்ஸாவுக்கு ஆபத்து வந்தாலும் ஸெபாஸ்டாபூல், பாட்டும், நோவோரோஸ்ஸிஸ்க் முதலிய இதர துறைமுகங்கள் ருஷ்யாவுக்கு இருக்கின்றன.

முன்னேறுவதைவிட கருங்கடலில் ஜெர்மானியர் செல்லுவதாலும் அவர்களுக்கு அதிகமாக வெற்றி வந்ததாகத் தெரியவில்லை. டெயிலி டெலிகிராப் பத்திரிகை சொல்லுவதுபோல யூக்ரேனில் ஜெர்மானியருக்கு, ஆகாராப் பொருள்

களும், சுரங்கங்களும், தொழிற்சாலைகளும் கிடைக்கவில்லை. ருஷ்யர்கள் யாவற்றையும் கொளுத்திவிட்டனர். ருஷ்யச் சைனியமும் முறிபடவில்லை. மேலும் யூரல், சைபீரியா முதலிய பிரதேசங்கள் இருப்பதால் யூக்ரேனை ஜெர்மானியர் பிடித்தாலும் பாதகமில்லை. ஆனதால் ஜெர்மானியர்கள் பிடிக்கும் நாடுகளில் சாம்பலும் தூசியும்தானிருக்கின்றன.

**லெனின்கிராட்.**—மேலும் லெனின்கிராட்டுக்கு தென்மேற்கில் 70 மைலிலிருந்து ருஷ்யச் சைனியம் கிங்கிஸெப்பிற்குள் புகுந்து பழைய ருஷ்ய தற்காப்பு வரிசைகளிலிருந்து மார்ஷல் வொரோஷிலவ் என்பவரின்கீழ் பாதுகாத்துவருகிறது. எஸ்தோனியா என்ற இடத்திலிருந்து ஜெர்மன் சைனியம் பாய்கிறது. இது ருஷ்யாவின் பழைய எல்லையாகும்.

## தூரக்கிழக்கு.

அநேகமாக இங்கே ஒரு விசேஷ சம்பவமும் இல்லை. இருந்தாலும் இனிமேல் ஏதாவது நடக்கலாம். இதற்குள் பிரிட்டன் தாய்லாந்தை, ஆரண்யப் பிரதேச இருப்புப் பாதையை பிரிட்டன் உபயோகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று பயமுறுத்தியதாகப் புரளிப் பிரஸ்தாபம் பரவி வருகிறது. ஆனால் பிரிட்டன், இதெல்லாம் வீண் புரளிப் பேச்சு என்று வதந்தியை மறுத்துவிட்டது. தாய்லாந்தில் சில அவசரச் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்போல் இருக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்தத்திற்காகவும், போக்குவரவு இலாகா மந்திரி ஒருவரை நியமிக்கவும் சென்ற வாரத்தில் மிகவும் அவசரமாக சட்டசபையில் பாஸ்செய்தார்கள். அதற்குக் காரணம் கூறுகையில் தாய்லாந்திற்கு அருகில் ஆபத்து வந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இந்தோ-சைனா அநேகமாக ஒரு ராணுவ நிலையமாக ஆகிவருகிறது.

அமெரிக்காவுக்குப் போகவிருந்த 100 பொதுமக்களை ஜப்பானியர் அனுப்ப மறுத்துவிட்டதால் அமெரிக்க 'பிரஸிடெண்டு கூலிட்ஜ்' என்ற கப்பல் ஜப்பானுக்குப் போகவில்லை.

## பிரிடிஷ் விமானப்படை.

பிரிடிஷ் விமானப்படையும் அச்சுநாட்டுப் பிரதேசங்களை சற்றும் கலைக்காமல் தாக்கி வருகிறது. சென்ற வாரத்தில் முக்கியமாக பெர்லின், மாக்டபெர்க், ஹனோவர், எஸ்ஸன், கில், ப்ரெமன், ஆஸ்னேப்ருக், டுயிஸ்பர்க், கோலோன், லா டிராயிட், பிரன்ஸ்விக், ஸிராகூயூஸ் என்ற இடங்களில் குண்டுகள் வீசப்பட்டன.

## கடல் யுத்தம்.

அமெரிக்கர்கள் காவல்புரிய ஆரம்பித்த முதல் ஐஸ்லாந்திலிருந்து அமெரிக்காவுக்கும் இடையில் விரோதி நடமாட்டமே இல்லை. நேசதேசக் கப்பல்கள் நிறுத்தப்படவுமில்லை, சேதமாக்கப்படவும் இல்லை.



## மத்தியக்கிழக்கு.

**அராபிய நாடுகள்.**—ரஷீத் ஆலியின் புரட்சிகளைத் தவிர, நாஸி ஐந்தாம் படையின் வேலையெல்லாம் அடக்கப்பட்டது. முஸ்லீம் மதத்திற்கு விரோதமாக ருஷ்யாவுக்கு பிரிட்டன் உதவுவதும், கம்யூனிஸ்ட் கக்ஷிக்கு ரூஸ்வெல்டு உதவுவதும் பிசகென்று முகமதிய நாடுகளில் கிளப்பும் வதந்திகளை அங்குள்ளவர்கள் நம்பவில்லை.

**இரான்.**—இரான் கவர்ன்மெண்டைத் தொலைக்கச்செய்த ஜெர்மன் ரகசியச் சூழ்ச்சிகள் ஆகஸ்டு 15-ல் கண்டுபிடிக்கப்பட்டதால் ஜெர்மன் உயர்தர உத்தியோகஸ்தர்கள் 'தேக அசௌக்கியம்' என்று பொய்க் காரணம் கூறி வேலையிலிருந்து விலகி வருகிறார்கள். நாஸிக் கக்ஷிக்குட்பட்ட இரானிய இளம் மாதுகளும், உத்தியோகஸ்தர்களும் கைது செய்யப்பட்டனர். இன்னும் கொஞ்ச நாட்களில் 5,000 நாஸி ஐந்தாம்படையைச் சேர்ந்தவர்கள் தேசபிரஷ்டம் செய்யப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது. அதற்கு ருஷ்ய-ஆங்கிலேய அரசாங்கம் தேவையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

## விஷி.

'புது திட்டத்தை' அமுலுக்குக்கொண்டுவர பிடேன் செய்த பிரசங்கத்தின்மேல் ஜெர்மனி ஆக்கிரமிக்காத பிரான்ஸில் கலகங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கைதியாயுள்ள பாக்கி 35 பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களை விடுவித்தால்தான் ஜெனரல் டென்ட்ஸ் விடுவிக்கப்படுவார் என்று பிரிட்டன் விஷிக்குச் சொல்லிவிட்டது.

## சைனிய உத்தியோக நீடிப்பு மசோதா.

ஆகஸ்டு 18-ம் தேதி பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு இன்னும் 1½ வருஷ காலம் சைனியத்தில் வேலைபார்த்துவரும் (கட்டாய ராணுவ சேவை செய்பவர்கள்) செலக்டிகளையும், தேசப் பாதுகாப்பினர்களையும், மேன் படையாளர்களையும் வைத்துக்கொள்ள ஒரு மசோதாவில் கையெழுத்து செய்துவிட்டார்.

## பி. பி. ஸி.

ஜெர்மன் உத்தியோகஸ்தர்களுக்கு பி. பி. ஸி. அதிக பயத்தைச் செய்கிறது. இதை ஜெர்மனியில் கேட்கிறவர்கள் கொல்லப்படுவார்களாம். ஜெர்மன் பிரசார மந்திரி பின்வருமாறு சொல்லுகிறார். "பி. பி. ஸி. பிரசார மூலம் பிரிடிஷார் ஜனங்களுக்கு ஹிட்லர்மேல் அதிருப்தி விளைவிக்கப் பார்க்கிறார்கள்"

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிட்டிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **11—8—41.** (திங்கட்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| இரவில்.—லக்ஷியங்கள்—கிரெபெல்டு (Krefeld). | ...... | ...... |
| எடல்ஸ்டின் எஃகு தொழிற்சாலைகள்.—ரெயிடு (Rheyd). | ...... | ...... |
| முன்சென் (Munchen).—கிளாட்பாக் (Gladbach). | ...... | ...... |
| விமான நிலயங்கள், கட்டடங்கள், நாடோடிகள்.—வடபிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | ...... | சேதமாயின. |
| கப்பல் துறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | நஷ்டமில்லை. | ...... |
| இதாலி (Italy). | | |
| எண்ணெய் தொட்டிகள், ரசாயன சாலைகள்.—கிரோடோன் (Crotonne). | ...... | பூராவும் தீக்கிரையாயின. |
| ராணுவக் கட்டடங்கள்.—காரியட்டி (Cariati). | நஷ்டமில்லை. | ...... |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| விமானமிறங்குமிடங்கள்.—கஸாலா (Gazala). | ...... | ...... |
| ராணுவக் கட்டடங்கள்.—பார்டியா (Bardia.) | ...... | கட்டடங்கள் அழிக்கப்பட்டன. |
| துறைமுகம்.—டெர்ணு (Derna) ... | ...... | ...... |
| துறைமுகம், துறைமுகக் கட்டடங்கள், மின்சார உற்பத்தி சாலை.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| மோட்டார் போக்குவரத்து.—ட்ரிபோலி (Tripoli)க்கு அருகாமையில். | 1 விமானம். | அநேகம் சேதமாயின. |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| விரோதியின் காலாட்படை, யந்திர சாதனப் படை.—யுத்தரங்கம் பூராவும். | 34 விமானங்கள். | 41 விமானங்கள். |
| பின்லாந்து (Finland). | | |
| பட்டிணங்கள்.—பின்லாந்தில் (Finland). | ...... | ...... |
| ஜெர்மனி (Germany). | | |
| பெர்லின் (Berlin) ... | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **12—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| காலையில்.—மின்சார யந்திரசாலைகள்—கோலோனி(Cologne)லுள்ள க்வாட்ராத் (Quadrath), கீடாக் (Kneatack). | ...... | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| பகலில்.—இருப்புப் பாதைகள்—ஸெயிண்ட் ஓமர் (St. Omer)க்கருகாமையில். | ...... | ...... |
| மின்சார யந்திரசாலை.—காஸ்நே (Gosnay)க்கருகாமையில். | ...... | சேதம். |
| ஒரு விமான நிலயம்.—டிகூய் (Dekooy). | 12 பகல் 'பாம்பர்' களும். | ...... |
| ராணுவ லக்ஷியங்கள்.—கோலோன் (Cologne). | 8 பகல் 'பைடர்' விமானங்களும். | 3 'பைடர்' விமானங்கள். |
| துறைமுகம்.—எம்டன் (Emden). | ...... | ...... |
| இரவில்.—பெர்லின் (Berlin), ஜெர்மனியின் தலைநகர். | ...... | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| கைத்தொழில்.—மாக்டிபர்க் (Magdeburg), ஹனோவர் (Hanover) ஜில்லாக்களில். | ...... | சேதமாயின. |
| க்ருப் (Krupp), யுத்த தளவாடங்கள் செய்யுமிடங்கள்.—எஸ்ஸன் (Essen). | ...... | தீ மூட்டப்பட்டது. |
| ராணுவ லக்ஷியங்கள்.—ஸ்டெடின் (Stettin), கீல் (Kiel), ப்ரெமன் (Bremen), ஆஸ்னாபுருக் (Osnabruck) டூயிஸ்பர்க் (Duisburg), கோலோன் (Cologne). | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland). | 13 இரவு 'பாம்பர்' விமானங்கள். | ...... |
| கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre). | ...... | ...... |
| விரோதி விமான நிலயங்கள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | ...... | ...... |
| துறைமுகங்களிலுள்ள கப்பல்கள், ஒரு விமான நிலயம்.—நார்வே (Norway). | ...... | ...... |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| சுங்கவரி ஜிலாகா, மோட்டார் போக்குவரத்து தொழிற்சாலைகள்.—பார்டியா (Bardia), டெர்ணு (Derna). | ...... | கஸ்டம் ஹவுஸுக்குச் சேதம். |
| ரயில்வே ஸ்டேஷன்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | நாசமாக்கப்பட்டது. |
| மோட்டார் போக்குவரத்து.—பெங்காஸி (Benghazi)க்குப் போகும் கடற்கரைப் பாதை. | ...... | பீரங்கியால் தாக்கப்பட்டது. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **12—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| விமான நிலயங்கள், தரையிலிருந்தும் விமானங்கள்.—கடானியா (Catania), ஜெர்டயின் (Gerdine). | ... | 1 விமானம்; தரையிலிருக்கும் பல விமானங்கள் சேதமாயின. |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப் படை.—யுத்தரங்கம் பூராவும். | ... | ...... |
| விமானப் போர்கள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்தரங்கம் பூராவும். | 35 விமானங்கள். | 43 விமானங்கள். |
| **13—8—41.** (புதன்கிழமை). | | |
| **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| சாயந்திரம்.—கப்பல் கட்டுமிடங்கள், கப்பல்.—லெட்ரெயிட் (Letrait). | ... | 1 யுத்தக் கப்பல் தாக்குண்டது. |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| கவர்ன்மெண்ட் கட்டடங்கள்.—விமானம் சுடும் பீரங்கிகள் வைத்துமிடம்—ட்ரிபோலி (Tripoli). | ... | ...... |
| விரோதி மறையும் பள்ளங்கள், கட்டடங்கள்.—வுலிஃபிட் (Wolchefit). | ... | ...... |
| ராணுவ நிலயங்கள்.—கோண்டார் (Gondar). | ... | ...... |
| **கிரீஸ் (Greece).** | | |
| காரின்த் (Corinth) கால்வாய்.—கிரீஸ் (Greece). | ... | ...... |
| **கிரீட் (Crete).** | | |
| விமான நிலயம்.—ஹெராக்லியான் (Heraklion). | ... | ...... |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| ஸப்மரைன் (Submarine) தளம்.—அகஸ்டா (Augusto.) | ... | துறைமுக மேடை மட்டில் தீ மூட்டப்பட்டது. |
| சைனிய வாஸஸ்தலம்.—ஸிராக்கூஸ் (Syracuse). | 1 விமானம் | தீக்கள் மூட்டப்பட்டன. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **13—8—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| காலாட்படை, விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள். ஆகாய சிறு சண்டைகள்.—யுத்தரங்கம் பூராவும். | 27 விமானங்கள். | 74 விமானங்கள். |
| **14—8—41.** (வியாழக்கிழமை). | | |
| **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—விமான எதிர்ப்பு—வட பிரான்ஸின் கடற்கரையில். | 3 பகல் 'பைடர்' விமானங்கள் | 13 பகல் 'பைடர்' விமானங்கள். |
| கப்பல் துறைகள்.—போலாயின் (Boulogne). | ...... | ...... |
| ஒரு ஸப்ளை கப்பல்—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால். | 1 விமானம். | மூழ்கடிக்கப்பட்டது. |
| இரவில்.—கைத் தொழில்கள் போக்குவரத்துகள்—ஹனோவர் (Hanover), பிரன்ஸ்விக் (Burnswick), மாக்டிபர்க் (Magdeburg). | ...... | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| கப்பல் துறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam), போலாயின் (Boulogne). | 12 விமானங்கள். | ...... |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| நாசகாரிகளால் துணை புரியப்பட்ட 5 வியாபாரக் கப்பல்கள்—மத்தியதரைக் கடலில் (Mediterranean). | ...... | 3 கப்பல்களும் 1 நாசகாரியும் தாக்கப்பட்டன. |
| **ஸிஸிலி (Sicily)** | | |
| கப்பல்கள், சாமான் ஏற்றும் வண்டிகள். சாமான்கள், இருப்புப் பாதை மோட்டார் போக்குவரத்து—கடானியா (Catania). | ...... | பலத்த சேதம். |
| ரயில் வண்டிகள் நிற்குமிடம்—அகஸ்டா (Auguste). | ...... | ...... |
| விமான நிலயங்கள்—ஜெர்பினி, (Gerbini), டிரபானி (Trapani). | 2 விமானங்கள். | ...... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| விரோதி சைனியம், விமான நிலயத்திலிருந்தும் விமானங்கள்—யுத்தப் பிரதேசம் பூராவும். | 11 விமானங்கள். | 26 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**15—8—41.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| இரவில்.—கப்பல்கள், கப்பல் துறைகள்.-ப்ரெஸ்ட் (Brest). | ...... | ...... |

ஸிஸிலி (Sicily).

| | | |
|---|---|---|
| ரயில்வே ஸ்டேஷன் சுங்கவரி இலாகா கட்டடங்கள், கடைகள்—கடானியா (Catania). | ...... | வெடிகளும், தீயும் கிளம்பின. |
| துறைமுகம்.—ஸிராகூஸ் ... | ...... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விமான நிலயங்கள்—பெர்கா (Berka), பெனினா (Benina). | ...... | தரையிலிருந்த விமானம் சேதமாக்கப் பட்டது. |
| துறைமுகம்—பார்டியா (Bardia) ... | ...... | ...... |
| துறைமுகம், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| விரோதி பீரங்கிகள் இருக்குமிடம்.—டோப்ருக் (Tobruk)கில் நம் நிலயங்களுக்குக் கிழக்கில். | ...... | பீரங்கிகள் அடக்கப் பட்டன. |
| விமானப் போர்—காம்பூத் (Gambut) ... | ...... | 1 விமானம். |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விரோதி சைனியமும், விமான நிலயத்தில் இருக்கும் விமானங்களும்,—யுத்தரங்கம் பூராவும். | 24 விமானங்கள். | 29 விமானங்கள். |

ஜெர்மனி (Germany).

| | | |
|---|---|---|
| பெர்லின் (Berlin) | ... நஷ்டமில்லை. | சேதமாக்கப்பட்டது |

**16—8—41.** (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), பிரெஞ்சுக் கடற்கரை (French Coast), வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| இருப்புப்பாதை மூலம் போக்குவரத்துகள், விமான நிலயம்—ஸெயின்ட் ஓமர் (St. Omer)க்கு அருகாமையில். | 4 பகல் 'பைடர்' விமானங்கள். | 19 பகல் 'பைடர்' விமானங்கள். |
| ஒரு பாராக்கொடுக்கும் கப்பல்—ஹாலந்து (Holland) கடற்கரைக்கப்பால். | 1 விமானம். | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**16—8—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| இரவில்.-உற்பத்திசாலைகள்—கோலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel Dorf), டூயிஸ்பர்க் (Duisberg). | ......, | ...... |
| கப்பல் துறைகள்-ராட்டர்டாம் (Rotterdam), ஆஸ்டெண்டு (Ostend). | 13 விமானங்கள். | 1 விமானம். |

ஸிஸிலி (Sicily).

| | | |
|---|---|---|
| துறைமுகம், ரயில்வண்டிகள் பாதை மாறுமிடங்கள்—ஸிராகூஸ் (Syracuse). | ...... | துறைமுகம் பூராவும் தீப்பிடித்தது. |
| சைனியம் வசிக்குமிடங்கள்—காப்பஸாரோ (Cap Passaro). | ...... | ...... |
| கடல் விமானங்கள்-ஸிராகூஸ் (Syracuse) துறைமுகத்தில். | ...... | 1 கடல் விமானம் நாசமாயிற்று; இன்னும் அநேகம் சேதமாயின. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| கோட்டைகள், கட்டடங்கள், மறைந்துள்ள பள்ளங்கள்—வுல்ஷிபிட் (Wolchefit), டெபரெக் (Debarech). | 1 விமானம். | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விரோதி சைனியம், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்—யுத்தரங்கம் பூராவும். | 12 விமானங்கள். | 19 விமானங்கள். |

**17—8—41.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—அநேக விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய்கள் (English Channel), வட பிரான்ஸ் (France). | 2 பகல் விமானங்களும் 1 பகல் 'பாம்பர்' விமானமும். | 7 'பைடர்' விமானங்கள். |
| விரோதி 'டாங்கி'ப்படை—டோக்வட் (Touquet) க்குப்பால். | ...... | நோக்கத்தாக்கப் பட்டது. |
| இரவில்-துறைமுகம்—ப்ரெமன் (Bremen). | ...... | சேதமாயிற்று. |
| உற்பத்திசாலைகள்—டூயிஸ்பர்க் (Duisberg). | ...... | தீப்பிடித்தது. |
| இதர லக்ஷியங்கள்—ஜெர்மனி (Germany)க்கு மேற்கிலும், வடமேற்கிலும். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **17—8—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள், ரயில்வண்டிகள் பாதை மாறுமிடங்கள்—பெங்காஸி (Benghazi). | ...... | வெடிகளும் தீயும் கிளம்பின. |
| | துறைமுகம், கோட்டை—ட்ரிபோலி (Tripoli) | ...... | ...... |
| | விரோதி சாதனங்கள், கட்டடங்கள் பாஸிஸ்டு (Fascist) முக்கியஸ்தலம்.—வுல்சிபிட் (Wolchefit), டெபரெக் (Deberech), கோண்டார் (Gondar), அபிஸீனியா (Abyssinia) பிரதேசங்கள். | 2 விமானங்கள். | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி யந்திர சாதனப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, விமான நிலையங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்தரங்கம் பூராவும். | 18 விமானங்கள். | 22 விமானங்கள். |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | எண்ணெய் சுரங்கப் பிரதேசம்.—போலஸ்டி (Polesti). | ...... | தீப்பிடித்தது. |
| | **கருங்கடல் (Black Sea).** | | |
| | விரோதி போக்குவரத்துக் கப்பல்கள்.—கருங்கடல் (Black Sea). | ...... | 2 போக்குவரத்துக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மற்றொன்று தீப்பிடித்தெரிந்தது. |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | விரோதி வியாபாரக் கப்பல்கள் துணையுடன் கூடிய எண்ணெய் கப்பல்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ...... | 2 கப்பல்களும், எண்ணெய் கப்பலும் பூராவும் நாசமாக்கப்பட்டன. |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **12—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | பகலில்.—வேல்ஸ் (Wales)ன் தென்பாகம் கிழக்கு ஆங்கிலியா (East Anglia). இங்கிலாந்தி (England)ன் வடமேற்கு பாகம். | ...... | ...... |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தின் (England) நடுப்பிரதேசங்களும், கிழக்குப் பாகமும். | ...... | சேதம். சிலருக்குக் காயம். |
| | **ஸைப்ரஸ் (Cyprus).** | | |
| | நிகோஸியா—(Nicosia), பாமகுஸ்டா (Famagusta). | ...... | சேதமில்லை, ஒருவருக்கும் காயமில்லை. |
| **13—8—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்குக் கரை. | ...... | ...... |
| | இரவில்.—எங்கும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **ஸைப்ரஸ் (Cyprus).** | | |
| | நிகோஸியா (Nicosia) ... | ...... | ஒருவர் கொல்லப்பட்டார்; 3 பேருக்குக் காயம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். ... | ...... | 7 பேர் கொல்லப்பட்டனர்; 9 பேருக்குக் காயம். சேதம் — இல்லை. |
| **14—8—41.** (வியாழக்கிழமை). | | | |
| | தகவலில்லை. | ...... | ...... |
| **15—8—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓர் இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) | ...... | சேதமில்லை. ஒருவருக்கும் காயம் இல்லை. |
| | **ஸைப்ரஸ் (Cyprus).** | | |
| | நிகோஸியா (Nicosia) ... | ...... | 22 பேர் காயமடைந்தனர். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—8—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow) ... | விரட்டப் பட்டது. | சேதமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) 4 தடவைகள் ... | ...... | சொற்பச்சேதம். |
| **16—8—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்கு, கிழக்குப் பாகங்கள். | 1 'பாம்பர்' விமானம். | சிறிது சேதம்; சிலருக்குக் காயம். |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்கு கிழக்குக் கரைகள். சில இடங்கள்.—நடுப்பிரதேசங்கள் ... | ... ... | ... சிறிது சேதம்தான். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow) ... | 1 விமானம். | விரட்டப்பட்டது. |
| **17—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசங்கள்-இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, தென் மேற்குப் பாகங்கள். | ... | சிறிது சேதம்; சிலருக்குக் காயம் தான். |
| | ஹல் (Hull) ... | 1 'பாம்பர்' விமானம். | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | கப்பல்கள்.-எகிப்து (Egypt) கடற்கரைக் கப்பால். | ... | சேதமில்லை. |
| | **அட்லாண்டிக் (Atlantio).** | | |
| | பிரிடிஷ் துணைக்கப்பல்கள்.—அட்லாண்டிக் (Atlantic) | 1 விமானம். மற்றொன்று சேதம். | ஒரு கப்பலுக்கும் சேதமில்லை. |
| **18—8—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓர் இடம்—வட கிழக்கு... ஸ்காத்துலாந்து (Scotland). இரண்டு இடங்கள்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ... ... | ... சிலருக்குக் காயம்; சிலர் கொல்லப்பட்டனர். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | சேதமில்லை. |



# யுத்தக் குறிப்புகள்.

**மாரி காலத்திற்குள் சமாதானமாம்.** மாரி காலத்திற்குள் ஜெர்மன் வில்ஹெல்ம் ஸ்ட்ராஸி, ஜெர்மன் அரசாங்கம், ஜெர்மானியர் யாவரும், சமாதானம் நிச்சயமாக ஏற்படுமென்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள் என்று தெரியவருகிறது! சாமர்த்தியமாகவும், விடாமலும் செய்துகொண்டிருக்கும் பிரசாரம்தான் இதற்குக் காரணம். (இப்பிரசாரமெல்லாம் சம்பந்தமல்லாதது வெறும் பொய்). மேலும் நம் விரோதிகள், நம்மாலும் மற்றுமுள்ள நாடுகளாலும் சந்தேகப்பட்ட விஷயங்களை சர்வ நிச்சயமென்று எண்ணும் விசித்திர ஸ்வபாவம் கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்ய யுத்தத்தைப்பற்றி ஜெர்மன் பொதுமக்களுக்கு அதிகாரிகள் விஷயசமர்ப்பணம் செய்யும் விதத்தை சற்று ஆராய்வோம்:—

ருஷ்யாவோடு சண்டை ஆரம்பித்தபொழுது, ஏதோ சுலபமாக, ருஷ்யாவில், ஜெர்மன் சைனியம் முன்னேறி நடத்திச் செல்லலாம் என்று சொல்லப்பட்டனர். இவ்விதமாக வெற்றிகரமாக லெனின்கிராட், மாஸ்கோ, பட்டினப் பிரவேசம் செய்யும்போது கட்டாயத்தின் பேரில் ருஷ்யர்கள் தாங்களாகவே ஒப்பந்தத்துடன் சமாதானம் செய்ய முன்வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஜெர்மனி புது திட்டத்தை ஐரோப்பாவில் ஸ்தாபிக்க ஐரோப்பிய நாடுகள் முழுவதும் ஒன்று சேரும் என்றும் போல்ஷிவிஸம் முற்றிலும் ஒழிக்கப்படும் என்றும் சொன்னதை ஜெர்மானியர் ஒப்புக்கொண்டு நம்பியிருந்தனர். ஏனென்றால் ஐரோப்பாவுக்கே ஜெர்மனி ஏதோ பெரும் உதவி செய்திருக்கிறதாம்.

அப்படி அற்பமாக நினைத்ததால் ஜெர்மன் சைனியங்களுக்கு அபார கஷ்டங்கள் உண்டாகியிருப்பதை ஜனங்கள் உணர்ந்தவுடன், அதிகாரப் பிரசாரகர்கள், பொது மக்களின் ஏமாந்த அபிப்பிராயத்தை "மாரி காலத்திற்கு முன் சமாதானம்" என்று வழிக்குத் திருப்புகின்றனர். உதாரணமாக ஜூலை 20-ம் தேதி டாஸ்ரீஷ் என்ற பத்திரிகை ருஷ்யச் சைனியம் "மறைவில் பதுங்கிப் பாய்வது" என்ற முறையைக் கையாண்டிருப்பதாகக் காலதாமதத்திற்குக் காரணம் சொல்லிற்று. ஜூலை 27-ல் பிராங்க் புர்டர், ஜீடங், ஜெர்மன் பான்ஸர் படை தன் பின்புறத்தை எப்பொழுதும் காபந்து செய்து கொண்டு, 'அலைகளுக்குச் சமமான ருஷ்யப் படையுடன் சண்டை செய்ய வேண்டியிருப்பதாக', மற்றொரு காரணத்தை வர்ணித்தது. அதே தினம், பெர்லினில் உள்ள போர்ஸன் ஜீடங் பத்திரிகை, "ஜெர்மன் மோட்டார் படையாலும், டாங்கிகளாலும் இம்முறை சண்டை செய்தால் மட்டும் போதாது. பூராவான ஜெர்மன் சைனியத்தை ருஷ்யர்கள் சண்டையில் ஈடுபடும்படி செய்கின்றனர்" என்று ஒத்துக்கொண்டு சொல்லிற்று. இந்தச் சமயம் அநேகமாக மோட்டார் உதவியில்லாத காலாட் படையும், குதிரையிழுக்கும் வண்டிகளும், யந்திரங்களும்தான் ஜெர்மானியர் உபயோகித்தனராம். ஆகவே காலதாமதமாம்.

இப்படி விபரீதப் பிரசாரத்தை யாராவது நம்புவார்களா? ஜெர்மனியில் நம்பினார்கள். சண்டையில் சைனியம் வேகமாகப் பாய்ந்து சுலபமாக வெற்றியடையும் என்று எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, ராணுவத்தின் அராசாட்சிக்குப் பயந்த ஜெர்மானியர் தங்கள் பொருள்கள் யாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். மேலும் அமெரிக்காவுடன் சண்டை செய்யவும் எந்த நேரத்திலும், நடுநிலை வகிப்பவர்கள் மேல் புதிதாகப் படையெடுக்கவும், ஜனங்கள் தயாராக இருக்கிறார்களென்று பொய் பிரசாரம் செய்து சண்டையை மேலும் நடத்துகிறார்கள். ஆனால் வெளிப்படையாக குளிர் காலத்திற்குள் சமாதானம் ஏற்படும் என்றும் சொல்லுகிறார்கள்!

உண்மையென்னவென்றால், யுத்தம் ஆரம்பித்தமுதல் ஒவ்வொரு ஜெர்மானிய ஸ்திரீ புருஷனுக்கும் சமீபத்திருக்கும் சமாதானம் மிகவும் விரும்பத்தக்க லக்ஷியமாக இருக்கிறது. ஜனங்களுக்கு ஒரு பக்கம் வெறுப்பும் மற்றொரு பக்கம் நம்பிக்கையும் விபரீதமாகச் சேர்ந்து இருக்கிறது. போலந்து, கிரீஸ், கிரீட், முதலிய இடங்களில் அடைந்த வெற்றிகள்கூட கொஞ்சமும் உண்மையான உத்ஸாகத்தை அளிக்கவில்லை. மற்றநாடுகளைக் கொள்ளையடிக்கவும் அதனால் உண்டாகும் கௌரவத்தையும் விரும்பாமல் மாரி காலத்திற்குள் சமாதானம் வந்தால் போதுமென்று நோக்குகிறார்கள். ஏனென்றால், ஆரம்ப காலங்களில் வெற்றிபெற்றாலும் சொல்லப்பட்டதற்கு அதிகமாக ஜெர்மனி நஷ்டம் அடையும் என்று அறிந்துகொண்டிருக்கலாம். ஆகையால் சண்டையை முடிக்கவே மனப்பூர்வமாக நினைக்கிறார்கள். ஆனால் ருஷ்யப்போரில் தோல்வி ஏற்படும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லைபோலிருக்கிறது. அதை எதிர்பார்த்திருந்தால் சண்டை அடுத்த வருஷத்திலும் நீடித்து தொடரும் என்று அறிவார்கள். அது தோன்றாது செய்தது பொய்பிரசாரத்தின் பயன்தான்!

இவ்விதமாக இனி மீளமுடியாது என்ற பயங்கரத் தோற்றத்தை ஜெர்மானிய ஜனங்கள் மாத்திரம் அறியவில்லை என்பதுஅல்ல, ஜெர்மன் அரசாங்கமே மாரி காலத்திற்குள் சமாதானத்திற்குவேண்டிய ஏற்பாட்டை செய்கிறதாகத் தெரிய வருகிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ருஷ்ய யுத்தத்திற்கு 6 வாரம் முடிவு கட்டியிருந்தனர். அதை 3 மாதங்களுக்கு விருத்திசெய்தும், மாஸ்கோ பிடிபட்டால் ருஷ்யா முழுதும் தங்கள் வசமாகுமென்றும் ஸோவியத் அரசாங்கம் போய்விடும் என்றும் நினைக்கிறார்கள். ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, பத்திரிகைகளின் பெர்லின் நிருபர்கள், இனிமேல் ருஷ்யாவில் செய்யவேண்டிய அரசாங்க திட்டம் ஜெர்மனியில் போடப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். ஜெர்மன் ஸர்க்கார் கடிதங்களில் ருஷ்யாவின் பெயரைமாற்றி ஜெர்மனியின் 'கிழக்கு மாகாணம்' என்று புதுப்பெயரைச் சொல்லுகிறார்களாம்!

உண்மையில், ஜெர்மானியரின் மனது மாரி காலத்திற்குள் பூர்ணவெற்றி அடையுமென்ற ஆத்ம நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதனால்தான் சமாதானத்தையும் எதிர் பார்க்கிறது. ஆனால் நேசதேசத்தவரான நாம் ஹிட்லர் திட்டப்படி மாரிகாலத்திற்குள் சமாதானம் ஏற்படாமல் தடுத்துவிடுவோம். அப்பொழுதுதான்



ஜெர்மனியில் சண்டையில் வெறுப்பினால், யுத்தம் போதுமென்ற எண்ணம் உண்டாகி ரகசியப் போலீஸினாலும் கண்டுபிடிக்க முடியாதபடி மாறுதலடையும்!

வி வி வி வி வி

**வலுவான தற்காப்பு.** ருஷ்ய ராணுவ அதிகாரிகள், ஜெர்மன் மின்னல் படையை எதிர்க்கப் போதுமான தற்காப்பு செய்திருக்கிறார்களோ இல்லையோ, தற்சமயம் கையாண்டுவரும், "ரப்பர் போல் வளையக்கூடியகட்டு, வலை" போன்ற முறை ராணுவ சாஸ்திரத்தின்படி அதிக சக்திவாய்ந்ததுதான். ஸினிமாப்படம் காண்பித்தால்தான் ருஷ்ய சைனிய நிலைமை சரியாகத் தெரியவரும். பால்டிக் கடலுக்கும் கருங்கடலுக்கும் நடுவில் ஒரு பெரும் சர்ப்பம்போல் வளைந்து காணப்படும். இவ்விதமான வில்போன்ற நூதன சைனிய அணிவகுப்பு உலகத்தாருக்கு வியப்பை அளித்திருக்கிறது. ஜெர்மனியிலோ சேனைத் தலைவர்களுக்கும் பிரசாரகர்களுக்கும் திகிலைச் செய்திருக்கிறது.

இருந்தாலும் ஜெர்மானியர் கைஓங்கி இருக்கிறது. ருஷ்யர்கள் யூக்ரேனின் தென்பாகத்தில் சற்று பின்வாங்கி யிருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் சைனியம் முறியடவில்லை. ஜெர்மானியர் சண்டைக்கென்று முன்ஜாக்கிரதையாக ஏராளமான தயாரிப்பு செய்திருந்தால் இந்நிலைமை இன்னும் கொஞ்சநாள் இருக்கத்தான் இருக்கும். ஆனால் ஜெர்மானியர் அபிப்பிராயப்படி அவர்கள் திருப்தி அடையக் கூடிய ஒருவித லாபமும் அடையவில்லை. ஏனென்றால் சண்டை ஆரம்பித்து 7 வாரங்கள் ஆகியும் முதல்தரமான பிரதேசமோ, ராஜீய முக்கியத்வம் வாய்ந்த இடமோ அவர்களுக்குக் கிட்டவில்லை.

வி வி வி வி வி

**ஒடெஸ்ஸா.** ஜெர்மன் குறிப்பிலிருந்து, லெனின்கிராட், மாஸ்கோ, கீவ் முதலிய இடங்கள் எடுக்கப்பட்டு, ஒடெஸ்ஸாவைக் கைப்பற்றுவதில் மும்மரமான வெற்றியடையப் போவதாக ஜெர்மன் பொதுமக்கள் ஆசை காட்டப்படுகின்றனர். ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் பிடிக்க முடியாதபோனாலும், முக்கியமான ருஷ்யத் துறைமுகமான ஒடெஸ்ஸாவிலிருந்து போக்குவரவு சாதனங்களைத் தடைசெய்ய ஜெர்மன் சைனியம் முழுபலத்துடன் பெரும் முயற்சிகளைச் செய்கின்றன.

ஒடெஸ்ஸா எதிரி வசமாவதில் 2 விஷயங்களைக் கவனிக்கவேண்டும். முதலாவதைப்பற்றி சென்ற வாரம் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதாவது யூக்ரேனில் ஏற்கனவேயே ஜெர்மன் எண்ணங்கள் மங்கிப்போயின. இவர்கள் கைப்பற்ற வேண்டுமெனத் தீர்மானித்திருந்த வெள்ளாமை விளைச்சல்களை ருஷ்யர்கள் கிழக்கே அப்புறப்படுத்திவிட்டனர். இரண்டாவதாக, ஒடெஸ்ஸா போனதால் யூக்ரேன், பூராவும் விரோதி வசமாகாது. ஏனென்றால் நீபர் என்ற நதி அப்பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து எதிரிக்கு இயற்கைத் தடையாக இருக்கிறது.

இவைகளைத் தவிர மூன்றாவதாக விரோதிக்குக் கஷ்டம் விளைவிக்கக்கூடியது மற்றொன்றிருக்கிறது. யூக்ரேனில் உள்ள ஜனங்கள் ருஷ்ய கவர்ன்மெண்டிற்கு விரோதமாக இருப்பார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அநுபவத்தில் ஒரு துரோகிகூட தென்படவில்லை.

வி வி வி வி வி

**ஜப்பான்.** இதுவரை, பிரிடன், அமெரிக்க அரசாங்கங்களிலிருந்து அதிகார பூர்வகமாக பேச்சு வார்த்தை ஒன்றும் அனுப்பப்படாமல் இருப்பதாலும், பொருளாதார விஷயமாக இந்த இருநாடுகளும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் தாத்பரியத்தை ஜப்பானுடைய ஆக்கிரமணச் செய்கையைத் தடுத்ததாகத்தான் உணரவேண்டும். இந்த நடவடிக்கைகள் இந்தோ-சைனாவுக்குள் ஜப்பான் பிரவேசித்த பொழுது எடுக்கப்பட்டன. 15 தினங்களாகத் தாய்லாந்தைக் குறித்து சில பத்திரிகை புகழ்ச்சிகளைத் தவிர ஒன்றும் தெரியவே இல்லை. ஆனால் மஞ்சூரியாவிலும், வடக்குக் கொரியாவிலும் சைனியத்தைப் பலப்படுத்துவதையும், சைனாவை எதிர்ப்பதைப் பற்றியும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

நிச்சயமாக தாய்லாந்திற்கு ஆபத்து சமீபத்தில் தானிருக்கிறது. அதன் சைனியம் மிகவும் சிறியது. 50,000 பேர்தான் கொண்டது. ராணுவ சம்பாரங்களும் அதிகம் இல்லை. மேலும் 50,000 பேர் கொண்ட ஜப்பானியப்படை கம்ராண்குடா, சைகோன் முதலிய இடங்களில் இறங்கிவிட்டது. தாய்லாந்திற்குச் சொந்தமான 8 விமான நிலயங்களையும் கைப்பற்றிவிட்டது. அவைகளில் பாங்காக்குக்கு 250-மைல் தூரத்தில்தான் ஸாக்ட்ராங் என்ற தாய்லாந்தின் விமான நிலயம் உள்ளது. வடகிழக்கு நோக்கி ஜப்பான் செல்லுவதெல்லாம் ஜப்பானிய அரசாங்கத்தார் சொல்லும் விதமாக பாசாங்கானால், தாய்லாந்து மாத்திரமன்றியில் சிங்கப்பூருக்கும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் ஆபத்து வரும்; அப்பொழுது அவர்கள் சேமித்து வைத்திருக்கும் சைனியங்கள் வீணாகாது.

தாய்லாந்திலுள்ளோர் போர் புரிவார்களென்று, நாம் கேள்விப்பட்டபடி, செய்தால் நேசதேசங்களும் பூர்ண உதவியைக்கொடுப்பார்கள். சென்ற ஒரு வருஷ காலமாக சிங்கப்பூரிலும், பர்மாவிலும் பலப்படுத்தியதிலிருந்து நேச தேசத்தார்கள் சொல்லுவது வெறும் வார்த்தையாகாது. அதிகார முறையில் கணக்கு எடுத்தபடி சிங்கப்பூரிலுள்ள விமானப்படை நிச்சயமாகப் பெரியது, இதற்கு எதிராக ஜப்பானியர் கொண்டுவருவது மிகவும் சிரமம். அதே மாதிரி சைனியமும் சாம்ராஜ்யத்தின் இருபக்கங்களிலிருந்து வந்து சில மாதங்களாகக் குவிகின்றன. பர்மாவும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. டச்சு அரசாங்கத்தாரின் தயாள குணமும், தைரியமும் 'பொது க்ஷேமத்திற்குஎன்று பாசாங்கு செய்யும் ஜப்பானின் ஆக்கிரமத்தைத் தடுப்பதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறதைத் தெரிவிக்கின்றன.



ஒரு கழுதை சுமக்கும் பாரமுள்ள தங்கத்தினால் எந்தப்பெரிய பட்டிணத்தையும் லஞ்சம் கொடுத்து பிடித்துவிடலாமென்று ஒரு பழைய ரோம வீரன் சொன்னதாக ஞாபகம். அவன் நவீன நாஸியை அனுசரித்தவனாக இருக்க வேண்டும். ஏனென்றால் ரோம வீரனும், நவீன நாஸியும் ஜனங்களின் பொருள் மதிப்புள்ள லஞ்சம், ராஜ்ய விஷயத்தில் பெருந் தந்திரக் கருவியாகக் கருதுகின்றனர். இவ்விதமாக நாஸி ஏமாற்றலுக்குட்பட்டு ஒவ்வொருவனும் 'புதுத் திட்ட' சம்பந்தமாக அநுதாபம் காட்டுவதாயும், ஆச்சரியப்படுவதாயும் ஜெர்மன் பிரசாரகர்கள் சொல்லுவதெல்லாம் லஞ்சம் பெற்றவர்கள் முறையாகத்தான் இருக்கிறது.

உதாரணமாக, சீர்கெட்ட ரஷீத் ஆலியை எடுத்துக்கொள்ளுவோம். ஜூலை மாதம் 4-ம் தேதி பாக்தாத் நகரத்தில் வெளியான ஒவ்வொரு பத்திரிகையும் அவனுடையவும், அவன் கூட்டத்தாரின் கெட்ட நோக்கங்களைப் பிரசுரித்தன. அவனுக்கு பதிலி ராஜீய நிர்வாகி 7 வாரங்களுக்குள் பொக்கிஷத்திலிருந்து தனக்குச் சேரவேண்டியதற்கு அதிகமாக 80,000 ரூபாய்கள் பெற்றுக் கொண்டான். ரஷீத் ஆலியும் வரவேண்டியதைவிட 10 மடங்கு அதிகமாகவே எடுத்துக்கொண்டான். ஜயாம் காஸிம் மாக்ஸத் என்பவன் செலவழித்ததற்குக் கணக்குக் கொடுக்காமலே 1½ லக்ஷ ரூபாய் செலவழித்தான். அராபிய சர்வாதிகாரியும் அவனது நண்பனுமான யூனூஸ் ஆல்ஸாபி தலைகால் தெரியாமல் ஓடும் பொழுது போலீஸ் வசம் 16 லக்ஷ ரூபாய்கள் வந்தது.

இவ்விதமான உண்மை நடப்புகள் இராக்கின் முந்தின அரசாங்கத்தைக் குறித்து இராக்கிலுள்ளவர்களின் தப்பு அபிப்பிராயத்தை மாற்றிவிடும். மேலும், இப்பொழுது எல்லாம் ஒழுங்காக இருக்கிறதென்று அவர்கள் நினைப்பதும் சரிதான். (ஜெர்மானியர் மாத்திரம் இப்பொழுதும் அபாண்டமாக தூஷணைக் கதைகளைக் கட்டுகிறார்கள்). ராஜவிச்வாஸமுள்ள ஜமீல் மட்பை இப்பொழுது ராஜ்ரீயத்தில் முழு அதிகாரம் பெற்றிருக்கிறான். சரியான பிரதிநிதி அமைக்கப் பட்டவுடன், மீர் அப்துல் இல்லாவின் ராஜீயச் செய்கைகள் 1930-ம் வருஷத்திய உடன்படிக்கைபடி கட்டுப்பட்டிருக்கின்றன.

இதற்கிடையில், பிரிட்டிஷ் தூண்டுதலின் பேரில் அங்கே 'சமாதானக் குறைவும், பொதுமக்களைக் கொலைசெய்வதுமாக' இருக்கின்றன என்று ஜெர்மானியர் கட்டிவிடுகிறார்கள். இது அங்கே பாக்தாத் பொதுச் சட்டப்படி மகமத் இபன் ஆயுப், இப்ராஹிம் இபன் ஜஸிம், ஸலா ஓமார் அல் நஜ்ஜர் என்றவர்களைத் தூக்கிட்டதைக் குறிக்கலாம். ரஷீத் ஆலி, இரானுக்கு ஓடுவதற்கு முன்னால் பாக்தாத் போலீஸைத் திருப்பி அழைத்து விட்டதால் இவர்கள் கண்டபடி துணிச்சல் கொண்டனர். அதனால் இவர்கள் சிக்ஷிக்கப்பட்டனர். மேலும் இவர்களை ராணுவ நியாய சபையில் தண்டிக்கவில்லை.

வி வி வி வி வி

சமயத்திற்கேற்றவாறு ஜெர்மானியர் செய்யும் சமாதான ஆக்கிரமணத்தைப் பற்றி, இரானுக்கு சென்ற பத்திரிகையில் எச்சரித்திருக்கிறோம். பெர்லினில்

1939-ம் வருஷம் மார்ச்சு மாதம் 9-ம் தேதி தென் அமெரிக்காவில் ஜெர்மனியின் நோக்கங்களைப்பற்றி ஜெனரல் வாபல் என்பவர் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு இருக்கிறது. "தென் அமெரிக்காவில் ஜெர்மானியப் படிப்பாளர்களையும், விஞ்ஞான சாஸ்திரிகளையும், பாஷாப்பிரவீணர்களையும் (முக்கியஸ்தர்களாகப்) புகுத்தி அமெரிக்கப் பிரசாரத்தை தடுக்கவேண்டும். ரேடியோ, பத்திரிகை, ஸினிமா முதலியவைகளும் உபயோகிக்கப்படவேண்டும்".

இவ்விதமாக அமெரிக்க நாடுகளுக்குள் பிளவை ஏற்படுத்துவது ஜெர்மன் ஆதிக்கத்தை தென் அமெரிக்காவில் ஸ்தாபிக்க பூர்வாங்கமாக ஆகும்.

சமீபத்திலும் ஜெர்மானியர் வாயால் சொல்லுவதைக் காரியத்தில் செய்து காண்பிக்கிறார்கள் என்பதற்கு பல திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. ஆனால் இவையாவும் முடிவில் ஹிட்லருக்கு மனத்தாங்கலாகத்தானிருக்கும்.

1. அர்ஜென்டைனாவிலுள்ள அரசாங்கத்தார், போலீஸ்காரர்கள் கைப்பற்றிய சில யாதாஸ்துகளிலிருந்து, பெரு—பொலிவியா சண்டை, நாஜி ஏஜெண்டுகளால் நேர்ந்திருக்கலாமென்கிறார்கள்.

2. பொலிவியப் போலீஸ்காரர்கள் ஆகஸ்டு 1-ம் தேதி கலகத்திற்குச் சித்தமான சில திட்டங்களைக் கண்டு பிடித்தனர். ஜெர்மன் மந்திரியான ஹெர் வெண்ட்லர் உடனே வெளியேற்றப்பட்டார்.

3. ஆண்டர் ரியோஸ் என்ற மகாணத்தில் நாஜிச் சூழ்ச்சியைக் கண்டு அர்ஜென்டைனா மந்திரி சபை கோபம் கொண்டது. பரஸ்பர ராஜீய சம்பந்தத்தை ஜெர்மனியுடன் ரத்துசெய்துவிடப்போவதாகச் சொன்னதும் ஜெர்மானிய ஸ்தானாதிபதி அச்சுநாட்டுப் பிரசாரம் செய்யவில்லை என்று ஒப்புக் கொண்டார்.

4. ஆகஸ்டு 7-ல் உருகுவே கவர்ன்மெண்டு, 6 அச்சு நாட்டுக் கப்பல்களை அமெரிக்காவில் சமாதான நிலையைக் காப்பாற்ற நடுநிலை நாடுகளுக்கு வாடகைக்கு கொடுத்தது. (யுனைடெட் ஸ்டேட்ஸுக்குத்தான் கொடுத்தது). ஒரு வருஷத்திற்குமுன், குடியரசு நாடுகளில் ராணுவக் குடியேற்றம் செய்ய நாஜிகளால் தயாரிக்கப்பட்ட உபாயத்தையும் வெளிப்படுத்தினர்.

5. பெரு ஸர்க்காரும் ஜெர்மனியுடன் 1925-ல் செய்துகொண்ட ஏற்பாட்டை ரத்துசெய்துவிட்டனர். அதன்படி அரசியல் கடிதங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும் சம்பிரதாயத்தை விட்டுவிட்டார்கள். ஜெர்மானியர் இந்த சௌகரியத்தை துர்விநியோகம் செய்தார்கள்.

6. மெக்ஸிகோ அதிகாரி ஒருவர் அங்கிருக்கும் ஜெர்மன் மந்திரியை, "மெக்ஸிகோவில் ஐந்தாம்படைக்கு முக்கியமானத் தலைவனென்று குற்றம் சாட்டி, ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

7. கொலம்பியாவில் உள்ள போலீஸ் அதிகாரிகள் நாஜிச்செய்கைகளை விடாமல் கவனித்து வருகிறார்கள். ஜெர்மானியரை உள்ளே வரவிடாமல் பார்த்துக்கொள்ளும்படி பத்திரிகைகளும் எச்சரிக்கைச் செய்து வருகின்றன.



இவ்விதமாக தென் அமெரிக்கா பூராவும் நாஜிக் கக்ஷியை அழிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதினால் நாஜிப் புரட்சிகள் புகைந்து போயின. இதற்கு அறிகுறியாக, மார்ச் 21-ம் தேதி ஸாந்தியாகோவில் ஜெர்மன் உள்நாட்டு உத்தியோகஸ்தர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். மேலும் பிரிட்டிஷ்காரர்கள் கடைசியில் வெற்றியடைவார்கள் என்ற நம்பிக்கையால் ஒருவரும் நாஜிகளின் பிரசாரங்களைக் கண்டு பயப்படவில்லை.

---

## "அமெரிக்கா பிரிட்டனுக்கு அனுப்பிய செய்தி"

---

"நீங்கள் தனிமையாகப் போராடவில்லை"

"பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு மிஸ்டர் சர்ச்சிலின் கோரிக்கைக்கு இணங்கியிருக்கிறார்."

சீனாவுக்கும், ருஷ்யாவுக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் செய்யும் உதவி.

[ஹாரி ஹாப்கின்ஸ் லண்டனிலிருந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஜனங்களுக்கு சமீபத்தில் ஒலிபரப்பு மூலம் பேசியது.]

யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜனங்கள் சார்பாக அமெரிக்கா செய்யும் உதவி, வாய்பேச்சு மட்டுமில்லை என்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் சொன்னார். இப்பொழுதும் அமெரிக்கா கொடிகட்டி பறக்கும், பளபளப்பான பழுப்பு நிறமுள்ள அமெரிக்கக் கப்பல்களும், நாசகாரிகளும் வட அட்லாண்டிக்கில் போய்க் கொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் இந்தப் பெரிய சமுத்திரம் அமெரிக்காவையும், பிரிட்டனையும் பிரித்துவைத்திருந்தது. இப்பொழுது அது இரண்டையும் சேர்க்கிறது. இன்றுகூட பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களும், அமெரிக்கா யுத்தக் கப்பல்களும் உலகத்தில் உயிர் நிலையைப் பாதுகாக்கவேண்டிய ஒரே நோக்கத்துடன் எதிர் எதிரே பாராக்கொடுத்து வருகின்றனர்.

லண்டனின் கீழ் கோடியில் தொழிலாளிகள் வீடுகளில் வெடிகுண்டு போட்ட சமாசாரம் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருக்கும்பொழுதும் கவன்டிரி, பிளிமத் என்ற இடங்களில் வெடிகுண்டுகள் போட்டது, அவருக்குத் தெரிந்தபொழுதும், நான் அவருடன் இருந்தேன்.

அப்பொழுது பச்சாதாபத்தோடு அவர் சில வார்த்தைகள் சொன்னார். அவருக்கு ஹிட்லரைத் தொலைக்கவேண்டுமென்ற தீர்மானம் ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டேன். பெர்லினிலுள்ள பாபிஷ்டனை, வெறிபிடித்த ஹிட்லரின் பலத்தைத் தவிர்க்கவேண்டுமென்று உங்கள் பிரதம மந்திரிக்குள்ள அபிப்பிராயம் போல் அவருக்கும் இருக்கிறது.

பிரஸிடெண்டு உத்தரவின்பேரில்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். அவர் எனக்கு இட்ட கட்டளையாவது: "நாம் அனுப்பும் சாமான்கள் பிரிட்டனுக்கு எல்லாம் போய் சேருகிறதா என்றும், பிரிட்டனுக்கு இதுதான் தேவையா என்றும் பார். இதைவிட வேறு பிரிட்டனுக்கு ஏதாவது தேவையா என்பதை எனக்குத் தெரியப்படுத்து.

இதுதான் என் காரியம். அவர் என்னைப்பார்க்கும்படி சொன்ன காரியங்களை நான் தெரிந்துகொண்டேன். முக்கியமான சில சாமான்கள் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டாலும், அமெரிக்கா இந்தத் தீவுக்கு கப்பல் மார்க்கமாய் அனுப்பிய யுத்த சாமான்களில் பெரும்பாகம், இங்குவந்து சேர்ந்திருக்கிறது.

உங்கள் சபை மந்திரிகளிடமிருந்து என்ன இங்கிலாந்துக்குத் தேவையென்று தெரிந்துகொண்டேன். அமெரிக்காவுக்குப் போய் இவையனைத்தைப் பிரஸிடெண்டுக்குத் தெரிவிக்கிறேன். ஜனநாயகத்திற்காக நீங்கள் செய்யும் [illegible]க்கு சில சாமான்கள் தேவையென்று கண்டுபிடித்தேன். அமெரிக்கா அவைகளை உங்களுக்கு அனுப்பக்கூடும் என்பது எனக்கு நம்பிக்கை உண்டு.

நாங்கள் அமெரிக்காவில் 3,000 மைலுக்கு அப்பால் இருந்தாலும் இப்பொழுது, அட்லாண்டிக் மஹா சமுத்திரம் ஒரு சிறு கால்வாய் போல் இருக்கிறது. நமக்குள் ஏற்பட்ட சிநேகிதம், அதற்கு ஒரு பாலமாக இருக்கிறது. அநுதாபமும், மதிப்பும், என்பவைகளை அடிப்படையாகக்கொண்டு அந்தப் பாலம் வாஷிங்டனிலிருந்து கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பாலம் கண்ணுக்குப் புலப்படாமலிருந்தாலும் நாஜியின் கொடுமை இதை அழிக்க முடியாத அவ்வளவு பலமாகயிருக்கிறது.

உங்கள் பிரதம மந்திரியும், எங்கள் பிரஸிடெண்டும் 3,000 மைலுக்கு அப்பால் இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது நமக்குள்ள தூரத்தை மைல் கணக்கில் அளப்பதில்லை. ஹெர் ஹிட்லர் டோவரிலிருந்து 21-மைலில்தான் இருக்கிறார். ஆனால் அவரும் அவருடைய காட்டுமிராண்டி வாழ்க்கையும் பிரிட்டனில் 2,000 வருஷத்திற்கு முன் இருந்த மாதிரி இருக்கிறது.

நான் என்னுடைய தேச நன்மையை உத்தேசித்தும் நமது ஜனநாயக ஆட்சி அழியாமல் இருப்பதில் அக்கறைகொண்டு சொல்லுகிறேன். நமது பிழைப்பும், நமது தேசமும், ஹிட்லரால் மிரட்டப்படுகிறதென்று, அநேக அமெரிக்கர்கள் எண்ணுவதைப்போல் எனக்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. நீங்கள் சண்டையிடுவது உலகத்தாருக்கு ஸ்வதந்திரம் ஏற்படுவதற்காகவென்பது நானும் அபிப்பிராயப்படுகிறேன். உங்கள் சண்டை தோற்காது; தோற்கவும்கூடாது.

குத்தகைக் கடன் மசோதா என்று வழங்கிவரும் மசோதாவைக் குறித்து நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சில காலம் எங்கள் தேசத்திலிருந்து சந்தோஷமும், நம்பிக்கையும் உண்டாக்கக்கூடிய சமாசாரம் அனுப்பப்பட்டிருந்தது. அமெரிக்காவிலிருந்து பிரிட்டிஷ் துறைமுகங்களுக்கு இரக்கமும், நேசப்பான்மையும் காட்டி சாமான்கள் அனுப்பிய கப்பல்கள் வந்தன. அப்பொழுது



கால்பந்தாட்டத்தைப் பக்கத்தில் நின்று விளையாடுபவர்களை உத்ஸாகப்படுத்துகிறவர்கள் போல் எங்கள் தேசம் இருந்தது. அது போதாததுதான். யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரஸிடெண்டு அதை அறிந்து கொண்டார். பச்சாதாபத்தை, வார்த்தைகளால் காண்பிப்பதைவிட ஒரு விமானம் அனுப்பிப்பது நலம். வெறும் புகழ்ச்சியைக் காட்டிலும் நாசகாரிகளை அனுப்புவது விசேஷமென்று அமெரிக்கா கருதிற்று. பிரஸிடெண்டும் அவர் சபை மெம்பர்களும் அவர்கள் செய்யும் பிரசங்கத்திற்காக பிரிட்டனில் புகழப்பட்டாலும், யந்திரங்கள் ஆயுதங்கள், பீரங்கிகள் யுத்தப் பொருள்கள் அமெரிக்காவில் செய்து இங்கு கொண்டுவந்து கொடுக்கப்பட்டால், வெறும் வார்த்தைகளைக்காட்டிலும் பலிதமாகவேயிருக்கும், என்று அவர் கருதினார்.

இதற்காகத்தான் குத்தகைக் கடன் மசோதா ஏற்படுத்தப்பட்டது. எங்களுடைய அநுதாபமும் மதிப்பும் இதன் மூலம் வெளிப்படையாகக் காட்டப்பட்டது. கொடுங்கோல் செய்பவர்களையும், ஜனநாயகத்தை அடிமையாக்கப் பிரயத்தனப்படும் மனிதர்களையும் தாக்க இந்த மசோதா ஒரு ஆயுதம்.

இது வரையில் அமெரிக்கா செய்து வந்த உதவியின் பூரா விவரங்கள் பிரிட்டிஷ் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. எவ்வளவு சாமான்கள் அனுப்பப்பட்டிருக்கிறதென்ற விவரம் பிரசித்தப்படுத்தினால் எதிரிக்கு வேண்டிய முக்கியமான ரகசியங்கள் வெளிப்படும். கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையேயுள்ள உயிர் நிலையான போக்குவரவு சாதனத்திற்குக் கெடுதி நேரிடலாம்.

ஆனால் இப்பொழுது கடல் பாதைகள் அதிக பலமாய் காக்கப்படுகின்றன. அநுதாபத்தையும், நம்பிக்கையும் காட்டிலும் மிகப் பயனுள்ள சாமான்களை ஏற்றிக்கொண்டு தினந்தோறும் ஓயாது அலைமாதிரி வரும் கப்பல்களில் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளை எதிரியால் தடுக்க முடியாது.

கடல் மார்க்கமாக வந்திருக்கும் யுத்த தளவாடங்களைக் குறித்து சுருக்கமாகக் கூறுகிறேன். சென்ற அநேக மாதங்களாக அமெரிக்கா உற்பத்தி சாலைகளில் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான விமானங்கள் பறந்தும், கப்பல் மூலமாகவும் இங்கு வந்திருக்கின்றன. அவை பெரிய வெடிகுண்டு விமானத்திலிருந்து வேகமாகச் சண்டையிடும் விமானங்கள் வரையிலும் அடங்கியிருக்கின்றன. அவை இப்போது சண்டையில் கலந்துகொண்டிருக்கின்றன.

சென்ற வாரத்தில் ஜெர்மனியைப் படையெடுத்து நாலு இஞ்சின் உள்ள 'போயிங்' என்ற 'பாம்பர்' விமானங்கள் திரும்பி வந்ததைக் கண்டேன். இம்மாதிரி ஆயிரக்கணக்காக உற்பத்தி செய்ய திட்டம் போடப்பட்டிருக்கிறது. அவைகளால் அழிக்கவிடாமல் ஹிட்லர் தன் உற்பத்தி சாலைகளை கிழக்கே நகற்றவே முடியாது.

ஏற்கனவே அமெரிக்கா அநேக நூற்றுக்கணக்கான டாங்கிகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் பூராவும் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்னும் அநேகம் வந்து கொண்டிருக்கின்றன.

சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களும், எண்ணெய் கப்பல்களும் பிரிட்டனுக்கு அமெரிக்காவால் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதுவரையிலுமில்லாத பெரிய வியாபாரக் கப்பல்கள் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இரவும் பகலும் ஓயாமல் கப்பல்கள் கட்டப்படுகின்றன. ஆகாரம், எண்ணெய், யுத்தப் பொருள்கள் இவைகளை ஏற்றிச்செல்ல போதுமான கப்பல்கள் அனுப்பப்படுமென்று நாம் உறுதி சொல்லுகிறோம். இன்று அமெரிக்க டாங்கிகள் சமீபக்கிழக்குப் பிரதேசத்தில் மணல் பாலைவனப் பொட்டல்களில், கம்பளிப்பூச்சிபோல் சாரி சாரியாய் நெளிகின்றன. ஜெர்மன் விமானப்படை தலைகாட்டுமிடங்களிலெல்லாம் எல்லாவிதமான அமெரிக்க விமானங்கள் எதிர்க்கக் குமுறிக்கொண்டு நிற்கின்றன. இங்கிலாந்தில் எல்லாத் தொழிற்சாலைகளெல்லாம் பூர்ணமாகச் சாமான்களைச் செய்கின்றன. பிரிட்டிஷ் யந்திர ஆயுதங்கள் ஓயாமல் வேலை செய்கின்றன. அப்பேற்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி அமெரிக்காவில் செய்யப்பட்டவை.

இப்படிச் செய்ததும் போதாது என்று எங்களுக்குத் தெரியும். இப்பெரும் சண்டையில் நாங்கள் கிரியாபாகம்தான் கலந்திருக்கிறோம். சிரமப் பிரயாசைப்பட்டும், இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தும்படியாக நீங்கள் பாடுபட்டிருக்கிறீர்கள் என்பதை உணர்கிறோம்.

இப்படி நாங்கள் மெதுவாக இருப்பதாகத் தோன்றுவதற்கு ஒரு காரணம் உண்டு. சமாதான காலத்தில் தேவையான சாமான்களைச் செய்துவந்த தொழிற்சாலைகளை டாங்கிகளும், விமானங்களும், பீரங்கிகளும் செய்ய வேண்டுமென்று ஒரே நாளில் மாற்றியமைப்பதென்றால் சாத்தியமில்லை. புதிய யந்திர சாமான்கள் செய்ய வேண்டியதாகவும், சில சமயங்களில் நவீன உபயோகத்திற்கு (புது பிரச்னைகளுக்கு)த் தக்கவாறு கண்டுபிடிக்க வேண்டியதாயும் இருந்தது. இதனால்தான் அவகாசம் வேண்டியிருந்தது.

மேலும் மற்றொரு மாறுதல் தேவையாயிருந்தது. சமாதான காலங்களில் தொழிற்சாலை அமைப்பை மாற்றியதுபோல் தொழிலாளிகளின் பான்மையையும், மாற்றவேண்டிவந்தது. ஏனென்றால் வியாபாரத்துக்காக உபயோகிக்க சாவகாசமாகத் தயார் செய்த மனப்பான்மையை, வேறுவிதமாக மாற்றவேண்டியிருந்தது. இவ்விதமாக தேவை ஏற்பட்டிருக்கிறதென்று இப்பால் உணரப்பட்டிருக்கிறது.

இது மோட்டார்களும், மின்சார ஐஸ் பெட்டிகளும்செய்து, முதல் போட்டவர்களுக்கு லாபம் காட்டும் சமயம்அல்ல; இது யுத்த சமயம்; லாபத்திற்கிடமில்லை. 'டெட்ராய்ட்', 'லாஸ் ஏஞ்சல்ஸ்' என்ற இடங்களிலுள்ள தொழிற்சாலைகளிலும், பிட்ஸ்பர்க் என்ற இடத்திலுள்ள எஃகு யந்திர சாலைகளும், பென்ஸில்வேனியாவிலுள்ள நகரங்களிலும் செய்யக்கூடிய சாமான்களைக் கொண்டு யுத்தத்தை வெற்றிகரமாய்முடிக்கலாம் என்று தெரிந்துசொல்ல வெகுகாலம் பிடித்தது. இதற்காக நாங்கள் எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டு வருகிறோம். அதைப் பொது மக்களும் அறிந்துகொள்வார்கள். வர்த்தகத்



தகாரர்களை மறந்து விடுமுறைநாட்களையும் குறைத்துக்கொண்டு பொதுவெற்றிக்காக, பீவர்புருக், பெவின் என்பவர்களுக்காக பிரிட்டிஷ் மக்களுடன் அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒத்துழைக்கிறார்கள்.

அடுத்த பனிரெண்டு மாதங்களுக்குள் ஏராளமான விமானங்களும், டாங்கிகளும், பீரங்கிகளும் அதற்குத் தேவையான வெடி மருந்துகளும் இத்தீவிற்கு வந்து இறங்கும். இப்படி இவ்விரு தேசத்தார்களும் சேர்ந்து தங்கள் விமானபலத்தினால் நாஜிகள் தொழிற்சாலைகளைத் தாக்காமலிருக்கும்படி, வரக்கூடாத தூரத்தில் அப்புறப்படுத்த ஒருபொழுதும் முடியாது. இப்படி நான் சொல்வது ரொம்பகாலம் கிரமித்து நடக்கக்கூடியதுமில்லை, மனோராஜ்யமுமில்லை. இங்கே தொழிற்சாலைகளில் மனிதர்கள் மிகவும் பிரயாசையுடன் வேலைசெய்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். கொஞ்சமும் பதறாமல் இங்கிலாந்தில் கப்பல் கட்டுகிறவர்களுக்குக் கஷ்டமான திசை என்பதும் இந்தக் காலத்தில்கூட அவர்கள் விட்டுக்கொடுக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும். எங்கள் தேசத்தினரும் அறிவார்கள். இப்பொழுது கட்டிவரும் கப்பல்களுக்கு சில மாதங்களுக்குமுன் பிளான்கள்தான் தயாரித்துவந்தன. இப்பொழுது அவையாவும் கப்பல் கட்டுமிடங்களில் தயாராகிவருகிறது. இனி அவைகள் முடிக்கப்பட்டதும் சமுத்திரத்தில்சென்று இங்கிலாந்துக்கு அதிகம் சாமான்கள் ஏற்றிச்செல்லும்.

ஆகார ஸப்ளையைப்பற்றியும் நாங்கள் கவனித்துவருகிறோம். பிரிட்டிஷ் மக்கள் பட்டினியாயிருக்கும்படி அமெரிக்கா ஒருபோதும் விட்டுவிடாது. ஆகாரத்தில் செலவை மட்டுப்படுத்திக்கொண்டு அதிகம் உற்பத்திசெய்ய தீர்மானித்திருக்கிறோம். வருகிற பனிரெண்டு மாதங்களில் ஏராளமான, பாலாடையும் பன்றி மாமிசமும், முட்டைகளும், டப்பிகளில் அடைத்த மீன்களும், திராக்ஷை ரஸமும், புட்டிப்பாலும், பழரஸமும் வந்துசேரும். யுத்தத்திற்குத் தேவையான இன்னும் ஜீவாதாரமுள்ள பலசாமான்கள் உற்பத்திசெய்யப்பட்டு அனுப்பப்படும். அவைகள் இரும்பு, எஃகு, பழைய இரும்பு, கலப்பு எஃகு, இரும்புப் பாளங்கள், பித்தளை, தாமிரம், மசகெண்ணெய், பெட்ரோல், மரம், ஆணிகள், மரப்பட்டை, பேபர், பருத்தி,

யந்திர சாமான்கள், ரோடு போடத் தேவையான சாமான்கள், விவசாயக் கருவிகள் மருந்து, பட்டு, கயிறு, நெருப்பணைக்கும் குழாய், வைத்திய முறைக்கு வேண்டிய சாமான்களும் இம்மாதிரி சாமான்கள் உற்பத்தி செய்து பிரிட்டனுக்கு அனுப்பும்படிக்குள்ள பெரிய திட்டத்தை விருத்தி செய்யும்படி அமெரிக்கா காங்கிரஸ் பாஸ் செய்திருக்கும் "குத்தகைக் கடன் மசோதா"வில் பிரஸிடெண்டுக்கு அதிகாரத்தைக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதோடு மட்டுமில்லாமல் ஜனநாயகத்தைக் கெடுக்கப் பார்க்கும் ஜப்பானுக்கு எதிரில் கிழக்கே சண்டை போடும் சைனாவையும், நாங்கள் மறக்கவில்லை. அவ்விதமே தங்கள் நாட்டைக் காப்பாற்ற பிரமாதமாக யுத்தம் செய்யும் ருஷ்யர்களையும் மறக்கவில்லை. இவ்விரு நாடுகளுக்கும் உடனே உதவி செய்யத் தீர்மானித்துவிட்டோம்.

யுத்த தளவாடங்கள் கொடுக்கும்படி உங்கள் பிரதம மந்திரி கேட்டுக் கொண்டார். அவைகள் வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் மேற்கு கடற்கரையிலிருந்து மத்தியக்கிழக்குக்கும் ஓயாமல் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அதில் குறுக்கிட யாராலும் முடியாது.

வழியில் வந்து கொண்டிருக்கும் ஏராளமான யுத்த தளவாடங்கள் பிரிட்டனுக்குப் பத்திரமாக வந்து சேரும். அவ்விதம் பத்திரமாகச் சேரும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் போகிறதாக, ரூஸ்வெல்ட் உறுதி கூறியிருக்கிறார். அவர் வார்த்தை வீண்போகாது. பிரிட்டிஷ் மக்களே! நீங்கள் தனித்து நின்று போர் புரிவதாக நினைக்கவேண்டாம். எங்கள் உபபலம் உங்களுக்கு உண்டு.

---

## பிரிட்டிஷ் விமான வெடிகுண்டுகள், எவ்விதம் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடிக்கின்றன.

## விமானிக்கும் குறிபார்த்தடிப்பவனுக்கும் ஏற்பட்டிருக்கும் ஐக்யம்.

## குறிதப்பாமல் அடிப்பதற்குக் காரணம்.

[ஒரு விமானப்படைத் தலைவருடைய பி. பி. ஸி. பிரஸங்கம்.]

ஜெர்மனியிலும், ஜெர்மானியர் வியாபித்த தேசங்களிலுமுள்ள குறிப்பிட்ட லக்ஷியங்களை இரவில் வெடிகுண்டுமூலம் தாக்குவது வெகு எளிதல்ல. இருந்தாலும் இராப்போரில் ஜெர்மனியைவிட நமக்கு அதிகம் வெற்றி கிடைத்திருக்கிறது.

யுத்தம் ஆரம்பிக்கும்பொழுதே நாங்கள் இரவில் வெகு எளிதாக லக்ஷியங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதற்குக் காரணம் எங்களுக்கு ஏற்கனவேயுள்ள பயிற்சிதான். ஆகையால் மேகமறைவில் இருந்துகொண்டு கண்ட இடத்தில் நாங்கள் குண்டுகளைப் போடுவதில்லை. ஆனால் எதிரிகளோ, இவ்வளவு விரிவாக இரவில் யுத்தம் நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் அவர்களின் பயிற்சியும் மிகக் குறைவானது. மேலும் அவர்களுக்கு, எங்களுக்கு இருப்பது போல் குறிபார்க்கும் கருவியும் கிடையாது.

சரியானபடி குறியைப்பார்க்க வெடிகுண்டுகளைப்போடுகிறவன் மற்ற விமான சிப்பந்திகளோடு டெலிபோன்மூலம் அடிக்கடி சங்கதிகள் பேசவேண்டும். அதனால் அவ்வப்போது கீழே நடக்கும் விஷயங்களைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது வெகு எளிது.

சரியானபடி குறியைப் பார்க்க, குண்டுகள் போடுகிறவன் விமானத்தின் முன் முனையிலிருக்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லாவற்றையும் யாதொரு இடைஞ்சலன்னியில் ஸ்பஷ்டமாகப் பார்க்கலாம். இவனுடைய லக்ஷியத்தை அருகாமையிலுள்ள ஒரு நிலக் குறிப்பைக்கொண்டு நிதானிக்கவேண்டும். நல்ல பயனை அடையவேண்டுமானால் அவன் இருக்கும் நிலை விமானத்தின் அமைப்பைப் பொருத்தது.



உதாரணமாக "வெல்லிங்டன்" என்னும் விமானத்தில் குண்டு எறிகிறவன் குப்புறப் படுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் "விட்லி" "ஹாம்ப்டன்" என்ற விமானங்களில் அசௌகரியமான ஒரு ஆஸனத்தில் நிமிர்ந்து உட்காரவேண்டும்.

லக்ஷியத்தைக் குறிபார்த்து வெடிகளைப் போடும்போது, எதிரிகளின் சில பீரங்கிகளை லக்ஷியம் செய்யாது விமானம் ஒரே உயரத்தில் நேரே பறக்கவேண்டும். அப்பொழுதுதான் வெடிகுண்டுகள் போடுகிறவனுக்கு லக்ஷியமானது மறையாமல் இருக்கும்.

சில சமயங்களில் சோதனை விளக்குகளின் பிரகாசத்தால் வெடி போடுகிறவனுக்குப் பார்க்கமுடியாமல் போய்விடும். அதனால் மறுபடியும், மறுபடியும் லக்ஷியத்தை நோக்கிச் செல்லவேண்டிவரும். குறிபார்த்து குண்டுகள் வீசுவதில் என்னுடைய அனுபவம் 'ஹாம்ப்டன்' வகுப்பு விமானத்தில் ஏற்பட்டது.

ஹாம்ப்டனில் குண்டு வீசுகிறவனுக்கு இரண்டு முக்கிய வேலைகள் உண்டு. 500-மைலுக்கு மேலுள்ள சமுத்திர பாகத்தையும் விரோதியின் தேசங்களையும் கடந்து, குறிப்பிட்ட லக்ஷியமிருக்கும் பிரதேசத்தில் சரியாக வந்து சேரவேண்டியது குண்டு வீசியின் பொறுப்பு. ஆதலால் குறிப்பிட்ட இடம் வந்து சேரும்வரை அவன் தான் விமானத்தைச் செலுத்தவேண்டும்.

ஏற்கனவே இவனுடைய லக்ஷியத்தை, அருகாமையிலுள்ள நிலக்குறிப்பை வைத்து நிதானித்துக்கொண்டு, லக்ஷியமிருக்கும் பிரதேசத்திற்கு நேராக வந்ததும், விமானத்தை அங்குமிங்கும் அசையவிடாமல் வைத்துக்கொள்வான். மேலும் இதற்குமுன் அந்த இடத்தில் சிலர் குண்டுகள் போட்டதினால் ஏற்பட்ட வெளிச்சத்திலிருந்து, இவன் இடத்தை சுலபத்தில் தெரிந்துகொள்ளக்கூடும்.

இதற்குப் பிறகு விமானம் ஓட்டும் வேலையை மற்றொருவனிடம் கொடுத்துவிட்டு, இவன் வெடிகுண்டு எறிய ஆரம்பிப்பான். இதற்கு முந்தியே லக்ஷியமிருக்கும் பிரதேசத்திலிருந்து, விமானம் செல்லும் தூரத்தைப்பற்றியும், எவ்விதம் வெடிகள் வீசவேண்டுமென்பதைப்பற்றியும் பேசிக்கொண்டு அதற்குத் தக்கவாறு குறி பார்க்கும் கருவியையும் அமைத்துக்கொண்டிருப்பான். குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் ஏற்கனவே செய்துள்ள யோசனை சற்று மாறக்கூடும். இதனால் கருவியையும் அடியோடு மாற்றவேண்டிய அவசியமில்லை.

இத்தகைய தீர்மானங்களைக்கொண்டு தென்மேற்கு திசையில் ஒரு ஸ்தலத்தை 10,000 அடி உயரத்திலிருந்து எதிர்க்கப்போவதாக வைத்துக்கொள்வோம். அதன் அருகாமையில் வரும் சமயம் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கும்பொழுது எதிர்க்கவேண்டிய இடம் கம்மலாய்த் தெரியும்.

இத்தருணத்தில் சில பீரங்கிகள் விமானத்தைத் தாக்கும். கீழிருந்து வரும் வெடிகுண்டுகள் வெடிக்க ஆரம்பிக்கின்றன. சில குண்டுகள் விமானத்தைச் சேராமல் அதன் கீழேயும் வெடித்துவிடும். ஆனால் சில பீரங்கிக்காரர்கள் பரீக்ஷை செய்து, வேண்டிய உயரத்திற்குச் சுடுவார்கள். நேராகத் தாக்கும் குண்டுகளுக்

கெதிரில் விமானி பாய்ச்சல் காட்டப் பார்க்கிறான். வெடிகுண்டுகளுக்குத் தப்புவதுடன் தாம் எங்கேயோ போகப்போகிறோம் என்று விரோதிக்குத் தப்பு அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகிறான்.

இத்தருவாயில்தான் விமானிக்கும் வெடிகுண்டு போடுகிறவனுக்கும் நெருங்கின ஒத்துழைப்பு இருக்கவேண்டும். விமானப்படைத் தலைவன், விமானம் சுடும் பீரங்கிகளிடமிருந்து தப்புவதற்குக் கவனம் செலுத்திவருகிறான். நாலாபக்கங்களிலிருந்தும் குண்டுகள் வந்து கொண்டிருக்கும். அதோடு அந்த லக்ஷியத்தை விட்டும் விலகக்கூடாது. விலகினால் வந்த காரியம் நடக்காது.

வெடிகுண்டு போடவேண்டிய இடம் இறுதியில் நெருங்கப்பட்டவுடன் “ஆக் ஆக்” என்று உத்தரவு பிறந்தாலும், பிறக்காவிட்டாலும், வெடி குண்டு போடுகிறவனுடைய முகரூப உத்தரவுப்படி ஒரே நிலையாக விமானி நிதானமாய்ச் செலுத்துவான். லக்ஷியம் மிகவும் இடது பக்கத்தில் இருந்தால், “இடது பக்கம், நிதானமாய்” என்று உத்தரவு கொடுக்கப்படும். அந்த இடம் இன்னும் இடது பக்கத்திலேயே இருக்குமானால் “சீக்கிரம் இடது பக்கம், இடது பக்கம்” என்று சொல்லப்படும்.

வெடிகுண்டு போடுகிறவனுடைய தொனி எவ்வளவு அற்பமாகயிருந்தாலும், விமானி அதைக்கொண்டு திருத்திக்கொள்வான். மேலும் வேண்டிய அளவுக்கு மேல் திருப்பிவிட்டால், ‘வலது பக்கம்’ என்று உத்தரவு பிறக்கும். அப்பொழுது விமானி வலது பக்கம் திருப்பி, குறிக்கப்பட்ட ஸ்தலமானது தூரதிருஷ்டி கண்ணாடியில் தெரிந்தவுடன் ‘நில்’ என்ற உத்தரவு கொடுக்கப்படும். அப்பொழுதுதான் இவர்களுடைய பரிபூர்ண பரிபக்குவகாலம் வந்துவிட்டது. அவர்களுக்குள் ஏற்படும் ஒவ்வொரு முணுமுணுப்புக்கும் விசேஷ அர்த்தமுண்டு.

வர, வர குண்டுபோடவேண்டிய இடம் கண்பார்வைக்கு நேரே வந்து கொண்டிருக்கும். நேராக ஒரே மட்டத்தில் குண்டு வீச்சுக்காரனுடைய வார்த்தைகளுக்கிணங்கி, விமானி விமானத்தை அசையாது, திசை தவறாது அதே உயரத்தில் நிறுத்திக்கொள்வான். அப்பொழுது வெடி வீசுகிறவன் சில சிறு உத்தரவுகளைக்கொடுப்பான். கீழேயிருந்தோ சில பீரங்கிகள் சுட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் இதை விமானத்திலிருப்பவர்கள் லக்ஷியம் செய்யமாட்டார்கள்.

பீரங்கிகளிலிருந்து கிளம்பும் ஜ்வாலையை தரையில் அவன் பார்க்கிறான். கீழேயிருந்து மழைபெய்தாற்போலவும், வானவில், ஸ்பத்தியம் பிடித்த பாம்பு போல் கீழேயிருந்து கிளம்பி வந்தாற்போலவும், இதைத் தேடிக்கொண்டு பல விமானங்கள் அடுக்கடுக்காய் வருவதைப் பார்க்கிறான்.

ஆனால் இவைகளைப்பற்றி நினைப்பதற்குப் பொழுதில்லை. எதிர்க்க வேண்டிய இடம் பார்வையில் பட்டுக்கொண்டிருக்கிறது. விமானத்திலிருந்து வெளுப்பும், கருப்புமாக குண்டுகள் கிளம்பி அதைக் குலுக்குகின்றன. இருந்தாலும் சிறிதும் தவறாமல்போன நிலையிலே விமானி நிதானமாய் ஓட்டுகிறான்.



விமானத்திலிருக்கும் மற்ற வேலைக்காரர்கள் கீழே நடக்கும் ஆரவாரத்தைக் கவனியாமல் அவரவர்கள் வேலையைப் பார்ப்பார்கள். உதாரணமாக வேலைக்காரன் தந்திவேலையை (Wircless) நிறுத்திக்கொண்டு, ஆகாய பீரங்கி வேலையைக் கைக்கொண்டு “பைடர்கள்” தோன்றுகின்றனவா என்று கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருப்பான். அதே மாதிரி இந்த விமானத்தின் பின் பாகத்திலிருக்கும் பீரங்கிக்காரன் தேசப்படத்தை வைத்துக்கொண்டு கீழே வெடிகள் வெடிப்பதை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பான்.

வெடிகுண்டு போடுபவனுக்கு தன் அரையிலுள்ள ஆயுதங்களைப்பற்றி நன்றாய்த் தெரியும். குண்டு போடவேண்டிய ஒவ்வொரு இடத்திலும் கண் வைத்தபடியே தலை நிமிராமல் ஒவ்வொன்றாக யந்திரங்களை அசைத்து கடைசியில் சரியான சமயத்தில் குமிழிகளை அமிழ்த்துவான்.

இதுசமயம் “வெடிகுண்டுகள் போட்டு விட்டேன்” என்று குரலிடுவான். இதுவரை டெலிபோன்மூலம் உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டுபோக, இனி விமானத் தலைவன் பகைவரிடம் அகப்படாமல் ஓடப்பார்ப்பான்.

தங்கள் லக்ஷியத்தைக் கடந்து செல்லும் தருவாயில் விமானம் அந்த இடத்திற்குத் தலைக்கு மேலே வரும். அப்பொழுது குண்டுவெடித்த இடங்களைக்கண்டு கொள்ள சௌகரியம் ஏற்படும். அதனால் அதைப்பற்றி தேசப்படத்தில் குறித்துக்கொண்டு பின்னால் இருக்கும் பீரங்கிக்காரன் வீசிய குண்டுகள் சமாசாரங்களைப்பற்றித் தலைவனுக்கு அனுப்பிக்கொண்டிருப்பான்.

இனி ஆகாய வேலியைக்கடந்து வெளியேறியவுடன், மாலுமிக்கு ஆயாசம் நீங்கி, கவலையில்லாமல் விமானத்தை ஓட்டித் திரும்பி வந்து சேருவான்.

---

## திடுக்கிடும் யாதாஸ்து.

**மே மாதம் 4-ம் தேதி ஹிட்லர் சொன்னது.**

**கக்ஷித் தலைவர்களுக்குத் தனிப்பிரசங்கம்.**

**லத்தீன் அமெரிக்க நாடுகள் உதவுகின்றனவாம்.**

டெயிலி டெலிகிராபின் வாஷிங்டன் நிருபர்—ஜூலை 17.

பெர்லின் சான்ஸலிரியில் மே 4-ம் தேதி நாஸிக் கக்ஷித் தலைவர்களுக்கு ஹிட்லர் தனிமையில் செய்த பிரசங்கத்திலிருந்து ஜெர்மனியின் தற்போதைய அரசாங்க முறையைப்பற்றி அதிக விஷயம் தெரியவருகிறது. ரீஸ்டாக்கில் பேசியதற்கு சில மணி நேரம் முன்னால் இப்பிரசங்கம் நடந்தது. அதில் நடக்கும் யுத்தத்திற்குக் காரணம் யுனைடெட் ஸ்டேட்ஸ் தானென்றும் பிரிட்டனை இன்னும் அதிகமாக விமானத்திலிருந்து தாக்குவதாயும் ஹிட்லர் சொன்னான்.

இன்னும் அவன் சொன்னதாவது:—"ஸோவியத் அரசாங்கம், ஐரோப்பாவில் புது திட்டம் ஸ்தாபிப்பதற்கு மறைமுகமான இடைஞ்சல் செய்யாமல் இருப்பதற்கு வெறும் வார்த்தை போதாது, காரியத்திலும் காண்பிக்கவேண்டுமென்று மாலடோவிடம் தெரியப்படுத்தும்படி மாஸ்கோவிலுள்ள ஜெர்மன் பிரதிநிதிக்குச் சொல்லப்பட்டது. மூவரசு ஒப்பந்தத்தில் சேர்ந்து, நேசத்தை நிலைநிறுத்த ருஷ்யாவுக்குத் தருணம் கொடுத்து, பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைத் தொலைக்க போதுமான உதவி செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன்".

அப்படி பூர்ண ஒற்றுமை காட்டாவிடில் யூக்ரேன் காகஸிலுள்ளவர்கள் விடுவிக்கப்பட்டு ஜெர்மனியுடன் சேர்க்கப்படுவார்கள் என்றும் சொன்னான்.

இப்பேச்சின் குறிப்புகள் அமெரிக்காவுக்குச் சமீபத்தில்தான் கிடைத்தன, பாரின் கரெஸ்பாண்டென்ஸ் என்ற பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன்மெண்டுக்கு இதன் தாத்பர்யம் தெரியும் என்று சொல்லாமலே தெரிந்ததுதான். அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் பிரதிநிதியும், ஸ்டாலினுக்கு ருஷ்யாவை ஹிட்லர் எதிர்க்கப்போகிறார் என்று இந்தப் பிரசங்கக் குறிப்புகளிலிருந்து யூகித்துத்தான் சொன்னார். ஆனால் பிரிடிஷ் பிரதிநிதியின் எச்சரிக்கை பயன்படவில்லை.

இதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு பெர்லின் போய்வந்த மாலடோவ் ஹிட்லரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுத்தார். அப்படியிருந்தும், ஹிட்லர், நாஜிக் கக்ஷிக் கூட்டத்தில் ஜெர்மன் க்ஷேமத்திற்கு விரோதமாக ருஷ்யா சூழ்ச்சி செய்துகொண்டிருப்பதாகக் குறை கூறுகிறான்.

ஒருக்கால் ஜெர்மனியை எதிர்க்க யூகோஸ்லாவியாவுக்குச் செய்த ருஷ்ய உதவியையும், பால்கன் நாடுகளை ஹிட்லர் பிடிக்க முயலுவதை ருஷ்யா அங்கீகரிக்காததையும் குறிப்பிட்டதாக ஆகலாம்.

ஹிட்லர் செய்த பிரசங்கத்தில், மிஸ்டர் ரூஸ்வெல்டும், யுத்த வெறி பிடித்த சில அமெரிக்கர்களும்தான் யுத்தத்தை நீடித்து நடத்துகிறார்கள் என்று கடுமையாகக் கண்டித்திருக்கிறது. இதனால் அமெரிக்கப் பணக்கார அரசாக்ஷிக்கு விரோதமாக ஐரோப்பாவை ஒன்று சேர்க்கவேண்டிய பொறுப்பு தனக்கு வந்திருக்கிறதாக ஹிட்லர் சொன்னான்.

அமெரிக்கா யுத்தத்தில் இறங்கினால் டாக்கரையும், மொராக்கோ துறைமுகங்களையும் ஜெர்மனியின் உபயோகத்திற்குக் கொடுக்கிறதாக விஷி வாக்களித்திருக்கிறதாம். லத்தின் அமெரிக்க நாடுகளில், முக்கியமாக அர்ஜென்டைனாவில், செல்வாக்கு வாய்ந்தவர்கள் ஹிட்லருடன் சிநேகமாக இருக்கிறார்களாம். ஆகையால் அமெரிக்காவுடன் சண்டை செய்ய நேர்ந்தால் அது ஐரோப்பாவில் போடப்படாமல் தென் அமெரிக்காவிலேயே நடக்கும் என்றும் வெளியாகிறது.

ஜெர்மனியில், சில கக்ஷித் தலைவர்கள் இங்கிலாந்துடன் சமாதானம் செய்து கொள்ள அபிப்பிராயப்பட்டதாகவும், ஏற்கனவே இப்படிச்செய்துகொண்ட சமாதானப்பேச்சுகளை எல்லாம், இங்கிலீஷ்காரர்கள் ஜெர்மனியின் பலக்குறைவு



என்று எண்ணியதால் இப்பொழுது தானாக ஜெர்மனி மறுமுறை சமாதான பிரஸ்தாபத்தை எடுக்காதாம். ஆனால் ஹிட்லரின் ஐரோப்பிய புது ஒழுங்கை ஒப்புக்கொண்டு சமாதானம் பேச முன்வந்தால் சண்டையை உடனே ஜெர்மனி நிறுத்துமாம்.

இவ்விதமாகவெல்லாம் ஹிட்லர் பேசியதற்கு 6 நாள் பிறகுதான் அவரது அத்தியந்த சிநேகிதன் ஹெஸ் ஸ்காத்லாந்துக்குப் பறந்து சென்றார். வெற்றிகரமான பால்கன் யுத்தத்திற்குப் பிறகு சமாதானம் செய்ய முயற்சித்தவர்களில் இவர் ஒருவராக இருக்கலாம்.

இவ்வருஷத்திற்குள் யுத்தம் முடியாதென்று ஹிட்லர் ஒப்புக்கொண்டிருக்கிறார்:—"இவ்வருஷத்திற்குள் சண்டை முடியாது, இன்னும் நடைபெறும் என்று ராஜீய சிநேகிதர்கள் நம் ஜனங்களுக்குச் சொல்லவேண்டும்" என்றும் சொன்னார்.

"ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் வறுமையையும் தடுக்க விரும்பினேன். ஆனால் யுத்தத்தை நிறுத்த முடியாததால் அவை இன்னும் இருக்கவேண்டியதுதான். ஜெர்மானிய ஸ்திரீ புருஷர்கள் யாவரும், ஜெர்மானிய வாலிபர்களும் யுத்த சாமான்கள் செய்ய முடிந்தவரை உதவத்தான் வேண்டும். அதனால் அமெரிக்க சாமான்களைக் காட்டிலும் அதிகம் செய்யவேண்டும்".

"இது ராக்ஷஸ யுத்தமே, எனக்கு கடவுள் அதிக வயது கொடுக்கவில்லை. ஆதலால், சத்துருக்களைத் தொலைத்து வெற்றிபெறும்வரை ஜீவித்திருக்க விரும்புகிறேன்".

விஷித் தலைவர்களை "கையாட்கள்" என்று வெறுப்புடன் சொன்னான்.

அவர்கள் வட ஆபிரிக்காவில் உதவுவதாக வாக்களித்திருந்தும் ஹிட்லர் பின்வருமாறு சொன்னான். "பிரான்ஸுக்கு விரோதமாக, எல்லாத் தேவைகளையும் கொடுக்கிறதாக முஸோலினிக்கு வாக்களித்திருக்கிறேன்".

# ஹூண ஜாதியைச் சேர்ந்த ஹிட்லரின் நோக்கமென்ன?

## லிபாவின் தற்காப்புச் சரித்திரத்தின் சுருக்கம்.

"நியூஸ் க்ரானிகள்" பத்திரிகையின் முன்னிருந்த மாஸ்கோ நிருபர், ஜான் ஸ்காட், டோகியோவிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி—ஜூலை 10.

ஜெர்மானியர் மூலமாக பெர்லினில் ஏற்பட்ட பிரசாரத் தடையினால், லிபாவின் தற்காப்பு விவரங்கள் ஐந்து நாட்கள் கழித்துத்தான் டோகியோவுக்குக் கிடைத்தன.

பூரா ஐந்து நாட்களில் ஜெர்மன் 'பான்ஸர்' படை வீடுகளையும், தெருக்களையும் தகர்த்துச் சென்றது. லப்ட்வாபி என்ற ஜெர்மன் விமானப்படை பீரங்கிகளாலும், குண்டுகளாலும் தாக்கியது.

ஜெர்மானியர் நகரத்திற்குள்ளே செல்ல முயற்சித்த போதெல்லாம் தரைக் கண்ணிகளாலும் குண்டுகளாலும், பீரங்கிகளாலும் ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் ஜனங்கள் எதிர்த்தார்கள்.

தெருக்களில் நுழையவிடாமல், நாலாபக்கங்களிலும் அடைப்புகள் மூலம் தடைசெய்யப்பட்டன. கண்ணிகளை வீசியும் இன்னும் தங்களிடம் இருக்கும் யந்திர சாதனங்களைக்கொண்டு தாக்கியும், எதிரிகள் பட்டணத்தில் நுழைய விடாமல் எதிர்த்து நிற்கும் வீபா ஜனங்களின் பலத்தைக் குறைக்கப் பிரயத்தனப் பட்டார்கள்.

நேரமுகமாக இருப்பதை அழிக்காமல் வீபாவைக் கைப்பற்ற முடிய வில்லை என்று தெரிந்த மேல், பொதுமக்கள், ராணுவ நிலயங்கள், இவைகளை வித்தியாசமன்னியில் இரக்கமன்றி வெடிகுண்டு மூலமும், பீரங்கிப் பிரயோகம் மூலமும் பூரா நகரத்தையும் தாக்கும்படி ஜெர்மானியர் உத்தரவிட்டார்கள்.

முன்னேறிச் சென்ற ஜெர்மன் படையுடன், கூடப்போன ஜெர்மன் நிருபர், வீபாவின் ஸ்திரீகளும், குழந்தைகளும், குண்டுகள் எறிந்தும், கைத்துப்பாக்கிகள், பீரங்கிகள் மூலம் உள்ளே பிரவேசிக்கும் ஜெர்மன் யந்திரப் படையை எதிர்த்த தாகச் செய்தியனுப்பினார்.

அங்கே ஒருவரும் உயிருடன் இருக்கமுடியாதென்று சொல்லும்படி, பீரங்கிக் குண்டுகளால் தகர்க்கப்பட்டு எரிந்து கொண்டிருக்கும் ஒரு வீட்டி லிருந்து, ருஷ்ய, லாட்விய பொதுமக்கள் ஜெர்மானியர் மீது குண்டுகள் எறிந்தனர்.

ருஷ்யச் சைனியப் பயிற்சியிலும் முக்கியமாக ராணுவ அதிகாரியின் திட்டத்திலும் எனக்கு அதிக நம்பிக்கையுண்டு. பொது மக்கள் எதிர்ப்பு, சிறு சண்டைகள் மறைந்து போடுவது, விரோதிகளின் சைனியத்தில் பொய் வதந்தி ஏற்படுத்தி அவர்களைத் திருப்பிவிடுவது, இத்தகைய காரியங்கள் செய்வதில் ருஷ்யர்கள் நிகரற்றவர்கள்.

---

# ஜப்பானின் விமான பலம்.

'மான்செஸ்டர் கார்டியன்' நிருபர் எழுதியது.

ஜப்பானுடைய விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று தெரியவில்லை. நடுநிலையை கவனிப்போர், சைனாவோடு சென்ற 4 வருஷங்களாகச் செய்த சண்டையில் 900 முதல் 1,200 விமானங்கள் வரை உபயோகித்து வந்ததாகவும்,



மொத்தத்தில் வியாபாரத்திற்கு உதவும் விமானம், சைனியம் ஏற்றிச் செல்லும் விமானங்கள் உள்பட 3,000 விமானங்கள்தான் உண்டென்றும் சொல்லுகிறார்கள். இவையாவும் தாழ்ந்த திறமுள்ளவைதான். ஏழு விதமான பைடர் விமானங்களில், 550 குதிரைச்சக்தி (H. P.) வாய்ந்தவைதான் இருக்கின்றன. மணிக்கு 300 மைல் வீதம் செல்லக்கூடியவையே.

ஏழு வருஷங்களுக்கு முன்னிருந்த பிரிடிஷ் விமானங்களுக்குச் சமமாக தற்போதய ஜப்பானிய பாம்பர் (குண்டு வீசும்) விமானங்களைச் சொல்லலாம். ஐரோப்பாவின் விமானங்களுடன் ஒப்பிட்டு கவனிக்கும்போது ஜப்பானிய விமானங்கள் பழைய ரகமென்று தள்ளுபடி செய்யப்பட்டவைகள்; அமெரிக்கா, பிரிடன், பிரெஞ்சு, ஜெர்மன், இதாலிய விமானங்களைப் பார்த்துச் செய்யப் பட்டவைதான். சில வருஷங்கள் வரை வேண்டியமாதிரி, மற்ற தேசங்களில் இருந்து விலைக்கு வாங்கியும், லைசென்ஸுக்கு ஜப்பானில் செய்யப்பட்டும் உபயோகித்து வந்தது.

சண்டை விமானங்கள் 20 தொழிற்சாலைகளில் வருஷத்திற்கு 8,000 வரையில் செய்யப்படுகின்றனவாம். நகோயா (Nagoya) தொழிற்சாலையில் 15,000 பேர்கள் வேலை செய்கிறார்கள்; மிட்ஸுபிஷியில் உள்ள 4 தொழிற்சாலைகளில் இன்னும் அதிகமாக இருக்கிறார்கள். அங்குதான் இருவர் சொல்லக்கூடிய பைடர் விமானங்களும், பாம்பர் விமானங்களும், பறக்கும் கப்பல்களும் கட்டப் படுகின்றன.

தன்னுடைய விமானங்களை அபிவிருத்தி செய்யவே ஜப்பான் அச்சுநாடு களுடைய உதவியை நாடியிருக்கிறது. டோகியோவில், லைசென்ஸ் பெற்றுக் கட்டப்பட்ட, ஜெர்மனியின் 'மெஸ்ஸர்ஸ்கிமிட்' (Messerschmitt) 109 பைடர் விமானங்களைப்போல் இப்பொழுது சண்டையில் சைனாவில் உபயோகிக்கின்றதாம். இன்னும் அதேமாதிரி சில யூங்கர்-86-K ஜெர்மன் பாம்பர்களை ஒத்திருக் கின்றன. ஆனால் இவைகளை நாஸிகள் பிரயோஜனமில்லை என்று விட்டுவிட்டார் கள். ஜப்பானுக்குள் இவைதான் முதல்தரமானவை.

மூன்று வருஷங்களுக்கு முன்பு இதாலி பையட், பிஆர் 20—வகையில் வேறு 80 பாம்பர்கள் ஸப்ளை செய்தது. இப்பொழுது லைசென்ஸின்பேரில் அங்கேயே செய்யப்படுகின்றன.

சாதாரணப் பிரயாணிகள் ஏறிச்செல்லும் விமானங்களெல்லாம், லைசென்ஸின் பேரில் ஸர்க்கார் தொழிற்சாலைகளில் கட்டப்படுகின்றன. இவைகளில் அமெரிக்க டக்லஸ்—DC-3-ம், டச்சு பாக்கரும் முக்கியமானவை.

இப்பொழுது ஜப்பானுக்கு விமானங்களைப் புதிதாகக் கட்டுவதற்கும், வைத்துக்கொள்வதற்கும் அதிக சிரமம் இருக்கிறது. ஏனென்றால் இவைகளைக் கட்ட இரும்பு முதலிய சாமான்களும் எண்ணெயும் வெளிநாட்டிலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது. கனடாவிலிருந்து பெற்ற அலுமினியம், நிக்கல்,

தாமிரம் 9 மாதங்களுக்கு முன்னே தீர்ந்துவிட்டன. விமானத்திற்குத் தேவையான அலுமினியமும் அல்லாய் தயார் செய்யக்கூடிய மண்ணும் கிடைக்கவில்லை.

விமானங்களுக்குத் தேவையான உயர்தர பெட்ரோல் எண்ணெயை அமெரிக்கா இனி அனுப்பாது. மேலும் கசண்டு எண்ணெயை சுத்தம் செய்யக்கூடிய சாதனங்களும் ஜப்பானிடம் போதுமான அளவு இல்லை. பிரிடன், அமெரிக்கா, டச்சு நாடுகள், கப்பல் அனுப்பும் விஷயமாகத்தடை உத்தரவு போட்டுவிட்டதால், இன்டோ-னேசாவும் ஜப்பானுக்குப் பெட்ரோல் அனுப்ப மறுத்துவிட்டது. ஆகையால் டச்சு நாடுகளுடன், உயர்தர எண்ணெய் வாங்குவதற்குச் செய்த ஒப்பந்தம் ஈடேறவில்லை.

---

# நாங்கள் தாமதிக்காமல் வருகிறோம்.

---

## இரானில் நடப்பது.

நாஜி ஐந்தாம் படை இரானில் வேலை செய்யாதோவென்று ஜெர்மானியர் கவலைப்படுகின்றனர். டியூட்ஸ்கி டிப்ளோமேட்ஸ்கி, பொலிட்ஸ்கி கரெஸ்பான்டென்ஸ் என்ற பத்திரிகைகள் ஆகஸ்டு 2-ம்தேதி பெர்லினில் செய்த ஒலி பரப்பை முன் கொண்டுகொண்டு சொன்னதாவது: " அன்னியர்களின் செய்கைகளைப் பரவவிடாமல் செய்யும் இந்த தேசத்தில் பொய் வதந்திகள் கற்பிக்கிறவர்களை அடக்கிவிடுவார்கள். தண்டனைக்குட்படக்கூடியதால் அயலார் விஷமப் பிரசாரம் செய்யமுடியாது.

1934-ம் வருஷத்தில் கைதேர்ந்த 3 ஜெர்மானியர்கள் சில குறிப்புகள் தயாரித்தனர். அவையாவன :—" பாக்தாத் ரயில்வே போட்டு உதவுவதாக வாக்களித்தபடி, சமீபத்திலும், கிழக்கிலும் உள்ள இடத்தைக் கைப்பற்ற வேண்டும். இவ்விதம் டான்யூப் முதல் பாஸ்பரஸ் ஜலசந்தி வரையிலுள்ள கிழக்குப் பாகத்தை ஜயித்தால் ஜெர்மன் விலங்குகள் அறுபடும். அவைகளில், துருக்கி—எகிப்தும், இரானும் தான் மிகவும் முக்கியமானவை" என்ற இந்த எண்ணங்கள் பலிக்காது.

## ஆகஸ்டு மாதத்திய அனுகூல பிரதிகூலங்கள்.

" நாம் சும்மாயிருந்தால், நமக்காக யுனைடெட் ஸ்டேட்ஸாம், ருஷ்யாவும் சண்டை ஜயித்துத் தருவார்கள் என்று நினைப்பது சுத்தப் பயித்தியக்காரத்தனம்" என்று ஜூலை 29-ல் மிஸ்டர் சர்ச்சில் சொன்னார்.

இவ்விதமான வார்த்தை மிகவும் நிதானம் கொண்ட வார்த்தை. இதை மனதில் வைத்துக்கொண்டு, சென்ற ஒரு வருஷ காலமாக நிறைவேற்றப்பட்டு புரியப்பட்ட யுத்தத்தினுல் ஏற்பட்ட மாறுதல்களைக் காணலாம்.



| 1940 ஆகஸ்டு. | 1941 ஆகஸ்டு. |
|---|---|
| 1. ருஷ்யாவுடன் செய்துகொண்ட பொருளாதார ஒப்பந்தம் ஜெர்மனிக்கு அதிக நன்மையைச் செய்கிறது. ரிப்பன்டிராப்பினுல் அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தின்படி சேர்க்கப்பட்ட எல்லைகளின் உதவியால் பிரிடனை முழு பலத்துடன் எதிர்க்கலாம். | 1. நாசத்தையும், சிரமத்தையும் அளித்தும் ருஷ்ய யுத்தம் பொருளாதார சாதகத்தை மாற்றிவிட்டது. ஆறு வாரங்கள் ஆகியும் ஜெர்மானியர் ஒரு லக்ஷியத்தையும் அடையாததோடு, ருஷ்யர்களுடைய சைனியமும் கெடுதலை அடையவில்லை. |
| 2. பிரிடன் மீது ஏராளமான குண்டுகளை வீசுவதால் பிரிடிஷ் விமானங்கள் தற்காப்பு விஷயத்தில் ஈடுபட்டன. 1,000 பிரிடிஷ் பொதுமக்கள் இறந்தனர். இதனுல் ஆகஸ்டு 15-ல் ஜெர்மன் லுப்ட்வாபிக்கு 180 விமானங்களும், 18-ல் 152 விமானங்களும் நஷ்டம். | 2. ஜெர்மனி மீதும் ஆக்கிரமித்த நாடுகளிலும், பிரிடிஷ் விமானப்படை இரவும் பகலும் நாளுக்கு நாள் அதிகமாகப் பாய்ந்து தாக்குகின்றன.<br>பிரிடன் பேரில் ஜெர்மன் தாக்கல்கள் குறைந்து விட்டன. |
| 3. பிரிடன் மீது ஜெர்மன் விமானம் படையெடுக்கும் என்று பயமுறுத்தியது, ஆகஸ்டு 15-ல் ஹிட்லர் லண்டனுக்குள் வருவதாகச் சொன்ன நாஸிப் பிரசாரத்தைக் காட்டிலும் பொல்லாதது. | 3. இப்பொழுது ஜெர்மனியின் பேரில் படையெடுப்பார்கள் என்று ஜெர்மானியர் பயப்படுவதிலிருந்தே எவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவரும்.<br>ஆகஸ்டு 1-ம் தேதி பெர்லினில் ஹிந்துஸ்தானி ஒலிபரப்பில் " ஐரோப்பாவில் பெரும் எதிர்ப்பு உண்டாகும்." என்று பிரிடிஷ் சமாசார மந்திரி மிஸ்டர் பிரெண்டன் பிராக்கன் ஜோஸியம் சொல்லியிருப்பதை ஜெர்மானியர் தெரிவித்தனர். |
| 4. எகிப்து எல்லைகளில் பிரிடிஷார் சிறிய எதிர்ப்புடன் கூடிய தற்காப்பு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். | 4. பிரிடிஷ் படையும், சாம்ராஜ்ஜியப் படைகளும் எகிப்து எல்லைகளைக் காத்துவருகிறார்கள். ஆனுல் அதோடு எகிப்தைத் தாக்க இருந்த இதாலிய சைனியத்தைப் பாழாக்கினர். |
| 5. ஆகஸ்டு 19-ல் பிரிடிஷ் துருப்புகள் பிரிடிஷ் சோமாலிலாந்தைக் காலி செய்தன. செங்கடலில் பிரிடிஷாரின் அதிகாரத்தை இதாலியர் பிடுங்கி விட்டார்களாம். | 5. மறுபடியும் பிரிடிஷ் ஸோமாலிலாந்து கைப்பற்றப்பட்டது. இதாலியரும் ஆபிரிக்காவிலுள்ள நாடுகளை இழந்தனர். செங்கடலில் விரோதி நடமாட்டமில்லாததால், அமெரிக்கச் சாமான்கள் நடுக்கிழக்கு யுத்தப் பிரதேசத்திற்கு வர முடிகிறது. |

| 1940 ஆகஸ்டு. | 1941 ஆகஸ்டு. |
| --- | --- |
| 6. ஜெர்மானியரும், இதாலியரும் நடுக்கிழக்கில் லஞ்சம் கொடுத்து சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அவர்களுடைய ராணுவ முயற்சிகளுக்குத் தகுந்தாற்போல் நம்பிக்கை துரோகமும், கலகமும் உண்டுபண்ணுகின்றனர். | 6. ஸிரியாவிலும், இராக்கிலும், பேர்ஸியன் குடாவைப் பிளந்து இந்தியாவிற்குச் செல்லுவதற்குச் செய்த அச்சு நாடுகளின் ஒரு பெரும் முயற்சிகள் முறிபட்டன. துருக்கி-ஸிரியன் எல்லை முதல் எகிப்து-லிபியா எல்லைவரையில் நடுக்கிழக்கு நாடுகளின் தற்காப்பு கெடுக்கப்படவில்லை. |
| 7. "பிரிடன் பூரா சூழப்பட்டது" என்று ஆகஸ்டு 17-ல் ஜெர்மனி சொல்லிற்று. | 7. ஆகாரத்திற்கும் இதர பொருள்களுக்கும் வெளி நாடுகளை எதிர்பார்க்கும் பிரிடன் பாதுகாத்துக்கொண்டிருப்பதோடு விளைபொருள்களை அதிகப்படுத்தியும் இருக்கிறது. |
| 8. ஆகஸ்டு 20-ல் சர்ச்சில் ஆங்கிலேய-அமெரிக்க ஒற்றுமையைப்பற்றி "அது அபிவிருத்தியடையட்டும்" என்று சொன்னார். ஆனால் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் ஆவதற்குள்ளாக ரூஸ்வெல்ட் மறு முறை பிரஸிடெண்டாக வரக்கூடாதென்று ஜெர்மனியின் அபிப்பிராயம். | 8. அமெரிக்கர்கள் ஐஸ்லாந்திற்கு வந்துவிட்டார்கள். வடகடலில் காவல் புரிகிறார்கள். பிரிடனுக்கும் நடுக்கிழக்குக்கும் சாமான்கள் அனுப்புவதை யாரும் தடுக்காமல் பார்த்துக்கொள்ளுகிறார்கள். பயத்தினால் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டை அதிகமாக நாஸிக் கக்ஷி நிந்திக்கிறது. |

---

## கதம்பம்.

1. "ஜப்பான் அதிக்கிரமம் உயர உயர சைனா, பிரிடன் நட்பு அதிகமாகிறது".

(காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன், ஆகஸ்டு 6.)

2. "எங்கள் க்ஷேமத்திற்கு உதவுவதோடு உலகத்தின் க்ஷேமத்திற்கும் பாடுபடுகிறீர்கள். அதற்கு பிரிடிஷ் மக்களுக்கு வந்தனம் அளிக்கிறோம்."

(டச்சு பொக்கிஷ மந்திரி, எம் கால்ட், லண்டனிலிருந்து ஒலிபரப்பியது ஆகஸ்டு 4.)

3. "சென்ற 100 வருஷங்களாக ஹிட்லராலும் அவனுக்கு முன்னிருந்தவர்களாலும் சொல்லிக்கொடுக்கப்பட்டதை மறந்து, நல்லதை. ஜெர்மன் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்."

(மிஸ்டர் விகாம் ஸ்டீட் பி. பி. ஸி.-யில். பேசியது. ஆகஸ்டு 1.)



4. "கொடுங்கோன்மை எங்களுக்குப் பிடிக்காததுபோல் உங்களுக்கும் பிடிக்காது. நாங்கள் முடிவு வரை சண்டைபோடும் காரணங்கள் உங்களுக்கும் புனிதமானவை."

(மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தினி, லண்டன், ஆகஸ்டு 10.)

5. "எல்லா மதத்தினர்களும் ஜெர்மனிக்கு விரோதமாக போர் புரிகிறார்கள். ஏனென்றால் ஜெர்மானியர் நாஸ்திகர்கள்."

(ஸர். ஜார்ஜ் போக், மதராஸ், ஆகஸ்டு 15.)

6. "எதிரி பலம் ராணுவ பலம், நமது பலம் ஆத்ம பலம்—மன உறுதி. நாயின் பருவம் மாத்திரம் போதாது, வீரியம்தான் தேவை."

(மேஜர் ஜெனரல், கார்டன் பென்னட், மலேயாவில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய சைனியத் தலைவர், ஆகஸ்டு 15.)

7. "ஹிட்லரின் உபத்திரவங்களிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற யுத்தம் புரியும் யாவரும் ஒன்று சேருகின்றனர். இவ்விதமாக நாஸித் திருடர்கள் ஒளியும் இடங்களை பலம் வாய்ந்த நேசதேசத்தார்கள் சைனியங்களாகிற இரும்புச் சங்கிலியால் கட்டுகின்றனர்."

(பிரவடா, ஆகஸ்டு 17.)

8. "நாம் இவ்விதமாக ஒன்று சேர்ந்து எதிர்க்காவிடில் இனி ஸர்வ ஜனங்களுக்கும் சுலபமாக ஆகாரமும், ஸ்வதந்திரமும் கிடைக்காது. கிடைத்தாலும் நிலைக்காது."

(மிஸ். டொரோதி தாம்ஸன், ஆகஸ்டு 17.)

9. "ஸ்வதந்திரமுள்ள ஜனங்களுக்கு சர்ச்சில்தான் தலைவர். பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமும், ஸ்வதந்திர ஜனங்களும் அவரையே நம்பியிருக்கின்றன."

(ஸர். பிரடரிக் ஜேம்ஸ், திருச்சி, ஆகஸ்டு 17.)

10. "பிலிப்பைன் தீவுகளுக்கு ஸ்வதந்திரம் கொடுப்பது அட்லாண்டிக் கடல் யுத்தத்தாலும், ருஷ்ய யுத்தப் பிரதேசத்திலும், தளவாடம் விருத்தி செய்வதாலும்தான் ஏற்படும்."

(பிரஸிடெண்டு க்வீஜான், மானிடோபா, ஆகஸ்டு 18.)

---

## ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

### ருஷ்யாவில் நற்சமயம்.

"ருஷ்யா முழுவதும், விரோதிக்கு ரகசியமாக உதவி செய்யப்படுகிறதாக ஜனங்கள் பிரஸ்தாபிக்கின்றனர்".

(ஹிந்துஸ்தானி பாஷையில் ஜெர்மன் செய்தி, ஜூலை 29.)

அவ்விதமில்லை. உதாரணமாக:—

(1) "லக்ஷக்கணக்கான ரூபாய் பொருமானமுள்ள உணவுப்பொருள்களை ருஷ்யர் நாசம் செய்கிறார்கள்."

(ஜாலந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 5.)

(2) "மின்ஸ்கில் கொஞ்சகாலம் வசதியாகத் தங்கலாமென்று ஒவ்வொரு ஜெர்மானியனும் எதிர்பார்த்தான். ஆனால் ஊர் எல்லாம் எரிந்து சாம்பலாகக்கிடந்தது. அதனால் வந்தவர்களுக்குத் தங்க விடுதிகள் கூட கிடைக்கவில்லை. மறைவாக நின்றும் சுட்டார்கள்". (டேர் ஆங்கிரிப்.)

(3) "பெஷலைவ் என்ற பட்டணத்தில் ருஷ்யர்கள் எல்லா வீடுகளுக்கும் நெருப்பு வைத்தனர். ஆகவே ஜெர்மானியர் இதைப் பார்க்கும்பொழுது திரும்பவேண்டியதாகத்தானிருந்தது".
(ரோம் ரேடியோ ஜுலை 20).

(4) "எரிந்து சாம்பலான வீடுகளைத் தவிர வேறொன்றும் இல்லை. கிராமம் கிராமமாக எரிந்து கொண்டு இருந்தது. காடுகள், தொழிற்சாலைகளெல்லாம் தீக்கிரையாயின. ஆகாயத்தில் புகைக்கூட்டம் சுவர்கள்போல் காணப்பட்டன."
(டியூட்ஸ் லான்ட்ஸெண்டர், ஜுலை 21).

"யுத்தரங்கத்தை அமெரிக்க ராணுவ அதிகாரிகள் வந்து பார்க்கக்கூடாது என்று ருஷ்ய கவர்ன்மெண்டு சொல்லி விட்டது."
(இங்கிலீஷ் பாஷையில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 1).

பிரிஸிடெண்டு ரூஸ்வெல்டின் ஆலோசனைக் கோஷ்டியைச் சார்ந்த மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் மாஸ்கோவுக்குச் சென்றார். இவருடன் அமெரிக்க தளகர்த்தர்களான ஜோஸப் மொஹார்னியும் ஜான் அலிஸனும் சென்றனர். ஆகையால் நாஸிகள் விரும்பும்படி இல்லாமல் யாவரும் போய் வந்து கொண்டிருக்கிறார்கள்.

"ஸிரேனைகாவில் இங்கிலீஷ்காரர்களின் அட்டூழியங்களைத் தெரிவிக்கக் கூடிய பாத்தாஸ்துகள் கிடைத்திருக்கின்றன. ஜெனரல் மெயிட்லண்டு வில்ஸன் தான் இவ்விதமான கடும் செய்கைகளுக்குக் காரணம்".
(இங்கிலீஷில் இதாலியச் செய்தி ஜுலை 31).

மார்ஷல் கிரஸியானி எழுதிய புஸ்தகத்தைப்படித்து அநுபவம் வாய்ந்த இவர்கள். இப்படி பறை சாற்றுவது வியப்பை அளிக்கிறது. "லிபியாவில் ரோமர்களின் சமாதான முறை" என்ற அப்புத்தகத்தில் "ஜனங்களிடம் போலீஸ்காரர்கள் வேட்டை நாய்களைப் போல் பழக வேண்டும். கலகக்காரர்களை, வேட்டை நாய்கள் பற்களால் பிடிக்குவதுபோல் பாய்ந்து அடக்க வேண்டும். மனிதனுக்கு மனிதன் கொன்று சாய்க்கவேண்டும்" என்று கண்டிருக்கிறது.



## குழி தவறி விட்டது.

"தனியாகப் பறக்கும் ஜெர்மன் பாம்பர்கள், யார்மௌத், பிளிமௌத் என்ற பெரிய துறைமுகங்களில் பெரும் தீக்களை மூட்டும்படி குண்டுகள் வீசின".
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி ஜுலை 29.)

இவ்விடங்களுக்கு 40 மைல் தூரம் வரையில் ஒரு குண்டும் விழவில்லை. அன்று விரோதி விமானம் ஒன்று கூட பிரிடிஷ் கடற்கரைக்கு வரவில்லை. சேதமும் இல்லை. சில டெலிபோன் கம்பிகள் மாத்திரம் அறுக்கப்பட்டன.

"1940 டிஸம்பர் முதல் 1941 ஜுலை வரை ஆபிரிக்காவில் நடந்த சண்டைகளில் 7,000 இந்தியர் இறந்தனர்."
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஜுலை 30.)

1941 ஜுலை 11-ம் தேதி கெரன் என்ற இடத்தில் 15,000 இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக ஜெர்மனி ஒலிபரப்பியது.

உண்மையில் அவர்கள் சொல்லும் காலத்தில் ஆபிரிக்காவில் 6,427 இந்தியர்களுக்குக் காயம், (இந்த எண்ணிக்கை கோயபல்ஸ் கட்டின பொய்). அதில் 759 பேர்தான் கொல்லப்பட்டனர்.

இதே சமயத்தில் பிரிடிஷ் படை, மேற்குப் பாலைவனச் சண்டையிலும், ஸுடான், எரிட்ரியா, இடங்களில் முதல் சண்டையில் 2,13,000 எதிரிகளுக்குச் சேதம் விளைவித்தது.

## ஜெர்மன் பிரசார மந்திரி கோயபல்ஸின் 6 வாரக் கணக்கு.

### நாஸி தற்புகழ் மின்னல் பிரசாரம்.

### ருஷ்யா அறிவிப்பது.

ஆகஸ்டு 2-ம் தேதி மாஸ்கோவில் நடந்த பத்திரிகைக் கூட்டத்தில் கிழக்குப் போர் முனையில் ஜெர்மன் பிரசாரத்தை நம்புகிறவர்கள் இல்லை என்று ஸோவியத் பொது விஷய நிலயத்தின் உப தலைவரான லாயோவ்ஸ்கி சொல்லுகிறார்.

ருஷ்யா மீது திடீரென்று ஜெர்மனி பாய்ந்து இன்றோடு 6 வாரங்கள் ஆகின்றன. ............ஆரம்பத்தில் எல்லாம் திட்டப்படி நடக்கிறதாக ஜெர்மானியர் தெரிவித்தனர்.

ஜுன் 26-ல் ருஷ்யப்படை பூராவாக தொலைக்கப்பட்டது என்றும், இனி அதனால் எதிர்க்க முடியாதென்றும், ரோம் ரேடியோ ஒலிபரப்பியது. ஜுன் 30-ல் ருஷ்யப் போக்குவரவு பூரா நாசமாக்கப்பட்டதாக ஜெர்மானியர் ஒலிபரப்பினார்கள். ஜுலை 7-ல் ருஷ்யா, எல்லாவிதமான பலங்களையும் இழந்து விட்டதென்றும், ஜுலை 13-ல் ருஷ்யப் போர்முனையில் எல்லா முக்கிய இடங்களும் துளைக்கப்பட்டன வென்றும் லெனின்கிராட், மாஸ்கோ, கீவ் இடங்களுக்குச் செல்லும் பாதைகள் திறக்கப் பட்டனவென்றும் சொன்னார்கள்.

ஆனால் சில வாரங்களாக ஜெர்மன் பத்திரிகைகளும், ரேடியோவும், அதிகாரிகளும், ரோம், ஹெல்ஸிங்கி, முதலிய இடங்களிலுள்ள நாஸி ஏஜண்டுகளும் வேறு விதமாகச் சொல்லுகிறார்கள். கிழக்குப் போர்முனையில் சண்டை மேற்குப் போர்முனையிலிருந்த மாதிரி இல்லாமல் வேறுவிதமாக இருக்கிறது.

ஜெர்மானியர் சொல்லுவதெல்லாம் வெறும் பொய்கள் என்று கீழ்கண்ட வித்தியாசங்களைப் பார்த்தால் தெரியவரும்;—

| தற்புகழ்ச்சி. | உண்மை. |
| --- | --- |
| "சில நாட்களுக்குமுன் ருஷ்யர்கள் பின் வாங்குவதைச் சொன்னோம். இப்பொழுது தலைவிரி கோலமாக ஓடுகின்றனர்."<br>(ஜெர்மன் ரேடியோ, ஜூன் 30). | "ஆரம்பம் முதல் ஜெர்மன் எதிர்ப்புக்களை ருஷ்யர்கள் பிரதிப் பிரயோகங்களால் தாக்குகின்றனர்."<br>(பிராங்க் புர்டர் ஜீடங், ஜூலை 16.) |
| "ருஷ்ய விமானப்படை எல்லா பலத்தையும் இழந்தது. இனி ஜெர்மன் முஸ்தீப்புகளைத் தடுக்கமுடியாது."<br>(பேர்லின் செய்தியை ரோம் ஒலிபரப்பியது, ஜூன் 30.) | "ருஷ்ய குண்டுகள் ஜெர்மானியரை சில காரியங்கள் செய்யவிடாமல் தடுக்கின்றன."<br>(ஜெர்மன் ரேடியோ, ஜூலை 15). |
| "ருஷ்யர்கள் எல்லாச் சேனையையும் சண்டையில் ஈடுபடும்படி செய்துவிட்டனர்."<br>(ஜெர்மன் சமாசார நிலயம், ஜூலை 17.) | "ருஷ்ய அரசாங்கத்தார் ஏராளமாக சைனியம் சேகரித்து நம்மை எதிர்க்கின்றனர்."<br>(நேஷனல் ஜீடங், ஜூலை 24). |
| "ராணுவ முறைப்படி ருஷ்ய டாங்கிகள் மிகவும் அற்ப சக்தி வாய்ந்தவை."<br>(பிராங்க் புர்டர் ஜீடங், ஜூலை 17.) | "ருஷ்யச் சைனியம் எல்லாச் சைனியங்களைக்காட்டிலும் நவீனமானது. இதோடு இன்னும் ஜெர்மானியர் சண்டைபோட வேண்டியிருக்கிறது."<br>(ஜெர்மன் ரேடியோ, ஜூலை 27.) |
| "போல்ஷிவிஸத்தைத் தடுத்து கொடுமைகள் உலகில் பரவாமல் செய்வது ஒவ்வொரு நாகரீக மனிதனின் பொறுப்பு", என்று பால்டிக் பிரதேசத்திலிருக்கும் 'நாயபுத்' என்று பெயருள்ள ஒரு சிறு பெண் சொல்லியிருக்கிறாள்.<br>(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 10.) | "போல்ஷிவிக் கொள்கை ஐரோப்பா பூராவும் பரவாதபடி தடுக்க ருஷ்யாவை ஜெர்மனி எதிர்க்கிறதென்று எண்ணுவது தவறுதல். ஜனங்கள் முன்னேற்றத்தையோ அல்லது நாகரீகத்தையோ, அல்லது ஜன நாயகத்தையோ பாதுகாக்க நாங்கள் போராடவில்லை; ஆனால் ஜெர்மனியை பாதுகாக்கவேண்டியே யுத்தம் புரிகிறோம்" என்று ஸர்க்கார் துடர்புள்ள, ஷுவார்ஸ்கோர் (Schwarze Korps) என்ற நாஸி செய்தி ஸ்தாபனம் ஜூலை 17-ல் வெட்டவெளிச்சமாகக் கூறுகிறது. |



## கோயபெல்ஸுக்கு வாய்ப்பூட்டு.

'கிழக்குப் பக்கத்தில் அடைந்த வெற்றி சரித்திர முக்கியத்வம் வாய்ந்தது" என்று மூர்த்தின நாள் பிரசுரிக்கப்பட்ட விசேஷ அறிக்கையைப்பற்றி 'நார்த் டெலிகிராம் ப்யூரோ' என்னும் நார்வீஜியன் பத்திரிகை கூறுகிறது.

(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 7).

"அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் பிரிட்டிஷாரின் பிரசாரத்திற்கு அதிகம் இடங்கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் எண்ணத்திற்கு இடமாகிறார்கள். ஜெர்மனியில் வெளிநாட்டுப் பத்திரிகை ஆசிரியர்கள் தலையிடுவதற்கும் தப்பு அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கும் எடுத்துக்கொள்ளும் முறைகள் அனுமதிக்கப்படமாட்டா. ஒரு நாளைக்கு இருமுறை வெவ்வேறு போர்முனைகளில் நடக்கும் விஷயங்களைச் ஸர்க்காரே அறிவித்துவிடுகிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சமும் பயமில்லாமல் ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் தாராளமாகச் செல்ல பூரா உரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது."

(இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்ட ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 6).

நார்வேயிலுள்ள ரீச் ஸர்க்கார் துடர்புள்ள செய்தி ஸ்தாபனத்திலிருந்து வந்த (லாப்டனில் பிடிபட்ட) அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:—

"செய்தி ஸ்தாபனம் முக்கியமாக அரசியல் நோக்கத்தை ஒட்டியே இருக்கவேண்டும். அதனால் ஜெர்மன் ரீச் ஸர்க்கார் துடர்பாகவும் அதற்குச் சாதகமாயுள்ள செய்திகளை மட்டும் பிரசுரிக்கவேண்டும்."

"நார்வே உள்நாட்டு அரசாங்கத்திற்குத் தகுதியான முறைகளை ஏற்படுத்த பத்திரிகை ஆசிரியர்களும் பூராவும் ஆதரிக்கவேண்டும்."

"விளம்பரங்களும் ஸர்க்கார் இஷ்டப்படிதான் போடவேண்டும்".

"ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் எங்களில் அநேகர் இருந்திருக்கிறோம். இவ்விரு தேசங்களில், அமுலிலிருக்கும் பத்திரிகைத் தடையைக் காட்டிலும், பிரிடிஷ் தடை மிகவும் மிதமானது. யாரைப் பற்றியும் குறித்து எங்கள் இஷ்டம் போல் எழுதவோ, எங்கள் அபிப்பிராயத்தை வெளியிடவோ எங்களுக்கு முடியும்" என்று மிகவும் கியாதி வாய்ந்த அமெரிக்கப் பத்திரிகாசிரியர், க்யின்டின் ரெயினால்ட்ஸ் எழுதுகிறார்.

## ஹிட்லரும், இஸ்லாமும்.

"ஹெர்ஸிகோவினா (Herzegovina) பஸ்னியா (Bosnia) ஆகிய முஸ்லீம் நாடுகளுக்கு சுயேச்சை கொடுத்ததுடன் அத்தேசத்தினர்கள் ரொம்பவும் சந்தோஷப்படுகிறார்கள். ஜனநாயகத் தன்மையுடன் வாழும்படி க்ரோஷியர்களுக்கு உதவி செய்ததிலிருந்து, ஜெர்மனி ஆக்கிரமித்த சிறுநாடுகளுக்கு ஸ்வதந்திரம் அளிக்கப்போவதாக ஜெர்மனி உலகத்தாருக்குக் காண்பிக்கப் போகிறதாம்."

(ஹிந்துஸ்தானியில் மொழி பெயர்க்கப்பட்ட ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 8).

க்ரோஷியாவிலுள்ள முகமதியர்கள் ஹிட்லரால் அளிக்கப்படும் ஸ்வதந்திரம் எப்பேற்பட்டதென்று, தெரிந்து கொண்டார்கள். மேலும் "யூகோஸ்லாவியாவில் ஜெர்மன் சைனியம் புகுந்ததும், முகமதியர்கள் வசிக்கும் பட்டணங்களும், கிராமங்களும்தான் அதிகம் பாழாக்கப்பட்டனர். 'ஸராஜிவோ' வில் உள்ள முகமதியர் கோவில் பூரா தகர்க்கப்பட்டது. இப்பொழுது அங்கே ஒன்றுமில்லை," என்று மகமட் எல்-ஷிஹமி என்பவர் 'வாய்ட்-எல்-மஸ்ரி' என்ற எகிப்து பத்திரிகையில் கூறுகிறார்.

*"ஸிரியாவில் பிரிடிஷார் ஆதிக்கமடைந்ததினால் அங்குள்ள பொருளாதாரச் சாதனங்கள் குறைந்து வருகின்றன. அங்கு இருக்கும் சொத்துக்களை பிரிடிஷார் தங்கள் சொந்த உபயோகம் செய்துகொள்ளுகின்றனர்".*

*(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 8).*

*"இராக்கில் பிரிடிஷார் செய்யும் கொடுங்கோன்மையும், அட்டூழியங்களையும் நம் ஜனங்கள் கேட்டிருப்பார்கள். இது நிச்சயமாக இராக்கிலிருக்கும் ஸ்வதந்திரத்தை அடக்கத்தான் செய்யப்படுகிறது".*

*(பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி).*

பிரிடிஷார் அங்கு வரும்பொழுது அங்குள்ளவர்களுக்கு ஆகாரம் முதலியத் தேவைகளைக் கொண்டுவந்ததாகவும், ஆனால் ஜெர்மன் மந்திரி கீரோபா, இராக்கிலிருந்து இரண்டு சாக்குத் தங்கம் எடுத்துச் சென்றதாகவும் எகிப்து பத்திரிகை ஆல்ஷூலா ஒப்பிட்டுச் சொல்லுகிறது.

இராக்கில் பிரிடிஷ் அரசாங்கம் இல்லை யென்றும், மட்டை தான் எல்லா வித அதிகாரத்தையும் செலுத்துகிறார் என்றும் யாவருக்கும் தெரியும். மேலும் இராக்கின் ஸ்வதந்திரம் கெடுதலையடையாமல் இருக்கிறதென்று அதன் வழியாகச் செல்லும் இந்தியச் சிப்பாய்களுக்கும் நன்றாகத் தெரியும். இதனால் நாஸிகளின் பொய் வெளியாகிறது.

## *தென் அமெரிக்காவில் ஜெர்மன் அரசாட்சியை நாட்டப் பிரயத்தனம்.*

### நாஸிப் புரட்சிகள் வெளியாயின.

அமெரிக்காவின் நடுபாகத்திலும் தென் அமெரிக்காவிலும் நாஸி முயற்சிகளை அடக்குவதற்கு தாமதமில்லாமல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை போலவே மற்ற நாடுகளிலும் நாஸி 5-ம் படையை ஒழிக்க எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த நடவடிக்கைகள் பிசகென்றும் ஜெர்மானியர் ஒன்றும் அறியாத அப்பாவிகளென்றும் பெர்லின் ரேடியோவில் கோபமாகக் கூக்குரலிடுகின்றனர்.

கீழ்கண்ட உண்மை நடப்புகள் நாஸிகளின் குற்றங்களை வெளிப்படுத்துகின்றன. அவர்களால் முன்பின் விரோதமாகச் சொல்லப்பட்ட வாக்குமூலம் குற்றங்களை ருஜூப்படுத்துகின்றன.

*"மதிவீனமாயும் தங்களுக்கேத் தீங்கை விளைவிக்கக்கூடியதுமான ஜனநாயக ஆட்சி தற்போது தென் அமெரிக்காவில் தானிருக்கிறது.........இப் பிரசாரத்தைச் செய்ய நம் ஜனங்களை அங்கே அனுப்பவேண்டும்.........அனேகமான யௌவன மனிதர்கள் தேவை"--(1933-ல் தென் அமெரிக்கத்தலைவருடன் ஹிட்லர் பேசியது அங்கு இருந்த டாக்டர் ராஷினிக் 'ஹிட்லர் பேசுகிறார்' என்ற புஸ்தகத்தில் அறிவித்தது).*

*"பிரேஸிலில் ஜெர்மன் அரசாட்சியை ஸ்தாபிப்போம்.........முதல் வில்லியம் சைனியத்தை எடுத்துக்கொண்டு தேசங்களைப் பிடித்ததுபோல் இல்லாமல் கண்களுக்குத் தெரியாத பிரசாரத்தால் பிடிப்போம்"—(முன் சொன்ன அறிக்கை).*



*"அர்ஜென்டைனாவும், பொலீவியாவும் முதலில் கவனிக்கத்தக்கவை"-(முன் அறிக்கை).*

*"மெக்ஸிகோ நம்மிடமிருந்தால் எல்லாக் கஷ்டங்களும் தீர்ந்துவிடும்.........அங்கிருக்கும் விளைவுபொருள்களால் ஜெர்மனி லாபத்தையும் பெயரையும் அடைய வேண்டும்"—(1934-ல் ஹிட்லர் டாக்டர் ராஷினிக் என்பவரிடம் சொன்னது).*

*"ஜெர்மனியிலும், இதாலியிலும் இருப்பதுபோல், அந்த சிறு ராஜ்ஜியங்களுக்கும் தேர்ந்தெடுக்கும் உரிமை இருப்பது கேவலம். கியூபா, உருகுவே, பொலீவியா இவையாவும் அனுமதேய ஸமஸ்தானங்கள். அதிலிருக்கும் ஜனங்களும் ஜெர்மானியர், இதாலியர் போலவா? நாகரீகமில்லாத மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மனிதர்களா? இவர்களுக்கும் சம உரிமையா!"—(1933-ல் சர்வ தேசத்தொழில் கூட்டத்தில் நாஸித் தொழில் தலைவர். டாக்டர் 'லே' என்பவரின் பேச்சு பாரிஸில் 'டாஸ்கியூ டாஜ்பெக்' என்ற பத்திரிகையில் வெளியானது).*

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 58.

1941—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ...23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 24, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பூவரசகுடி ... | மாலை | 6.00 |
| | | வெங்கடக்குளம் . | ,, | 6.30 |
| | 25, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 26, செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பொம்பூர் ... | ,, | 6.30 |
| | 27, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 28, வியாழக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 29, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | .6.30 |

### பிரஸங்கம் 59.

| | | | | |
|---|---|---|---|---|
| | 30, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 31, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | வயலோகம் ... | மாலை | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| செப்டம்பர் | ...1, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 2, செவ்வாய்க்கிழமை | நல்லூர் ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 3, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | திருமயம் ... | மாலை | 6.00 |
| | | கோனூபட்டு ... | ,, | 6.30 |
| | 4, வியாழக்கிழமை. | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 5, வெள்ளிக்கிழமை... | ராஜகிரி ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—23-8-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் ஆகஸ்டு மீ 30உ [ந. 59.

## முக்கியமான நடவடிக்கை.

சென்ற திங்கட்கிழமை டெல்ஹியிலிருந்து இரானில் எடுத்துக்கொண்ட ஆங்கில-ருஷ்ய நடவடிக்கையைப்பற்றி வந்த ஒலிபரப்பில், இந்தியாவுக்கு முக்கியமாயும், யுத்தப்போக்கின் பொதுவான அம்சங்களை விஸ்தாரப்படுத்தியும் இருந்தது. ஆகையால் தான் நமது அறிக்கையில் சாதாரணமாகப் பிரசங்கம் அச்சிடப்படும் முதல் ஸ்தானத்தில் இதைப் பிரசுரிக்கிறோம்.

இதைப்பற்றி விஸ்தாரமாக அடுத்த இதழில் வெளியிடுகிறோம்; ஆனாலும் பிரகிருதத்தில் நேசதேசங்கள் இரானில் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும், அந்த தேசத்தின் சில முக்கிய அம்சங்களையும்பற்றிச் சொல்லுகிறோம்.

1. கருங்கடல் வழியாக ஜெர்மானியர் முன்னேறிவருவது, முக்கியமாக இரானின் அரசாக்ஷிக்குக் கொஞ்சம் பயத்தை விளைவித்தது. ஏனென்றால் அங்கே ஏற்கனவேயே பலமான ஜெர்மன் ஐந்தாம்படை தாராளமாக உலாவி வந்தது. இப்படிச் செய்வது பின் முகமாக ருஷ்யர்களின் காகேஸஸ் பிரதேசங்களுக்கும்; மத்தியக்கிழக்கு, இந்தியா முதலிய பிரிட்டிஷ் ராஜ்ஜியங்களுக்கும் ஆபத்துதான்.

2. பிரிட்டிஷ்-ருஷ்ய கவர்ன்மெண்டார்கள் இதைத் தடுக்கவேண்டுமென்று இரான் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிய எச்சரிக்கைகளுக்கு சரியானபடி இல்லாமலும் தாமதமாயும் அனுப்பிய பதிலிலிருந்து இரான் கவர்ன்மெண்டாருக்கு ஜெர்மானியரை விரட்ட இஷ்டமில்லாமலோ, முடியாமலோ இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், யூகோஸ்லாவியா முதலிய நாடுகள் சீக்கிரமாக நாசமானதிலிருந்தும், இராக்,

ஸிரியாவைக் கைப்பற்ற உத்தேசித்த ஜெர்மானியர் அபஹரணம் செய்வதை நல்ல வேளையாகத் தீங்கு விளையும் முன்பே, தடுத்ததிலிருந்தும் ஷாவும் அவன் அரசாங்கமும் ஒருவித பாடமும் அறிந்துகொள்ளவில்லை. திருஷ்டாந்தங்களும் அநேகமாகப் பயன் படாததினால் பிரிடனும் ருஷ்யாவும் தங்களைக் காபந்து செய்துகொள்ளவே இவ்விதம் செய்ய நேர்ந்தது. அதில் பிரிடன், தான் காப்பாற்றும், பல ஜனங்களுக்காகவும் செய்தது.

3. யூக்ரேனில் மாரிகாலம் ஆரம்பித்துவிட்டதால் ருஷ்யர் முன்னேறுவது தடைபட்டால், துருக்கி வழியாகக் காகேஸஸ்ஸிலுள்ள எண்ணெயைக் கைப்பற்ற ஜெர்மனி பிரயத்தனம் செய்யும். இரானை வசப்படுத்திவிட்டால் துருக்கியைத் தனியாகப் பிரித்துவிடலாம். ஆகையால், இப்போது எடுத்துக்கொண்ட ஆங்கில-ருஷ்ய நடவடிக்கையினால் ஜெர்மானியருக்கு ஒருதடையாக ஆகி, ருஷ்யாவுக்கு சாமான் அனுப்ப மற்றொரு வழி திறக்கப்பட்டது.

4. மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் ருஷ்யாவுக்கு யுத்த தளவாடங்களை முடிந்த விதமாகவெல்லாம் அனுப்புவதென்று சபதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாரி காலத்தில் ஆர்க்டிக் கடல்பாதை சரியானதல்ல. வ்ளாடிவாஸ்டாக் மூலம் அனுப்புவதும் வெகுதூரம் பிடிக்கும். பர்ஸியன் கல்பும், இரானிய தரைமார்க்கமும் வசப்பட்டால் சுலபமாகவே ருஷ்யாவுக்குப் போய்ச்சேரும்.

5. 'அனுக்கிரமணம்' என்று பிரிடிஷ்-அமெரிக்க அறிக்கையில் கண்டிருப்பது சமீபத்திலும், உண்மையிலும் சொன்ன வார்த்தையாகும். ருஷ்ய கவர்ன்மெண்டார் இரானிலிருந்து தங்கள் தேசங்களுக்குப் போவதாகச் சொன்னதும் அதன் பயன்தான். ஆகையால் இரானின் ஸ்வதந்திரத்திற்கு ஜெர்மனியிடமிருந்துதான் ஆபத்து வரக்கூடும். இராக், ஸிரியாவிலுள்ள ஜனங்கள் ஜெர்மானியரால் தாக்கப்பட்ட பிறகு தான், தங்கள் அரசாங்கங்கள் நடுநிலையை வகித்தது, தங்களுக்கும், பொதுமக்கள் க்ஷேமத்திற்கும் குறைவு ஏற்பட்டதை அறிந்தமாதிரி இல்லாமல் முன்னாடியே இரானின் ஜனங்கள் தெரிந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

6. இதனால் இந்தியாவிற்கும், மற்றுமுள்ள ஹிந்து, கிறிஸ்தவர், முகமதியர்களுக்கும் ஆபத்தில்லை என்று தைரியப்படலாம். இந்த நியாயமான முக்கிய காரியம் இந்தியர்களுக்கு ஒப்படைத்ததிலிருந்து இந்தியர்கள் சந்தோஷப்படலாம். ஜெர்மானியரும் அவர்களால் ஏமாற்றமடைந்த பாரஸீகர்களும் தான் எதிர்க்கப்படவேண்டும். ஆனால் தன் மதத்தினர்களாகிய முஸ்லீம்களும் இதர வியாபாரிகளும் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஒதுங்கி நிற்பார்கள். இந்தியத் துருப்புகள் ஜெர்மானியரையும் அவர்களால் ஏமாற்றப்பட்டவர்களையும் ஈவு இறக்கமில்லாமல் எதிர்த்தும் இதர முகமதியர்களை ஸ்வதந்திர லக்ஷியமுடைய தன் மதத்தினர்களுக்கு நேயமாய் இருப்பார்கள்.



# இரானைப்பற்றிய விவரங்கள்.

## 1. அமைப்பும் சீதோஷ்ணமும்.

இரானை மூன்று தனிப்பட்ட பிரதேசங்களாகப் பிரிக்கலாம். அவையாவன :— வடக்கில் காஸ்பியன் மாகாணங்கள், உயரமுள்ள மத்திய பீடபூமி, பர்ஸியன் வளைகுடா பிரதேசம்.

(a) காஸ்பியன் மாகாணங்கள்.—இந்தப் பிரதேசம் பூராவும் பள்ளத்தாக்காகவும், எளிதில் அதனுள் பிரவேசிக்க முடியாதபடி அவ்வளவு தன்மையில் மரஞ்செடிகள் அடர்ந்த பெரிய காடுபோல் இருக்கிறது. கரையோரங்களில் காற்றினால் அலைகள் அடித்து அநேக மணல் குன்றுகள் வரிசை வரிசையாக இருக்கின்றன. அநேக சிற்றருவிகள் அங்கு பரவிச் செல்வதால் கடல் புகும் குட்டைகளும், சேற்று நிலங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் சீதோஷ்ணமும், மழையும் எப்பொழுதும் மிதமாகவே இருக்கிறது. ஜூன் மாதம் முதல் ஸெப்டம்பர் மாதம் முடிய ஈரக் காற்றும் பனியும் பெய்வதால், அங்கு வசிப்பதற்கு முடியாதபடி கொசு சதுப்பு நிலங்களில் ஏராளமாக மொய்க்கின்றன. நவம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் பாதிவரை சீதோஷ்ண ஸ்திதி மிதமாயும் சுகத்தைத் தருவதாயும் இருக்கிறது.

(b) மத்திய பீடபூமி.—இது இரானின் மூன்றில் இரண்டு பங்கு விஸ்தீர்ணமுள்ளது. அது 3,000 அடியிலிருந்து 4,000 அடிவரை அதிக உயரமுள்ளவை. அநேக சம வரிசைகளாக மலைகள் வடமேற்கிலிருந்து தென்கிழக்குவரை இருக்கின்றன. அதனால் இரானின் பெரும்பாகம் மலைப்பிரதேசமே. சில மலைகள் 100 மைல் வரையிலும் வியாபிக்கின்றன. அவைகளின் உயரம் சராசரி 8,000 அடி. ஆனால் சிற்சில இடங்களில் 15,000 அடி உயரமிருக்கிறது உண்டு. இந்த பீடபூமியின் மத்தியில் வடமேற்கிலிருந்து தென்கிழக்குப் பார்சமாக 800 மைல் நீளமும், 100 மைல் முதல் 300 மைல் வரை அகலமுமுள்ள ஒரு பெரிய பாலைவனப் பிரதேசம் இருக்கிறது. கிராமாந்திரங்கள் வெரும் பொட்டல்; ஒன்றும் விளையக்கூடாத இடம். மாரிகாலத்தில் ஜாஸ்தியாகப் பனி பெய்வதால், மலைப்பிரதேசங்களில் புல் பூண்டு உண்டாகி ஆடுமாடுகள் மேய்வதற்குச் சாதகமாய் இருக்கும். இதனால் பள்ளத்தாக்குகளின் வழியாய் அநேக வேகமாய்ச் செல்லும் சிற்றாறுகள் ஓடுகின்றன.

மாரிகாலத்திலும், கோடைகாலத்திலும் சீதோஷ்ணம் அதிகமாயிருக்கும். அங்கு உஷ்ணமும், குளிரும் ஜாஸ்தி. மொத்தமாக மழையில்லாமலும், சுத்தமாகவும், உலர்ந்தும், சாந்த ஆகாச வெளி ஸ்பஷ்டமாயும், மேகங்கள் இல்லாமலும் சரீர புஷ்டியைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கும். டிஸம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரை பனி ஏராளமாகப் பெய்கிறது. அது ஜூன், ஜூலை மாதங்கள் வரை மலையின் உச்சியில் உரைந்துபோய் நின்றுவிடுகிறது. அங்கு பருவகாலங்கள் திடீரென்று மாறுதல் அடைகின்றன; ஜூலையும், ஆகஸ்டும் தான் கடுமையான கோடைகாலம். அப்பொழுது சீதோஷ்ணம் சராசரி 105 டிகிரிவரையிருக்கும்.

அக்காலத்தில் ஏராளமான தூசியும், வெப்பமும், ஏராளமான மணலில் மொய்க்கும் ஈக்களும் கோடைகாலத்தில் மிகவும் தொந்தரவாகயிருக்கும். மழைப் பருவம் மாறி மாறிவரும். மொத்தத்தில் மழைமிக சொற்பம்தான், அதுவும் பொதுவாக நவம்பர் மாதத்தில்தான் பெய்கிறது.

(c) பர்ஸியன் வளைகுடா.—அதன் பிரதேசம் பூராவும் வண்டல் மண் நிறைந்த சமவெளியாக வெகுதூரம் வரை விஸ்தீர்ணத்தில் பரவியிருக்கிறது. ஒரே ஒரு இடத்தில் மட்டில் 30 மைல் நீளம் வரை வியாபித்திருக்கும் சராசரி 200 அடி உயரமுள்ள மணல் குவியல்கள் குறுக்கிடுகின்றன. இது அநேகமாய் பாலைவனமாகவே தோன்றும். சிற்சில இடங்களில்மட்டும் சாகுபடிக்கு லாயக்காய் இருக்கின்றன. கடற்கரை சமவெளிக்கும், மத்திய பீடபூமிக்கும் இடையில் மலைப்பாங்குப் பிரதேசம். அதற்கு பக்தியாரி மலை என்று சொல்வதுண்டு. அந்தப் பிரதேசத்தில் மோட்டார்கள்கூட போவது துர்லபம்.

ஜூன்மாதம் முதல் ஸெப்டம்பர் வரையிலும் உஷ்ணம் சகிக்கமுடியாது. அங்கு அடிக்கும் ஈரக் காற்றும் சேர்ந்து தேகஸ்திதியை சகிக்க முடியாமல் செய்துவிடுகிறது. டிஸம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் அசாத்தியமான குளிர்காலம். நவம்பர் முதல் பிப்ரவரி வரை மழைகாலம். சராசரி 5 அங்குலம் மழைபெய்யும்.

## 2. ஜனத்தொகை.

இரானின் ஜனத்தொகை மொத்தத்தில் ஒரு கோடி. அவற்றில் குர்ட்ஸ், லூர்ஸ், பக்தியாரிஸ், குயாஷ்கெய்ஸ், குர்கிலஸ் ஆகிய பல தனிப்பட்ட இரானிய ஜாதியர்கள் அடங்கியிருக்கிறார்கள். அச்சாதியர்களுக்கு தனித்தனி பாஷைகளும் உண்டு. ஜனத்தொகையில் முக்கால்பங்கு விவசாயிகள். பாக்கியுள்ளோர் நகரவாசிகள்; அவர்கள் சிலர் வியாபாரிகள், சிலர் தொழிலாளிகள்.

இரானியர்களின் பெரும்பாகம் ஷியா வகுப்பைச் சேர்ந்த முகமதியர்கள். ஆனால் குர்ட்ஸ் ஜாதியார் பெரும்பாலும் சன்னி வகுப்பைச் சேர்ந்தவர்கள். 1499-ம் ஆண்டுமுதல், இரான் தேசத்தில் ஷியா வகுப்பையே அரசாங்க மதமாக கருதப்பட்டு வருகிறது. அராபியர்கள் இரானைப் பிடிக்கும் முன் ஸ்வராஸ்டர் மதம்தான் ஆதி மதம். இரானியர்களை முகமதியர்கள் அநேக நிர்பந்தத்திற்குள்ளாக்கவும், அவர்களில் பலர் இந்தியாவுக்கு வந்து குடியேறினார்கள். இவர்கள்தான் இப்பொழுதும் சொல்லப்படும் பார்ஸி ஜாதியார்.

## 3. பட்டணங்கள்.

இரானில் முக்கியமாக நான்கு பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றிலும் லக்ஷம் ஜனங்களுக்கு மேற்பட்டே வசிக்கிறார்கள். (5,00,000) மேற்பட்டே ஜனங்களடங்கிய இரானின் தலைநகராகிய "டாஹரன்", உலகத்திலேயே விரிப்புகளுக்குப் பேர்பெற்ற "டாபிரஸ்", (2,00,000) நல்ல வியாபார ஸ்தலமான "இஸ்பஹான்" (1,03,000) ஷியா முகமதியர்களுக்கு க்ஷேத்திரமாய் விளங்கும் மெஷட் (1,25,000) ஆகிய இவைகள்தான். முகமதிய உலகத்திற்கே பேர்வாய்ந்த புண்ணிய ஸ்தலம், இரானிலுள்ள இந்தப் பட்டணம்தான்.



இதர முக்கியமான இடங்களில், ஆவாஸ் என்னும் நகரம் தெற்கு ரெஷ்டு பிரதேசத்திற்குத் தலைநகர். அதன் மூலமாகத்தான் காஸ்பியன் கடல் வியாபாரம் பூராவும் நடக்கிறது. மற்றுமுள்ளவை அடியில் குறிப்பிட்டிருக்கும் துறைமுகங்கள்.

## 4. துறைமுகங்கள்.

பர்ஸியன் வளைகுடாவில் இரானின் முக்கிய துறைமுகங்கள் பண்டர் ஷாபூர், கொரம்ஷார், அபடான், புஷைர்; கடலுக்கு 30-மைல் தூரத்திற்கப்பால் பண்டர்-ஷாபூர் இருக்கிறது. அது ட்ரான்ஸ்-இரேனியன் இருப்புப் பாதையின் தெற்குக் கோடி. கொரம்ஷார் துறைமுகம்தான் இரானியக் கப்பற்படையின் முக்கிய ஸ்தலம். அபடான் என்பது ஒரு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் துறைமுகம். அங்குதான் ஆங்கில-இரானிய எண்ணெய்க் கம்பெனியார் எண்ணெய் சுத்தம் செய்கிறார்கள். அது தற்காலத்து நாகரீக இங்கிலீஷ் கைத்தொழில் பட்டணம் போல் இருக்கிறது. காஸ்பியன் கடல் பக்கத்தில் பால்வி என்பது முக்கிய துறைமுகம். இன்னும் ட்ரான்ஸ்-இரேனியன் இருப்புப்பாதைக்கு வடக்கெல்லையாயுள்ள நாஷார், பந்தர்ஷா என்ற துறைமுகங்கள் இருக்கின்றன.

## 5. இருப்புப்பாதைகள்.

ட்ரான்ஸ்-இரானியன் இருப்புப்பாதை வடக்கில் பண்டர் ஷா-விலிருந்து தெற்கே பண்டர் ஷா பூர் வரை இந்த தேசத்தில் 868 மைல் நீளத்தில் குறுக்கே செல்லுகிறது. மலைப்பாங்கான பிரதேசம் வழியாக வெகுதூரம் இந்த இருப்புப் பாதை தேர்ச்சியடைந்த இஞ்சினியர்களால் மிகவும் சிரமப்பட்டு போடப்பட்டிருக்கிறது. இது போகும் வழியில் கிளைப்பாதைகள் கிடையாது. டாஹ்ரானிலிருந்து வடமேற்கில் ஸின்ஜான்வரை ஒரு கிளைப்பாதை செல்லுகிறது. அது ருஷ்யன் எல்லையிலிருந்து டாபிரஸுக்கு செல்லும் இருப்புப்பாதையுடன் சேர்க்கப்படும். இதிலிருந்து மெஷட் என்ற பட்டணத்துக்குச் செல்ல ஒரு கிளைப்பாதை போடப்பட்டுவருகிறது. அந்தப் பாதை இப்போது ஷாக்ரட்வரை இருப்புப்பாதை வந்திருக்கிறது.

## 6. ரோடுகள்.

இரானிய கவர்ன்மெண்டார் பட்டணத்தில் நல்ல வசதியான ரோடுகள்போட முக்கிய ஏற்பாடுகள் எடுத்துவருகிறார்கள். எங்கு பார்த்தாலும் மலைப்பிரதேசங்களால் சூழப்பட்டாலும், அதிக சிரமத்தின்பேரில் பெரிய, முக்கிய இடங்களுக்கு ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. காஷ்வின்-டாஹ்ரான்-கம்-ஹாமடான் என்ற நாலு பட்டணங்களிலும் சம்மதித்துக்கொண்டு தேசம் பூராவிலுமுள்ள இதர இடங்களுக்குப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. இராநுக்குச் செல்லக் கூடிய வழிகளாவன :—

(a) ட்ரான்-காஸ்பியன் இருப்புப்பாதையிலிருந்து.—மெர்வ் முதல் ஸாராக்ஸ் வரையிலும் ஒரு இருப்புப்பாதை செல்லுகிறது. அதன்பிறகு மெஷட்டின் வழியாய் டாஹ்ரானுக்கு ஒரு பாதை செல்லுகிறது. இத்தேசத்தின் முக்கியமான பாகத்திற்குச்செல்ல இது ஒரு சுற்றுவழி.

(b). காஸ்பியன் துறைமுகங்களிலிருந்து.—பண்டர் ஷா, நாஷர், பக்லவி என்ற துறைமுகங்கள் மேற்சொல்லிய நாலு பட்டணங்களுடன் ரோடுமூலம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(c) காகேஸஸின் வழியாக.—ஜுல்பாவிலிருந்து டாபிரஸ் வரையில் இருப்புப் பாதையும் ரோடும் இருக்கின்றன. அதிலிருந்த நல்ல பாதை ராஸ்வினுக்குப் போகும் கெர்மன்ஷாவுக்கும் ஹாமடானுக்கும் அவ்வளவு நல்ல பாதை கிடையாது: உருமியா என்ற ஏரியின் மேற்குக் கரை வழியாக ரோடு வழியாகவே ஐரோப்பாவுக்குச் செல்லலாம். இது ஹெயிடராபாட், கெர்மன்ஷா மூலமாகச் செல்லும்.

(d) அனடோலியாவிலிருந்து.—எர்ஸரோமிலிருந்து மாகூவுக்கும், டப்ரிஸுக்கும் சரியான பாதை இல்லை.

(e) இராக்கிலிருந்து.—மூன்று பெரிய பாதைகள் இராக்கிலிருந்து வருகின்றன. வடக்கே ரோவன்டூஸிலிருந்து ஹெயிடராபாடுக்கும் நடுவில் கானிக்கினிலிருந்து கெர்மன்ஷா, ஹாமடானுக்கும், மூன்றுவதாக பாஸ்ராவிலிருந்து கொரம்ஷா, ஆஹ்வஸுக்குச் சென்று ஹாமடான், டாஹ்ரானுக்கும் செல்லுகிறது.

## 7. எண்ணெய்.

இரானிலுள்ள எண்ணெய் பிரதேசங்களை 1993 முடிய ஆங்கில-இரானிய கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இவை பர்ஸியன் வளைகுடா ஆரம்பத்தில் தெற்கு அரபிஸ்டான் பொட்டல்களில் இருக்கின்றன. நப்டி-இ-ஷாவிலும் இராக்-இரானிய எல்லையிலும், பாக்தாத்திற்கு வடமேற்கிலும் இன்னும் ஒரு சிறிய எண்ணெய்ப் பிரதேசம் இருக்கிறது. இந்த இரண்டு எண்ணெய் கிணறுகளிலிருந்து, அபடன், கெர்மன்ஷாவாவிலுள்ள எண்ணெய் சுத்திசெய்யும் இடத்திற்குக் குழாய்கள் இருக்கின்றன. நப்டி-இ-ஷா சுரங்கமும் காளிக்கின் இடத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான எண்ணெய் தொழிலால் இரானுக்கு 10,00,000 பவுன்கள் வருஷத்திற்கு வரும்படி. மொத்த வரும்படியில் இது 100-க்கு 10. இதில் இரானியர்கள் உயர்ந்த சம்பளம் பெறுகிறார்கள், ரயில்வண்டிகளும் சல்லிசாக எண்ணெய் பெற்றுக்கொள்ளுகின்றன. அபடன் எண்ணெய் சுத்திசெய்யும் இடத்தில் மட்டில் 1937-ல் 1,00,00,000, டன் எண்ணெய் என்று சொல்லப்பட்டது. இது தான் கிழக்கு நாடுகளிலுள்ள பெரிய எண்ணெய் சுத்திசெய்யுமிடம்.

## 8. பொருளாதார நிலைமை.

சில வருஷங்களாக இரானின் பொருளாதார நிலைமை திருப்தியாகயில்லை. விளைபொருள்களையும், தொழிற்சாலைகளையும் போக்குவரத்துகளையும் அபிவிருத்தி செய்ய ஷா முயற்சித்தால் வெளிநாடுகளிலிருந்து சில சாமான்கள் வரவேண்டியதாயும் வரிவிகிதம் அதிகப்படுத்தவேண்டியதாயும் இருந்தது. தினசரிச் செலவும் அதிகப்படுத்த வேண்டிவந்தது. சில சமயங்களில் உணவுப்பொருள்களும்



குறைந்தன. 1941-ம் வருஷம் வந்த பஞ்சம் இந்தியாவிலிருந்து வந்த ஏராளமான கோதுமை வந்ததால் பஞ்சம் நிவர்த்திக்கப்பட்டது. நாணய மாற்றம் ரூபாய்க்கு ஐந்து ரியல் வீதம் வரையறுக்கப்பட்டிருந்தது. ரூபாய்க்கு 14 ரியல் வீதம் மாற்றவும் முடியும்.

## 9. சைனியம்.

இரானியச் சைனியம் 1,26,000 தலைவர்கள் கொண்டது. 18 பிரிவுகளும் யந்திரப்படையும் இருக்கிறது. நவீன ராணுவ முஸ்தீப்பும் இருக்கிறது. யுத்தங்களில் இதுவரை உபயோகப்படுத்தப்படவில்லை. ருஷ்யச் சைனியம் போலவே இதன் திறமை ஒருவருக்கும் தெரியாது.

125 விமானங்கொண்ட ஒரு சிறு விமானப்படை இருக்கிறது. பர்ஸியன் வளைகுடாவில் நிறுத்தப்பட்டு சில சிறு கப்பல்களும் இருக்கின்றன. இக்கப்பல் உத்தியோகஸ்தர்களுக்கு இதாலியர் பயிற்சி அளித்தார்கள்.

---

பிரஸங்கம் 59.

# விமான யுத்தம்.

## பிரிடன்மீது நடந்த யுத்தம்முதல் ஜெர்மனி தற்போது தாக்கப்படும்வரை.

சென்ற வருஷம் பிரிடன்மீது நடந்த யுத்தம்போல ஜெர்மனியின்மேல் நடைபெறுமா? விமானச் சண்டையில் அனுபவம் வாய்ந்த சில அனுகூலவாதிகள்—எல்லாம் நமது நன்மைக்குத்தான் என்ற நம்பிக்கையுள்ள நிபுணர்கள்—இதை ஆமோதிக்கின்றனர். முன் ஜாக்கிரதையான வேறு சிலர், சென்ற வருஷத்தைவிட அதிகமாக வரும் சரத் காலத்தில், நாஸிப் படையெடுப்பை பிரிடன் எதிர்பார்க்கவேண்டுமென்று சொல்லுகின்றனர். மற்றும் சிலர் இதுவரை நடந்த சண்டைகள் எப்படியானாலும், இனிமேல்தான் பிரிடிஷ் விமானங்களின் நிஜ பலத்தைக் காட்டவேண்டிய சமயம் வருமென்கிறார்கள். ஆனால் முன் நடந்த சண்டைகள் பிரிடிஷ் விமானங்களுக்கு அநேகமாக சாதகமாகத்தானிருந்தன. கடைசியில் சொன்ன கக்ஷியார்கள், ஏதோ லுப்ட்வாபிப் படை இதுவரை அதன் முழு பலத்தையும் காட்டவில்லையென்றும், இருவரும் வெற்றி கிடைக்கும்வரை கைகலந்து விமான யுத்தம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள். இதற்கு முன், விமானங்கள் கீழிருக்கும் லக்ஷியங்களையே தாக்கிவந்தன. இனிமேல் எதிரி விமானங்களுடன் சண்டைசெய்யவேண்டுமோம்.

உண்மையில் எந்த அபிப்பிராயம் சரியானதென்று தீர்மானிப்பதற்குள், பிரிடிஷ் விமானப்படைக்கும் ஜெர்மன் லுப்ட்வாபிக்கும் உள்ள முக்கிய வித்தியாசங்கள் கவனிக்கத் தக்கதாகும். பிரிடிஷ் விமானங்கள், கடல், தரைப்படை

களுடைய சம்பந்தமில்லாமலே யுத்தம் செய்யக்கூடிய அம்சம் உள்ளது. லுப்ட்வாபியோ ஜெர்மன் சைனியத்திற்கு ஒரு அங்கமாக உபயோகப்படுகிறது.

விமானங்களால், எதிரியைக் கண்டுபிடித்து, எங்குசென்றாலும் துரத்தி நாசம்செய்யும் முறை பிரிடிஷ்காரர்கள் செய்த புது தந்திரம். இந்த ஏற்பாட்டின்படி கடற்படையும், தரைப்படையும் சம்பந்தப்படாமல் விமானங்கள் தனியே எதிரியை நோக்கித் தாக்குவதால், நாஸிகளின் யுத்த முயற்சிகளெல்லாம் நாசமாக்கப்படுகின்றன.

ஆனால் பிரிடிஷ் விமானங்கள் மற்ற சைனியப் பகுதிகளுடன் சேர்ந்து கொள்ளவில்லை என்பது அல்ல—டங்கர்க், லிபியன் கடற்கரை மடபன், பிஸ்மார்க் என்ற கப்பலைத் துரத்தியது முதலிய சண்டைகளில் எல்லாப் பகுதிகளும் சேர்ந்துதான் ஒத்துழைத்தன. தனியாக விமானப்படை தன் இஷ்டப்படி தனக்கு முடிந்தவரை சண்டை செய்யும்படி சமீபத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது. கப்பல்களுக்கு உதவிக்காக கடல் விமானங்களும், நிலப்படையுடன் ஒத்துழைக்க பிரத்தியேக விமானங்களையும் வெவ்வேறுவிதமாக அமைத்துவுடன் ஆர். ஏ. எப். என்ற விமானப்படை சுயேச்சையாக, சக்தியுள்ள தந்திரங்களைக் கையாளும்படி பிரிக்கப்பட்டது.

ஜெர்மனி அடைந்த வெற்றிகளுக்கெல்லாம் லுப்ட்வாப்தான் முதல் காரணமாகச் சொல்லப்பட்டது. ஆனால் நிஜமான வெற்றி தரைப்படைதான் சம்பாதித்துத் தருகிறது. விமானங்கள் உபபலமாக இருந்து எதிரிமேல் பறந்து சைனியத்தைச் சின்னாபின்னப் படுத்தி, பொதுமக்களையும் கலங்கச் செய்கிறது. எதிரி விமானங்களுடன் சண்டை செய்ய விரும்புவதில்லை, எதிரி விமான பலத்தைக் குறைக்கவும் தந்திரம் போதாது. கடுமையாக மட்டும் தாக்கும்.

ஆனதால் பொதுவாகப் பேசுகையில் பிரிடிஷ் விமானங்கள் தனியே எதிரி விமானங்களுடன் சண்டை புரியவும், ஜெர்மன் லுப்ட்வாப் சைனியங்களின் உதவிக்காகவும் ஏற்பட்டது என்றும் சொல்லலாம்.

## நாளதுவரை ஜெர்மன் வெற்றிகள்.

லுப்ட்வாப் படையினால் அதிக வெற்றிகள் அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். யுத்த ஆரம்ப காலங்களில் போலந்தில், எதிரி மீளமுடியாதபடி ஜெர்மானியர் தாக்கினார்கள். ஹாலந்து, டென்மார்க் இடங்களிலும், பிரான்ஸிலும் ஈட்டிபோல் இப்படை பாய்ந்தது. பெல்ஜியன், டச்சு, பிரெஞ்சு சேனைகளெல்லாம் ஏராளமான ஜெர்மன் விமானங்களுக்கு அடியில் தவிடுபொடியாயின. பிரான்ஸிலிருந்த பிரிடிஷ்படை இதை ஒதுக்கிக்கொண்டு பிரிடன் வந்துசேர்ந்தது. நார்வே, கிரீஸ், கிரீட் முதலிய இடங்களில் நேசதேசச் சைனியம், லுப்ட்வாப் ஆகாயத்தைக் கவர்ந்து இருந்ததால் நாலா பக்கங்களிலும் தாக்குண்டது.

இப்படியாக அநேக யுத்தங்களில் வெற்றிமேல் வெற்றியை அடைந்து ஜெர்மன் விமானப்படை தன் காரியத்தை ஸ்தாபித்து வந்தது. ஆனால் நிஜமாக



இவை வெற்றியாகா. அபஜயமில்லாத தொடர்வெற்றியை அடையவில்லை; வேறு விமானப்படை தன்னை எதிர்க்காதபோது தான் இது வெற்றியடைந்தது.

## நம்பிக்கை துரோகமும் பயங்கரச் செய்கையும்.

உதாரணமாக போலந்தை எடுத்துக்கொள்வோம். அங்குள்ள விமானப்படை எண்ணிக்கைக் குறைவானபோதிலும் ஜெர்மன் விமானங்களுக்கு எதிராக சண்டை செய்யும் திறமை வாய்ந்ததுதான். இருந்தாலும் தோற்கடிக்கப்பட்டது. இதற்குக் காரணம், 1939-ம் வருஷம் செப்டம்பர்-மீ 1-ந் தேதி, ஒருவிதமான அறிக்கையும் அனுப்பாமல் போலந்துக்குச் சொந்தமான விமான நிலயங்களைக் கடுமையாகத் தாக்கி, தரையிலேயே இருக்கும்பொழுது போலிஷ் விமானங்கள் தாக்கப்பட்டது தான். அதனால் எதிரிகளை எதிர்க்கமுடியவில்லை. பட்டணங்களும், கிராமங்களும் களவீடுகளும் குண்டுகளால் தாக்கப்பட்டு பொதுமக்களும் பீரங்கிகளால் நாசமடைந்தனர்.

இப்படியாகத்தான் ஜெர்மனிக்கு புகழ் ஏற்பட்டது. இந்தக் கபடச் செய்கைகளுக்குச் சரியானபடி பிரிடிஷ் விமானங்களை ஓட்டிச்சென்று அதே போலிஷ் விமானிகள் இப்பொழுது பழிக்குப்பழி வாங்கிவருகிறார்கள்.

## ஜெர்மன் விமான உதவியும் அதனால் ஏற்பட்ட முடிவும்.

ஹாலந்திலுள்ள ராட்டர்டாமிலும் ஜெர்மன் விமானப்படையான லுப்ட்வாப் பெயர் வாங்கியது. அங்கே 1940-ம் வருஷம் மே-மீ 14-ந் தேதி பாதுகாப்பு முஸ்தீப்பில்லாத சமயத்தில் ஸ்திரீ, புருஷர்கள், குழந்தைகள் அடங்கிய 30,000-பேர்கள் 30 நிமிஷங்களுக்குள் நாசமாக்கப்பட்டனர். இதே மாதிரி மற்ற டச்சு நகரங்களிலும் செய்வார்களென்று டச்சு சேனாத்தலைவர் பயந்து சண்டையை நிறுத்திவிட்டார். இதே மாதிரி லுப்ட்வாப், வெற்றிகளுக்கு ஒரு முக்கிய காரணமாக இருந்து பெல்கிரேட்டில் இரண்டாவது வெற்றிபெற்றது.

இதற்கெல்லாம் ஜெர்மன் விமானிகளைக் குறைசொல்லுவது சரியல்ல. வெற்றியடைவதற்கு என்று தயார்செய்யப்பட்ட ராணுவத்தின் ஒரு பாகமாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். அந்த ராணுவ முறையோ சிப்பாய்களல்லாத பொது மக்களையும் கொல்லலாமென்ற கொள்கையுடன் கூடியது. இத்தகைய தீர்மானம் கொண்டு ஜெர்மானியர் படையெடுத்ததால்தான் ஜனங்கள் நாசமடைந்து சைனியங்கள் கைப்பற்றப்பட்டு விஸ்தாரமான தேசங்களும் ஜெர்மன் ஆளுகைக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் தான் ஐரோப்பிய நாடுகளைப் பிடித்து பலமடைந்ததாக ஹிட்லரும் கோயரிங்கும் சந்தோஷம் கொண்டார்கள்.

பொதுமக்களை எதிர்ப்பதாலும் விமானங்களின் கபடத் தந்திரத்தினாலும் மாத்திரம் இவ்வெற்றிகளை அடையவில்லை. சரியான முறையில் தரைப்படையுடன் கலந்துகொண்டும் சில முக்கிய வெற்றிகள் அடைந்திருக்கின்றன. நார்வேயையும் பிரான்ஸையும் நாஸித் தரைப்படை எதிர்க்கும்பொழுது லுப்ட்வாப்

விசேஷமாக உதவிற்று. விசேஷமாக பிரான்ஸில் இதன் உதவி அதிகம். பொது மக்களைத் தாக்கியது மிகவும் இழிவான போதிலும் ஜயத்தை அடைய இதன் உதவி நாடப்பட்டது.

## பிரான்ஸில் நேர்ந்ததென்ன?

இதுவரை அடைந்த வெற்றிகளுக்குள் பிரான்ஸில் தான் ஜெர்மனிக்குப் பெரியவெற்றி கிடைத்தது. அதில் ஜெர்மன் விமானங்கள் மிகவும் கடுமையான பிரெஞ்சு எதிர்ப்பை நோக்கிப் போராட வேண்டியிருந்ததா?

சில பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் ஜெர்மன் விமானங்களை எதிர்க்காமல், ஜெர்மனியிலுள்ள ராணுவங்களைச் சுலபமாகத் தாக்குவதற்கு பிரான்ஸில் இருந்தன. பிரான்ஸ், ஜெர்மனிக்கு பிரிடனைவிட சமீபத்தில் இருப்பதால் பிரெஞ்சு தளங்களிலிருந்து சுலபமாய்த் தாக்கமுடியும்.

இன்னும் சில பிரிடிஷ் விமானங்கள், பிரிடிஷ் நிலப்படைக்கு உதவி செய்தன. ஆனால் போதுமானபடியில்லாததால் பிரயோஜனப்படவில்லை. பிரெஞ்சுக்காரர்களுக்கும் போதுமான விமானங்கள் இல்லாததாலும், பிரிடிஷ்படை பெரியதாயும், தயாராகவும் இல்லாததாலும் நாஸிகளின் விமான, தரைப்படைகள் கலந்து பிரிடிஷ்படையைத் தாக்கின. பிரான்ஸிலும் இன்னும் மற்ற அரங்கங்களிலும் சில வெற்றிகள் ஜெர்மனிக்கு, புது தந்திரமான மின்னல் படையெடுப்பினால் கிடைத்தது உண்மைதான். ஆனால் இன்னும் யுத்தத்தை ஜயித்தாகவில்லை.

நாஸிகள் பிரான்ஸ் மூலம் செல்லும்பொழுது பிரிடிஷ் கன வெடிவிமானங்கள் பிரெஞ்சு தளங்களை விட்டு பிரிடன் வந்து அங்கிருந்துகொண்டு ஜெர்மன் தளங்களைத் தாக்கின. பிரிடிஷ், பிரெஞ்சு சிறிய விமானங்கள் எண்ணிக்கைக் குறைவினால் எதிரிகளிடமிருந்து மீள முடியவில்லை. இருந்தாலும் தைரியமாக எதிர்த்து நின்றன.

## லுப்ட்வாபியின் முதல் தோல்வி.

டன்கர்க்கில்தான் லுப்ட்வாப் முதல் முதலில் தோல்வியடைந்தது. ஹிட்லரின் விமானிகள், பிரிடிஷ் சிப்பாய்களைத் தோற்கடித்து சைனியக்களால் சூழ்ந்திருக்க வேண்டியதுதான். ஆனால் அப்படி ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் பிரிடிஷ் நிலப்படை முறிபடவில்லை. மேலும் பிரிடிஷ் விமானங்கள்—முட்டுக்கட்டை, ஹரிகேன், எரி விமானங்கள் ஜெர்மன் தொந்தரவைக் குறைத்து விட்டன.

அச்சமயத்தில் பிரிடிஷ் பைடர் விமானங்களும் இங்கிலாந்தின் நிலயங்களுக்கு வந்துவிட்டன. அவை சமுத்திரத்தைத் தாண்டி, அஞ்சல் புரிந்து, நிலப்படையை எதிரி விமானங்களிலிருந்து காப்பாற்றியது. இதுதான் சரித்திரத்திலேயே முதல் முதலாக நடந்த விமானப் போர்.



முடிவில் பிரிஷ்டி விமானப் படைக்குத்தான் வெற்றி. இதற்கு அறிகுறியாகத் தான் நிலப்படையை பத்திரமாகக் காப்பாற்றி பிரிடன் கொண்டுவந்து சேர்த்தது. இதைவிட மற்றொன்று கவனிக்கத்தக்கது. சரியான சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் ஏராள பைடர் விமானங்கள் தங்கள் தளங்களிலிருந்து வெகுதூரம் சென்று ஜெர்மன் பாம்பர்களையும் பைடர் விமானங்களையும் பாழாக்கின. ஒரே நாளில் 78 நாஸி விமானங்கள் கைப்பற்றப்பட்டதாக பிரிடிஷ் அதிகாரிகளால் கணக்கிடப்பட்டிருக்கிறது. 200 என்றும் சொல்லுகிறார்கள். இக்காரணங்கள் பற்றி டன்கர்க் விமான யுத்தத்தில் பிரிடிஷ் விமானங்களின் உயர்வு மேலானது, அவ்வுயர்வு நாளது வரையில் குறையாமல் இருக்கிறது.

## டன்கர்க்குக்குப் பிறகு.

இதற்குப் பிறகு இரு விமானப்படைக்கும் மறுபடி சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆனாலும் பிரெஞ்சு விமான தளங்களை இழந்தாலும் தீவிரமான திட்டத்துடன் பிரிடிஷ்படை இருந்தது. நாஸி விமானங்கள் இங்குமங்கும் பிரிடனைத் தாக்கியதால் ஒரு நிச்சிதா புத்தி அவர்களுக்கு ஏற்படவில்லையென்று தெரிந்தது.

இதன் பிறகு பிரிடன்மேல் ஜெர்மானியர்கள் கண்மூடித்தனமாக மின்னல் படையை அனுப்பியபோது இருபடைகளின் வித்தியாசம் அதிகம் புலப்பட்டது. லுப்ட்வாப் லக்ஷியத்தை நிச்சயம் செய்துகொள்ளாமல் துர்ப்பல ஹிம்ஸையை விளைவித்தது; பிரிடிஷ் விமானங்கள் போட்ட திட்டப்படி சண்டை செய்ய ஆரம்பித்தன. ஜூன் மாதத்திற்குப் பிறகு ஒவ்வொரு இரவிலும் பத்திரிகை பறக்க விடுவதாலும், வேவு பார்ப்பதாலும், பிரிடிஷ் விமானங்கள், மாரி காலம் பூரா, ரூர், ரைன்லாந்து, ஜெர்மனியின் வடமேற்கிலுள்ள தொழிற்சாலைகள், யுத்த சாமான்கள் செய்யுமிடங்கள், எண்ணெய் சுத்தி செய்யுமிடங்கள், முக்கியமாகப் போக்குவரவு சாதனங்கள் இவைகளை குண்டுகளால் அழித்தன.

ஆகாய விமானப்படை இம்மாதிரி தாக்குவதினால் ஜெர்மனியை பிரிடன் படையெடுப்பதற்கு ஆரம்ப முயற்சி செய்ததென்று வைத்துக்கொள்ளக்கூடாது. ஜெர்மன் சைனியம், கப்பற்படை, விமானப்படை இவற்றைக் குறித்து பிரிடிஷ் விமானப்படை பொருட்படுத்தவில்லை. ஜெர்மானியர்களுக்கும், ஜெர்மன் சாமான்களுக்கும் போக்குவரத்தில்லாமல் தடை செய்து, மொத்தத்தில் ஜெர்மனிக்கு திண்டாட்டம் உண்டாக்க வேண்டுமென்பதே அதன் முக்கிய நோக்கம். 'பாம்பர்' விமானப்படை தன் நோக்கம் போல் தனி முறையைக் கையாண்டு சண்டையிட்டு வருகிறது.

## பிரிடனைப் படையெடுக்க ஜெர்மானியர்கள் ஏற்படுத்திக் கொண்ட தளங்கள்.

பிரிடிஷ் விமானப்படையிலுள்ள உள்சபைகளில், ஜெர்மன் சைனியம், கப்பற்படை, விமானப்படை இவற்றைத் தாக்க மந்திராலோசனை செய்து வந்தார்கள். ஏனென்றால் ஜெர்மன் விமானப்படை, நிலப்படை, கப்பற்படைகளெல்லாம்

ஒரு பெரிய காரியத்தைச் செய்துகொண்டிருந்தது. உதாரணமாக புதிதாக ஜயித்த பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, இந்த இடங்களிலுள்ள ஆகாய விமான நிலயங்களில் ஸ்தாபித்துக்கொள்ள அப்போது பரபரப்பாக இருந்தது. வடகடலுக்கப்பாலும், பிரிடிஷ் கால்வாய்க்கப்பாலும் அலைகளைத் தாண்டி பிரிடன் கரையிலுள்ள துறைமுகங்களுக்குப் போய்ச்சேர லக்ஷக்கணக்கான ஜெர்மன் நிலப்படைகள் குழுமிக்கொண்டிருந்தன. ஜெர்மன் கப்பற்படை, அந்தத் துறைமுகங்களுக்கு வியாபாரக் கப்பல்களும், சிறுபடகுகளும், போய் வர பாதுகாப்பு அளித்துவந்தது. மேலும் ஜெர்மனி, பிரிடனைத் தாக்கக்கூடிய சைனியத்தை, வியாபாரக் கப்பல்கள் மூலமாகவும், சிறு கப்பல்கள் மூலமாகவும் கால்வாய்க்கு அக்கரை சேர்க்க எதிர்பார்த்து வந்தது. இங்கிலாந்தைப் படையெடுக்க இவ்வித முயற்சிகள் 1066-ம் வருஷத்திற்குப் பின்னால் இதுவரை ஏற்பட்டதேயில்லை.

தெற்கு நார்வேயிலிருந்து 'பாஸ்-டி-கலே' வரைக்கும் இன்னும் தெற்கேயுமுள்ள படையெடுப்பு தளங்களைப் பிரிடிஷ் விமானப்படை, இராக்காலங்களில் போய் தாக்கிவந்தது. அவைகள் போய் தாக்கும் இடங்களடங்கிய ஜாபிதாவில் தெரிந்த இடங்களும் இருக்கின்றன. யுத்த சமாசாரப் பத்திரிகைகளிலேகூட கண்டறியாத இடங்களும் இருக்கின்றன. அங்கே 'ஹாம்' என்ற படை சேகரிக்கும் துறைமுகம் இருக்கிறது. அதில் நேர்த்தியாக ஒரு வெடிகுண்டு போட்டால் ருமேனியாவுக்கும் ஜெர்மனிக்கும் போய்க்கொண்டிருக்கும் இருப்புப்பாதைக் கால அட்டவணை தடுமாறிப்போகும்; ஜெர்மன் ரீச்சில் எல்லா இடங்களைக் காட்டிலும் வெகு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட 'டார்ட்மெண்டு-எம்ஸ்' கால்வாயின் மேலுள்ள பெரிய பாலம், ஹாம்பர்க்கில் குறுக்கிலும் நீளத்திலும் அநேக சதுர மைல்கள் அடங்கிய கப்பல் துறைகள், சரக்குகள் வைக்கும் பண்டசாலைகள்; ஸெகோஸ்லாவோகியா, எஸ்ஸென் இவைகளிலுள்ள வெடிமருந்து செய்யும் தொழிற்சாலைகள்; இன்னும் கிரிஸ்டியான்ஸான்டிலிருந்து கலே வரையிலும், அதற்கப்பாலுமுள்ள படையெடுப்பு தளங்கள்; இவைகள் பிரிடிஷ் விமானப்படை தாக்கும் லக்ஷியங்கள். இவ்வளவு இடங்கள் இதுவரையில் ஒரு விமான லக்ஷிய ஜாபிதாவில் அடங்கியதில்லை.

## பிரிடனின்மேல் படையெடுப்பு.

ஆனால் ஜெர்மன் விமானப்படையெடுப்பு ஆரம்பத்தில் பிரமாதமாய் ஒன்றுமில்லை. சிற்சிறு சண்டைகள் கண்ட இடங்களில் நடந்தன. ஜூலை மாதமுதல் சிறிய கூட்டங்களாக நாஸி விமானங்கள் பிரிடிஷ் தீவுக்கோட்டையின் பேரில் இரவும் பகலும் பறந்து. "ஆச்சரியகரமாகத் தோன்றிய பிரகாரம் கண்ட இடங்களில்" வெடிகுண்டுகளைப்போட்டன.*

* 'வெற்றிக்கான விமானப்படையெடுப்பு' என்ற பெங்குவின் புஸ்தகத்தில் ரோனல்டு வாக்கர் எழுதியது.



இம்மாதிரி பிரிடனுக்குள் நடந்த விமானத் தாக்குதல்களில் பிரிடிஷ் ஜனங்களின் மனோதிடத்தை மாற்ற வேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தவிர வேறு எண்ணம் இருக்க சம்பாவிதமில்லை. துறைமுகங்களை நோக்கியும், சமுத்திர கரையோரமாகவும் செல்லும் பாதுகாப்புக் கப்பல்கள் விஸ்தாரமாகவும், பலமாகவும் தாக்கப்பட்டன. பிற்பட்டு நடந்த தாக்குதல்களைக் காட்டிலும், முதல் வாரங்களில் நடந்தது அவ்வளவு தீவிரமாயில்லை. பிரிடிஷ் ஆகாயப்படை நிலயங்களில், முக்கியமாக இங்கிலாந்தின் தென்கிழக்கு மூலையிலுள்ளவைகளில் உக்கிரமான தாக்குதல்கள் ஏற்பட்டன. அங்கேகூட 'ஹெல்ஸ் கார்னரில்' கவனிக்கத் தகுந்த அளவாய் ஒரு விமானப்படை நிலயம் கூட பழுதாக்கப்படவில்லை.

ஆகஸ்டு மாத நடுவில் பிரிடனின் மேல் செய்த யுத்தம் கடுமையாயிற்று. ஸெப்டம்பர் மாத நடுவில் பிரிடனை நிலப்படையைக்கொண்டு தாக்கப் போவதாகவும், அதற்கு ஆரம்பமாக ஒரு மாதம் இடைவிடாது விமானங்களால் தாக்கப்பட்டது. இராக்காலங்களிலுள்ள எதிர்ப்பு கவனிக்கத் தக்கவாறு வலுக்கப்பட்டது. 100 'பாம்பர்' விமானங்கள்வரை ஒவ்வொரு இரவிலும் வந்து ஏராளமான வெடிகுண்டுகளைத் தோன்றியபடி போட்டன. ஆனால் சேதம் வெகு சொற்பம்.

## பகல் காலத்தில் தாக்குதல்.

இவ்விதமிருக்கையில் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதியில் பகலில் எதிர்ப்புகள் வெகு மும்முரமாகத் துடங்கின. வெகு சீக்கிரத்தில் ஜெர்மானியருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுவிட்டது. அன்றைய தினத்தில் 60-விமானங்களும், ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி மறு 60-விமானங்களும், அதற்கு மறு நாள் உபரியாக 62 விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன. 'பைடர்', விமானங்களால் துரத்தப்பட்ட ஏராளமான பாம்பர் விமானங்கள், இங்கிலீஷ் கால்வாய் வழியாய் சரமாரியாக வந்தன. ஆனால் அங்கு பிரிடிஷ் 'ஹரிகேன்'களும், ஸ்பிட்பையர்களும் காலிகோ துணியைக் கத்தியால் கிழித்தபொழுது ஏற்படும் சத்தம்போல் பூமியில் இருப்பவர்களுக்கு கேட்கும்படி எதிரி விமானப்படையை அவ்வளவு பலமாகத் தாக்கிப் பிளந்துவிட்டன. ஆகஸ்டு மாதம் 13-ம் தேதி நடந்த எதிர்ப்பில், 78 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. ஆனால் பிரிடிஷ் விமானப் படைக்கு 13 பைடர் விமானங்கள்தான் சேதம்.

ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியன்றுதான் ஜெர்மானியர்களின் பகல் எதிர்ப்பு உச்சஸ்தானத்தை அடைந்தது. இங்கிலாந்து தென் கிழக்கிலும், வடக்கிலும் 'டைன்' நதி தீரத்திலும், 'தேம்ஸ்' நதிமுகத்துவாரத்திலும் லண்டன் பிரதேசத்திலுமுள்ள விமான நிலயங்களை, 1,000 ஜெர்மன் விமானங்களுக்கு மேல் அன்று வந்து தாக்கின. யுத்தத்தின் இறுதியில் ஜெர்மன் விமானப்படைக்கு 180 விமானங்கள் நஷ்டமாயின. ஆனால் பிரிடிஷ் விமானப்படைக்கு 34 விமானங்கள் தான் நஷ்டம். அதிலும் 17 விமானிகள் தப்பி வந்துவிட்டார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகும் 1,000 ஜெர்மன் விமானங்கள் 'ஹெல்ஸ்' மூலையிலிருக்கும்

விமான நிலயங்களைத் தாக்கின. அதில் ஜெர்மனிக்கு 153 விமானங்கள் சேதமாயிற்று; ஆனால் பிரிடனுக்கு 22 பைடர் விமானங்களும், 10 விமானிகளும் தான் நஷ்டம்.

**மறுபடியும் 'லுப்ட்வாப்' தோற்கடிக்கப்பட்டது.** எண்ணிக்கைகளினால் எதிரியைத் தோற்கடிப்பதென்பது சாத்தியமில்லாமல்போய்விட்டது. ஐயமுள்ள படையெடுப்புக்கு அறிகுறியான தாக்குதலை அதனால் செய்யமுடியவில்லை. ஜனங்கள் பீதி அடையுமாறு செய்வதற்குப் பாதுகாப்பில்லாத நகரங்கள்பேரில் வெடிகுண்டுகளைப் போட்டும், ஸ்திரீகளையும் குழந்தைகளையும் யந்திர பீரங்கிகளால் சுட்டும், தாக்கியதில், 'லுப்ட்வாப்'க்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. 'யூங்கர்'கள் 88, 'ஹீன்கல்'கள் 111, 'டார்னியர்'கள் 215, இம்மாதிரி அதிகம் வேகம்கொண்ட 'கோயரிங்' பாம்பர் விமானங்கள், பிரிடிஷ் 'ஹரிகேன்'களாலும் 'ஸ்பிட்பையர்'களாலும் நிகரில்லாமல் தாக்கப்பட்டன. 'யூங்கர்'கள் 87 என்று, பெருமைப்படுத்திவந்த பாய்ச்சல் பாம்பரும், இவைகளுக்குச் சுலபமான இரையாகிறது.

## லண்டனைப் பிடிக்க சண்டை.

ஆகஸ்டு மாதம் பாக்கியிலும் சண்டை நின்று பாடில்லை. ஜெர்மானியர்கள் புதிய தந்திரங்களைக்கண்டு பிடிக்க முயன்று வந்தார்கள். இராக்காலத்தில் வெடிகுண்டு போடுவது அதிகரித்தது. நாஸிகளும், எதிர்ப்பில்லாத இடத்தையும் தங்களைத் தாக்காமல் பத்திரமாயுள்ள இடத்தையும் தேடி வெடிகுண்டு போட்டு வந்ததால், இராக்காலத் தாக்குதல்களில் நாஸிகளுக்கு அதிகச் சேதமில்லை. அவர்களுடைய விமானப்படை இராக்காலத்தில் விஞ்ஞான சாஸ்திரப்படி தாக்குவதற்கு தேர்ச்சியடைந்தவர்களல்ல. இம்மாதிரி புதிய உபாயங்கள் கையாண்டது அவர்களுடைய பகற்காலத் தாக்குதல்கள் பயனற்றவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டதைக் காண்பிக்கிறது.

செப்டம்பர் மாதம் 7-ம் தேதி பிரிடனின் பேரில் நடந்த யுத்தம் லண்டன் சண்டையாக மாறிவிட்டது. கோயரிங் வடபிரான்ஸுக்கு ஓடிப்போய் தன் முயற்சிகளுக்குப் பணியப்படாமலிருக்கும் தீவுகளின் பேரில் உள்ள தாக்குதல்களைத் துரிதப்படுத்த அன்று பிற்பகலும் சாயங்காலமும் 1,000 விமானங்களுக்கு மேல் அனுப்பினான். அதில் 103 விமானங்கள் நஷ்டம், அதிகக்கெடுதியுண்டாயிற்று, பெரிய தீக்கள் மூட்டப்பட்டன, அநேக ஜனங்கள் கொல்லப்பட்டார்கள்.

அதற்கடுத்த மூன்று நாட்களிலும் தாக்குதல் தொடர்ந்து நடந்தது; ஆனால் செப்டம்பர் மாதம் 11-ம் தேதி இரவில், தேச சரித்திரத்திலேயே கேட்டிராத பெரிய விமானம் சுடும் பீரங்கிகள் அப்பாம்பர் விமானங்களை அடித்துத் துரத்தி விட்டன. ஆனால் அப்பொழுது நாஸிகள் லண்டன் பலஹீனமாயுள்ள இடமென்று தப்பு அபிப்பிராயம் கொண்டார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அவர்கள் செய்தது தவறு என்று உலகம் பூராவுக்கும் இன்று தெரியும். லண்டனில் வசிக்கும் சிறுவர்களுக்குக்கூட அவர்கள் செய்தது பிசகென்று அப்பொழுதே தெரியும்.



## வார இறுதியில் நடந்த பெரிய படையெடுப்பு.

செப்டம்பர், 15-ம் தேதி சனிக்கிழமையில் பிரிடனை, ஜெர்மன் 'லுப்ட்வாப்' முழு பலத்துடன் தாக்கிற்று. அவ்வார முடிவில் கோயரிங் பாம்பர் விமானங்களும், பைடர் விமானங்களும், ஜெர்மன் நிலப்படை வருவதற்கு ஒரு வழி ஏற்படுத்தியிருக்கவேண்டும். அன்று காலை முதல் அநேக மணி நேரம் தொடர்ச்சியாகவும், சாரிசாரியாகவும் இங்கிலாந்தின் தெற்கேயுள்ள மலை உச்சிகளுக்குமேல் டார்னியர் பாம்பர்கள், ஹீன்கல் பாம்பர்கள், பைடரும்—பாம்பரும் கூடின மெஸர்ஷ்மிட் விமானங்கள், யூங்கர் பாய்ச்சல் விமானங்கள் பறந்து வந்தன. அவைகளுக்குப் பின்னால் அடிக்கடி திரும்பவும், கர்ணம்போடவும் ஹேதுவாயுள்ள மெஸர்ஷ்மிட் பைடர்கள் பாதுகாப்பிற்காகச் சென்றன. சீக்கிரத்தில் அவைகள் திரும்பி வந்து விட்டன; வரிசையாயில்லாமல் சிதறுண்டிருந்தது. இது சமயம் பைடர்கள் மாத்திரம் கர்ணம் போடவில்லை. எல்லாம் உருண்டு, பிறண்டு வந்தன. (வேகமாகப் பறக்க முடியாமல் போன சிலவைகளைத் தவிர) ஜெர்மன் விமானப் படை எல்லாம் எவ்வளவு வேகமாகச் செல்லக்கூடுமோ, அவ்வளவு வேகமாக வடக்கு பிரான்ஸிலுள்ள அவைகளின் நிலயங்களுக்குத் திரும்பி வந்திறங்கின. பிரிடிஷ் ஹரிகேன்களும், ஸ்பிட்பையர்களும் அவைகளைப்பின்பற்றித் துரத்தின.

அன்றைய தினம் 1,000 நாஸி விமானங்கள் பிரிடன் கடற்கரையைத் தாண்டிச் சென்றன. அவைகளில் குறைந்த பக்ஷம் 230 விமானங்கள் சேதமாயின. போரில் இவ்விதமாக பிரிடிஷ் விமானப்படை மகத்தான வெற்றியை அடைந்தது.

## ஈட்டி முனை மழுங்கிவிட்டது.

அந்த வார முடிவில் லுப்ட்வாபுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டதோடு நிற்கவில்லை. கால்வாய்க்கு அப்புறத்தில் உண்மையாக நடந்த சங்கதிகளைப்பற்றி, பிரிடிஷ் கவர்ன்மெண்டும் ஜெர்மன் கவர்ன்மெண்டும், இதுவரை ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. ஆனால் அமெரிக்கர்கள், நாஸிப் படைகள் பிரிடனைத் தாக்க உண்மையாகவோ அல்லது ஒத்திகை செய்யவோ படகிலேறிச் சென்றனர், என்பதை நம்புகிறார்கள். (இது சமயம் பெரும்பான்மையான பிரிடிஷாரும் பிரெஞ்சுக்காரர்களும் அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார்கள்). அவ்வாறு படகுகள் வந்ததை பிரிடிஷ் விமானப்படையின் இராக்கால பாம்பர்கள் கண்டுபிடித்தன. சைனியம் ஏற்றிவந்த ஜெர்மன் படகுகளை பிரிடிஷ் கப்பற்படை அழித்துவிட்டது.

உண்மையில் என்னதான் நடந்தது? நமக்குத் தெரியாது; செப்டம்பர் மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை பிரிடிஷ் கடற்கரைகளைத் தாண்டி நிலப்படைக்கு ஈட்டி முனையாகப் படையெடுத்த ஜெர்மன் விமானங்கள் மறுமுறை இதுவரை தலைகாட்டவேயில்லை. மறுபடி எப்பொழுதும் நாஸிகள் இவ்வளவு தொகுதிகளுடன் வரவுமில்லை, எண்ணிக்கைகளினால் தாக்கக்கூடிய மின்னல் சண்டை உபாயத்தை மறுமுறை கையாளவுமில்லை. அதற்குப் பதிலாக இராக்காலத்தில் பிரிடனை சொற்பமாகத் தாக்கி நச்சுச்சண்டை செய்ய ஆரம்பித்தது. இம்மாதிரி நச்சுச்சண்டை ஜெர்மனியின்பேரில் பிரிடிஷ் விமானப்படை செய்து

வரும் முதன்மையான உபாயத்தைப்போல் கிட்டதட்ட இருக்கிறது. ஆனால் அது விஞ்ஞான சாஸ்திரத்தை ஒத்ததாகவுமில்லை, பலிதமாகவுமில்லை என்று நம்ப இப்பொழுது போதுமான முகாந்திரம் இருக்கிறது.

சென்ற சரத் காலத்திலும், மாரிகாலத்திலும் சீதோஷ்ண நிலைமை இடங் கொடுத்தபொழுது, பிரிடிஷ் பட்டணங்களையும், நகரங்களையும் முக்கியமாக துறைமுகங்களையும் வெகு உச்சியிலிருந்து தாக்கின. அவற்றின் முடிவும் பல வகைப்பட்டவை, அதிக நஷ்டம் நேர்ந்தது என்றாவது, ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிந்தார்கள் என்றாவது, பிரிடனில் நேர்த்தியாயிருந்த பல இடங் களும் (குருபியாயிருந்த பல இடங்களும்) அழிந்தன. இதை மறுக்க இடமில்லை. நாஸிகள் கோபமடைந்த சமயத்தில் கவென்டிரியிலும் லண்டன் நகரத்திலும் உண்டாக்கின பெரிய தீ விபத்துகளும், சாஸ்வதமாக அநேக இடங்களை பாழாக்கி விட்டன. பிரிட்னில் நடந்த சண்டையில் லுப்ட்வாப் தன் வேலையைச்செய்து இதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. வெகுதூரம் பறக்கும் பாம்பர் விமானங்கள் ஜெர்மன் "யு" படகுகளோடு சேர்ந்துகொண்டு இங்கிலாந்தை கடற்முற்றுகையும் போட்டன. ஆனால் எதிர்பார்த்தபடி 1910-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் அவர்கள் போட்ட திட்டப்படி பிரிடன் சரணமடைய வில்லை.

ஆனால் இதன் பிறகு பிரிடிஷ் விமானப்படை சும்மாயில்லை. அடிக்கடி ஜெர்மன் லுப்ட்வாப் திடீரென்று நச்சுச்சண்டை ஆரம்பித்தது. பிரிடிஷ் விமானப்படை திடீரென்று புதிதான ஒரு நீண்ட திட்டத்தை அனுசரிக்க வேண்டியதாயில்லை. எப்பொழுதும் அதன் நோக்கம் ஒன்றேதான். ஜெர்மன் தொழிற்சாலைகள், ஜெர்மன் கப்பல் துறைகள், கப்பல் கட்டுமிடங்கள், ஜெர்மன் வெடிமருந்து செய்யுமிடங்கள், எண்ணெய் சுத்திசெய்யும் இடங்கள், இவற்றை எல்லாம் காட்டிலும் எந்த விதமான ஜெர்மன் போக்குவரத்து சாதனங்களும், பிரிடிஷ் பாம்பர் விமானங்களின் பிரியமான லக்ஷியங்களாக இன்னும் இருந்து வருகின்றன.

## பகலிலும், இரவிலும்.

ஆபிரிக்கா, சமீப கீழ்திசை இந்த இடங்களில் பிரிடிஷ் விமானப்படை, வெற்றிகளும், தோல்விகளும், சரித்திரத்தில் சொல்லக்கூடிய புகழ்ச்சிகளும் பிசகுகளும், மாறி மாறிச் செய்துகொண்டு எதிரியைத் தேடிச்செல்லுகின்றன. இங்கு பிரிடனில் ஜெர்மனியிலுள்ள ஜெர்மானியர்களைத் தாக்குவதுதான் அதன் முதல் வேலை. அதை பாம்பர்கள் செய்து வருகின்றன, சென்ற வருஷத்தைக் காட் டிலும் இப்பொழுதுள்ள பாம்பர்கள் மிகப் பெரியவையாயும், நல்லவையாகவும் இருக்கின்றன. அவைகளிலுள்ள வெடிகுண்டுகள், கனமாகவும், அதிகப்பேர் களுக்கு மரணம் உண்டாக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன; ஒரு பிரிடிஷ் படை விமானம் இந்த சமயங்களில் ஜெர்மனியின் பேரில் இராக்காலங்களில் பறந்து, சென்ற மாரிகாலத்தில் ஒரு முழுவிமானப்படை உண்டாக்கின மரணத்தை யும் சேதத்தையும் விளைவிக்கிறது.



இந்தக் கோடை காலத்தில் நாஸிகளின் இராக்கால எதிர்ப்பு ரொம்பவும் குறைவு. அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவது, அவர் கள் வருவதைத் தெரிவிக்க பிரிடனில் வைக்கப்பட்டிருக்கும் ரேடியோ நிலயங்கள். இரண்டாவது ஹிட்லர் ருஷ்யாவின் பேரில் படையெடுத்திருப்பது. ருஷ்யப் போர்முனைக்கு மேற்கு ஐரோப்பாவிலிருந்து ஒரு ஜெர்மன் விமானங் கூட கொண்டுபோகாமலிருந்தாலும் பிரிடிஷ் விமானங்கள் முதன்மையான திட்டப்படி படையெடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பிரிடிஷ் விமானப்படைகளுக்கு இராக்காலத்தில் தாக்குவதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. வெகு வருஷங்களாக இருட்டின பிறகு பறப்பதும் வெடிகுண்டு போடுவதும் பழக்கிக்கொண்டு, அதில் சரியான குறியும், சாமர்த்திய மும் அடைந்திருக்கின்றன. இவ்வளவு சிரமப்பட்டு அடைந்த பயிற்சி, சென்ற வருஷத்தில் அதற்குதவியாக இருந்து இராக்காலத் தாக்குதல்களில் ஜாஸ்தி எண்ணிக்கைகொண்ட 'லுப்ட்வாபின்' வரையரும்பில்லாத தாக்குதல்களில் நேர்ந்த சேதத்தைக் காட்டிலும் அதிக சேதம் உண்டாக்கின.

இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை பகல் காலத்திலும்கூட தாக்குகிறது. ஹெல்ஸ் கார்னர் தாக்குண்டதுபோக, இப்பொழுது பிரிடிஷ் கால்வாய்க்கு இப்பால் இருக்கும் பாஸ்-டி-கலேயில் உள்ள நாஸி தளங்கள், வேகமாய் பறக்கும் பிளன்ஹேம்களாலும், அவற்றிற்குப் பாதுகாப்புக்காகவரும், மரணத்தை உண்டு பண்ணும் கொடிய பைடர்களாலும், காலையிலும் மாலையிலும் தாக்கப்படுகின்றன. வாரங்கள் ஆக, ஆக, நார்வேயிலிருந்து, பிஸ்கே வரையிலும் மறைந்து செல்லும் எதிரியின் படகுகளும் தாக்கப்படுகின்றன. இதிலிருந்து ரயில்வே பாதைகள் பழுதுபட்டதென்றும் வெளியாகிறது.

## போர்முனை மாறிக்கொண்டு இருக்கிறது.

பகற் காலங்களில் ரீச் இப்போதும் தப்புவதில்லை. பிரிஸியன் தீவுகளில் உள்ள விமானப்படை, கடற்படைத் தளங்கள் பகல் காலத்தில் பிரிடிஷ் பாம்பர் விமானங்களால் தாக்கப்பட்டுவருகின்றன. பாஸ்-டி-கலேயில் நடந்த மாதிரி அதற்குப் போட்டியாக வடமேற்கு ஜெர்மனியின் மூலையில் பிரிடிஷ் பாம்பர் களின் தாக்குதல் உள்ளே பரவுகிறது. ஹெல்ஸ் கார்னர் அடிக்கடி எதிர்க்கப் பட்டதுபோல், ஜெர்மனியிலும் வடபாகம் பலியாகிக்கொண்டுவருகிறது.

கடைசியாக இதிலிருந்த போர் மாறிவிட்டதா? என்பது கேள்வி. அதற்கு பதில் இப்பொழுது சொல்லமுடியாது. ஜூன் ஜூலை மாதங்களில் பூராவும் நடந்த சம்பவங்கள் நமக்கு நம்பிக்கை அளிக்கின்றன. ஹிட்லர் ருஷ்யாவில் சண்டை செய்துகொண்டு இருப்பதால் பிரிடிஷ் விமானப்படைக்கு எதிர்பாராத சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் இராக்காலத்தில் தாக்குகிறபடி, பகல் காலத்திலும் மலையத்தனை பலங்கொண்டு பயங்கரமாகத் தாக்கக்கூடியதாக இருக்கிறது. ஏற்கனவேயே அமெரிக்காவிலும், பிரிடனிலும் யுத்த விமானங்

கள் செய்யப்பட்டுவருகின்றன. ஏற்கனவே பிரிடிஷ் விமானப்படை மேலானவை. இப்பொழுது அவை அறிவுக்கெட்டாதபடி மேம்பாடு அடைந்து இருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கையும் ஜாஸ்தி; உயர்வானவையுங்கூட.

மேலே சொல்லியவை பெரிதாயும், உயர்வாயும் இருக்கிற பாம்பர்களுக்கு மட்டுமல்ல. ஏனென்றால் சென்ற சரத் காலத்தில் இங்கிலாந்திலேயே பறந்து, எதிரி விமானங்களை விரட்டிவந்த ஸ்பிட்பையர்கள், ஹரிகேன்கள், இவைகளைக் காட்டிலும், இப்பொழுது பிரான்ஸ் தேசத்திற்குப்போய் அங்கு தோன்றும் ஆட்கொல்லிகளை விரட்டிச் செல்லும் ஸ்பிட்பையர்களும், ஹரிகேன்களும் ரொம்ப மாறுதல்கள் அடைந்திருக்கின்றன. அவை துரிதமானவை, கொடுமையானவை, எளிதில் செலுத்தக்கூடியவை. இவற்றுடன் மேமீ 10-ம் தேதியன்று இரவில் வந்து தாக்கின விமானங்களை முன்னம் எப்போதையும்விட அதிகக் கணக்காக சுட்டு வீழ்த்தின 'டிபயன்டுகளும்,' சமீப மாதங்களில் ஹிட்லருடைய பருந்துபோன்ற விமானங்களை பிரெஞ்சு தளங்களுக்குத் துரத்திச் சின்னாபின்னமாக்கின ஹாவக்குகளும், மற்றபடி நமக்கு அறிமுகமாயில்லாத பெயர்களுடன் வேலைசெய்யும் மற்ற விமானங்களும் அவைகளுடன் சேர்ந்து வேலை செய்கின்றன.

பிரிடனில் நடந்த சண்டை அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் கோரமாகப் பரவியது. அதன் மத்தியிலும் பிரிடிஷ் விமானப்படை கலந்துகொண்டது. சண்டை முடிந்த பிறகுதான் சமுத்திரக்கரையின் பாதுகாப்பு விஷயமாக ஏற்பட்ட சம்பவங்களின் பூராச் சரித்திரமும் வெளியாகும். ஆனால் இப்பொழுது நடக்கும் பெரிய யுத்தத்தைச் சூழ்ந்திருக்கும் மூடுபனியிலிருந்து தனிப்படையாக ஸன்டர்லாந்து என்ன கடேலினு என்ன, இவைகளின் சம்பவங்களிலிருந்து இப்பொழுதும்கூட பிரிடிஷ் விமானப்படை பகைவரைத் தேடித்திரிந்து, கண்டவிடமெல்லாம் நசுக்குகின்ற விபரம் தெரிகிறது.

### அரக்கனைக் கொல்லும் வீரர்கள்.

நாகரீக உலகத்தின் வருங்கால வாழ்வு பிரிடிஷ் விமானப்படை வீரர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தைப் பயப்படுத்த, ஹிட்லரைக் காட்டிலும் வேறொரு இரத்த வெறிகொண்ட கொடியவனும் இதுவரை தோன்றவில்லை. பிரிடிஷ் விமானப்படையைப்போல் அவ்வளவு குதூகலமாகவும், துணிவுடனும் எவரும் வெளிக்கிளம்பி கொடுமைக்காரர்களை எதிர்த்ததில்லை. பிரிடனிலும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலும் பிறந்த மனிதர்கள் சுபாவத்தில் பகை நெஞ்சம்கொண்டு பிறந்தவர்களல்ல. இப்போது பிரிடனுடன் சேர்ந்து சண்டையிடும் ஐரோப்பிய நாடுகளில் பிறந்தவர்களுக்குத் துவேஷ புத்தி கிடையாது. ஏதாவதிருந்தால் அதற்குக் காரணம் ஹிட்லரும், அவருடைய இருளடங்கிய தேசத்தில் தோன்றிய கிங்கிரர்களும் செய்த வேலைதான். இந்த தேசத்தைத்தான் பிரிடிஷ் விமானப்படை ஒருவாறு தாமதமாயிருந்தாலும், அதன் ஒரே திட்டப்படி வேண்டிய அவகாசம் எடுத்துக்கொண்டு, ஹிட்லரையும், அவனைப் போலொத்தவர்களையும் சலிக்காமல் அழித்து, ஒரே நிர்த்தூளியாக்கி, காடாகச் செய்யப்போகிறது,



"விமானப்படை, பிளீட்ஸ் கிரீக் மட்டில் வெற்றியடைய முடியாது. ஆதலால் நமது சைனியத்தைப் பலப்படுத்தவேண்டும்," என்று 'கோல்னிஷ் ஜீடங்' என்னும் பத்திரிகையில் ஜெனரல் 'கபீஷ்' மற்ற நாஸிகளை சென்ற வருஷம் நவம்பர் மாதத்தில் எச்சரித்திருக்கிறார்.

பிரிடிஷ் விமானப் படையினால் சண்டையை ஜயிக்க முடியாதென்று நமக்கு எச்சரிக்கை செய்ய அவசியமிருக்கிறதாக, பிரிடிஷ் உத்தியோகஸ்தர் எவருக்கும் தோன்றவில்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

---

# 'வி'

## ஆபத்தான நிலை.

### சந்தர்ப்ப விமர்சனம்.

சென்ற சில வாரங்களாக இருந்துவரும் முக்கியமான நிலை எப்பொழுதும் இருந்ததில்லை. இதுவரை நடந்த யுத்தங்களைவிட இப்பொழுது நிகழும் யுத்தம்தான் பெரியது." அதின் "மத்தியபாகத்தில்" நாம் இருக்கிறோம். இது இரு தனி தேசங்களுக்குள் போடும் யுத்தமல்ல. ஆகையால் தோன்றினவாறெல்லாம் ஜனங்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனர். இது மனித வர்க்கமே இரு பிரிவாகப் பிரிந்து முடிவுவரை புரியக்கூடிய யுத்தம். அப்பிரிவில் ஒரு திறப்பாளர்கள், தங்கள் ஸ்வதந்திரத்தை முன்னிட்டு யாவரும் ஒத்துழைத்தால் மேன்மை பெறலாம் என்று நம்பி சண்டை செய்கிறார்கள். மற்றொரு பிரிவிற்கு, இதற்கு நேர் விரோதமாக, தங்கள் ஸ்வய அதிகாரத்தை அமுல்படுத்தி தங்களுடைய ராக்ஷஸ முறைகளுக்கு தாங்களும், மற்றவர்களும் அடிமைகளாகிப் பெயர் வாங்குவதுதான் நோக்கம். ஒரு கக்ஷிக்காரர்கள் நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள், மற்றொன்றுக்கு பிரிடிஷ் மக்களைச் சொல்லலாம். முன்சொல்லப்பட்டவர்கள் பிற்போக்குக்கும் ஜாதி உயர்வைக் காப்பாற்றவும், யந்திரம் போன்ற ராஜீய அதிகாரத்தை ஸ்தாபிக்கவும் முயலுகின்றனர். பின்னால் சொல்லப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்கும், ஜாதி சமத்துவத்திற்கும், சுயேச்சைக்கும் போராடுகிறார்கள்.

இதுவரையிலும் முன் கக்ஷியைச் சார்ந்த நம் விரோதிகளுக்குத்தான் அவர்கள் முயற்சிகளில் வெற்றி கிடைத்திருப்பதாகத் தெரியவரும். ஏனென்றால் தங்கள் விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் எல்லா பயங்கரமான சக்தியையும் நவீன விஞ்ஞானத்தைக்கொண்டு முன்னேற்றத்திற்காக பலப்படுத்தியிருக்கின்றனர். மேலும் சமூக முன்னேற்றத்திற்காக, "ஸ்வதந்திரம் விரும்பும் கூட்டத்தார்கள்,"

தனித் தனியாகப் பிரித்து, சேராமல் செய்யப்பட்டார்கள்". இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் நாஸிகளின் கொள்கை இக்காலத்திற்குப் பிற்போக்கானதால் சமயம் தப்பி உண்டாகியிருக்கிறது. தேசிய அபிப்பிராயங்களில் கேவலமானதால் காட்டுமிராண்டித் தனத்திற்குத் திரும்புவதாக ஆகிறது. இதைத் தடுக்க உலகம் பூராவும் ஒன்று சேர்ந்து இதைப் பழிவாங்கத் தீர்மானித்து விட்டது.

ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, வட தென் அமெரிக்கா, தக்ஷிண உத்தர துருவங்கள்--யாவும் சம்பந்தப்பட்டிருப்பதால்தான் உலகம் பூரா என்கிறோம். தனக்கு எதிரில் இவ்வுலகப் பிரதேசங்கள், ஆயுதஸன்னத்தம் செய்து பலமடைவதற்குள் ஜெர்மனி, தன் டாங்கிகளையும், விமானங்களையும்கொண்டு முழுபலத்துடன் எதிர்த்தாகவேண்டும். தாத்காலிகமான வெற்றி அடைவதற்கு எங்கெங்கெல்லாம் சூழ்ச்சி செய்ய முடியுமோ அங்கே எல்லாம் சென்று எதிரிகளை ஒன்று சேரவிடாமல் செய்யும்.

**ஹிட்லரின் கனவு.** முதலில் ருஷ்யாவை ஜயிக்கவேண்டும், அதை ஜயித்துவிடலாமென்றும் ஜெர்மனி மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறது. அப்படி இவ் வருஷத்திற்குள் செய்யாவிட்டால், சைனியங்களுக்கு உத்ஸாகம் குறைந்து வருவதுபோல் பொது மக்களுக்கும் உணர்ச்சி குறைந்துவிடும்.

இதற்காக லக்ஷக்கணக்காக, ஜெர்மனி, வாலிபர்களை யுத்த தேவதைக்குப் பலி கொடுக்கிறது. சண்டைக்குத் தயாரில்லாதவர்களை அரட்டி மிரட்டி லெனின் கிராட், மாஸ்கோ, கீவ், ஸெபாஸ்டபூல், காகேஸஸ், இரான், இந்தியா முதலிய இடங்களுக்குச் சென்று வெற்றியடையத் தயார் செய்கிறது. இந்த இடங்களிலிருந்து பணமோ வேறு பொருள்கள் அடையவோ, ருஷ்ய ஜாதியை ஒழிக்கவோ விரும்பவில்லை. ஆனால் ருஷ்யர்கள் சண்டையை நிறுத்திச் சென்றால் சரித்திரத்தில், 5 அல்லது 6 நாடுகள் ஜெர்மனிக்கு வசமாகி அவைகளின் மரியாதையையும், விளைவு பொருள்களையும் கைப்பற்றியது என்று வழங்கப்படும் பெயருக்காகத்தான்.

ருஷ்யாவின் தென்பாகத்தில் நடக்கும் யுத்தம் மிகவும் கவனிக்கத்தக்கது. அங்கே ஜெர்மானியர் நிச்சயமாக ஜயித்தால் ஜப்பானுக்கு கொஞ்சம் சாதகம் ஏற்படும். ருஷ்யர்கள் நிச்சயமாகத் தோற்கடிக்கப்பட்டவுடன் தூரக்கிழக்கில் யுத்தம் நடத்தக் காத்துக்கொண்டிருக்கிறது. அதில் பிரிடனும் அமெரிக்காவும் ஈடுபடும்படியிருக்குமாதலால் லிபியும் தாமதிக்காமல் வடக்கு, மேற்கு ஆபிரிக்காவை ஜெர்மனிக்கு விருந்தாகக் கொடுத்துவிடும். துருக்கியும், தீர்மானித்தபடி ஸ்வதந்திரத்திற்குப் போராடும். இரான் தனது நடுநிலை திட்டத்திற்குப் பயமில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ருஷ்யாவை ஜயித்தபிறகு இவைகளையெல்லாம் சுலபமாகக் கவர்ந்துவிடலாமென்று ஜெர்மனி நினைத்துக் கொண்டிருக்கிறது.



இதுதான் ஜெர்மனி கண்ட கனவு. ருஷ்ய யுத்தம் உலகின் யுத்தமாதலால் அதுதான் வருங்காலத்தைத் தீர்மானிக்கவேண்டும். விஷி, டஹ்ரான், அங்காரா, பாங்காக், டோகியோ, அமெரிக்கா நாடுகள்தான் பாக்கி. இப்படி ஒவ்வொன்றாக நடுநிலை வகிக்கும் நாடுகள் வரவர குறைந்து யுத்தத்தில் ஈடுபடும்படியான சமயம் வந்துவிட்டது.

**சொப்பனத்தை பொய்யாக்குகிறவர்கள்.** ருஷ்யாவே முதல் முதலாக ஜெர்மனியின் திட்டங்களைப் பொய்யாக்கிவிட்டது. இதுவரை பலஇடங்களை ஜெர்மனிக்கு விட்டிருக்கலாம். ஆனால் அவைகளிலிருந்து ஒருவிதமான லாபமும் ஜெர்மானியர் அடையமுடியாதபடி எல்லாவற்றையும் ருஷ்யர்களே எரித்துவிட்டார்கள். பல ருஷ்ய சைனியங்களும் மடிந்திருக்கலாம், இன்னும் பெரிய சைனியம் ஏராளமான மனிதர்களுடன் பாக்கியிருந்து சண்டை செய்கிறது: தலைவர்களும், உணர்ச்சியும் குறையாமல் முன்போலவே இருந்துவருகிறார்கள். கிராமங்களிலோ, பட்டிணங்களிலோ, தொழிற்சாலைகளிலோ, உத்தியோகங்களிலோ ருஷ்ய கவர்ன்மெண்டார் அதிகாரம் குறையவில்லை. ஜெர்மானியர்களைவிட விளைவுபொருள்கள், அதிகமாயும் போக்குவரவு சாதனங்கள் சமீபித்தும் இருக்கின்றன. சத்துருக்களிடமிருந்து கைப்பற்றிய சாமான்களும் அதிகம். சத்துருக்களை எதிர்த்து நின்று அவர்களைத் தோற்கடிப்பதில் ஆத்திரமும் அதிகம் உண்டு.

## ஜெர்மன் தோல்விக்குப் பலகாரணம்.

மாரிகாலமும் வருகிறதால் மேலும் ஜெர்மன் வெற்றிக்கு பல தடங்கல்கள் இருக்கின்றன.

பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா இம்மூன்றும் அச்சு நாடுகளுக்கு எதிரில் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க ஆரம்பித்துவிட்டன. அச்சு நாடுகள் தனக்கு சாதகம் என்று பல தேசங்களை ஒன்று சேர்த்திருக்கிறது. ஆனால் அவையாவும் பரஸ்பரம் நம்பிக்கைகொள்ளவில்லை. இந்த அச்சுநாட்டுச் சைனியங்களைவிட நேசதேசத்தாரின் சேனை மிகவும் பலமானது. சர்ச்சில்-ரூஸ்வெல்ட் சந்திப்பினால் ருஷ்யாவுக்கு உதவவேண்டியதைப்பற்றி ஸவிஸ்தாரமாகச் சர்ச்சைசெய்து பெரிய அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. இது அச்சுநாடுகளுக்கு மனக்கலக்கத்தையும் நேசதேசங்களுக்கு தைரியத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது.

இங்கிலீஷ்-ருஷ்ய வாய்மொழிகள் துருக்கியில் ஏற்பட்டிருந்த மனஸ்தாபங்களை அகற்றிவிட்டன. புதிதான ருஷ்ய-பிரிடிஷ் வியாபார ஒப்பந்தத்தின் பயனாக நமக்கு ஒரு உதவி ஏற்பட்டிருக்கிறது.

இரானுக்கு மறுபடியும் இரண்டாம் தடவையாக, நாஸிகளை முக்கிய ஸ்தானங்களில் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாதென்று ருஷ்ய-பிரிடிஷ் அதிகாரிகள் எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். முதல் எச்சரிக்கை அனுப்பித்து ரொம்பநாள் ஆவதற்குள்ளாகவே மறுபடி அனுப்பித்ததை இரானிலுள்ளோர் கவனிக்காமல் அலக்ஷியமாக இருக்கமுடியாது. பிரிடனும் ருஷ்யாவும் நன்றாக ஒத்துழைப்பதும் வெளியாகிறது.

விஷியைப்போலவே ஜப்பானும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. சில வாரங்களாக சண்டையில் ஈடுபடவேண்டுமென்றிருந்தும் தயங்கி இருக்கிறது. ஜெர்மனி ருஷ்யாவை ஜயித்துவிடுமென்று நினைப்பதற்குள்ளாக பிரிடிஷ் அமெரிக்க திட்டங்கள் தீர்மானமாயும் தயாராயும் இருக்கின்றனவென்று ஜப்பான் தெரிந்துகொண்டிருக்கும். ஏற்கனவே ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் பலவந்த அரசாக்ஷியால் அமைதிக்குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று வரவரத் தெரியவருகிறது. சட்டமறுப்பும், எதிர்ப்புகளும், சமூகத் தடைகளும், 'வி' இயக்கமும், ரகசியக் கலகங்களும் ஐரோப்பா பூராவும் உண்டாகியிருப்பதால், சண்டை செய்வதோடுமட்டுமில்லாமல் பிறகும் மனக்குறை ஏற்பட்டிருப்பதைக் காணலாம். இப்பொழுது அடக்கி வைத்திருந்தாலும் நாஸி என்ற ராக்ஷஸன் சவமாகும்வரை இவைகள் இருக்கும்.

ருஷ்ய யுத்தத்திலிருந்து உண்டான பிரச்னைகள் இவைகள் தான். இப்பொழுது ஒவ்வொருவரும் முயற்சி, அமைதி, தைரியம், ஆபத்து என்னவென்பதையும் 'வி' முதலியவைகளையும் கைக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் 'வி' அடையாளம் அறிகுறியாக இந்த வியாசத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் போடப்பட்டிருப்பது வீண் எண்ணம் அல்ல.

# 'வி'

**எட்டு விஷயங்கள்.**

அவ்வப்போது வெளிவரும் அறிக்கைகள் உலக சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை. மூவாயிரம் வருஷங்களுக்கு முன் மோஸஸ் என்பவர் 10 முக்கிய கட்டளைகளை பரவச்செய்தார். அவை இன்னும் வழங்கப்படுகின்றன. 725 வருஷங்களுக்கு முன் ஒரு அரசனிடமிருந்து மாக்னு கார்டா என்ற ஸ்வதந்திர யாதாஸ்தை பிரிடிஷ் மக்கள் பலவந்தமாகப் பெற்றனர். அதுதான் இப்பொழுதும் பிரிடிஷ் மக்களுக்கு ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்துகிறது. சென்ற வாரத்தில், பயங்கரமான அலை பெரும் கடல் நடுவில், மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் மனித வர்க்கத்திற்கே மனதைக் கவரக்கூடிய ஒரு அறிக்கையைப் பிரசுரித்திருக்கின்றனர். இதை மிஸ்டர் அட்லி பிரசுரம் செய்தார். அன்று முதல் அது தேச சரித்திரமாகி விட்டது.

இம் மூன்றில், உண்மையில் எது தான் கடைசியில் நிலைத்திருக்கிறது என்று சொல்லுவது சிரமம். ஏனென்றால் மோஸஸின் 10 கொள்கைகளைப் பின்பற்றாமல் அலக்ஷியம் செய்துவிட்டார்கள். மாக்னு கார்டா என்பது ஜெர்மானியர், ஜப்பானியர், ருஷ்யர், காங்கோ நாட்டிலிருக்கும் டச்சு மக்களும் அனுசரிப்பதில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன் அபிப்பிராய பேதம்கொண்ட பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்யர்கள் இவ்வறிக்கையில் கண்டிருக்கிற அம்சங்களைச் சேர்ந்து அனுபவத்திற்குக் கொண்டுவரப்போவதை நாம் தற்போது அனுமானிக்க முடியாது.



இம்மாதிரியாக இதற்கு முன் வெளிவந்த வில்ஸனின் 14 விஷயங்கள் கொண்ட அறிக்கை பயன்படாததுபோல் இப்பொழுதும் இது பயன்படாதென்று சந்தேகப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இது தனிப்பட்ட ஒருவருக்காகவும் ஏற்படாமல் மனித வர்க்கத்திற்கே கவனம் செலுத்தத் தக்கதாக இருக்கிறது. ஆகையால் தான் அச்சு நாட்டுத் தலைவர்களான சண்டாளர்கூட இஷ்டமில்லாமல் இருந்தாலும் இதைப்பற்றி ஆலோசிக்கவேண்டியதாக இருக்கிறது.

**அவைகளில் கண்டுள்ள அம்சங்கள்.**

பிரிடனை முற்றுகை போட்டதாக ஹிட்லர் சொல்லி ஒரு வருஷத்திற்குள் பயப்படாமல் பிரிடிஷ் பிரதம மந்திரியும் அமெரிக்கத் தலைவரும் உலகப் பிரச்னைகளை வட அட்லாண்டிக்கில் சர்ச்சை செய்தார்கள். ஆகையால் இப்பொழுது அட்லாண்டிக் கடல் யார்வசமிருக்கிறது என்று தெரியும்!

இதற்கு முன் வெளிவந்த 14 விஷயங்களை அமெரிக்கப் பிரஸிடெண்டு வில்ஸன் பிரத்தியேகமாகத் தயார் செய்தது. அந்த நாட்டிலேயே பூராவும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது இருந்த நேசதேசத்தவர் தான் அங்கீகரித்தார்கள். இந்த 8 விஷயங்கள் ஒரு தனிக் கக்ஷியாருக்கு ஏற்பட்டதில்லை. இரண்டு பெரும் ஜனநாயக அரசாங்கங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு அவ்விருவர்களையும் நாஸிகளுக்கு எதிரில் ஒன்று சேர்த்துக்கட்டுப்படுத்துகிறது.

பிரஸிடெண்டு வில்ஸனின் அறிக்கையில் உள்ள 14-ல் 6 விஷயங்கள் "தீர்மானமாக எதையும் பற்றிச் சொல்லாததால்" மனக்குழப்பத்தை உண்டு பண்ணின. ஆனால் தற்போதைய 8 விஷயங்கள் பொதுவான அம்சங்களை விடாமல் ஜாக்கிரதையாக அடிப்படையாக உட்கொண்டிருக்கிறது.

சமாதானத்தை உண்டுபண்ணக்கூடிய இந்த அறிக்கைக்கும், சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் வெகு வித்தியாசம் இருக்கிறது! இவைகளைக்கண்டு ஹிட்லர் சமாதானத்திற்கு வருவானென்று எதிர் பார்க்கலாம். இதில் கண்ட இரண்டாவது விஷயப்படி அந்தந்த ஜனங்களின் விருப்பமில்லாமல் தேசங்களில் மாறுதல் செய்யக்கூடாது—அனுக்கிரமம் என்று வியக்தமாகக் கண்டிருந்ததால் 'சமாதானப் பேச்சாக' இது ஆகாது. மூன்றாவது விஷயப்படி ஜயித்த நாடுகளைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். முக்கியமாக எட்டாவதாக "ஆக்கிரமிக்கும் நாடுகளில் யுத்த சாமான்களை பரிஹரிக்கவேண்டு"மென்று கண்டிருக்கிறது!

ஒரு விதமான ஆக்கிரமும் கூடாதென்று பஹிரங்கமாகச் சொல்லியதால் பிரிடனும் அமெரிக்காவும் சாம்ராஜ்ஜிய ஆசையினால் யுத்தம் செய்கிறார்கள் என்பது இல்லை.

விளைவு பொருள்களை யாவரும் அடையலாம் என்றும், சமுத்திரங்களில் யாவருக்கும் போக்குவரவு ஸ்வதந்திரம் உண்டென்றும் இவ்வறிக்கையில் சொன்னதால் பெருக்குத்தான் சமரஸ உரிமை (ஸோஷலிஸம்) பின்பற்றப்படுகிறது என்பதும் முதலாளிகள் லாபம் கவனிக்கப்படுகிறது என்பதும் இல்லை.

ஆக்கிரமிக்கும் நாடுகளில் யுத்த பரிஹாரணம் செய்யப்பட்ட பிறகு மற்ற நாடுகளும் செய்யுமாதலால் யுத்த மூலம் தேசங்களின் தகராறுகளைத் தீர்க்காமல்

"உண்மையிலும், அபிப்பிராயங்களிலும்" அஹிம்ஸை முறையில் தீர்த்துக் கொள்ளலாம்.

ஜப்பான் இந்தோ-சைனாவைக் கைப்பற்றிய பிறகு, அதையும் ஆக்கிரமணம் செய்யும் நாடென்றே யுனைடெட் ஸ்டேட்ஸ் சொல்லிவிட்டது. ஆகையால் ஜப்பான் "யுத்த பரிஷ்ரண" மொழிகளைப் பின்பற்றவேண்டும்.

**ருஷ்யாவில் யுத்தத்தை முடிக்க முயற்சி.** இங்கே யாருக்கு லாப நஷ்டங்கள் அதிகம் என்பதை விஸ்தரித்துச் சொல்லுவதினால் ஒரு பயனும் இல்லை. ஜெர்மன் நபிர்சைனியம் ருஷ்ய ஜெனரல் புடன்னிக்கு எதிராக யூக்ரேனின் தென்பாகத்திலிருந்து தெற்கு நோக்கிச் சென்றபொழுது சில வெற்றி யடைந்திருக்கிறது. இதைத்தான் பெர்லினில் யுத்த வியாக்கியானம் செய்கிறவர்கள் ஸோவியத் அரசாங்கமே கலைந்து விட்டது என்கிறார்கள்.

**சில பொதுவான அம்சங்கள்.** 1. மாரி காலத்திற்குள் யுத்தம் ஜயிக்கப்படுமென்ற நம்பிக்கையை சைனியத்திற்கும் பொதுமக்களுக்கும் உண்டாக்க பெரும் ஏற்பாடுகளை ஜெர்மானியர் செய்ய வேண்டும். ஆகையால் 45 பான்ஸர் படைகளுடன் கூடின 200 சைனியப் பிரிவுகளை வைத்துக்கொண்டு ருஷ்யாவின் தென்பாகத்தில் முயன்று பார்க்கிறார்கள்.

2. ஏராள நஷ்டங்களின் பேரில் ஜெர்மானியர் சில வெற்றிகள் அடைந்திருக்கின்றனர். கிர்வோகிராட், நிகோலாயிவ், பெர்வோமெயில்ஸ்க், போன்ற பெரிய தொழிற்சாலைகள் உள்ள இடங்களும் கைப்பற்றப்பட்டு, ஒடெஸ்ஸாவையும் மற்ற இடங்களிலிருந்து போக்குவரத்து இல்லாமல் தடுத்துவிட்டார்கள். ஏனென்றால் நிகோலாயிவ் பிடிபட்டதினால் 70 மைல் தூரம்வரை தடை ஏற்பட்டிருக்கிறது. ஒடெஸ்ஸா ருஷ்யர்களுக்கு ஒரு பெரிய துறைமுகம். இதை ஜெர்மானியர் இன்னும் கைப்பற்றவில்லை.

3. வடக்கே லெனின்கிராட்டில் ஜெர்மானியர் மூன்று, நான்கு முனைகளிலிருந்து பலமாகத் தாக்குகிறார்கள். பழைய ருஷ்யத் தலைநகரத்திலிருந்து 75 மைல் தூரத்திலுள்ள கிங்கிஸப் என்ற இடத்தை ருஷ்யர்கள் காலி செய்துவிட்டனர். அதே தூரத்தில் தென் கிழக்கிலும் கிழக்கிலுமுள்ள லெனின்கிராட் மாஸ்கோ இருப்புப்பாதையை உடைத்திருக்கலாம்.

இனிவரும் 10 நாட்களில் இவ்வாறு ஏற்படலாம்.

(1) லெனின்கிராட்டைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளைக் காபந்து செய்து ஜெர்மானியரை மாரிகாலம் வரும்வரை தடைசெய்யலாம். (2) தாங்களாகவே ருஷ்யர்கள் நீபர் நதிக்கரையில் இருக்கும் செழிப்பான யூக்ரேனைப் பிளந்து நாசம் செய்து 1½ மைல் அகலமான நீபர் நதியையே அடுத்த தற்காப்பு ஸ்தலமாகவாவது செய்வார்கள். அல்லது முன்னேறி நதியையும் கடலையும் பின்பந்தோபஸ்துக்கு வைத்துக்கொண்டு மாரிகாலம்வரை சண்டை செய்யலாம். ஏனென்றால் அப்பொழுது ஜெர்மன் போக்குவரவு கலைந்துவிடும்.



இவ்விதமான நிலையில் சாதகமான அம்சங்கள் சில இருக்கின்றன.

(1) ருஷ்யாவில் விசேஷமாக யூக்ரேனில்கூட எதிரிக்கு ரகசியமாக உதவ ஒருவரும் இல்லை. ருஷ்யச் சைனியம் எப்போதும்போல் சண்டையைச் செய்கிறது. பொதுமக்கள் இதர வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் எதிரி வசம் சரணமோ, சமாதானமோ செய்ய மாட்டார்கள்.

(2) ஜெர்மானியருக்கு சாமான் சேதம், உயிர்சேதம் ஏராளம்.

(3) ருஷ்யர்கள் கையாடும் 'பூ தகன முறை' யினால் ஜெர்மானியருக்குப் பிடித்த இடங்களில் கொஞ்சமும் விளைபொருள் கிடைக்கவில்லை. வெறும் பொட்டல் வெளிகள்தான் கிடைத்திருக்கின்றன. புடன்னி என்ற ருஷ்யத் தலைவர் நீபர் நதிப்பாலத்தை உடைத்திருந்தால் யூக்ரேனின் மேற்கு பாகம் பூரா வெள்ளமாகவே ஆகியிருக்கும். ஆதலால் விவசாயம் செய்ய முடியாது. அதுவும் ஜெர்மானியருக்குக் கெடுதல்தான்.

(4) புதிதாக பலப்படுத்தப்பட்ட ருஷ்யச் சைனியமும் புதிதான யுத்தரங்கங்களில் தைரியமாகச் சண்டையிடுகிறது. இச்சைனியம் சத்துரு வசம் ஆகாமல் சரியான விதமாக நடத்தப்பட்டும், 'எல்லா ருஷ்யர்களும்' உண்மையிலேயே சேர்ந்தும் எதிர் இல்லாமல் இருக்கிறது. நடுநிலை நாடுகள் எதிர்க்காமலும் கவனிக்கப்படுகிறது. எல்லாவித அமெரிக்க பிரிட்டிஷ் யுத்தச் சாமான்களும் அதிக வேகமாக அனுப்பப்படுகின்றன.

(5) சரியாக அறிந்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்டும் ருஷ்யர்கள் மாரிகாலத்தில் மும்மரமாக யுத்தம் நடத்துவார்களென்றும் சொல்லியிருக்கிறார். ஜெர்மானியரால் அவ்விதம் செய்யமுடியாது!

**புகழ் போய்விட்டது.** பிரான்ஸுக்கு 'ஏற்பட்ட புகழ்' சென்றுவிட்டது! பெரிய ஜனநாயக ஆட்சியான பிரான்ஸ் ஜெர்மனிக்குக் கப்பங்கட்டும் ராஜ்ஜியமாக மாறிவிட்டது. முன்பு பெரும் யுத்த வீரனான பிடேன் ஹின்டன்பர்க் போல் அடக்கப்பட்டான். ஒரு நிலையும் இல்லாத டார்லான் மானமி-தேசத் தலைவனாக ஆகி ஹிட்லர் கவர்னர் போலிருந்துகொண்டு மற்றொரு ஹிட்லர் என்று நினைக்கிறான். ஸ்வதந்திரம் தருவதாகச் சொல்லப்படும் பிரெஞ்சு ஜனங்களை ரகசியமாக, பிரான்ஸின், இயற்கை விரோதிகளும், தலைமுறையாக சத்துருக்களுமான நாஸிகளின் ஆதிக்கத்தை விரும்பாததால் எல்லா முயற்சிகளையும் செய்து அடக்கப் பார்க்கிறார்கள். நாஸி 'புது திட்டத்திற்கு' விரோதமானவர்கள் அடக்கப்படுவார்கள், (டார்லான்) போன்றவர்களின் அதிகாரம் தான் செலுத்தப்படும். ஜனங்களின் வார்த்தைக்கு செலாவணி கிடையாது. கக்ஷிகளும் ராஜீயப் பிரிவினர்களும் (வர்த்தகச் சங்கங்கள் உள்பட) கலைக்கப்படும். பார்லிமெண்டே கிடையாது. பிரிமேஸன் கக்ஷியும், யூதர்களும் அடக்கப்படுவார்கள். மந்திரி சபையில் இஷ்டமானவர்கள்தான் இருக்க முடியும். ஜெர்மன் ரகசியப் போலீஸ் போல எல்லா அதிகாரமும் இரட்டிப்பு மடங்காக பிரெஞ்சு போலீஸுக்கு உண்டு.

இதுதான் பிரெஞ்சு உள்நாட்டு சீர்திருத்த திட்டம். வெளிநாட்டில் பிரான்ஸுடன் முன்பு சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு இடைஞ்சல் உண்டோ அவ்வளவும் செய்வார்களாம். இதுதான் பிரான்ஸின் ஸ்வதந்திர எண்ணத்திற்கு அநுகுணமென்று மார்ஷல் பிடேன் அபிப்பிராயப்படுகிறார். ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு கடல், ராணுவ நிலயங்கள் ஜெர்மானியர் வசம் ஒப்புவிக்கப்படும். கடற்படை உள்பட நிச்சயமாக கொடுக்கப்படும். இப்படி ஆபிரிக்காவில் பிரெஞ்சு-ஜெர்மன் சைனியங்கள், லிபியாவில் வந்த அநுபவத்தின்படி ஒன்று சேர்ந்து, நைஜீரியா, ஸீராலியோன், பிரிட்டனுக்குச் சொந்தமான இன்னும் தங்கம் விளையும் பிரதேசங்களை பிரான்ஸுக்கு வாங்கிக்கொடுக்கும் (அதாவது ஜெர்மனி வாங்கிக்கொள்ளும்!). இதற்குமுன் பிரான்ஸிலிருந்து நல்ல பிரதேசங்களை அடையவிரும்பின இதாலிக்கு அவைகளுக்குப் பதிலாக எதிப்து கொடுக்கப் படலாம். ஆகையால் ஜெர்மனி சொற்படியெல்லாம் பிரான்ஸ் நடந்துகொள்ள வேண்டும். (அல்ஸாஸ் லொரேயின் பிரதேசங்களை ஜெர்மனிக்கு முடிவாகக் கொடுத்த மாதிரிதான் ஆகிறது).

குறிப்பு.—இந்த ஏற்பாடெல்லாம் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் தெரிந்தது தான். வாஷிங்டனில் விஷி பிரதிநிதி எம். ஹென்றி ஹேயி மறுத்தபோதிலும் ரூஸ்வெல்ட்டும் சர்ச்சிலும் நடு அட்லாண்டிக்கடலில் சர்ச்சை செய்த விஷயங்களில் இது ஒன்று. ஜெர்மனியின் போக்குக்கெல்லாம் தகுந்த விதமாக பிரதி செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 'பிரான்ஸின் கௌரவம்' எவ்வாறு ஆகும்........? போய்விட்டது.

சொன்னதை மறுமுறை அழுத்திச் சொல்லுகிறேன். — இதுவரை சொல்லப்பட்ட விஷயங்கள் புலப்படாமல் பொதுவாக இருந்தால் சில நிச்சயமான விவரம் கொடுக்கிறோம்.

பிடேனும் டார்லானும் அச்சு நாடுகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். டார்லான் எல்லா அம்சங்களையும் உடனே கொடுக்கத் தயார், ஆனால் பிடேனும் வேகாண்டும் அமெரிக்காவுடன் விரோதம் ஏற்படுமென்று கொஞ்சம் பயப்படுகிறார்கள்.

பிஸர்ஷியாவுக்குள் ஜெர்மானியர் வருவதை மாத்திரம் பிடேன் அங்கீகரிக்கிறார். (இதனால் ஸிஸிலிக்கும் லிபியாவுக்கும் நடுவிலுள்ள ஒரு பாதியை வைத்துக் கொண்டு டுனிஸியாவை ஜெர்மனிக்கு விட்டுக்கொடுத்ததாகும்).

கஸாபிளாங்கா, டாக்கரில் பிரெஞ்சுக்காரர்கள் அதிகாரம் பெறுவதை அமெரிக்கா (டாக்கரில் உள்ள தங்கம் உள்பட) கவனிக்கும். ஆகையால்தான் ஹிட்லருக்கு இவைகளைக் கொடுப்பதில் பிடேனும் வேகாண்டும் தயங்குகிறார்கள். ருஷ்ய யுத்தத்தின் முடிவையும் எதிர்பார்க்கிறார்கள். மாரி காலம்வரை ருஷ்யாவில் ஜெர்மானியர் நிறுத்தப்பட்டால் அவர்கள் விரும்பும் கேந்திர ஸ்தானங்களை கொடுக்க மறுத்துவிடலாம். அப்பொழுதுதான் பிரான்ஸின் கௌரவம் அமுங்கப் படாமல் தலைதூக்கி நிற்கும். இவை எப்படி நேரும் என்பதற்கு இக்குறிப்புகளின் முதல் பக்கத்தை கவனிக்கவும்,



# வார யுத்தச் செய்திகள்.

---

## 21—8—41-லிருந்து 29—8—41-வரை.

இரானுக்குத் தகுந்த விதமாகவே கிடைத்தது. நாஸிகளுடன் அதிக உறவு கொண்டாடினதற்கு இப்போது அவஸ்தைப்படுகிறது. சந்தோஷமாக வும், பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று இருந்துகொண்டு எல்லாரிடத் திலும் அற்ப ஸிநேகம் பாராட்டிக்கொண்டு இருப்பதற்கு இது காலமல்ல. இரான் நாஸிகளையும் உள்ளே அனுமதித்து நேசதேசத்தினர்களையும் ஸிநேகம் பாராட்டி யது தவறாகும். ஏனென்றால் இராக், ஸிரியா முதலிய இடங்களில் உண்டான அநுபவத்திலிருந்து யுத்த சமயத்தில் அதிகம் தயவு காட்டுவது தவறென்று நேசதேசம், நேசதேசத்தார்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். ஆகையால் இரானின் புத்தியீனத் தன்மையைப் பொறுக்கமாட்டார்கள். இரான்போல் மந்தமாக இருக்கிறவர்களுக்கு உசித காலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்வது தான் சரியான சிகிச்சை. ஆகையால் பிரிட்டனும், ருஷ்யாவும் புது உடன்படிக்கைப் படி இரானில் யுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். அது பின்வருமாறு நேர்ந்தது:—

**சச்சரவுகளுக்கு மூலகாரணம்.** ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி இரானுக்கு அனுப்பிய ருஷ்யக் குறிப்பில் இது வியக்தமாகக் கண்டிருக்கிறது. நாஸி ரகசிய சூழ்ச்சிக்காரர்களும் சிப்பாய்களும் இரானை வியாபித்தது மட்டும் இல்லாமல் பக்கத்திலிருக்கும் ஸோவியத் ஜில்லாக்களான பாகுர், அஜர்பைஜன் என்ற இடங் களிலும் புகுந்தது பிசகு என்று அக்குறிப்பில் கண்டிருந்தது. அப்படி வந்த நாஸிகள், அவர்கள் சொல்லிக்கொள்ளும் விதமாய் யாத்ரீகர்களுமல்ல, வியாபாரிகளுமல்ல. ஆனால் சூழ்ச்சிகள் செய்து இரானை ஜெர்மன் ராணுவ தள மாகச் செய்யவே வந்தவர்கள். இராக்கில் முன்னிருந்த ஜெர்மன் விஷமிகளான கம்மாத், மேயர்ஸ் என்பவர்களும், கலகக்காரனான ரஷீத் ஆலியும், அரசாங்கத் தில் அதிருப்திகொண்ட ஜெருஸலத்தின் தலைவனும் ஒன்று சேர்ந்து டாஹ்ரீனி லுள்ள ஜெர்மன் பிரதிநிதியுடன் கலகத்திற்குத் தயார் செய்துகொண்டிருந்தார் கள். இரான் ஸோவியத் எல்லையில் யுத்த தளவாடங்கள் சேகரிக்கப்பட்டு ஜெர்மானியர்கள் ராணுவப்பயிற்சியும் கொடுக்கப்பட்டார்கள்.

**மூன்று எச்சரிக்கைகள்.**—தற்பொழுது இங்கிலீஷ் ருஷ்ய நடவடிக்கை அவசரப்பட்டு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அங்கு இருக்கும் ஷாவும் எதிர் பாராதபடி தாக்கப்படவில்லை. ஜூன் 26, ஜூலை 19, ஆகஸ்டு 16 ஆக மூன்று தடவைகளில் எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன.

**இரானின் பிதற்றல்.**—ஆனால் ஷா, நிலைமை கெட்டுவருவதைக் கவனிக்காமலோ கவனிக்கத் தெரியாமலோ இருந்திருக்கவேண்டும். அமெரிக்காவிலுள்ள இரான் மந்திரியோ இரானில் ஜெர்மன் கலகத்திற்கு ஏற்பாடு இல்லையென்று மறுத்து

விட்டான். ஷாவும் சைனியத்தை 'எல்லவிதமான தியாகத்திற்கும் தயாராயிருக்கும்படி' சொல்லி வைத்தான். இரானில் உள்ள பிரதம மந்திரி பொருத்தமில்லா சில குறைகளைச் 'சொல்லி வந்தான். முதலாவதாக இரானில் அன்னியர்கள் பதிவு செய்யப்பட்டு கவனிக்கப்படுகிறார்கள் என்றும் ஜெர்மானியர்கள் ஏற்கனவே குறைவாக இருந்ததோடும் அவர்களின் எண்ணிக்கையை வரவரக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை பிரிட்டனின் அபிப்பிராயப்படி இரான் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்றும் சாதித்தான். ஆனால் உண்மை வேறு விதமாகயிருந்தது. உள்ளே வந்த ஜெர்மானியர்கள் 'கொஞ்சம்' அல்ல 1,000-க் கணக்கில் இருந்தனர். அவர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்ததாக இரான் பிரதம மந்திரி சொன்னது மற்றவர்களுடைய 'கண்ணைத் துடைப்பதற்கு'த்தான். அன்னியர்களைப் பதிவு செய்வதென்ற காரியத்தை நாஜிகள் அப்போதைக்கப்போது லஞ்சம் கொடுத்து மீறிச் சென்றார்கள். இவைகளில் எல்லாவற்றைக் காட்டிலும் அதிகக் கெடுதலானது மற்றொன்று. அங்கிருந்த ஷா வெளிதேசங்களுக்குச் செல்லாததாலும் தன் தேசத்திலும் மற்றவர்கள் நெருங்கிக் காணமுடியாதபடி இருந்ததாலும், பல தேசங்களை அழித்து உலகெங்கும் பரவும் நாஜியின் தொந்தரவை அறியவில்லை போலிருக்கிறது. 'சரியான நடுநிலை' என்று அவன் சொல்லிவந்தது சரியானதுமல்ல, நடுநிலையுமல்ல. 'நடுநிலைமை' அனுமதிக்க இது தருணமல்ல. ஏனென்றால் அது வெறும் பித்தலாட்டமுள்ள வார்த்தையாய்த்தான் முடியும்.

**அபாயம்.**—இந்த அபாய நிலையை நேசதேசத்தார்கள் நிச்சயமாகப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. சூழ்ச்சிகளினால் ஜெர்மானியர் உலகத்தில் மூன்றாவதாகப் பெரிதான எண்ணெய்ச் சுரங்கங்களை அபகரிக்கத் தீர்மானித்ததுடன் இரானையே பிடிக்க எண்ணம் கொண்டார்கள் அதற்காக, தபால், தந்தி முதலிய கேந்திர ஸ்தானங்களை பிடித்துவிட்டார்கள். அதோடு நில்லாமல் இரானைப் பிடித்த பிறகு சந்தர்ப்பம் வாய்த்தவுடன் இந்தியா, அரபியா, இராக் துருக்கி, எகிப்து, உண்மையில் மத்தியக்கிழக்கு நாடுகள், அரபிக் நாடுகள் பூராவும் பிடிக்கச்செய்த யத்தனமாகும். யூக்ரேனில் காகேஸஸை நோக்கி நாஜிகள் முன்னேறுவதால் அவர்கள் தொந்தரவு அதிகமாகலாம். ஆகையால் இனி அலக்ஷியமாக இருக்க முடியாது.

**ஆங்கில-ஸோவியத் உறுதிமொழிகள்.**—பிரிட்டனும் ருஷ்யாவும் சேர்ந்து, அதிகச் சங்கடமானாலும், அவசியமானதால், இந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். முஸ்லீம் நாடுகளுக்கு, விசேஷமாக துருக்கிக்கும் இரானுக்கும், இது இரானின் பேரில் புரியப்பட்ட சண்டையே அல்ல, ஆனால் ஜெர்மன் அபாயத்திற்குத் தகுந்த தற்காப்பு முறையே ஆகுமென்று வாக்குறுதி அனுப்பப்பட்டது. ஆகையால் இரானின் எல்லைகளுக்கோ, உள் நாட்டுப் பொருளாதார திட்டத்திற்கோ, ஸ்வதந்திரத்திற்கோ ஒருவித தடையும் ஏற்படாது. மேலும் ஜெர்மானியர் அபகரித்ததினால் அவஸ்தைப்படும் இரானியருக்கு ஆகாரங்களை ஸப்ளை செய்யவும், ஜெர்மன் இஞ்சினியர்களை அகற்றி இரான் தொழிற்சாலைகள் தடையில்லாமல் அபிவிருத்தியடையவும் தேவையான ஏற்பாடுகளை பிரிட்டன் உடனே செய்யும்.



**ஜெர்மனியுடன் யுத்தம் புரிய சாதகங்கள்.**—ருஷ்யாவும் பிரிட்டனும் சேர்ந்து இரானில் பிரவேசித்ததினால் இவ்விருதேசங்களுக்குள் அதிக நட்பு உண்டாகி ஜெர்மனியை எதிர்க்கவும், ஆர்க்டிக் முதல் பெர்ஸின் குடாவரையில் நேச தேசச் சைனியம் ஒன்று சேர்ந்து போர் புரியவும் முடியும். செங்கடல் வழியாகவும், பெர்ஸியன் கல்ப் வழியாகவும், ஸிரியா, துருக்கி, காகேஸஸுக்கும், போக்குவரவு சாதனம் ஏற்படும். இப்பாதை வழியாகவும் பாஸ்ரா, பூஷைர், பாண்டர்-இ-ஷாப்பூர், டாஹ்ரான், டப்ரீஜ், வழியாகவும் இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்காக்களில் இருந்து சாமான்கள் அனுப்ப சௌகரியமாகும்.

**ராணுவ ஏற்பாடுகள்.**—இம்மாதம் 25-ம் தேதி பிரிடிஷ் ருஷ்யத் துருப்புகள் ஒரே சமயத்தில் இரானில் பிரவேசித்தன. ருஷ்யத் சைனியம் காகேஸஸிலிருந்து டப்ரீஜ்ஜை நோக்கி வந்தது. (ஜெனரல் ஸர் ஆர்ச்பால்டு வேவல்)ன் கீழ் இந்தியச் சிப்பாய்கள் மூன்று முனைகளில் இரானில் புகுந்தனர். இவர் இங்கிலாந்தின் அரசாங்கத்தாரிடமிருந்து நேரே கட்டளைபெறுகிறார். அம்மூன்று முனைகளில் ஒன்று கனேகின் என்ற முக்கியமான எண்ணெய்ச் சுரங்கம் உள்ள இடம், மற்றொன்று கொற்றம் ஷார் என்ற வியாபாரப்பாதையுள்ள இடம், மூன்றாவது அபடன் என்ற எண்ணெய் சுத்தி செய்யும் இடம். ஒரு சிறு சைனியப் பகுதி பாண்டார்-இ-ஷாப்பூரை வியாபித்திருக்கிறது. இங்கே துறைமுகத்திலுள்ள ஜெர்மன் இதாலியக் கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. அதே சமயத்தில் பிரிடிஷ், இந்திய சிப்பாய்கள் அடங்கிய ஒரு சைனியம் இராக்கிலிருந்து வந்து நாப்தி-இ-ஷா, க்வாஸ்-இ-ஷிராம் என்ற இடங்களிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களைக் கைப்பற்றியது. இரானிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களில் வேலைபார்த்து வரும் பிரிடிஷ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க விமானத்திலிருந்தும் சைனியம் இறங்கிற்று. இதுவரை பிரிடிஷ் ஏற்பாட்டிற்கு ஒருவித எதிர்ப்பும் இல்லை. விமானங்களிலிருந்து பத்திரிகைகளும் போடப்பட்டன. இரானை யுத்தகளமாகச் செய்வதற்கு அல்லாமல் ஜெர்மானியர்களை வெளியேற்றுவதற்குத் தான் இந்த முஸ்தீப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது என்று அங்கிருப்பவர்களுக்குத் தெரிவிக்க இம்மாதிரி செய்யப்பட்டது. அப்பத்திரிகைகளில் இம்மாதிரி அச்சிடப்பட்டிருந்தது:—

'இரானிய மக்களே! ஆயிரக்கணக்கான ஜெர்மானியர் உங்கள் தேசத்தில் இருக்கிறார்கள். சரியான திட்டத்துடன் இங்கிருக்கும் தொழிற்சாலைகளில் அவர்கள் முக்கிய ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஹிட்லர் உத்தரவு கொடுத்தவுடன் உங்களுடைய எல்லா முக்கிய சாதனங்களையும் கைப்பற்றிவிடுவார்கள். இங்கு வந்திருக்கும் ஒவ்வொரு ஜெர்மானியனும் ஜெர்மன் அரசாங்கத்தாரின் அதிகாரத்தைப்பெற்று, தனித்தனியாக அதை நிறைவேற்றவே வந்திருக்கிறான். அவர்கள் இராக்கில் கலகம் செய்தது உங்களுக்குத் தெரியும். இங்கேயும் அதே மாதிரி செய்யத் தயங்கமாட்டார்கள்.

'பல ஐரோப்பிய நாடுகளிலும், படையெடுப்பதற்கு முன்னால் ஜெர்மனி இங்கு செய்கிற மாதிரிதான் சூழ்ச்சி செய்தது. இங்கிருக்கும் அரசாங்கத்தார்கள் பல தடவைகளில் நாங்கள் கொடுத்த எச்சரிக்கைகளை கவனிக்கவில்லை.........

'இங்கே வந்திருக்கும் ஜெர்மானியர் யாவரும் வெளியே போகவேண்டும். இரானியர் தாங்களாக அவர்களை அனுப்பாவிட்டால் ருஷ்யாவும் பிரிட்டனும் நிச்சயமாக வெளியேற்ற ஏற்பாடு செய்யும் எங்கள் சைனியத்தை எதிர்க்க முடியாது.

'இரானிய மக்களே! உங்களுடன் எங்களுக்கு ஒருவித சண்டையுமில்லை. உங்கள் தேசங்களையோ, சாமான்களையோ அபகரிக்க விரும்பவில்லை. இந்த பாழும் ஜெர்மானியர்களை விரட்டவே விரும்புகிறோம்.

'இரானிய மக்களே! பிரிட்டனும் ருஷ்யாவும் உங்கள் நடுவிலிருக்கும் ஜெர்மானியர்கள் சண்டைக்குக் காரணமாகையால் அவர்களை வெளியேற்றப் பார்க்கிறார்கள். நீங்கள் விரும்புவதைப்போலவே நாங்களும் இரானில் அமைதி ஏற்பட விரும்புகிறோம். உங்களுக்காகத்தான் சமாதானத்தை நாங்கள் விரும்புகிறோம் ஆகையால் நீங்களும் விரும்பவேண்டும்.

'யுத்தம் என்றால் என்ன? நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், போலந்து, ருமேனியா, கிரீஸ் முதலிய இடங்களில் ஜெர்மன் ஏஜெண்டுகள் ஜெர்மன் சைனியத்திற்கு வழி உண்டுபண்ணினார்கள். உடனே யுத்தம் வந்தது. ஜெர்மானியர்கள் அத்தேசங்களைப் பிடித்துக்கொண்டார்கள். முன்பு செழிப்பும், பணமும் வாய்ந்த நாடுகளெல்லாம் பட்டினிகிடக்கின்றன.

'எதிர்ப்பு சுலபமான இடங்களில் வெட்டிக்கிளிகள்போல் பாய்கின்றன. ஜயத்தோடுவரும் ஜெர்மானியருக்கு விளைவுபொருள்கள் கிடைக்கின்றன. தோல்வியுற்ற நாடுகள் பட்டினி கிடக்கின்றன. எதிர்ப்பு ஏற்பட்டால், நாடு பாழாகும்.

'பிரிடிஷ் துருப்புகள் இரானுக்கு வருவதற்குமுன் இரானில் ஜெர்மானியருக்கு பிடிப்பு ஏற்பட்டிருந்தால் அவர்களை முன்னேறவிடாமல் இருப்புப்பாதைகளையும் ரோடுகளையும், ஏராளமான பொருள் செலவழித்து நீங்கள் கட்டிய பட்டினங்களையும், கிராமங்களையும் அழித்துவிடுவார்கள். ஆடுமாடுகளைக்கொன்று பயிர்களை அழித்து இரானைப் பாலைவனப் பொட்டலாகச் செய்திருப்பார்கள்.

'இராக், ஸிரியாவைக் காப்பாற்றியதுபோல் அவ்விதமான ஆபத்தில்லாமல் உங்களைக் காப்பாற்றுவோம். உங்கள் உணவு எங்களுக்குத் தேவையில்லை. ஸிரியாவில் செய்ததுபோல் எங்கள் ஆகாரங்களைக் கொண்டுவருவோம். உங்கள் சாமான்கள் எங்களுக்கு வேண்டியதில்லை. ஆனால் இராக்கில் செய்ததுபோல் எல்லா உங்கள் துறைமுகங்களையும் வியாபாரத்திற்கு லாயக்காகச் செய்வோம். உங்கள் தோழர்களாக நாங்கள் வருகிறோம். ஆனால் பொது விரோதியை விரட்ட தற்காப்பு செய்துகொண்டிருக்கிறோம்.'

புதிதாக கிடைத்த செய்திகளிலிருந்து ஷா இரானிலுள்ள சபையை மாற்றிக்கொண்டு துருப்புகளை யுத்தம் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டான். ஜெர்மானியர்களை ஒரு வாரத்திற்குள் விரட்டிவிடுவதாக டாஹ்ரானிலுள்ள பிரிடிஷ் மந்திரிக்குச் சொல்லிவிட்டான். ஆனால் சில இஞ்ஜினியர்கள்



மாத்திரம் உடனே அனுப்ப முடியாததால் பின்னால் அவர்களை அனுப்பவும் ஒத்துக்கொண்டான். அப்படி இருந்தாலும் அச்சுநாட்டு இடைஞ்சல் பூராத் தீரும்வரை ஆங்கில-ருஷ்ய ராணுவ முஸ்தீப்புகள் இருக்கத்தான் இருக்கும்.

ருஷ்ய யுத்தம், ஆரம்பித்து இது பத்தாவது வாரம். முக்கியமாயுள்ள எல்லாப்போர் முனைகளிலும் பலமாக யுத்தம் நடைபெறுகிறது; ஆனால் எதிரிகளின் மூன்றும் பிளிட்ஸ் மின்னல் படையெடுப்பு சில அற்ப வெற்றிகளை அடைந்த போதிலும், ஏற்கனவேயே தளர்ந்து விட்டதென்று தெரிகிறது. மேலும் வரும் மாரிகாலத்திற்குள் மறுபடி நாலாம் பிளிட்ஸ் மின்னல்படை போருக்குக் கிளம்புமா என்பது இன்னும் தெரியவில்லை. இதுவரை எதிரிகள் கிங்கிஸிப், நோவாகிராட், கோமல், நிப்ரோபிடிரான்ஸ்க், ஆகிய நாடுகளைப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டமோ மிக அதிகம்! அவர்களுக்கு இருபது லக்ஷம் ஜனங்கள் நஷ்டம். அதில் சிலர் கொல்லப்பட்டனர், சிலர் காயமடைந்தனர், இன்னும் சிலர் கைதியாக்கப்பட்டனர். இத்துடன் 8,000 டாங்குகளும், 10,000 பீரங்கிகளும், 7,200 விமானங்களும் நஷ்டம். ஜெர்மானியர்கள் இன்னும் சிலவாரங்களுக்குள் யுத்தத்தை முடிக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்ட போதிலும், இந்த ருஷ்ய யுத்தம் இன்னும் நீண்டகாலமும், அதிக சிரமமாகவும் நடந்து அடுத்த வசந்த காலம்வரை நீடிக்குமென்று தெரிகிறது. ஜெர்மனியின் சேமித்து வைத்த சாதனங்கள் வரவர குறைந்து கொண்டு போகின்றதையும், ஆனால் ருஷ்யாவிற்கு மேலும் மேலும் விருத்தியடைகின்றதையும் பார்த்தால், நாஸியில் அழிவு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடலாமென்று தோன்றுகிறது. ஹிட்லர் ஜயமடைய முடியாது; அழியும் ஹிட்லர் கடாசியாக பலத்த தாக்குதல்களைச் செய்யலாம், என்ன இருந்தாலும் அவன் அழிந்து கொண்டிருப்பது நிச்சயம். நாஸிகள் ஆக்கிரமித்த பிரதேசங்கள் பாழும் பொட்டலாய் கிடக்கின்றன. அந்த தேசத்தினர் பூராவும் பழிக்குப் பழி வாங்கத் தயாராகயிருக்கிறார்கள்.

ருஷ்ய போர்தலைவர் கோனியவ் பெரிய எதிர்ப்பில் 48 மணி தேசகாலத்தில் 0 கிராமங்களை ஜெர்மானியர் வசமிருந்து திரும்பப் பிடித்துவிட்டார். 161-வது ஜெர்மன் சைனியப் பகுதியை தவிடுபொடிசெய்து ஏராளமான மனிதர்களையும் சாமான்களையும் கைப்பற்றினார். இவர் அடைந்த ஜயம் ஜெர்மானியருக்குப் பெரிய தோல்வியாகும். எதிரியை பலமாகத் தாக்கியதின் பயனாக இதர போர் முனைகளிலிருந்த சைனியங்கள் மாற்றப்பட்டு அவ்விடங்களில் ஜெர்மன் படைகள் பலஹீனப்பட்டுவிட்டது. வடக்கே விரோதிக்கு முக்கிய லக்ஷியமாக இருந்த லெனின்கிராட் இப்பொழுது பலமான தற்காப்புள்ள ஸ்தலமாக மாறிவிட்டது. சமீபத்தில் மழை அதிகமாகப் பெய்ததால் அதற்குவரும் பாதைகளெல்லாம் சேறுள்ளதாயும், சதுப்புப்பிரதேசங்களாகவும், மாறிவிட்டன.

நீபர் நதியை நோக்கிவரும் ஜெர்மன் எதிர்ப்புகள் அதன் மேற்குக்கரையிலேயே தடைபட்டன. அதிலுள்ள பெரிய அணை குண்டுகளால் உடைக்கப்

பட்டது. இதனால் ஜெர்மானியர்கள் தடைபட்டதுமல்லாமல் விவசாயத்திற்கு லாயக்கில்லாமல் யூக்ரேன் பள்ளத்தாக்குப் பூராவும் வெள்ளம் பெருகிவிட்டது.

பெரிய டொப்ருக்ஷைப்போலவே ஒடெஸ்ஸாவும் சிரமத்தைத் தருவதால் நாஸி திட்டங்களுக்குக் கொஞ்சம் தடையேற்படுகிறது.

இப்பொழுது ருஷ்யர்களுக்குத் தேவையானது அனுதாபமோ, பெருமை பாராட்டுவதோ அல்ல. ஆனால் தளவாட உதவிதான். அதை பிரிடனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் ஸப்ளை செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து விமானங்களுக்குத் தேவையான எண்ணெய் ஏழு கப்பல்களில் புறப்பட்டுவிட்டது. இவ்விதம் உதவுவதில் மற்றவர்கள் தலையிடுவதை விரும்பாமல் வ்ளாடிவாஸ்டாக் மூலம் வரக்கூடிய சாமான்களுக்கு ஒருவித தடையும் செய்யக்கூடாது என்று ஜப்பானுக்கு ருஷ்யா எச்சரிக்கை செய்துவிட்டது. சண்டை நீடிக்கும் என்று திட்டம்போட்டு சல்லிசாக அனுப்பும்படி வசந்த காலத்திற்குத் தேவையான சாமான்களுக்கு இப்பொழுதே அமெரிக்காவிடம் ஆர்டரும் கொடுத்திருக்கிறது.

## புதிய திட்டம் வேலை செய்யும் விதம்.

லிதுவேனியா.—ஜெர்மனிக்கு இரையான தேசங்களில் ஒன்று. சில வாரங்களுக்கு முன் பொதுமக்கள் சேர்ந்த சபை மூலமாக ராஜ்ஜிய பரிபாலனம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது. இவ்விதமாக அதைத் திருப்திசெய்து, மேமல் நதியிலுள்ள பாலங்களை ருஷ்யர்கள் தடுக்காமல் பார்த்துக்கொள்ளச் செய்ய உத்தேசம். அதன் பிறகும் சில உதவி சரியான நாஸி முறையில் கொடுக்கப்பட்டது. அதன்படியே அங்குள்ள தலைவர்கள் கைதியாக்கப்பட்டு, ராஜசபை கலைக்கப்பட்டு, தேசமும் ஒரு கொடுங்கோல் தலைவன் கீழ் வந்து விட்டது.

போலந்தில், ஸ்காலா என்ற கிராமம் எரிக்கப்பட்டு கிராம வாசிகளும் சுடப்பட்டார்கள். ஏனென்றால் கம்யூனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த ஒருவன் ஜெர்மன் ராணுவ மோட்டாரைப் பார்த்து சுட்டானாம்.

அல்ஸாஸ், பிரெஞ்சு பாஷையைப் பேசினாலும், அயல் நாட்டு தந்தியில்லா செய்திகளைக் கேட்டாலும் கொல்லப்படுவார்களாம். தான் (Thann in Alsace) என்ற இடத்தில் மாத்திரம் அழகிய ஞாபக ஸ்தம்பம் ஒன்று ஜெர்மானியரால் கட்டப்பட்டு ஒரு சட்டியை அதன் தலையில் கவிழ்த்து, 'இங்கிலாந்தை ஹிட்லர் படையெடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட தொப்பி' என்று பரிகாசமாக எழுதப்பட்டிருந்தது.

ஒரு ஆகாசவாணி, சிற்சில சமயங்களில் நாஸி ரேடியோ குறிப்புகளை நாஸிக்கு விரோதமான பேச்சுக்களைப்பேசி அடிக்கடி தடைசெய்கிறது. ஆகஸ்டு மீ 23-ம் தேதி அந்த சப்தம் இவ்வாறு கேழ்க்கப்பட்டது. "உலகிலேயே பெரிய தொழிற்சாலை பலம் வாய்ந்த அமெரிக்கா ஹிட்லருக்கு எதிராக இருக்கிறது. கடல் ஆதிக்கம் வாய்ந்த பிரிடனும் பெரிய பலமுள்ள நிலப்படை வாய்ந்த ருஷ்யாவும் ஹிட்லருக்கு எதிரில் நிற்கின்றன. ஆகையால் ஹிட்லர் இந்த யுத்தத்தை



எவ்வாறு ஜயிக்க உத்தேசிக்கிறான்? நான் சொல்லுவதைக் கேளுங்கள், ஹிட்லர் இருக்கும்வரை உங்களுக்கு கஷ்டம்தான்விளையும், அவனைக்கொன்று இந்த அனர்த்தமான யுத்தத்தை முடித்து விடுங்கள்."

இதன் இறுதியில் 'வி' இயக்கத்திற்கு கர்னல் பிரிடன் ஒரு புதுக்கொள்கையை ஆரம்பித்திருக்கிறார். "களவாணித்தனம் செய்யுங்கள். நாஸிகளுக்காகவுன் இவ்வளவு சிரமம். உங்கள் ஆத்மாவிற்கும் குடும்ப யோகக்ஷேமத்திற்கும், தேசத்தின் நலத்திற்கும் பாடுபடுங்கள். அப்படிச் செய்யாமல் நாஸிகளுக்கு உழைத்தால் உங்களுக்கு விபத்துதான். இம்முறைகளை எவ்வளவுக்கெவ்வளவு மெதுவாகக் கைப்பற்றுகிறீர்களோ அவ்வளவு சீக்கிரத்தில் வெற்றிபெறலாம். பிரிடனிலிருக்கும் நாங்கள் வெற்றிபெறுவதற்கான முயற்சிகளைத் துரிதப்படுத்துகிறோம். ஐரோப்பாவிலுள்ள நீங்கள் முடிந்தவரை தாமதித்து உதவினால் போதும்."

பிரான்ஸில் கம்யூனிஸ்ட் தொந்தரவு அதிகரித்துவிட்டது. 'சாம்ஸ் எல்ஸி' என்ற பிரதேசத்தில் மாத்திரம் இந்த சந்தேகத்தினால் 1,000 பேர்கள் கைதி செய்யப்பட்டனர்.

பிரான்ஸில் தேசாபிமானங்கொண்டு தேசத்தின் ஸ்வதந்திரத்திற்காகப் பாடுபடும் ஒவ்வொருவனையும், கம்யூனிஸ்டு என்று பட்டப்பெயர் கொடுப்பது ஜெர்மானியருக்கு வழக்கமாய்விட்டது. உண்மையில் சில ராஜீயத் தலைவர்களைத் தவிர அதிகமான ஜனங்கள் ஜெர்மனிக்கு விரோதமான எண்ணங்கொண்டவர்கள் என்று ஏராளமான பேர்கள் கைதிசெய்யப்படுவதாலும் ஜெர்மனிக்கு விரோதமாகக் கலகம் செய்ததாலும் ஜெர்மன் ஆபீஸரைக்கொன்று ரகசிய சூழ்ச்சிகள் செய்வதாலும், தனி நியாய ஸ்தலங்கள் ஏற்படுத்துவதாலும், கைதியானவர்களை முன் சொன்ன காரியங்களுக்காகச் சுடுவதாக நாஸிகள் பயமுறுத்துவதாலும் தெரியவரும். பிரான்ஸில் மிகவும் துரதிர்ஷ்டம் வாய்ந்த லவாலைச் சுட்டதிலிருந்து அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது தெரியவரும். மார்ஷல் டீட் என்பவர் வர்ஸேல்ஸுக்கு அருகில் பால்கோலட் என்பவரால் புதன்கிழமை மாலை சுடப்பட்டார்.

## கடல் யுத்தம்.

ஜூலை ஆகஸ்டு மாதங்களில் கடலில் பிரிடிஷாருக்கு நஷ்டம் அதிகக் குறைவு. இக்குறைவினால், அட்லாண்டிக் யுத்தம் ஜயிக்கப்பட்டது என்று சொல்ல முடியாத போதிலும் தாத்காலிகமாக வெற்றியடைந்ததாக நிச்சயம் சொல்லலாம். நீண்ட கோடை நாட்களில் நீர்மூழ்கி எதிர்ப்புகள் ஏற்படுவது சகஜம். ஆனால் அவ்விதம் ஏற்படவில்லை. மேலும் ஐஸ்லாந்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் கைப்பற்றிக்கொண்டு கடலில் அமெரிக்கக் கப்பல்கள் காவல்புரிவதால் விரோதி நீர்மூழ்கிகளின் நடமாட்டம் குறைந்துவிட்டது. அட்லாண்டிக்கிலிருந்த ஜெர்மன் 'யூ' படகுகளும் ருஷ்ய யுத்தம் ஆரம்பித்தது முதல் பால்டிக் பிரதேசத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனால் இவைகளைக்கொண்டு திருப்தியடையக் கூடாது;

நீர்மூழ்கிச் சண்டை விட்டுவிட்டு நடக்கும். ஏனென்றால் அந்தந்த சமயங்களில் கிடைக்கும் 'யூ' படகுகளின் எண்ணிக்கையும் புதிய தற்காப்பு முறைகளையும், விரோதி மறுகுவதையும் பொருத்துத்தான் இச்சண்டை இருக்கிறது.

மிஸ்டர் ஏ. வி. அலெக்ஸாண்டர் கப்பற்படை இலாகாத் தலைவர், ஆகஸ்டு 22-ம் தேதி ஒலிபரப்பும்பொழுது, கொடுத்த கணக்கு, பிரிட்டனுக்கு நேசதேசங்கள் செய்யும் உதவியைத் தெரிவிக்கிறது. பிரிடிஷ் கப்பல்கள் சேராமல் நேசதேசங்களுடைய கப்பல்கள் மாத்திரம் 190 சண்டைக் கப்பல்கள். அவைகளில் 1,200 உத்தியோகஸ்தர்களும் 13,000 தலைவர்களும் இருக்கிறார்கள். இவைகளில் நாசகாரிகளும் நீர்மூழ்கிகளும், சிறு கப்பல்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரி-பிரெஞ்சுக்குச் சொந்தமான நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும், சிறிய கப்பல்களும் இவைகளில் அடங்கியவை.

| | | |
|---|---|---|
| நார்வீஜியன் கப்பல்கள் | ... | 59. |
| ராயல் நெதர்லண்டு கப்பல்கள் | ... | 50. |
| போலிஷ் கப்பல்கள் | ... | 12. |

கிரேக்கர்கள், மற்றுமுள்ளவர்களின் வியாபாரக் கப்பல்கள் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டச்சு | ... | 480 | கப்பல்கள். | 22,50,000 | டன். |
| நார்வே | ... | 720 | ,, | 32,50,000 | ,, |
| பிரெஞ்சு | ... | 92 | ,, | 4,00,000 | ,, |
| பெல்ஜியம் | ... | 54 | ,, | 2,00,000 | ,, |
| கிரீஸ் | ... | 240 | ,, | 1,00,000 | ,, |
| போலிஷ் | ... | 32 | ,, | 1,00,000 | ,, |

பிரிடிஷ் துணைக்கப்பல்களில் 25 வியாபாரக் கப்பல்கள் விரோதி விமானங்களாலும், நீர்மூழ்கிகளாலும், ஜிப்ரால்டருக்குப் போகும் வழியில், கேடிஸுக்கருகில் வெள்ளிக்கிழமை யன்று தாக்கப்பட்டன. அவைகளில் தாகஸ் நதி முகத்துவாரத்திற்கு 15 பத்திரமாய் வந்தன. 10,000 டன் நிறை உள்ள 7 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. கார்வெட்டி என்ற ஒரே சண்டைக் கப்பல்தான் தொலைந்தது. ஆனால் ஜெர்மானியர்கள் 25 கப்பல்களையும் ஒரு நாசகாரியையும் மற்றும் இரண்டு யுத்தக் கப்பல்களையும் மூழ்கடித்ததாகச் சொல்லுகின்றனர். பதினாறு சதுரமைல் உள்ள கார்க்காட்டை கடல் மார்க்கமாய் தாக்கிய தகவல் கிடைத்திருக்கிறது. இது வட ஸார்டீனியாவில் உள்ளது. இதற்குத் தீ வைத்து இந்த சாம்பலை ஹிட்லரின் மீசையென்று பரிகாசமாக நாஸியிடம் வர்ணிக்கப்படுகிறதாம்.

ஆர்க் ராயல் என்ற பிரிடிஷ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக ஜெர்மன் ரேடியோ சொன்னபோதிலும் வாலன்ஷியாவிற்கு அருகில் ஒருமணி நேரம் நிர்ப்பயமாக சஞ்சரித்தது. இதாலிய சண்டைக் கப்பல்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்தும் நெருங்கமுடியவில்லை. கடைசியாக சென்ற சில நாட்களாக நடு சமுத்திரத்தில் விரோதி விமானங்கள் தீவிரமாக நடமாடும் பொழுதே



மூன்றுநாள் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சந்தித்துப் பேசியது கடலாதிக்கம் பிரிட்டனிடம் தான் இருக்கிறதென்பதை தெரியப்படுத்துகிறது. இது நாஸிகளை அவமானப்படுத்தியதாகும். சர்ச்சில், பிரிட்டனுக்குத் திரும்பிவரும்பொழுது பிரிடிஷ் துணைக்கப்பல்கள் ஆகாரம் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு சாவகாசமாக, உல்லாசப் பிரயாணமாக வந்ததைப் பார்த்தார்.

## பிரிடிஷ் விமானப்படை.

ஜெர்மன் பேரிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் பிரிடிஷ் விமானங்களின் எதிர்ப்பு குறைபாமல் இருந்துவருகிறது. கீல், இஜ்முடினிலுள்ள இரும்பு, எஃகு சாலைகள் ஹாலந்து, டஸ்ஸல் டார்ப்தான் சென்ற வாரத்தில் முக்கிய லக்ஷியங்கள். அதிகாரிகள் ஜெர்மன் மக்களை தைரியமாக இருக்கச்சொல்லி, இரவு பூராவும் பூமிக்குள் போகச்சொல்லுகிறார்கள். எதிரிகள் படையெடுக்கமாட்டார்களென்ற தப்பு அபிப்பிராயங்களைக் கொள்ளக்கூடாதென்றும், இந்தத் தொந்தரவுகள் இன்னும் இருக்குமென்றும் சொல்லிவருகிறார்கள்.

## பெரும் ஒலிபரப்பு.

ஞாயிற்றுக்கிழமை சர்ச்சில் செய்த ஒலிபரப்பு முன் போலவே சிலாகிக்கக் கூடியதாயும், பிரசங்கத்தில் மேலானதும் உத்ஸாகத்தை மூட்டுவதாயும் முக்கியமான தருணத்தில் யாவரையும் ஒன்று சேர்க்கிறதாயும், சமயத்திற்கேற்ற விஷய சோதனை கொண்டதாயும், வருங்காலத்தில் சமாதானமும் நல்ல எண்ணமும் உண்டாக்கக்கூடிய வழிகளைக் காண்பிக்கிறதாயும் இருந்தது. அவர் பேச்சிலிருந்து எடுக்கப்பட்ட சில பாகங்கள் :—

## முக்கியமான கூட்டம்.

" இதனால் இக்கூட்டம் முக்கியமானது. இக்கூட்டமானது உலகில் தற்சமயம் வெற்றிபெற்று ஐரோப்பா முழுவதையும் ஆசியாவின் பெரும் பகுதியையும் தனது மாயைக்குட்படுத்தியிருக்கும் கெட்ட சக்திக்கு விரோதமாக உலகின் நல்ல சக்தியை எல்லாம் திரட்டுவதற்கறிகுறியாகவே இக்கூட்டமிருந்தது. குழப்பமும் அபாயமும் மிகுந்த இச்சமயத்தில் எல்லாக் கண்டங்களிலுமுள்ள உழைப்பாளி மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டி, நீதி ஸ்வதந்தர வழியில் செல்லுமாறு செய்து நற்கதிக்கு வழி காட்டும் வேலையை நாம் சுயநலமின்றி நாம் ஆங்கிலம் பேசும் ஜாதியார் மேற்கொண்டிருப்பதை இக்கூட்டம் உலகிற்கு எப்பொழுதும் காட்டும்.

## புலிக்கு உதவும் குள்ள நரிகள்.

" நாஸிகளது மிருகத்தனமான கோபம் யந்திர சாதனங்கள் இவற்றினால் ஐரோப்பா முழுவதையும் குலைத்துக் காலால் மிதித்து நசுக்கி யிருக்கிறார்கள். மிகக் கொடுமையான யுத்தக் கருவிகள், பெரும் துரோகம், ஈவிரக்கமின்மை இவையாவும் சேர்ந்து பல புராதனமான மக்கள், தேசங்கள், இவற்றின் உரிமைகள் சம்பிரதாயங்கள் இவற்றை இதற்கு முன்பு எந்நாளும் கண்டிராதபடி வீழ்த்தி நாசப்படுத்தியிருக்கின்றன. இக்கொடிய நாஸிப் பேய் ஆஸ்திரியர்கள் செக்கு

கள் போலிஷ் மக்கள் நார்வேக்காரர்கள், டென்மார்க் வாசிகள், பெல்ஜியர்கள், டச்சுக்காரர்கள், கிரேக்கர்கள், குரோஷியர்கள், செர்பியர்கள். இவர்களையும் பெரிய பிரெஞ்சு மக்களையும் பிரமிக்கச் செய்து காலால் அறைந்து எழுந்திருக்க முடியாதபடி அழுத்திக்கொண்டிருக்கிறது. புலிக்கு உதவிய குள்ள நரிகளைப் போல் இதாலி, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய தேசங்கள் இந்த வேலையை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் உண்மை நிலைமையும் தோல்வியுற்ற நாடுகளின் நிலையிலிருந்து மாறுபட்டதாக இருக்கவில்லை. சீக்கிரம் இவையும் தோற்ற நாடுகளின் கதியினின்று வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாத நிலையை அடையும். ஸ்வீடன், ஸ்பெயின், துருக்கி ஆகிய தேசங்கள் நடுங்கி நிற்கின்றன. அடுத்தபடியாக நாஸி பேய் தங்களில் எவரை அறைந்து தீர்த்துமென்ற சிந்தனையுடனிருக்கின்றன.

## இந்தத் தடவை சுலபமல்ல.

"தற்பெருமை, ஆதிக்க ஆசை இவற்றின் காரணமாக இப்பேய் 20 அல்லது 30 லக்ஷம் பேர்களுக்கு மேற்பட்டவர்களைத் துரிதமாக மடியும்படி உத்தரவிடுகின்றது. "ருஷ்யாவை இருந்தவிடம் தெரியாமல், அழியுங்கள்! ராணுவங்களை முன்னேறிச் செல்ல உத்தரவிடுங்கள்" என்பதே அவரது உத்தரவுகளாகும். இதற்கிணங்க வட துருவ சமுத்திரம் முதல் கருங்கடல் வரையிலுள்ள பிரதேசத்தில் சுமார் 60 முதல் 70 லக்ஷம் சிப்பாய்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இம்முறை இவரது முயற்சி சுலபமாக முடியப் போவதில்லை. ருஷ்யக் குடியரசின் படைகளும் ராணுவமும் தமது தேசத்தையும் வீடு வாசல்களையும் பாதுகாக்கக் கூடியிருக்கின்றனர். முதன் முறையாக நாஸி ரத்தம் பெரும் பிரவாகமாக ஓடியிருக்கிறது. ருஷ்யாவின் பெரிய சமவெளிகளில் 15 லக்ஷம் முதல் 20 லக்ஷம் நாஸித் துருப்புகள் வரை ருஷ்ய பீரங்கிகளுக்கிரையாகி மண்ணைக் கவ்வியிருக்கின்றனர். 2,000 மைல் நீளமுள்ள போர்முனையில் கடும்போர் நடக்கிறது. ருஷ்யர்கள் மிக்க ஊக்கத்துடன் போராடுகின்றனர். ருஷ்யப்போர் முனையைப் பார்வையிட்ட நமது ஜெனரல்கள் ருஷ்ய ராணுவத்தின் திறமையான ஏற்பாடுகளையும் அவர்களது யந்திர சாதனங்களின் மேன்மையையும்பற்றி ரிப்போர்ட் செய்திருக்கின்றனர். படையெடுப்பவர் ஆச்சரியமும் திகைப்புமடைந்திருக்கிறார். பெருவாரியான கொலைகள் லாபகரமாக இல்லை என்பதை முதன் முதலாக ஹிட்லர் இங்கேயே உணர்ந்திருக்கிறார். இதனால் அவர் மிக்க பயங்கரமான குரூரங்களை இழைத்துப் பதிலுக்குப் பதில் செய்கிறார்.

## தூரக்கிழக்கு ஆக்கிரமணம்.

"சென்ற ஐந்து வருஷங்களாக ஜப்பானிய ராணுவக் கோஷ்டிகள் ஹிட்லர் முஸோலினி முறைகளைப் பின்பற்றிச் சைனாவின் 50 கோடி மக்களை விருகத் துன்புறுத்தி வருகின்றனர். அதனைச் சைனா சம்பவமெனக் கூறுகின்றனர். சைனாவின் தென்கடலில் ஜப்பானியர் கையை நீட்டிக் கேவலமான விஷி பிரான்ஸிடமிருந்து இந்தோ-சைனாவைக் கைப்பற்றினர். தங்கள் நடமாட்டத்தினால் ஸயாமிற்கும் சிங்கப்பூருக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸின் பாதுகாப்பிற்குட்பட்ட



பிலிப்பைன் தீவுகளுக்கும் சண்டை நடக்கிறது. இம்முயற்சி நிற்கவேண்டுவது நிச்சயம். இதனைச் சமாதானமான வழியில் தீர்த்துக்கொள்ளச் சகல முயற்சியும் செய்யப்படும். யுனைடெட் ஸ்டேட்ஸ் அளவிலாப் பொறுமையுடன் நியாயமும் சமரஸமும் வாய்ந்ததொரு ராஜியைச் செய்ய முயற்சி செய்கிறது. இந்தச் சமாதான ஏற்பாடு ஜப்பானின் நியாயமான நலன்களைப் பாதுகாக்க எவ்வளவு உறுதிமொழியளிக்க முடியுமோ அவ்வளவு உறுதி மொழியும் அளிக்கும். இந்த ராஜிப் பேச்சு வெற்றிபெறுமென நாங்கள் நம்புகிறோம். ஆனால், இவை வெற்றிபெறாவிட்டால், நாம் யுனைடெட் ஸ்டேட்ஸுடன் தயக்கமின்றிச் சேர்ந்துகொள்ளுவோம்.

## லக்ஷியம்.

"சென்ற மஹா யுத்தத்தில் பிற்பகுதியில் நேச தேசத்தினர் கொண்ட மனோபாவத்திற்கும் தற்போது அமெரிக்காவும் பிரிட்டனும் கொண்ட மனோபாவத்திற்குமிடையில் 2 முக்கியமான வித்தியாசங்களிருக்கின்றன.

அவையாவன:—(1) தற்போது 2 தேசங்களும் இனி யுத்தமே ஏற்படாதென்று அனுமானிக்கவில்லை.

குற்றமுள்ள தேசத்தார்களைப் பலனற நிராயுதபாணியாக்கி மற்றவர்களைத் தக்கபடி பாதுகாக்கவும் இதன்மூலம் எக்காலத்திலும் போர் ஏற்படாமல் போதியபடி முன் எச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்யவும் உத்தேசித்திருக்கிறோம்.

(2) 1917-ம் வருஷத்தில் செய்ததுபோல அதிகப்படி வியாபார நிர்பந்தங்களினாலும், தடைகளினாலும் ஜெர்மன் வியாபாரத்தை அழிக்க முயற்சி செய்ய மாட்டோம். உலகினுடையவும் பிரிடன், யுனைடெட் ஸ்டேட்ஸினுடையவும் நலத்தையும் உத்தேசித்து எந்த தேசமும் செழிப்பற்ற நிலையிலிருக்கக் கூடாதென்றும் கண்ணியமான வாழ்க்கையை நடத்தும் உரிமை, எந்தப் பெரிய தேசத்திற்கும் அதன் மக்களுக்கும் இல்லாமல் செய்யக்கூடாதென்றும் நாங்கள் திட்டமாக அபிப்பிராயப்படுகிறோம். இவை தத்துவத்தில் பெரும் மாறுதல்களைச் செய்கின்றன. இதுபற்றி எல்லா தேசங்களும் ஆலோசிக்கவேண்டும்.

## புதிய ஐரோப்பிய நாடு.

"ஹிட்லர் ஏற்படுத்த விரும்பும் புதிய ஐரோப்பிய ஏற்பாடு என்ன? ஜனநாயக ஆட்சிமுறை பார்லிமெண்டுகள் மூலாதார ஸ்வதந்திரங்கள், ஸ்திரீ புருஷர்கள் கண்ணியமாக வாழப்பெற்றிருக்கும் உரிமை, தேசங்களின் சரித்திர பூர்வமான உரிமைகள் இவற்றிற்குப் பதில் பிரஷ்யாவின் கொடிய அடக்குமுறை ஆட்சியை ஏற்படுத்தி, 12 நாடுகளில் செய்வதுபோல ராஜீயப் போலீஸாரையும் சுடும் கோஷ்டியினரையும் பந்தோபஸ்து முகாம்களையும் பின்னால்வைத்து தொழிலாளரை ஒரே மாதிரியான கட்டுப்பாட்டிற்குட்பட்டிருக்கும்படி செய்வதுதான் அதன் நோக்கம்.

## ஒடுக்கப்பட்டவர்களுக்கு சர்ச்சில் உறுதிமொழி.

"தீரமுள்ள நார்வேக்காரர்களே! மனச்சோர்வுறாதீர்கள். உங்கள் நாட்டிலிருந்து விரோதிகள் மட்டுமின்றி அவர்களது கையாட்களான அசுத்தமுள்ள துரோகிகளுமில்லாதபடி செய்யப்படுவார்கள். ஸெக்குகளே! உங்களது ஸ்வதந்தரம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்குமாறு செய்யப்படும்.

"போலிஷ்காரர்களே! உங்களது மக்கள் குரூரமானவர்களது துன்புறுத்தலை தீரமாக எதிர்த்து நிற்பதையும் உங்களது சிப்பாய்கள், மாலுமிகள், விமானிகள் இவர்களது தீரமும் மறக்கப்படமாட்டாது. உங்களது தேசம் மீண்டும் உயிர் பெற்று ஐரோப்பாவின் புதிய ஏற்பாட்டில் தனக்குரிய பதவியை வகிக்கும்.

"தீரமுள்ள பிரெஞ்சு மக்களே! நீங்கள் உங்கள் தலையைத் தூக்குங்கள், நீங்கள் உங்களது பிறப்புரிமையைத் திரும்பப் பெறுவதற்கு டார்லானும், லவாலும் இழைக்கும் அவமானச் செயல்கள் தடையாக இருக்க முடியாது. உறுதிவாய்ந்த டச்சு, பெல்ஜிய, லக்ஸம்பர்க் வாசிகளே! துன்புறுத்தப்பட்டு உதாசீனம் செய்யப் பட்ட யூகோஸ்லாவிய மக்களே! இதாலிய பாஸிஸ்டுகளது கொடுமைக்குட் படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டிருக்கும் உறுதிவாய்ந்த கிரேக்கர்களே! ஒரு அங்குலம்கூட (எதிரிக்கு) விட்டுக்கொடாதீர்கள்.

## ஒவ்வொருவராக நாசமாவீர்கள்.

"அமெரிக்கா யுத்தத்திற்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறதென்று கேள்வி கேட்கப்படுகிறது. அதற்கு ஹிட்லர் தான் பதிலளிக்கக்கூடும். அவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் மீது போர் துவங்காதிருப்பதற்கு அமெரிக்க ஸ்தாபனங்களின் மீதுள்ள அன்போ அன்றி சாக்கு போக்கு கண்டுபிடிக்க முடியாததோ காரணமில்லை. அமெரிக்காவைப் போருக்கிழுத்தால் தனக்கு விரோதமான முயற்சி இரட்டிக்கப் படுமென்ற அச்சம் அவரைத் தடுத்துவருகிறது. ஆனால் ஒன்றன்பின் ஒன்றாக ஒழிப்பதென்ற முறையை அவர் கையாளுவதுதான் இவ்வாறு செய்யாதிருப்பதன் முக்கிய காரணமாகும். இந்த தந்திரத்தினால் அடிமைப்படுத்தியிருக்கிறார்."



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| 18—8—41. (திங்கட்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—3 காவல் புரியும் ஜெர்மன் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக் கப்பால். | …… | 3 கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. |
| தொழிற்சாலை.—லிலி (Lille) … | …… | 3 பகல் பைடர் விமானங்கள். |
| விமான எதிர்ப்புகள்.—பிரட்டானி (Brittany)யின் வடகரை. | …… | …… |
| ஒரு விமான நிலயம், விரோதி சைனியம்.—வட பிரான்ஸ் (France). | 3 பகல் பைடர்கள். | சேதமாயின. |
| இரவில்.—தொழிற்சாலைகள்-கொலோன் (Cologne), டூயிஸ்பர்க் (Duisberg). | …… | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. |
| கப்பல் துறைகள்.—டன்கர்க் (Dunkirk). | …… | …… |
| விரோதி விமான தளங்கள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசம். | 8 விமானங்கள். | …… |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) … | …… | தீக்கள் மூட்டப்பட்டன; எரிந்தது. |
| 9,000 டன் நிறையுள்ள கப்பல்.—லாம்பெடூசா (Lampedusa) கடல் ஓரம். | …… | …… |
| விரோதி ஸ்தானங்கள்.—கோண்டார் (Gondar) பிரதேசம். | …… | …… |
| விமானம் கட்டும் யந்திரங்களும் கிட்டங்கிகளும்.—கோண்டார் (Gondar). | …… | …… |
| கோட்டை.—டெபரெக் (Debarech) … | நஷ்டமில்லை. | …… |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| விரோதி சைனியம்.—யுத்த ரங்கம் பூராவும். | …… | …… |
| விமான எதிர்ப்புகள்.—போர்முனையில். | 12 விமானங்கள். | 38 விமானங்கள். |
| **கருங்கடல் (Black Sea).** | | |
| இரண்டு விரோதி சாமான் கப்பல்கள்.— | …… | மூழ்கடிக்கப்பட்டன. |
| **ஜெர்மனி (Germany).** | | |
| ராணுவ லக்ஷியங்களும், தொழிற்சாலைகளும்.—பெர்லின் (Berlin). | …… | …… |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**19—8—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| காலையில்.—விமான எதிர்ப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| கரை ஓரத்திலிருக்கும் கப்பல்கள்.—ஆஸ்டெண்டு (Ostend). | ...... | அநேக கப்பல்கள் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. |
| பகலில்.—ரயில் வண்டிகள் நிற்குமிடம்.—ஹேஸ்புருக் (Hazebrouck). | 3 பாம்பர் விமானங்களும், 12 பைடர் விமானங்களும். | 14 பகல் பைடர் விமானங்கள். |
| விரோதி கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அப்பால். | ...... | ...... |
| இரவில் கப்பல் தளம்.—கீல் (Kiel). | ... | ...... |
| இதர ராணுவ லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | 2 இரவு பாம்பர் விமானங்கள். | ...... |
| விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசம். | ... | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| விரோதி நிற்குமிடமும், போக்குவரத்தும்.—ராஸல் மில்ஹ் (Rasel Milh). | ...... | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப் படை, தரையிலிருக்கும் விமானங்கள், போர் அரங்கம் பூராவும், சண்டையில் ஈடுபட்ட விமானங்கள். | 8 விமானங்கள். | 27 விமானங்கள். |

**20—8—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—விரோதி விமான நிலயம்—ஆக்நாரு (Aknar)க் கருகாமையில், ஹாலந்து (Holland). | ...... | ஒரு விமானம் நேரே தாக்குண்டது. |
| காவல்புரியும் கப்பல்கள்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கருகில். | 2 பகல் பைடர் விமானங்கள்; ஆனால் 1 விமானி தப்பினார். | ...... |
| விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | 3 பகல் பைடர்கள். |
| இரவில்.—சாமான் ஸப்ளை கப்பல்—நார்வே (Norway)க் கடற்கரைக்கப்பால். | ...... | நேராகத் தாக்கப்பட்டது. |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**20—8—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம், ரயில்வண்டிகள் நிற்குமிடம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| விரோதி 'டாங்கி' கள் சேர்ந்த இடம்.—மெர்ஸாலக் (Mersaluck)குக் கருகில். | ...... | அநேக டாங்கிகள் நாசமடைந்தன. |

ஸிஸிலி (Sicily).

| | | |
|---|---|---|
| விரோதிக் கப்பல்.—ஸிஸிலி (Sicily)க் கப்பால். | ...... | சேதமடைந்தது. |
| எண்ணெய் கப்பல்கள், கடல் விமானங்கள், பலூன்கள்.—ஸிராக்கூஸ் (Syracuse) துறைமுகத்தில். | 3 விமானங்கள்; 1 விமானத்தில் உள்ள சிப்பந்திகள் தப்பினார்கள். | ...... |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| டாங்கிகள், துருப்புகள், ஆகாயச் சண்டைகள்.—போர் அரங்கம் பூராவும். | 12 விமானங்கள். | 21 விமானங்கள். |

ஜெர்மனி (Germany).

| | | |
|---|---|---|
| ராணுவ லக்ஷியங்கள்.—பெர்லின் (Berlin). | நஷ்டமில்லை. | பெருத்த சேதம். |

**21—8—41.** (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| காலையில்.—எஃகு, இரும்பு தொழிற்சாலைகள்.—ஹாலந்திலுள்ள, இஜ்முடின் (Ijmuiden). | ...... | வேலை செய்துகொண்டிருந்த யந்திரங்கள், தொழிற்சாலையிலுள்ள இதர இடங்கள் நேராகத் தாக்கப்பட்டன. |
| பகலில்.—கைத்தொழில் லக்ஷியங்கள் ரயில் போக்குவரத்துகள்—ஸெயிண்ட் ஓமர் (St. Omer), பெத்தூன் (Bethune) பிரதேசங்கள். | ...... | தீ மூட்டப்பட்டது, தகர்க்கப்பட்டது. |
| விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| இ. படகுகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | அநேகம் சேதமாயின. |
| ஆகாயச் சண்டைகள்.—வட பிரான்ஸ் (France). | 14 பைடர் விமானங்கள். | 1 பைடர் விமானம். |
| விரோதிக் கப்பல்கள்.—பிரெஞ்சு ... (French)க் கடற்கரைக்கப்பால். | நஷ்டமில்லை. | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 21—8—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள், பழுதுபார்க்கு மிடங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | பலத்த சேதம். |
| | விமானமிறங்கும் தளங்கள்.—காம்பூத் (Gambut), மொனஸ்டீர் (Monastir). | ...... | ...... |
| | விமான நிலயங்களிலுள்ள கட்டடங்கள், யந்திரங்கள்.—அஸோஸா (Asosa). | ...... | கட்டடங்கள் தாக்கப் பட்டன. |
| | மோட்டார் போக்குவரத்து—அஸோஸா (Asosa)க்கருகில். | நஷ்டமில்லை. | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | துருப்புகள், ஆகாயச் சண்டைகள்.—போர் அரங்கம் பூராவும். | ...... | ...... |
| 22—8—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விரோதிக் கப்பல்கள், காவல் புரியும் கப்பல்கள்–இங்கிலீஷ் கால்வாய் (English Channel.) | ...... | ...... |
| | ஹாங்கர்கள், தரையிலிருக்கும் விமானங்கள்.–விரோதியின் விமான நிலயத்தில். | ...... | ...... |
| | விமான எதிர்ப்புகள்.–இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | 2 பைடர் விமானங்கள். |
| | இரவில்.–தொழிற்சாலையுள்ள பட்டணம்–மான்ஹீம் (Manheim). | ...... | தீக்கள் மூட்டப் பட்டன. |
| | துறைமுகம்.—லஹாவர் (Lehavre). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.–ஆஸ்டெண்டு (Ostend), டங்கர்க் (Dunkirk). | ...... | சேதமாயின. |
| | விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசம். | 1 விமானம். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கடற்கரை ஓரம் மோட்டார் போக்குவரத்து.—ட்ரிபோலி (Tripoli)க்கும், பெங்காஸி (Benghazi)க்கும் இடையிலுள்ள ரஸ்தா. | ...... | அநேக வண்டிகள் நாசமாக்கப்பட்டன. |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 22—8—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி வண்டிகள், பீரங்கி தளங்கள் காலாட்படை, தரையிலுள்ள விமானங்கள், ஆகாயச் சண்டைகள்.—போர் அரங்கம் பூராவும். | ...... | ...... |
| 23—8—41. (சனிக்கிழமை). | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகங்கள், ஸப்ளைக் கப்பல்கள், பெட்ரோல் எண்ணெய்க் கிடங்குகள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | தீ மூட்டப்பட்டது. |
| | விமான நிலயம்.–மெல்லாஹா (Mellaha). | ...... | சேதமாயிற்று. |
| | விரோதி தங்குமிடம்.–ஸோலாம் (Sollam), பார்டியா (Bardia), காம்பூத் (Gambut) பிரதேசங்கள். | ...... | ...... |
| | இரண்டு விரோதி சிறு கப்பல்களும், ஒரு துணைக் கப்பலும்.–ஸிட்ரா (Sidra)குடா. | ...... | ஒரு சிறு கப்பலும் துணைக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. மற்றொன்று சேதமாயிற்று. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விமான யுத்தம், விரோதி யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—போர் அரங்கம் முழுதும். | ஆகஸ்டு 22, 23 39 விமானங்கள். | ஆகஸ்டு 22, 23 52 விமானங்கள். |
| 24—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| | ஹாங்கர்கள், துருப்புகள் வாசஸ்தலம், துருப்புகள், பீரங்கிகள் இருக்கும் இடம்.—வட பிரான்ஸ் (France). | நஷ்டமில்லை. | அதிகச் சேதம். |
| | காவல் விமானம்.—வட கடலில் | ... ஒரு விமானம். | ...... |
| | இரவில்.—தொழிற்சாலை லக்ஷியங்கள்—டஸ்ஸல்டார்ப் (Dussel Dorf). | 3 பாம்பர் விமானங்கள். | அதிகச் சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 24—8—41. | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி இடங்களும், துருப்புகளும்.—டெபரெக் (Debarech) பிரதேசம். | ...... | பீரங்கியினால் தாக்கப்பட்டன. துருப்புகளுக்கு அதிகச் சேதம். |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | ஆகாயச் சண்டை, விரோதித் துருப்புகள்.—போரரங்கம் பூராவும். | 6 விமானங்கள். | 40 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 19—8—41. | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந் (England)தின் தென்கிழக்குக்கரை. | ...... | 2 பேர் கொல்லப்பட்டனர்; சேதமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 3 விமானங்கள். | சேதமில்லை. |
| 20—8—41. | (புதன்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு பட்டினம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | ...... | ஒருவருக்கும் சேதமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோவிற்கு அடுத்தாற்போல். | 2 விமானங்கள். | சேதமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். | ...... | 2 பேர் கொல்லப்பட்டனர்; 28 பேர் காயமடைந்தனர். |
| 21—8—41. | (வியாழக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இங்கிலாந் (England)தின் கிழக்குக்கரை. | 1 விமானம். | முற்றிலும் சேதமில்லை. |
| | **மால்டா (Malta).** | | |
| | பாமாகுஸ்டா (Famagusta). | ...... | 1 கொல்லப்பட்டார்; 6 பேருக்குக்காயம். |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 21—8—41. | (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் கப்பல்கள்.—எகிப்தி (Egyptian)ன் கடற்கரைக்கப்பால். | 2 பைடர் விமானங்கள்; மற்றவை சேதமாயின. | 4 பைடர் விமானங்கள்; 1 விமானி தப்பினார். |
| 22—8—41. | (வெள்ளிக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்குக்கரை—இங்கிலாந்து (England). | 1 விமானம். | ...... |
| | இரவில்.—கிழக்குக்கரை—இங்கிலாந்து (England). | ...... | சேதமில்லை, ஒருவருக்கும் காயமில்லை. |
| | **ஹாலந்து (Holland).** | | |
| | ஆகாயச் சண்டை.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கப்பால். | 1 விமானம். | நஷ்டமில்லை. |
| 23—8—41. | (சனிக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—விமான நடமாட்டமேயில்லை... | ...... | ...... |
| 24—8—41. | (ஞாயிற்றுக்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இரண்டு இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | ...... | சொற்பச்சேதம். ஒருவருக்கும் காயமில்லை. |
| | இரவில்.—இங்கிலாந் (England)தின் கிழக்கு, வட கிழக்கு, தென் கிழக்கு பாகங்கள். | ...... | ரொம்ப சொற்பச் சேதம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | பிரிடிஷ் கப்பல்கள்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | 1 விமானம். | சேதமில்லை. |
| 25—8—41. | (திங்கட்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—தெற்கு வேல் (Wales)ஸின் கரையில். ஓரிடம்.—இங்கிலாந் (England)தில் தென் மேற்குப் பிரதேசம். | ... | சேதமில்லை; கொஞ்சம்பேருக்குத்தான் காயம். |
| | **ஆபிரிக்கா (Africa)** | | |
| | டொப்ருக் (Tobruk) ... ... | ...... | சொற்பச்சேதம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலக்ஸாண்டிரியா (Alexandria) ... | ...... | 3 பேருக்குக்காயம், சிறிது சேதம்தான். |

## துருக்கியை ஜெர்மனி பயமுறுத்தல்.

## பல்கேரியா ஜெர்மனிக்காக உபயோகப்படுத்தக்கூடும்.

## டார்டினல்ஸை தாக்குவதைப்பற்றிய பிரச்னை.

ஜூலை மாதம் 14-ம் தேதி இஸ்தான்புல்லிலிருந்து டெய்லி எக்ஸ்பிரஸின் விசேஷ நிருபர் எழுதுவது:—

ஜெர்மனி பல்கேரியாவை உபயோகப்படுத்திக்கொண்டு துருக்கியின் பேரில் சண்டை தொடுக்கப்போவதற்கான சூசனங்கள் இருக்கின்றன. சில சூசனையுள்ள துருக்கியர்கள் ஸ்டெரியிட்ஸுக்கும் இதனால் அபாயம் ஏற்படுமென்று கூறுகிறார்கள்.

ராணுவ சமாசாரத்தை வெளியிட்டதற்காக, ஆறு இஸ்தான்புல் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. அவைகள் போக பாக்கியுள்ள பத்திரிகைகளில் துருக்கி எல்லைப்புறத்தில், பல்கேரியாவின் படைகள் திரட்டப்பட்டிருப்பதாகவும், ராணுவ முஸ்தீப்புகள் செய்யப்பட்டிருப்பதாகவும், மாஸ்கோவிலிருந்து 'டாஸ்' ஏஜென்ஸி மூலம் வந்த செய்தி, விமர்சனம் இல்லாமல் இவைகளில் பிரசுரமாகி இருந்தது.

ஜெர்மனியுடன் துருக்கி ஒப்பந்தம் செய்துகொண்டது முதல் துருக்கி ஜனங்கள் நிர்ப்பயமாயிருக்கிறார்கள். அதன் மந்திரிகளும், பிரதிநிதிகளும் கோடைகால வாஸஸ்தலங்களுக்குப் போய்விட்டார்கள். ஆதலால் இதைக் குறித்து உத்தியோகஸ்தர்களுடைய அபிப்பிராயம் தெரியவில்லை.

மாஸ்கோவிலிருந்து சில வாரங்களுக்கு முன் இந்த சமாசாரம் வந்து இருந்தால், துருக்கியில் பரபரப்பும் ஆக்ரோஷமும் உண்டாகியிருக்கும். ஆனால் இப்பொழுது இந்த சமாசாரம் ரொம்பவும் அமைதியாகப் பாராட்டப்படுகிறது.

15, 16 சைனிய வகுப்புகளை பல்கேரியர்கள் இப்போது திரட்டியிருப்பதாக இஸ்தான்புல்லுக்கு செய்தி எட்டியிருக்கிறது. பலமான ஜெர்மானியர்களின் மோட்டார்ப்படையும் யந்திரப்படையும் சேர்ந்து அங்கு இருக்கின்றன. இருந்த போதிலும், ஸ்டெரியிட்ஸைத் தாக்க இவை போதாது.

ஆனால், ஜெர்மானியர்கள் இப்பொழுது ருஷ்யாவைத் தாக்கிக்கொண்டிருப்பதால், ஸ்டெரியிட்ஸ் ஜலசந்தியில் புதிதாக ஓர் போர்முனையை உண்டாக்கிக் கொள்ளமாட்டார்களென்று, அவர்களுக்குத் தெரியும். ஸ்டெரியிட்ஸைத் தாக்கினால் ஜெர்மானியர்களுக்குத் துருக்கியுடன் விரோதம் ஏற்படும்.

ருஷ்யாவின் தெற்குக் கரையில், ஜெர்மனி தன்னுடைய கப்பற்படையை கருங்கடல் மார்க்கமாய்க்கொண்டுபோய்வைக்கவும், காகேஸஸைப் பக்கத்தில் இருந்து தாக்கவும், ஸ்டெரியிட்ஸை தாராளமாக உபயோகிக்க ஜெர்மனிக்கு ஆசையுண்டு. ஆனால் துருக்கியை சண்டைக்கிழுத்து, ஸ்டெரியிட்ஸைக் கைப்பற்றுமா, என்பது சந்தேகம்.



## 'ஜெர்மன் ஆகாய விமானிகளின் நஷ்டம்.'

## 'விமானிகளை கூட்டம் கூட்டமாக ஒரே சமயத்தில் பழக்குவது அனுபவ சாத்தியமானதல்ல.'

பிரிடிஷார்களால் குறைந்தது 6,000 விமானங்களும், நேசதேசத்தார்களால் 1,500 விமானங்களும், ஜெர்மனிக்கு நஷ்டமென்று "டைம்ஸ்" ஆகாய யுத்த நிருபர் மதிக்கிறார். இந்த எண்ணிக்கையில் சண்டைகளில் சேதமடைந்தவைகளும், எதிர்க்கப் புறப்படும்பொழுதும், திரும்பி வரும்பொழுதும் முறிந்தவைகளும், பழக்கும்பொழுது விபத்துகள் ஏற்பட்டவைகளும், சேர்ந்தவைகளல்ல. இவைகளினால் ஜெர்மனிக்கு 18,750 விமான சிப்பந்திகள் நாசமடைந்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கலாம்.

அநேகமாக ஜெர்மன் ஆகாய விமானங்கள் குவியல் குவியலாகச் செய்யப்பட்டவை. 7,000 அல்லது 8,000 விமானங்கள் சேதமடைந்தால்கூட, கைத்தொழில் மேம்பாடான முறையில் திட்டம் செய்திருந்தாலும், அதற்கு வேண்டிய தளவாடங்கள் போதுமான அளவு இருந்தாலும்தான், மாதத்தில் ஆயிரக்கணக்கான புதிய விமானங்கள் செய்யக்கூடும். ஆனால் சென்ற ஒரு வருஷத்திற்கு மேற்பட்டு பிரிடிஷ் விமானப்படை, எதிரியின் தொழிற்சாலைகளை எதிர்த்து வெடிகுண்டுகளினால் தாக்கியும் அவைகளுக்கு சாமான்கள் போய்ச் சேராமல் போக்குவரத்துகளை தடுத்து வந்திருப்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

விமானங்கள் கூட்டம் கூட்டமாக செய்யப்பட்ட போதிலும் ஜெர்மானியர்களுக்காவது வேறு யாருக்காவது விமானங்களை செலுத்தவோ, வெடிகுண்டுகளைப் போடவோ, பீரங்கிகளைப் பிரயோகிக்கவோ, ரேடியோ ஒலிபரப்பு மூலம் பேசவோ, அநேக மனிதர்களை ஏககாலத்தில் பழக்கிக்கொடுக்க உபாயம் கண்டு பிடிக்க முடியாது. இதில் பிரிடிஷார் நிகரற்றவர்கள். குமாரராகப் பழக்கிக் கொள்ளும் காலத்தை எவ்வளவு சுருக்கினாலும், குறைந்தபக்ஷம் விமானப்படைக்கு ஆறு மாதத்திய பயிற்சி வேண்டும். அதற்குப் பிறகும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன. ஜெர்மனிக்கு வருஷம் பூராவும் விமானப் பயிற்சி அளிப்பதற்கு ஹேதுகரமான இடம் கிடையாது. ஆனால் கனடாவில் வருஷம் பூராவாக விமானப் பயிற்சி பெறலாம். அங்கு சீதோஷ்ண ஸ்திதிக்கு தக்கவாறுதான் பயிற்சியடையலாம். ஏனென்றால் மாரிகாலத்தில் விமானப் பயிற்சி பெறக்கூடிய காலம் மிகவும் சொற்பம். ஆனதால் பன்னிரண்டு மாதங்களும் பயிற்சியடையவேண்டிய ஏற்பாட்டை, பிரிடன் செய்ததற்கு இது ஒரு முக்கியகாரணம்.

ருஷ்யாவைத் தாக்க ஆரம்பித்தது முதல் வடக்கு பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, இந்த இடங்களிலிருந்த விமானங்களை ஜெர்மனி குறைத்துவிட்டது. சமீபத்தில் இராக்காலங்களில் நடக்கும் விமானப்போரில் பிடிபட்டிருக்கும் ஜெர்மன் விமானப்படையில் பயிற்சிசாலையிலிருந்துவந்த சிறுவர்

களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவம் போராது. சென்ற சில வாரங்களாக பகல் காலத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசத்திலும், ஜெர்மனியிலும், நாம் செய்த விமானப்போரில், எங்களை எதிர்க்க வந்த "பைடர்" விமானிகள் சிலநாட்களுக்கு முன்வரை பள்ளிச் சிறுவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களுக்குப் பயிற்சி இல்லை என்று நிரூபித்துக் காட்டினார்கள். நம்முடைய பலமான தாக்குதலை அச்சிறுவர்களால் எதிர்க்கமுடியாததால் கோயரிங் தன் இஷ்டத்திற்கு விரோதமாக கிழக்குமுனையில் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் பயிற்சி வாய்ந்தவர்களை இங்கு வரவழைக்கும்படி நேரிட்டிருக்கிறது.

இக் காரணங்களினால் பயிற்சியடைந்த ஜெர்மன் விமானிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கும். ருஷ்யாவில் நடக்கும் போரில் ஜெர்மனிக்கு அதிக சேதம் உண்டாகி இருக்கவேண்டும். சரியானபடி எண்ணிக்கையில் இவ்வளவென்று சொல்ல முடியாமல் போனாலும், விமானிகளிலும், விமானங்களிலும் ஜெர்மனிக்கு இந்த முன்னேற்றத்தில் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்பதற்குப் போதுமான அத்தாட்சி இருக்கிறது.

---

## மத்தியதரைக்கடலில் யுத்தம்.

## ஒரு துருக்கியர் சுருக்கமாக எழுதியது.

## ஜெர்மனியின் கடைசிபலம்.

1—6—41லுள்ள இஸ்தான்புல் பத்திரிகை "ஸன் டெலிகிராப்பில்" இ. ஐ. பெனிட்ஸி எழுதியது.

மத்தியதரைக்கடலிலிருந்து பிரிடிஷ்காரரைத் தோற்கடித்து வெளியிலனுப்புவதென்றால் அவர்களை, ஆபிரிக்கா, அராபியா, ஆசியாமைனர் இந்த ஊர்களிலிருந்தும் வெளிக்கடத்தினதாகும். அதன் முடிவு தூரக் கீழ்திசையிலும், இந்தியாவிலும், மத்திய ஆசியாவிலும், பிரிடிஷாரின் கௌரவம் அழிந்ததாகும். ஜப்பானையும் ருஷ்யாவையும் சண்டையிடும்படி தூண்டிவிட்டதாகவும் ஆகும். பிற்பட்டு இங்கிலாந்தும் அமெரிக்காவும், சண்டையிட அட்லாண்டிக்கிலும் பிரிடிஷ் தீவுகளிலும்தான் சேரமுடியும். உலக ஆதிக்கத்தை விரும்பும் அச்சு நாடுகளின் திட்டமும் பூர்த்தியானதாகும். சண்டையும், வெகு வருஷங்கள் நடக்கும். நமது தரப்பில் எதிரியைச் சோர்வடையும்படி செய்யும் தந்திரங்களையும் மாற்ற, ஜெர்மனி ஒருவழி கண்டுபிடிக்கும்.

ஆனபோதிலும் ஜெர்மனி தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்யக்கூடிய மார்க்கத்தில் இருப்பதாகக்கூட நம்ப தற்கால நிலைமையில் யாதொரு காரணமும் புலப்படவில்லை. ஜெர்மனி ஆரம்பித்து நடத்திவரும் இந்தப்போர், கஷ்டமான நிலைமைக்கு வந்திருக்கிறது. ஐரோப்பா பூராவும் ஜெர்மனியின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இப்பொழுது ஆயிரக்கணக்கான கஷ்டங்களிலும், இடையூறுகளிலும் ஜெர்மனி அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. அநேக வருஷங்களாக முஸ்தீப்பு செய்து ஜெர்மனி திடீரென்று ஐரோப்பாவைத் தாக்கி சுலபமாக



ஜயித்துவிட்டது. ஆனால் சண்டை சமுத்திரத்தைத் தாண்டி அப்பால் நடக்கிறது. இதிலிருந்து புதிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாக் கண்டங்களையும் ஆளவேண்டுமானால் முதல் முதலாகச்சுற்றிலுமுள்ள கடலின் ஆதிக்கம் வேண்டும். ஜெர்மனி அதன் குடைப்படைகளையும், விமானங்களையும், நாசகாரிகளையும் நம்பியிருக்கின்றது. இதர கண்டங்களை அடிமையாக்க நூற்றுக்கணக்கான மைலுக்கப்பால் சைனியங்களை மேற்சொன்ன சாதனங்களைக்கொண்டுமட்டும் எடுத்துச் செல்லமுடியாது.

ஜெர்மனி பிடிவாதமாகவும், தனக்கு சம்பவித்த மிகுந்த நஷ்டத்தையும், கவனியாது, தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய இன்னும் பிரயத்தனப்படுகிறது. முடிவில் ஜெர்மனிக்கு சாதகமேற்படுமென்று நினைப்பதற்கிடமில்லை.

தன்னுடைய படைகள் பூராவையும் திரட்டி மத்தியதரைக்கடலிலிருந்து பிரிடிஷ் கப்பற்படையைத் துரத்த, ஜெர்மனி பிரயத்தனப்படுகிறது. அது தன்னுடைய மூல பலத்தை எல்லாம் சண்டைக்கனுப்பி, சரத் காலத்திற்குள் ஜயிக்க யத்தனப்படுகிறது.

ஆனால் பிரிடன் மத்தியதரைக்கடலில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தப் பிரயத்தனப்படுகிறது. இது கஷ்டமாக இருந்தபோதிலும் பிரிடிஷார் சரத் காலம் வரை சமாளித்துக்கொள்வார்களென்பதற்கு சூசகம் இருக்கிறது. அவர்கள் அம்மாதிரி சமாளித்துக்கொண்டால் மாரிகாலத்தில் போராடலாமென்று பிரிடன் நம்பியிருக்கிறது.

மாரிகாலத்தில் பிரிடிஷாரின் பலம் அதிகமடையும். அவர்கள் போக்குவரத்து தாராளமாகவும் அதிகமாகவும் இருக்கும். ஏனெனில் அதற்குள் அமெரிக்காவிலிருந்து பூர்ண உதவி அவர்களுக்கு வந்துவிடும்.

இம்மாதிரி செய்ய, இப்பொழுதுள்ள நிலைமையை பிரிடன் எப்பாடுபட்டுமே பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அடுத்த மாரிகாலத்தில் ஜெர்மனி தன்னுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யாவிடில் ஜெர்மனியின் நிலைமை ஆபத்துத்தான்.

---

# அச்சு நாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம். ஆகஸ்டு *11—17, 1941.*

### ஆர்ந்து கவனிக்கவேண்டியது.

*"இந்தியர்களின் பொருளாதார நிலை நாளுக்குநாள் கெடுதலை அடைந்து வருகிறது"*
*(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 12)*

ஒருவருஷத்தில் மாத்திரம் இந்தியாவில் பூரா செய்யப்பட்டதும், ஒரு பாகம் செய்யப்பட்டதுமான சாமான்களின் ஏற்றுமதி 33-கோடி, 63லக்ஷ ரூபாய்க்கு அதிகரித்தது. ரப்பர் சாமான்கள் 11-மடங்கு அதிகமாகவும், பஞ்சுநூல் இரண்டு மடங்கும், சணல், இரும்பு, எஃகு, மருந்து தோல் சாமான்கள் விசேஷமாக அதிகமாயும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

*"இன்று இந்திய அரசாங்கத்தார் பயமுறுத்தி இந்திய உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்து இங்கிலாந்து, எகிப்து, மலேயா நாடுகளுக்குக் கப்பல்களில் அனுப்புகிறார்கள். அதனால ஸிந்து, பம்பாய் மகாணங்களில் பஞ்சம் வந்திருக்கிறது"*
*(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 12.)*

வெளிநாடுகளிலுள்ள இந்தியத் துருப்புகளுக்கு உணவுக்காகத்தான் இவ்விதம் செய்யப்படுகிறது. இதன் நியாயத்தை இந்திய மக்கள் பொருத்துக் கொள்ளவில்லை. யுத்தரங்கங்களுக்கு அனுப்பப்படும் உணவு எல்லாம் இங்கிலாந்தின் செலவில் அனுப்பப்படுகிறது. இந்தியாவில் இந்தியத் துருப்புகள் இருக்கும்பொழுது சாப்பிடக்கூடிய அளவுதான் வெளியே அவர்களுக்கு அனுப்பப்படுவதால் இதனால் இந்தியாவில் பஞ்சம் வந்துவிடாது.

### அஜாக்கிரதையான உபமானம்.

*"பிரிடனுக்கு டங்கர்க் சண்டை முடிந்ததுபோலவே ருஷ்யர்களுக்குப் பாதகமாக ஸ்மாலென்ஸ்க் சண்டை முடிந்தது".*
*(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 13.)*

கோயபல்ஸ் செய்யும் பிரசாரத்திற்குத்தான் பாதகம். டங்கர்க் யுத்த சமயத்தில் (மே 28.)
"இப்பொழுது பிரிடன் தன் துருப்புகளை வெளியேற்ற முடியாது" என்று சொன்னான். அது பிசகானதுபோல இப்போது சொல்லுவதும் பிசகுதான். டங்கர்க்குப்பிறகு ஒரு வருஷமாகியும் நாம் திரியமாக இருப்பதுபோல் ருஷ்யாவுக்கும் அந்த நிலையேற்பட்டால் சந்தோஷம்தான்.



### துருக்கி; எகிப்துபேரில் அவதூறு.

*"துருக்கிக்கு யுத்தம் வந்தால் உதவுவதாக பிரிடிஷ்காரர்களும் ருஷ்யர்களும் அனுப்பித்த தகவலை அதிகாரவர்க்கத்தார் அங்கீகரிக்கவில்லை... பிரிடிஷ் உதவியை துருக்கி மறுத்துவிட்டது...துருக்கியை இனி ஏமாற்ற முடியாது,*
*(பெர்ஸியன் அராபிய பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 15.)*

இதற்கு அரைமணி முந்திதான் உருது பாஷையில் உள்ள அங்காரா ஒலிபரப்பிலும், பெர்ஸியன், அராபிக் 'யால்ச்சின்' தலையங்கத்திலும் இவ்விதம் இருந்தது. "இந்தக் குறிப்புகள் எல்லாவிதமான தப்பு அபிப்பிராயங்களை மாற்றுகின்றன. இவ்விதமாக நம் சிநேகிதர்கள் உதவுவதாகச் சொன்னது உண்மையான சந்தோஷத்தை அளிக்கிறது.........நம் நேயநாடுகள் ஆறுதல் அளிக்கும் வார்த்தைகள் திருப்தி செய்கின்றன.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 59—(2-வது பிரிவு).

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு ...30, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 31, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | வயலோகம் ... | மாலை | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| செப்டம்பர் ...1, | திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| 2, | செவ்வாய்க்கிழமை | நல்லூர் ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| 3, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | திருமயம் ... | மாலை | 6.00 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| 4, | வியாழக்கிழமை. | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| 5, | வெள்ளிக்கிழமை... | ராஜகிரி ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 60—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 6, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 7, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| 8, | திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவப்பூர் ... | மாலை | 5.30 |
| | | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |
| 9, | செவ்வாய்க்கிழமை. | கோட்டைக்காடு ... | ,, | 6.00 |
| | | காரம்பக்குடி ... | ,, | 6.30 |
| 10, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| 11, | வியாழக்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| 12, | வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—30-8-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 6௳ [ந. 6

# 'வி'

## விஜயத்துக்காக

## வருஷாந்திரமும் மன்னிக்கமுடியாத மூன்று குற்றங்களும்.

இவ்வாரத்தோடு யுத்தத்தின் இரண்டாவது வருஷம் பூர்த்தியாகிறது. தன் கடமையைச் சரிவர நடத்தியவர்களுக்கு தெய்வம் துணை நிற்கும் என்ற பழமொழியை நம்பி இதே மாதிரி அடுத்த வருஷம், இதே மாதம் தேதி திரும்பி வரும்போது மற்றொரு யுத்த வருஷம் மறுபடியும் ஆரம்பிக்காதபடி நாம் பார்த்துக் கொள்ளுவோமாக.

தெய்வாதீனமாக இவ்வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதி இருக்கும் யுத்தநிலை இதற்குமுன் வருஷங்களைவிட அதிக திருப்திகரமாக இருக்கிறது. சென்ற இரண்டு வருஷகாலமாக எங்கு பார்த்தாலும் கொலையும், கொள்ளையும், பஞ்சமும் ஏற்பட்டதுபோல் அல்லாமல் தற்சமயம் கஷ்டங்களின்

வேகம் குறைந்து மனிதவர்க்கத்திற்கே புத்துயிர் உண்டாகியிருப்பதைக் காணலாம். **இதாலி, ஜப்பான்** (நினைத்த விதமாக) **ருஷ்யாவையும்** கைவசப்படுத்திக்கொண்டும், பாக்கியுள்ள **ஐரோப்பிய** சிறு நாடுகளை பங்கப்படுத்தியும், **பிரான்ஸைப்** பொட்டலாகச் செய்தும், **பிரிடனுக்கு** வரும் எல்லா கடல் மார்க்கங்களை நீர்மூழ்கிகளாலும், கண்ணிகளாலும் குண்டுகளாலும் மறித்தும், ஜனநாயகங்களுக்கு அச்சு ஆணியான **பிரிடனை** "லுப்ட்வாபி" படையினால் அழிக்கவும் சித்தமாயிருந்த ஹிட்லர் **பிரிடனை**யும் அது காப்பாற்றிவரும் அம்சங்களையும் அழிக்க நினைத்தது ஜெர்மானியருக்கும் நடுநிலை நாடுகளுக்கும் தெரியும்.

மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி சொல்வதுபோல—இச்சனியனை பாழும் எதிரி இவ்வாறெல்லாம் நினைத்தது பிசகு. அதனாலேதான் அபஜயம் அடைந்தான். சென்ற வருஷமும் அவன் எண்ணம் பயன்படவில்லை. அவனுக்கு அதிக உதவிபுரிந்துவந்த **(இதாலி)** நண்பன் நாடுகளை இழந்தான். மற்றொரு தோழனோடு **(ருஷ்யா)** பயங்கரமான யுத்தம் செய்யவேண்டியிருக்கிறது. மூன்றாவதாக உதவி வந்தவனோடு **(ஜப்பான்)** நம்பிக்கை வைக்க முடியவில்லை.

எல்லாவிதமான எதிர்ப்பிற்குத் தக்கவாறு **பிரிடன்** காபந்து செய்யப்பட்டிருக்கிறது. சாம்ராஜ்ஜியம் சின்னாபின்னமாகப் போகாமல் காப்பாற்றப்படுகிறது. அட்லாண்டிக் யுத்தம் நிச்சயமாக ஜயிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுதுதான் ஸ்வதந்திர நாடுகள், கலங்கும்படியான எதிரியின் அடியினாலுண்டான மயக்கத்திலிருந்து தெளிந்திருக்கிறது. உலகின் தொழிற்சாலைகளில் மூன்றில் இரண்டுபங்கு, விடுமுறை, பிரியமான சல்லாபம், ஓழிவு இல்லாமல் உலக விரோதியை அடக்குவதற்கான யுத்த தளவாடங்களை விருத்திசெய்ய அமானுஷமாயும் மும்முரமாயும் வேலை செய்துவருகின்றன.

இவ்விதமாக விரோதிகள் திடீரென்று கெடுதலடைவதற்கு, சில அதிர்ஷ்டமான காரணங்கள்தான், என்று சொல்வது ஆச்சரியமாகத்தோன்றலாம். யுத்தத்திற்குமுன் சரியான அபிப்பிராயத்தாலும் ஆழ்ந்த மனோநிலையினாலும் மனிதனின் நடத்தையினாலும் யுத்தத்தை ஜயித்துவிடலாமென்று ஒருவரும் நம்பவில்லை. ஆனால் முன்சொன்ன காரணங்கள் இருந்தும் யுத்தம் ஜயிக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆயினும் ஜனநாயகம் எஞ்சி அபிவிருத்தியடைந்து, வெற்றிபெற பாடுபடவேண்டும். ஜனநாயகத்தின் புனித சுவபாவத்தாலும், பிரிடிஷாரின் உத்ஸாகத்தாலும் சாம்ராஜ்ஜியத்தின் சிரத்தையினாலும் வின்ஸ்டன் சர்ச்சிலின் செல்வாக்காலும் தான் அடையலாம்.



**ஆனால் யுத்தம் இன்னும் ஜயிக்கப்படவில்லை யென்பது உண்மைதான்.** வெற்றிக்குத் தடையாக மூன்று காரணங்கள் இருக்கின்றன. அத்தடைகளைப் புறக்கணிப்பதற்கு லாயக்கான மூன்று விஷயங்களை கவனிக்காவிடில் அடுத்த வருஷம் வரையிலும், நெருப்பும், ரத்தமும், சாம்பலும் குவிந்து கொண்டுதானிருக்கும். அவைகள் மன்னிக்க முடியாதவைகள்.

முதலாவது நாஸிக் கொள்கை. இதைப்பற்றி பேசுவதே பாவம் எப்படியாவது இதை உலகிலிருந்து ஒழித்துவிட வேண்டும்.

இரண்டாவது நம் நாட்டிலிருக்கும் ஒத்துழையாமை, பயங்கொள்ளித்தனம், விரோதம்தான். இவைகளில் எந்தப் பெயரை வைத்துச் சொன்னாலும் இவையாவும் கெடுதலானவை. இச் சமயத்தில் இதைச் செய்கிறவர்கள் வெறும் துரோகிகள். தேசத்தையும், கொள்கைகளையும் குடும்பங்களையும் கெடுத்து தங்கள் மனதிற்குத் தோன்றுவதுதான் **சரியானதென்று** வைத்துக்கொண்டு அடையமுடியாத பொருளாதார, அரசாங்க லக்ஷியங்களுக்கு சிரமப்படுகிறார்கள்.

மூன்றாவது நம் நாட்டிலிருக்கும் அசிரத்தையான ஆத்மதிருப்தி. பொதுமக்கள் தற்போதிருக்கும் சுகத்தினால் திருப்தியடைந்து வருங்காலத்திலும் யாவும் நன்மையாகவே முடியுமென்று நினைத்திருக்கிறார்கள். நம்முடைய போர்வீரர்களும், மாலுமிகளும், விமானிகளும் தொழிலாளிகளும் பாடுபட்டு பிராணத்தியாகம் செய்து அடையும் வெற்றியில் ஒரு பாகத்தை மாத்திரம் விரும்பி, கொஞ்சமும் பிரார்த்தனை, சிரத்தை, உத்ஸாகம், தங்களால் இயன்றது இவைகளைக் கொடுக்காமல் இருப்பது தான் பெரும் குறை. அவ்விதமில்லாமல் அவர்கள் உதவி செய்தால் உலகத்திற்கேற்பட்ட ஆபத்து ஒரு க்ஷணமாவது குறைந்து நன்மையை அளிக்கும்.

"நீங்கள் யாவற்றையும் கொடுத்து உதவிக்கொண்டிருந்தால் அதை இரட்டிப்பு மடங்காக கொடுத்து உதவுங்கள். முடிந்தவரை பாடுபடுவதாக இருந்தால் இன்னும் அதிகமாக பரிசிரமப்படுங்கள்......இம் மாபெரும் காரியத்தில் உங்களைத் தோழர்களாகவும், தர்மம், கௌரவம் என்ற கஷ்ட மார்க்கங்களில் துணைப் பிரயாணம் செய்பவர்களாகவும் நினைத்து நான் உங்களுக்குச் சொல்கிறேன்......முடிவுவரை வெற்றியடைய நமக்கு **பூர்ண** தைரியம், உறுதி, விடாமுயற்சி, பொறுமை தேவை." ஸெப்டம்பர் 3-ம் தேதி மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி **இந்தியா**வுக்கு இது போன்ற மொழிகளைச் சொன்னார். நிச்சயமாக **புதுக்கோட்டை**யில் அவரது மொழிகள் மதிப்புக் கொடுக்கப்படவேண்டும்.

---

பிரஸங்கம் 60.

# உலகிலேயே பெரிய யுத்தம்.

(பி. பி. ஸி-யில், லண்டன் ஈவினிங் ஸ்டாண்டர்டு என்ற பத்திரிகாசிரியர் செய்த ஒலிபரப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)

ஸர் எட்வின் கிரீஸி என்பவர் உலகின் முடிவான யுத்தங்களைப்பற்றி பிரசித்தமான புஸ்தகத்தை எழுதும்போது, அதற்குப் பிறகு இரண்டு சந்ததி கிரமித்து நேரக்கூடிய யுத்தத்தின் அனுபவங்களை அவர் எதிர்பார்த்திருக்கமுடியாது. முன் காலத்தில் நடந்த கன்னி, அஜின்கூர், வாடர்லூ என்ற சண்டைகளெல்லாம் தற்போதைய டான்னன்பர்க், ஸோம் என்ற சண்டைகளுடன் ஒப்பிடவே முடியாது. பின் சொல்லப்பட்ட சண்டைகளும் ருஷ்யாவில் நிகழும் பெரிய யுத்தத்தைப் பார்க்கும்போது ஒன்றுமில்லாததுபோல் தோன்றும்.

இவ்வறிக்கையைப் படிப்பவர்களுக்கு, முக்கியமாக கவனிக்கவேண்டிய பிரச்னைகளைப்பற்றி வற்புறுத்தியது ஞாபகம் இருக்கும். அவைகள் பால்டிக், கருங்கடல் பிரதேசத்தில் நடப்பவைகள்தான். இந்த யுத்தத்தின் முடிவைப் பற்றியாவது, கபடமான நாஸிகளின் முறை, மனிதவர்க்கத்தையே நிலை நிறுத்திருக்கும் பிரிடிஷ்காரர்கள் கையில் கடைசியாக அகப்பட்டுக்கொண்டு அழிவதைப் பற்றியாவது ஒருவித சந்தேகமும் வேண்டியதில்லை. நிச்சயமாக அழிந்துவிடும். அதேமாதிரி, இந்தியாவில் இருக்கும் நாம் சுகமாகவும், பத்திரமாகவும் இருந்துகொண்டும், சைனியம் முன்னேறுவதும் பின் போவதுமாக நடக்கும் யுத்தத்தைப் பற்றி தெரிந்துகொண்டு, 1,000 மைல் நீளம் வரையிலுள்ள போர்முனையில் நமக்காக சண்டைபோடுகிறவர்களுக்கு, மனப்பூர்வமாகவும் மும்மரமாயும் உத்ஸாகம் அளிக்க முயற்சி எடுத்துக்கொள்ளாமலும் உதவாமலும் இருப்பது தவறு.

ஆகையால் இந்த யுத்தமானது உலகயுத்தம் என்றாவது, தனது க்ஷேமத்துக்காகவே புரியப்படுகிறதென்றாவது ஒருவரும் விசேஷமாக புதுக்கோட்டையில் நினைக்கக்கூடாது. ஆகவே ஈவினிங் ஸ்டாண்டர்டு என்ற பத்திரிகையின் ஆசிரியரான மிஸ்டர் பிராங்க் ஓவன் என்பவர் அமெரிக்காவிற்குச் செய்த இரண்டு ஒலிபரப்புச் சுருக்கத்தை இங்கே பிரசுரிக்க முன்வருகிறோம்.

முன் சொன்ன ஈவினிங் ஸ்டாண்டர்டு பத்திரிகை லண்டன் பத்திரிகைகளில் முக்கியமானது. அதற்கு பத்திராதிபராக இருப்பதென்றால் அதிக அனுபவம், பல தேசங்களுக்குச் சென்று உலகானுபாவங்களைத் தெரிந்துகொள்வது, படிப்பு, சொல்வன்மை பொருந்தியிருக்கவேண்டும். ஆகையால் அப்பேற்பட்டவர் நவீன யுத்தத்தின் வர்ணனையும், விசேஷமாக ருஷ்யா யுத்தத்தின் போக்கையும் பற்றி அவர் சொல்லியிருப்பது எனக்கு திருப்தியளித்ததுபோல யாவருக்கும் திருப்தியளிக்கும் என்பது உண்மை. ஆனால் அவர் பேசியது முக்கியமாக அமெரிக்க வாஸிகளுக்குத்தானே, இந்தியர்களுக்கு இல்லை என்று நினைத்துவிட வேண்டாம். இந்தியருக்கும் பொருந்தும்,



"நான் பேசப்போகும் விஷயம் ஜூலை மாதம் கடைசி வாரத்தில் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு சொன்னதிலிருந்து எடுக்கப்பட்டது" என்று பிராங் ஓவன் சொன்னார். ரூஸ்வெல்டு ஜூலை கடைசி வாரத்தில், பின்வருமாறு சொன்னார். "இன்று நான் அமெரிக்கச் சபைக்கு உத்தியோக முறையில் அவசியம் சொல்ல வேண்டியது என்னவென்றால், சபையோருக்கும் தெரிந்தமாதிரி, ஐரோப்பிய நிலை, ஒரு வருஷத்திற்குமுன் இருந்ததைவிட அதிகக் கவலைக்கு இடமாக இருக்கிறது." "இம்மொழிகளே யுத்தத்தின் சரியான நிலையை உண்மையில் வெளிப்படுத்துகின்றன. இது, 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரான்ஸை ஜெர்மனி தோற்கடித்ததிலிருந்து பிரிடன்மேல் படையெடுக்க ஆரம்பித்தவரையிலும் இறுதியிலுள்ள காலத்தின் நிலையைப்பற்றி சொன்னதாகும். அந்த சமயத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் செய்தியைக் கேட்டு நம்மில் சிலர் சந்தோஷப்பட்டார்கள். அவர் அத்தருணம் வற்புறுத்தி, சில ஆபத்துகள் நேரிடலா"மென்று நமக்கு எச்சரிக்கை செய்தார். ஏனென்றால் நாம் கவனிக்காமல் இருக்கக்கூடும். "ஹிட்லர் இவ்வருஷம் மாஸ்கோவை நோக்கிச் செல்லுகிறான், அவ்விதம் அவன் செய்வது, பிரெஞ்சுக் கடற்கரையில் சென்ற வருஷம் பொலாயினிலிருந்ததைவிட அதிக ஆபத்தை நமக்கு விளைவிக்கும்" என்று நமது பத்திரிகையில் நாம் எழுதும்பொழுது நம்மை பயங்குள்ளிகள் என்றும் பயமுறுத்துகிறவர்களென்றும் சிலர் பரிஹாஸம் செய்தார்கள். நம் பத்திரிகை படித்த சில நேயர்கள் "ருஷ்யர்கள் பலமாய் எதிர்ப்பார்களா" என்று கேட்டார்கள். ருஷ்யர்கள் சாதாரணமானவர்களல்ல என்பதினால்தான் யுத்தப் பிரச்னைகள் பெரிதாயும், முக்கியமாயும் ஆகிவருகின்றன என்று நாம் சொன்னோம். "ருஷ்யாவை ஹிட்லர் எதிர்த்தது ஒரு தவறல்லவா" என்று மற்றும் சிலர் கேட்டார்கள். முடிவில் பிசகாகப்போகலாம். ஆனாலும் ருஷ்ய யுத்தத்தை ஹிட்லருக்கு தொடங்க அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் 1940-ம் வருஷத்தில் பிரிடன்மேல் எதிர்ப்பு பலிக்காமல் போனதால் 1941-ம் வருஷம் ருஷ்யாமேல் படையெடுக்கவேண்டிவந்தது. இதிலிருந்து, பிரிடனை முற்றுகையிட வேண்டுமானால் ஹிட்லர் ருஷ்யாவை ஜயித்தாகவேண்டும். மேலும் பெரிய அயலானை ருஷ்யாவை பின்புறத்தில் வைத்துக்கொண்டு தைரியமாக எந்த முட்டாளும் இங்கிலாந்தை முற்றுகையிடமாட்டான். ருஷ்யாவோ பிரதிதினமும் பலமடைந்து வந்தது. மேற்குப் போர்முனையில் பிரான்ஸில் நாஸிகள் வெற்றியடைவதைப் பார்த்து சந்தோஷமடைந்தாலும் நாஸிகளின் வெற்றிகரமான யுத்த யந்திரங்கள் கிழக்கே ருஷ்யா பேரில் படையெடுக்க உபயோகப்படுத்தப்படும் என்று ருஷ்யா எதிர் பார்த்திருக்கும்.

இப்பொழுது ருஷ்யாவும், ஹிட்லரும் ஒருவரையொருவர் நன்றாகக் கண்டுகொண்டார்கள். ஹிட்லரின் முறைகளும் அவன் விருப்பத்திற்கு அனுகுணமாக, உலகாக்கிரமணத்திற்கு இடைஞ்சலாக இருக்கும். எந்த நாடுகளையும் சுக்குத்தூளாகத் தொலைக்கப் பார்க்கின்றன. அதற்காக, பிரான்ஸ், பிரிடன், ருஷ்யா, அமெரிக்கா நாடுகள் மின்னல்போல் தாக்கப்பட்டு, அடிக்கப்பட்டு ஒழிக்கப்படும். சமயம் வந்தபொழுது ஒரு காரணத்தை வைத்து ஜப்பானும் முடிவில் ஒழிக்கப்

படும். இந்த லக்ஷியத்திற்காக ஒரு குறிப்பிட்ட தேசம் ஜயிக்கப்படும்வரை மற்ற தேசங்கள் ஒன்று சேராமல் பிரிக்கப்பட்டால் ஜெர்மனிக்கு சாதகம்தான். இவ்விதம் ஒவ்வொருவராக, நாசம் செய்வதென்பதுதான் ஹிட்லர்கொண்ட யுத்த அபிப்பிராயம். தனக்கு சிநேகமானவர்களைப் பிரித்தோ, இரு சிநேகிதர்களை கலைத்தோ, விடுவது ஜெர்மனிக்கு அதிக சாதகம். இதெல்லாம்தான் ஹிட்லரின் பெரிய திட்டங்கள். இதுவரை நாம், பிசாசுபோல் பயமுறுத்துகிறவனும் பேய்பிடித்தாடுகிறவனுமான ஹிட்லருடைய அவர் பயமுறுத்தல்களையும், ஆட்ட வாட்டங்களையும் வஞ்சக வார்த்தைகளையும் கேவலமென்று தள்ளிவிட்டு அவனுடைய திட்டங்களை நன்கறிந்தோம். ஆகையால் நீங்களும் அவன் ஜாபிதாவில் அடங்கி யிருக்கிறதால் அவைகளைப் பற்றி நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். (இப்பிரசங்கம் அமெரிக்க மக்களுக்குச் செய்யப்பட்டது).

தூரக்கிழக்கில் ஜப்பானுடைய நடவடிக்கைகளும் ஹிட்லருடைய திட்டத்தை பூராவாக அநுசரித்துத்தான் இருக்கின்றன. ஒருக்கால் இவை, யுத்தத்தின் கடைசி பாகத்திற்கு முந்தினதாக இருக்கலாம். தற்காலம் ஜப்பான் செய்ய வேண்டியதெல்லாம் ருஷ்யச் சைனியத்தையும், ஆஸ்திரேலியப் படையையும், பிரிடிஷ் கப்பற்படையையும் ஜெர்மனியை எதிர்ப்பதிலிருந்து பிரித்து பலஹீனப் படுத்தவேண்டுமாம். அதோடு அமெரிக்காவை ஐரோப்பிய நாடுகளுக்கு உதவாமலும், ஐரோப்பிய சண்டையில் ஈடுபடாமல் செய்வதும் ஜப்பானின் மற்றொரு நோக்கம். ஆனால் ஜப்பான் இப்பொழுது மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுகிறது. குள்ளநரி போன்ற முஸோலினி, ஹிட்லரின் விருப்பங்களுக்கு இவ்விதம் வசப்பட்டதால் இதாலி ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் ஒன்றாக இருக்கிறதை ஜப்பானியர் நன்றாக அறிந்துகொண்டுவிட்டார்கள். ஜெர்மனி இதாலியை வியாபித்ததுமில்லாமல் அபிஸீனியா, ஸோமாலிலாந்து, எரிட்ரியா நாடுகளை அரசு புரியவேண்டிய சிரமத்தையும் நேசதேசங்கள் வாங்கிக்கொண்டார்கள். முன் சொன்ன பயத்தால்தான், செய்யவேண்டிய அதிக்கிரமச் செய்கைகளில் மெதுவாயும் ஜாக்கிரதையாயும் ஜப்பான் நடந்துகொள்ளுகிறது. ஆனால் ஜப்பான் கொலைகாரத் தொழிலில் பூர்ணமான தேர்ச்சிபெறாவிடினும் மஞ்சூரியர்களையும், சைனாவையும் கொலை செய்ததினால் அவைகள் ஜப்பானின் கொடுங்கோலுக்கு அத்தாக்ஷியாக இருக்கின்றன. அத்துடன் இல்லாமல் எவ்வளவு தற்புகழ்ச்சி கொண்டாலும், ஐரோப்பிய நாடுகளுடைய பூராச் சேனைகளுடன், யுத்தம் புரிய சைனிய பலம் இல்லை. அவைகளுக்கு ஒரு மரியாதை காட்டிவருகிறதால் மற்ற நாடுகளைவிட தான் மட்டம் என்ற எண்ணமும் உண்டு.

ஐரோப்பியநாடுகள் எச்சூல் பரிதாப நிலையிலிருக்கும் விஷி அரசாங்கத்தாரை அந்த ஜாபிதாவில் சேர்க்கவில்லை. ஜப்பானும் அதை ஒரு பெரிய நாடாகக் கருதவில்லை. அதனால் தான் விஷிக்குச் சொந்தமாக இந்தோ-சைனாவிலுள்ள இடங்களை முதலில் ஆக்கிரமித்துக்கொண்டது. இந்த விதமாக விஷியின் கேவல நிலையை ஜப்பான் சரியாக ஆழம் பார்த்துவிட்டது. ஆகையால் விஷி, தன்



சொத்துக்களை பத்திரப்படுத்த திருடனிடம் ஒப்புவித்த மாதிரி, ஜப்பானிடம் தன் நாடுகளை ஒப்படைத்துவிட்டது! இது தான் கொள்ளைகாரர்களுக்கு கொடுக்கும் லஞ்சம். அதனால் விஷி தான் அவஸ்தைப்படுகிறது. வேறே ஒருவருக்கும் தொந்தரவு இல்லை. ஆக்கிரமணம் மற்ற இடங்களுக்குப் பரவாமல் இருந்தால் நாம் இதைப் பொருட்படுத்த வேண்டாம். ஆனால் பிரிடன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இந்திய அரசாங்கத்தாருக்கும் இந்தோ-சைனாவோடு ஜப்பான் நின்று விடாதென்பது தெரியும். "ஆசியாவில் இதுதான் கடைசியான தேசாக்கிரமணம்" என்று சொல்லும் வார்த்தைகளை நாமும் ருஷ்யாவும் கேட்கத் தயார் தான் ஆனால் தெற்கு நோக்கி மேலும் பிரயத்தனம் செய்தால் ஜப்பானுக்குத் தான் முக்கியமாக ஆபத்து என்று எங்களுக்குத் தெரியும். இந்தோ-சைனாவிலும், தாய்லாந்திலும் தன் ஆக்ஷியை ஸ்தாபித்தால், பர்மா ரஸ்தாவையும், புதிதாக தைரியமாக, சங்கிங்கிக்கும் கல்கத்தாவுக்கும் போடப்பட்ட பாதையையும் கைப்பற்றிஅடைத்துவிடலாம். இவ்விதம் செய்ய முடிந்தால் சைனாவின் சேனையை பலஹீனப்படுத்தி சைனா பூரா வசப்படுத்திக் கொள்ளவேண்டும். அதன் பிறகு தன்னை 10 வருஷங்களாக அடக்கி வந்த ருஷ்யாவின் மேல் பாய்ந்து பஸிபிக் சமுத்திரத்தில் ருஷ்யாவுக்குச் சொந்தமான கடற்கரைப் பிரதேசங்களைப் பிடிக்கப் பார்க்கும்.

இப்படியெல்லாம் ஹிட்லரின் வருங்கால திட்டம் கிழக்கு பாகத்தில் போடப்பட்டிருக்கிறது. மேற்கு பாகத்தில் இதே மாதிரியான எண்ணங்களுடன் இருந்துவருகிறார். ருஷ்யா தோற்கடிக்கப்பட்டோ, ருஷ்யச் சைனியம் கலைக்கப்பட்டோ விட்டால் ஜெர்மனியின் பூரா முஸ்தீப்பையும் முக்கிய லக்ஷியத்தின் (நம்மள்) பேரில் அனுப்புவான். இதற்கு உதவியாக விழித்துக்கொண்டிருந்து ஸ்பெயினை ஜெர்மனியுடன் சேர்த்து ஜெனரல் பிராங்கோ, இரண்டாவது பிலிப்பும், ஸ்பானிய ஆர்மெடாவும் பிரிடனை எதிர்த்து முடியாதென்றுவிட்டுப் போனதை மறுபடி துவக்கலாம். அப்பொழுது ஜிப்ரால்டரை கைவசப்படுத்தி, பிரிடிஷ் கப்பல்களை வம்புக்கிழுத்து, மாலுமிகளை, நம்முடைய முன்னோர்களை, நாம் வெற்றியடைவதற்கு முன் ஹிம்ஸித்த மாதிரி ஹிம்ஸிக்கலாம். ஒருக்கால் விஷி பிரான்ஸும் மற்றும் ஒரு முறை யுத்தத்தில் ஈடுபடலாம். இந்தத் தடவை பிரிடனுக்கு எதிரில் போர்புரிய வேண்டியிருக்கும். இவ்வாறு எல்லாம் ஏற்படுவதற்கு முன் நம்முடைய நிலை வேறுவிதமாக இருந்தால்தான் முடியுமென்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இவையாவும் ருஷ்ய யுத்த முனையின் முடிவைப் பொருந்திருக்கிறது.

இதை அநுசரித்து உலகத்தின் க்ஷேமமே நிற்கிறது. யுத்தம் ஆரம்பித்து 10 வாரங்களாக, ஓய்வு ஒழிவு இல்லாமல் மேல் மேல் வளர்ந்துகொண்டு இரவும் பகலும் ஒருவிதமான முடிவும் கண்டுபிடிக்க முடியாமல் நடந்து வருகிறது. யுத்தச் செய்திகள் சரியாகக் கிடைக்கவில்லை. இருந்தாலும் ருஷ்யர்கள் பிடிவாதமாக இருக்கிறதும், சைனியம் முறிபடவில்லை யென்பதும், எதிரி மேல் பலமான எதிர் சண்டை செய்யக்கூடிய நிலையிலிருப்பதும் தெரிகிறது. இதற்கிடையில் ஜெர்மானியர் முன்னேறி வருகிறார்கள். தினம் 12 மைல் வீதம் தான் போகமுடிகிறது.

அவர்கள் போகும் மார்க்கமெல்லாம் ரத்த வெள்ளம்தான். நெபோலியன் தோற்றுத் திரும்பிவரும் பொழுது அப்படி வர நேரிட்டது. ஜெர்மன் அணியிலும் சிலர் "எவ்வாறு நாம் திரும்பிப் போகப் போகிறோம்" என்றும் ஆச்சரியப்படுகின்றனர். ஜெர்மனியின் தொழிற்சாலைகளில் மாத்தல் வேலைக்காகச் சென்ற ஸ்திரீகளும் "இவர்கள் திரும்புவார்களா"? என்றும் கேட்கிறார்கள். இக்கவலை ஜெர்மன் மக்களை அதிகம் வாட்டி வருகிறது. 1918-ம் வருஷம் முதல் பழைய யுத்தத்தினால் ஜெர்மனி பூராவும் எரிந்து சாம்பலாகக் கிடக்கிறது. அந்த யுத்தத்தில் ஆரம்பத்தில் நான்கு வருஷங்கள் வரை ஜெர்மனிக்கு ஒரே வெற்றியாகத்தான் இருந்தது. ஆனால் முடிவில் மீள முடியாதபடி தோல்வி வந்தது. 1918-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஜெர்மானியர் எதிர்த்த சமயத்தில் இருந்தது போலவேதான் இப்பொழுதும் இருக்கிறார்கள். அந்த சமயத்தில் ஜெர்மனியை தோற்கடிக்கும் பொழுதுதான் முதல் முதலாக சைனியமும் பீரங்கிகளும் ஜெர்மனியைவிட மேற்குப் போர்முனையில் நமக்கு அதிகமாக இருந்தது. அதை எதிர்க்க லூடன்டார்ப் இன்னும் அதிகமாக 10 லக்ஷம் சைனியத்தையும் பல பீரங்கிகளையும் திரட்டிக் கொண்டுவந்தான். ஆனால் அமெரிக்காவின் உதவியிருந்ததால் ஜெர்மனியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த யுத்தத்தின் ஆரம்ப காலங்களில் அமெரிக்கச் சைனியம் பிரான்ஸ் வரையில் வாராததால் லூடன்டார்ப்பு பெரிய சைனியத்தைத் தயார் செய்து நம்மை எதிர்க்க 6 மாத காலம் எடுத்துக் கொண்டு அதிக சிரமப்பட்டு ஜயத்தையும் அடையப் பார்த்தான். ஆனால் நேசதேச சைனியங்கள் அந்த கோலட காலம் பூரா தைரியமாக நின்றன, அமெரிக்காவிலிருந்து புதிய சைனிய வியூகங்கள் நமது உதவிக்கு வந்து கொண்டிருந்தன.

ஜெர்மன் சைனியம் அப்பொழுது எவ்விதம் முறிந்து கலைந்தது என்பதை அவர்கள் மறக்கவில்லை. "ஆனால் அதைப்பற்றி ஜெர்மானியர் பிரஸ்தாபிக்கிறதில்லை. அச்சமயம் அவர்கள் கப்பற்படை கலகம் செய்ததும், மேற்குப் போர்முனையில் ஜெர்மன் கப்பல்கள் யுத்த சின்னத்தை காண்பிக்காமல், புரட்சிக்கு அடையாளமாக புதுவிதமாக கொடிகளை வீசியதெல்லாம் மறக்கவில்லை. அவ்விதம் இப்பொழுதும் நேருமோ என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டு. அதற்குத் தகுந்தாற்போல் அமைதிக் குறைவைக் காண்பிக்கவே இரவும் பகலும் பிரிடிஷ் விமானப் படை இடைவிடாது தாக்கி வருகிறது. ருஷ்ய நதிதீரங்களில் எண்ணிராத ஜெர்மானியர் நாசமடைந்து வெற்றிபெருவதாகச் சொல்லுவதும் ஜெர்மானியர் மனக்கலக்கத்தை விருத்தி செய்கிறது. இவ்விதமாக யோசித்துக்கொண்டு காராகிருஹ வாசம் செய்வதுபோல ஜெர்மானியர் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வெளிநாடுகளில் உள்ள நேசதேசத்து ஸ்வதந்திர ஜனங்கள், தொழிற்சாலைகளில் சரியான திட்டப்படி விருத்தி செய்யும் டாங்கிகளும், விமானங்களும் பீரங்கிகளும் செய்யப்படும் ஓசைகேட்டும் ஹிட்லர் கொடுங்கோல் அழிந்து உலகத்திற்கே கௌரவம் வந்துவிடுமென்ற நினைப்பு உண்டாகியிருக்கிறது."

பத்திரிகாசிரியர்கள் யாவரும் முடிவைப்பற்றி தைரியமாகத்தானிருப்பார்கள். ஆனால், நமக்கு தைரியமும், நம்பிக்கையும் உண்டானாலும் இவ்விதமாக



வெல்லாம் நடத்த எவ்வளவு சிரமம் பிடிக்குமென்பதை கவனிப்பது நலம். அதில் மிஸ்டர் பிராங்க் ஓவனின் உத்தேசம் சரியானதுதான். அது எப்படி ஆனாலும், ருஷ்யர் மேல் பிரிடிஷ் மக்களுக்குள்ள சுகிருத் வாஞ்சையைப்பற்றித்தான் அவர் அதிகம் சொல்லுவது. தாங்கள் தேவைகளால் சிரமமடைந்தாலும் ருஷ்யர்களுக்காக உதவத் தயாராக இருக்கவேண்டுமென்பதைப் பற்றிச் சொன்னார். நடு அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஸ்வதந்திரம் விரும்பும் நாடுகளுக்கு உதவுவதற்கு மிஸ்டர் ரூஸ்வெல்டும் மிஸ்டர் சர்ச்சிலும் பேசியதும் அதற்குத்தான். இதுதான் அவர் சொல்லுவது:—

"இச்சமயம் மறுமுறையாக கிழக்குப் போர்முனையில் நடந்தேறிவரும் பெரும் யுத்தத்தைப்பற்றி பிரஸ்தாபிக்கிறேன். ஏனென்றால் பிரிடனிலுள்ளோர் யாவரும் இந் நாட்களில் அதைப்பற்றி பேசிக்கொண்டோ நினைத்துக்கொண்டோ இருக்கிறார்கள். ஒரு சிநேகிதனைத் தெருவில் கண்டு 'எப்படி சண்டை இருக்கிறது' என்று கேட்டால் ஒடெஸ்ஸாவையும், நீபர் நதியையும் ருஷ்யர்கள் தற்காப்பு செய்வது ருஷ்யச் செஞ்சேனையின் தந்திரங்கள், தளவாட ஸப்ளை, அடுத்தபடியாக மாஸ்கோவில் ஜெர்மானியரின் எதிர்ப்பு, காகேஸஸ் பிரதேசங்கள், எண்ணெய்ப் பிரதேசங்கள், லெனின்கிராட் என்பவைகளைப்பற்றி பெரிய உபன்யாசம் செய்யப்படுமென்பதில் சந்தேகமில்லை. இவ்வுபன்யாசத்தில் நிச்சயமாக இவைகள் சம்பந்தப்படும். ஸ்வான்ஸியில், வியாழக்கிழமை, கப்பல் தொழிலாளனைக் கண்டு பேசினேன்:—'இங்கே ஜெர்மானியர் விமானப்போர் நடத்தினார்களா?' என்று அனுதாபத்துடன் கேட்டேன். 'ஆமாம்' என்று எங்கள் தேசத்திற்கு ஏற்பட்ட உத்ஸாக ஸ்வரத்துடன் பதிலளித்தான். 'வாஸ்தவம் எங்களை இங்கு அடித்ததற்குப் பதிலாக ருஷ்யாவில் ஹிட்லர் வாங்குப்படுகிறார்' என்று பதிலுரைத்தான். வெல்ஷ் மனிதன் சொன்னது உண்மைதான். ருஷ்யாவில் ஹிட்லர் படும்பாட்டிற்குக் கணக்கில்லை."

* மிஸ்டர் ஓவனும், ஸ்வான்ஸி கப்பல் வேலையாளும் சொன்னதின் விவரங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இங்கிருக்கும் பிரிடிஷ் ஜனங்களுக்கு எவ்விதமான சண்டை அவசியமென்றும், ருஷ்யர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஏற்படும் உதவியைப்பற்றியும் தெரியவேண்டும். பிரிடனைப் போல ஒரு நேசதேசம் இல்லாவிடில், எகிப்தைத் தற்காப்பு செய்யவும், இராக், பாலஸ்டைன், ஸிரியா, இரான் தேசங்களில் யுத்தத்தை விரும்பாத மக்களுக்கு கொடுமையான முறையில் ஏற்பட்டிருக்கும் ஜெர்மன் சூழ்ச்சிகளை அகற்றுவது முடியாமல் போயிருக்கும். இந்தியாவரையிலும் கஷ்டம் வந்திருக்கும்.

"அந்த வேல்ஸ் தேசத்தவன் சொன்னது உண்மைதான். ருஷ்யாவில் அபாரமான கணக்கிலும், முறையிலும் ஹிட்லர் அடிக்கப்படுகிறான். லண்டனிலிருக்கும் நாங்கள் உலகிலேயே பெரிய யுத்தமான ருஷ்யச் சண்டையிலிருந்து வெளிவரும் அறிக்கைகளின் உண்மையை சரியாக பரிசீலனை செய்கிறோம். நெபோலியன் செய்த சண்டைகளில்தான் 'அறிக்கைபோன்ற பொய்கள்' என்ற வசனம் ஏற்பட்டது. தன் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு

10 லக்ஷம் பிரெஞ்சுக்காரர்களைப் பலிகொடுத்த நெபோலியன் மஹாப் புருஷன். ஹிட்லரைவிட நேர்த்தியாகப் புருஷக்கூடியவன். அதெப்படியானாலும் தற்போது ஜெர்மன் முகாமிலிருந்து ருஷ்ய யுத்தத்தைப்பற்றி வரும் அறிக்கைகள் நெபோலியன் சொன்னதைக்காட்டிலும் அபாண்டமான பொய்க் கணக்குகளைத் தெரிவிக்கின்றன. உதாரணமாக 8,00,000 ருஷ்யர்கள் கைதி செய்யப்பட்டதாயும், 20,00,000 இறந்ததாகவும், 10,000 ருஷ்ய டாங்கிகளும், 7,000 விமானங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் சொல்லுகின்றனர். இவை நம்பமுடியாதவை, இருந்தாலும் 6,00,000 ருஷ்யர்கள் இறந்ததாகவும் 5,000, டாங்கிகளும் 4,000 விமானங்களும், 7,000 பீரங்கிகளும்தான் நஷ்டமென்று ருஷ்யர்களே ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் இதைவிட ஜெர்மன் நஷ்டங்கள் இன்னும் அதிகம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதமாக ருஷ்யர்கள் கொடுக்கும் கணக்குகளிலிருந்து மற்றும் சில விஷயங்கள் தெரிகின்றன. அதோடு ஏழு வாரமாகக் கிழக்குப் போர்முனையில் இரு சைனியங்களும் மோதிக்கொள்வதால் ஏற்படும் நஷ்டங்கள் எவ்வளவு என்றும் தெரியப்படுத்துகின்றன." மிஸ்டர் ஹவன் கொடுத்த கணக்கிற்குப் பிறகு மூன்று வாரங்கள் கழிந்திருக்கிறது. இன்னும் சேதம் எவ்வளவு அதிகமாக ஏற்பட்டிருக்கும்—100-க்கு 25 வீதம் அதிகம் இருக்கலாம்!

"அப்படியிருந்தும் ருஷ்யர்கள் தீவிரமாக சண்டையிடுகின்றனர். 20 வருஷகாலமாக இம்மாதிரியான ஜெர்மன் சாம்ராஜ்ய எதிர்ப்பு இப்பொழுது வந்த விதமாகவே நேரிடும் என்று எதிர் பார்த்தார்கள். அதற்காகத் தங்கள் தேசத்தின் தற்காப்பை பலபடைகளில் பகிர்ந்து பரீக்ஷையும் செய்து வந்ததால் எதிர்பார்த்த விதமாக இப்பொழுது பிரயோஜனமடைந்து வருகிறது. தேசத்தின் சில பாகங்களை ஜெர்மானியருக்கு விட்டுக்கொடுத்திருக்கலாம், ஆனால் சைனியம் கலையாமல் இருக்கிறது. பின்புறமாக ஜெர்மானியரை முன் விட்டு அவர்களுக்குப் பின்னால் வரும் உதவியை கெடுத்து வருகிறார்கள். சுற்றிலும் சூழப்பட்டாலும் ருஷ்யர்கள் எதிரி வசப்படவில்லை, தங்களுக்கு ஆபத்து வந்தாலும் எதிரிகளுக்கு புதிய முறையில் பயம் உண்டாக்கியிருக்கின்றனர். பூராவாக ஒரே அணிவகுப்புச் சண்டை என்பது இல்லை, 100 மைல்கள் வரையில் சைனியங்கள் நிற்கின்றன. அந்தப் பிரதேசம் பூராவும் இரு சேனைகளும் மோதிக்கொண்டு, நம்பமுடியாத விதமாகவெல்லாம் ஒருவரையொருவர் எதிர்க்கின்றன.

"இவ்விதம் செய்வதால் நாஜிகளின் முழுபலச் சண்டையும் பலிக்கவில்லை. இதனால் எதிரி வரும்பொழுது வழியில் இருக்கும் யாவற்றையும் அழித்து வருவதென்ற முறை முடியாமல் எதிரி வருவதற்குள்ளாகவே ருஷ்யர்கள் யாவற்றையும் அழிக்கிறார்கள். ஆகையால் ஜெர்மானியரின் கால அட்டவணை தவறி விட்டது. அந்த அட்டவணைப்படிக்கு ஜப்பான், ஸ்பெயின், விஷி முதலியவை யுத்தத்தில் ஈடுபட்டு பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை இந்த ஆகஸ்டு மாதத்தில் எதிர்த்திருக்கவேண்டும். அதேமாதிரி கடந்த வருஷத்தில் ஆகஸ்டு மாதத்தில்



பிரிடனை ஜெர்மானியர் எதிர்க்கப் பார்த்து முடியாத பிசகை இப்பொழுது திருத்திக்கொள்ள உத்தேசம். அன்று பிரிடனை எதிர்த்த சமயம், பிரசித்தமான விடாமுயற்சியுடனும், சாதனங்களுடனும் கூடி சரியான முறைகளில் தயாரிக்கப் பட்ட ஒரு சேனைப்பகுதி ஜெர்மானியரைத் தடுத்ததுபோல், இன்று ருஷ்யர்களின் தந்திரமும், தைரியமும் நாஜி நல்லபாம்பை அடிக்கின்றன. இதனால் ஜப்பான் யுத்தத்தில் இறங்காமல் பின் வாங்கியும், ஸ்பெயின் தயக்கத்துடனும், இருக்கின்றன. இதனால்தான் பயந்து ஈன நிலையிலிருக்கும் விஷி அரசாங்கத்தாரும், இதற்கு முன் தனக்கு சிநேகிதர்களான பிரிடனுடன் மறுபடி சண்டைக்குப் போவதைப்பற்றி பயத்துடனும் வெட்கத்துடனும் தயங்கிப் பார்க்கிறார்கள்.

"இவ்விதமாகவெல்லாம் நம் எதிரிகள் தயங்குவதெல்லாம் நமக்கு ஏற்படும் வெற்றிக்கு அறிகுறியாகும். நாம் ஜயித்து விடுவோமென்பது மாத்திரம் நிச்சயம்; எவ்வளவு சீக்கிரம் என்பது வெளிநாடுகளில் சேர்க்கப்படும் சைனிய முஸ்தீப்பைப் பொருந்து இருக்கிறது. ரத்த வெறிகொண்ட இந்த யுத்தத்தை எவ்வளவு சீக்கிரம் யாவருக்கும் கருணை ஏற்படும்படி, முடிக்க முடியுமென்பதும் நமக்கு அனுப்பும் உதவியைப் பொருந்திருக்கிறது. ஆனால் நமக்கு ஜயம் மாத்திரம் நிச்சயம். இதுவரை என் மொழிகளைக் கேட்டவர்களுக்கு இன்று மற்றுமொரு வேண்டுகோள். சில மாதங்களுக்குமுன் சுயேச்சையான இவ்வுலகத்தாரை, நம் விரோதியைத் தொலைப்பதற்கான யாவற்றுன உதவியையும் அனுப்பும்படி கேட்டுக்கொண்டோம்; இன்று இந்த யுத்தத்தை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்க லாயக்கான உதவியை வேண்டுகிறோம். ஆகையால் இதுவரை செய்து வந்ததற்கு அதிகமாகவும் வேகமாயும் உதவி தேவை. அடுத்த வருஷம் வரை பிரிடனிலுள்ளோர் சமாளித்து விட்டால் எல்லாம் நன்மையாகவே முடியுமென்று இவ் வருஷத்தில் நம்மால் சொல்லப் பட்டது. அந்த சாவகாசத்தை விரோதி கோருகிறன்—அவனுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களை ஈடுசெய்ய அவகாசம் தேவை. இப்பொழுது பெரிய அடி அடித்தால் அவன் விழுந்து விடுவான்! அதற்காகத்தான் எல்லாம் தற்சமயம் வேண்டப் படுகிறது. இந்த உலகில் ஸ்வதந்திரம் உள்ள ஸ்திரீ புருஷன் எவரும் அதைக்கொடுக்க மறுப்பார்களா?" மாட்டார்கள்.

இதுவரை பெரிய யுத்தத்தின் திறமான சித்திரம் வரையப்பட்டது. அதனால் இவ்வுலகம் முடிவை எதிர்பார்த்துக்கொண்டு என் கவலைப்படுகிறதென்பது தெரிகிறது. மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் சந்தித்ததின் காரணமும், ருஷ்யாவுக்கு எல்லா இடங்களிலிருந்து சீக்கிரம் அதிக உதவி அனுப்ப வேண்டியதின் அவசியமும் புலப்படுகிறது. ருஷ்யர்கள் மாரிகாலம் பூரா ஜெர்மானியரைத் தடைசெய்யலாம். ஆனால் யூக்ரேனிலும் லெனின்கிராட்டிலும் இருக்கும் பெரிய தொழிற்சாலைகள் தடைபடும். ஏராளமான சைனியங்களுக்குத் தளவாட உதவி இல்லாவிட்டால் வீணாகி விடுமாதலால் டாங்கிகள் ஸான் பிரான்ஸிஸ்கோவிலிருந்து வ்ளாடிவாஸ்டாக்குக்கு அனுப்பப்படும். இரானில் பிரிடிஷ், இந்தியத் துருப்புகள் ஏற்கனவேயே இருக்கின்றன. எல்லா தேசதேசங்கள்,

அமெரிக்கா, பிரிடன், மற்ற இடங்கள், இந்தியா முதலிய இடங்களில் அதிகமாக குண்டுகள், யுத்த சாமான்கள், மிதியடிகள், துணிகள் மணல்பைகள், பணம் இவைகளைச் சேகரித்து உதவவேண்டும். தருணம் தவறிப்போய், பல வருஷங்கள் இந்த யுத்தம் நடக்காமல் செய்யவேண்டும்.

---

*“சமீபத்தில் போர்ட்ஸ்மௌத், பிளிமௌத், ஸௌத்தாம்டன், பிரிஸ்டல், ஸ்வான்ஸி முதலிய இடங்களைச் சுற்றிவந்தேன். இந்த யுத்தம் தாக்கிவந்த ஸ்திரீகள் குழந்தைகள் மத்தியில் லண்டனிலும் வசித்து வந்திருக்கிறேன். நாங்கள்தான் விரோதி குண்டுகளுக்கும் தீக்களுக்கும் முதல் லக்ஷியமாக இருந்தோம். இந்த அக்கிரமச்செய்கைகளின் அநுபவமே ஹிட்லரின் தீங்குகளை ஒழிக்க ஸ்வதந்திர நாடுகளை ஒன்றுசேர்க்கப் போதுமானது. கஷ்டமான அநுபவங்களிலிருந்து விடுவிப்பும் லண்டனுக்குத்தான் ஜோதி வந்தது. இதன் பின் இதேமாதிரி இங்கிலாந்தின் மற்ற பட்டிணங்களும் அவஸ்தைப்பட்டன. நாங்கள் பொறுமையாக இருந்தமாதிரி அவர்களும் அமைதியுடன் இருந்தார்கள். ஆனால் இதை உலகம் அறியுமோ என்று நான் சிலசமயம் நினைத்ததுண்டு. சமீபத்தில் ஸௌத்தாம்டனில் நாஸி விமானங்கள் மேலும் மேழுமாகப் பறந்து தீக்களை மூட்டியிருக்கின்றன. அந்த இடங்களிலிருந்தோரில் சிலர்தான் உயிர் பிழைத்தார்கள். அப்பட்டிணத்தின் குறுக்கே வாய்க்கால்போல் ஒரு பாகத்தை அழித்தார்கள். இதற்கு அடுத்தாற்போல் பிளிமௌத் இருக்கிறது. நான் பிரிடிஷ் ஸ்பானிய பட்டிணங்கள் பாழாக்கப்பட்டதை பார்த்திருக்கிறேன், ஆனால் இம்மாதிரி ஒரே இடத்தில் இவ்வளவு நாசத்தை எங்கும் பார்த்ததே இல்லை. பிளிமௌத்தின் மத்திய பாகம் எரிக்கப்பட்டு ஒரே சாம்பல் பொட்டலாக இருக்கிறது. அப்படிக்கிருந்தும் சிறுவர்களும் சிறுமிகளும் மாலைவேளைகளில் சூரிய வெளிச்சத்தில் வெளியே வந்து ஸ்பானியர்களை முன்பு டிரேக் தோற்கடித்த இடத்திலிருந்துகொண்டு உத்ஸாகமாக விளையாடுகிறார்கள். அங்கே இறக்காமலோ, காயமடையாமலோ ஒருவரும் இல்லை. இருந்தாலும் டெவான் வாசிகள் பிளிமௌத்தின் பொட்டல் வெளிகளில் விளையாடுவதையும் பார்த்தேன். ‘கவலையிருந்தும் உத்ஸாகம்’ என்ற உணர்ச்சி இங்கிலீஷ் மக்களிடம் எப்பொழுதும் இருக்கிறது.”

“பிறகு வேல்ஸுக்குச் சென்று ஸ்வான்ஸியைப் பார்த்தேன். பிளிமௌத்தைவிட நாசம் அதிகம். இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் கெடுதலடைந்த லிவர்பூலையும் பார்த்தேன். இங்கேயுள்ள கடற்கரைப் பட்டிணத்தில் உள்ள வீடுகள் நாஸிகளால் அதிகச்சேதம் விளைவிக்கப்பட்டது. உள்நாட்டுக் கடல் கரையோரமாயுள்ள பிரதேசம் முறிக்கப்பட்டது. ஒரே இடத்தில் பிளிமௌத்தைப்போல இல்லாத போதிலும் தூரப்பிரதேசத்தில் விஸ்தாரமாகச் சேதம் ஏற்பட்டது. அங்கே நடந்து செல்லும் போதுக் கூட்டம் கூட்டமாக மனிதர்கள் இடித்த இடங்களை சுத்தம் செய்கிறதைப் பார்த்தேன். ஆனால் ஒரு குட்டிச் சுவற்றின் மேல் பிரிடிஷ் கொடி பறந்து கொண்டிருந்ததை மாத்திரம் விட்டுவிட்டார்கள். லிவர்பூலின் கப்பல் தொழிற்சாலைகளில் இருந்த



ஐயர்லாந்து, வேல்ஸ், ஸ்காத்லாந்து, இங்கிலாந்து ஜனங்கள் யாவரும் அந்த சுவற்றை பூஜாக் கிருஹமாகக் கொண்டாடுகிறார்கள். இம்மாதிரியான கஷ்டங்கள் இனிவரும் காலங்களில் வரலாமென்று எதிர் பார்க்கிறோம். ஆனால் முன்னைவிட அதிகமான பொறுமையுடன் பொறுத்துக்கொள்ளுவோம். ஏனெனில் பிரிடிஷ் விமானப்படை ராக்ஷஸ அரசாங்கமான ஹிட்லர் எங்களை எதிர்த்ததிற்குத் தக்கவாறு கடுமையாக தண்டனை விதிக்கும் விதமாக ஜெர்மனிமேல் எதிர்ப்பை ஆரம்பித்துவிட்டது.”

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 30—8—41-லிருந்து 5—9—41-வரை.

---

இரான்.—இரானில் நடந்த செய்கைகள் ஆங்கில-ஸோவியத் ஒப்பந்தத்தின் பரிபூர்ண நிலையையும், சாம்ராஜ்ஜிய நாட்டின் அதிகார வலிமையையும், பிரிடிஷ் தயவையும், நாஸிக் கொடுமையையும் பிரகாசப்படுத்துகின்றன. ஆங்கில-ஸோவியத் நடவடிக்கையின் வேகமும், முடிவும் உலகத்தை பிரமிக்கச் செய்தது. 24-மணி நேரத்திற்குள் பிரிடிஷ் சைனியம் அபடானிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களையும் கொர்ராம்ஷாவிலுள்ள கம்பியில்லாத் தந்தி நிலயத்தையும், பண்டர்-இ-ஷாபூரிலுள்ள வியாபாரக் கப்பல்களையும் இரானிய கப்பற்படையையும் கைப்பற்றிவிட்டது. இதன் மூலமாக வ்ளாடிவாஸ்டாக்கைவிட பத்திரமாக ருஷ்யாவுக்கு சாமான்கள் அனுப்ப முடியும். ஜெர்மனியை இதனால் பூராவாக பொருளாதார முற்றுகை சூழ்ந்துகொண்டது. ஆள் சேதமும் நஷ்டமும் குறைவாகச் செய்ததினால் பிரிடிஷ்காரரின் கருணையும் நாஸிகளின் துரோகமும் வெளியாயின. நாஸி உதவியெல்லாம் ரேடியோ ஒலிபரப்புவரையிலும் தங்கள் பத்திரத்திற்காகவும் தான் ஏற்பட்டிருந்தது. ஆனதால் ஜெர்மன் ‘யாத்ரீகர்கள்’ என்பவர்கள் சுயேச்சையாக விடாமல் கைதிசெய்யப்படுகிறார்கள்.

நேசதேச முன்னேற்றம்.—சீக்கிரமான எதிர்ப்பினால் ருஷ்யர்கள் பாயிடாக் கணவாய் பண்டர்-ஷா பஸ்லவி, மேஷட், ஹமடானையும் பிடித்தார்கள். 31உ ஸென்னாவில் ருஷ்யருடன் நேசதேசப்படை சேர்ந்துகொண்டது. இவ்விதமாக ருஷ்யர்கள் வடக்கே டப்ரீஸையும், தெற்கே பிரிடிஷ் படை அபடான், பர்ஸியன் குடா பிரதேசத்தையும் கைப்பற்றிக்கொண்டன.

ராணுவச் சட்டம்.—இரானியர்களின் எதிர்ப்பு ஓய்ந்து போனாலும் பந்தோபஸ்துக்காக டெஹ்ரானில் ராணுவச் சட்டம் தினசரி வேலைசெய்யும் நேரக்கணக்கு, பத்திரிகைத் தடை முதலியன அமுல் படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுமக்களும் பிரிடிஷ்படைக்கு சிநேக முறையில், ஆகாரம், கனி, காய்கறிகளைக் கொடுத்து

உதவுகின்றனர். "வி" வெற்றிக்கு என்ற இயக்கம் இங்கேயும் பரவி ஜெர்மானிய உத்தியோகஸ்தர்களுக்கு கவலையைச் செய்கிறது. அவர்கள் வாசஸ்தலச் சுவர்களின் பேரிலேயே எழுதப்பட்டிருக்கிறது.

**பஞ்சம்.**—எல்லா விளைபொருள்களையும் விலைக்கு வாங்கியவைகளையும் ஜெர்மானியருக்கு விற்றுவிட்டதால் பஞ்சம் வரும் நிலையில் இரான் இருக்கிறது. ஷிராஜ், இஸ்பாஹன், யெஜட், கெர்மன், ஹமடான் முதலிய இடங்களில் இதற்காகக் கலகங்கள் உண்டாகி இருக்கின்றன. குத்தகைக்காரர்களும் தங்கள் நாட்டுத் தேவையை கவனியாது கோதுமை, தேயிலை, சர்க்கரையையும் ரகசியமாக விற்றுவிட்டார்கள். பிப்ரவரி முதல் மே வரை அனுப்பிய 60,000 டன் கோதுமையை வெளியே அனுப்ப முடியாது என்று பிரிடிஷார் உறுதி சொல்லியிருக்கின்றனர். இம்மாதிரியான தீங்குகள் நேராதபடி பிரயத்தனம் செய்து இராக்கிலிருந்து நூற்றுக்கணக்கான டன் கோதுமை இறக்குமதி செய்கிறார்கள்.

**இரானுடன் சமாதான உடன்படிக்கையின் தோற்றம்.**—இங்கிலீஷ்காரர்களுக்கும் இரானியர்களுக்கும் உடன்படிக்கை பிரஸ்தாபம் இருக்கிறது. அது அரைகுறைத் திட்டமாக இருக்கப்போவதில்லை. இது சமயம் கெடுதி ஏற்படுவதற்கு மார்க்கம் வைத்து உடன்படிக்கை செய்வதற்கு சரியான சந்தர்ப்பமில்லை. நேசதேசத்தார்கள் இரானுடைய விச்வாசத்தாலும், அதன் வார்த்தைப்படி நடக்கும் தன்மையாலும், திருப்தியடையும்படி செய்யவேண்டும். உடன்படிக்கையின் நிபந்தனைகளில் எதிரிகளை தேசத்தைவிட்டு வெளிக்கிடத்தவேண்டும், அல்லது அவர்களை அடைத்துவைக்கவேண்டும். அமைதி ஏற்படும் வரையில் ராணுவப் படை தேசத்தில் வைத்திருக்கவேண்டியது. அதே சமயத்தில் இரானுடைய கௌரவத்திற்கும், ஸ்வதந்திரத்திற்கும் பங்கம் வராமல் செய்யவேண்டியது. எண்ணெய் கப்பம் தொடர்ந்து கட்டிக்கொண்டுவரவேண்டியது. உணவு, உடை இன்னும் வேண்டிய பொருள்களையும் தொடர்ந்து கொடுக்கவேண்டியது. இரானின் ஜாமீன்பேரில் இங்கிலாந்துக்குக் கடன் கொடுப்பதாக வாக்களிக்கவேண்டியது.

**ருஷ்ய யுத்தம்.**—இந்த வாரத்தில் ஜெர்மானியர் ஜயித்ததைக் குறித்து அதிகமாகச்சொல்லி வந்தபோதிலும் அது பொருட்படுத்தக்கூடியதாயில்லை. டாலின் காலி செய்யப்பட்டது வாஸ்தவம். ஆனால் லெனின்கிராட்டுக்கும் மாஸ்கோவுக்கும் போகும் இருப்புப்பாதை துண்டிக்கப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. நீபர் நதியைத்தாண்ட ஜெர்மானியர்கள் பிரயத்தனப்பட்டது வீணாயிற்று. ஆனால் மத்திய பாகத்தில் கோனியுவின் அற்புதமான செயல்கள் ஜெர்மனியின் பாதுகாப்பின் இரண்டாவது வரிசையைத் துளைத்துவிட்டது. ஒடெஸ்ஸா இன்னும் சமாளித்து வருகிறது.

**பரித்தியாகம்.**—பெரிய நீபர் நதிக்குக் குறுக்கேயுள்ள பிரம்மாண்டமான அணையை ருஷ்யர்கள் தகர்த்துவிட்டது ஒரு பரித்தியாகம். அதோடு எதிரிக்கு வரப்போகும் அபாயங்களுக்கு ஒரு அறிகுறி. ஒரு சந்தர்ப்பத்தில் ருஷ்யா எவ்வளவு அதிகமாகப் பரித்தியாகம் செய்ய சக்தியிருக்கிறதென்று காட்டினாலும் மற்றொரு சந்தர்ப்பத்தில் இது எவ்வளவுதான் எதிரியினால் நஷ்டமேற்படுத்த முடியுமென்பதையும் காட்டும். இந்த அணையைக்கட்ட எட்டு வருஷகாலம் பிடித்தது. ருஷ்யரின் தொழில் திறமைக்கு ஒப்பற்ற சின்னமாக இதுதான் விளங்கிவந்தது. இதிலிருந்து உற்பத்தியாகும் மின்சார சக்தியைக்கொண்டு அந்நதிக்குக் கிழக்கேயும், மேற்கேயும் ஏராளமான தொழிற்சாலைகள் இயங்கிவந்தன; இந்நதியின் இருபுறங்களிலும் உள்ள விவசாய பிராந்தியங்களுக்கும் மின்சாரத்தைக் கொடுத்துவந்தது. யூக்ரேனின் கீழ்பாகத்தில் ஏற்பட்ட இரும்பு, தானியம் அதோடு அணையைச் சுற்றிலுமுள்ள கைத்தொழில் நஷ்டமடைந்தன. ஆனாலும் யூரல் பிரதேசத்திலுள்ள குஸ்பாஸ் ஏரியிலிருந்து விவசாயத்தையும், கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்து இதற்கு ஈடு செய்யலாம். நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் இவ்வளவு பெரிய ஒரு அணை திட்டம் ஐரோப்பாவில் எங்குமே கிடையாது. இத்தகைய அணையைத் தகர்க்க ஸ்டாலின் துணிவு கொண்டாரென்றால் அவருடைய மனோபாவம் எத்தகையதாயிருக்கவேண்டும்? அணையை அழித்ததானது அவர் என்ன பரித்தியாகம் செய்தாவது சண்டையை ஜயிக்கத் தீர்மானிப்பதையும் அவருடைய கடினமான ஐதீகத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. மாஸ்கோவை எரித்து, நெபோலியனை அழியச் செய்ததைக் காட்டிலும் இந்தப் பரித்தியாகம் மிகவும் மேலானது.



எதிரிகள் லெனின் கிராட்டிலுள்ள பெரிய கைத்தொழிலைக் கண்நோக்கி முன்னேறி வருகிறார்கள். பிரதேசத்தைக் கைப்பற்றமுயன்றதும், ருஷ்யப் படையைத் துளைக்க முயன்றதும் பயனடையாமற் போகவே ருஷ்யாவுக்கு யுத்த தளவாடங்கள் செய்துகொடுக்கும் தொழிற்சாலைகளைத் தாக்கினால் பலம் குன்றுமென்று இந்த தந்திரத்தை கையாண்டிருக்கிறார்.

**உற்பத்திக்காகச் சண்டை.**—கிழக்கு முனையில் தேசங்களை ஜயிப்பதிலிருந்து உற்பத்தி செய்து ஸப்ளை செய்வதில் போர் நடக்கிறது. இரானை ஆக்கிரமித்துக் கொண்டது, பெரும்பாலும் கஷ்டத்தை குறைத்துவிட்டது. இப்பொழுது அவர்கள் சும்மாயிருக்க முடியாது. ருஷ்யா அதன்பொருட்டு சண்டையிட்டுக்கொண்டிருக்கிறதென்றும் மற்றொரு பக்கத்தில் பிரிடிஷ் விமானப்படை தாக்கிக்கொண்டிருக்கிறதென்றும் நமக்கென்னவென்று இரான் சும்மாயிருக்கமுடியாது. சண்டையை ஜயிப்பதற்கு பொருள்கள் உற்பத்தி செய்வதை அபிவிருத்தி செய்துகொண்டே இருக்கவேண்டும். அமெரிக்காவே பேருதவி செய்ய வாக்களித்திருக்கிறது. பிரிடனிலுள்ள தொழிற்சாலைகள் அல்லும் பகலும் வேலை செய்கின்றன. "பொருள் உற்பத்தி செய்தால்தான் ஜயம் பெறலாம்."

**ஜெர்மனிக்கு இடையூறு.**—சென்ற புதன்கிழமை துருக்கியிலுள்ள பிரிடிஷ் தூதர் ஸர் ஹ்யுநாச்புல்ஹ்யூகேஸன், பிரஸிடெண்டு இனேனுக்கு ஜெர்மனியின் 70,00,000 போர்வீரர்களில் 50,00,000 போர்வீரர்கள் அல்லது 17 பகுதிப் படைகள் 7,500 டாங்கிகளுடனும், 100-க்கு 60 மோட்டார் படைகளுடன் ருஷ்யப் போர்முனையில் முனைந்திருக்கிறார் என்று காண்பித்தார். அவர்களில் ஏற்கனவே 10,00,000 போர்வீரர்கள் அல்லது 100-க்கு 15 விகிதம் ஜெர்மனி

இழந்துவிட்டது. இம்மாதிரி போர்வீரர்கள் அழிந்துபோகவிடக்கூடாது. சமீபத்தில் ஹிட்லர் முஸோலினியைச் சந்தித்தபொழுது ராணுவ உதவியும், கைத்தொழில் உதவியும் தனக்கு அதிகமாகக் கொடுக்கும்படி ஹிட்லர் நிர்ப்பந்தித்ததாக வதந்தி உலவுகிறது.

இரண்டாவது யூக்ரேனைக் கைப்பற்றியதனால் எண்ணெய்ப் பிரச்னை தீர்ந்துவிடாது. ஆனால் யூக்ரேனின் ஜனங்களைப் போஷிப்பது அவனுக்குள்ள பாரத்தை அதிகரிக்கச் செய்யும்.

உத்தியோக முறையில் கணக்கிட்டதில் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல்களில் 4,100 டன் நிறையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டதினால் ஜெர்மன் பொருள் உற்பத்தி செய்வதில் மிகுந்த நஷ்டமடைந்ததாகத் தெரிகிறது.

**பின்லாந்து தேசத்தினரின் அதிருப்தி.**—வடபக்கம் சண்டையின் முழுபாரமும் அவர்கள் பேரில் போட்டு அவர்கள் வசமுள்ள சொற்ப பொருளாதாரத்தை ஜெர்மன் படைகள் புசித்து வருவதைக் கண்டு பின்லாந்து தேசத்தினர் அதிருப்தியடைந்திருக்கின்றனர்.

**ஜெர்மனிக்கு ஆபத்து அதிகரிக்கிறது.**—ஆனால் ஜெர்மனியின் எதிரிகள் எல்லைப் புறத்திற்கு அப்பால்மட்டும் இல்லை. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலும் இருக்கிறார்கள். எங்கும் பிரசாரம் இருக்கிறது. அதைத்தடுக்க எல்லோரையும் கைது செய்ய நார்வேயில் பிரயத்தனப்பட்டது பயனில்லாமல் போய்விட்டது. பாரிஸிக் கருகில் இந்த புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர மூன்று விதமான தாக்குமேடை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. லக்ஷக்கணக்கான பிரெஞ்சு வாலிபர்கள் சுயேச்சை பிரெஞ்சு சைனியத்துடன் சேர ஸ்பெயின் எல்லைப் புறத்தைத் தாண்ட எத்தனித்ததில் பிடிபட்டு கைது செய்யப்பட்டனர். போலாந்தில் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தமும் பொய் பிரசாரங்களும் நடந்து வருகின்றன. கிராகோ சர்வகலாசாலையிலிருந்து 180 புரொபஸர்களை தேசாந்திரத்திற்கு அனுப்பியதுமல்லாமல், சமீபத்தில் லவோ (Lwow) சர்வகலாசாலையிலிருந்து மீண்டும் 60 புரொபஸ்கர்கள் கைது செய்யப்பட்டனர். மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 80 விகிதமுள்ள பல்கேரிய விவசாயிகள் அரசாங்கத்திற்கு எதிராக கலகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ருமேனியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் இத்தேசங்களில் பிரஜைகளுக்கு அரசாங்க முறையில் எவ்வளவு வரை அதிருப்தி இருக்கிறதோ அவ்வளவுக்களவு பஞ்சம், விஷபேதி, கண்நோய் க்ஷயரோகம், இத்தகைய வியாதிகள் பரவியிருக்கின்றன. ஆனால் ஹாலந்து தேசத்திலிருந்து, சென்ற வாரத்தில் மிகவும் பரிதாபகரமான செய்தி கிடைத்திருக்கிறது. அங்கு சமைப்பதற்கு ஹேதுவாயுள்ள ஒருவகை வாயு, மின்சார சக்தி இவைகள் தடைபட்டவுடன் ஜனங்கள் ஆகாரத்தை பச்சையாகவே சாப்பிட வேண்டியதாயிருக்கிறது. இவர்களின் துக்ககரமான நிலைமையைப்பற்றி டாக்டர் பி. எஸ். ஜெர்பாண்டி பின்வருமாறு சொல்லுகிறார்:—

“தேசீயத் தலைவர்களில் என்னுடைய சிநேகிதர்கள் பெரும்பாலும் சிறைச்சாலைக்குச் சென்று விட்டனர்; மோசக்காரர்கள் உயர்ந்த பதவியில் இருந்து



வருகின்றனர்; அநேக சர்வகலாசாலையிலுள்ள புரொபஸர்கள் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தேசாபிமானிகள் சிறைச்சேதம் செய்யப்படுகின்றனர். சரீர தண்டனை கொடுப்பதும், ஜனங்களைச் சித்திரவதை செய்வதும் இவைகள் முக்கியமான ராஜ்ஜிய தந்திரங்களாகக் கையாளப்படுகின்றன. ஆயிரக்கணக்கான வேலையாட்களை ஜெர்மன் யுத்த தொழிற்சாலைகளில் வேலை செய்ய நிர்ப்பந்தம் அதிகமாயிருக்கிறது. ஒருவருக்கும் தெரியாமல் அறைகளுக்குள்ளேயே விசாரணைகள் நடைபெறுகின்றன; சிறைச்சாலைகள் பூராவும் நிரம்பியிருக்கின்றன; பல நூற்றாண்டுகளாக சுயேச்சையாக இருந்த நெதர்லாந்தின் ஸ்வதந்திரத்தின் அழிவு ஆரம்பித்துவருகிறது. ஐரோப்பா பூராவும் ஒரு பெரிய சிறைக்கூடமாக விளங்குகிறது. பிசாசுத் தனமான ஹிட்லருக்கு புஜபலத்தைத் தவிர தர்மம், நியாயம் தெரியாது.”

**ஜெர்மனியில் சண்டை.**—ஜெர்மனி, ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களின் கிழக்கிலும் மேற்கிலும் இந்த வாரத்தில் ஆகாய எதிர்ப்புகள் ஏற்பட்டன. முக்கியமாக கொலோன், மான்ஹீம், டியிஸ்பர்க், டங்கர்க், செர்பர்க் இவைகளைத்தான் பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. பெர்லின், கோனிக்ஸ்பர்க், டான்ஸிக், மெமல் இவைகளை ருஷ்ய விமானங்கள் தாக்கின. இதனால் ஜெர்மனியின் மேற்கு பாகத்திலிருந்தும் மத்திய பாகத்திலிருந்தும் ஸெக்கோஸ்லாவியாவிற்கு சுமார் 4,00,000 ஜெர்மன் பணக்காரக் குழந்தைகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டன.

யுத்தம் ஆரம்பமாகி இப்பொழுது மூன்றாவது வருஷம் துவங்கியிருக்கிறது. சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் பிரிடிஷ் விமானப்படை எதிரிகளைக் காட்டிலும் அதிகம் வெற்றிகரமாகவே இருந்துவருகிறது. இவ்வித நிலைமைக்கு அநேக காரணங்கள் உண்டு. யுத்த சாமான்களை உற்பத்தி செய்யவிடாமல் ஜெர்மன் தொழிற்சாலைகளிலும் ராணுவ நிலயங்களிலும் சென்ற பதினெட்டு மாதகாலங்களாய் பிரிடிஷ் விமானங்கள் தொடர்ந்து வெடிகள் போட்டு வருவதும், ருஷ்ய யுத்தத்தினால் கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் லுப்ட்வாபி முனைந்து நிற்பதும் ஜெர்மனியுடன் ருஷ்ய விமானப்படையின் பலத்த தாக்குதலும், புதிய புதிய யந்திரங்களையும் வெடிகளையும் இன்னும் இதர ஏராளமான யுத்த சாமான்களையும் பிரிடனிலும், அமெரிக்காவிலும் உற்பத்தி செய்வதும், சென்ற பன்னிரெண்டு மாதங்களில் நல்ல பயிற்சி பெற்ற விமானிகள் முன்னைவிட இரண்டு பங்கு அதிகரித்து வருவதும், ஆகிய இக்காரணங்களால்தான். இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை உயர்வான நிலையில் இருந்து வருகிறது என்று சொல்லலாம். சென்ற வருஷத்தில் பிரிடன் பேரில் படையெடுத்ததில் பிரிடிஷ் விமானப்படை எதிரிகளை முன்னேற விடாமல் தகர்ந்தவாறு தடுத்துவந்தன. அதில் லுப்ட்வாபி படைப்பகுதிக்கு 2,375 விமானங்கள் நஷ்டம். ஆனால் 375 பிரிடிஷ் விமானிகள் மட்டில் கொல்லப்பட்டனர். ஜெர்மனியைத் எதிர்த்து தாக்குதல்களில் இப்பொழுது பிரிடிஷாருக்கு நஷ்டம் அதிகமென்றாலும், எதிரிகளுக்கும் அதேமாதிரிதான். அதாவது 4 ஜெர்மன் விமானங்களுக்கு 5 பிரிடிஷ் விமானங்கள் வீதம்தான் நஷ்டம். பிரிடிஷ் விமா

னங்களில் மணிக்கு 400-மைல் வேகமும், 35,000 அடிவரை உயரப் பறக்கவும் சக்தி வாய்ந்த யந்திரங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அவைகளைச் செலுத்துவதில் விமானிகளுக்கு மேல் சொல்லியபடி சேதமுண்டாகிறது. பேர்வாய்ந்த விமான சாஸ்திர நிருபர் மேஜர் ஆலிவர் ஸ்டேவர்ட் சொல்லிய பிரகாரம் பிரிடிஷ் விமானங்கள் வேகத்தில் 10 சதவிகிதமும் உயரப் பறப்பதில் 40 சதவிகிதமும், வெடிகள் வீசுவதில் 100 சதவிகிதமும் முன்னைவிட இன்னும் அதிகமாக அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. அமெரிக்காவில் செய்த "போயிங்" வகுப்பைச் சேர்ந்த மிகவும் பயங்கரமான பாம்பர் விமானங்கள் பிரிடனுக்கு உண்டு.

பிரிடனின் கடலாதிக்கம்.—எதிரிகளுக்கு நீர்மூழ்கிகளின் எண்ணிக்கைகள் அதிகமிருந்தாலும், பிரான்ஸ் கடற்கரையில் அவர்களுக்கு அநேக கப்ப தளங்கள் கப்பல்களைத் தாக்குவதற்கு சரியான விமானப்படை இவைகள் இருந்தாலும், பிரிடிஷ் கப்பற்படை எப்போதும் போல் கடலாதிக்கத்தை யாதொரு அழிவில்லாமல் வைத்துக்கொண்டுவருகிறது. ஏனென்றால் அது கடல்மார்க்கமாய் சாமான்கள் ஏற்றிச்செல்லும் வியாபாரக் கப்பல்களுக்கு திறமையுடன் இன்றும் போதுமான உதவி அளித்துவருகிறது. தற்போதுள்ள சமுத்திரப்போரில் 100-க்கு 10-பங்கு தான் பெரிய சண்டைகள், பாக்கி சாமானியமானவைகள் தான். இரண்டாவது வருஷ யுத்த ஆரம்பத்தில் பிரிடனுக்கு கடலின் மகத்தான வெற்றிகள் கிடைத்தன. அவைகள், மடபன்முனை, டாரன்டோ, லபோடஸ் முதலிய இடங்களில் நடந்த கடல் சண்டைகளில் அடைந்த வெற்றியையும், 'பிஸ்மார்க்' என்ற ஜெர்மன் கப்பலை மூழ்கடித்ததையும் குறிக்கின்றன. பாக்கி சாமானிய சண்டைகள் அட்லாண்டிக்கில் நடந்தன. வேவு பார்ப்பதற்கும் கடற்கரை ஓரம் காவல் புரிவதற்கும் சிறிய கப்பல்களும், நாசகாரிகளும் இடைவிடாமல் சஞ்சரித்து வந்தன. சில க்ருயிஸர்கள் மாதம் 25 நாள் வீதம் கடலில் சென்று முன்னூறு நாட்களில் 1,02,000 மைல்கள் வரை இதர கப்பல்களுக்கு காவல் புரிந்து வந்தன. 6,00,000 சதுரமைல்கள் விஸ்தாரமுள்ள சமுத்திரத்தைப் பாதுகாப்பதில் எதிரி 'யூ' படகுகளுடன் 256 தடவைகள் சிறு சண்டைகள் போட்டும் விரோதி கப்பல்கள்மீது 710 தடவை தாக்கியும், 7,500 கப்பல் கூட்டங்களுக்கு துணை செல்லும்போது 27,000 தடவைகள் எதிரி விமானங்களை எதிர்த்து யுத்தம் செய்தும், விரோதிக்கு வந்த 2,40,000 டன் நிறையுள்ள பொருள்களை மூழ்கடித்தும், 400 லக்ஷம் மைல்கள் அதாவது சூரியன் இருக்கும் உயரத்திற்குக் கிட்டதட்ட பாதி உயரம் வரையுள்ள தூரம் சென்றும் இவ்விதமாக பிரிடிஷ் விமானப்படை கப்பற்படைக்குச் சாதகமாக ஒத்தாசை செய்து வந்திருக்கிறது.



# யுத்தக் குறிப்புகள்.

முன் ஜாக்கிரதை. இரான் விஷயத்தில் ஜெர்மானியருக்கு ஒரு
பெரும் தோல்வி. ஜெர்மனிக்கு அதிக ஆள்
சேதம் ஏற்படாத போனாலும்; நேசதேசங்களுக்கு ஒரு முக்கிய வெற்றி. ஆகஸ்டு
மாதம் மூன்றுவது வாரத்தில் நாம் எடுத்துக்கொண்ட நிர்மான நடவடிக்கையின்
பயனாக ஷாவின் அரசாங்கம் அதிகத் தொல்லையில்லாமல் சமாதானத்திற்கு வந்து
விட்டது. இந்த சம்பவத்தில் ஒரு பாரஸீக மாலுமித் தலைவனும், மற்றும் சில
ருமே இருபக்கங்களிலும் காயமடைந்தனர். ஆனால் ஜெர்மானிய திட்டங்களும்
பிரசித்தியும் மங்கிவிட்டன. ஆகவே மத்தியக்கிழக்கில் அச்சுநாடுகளின் சூழ்ச்
சிக்கு லக்ஷியமான பாகம் நம் வசம் வந்துவிட்டது. இராக்கிலும் ஸிரியாவிலும்
நேர்ந்த உயிர் சேதமும், தொந்தரவும்போலில்லாமல் இரானில் அமைதியாகவே
முடிந்தது. எதிரி வசமிருந்து எண்ணெய் முதலிய சாமான்கள் கைப்பற்றப்
பட்டன; (இல்லாவிடில் இரானே எதிரிக்கு ஒப்படைக்க மறுத்திருக்காது);
ருஷ்யச் சைனியங்களுக்கு சீக்கிரத்தில் அதிகச் சாமான்கள் அனுப்ப ஒரு கிட்ட
மான பாதை திறக்கப்பட்டது; இவ்விதமாக பாரஸீகத்தில் பிரிடிஷ், ருஷ்யத்
துருப்புகள் ஒன்று சேர்ந்து இருப்பதினால், கீழ்திசையில் ஹிட்லர் போட்டிருந்த
திட்டங்கள் பலிக்காமல் போய் மேற்கு ஆபிரிக்கா முதல் வ்ளாடிவாஸ்டாக்வரை
சைனியங்கள் தொடர்ச்சியாக நிற்கின்றன.

இதனால் பிரிடிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாக இந்நாட்டில் நாஷித்து
கிளர்ச்சி செய்பவர்கள், இந்திய ஜனங்களும் அரசாங்கமும் நிலைக்கவேண்டுமானால்
இவ்விதமாக அரசாங்கத்தார் தற்காப்பு செய்யாவிட்டால் என்ன செய்வார்களோ!

அட்லாண்டிக் சாஸனம். ஆகஸ்டு 21-ல் மிஸ்டர் சர்ச்சில் செய்த
ஒலிபரப்பு, சர்ச்சில்-ரூஸ்வெல்டு சந்திப்பிற்கு
பிறகு வெளிவந்த 8 விஷயங்களின் விஸ்தரிப்புத்தான். இதை இரண்டுவிதமாக
வியாக்யானம் செய்கிறார்கள். (இதில் அச்சுநாடுகள் அடங்கவில்லை, ஏனென்
றால் வழக்கம்போல் அவர்கள் இதை நிந்திக்கத்தான் செய்வார்கள்) ஒரு திரப்
பாளர் இவ்வறிக்கை திருப்திகரமாக இல்லை என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.
இது அதிக ஸ்வதந்திரங்களை உட்கொண்டிருக்கிறதென்று மற்றும் சிலர் பயப்படு
கிறார்கள். இரண்டாவதாகச் சொல்லப்பட்டவர்கள் முக்கியமாக அமெரிக்காவில்
உள்ள ஐஸோலேஷன் கக்ஷிக்காரர்கள்தான். ஆனால் பத்திரிகைகளைக் கவனித்து
பார்க்கும்போது இக்கக்ஷிக்கு நாட்டில் செல்வாக்கு குறைந்து வருகிறதாகத் தெரி
கிறது. முன் சொல்லப்பட்டவர்கள் மிஸ்டர் சர்ச்சிலின் வியாக்கியானத்தால்
திருப்தியடைவார்கள். நாடு சம்பந்தமோ, மற்றவிதமாகவோ பிரிடனும் அமெரிக்
காவும் ஆக்கிரமிப்பு எண்ணம் இல்லாதவர்கள் என்று ஒரு விஷயம் கண்டிருக்
கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கு இது புதிதாக இல்லாதபோனாலும்,
நடுநிலை நாடுகளின் அபிப்பிராயங்களில் சரியான மாறுதலைச் செய்தும் அமெரிக்

காவில் மிஸ்ட்டர் ரூஸ்வெல்டிற்குச் சாதகமாக பொதுமக்களின் அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதுவரை அமெரிக்க மக்கள், லின்டன்பர்க், வீலர் போன்ற ஜெர்மானியரின் பயமுறுத்தல்களைக்கண்டு தயக்கமாக இருந்தனர். அடுத்தபடியாகச் சொல்லவேண்டியது என்னவென்றால் இந்த யுத்தம் ஜயிக்கப்பட்ட பிறகு வருங்காலத்தில் இம்மாதிரியான யுத்தங்கள் நிகழாது என்று மிஸ்ட்டர் சர்ச்சில் வீணெண்ணம் கொள்ளவில்லை. பொதுமக்களின் அஜாக்கிரதையினால்தான் இந்த யுத்தம் நடந்ததென்றும் இனிமேல் ஜெர்மானியர் வெறிபிடித்துத் திரியாமல் இருக்கவேண்டுமென்றும் அவர்களுக்குக் கவலை! தற்சமயம் ஆக்கிரமணம் செய்துகொண்டுவருபவர்கள் ஆயுத பரிஹாரணம் செய்யும்படி, ஜனநாயகத் தலைவர்கள் நிர்ப்பந்திப்பது ஐரோப்பாவில் நசுங்கிக் கிடக்கும் 5, 6 நாடுகளுக்குத் திருப்திகரமாகவும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகளையும் அமெரிக்காவையும், ஒத்துழைக்க கூப்பிடும் சங்கநாதம் போலும் இருக்கும்.

இந்த ஒப்பந்தத்தினால் "பிசாசு விரட்டப்பட்டது—கொடுங்கோல் அரக்கர்கள் அடக்கப்பட்டார்கள்" என்று கருணை வாய்ந்தோர் போற்றுவார்கள். இதில் கண்டுள்ள பொருளாதார ஸ்வதந்திரங்களுக்கு ஜெர்மானியரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பிஸ்மார்க் 70-வருஷத்திற்குமுன் சொன்னமாதிரி பிரான்ஸை ரொம்பக் கசக்கி முகர்ந்து பார்க்கக்கூடாது. அதாவது அடியோடு அவர்களை அழித்துவிடக்கூடாது.

**இவ்வொப்பந்தம் இந்தியாவுக்கும் அன்வயிக்கும்.** தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்கும் விதமாக, இந்திய விபரீதக் கக்ஷிக்காரர்களும், ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டவர்களும் "இதெல்லாம் அழகுதான்! இந்தியாவுக்கு அன்வயிக்குமா"? என்று கேட்கிறார்கள். நிச்சயமாக அன்வயிக்கும். "எல்லா" தேசங்களுக்கும் இது ஒப்பும் என்று பிரதம மந்திரியும் விசேஷமாக வற்புறுத்தியிருக்கிறார். அமெரிக்காவில் யுத்தத்தில் சம்பந்தம் வேண்டாமென்றிருப்பவர்களும், பிரிடிஷ் லேபர் கக்ஷிக்காக மிஸ்ட்டர் அட்லியும், நேற்றுவரை சந்தேகம் வாய்ந்த ஸோவியத் பத்திரிகைகளும், எகிப்து, துருக்கி, ஐயர்லாந்தும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிக்கையின் அமைப்பையும் விஷயங்களையும் கண்டு சந்தோஷப்பட்டால் இந்தியா மாத்திரம் குதர்க்கமும் தூஷணையும், செய்வது தவறாகும். சரியான பிரசாரம் என்ற போர்முனையில் முன் சொன்ன சாஸனம் எதிரிகளுக்கு முன்னதாகவே செய்யப்பட்டு உலகத்தார் மனதைக் கவர்ந்து விட்டதைக் காதுகொடுத்துக்கேட்காமல் இருப்பதும் தவறு.

**பெரிய யுத்தம்.** இந்த வாரத்திய தலை அங்கம், ஜெர்மானியரை ருஷ்யர்கள் பிரமாதமாகத் தாக்குவதை பிரசித்தமான பத்திராதிபரின் மொழிகள் மூலமாக துலக்குகிறது. மூன்றாம் தடவையாக ஜெர்மானியர் கடுமையாகத் தாக்கிவருவதைப் பார்க்கும்போது இந்தத் தடவை முடிந்தவரை முன்னேறப் பார்ப்பார்கள் என்றும் நமக்கும் தெரியும். ஏனென்றால் மாரிகாலம் வருவதற்குள் பெரியதொரு வெற்றியடையப் பார்க்கிறார்



கள். ஏற்கனவே இறக்கும் ஜெர்மானியரின் கணக்கைப் பார்த்துவிட்டு ஜெர்மன் மக்கள் மனம் தளர்ந்திருக்கிறதென்று நடுநிலை நாடுகள் ஊகித்திருப்பதால், இந்த ருஷ்யச் சண்டையில் ஏதாவது பின்வாங்குவதாகத் தெரியவந்தால் அது ஜெர்மானியருக்கு நிச்சயம் அதிக கலகத்தைத் செய்யும். லெனின்கிராட்டிலிருக்கும் ஆபத்தையும், (பால்டிக் கடலில் உள்ள ருஷ்ய கப்பற்படையைப் பற்றியும்) நடுபாகத்தில் ஜெர்மானியர் வெற்றியடைந்தால் ஏராளமான சைனியத்தைக்கொண்டு புடன்னியின் தைரியமான பகுதி ஆழப்பட்டுவிடுமென்றெல்லாம் கவலைக்கு இடம் உண்டு. ஆனால் இவ்விதமாகச் செய்துமுடிக்க 100-க்கு 80 வீதம் அவர்கள் சைனியத்தை சேகரம் செய்து போர்முனைக்கு அனுப்பியதால், நாம் கொஞ்சம் தைரியத்துடன் இருந்தால் போதுமானது! மேலும் ருஷ்யர்களின் ராணுவங்களோ, அரசாங்கமோ கலைபடவில்லை. எதிரிக்கு மறைமுகமாக உதவவோ, தோற்றுப்போவோமென்ற எண்ணமோ ருஷ்யர்களுக்குள் இல்லை. ருஷ்யர்கள் கையாளும் பூதகன முறையும், வரவர ஜெர்மன் போக்குவரவு விருத்தியாவதும் ஹிட்லருக்கும் அவன் உத்தியோகஸ்தர்களுக்கும் கவலையைச் செய்கிறது. 18 வாரங்களில் செய்துமுடிக்க வேண்டியதில் 8 வாரங்கள் பாக்கி இருக்கின்றன. மாரிகாலமும் வருவதால் ருஷ்யர்களுக்கு சாதகம்தான். முதலில் வடக்கே ஆரம்பித்து தெற்கு நோக்கி வருகிறதால் ஜெர்மானியரின் முன் சொன்ன 100-க்கு 80 சாமான்களை எங்கேயாவது கொண்டுபோய் சண்டை செய்ய வேண்டியதுதான். அதுவும் முடியாது. ஏனென்றால் பிரிடிஷ் விமானங்களும், ஜெனரல் வேவல், ஜெனரல் ஆசின் லெக் முதலியோரும் தெற்கிலிருந்து சென்று தடுத்துவிடுவார்கள்.

**ஜப்பான்.** தாய்லாந்து இன்னும் ஆக்கிரமிக்கப்படவில்லை. ஜப்பானுடைய யுத்தம் பேச்சுக்கள் சற்று மட்டடைந்திருக்கின்றன. ஆனால் நிரந்தரமான மாறுதல் ஏற்பட்டதாகக் காணோம். தனிமையில் பிரமாதமான மாறுதல்கள் அங்கே காணப்படுகின்றன. ஆகவே ஜப்பானிய சாம்ராஜ்ஜிய அரசாங்கத்தாருக்கும் நேசதேசங்களுக்கும் "சமாதானப்" பேச்சுவார்த்தை ஏற்படாதென்று சொல்லிவிடலாம். ஏனென்றால் பிரிடிஷ், அமெரிக்கா அறிக்கைகள் ஏதோ மிரட்டலோடு நின்றுவிடும் என்று ஜப்பான் நினைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்துவிடலாம் என்று நினைக்கிறது. நேசதேசங்கள் ஒரே தீர்மானமாய் இருப்பதாலும், பொருளாதாரக் கட்டுப்பாடு ஜப்பானுக்கு விரோதமாயிருப்பதாலும் ஜெர்மனியினால் உத்ஸாகப்படுத்தப்பட்டாலும் ஜப்பானிய ஆக்கிரமணத்திற்கு தடை ஏற்பட்டிருக்கிறது. பிரிடன் வேறு இடங்களில் கவனம் செலுத்திவருவதும், அமெரிக்கா அனாவசியமாக சண்டையை விரும்பாமல் இருப்பதும் ஜப்பானுக்குத் தெரியும். ருஷ்ய-பிரிடிஷ் ஒற்றுமையால், சைனாவில் உள்நாட்டுக் கலகங்கள் இல்லாமல் சேனை தைரியமாக இருக்கிறதென்றும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் ருஷ்யாவை ஜெர்மனி ஜயித்துவிடுமென்ற நம்பிக்கை ஜப்பானுக்கு இல்லை. தாய்லாந்தையும் பர்மா ரோடையும் பிடித்து பஸிபிக்கில் யுத்தத்தை துவக்கினால் பிரிடனும் அமெரிக்காவும் என்ன நேர்ந்தாலும் நேரட்டுமென்று பழிவாங்க யுத்தத்தில் இறங்கிவிடுமென்றும் (கடைசியாக) நிச்சயமாகத் தெரியும். ஆகவே

அவ்வளவு கொடூரமாக இல்லாதபோதிலும் பேராசை அதிகம்கொண்ட கக்ஷியார் கொஞ்சம் பழைய வழிகளுக்கு மாற்ற உத்தேசிக்கின்றனர். இம்முறையால் யுத்தமில்லாமல் எல்லா விதத்தாலும் அதிக நாடுகளும், பொருளாதார வழிகளில் பலமும் அடைய முயற்சி செய்கின்றன. அதனால்தான் தாய்லாந்து பூராவாக தப்பிவிட்டதென்று சொல்வதற்கில்லை. மேலும் நேச அரசாங்கங்கள் தீர்மானமான முடிவுக்கு வருவதையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இனி ஜப்பானுக்கு சண்டை உணர்ச்சி ஒரு மாதத்திற்கு முன் பரிபக்குவமானாலும் சண்டையில் இறங்க தக்க சமயம் இனி வாய்க்காமல் போகலாம்.

**விமான எதிர்ப்புகளின் தத்துவம்.** இந்த சாஸ்திரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களை தெரிந்துகொள்வது நலம். வீசப்படும் குண்டுகளின் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் அவைகளின் நிறையைத்தான் அதிகம் கவனிக்கவேண்டும். ஆகையால் கொஞ்சமான பாம்பர் விமானங்கள் சில பெரிய குண்டுகளைத் தூக்கியே செல்லுகின்றன. அதிக உயரத்திலிருந்து கனமான குண்டுகளை (அமெரிக்க குறிக் கண்ணாடிகளின் உதவியால்) வீசினால் மிகமே நிச்சயமாக சேதம் விளைவிக்கின்றன. பல சிறிய குண்டுகளை தொழிற்சாலைகள் போன்ற விஸ்தாரமான இடங்களில் பிரயோகம் செய்வது மேலானது என்று நினைப்பது பிசகு. ஏனென்றால் கனமான குண்டு எறிந்தால் தொழிற்சாலையும் பொதுமக்கள் உள்ள தற்காப்பு ஸ்தலங்களும் அடியோடு உடைக்கப்படுகின்றன. அடிபட்ட இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான அடிகள் வரையில் தொழிற்சாலைக் கட்டடம் சிதறிப்போய்விடுகிறது!

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசநேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 25—8—41. (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்.—அட்லாண்டிக் (Atlantic) துறைமுகங்கள்—கலே (Calais), முதல் பொலாயின் (Boulogne) வரை. | ...... | பெருந்தீக்களும் வெடிகளும் கிளம்பின. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 25—8—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், யுத்த தளவாடங்கள் சேமித்திருக்கும் கிட்டங்கிகள்—ட்ரிபோலி (Tripoli). | ...... | தீப்பிடித்தன. |
| | கோட்டை, மின்சார உற்பத்திசாலை, ரயில்வண்டிகள் நிற்குமிடங்கள், விரோதிகள் தங்குமிடம்-பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | துறைமுகம், கப்பல்கள் பெட்ரோல் கிட்டங்கிகள்—பார்டியா (Bardia). | ...... | தீப்பிடித்தன. |
| | யந்திர சாதன வண்டிகள்—ராஸுஎனு (Rasuenna). | 3 விமானங்கள். | ...... |
| | **ஸார்டீனியா (Sardinia).** | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—டெம்பியோ (Tempio). | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| | **இரான் (Iran).** | | |
| | விமான ஒத்தாசை—முன்னேறும் நேச தேசத் துருப்புகளுக்கு. | ...... | ...... |
| | துண்டுப் பிரசுரங்கள்—டெஹ்ரான் (Teheran). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி காலாட்படை, விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் பூராவும். | 18 விமானங்கள். | 93 விமானங்கள். |
| 26—8—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—துணைக்கப்பல்—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கு அருகில் | ...... | ஒரு கப்பல் தீப்பிடித்தது; மற்றொன்று தாக்கப்பட்டது; 1 விமானம். |
| | மற்றொரு துணைக்கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அருகில். | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; 3 கப்பல்களுக்குச் சேதம். |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **26—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி. | | |
| விமான நிலயமும், கட்டடங்களும்—ஸெயிண்ட் ஒமர் (St. Omer). | ...... | கட்டடங்கள் தாக்கப்பட்டன. |
| விரோதி விமான நிலயங்களும், தரையில் இருக்கும் விமானங்களும்—செர்பர்க் (Cherbourg) பிரதேசத்தில். | ...... | தரையிலிருக்கும் அநேக விமானங்கள் சேதமாயின. |
| விமான நிலயம்.—பெல்ஜியன் (Belgiam) கடற்கரைக்கு அருகில். | 7 பகல் பாம்பர் விமானங்களும், 4 பகல் பைடர்களும். | சேதமாயின. |
| காவல் புரியும் விரோதிக் கப்பல்கள்—கலே (Calais)க்கு அருகாமையில். | ...... | 1 விமானம். |
| இரவில்.—தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள்.—கொலோன் (Cologne). | ...... | ...... |
| கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre), பொலாயின் (Boulogne). | 3 இரவு பாம்பர் விமானங்கள். | ...... |
| விரோதி விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ் (France). | ...... | 1 பைடர் விமானம். |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| விரோதி ஸ்தலங்கள்.—வுல்சிபிட் (Wolchefit), கோண்டர் (Gondar). | ...... | ...... |
| யுத்த சாமான்கள் வைக்கும் கிடங்குகள், கம்பியில்லாத் தந்தி நிலயம், கப்பல் துறைகள்.—ட்ரிபோலி (Tripoli), பெங்காஸி (Benghazi). | ...... | தீக்களும், வெடிகளும் கிளம்பின. |
| விரோதி யந்திர போக்குவரத்து சாதனங்களின் கூட்டம்.—ராஸ்யூனு (Rasuenna)க்கு அருகாமையில். | ...... | அநேக கப்பல்கள் சேதமாயின. |
| ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | |
| விரோதி விமானங்களும், சைனியங்கள் நிற்குமிடமும்.—போர் அரங்கம் பூராவும். | ...... | 37 விமானங்கள். |
| இரான் (Iran). | | |
| ருஷ்ய நிலப்படைகளுக்கு விமான உதவி. | ...... | ...... |



| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **26—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| பிரிடிஷ் விமானங்களால். | | |
| மத்தியதரைக்கடல் (Mediterranean). | | |
| விமானப்போர்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ...... | 3 விமானங்கள். |
| விரோதிக் கப்பல்கள்.—மத்தியதரைக் கடலின் (Mediterranean) மத்தியில். | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று தாக்கப்பட்டது. |
| **27—8—41.** (புதன்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| மான்ஹீம் (Manheim), இன்னும் இதர தொழிற்சாலைகள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | ...... | சேதமாயின. |
| கப்பல் துறைகள்.—பொலாயின் (Boulogne), ஆஸ்டெண்டு (Ostend), டங்கர்க் (Dunkirk). | நஷ்டமில்லை. | ...... |
| கிரீஸ் (Greece). | | |
| விமான நிலயங்கள்.—கிரீஸ் (Greece). | நஷ்டமில்லை. | விமானம் தாங்கிகள் சேதமாயின. |
| கிரீட் (Crete). | | |
| விமான நிலயம்.—ஹெராக்லியான் (Heraklion). | நஷ்டமில்லை. | சேதமாயின. |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| துறைமுகம், பெட்ரோல் கிட்டங்கி.—பார்டியா (Bardia). | ...... | தீப்பிடித்தன. |
| விரோதிச் சைனிய வாஸஸ்தலங்கள்.—ஹாம்ஸ் (Homs)க் கருகாமையில். | ...... | ஒரு கட்டடம் நொறுக்கப்பட்டன. |
| நாசகாரிகளால் துணைபுரியப்பட்ட நாலு வியாபாரக் காவல்கப்பல்கள். | ...... | ஒரு கப்பல் தீப்பிடித்தது. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 27—8—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள் காலாட்படை, பீரங்கிப்படை.—போர் அரங்கம் முழுவதிலும். | 23 விமானங்கள். | 66 விமானங்கள். |
| 28—8—41. (வியாழக்கிழமை) | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில் கப்பல் துறைகள், கப்பல்கள் கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள்,—ராட்டர்டாம் (Rotterdam). | 7 பாம்பர்களும். 5 பைடர்களும். | ...... |
| | விமான எதிர்ப்புகள்,—வட பிரான்ஸ் (France). | | ...... |
| | இரவில்.—தொழிற்சாலைகளுள்ள இடங்கள், ரயில்வண்டிகள் தங்கும் முக்கியமான இடங்கள், ரயில்வே ஸ்டேஷன், உள்நாட்டுக் கப்பல் கட்டுமிடங்கள்.—டூயிஸ்பர்க் (Duisburg). | ...... | ...... |
| | ராணுவ லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend). | 9 விமானங்கள். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—பார்டியா (Bardia). | ...... | ...... |
| | தாக்கும் வேறு விமானங்கள்.—ஸிரெனேகா (Cyrenaica). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | இரண்டு விரோதிக் கப்பல்கள்.—மத்தியதரைக்கடலி(Mediterranean)ன் மத்தியில். | ...... | இரண்டு கப்பல்களும் கோரமாகத் தாக்கப்பட்டன. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 28—8—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—போர் அரங்கம் பூராவும். | ...... | 29 விமானங்கள். |
| | **ஜெர்மனி (Germany).** | | |
| | கோனிஸ்பர்க் (Koenigsberg). | ...... | ...... |
| | **பால்டிக்(Baltic) கடல்.** | | |
| | ஜெர்மன் சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்கள்.—பால்டிக்(Baltic) கடல். | ...... | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |
| 29—8—41. (வெள்ளிக்கிழமை). | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France), பெல்ஜியன் (Belgian) கடற்கரை, இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 10 பகல் பைடர்கள். | 8 பகல் பைடர்களும், 2 பாம்பர்களும். |
| | இரவில்.—தொழிற்சாலைகள் உள்ள ஜில்லாக்கள்.—பிராங்க்பர்ட் (Frankfurt), மான்ஹீம் (Manheim). | ...... | சேதமாயின. |
| | கப்பல் துறைகள், இருப்புப் பாதைகள்.—லஹாவர் (Lehavre). | 5 விமானங்கள். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள், ஸ்பானிஷ் துறைமுகமேடு.—ட்ரிபோலி (Tripoli). | ...... | எங்கும் ஒரே தீ. இரண்டு கப்பல்கள் தாக்கப்பட்டு தீப்பிடிக்கப்பட்டன. |
| | துறைமுகம் ஒரு கப்பல்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமான நிலயம்.—பெர்க்கா (Berka). | ...... | பீரங்கித் தாக்குதல்கள். |
| | பெட்ரோல் கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia)வுக்கும் வடக்கே. | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| | விரோதி சைனியங்கள் இருக்குமிடங்கள்.—டெபரெச் (Debarech). | 1 விமானம். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
| --- | --- | --- | --- |
| 29—8—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | மின்சார உற்பத்திசாலைகள்.—லிகாட்டா (Licata). | ...... | பலத்த சேதம். |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | காலாட்படை, யந்திரப்படை, தரையிலிருக்கும் விமானங்கள்.—யுத்த அரங்கம் பூராவும். | ...... | ...... |
| 30—8—41. (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgiam) கடற்கரையில், இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| | விரோதி கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) | ...... | 2 விமானம் எதிர்ப்பு பீரங்கிக் கப்பல்கள் தீப்பிடிக்கப்பட்டன. |
| | எதிரிக் கப்பல் போக்குவரத்து.—நார்வே (Norway) சமுத்திரக்கரைக்கு அப்பால் | ...... | 1 கப்பல் தாக்கப்பட்டது. 3 விமானங்கள் மொத்த நஷ்டம். |
| | இரவில்.—கப்பல் துறைகள்—செர்பர்க் (Cherbourg). | ...... | ...... |
| | கரைப் பாதுகாப்புகள்.—டச்சு (Dutch)க் கரைக்கருகில். | 2 விமானங்கள். | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல் போக்குவரத்து—ட்ரிபோலி (Tripoli). | ...... | மிகச்சேதம். |
| | கோட்டைகள், துடிசைகள், அகிழ்கள்-டெபரெச் (Debarech). | ...... | ...... |
| | ஒரு வியாபாரக் கப்பல்.—லாம்பிடூஸா (Lampedusa) தீவுக்கருகில். | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |



| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
| --- | --- | --- | --- |
| 30—8—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களில் உள்ள விமானங்கள், எதிரிப் படையின் இருப்பிடங்கள்—போர் அரங்கம் பூராவும். | 16 விமானங்கள். | 75 விமானங்கள். |
| 31—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வடபிரான்ஸ் (Franco), இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| | கைத்தொழில் பிரதேசம்—லிலி (Lily)ப் பிராந்தியம் | ...... | ...... |
| | ஒரு ஜெர்மன் விமான நிலயம்—லானியன் (Lannion) | ...... | சேதம். |
| | ரயில்வே போக்குவரத்து சாதனங்கள்—ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில். | ...... | ...... |
| | கப்பல் கட்டுமிடங்கள்—லடிரயிட் (Letrait). | ...... | ...... |
| | ராணுவ லக்ஷியங்கள்-ப்ரேமன் (Bremen). | 2 பைடர்கள். | 1 பைடர் விமானம் |
| | இரவில்.—க்ருப்ஸ் (Krupps) வெடிமருந்து செய்யும் தொழிற்சாலைகளும், இதர தொழிற்சாலை லக்ஷியங்களும்-எஸ்ஸன் (Essen). | ...... | சேதமாயின. |
| | கைத்தொழிலுள்ள ஜில்லா—கொலோன் (Cologne). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்—பொலாயின் (Boulogno). | 7 பாம்பர்கள். 1 பைடர். | தீ மூட்டப்பட்டன. |
| | வெடி கண்ணிகள் வைப்பது—எதிரி கடல்களில். | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகமும், கப்பல் போக்குவரத்தும்.—ட்ரிபோலி (Tripoli). | ...... | தீக்களும் வெடிகளும் கிளம்பின. |
| | பெட்ரோல் கிடங்குகள்.—பார்டியா (Bardia)க் கருகில். | ...... | தீ மூட்டப்பட்டது. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 31—8—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ரோட்ஸ் (Rohdes) தீவுகள்.** | | |
| | விமான நிலயமும், விமானங்களும்.—மாரிட்ஸா (Maritza). | ...... | அநேக விமானங்கள் சேதமாயின. |
| | விமான நிலயம்.—கலாடோ (Calato). | ...... | தீக்களும் வெடிகளும் கிளம்பின. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விமானச் சண்டைகள், காலாட்படை, டாங்கிகள்.—யுத்த அரங்கம் பூராவும். | 22 விமானங்கள். | 23 விமானங்கள். |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த போலந்து, பால்டிக் நாடுகள்.** | | |
| | ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—பெர்லின் (Berlin), கோனிஸ்பர்க் (Konigsberg), டான்ஸிக் (Danzig), மெமல் (Memmel). | 1 விமானம். | எங்கும் பெருத்த சேதம்; தீக்களும் வெடிகளும் கிளம்பின. |

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 26—8—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் சில தனிப்பட்ட இடங்களில் சொற்ப விமான எதிர்ப்பு. | 1 விமானம். | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸைப்ரஸ் (Cyprus). | 1 விமானம். | சொற்பச்சேதம். |
| | மால்டா (Malta). | 3 விமானங்கள் அநேகம் சேதமாயின. | சேதமில்லை. |



| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 26—8—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸில்லி (Scilly).** | | |
| | ஸில்லி (Scilly)த் தீவுகள். | ...... | 2 பேர் கொல்லப்பட்டனர்: 7 பேர் காயமடைந்தனர். |
| 27—8—41. (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை ஓரத்தில். | ...... | சேதமுமில்லை ஒருவரும் கொல்லப்படவில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிராந்தியம். | ...... | 7 பேர் கொல்லப்பட்டனர்; 30 பேர் காயமடைந்தனர்; சொற்பச்சேதம். |
| 28—8—41. (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | ...... | விரட்டப்பட்டன. |
| 29—8—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை. | 1 விமானம். | சொற்பச்சேதம். |
| 30—8—41. (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | ஒரு இடம்.—தென் கிழக்குக்கரை | ...... | சொற்பச்சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 31—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, வடகிழக்குக்கரை. | 1 விமானம். | சொற்பச்சேதம்.; சிலர் கொல்லப் பட்டனர். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | 2 பேர் கொல்லப் பட்டனர். 43 பேர் காயமடைந்தனர். |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிராந்தியம். | ...... | ஒருவரும் கொல்லப் படவில்லை; சொற்பச் சேதம். |
| 1—9—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு பிரதேசம்—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்கும், இன்னும் சில இடங்களும். | 1 விமானம். | கொஞ்சம் பலத்த சேதம். |

---

## ஹிட்லரின் தோல்விகள்; அவர் அஜாத சத்துரு என்பது பொய்க்கதை.

## அவர் போட்ட மூன்று உயிர்நிலையான திட்டங்கள்.

## அதாவது படையெடுப்பு, விமானப்போர், பிரிடனின் பொருளாதார முற்றுகை, இவைகள் பொய்யாயின.

## நேசதேசங்களின் நிலைமையில் மாறுதல்கள்.

(வைகவுண்ட் ஸாம்யூல் சமீபத்தில் பி. பி. ஸி.-யில் பேசியது)

கிரீட்டிலிருந்து நம்முடைய படைகள் விரட்டப்பட்டவுடன் ஹிட்லர் போட்ட திட்டம் தவறுமா, தவருதா என்று காமன்ஸ் சபையிலிருக்கும் மெம்பர் ஒருவருடன் நான் விவாதித்துக்கொண்டிருந்தேன்; "எப்படியிருந்தாலும் இதுவரை ஹிட்லர் எடுத்த ஒவ்வொரு காரியத்திலும் ஜயமடைந்துவருகிருர் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது" என்று அவர் சொன்னர். இதைப்போலவே உலகில் அநேக பாகங்களில் உள்ளவர்கள் சந்தேகம் இல்லாமல் அவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்கள். இந்த தேசத்திலும்கூட சில சமயங்களில் அவ்வாறு அபிப்பிராயப்படுகிருர்கள்.



இதைக் கேட்டவுடன் இந்த யுத்தத்தில் ஹிட்லரின் தோல்விகளுக்கு ஒரு ஜாபிதா தயார் செய்தேன். அதில் 10 தோல்விகள் இருப்பதாகக் கண்டேன். அதன் விவரத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தத் தோல்விகளால் பூராவும் நமக்குத்தான் ஜயம் வந்துவிட்டதென்ருவது அல்லது பாதி அளவு ஜயித்துவிட்டோமென்ருவது நான் சொல்லுவதாக நீங்கள் எண்ணக் கூடாது. அது அப்படியில்லை. யுத்தம் ஆபத்தான நிலையில் இப்பொழுது இருக்கிறது.

ஹிட்லர்தான் ஏற்கனவேயடைந்த தோல்விகளுக்கு வேறு வழிகளில் ஈடு பண்ண பிரயத்தனப்படுகிருர். அல்லது வேறு துறைகளில் அவர் புதிதாக ஜயம்பெற்று தோல்விகளுக்கு ஈடு செய்யக்கூடும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொள்ளுவதற்காகவாவது, மொத்தத்தில் யுத்தம் நமக்கு அனுகூலமாகத்தான் நடைபெறுகிறதென்று, இங்கும் அமெரிக்காவிலும் இன்னும் இதர தேசங்களிலுமுள்ள சிநேகிதர்கள் தங்கள் முழு பலத்தையும் உடனே உபயோகிக்கவேண்டிய தருணம் வரவில்லையென்று உணர்வதற்கும் ஒரு காரணமாகிவிடுமென்று பயந்து இந்த தோல்வியின் ஜாபிதாவை உங்களுக்குச் சொல்லவில்லை. மேற்சொல்லியபடி எண்ணம் நமக்குத் தோன்றினுல், ஆபத்துத்தான்.

ஆனுல், ஜர்மானியர்கள் மிகுந்த பலமுடையவர்கள்; நாமும் நம்முடைய தேசத்தினரும் போலாந்து நார்வே, பெல்ஜியம், பிரான்ஸ், யூகோஸ்லாவியா, கிரீஸ், கிரீட், லிபியா முதலிய இடங்களில் இதுவரை அபஜயம் அடைந்து இருக்கிறேம். நாம் என்ன கஷ்டப்பட்டு போர்புரிந்தாலும் வருங்காலத்திலும் இப்படியேதான் இருக்கும் என்ற மாறுபாடான அபிப்பிராயம் நமக்கு உண்டானுல் நமது யுத்த முயற்சிகள் தளர்ந்துவிடும். அப்படி நினைப்பது உண்மையாகாது. இது ஒருவகை அபிப்பிராயம். நடந்த சம்பவங்களிலிருந்து நாஸிகளுக்கு தோல்வியே கிடையாது என்ற கொள்கை முற்றிலும் பொய் என்று வெளியாகின்றன.

### முதல் தோல்வி.

ஒரு வருஷத்திற்கு முன் அவர்கள் பிரிடன்பேரில் படையெடுப்பு திட்டம் போட்டதில் அடைந்த தோல்விதான் முதலானது. பிரான்ஸ் முதலெடுப்பில் தோல்வியடைந்தவுடன் பிரிடனை எதிர்க்க பெருத்த தயாரிப்பு நடந்தன. கிரேட் பிரிடனுக்கு எதிரேயுள்ள ஐரோப்பா கண்டத்திலுள்ள எல்லாத் துறைமுகங்களிலும் ஆயிரக்கணக்கான மோட்டார் படகுகளும் இன்னும் இதர படகுகளும் சேகரிக்கப்பட்டன; அளவற்ற சைனியங்கள் படகுகளில் ஏறக் காத்துக்கொண்டிருந்தன. ஏராளமான விமானங்கள் ஒன்று சேர்ந்து பிரிடிஷ் விமானப்படையை அழிக்க சேமிக்கப்பட்டிருந்தன; படையெடுப்பு நடவடிக்கைகள் நேரில் நடத்துவதற்காக கோயரிங் தளகர்த்தர் அங்கு வந்திருப்பதாகப் பிரசித்தப்பட்டிருந்தது; ஜெர்மனியில் எங்குபார்த்தாலும் "இங்கிலாந்தை படையெடுக்கப் போகிரேம்" என்ற சப்தம் முழங்கியது.

இப்பெரிய யுத்தம் துவக்கியவுடனே இங்கிலீஷ் கால்வாயின் ஆதிக்கம் தங்கள் வசம் வந்துவிட்டதாக ஜெர்மன் மேல் அதிகாரி ஒரு சமயத்தில் சொல்லிவிட்டார். அப்பொழுது ஜெர்மனியில் மிகுந்த உத்ஸாகம் ஏற்பட்டது. கூட்

டம் கூட்டமாக ஜனங்கள் படையெடுப்பு ஆரம்ப சமாசாரத்தைக் கேட்க ஆவலுடன் ஒலிபரப்பிகள் முன் சூழ்ந்தனர்.

### படையெடுப்பு நின்றுவிட்டது.

அந்த படையெடுப்பு ஒன்றுமில்லை. லுப்ட்வாபிக்கும் பிரிடிஷ் விமானப் படைக்கும் நடந்த போரில் இங்கிலீஷ் கால்வாயின் ஆதிபத்தியத்தை லுப்ட்வாபி அடையமுடியவில்லை. இங்கிலீஷ் விமானப்படைதான் அடைந்தது. பிரிடிஷ் விமானப்படையில் விமானங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இருந்தாலும் அவைகளின் யந்திரங்கள் மிகவும் உயர்வானவை; எல்லாவற்றையும் காட்டிலும் அவ்விமானிகள் அதிகத் திறமை வாய்ந்தவர்கள். உலகச் சரித்திரத்தில் முடிவான யுத்தங்களில் ஒன்று என்று நிரூபிக்கக்கூடியதும், ஜெர்மனி நம்பியிருந்ததுமான ஆகாய விமானச் சண்டையைக் கைவிடும்படி—செய்யக்கூடிய பெரிய நஷ்டத்தை ஜெர்மனிக்கு பிரிடிஷ் விமானப்படை உண்டாக்கியது.

**ஹிட்லர்தான் முழுமையும் தோற்கடிக்கப்பட்டார்.**—விரோதிப் படகுகள் அந்தந்த துறைமுகங்களிலேயே நிறுத்தப்பட்டிருந்தன. அவைகளில் நின்ற நூற்றுக்கணக்கான ஜெர்மன் படகுகள் வெடிகளால் தாக்கப்பட்டும், மூழ்கடிக்கவும் பட்டன. நம்முடைய பிரதம மந்திரி எச்சரித்த பிரகாரம் மீண்டும் படையெடுப்பு ஆரம்பிக்கலாம். முன்ஜாக்கிரதையாயிருப்பதில் சிறிதளவாவது தளரவிட்டால் படையெடுப்பு மீண்டும் துவக்கப்படும் என்று நிச்சயமாக எண்ணலாம். ஆனால் நாம் இனி முன்ஜாக்கிரதையில் சிறிதேனும் தளரமாட்டோம்.

யுத்தம் துவங்கி பனிரெண்டு மாதங்களுக்குள் ஏராளமான திறமை வாய்ந்த சைனியமும், லக்ஷக்கணக்கான ஜனங்களடங்கிய உள்நாட்டுப் படையும், அவைகளின் ஒத்தாசைக்காக அநேக டாங்கிகளும், பீரங்கிப்படை, விமானப் படைப் பகுதிகளும் இங்கிலாந்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் ஹிட்லர் சென்ற வருஷத்தில் அடைந்த தோல்வியிலிருந்து நமது படையைச் சேர்க்க சாத்தியமாயிற்று

### இரண்டாவது தோல்வி.
### விமானச் சண்டை.

பிறகு அவர் தாக்கும் விதத்தை மாற்றிக்கொண்டார். லண்டனிலும் இன்னும் இதர நகரங்களிலும் விமான எதிர்ப்புகள் துவங்கின. நம்முடைய கப்பல் துறைகளையும், கப்பல் தங்குமிடங்களையும், யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளையும் அழிக்கவும், பிரிடிஷ் மக்களின் மனோபாவத்தை மாற்றவும் ஆகிய இரண்டு நோக்கங்களுடனும் அவர் இந்த யுத்தத்தைத் துவக்கினார். ஆனால் இவ்விரு நோக்கங்களும் நிறைவேறவில்லை.

உண்மையில் சில ராணுவ ஸ்தலங்கள் பழுதுபட்டது வாஸ்தவம்தான். தலைநகரிலும் இன்னும் அநேக நகரங்களிலும் அநேக இடங்கள் பாழாயின; நாற்பத்திராயிரம் பிரிடிஷ் பொது மக்கள் கொல்லப்பட்டனர்; அநேகர் பலத்த காயம் அடைந்தனர். இருந்தாலும் யுத்த தளவாடங்கள் செய்வது குறைவுபடாமல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சேதம்போக மீதியுள்ளவை வரவர அதிகரிக்கின்றன.



**பிரிடிஷ் மக்களின் மனோபாவம் கொஞ்சமும் மாறவில்லை, சிறிதும் பழுதாகவில்லை.** இனி என்னென்ன இடையூறுகள் நேரிட்டாலும் ஹிட்லரை அந்தப் பக்கம், இந்தப் பக்கம் அசையவிடாமல் இணரவைத்து சமாதானத்திற்கு வந்துவிடும் சமயத்திற்கு மட்டுமல்லாமல், கடைசி வரையில் யுத்தம் செய்து ஹிட்லரை ஒழித்து பூரா ஜயமும் அடையும்வரை பிரிடிஷ் மக்கள் யுத்தம் புரிய ஒரே எண்ணத்துடன் தீர்மானமாக இருக்கிறார்கள். அவர்களுடைய மனோதிடம் ஹிட்லரால் அசைபடாது, அசைக்கவும் முடியாது. இதுதான் ஹிட்லரின் இரண்டாவது மகத்தான தோல்வி.

### மூன்றும் தோல்வி.
### அட்லான்டிக்கில் யுத்தம்.

மூன்றுவதாக ஹிட்லர் கடற்போரில் தோல்வியடைந்தார். ஆனால் ஜெர்மன் நிலப்படைக்கு அதிதீவிரமாக வெற்றிக்குமேல் வெற்றி தொடர்ந்து வந்தன; ஆனால் அதன் கப்பற்படைக்குத் தொடர்ந்தார்போல் பெருத்த தோல்விகள் ஏற்பட்டன. ஹிட்லருக்குச் சென்றவிடமெல்லாம் வெற்றி என்று ஜனங்கள் சொல்லிவரும் பொழுதே சமுத்திர யுத்தத்தில் முதல் முதலில் கிராப்ஸ்பீ என்ற கப்பலும் பிற்பட்டு பிஸ்மார்க் என்ற கப்பலும் அழிக்கப்பட்டு, ஸ்திரமாயுள்ளது என்று பேர்போன ஷார்ன் ஹார்ஸ்டும் அடுத்தபடியாக நீஸ்னௌ துறைமுகத்திலேயே அடைக்கப்பட்டன.

பிரிடனைப் பொருளாதார முற்றுகை போட ஹிட்லர் பிரயத்தனப் பட்டதில் அவர் அட்லான்டிக்கில் சண்டையில் தோல்வியடைந்து விட்டார் என்று இவ்வளவு சீக்கிரத்தில் சொல்ல முடியாததுதான். ஆனால் அவர் ஜயிக்கவில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இச்சமுத்திரப் போரில் நமக்கு அநேக கப்பல்களில் வந்த பொருள்கள் மூழ்கடிக்கப்பட்டன. அதனால் இந்த தேசத்தில் அநேக பொருள்கள் குறைந்துவிட்டன. தேவையுள்ள யுத்த தளவாடங்களும் இன்னும் மற்ற சாமான்களும் நம் துறைமுகங்களில் வந்திறங்குகின்றன. சமீபத்தில் மூழ்கியடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை பிரசுரமானதில் நமக்கு கவலையை உண்டாக்கினாலும் அதைத் தடுக்க நாம் எடுத்துக்கொள்ளும் திட்டங்களின் திறமை வரவர அதிகரித்து வருவதினால், கடல் போக்குவரத்தை நிறுத்தி நம்மைக் கீழ்ப்படியச் செய்ய முடியாது.

படையெடுப்பு, விமானச் சண்டையில் அழிவு, கடல் ஆதிக்கம் இவைகள் தான் உயிர் நிலையாய் உள்ளவை. இவைகளைக்கொண்டு யுத்தத்தில் வெற்றி, தோல்வி என்பதைத் தீர்மானிக்கலாம். இம்மூன்றிலும் பிரதானமாக ஹிட்லர் தோற்று விட்டார்.

### ஹிட்லரின் தோல்விகள்—4 முதல் 10 வரை.
### ஸ்பெயினின் நடுநிலைமை.

பாக்கி ஏழு தோல்விகளும் நமக்கு மிகவும் முக்கியமான விஷயங்களைக் குறித்தபோதிலும், உயிர் நிலையைத் தாக்கக்கூடியதல்ல. பிரான்ஸ் அடிமைப்படுத்தப்பட்ட பிறகு ஸ்பெயினையும் தட்டிக்கொடுத்து சண்டைக்கிழுத்துவிடப்படுமென்று நம்மளில் அநேகருக்குத் தோன்றிற்று. பெரிய ஜெர்மன் சைனியங்கள் அநேக பீரங்கிகளுடன் ஸ்பெயின் ரஸ்தாக்களிலும், இருப்புப்பாதை மூலமும் ஜிப்ரால்டரை முற்றுகைபோடப் போய்க்

கொண்டிருந்தன. ஜிப்ரால்டர் குன்று முற்றுகைக்குத் தாங்கினாலும் அதன் துறைமுகத்தை நமது கப்பற்படை உபயோகப்படுத்த விடாமல் எதிரி செய்திருக்கலாம்.

**ஆனால் இது சம்பவிக்கவில்லை.**—இனி மேல் நடந்தாலும் நடக்கும். ஆனால் சென்ற பனிரெண்டு மாதங்களாக ஸ்பெயின் நடுநிலைமையாக இருப்பது ஹிட்லரின் விருப்பத்தின் பேரில்தான் என்று ஒருவரும் நினைக்க முடியாது. இது நாலாவது தோல்வி.

**மேலும் வட ஆபிரிக்காவில்.**—ஐந்தாவதாக ஸிரெனைகாவை நாம் ஜயித்த பொழுது அதைத் தடுக்க ஜெர்மனி குறுக்கிட்டு அதன் மோட்டார் படைகளை எகிப்தின் எல்லைப்புறத்தில் கொண்டு வந்தபொழுது பிரான்ஸிலும் மற்ற இடங்களிலும் படையெடுத்தது போல திடீரென்று தாக்கப்படுமென்று கலவரமடைந்திருந்தோம். நமது சேனையின் பெரும்பாகம் கிரீஸ் தேசத்தில் போராடி வந்த சமயம் அவர்கள் அலெக்ஸாண்டிரியாவரையிலும் ஆக்கிரமித்திருக்கக்கூடும். மத்தியதரைக் கடலில் நமது கப்பற்படையின் முக்கியமான தளத்தையும் தாக்கியிருக்கக் கூடும்.

ஹிட்லர் அவ்வாறு செய்திருந்தால் இதைக்காட்டிலும் வேறொன்றும் அவருக்குத் திருப்தியளித்திருக்காது. ஆனால் அதையும் ஹிட்லருக்குச் செய்ய முடியவில்லை. ஜெர்மானியர்களும், இதாலியர்களும் சேர்ந்து டோப்ருக்கிலுள்ள நம்முடைய சிறிய தைரியமுள்ள படையை இது வரையிலும் கூட அசைக்க முடியவில்லை.

## அதற்கும் கிழக்கே.

அதற்கும் கிழக்கே இராக்கில் நடந்த சம்பவத்தைக் எடுத்துக்கொள்வோம். ரஷீத் அலி உள்நாட்டுக் குழப்பத்தை உண்டாக்கியபொழுதும், ஜெர்மன் ஒற்றர்கள் ஸிரியாவில் வந்து நிறைந்த பொழுதும் பத்திரிகை நிருபர்களில் சிலர் ஜெர்மானியர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பரவச் செய்வதிலும், கிருத்திரமம் செய்வதிலும் அவர்கள் திறமை வாய்ந்தவர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமென்று எழுதினார்கள்.

ஸிரெனைகாவில் ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட ஜயமும், கிரீஸை அவர்கள் தாக்கியதில் ஏககாலத்தில் உண்டான வெற்றியும் ஹிட்லரின் பழுதில்லாத திட்டம் போடும் திறமையை நிரூபித்ததாகச் சொல்லப்பட்டது.

இராக் பூராவும் ஸிரியா பூராவும் பிரிடிஷ் படைகளின் ஆதிக்கத்தில் இருப்பதும், ஹிட்லரினால் ஏமாற்றமடைந்தவர்கள், ஆசியா பூராவிலும் ஒளிந்துகொண்டிருப்பதும், அவர் திட்டத்தை முற்றிலும் மறந்துவிடும்படி நம்மைச் செய்துவிட்டது. இது அவருடைய ஆறாவது தோல்வி.

## ருஷ்யாவுடன் சண்டை.

ஹிட்லர் அவருடைய மற்றொரு சிநேகிதரான இதாலியை பாதுகாத்து அல்பேனியா, ஸிரெனைகா, இவற்றை ஜயித்துக்கொடுத்தும், கிரீஸ் தேசத்தில் வியாபிக்கும்படி செய்ததும் நமக்கு ஞாபகத்தில் இருக்கிறது. ஆனால் இதாலிய சாம்ராஜ்ஜியத்தின் மற்ற பாகத்தில் அவர் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஸோமாலிலாந்து, எரிட்ரியா, அபிஸீனியா இந்த இடங்களிலுள்ள இதாலியப் படைகளுக்கு ஆகாயம், நிலம், கடல் இந்த மார்க்கமாக யாதொரு உதவியும் செய்யவில்லை. இத்தகைய



பெரிய பிரதேசங்கள் பிரிடன் குடியேற்ற நாடுகள் இந்தியா, இவைகளின் திறமை வாய்ந்த சிறிய படைகளிடம் தோல்வியடையாமல் அவரால் தடுக்க முடியவில்லை. இதுதான் அவருடைய ஏழாவது தோல்வி.

ருஷ்யாவை சாந்தமாக சண்டை செய்யாதிருக்கும்படி தாஜாப்படுத்தியும் மிரட்டியும் அவர் முயன்று வந்தது அவருடைய அடுத்த தோல்வியைக் குறிக்கிறது. ரிப்பன்டிராப் உதவியால் ஹிட்லர் சண்டை ஆரம்பிக்க வழிசெய்து கொண்டார். அது ராஜதந்திரங்களில் மகத்தான வெற்றியென்று அப்பொழுது ஜெர்மானியர்கள் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் இப்பொழுது சென்ற சில வாரங்களில் நடந்த சம்பவங்களிலிருந்து அவருடைய தோல்வி எவ்வளவு பெரிது என்பதைக் காட்டியிருக்கிறது. இதுதான் எட்டாவது தோல்வி.

## அமெரிக்காவின் ஒற்றுமை.

அடுத்தாற்போல ஜப்பானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றி கவனிப்போம். அது யுனைடெட் ஸ்டேட்ஸை மிரட்டுவதற்காகவும், பிரிடனுக்கு பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு உதவியளிப்பதைத் தடுப்பதற்காகவும் எத்தனிக்கப் பட்டது. இந்த திட்டம் தவறி விட்டதென்று எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். இதுதான் அவருடைய ஒன்பதாவது தோல்வி. யுனைடெட் ஸ்டேட்ஸ் கொஞ்சம்கூட பயப்படவில்லை. ஜெர்மன் பிரசாரகர்கள் தென் அமெரிக்கா பிரஜாதி பத்தியமுள்ள தேசங்களில் வட அமெரிக்காவுடன் சேர்ந்து ஒத்துமையாக நடவடிக்கை நடத்தாமல் நிறுத்துவதற்காக ஆண்ட எடுத்த பெரிய பிரயத்தனங்கள் கடைசியானது முக்கியமானது. அதுவும் பலிக்கவில்லை.

அமெரிக்காவிலுள்ள 21 பிரஜாதி பத்தியமுள்ள தேசங்கள் சேர்ந்து ஒன்றாகவே உலக அமைதியைக் கெடுக்கிறவர்களுக்கு எதிராக நிற்கின்றன. அவர்களுடைய குறைவுபடாத சகாயத்தினால் பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் பெரிதாகவும், அதிகரித்துக்கொண்டு இருக்கிறதுமான விலைமதிப்பில்லாத உதவியை அனுப்பிக்கொண்டிருக்கிறார். இதுதான் பத்தாவது தோல்வி.

## நாம் தனிமையில் சண்டையிடவில்லை.

இந்தத் தோல்விகள் எல்லாம் நேச தேசத்தார்களுக்கு நிச்சயமாக ஜயம் கிடைக்கும் மார்க்கத்திலிருக்கிறதென்று உலகத்தார்களுக்கு தெளிவாக்குகின்றன.

ஒரு வருஷத்திற்கு முன் கிரேட் பிரிடன் அதன் ஆளுகைக்குட்பட்ட தேசத்தார்களின் சகாயத்தை மட்டும் கொண்டு, இராணுவ முஸ்தீப்புடன் இருக்கும் பூரா உலகத்தாருக்கு எதிராக நம்பிக்கையற்று போராடி வருகிறதாக அநேகர்களுக்குத் தோன்றிற்று. இப்பொழுது அப்படியில்லை. பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் ருஷ்யாவுடன் நேசம் பூண்டும், தூரக் கிழக்கில் சைனாவுடன் கூட்டுறவு பூண்டும், வடக்கு தெற்கு அமெரிக்காவின் சகாயமும் அனுதாபமும் அடைந்து இந்த உலகத்தில் வசிக்கும் 2,00,00,00,000 ஜனங்களின் மூன்றில் இரண்டு பங்கு உள்ளவர்களின் பிரஸித்தியடைந்த பிரீதியை சம்பாதித்துக்கொண்டு சண்டையிட்டுவருகிறது.

இதை விட ஐரோப்பாவில் ஜயிக்கப்பட்ட தேசங்களிலுள்ள மற்றுமுள்ள கோடிக்கணக்கான ஜனங்களும் விடு

தலைக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள துக்கத்தை பிரிட்டனையும் நேசதேசத்தார்களையும் அவர்களைக் கைதூக்கி விடும்படி வேண்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களை மீட்க பிரிட்டனைத்தான் எதிர்பார்க்கிறார்கள். இப்பொழுது வரப்போகும் ஜயத்திலுள்ள லாபம் அவர்களுக்கும் மற்றுமுள்ள உலகத்தாருக்கும் பங்கிடப்படும்

---

# வருஷாந்திரப் பகுதி—1941-ம் வருஷம்.

## அனுகூல பிரதிகூலங்கள்—முதல் வாரம்

## "புயலை அடக்கி ஆளுகிறது".

### I-அச்சு நாடுகள்.

### 1940.

#### ஹிட்லரின் யுத்தப் பிரதேசம்.

(a) ஜயம்.

1. வெகு சீக்கிரமாக ஹிட்லர் போலந்தை ஜயித்தார். ஆனால் நேயக் கக்ஷிக்கு இதனால் ஏற்படும் அபாயத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் கலவரப்படாமல் இருந்ததைச் சாதகமாகக் கொண்டு ஹிட்லர் திடீரென்று அவர்களையும் தாக்கினார். அதன் முடிவு நார்வே பள்ளத்தாக்குப் பிரதேசங்கள், பிரான்ஸ் இவைகள் ஜயிக்கப்பட்டன— பிரிட்டனும் பெரிய அபாயத்திலிருந்தது.

2. இதாலி கொள்ளைப் பொருளில் பங்கிட வருகிறது. பிரிடிஷ்காரர்கள் பிரிடிஷ் ஸோமாலிலாந்தை காலி செய்து வெளியேறுகிறார்கள்.

### 1941.

#### கடற்படை ஆதிக்கத்தின் முடிவு.

(a) விபத்து.

1. பிரிட்டனுக்கு இருந்த பெரிய அபாயம் நீங்கி மாறுதல் ஏற்பட்டு பிரிடிஷ் படையெடுப்பினால் ஜெர்மனிக்கும், ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களுக்கும் அபாயம் நேரிட்டிருக்கிறது. இப்பொழுது ஜெர்மனி இருபக்கங்களிலும் தாக்கப்படுகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்கள் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. அவைகள் பொருளாதாரயின்மையாலும், ராணுவப் பாதுகாப்பு வேண்டியிருப்பதாலும் ஜெர்மனிக்கு நிர்பந்தமாகவும், ஓயாக் கவலைக்கிடமாகவும் இருக்கிறது. நேசதேசங்களிலெல்லாம் அஜாக்கிரதை நீங்கி மனஉறுதி ஏற்பட்டிருக்கிறது.

2. இதாலி ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு தேசமாகிவிட்டது. ஆபிரிக்காவில் அதன் சாம்ராஜ்ஜியத்தின் பெரும் பாகத்தை இழந்துவிட்டது. அதன் சைனியத்தின் பெரும் பாகத்தையும், ஆகாய விமானப்படையில் பெரும் பாகத்தையும் மத்தியதரைக்கடலில் அதன் கப்பற்படையில் பெரும் பாகத்தையும் இழந்துவிட்டது. அல்பேனியாவில் தைரியமுள்ள கிரேக்கர்களுடன்



சண்டையிட்டதில் அதன் முழு கௌரவத்தையும் இழந்துவிட்டது. முஸோலினி அதிகார ஆசை கொண்டதில் இதாலி உலகத்தாரின் இகழ்ச்சியை அடைந்திருக்கிறது. வெகு வருஷங்களாக முன்னேற்றமடைந்திருப்பதின் பயன்களையும் இழந்துவிட்டது. மத்தியதரைக்கடலிலும், மத்தியக்கிழக்கிலும், பிரிடிஷ் கப்பற்படை ஆதிக்கம் அதிகரித்து, இப்பொழுது இதாலி ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது.

3. ருஷ்யா நடுநிலைமையாக இருந்தது, ஆனால் ஜெர்மனி பக்கம் அனுதாபம் கொண்டு மற்றுமுள்ள நடுநிலைமை நாடுகளும் வலுத்தவன் கக்ஷியில் சேரும் ராஜதந்திரத்தை ஒத்து, ஜெர்மனியின் சார்பாக இருந்தன.

3. இப்பொழுது பிரிடிஷ் கப்பற்படையின் ஆதிக்கத்தால் சூழப்பட்டு, ஜெர்மனி தன்னுடைய பெரிய ராணுவ யந்திரப்படைகளை பெரியதாயும் நன்றாகப் பயிற்சியடைந்திருக்கும் ருஷ்யப்படைகளின் பேரில் தாக்கிவருகிறது. பிரிடிஷாரின் பொருளாதார முற்றுகையில் ருஷ்யா பலஹீனப்பட்டிருந்தது. அதே ருஷ்யாவில் இப்பொழுது ஜெர்மானியர் அழிக்கப்படுகிறார்கள். ஹிட்லருடன், அவருடைய நாஸிக் கக்ஷியாரும், ஜெர்மானியர்களில் பொறுக்கி எடுத்தவர்களும், அழிந்துகொண்டு வருகிறார்கள். அந்த தேசத்தார்கள் பூராவும் சண்டைபோடுவதற்குக் காரணமான, புத்தியில்லாத அதிகார ஆசையும், அவருடன் அழிந்துவிடும்.

நடுநிலை நாடுகள் முடிவில் பிரிடிஷாருக்கு ஜயம் ஏற்படுமென்ற நம்பிக்கையைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். கிரீஸும், யூகோஸ்லாவியாவும் சண்டையிட்டன. மறுபடியும் சண்டைக்குக் கிளம்பும். துருக்கி அடிக்கடி மிரட்டப்பட்டாலும் பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இருந்துவருகிறது. அமெரிக்காவிலுள்ள குடியரசு நாடுகள் நாஸிகளின் மிரட்டல்களுக்குப் பதிலளித்திருக்கிறார்கள்.

4. ருமேனியா அச்சு நாடுகள் திரப்பில் சேர்ந்தது. அதன் எண்ணெயின் பெரும் பாகத்தை ஜெர்மனிக்குக் கொடுத்திருக்கிறது. பால்கன்

4. ருமேனியா, அதன் பிரதேசத்தில் மூன்றில் ஒருபாகம் நஷ்டமடைந்தும், ஜெர்மனிக்கு உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்வதினால் அதன் ஜனங்களுக்கு ஆகாரம் குறைந்தும், இருந்தாலும் நாஸி யுத்தத்தில் சேர்ந்திருக்கிறது.

பிரதேசத்திலுள்ள நடுநிலைமை நாடுகளிலிருந்து ஜெர்மனி சாமான்கள் பெற்றுக் கொள்ளுகிறது.

5. ஜெர்மனி, பிரெஞ்சு துறைமுகங்களை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டதிலிருந்து பிரிடனை முற்றுகை போடுவதாக விளம்பரம் செய்தது.

6. பிளிட்ஸ் க்ரீக்கின் தந்திரங்கள் உலகத்தாரை அதிசயிக்கும்படி செய்தன. ஜெர்மன் படை ஜயிக்க முடியாததாய் காணப்படுகிறது.

7. எல்லாவிதமான யுத்த தளவாடங்கள் செய்வதில் ஜெர்மனி மிகவும் முன்னேற்றமடைந்திருந்தது.

அதன் எண்ணெய் தளங்களின்பேரில் ருஷ்யர்கள் வெடிகுண்டு போடுகிறார்கள். அதன் ஐவேஜியும் போய் விட்டது.

பால்கன் பிரதேசத்தில் ஜெர்மனி தாக்குவதினாலும், கிரீஸூம், யூகோஸ்லாவியாவும் தொடர்ந்து எதிர்த்து வந்தமையாலும், ஜெர்மனிக்கு பால்கன் பிரதேசத்திலிருந்து வந்த பொருள்கள் எல்லாம் நின்றுவிட்டன. பால்கன் தேசத்தினர் வயல்களெல்லாம் போர்க்களமாகிவிட்டன.

5. அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் சண்டை நடக்கிறது. இப்பொழுது பிரிடனுக்கு ஜயம் ஏற்படுகிறது. பிரிடன் கடல் மார்க்கங்கள் ஒருபொழுதும் மூடப்படவில்லை. அட்லாண்டிக்கில் ஜெர்மனி தன் 'யூ' படகுகள் அனேகத்தையும், சேர்த்தியான யுத்தக் கப்பல்களையும் இழந்துவிட்டது. பாக்கியிருந்த யுத்தக் கப்பல்களும் துறைமுகங்களில் ஒளிந்து கொள்ளும்படி துரத்தியடிக்கப்பட்டிருக்கின்றன.

6. பிளிட்ஸ் க்ரீக்குக்கு ருஷ்யாவில் சமமான எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்குதான் முதல் தடவை ஜெர்மனி தங்கள் அதிகமாக எண்ணிக்கையாலும், பயிற்சியினாலும் சாதகமடையமுடியவில்லை. இதில்கூட, ஜெர்மன் சிப்பாய் தோல்வியடைய முடியாதவன் என்று கோயபல்ஸ் சொல்லிவந்த மர்மம் பொய்ப் பிரசாரம் என்று வெளிப்பட்டிருக்கிறது.

7. ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களின் யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகள் உபயோகப்படுத்தப்பட்டு அதன் உச்சஸ்தானத்திற்கு வந்துவிட்டது. ஆனால் பிரிடிஷார்கள் யுத்தப் பொருள்கள் செய்வதில் அதிகரித்துக்கொண்டேவருகிறார்கள். அவர்களுக்கு சாம்ராஜ்யத்திலுடைய தேசங்களிலிருந்தும், யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்தும், வெள்ளக் கணக்காக சாமான்கள் வந்திறங்கிக்கொண்டிருக்கின்றன. ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் நடக்கும் சண்டையில் நாஜி கையிருப்பில் உள்ளவைகள் துரிதமாகக் குறைந்துகொண்டே போகின்றன.



8. ஹிட்லரின் ஐந்தாம் படைத் தந்திரங்கள் வெற்றிகரமாய் இருந்தன.

(b) எதிர் காலம்.

1. மாரி காலத்திற்கு முன்பே வெற்றி கிடைக்கும் என்று ஜெர்மானியர்கள் நம்பியிருக்கிறார்கள்.

2. அது ஏக்கத்தினால் உண்டாகும் நம்பிக்கை. எப்படி சமாதானம் ஏற்படும் என்று ஒரு ஜெர்மானியர்கூட சொல்ல முடியவில்லை.

ஆகாய விமானப்படை பிரிடிஷ் பாதுகாப்பான கடற்படையை துர்ப்பலப்படுத்தியது போல் தோன்றியது.

3. ஜெர்மன் வல்லரசு பலமும், ஜெர்மன் பான்ஸர் சைனியமும் தோல்வியடையாதென்று ஜெர்மானியர் நினைக்கிறார்கள்.

ஆனால்.

4. பிரிடன் ஐரோப்பா கண்டத்தில் பொருளாதார முற்றுகையை நிலைநிறுத்தி வருகிறது.

8. ஐந்தாம்படை என்ற, ஆயுதம் இப்பொழுது மழுங்கிவிட்டது. யூக்ரேன் பிரதேசத்தில் இந்த ஆயுதம், பிரயோஜனப்படவில்லை நேய தேசங்கள் ஜெர்மனியை மிரட்டுவது அதிகரித்துக்கொண்டிருப்பதாலும், ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களுக்கு, நேய தேசத்தினர் ஜயமடைவார்கள் என்ற உறுதி ஏற்படுவதாலும், இந்த ஐந்தாம்படை அனுகூலத்திற்குப் பதிலாகப் பிரதிகூலத்தைச்செய்கிறது.

(b) இதுவரை நடந்தது.

1. ஜெர்மானியர்கள் ஜயத்தை எதிர் பார்க்கிறார்கள். "மாரி காலத்துக்கு முன் சமாதானம் ஏற்படுமென்று" திண்ணமாகயிருக்கிறார்கள்.

2. சமுத்திரத்தில் குறுகிய இடங்களில் மாத்திரம் ஆகாய விமானப்படை, கடல் ஆதிக்கத்தை மிதப்படுத்தியதே தவிர அதை நிறுத்த முடியவில்லை. அகண்டமான சமுத்திரங்களில் கடல் ஆதிக்கம், அதன் ஆதிபத்தியத்தை விட்டு விடாமல் வைத்திருக்கிறது.

3. ஜெர்மன் பிரசாரத்தினால் வளர்ந்து வந்த ருஷ்யா வரவர அந்தப் பொய் பிரசாரத்தில் அதிக நம்பிக்கை வைக்கவில்லை.

இப்பொழுது.

4. முற்றுகை தொடர்ந்து வருவதுடன் பலப்பட்டு வருகிறது. மேல் மேல் பிரிடிஷ் கப்பற்படைக்கு இன்னும் அநேக யுத்தக் கப்பல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சமுத்திரக்கரைப் பாதுகாப்புப்படைக்கு இன்னும் விமானங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஹிட்லர் குறைந்து வரும் பொருள்களுக்கு ஈடு செய்ய புதிய பிர

தேசங்களில் கொள்ளையடிக்கவேண்டி ருஷ்யாவைத் தாக்கினார். சமுத்திரத்திற்கு அப்பால் உள்ள இடங்களிலிருந்து பொருள்கள் கிடைக்காததினால்தான் இம்மாதிரி ஆரம்பித்தார்.

5. பிரிட்டனுடன் சமாதானம் செய்துகொள்ள ஹிட்லர் கோரினது நிராகரிக்கப்பட்டது.

5. பிரிடனின் சமாதான ஏற்பாடுகளுக்கு முடிவான பதில் ஜூன் மாதம் 22-ம் தேதி பிரதம மந்திரி சர்ச்சில் கூறியிருக்கிறார். "நாம் ஒரு பொழுதும் சமாதானப் பேச்சு பேசப் போவதில்லை. ஹிட்லருடனாவது அவரைச் சேர்ந்த கொள்ளைக்கூட்டத்தினர் யாரிடமும் பேச்சு வார்த்தை கிடையாது", என்றார்.

6. பிரிடன் பேரில் படையெடுக்க லுப்ட்வாப் வழி ஏற்படுத்த முடியவில்லை. பிரிடனிலும் துரோகிகள் கிடையாது.

6. இராக்காலங்களில் வரையரும்பில்லாமல் வெடிகுண்டுகளைப் போட்டதை விட, பிரிடனைத் தாக்கியதில் லுப்ட்வாபிக்கு ஜயம் ஏற்படவில்லை. இப்பொழுது லுப்ட்வாப் படையெடுத்து போக அது தன்னைக் காத்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஆகாய யுத்தம் பிரிடனை விட்டு வடமேற்கு பிரான்ஸிலும் ஜெர்மனிக்கு இடையிலும் நடக்கிறது. பிரிடனில் ஐந்தாம் படை வேலை செய்யமுடியாது.

7. படையெடுப்பு திட்டங்கள் ஸெப்டம்பர் மாதம் 16-ம் தேதிவரை ஒத்திப்போடப்பட்டுவிட்டது.

7. படையெடுப்புத் திட்டங்கள் ஒரு பொழுதும் பயன்படவில்லை. இனியும் அபாயம் இருக்கலாம். ஆனால் இப்பொழுது ஜெர்மனி ஆக்கிரமித்த தேசங்களை பிரிடன் படையெடுக்கும் என்ற பயம் வந்துவிட்டது.

8. இதாலியினால் ஏமாற்றமடையப்பட்டது. பிரிடிஷ் கப்பற்படைதான் மத்திய தரைக்கடலை ஸ்வாதீனப்படுத்தி வருகிறது. எகிப்தில் பிரிடிஷ் பலம் குன்றாமல் இருந்து வருகிறது.

8. சென்ற மஹா யுத்தத்தில் நேச தேசங்களுக்கு இதாலி எவ்வாறு இழுக்காக இருந்ததோ அம்மாதிரி இப்பொழுது ஜெர்மனிக்கும் வீண் பாரமாகயிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யப் படைகள் இதாலியன் ஸோமாலிலாந்து, அபிஸீனியா, எரிட்ரியா, ஸிரியா, இந்த தேசங்களில் ஆக்கிரமித்திருக்கின்றன.

(c) பொது நிலைமை.

பொதுவாக ஜெர்மனி குறுகிய கால சண்டைக்கே திட்டம் போட்டிருந்தது. பிரிடனைத் தவிர மற்ற இடங்களில் அதன் திட்டங்கள் பயன் பெற்றன. இருந்த போதிலும் அச்சு நாடுகளுக்கு எல்லா சாதனங்களுமிருக்கின்றன. எண்ணிக்கை பலத்தினாலும், யந்திரங்களாலும் பிரிடனைத் தோற்கடிக்கக் கூடியதாக இருந்தது.

(c) பொது நிலைமை.

ஜெர்மன் குறுகிய கால திட்டங்கள் தவறிப் போய்விட்டன. தன் சைனியத்தைப் பலப்படுத்திக்கொண்டிருக்கும் பொழுதே பிரிடன் ஜெர்மனியை மிஞ்ச விடாமல் தடுத்துவந்தது. மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் மத்தியதரைக் கடலிலும், இதாலி தோற்றுப்போய்விட்டது. ஜெர்மானியர்கள்கூட ஸூயஸ் கால்வாயைத் தாக்கியதில் தோற்றுவிட்டார்கள். இப்பொழுது அவர்களின் சைனியங்கள் ருஷ்யப்போர் முனையில் திணறுகின்றன. எல்லாவற்றைக் காட்டிலும் அவர்கள் பீதியடைவது பிரிடிஷ் பொருளாதார முற்றுகையும், இரு பார்சங்களிலும் பெரிய சண்டையும்தான்.



## II.—பிரிடன் (Britain).

(a) பிரிடன் மாத்திரம்:—

1. ஐரோப்பாவில் நேச தேசம் ஒன்றுமில்லை. இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

(a) ஒற்றுமையினால் பலமும் உண்டு.

1. நேச தேசத்தார்களின் சேர்க்கை ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, ஸெகோஸ்லாவோகியா, போலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா, ருஷ்யா, சீனா இப்பொழுது எல்லாம் ஒன்றுசேர்ந்து ஸ்வதந்திரத்திற்காக யுத்தம் செய்கின்றன. இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்களில் ஆக்கிரமித்ததினால் அட்லாண்டிக் சமுத்திரத்தில் சண்டை உண்டாகி இப்பொழுது ஜெர்மனி அவைகளைத் தோற்றுவருகிறது.

2. பி. இ. எப். என்ற பிரிடிஷ் சைனியம திரும்பியது. ஆனால் அது தன் ஆயுதங்களை துலைக்க நேரிட்டது. இப்பொழுதுதான் அபாயத்திலிருப்பதாக தேசத்தார்களுக்குத் தெரியவந்தது. அப்பொழுதும் ஜனங்களில் கால் பங்குதான் ஆயுதபாணியானார்கள்.

2. பிரிடன் சமாளித்துவிட்டது. இன்னும் அபாயம் இருக்கிறது. ஆனால் சீக்கிரம் பிரிடன் பூராவும் ஆயுதபாணியாய்விடும். 1940-ல் அபாயம் மிக்க பலமாய் இருந்தது. 1941-ல் பிரிடன், தானும் சமாளித்துக்கொண்டு மற்ற இடங்களில் நடக்கும் போர்முனைகளுக்குப் படைகள் அனுப்பக்கூடிய நிலைமையில் இருக்கிறது.

3. ஐரோப்பா கண்டம் பொருளாதார முற்றுகை போடப்பட்டது. ஆனால் கப்பற்படை அபாயகரமான நிலையில் குறைவாக இருந்தது. அச்சு நாடுகள் பிரிடனைப்

3. ஐரோப்பா கண்டத்தின் பொருளாதார முற்றுகை இன்னும் நிலைநிறுத்தப்பட்டுவருகிறது. முந்தியைக்காட்டிலும் பலமாகயிருக்கிறது. அதன் பயன்கள் ஜெர்மனியில் நாளுக்குநாள் வெளிப்படையாகத் தெரிந்துவருகின்றன. அச்சு நாடுகள் ஒருபொழுதும் பிரிடனைப் பொருளாதார

| | |
|---|---|
| பொருளாதார முற்றுகை போட்டிருந்தன. | முற்றுகை போடவில்லை. பிரிடனுக்கு வரும் சாமான்களில் ஒரு பாகத்தை அவை கடலில் மூழ்கடித்தன. பிரிடிஷ் தேசத்தார் சண்டையிடும் திறமை நாளுக்குநாள் ஓங்கிவருகிறது. |
| 4. பிரிடன் எந்த சமயத்திலும் படையெடுக்கப்படலாம். ஆனால் பிரிடிஷ் விமானப்படை எதிரிகளின் படகுகளை ஒன்றுசேர விடாமல் தாக்கிவந்தது. | 4. படையெடுப்பு உண்மையில் நடைபெறவில்லை. ஏனென்றால் பிரிடிஷ் விமானப்படை இடைவிடாது காத்துவந்ததினால் எதிரி செய்த பிரயத்தனங்களைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. |
| 5. பிரிடிஷ் விமானப்படை மனிதர்களின் தன்மையிலும், யந்திரங்களிலும் லுப்ட்வாபைக் காட்டிலும் மேன்பட்டவை என்று ஸ்தாபித்தது. ஆனால் லுப்ட்வாபில் மனிதர்களும் ஜாஸ்தி, விமானங்களும் ரொம்ப இருந்தன. | 5. பிரிடிஷ் விமானப்படையின் மேன்மை நிலைநிறுத்தப்பட்டு வருகிறது. எண்ணிக்கையில் இருந்த வித்தியாசமும் சீக்கிரத்தில் குறைக்கப்பட்டுவருகிறது. இங்கிலாந்தில் லுப்ட்வாப் போட்டுவந்த வெடிகுண்டுகளைக் காட்டிலும் அதிகமாகவே ஜெர்மனியில் போடப்பட்டு வருகிறது. உண்மையில் பிரிடிஷ் விமானப்படையின் கை மேலாகிவிட்டது. |
| 6. அமெரிக்கா, பிரிடனுக்கு உதவி செய்ய இஷ்டம் தான். ஆனால் யுத்தப் பொருள்கள் உற்பத்தி செய்துகொடுக்க ஆயத்தமாயில்லை. | 6. சண்டையில் சேருபவைகள் தவிர மற்ற எல்லா விதத்திலும் அமெரிக்கா பிரிடனுக்கு ஒத்தாசை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. பிரஸிடெண்டு ரூஸ்வெல்டும் மற்ற தலைவர்களும் பிரிடிஷ் ஜயம் நிச்சயமென்பதைக் கூறியிருக்கிறார்கள். பிரிடிஷுக்குக் கிடைத்த உதவியின் விவரங்களாவன :—<br>50 நாசகாரிகள், பிரஸிடெண்டு ரூஸ்வெல்டின் தேருதல்; அட்லாண்டிக்கில் பாரா; ஐஸ்லாந்துக்குப் படைகள் அனுப்பியது. பிரிடனுக்கு அமெரிக்கா பொருள்கள் அனுப்பி உதவுவது அதிகரித்து வருகிறதையும், அமெரிக்காவும் சண்டையில் சேர்ந்துகொள்ளும் சந்தர்ப்பத்தையும் பார்த்து ஜெர்மன் தேசத்தார் மிகவும் பீதியடைகிறார்கள். யுத்தப் பொருள்கள் உற்பத்தி செய்ய அமெரிக்கா கைத்தொழில்கள் ஆயத்தமாய் விட்டன. |



| (b). எதிர்காலம். | (b). இதுவரை நடந்தது. |
|---|---|
| 1. சரத் காலம்வரை பிரிடன் போராடி வந்தால், ஹிட்லருக்கு ஜயம் கிடைக்காது. | 1. ஹிட்லருக்கு ஜயம் கிடைக்கும் என்று இருந்த சூசகம் இப்பொழுது போய்விட்டது. இப்பொழுது யுத்தம் நீண்ட காலம் நடக்கும். |
| 2. பிரிடிஷ் மக்கள் முந்தியைக் காட்டிலும் இப்பொழுது ஒற்றுமையாயிருக்கிறார்கள். கடைசிவரையில் எதிர்ப்பைத் தடுக்க உறுதி கொண்டிருக்கிறார்கள். | 2. பிரிடனிலும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் பூராவிலும் உள்ள ஜனங்கள் ஒன்று சேர்ந்து நாஸிக் கொள்கையைத் தொலைத்து, உலகத்திற்கு ஸ்வதந்திரம் அளிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். லண்டன் எப்பொழுதும் உலகத்திற்கு பொருளாதாரத்திற்கு முக்கியமாய் இருக்கிறது; அது போல் ஸ்வதந்திரத்திற்காக உலகம் பூராவும் பரவியிருக்கும் யுத்தத்திலும் அது முக்கியமாக இருக்கிறது. |
| 3. பிரிடிஷ் விமானப் படையின் வீரச் செயல்கள் வெற்றியையும் கொண்டு பூரா தேசத்தினர்களுக்கும் புத்துயிர் அளிக்கின்றன. | 3. பிரிடனின் வீரச்செயல்கள் உலகத்திலுள்ள ஸ்வதந்திர தேசத்தினர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. பிரிடிஷ் விமானப்படை அநேக போர் முனைகளுக்குச் சென்று சண்டையிட்டு வருகின்றன. அதன் வீரச்செயல்களும், சக்தி வாய்ந்த யுத்த தளவாடங்களும் உயர்ந்தவை. ஆபிரிக்காவில் நடந்த யுத்தத்தில் அதன் வீரம் பிரபலமாய் வெளியாயிற்று. |
| 4. ராஜ்ஜியம் பூராவிலும் யுத்தத்திற்கு ஆட்கள் சேர்க்கப்பட்டு வருகிறது. | 4. இன்னும் யுத்தப்படை சேகரிக்கப்பட்டுக் கொண்டுவருகிறது. 1942-ம் வருஷம் வசந்த காலத்திற்குள் பூராப்படையும் சேகரிக்கப்படும். |
| 5. கடலாதிக்கம் பூராவும், அதிலும் முக்கியமாக மத்திய தரைக் கடலாதிக்கம் பிரிடன் வசமிருந்து வருகிறது. | 5. அட்லாண்டிக் சமுத்திரம் ஒன்றில் மட்டில் பிரிடிஷ் ஆதிக்கம் எதிர்க்கப்பட்டது. ஆனால் பயன்படவில்லை. விரோதிகளின் முயற்சி பலமாக இருந்தாலும் பிரிடிஷ் கடலாதிக்கம் மேன்மையாகப் பாதுகாக்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. |
| 6. எகிப்து வளைக்கப்பட்டு, இதாலியர்கள் ஆபிரிக்காவில் யுத்தத்திற்குத் தயார் செய்து வந்தார்கள். பிரிடிஷ் ஸோமாலிலாந்து தாத்காலியமாய் இழக்கப்பட்டது. | 6. ஆபிரிக்கர்வில் பிரிடன் திடீரென்று இதாலியர்களைத் தாக்கிற்று. பிரிடிஷ் சைனியங்கள் விரோதிகளுக்கு மூன்றில் ஒரு பங்கு மட்டில் தான் இருந்தாலும், எரிட்ரியா, அபிஸீனியா இவைகளைப் பிரிடன் பிடித்துக்கொண்டது. ஏற்கனவே இதாலியர் பிடித்திருந்த |

ஸோமாலிலாந்தை மறுபடியும் பிரிடிஷார் பிடித்துக்கொண்டார்கள். எகிப்தின் போர்முனையிலும் பிரிடிஷாரே முந்திக்கொண்டு தாக்கினார்கள். ஸிரியாவில் பிரிடிஷார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் இராக்கிலுள்ள உள் நாட்டு கலகத்தை அடக்கியதும், இந்தியா, மத்தியக் கிழக்கு இலைகளின் பாதுகாப்பை ஸ்தாபிக்க ஹேதுவாயிருந்தது. பிரிடிஷார் எல்லையும், அதன் நேச தேசமான துருக்கிக்கு அடுத்தாற்போலிருக்கிறது. இதாலியின் கடற்படையும் அச்சுநாடுகள் பால்டிக்கையும், கிரீடையும் ஆக்கிரமித்திருந்தாலும், பிரிடிஷ் கப்பற்படைதான் மத்தியதரைக்கடலில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகிறது.

(c) போது நிலைமை.

தாழ்ந்த பிரதேசத்திலும் பிரான்ஸிலும், ஜெர்மனிக்கு ஏற்பட்ட வெற்றிகளிலிருந்து பிரிடன் சமாளிக்க முடியாதோ என்று தோன்றியது. ஆனால் தேசத்தார்கள் எதிரியின் தாக்குதலைத் தடுக்க முடியுமென்றே நம்பியிருந்தார்கள். கடலாதிக்கமும், அச்சு நாடுகளின் திட்டத்தைத் தடுக்க ஆரம்பித்து விட்டது.

(c) போது நிலைமை.

ருஷ்யாவில் ஆபத்து வரலாம். இப்போது நாஸி யுத்தப்படை தொடர்ந்தாற்போல் முறியடிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், பெரியதாகவும் பிளவு ஏற்படாமலும் இருக்கிறது நாஸிப்படை அழியும் வரையில் ஐரோப்பாவில் அமைதி இருக்காது. ஆனால் பிரிடிஷ் கடலாதிக்கம் ஹிட்லரை ஐரோப்பாவிலேயே கைதியாக்கி விட்டது. பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் பட்டினங்களையும், தொழிற்சாலைகளையும் வெடி குண்டு போட்டுத்தாக்குகிறது. பிரிடனுக்குச் சந்தோஷமோ, திருப்தியோ ஏற்பட இடமில்லை. ஆனால் பிரிடன் சும்மாயிருக்காது. இப்போதுள்ள முஸ்தீபுடனும், நேசதேசத்தினர் ஸ்வதந்திரத்துடன் சண்டையிடுவதைப் பார்த்தால் பிரிடன் சாதகத்தை அடையுமென்று எதிர்பார்க்கலாம். இம்மாதிரி வெற்றியை எதிர்பார்ப்பதற்கு நல்ல சூசனைகள் பல இருக்கின்றன



# "பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதல் களினால் ஜெர்மானியர்களுக்கு உண்டாயிருக்கும் பயம்."

## ரயில்ப் பாதைகளிலும் சாலைகளிலும் சாமான்களை ஏற்றிச் செல்ல போக்குவரவு சாதனங்கள் குறைவு.

## கடைகளில் வெளிப் பகட்டே ஒழிய உள்ளே சாமான்கள் கிடையாது.

ஜெர்மன் எல்லைப்புறத்திலுள்ள டைம்ஸ் விசேஷ நிருபர் எழுதியது:—

பெர்லின், ரைன்லாந்து, ஜெர்மன் கடல் துறைமுகங்கள் இப்பட்டணங்களில் நேராகப் பார்த்த நடுநிலைமை வகிப்பவர்கள், பிரிடிஷ் ஆகாய விமானப் படையின் கடுமையான தாக்குதல்களினால் தளர்ந்த ஜெர்மானியரின் மனோ பாவத்தை விபரமாகக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது புதிதானதும் அதிக சக்திவாய்ந்த வெடிகளை பிரிடிஷ் விமானங்கள் உபயோகித்து வருவதிலிருந்து அதிக ஜனச்சேதம் ஏற்பட்டாலும் அதற்கு அவர்கள் பயப்படவில்லை. வெடிகள் விழாமல் போனாலும் எச்சரிக்கை செய்யும் சங்குகளின் ஓசைகள். இராக்காலங் களில் தூங்கும்பொழுது திடீரென்று கலங்கச் செய்வதால் ஜெர்மானியர்களுக்கு அவைதான் அதிக பயத்தை விளைவிக்கின்றன. நீண்ட காலம் அரைகுறையாய் ஆடை உடுத்திருக்கும் பொதுமக்கள் குளிர் மிகுந்த, சுகம் குறைந்த அறைகளில் நீண்ட காலம் அடைந்திருப்பதும், செவிடுபடும்படியான விமான எதிர்ப்பு பீரங்கிகளின் சப்தமும், வெடி குண்டுகளின் ஓசையும், கட்டடங்கள் இடியும் சப்தமும், காயம்பட்டும் மூர்ச்சையடைந்துமுள்ள ஸ்திரீகளின் கூக்குரல்களும், இவைகளெல்லாம் சேர்ந்து உண்டாக்கும் நரம்புத் தளர்ச்சி மிகவும் பயத்தைக் கொடுக்கிறது. அதிக சக்தியுள்ள வெடிகுண்டுகள் வெடிப்பதிலிருந்து உண்டாகும் நெருக்கத்தினால் சரீரத்தில் பெருத்த காயங்கள் உண்டாகுமென்று பயம் ஏற்படுகிறது. வெடிகுண்டு வெடிப்பதினால் சுவர்களும் ஜன்னல்களும் நொறுங்கி விழுந்தும், கூரைகளைத் தூக்கி எறிந்தும் வாஸ்தவத்திலே ஸ்வாஸப் பையை சட்டியாக்கி விடுகிறது. ஆகாயப் படையெடுப்பைக்கொண்டு எவ்வித முன் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டாலும் இவ்விபத்துக்களை ஒருவரும் தடுக்க முடியாது.

ருஷ்ய யுத்தம் ஏற்பட்டதிலிருந்து கிழக்கு முனையில் உண்டாகும் தாக்குதல்களில் ஜெர்மன் ரீச் பூராவுமுள்ள போக்குவரத்து சாதனங்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ரயிலில் செல்லும் பிரயாணிகள் ரொம்ப நெருக்கடியாக இருப்பதாகவும் அநேக மணிநேரம் நடைபாதையில் நிற்க வேண்டியிருப்பதாகவும், பதியப்பட்ட சாமான்கள் சொந்தக்காரரிடமிருந்து வந்து சேர்ந்து ஒரு வாரம் ஆகியும் சேர்க்கப்படுகிறதில்லை யென்றும் புகார் கொண்டுவந்து ஜெமித்துக்கூட

செய்கிறார்கள். பெட்ரோலில் சிக்கனம் செய்யவேண்டி பொதுமக்கள் ரஸ்தாக்களில் பிரயாணம் செய்வது மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது. அதனால் இருப்புப்பாதை மார்க்கம் செல்கிறவர்கள் அதிகமாகி, கூட்டம் அதிகரிக்கிறது.

பொதுவாக உணவுப் பொருள்களிலும் குறைவு ஏற்பட்டிருப்பதை ரயில் ஆகார வண்டியிலும் காணலாம். ஜனங்களுக்குப் பிடித்தமான சாராயங்கள் விற்கப்படுகிறதில்லை. சுருட்டுப் பிடிக்கிறவர்களுக்கு ஒரு சுருட்டு அல்லது ஐந்து சிகரெட்டுகள்தான் ஒரு பேருக்குக் கொடுக்கப்படும். எல்லாக்கடைகளிலும் மனதைக் கவரும்படியான சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கிட்ட நெருங்கிப் பார்த்தால் இவைகள் வெறும் போலி சாமான்கள் என்று தெரியவருகிறது. இம்மாதிரி பொதுமக்களின் ஆசையை விருத்தி செய்து அதைத் திருப்தி செய்யமுடியாமல் இருப்பது நியாயமா என்ற பிரச்னைக்கு அபிப்பிராய பேதமான பதில் கொடுக்கப்படுகிறது.

கிழக்குப் படையெடுப்பில் உண்டான பயமான சாவுகள் ஜெர்மன் ரீச் பூராவுமுள்ள எல்லா குடும்பத்தார்களையும் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கின்றன. சமாசார பத்திரிகைகளில் வெளிவரும் இறந்தவர்களின் ஜாபிதா அதிக வரிசைகளில் இருந்த போதிலும் மொத்தம் இறந்தவர்களின் ஒரு பாகத்தைத்தான் அதில் கண்டிருக்கிறது. உத்தியோக முறையில் இறந்தவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்படவில்லையென்பது பொதுமக்களின் கவலையையும் அவநம்பிக்கையையும் அதிகப்படுத்துகிறது. இறந்தவர்களின் விளம்பரம் சில குடும்பத்தார்களில் உள்ள எல்லா ஆண்மக்களும் இறந்ததைக் காட்டுகிறது. இன்னும் மற்ற குடும்பத்தார்கள் குடும்பத்தின் பெயர் விளங்கவேண்டி சற்று நேரம் சிநேகிதம் ஏற்பட்டவுடன் துரிதமாக விவாகத்தை முடித்துக்கொள்ளுகிறார்கள். நகரங்களில் ஸ்திரீகளின் எண்ணிக்கை புருஷர்களைக் காட்டிலும் அதிகம்.

எதிர்காலத்தை நோக்கி நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று நைராசியம் ஏற்பட்டுவிட்டது. சரத் காலத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்தத்தில் பிரவேசிக்கும் என்பதை அமைதியாக எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்த போதிலும் முடிவில் ஜெர்மனி ஜயத்துடன் வெளிவரும் என்றும், ஜயத்துக்குப் பிறகு உள்ள காலம் இப்பொழுது படும் கஷ்டங்களைக் காட்டிலும் விசேஷ நன்மையை அளிக்குமென்றும் ஜெர்மானியர்கள் நம்புகிறார்கள்.



# அச்சு நாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம். ஆகஸ்டு 18—24, 1941.

### ஸிரியாவும் இராக்கும்—இந்த திராக்ஷை புளிக்கும்.

"ஸிரியாவில் அதிகமாக அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ............ ஸிரியாவிலிருப்பவர்கள் பிரிடிஷார் செய்யும் வாக்குறுதிகளை நம்பவில்லை. அவர்களின் சிநேகிதர்களான யூதர்களுக்கு அனுகூலமாக சரியான சமயம் கொடுத்ததாகவே நம்பப்படுகிறது".
(பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 19.)

ஸிரியாவில் அபிப்பிராயங்கள் பகிரங்கமாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் நாஸிகளுக்கு அவைகளைக் கேட்கப் பிடிக்காது. ஆகஸ்டு 18-ம் தேதி ஸிரியாவின் தேசியக் கக்ஷியின் முந்தின தலைவரான ஜமீல் மார்டன்பே என்பவர் "புதிய மந்திரி சபையின் நோக்கம் பிரிடனின் பெரிய யுத்த முயற்சிக்கு உதவி, முடிவான வெற்றியடைவதற்கான வழியில் இருக்க வேண்டும்" என்று சொன்னார். அதே மாதிரி ஷாபண்டரிஸ்ட் கக்ஷியைச் சார்ந்த ஸேகி பேகாடிவ் என்பவர், "தேசத்தின் ஸ்வதந்திரத்திற்காக சீர்படுத்தும் பிரிடனின் செய்கைகளை" மெச்சிப்பேசினார். "யுத்த முயற்சிக்காக உதவி புரிய பிரெஞ்சுத் தலைவர்களுடன் ஒத்துழைப்பதையும் பற்றி" சொன்னார்.

V V V V V V V V V V V V V

"ஸிரியாவின் ஜனங்களுக்கும் குடியேறும் பிரிடிஷ் துருப்புகளுக்கும் சண்டை. சச்சரவு ஓயாமல் நடக்கிறது".
(பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 22.)

ஸிரியர்களுக்கும், பிரிடிஷ், இந்திய சிப்பாய்களுக்கும் விசேஷமாக நட்பு இருக்கிறது. உதாரணமாக ஹஸ்ஸட்சி என்ற இடத்திலிருக்கும் இந்தியத் துருப்புகள் இனாமாக ஏராளமான மாவு, சர்க்கரை காபி, டப்பிகளில் அடைத்த ஆகாரம், இன்னும் வெகு தூரத்திலிருந்து வந்த மற்ற சாமான்களைக் கொடுக்கிறார்கள்.

"ஸிரியாவில் விலைவாசி அதிகரித்து சாமான் அகப்படாத நிலை நெருங்கி விட்டது'.

(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 23.)

ஆகஸ்டு 22-ம் தேதி 5,000 டன் நிறையுள்ள கோதுமை அனுப்பப் பட்டதென்றும் அவற்றில் 1,000 டன் ஏற்கனவேயே வந்துவிட்டதென்றும் அறிவிக்கப்பட்டது. 4,000 டன் அரிசியும் 1,000 டன் சர்க்கரையும் ஸிரியர்களுக்கு ஸப்ளை செய்யப் பட்டது. (ஆகஸ்டு 21)-ம் தேதி ஸிரியா நாணயங்கள் பாலஸ்டைன் பவுன்களுடனும் பிரிட்டிஷ் நாணயங் களுடனும் செலாவணி செய்யப் பட்டது.

▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼

"பிரிட்டிஷ் கொடுங்கோல் தாங்க மாட்டாமல் இராக் தேசத்தார் தங்கள் தேசத்தை விட்டுப் போகும்போது இராக்கில் இந்திய சிப்பாய்கள் ஹிம்ஸை செய்யப்படுவதாகச் சொன்னார்கள்".

(ஹிந்துஸ்தான் பெர்லியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 23.)

'இந்த அபாண்டமான பொய்யை 'இராக்கில் விரோதிக்கு ரகசியமாக உதவினவர்களே குஜாப்படுத்துகிறார் கள். இவர்களை ஜூலை 4-ம் தேதி இராக் கிய ரூல் ருராக் என்ற பத்திரிகை கேட்பதாவது: "அவர்கள் செய்தவந்த குற்றத்தை மன்னிக்க வேண்டும்? பல வருஷங்களாகத் தயார் செய்யப்பட்ட சேனையை யுத்தத்தில் ஈடுபடும்படி செய்த குற்றத்திற்கா? அல்லது நம்பிக்கை துரோகம் செய்து விரோதி க்கு சேநேதர்களைக் காட்டிக்கொடுத்த தினால் உலகம் பழிக்குமாறு இத் தேசத்தை அவமானப் படுத்திய குற்றத்திற்கா?"

▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼ ▼

## உண்மை பேசிஞல் கொலைதான்.

"இந்த யுத்த சமயங்களில் கூட நம்முடைய புராதன வழக்கத்தை மீறக் கூடாதென்று சொல்லுகிறேன். அதாவது உண்மையைத் தவிர்த்து எதையும் பிரசுரிக்கக் கூடாது".

(இங்கிலீஷில் ஜெர்மன் பேச்சு, ஆகஸ்டு 10.)

டாக்டர் கோயபல்ஸ் மாத்திரம் உண்மை தான் ஜெர்மனியின் கொடும் விரோதி என்று நிர்மாணித்து விட்டார். டாஸ்ரீச் என்ற பத்திரிகை யில் "பி.பி.-ஸியைக் கேட்பவர்களுக்கு கொலை தண்டனையை விதிக்கிறோம், எச்சரிக்கைக்குப் புறம்பாக மேலும் கேட்டால் உடனே அவர்கள் தலை வாங்கப்படும்" என்று எழுதியிருக் கிறார்."



## குயில் போல் கூவுகின்றனர்.

"சமாதான பிரசாரம்" என்ற பிரசித்தமான முயற்சிக்கு நாஸிகள் அடிக்கடி குயிலின் சப்தம் போடு கின்றனர். அதற்கு சில உதாரணங் கள்:—

"மற்ற நாடுகளை அடக்க ஜெர்மனி எப்பொழுதும் விரும்பவில்லை".

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 23, 1940.)

"அஹிம்ஸையினாலேயே அரசியல் நோக்கங்களைக் கைப்பற்றுவதே நாஸிக் கக்ஷியின் கொள்கைகள் இருக் கின்றன".

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 6, 1940.)

"எவ்வளவு தடவை சமாதானத் திற்குச் சம்மதம் என்று சொல்லியிருப் பேன். நான் அதிகாரத்திற்கு வந்த வுடன் சைனியத்தை மறுபடி புதுப் பிக்க விரும்பவில்லை".

(பெர்லின் யுத்த தளவாட தொழி லாளர்களுக்கு ஹிட்லரின் பேச்சு— ஒலிபரப்பு, டிஸம்பர் 10, 1940.)

## புலிபோல் உறுமுகின்றனர்.

ரத்த வெறிபிடித்து போடும் சப் தங்களுக்கு சில உதாரணங்கள்.

குழந்தைகளைக் காணுமல் தாய்கள் தேடுவார்கள். புருஷர்களுடைய கொள்ளி தேகங்களைத்தேடி மனைவி கள் செல்வார்கள். ஸ்திரீகள் வீட்டிற் காகவும் ஜனங்கள் ஆகாரத்திற்காகவும் கதறுவார்கள்.

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 13, 1940.)

"ஜெர்மன் மூழ்கி விமானங்களின் யந்திர சப்தத்தைக்கேட்டு பயந்து பிரிட்டனிலுள்ளோரின் மனோநிலையும் தைரியமும் தளர்ந்து வருகிறது".

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 23, 1940.)

"ஜெர்மனியின் எண்ணம் அதன் விரோதிகளை ஒழிப்பதுதான் என்று வரையில் போஸ்டன் ரேடியோ கூறு வது உண்மை".

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 13, 1940).

இவ்விதமாகவெல்லாம் குயில்போல் சமாதானப் பேச்சுகள் பேசுவதும் நாஸி முறையில் விஸ்வாசத்துரோகங்களும் பயமுறுத்தல்களும் நாஸிகளின் குறும்புத் தனமானவைதான். ஆகையால் சர்ச்சில் சொல்லுவதுபோல் ஹிட்லர் ஒரு "உயிரை அழிக்கும் துவேஷ எண்ணமே உருவெடுத்தவனாக" இருக்கிறான்.

## ஜயபேரிகை.

## நாஸி எண்ணங்கள் முறிக்கப்பட்டன.

"எவ்வளவு தூரம் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோ"மென்று ஜனவரி மாதத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னார். அதிலிருந்து இன்னும் அதிக தூரம், கடுமையான வழிகளைக் கடந்து வெற்றிகளைத் சமீபித்து வந்திருக்கிறோம்.

இப்பாறையில் நாட்டப்பட்ட மைல் கல்கள் நாஸி எல்லாங்களுக்கும், நற்புகழ்ச்சிகளுக்கும் செய்த பாஷாண ஸ்தாபனம் ஆகும். 1910-ம் வருஷம் மே 17-ம் தேதி ப்ரெமன் ரேடியோ பிரெஞ்சு பாஷையில் சில மாதங்களில் பிரிட்டனுக்கு வெற்றி கிடைக்குமென்று ஜோஸியம் சொன்னார். ஆனால் அது ஒன்றும் கிடைக்கவில்லை.

1910-ம் வருஷம் ஜூலை 23-ம் தேதி பிரிடன் பி. பி. ஸி. போலச் சொன்ன பொய் நாஸி ஸ்டேஷன் செய்தியில் ஹிட்லர் செப்டம்பர் மாதத்திற்குள் பிரிட்டன் சண்டையை முடிப்பதாகச் சொன்னது. அதுவும் சம்பவிக்கவில்லை.

1910-ம் வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதி தான் பிரிட்டன் தோற்கப்படும் என்று காலன்பேர்க் ரேடியோ நாஸிக் கட்டுப்பாட்டிலிருந்ததொன்று சொல்லிற்று. அதுவும் நேரவில்லை.

1910-ம் வருஷம் ஆகஸ்டு 11-ம் தேதி ஸ்விடிஷ் பாஷையில் கோனிக்ஸ்பர்க் ரேடியோ லண்டன், செப்டம்பர் 17-ம் தேதி பிடிபடுமென்றது. அதுவும் நேரவில்லை.

ரோம் ரேடியோ இங்கிலீஷில் 1940-ம் வருஷம் செப்டம்பர் 9-ம் தேதி "இன்னும் சில வாரங்களில் இந்த சண்டை முடியும்" என்றது. அதுவும் நடக்கவில்லை.

பெர்லினிலுள்ள ஸ்காண்டிநேவியன் நிருபருக்கு கோயபல்ஸ் 1940-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் "இன்னும் 6 மாதம் ஜீவித்து நான் உன்னைப் பார்க்கும்போது யுத்தம் முடியுமென்று சொன்ன ஜோஸியம் பலித்ததை அறிவாய்" என்றது. அதுவும் பலிக்கவில்லை.

பெர்லினிலுள்ள ஸ்பெயின் நிருபருக்கு 1911-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் கோயபல்ஸ் சொன்னது "இன்னும் ஒரு வருஷம் முடிவதற்குள் இந்த யுத்தத்தை ஜெர்மனி ஜயித்துவிடும்" இது நேரவில்லை, இனியும் நேராது.

அடியில் குறிப்பிட்டிருக்கும் சில சம்பவங்களிலிருந்து நாஸிகளின் பேச்சுக்களில் இன்னும் சில பொய்கள் வெளியாகின்றன.—

## பிரிட்டன்பேரில் படையெடுப்பு.

"எல்லாவற்றையும் ஜெர்மன் பீரங்கிகள் பொடியாக்கிவிடும். லண்டனெல்லாம் இடிந்துபோன கட்டடங்கள்தான் பாக்கியிருக்கும். நாஸிகள் வரவை எதிர்பார்த்திருக்கும் பரிதாபகரமான இங்கிலீஷ்காரர்கள், அவர்கள் வருவதற்குமுன் இறந்துவிடுவார்கள். பாழாகாமல் பாக்கியுள்ள லண்டன் தெருக்களில் எப்பொழுதும் மனித சஞ்சாரமில்லாமலிருக்கும்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, ஜூலை 17, 1910).

"பிரிடிஷ் ராஜ்ய உத்தியோகஸ்தர்கள் ஜெர்மன் படையெடுப்பை தங்களால் தடுக்க முடியாதென்று உணர்ந்திருக்கிறார்கள்."

(அராபிக் பாஷையில் வெளிவந்த ஜெர்மன் சமாசாரம், ஆகஸ்டு 7, 1910).



## லுப்ட்வாபியும், பிரிடிஷ் விமானப்படையும்.

"லண்டனாவது வேறு எந்த பெரிய இங்கிலாந்திலுள்ள நகரமாவது தன்னைத் தற்காப்புச் செய்துகொள்ள முயற்சித்தால் சில மணிகளிலோ அல்லது நிமிஷங்களிலோ அவை அழிக்கப்படும்."

(போர்சுகலுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 1940).

"சென்ற மூன்று நாட்களாக நடந்த விமானத்தாக்குதல்களில் பிரிடிஷ் துறைமுகங்களும், விமான நிலயங்களும் அழிக்கப்பட்டன. இப்பொழுது பிரிடனிலிருந்து தாக்குவதற்கு விமானங்கள், கப்பல்கள் புறப்பட அங்கு ஒரு தளங்கூட கிடையாது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், ஆகஸ்டு, 15,1910).

"ஒரு எதிரி விமானங்கூட ஜெர்மனிக்கு வர முடியாதென்று சிறுகுழந்தைகளுக்குக்கூட ஜெர்மனியில் தெரியும்."

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம், செப்டம்பர் 22, 1910).

## பொருளாதார முற்றுகையும், பட்டினிபோடுவதும்.

"பிரிடனிலுள்ள உணவுப்பொருள்கள் இரண்டு வாரங்களுக்குமேல் தாங்காது."

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 10, 1910).

"பிரிடனைச்சுற்றி முற்றிலும் பொருளாதார முற்றுகை போடப்பட்டது. அதற்கு இரண்டு வழிகள்தான் உண்டு; ஒன்று பட்டினியால் அழியவேண்டும், அல்லது சரண்புக வேண்டும்."

(அராபிக் பாஷையில் ஜெர்மன் சமாசாரம், ஆகஸ்டு 6, 1910).

"இனி ஒரே ஒரு முற்றுகைதான் உண்டு; அதாவது ஜெர்மனி பிரிடனைப் பொருளாதார முற்றுகை போடுவதுதான்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் பேச்சு, ஆகஸ்டு 22, 1910).

## கடலாதிக்கம்.

"பிரிடனுக்கு கப்பலில் வந்திறங்கும் சாமான்களை மூழ்கடிப்பதும், அழிப்பதும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் முடியும்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, ஆகஸ்டு 7, 1910).

"பிரிடிஷ் கப்பற்படை, இனிமேல் உபயோகப்படுத்தாமல் இருப்பதுதான் நல்லது என்று சொல்லக்கூடிய விதமாக அவ்வளவு பெரிய சேதத்தையடைந்துவிட்டது."

(ஆங்கிலத்தில் இதாலிய சமாசாரம், ஆகஸ்டு 15, 1910)

## யுத்தத்திற்கு வேண்டியநிதி.

"பிரிடிஷாரின் பொருளாதாரம் ரொம்பவும் நாசமாகிவிட்டது."

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 10, 1910).

"கிரேட் பிரிட்டனுக்கு பண வருமானங்கள் கிடையாது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, டிஸம்பர் 5, 1910).

## ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள்.

"தன் தேசத்தைவிட்டு டிகாலி கக்ஷியைச் சேர்ந்து, அந்நிய நாட்டில் இருந்து கொண்டு ஜெர்மனிக்கு விரோதமாக சண்டையிடும் பிரெஞ்சுக்காரர்களின் எண்ணிக்கை நாலைந்துபேர்கள்தான்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம் ஆகஸ்டு 6, 1910).

## அமெரிக்காவின் உதவி.

"பிரிடிஷ் ராஜாங்கம் அமெரிக்காவிலிருந்து பொருள்கள் வாங்குவதென்று ஏற்பாடு செய்துகொண்டால் அவைகள் பிரிட்டனில் வந்துசேராதபடி ஜெர்மன் படைகள் தடுத்துவிடும் என்பது நிச்சயம்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, டிஸம்பர் 5, 1910)

"அமெரிக்காவில் செய்யப்படும் விமானங்கள் ஜெர்மனியிலும் பிரிட்டனிலும் உள்ள விமானங்களைக் காட்டிலும் மட்டமானவை. பிரிட்டன் ராணுவ பாது காப்புக்கு அவைகள் போதாது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, டிஸம்பர் 5, 1910).

## ஆபிரிக்காவில் அச்சு நாடுகள்.

"சமீபத்தில் இங்கிலாந்து தாக்கப்படும். பிறகு ஸெப்டம்பரில் யுத்தம் ஆபிரிக்காவில் பரவும். எல்லாம் போட்டதிட்டப்படி நடந்தால் இந்த வருஷம் முடிவதற்குள் இரண்டு கண்டங்கள் அதாவது ஐரோப்பாவும், ஆபிரிக்காவும் ஜெர்மன் ரீச்சுடனும் இதாலிய சாம்ராஜ்யத்துடனும் சேர்க்கப்பட்டுவிடும்."

(டென்மார்க்குக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 1910).

---

## கதம்பம்.

1. "செஞ்சேனை நாஸி யந்திரப்படையை, ரொம்பவும் கெடுதி செய்திருக்கிறது. அநேகமாய் உயிர் நிலையைத் தாக்கிவிட்டது."

(மார்டின் அக்ரான்ஸ்கி அங்காராவிலிருந்து ஒலிபரப்பியது, ஆகஸ்டு 9.)

2. "பெர்லின் கொடுத்த பொய் கணக்கினாலேயே ஒழிய வாஸ்தவத்தில் செஞ்சேனை அழியவில்லை."

(நியூ யார்க் பத்திரிகை, ஆகஸ்டு 11.)

3. "பிரயாசை, கையிருப்பு, சாமர்த்தியம், இவைகளைவிட பூகண்டத்தில் முக்கால் பங்கு ஜனங்களின் அனுதாபம் இவைகளெல்லாம் உங்களுக்கு விரோதமாகயிருக்கிறது."

(டொராதி தாம்ஸன் அமெரிக்காவிலிருந்து ஜெர்மன் பாஷையில் ஜெர்மானியர்களுக்கு ஒலிபரப்பியது.)



4. "விமான பலத்தைக்கொண்டுதான் இறுதியில் ஜயமடையவேண்டும்."

(மிஸ்டர் பவர், கனடா ஆகாய மந்திரி—மான்ட்ரீலிலிருந்து, ஆகஸ்டு 20.)

5. "பிரிடிஷ் நடத்திவரும் போர் ரொம்பக் கஷ்டமாகவும் நீண்டகாலம் பிடிக்கலாம். ஆனால் இறுதியில் வெற்றிகிடைப்பது நிச்சயம்".

(மிஸ்டர் சர்ச்சில், ஆகஸ்டு 24.)

6. "இப்பொழுது பிரிட்டன் உள்நாட்டிலும் வெளியூர்களிலும் செய்யும் பெரிய யுத்தத்தினால் இந்தியா சாதகமடையவில்லை என்று சொல்லுவது உண்மையுமல்ல, நன்றியில்லாத பேச்சாகவும் ஆகும்".

(மிஸ்டர் என். ஆர். ஸர்க்கார் கல்கத்தாவில் சந்தித்தபோது கூறியது. கல்கத்தா, ஆகஸ்டு 25.)

7. "பெர்லினுக்குமேல் ஆகாயத்தில் நாம் இருவரும் சந்திப்போம்".

(ஸர் சார்லஸ் போர்டல், பிரிடிஷ் விமான உத்தியோகஸ்தர்களின் தலைவர், ஸோவியத் ஆகாய விமானிகளின் வந்தனத்துக்கு பதிலளித்தது, ஆகஸ்டு 22.)

8. "நமக்குச் சண்டையை ஜயிக்க வேண்டுமென்ற திட்டத்தைத் தவிர வேறுதிட்டம் வேண்டியதில்லை".

(ஹிஸ் ஹைனஸ் பாட்டியாலா மஹாராஜா, ஸிம்லாவில் சீக்கியர் விருந்தில் சொல்லியது, ஆகஸ்டு 20, 1910.)

9. "இந்த யுத்தமானது தீமைகளை ஒழிப்பதற்கு மாத்திரம் பெருத்த போராட்டமாயில்லை. முடிவில் அதிலிருந்து நிச்சயமாக சில நன்மைகளும் பிறக்கவேண்டும்".

(ஆஸ்திரேலியா பிரதம மந்திரியான மிஸ்டர் மென்ஸீஸ் கான்பெர்ராவில் சொல்லியது, ஆகஸ்டு 19.)

10. "என்ன நேர்ந்தபோதிலும் நியூஸீலாந்து பிரிட்டனுடன் சமத்துவமாக நின்று முடிவுவரை யுத்தம் புரியும். அந்த முடிவு வெற்றிதான்".

(நியூஸீலாந்து பிரதம மந்திரி, ரைட் ஆனரபிள் பீடர் பிரேசர் லண்டனிலிருந்து ஒலிபரப்பியது, ஆகஸ்டு 15.)

11. "எல்லா தேசத்தினர்களைக் காட்டிலும் இந்த யுத்தத்தில் இங்கிலீஷ் காரர்கள் பெரும் பாரத்தை வகித்தார்கள். சிரம காலங்களிலும் கூட பிரிட்டன் வணங்கவில்லை. தோல்விகள், பெரியவிபத்துகள் நேர்ந்தாலும், அவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தைரியத்தைக் கைவிடாமல் அது போராடி இருக்கிறது. அதன் மனோபலமும், ராணுவ பலமும் இந்த யுத்தத்தில் காட்டினது போல, இங்கிலாந்தின் தேச சரித்திரத்தில் எப்பொழுதும் கிடையாது. இப்பொழுது அடிமையாக்கப்பட்டிருக்கும் ஜனங்கள் சந்தோஷத்துடன் ஐரோப்பாவில் புதிய திட்டம் ஏற்படுத்துவார்கள். ஐரோப்பாவிலுள்ள ஜனங்களுக்கு ஸ்வதந்திரம் ஏற்படவேண்டுமானால், இங்கிலாந்துதான் தலைமைவகிக்க வேண்டும்".

(மேற்கு ஸ்வீடனின் பிரதான பத்திரிகையில் எழுதியது, ஜூலை 26, 941).

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 60—(3-வது பிரிவு).

1941—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| செப்டம்பர் ...6, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 7, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| 8, | திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவப்பூர் ... | மாலை | 5.30 |
| | | குழிபிறை ... | ,, | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |
| 9, | செவ்வாய்க்கிழமை. | கோட்டைக்காடு ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| 10, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலை | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| 11, | வியாழக்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கிழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| 12, | வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 61—(4-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 13, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 14, | ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | கீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | ஆலூர் ... | ,, | 6.30 |
| 15, | திங்கட்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 16, | செவ்வாய்க்கிழமை | காரையூர் ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 17, | புதன்கிழமை ... | செம்பட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | | மழையூர் ... | ,, | 6.30 |
| 18, | வியாழக்கிழமை. | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 19, | வெள்ளிக்கிழமை... | (பொன்னமராவதி) புதுப்பட்டி | மாலை | 6.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |

69401

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—6-9-41.